உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ரஹ்மணே நம:

# விஸ்வகர்ம குலோபகாரி.

## நமது பத்திரிகை.

உலகத்துள்ள தேயங்கள் யாவற்றினும் இந்தியாவானது மிகச் சிறந்ததென்று பல சாத்திரங்களும், முன்னோர் வரைந்துள்ள சரித்திரங்களும் நமக்குச் சான்றுகூறும். இத்தகைய இந்தியாதேசத்தி லுற்பவித்துள்ள விஸ்வகர்ம சந்ததியார்களாகிய நாம் நமது தாய்ப்பாஷையைக் கற்றுதரித்துவராததினாலும், நமது குல வொற்றுமையைக் கைவிட்டதினாலும், வெவ்வேறு [illegible] அவற்றின் வழியே சார்ந்துகிடந்தது, நம்மனோர்க்குரிய சுதந்தரங்களைக் கைவிடுத்து, முன்னிருந்த நிலைமையையும் போக்கடித்துக்கொண்டு, பலர் நகைக்க இடந்தந்ததுமன்றி க்ஷீணதசைக் குள்ளாகிவிட்டோம். மேலும், தற்போது நம்பாஷை ஆதரிப்பாரின்றியும், படிப்பாரின்றியும், கேட்பாரின்றியும் போயிற்று. இவ்விதமிருப்பின் நமது குலமும், நமது புகழும் எங்ஙனம் நிலைபெறும்; நாம்வெவ்வேறு விஷயங்களிலும், இங்கிலீஷ் முதலாய பாஷைகளிலும் எவ்வளவு ஊக்கமுடையவரா யிருக்கின்றோமோ, அவ்வளவு ஊக்கம் நம் தமிழ்ப் பாஷையில் வைத்து, நம் குலத்திற்குரிய பத்திரிகைகளைப் பெற்று வாசித்து, அவற்றில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த விஷயங்களையறிந்து கொண்டா லல்லவோ நாம் முன்னிருந்த உயர்தர நிலைமைக்கு வரக்கூடும்; அங்ஙனமின்றி மனம்போனவழி செல்கின்றதோ அவ்வழியிற்புகுந்து வாணாளைவீணாளாக்கிக் காலங்கழித்து வருவதால் நமக்கென்னபயனுண்டாம் நிற்க,

நம் முன்னோர்கள் நமது சக்திக்குத் தக்கவாறு சுலபசந்தாவை யுடைத்தாகிய அநேகம் பத்திரிகைகளை நம் குலத்திற்கென்றே வெளியிட்டும் அவற்றை வாங்கி வாசியாது அவமதித்து அசட்டைசெய்யும் நம்மவர்முன் அவை தலைகாட்டாதொழிந்து போயின.

நம்குலத்தைப்பற்றிப்பேசும்பத்திரிகைகள் அளவற்றவா யிருந்தன. தற்போது நடக்கும்பத்திரிகைகளோ ஒன்றிரண்டே. ஆதலால், நம்குலத்திற் குபகாரமாகப்பேசும் பத்திரிகைகள் அநேகம் வெளியினுலாவி வரவேண்டு மென்னுங் கருத்தினராய் யாங்களிவ்"விஸ்வகர்மகுலோபகாரி" யென்னும் மாதாந்தப் பத்திரிகையை வெளியிடமுன்வந்துள்ளோம். ஆதலால், [illegible] குலாபிமானிக ளெவ்வொருவரும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர் [illegible] இதனைப்பெற்று வாசித்து இதிலுள்ள [illegible] பெரிய விஷயங்களை கவனித்து வருவாராயின் நமது குலமானது முன்னிலைமைக்கு வந்து செழித்தோங்கு மென்பதற் கையமேயில்லை.

இப்பத்திரிகையில் பக்தி, விரதம், கல்வி, நல்லொழுக்கம், முன்னோர்பெருமை, கைத்

162020



தொழில், நீதிகள், ஆசாரம், சிற்பம், வயித்தியமுதலாய பற்பல விஷயங்களும் செவ்வனே விளக்கப்பட்டு ஆடவரும் பெண்டிரும் சுலபமாய்த் தெரிந்துய்யும் வண்ணம் செவ்விய தமிழ் நடையில் எழுதப்படும். இதனால் இன்னும் ஒரு சகாயமுமுண்டு. அதாவது:—

இப்பத்திரிகையைப் பெறுவோர்கள் ஒவ்வொன்றையும் கைசோரவிடாது பாதுகாத்துவந்தால் வெவ்வேறு விஷயமுள்ளவற்றை நெம்பர் வாரியாய் எடுத்துப் புத்தகமாய்ச் சேர்த்துப் பயிண்டு செய்துக்கொள்ளும்படியானஹேதுவுமுண்டு. ஆதலால், நமது குலாபிமானிகள் இதனை ஆதரிப்பாரெனக் கருதி, உலகில் உலாவவிடுத்தனம்.

இப்பத்திரிகையினால் வரும் ஊதியம் சுயப்பிரயோஜனத்தில்உபயோகப்படாது. நமது சென்னை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலையை விருத்திசெய்வதற்கேயாம். இதுவே இப்பத்திரிகையை வெளிப்படுத்துவதன் முக்கியகாரணம். இது வேதாத்தியயனபாடசாலை என்னும் பின்வருமகுடத்தில் அடங்கிய விஷயத்தைக் காணில் நன்குபுலனாம்.

இப்பத்திரிகைக்குச்சந்தாதாரராவதால் குலவிர்த்திக் கேதுவான பாடசாலையின் தருமத்தைச்செய்தவருமாவர். ஆகையால் நம்மவரிவிதனைக் கைவிடக்கருதாது வாங்கிவாசித்து நல்லறிவையும், உலகஞானத்தையும், தைரியத்தையும் பெறுதற்கரிய பலநன்மைகளையும் பெற்று விருத்தியடைவதுந்தவிர, நமதுபிள்ளைகளையும் க்ஷேமப்படுத்துவார்களென விஸ்வேஸ்வரன் திருவருளை யெதிர்பார்க்கின்றோம்.

## விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலை.

இப்பாடசாலை சென்ற 1909௵ டிசம்பர்மீ 19உயன்று சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, வேதகிரிமேஸ்திரி வீதி, 5/10-வது எண்ணுள்ள மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, அது முதல் இன்று வரையிலும் நடைபெற்று வருகின்றது. ஷைபாடசாலையில் சேர்ந்த நமது குலச்சிறுவர்கள் சுமார் 60-பேர். இவர்களுக்கு வேதாத்தியயன முதலான பாடஞ் சொல்வதற்காகப் பிரம்மஸ்ரீ பா. சுப்பிரமண்யசாஸ்திரியாரவர்களைநியமித்து, அன்னவரால், பிள்ளைகளுக்கு விக்னேஸ்வர பூஜை, சந்தியாவந்தனம், புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், பூசூக்தம், நாந்தி, அங்குரார்ப்பணம், கலசபூஜை, புண்யாஹவாசனம், விவாகமந்திரம், ஆசீர்வசன மந்திரம் முதலியபாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

ஷை பாடசாலையில்சேர்ந்து, அதினின்றும் நீங்கினபிள்ளைகள் போக, மற்றப்பிள்ளைகளில் முதல்வகுப்பார் விநாயகபூஜை முதல்விவாககாண்டம்வரையிலும் அதற்குரியமந்திரங்களைச் செவ்வனே கற்றுணர்ந்து, நமது வம்சத்தினர் வீட்டில், சுபாசுபகாரியங்களைப் பலரும்மெச்சும்படி நடத்திவருகின்றார்கள். தக்ஷிணைதாம்பூல மரியாதையும் பெற்று வருகின்றார்கள்.

இரண்டாம் வகுப்புப்பிள்ளைகளில் சிலர் விநாயக பூஜையிலிருந்து புண்ணியாஹ

YSA2 m21, 1912
N13



வாசனம் வரையில் கிரமப்படிப் படித்து அதற்குரிய மந்திர தந்திரங்களும் கற்றுணர்ந்து நமது வம்சத்தினர்கள் வீட்டில் யாதாமொரு காரியங்களுக் கழைத்தால் அங்குச் சென்று யாவரும் சந்தோஷிக்கும்படி புண்யாஹவாசனத்தைக் கிரமப்படி முடித்துவருகின்றார்கள்; தக்ஷிணை தாம்பூல மரியாதைகளையும் பெற்று வருகின்றார்கள்.

இவர்களுக்குத் தற்போது நவக்கிரக ஹோமம், ஸ்மார்த்த மந்திரம், ஔபாசன மந்திரம், ஆசீர்வசனமந்திரம் முதலியவைகள் சந்தைசொல்லப்பட்டு வருகின்றன.

மூன்றாவது வகுப்புப் பிள்ளைகள், புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், பூசூக்தம், கலசபூஜை, விக்னேஸ்வர பூஜை வரையில் கிரமமாக் கற்றுணர்ந்து, தம்தம் வீட்டில் தாய்தந்தையர்கள் சந்தோஷிக்கும் வண்ணம் விக்னேஸ்வரபூஜையை மந்திர தந்திரங்களோடு அலங்காரமாய்ச் செய்து வருகிறார்கள்.

நான்காவது வகுப்புப் பிள்ளைகளுக்கு, மந்திரபுஷ்பமும், பூசூக்த முதலியவும் சந்தை சொல்லப்பட்டு வருகின்றன.

இப்பிள்ளைகளுக்கு, வகுப்புக்குத் தக்கபடி நமது குலாபிமானிகள் வருகிறமாதம் சர்ட்டிபிகேட்டும், வெள்ளி மெடல்களும் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறார்கள். ஏனெனில், பிள்ளைகளுக்கு மேல்மேலும் ஊக்கமும், சந்தோஷமும் உண்டாகி, வாசித்துவருவார்களென்றும், நமது குலபௌரோகிதத்திற்கு ஆதார புருஷராவார்களென்றும் நம்புவதால், இதுவும் ஒருகுலோத்தாரணமென்றே எண்ணப்படுகிறது.

அன்றியும் ஷை பாடசாலை ஏற்பட்ட நாள்முதல் இதுவரையிலும் பிரதி அ வாசைகாலந் தோறும் பிற்பகல் 3-மணிக்குமேல் ஷை பாடசாலைச் சிறுவர்கள மேற்படி யிடத்திலேயே கலச ஆவா னஞ் செய்து சோடசோபசார பூஜா சனைகளும், நைவேத்தியங்களும் நடந் றிவருகின்றன.

ஷை பாடசாலைஸ்தாபனகாலம் மு மூன்று௵ காலமாய் ஷை பாடசாலையி நமது குலச்சிறுவர்களுக்கு உபநயன ளும், உபாகர்மங்களும், அவரவர்கள் த தந்தையரின் பொருளுதவியினாலும், சக் யற்றபிள்ளைகளுக்கு எனது பொருளுத யினாலும், அதிவிமரிசையாக வாத்தியகோ ஷத்துடன் செய்யப்பட்டு வருகின்றன.

இன்னும் ஷை பாடசாலையில் வ ஷாவருஷம் ஆவணிமீ வரும் விநா சதுர்த்தியன்று பிரணவ சொரூபியாகி கணேசப் பெருமானுக்குச் சோடசோ சாரபூஜாநைவேத்திய அலங்கார ஆராத களும் நடந்தேறி வருகின்றன.

இன்னும் பிரதிவருடந் தோறும் ஷை பாடசாலையில் நவாத்திரிகாலங்களில் ப துநாட்களும் கொலுவமைத்து நமது கு ச்சிறுவர்களால் சோடசோபசார பூஜாநை வேத்தியங்களும் நமது குலோத்தமர்களு க்குவிநியோகங்களும் நடந்தேறிவருகின் றன. ஷை பாடசாலையின் உபாத்தியாய சம்பள முதலியவை ஒருவர் சகா த்தை கருதாமலேயே என் ந்த செலவில் நடந்தேறி வருகின்றன. அன்றியும், 1910௵ செப்டம்பர்மீ த்தில் ஸ்தாப மாய் நடைபெற்று வருகிற ப்ரைமெரிஸ்கூ லில், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், சமஸ் கிருதம் முதலிய பாடங்கள் கிரமமாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்த இஸ்கூலுக்குப் பிரம்மஸ்ரீ ச. கோவிந்தாச்சாரியாரவர்களை பிரதம உபாத்தியாயராக நியமிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த இஸ்கூலில் நமது சுஜாதிச் சிறுவர்கள் பெரும்பாகமும், இதரவம்சச்சிறுவர்கள் சிறுபாகமும்வாசித்துத் தினேதினே விர்த்தியடைந்து வருகிறார்கள்.

இதில், சிற்சில பிள்ளைகளின் ஏழ்மையைக் கருதிச் சம்பளம் பெறாமலே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

ஷெடி பாடசாலையில் புதுவருஷப்பிறப்புக் காலங்களில் பிரம்மஸ்ரீ பா. சுப்பிரமண்ய சாஸ்திரியா ரவர்களைக்கொண்டு பஞ்சாங்கம் வாசித்தலும், வித்வான்களால் பக்திசரித்திரகாலக்ஷேப முதலியவைபவங்களும் நடந்துவருகின்றன.

இன்னும் இப்பாடசாலைகளைக் கைசோரவிடாமல் பாதுகாக்கும் பொருட்டு இஸ்கூலுக்கு வேண்டிய உபாத்தியாயர்களை அதிகப்படுத்தவும், தமிழ்,தெலுங்கு, இங்லீஷ், சமஸ்கிருதபாடங்களை விர்த்திசெய்யவும், வெளியூர்வாசிகளாகிய குலஜனங்கள் சென்னைக்கு விஜயஞ்செய்தால் அவர்கள் தங்கும் சௌகர்யத்திற்கும், சுயம்பாகத்திற்கும் தகுதியான இடமமைக்க எனது நிலத்தில் கொஞ்சம்பாகம் விடப்பட்டிருக்கின்றது. மேற்கண்ட விஷயங்களுக்குக் கட்டடங்கள் அமைத்து அவற்றை நமது குலத்தார்களுக்கென்றே பொதுவாக்கிவைக்கவேண்டுமென்பது எனது முழு அபிப்பிராயம். ஆகையால், இவ்விஷயங்களுக்கு வெகுவாய் திரவியம் வேண்டியிருப்பதால் இவை நமதுகுலாபிமானிகளின் ஆதரணையில் நடந்தேற வேண்டியவையாயிருக்கிறது. இதற்காக நமது குலோத்தமர்கள் ஒவ்வொருவரும் மாதசந்தாவாக அணா நான்குக்குக் குறையாதளிப்பதுடன் நன்கொடை யளித்தும் வரும்ப[illegible]க் கொள்ளுகின்றனன்.

கோ. கன்னியப்பாச்சாரி,
ஷெடி பாடசாலை ஸ்தாபகர்.

---

## விவாஹம்.

---

நமது விஸ்வகர்மசந்ததியார் விவாஹம் ஐந்துநாள் பெரும்பான்மையும் நடத்திவருகின்றார்கள். அவ்விதம் நடத்துவதை மூன்றுநாளில் முடித்துக்கொள்ளக்கூடாதாவென்று கேட்போமானால், அது முன்னோர்களின்வழக்கமென்கிறார்கள். நமக்கு முன்னோர்களால் ஏற்படுத்தியவைகளெல்லாம் வழக்கத்தில்வருகின்றனவோவென்று பார்த்தால் அவற்றைக் கையாண்டு வருவதேயில்லை. இவ்விவாகத்தைமாத்திரம் பழயவழக்கமென்று ஏழைகளாயுள்ளவர்கள்கூட கடன்வாங்கிக் கச்சேரி முதலியவைகளும்வைத்து நடத்திவருகிறார்கள். இதனால் நமது ஜாதியார் ஏழ்மை ஸ்திதிக்கு வருகிறதைக் கண்ணாரக்கண்டும் நான்பிடித்த முயலுக்கு மூன்றேகா லென்னும் கதைபோல ஒரே பிடிவாதம் செய்கிறார்கள். இவ்வைந்து நாட்களிலும் பந்துக்களுக்கும், சிநேகிதர்களுக்கும் நடத்தவேண்டிய போஜனகஷ்டமும், தாம்பூலகஷ்டமும், அவரவர்கட்குப் படுக்கைக்குப் பாய் தலையணை தேடி இடம்பார்த்து அமைக்குங்கஷ்டமும், சாமக்கிரியைகள் குறைவுபடுமானால் அவற்றைத்திரிந்து வாங்கிவரு



ங்கஷ்டமும் இவ்வளவென்றுசொல்ல முடியாமையாயிருக்கிறது. அதுவுமன்றி, ஜனங்கள் அதிகமாக வருவார்களாகில் அதனால் அவமானமுண்டாகப்போகிறதென்று முன்வாங்கிய கடன்போதாமல் பின்னும் கடன் வாங்குவதிலேயே தலையிட்டுக்கொண்டு அண்டிமாண்டு பத்திரமெழுதி அரும்பொருள் கொணர்ந்து அலுவலை நிறைவேற்றி, அக்கடன் தீர்ப்பதற்குச் சக்தியற்றவர்களாய் தமது சொத்துக்களையோ அல்லது பிதிரார்ஜ்ஜித சொத்துக்களையோ பூஸ்திதிகளையோ விற்று அக்கடனை வட்டியு முதலுமாகத் தீர்த்து கடனதிகமிருந்தால் அன்னியர்கள் வேலைக்குக் கொடுத்த சொத்துக்களையும் அக்கடனுக்கு ஈடாக வைத்துவிட்டு சொத்துக் குடையவர்களை அலக்கழித்து விடுகின்றார்கள்; அக்கஷ்டங்களெல்[illegible]த்திலூன்றி வேரோடி அவர்களின் கைத்தொழிலையுஞ் செய்யவொட்டாமல் தடுப்பதோடு அவர்களைக் குடும்ப சவரக்ஷணைக்கும் உபாத்தியாயர் சம்பளத்திற்கும் வழியற்றவராக்கிப் பிள்ளைகளைப் படிக்கவிடாமல் பாழாக்கிப் பல ஜாதியார்களுக்கு மதிப்புக் கிடமில்லாமல் நிற்கச்செய்கின்றன.

முற்கால விவாஹத்தை யநுசரிப்பதாயிருந்தால் தற்கால க்ஷேமத்தையும் அநுசரிக்கவேண்டும்; தற்காலத்திலோ ரூபாய்க்கு அரிசி நான்குபடியே விற்கப்பட்டு வருகின்றது. கைத்தொழிற்கூலியுங்குறைவுபட்டிருக்கிறது. ஒவ்வொரு பொருளும் அகவிலையாய்விட்டது; இவைகளை யெல்லாம் அறிந்து அவற்றிற் கேற்றவாறு நடந்துகொள்வதல்லவோ நம்மவர்களின்புத்திசாதனம். அதைவிடுத்துப் பழையவழக்கமென்று பஞ்சாங்கம் பார்த்துப் பார்த்துப் பாழாய்ப்போவதா பஞ்சப்பிரம சந்ததியார்களுக்கு அழகு.

முற்காலத்தில் அரசர்களின் ஆதரவினால் மானியங்களும், வெகுமதிகளும், ஜாதிவிஸ்வாசங்களும், குறைவின்றியிருந்தன. தற்காலத்தில் அவையாவும் போய்விடவே அதனால் நாம் தவித்துழன்று கைத்தொழிலிலேயே கஷ்டப்பட்டு வரும் ஊதியத்தைக்கொண்டே ஜீவிப்பவர்களாயினோம். இவைகளையெல்லாம் அறியாமல் நம்மவர் ஐந்துநாள் விவாஹமே அமைதியென்று அருந்துயர்க் குள்ளாகி விடுகின்றார்கள். அதையகற்றி மூன்றுநாள் விவாஹமேவைத்துக் கொள்வோமானால் எவ்வளவு சௌகர்யமாயிருக்கும்.

இவ்விவாஹத்தால் திரவியநஷ்டமின்றிச் சகாயமாகவும் கைகூடும்; தேககஷ்டமும் குறைவுபடும்; வரும் பந்துவர்க்கங்களின் மனம்கோணாமல் மரியாதையும் செய்யக்கூடும்; திவ்யபோஜனமும்அளிக்கலாகும். இவைகளையெல்லாம் யோசியாமல் நம்மவர்கள் கீழ்நிலைமையை,அடைவதற்கு முன்வருகிறார்களேயொழிய மேல்நிலைமைக்கு வரக்கண்டிலம்; மற்றையவகுப்புச்சாதியர்களில், சிலர்ஐந்துநாள்விவாஹமே செய்து வந்தவர்களாகவே இருக்கிறார்கள்; அவர்கள் இப்போது காலக்கிரமத்தை அநுசரித்து மூன்றுநாள்விவாகமாகவைத்து நடத்தவில்லையா? அதனினும் சுருக்[illegible]க ஒரேநாள் விவாஹஞ் செய்யவில்லையா? விப்பிர ஜாதியிலும் மற்ற ஜாதியார்களிலும் ஆலயத்திற்குச்சென்று ஒரேவேளையில் முகூர்த்தம் செய்யவில்லையா? மேற்சொன்ன ஜாதியார்களுக் கெல்லாம் வேததிகாச புராணவிஷயங்கள் தெரியவாராவோ? அவர்கள் செய்வதெல்லாந் தகுதியற்றனவா?

விவாஹ காலத்தில் குறைந்தநாள் விவாஹஞ்செய்வதால் அவர்களுக்கு புத்திரசந்தானங்கள்கிடையாவோ? அவர்கள் ஜாதியின் பெருமை குறைந்துவிட்டதா? மற்ற காரியங்கள் நடந்தேறவில்லையா? நம்மவர்கள் ஏன் இந்த மூன்றுநாள் வதுவையை அநுசரிக்கக்கூடாது. நம்மவர்கள் ஐந்துநாள் விவாஹமே கட்டாயம் நடத்தவேண்டுமென்று எந்தச் சுருதியிலும் சொல்லக் காணகிலேம்; சுருதி ஆதாரத்தைக்கண்டு எடுத்துக் காட்டினவரும் இல்லை. ஆகையால், இவற்றை யோசித்துத் தற்கால க்ஷேமத்தை அநுசரிப்பார்களாக.

சந்தவேலூர் - கோவிந்தாச்சாரியர்.

## கைத்தொழில்.

கைத்தொழிலாவது நமது ஜாதிக்கும் இல்வாழ்க்கைக்கும் இன்றியமையாது அத்தியாவசியகமாய் வேண்டற்பாலனவாகிய பதார்த்தங்களைக் கொண்டு கைப்பழக்கத்தால் உருப்படுத்திக் கொள்ளுதலாம்.

நமது குலத்தவர்களாகிய விஸ்வகர்மாக்கள் ஆதிகாலந் தொடங்கி கைத்தொழிலிலேயே பழகிவந்தமையால் இந்துதேசமானது தற்போதும் கைத்தொழில் காக்ஷியின் அலங்காரமாகவே விளங்குகின்றது. அப்படியிருக்க நமது ஜாதியிற் சிலர் கைத்தொழில்செய்வது கௌரவத்திற்குக் குறைவென்று கருதுகின்றார்கள். அது, வைத்தியன் வயிற்றில் நோயாளிப்பிள்ளைபிறந்ததுபோலவும், நெற்பயிரிற் பதர்தோன்றியதுபோலவுமாம், கைத்தொழிலைக் கனவிலும் நினைக்காமல் அசட்டை செய்து நமது முன்னோர் புகழையும் நமது குலப் பெருமையையுங் கெடுப்பது எவ்வளவு பரிதாபகரமானவிஷயம்?

கைத்தொழில் வல்லான் ஒருவனிடம் சென்றுவாய்பொத்திக் கைகட்டி இச்சகம் பேசி அடங்கிச் சேவகம்செய்யவேண்டிய ஆவசியகமில்லை. கைத்தொழிற் றிறமை ராஜராஜாக்களாலும் கற்பகோடிகாலங்கள் மட்டும் புகழப்படுவதாதலால், அது அதனைச் செய்வானுக்கும் அங்ஙனம் செய்வானுதித்தநாட்டிற்கும், அவனைப்பெற்ற மாதாப்பிதாக்களுக்கும், அவன்வாழ்ந்தகாலத்திற்கும் மேலான கௌரவத்தை உண்டாக்குகின்றது.

அரசாதி சக்ரவர்த்திகளிடத்து, உயர்ந்த சேவகஞ்செய்வானொருவனுக்குக் காலகதியாலும், அரசுவேறுபாட்டாலும், பகைவராலும், தன்னறியாமையாலும், தன் தேசம்விட்டுப்பிறதேசம் செல்கையாலும்; சேவஹானிவந்து பிழைப்பு இழக்க நேரினும் நேரிடும். கைத்தொழிலாளனுக்கோ அங்கப்பழுதுற்றாலொழியவேறெப்பரிசாலும் பிழைப்பில்லாமற் போகாது. "அதமம் சேவகாவிர்த்தி" என்பதனானே சேவகம்செய்வதினால் இடர்வரினும்வரும். வர்த்தகமுதலிய வற்றால் உயிர்வாழ்தல் கூடாதோ வெனின், வர்த்தகத்திற்கு முதலின்மையால்பயம். முதலிருப்பினும்நஷ்டமுண்டாகுமென்னும்மனோசஞ்சலம். அதனோடு சோரபயம், காலபயமுதலிய குறைவுபாடுகள் நேரிடுதல் சித்தம். கைத்தொழிற்றிறமைக்கோ சோரபயம், நஷ்டபயமுதலிய வொன்றுமில்லை. ஆதலால், உயிர்வாழ்க்கைக்குக் கைத்தொழிற் கல்வியினுஞ்சிறந்தது வேறொன்றில்லை; கல்விவேண்டாமென்று இவ்விடம் கூறவந்தோமில்லை.



தந்தையாவானொருவன் ஐஸ்வரியவானாயிருப்பின், அவன் தன் புத்திரர்கள் பிற்காலத்தில் சகலராலும் புகழப்பட்டு நல்வாழ்க்கையில் வாழும்படி யவர்களுக்குக் கல்விப்பொருளுஞ்செல்வப்பொருளுந்தேடிக் கொடுப்பான்; அத்தந்தை வறியவனேல், புத்திசாலியாய்மாத்திர மிருப்பின் 'வறுமையிற் செம்மை' என்னும் நீதிவாக்கியப்படி பிச்சையெடுத்தேனும், தன் புத்திரர்களுக்குக் கல்விப்பொருள் ஒன்றையேனும் தேடிக்கொடுப்பன்; அவன் அங்ஙனமேனும் செய்யாதொழியின், அவனுக்குப்பின் அவன் பிள்ளைகளுக்கு வயது வந்த காலத்தில், அவர்கள் தங்கள் நிர்ப்பாக்கிய நிலையைநோக்கித் தந்தையாகிய பாதகன் நம்மைப் பள்ளியில்வைத்திலனே யென்று தந்தையைத்தூஷித்துப் பரிதபிப்பார்கள். இந்த ஏகதேச உவமையைப்போல் நாமெல்லோரும் நம் பின்சந்ததியாருக்குத் தந்தைகளேயாவோம். ஆகையால், நாம் இக்கைத்தொழில் வித்தையைப் பரிபாலனஞ் செய்யாமற் கைசோர விட்டுவிடுவோமானால், இதுநாளுக்குநாள் உலக்கைதேய்ந்து உளிப்பிடியாய்விட்டதுபோல்போய்விடும். நமது பின்சந்ததியாரும் நம்மையேதூஷிப்பார்கள். ஆதலால், நாம் கைத்தொழில் முதலியவற்றையும், அதற் காதாரமாகிய சிற்பநூல்களையும், பரிபாலிப்போமானால் நமக்குப் பெரும்புகழ் உண்டாகும்.

நம்முன்னோர்களெல்லாம் சிற்பசாஸ்திர விதிப்படி இராஜராஜாக்களுக் கெல்லாம் அஸ்திரசஸ்திரங்களைச் செய்துகொடுத்து அவர்களுக்கு வெற்றியுண்டாக்கியும், ஆலயங்களைக் கட்டி அதில் அற்புதமான வேலைகள் செய்தும், விக்கிரகமுதலிய தாம்பிரவேலைகளைச் செய்துகொடுத்தும், மற்ற ஜாதியருக்கு பிழைப்பூட்டியும், மண்டப மாளிகைகள் கட்டியும், இராஜராஜாக்களுக்குக் கிரீடமுதலானவை செய்துகொடுத்தும், உலகசம்ரக்ஷணை புரிந்தும் வந்ததினாலல்லவோ அரசர்கள் மனமகிழ்ந்து நம்மவர்களுக்கு மானியங்களும், மரியாதைகளும், சன்மானங்களுங்கொடுக்க அவற்றைப்பெற்று யாதொரு குறைவுமின்றி வாழ்ந்து வந்தார்கள். தற்போதும் நம் முன்னோர்களால் செய்யப்பட்ட வேலைப்பாடுகளை நாம் கண்ணாரக்கண்டிருந்தும் அவ்வழியில் நிற்குந் திறமையின்றி, சாஸ்திரப்பயிற்சியையுங்கைசோரவிட்டு, நமது புத்திரர்களையும் விர்த்திக்குக் கொணராது தலைகீழாய்கிடந்து தடுமாறி யலைந்துவிடுவதுமன்றி, பழைய சாத்திரங்களைப் பரணைமேற்கிடத்திப் பாழும் எலிக்குப் பரிகொடுத்துப் பார்ப்பவருக்குக் கொடாது பாழாய்போக்கிப் பலவிதத்திலும் க்ஷீணதசையில் வந்துவிட்டோமேயொழிய படியேறுவதற்கு ஏதுவில்லாமல், பாழும் ஞாலத்தில் உழன்று வரவேண்டியிருக்கிறது. ஆதலால், இனியேனும் நம்மவர்கள் கைத்தொழிலை விருத்திசெய்தும் அதற்குரிய சாஸ்திரங்களை ஊக்கத்தோடுகற்றும் உறுதிபெறுவாராக.

துலாபிமானி.

## திடகாத்திர மற்றுப்போவதேன்?

நம்மவர் பிள்ளைகளுக்கு சிறுபருவத்திலேயே கலியாணஞ் செய்துவிடுகின்றார்கள். இப்படிச்செய்வதற்கு இவர்கள் கொண்டிருக்கிற முகாந்திரமாவது, பால்யர்களுக்கு

இல்வாழ்க்கைக்குரிய துணை, சுதந்தரமாயில்லாமற் போவதினிமித்தம் அவர்கள் காலங்களில் பலவிடங்களில் பலவிதமாய்த் திரிந்து பாழடைந்து போவார்கள் என்பதே. ஆததால், இப்படி அதைத் தடுக்க இவர்கள் செய்யும் இந்தச்செய்கையானது அதைவிட பதின்மடங்காம் அழிவையுண்டாக்குகின்றது. இளமையிலிருந்து கல்வியை அப்பியசிக்கவேண்டிய விதியே கால்துமாறிப்போகிறது. பிறகு சொல்லவேண்டியதென்ன? கல்வி எப்போது இல்லையோ! அப்போதே ஞானமில்லை, சம்பாத்தியமில்லை, ஊக்கமில்லை, பெருமையில்லை, உயர்ந்த பதவிகளுக்கேற்ற வழிதுறையுமில்லை. இவைகளெல்லாம் அற்றுப்போவதோடுகூடி ஸ்திரீதேக சம்பந்தத்தினால் நாளுக்குநாள் தேகக்கட்டும் உடைந்துகொண்டே வருகிறது; கூடவே சமுசாரபாரத்திற்குத் தலைச்சிம்மாடு கேட்கிறது, மேற்சொல்லியபடி சம்பாத்தியக் குறைவினால் சமுசாரத்தினுடைய சஞ்சலமும் கூட இடிக்கிறது. இப்படி தேககஷ்டமும், குடித்தன நிர்வாக சம்பந்தத்தால் ஆத்தும வியாகூலமுமான இரண்டு விஷயத்திலும் உடைந்து அவர்கள் கட்டுவிட்டுக் கலகலத்துப் போகிறார்கள்; எப்போது மனதிற்குத் திருப்தியில்லையோ அப்போதே தேகம் மெலிவடைகிறது; எப்போது தேகம் மெலிவடைகிறதோ அப்போது மனமும் குன்ழந்துபோகிறது; இவ்விரண்டும் திடனற்ற கால்பிணிக்குக் காரணமாகின்றன. இப்படி திடனற்ற கூட்டுறவால் புத்திரோற்பத்தி யுண்டாகுங் காலத்தில் அப்பிள்ளைகள் பலஹீன முள்ளவையும், தேகவளர்ச்சி யில்லாதவையும், வீரமற்றவையுமாய்ப்போகின்றன. மேலும், கர்ப்பகாலக்கூறன்றி விருதாவான காலங்களிலே போக்கடித்த இந்திரிய நஷ்டியால் புத்திர சந்தானம் அதிகமாயும் இருப்பதில்லை. "உடற்பிறப்பில்லா உடம்புபாழ்" என்றபடி உடற்பிறப்புகளில்லாத குடும்பம் எவ்வண்ணம் பாரிகுடும்பமாகும். ஆகவே, சந்ததி பெருக்கமும் அற்றுப்போகிறது; ஆயுளோ! வெகு சீக்கிரத்தில் கூற்றுவன் கையில் எட்டுகிறது. இதனாலல்லோ நம்மவர்கள் திடகாத்திரமற்றுப் போகிறார்கள். நாம் கேள்விப்பட்டு வருவதின்பிரகாரம் அமரிக்காவில்-சராசரி பெரும்பாலும், வெள்ளைக்காரரில்-நூறு, நூற்றைம்பது வயதுள்ளோர் இருந்து சாகிறதாகவும், அவர்கள் நான்கைந்து தலைமுறைகளைக் காண்பதாகவும், முப்பது நாற்பது பௌத்திர பௌத்திரிகளையும், பௌத்திரிகளுக்குப் பௌத்திரிகளைக் கண்டதாகவும் அதுவரையிலுங்கூட "கூனி குறுகாமல் கொண்டுதலை யாடாமல், மேனிதிரையாமல் விழியொளியு மங்காமல்" வாழ்ந்ததாகவுந் தெரிகிறது. இவர்களென்னஜென்மம். வானத்தினின்று பொத்தென்று குதித்தவர்களா? நம்மைப்போலப் மனிதர்தானே! அவர்கள் தங்கள் தேகங்களைச் சரியான வளர்ப்பினாலும், பல விஷயங்களிலும் தங்களைப் பாதுகாத்து வருவதினாலல்லவோ காயசித்தி யடைகிறார்கள். இந்தயோசனை நம்மவர்களுக்கே னில்லை. இனியாகிலும் திடகாத்திரத்தைப் பெற்று வாழ்வதற்குரியவழிகளைத்தேடி வருவார்களாக.

P. சொக்கலிங்காச்சாரியர்.

உ

ஸ்ரீமத் விராட் விஶ்வப்ராம்ஹணே நமஃ

# ஸ்ரீ விஶ்வகர்ம பக்தோபாக்யானம்.

## நரஹரி பக்தர் சரித்திரம்.

ஏத்தேசங்களிலும் நற்றேசமாய் விளங்கும் உத்தரதேசத்தில்,பிரமதேவனுடைய அவதாரமாகிய நாபாசி யென்கிற முனிவர் தவஞ்செய்யும் வனத்தில், சில சாதுக்கள்சென்று அந்த ருஷீஸ்வரரை யடுத்து, ஓ மஹானுபாவரே! நீர் சுபகரங்களான அநேகபக்தர்களுடையசரித்திரங்களை யறிந்தவரா யிருக்கிறபடியால் நீரே மஹாபுண்யபுருஷர், மஹானுபாவர், மஹாபாக்யசாலி,எங்களுடையபுண்யவசத்தினால் இவ்வனத்தை வந்தடைந்தீர்; இனி நாங்கள் தன்னியர்க ளாய்விட்டோம்; நீர் நீடூழி கால மிருக்கவேண்டும்; இங்கிருக்கும் சாதுக்களெல்லாம் பக்திசெய்து முத்தியடைந்தோரின் சரித்திரங்களைக்கேட்டு ஆனந்த பரவசமடைந்துவந்தோம். ஆயினும், இன்னும் சிலசரித்திரங்களை உம்மைப்போலொத்த சர்வக்ஞரிடந்தான் கேட்டுத் தெளியவேண்டும். அதாவது, விஶ்வகர்மவம்சத்தில்உற்பவித்தபுண்யர்கள், பகவானைப் பக்திசெய்து முத்தியடைந்த மஹான்களின் சரித்திரத்தை அடியேங்களுக்குச்சொல்லியருளல் வேண்டும்; என்றுகேட்க, ஆனால் கூறுகின்றேன் கேட்பீர்ககளாக என்று நாபாசிமுனிவர் கூறுகின்றார்.

கேளும் சாதுக்களே! பண்டரிபுரத்தில் விஶ்வகர்மவம்சத்திற் பிறந்தவரும், சுபர்ணஸ கோத்திரத்தை யுடையவரும், பொற்பணிசெய்பவரும், சிவபத்தியிற் சிறந்தவரும், நற்குண நற்செய்கையை யுடையவருமாகிய நரஹரி யென்னும் பெயரையுடைய ஓர் மஹானுபாவரிருந்தார். அவர் பிராதக்காலத்திலெழுந்து அங்குள்ளபீமாநதியிலே ஸ்நானஞ்செய்து நித்தியகர்மானுஷ்டானங்களைக் குறைவற முடித்துக்கொண்டு, அதற்குமேல் மல்லிகேச்சுரருடைய பூஜையைச் செய்து, ஸ்ரீசங்கரனுக்குச் சித்திரான்ன முதலியதும் வைத்து நிவேதனஞ் செய்து, பிறகு தான் அருந்தித் தன் தொழிலைப் பார்த்துக்கொண்டு வருவார்; அவ்வேளைதவிர மற்ற வேளைகளில் சிவநாமாவளியையும்,சிவதோத்திரங்களையும், சிவபஞ்சாக்ஷரமந்திரங்களையுமே உச்சரித்துவருவார்; விஷ்ணுமூர்த்தியைக் கனவிலும் நினைக்கமாட்டார்; தான் பண்டரிபுரத்தில் பிறந்திருந்தும் அவ்வூரில் திருக்கோயிற்கொண்ட விஷ்ணுமூர்த்தியாகிய பண்டரிநாதனை ஓர்நாளாகிலும்போய் தரிசிக்கவுமாட்டார்; விஷ்ணுவென்னும் சப்தம் காதிற்கேட்டாலும் காதை காத்தினால் அடைத்துக் கொள்ளுவார்; இவ்விதமாக விஷ்ணுவை வெறுத்து சிவனைவழிப்பட்டு வாழ்ந்துவருநாளில், அவ்வூரில் ஓர்வர்த்தகனுக்குப்புத்திரசந்தானமில்லாமையால் அவ்வர்த்தகன் அவ்வூர்பண்டரிநாதன் ஆலயத்திற்குட்சென்றுவணங்கிசுவாமி!ஓதயாநிதியே! அடியேனுக்கு இதுகாறும் ஓர்புத்திரபாக்கியம்அருள்செய்யாதிருப்பதுஉ

க்கழகோ? அதனால்யான்படும் மனக்கஷ்டமானது உனக்குச் சம்மதமோ? இனியாகிலும் அடியேனுக்கு ஓர் புத்திரன்பிறக்கும்படி அருளிச்செய்தால் தேவரீருக்கு நவரத்தினக் கற்களிழைத்த தங்கஅரைஞாண் ஒன்று செய்தளிக்கின்றேன்; என்று பிரார்த்தனைசெய்து கொண்டான். சிலநாளில் அவ்வர்த்தகனுக்குப் பண்டரிநாதனருளால், ஓர் ஆண்குழந்தை பிறந்தது; உடனே ஜாத கன்மக்கிரியை நடத்தி பண்டரிபுரநாதனைவணங்கி, தெரிசனஞ்செய்துவிட்டு முன்சொல்லிக்கொண்ட அரைஞாண் பிரார்த்தனையைச் செலுத்தும் பொருட்டு அங்குள்ளவர்களைப் பார்த்து, சுவாமிக்கு நவரத்தினக் கற்களிழைத்த அரைஞாண் ஒன்று செய்யவேண்டி யிருப்பதால் இவ்வூரில் வேலைத்திரமாகச் செய்யக்கூடிய விஸ்வகர்மாக்கள் யாரிருக்கின்றார்கள் ; அப்படிப் பட்டவர்க ளிருந்தால் காண்பியுங்கள்; என்று கேட்க, அவ்வூரார்கள், நீ சொல்லுகிறபடிச் செய்து கொடுக்கக் கூடியவர் நரஹரியென்கிறவர் ஒருவர்தானிவ்வூரிலிருக்கின்றார். அவர்தான் பொற்பணிகளை அதி உன்னதமாய்ச் செய்யக் கூடியவர்; மற்றெவரையுங்காணோம்; என்று சொல்ல, உடனே அவ்வர்த்தகன் அங்குள்ளாரின் சொற்படியே எண்ணினவனாய், தங்கத்தையும், நவரத்தினங்களையும் எடுத்துக்கொண்டு நரஹரியார் வேலைசெய்யு மிடத்தை யறிந்தோடிவந்து, நரஹரியாரைக்கண்டு, நமஸ்கரிக்கவே, நரஹரியாரும் பிரதி நமஸ்காரஞ் செய்ய, நரஹரியாசாரியரே! நான் சாக்ஷாத் பண்டரிபுர நாதனுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டேன். அதாவது, எனக்குப் புத்திரப்பேறில்லாமல் நெடுநாள்வருந்தி பண்டரிநாதன் ஆலயத்துட் சென்று அக்கடவுளை மனதாரத்தியானித்து எனக்குப்புத்திரன் பிறந்தால் கல்லிழைத்த பொன்அரைஞாண் ஒன்று செய்தளிப்பதாகப் பிரார்த்தனைசெய்துகொண்டேன். அன்றுமுதல் என் மனைவி கருப்பவதியாகி, ஓர் ஆண்குழந்தையையீன்றனள். ஆகையால், அப்பிரார்த்தனையைச் செலுத்த வேண்டிய நிமித்தம் உயர்ந்தவேலைக்காரர் யாரென்று விசாரித்ததில், எல்லோரும் தங்களையே காண்பித்தனர்கள். ஆகையால், நீரே அந்தவேலையை முடித்துக்கொடுக்கவேண்டும். இதோ தங்கமும், நவரத்தினங்களும் கொண்டுவந்திருக்கின்றேன்; என்று சொல்ல, நரஹரியார் அவ்வர்த்தகரைப் பார்த்து, ஆனால், உனதிஷ்டப்படியே செய்துகொடுக்க யாதொரு ஆக்ஷேபமில்லை; நானொரு வார்த்தை சொல்லுகிறேன் கேளுங்கள்.

வர்த்தகரே! அதாவது, அந்த ஆலயத்திற்குள் நான்சென்றதுங்கிடையாது, அக்கடவுளைத் தெரிசிக்கிற வழக்கமுமில்லை, சிவனையன்றி வேறு தெய்வத்தை நினைக்கிறதுமில்லை, காண்கிறதுமில்லை,ஸ்துதிசெய்கிறதுமில்லை. ஆகலால், நீயேசென்று அம்மூர்த்தியின் இடைக்குத்தக்க அளவுபிடித்துக்கொண்டுவந்து கொடுப்பீராகில், அந்த அளவுபடிக்கே செய்து கொடுக்கிறேன்; என்று சொல்ல, அந்த வர்த்தகன் சிரித்து பண்டரிநாதன் இவ்வளவு சமீபத்திலிருந்தும் தெரிசிக்கக்கூடாதது புண்யக் குறைவென்று நினைத்துக்கொண்டு, தானே சென்று அக்கடவுளின் அரைக்குத்தக்க அளவெடுத்துவந்து, ஆசாரிகையில் கொடுத்து வேலை முடித்துக்கொடுக்க ஓர்நாள் கெடுவு கேட்டுக்கொண்டு தன்னிருப்பிடம் போய்விட்டான்.

நரஹரி பக்தரானவர் அந்த அளவைக்



கொண்டு உயர்தர வேலைப்பாடுடன் செய்துமுடித்து,கெடுப்பிரகாரம்கொடுத்துவிட்டார்; அவ்வர்த்தகன் அதனை வாங்கிக்கொண்டு அதிக சந்தோஷமுடையவனாய், அதற்குச் சம்பாவனையையும் சன்மானத்தையுங்கொடுத்துவிட்டு அந்தப் பொன் அரைஞாணைக் கொண்டு, கோயிலுட் சென்று, பண்டரிநாதனுக்கு, அபிஷேகஞ் செய்வித்து வஸ்திர புஷ்பங்களால் அலங்கரித்தபின் இந்தஅரைஞாணைக்கொடுத்துபோடும்படிச் சொல்லிப்பார்க்குமளவில், நான்கு விரற்கடையளவு குறைவுபட் டிருந்தன. அதை எடுத்துக்கொண்டு வர்த்தகரானவர் நரஹரி பக்தரிடத்தில் ஓடிவந்து இந்த அரைஞாண் நான்கு விரற்கடை யளவு குறைவுபட் டிருக்கிறது. அதைச் சரிவரச் செய்து கொடுத்தருள வேண்டுமென்னலும், பக்தரானவர் அதைப்பெற்று அந்த நான்கு விரற்கடை நீளம் வரும்படிச் செய்து கொடுத்தனர். அதனை அவ்வர்த்தகன் பெற்றுக்கொண்டு போய், சுவாமியின் இடையில் கட்டிப் பார்க்குமளவில், அது இரண்டு விரற்கடை அதிகம் நீளமாயிருந்தது. திரும்பவும் அவ்வர்த்தகன் நரஹரியாசாரியினிடம் ஓடிவந்து இரண்டுவிரற்கடையளவு அதிகமா யிருக்கிறதென்று சொல்லி மிகவும் விசனப்பட்டு, ஓ ஆசாரியரே! கோயிலுக்கு நீர் வந்து, சக்ரபாணியைக் கண்ணாலேபார்த்து, உமது கரத்தினாலே இந்த அரைஞாணைப் பகவானுக்கு இட்டுப் பார்த்தால், அப்பொழுது ஏற்றக் குறைவு நன்றாய்த்தெரியும்; அதன்மேல் ஓரேதடவையில் செய்து முடிக்கலாம் ; ஆகையால் என்பேரில் தயவுகூர்ந்து வரவேண்டுமென்று சொல்ல அந்த வார்த்தையைக்கேட்ட நரஹரியானவர், வர்த்தகரே! நான் பரமசிவனைத்தவிர இரண்டாந் தெய்வத்தைக் கண்ணினாலேயும் பார்க்கிறதில்லையென்கிற வைராக்கியம் எனக்குண்டு; நீர் அதிக விசனமாய் சொல்லுகிறபடியினாலே உம்முடைய நிமித்தம் வருகிறேன். என்று சொல்லி, தனது கண்ணிரண்டையும் வஸ்திரத்தினால் மூடிக் கட்டிவிடும்படிச் செய்து, அவ்வர்த்தகன் கரங்களைப் பிடித்துக்கொண்டு கோவிலுக்குட் சென்றார். இவ்விதமாகச் சென்ற நரஹரி பக்தரை அந்த க்ஷேத்திரவாசிகள் பார்த்து, ஆச்சரியமுற்று நகைத்து, சுரம் வந்தவனுக்குப் பக்குவான்னம் எப்படி ருசிக்காதோ, அப்படி இவனுக்கு இத்தெய்வ தரிசனம் ருசிக்கவில்லை யென்றும் இன்னும் நானாவிதமாகப் பேசிக்கொள்ளும் சொற்க ளெல்லாம் இந்த பக்தர் காதில் விழ அதையுங் கேட்டுக்கொண்டு, சுவாமி சந்நிதியைச் சேர்ந்து, மெய்மறந்து, சிவபெருமானே! என்று சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்க, அங்குள்ளவர்கள் எல்லோரும் கண்டு இந்த பண்டரிநாதனைத் தரிசனம் பண்ணக் கூடாதென்றிருந்த நரஹரியானவர் என்னகாரணத்தால் சாஷ்டாங்கமாகச் சேவித்தாரோ தெரியவில்லை என்று பேசிக்கொள்வதையும் காதிற்கேட்டு நிற்குமளவில், வர்த்தகன், இந்த நரஹரி ஆசாரியின் கரங்களைப்பிடித்துப் பண்டரிநாதன் சமீபமாய்க் கொண்டுபோய்,இவர்தான் சுவாமியென்றுசொல்ல, நரஹரியார் தன்கரத்தினாலே சிரசுமுதல் பாதம்வரையில் தொட்டுப் பார்க்க, ஐந்துமுகமும், சிரசில் ஜடாமகுடமும், அதில்கங்கையும், சந்திரனும், கழுத்தில்சர்ப்பாபரணமும், அரையில்புலித்தோலுடையும், இன்னும் பரமசிவனுக்குடைய சின்னங்களெல்லாம், நரஹரிகைக்கு அகப்பட்டபடியால், மனம் நெகிழ்ந்து மெய்சிலிர்த்து தேகம் புளகாங்கிதங் கொண்டு

ஆனந்தக்கூத்தாடி பதிகங்களைப்பாடி இது என்னுடைய தெய்வமாயிற்றே! நான்விருதாவாக கண்ணைக் கட்டிக்கொண்டு வந்தேனே! ஈதென்ன அபசாரம்! இத்தனை நாளில் வூரிலிருந்தும் இச்சிவபெருமானைக் கண்ணாரக்காணாதபாவியாய்விட்டேனே! தேவரீர் அடியேனுடைய குற்றங்களை க்ஷமித்தருளல்வேண்டும் என்று ஸ்தௌத்தியஞ்செய்து, முன் கண்ணைக்கட்டிய வஸ்திரத்தை அவிழ்த் தெறிந்துவிட்டுக் கண்ணைத் திறந்துபார்க்குமளவில், அக்கடவுளானவர் நீலமேகஸ்யாமளவர்னமும், திருமுகத்தில் ஸ்ரீசூர்ணமும், கவுஸ்துவ வைசந்தி வனமாலையும், காதிலேமகரகுண்டலமும், மார்பிலே ஸ்ரீ வத்ஸலாஞ்சனமும், இடுப்பிலே வைத்து விளங்கும் இரண்டு கரங்களும், இடையில் பீதாம்பரங்களும், உபய திருவடிகளும் ஆகிய இவைகளைக் கண்டு, நரஹரியானவர் ஆச்சர்யமடைந்து, திரும்பவும் நேத்திரத்தை மூடிக்கொண்டு அக்கடவுளைத் தொட்டுப்பார்க்கிறபோது பார்வதிமணாளனாகிய பரசிவ சொரூபமாயிருக்கக்கண்டார். பிறகு இந்த நரஹரி பக்தருக்கு ஞானோதயமுண்டாகி, சத்பிரியத்தோடே, சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, ஜயஜய தேவாதி தேவா! சர்வஜீவ தயாபரா! பரமேசா! பக்தவத்ஸலா! க்ஷீரசாகர வாசா! நீலகண்டா! பண்டரிவாசா! பத்மநாபா! என்றும் இன்னும் அவனுடைய திருநாமங்களைச் சொல்லி ஸ்தோத்திரம் செய்து சுவாமி! அடியேனுடைய மாயையை நீக்கிவிடவேண்டும். உன்னுடைய மகிமையையறியாமல் துவிதமாய் எண்ணினேன். அந்தச் சங்கற்பத்தைப் போக்கி அழிவில்லாத அத்வைத பிரேமள பக்தி வரும்படியாய்க் கிருபைசெய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தபோது; பண்டரிநாதன் சுயரூபத்தோடு தோன்றி, பக்தசிகாமணியான ஓ நரஹரியே! நீ என்னுடைய பிரியமான நிஜபக்தனானபடியால் உன்னிடத்தில் இந்த உபாயங்களைச் செய்தேன். இனிமேல் எனக்கும் சிவனுக்கும் பேதமிருப்பதாக எண்ணவேண்டாம் என்று சொல்ல, உடனே நரஹரிபக்தர், சாஷ்டாங்கமாய்ச் சேவித்து உபயதிருவடிகளையும் பிடித்துக் கொண்டு ஸ்தோத்திரம் பண்ணி, நவரத்தினங்களா லிழைக்கப்பெற்ற பொன்னரைஞாணை வாங்கி, அப்பண்டரிநாதன் இடையிலே தரித்தவுடன் அக்கடவுள் இடுப்பிற்குச் சரியான அளவாயிருந்தது. அப்போது தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். நரஹரிபக்தர் தோத்திரஞ்செய்து, ஆரா ஆனந்தக் கடலுள் மூழ்கினார். பிறகு வர்த்தகன் சந்தோஷமாய்ப் பண்டரிநாதனையும் நரஹரிபக்தரையும் சாஷ்டாங்கமாகப்பணிந்து, தோத்திரம் புரிந்து, தனதிருப்பிடம் போய்ச் சேர்ந்தனன்.

பண்டரிநாதன் தனது தாசர்கள் எவ்விதங்கோருகின்றார்களோ அவ்விதகாக்ஷி கொடுப்பவ ரானபடியினாலே, அதுமுதல் நரஹரி பக்தரின் நிமித்தம் தன் சிரசிலே பாணலிங்கம்போலக் கிரீடத்தைத் தரித்துக்கொண்டு விளங்குவாராயினார்; நரஹரி பக்தர் அதுமுதல் பக்திசெய்து முத்தியடைந்தனர். சுபம்.

உ

# விரதமஞ்சரி.

## விநாயக சதுர்த்தி

முன்னொருகாலத்தில் பிரமன் குமாரர்களில் ஒருவனாகிய தக்கனென்பவன் அரியதவங்களைச்செய்து சகல லோகநாயகியாகிய உமாதேவி தனக்குப் புத்திரியாகிவரவும், தேவர்கள் முதலாயினோர் தனதாணையைக் கடவாமல் நடந்து கொள்ளவும், இன்னும் இவைமுதலிய சகலவரங்களைப்பெற்று மிகவும் பிரசித்தனாகி வாழ்கிற நாளையில்உமாதேவி தனக்குப் புத்திரியாகியவா, அவ்வம்மையைச் சிவபிரானுக்குத் திருக்கல்யாணஞ்செய்து கொடுத்துப், பின்னர் ஒருநாள் கைலாயத்திற்குச்சென்று சிவபிரான்சந்நிதானத்தை யடைந்தபோது, மருமகனாகிய சிவபெருமான் தன்னைக்கண்ட வுடனெழுந்து மரியாதை செய்யவில்லை யென்னுங் கோபத்தால், அவ்விடத்தினின்றும் நீங்கித் தன்னரண்மனையைச்சேர்ந்து, சிவனை நிந்தித்து அவரினுந்தானுயர்வடையவேண்டு மென்னுங் கருத்தோடு விஷ்ணுமுதலிய தேவர்களையும் வரவழைத்து, அவர்கள்முன்னிலையில் ஓர்யாகத்தை நடத்துவதானான். அதனைப் பார்வதியார்கேட்டுச் சிவபெருமானிடம் விடைபெற்றுச்சென்று தக்கனையும்வேதவல்லியையுங்கண்டுதுதிக்க, அதற்கவர்கள்சற்றும் மரியாதை செய்யாது நிந்தனை செய்தார்கள். உடனே உமாதேவிக்குக் கோபமுண்டாகி இந்தயாகசாலை பேய்விளையாடும் சுடலையாகக் கடவதென்று சபித்து, மீட்டுங்கைலாயத்தைச்சேர்ந்து தக்கன்செய்துவருங்கொடுமை யிவ்வாறென்று சிவபிரானுக்கறிவிக்கவும், அவருக்குக்கோபமுண்டாயிற்று, அக்கோபாக்கினியினின்றும் வீரபத்திரக் கடவுள் தோன்ற, அவரைச் சிவபெருமான் பார்த்து, நீஇப்பொழுதேசென்று தக்கன்யாகத்தை அழித்துவருவாயென்றுகட்டளையிட, அவர் அவ்வாறேசென்று அங்குவந்திருக்கும் சகலரையும் நாசஞ்செய்து திரும்பியமாத்திரத்தில் சிவபிரானுக்குக் கிருபைவந்து யாகத்தில் இறந்தவர்களையெல்லாம் பிழைப்பித்து, இனி துர்க் கிருத்தியங்கட்கு உடன்படாதீர்களென்று கட்டளையிட்டு, அவர்கள்செல்ல விடைகொடுத்துப் பின்னர், தக்கனருகில் வந்து அவன் தம்மை நிந்தைசெய்தவனாதலால் அதற்கு அடையாளமாக ஆட்டுத்தலையை அவனுடலிற் பொருத்தி எழுந்திருக்கும்படிச் செய்தார். பார்வதிதேவியார் அவையாவையும் பார்த்து நாயகரை நிந்தித்த தக்கனுக்கு நாம் மகளானதினால் உலகம் பழிக்குமென்று மனவருத்தமுற்றுத் தமது யோகாக்கினியினாற் தேகத்தை விடுத்துப் பர்வதராஜனுடைய தபோபலத்தினாலும், மேனகை செய்துவந்த விரதத்தினாலும், அவர்கட்குக் குமரியாகத் திருவவதாரஞ் செய்து நாளுக்கு நாள் வளர்ந்துவருங் காலத்தில், சிவபெருமான் கங்கையை விவாகஞ்செய்துகொள்ளு முன்னர்த் தம்மை விவாகஞ் செய்துகொள்ளவேண்டுமென்னுங் கருத்துடன் தந்தையாகிய பர்வதராஜனை யடைந்து தமதெண்ணத்தையறிவித்து நிற்க, அதனை யவ்வரசன் கேட்டு, மனமகிழ்ந்திருக்கும்போது, பார்வதியானவள் எனது எண்ணமானது நிறைவேறுதற்கேற்ற ஓர் விரதத்தைத் தெரிவிக்க வேண்டுமென்னலும், அவன்கீழ்வருவனவற்றைச் சொல்லுவதாயினான்.

தாயே! மிகச் சிறப்புடையதும், சிருஷ்டித் தொழில்களைத் தந்ததும், இந்திரன் சாபத்தை நீக்கியதும், சகல துன்பங்களைப் போக்கத்தக்கதும், நித்தியமாய் யுள்ளதும், சகலபொருள்களையும் அளிக்கத்தக்கதும், இன்னும் இவைமுதலான அளவற்ற மகிமைகளையுடைய ஒரு விரதமிருக்கின்றது. அவ்விரதம் தேவதேவோத்தமராகியும், மூவர்முதல்வராகியும், முத்தொழிற்கும் காரணராகியுமிருக்கின்ற யானைமுகக்கடவுளுடைய "சதுர்த்தி விரதம்" இத்தன்மைத்தாகிய மேலானவிரதத்தை யனுஷ்டிப்பீராயின், நீர் நினைத்தவண்ணம் சித்திக்குமாதலால் அதனை யநுஷ்டிக்கும் முறைமையைச் சொல்லுவேன் கேட்பீராக.

ஆவணிமாதம் பூர்வபக்ஷத்தில்வருகின்ற சதுர்த்திதினத்தில் அவ்விரதத்தை யாரம்பிக்கவேண்டும்; அவ்வண்ண மாரம்பிப்பவர் அத்தினம் அதிகாலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து நித்தியவனுஷ்டானங்களை முடித்து, அபிஷேகத்திற்குரிய திரவியங்களையும், அருச்சனைக் கேற்ற மலர்களையும், நிவேதனத்திற்தத்தக்க பதார்த்தங்களையும், தூபதீபங்கட்கு வேண்டும்பொருள்களையும் சேகரித்து ஓர் பூஜாமண்டபத்தை அழகுபெறச் சமைத்து, பரிசுத்தமான விடத்து மிருத்திகை (மண்) யெடுத்துவந்து அதில் வேர்கள் செல்லுமுதலிய செந்துக்கள், கல்லுகள் என்னு மிக்குற்றங்களில்லாமல் சோதித்து அதனைப் பிசைந்து, சிற்பசாஸ்திரத்திற் கூறியிருக்கின்ற முறைமைப்படி விநாயக மூர்த்தியினுடைய திருவுருவஞ் சமைக்கவேண்டும்; இதுவன்றிப்பொன்னினாலொரு திருவுருவமுஞ்சமைக்கவேண்டும்; அது செய்யச் சக்தியில்லாதவர்களாயின், ஒருபலம், அரைப்பலம், காற்பலம் என்னும் இவ்வித அளவிலேனும் ஒன்று சமைத்தல் வேண்டும்.

பின்னர், ஆசிரியருத்திரவின்படி சுத்த கங்கையில்ஸ்நானஞ்செய்து திருவெண்ணீறணிந்துஉருத்திராக்ஷகண்டிகை தரித்துமேற்சொன்னபூஜாமணடபத்திற்குவந்து தண்டுலம்பரப்பி, அதன்மேல் இழைசுற்றி நீர் நிரப்பியிருக்கின்ற பொற்கும்பத்தை வைத்து முன்னர்சமைத்திருக்கின்ற பிரிதிவிமூர்த்தியையும், பொன்மூர்த்தியையும், அதனருகில் எழுந்தருளச் செய்து ஆகமவிதிப்படிபூசித்து, ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரெண்டு இருபத்தெட்டென்னு மெழுத்துக்களுள்ள மந்திரத்தை ஜெபிக்கவேண்டும்.

இவ்வாறு ஜெபிக்குங்காலையில் பத்துக்கொருகால் தருப்பணஞ் செய்யவேண்டும்; பத்து தருப்பணத்திற்கு ஒருகால் ஒரு ஓமஞ்செய்ய வேண்டும்; பத்து ஓமத்திற்கு ஒருகால் அன்னதானஞ் செய்யவேண்டும்; இந்தக் கிரமமாகப் பூஜைசெய்து நிறைவேற்றுங்காலத்தில் பொன்பூமி முதலான தானங்களைச் செய்யவேண்டும்; அடுத்த மாதஞ் சுக்கிலபட்ச சதுர்த்திவரையில் நாள்தோறு மேற்சொல்லிய முறைமைப்படி பூஜைசெய்து மிருத்திகையினாற் செய்யப்பட்ட விநாயகமூர்த்தியை நிருத்த கீத வாத்தியங்களோடு மெழுந்தருளச்செய்து மடுவிலாவது, தடாகத்திலாவது, வைத்துவிடவேண்டும்; இவ்வாறு பூஜை செய்கின்ற முப்பது நாளும் ஆகாரநித்திரை யில்லாமல் சத்தாதிவிஷயங்களை நிக்கிரகித்து முப்பத்தோராநாள் விருந்து, ஒக்கல், அதிதிகள் முதலானவர்களோடு போஜனஞ்செய்யவேண்டும்; முப்பது நாளும் ஆகாரமின்றி யிருக்கச் சக்தியில்லாதவர்கள் இவ்விரதத்தையாரம்பிக்கும் முதல்நாளிலாவது அவ்வாறிருந்து, மறுநாள்தொட்டு அவிசு, பழம், பால் இவைகளி லொன்றைப் புசித்துக்கொண்டு விரத மனுஷ்டிக்க வேண்டும்; முப்பதுநாள் அநுஷ்டிக்கமாட்டாதவர்கள் ஆரம்பித்த ஒருநாள்மாத்திரமாவது ஆகாரமுதலியவைகளை நிக்கிரகித்து மேற்சொன்ன முறைமைப்படி யநுஷ்டிக்கவேண்டும்; எவ்விதத்தேனும் இருபத்தொருபேருக்கு அன்னதானம் செய்துவரவேண்டும்; இவ்வாறு அவரவர்கள் சக்திக்கேற்ப எத்தனை மூர்த்திகளைப் பூசித்தாலும் அப்பூசனையில் மூலமந்திரம், ஏகாட்சரம், சடாட்சரம் ஆகிய இம்மந்திரத்தில் யாதாமொன்றை ஜெபித்து, முடிவில் தருப்பணாதிகளை முடித்துத் தம்பதி பூஜையும் செய்யவேண்டுமென்றுசொல்ல, அவையனைத்தையும் பார்வதி தேவியார் கேட்டு மனமகிழ்ந்து இவ்விரதத்தை முன்னர் யாவரநுஷ்டித்தார்களென்றுகேட்கப் பர்வதராஜசொல்லலுற்றான்.

தாயே! முன்னொரு நாள் சகல தேவர்களும் புடைசூழ்ந்து வணங்கச் சிவபெருமான் கைலையிலெழுந்தருளி யிருக்கின்றபோது சுப்பிரமணியக்கடவுள் அச்சந்நிதானத்திற்கு வந்து பரமனைவணங்கி விண்ணப்பஞ் செய்ததாவது, சுவாமி! அளவற்ற விரதங்களுள் மேலான விரதத்தைத்தாங்கள் கிருபைகூர்ந்து அன்புடன் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்ன, அதற்குச் சிவபெருமான் கிருபைசுரந்து ஷண்முகனே! சகலவிரதங்கட்குமேலானது



விநாயகசதுர்த்தி விரதமே. அதுவே நினைத்தகாரியங்களை விரைவில் முடிக்கத்தக்கது என்று சொல்லலும், அதனைச் சண்முகக்கடவுள் கேட்டு, சுவாமி! தாங்கள் கூறுவது அடியேன்சிறுபிள்ளையென்றுநினைத்தோ! அல்லது அவ்விரதமே சத்தியந்தானோ! விரத மளவற்றனவாக விருக்கின்றன. அவற்றுளொன்றை யநுக்கிரகஞ் செய்யாமல் விநாயகமூர்த்தியினுடைய விரதத்தை மேலானதாகத் தெரிவித்தீர், அவ்விநாயகமூர்த்தி அடியேனுக்கு மூத்தவராயினும் தேவரீர்க் கவர் புத்திரரல்லவோ? தேவரீரினும் அவர்மேலானவராயிருக்கின்சுவாமிகளநுக்கிரகித்தவாறு அவர்விரதமும் மேலானதாகவேயிருக்கும். ஆதலால், அடியேன் மனத்திற்கொண்டசந்தேகத்தை நீக்கவேண்டுமென்று பணித்துகேட்க, அதற்குச் சிவபெருமான் சந்தோஷித்துக் குழந்தாய்! யாம் சொன்னது சத்தியமேயாகும்.

அஃதெவ்வாறெனில், எல்லா உலகத்திலும் நீக்கமற்று நிறைந்துள்ளதாயும், உருவாகியும், அருவாகியும், பலவாகியும், ஒன்றாகியும், இருக்கின்ற பிரணவமே சகளீகரித்துக் கணபதியென்னுந் திருநாமத்தைப்பெற்றிருக்கின்றது. மேலும், அக்கணபதியே முன்னர் யாம் திரிபுரத்தை யெரிக்கத்தக்க மந்திரத்தை எமக்குபதேசித்தவர், அவரே சிருஷ்டியாதி தொழிலுக்குங் காரணமா யிருக்கின்றார். அனந்தமுறை வேறுவேறு திருவவதாரங்களைக் கொண்டிருக்கின்றனர். மற்றோரவதாரத்தில் எமக்குப் புத்திரராக அவதரித்திருக்கின்றனர். சகல வேதாகமங்களும் எங்களை ஒன்றாகச் சொல்லுமேயன்றி வேறுபடுத்தாது. ஆதலால், அவ்விநாயகமூர்த்தியே மேலானமூர்த்தி. அவரது சதுர்த்தி விரதமே மேலானவிரதம். அதையநுஷ்டிப்பவர்களுக்குச் சகலசௌபாக்யமும் கைகூடும் என்று சிவபெருமான் சுப்பிரமணியருக்கு உபதேசித்தாரென்று, உமாதேவிக்குப் பர்வதராஜன்கூறினன். உமையம்மை அவையனைத்தையுங்கேட்டு தந்தையாகிய பர்வதராஜனைப் பார்த்து யாணிவ்விரதத்தை அநுஷ்டிக்குமாறு வேண்டியதிரவியங்களை சேகரிக்கவேண்டுமென்று சொல்லவே, தந்தையானவர் அவ்விரதத்தை முடிப்பதற்கு வேண்டிய விசித்திரமண்டபமியற்றி, முத்துக்களினால் பந்தலிட்டு, மஞ்சள், குங்குமம், பச்சைக்கர்ப்பூரம், மாசிப்பத்திரி, கரசாங்கண்ணி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, துளசி, சிறுவழுதி, நாயுருவி, வன்னி, மந்தாரை, மருவு, அலரி, கோங்கு, வெள்ளெருக்கு, மருதம், விஷ்ணுகிராந்தி, மாதுளை, ஜாதிமல்லி, தாழை என்னு மிவ்விருபத்தொருபத்திரங்களும் இன்னும் வேண்டிய பூஜா திரவியங்களையும் வரவழைத்துக் கொடுக்க, அவ்வம்மையார் சாஸ்திரவிதிப்படி விநாயகவிரதத்தை ஓர் மாதமளவும் ஊனுறக்கங்களை நீக்கி, ஜபதபஹோமங்களைச் சரிவர நடத்தி எள்ளோரை சர்க்கரைப் பொங்கல், காய்கள், கனிகள், எள்ளுருண்டை, மோதகம், அப்பம், அவல்கடலை, இளநீர், தேன்குழல், இலட்டு, வடை, தோசை முதலாகிய பலவித சிற்றுண்டிகளையும் வைத்து மந்திரபூர்வகமாக நிவேதனஞ்செய்து தூபதீபங்காட்டி ஒழுங்காகப் பூஜையைமுடித்து முப்பத்திரண்டுதானங்களையும் செய்து கணேசமூர்த்தியைத் தமது இருதயகமலத்தில்வைத்துப் பொன்னாற் செய்தமூர்த்தியையும் கும்பத்தையும் பலதிரவியங்களோடு புரோகிதருக்களித்து, பிரிதிவிமூர்த்தியைப் பலமங்களவாத்தியங்களோடுமெழுந்தருளச் செய்து நதியிற் சலவாசமாகவைத்து, மீட்டுந்தனதாமனையைச்சேர்ந்துசுற்றத்தினரோடு மிருந்து போஜனம் செய்து விநாயக மூர்த்தியினுடைய பேரருளைக் கொண்டு சிவபெருமான் கங்கைக்குமுன்னர்த் தம்மை விவாகஞ் செய்துகொள்ளப்பெற்றுத் தனதுமனக்கவலையை யொழித்திருந்தனர்.

அன்றியும், முன்னொருகாலத்தில் பிரமதேவனானவன் சத்தியலோகத்தில் வீற்றிருக்கின்றபோதுகொட்டாவிவிட்டனன். அதினின்றும் உதித்தசிந்துரனென்பவன் சகலதேவர்மூவர்களுக்கும் துன்பஞ்செய்தபோது அவனைச் சங்காரஞ்செய்யும்பொருட்டு, ஆவணிமாசம், பூர்வபட்சசதுர்த்தியில் கஜானனமூர்த்தியாய் அவத

ரித்ததினாலும் அவரை நளன், அகத்தியர், காசிபர், பரசுராமன், இராவணன், கிருதவீரியன், சந்திரன், அங்காரகன், புருசுண்டி, ஆதிசேடன், மன்மதன், சண்முகர், சந்திராங்கதர், கர்த்தமன், விமலர், தேவர்கள், திரிபுரன், கிருச்சமதர், உருக்குமாங்கதன், தேவேந்திரன், வீமன், வல்லாளன், தக்கன், விண்டுமுதலானவர்களும் உபாசித்ததினாலும் இவ்வுலகில் நம்முடையமதஸ்தர்கள் யாவரும் வருடந்தோறும் ஆவணிமாசம் பூர்வபட்ச சதுர்த்தியில்விநாயகவிரதத்தை அநுஷ்டித்து வருகின்றார்கள்.

இவை பார்க்கவபுராண மென்னும் விநாயகபுராணத்தில் விரித்துச் சொல்லப்பட் டிருக்கின்றன.

## நவராத்திரி.

இந்த விரதத்தைக் குறித்து "முன்பொரு திரேதாயுகத்தில் துன்னாரிகலற நூறி இருநிலமுழுவதுந் தனதெனக்கோலித் தன்மதவாரணந் திசைதோறு நிறுவியதிறலும், கருங்குழல்வெண்குடைக்கார்நிகர்வண்மையும் உடைய சுகேதுவென்னுமரசன், மேகம்போன்ற கூந்தலும், குறைமதிபோன்ற நுதலும், விற்போன்றபுருவமும், கணைபோன்றகண்களும், முழுமதிபோன்றமுகமும், வள்ளைபோன்றகாதுகளும், எள்ளுப்பூப்போன்றநாசியும், முல்லையரும்புபோன்றபற்களும், குயில்போன்றகுரலும், கிளிபோன்றமொழியும், மூங்கில்போன்ற தோள்களும், மகரம்போன்ற முன்கையும், செங்காந்தள்போன்ற அங்கையும், கெளிறுபோன்ற கைவிரல்களும், கிளிமூக்குப்போன்ற கைந்நகங்களும், கொடிபோன்ற இடையும், தும்பிக்கைபோன்ற துடைகளும், நண்டுபோன்ற முழந்தாளும், காகளம்போன்ற கணைக்காலும், கைத்தராசுபோன்ற காற்பரடுகளும், ஆமைபோன்ற புறவடிகளும், பவளத்துண்டுபோன்ற கால்விரல்களும், முத்துப்போன்ற நகங்களும், பஞ்சுபோன்ற பாதங்களும், அன்னம்போன்ற நடையும், மயில்போன்ற சாயலும், மாந்தளிர்போன்ற மேனியும், பொன்னினைப் பொடியாவராவிமீதிற் போட்டிட்டதுபோன்ற தேமலுமுடைய கட்டழகியாகிய சுவேதியென்னுந் தனது மனையாளுடன் இல்லற நடத்திவருநாளில், முன்னை வினைப்பயத்தால் முனைவர் முனைக்க, அவர் கையிற்சிக்கி அஸ்திர சஸ்திரங்களாலடிபட்டு அழகுகெட்டு அஸ்வாதீனனாயினான். அப்பொழுது அவன் மனைவியானவள் தன்காதலனைக்கண்டு கடுந்துன்பமுற்று அவனைத் தன் தலையிலும் முதுகிலுந் தோளிலுந் தூக்கிக்கொண்டு காட்டிற்சென்று காய் கனி கிழங்கு முதலியவற்றைப் புசித்துக் கடுக நடந்து பஞ்சவடதீர்த்தக்கரைசேர்ந்தாள்.' அச்சமயத்தில் அங்கு நீராடுவதற்கு வந்த ஆங்கிரசமுனிவர் அவர்களுடைய நிலைமையைக்கண்டு மனமிரங்கி அருகேசென்று சுவேதியை நோக்கி அம்மா! உன்னைப்பார்த்தால் இராஜபோகமனுபவித்தவள்போற் காண்கிறதே! இக்காட்டிற் சரிக்கக்காரணமென்ன? உன் வரலாற்றைச் சொல்வாயாயின் உனதுவருத்தமெல்லாம்இரவிமுன் பனிபோல்இப்பொழுதேயொழியத்தக்க ஓர் உபாயஞ் சொல்லுகிறேன் என்றார். அதுகேட்டு சுவேதி அம்முனிபுங்கவர்க்கு வந்தனை வழிபாடுசெய்து தன் வரலாற்றைச் சொல்லி நிற்க, அவர் அப்பஞ்சவடதீர்த்தக் கரை துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதியென்னும் தேவீத்ரயமும் வாஸஞ்செய்யு மிடமாகையால் அச்சுவேதியை அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யச் சொல்லி, தாமும் நீராடி, நித்திய கர்மங்களை நிறைவேற்றி, குங்குமம் கஸ்தூரி கர்ப்பூரம் முதலியபொருள்களையும், கோட்டுப்பூக் கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்னு நால்வகையுள்ளுஞ் சிறந்த பல சாதிப் புட்பங்களையும், நிவேதனப் பொருள்களையும் சேகரித்துக்கொண்டு, அன்று ஹஸ்த நட்சத்திரத்தோடுகூடிய புரட்டாசி



மாதம் பூர்வபக்ஷத்துப் பிரதமையாயிருந்ததனால் அப்பிரதமைமுதல் திரிதீயைவரையில் பராசக்தியாகிய துர்க்கையையும், சதுர்த்திமுதல் ஷஷ்டிவரையில் லக்ஷ்மியையும், ஸப்தமிமுதல் நவமிவரையில் ஸரஸ்வதியையும், பூஜிக்கச்செய்து தசமியன்று புனர்பூஜையும், செய்வித்தனர். அம்மூவரதுகடாக்ஷத்தினால் சுவேதிக்குவுடனே கர்ப்பந்தரித்து நவமன்மதன் போல ஓராண்பிள்ளையைப்பெற அக்குழந்தைக்கு ஆங்கிரசமுனிவர் சூரியபிரதாபனென்று பெயரிட்டு அவனைத் தமது அனுக்கிரகத்தினால் ஸகல வித்தைகளிலுஞ்சமர்த்தனாகசெய்தனர். பின்பு அவனுக்குத் தக்கவயது வந்தபோது அவன் தன் தந்தையின் பகைவர்மேற் படையெடுத்துச் சென்று வெற்றியடைந்து தன் மாதாபிதாக்களுடன், நாட்டார் நகரத்தார் முதலிய யாவருங் கண்டுகளித்துக் கொண்டாடும்படி பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு குறைவறவெகுகாலம் வாழ்ந்திருந்தான். இந்த விரதத்தை யனுஷ்டிப்பவர்களுக்கு ஸகலாபீஷ்டஸித்தியு முண்டாகும்" என்று புராணங்களிலும், வருஷப்பிரதி வருஷம் புரட்டாசிமாசம் பூர்வபட்சத்துப் பிரதமைதிதிமுதல் நவமிதிதிவரையில் ஒன்பதுதினங்களின் இராத்திரிகாலங்களில் பராசக்தியாகிய பரமேசுவரியைக் குறித்து விசேஷ ஜபதபங்கள், தர்ப்பணங்கள், பூஜைகள், ஆஹுதிகள், சந்தர்ப்பணைகள் இவைகளெல்லாம் விதிப்படி நடத்துகிறவர்களுக்கு இஷ்டசித்திகளும் சகலசாம்ராஜ்யங்களும் அந்த மஹாதேவி கடாக்ஷத்தினால் உண்டாகுமென்றும், ஸ்ரீவித்தியா உபாசகர்கள் முக்கியமாயிந்த நவராத்திரிதினங்களில் உபாசித்தால் மந்திரசித்தி யடையவரென்றும், சகலமந்திர ஜபதபஹோமங்களும், உபநிஷத்துமுதலிய பாராயணங்களுஞ் செய்துவந்தால் இஷ்டசித்தி யடைவரென்றும் சாக்தேயதந்திரதிலும் கூறப்பட்டிருக்கின்றது.

துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதி இம்மூவர்களையும் மும்மூன்றுதினமாக ஒன்பதுதினமும் இராத்திரிகாலங்களிற் பூசிப்பது விசேஷமானதால் நவராத்திரி யென்றும், இந்த ஒன்பது தினமும் பூசைசெய்யக் கூடாமற்போனால், பெரும்பாலும் அந்த பக்ஷத்து ஸப்தமியில் வரும் மூலநட்சத்திரம் முதல் தொடங்கி நவமிவரையில் பூஜைசெய்யவேண்டுமென்றும், அதுவும் கூடாமற்போனால் கடைத்தினமாகிய நவமியன்றைக்கு வித்தியா பீடமாகிய புஸ்தகங்களை வைத்து துர்க்காலக்ஷ்மீஸரஸ்வதி இம்மூவர்களையும் கற்பவிதிப்படி பூசிக்கவேண்டியதென்றும், அப்படி பூசிப்பதால் அத்தினத்திற்கு மஹாநவமீ யென்றும், ஸரஸ்வதியைப் பூசிப்பதால் ஸரஸ்வதிபூஜை யென்றும் ஆயுதங்களை வைத்துப்பூஜிக்கிறதினால் ஆயுதபூஜை யென்றும் இந்த விரதத்திற்குப்பெயருண்டாயிற்று என்கிறார்கள்.

மறுநாளாகிய தசமி திதிக்கு விஜயதசமீ யென்று பெயர். நூதனமாய் வித்தியாரம்பம் பண்ணுவதற்கு அது மிகவும் உத்தமமானதினம்; வாசித்திருக்கிறவர்களும் கிரந்தங்களைப் படிக்கவேண்டும். என்னென்றால் வித்தியாதாரணையாக இருக்குமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அஸ்திர சஸ்திர வித்தையறிந்தவர்களும் ஆயுதமெடுத்து விளையாடவேண்டியது. இது கர்னாடக ஸமஸ்தானங்களில் நடந்துவரும்.

## தீபாவளி.

பூர்வத்தில் ஸ்ரீமந்நாராயணரானவர் வராகரூபியாய்த் திருவவதாரஞ் செய்தருளினபோது, பூமிதேவியானவள் அந்தவராகரூபியான சுவாமியினிடத்தில் மோகித்து நரகாசுரனென்கிற புத்திரனைப்பெற்றனள். அப்புத்திரனானவன், காமாந்தகாரத்திற்காளாகினவனாய், வரம்புகடந்து ஆயிரங்கணக்கான தேவமாதரைக்கற்பழித்து, கோரமாகிய தொழில்களைச்செய்து

வருங்காலத்தில் தேவர்களெல்லாம்ஒருங்குகூடி தேவேந்திரனிடம் வந்து தமது குறைகளை முறையிடவே தேவேந்திரன் அந்த நரகாசுரனை வெல்வதற்குக்கூடாதவனாய் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினிடம்முறையிடக்கருதி, துவாரகைக்குச் சென்று கிருஷ்ணபகவானைத் தெரிசித்து, சுவாமி! நரகாசுரனென்பவன், எனது தாயாகிய அதிதேவியினுடைய குண்டலத்தையும், எனக்குவிளையாட்டிற்குரியதாயிருந்த மணிகூட பர்வதத்தையும், வருணனுடைய வெண்குடையையும், இன்னும் அனேகந்தேவர்களுக்குரிய வஸ்துக்களையும் பறித்துக்கொண்டதுமன்றி, அடிக்கடி எங்களை பாதித்துக்கொண் டிருக்கின்றான். அவனுடைய உபத்திரவத்தைச் சகிக்க எங்களாற்கூடவில்லை, யென்று வருத்தமுற்ற தேவேந்திரனுடைய வார்த்தைகளைக் கேள்வியுற்ற பகவானானவர் அத்தேவேந்திரனைப்பார்த்து, நீ ஒன்றுக்கும் வருத்தமடையவேண்டாம்; அவனை அதிசீக்கிரமாகத்தொலைத்துவிடுகிறேனென்று தேவேந்திரனைத்தேற்றி யனுப்பிவிட்டு, பகவான்கருடன்மீது ஆரோகணித்து பிராக்ஜோதிடமென்கிற நரகாசுர பட்டணத்திற்குச்சென்று அவனைச்சங்கரிக்கக்கருதி, முதலிலிருக்கின்ற கிரிதுற்கத்தைக் கண்டித்து, அக்கினிதுற்கத்தையும், ஜலதுற்கத்தையும், வாயுதுற்கத்தையும் வரிசைக்கிரமமாகச் சின்னாபின்னப்படுத்தி, சக்கராயுதத்தினாலும், கதாயுதத்தினாலும் நரகாசுரன் மந்திரியாகிய மூரனுடைய பாசத்தைத்துணித்துவிட்டு, அந்தப்பட்டணத்தைச் சின்னாபின்னப் படுத்தி, பாஞ்சசன்னியமென்கிற சங்கத்தைப் பூரித்தார்.

அதுகேட்ட நரகாசுரன் மந்திரியாகிய முராசுரன் என்பவன், கடுஞ்சினமடைந்து, யமதண்டத்திற் கொப்பான சூலத்தைக் கருடன்மீது பிரயோகஞ்செய்ய, அதைக்கண்ட ஸ்ரீகிருஷ்ணபகவான் மூன்றுபாணங்களைப் பிரயோகஞ்செய்து அவைகளைக்கண்டித்துவிட்டனர். அப்போது முராசுரனுக்குக் கோபமுண்டாகி தனது கதாயுதத்தை இரண்டுகைகளாலுஞ் சுழற்றிக்கொண்டு பகவானெதிரில் ஓடிவந்து அடா கோபாலா! உனக்கு இப்போது இதனால் மரணமென்றுசொல்லி எறிந்தான். அதைக் கிருஷ்ணபகவான் தம்முடைய கௌமோதகி என்கிற கதாயுதத்தினாலடித்துப் பொடிசெய்துவிட்டனர். பிறகு, முராசுரன் சுவாமியைக் குத்தவேண்டுமென்று எதிரெ ஓடிவரவும், கிருஷ்ணபகவான் சக்கரப்பிரயோகஞ் செய்து அவனுடைய சிரசைத்துண்டித்து உயிர்போகும்படிச்செய்தனர். இதையறிந்த அவன் புத்திரர்களெல்லாம் கிருஷ்ணபகவான்மீது அஸ்திரசஸ்திரங்களை விடுக்க, அவைகளை யெல்லாம் கிருஷ்ணபகவான் சின்னாபின்னமாகக் கண்டித்து அவர்களின் கால்வேறு தலைவேறாகப் போகும்படி புரிந்தனர். இச்சங்கதிகளை நரகாசுரன் கேட்டு, மிகுந்தகோபத்துடன் கண்கள்சிவந்து ஆனை சேனை பரிவாரங்களுடன்வந்து ஆயுதங்களை யெடுத்து கிருஷ்ணமூர்த்தியின் மேல் பிரயோகஞ்செய்தனன். அப்பாணங்களையெல்லாம் கிருஷ்ணமூர்த்தியானவர் பொடிப்பொடியாக்கி. இனிஉபேக்ஷைசெய்யக் கூடாதென்று மனதில் நினைத்து கோடிசூரியப் பிரகாசம் வாய்ந்த சக்கராயுதத்தைப் பிரயோகஞ் செய்யவே, அச்சக்கரமானது சென்று நரகாசுரனுடைய சிரசானது அறுபட்டு கீழேவிழுந்தான். அப்போது நரகாசுரனானவன் சுவாமியைப்பார்த்து தேவதேவதேவா! க்ஷீரசாகரவாசா! பத்மநாபா! பரந்தாமா! அடியேன் உயிர் துறக்கப் போகின்றேன். எனக்கு ஓர் வரங் கொடுக்கவேண்டும். அதாவது, உமது திருவடி நிழலின்கீழிருந்து சதாபக்திசெய்துக் கொண்டிருக்கவும், தேவர்களுக்குஅடியேனால் நேர்ந்த இடுக்கண்களை நீயொழித்த நாளாகிய இன்று ஐப்பிசீ அமரபக்ஷ கடைசி சதுர்த்தசியானபடியால் இன்றைய விடியற்காலம் எனது தொந்திரவு ஒழிந்ததென்று என்னிமித்தம் இப் பூவுலகத்திலுள்ளவர்கள் யாவரும் அப்பியங்கஸ்நானஞ்செய்து கோடிவஸ்திரங்களுடுத்தி நித்தியகர்மாநுஷ்டானங்களை முடித்துதேவரீரைப்பூஜித்து நானாவிதபலகாரபக்ஷணங்களை வைத்துநைவேத்யஞ்செய்து அறுவகைச் சுவைகளோடு போஜனமருந்தி சந்தோஷித்திருக்கவும், அன்றிரவுஎங்கணும்தீபவொளிபிரகாசிக்கவும்வழங்கிவரும்படிச் செய்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, கிருஷ்ணபகவான் அவ்வாறே அந்த நரகாசுரன் கேட்டவரங்களையீந்தருளி ஆட்கொண்டருளினர். அதுகாரணமாக வருஷப் பிரதிவருஷம் நமது இந்துக்கள் அவ்விரதத்தை அநுஷ்டித்து வருகிறார்கள்.



## கேதாரி ஈஸ்வரர் நோன்பு.

ஸ்ரீ கைலாயத்தில் சாக்ஷாத் சங்கரனும், உமாதேவியும் இரத்தினகசிதமான சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிமுதல்யாவரும் பிரதிதினமும் சுவாமியையும், உமாதேவியையும் நமஸ்கரித்துப் போவார்கள். இங்ஙனமிருக்க, ஓர்நாள் பிருங்கிமஹாரிஷியானவர் சாக்ஷாத் சங்கரனைமாத்திரம் நமஸ்கரித்துவிட்டு உமாதேவியை நமஸ்கரிக்காதுசெல்லும்போது, உமாதேவிக்குச் சினமுண்டாகி, தனதுகூறாகிய இரத்தமாங்கிஷத்தைப் பிருங்கிரிஷியினிடம் வாங்கிக்கொண்டார்கள். அப்பொழுது, பிருங்கிமஹாரிஷியானவர் நடக்கச்சக்தியற்றவராய் நிற்கும்போது, அதைக்கண்ட சங்கரன், அந்தரிஷிக்குத் தண்டுகோலொன்று யீந்தருளி அனுப்பிவிட்டனர்.

அதைக்கண்ட உமாதேவிக்கு அதிகசினமுண்டாகி, கைலாயத்தைவிடுத்து பூலோகத்தில் வந்து வால்மீகரிஷி வாசஞ்செய்யும் வனத்தில் ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் தங்கியிருந்தனள்.

அதற்குமுன், பூவுலகின்கண் பன்னிரண்டு வருடகாலம் மழையின்றி அதனால் சோர்ந்து கிடந்த மரங்களும், பலவிதமான புஷ்பச்செடிகளும் புல் முதலியவைகளும் செழித்தோங்கி, புஷ்பங்களெல்லாம்புஷ்பித்து, பரிமளமானது எங்கணும் வீசுகின்றதை வால்மீகரிஷியானவர் உணர்ந்து; ஆஹா! ஈதென்ன ஆச்சரியம்! இவ்வற்புதமானகாரியம் யாவராலுண்டானது, இவ்வனத்தில் யார்வந்திருக்கின்றார்கள் என்று பலவாராகநினைத்து அவ்வனத்தைச் சுற்றிப்பார்த்து வரும்போது, ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் உமாதேவி வீற்றிருப்பதைக் கண்டு, அம்மணீ! தேவதேவீ! ஜீவாத்மபரிபூரணீ! என்று பலவிதமாகத் துதிபுரிந்து, தேவரீர் கைலாயத்தைவிட்டு இவ்வனத்தை வந்தடைந்தெழுந்தருளிய காரணம்யாதோ? அதனை யருளிச் செய்யவேண்டு மென்று கேட்க, உமாதேவி கூறுகின்றான்.

கேளும் வால்மீகரிஷியே! கைலாயத்திலே தேவர்கள்முதல்யாவரும், சுவாமியையும், என்னையும் நமஸ்கரித்து வரும்போது ஓர் நாள் பிருங்கி ரிஷியானவர் சுவாமியைமாத்திரம் நமஸ்கரித்து என்னை நமஸ்கரிக்காது போய்விட்டபடியால் எனக்குச்சினமுண்டாகி எனது கூறாகிய இரத்த மாங்கிஷத்தை பிரிங்கிரிஷியினிடம் பெற்றுக்கொண்டு உன்னுடைய ஆஸ்ரமத்திற்கு எழுந்தருளினேன்; என்று கூறியமாத்திரத்தில், வால்மீக ரிஷியானவர் உமையம்மையைத் தோத்திரம்செய்து தனதிருப்பிடம் அழைத்துக்கொண்டுபோய் ஆசனம்கொடுத்து அதில் உமையை அமரச் செய்ததும் உமாதேவியானவள் வால்மீகருஷியைப்பார்த்து, ஓமுனிபுங்கவரே! யான் பூலோகத்தில் ஓர் விரதமநுஷ்டிக்க எண்ணமுற்றிருக்கின்றேன், விரதங்களில் எதுசிறந்தனவோ, அதனைச் சொல்லுவீராகில், அவற்றை நிறைவேற்றுகின்றேன் என்னலும், வால்மீகர் சொல்லுகின்றார்.

எனது தாயே! உலகத்தில்யாவரும் அநுஷ்டிக்காதவிரதமொன்றிருக்கிறது. அதனைநீரநுஷ்டித்துவந்தால்உம்முடைய கோரிக்கைகளெல்லாம் நிறைவேறும். அதனைஅனுஷ்டிக்கும்விதமெப்படியென்றால், புரட்டாசிமாதம், சுக்கிலபட்சம், தசமிதொடங்கி,அற்பிசிமாதம்,கிருஷ்ணபக்ஷம் அமாவாசைவரையில் இருபத்தொருநாளும்பிரதிதினமும்ஸ்நானஞ்செய்து சுத்தமானபட்டுமடியுடுத்தி, விபூதி குங்குமம் ருத்திர

க்ஷம்தரித்து, ஓர்ஆலவிருக்ஷத்திடியைல், மண லினால் இலிங்கமூர்த்திசெய்து, அதனை சாக்ஷாத்சங்கரனாகப்பாவித்து அவ்விலிங்கமூர்த்திக்கு அபிஷேகஞ்செய்து, விபூதி, சந்தனம், அக்ஷதை, புஷ்பம்முதலியதும் சாந்தி, ஒரு வெல்ல உருண்டை, ஒரு மஞ்சள், ஒரு சந்தன உருண்டை, ஒரு அதிரசம், ஒரு வாழைப்பழம், ஒரு தேங்காய், ஒருவெற்றிலை, ஒருபாக்கு, இவைகளெல்லாம்வைத்து, அதனோடு இருபத்தொரு இழைசேர்த்து முறுக்கிய கயர்ஒன்றுவைத்து, அக்கயற்றில், நாள்ஒன்றுக்கு ஒவ்வொரு முடியாக இருபத்தொரு முடியிட்டு, தூபதீப நைவேத்தியஞ்செய்து இருபத்தொருநாளும் இவ்விரதத்தை மேற்சொல்லிய பிரகாரம் அநுஷ்டித்து அக்கயற்றை யணிந்துகொண்டால் பரமேஸ்வரன் ரிடபாரூடராய்த்தோன்றி,உமக்கு வேண்டியவரங்கள் யாவற்றையும் கொடுத்தருளுவர்; என்று சொல்லவே, அவ்விதமே உமாதேவியானவள்,ஐப்பிசிமாசம் சுக்லபக்ஷம்தசமி தொடங்கி, கிருஷ்ணபக்ஷம் அமாவாசை வரையில் மேற்படி விரதத்தை இருபத்தொருநாளும் அநுஷ்டித்துவந்ததால்,ஸ்ரீபரமேஸ்வரன் ரிடபாரூடராய்த்தோன்றி உமாதேவியிடம் வந்து உமக்கு என்னவரம் வேண்டுமென்று கேட்க, நான் உமது இடப்பாகம்பெறவேண்டுமென்று சொல்ல, அவ்விதமே வரமீந்தருளி இவ்விரதத்தை யநுஷ்டிப்பவர்களுக்கு சகலசௌபாக்யங்களையும் கொடுத்தருளுவோம் என்று சொல்லி பரமேஸ்வரன் உமாதேவியோடு கைலாயத்திற்கெழுந்தருளினர்.

இவ்விரதத்தை தெய்வலோகத்துக் கன்னியர்கள் அநுஷ்டித்து உலகத்தில் பிரபலப்படுத்தவேண்டுமென்று நினைத்து பூலோகத்தில்வந்து, ஓர் குளக்கரையி னருகிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின்கீழ், உமாதேவி நோற்ற நோன்புப்பிரகாரம் இருபத்தொருநாள் நோற்கச் சக்தியற்றவராய் ஐப்பிசிமாதம் அமாவாசைதினமாத்திரம் அவ் விரதத்தை ஆரம்பித்து அன்றே பூர்த்திசெய்ய எண்ணங் கொண்டவர்களாய், மணலைச் சிவலிங்கமாகச்செய்து அதற்குச் செய்யவேண்டிய பூஜைகளைச் செய்து இருபத்தொரு வெல்ல உருண்டை 21-சந்தன உருண்டை, 21-மஞ்சள், இருபத்தொருபழம், 21 - வெற்றிலை, 21-பாக்கு, இருபத்தொரு அதிரசம், 21-தேங்காய், முதலியவைகளும் வைத்து, 21-இழை சேர்த்து முறுக்கிய கயற்றில் 21 முடியிட்டு அவைகளோடுவைத்து. தூபதீப நைவேத்திஞ்செய்யும் சமயத்தில், ஓர் எழ்மையான அரசனுக்குப் புண்யவதி பாக்கியவதி என்கிற இரண்டு பெண்கள் ஜெலந்திரட்டிவருவதற்குக் குடத்தை எந்தித் தங்கள் குறைகளை நினைந்துகொண்டு அக் குளக்கரையைவந் தடைந்தார்கள். அங்கு முன்சொல்லப்பட்ட தேவகன்னிகைகள் அவ்விடத்தில் செய்யும் விரதத்தை இப் பெண்கள் அறிந்து, அம்மா நீங்கள் என்ன விரத மநுஷ்டிக்கின்றீர்கள், அவற்றை எமக்கு அருள்செய்யவேண்டுமென்று கேட்க, அதற்கு அக் கன்னிகைகள் அப் பெண்களைநோக்கி அம்மா! நாங்கள் கேதாரீஸ்வரர்நோன்பு நோற்கின்றோம். என்றுசொல்லவும், இப்பெண்கள் எனது அன்னைகளே! நாங்களோ மிக்க வறுமையுடையவர்களா யிருக்கின்றோம், இன் நோன்பு நோற்போமானால் வறுமைகள் நீங்கிவிடுமென்று கேள்விப்பட்டிருக்கிறதினால் அவ் விரதத்தை அநுஷ்டிக்க எங்களால் முடியாத காரியமாயிருக்கிறது ஆகையால் நீங்களே எங்களுக்கு இந்த நோன்பு நோற்றுக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ் வார்த்தையைக் கேட்ட தெய்வகன்னிகைகள் இரண்டு ஆலம் விழுதை யறுத்து, ஒவ்வொரு விழுதுக்கும் இருபத்தொரு முடியிட்ட தாங்கள் நோற்கும் நோன்புடன் அதனை வைத்து தூபதீபநைவேத்தியம் செய்து அவ்வாலம் விழுதுகளை யிருவருக்குங்கொடுத்தனுப்பிவிட்டு தெய்வலோகஞ் சென்றார்கள். பிறகு அவ் விருபெண்களும் அவ்வாலம் விழுதாகிய கயற்றைத் தரித்துக் கொண்டு தங்கள் வீட்டிற்கு வருவதற்குமுன் தங்கள் குடிசைவீடுகளெல்லாம் மாடமாளிகைகளாய்விடவே வீட்டின் அடையாளம் தெரியாமல் திகைத்து வீதியில் நிற்கும்போது, தந்தையானவன் பார்த்து வீட்டிற்குள் அழைத்

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌤𑌵𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌅𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌤𑌵𑌮𑌹𑌾𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪 𑌋𑌷𑌿𑌃 𑌬𑍃𑌹𑌤𑍀 𑌛𑌨𑍍𑌦𑌃 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑍋 𑌦𑍇𑌵𑌤𑌾 𑌓𑌂 𑌬𑍀𑌜𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌹𑍁𑌂 𑌕𑍀𑌲𑌕𑌂 𑌮𑌮 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪 𑌜𑌪𑍇 𑌵𑌿𑌨𑌿𑌯𑍋𑌗𑌃 ॥

𑌓𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃.
𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌾𑌯 𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃.
𑌶𑍍𑌰𑍀𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍𑌬𑌕𑌾𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃.
𑌕𑍍𑌲𑍀𑌂 𑌕𑍍𑌲𑍌𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌯 𑌅𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃.
𑌕𑍍𑌲𑍌𑌂 𑌸𑍌𑌃 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌗𑍍𑌨𑌿𑌕𑌾𑌲𑌾𑌯 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃.
𑌸𑍌𑌃 𑌸𑍌𑌂 𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌯 𑌕𑌰𑌤𑌲𑌕𑌰𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌨𑌮𑌃.
𑌸𑍌𑌂 𑌓𑌂 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌾𑌯 𑌹𑍃𑌦𑌯𑌾𑌯 𑌨𑌮𑌃,
𑌸𑍌𑌂 𑌓𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌞𑍍𑌜𑌯𑌾𑌯 𑌶𑌿𑌰𑌸𑍇 𑌸𑍍𑌵𑌾𑌹𑌾.
𑌓𑌂 𑌸𑍌𑌂 𑌅𑌕𑌾𑌰𑌾𑌯 𑌵𑌿𑌰𑌾𑌡𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌶𑌿𑌖𑌾𑌯𑍈 𑌵𑍌𑌷𑌟𑍍.
𑌓𑌂 𑌕𑍍𑌲𑍌𑌂 𑌉𑌕𑌾𑌰𑌾𑌯 𑌸𑍍𑌵𑌰𑌾𑌡𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌕𑌵𑌚𑌾𑌯 𑌹𑍁𑌮𑍍.
𑌓𑌂 𑌸𑍌𑌃 𑌮𑌕𑌾𑌰𑌾𑌯 𑌸𑌮𑍍𑌰𑌾𑌡𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍌𑌷𑌟𑍍.
𑌓𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌓𑌂𑌕𑌾𑌰𑌾𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌯 𑌫𑌟𑍍.
𑌓𑌂 𑌭𑍂𑌰𑍍𑌭𑍁𑌵𑌸𑍍𑌸𑍁𑌵𑌰𑍋𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌦𑌿𑌗𑍍𑌬𑌨𑍍𑌧𑌃.

(𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍)

𑌓𑌂 𑌯𑌮𑌨𑌿𑌯𑌮𑌾𑌸𑌨 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰 𑌧𑍍𑌯𑌾𑌨𑌧𑌾𑌰𑌣 𑌸𑌮𑌾𑌧𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑌯𑍋𑌗𑌾𑌭𑍍𑌯𑌾𑌸, 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍋𑌪𑌾𑌸, 𑌮𑌹𑌾𑌜𑌨𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨 [illegible] 𑌅𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤 [illegible] 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌧𑌾𑌰, 𑌓𑌂𑌕𑌾𑌰 [illegible] 𑌕𑍋𑌟𑌿𑌸𑍂𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶, [illegible] 𑌶𑌿𑌵𑌵𑌿𑌰𑌾𑌟𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪 [illegible] 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥

(𑌕𑌵𑌚𑌃)

𑌓𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌗𑍍𑌲𑍌𑌂 𑌸𑍌𑌃 𑌐𑌂 𑌐𑌂 𑌓𑌂 𑌹𑍂𑌂 𑌭𑍂𑌤 𑌪𑍍𑌰𑍇𑌤 𑌪𑌿𑌶𑌾𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸 𑌶𑌾𑌕𑌿𑌨𑍀𑌡𑌾𑌕𑌿𑌨𑍀 𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡 𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷 𑌨𑌿𑌵𑌾𑌰𑌣, 𑌉𑌡𑍍𑌡𑌾𑌮𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌬𑍀𑌜𑌾𑌵𑌰𑌣, 𑌓𑌂 𑌵𑌿𑌰𑌾𑌟𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇, 𑌓𑌂 𑌚𑌂 𑌕𑌂 𑌵𑌂 𑌗𑌂 𑌘𑌂 𑌜𑌂 𑌕𑍍𑌰𑌾𑌂 𑌓𑌂 𑌭𑍂𑌤𑌗𑍍𑌰𑌹, 𑌪𑍍𑌰𑍇𑌤𑌗𑍍𑌰𑌹, 𑌪𑌿𑌶𑌾𑌚𑌗𑍍𑌰𑌹, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌗𑍍𑌰𑌹, 𑌶𑌾𑌕𑌿𑌨𑍀𑌗𑍍𑌰𑌹, 𑌡𑌾𑌕𑌿𑌨𑍀𑌗𑍍𑌰𑌹, 𑌕𑌕𑍁𑌟𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌗𑍍𑌰𑌹, 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌗𑍍𑌰𑌹, 𑌯𑌕𑍍𑌷𑌗𑍍𑌰𑌹, 𑌵𑍇𑌤𑌾𑌳𑌗𑍍𑌰𑌹, 𑌭𑍈𑌰𑌵𑌾𑌦𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌨𑍍 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿, 𑌪𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌗𑍍𑌰𑌹𑌾𑌨𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑌯𑌪𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌗𑍍𑌰𑌹, 𑌅𑌪𑌸𑍍𑌮𑌾𑌰𑌗𑍍𑌰𑌹, 𑌪𑌾𑌪𑌗𑍍𑌰𑌹, 𑌸𑌂𑌹𑌾𑌰𑌗𑍍𑌰𑌹, 𑌕𑌾𑌮𑌗𑍍𑌰𑌹, 𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌗𑍍𑌰𑌹, 𑌨𑌵𑌗𑍍𑌰𑌹 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌬𑌾𑌧𑌾𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌨𑌾𑌶𑌯 𑌨𑌾𑌶𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌦𑌾𑌰𑌯 𑌦𑌾𑌰𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌬𑌨𑍍𑌧𑌯 𑌬𑌨𑍍𑌧𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌮𑍋𑌹𑌯𑌮𑍋𑌹𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌸𑌞𑍍𑌚𑌾𑌲𑌯 𑌸𑌞𑍍𑌚𑌾𑌲𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌯 𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌭𑍇𑌦𑌯𑌭𑍇𑌦𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍. 𑌭𑌕𑍍𑌷𑌯𑌭𑌕𑍍𑌷𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌶𑍋𑌷𑌯𑌶𑍋𑌷𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌆𑌵𑍇𑌶𑌯 𑌆𑌵𑍇𑌶𑌯, 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯, 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂𑌶𑍀𑌘𑍍𑌰𑌂, 𑌸𑌾𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌟𑌯𑌪𑌾𑌟𑌯, 𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌯𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌯, 𑌆𑌗𑌚𑍍𑌛𑌆𑌗𑌚𑍍𑌛 𑌸𑍍𑌵𑌾𑌜𑌿𑌤𑍁 𑌵𑌦𑍍𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌦𑍍𑌰𑌾𑌵𑌯𑌦𑍍𑌰𑌾𑌵𑌯, 𑌪𑌾𑌟𑌯𑌪𑌾𑌟𑌯, 𑌆𑌗𑌚𑍍𑌛 𑌆𑌗𑌚𑍍𑌛, 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌭𑌿𑌨𑍍𑌧𑌿𑌭𑌿𑌨𑍍𑌧𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯, 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌵𑌶𑍀𑌕𑍁𑌰𑍁𑌵𑌶𑍀𑌕𑍁𑌰𑍁𑌸𑍍𑌵𑌾𑌹𑌾, 𑌓𑌂𑌫𑌟𑍍𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ‖

𑌓𑌂 𑌹𑍍𑌰𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌐𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌸𑍌𑌃 𑌓𑌂 𑌵𑌾𑌤𑌪𑌿𑌤𑍍𑌤𑌶𑍍𑌲𑍇𑌷𑍍𑌮𑌰𑍋𑌗𑌾𑌦𑌿 𑌦𑍋𑌷𑌨𑌿𑌵𑌾𑌰𑌣 𑌉𑌡𑍍𑌡𑌾𑌮𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌬𑍀𑌜𑌾𑌵𑌰𑌣, 𑌓𑌂𑌸𑌰𑍍𑌵𑌰𑌾𑌟𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑍋𑌭𑌗𑌵𑌤𑍇, 𑌓𑌂 𑌐𑌂 𑌵𑌂 𑌠𑌂 𑌜𑌂 𑌨𑌂 𑌜𑍍𑌰𑍂𑌂 𑌓𑌂 𑌰𑌂 𑌓𑌂 𑌶𑌿𑌰𑍋𑌰𑍋𑌗, 𑌨𑍇𑌤𑍍𑌰𑌰𑍋𑌗, 𑌕𑌰𑍍𑌣𑌰𑍋𑌗, 𑌦𑌨𑍍𑌤𑌰𑍋𑌗, 𑌕𑌣𑍍𑌠𑌰𑍋𑌗, 𑌕𑍍𑌷𑌯𑌰𑍋𑌗, 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑍋𑌗, 𑌕𑍁𑌷𑍍𑌠𑌰𑍋𑌗, 𑌦𑍇𑌹𑌰𑍋𑌗, 𑌵𑌕𑍍𑌷𑌰𑍋𑌗, 𑌮𑍂𑌤𑍍𑌰𑌰𑍋𑌗, 𑌅𑌤𑌿𑌸𑌾𑌰𑌰𑍋𑌗, 𑌉𑌦𑌰𑌰𑍋𑌗, 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌰𑍋𑌗, 𑌵𑌿𑌷𑌰𑍋𑌗, 𑌵𑍍𑌰𑌣𑌰𑍋𑌗, 𑌜𑍍𑌵𑌰𑌰𑍋𑌗, 𑌗𑌣𑍍𑌡𑌰𑍋𑌗, 𑌘𑍍𑌰𑌾𑌣𑌰𑍋𑌗, 𑌵𑌿𑌷𑍂𑌚𑌿𑌕𑌾𑌰𑍋𑌗, 𑌪𑌾𑌪𑌰𑍋𑌗, 𑌕𑌫𑌰𑍋𑌗, 𑌕𑌾𑌸𑌰𑍋𑌗, 𑌵𑌾𑌤𑌰𑍋𑌗𑌾𑌦𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯𑌾𑌕𑌰𑍍𑌷𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌨𑌾𑌶𑌯 𑌨𑌾𑌶𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌦𑌾𑌰𑌯𑌦𑌾𑌰𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌬𑌨𑍍𑌧𑌯𑌬𑌨𑍍𑌧𑌯



𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌮𑍋𑌹𑌯𑌮𑍋𑌹𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌸𑌞𑍍𑌚𑌾𑌲𑌯 𑌸𑌞𑍍𑌚𑌾𑌲𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌯 𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌭𑍇𑌦𑌯 𑌭𑍇𑌦𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌭𑌕𑍍𑌷𑌯 𑌭𑌕𑍍𑌷𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌶𑍋𑌷𑌯 𑌶𑍋𑌷𑌯 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌆𑌵𑍇𑌶𑌯𑌾 𑌵𑍇𑌶𑌯, 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯, 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌸𑌾𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌟𑌯 𑌪𑌾𑌟𑌯, 𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌯 𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌯𑌾, 𑌆𑌗𑌚𑍍𑌛𑌾𑌗𑌚𑍍𑌛 𑌸𑍍𑌵𑌾𑌜𑌿𑌤𑍁 𑌵𑌦𑍍𑌦𑍋𑌷𑌾𑌨𑍍, 𑌦𑍍𑌰𑌾𑌵𑌯 𑌦𑍍𑌰𑌾𑌵𑌯 𑌪𑌾𑌟𑌯 𑌪𑌾𑌟𑌯, 𑌆𑌗𑌚𑍍𑌛𑌾𑌗𑌚𑍍𑌛, 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌭𑌿𑌨𑍍𑌧𑌿 𑌭𑌿𑌨𑍍𑌧𑌿, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍, 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯𑌾 𑌕𑌰𑍍𑌷𑌯, 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯, 𑌸𑌰𑍍𑌵𑌰𑍋𑌗𑌾𑌨𑍍 𑌵𑌶𑍀𑌕𑍁𑌰𑍁𑌵𑌶𑍀𑌕𑍁𑌰𑍁𑌸𑍍𑌵𑌾𑌹𑌾, 𑌓𑌂𑌫𑌟𑍍𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ‖

𑌓𑌂 𑌐𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌗𑍍𑌲𑍌𑌂 𑌸𑍌𑌂 𑌓𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌨𑌿𑌵𑌾𑌰𑌣, 𑌉𑌡𑍍𑌡𑌾𑌮𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌬𑍀𑌜𑌾𑌵𑌰𑌣, 𑌓𑌂 𑌸𑌂𑌰𑌾𑌡𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑍋𑌭𑌗𑌵𑌤𑍇 𑌓𑌂 𑌅𑌂 𑌟𑌂 𑌂 𑌡𑌂 𑌜𑌂 𑌣𑌂 𑌊𑌂 𑌓𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌰𑍌𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌯𑌾𑌮𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌨𑍈𑌋𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌵𑌾𑌰𑍁𑌣𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌕𑍌𑌬𑍇𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌐𑌶𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰, 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌅𑌙𑍍𑌗𑌾𑌰𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌬𑍁𑌧𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌆𑌸𑍁𑌰𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌮𑍋𑌹𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌨𑌾𑌗𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌗𑌾𑌰𑍁𑌡𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌗𑌦𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌦𑌣𑍍𑌡𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌅𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌗𑌜𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌭𑍈𑌰𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌕𑌾𑌳𑌾𑌸𑍍𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯𑌾 𑌕𑌰𑍍𑌷𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌨𑌾𑌶𑌯 𑌨𑌾𑌶𑌯𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌦𑌾𑌰𑌯 𑌦𑌾𑌰𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌬𑌨𑍍𑌧𑌯 𑌬𑌨𑍍𑌧𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌮𑍋𑌹𑌯 𑌮𑍋𑌹𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌸𑌞𑍍𑌚𑌾𑌲𑌯 𑌸𑌞𑍍𑌚𑌾𑌲𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌯 𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌯 . 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌭𑍇𑌦𑌯 𑌭𑍇𑌦𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌭𑌕𑍍𑌷𑌯 𑌭𑌕𑍍𑌷𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌶𑍋𑌷𑌯 𑌶𑍋𑌷𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌆𑌵𑍇𑌶𑌯𑌾 𑌵𑍇𑌶𑌯 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌸𑌾𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑌾𑌟𑌯 𑌪𑌾𑌟𑌯 𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌯 𑌆𑌶𑍍𑌲𑍇𑌷𑌯 𑌆𑌗𑌚𑍍𑌛𑌾𑌗𑌚𑍍𑌛𑌸𑍍𑌵𑌾𑌜𑌿𑌤𑍁 𑌵𑌦𑍍𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌦𑍍𑌰𑌾𑌵𑌯 𑌦𑍍𑌰𑌾𑌵𑌯𑌪𑌾𑌟𑌯 𑌪𑌾𑌟𑌯 𑌆𑌗𑌚𑍍𑌛𑌾𑌗𑌚𑍍𑌛 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌭𑌿𑌨𑍍𑌧𑌿 𑌭𑌿𑌨𑍍𑌧𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌆𑌕𑌰𑍍𑌷𑌯𑌾 𑌕𑌰𑍍𑌷𑌯 𑌉𑌚𑍍𑌚𑌾𑌟𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌟𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍋𑌷𑌾𑌨𑍍 𑌵𑌶𑍀𑌕𑍁𑌰𑍁𑌵𑌶𑍀𑌕𑍁𑌰𑍁𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌓𑌂 𑌫𑌟𑍍𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 ‖

𑌓𑌂 𑌹𑍍𑌰𑍀𑌂 𑌶𑌂 𑌐𑌂 𑌕𑍍𑌲𑍀𑌂 𑌸𑍌𑌃 𑌓𑌂 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑌾𑌪 𑌦𑍋𑌷𑌨𑌿𑌵𑌾𑌰𑌣 𑌉𑌡𑍍𑌡𑌾𑌮𑌂 𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌬𑍀𑌜𑌾𑌵𑌰𑌣 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑍍𑌰𑌹𑍍𑌮

ணெ நமொஹமவதெ ஒம ஊெம தும யும ஊம யம நம ஊெம ஒம ஸஷ்யா

ஜெஷ ஷமஜெஷ ஹௌஜெஷ ஷௌஜெஷ ஜௌஜெஷ

ஹரஜெஷ ஊஜெஷ ஸவஜெஷ ஆஜெஷ ஊஜெஷ

கியாஜெஷ மஹஜெஷ வஜெஷ கஜெஷ வக்ஷிஜெஷ

ஊஜெஷ தெவஜெஷ ஜொஜெஷ வரஹூ ஹஊநஜெஷ ஆகா

ஷஜெஷ ஆவஜெஷ வாவகஜெஷ ஸவஜெ

ஷாநு ஆகஷயா கஷய ஸவஜெஷாநு நாமய நாமய ஸவ

ஜெஷாநு ஊமய ஊமய ஸவஜெஷாநு ஙாய ஙாய ஸவஜெ

ஷாநு ஷூஹய ஷூஹய ஸவஜெஷாநு ஜொஹயஜொஹயஸவஜெ

ஷாநு ஸஙாவய ஸஙாவய ஸவஜெஷாநு ஆஹாஊய ஆஹாஊய

ஸவஜெஷாநு ஜொஊய ஜொஊய ஸவஜெஷாநு ஹக்ஷய ஹக்ஷய

ஸவஜெஷாநு மொஷய மொஷய ஸவஜெஷாநு ஆவெமயா

வெமய உஷாடயொஷாடய மீஷம மீஷம ஸாயநு வாஙய வாஙய

ஆமெஷயா மெஷய ஆமஷாமஷ ॥ ஷாஹிநு ॥ வதஷூநு ஷூவய

ஷூவயவாஙயவாஙய ஆமஷாமஷஉஷாடயொஷாடயஸவஜெஷாநு

ஷிமயி ஷிமயி ஸவஜெஷாநு ஹிமயி ஹிமயி ஸவஜெஷாநு ஆக

ஷயா கஷய உஷாடயொஷாடய ஸவஜெஷாநு வமீகரவமீ

கரஷாஹா ஒமஹட் ஷாஹா ॥

ஒம ஹூம ஊெம க்ஷம ஷௌஃ ஷௌஃ க்ஷம ஊெம ஹூம ஒம ஸஊஸ

கொடிஹஊதமணாஜி தெவஷிஜெஷ நிவாரண ஊஹாஊம ஆஷீஜா

வரண ஸகவாஜஷஜொமணஸவதூக்ஷக ஊயாநாமஹ ஷ

ஸஹ விமுவ ஹணெ நமொஹமவதெ ஒம ஒம வம ஹம ஙம ஹம ஊம ஒம

ஒம ஸவகொடிஹஊதமணாநு ஆகஷய மதகொடிவிமாவமணா

நு ஆகஷய வஜகொடி ஙஹூாக்ஷஸ மணாநு ஆகஷய

கஷகொடி விஷமணாநு ஆகஷய மதகொடிஷமணா

நு ஆகஷய கஷகொடிஹெரவமணாநு ஆகஷய நவகொ

டிஷமணாநு ஆகஷய ஊமகொடிமக்தமணாநு ஆகஷய

ஷிகொடிஐமணாநு ஆகஷய நவகொடிவீரவாஹமணாநு

ஆகஷய ஸஊஸகொடிஹஊதமணாநு ஆகஷய ஸஊஸகொடி

ஹஊதமணஜெஷாநு ஆகஷயா கஷய நாமய நாமய ஜொஹய

ஜொஹய ஙாய ஙாய ஷூஹய ஷூஹய ஜொஹய ஜொஹய ஸஙா

ஙய ஸஙாவய ஆஹாஊயாஹாஊய ஜொஊய ஜொஊய ஹக்ஷய ஹக்ஷய

மொஷய மொஷய ஆவெமயா வெமய உஷாடயொஷாடய மீஷம

மீஷம ஸாயநு வாஙய வாஙய ஷூவய ஷூவயஆமஷாமஷ உஷா



டயொஷாடய யஊகாஙவாமாநு ஆகஷயா கஷய நாமய நாமய

ஊமய ஊமய உஷாடயொஷாடயவதஷூநு ஷூவய ஷூவயவாஙய

வாஙய ஆமஷாமஷ உஷாடயொஷாடய ஸஊஸகொடிஹஊதமணஜொ

ஷாநு ஷிமயி ஷிமயி ஸஊஸகொடிஹஊதமணஜெஷாநு ஹிமயி ஹிமயி

ஸஊஸகொடிஹஊதமணஜெஷாநு ஆஜெஷயாஜெஷய ஸஊஸகொடி

ஹஊதமணஜெஷாநு வமீகரவமீகர ஷாஹா ॥ ஒம ஹட்

ஷாஹா ॥ ஒம்விமுவ ஹணெ நமொஹமவதெ ஒம ஹூம ஜூம்ஹிணீ

க்ஷம க்ஷம ஜொஹிநீ ஷௌஃ ஸமவஜெமயவாஹிநீ விமுவ ஹ

விஷமக்திநமொஹமவதி விமுவ ஹவிஷமக்திஊஹஜெஹிஊநம

ஹாஹா ஹநஹந வவவவ உஹஉஹ உஷாடயொஷாடய ஷஜெ

மஷ மஷ ஷாஹா கரஷாஹா விஜஷமிகெ ஐஜொஜமஷ

ஜீவஜீவ வஜ ஊஜூமமதொஷிஷாஹா ஒமஹட் ஷாஹாஒமவஜெமுவ

விராட் ॥

இதி விமுவ ஹகவசம்ஸம்பூணம்.

உ

ஸ்ரீவிராட்விஸ்வப்ரம்ஹணேநம:.

# விஸ்வப்ரம்ஹகவசம்.

அஸ்ய ஸ்ரீவிஸ்வப்ரம்ஹகவசமஹாமந்த்ரஸ்ய, விராட்விஸ்வப்ரம்ஹாருஷிஃ ப்ருஹதீசந்தஃ, விஸ்வப்ரம்ஹாதேவதா, ஓம்பீஜம், ஹ்ரீம் பராஸக்திஃ, ஹம்கீலகம், மமவிஸ்வப்ரம்ஹப்ரஸாதஸித்யர்தே, விஸ்வப்ரம்ஹஜபேவிநியோகஃ.

ஓம்ஹ்ரீம் விஸ்வேஸ்வராய அங்குஷ்டாப்யாம் நமஃ,
ஹ்ரீம்ஸ்ரீம், மஹாதேவாய தர்ஜநீப்யாம் நமஃ,
ஸ்ரீம்க்லீம், த்ரியம்பகாய மத்யமாப்யாம் நமஃ,
க்லீம்க்லௌம், த்ரிபுராந்தகாய அநாமிகாப்யாம் நமஃ,
க்லௌம் ஸௌஃ, த்ரிகாக்நிகாலாய கநிஷ்டிகாப்யாம் நமஃ,
ஸௌஃ ஐம், காலாக்நிருத்ராய கரதலகர ப்ருஷ்டாப்யாம் நமஃ,
ஐம் ஐம், நீலகண்டாய ஹ்ருதயாய நமஃ,
ஐம் ஓம், ம்ருத்யுஞ்ஜயாய ஸிரஸேஸ்வாஹா,
ஓம் ஐம், அகாராய விராட்ப்ரம்ஹணே ஸிகாயைவௌஷட்,
ஓம்க்லீம், உகாராய ஸ்வராட்ப்ரம்ஹணே கவசாயஹும்,
ஓம் ஸௌஃ, மகாராயஸம்ராட் ப்ரம்ஹணே நேத்ராப்யாம்வௌஷட்,
ஓம் ஸ்ரீம், ஓங்காராய பரப்ரம்ஹணே அஸ்த்ராயபட்,
ஓம் அம், பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்தஃ.

ஓம் யமநியமாஸன ப்ராணுபாமப்ரத்யா ஹாரத்யாந தாரண ஸமாத்யஷ்டா
ங்க யோகாப்யாஸ, நிர்குணோபாஸந, மஹாஜநஸந்நிதாந, த்வைதாத்வைத,விஶி
ஷ்டத்ரய, மஹாமதஜநஸம்பாவ்யமாந, நிவ்யமங்களதேஜோமயவிக்ரஹஸ்வரூப
ஸச்சிதாநந்த, அகண்டமண்டலமண்டித, ப்ரசண்டதோர்தண்டபுண்டரீகாக்ஷ,
த்வயஸூலோசந, அநேகஜந்மாந்தர, கலுஷாவர்த, பக்தஜந பாவநோல்லாஸ,
மாநஸாநந்த, ப்ரம்ஹாண்ட பாண்டோதர, ஓங்காரகுண்டலீமத்ய, நிகூடகாடா
ங்குர, ஸஹஸ்ரகோடி ஸூர்யப்ரகாஶ, சிதாநந்த, சிந்முத்ராப்ரஸந்ந, ஓம்பரா
த்பரபரஶிவ விராட்விஶ்வப்ரம்ஹமஹாமூர்தயே நமோநமஃ.

ஓம், ஹ்ரீம், ஶ்ரீம், க்லீம், க்லௌம், ஸௌஃ, ஐம், ஐம், ஓம், பூதப்ரேத
பிஶாசப்ரம்ஹராக்ஷஸ ஶாகிநீடாகிநீ கூஶ்மாண்டக்ரஹ தோஷநிவாரண மஹா
மந்த்ர.பீஜாவரண, ।ஓம் விராட் விஶ்வப்ரம்ஹணே நமோபகவதே, ஓம் அம்கம்,
வம், மம், வம், ஙம், ஆம், ஓம், பூதக்ரஹ, ப்ரேதக்ரஹ, பிஶாசக்ரஹ, ப்ரம்ஹ
ராக்ஷஸக்ரஹ, ஶாகிநீக்ரஹ, டாகிநீக்ரஹ, கர்கடி ராக்ஷஸீக்ரஹ, ராக்ஷஸக்ரஹ,
யக்ஷக்ரஹ, பேதாளக்ரஹ, பைரவக்ரஹாந், சிந்தி, பரதுஷ்டக்ரஹாந், மாரய,பர
துஷ்டக்ரஹ, அஸுரக்ரஹ, பாபக்ரஹ,சண்டாளக்ரஹ,காலக்ரஹ,திஶாக்ரஹ,
நவக்ரஹப்ரதிபந்தகக்ரஹ, பாலக்ரஹாதி, ஸர்வக்ரஹதோஷாந், ஆகர்ஷயா
கர்ஷய, ஸர்வக்ரஹதோஷாந், நாஶய நாஶய, ஸர்வக்ரஹதோஷாந், மாரய
மாரய, ஸர்வக்ரஹதோஷாந், பந்தய பந்தய, ஸர்வக்ரஹதோஷாந், ஸ்தம்பய
ஸ்தம்பய, ஸர்வக்ரஹதோஷாந், மோஹய மோஹய, ஸர்வக்ரஹதோஷாந், ஸந்
தாடய ஸந்தாடய, ஸர்வக்ரஹதோஷாந், ஆப்லாவய ஆப்லாவய, ஸர்வ்க்ரஹ
தோஷாந், சேதய சேதய,ஸர்வக்ரஹதோஷாந்,பக்ஷய பக்ஷய, ஸர்வக்ரஹதோ
ஷாந், ஶோஷய ஶோஷய, ஸர்வக்ரஹதோஷாந், ஆவேஶயா வேஶய, உச்சா
டயோ ச்சாடய, ஶீக்ரம், ஶீக்ரம், ஸாதூந் பாலய பாலய, ஆஶ்லேஷயா ஶ்லே
ஷய, ஆகர்ஷய ஆகர்ஷய, ஸ்வாமிந், சதுஷ்பதாந், ஸ்தாபய ஸ்தாபய, பாலய
பாலய, ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வக்ரஹதோஷாந், சிந்தி
சிந்தி, ஸர்வக்ரஹதோஷாந்,பிந்திபிந்தி ஸர்வக்ரஹதோஷாந், ஆகர்ஷயர் கர்ஷ
ய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வக்ரஹதோஷாந், வஶீகுரு வஶீகுருஸ்வாஹா,
ஓம்பட்ஸ்வாஹா.

ஓம், லாம், லீம், ஐம், க்லீம், ஸௌஃ, ஓம், வாதபித்தஶ்லேஷ்ம ரோகாதி
தோஷநிவாரண மஹாமந்த்ரபீஜாவரண, ஓம் ஸுராட் விஶ்வப்ரம்ஹணே நமோ
பகவதே, ஓம், இம், சம், ஊம், ஜம், ஸம், ஞம், ஈம், ஓம், ஶிரோரோக, நேத்ர
ரோக, கர்ணரோக, தந்தரோக,கண்டரோக, க்ஷயரோக, பாண்டுரோக, குஷ்ட
ரோக, மேகரோக, பக்ஷரோக, குல்மரோக, அதிஸாரரோக, மூலரோக, பவித்
ரரோக, விஷரோக, வ்ரணரோக, ஜ்வரரோக,கணரோக, த்ரோணரோக, விசூசி
காரோக, பாபரோக, கர்மரோக, காமரோக, வாதரோக, பித்தரோக, ஶிலேஷ்
மரோக, தாரித்ரியரோகாதி, ஸர்வரோகாந், ஆகர்ஷயா கர்ஷய, ஸர்வரோகாந்,
நாஶய நாஶய, ஸர்வரோகாந், மாரய மாரய, ஸர்வரோகாந், பந்தய பந்தய,



ஸர்வரோகாந், ஸ்தம்பய ஸ்தம்பய, ஸர்வரோகாந், மோஹய மோஹய, ஸர்வ
ரோகாந், ஸந்தாடய ஸந்தாடய, ஸர்வரோகாந், ஆப்லாவயா ப்லாவய, ஸர்வ
ரோகாந், சேதய சேதய, ஸர்வரோகாந், பக்ஷய பக்ஷய, ஸர்வரோகாந், ஶோ
ஷய ஶோஷய, ஸர்வரோகாந், ஆவேஶயா வேஶய, உச்சாடயோ ச்சாடய,
ஶீக்ரம் ஶீக்ரம், ஸாதூந் பாலயபாலய, ஆஶ்லேஷயா ஶ்லேஷய, ஆகர்ஷயா கர்
ஷய, ஸ்வாமிந், சதுஷ்பதாந், ஸ்தாபய ஸ்தாபய, பாலய பாலய, ஆகர்ஷயா
கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வரோகாந், சிந்திசிந்தி, ஸர்வரோகாந்,
பிந்திபிந்தி, ஸர்வரோகாந், ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வ
ரோகாந், வஶீகுரு வஶீகுருஸ்வாஹா ஓம்பட்ஸ்வாஹா.

ஓம், ஐம், ஹ்ரீம், ஶ்ரீம், க்லீம், க்லௌம், ஸ்ரௌம், ஓம், ஸர்வாஸ்த்ராதி
தோஷநிவாரண மஹாமந்த்ரபீஜாவரண ஓம்ஸம்ராட் விஶ்வப்ரம்ஹணே நமோ
பகவதே, ஓம், உம், டம், ம், ஜம், ஜூம், ணம், ஊம், ஓம்பாஶுபதாஸ்த்ர, ப்ர
ம்ஹாஸ்த்ர, நாராயணாஸ்த்ர, ருத்ராஸ்த்ர, ஐந்த்ராஸ்த்ர, ஆக்நேயாஸ்த்ர,யமாஸ்
த்ர, கந்யாஸ்த்ர, வருணாஸ்த்ர, வாயவ்யாஸ்த்ர, குபேராஸ்த்ர, ஐஶாந்யாஸ்த்ர,
ஸூர்யாஸ்த்ர, சந்த்ராஸ்த்ர, அந்தகாராஸ்த்ர, கந்தர்வாஸ்த்ர, அஸுராஸ்த்ர
மோஹநாஸ்த்ர, நாகாஸ்த்ர, காருடாஸ்த்ர, பர்வதாஸ்த்ர, கதாஸ்த்ர, ஶூலா
ஸ்த்ர, தண்டாஸ்த்ர, அஶ்வாஸ்த்ர, கஜாஸ்த்ர, ஸிம்ஹாஸ்த்ர, பைரவாஸ்த்ர,
துர்காஸ்த்ர, காலாஸ்த்ராதி, ஸர்வாஸ்த்ரதோஷாந். ஆகர்ஷப ஆகர்ஷப ஸர்வா
ஸ்த்ரதோஷாந், நாஶயநாஶய, ஸர்வாஸ்த்ரதோஷாந், மாரயமாரய, ஸர்வாஸ்த்ர
தோஷாந், பந்தயபந்தய, ஸர்வாஸ்த்ரதோஷாந், ஸ்தம்பயஸ்தம்பப, ஸர்வா
ஸ்த்ரதோஷாந், மோஹயமோஹய, ஸர்வாஸ்த்ரதோஷாந், ஸந்தாடப ஸந்தா
டய, ஸர்வாஸ்த்ரதோஷாந், ஆப்லாவயா ப்லாவய,ஸர்வாஸ்த்ரதோஷாந் சேதய
சேதய, ஸர்வாஸ்த்ரதோஷாந், பக்ஷயபக்ஷய, ஸர்வாஸ்த்ரதோஷாந், ஶோஷய
ஶோஷய, ஸர்வாஸ்த்ரதோஷாந், ஆவேஶயா வேஶய, உச்சாடயோ ச்சாடய,
ஶீக்ரம் ஶீக்ரம், ஸாதூந்பாலய பாலய, ஆஶ்லேஷயா ஶ்லேஷய, ஆகர்ஷயா கர்
ஷய, ஸ்வாமிந், சதுஷ்பதாந், ஸ்தாபய ஸ்தாபய, பாலய பாலய, ஆகர்ஷயா
கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வாஸ்த்ரதோஷாந், சிந்திசிந்தி, ஸர்வாஸ்த்ர
தோஷாந், பிந்திபிந்தி, ஸர்வாஸ்த்ரதோஷாந், ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ
ச்சாடய, ஸர்வாஸ்த்ரதோஷாந், வஶீகுருவஶீகுரு ஸ்வாஹா ஓம்பட்ஸ்வாஹா.

ஓம், ஶ்ரீம், வம், ஐம், க்லீம், ஸௌஃ, ஓம், சந்த்ரஸூர்யாதி பாபதோஷ
நிவாரண மஹாமந்த்ரபீஜாவரண, ஸ்வயம்ப்ரகாஶ விஶ்வப்ராம்ஹணே நமோ
பகவதே, ஓம், எம், தம், யூம், ஊம், யம், நம், ஐம், ஓம், ஸூர்யதோஷ, சந்
த்ரதோஷ, பௌமதோஷ, ஸௌம்யதோஷ, குருதோஷ, ப்ருகுதோஷ, மந்த
தோஷ, ஸர்பதோஷ, ஆசாரதோஷ, மந்த்ரதோஷ, க்ரியாதோஷ, கர்பதோஷ,
புத்ரதோஷ, களத்ரதோஷ, பக்ஷிதோஷ, த்ருஷ்டிதோஷ, தைவதோஷ,
கோத்ரதோஷ. பரஸ்த்ரீகமநதோஷ, அகாலம்ருத்யுதோஷ,அபம்ருத்யுதோஷ,
பாபகர்மதோஷாதி, ஸர்வதோஷாந், ஆகர்ஷயா கர்ஷய, ஸர்வதோஷாந்,நாஶய
நாஶய, ஸர்வதோஷாந், மாரய மாரய, ஸர்வதோஷாந், பந்தயபந்தய, ஸர்வ

தோஷாந், ஸ்தம்பய ஸ்தம்பய, ஸர்வதோஷாந், மோஹய மோஹய, ஸர்வதோஷந், ஸந்தாடய ஸந்தாடய, ஸ்ர்வதோஷாந், ஆப்லாவயா ப்லாவய, ஸர்வதோஷாந், சேதய சேதய, ஸர்வதோஷாந், பக்ஷய பக்ஷய, ஸர்வதோஷாந், ஶோஷய ஶோஷய, ஸர்வதோஷாந், ஆவேஶயா வேஶய, உச்சாடயோ ச்சாடய, ஶீக்ரம் ஶீக்ரம், ஸாதூந் பாலய பாலய, ஆஶ்லேஷயா ஶ்லேஷய, ஆகர்ஷயாகர்ஷய, ஸ்வாமிந். சதுஷ்பதாந் ஸ்தாபய ஸ்தாபய, பாலய பாலய, ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வதோஷாந், சிந்திசிந்தி, ஸர்வதோஷாந், பிந்தி பிந்தி, ஸர்வதோஷாந், ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸர்வதோஷாந், வஶீகுரு வஶீகுருஸ்வாஹா, ஓம் பட்ஸ்வாஹா.

ஓம், ஹ்ரீம், ஐம், க்லீம், ஸௌ:, ஸௌ:, க்லீம், ஐம், ஹ்ரீம், ஓம், ஸமஸ்தகோடி பூத தேவர்ஷிகணதி தோஷநிவாரண மஹா மந்த்ர பீஜாவரண ஸத்வரஜ ஸ்தமோகுண ஸர்வாத்மரக்ஷக நபாநுக்ரஹ ப்ரஸன்ன விச்வப்ராம்ஹணே நமோபகவதே, ஓம், ஓம், பம், ஹௌம், ஷௌம், ஹௌம், மம், ஓம், ஓம், ஸப்த கோடி பூதகணாந் ஆகர்ஷய, ஶதகோடி பிஶாசகணாந் ஆகர்ஷய, பஞ்சகோடி ப்ராம்ஹராக்ஷஸ கணாந் ஆகர்ஷய, அஷ்டகோடி விஷ்ணுகணாந் ஆகர்ஷய, ஶத கோடி ருத்ரகணாந் ஆகர்ஷய, அஷ்டகோடி பைரவகணாந் ஆகர்ஷய, நவகோடி துர்க்காகணாந் ஆகர்ஷய, தஶகோடிஶக்திகணாந் ஆகர்ஷய, த்விகோடி இந்த்ர கணாந் ஆகர்ஷய, நவகோடி வீரபாஹுகணாந் ஆகர்ஷய, ஸமஸ்தகோடி பூத கணாந் ஆகர்ஷய, ஸமஸ்தகோடி பூதகணதோஷாந், ஆகர்ஷயா கர்ஷய நாஶய நாஶய, மாரய மாரய, பந்தய பந்தய, ஸ்தம்பய ஸ்தம்பய, மோஹய மோஹய, ஸந்தாடய ஸந்தாடய, ஆப்லாவயா ப்லாவய, வேதய வேதய, பக்ஷய பக்ஷய, ஶோஷயஶோஷய ஆவேஶயா வேஶய, உச்சாடயோ ச்சாடய, ஶீக்ரம்ஶீக்ரம், ஸாதூந் பாலய பாலய, ஸ்தாபய ஸ்தாபய, ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, யமகாலபாஶாந், ஆகர்ஷயா கர்ஷய, நாஶய நாஶய, மாரய மாரய, உச்சாடயோ ச்சாடய, சதுஷ்பதாந், ஸ்தாபய ஸ்தாபய, பாலய பாலய, ஆகர்ஷயா கர்ஷய, உச்சாடயோ ச்சாடய, ஸமஸ்தகோடி பூதகணதோஷாந், சிந்தி சிந்தி, ஸமஸ்தகோடி பூதகணதோஷாந், பிந்தி பிந்தி, ஸமஸ்தகோடி பூதகணதோஷாந், ஆஶ்லேஷயா ஶ்லேஷய, ஸமஸ்தகோடி பூதகணதோஷாந், வஶீகுரு வஶீகுருஸ்வாஹா, ஓம் பட்ஸ்வாஹா. ஓம் விஶ்வப்ராம்ஹணே நமோ பகவதே. ஓம், ஹ்ரீம், ஜ்ரும்பிணீ, க்லீம், க்லீம், மோஹிநீ, ஸௌ:, ஸம்பதைஶ்வர்யதாயிநீ, விஶ்வப்ராம்ஹ விஷ்ணு ஶக்தி நமோபகவதி விஶ்வப்ராம்ஹ விஷ்ணுஶக்தி, ஏ, ஹை, ஈ, ஏநாம், ஹா, ஹா, ஹநஹந, பச பச, மத மத, உச்சாடயோ ச்சாடய, துரெ, குடுகுடுஸ்வாஹா, குருகுருஸ்வாஹா, விரூசிகே இமோந்தம், கச்ச, ஜீவஜீவ, சந்த்ரமண்டலம்கதோஸிஸ்வாஹா, ஓம் பட்ஸ்வாஹா ஓம் பரமேஶ்வர விராட்.

இதி விஶ்வப்ராம்ஹகவசம் ஸம்பூர்ணம்.

இது, பழனிஸ்தலம் பஞ்சப்ராஹ்ம சந்ததி
பௌரோகிதம் பிரம்மஶ்ரீ குமாரஸ்வாமி தீக்ஷிதரவர்ளா லியற்றப்பட்டது.
Sacchidhanandha Press, Komaleeswaranpet, Madras.

ஶ்ரீமத் விராட் விஶ்வப்ராஹ்மணே நம:

# விஶ்வகர்ம குலோபகாரி.

## சிற்பத் தொழில்.

அஃதாவது சிற்பசாஸ்திரங்கள் கூறுகின்றவாறு செய்யும் வேலைகளாம்.

ஒருநகரம் எவ்வளவு சிறந்து விளங்குகின்றதோ அந்நகர் அவ்வளவுகல்வியினும், நாகரீகத்தினும், மேன்மையினும் சிறந்திருக்குமெனச் சொல்வதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமிராது. அங்ஙனமின்றி யிருக்குமாயின் அது மணமில்லாதமலரும், மலரில்லாத வனமும், மதியில்லாத இரவும், மந்திரியில்லாத அரசும், அரசில்லாத குடியும் சிறப்படையாமைபோலச் சிறப்படையாதாம். இதனால் சிற்பத்தொழிலில்லாத நகரம் அழகின்றிய சுடுகாட்டுக்குச் சமமென்பது சொல்லாமலே தெற்றென விளங்கும். ஆதலால், நகரங்களுக்குச் சிற்பத்தொழிலே அலங்காரமுடைத்தென வேற்படுகின்றது. அச்சிற்பத்தொழில் நமது குலத்திற்கு இன்றியமையாததாய் நிற்கின்றது. ஆதலால், நாம் அத்தொழிற்குரிய சிற்பசாஸ்திரங்களை வாசித்து அவற்றின் பொருளை யுய்த்துணராமலு மிருக்கின்றோம்; உய்த்துணர்த்தாலும் அவற்றை பிறருக் கீயாதும், மறந்து இஞ்சிகின்ற குரங்கினைப்போல் விழித்துத் தாரித்ரமென்னும் கடலிலாழ்ந்து கரையேற வழிதெரியாது வருந்துகின்றோம்.

ஆனால் நமது மரபினர் சிற்பத்தொழிலில் எத்தேசத்தாரையும் தமக்குப் பின்னடையச்செய்திருந்தனர்களென்பதை இக்காலத்திலும் வேலூர்,தஞ்சை, மதுரை, திருப்பெருந்துறை, மாபலிபுரம், சிதம்பரம் முதலாய தென்னாடுகளினும் மற்றும் வடக்கு மேற்குபக்கங்களிலுமுள்ள ஆலயங்களிலும் அநேக இல்லங்களிலும் செய்தமைக்கப்பட்ட சிற்பத்தொழிலே சாட்சி பகர்கின்றன.

அன்றியும், அக்காலத்திருந்த நமதுமரபினர் கைத்தொழிலின் மாட்சிமையைப்பற்றி நாம் எவ்வளவு உயர்வாக எடுத்துரைப்பினும் இடந்தருமல்லவா! நம்முன்னோரது கல்வியின்சாதுர்யமும் கைத்தொழிலின்றிறமையையும் இவ்வளவு புகழ்வதற் கிடம் பெறுமோ? நாம் அத்தகைய நிலைமையில்லாதிருப்பதற்குக் காரணம் ஒன்றிருத்தல்வேண்டும். அஃதாவது, நமதுமூதாதையரிடத்து ஒற்றுமையும், ஒழுக்கமும், கல்வியும்இணைபிரியாமல் குடிகொண்டிருந்தமையாலன்றோ! அன்னோர் அவ்வளவு சீரும் சிறப்பும் கீர்த்தியும்பெற்று உலகோர் யாவரும்புகழும்படி மேன்மையுற்றிருந்தார்கள்.

நாமோ! இப்போது வியாக்கிரமத்தையொத்த பராக்கிரமத்தை யிழந்து நிராதரர்களாகவும், நூல்பலகற்கும் நுண்ணறிவிலா வெள்ளறிவினர்களாகவும் பரிதவிக்கின்றோம்; அன்றியும், பொய் சூது முதலிய துர்க்குணங்களை மேற்கொண்டு பெருமைக்குச்

சிறுமையும், பொறுமைக்குப் பொறுமையும், மேன்மைக்குக் கீழ்மையுங்கொண்டு அணுவளவேனும் அன்னியர்மதிக்கக் கண்ணியமின்றிக் கவலையடைந்து, தேனில்வீழ்ந்த ஈப்போலும், வலையிற்பட்ட மான்போலும், பிலத்தில்வீழ்ந்த யானைபோலும் மதிமயங்கித் தளர்வுற்றுச் சிற்பத்தொழில் வளமை, கல்வி யென்கிற பற்றுக்கோட்டைக் கைப்பற்று துழல்கின்றனம்.

சிற்பத்தொழிலையும் அவைகளுக் குரிய சாஸ்திரங்களையும் கற்று வல்லசிலர் அவற்றைத்தமதுமரபினருக்குச்சொல்லாமலும், குலாபிமானத்தைக் கருதாமலும், மனதிலேயே வைத்துக்கொண்டு யார்வாழ்ந்தாலென்ன? யார்கெட்டாலென்ன? நாம் வாழ்வதே நலமெனக்கருதிச் சிற்சிலகாலம் உலகிலுழன்று மண்ணுக் கிரையாகின்றனர். இங்ஙனமிருக்கின் எங்ஙனம் நாம் விர்த்தியடைவோம். இன்னும் சிலர் குலத்தின் பொது நன்மையைக் கருதி நகமும் சதையும்போல ஒருவரையொருவர் சிநேகித்து ஒருமைப்பட்டுப்பெருமையோடுவாழ்வதுபற்றிக் கிஞ்சித்தும் ஓராதவர்களாய் ஒருவரையொருவர் விரோதித்தும், இவன்தெலுங்கன், இவன் தமிழன், இவன் வடநாட்டான், இவன் தென்னாட்டான், இவன்உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்பனவற்றை மேற்கொண்டு ஒருவரை யொருவர் தூஷித்தும், வஞ்சித்தும், சிறுமையுற்றும் ஜீவிக்கின்றனர். இவ்வித வெண்ணங் குடிகொண்டிருக்கின் நாம் எவ்விதம் முன்னுக்கு வரக்கூடும்? நமதுசிற்பத்தொழில்களும் அவற்றிற்குரிய சாஸ்திரங்களும் எங்ஙனம் விளக்கமாகும்?

தற்காலத்திலோ மகம்மதிய வமிசத்தினர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகள் கைத்தொழிலில் தேர்ச்சியடையவேண்டுமென்றும், அதனால்தான் ஜீவிக்க வேண்டுமென்றுங்கருதி ஒவ்வோரிடத்திலும் தொழிற்சாலை ஏற்படுத்தி, அதில் அவர்களுடைய வம்சப்பிள்ளைகளை பயிலவைத்து, அவர்கள் அத்தொழிலில் தேர்ச்சி யடையச்செய்ய திறமையுள்ள மேஸ்திரிகளை நியமித்து, அப் பிள்ளைகளுக்கு அத் தொழில்களைக் கற்பித்துக்கொடுத்தும், அவர்களாலுறும் ஊதியத்தில் அப்பிள்ளைகளுக்குச் சம்பளமீந்தும் தாமும் லாபத்தை யடைந்தும் வருகின்றனர். இதுநம்மனோரியாவருக்குந் தெரிந்த விடயமே.

நாமோ! நமக்கு அநாதியாகவும், சொந்தமாகவும் இருக்கின்ற சிற்பத்தொழிலைக் கைவிடுத்துப் பற்பலவியவகாரங்களிற் புகுந்து வாணாளை வீணாக்கி யலைகின்றோமேயொழிய நமது சுதந்தர வேலையாகிய சிற்பத்தொழிலைவிர்த்தியாக்கிப் பார்ப்பவர் மெச்சும்படி பற்பல வேலைகளை நூதனமாகவியற்றி உலகோர் காண உறுதிகொண்டு வாழ்வதற்குக்கனவிலும் நினைந்தோமில்லை. இது நமது குலஞ் செய்தபாவமேயாம்.

ஐரோப்பியர் செய்யும் சிற்பத்தொழில்களைக் கண்ணுற்ற நமது மரபினர் இதற்கு மேலாகச்செய்துமுடிக்கும்படியான விஶ்வகர்மம், விச்வேசம், விஶ்வசாரம், விருத்தம், த்வாஷ்டம், நளம், மயம், ஹநுமானம் பாநுகர்பாரியம், ஸ்ருஷ்டம், மானசாரம், வஸ்து, வித்யாபதி, பராசர்யம், அர்ஷிகம், ஸைத்தகம், வாஸ்துபோதம், விஸ்தாரம், இந்திரம், வச்சிரம், ஸவுமம், விஶ்வகாஸிபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், கபிலம், காலயூபம், நாமசம்ஹிதை, ஸாத்யகம், விஸ்வபோதம், ஆதிசாரம், வஹ-



சுருதம், மானபேதம் முதலாயசிற்பசாஸ்திரங்கள் நமது முதாதையரால் இயற்றி வைக்கப்பட்டிருக்கின்றனவென்று வாய்ப்பறையடிக்கின்றனரேதவிரயாதொன்றையுமப்படியியற்றிக் காண்பித்தனரில்லை. அப்படி காண்பிக்க முயலாமைக்குக் காரணம் அச்சாஸ்த்திரத்தை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவாராமையும் கல்வி கற்காமலே தொழிலைச்செய்ய ஆரம்பித்தலுமேயாம்.

ஐரோப்பியர் தங்கள் யுக்தியினால் கண்டுபிடித்த தொழில்களைச் சாஸ்திரரூபமாகப் பரிபாஷையின்றி யியற்றி வெளியிட்டும், பிறர்க்குரைத்தும், இன்னும் புதியபுதிய அற்புதமான யந்திரங்களையும், கண்ணினாற் பாராத வேலைகளையும் இயற்றிவெளியாக்கி வருவதாலன்றோ அவர்கள்புகழும் கீர்த்தியும் எங்கணும் பரவிவருகின்றது. ஆதலால் நம்மவர்கள் இனியாகிலும்சக்திக்குத் தக்க மூலதனத்தை வைத்து ஒருதொழிற்சாலை ஏற்படுத்தி அத்தொழிலுக்கு ஆதாரமான சிற்பசாஸ்திரங்களைக் கற்பித்துவருவதற்குரிய பாடசாலைகளை யேற்படுத்தி அச்சாஸ்திரமும் தொழிற்றிறமையும் உடைய குலாபிமானிகளைக்கொண்டு நமது குலசிறுவர்களுக்குச் சிற்பசாஸ்திரபாடங்களைக்கற்பித்துவைத்து அப்பாடப்படிதொழிலையும் பயிலவைத்து, அச்சிறுவர்களியற்றும் தொழிலிலுண்டாகும் ஊதியத்தில் அவர்களுக்குச் சம்பளமுங்கொடுத்துத்தாமும் லாபமடைந்து நமது சுதந்தரமான சிற்பத்தொழிலை விர்த்தியாக்கிவைப்பார்களேயானால் நம்மனோர்க்கு எவ்வளவுபுண்ணியமும், புகழும், உலகில் நிலைபெறும். நமது வம்சமானது பூர்வ உயரியநிலைக்கு வருதற்பொருட்டுச் சிற்பத் தொழிற்சாலையொன்றேற்படுத்தி அதனை விர்த்திசெய்வதுபற்றி யினியேனும் நம்குலாபிமானிகளில் ஒவ்வொருவரும் தத்தம்கடைமையாகக்கருத விஶ்வேஶ்வரர் திருவுளம் பற்றுவாராக.

சாலிவாடிபுரம் ஸ்ரீஜெகத்குரு பரசமய கோளரிநாத இராஜரத்ன சுவாமிகளவர்க ளனுப்பிய

## விஶ்வேஶ்வர அவதாரபுருஷ மண்டலேஶ்வரரான விஶ்வதபிரான் ஜனனம்.

பிரபஞ்சத்தில் நாகரீகங்களிற் சிறந்ததும், பரிசுத்தமானதும், இணையற்றபலவளம் பெற்றதும், இன்றியமையாத புண்ணிய பூமியுமான, இப்பரதகண்டத்தில் சூரியகுலச் சக்ரவர்த்திகள் அரசு புரிந்ததற்கு முன், மண்டலாதிபதிகளா யிருந்தவர்களில் மன்வந்தர மகாராஜன் என்பவர், ஆத்மணி நகரத்தில் இருந்து அரசு செலுத்துங்கால், அவர் அறநெறியுடன் ஆட்சிசெய்ததுபோல் பின் ராஜரீகத்தை வகிக்க, சந்தான மில்லாத தாபத்தை யடைந்து, தம் குருவான காசிபர் திருவாக்குப்படி அவர் பத்தினி சமேதராய் கங்காநதியின் சங்கமதீரத்தில் இருந்த பசுபதீஶ்வரன் சன்னதியை யடைந்து தெரிசித்து ஆராதனை செய்து வலம் சுற்றி மேல்பிரகாரத்தில்வர, அங்கு ஊர்மகரிஷி தபஸ் செய்துகொண்டிருந்தவர், தம்பதிசமேதராய் மன்னன் சேவித்துநின்றதை யுணர்ந்து, கண்விழித்துப் பார்த்து அருளிய தியா[illegible]னில்,

மன்னனே! இப்பொழுது அடைந்திருக்கிற தாபத்தை நிவர்த்தியாகிக் கொள்ளும் உங்களுக்குச் சந்தான சௌபாக்யம் வாய்க்கப்போகிறது. அதாவது, மண்டலத்திற் கதிபதியாயும், யோகிகளுக்கு வாமளிப்பவராயும், பிரஜைகளுக்கு இஷ்ட சௌபாக்யங்களைக் கொடுப்பவராயும், பக்தர்களுக்கு முக்தி அருளுபவராயும், துஷ்டர்களை சம்ஹாரம் செய்வாராயுமாக, விஶ்வதலோஹிதாள் என்று அவதார புருஷர்கள் உமக்குப் பௌத்திரர்களாயுற்பவிக்கப்போகிறார்கள், அவர்கள் ஜனித்ததும் பூமி அதிர்ச்சி ஏற்படுவதாகும். அவர்களால் பரமபதத்தை அடைவீர்கள். என்றருளி தபோநிதியானார்.

இவ்வாக்குகளைக் கேட்டு பரவசங்கொண்ட மன்வந்தர மகாராஜன் அவ்வனத்தின்மத்தியில் ஓர்சிலை ஸ்தாபித்து அதில், விஶ்வதலோஹிதாள் ஜனனமாகப் போகிறார்கள். அவர்கள் காலத்தில் துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனம் செய்யப் படுவதாகும், அவர்கள் பிறந்ததும் பூமியதிர்ச்சி ஏற்படும். ஜீவர்களே தர்மத்தைக் கைக்கொள்ளுங்கள்; என்று பதிந்து அத்துடன் ஓர் த்வஜஸ்தம்பம் நாட்டிவிட்டு தம் நகர்போய்ச் சேர்ந்தனர்.

பின் சிறிதுகாலத்தில் மன்வந்தர பூபதிக்கு புத்திரோற்பத்தியாகி ஜேத்திரன் என்று நாமம்பெற்று விளங்கிய ராஜகுமாரன் பல்லோர்களாலும் செந்தாமரைக்கண்ணனைப்போல் போற்றப்பட்டு, செல்வத்திரைகளோடும் வாழ்ந்துவருநாளில் யௌவனப்ராயத்தில் மணம்புரியப்பெற்று இராஜ்ய பாரத்தையும் வகிக்கலானார்.

இப்படி ராஜரீகத்தை வகிப்பதற்குமுன் பசுபதீஸ்வராலயத்தில் அறுபதுவருஷங்களுக்கோர்முறை மகோத்ஸவம் நடப்பதானதுகிட்டவும், அதற்கு பூமியின்நாலுபாகங்களினின்றும், அரசர்களும், முனிவர்களும், பக்தர்களும், பிரஜைகளும் வருதலாதலால், அவ்விதமே பல்லாயிரம்ஜனங்களும் வந்துகொண்டிருக்க ஜேத்திர மகாராஜனும்அம்மகோத்ஸவத்திற்குவந்திருக்க, கோலாகலமனோல்லாசவிமர்சையோடு தசதினஉற்சவம் நடந்துவரும்மத்தியில், அங்குசூழ்ந்துள்ள வனத்தில் மகாகொடூரப்பிரதாபியும் துஷ்டனுமான அருதீசன் என்போன் தன் வீரத்துணைவர்களோடு வந்துசேர, அதனால் கலகலவென்று சப்தங்களுண்டாய், ஜேத்திரர்பரிவாரங்கள் தவிர மற்றபேர் அடைக்கலம் புகவும், ஜேத்திர மன்னனுக்கும் அநாதீசனுக்கும் போர்மூண்டது. அவ்விதம் போர் பலத்திருக்க, ஜேத்திரர் விஶ்வதபிரானை மனதிலூன்றி சூலத்தினால் அவனைச் சங்கரித்தார்.

ஜேத்திரர்செய்த வெற்றியினால் ஜீவர்களுக்கு அதிசந்தோஷமேற்பட்டு உத்ஸவ வைபவத்தில் கோலாகலமாயிருக்க, அங்கு விஸ்வதலோஹிதாள் ஜனனமாகிறார்கள்; என்ற பேரொலிகளானவை முழங்க, பல்லாயிர ஜீவன்களும் ஈஸ்வரனைக்காணப்போகிறதுபோல் ஆனந்தபரவசத்தை அடைந்தும் மகோத்ஸவம்பூர்த்தியாகவும் அவரவர் நகர்போய்ச் சேர்ந்தார்கள். இம்மகோத்சவத்தின் மூலமாய் விஶ்வதலோஹிதாள் ஜனனமாகும் பிரதாபமானது பூமியில் நான்கு திக்குகளிலும் பரவினின்றது. நிற்க, ஜேத்திரர் பட்டம்வகித்து ராஜரீகம் நடத்திக்கொண்டு சிலகாலமாகவும், அவருடைய பத்தினியாகிய சாம்பவி தேவியின் கர்ப்பத்தில் விஶ்வதபிரான் ஆவிர்பவித்தார். (தொடரும்.)

சாலிவாடி புராதீனம்
தருமபதி.



### விஶ்வகர்ம குலோபகாரிப் பத்திராதிபர் நீடூழ் வாழ்க வென்ற
## நடுவெழுத்தலங்கார விடுகதை வினா.

தானதனத் தானதனத் தானதனத் தானதனத்
தானதனத் தானதனத்தான.

**கண்ணிகள்.**

(1) சேமமிகுவான்பெயரிலொன்றுசிலைபெயரொன்று
சென்றவருடங்கள்தனிலொன்று
மாமருவுதாமரைப்பேரொன்றுதிதிதனிலொன்று
மங்களஇலக்ஷ்மிபேரொன்று
தாமகடைச்சரக்கொன்றுமோக்கமதின்பெயரொன்று
சந்தமதுரகனியிலொன்று
பூமருவுதலமொன்றுகானகமிருகமொன்று
புண்யதேவதலப்பெயரொன்று (தானத)

(2) மங்களமதன்பெயரிலொன்றயன்மனைவியொன்று
வையகஞ்சொல்லாகமத்திலொன்று
துங்கசெல்வன்பெயரொன்றுமிருதுவின்பெயரொன்று
சுந்தரஞ்சேர்சிவன்பெயரொன்று
சங்கைதருமுடலின்பேரொன்றுபூர்வமன்னனென்று
சத்யவாகாயகங்கைபேரொன்று
பங்கயமாதிலகுமூரொன்றுமரந்தனிலொன்று
பாவலர்சொல்துதியின்பேரொன்று. (தானத)

(3) வாசமலைபல்லிகைப்பேரொன்றிவையெலாமுரைக்க
வன்னவைந்தக்ஷரப்பெயராகும்
சூசனையுடன்பொருள்தெரிந்துநடுவணையொளிர்
துய்யவக்ஷரங்களையெடுத்து
நேசமுறையோடெழுதிநோக்கிடவிதின்றலைப்பில்
நிகழ்த்தும்வாசமதைவிள்ளும்
தேசமெங்கும்புகழ்கவிராஜபண்டிதர்கள் விடை
செப்பவனுதினம்வேண்டினேனே. (தானத

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலப்

இந்த நடுவெழுத் தலங்கார விடுகதை வினாவிற்கு பதில் விடை அளிப்பவர்களுக்கு பஞ்முக விஶ்வேஶ்வரர்படம் ஒன்று இனாமளிக்கப்படும். விடையளிப்பவர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். கோ. க. ஆ.

## குல உபகாரமாவது யாது?

இப்பத்திரிகையின் பெயர் "விஶ்வகர்ம குலோபகாரி" அதாவது (விஶ்வ-கர்ம-குல-உபகாரி) உலகத்திலுண்டான சகல கர்மங்களுக்கும் அதிகார புருஷனை விஶ்வகர்மா என்பவருடைய சந்ததியிற் றோன்றியவர்களுக்கு உபகாரத்தைச் செய்பவன் என்றே அனேகர் பொருள் கொள்வார்கள் விஶ்வகர்ம வம்சத்தில் உற்பவித்து (எந்த குலத்திற்கும்) உபகாரம் செய்பவன் என்றும், இகத்தில் கர்மங்களாலான குலங்களுக்கு உபகாரம்செய்பவன் என்றும் பொருள்கொள்ளலாம்.

எவ்விதமாயினும் பிறருக்கு உபகாரம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் இப்பத்திரிகை ஏற்பட்டிருக்கிறது; ஆகையால் இந்தவிஶ்வகர்ம குலோபகாரியில் அடங்கிய ஒவ்வொருவிஷயமும் அதை ரக்ஷிக்கிற ஒவ்வோர் சந்தாதாரர்களும் குலத்திற்கு உபகாரஞ் செய்வார்களென்று முற்றும் நம்பவேண்டியிருக்கிறது.

முதன்மையாக உபகாரமாவது என்னவென்றுகவனிப்போம். பிறருடைய குறையை, அல்லது கஷ்டத்தை நிவர்த்திப்பதுதான் உபகாரமென்னப்படும். ஒருபொருள் தனக்கில்லையென்று அபேட்சிப்பதாலும், கிடைத்தபொருளைக்கொண்டு திருப்தியடையாமல் மேலு மேலும் பிரயாசைப்பட்டு கிடைக்காமலிருப்பதாலும், கிடைத்தபொருளுக்கே நஷ்டம் வந்தாலும் கஷ்டம் ஏற்படுகிறது. நஷ்டம் என்பதிலடங்கிய ஆபத்துசம்பவித்தபோதும், அதிலிருந்து விலக்குவதும் உபகாரமே.

(1) ஒவ்வொருவரும் பிறருக்கு அபகாரம் (தீங்கு) தேடாமலிருப்பதே பெரிய உபகாரமென்னலாம். (2) பிறர் உபகாரமென்று ஒருவருக்குச்செய்வதை நாம்தடுக்காமவிருப்பதும். (3) நாம்ஒவ்வொருவரும் நற்கர்மங்களைச் செய்ய சீர்திருத்திக்கொண்டு நல்ல குணத்தை யடைவதும் உபகாரமேதான், தத்தம் குணத்தை எவ்வளவுக்கவ்வளவு சீர்திருத்திக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு குலம் விருத்தியாகுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். ஆகையால், ஒவ்வொருவரும் தன்குணத்தையே சீர்திருத்திக்கொள்வதே குலத்திற்குச் செய்த ஓர் பேருதவியாகுமென்பதிற் சந்தேகமில்லை.

முற்சொல்லியபடி நம்மவர்களுக்கு என்னகுறை ஏற்பட்டிருக்கிறதென்று ஆலோசிக்குங்கால், கல்வியின்மையே பெருங்குறைபாக காணப்படுகிறதென்பதை யாவரும்ஒப்புக்கொள்வார்கள். இக்குறையைத் தீர்ப்பது குலோபகாரச்செய்கைகளில் பிரதானமானதென்னலாம். அதையார் எவ்விதத்தில் செய்யலாமென்றாலோ? நம்மில் ஒவ்வொருவரும் காலத்தை உத்தேசிக்காமலும், இடம் பொருள், ஏவலை உத்தேசிக்காமலும், செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உபகாரம்செய்வதிற் சிலர்டம்பத்தை உத்தேசித்தும், சிலர்கீர்த்தியைஉத்தேசித்தும், சிலர்பிரதிஉபகாரத்தை உத்தேசித்தும்செய்யலாம். இத்தகையஉபகாரமெல்லாம் உபகாரமென்னப்பட்டாலும் சிரத்தையுடன் செய்யாத பட்சத்தில் பயனற்றதாகும். உபகாரத்தை தேகத்தினாலாவது வாக்கினாலாவது, அல்லது, மனதினாலாவதுசெய்யலாம். இக்கல்விசம்பந்தமாகநம்மவருக்கு தேகத்தால் எவ்விதம் செய்வதென்றால், கொல்வேலை, மரவேலை செய்யும் நம்மவர்கள் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு வித்தியாசாலை கட்டடத்திற்கு வேண்டிய சாமான்களை அவரவர்கள்சக்திக்குத் தக்கவாறு குறைவானகூலிக்காவது அல்லது கூலியில்லாமலாவது செய்து உதவலாம். தொழில்செய்யமுடியாதவர்கள் வேறுவிதமாக தேகத்தால் கஷ்டப்பட்டு தேடியபொருளைக் கொடுக்கலாம்.

வாக்கினால் என்னசகாயம் செய்யலாமென்றுகேட்கப் புகின், நம்மவர்கள் பாடசாலையில் வாசிக்கும்மாணாக்கர்களுக்கு ஒழிந்தவேளையில்இனமாகபாடம்கற்பித்துக் கொடுக்கலாம்; அல்லது குறைவானசம்பளத்தில் அப்பாடசாலையில் உபாத்தியாயராகயிருக்கலாம்; அல்லது நற்போதனைக்கும் குல சீர்திருத்தத்திற்கும், வேண்டிய பிரசங்கங்களைச் செய்து உபதேசிக்கலாம்.

அதிலும் முடியாதவர்கள் "நமது குலம் இவ்வாறு மலினமாய்ப் போய்விட்டதேயென்றுவருந்தி, விஶ்வகர்மனை நோக்கி எங்கள் குலத்திற்கு கல்விவிருத்தியாகும்படி நாங்கள் சிரத்தையோடும் ஒற்றுமையோடும் உழைக்கும்படியான சித்தவிருத்தியை அனுக்கிரஹியுங்கள்" என்று பிரார்த்திக்க நமக்குக் குறைகள் நீங்குமென்பது பெரியோர் கொள்கை.

ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இவ்வித உபகாரத்தைச்செய்ய பிரதிதினமும் அனுபவத்திற் கொஞ்சம் கொஞ்சமாய் கொண்டுவர கடைசியில் ஏராளமான பலனைக் கொடுக்குமென்பது சர்வ நிச்சயம். ஒவ்வொருவரும் தாமேசீர்திருத்தி குலத்தைச் சீர்ப்படுத்தினால் நாம் உலகிலுள்ள அனந்தம் பேர்களுக்கும் உதவி புரிந்தமாதிரியாகும்.

நம்மவர்களிடத்தில் கல்வி, குறைவாயிருக்கிறதென்று முன்னமே சொல்லியிருக்கிறேன். கல்விதான் இகபரமிரண்டிற்கும் சாதனமாயிருக்கிறது.

"கல்விப்பொருளே கனபாக்கியம்
கசடற மொழிவதே யோக்கியம்
செல்வப்பொருளினி மிதுசிலாக்கியம்
ஜெகமதில் புகழ்தரும் வைபோக்கியம்."

ஆனதுபற்றியே, நாம் ஒவ்வொருவரும் நம்குலத்திற்குச் செய்யவேண்டியது கல்விக்கு அனுகுணமான உபகாரமே.

அதிலும் காலத்திற்குத்தகுந்த கல்வியேபெரும்பாலும் கற்கவேண்டும்; அதாவது, ராஜபாஷையாகிய ஆங்கிலமே! ஆங்கிலம் படிப்பதினால் ஜீவனத்திற்கு ஓர் உபாயமாவதுந் தவிரலோகஞானமும் விசேஷமாக விருத்தியாக இடமிருக்கிறது. நம்மவர் சிலர் சமஸ்கிருதத்தைப் படிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அது ஆங்கிலத்தோடு கலந்திருந்தால் மட்டும் நவரத்தினங்களைத்தங்கத்தினிடையில்வைத்திழைத்தாற்போலிருக்கும். தனி சமஸ்கிருதமட்டும் தற்காலத்திற்கு பயன்தரமாட்டாது. நாம்பழையகாலத்திலிருந்ததுபோல வேதாத்தியயனமே செய்துகொண்டிருக்கவேண்டுமென்றால் நாம் அக்காலத்து மனிதரைப்போல், குணங்களிலும், நடைகளிலும் இருக்கிறோமா. தேசநாகரீகமும் முன்போல்யிருக்கின்றனவா? நாளுக்குநாள் ஒவ்வொன்றும் மாரிக்கொண்டுவருகிறதென்பதை நாம் உணரவேண்டும். யுகதர்மம்மாரிக்கொண்டுதான் இருக்குமென்று

சாஸ்திரங்கள் கூறுகின்றன. மனுஸ்மிருதியில் சொல்லியிருக்கப்பட்ட ஒவ்வொன்றும் அப்படியே எல்லோராலும் அனுட்டிக்கப்பட்டு வருகின்றனவா? எவ்வளவோ வேறுபாடுகளும் சீர்திருத்தங்களும் உண்டாயிருக்கின்றன. இன்னமும் உண்டாகப்போகிறது.

மேலும் வேதமே யுகத்திற்குயுகம்ஜனங்களின் பரிபக்குவத்திற்குத்தக்கவாறு வியாஸபரம்பரையாரால் பிரிக்கப்பட்டு வருகிறதென்று கேள்விப்படுகிறோம். நாம்பிரத்யக்ஷ அனுபவத்தில் பார்க்கும் பினல்கோர்ட்சட்டங்களும், ஜனங்களும், அவர்கள் செய்யும் தப்பிதங்களும், வெவ்வேறு மாதிரியானசட்டங்களும் அதற்குத்தக்கவாறு புதிதாய் ஏற்படுத்தப்படுகின்றன.

ஆகையால் நாம்செய்யும் எந்தக்காரியமும் காலத்தை யனுசரித்தே செய்யவேண்டும். காலத்திற்குத்தகுந்தகோலம்தான் போடவேண்டும். நான் இவ்வாறு ஆங்கிலக்கல்வியை சிரேஷ்டமாக பேசுவதால் வேதாத்தியயனம் செய்ய வேண்டாமென்றும், நடையுடைகளை அடியோடேமாற்றிக் கொள்ளவேண்டுமென்றும், அனாசாரகிருத்தியங்களைச் செய்யலாமென்றும் நான்கூறச்சித்தமாயிருக்கவில்லை. தற்போது ஆங்கிலம்கற்கும் பாடசாலைகளிலும் சமஸ்கிருதபாஷையில் எவ்வளவோ கிரந்தங்களை கற்பித்து வருகிறார்கள். ஏன் நமது பிள்ளைகளை அவ்வாறுகற்கச்செய்யக்கூடாது? இரவில் அவ்விதம் வாசிக்கும்மாணாக்கர்களுக்கு வேதபாராயணம், அத்தியயனம் முதலியவை கற்பித்துவைக்க அது விருத்தியாகுமென்பது எனதுசித்தாந்தம். பெரியகலாசாலைகளிலும், உயர்தர வித்தியாசாலைகளிலும் பிள்ளைகளை உடனே அனுப்பிக்க வேண்டுவதில்லை. சிறுபிராயத்திலே அவர்களுக்கு இருவிதபாஷையிலும் பிரியம்ஏற்படச்செய்யவேண்டும்.

ஆகையால் குலம்விருத்தியடைய வேண்டுமானால் கல்வியை நம்மவர் மாணாக்கர்களுக்குப்போதிக்க ஒவ்வொருவரும்தங்களாலியன்ற உபகாரத்தை செய்வார்களாக.

(தொடரும்.)

தி. ப. வே. ஆச்சார்ய,

திருச்சி.

## விபூதிவிளக்கு முறைமை.

இது, கற்பம், அநுகற்பம்,உபகற்பம் என்று மூன்றுவகைப்படும். இந்தமூன்றுவகைத் திருநீறுகளுக்கும் உரியவைகளாய் மொழிந்த நல்லபசுக்கூட்டமானது எப்படியிருக்கவேண்டுமென்றால், கன்றுபோட்டு நாள்சமீபமானபசு, கன்றுஈனுதகன்னிப்பசு, நோய்பொருந்திய மலட்டுப்பசு,கிழப்பசு,காதுகொம்புகள் அறுந்திருக்கும் பசு, மலந்தின்னும்பசு,இவைகளை நீக்கி அங்கஉடலுக்கு யாதொரு மெலிவில்லாமல் அமைந்த பசுக்கள் நன்மையாகும்.

அஷ்டமி திதியிலாவது,சதுர்த்தசியிலாவது மேற்சொல்லப்பட்ட பசுவின்சாணத்தை பூமியில்விழாமுன் தாமரையிலையில் சத்தியோஜாத மந்திரஞ்சொல்லி ஏற்றுக்கொண்டு அதன்மேலிருக்கும் வழும்பினை நீக்கிக்கொணர்ந்து,வாமமந்திரஞ்சொல்லி, அதில் பஞ்சகவ்வியம் வார்த்து, அகோரமந்திரம்சொல்லிப் பிசைந்து, தற்புருடமந்திரஞ்சொல்லி கையாலுருட்டி அப்பொழுதே ஓமத்தீயில் சம்பாநெற்பதருடன் வைத்து நல்லபாகங்கண்டு ஈசானமந்திரஞ்சொல்லி எடுத்து கோடிவஸ்திரத்தில் வடிகட்டி ஒரு புதுப்பாண்டத்திலெடுத்து விபூதிகாயத்ரிமந்திரஞ்சொல்லி இதுவேகதியென்று பூமியில் வைத்து அந்தக்குடத்தின்வாயை வெள்ளைவஸ்திரத்தினால் கட்டவேண்டும். இதுகற்பவிதி.



அன்றெடுத்த சாணத்தை யன்றேயுருட்டிஅன்றே ஓமாக்கினியில் விளைவித்தாலும், எடுத்தசாணத்தைக் கொண்டுபோய் உலர்த்தி வேறே விளைவித்தாலும் மேற்சொல்லியபெயர் இதற்கும் சிறக்கும்.

சித்திரை மாதத்தில் வனத்திற்சென்று அங்கே யுலர்ந்திருக்கிற சாணத்தை யெடுத்துக்கொண்டுபோய், அதையிடித்து அதில்கோசலம்வார்த்து உருட்டி,உண்மையையுடையவர்கள் முன்சொல்லியபடி விளைவிப்பது அநுகற்பவிதி.

வனத்தில் தீயானது இயற்கையாகப் பற்றிக் கொள்ளுதலினாலுண்டாகிய பொடியைப் பஞ்சகவ்யம்வார்த்து முன்மந்திரஞ்சொல்லி ஓமாக்கினியில் ஆகமவிதிப்படியுருட்டிவைத்தெடுப்பது உபகற்பவிதி.

இவ்வண்ணம்விளைக்கும் திருநீறு, நீலநிறமானால் பிணியுண்டாகும். கருமைநிறமானால் புகழைநீக்கும். மஞ்சள்நிறமானால் தரித்திரமுண்டாகும். வெண்மை நிறமானால் அளவிலாத புண்ணியத்தைக்கொடுக்கும்.

மேற்சொல்லிய விபூதியை தங்கத்திற்செய்த பரணியிலும்,வெள்ளியினாற்செய்த பரணியிலும்,வைக்கலாகும். வில்வக்குடுக்கையிலும் வைக்கலாகும். பை தைத்துவைக்க வேண்டுமானால் பன்னிரண்டு அங்குலநீளமும், எட்டங்குல அகலமும் உள்ளதாகப் பட்டினாலாவது, பெண்மான்தோலினாலாவது பை தைத்து அமைக்கவேண்டும்.

நெற்றியிலும் மார்பிலும் புயத்திலும் நீறுதரிக்கவேண்டிய நீட்சியளவு ஆறங்குலப்பிரமாணமாகும். மற்றஉறுப்பில் ஒரு அங்குலப் பிரமாணமாகும்.

பிராமணர்முதலான மூன்றுவருணத்தாருக்கும் சிவாலயத்தின் யாகத்தீயில் விளைந்தநீறும், சூத்திருக்கு மடப்பள்ளியிலுண்டான நீறும், இந்த நான்குவருணத்தார்கள் நீங்கலாக மற்றை வருணத்தாருக்குக் காட்டுத்தீயில் உண்டானநீறும் உரியன என்று ஆகமங்கள் கூறுகின்றன.

விபூதியை சத்தியோஜாதாதிஐந்து மந்திரத்தினால் ஜெபித்தெடுத்து இடது கையில் வைத்துக்கொண்டு வலது கையினால் மூடி பன்னிரண்டு தடவை பிரணவத்தை ஜெபித்து ஜலத்தால்நனைத்து சிரம்,நெற்றி, மார்பு, தோள்முதலிய ஸ்தானங்களில் அணியவேண்டும். நெற்றியில் இரண்டுகண்களின்புருவத்தின் முனைவரையில் தரிப்பது தான் திரிபுண்டரமென்று சொல்லப்படும்.

இல்லறத்தார் முக்காலத்திலும் ஜலஞ்சேர்ந்த திருநீற்றாலும், ஸ்திரீகளும் சன்னியாசிகளும் ஜலம்சேராத திருநீற்றாலும் திரிபுண்டரந்தரிக்கவேண்டும்.

நடுவிரல், ஆள்காட்டிவிரல்இந்தஇரண்டு விரல்களால் இடதுகண் கடையிலிருந்து வலதுகண் கோடிவரையிலிட்டு பெருவிரலால் வலதுகண்கோடியிலிருந்து இடதுகண் கோடிவரையில் பிரதிதினமும் அணியவேண்டும்.

விபூதி எடுக்கும்போது எத்தனை அணுக்கள் பூமியில் விழுகிறதோ அத்தனை வருடம் ரௌரவமடைவார்கள் என்று வேதங்களில் விதித்திருக்கின்றமையால் கீழேசிந்தாமல் எடுத்திடவேண்டும்.

நெற்றியில் பொட்டாகவும் அழுக்காகவும் தளமாகவும் ஒருகீற்றுநடுவில் கொஞ்சம் படாமலும், ஒன்றுக்கொன்று பிரிந்ததாயும் தரிக்கிற் குற்றமாகும்.

சைவாநு கூலன்.

## கல்வியும் கைத்தொழிலும்.

கல்வி என்பதற்கு வித்தை, அல்லது அறிவு எனப் பொருள்படும். அதன்பெருமையைக் "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" என்றவாக்கியத்தால் மிகத்தெளிவுற ஆன்றோர் விளக்கினர். அக்கல்வியானது ஒருவற்கு அழிவில்லாச்செல்வமும், இம்மையில் கௌரவமான வாழ்க்கையையீவதும், மறுமையில் வீடடையவழிகாட்டியாயுமிருக்கிறது. இவ்வளவிடாச் சிறப்புவாய்ந்த 'கல்விபயிலச் சிறுபிராயமே தகுதியென 'இளமையிற்கல்' என்று ஔவையார் அறிவுறுத்தினர். அவ்விதம் குழந்தைகளைக்கற்கச் செய்ய வேண்டியது பிதாவின் கடனாகும். இதிற் றவறுவாரானால், பிள்ளைவயதானபிறகு தற்குறியாளாய் வாழுங்காலத்து மற்றொருவன் இம்மனிதனைப்பார்த்து, ஒருகையெழுத்துப்போடு என்றால், ஒன்றுஞ் சொல்லத் தெரியாது வெட்கத்துடன் தலைகுனிந்து நிற்பன். எழுதத்தெரியாதா? என்றுகேட்டால், தன் தந்தை படிக்கச் செய்யவில்லையென்று சொல்லுவன். இவ்வவதூறை நிவர்த்தித்துகொள்ளும் வண்ணம், தந்தை, கற்றோராயினும், மற்றோராயினும், சிறுவர்படிப்பிற்குச்சகாயம்ஏற்பட்டுள்ள இக்காலத்துத் தகுந்தவயதில் பள்ளிக்கனுப்பி, அவர்களுக்குக் கல்வியில் அக்கரை ஏற்படும்வரை கவனித்து வந்து தேர்ச்சிபெறச்செய்தல் முக்கியக் கடமையாகும். இதுபற்றியன்றோ? திருவள்ளுவரும் "தந்தைமகற்காற்று நன்றியவையத்து, முந்தியிருப்பச்செயல்" என்று கூறினர்.

படிப்பிலும் "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று கூறியபடி இலக்கணநூலும்; கணிதநூலும் அவசியம் கற்கவேண்டியவையாம். அவைகளை நிரம்பப் படித்து வித்துவான்களாகாவிடினும், உலகவிவகாரத்திற்கு வேண்டிய அளவாவது தெரிந்து கொள்ளவேண்டும். அஃதாவது கடிதம் முதலியவைகளைச் சுருக்கமாயும் அழகாயும் எழுதவும், கணக்கு முதலானவைகளைச் சரியாய் வைத்துக்கொள்ளவும் கற்கலாம். இவ்விரண்டுங் கல்லாதவரை முகத்திரண்டு புண்ணுடையவரென்றும், விலங்காவரென்றும், நன்மரமென்றும், நமக்கு வெட்கம்வரப் பெரியோர் கூறியுள்ளார். இப்பெயர்களை நேரிற்படிக்காதவர்களிடத்திற் சொன்னால் கேட்க விரும்புவரோ? ஆகையால், இவர்களிற் றாமும் ஒருவராய் இராமல் இனியாவது தகுந்த வழி தேடுவார்களாக.

இப்படிப்பில் என்ன வரப்போகிறது. தொழிலில் பையனை விட்டு விட்டால் சீக்ரம் சம்பாதிப்பன்; நமக்கும் குடும்ப பாரங்குறையுமென்று சிறுவயதிலேயே நிரக்ஷரகுக்ஷியாகத்தொழில்பயில பலர்ஏற்பாடுசெய்து விடுகிறார்கள். அப்படிச் செய்வதில் சிலர் நுட்பபுத்தியுடையோராய்த்தொழில் செய்துகொண்டிருந்தாலும், அவர்கள் திறமை கல்வியொன்றில்லாக்குறையால் பிரக்யாதி பெறாது.

அல்லது படிப்பையே விருத்திசெய்துகொண்டு பரீக்ஷைகளிற்றேறி உயர்ந்த உத்தியோகங்களிலமரலாமென்றால், அப்படிச்செய்தலும் நம்குலத்திற்கு நன்மையே.



நம் பிள்ளைகளோ நம்மனோரிற்படித்தோர் பலரின்மையால் சிறிதுவாசித்தவுடன் மேதாவிகளெனக் கர்வங்கொள்வதாலும்அறிவுமழுங்கிப்போவதாலும், சிலர் பொருளுதவியில்லாமையாலும் அரை குறைப்படிப்புடன் நின்றுவிடுமாறு நேர்கின்றது. அப்போது குலத்தொழில் பயிலச்சொன்னால் இழிவாக நினைத்து வெறுத்துப்பேசுகிறார்கள். பிறகு தம்படிப்புடன் சொற்பஊதியம் வரக்கூடிய உத்தியோகங்களிலமர்ந்து தம் வாணாளை வீணாளாக்கிக் கஷ்டப்படுங் காலத்து புத்திவருகிறது. தொழில் கற்காமற்போனோமேயென்று விசனிக்கிறார்கள். இதுஎதினாலென்றால் "உத்தமம் குலவித்யாயா, அதமம் சேவகாவிர்த்தி" என்று நீதிசாஸ்திரத்தில் சொல்லியிருப்பதை அறியாமையே. இதுவரை மேற்கூறியவாறு கஷ்டப்படுகிறவர்கள் தமது சிறுவர்கட்கு ஒழுங்காகக் கல்விகற்பித்துத் தொழிலில் பிரவர்த்திக்கச் செய்வது நலம்.

தமிழும் ஆங்கிலமும் படித்தவர்கள்குலத்தொழிலிலும் பயின்றுவந்தால் அதிற்றேர்ந்தவர்களாகி இவர்வேலையும்யோக்கியதையும் பிறரால் மதிக்கப்பட்டு உத்தியோகத்திலிருந்து சம்பாதிப்பதைவிட மிக்கதிரவிய சம்பன்னராக வாழ்வார்கள். இது யாவருக்கும் தெரிந்தவிஷயமாயினும் எல்லோரும் இரண்டு பாஷையும் படித்துத் தொழில் கற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், நம்தாய்ப்பாஷையாகியதமிழையோ, தெலுங்கையோ நன்றாய் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டு பிறகு தொழிலில் புகுவது நலம்.

எம் முன்னோர்கள் சிற்பசாஸ்திர பண்டிதராயிருந்தோர் எத்தனையோ விசித்திர வேலைகள் செய்துள்ளார். அது இன்றுங் கண்டு யாரும்மெச்சத்தக்கதாயிருக்கிறது. யாம்அவர்கள் சந்ததியன்றோ? என்று தமக்கு ஒரு அக்ஷரங்கூடத் தெரியாவிட்டாலும், தம்வம்சத்தைப்புகழ்ந்து சொல்லிக்கொள்ளுகிறார்கள் பலர். அதனால் யாது பயனுண்டோ? அவர்களைப்போல் தாமுமிருந்து அப்பெயர் குடும்பபாரம்பர்யமாய் நிலைநிற்கச்செய்யவேண்டுமெனஎண்ணினாலல்லவோ ஆண்மையெனச் சொல்லலாம்.

போனது போக இனிச்செய்வதொன்றுளது. அஃதாவது: நமது குலாபிமானிகளிற் கல்லாமல் தொழில்புரியும் ஒவ்வொருவரும் இரவில் பள்ளிக்கூடங்கள் வைத்து எழுதப் படிக்கத்தெரிந்து கொள்வது தத்தம் கடமையாகும்.

தொழில் பயிலச்செய்துவரும் சிறுவர்களை இராக்காலங்களில் சிறிது படிப்பு சொல்லிக்கொடுத்து நன்றாய் வாசிக்கத் தெரிந்தபின் நீதிநூற்களை வாசிக்கச்செய்து அதிற் கூறியபடி அவர்கள் நடந்து வருகிறார்களாவென்று கவனித்து வரவேண்டும்.

நம் குழந்தைகளை 5-வயதானவுடன் பள்ளிக்கனுப்பி அவர்கள் சரியாய்ப்படித்து வருகிறார்களா வென்பதையும் தினங் கவனித்துவரவேண்டும்; இவ்விதம் செய்துவருவதால் நமது குடும்பங்கள் க்ஷேமமடைவதுடன் குலத்திற்கும், தேசத்திற்கும் க்ஷேமமுண்டாகும்.

குலாபிமானி.

## கல்வியிலும் சிறுவர்களுக்கு:—

அருமை சகோதரர்களே! கவனியுங்கள்.

ஒரு மாணாக்கன் பள்ளியில் வாசித்துக்கொண்டுவருங் காலத்தில், வெகுஜாக்கிரதையுடன் சிலமுக்கியவிஷயங்களை கவனித்து இடைவிடாமல் முயற்சிசெய்து வரவேண்டும். "விளையும்பயிர் முளையில்தெரியும்" என்னும் பழமொழிக்கிணங்க வயது காலத்தில் ஒருவன்நல்ல நிலைமையில் வரவேண்டுமானால், அதற்காக பால்யத்தில் செய்யும் நன்முயற்சிகளே காரணமாகும். பால்யத்தில் எந்தவிஷயங்களில் ஒருவன் மனதைச்செலுத்துகிறானோ அதேவிஷயத்தில் மனமானது முதிர்ந்தவயதில் அழுத்தமாய்ப் பற்றும். ஆகையால், நல்ல விஷயங்களிலேயே பிரவர்த்திகளைச் செய்துவரவேண்டும். பால்யத்தில் சரியான நெறி தவறி நடக்கும் ஒருவன், பின்பு அதினின்றும் மாறுவது, வளைந்திருக்கும்படியான ஒரு முதிர்ந்த மூங்கில் வளைவு நிமிர்த்தி ஒழுங்காக்க முயல்வதுபோல் அசாத்தியமாகும்.

ஆகையால் ஒவ்வொருமாணாக்கனும் பள்ளியில் வித்தை பயின்றுவருங் காலத்தில் எவ்விதம் தான் செய்யவேண்டுமென்பதையும், எவ்விதம் அனுஷ்டித்தால் சிலாக்கியமென்பதையும், அவைகளின் அவசியத்தையும், பிரதிதினம் காலையில் விழித்துக்கொண்டவுடன் கவலையாக விசாரித்து பரியாலோசனை செய்து அன்றைய வேலையை, அதாவது, படிப்பைஆரம்பிக்கவேண்டும். அப்படிச்செய்யும் மாணாக்கன் முக்கிய நோக்கங்கள் நான்காகச் சொல்லலாம். அவைகள் யாதெனில், (1) சரீரசௌக்கியம் (2) குணசம்பத்து (3)புத்திசம்பத்து (4) ஞானம், பக்தி இவைகளை அடைதல்.

இதில் முதலாவது:—சரீரசௌக்கியம். பிரதிதினமும் அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுந்து தினக்கடன்களை முடித்துக்கொண்டு மற்றவேலையை ஆரம்பிக்கவேண்டும். ஆகாரம், நித்திரை, ஸ்நானபானம் முதலியதேக சம்ரக்ஷணைகளில்மிகக்கவனமாகவும், அளவாகவும், மிதமாகவுமிருக்கவேண்டும். குறிப்பிட்ட காலத்தில் தேகத்தைப்பலப்படுத்தத்தக்க உலாத்துதல் முதலிய சாதாரண சிலஅப்பியாசங்களைத் தவறின்றி செய்யவேண்டும். சரீரம் திடமாக இராவிடின், இவ்வுலகில் இப்பவும்பிறகும் எவ்விதவேலையும்செய்யச்சாத்தியமாக மாட்டாது. இகபரங்களுக்கான எக்காரியங்களுக்கும் இதுவே முதற்கருவியாகும்.

இரண்டாவது:—குணசம்பத்து. ஒவ்வொருவருக்கும், இயற்கைகுணம் செயற்கைகுணமென இரண்டாகச் சொல்லலாம். இயற்கைகுணம் செயற்கைகுணத்தாலும் செயற்கைகுணம் இயற்கைகுணத்தாலும் விசேஷப்படுவதும் கெடுவதுமுண்டு. இதற்குப்புருஷப்பிரயத்தனத்துடன்புண்ணியமும் வேண்டும். ஒருவன் குணத்தை அவன் சிநேகர்களைக் கொண்டு ஒருவாறு சொல்லி விடலாம். ஆகவே, தன்னுடன் வாசிக்கும்படியான மாணாக்கர்கள், சிநேகர்கள், பந்துக்கள் முதலிய எல்லாருடனும் தான் கூடியிருக்கும்படியாக ஏற்பட்டாலும், தனக்கு மேலான குணங்கள் பொருந்தியவர்களிடத்தில்மாத்திரம் நெருங்கிப்பழகவேண்டும். தவிர மேற்சொன்னவர்களிடமும் பள்ளிக்கூடம் வீடுமுதலிய எவ்விடங்களிலும் பகை பாராட்டாமலும், கோபத்தையடையாமலும், பிறர் மனதை நோகச்செய்யாமலும், எல்லாரிடத்திலும், பிரியம், அன்பு, கருணை, இன்பமானபேச்சு, பிறர் குற்றங்களை மன்னித்தல், புறங்கூறாமை முதலிய சன்மார்க்கவிதியில் சொல்லியவைகளையும் தவறாமல் அனுஷ்டித்தும் வரவேண்டும். சத்தியம் பேசுவதை கனவிலும் மறக்கலாகாது. இவைகளில் விடாமுயற்சியிருந்தால் குணசம்பத்தை தாராளமாக அடையலாம்.

மூன்றாவது:—புத்திரம்பத்து. ஒவ்வொரு மாணாக்கனும் தனது பாடங்களை நன்றாய்த் தெரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அவைகளின் பாவம் என்னவென்று நன்றாய் ஊகித்து முன்பின் சம்பந்தங்களை ஆலோசிக்கவேண்டும். அநேக புத்தகங்களை அதி சீக்கிரத்தில் முடித்துவிடவேண்டுமென்று மெய்யாக ஆவல் ஏற்படவேண்டும். பொருள்தெரியாமல் மனனம் செய்யலாகாது. பிறர் தூண்டுதலுக்காகப் படிப்பது கூடாது. இப்படிசெய்வதால் கல்வியில் இயற்கையாகப் பிரியமுண்டாகிகல்வி விர்த்தியாகி புத்திசம்பத்துதானாக உண்டாகும்.

நான்காவது:—ஞானம் பக்தி அவரவர்களுக்குப் பிரியமுள்ள தெய்வத்தை மனதில் இடைவிடாது சிந்தித்து பிரதிதினமும் ஐந்து நிமிஷமாகிலும் கடவுளை பூஜித்து அவருக்கு திருப்தியை உண்டுபண்ணக்கூடிய நல்ல விஷயங்களையே செய்ய முயற்சிக்க வேண்டும். அவரிடத்திலுள்ள அன்பை சிறுகச் சிறுக விர்த்திசெய்து வரவேண்டும். அவரை ஸ்தோத்திரஞ் செய்வதில் மெய்யாக விசேஷசந்தோஷமிருக்கவேண்டும். பல நாமங்களால் அழைக்கப்படுகிற கடவுளானபடியால் எவ்விதம் ஆராதித்தாலும் அந்த ஒரேதெய்வமாகிய லோகநாதனை துதித்ததாகும்.

தவிர பெற்றோர் குருமுதலிய எல்லாரிடமும் அன்பையும் வணக்கத்தையும்காட்டுவதால், அவர்கள் ஆசிர்வாதம் பெறுவதோடு ஈசன் கருணை கிடைப்பதற்கு காரணமான ஞானம், பக்தியும் சம்பிராப்தியாகும்.

அன்பர்களே!

இதிற் கண்ட விஷயங்களை மனதில்கொண்டு, இயன்றவரையில் துர்வாசனைகளுக்கும் சோம்பலுக்கும் இடங்கொடாமல் ஒழுகிவந்தால், இகத்தில் புகழையும் புண்ணியத்தையும் பெறுவார்களெனவும் அகத்தில் வீடடைவதற்கு ஏதுவாகிய நன்முயற்சிகளுமுண்டாகி சுகமடைவார்களெனவும் படைத்தளித்தழிக்கவல்லஒரு தனிமுதலாகிய இறைவனைப் பிரார்த்திக்கின்றனன். சுபம். வித்தியாவிர்த்தி சித்திரஸ்து.

P. சொக்கலிங்காச்சாரி.

## அதிக ஆசை அதிக நஷ்டம்.

ஓரறிவுமுதல் ஆறறிவு ஈறாகவுள்ள பிராணிகளுள் ஒவ்வொன்றும் ஆசையின் வசப்பட்டிருக்கின்றதென்பது யூகித்துப்பார்ப்பார்க்கு நன்குவிளங்கும்.

ஓரறிவுள்ள பிராணிகள் மரம் கொடி முதலியனவாம்; அவற்றிற்கு ஓரறிவாவது தம்மெய்யாற்பரிசித்துப் பரிசத்தையறிவதாம்.

மரமுதலியவற்றிற்கு மெய்யாற் பரிசித்து பரிசத்தையறியுந்தன்மை யுண்டென்பது தொட்டாற் சிணுங்கி முதலியவை யிங்கு உதாரணமாம்.

எங்குஅறிவுண்டோ, அங்கு இது வேண்டுமென்னும் ஆசை அத்தியாவசியகமாக இருந்தல் வேண்டுமென்பதற்கு நாமே உதாரணமாக விருக்கின்றோம்.

இப்பி,சங்குமுதலியவற்றிற்கு அவ்வறிவோடு நாவாலிரசத்தையறியும் அறிவும், சுறையான், எறும்பு முதலியவற்றிற்கு அவ்விரண்டறிவோடு மூக்காற்கந்தத்தையறியும் அறிவும், தும்பி, வண்டுமுதலியவற்றிற்கு அம்மூன்றறிவோடு கண்ணால் உருவத்தையறியும் அறிவும், மிருகம், பறவை முதலியவற்றிற்கு அந்நான்கறிவோடு கண்ணால் உருவத்தையறியும் அறிவும் இருக்கின்றன. இவையாவும் ஆசையுடையனவேயாம்.

மக்களோ, இவ்வைந்தறிவோடும், மனவுணர்வும் உடையவரா யிருக்கின்றனர்.

மனவுணர்வாவது இது தக்கது, இது தகாதது என்று அறிவதாம். அஃதாவது; இகலோக சாதனமாய கிருஷி, வாணிபம் முதலியவற்றைச் செய்வதற்கும் பரலோகசாதனமாய ஈசுரபூஜை, தியான முதலியவற்றைச் செய்வதற்குமேற்ற அறிவாம்.

இவ்வறி வுடைமைப்பற்றியே மக்களுடம்பே மோக்ஷமடைவதற்குச் சாதனமாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறுகவுள்ள பிராணிகளோ ஆசையுடையனவாயிருந்தாலும் பேராசையுடையனவா யிருப்பதில்லை; பேராசையுடைத்தா யிருப்பதாற்றான் மக்கள்,விலங்குமுதலிய மேற்கூறிய பிராணிகளினுந் தாழ்ந்தவராய்த் துக்கமுறுகின்றனர்.

ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறுயுள்ள பிராணிகள் ஒவ்வொருவகையால் துன்பமுறுவனவே யாயினும் மக்களைப்போல அவை பலவகையால் துன்பமுறுவதில்லை. பசு, பக்ஷிமுதலியன நாளைக்குவேண்டுமென்று ஒன்றையும் விரும்பாமையால் அவை ஒருவகையால் மக்களினும் மேம்பாடுடையனவா யிருக்கின்றன.

மக்களோ நாளைக்குவேண்டும், நாளைக்கு வேண்டுமென்று எதையோ விரும்பிக் கலங்குகின்றனர். மக்களுக்கு ஒன்றினும் திருப்தியுண்டாவதில்லை. பகுத்தறிவினைப் பயன்படுத்தி யொழுகுபவர் மிகச் சிலரேயாதலின், அவர் “போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து” என்னும் பழமொழிக் கிலக்கியமாய் நின்று கிடைத்ததுகொண்டு மகிழ்ந்திருக்கின்றனர். முயல்வது மனிதனதுகடமை, முடிப்பது கடவுளதுகடமை, என்று கருதி, தான்செய்யுந் தொழிலைச் செவ்வையாகச் செய்து பயனை எதிர்பாராது கடவுளைநோக்கி இருப்பவர்தாம் பேராசையை வென்று சுகமாய்வாழ்வர்.

பேராசையாவது, தனது உயிர் வாழ்க்கைக்குஉண்டி, உடை, உறையுள்முதலியன எவ்வளவுவேண்டுமோ, அவ்வளவோடமையாது அவற்றை மேலுமேலும் வேண்டுமென்று விரும்புவதாம். இவ்விருப்பமே இராகமென்று சொல்லப்படுகின்றது.

இவ்விராக முண்டாயபோது செய்வன, தவிர்வனவறியாது தமக்குவேண்டியவற்றை யடையவேண்டுமென்னும் முயற்சியுண்டாகிறது.



அம்முயற்சியால் பிறன்பொருளைவௌவல்,பிறன்மனையைவிரும்பல், இல்லாதடம்பத்தைக்காட்டல், அசத்தியம்பேசல், தக்காரினத்தால் இகழப்படுதல், தெய்வத்திற்கஞ்சாமை, சாஸ்திரங்களை நம்பாமை முதலியன சம்பவிக்கின்றன. இவற்றால் கெட்டோர்பலர், கெடுகின்றாரும் பலர், இனிக் கெடுவாரும் பலரிருப்பர்.

பேராசையுள்ளவன் ஒருவகையாலும் நடுவு நிலைமையாயிருந்து வாழ்வதுகூடாது; மானத்தோடிருப்பது வாயாது, தண்டனையடைவது தப்பாது, தெய்வச்செயலைநோக்கியிருப்பது முடியாது.

திரியோதனன் தர்மன் முதலியோர்க்குத் தாயபாகத்தைக் கொடாமைக்கு எது யாது! பேராசையேயல்லவா? அதன்பயனால் அவனடைந்தது என்ன? புத்திரர் மித்திரர் முதலாயினவரோடு மாண்டமையேயன்றோ? சூரபத்மன்தொலைந்தது எதனால், பேராசையாலன்றோ? இவ்வாறுகெட்டவர் எண்ணிறந்தவரன்றோ? இவர்களைப்பற்றி யடிக்கடியோசித்துப் பார்த்தால், பேராசையினா லுண்டாகும்பயன் துன்பமென்பதன்றியின்பமென்பது எள்ளளவேனும் எந்நாளும் இல்லையென்பது இனிது விளங்குமன்றே? கூடுமானவளவும் பேராசையின் வசப்படாதொழுகினாற்றான், கடவுளருளுக்குப் பாத்திரமாதல்கூடும்.

பேராசையானது மைதுனஇச்சை, தன் பயனைவிசாரியாமலே பிறன்விரும்பியதைத்தடுக்கவிரும்புதல், என்னுடையது ஒருநாளும் கெடலாகாது என்னும் விருப்பம், தர்மவிரோதமாகப் பிறர்பொருளை விரும்புதல்,பிறனைவஞ்சிக்க விரும்புதல், அகத்தே தர்மமுடைமை யில்லாதிருந்தும் புறத்தே யஃதுடையதாகத் தனது மேன்மையறிவிக்க விரும்புதல் எனப் பலதிறத்ததாம். இப்பலதிறப்பட்ட ஆசைகளாலுண்டாகும் அநர்த்தங்களை நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, வருவது வரும், போவது போம் என்று துணிந்து, செய்வனவற்றைத் திருந்தச்செய்து நடவாதவர் மக்களாய்ப் பிறந்ததன் பயனைப்பெறுவது ஒருவாற்றானுமின்றாம்.

பெற்றதைச் சிறிதாகவும் பெறுதலைப் பெரிதாகவும் எண்ணி வருந்துவது பேராசையின்பயனுமென்று எண்ணிக்கூடுமானவரையில் பேராசையையொழிக்க முயல்பவரே பெரியோராவர். இவர்போல் வாழ நாம் பெரிது முயல்வோமாக.

கீழ்வரும் திருச்செய்யுள் இதைவாசிப்பவர் ஒவ்வொருவரும் அத்தியாவசியகமாகக் கவனித்தற்குரியதாம்.

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
 யாளினுங் கடன்மீதிலே
யாணைசெல வேநினைவ ரளகேச னிகராக
 வம்பொன்மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
 நெடுநா ளிருந்தபேரு
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
 நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
 முறங்குவது மாகமுடியு
முள்ளதே போதுநா னெனக் குளறியே
 யொன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
 பரிசுத்த நிலையையருள்வாய் [ன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைவி
 பரிபூர ணானந்தமே.

கோ. வடிவேலு செட்டியார்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை,

## விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலையைப்பற்றிய விக்ஞாபனம்.

சென்னைச்சமஸ்தானப் பிரதேசங்களில் வசித்துக்கொண்டிருக்கின்ற விஸ்வப்ராம்ஹணச் சகோதரர்களே! இதனடியிற்கண்ட விஷயங்களில் எவ்வித வழுக்களிருப்பினும், அவைகளைப்பாராட்டாது ரசத்தை மட்டும் கிரகித்து வேண்டிய சீர்திருத்தஞ் செய்து, இகபரபுருடார்த்த சித்திகளுடன் நெடுங்காலம்வரை பெரும் புகழைப் பெற்றுய்வீர்களென்கிற மனமகிழ்ச்சியுடன் இந்த வியாசம் எழுதத் துணியலாகினேம்.

யஜுர்வேதம் 26-வது அத்தியாயம்
இரண்டாவது மந்திரம்.

யதேமாம் வாசம் கல்யாணி
மாவதானி ஜநேப்ய:
ப்ரம்ஹ ராஜந்யாப்யாகும்
ஸூத்ராய சார்யாய சஸ்வாய
ப்ரியோதேவாணும் தக்ஷிணையை
தாதுரிகா பூயாஸமயம்
மேகாமஹ: ஸமிருத்யதா
முபமாதோ நமது.

பிராம்ஹணர், க்ஷத்திரியர், வைசியராகிய சிரேஷ்டர்கள், சூத்திரர், மேலுமிவர்களுடைய மனைவியர், வேலாளர் முதலானவர்கள் நன்னிலை விரும்பும் தாழ்ந்தவர்கள். இன்னும் மற்றவர்களுக்கும் ஆகவே இந்த சம்ஸாரத்தில், சுகத்தைக் கொடுக்கக்கூடியதாக வெளிப்படுத்தப்பட்டிருப்பவைகளாகிய, நான்கு, அல்லது விஸ்வப்ரம்ஹவம்சவத்தர்கள் சொல்லுகிறபடி ஐந்துவேதரூபமான இம்மொழிகளைஉபதேசிக்கின்றேன். நான் எப்படிப்போதிக்கின்றேனோ அப்படிக்குள்ள இந்தக்கொடையே, வித்வஜனங்களுக்கு தக்ஷிணை. வேண்டும் மகிழ்ச்சி ஆகட்டும். என்னுடைய இந்த அபேக்ஷை நன்றாய்ப் பெருகட்டும். இவ் வண்ணமே என்னுடைய பரகதியை அடையுங்கள் அடைவியுங்கள்.

அதர்வவேதஸம்ஹிதை 11-வது காண்டம்
4-வது பிரபாடம் 3-வது அநுவாகம்
18-வது மந்திரம்.

பிரம்ஹ சர்யேண கன்யாகும்
யுவாணும் விந்ததேபதிம்

அதாவது எந்த விதமாகப்பாலர்கள் சம்பூர்ண ப்ரம்ஹ சரியத்திலிருந்து, பூரண வேதவித்தையைக்கற்றும், நல்ல சிக்ஷையடைந்தும் பூரண யௌவனஸ்தனாய், தனக்கு அநுகூலமாயுள்ள பிரியத்திற்கிசைந்த ஸ்திரீயை விவாஹஞ் செய்கின்றனரோ அவ்விதமே கன்னிகையானவள், அகண்டிதப்ரம்ஹசாரியத்திலிருந்து வேதாதிசாஸ்திரங்களைக்கற்று, சம்பூர்ண வித்தையையும், உத்தம சிக்ஷையையும் அடைந்து யுவதியாய் சம்பூர்ண யௌவனத்தில், தனக்கு சமத்துவமானவித்துவானாகிய பூர்ணயுவாவஸ்தையோடு இராநின்ற, நாயகனை அடையட்டும், என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சுருதி.

ஸ்மிருதிஸ்ருதி மமைவாக்ஞா
யஸ்தாமுல்லங்ய வர்த்ததே
ஆக்ஞாச்சேதி மமத்வேஷ்ய
மேவத்யச்ச ஜாயதே.

அதாவது சுருதியும், ஸ்மிருதியும், எனது கட்டளை. எவன் ஒருவன் அதை மீறுகிறானோ அப்படிப்பட்டவன் எனக்குச்சத்



துரு, யான் அவனைக்கொல்லுவேனென்று சொல்லியிருப்பதனால், மேற்கண்ட சுருதிகளின் கட்டளைகளை மீறிநடப்பவர்கள் ஈசனது தண்டனைக்குள்ளாவார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

சுருதி.

ஹரி: ஓம் அத்ப்ய: ஸ்ஸம்பூத ப்ருதிவ்யைரஸா விஸ்வகர்மணஸ் ஸமவர்த்ததாதி. [யஸ்ச

பாஷ்யம்.

ப்ரதிவ்யாபஸ்தேஜோ வாயுராகா சாதி சதுர்விம்சதிதத்வாதிதஸ்ச, மரீச்யாதி நவ ப்ரம்ஹருஷிர் தேவதா ஜநககாரணரூபஸ்ச மஹேந்ர வைஸ்வாநரபுண்ய தேவதாத்யஷ்டதிக்பாலகஸ்ச, யுகவருஷ அயந ருது மாஸபக்ஷதிதிவார நக்ஷத்ரயோக கரணதிகிலவேதவேதாந்த சாஸ்த்ரபுராணேதி ஹாஸஸ்வரூபஸ்ச, போதக்ருத்வப்ரேரேபகவஸ்துத்ரய ஹேதுஸ்ச, ஸ்தாபர ஜங்கமாத்மக ப்ரபஞ்ச சஞ்சிதஸ்ச, ஸத்வரஜஸ் தமஸ்வரூபஸ்ச, பராத்பர சிதாநந்த ப்ரம்ஹாக்ய விஸ்வகர்ம ஜகத்கர்து: [ஓம்பரமேஸ்வராட்டு.]

மேற்கண்ட சுருதியினுடையவும், வித்யாரண்யபாஷ்யத்தினுடையவும், தாத்பர்யப்படி ஆதியில் அண்டபுவன சராசரங்களனைத்தையும் படைத்த சுயம்பு விராட் விஸ்வப்ரம்ஹத்தின் பாஞ்சாநனேத்பவ யஜந,யாஜந, அத்யயன, அத்யாபகா,தான ப்ரதிக்ரஹ ஷட்கர்ம நிரத, சானகாதி பஞ்சப்ரம்ஹரிஷி கோத்ர, மநுவாதி பஞ்சப்ரம்ஹ ஸூத்ர ருக்காதி பஞ்சவேத பாராயண ஸத்யோ ஜாதாதி பஞ்சார்ஷேயப்ரவராந்வித, ப்ரம்ஹாதி பஞ்சகர்த்தவ்யசிருஷ்யாதி பஞ்சக்ருத்ய, பஞ்சசக்தி, பஞ்சபீட, பஞ்சகுண்ட, பஞ்சயக்ஞ, பஞ்சதண்ட, பஞ்சபூத, பஞ்சாங்க, பஞ்சாசத்கோடி பிரபஞ்ச நிர்மித, ஷண்மத ஸ்தாபனாச்சார்ய, விஸ்வசமயாசார பரிபாலக, தேவப்ராம்ஹண பௌருஷேயஸ்தர்களாக விளங்கும், பஞ்சப்ரம்ஹ சந்ததிகளாகிய நமது முன்னோர்கள் பரகதியடைவதற் கேதுவான வேதங்களை ஓதி உணர்ந்து சதாசார முடையவர்களா யிருந்ததனாலன்றோ? விஸ்வகர்மகுலத்திலவதரித்த பார்வதியைப் பரமசிவனாகிய ருத்திரபகவானுக்கும், காயத்ரீ சாவித்ரி சரஸ்வதியைப் பிரம்மதேவனுக்கும், சசியை இந்திரனுக்கும், சமிக்ஞை சாயாதேவியைச் சூரியபகவானுக்கும், பதுமகோவலையைச் சூரபத்மாவுக்கும், சித்திரரேகையை குபேரனுக்கும், வண்டோதரியை இராவணேஸ்வரனுக்கும், மணம்புரிவித்துக் கொடுத்துமிருப்பதாகப் பூர்வீக சரித்திரங்கள் முறையிடுகின்றன.

இதுவுமல்லாமல் விநாயகன், வீரபத்திரன், சுப்ரமண்யன் முதலியவர்களையும், சுவாயம்பு மநுவையும், அருச்சுனனையும், இமகர்மன் வைவஸ்வதமநு சாவர்ணிமநு தேவேந்திரன் சனீஸ்வரன் நாசத்தியன் தசிரன் என்னும் அஸ்விநி தேவர்களையும், பானுகோபன் முதலியவர்களையும், நளகூபரனையும், இந்திரஜித்தன் முதலியவர்களையும், தௌஹித்திரர்களாவும், தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் உசத்தியரை நல்லப்மானாகவும், கஜன் பாத்துவாசன் காசிபன் விச்சிரவன் முதலியவைகளை மைத்துனர்களாகவும், துவஷ்டாவென்கிற துவஷ்டப்பிரம்ஹா அஜைகபாத் அகிர்புத்தியன் ருத்திரன் முதலியவர்களைச் சகோதரர்களாகவும், சாக்ஷுஷமநு, தேவகுருவாகவிருந்த விஸ்வரூபன் என்கின்ற விஸ்வரூபாச்சாரியார் விருத்தராசூரன் ஏத

தசருத்திரர்முதலியவர்களைப்புத்திரர்களாகவும் வகிக்கப்பெற்றும், அஹிஹரப்ரம்மேந்திராதி தேவர்களுக்கும் உபகரணங்களாக வேண்டிய அஸ்திர ஆயுதங்களைச் சிருஷ்டித்துக்கொடுத் தாசீர்வாதமளித்தும், திரிலோகமும் புகழ வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கின்ற “விஸ்வகர்ம” வம்சஸத்திற் பிறந்துள்ளநம்முன்னவர்கள் அக்காலத்தில் திரிகால வர்த்தமானங்களை யுணர்ந்தவர்களா யிருந்தார்கள். அப்படியிருந்தும் “விநாசகாலேவிபரீதபுத்தி” என்கிறவேதவசனப்படி வியாசரின் சதியோசனையின் பேரில் விளைந்த ஆபத்தைச்சகிக்கமுடியாதவர்களாய், சர்வசுதந்திரபாத்தியமாக ஆளுகைசெய்துகொண்டிருந்த “காந்தக்கல் கோட்டை”யைவிட்டு இத்தேசமெங்கும் பரவியபின்னர் சில கட்டுப்பாடுகளின்பேரில் விளைந்தகலகங்களினால், சுவாதீனத்திலிருந்த வேதசாஸ்திரங்களை எதிரிகளுக்குப் பரிகொடுத்தும், வைதீக கர்மாநுஷ்டானங்களைக்கைநழுவவிட்டும், வர்ணாஸ்ரமதருமத்துக்கு விரோதமான கார்யாதிகளையெல்லாம் செய்துகொண்டு வந்தமித்தும், உள்ளபடி பிரம்ஹ வம்சத்திற் பிறந்த நம்மவர்கட்கிருந்த மகிமையெல்லாங்குன்றி தேசமெண்டிசையும் மதிக்கப்படாதிருக்கிற விஷயங்களைச் சிலமேதாவிகளான நங்குலசிகாமணிகள் தெரிந்து, சிரத்தையெடுத்துக்கொண்டு, எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்து குலநலங்களை நிலைநாட்டி வைக்கப்பட்டிருந்தும், நம்மவர்களுக்குள் கல்வி, நாகரீகம், ஒற்றுமை, சாந்தம், பக்தி, விசுவாசம்முதலிய சன்மார்க்கங்களில்லாதிருப்பதனால் நம்மவர்களின் முன்னேற்றத்திற் கெப்போதுங் கைகூடிவரவில்லையென்பது லோகப்பிரசித்தம்.

மேற்குறித்த சுருதிகளில் வேதங்களையோதியுணர்ந்து, சதாசார முடையவர்களாய்ப்பரகதி யடையவேண்டு மென்றும், வேதகட்டளைகளை மீறிநடந்தால், ஈசனது தண்டனைக் குள்ளாவார்களென்றும், விதிக்கப்பட்டிருப்பதுடன், விஷ்ணுபுராணத்தில், இராக்காலம் உஷையென்றும், பகற்காலம் வியுஷ்டியென்றும், இந்தஉஷாவியுஷ்டிகளின் நடுச்சந்தியென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படிக்கொடியதும், பயங்கரமானதுமான சந்தி வரும்போது நித்தியமரணத்துடன்சரீரம் நசிக்கப்பெறுதிருக்கும்படி, பிரம்மதேவனால் சாபமிடப்பெற்றுள்ள “மந்தேகர்” என்கின்ற ராக்ஷஸர்கள், சூரியனைத் தின்னும்படி யத்தனஞ்செய்வதனால், சூரியனுக்கும், ராக்ஷஸர்களுக்கும் கொடிய யுத்தம் உண்டாகிறதென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ருதி.

நபுரஸ்தாத்பரிததாத்யாதித்யோ ஹ்யேவோ
த்யந் புரஸ்தா த்ருக்ஷாகுஸ்யவஹந்தீதி

அதாவது—சூரியன் உதயமாகிற அருபரிதுகளுக்கு முன்னாலே தானிருந்தால் மேற்கண்ட மந்தேகர்கள் என்கின்ற ராக்ஷஸர்கள், தன்னை ஹிம்ஸிப்பார்களென்றெண்ணி தானெல்லோருக்கும்பின்னால் வருகிறாரென்றுசொல்லுகிறது; அப்படிப்பட்ட சந்தியாகாலங்களில், பிரம்மகுலோத்தமர்கள் பிரணவ வியாகிருதி காயத்ரிமந்திரங்களாலே அபிமந்திரித்து, சூரியனுக்கெதிராகத் தண்ணீரையெறிவதனால் அந்தத்தண்ணீரானது வஜ்ஜிரம்போலாகி அவ்வசுரர்களைநாசஞ்செய்துவிடுமென்றும், இதனால் திரிகால சந்தியாவந்தன காயத்திரி மந்திரங்களை ஜெபஞ்செய்யப் படாதவர்கள் சூரியனைக்கொன்ற பாபத்துக்குள்ளாவார்களென்றும் முந்நூல்கள் முறையிடுகின்ற



தாலும், இவ்விதபாபதோஷகர்மங்கள் நம்மவர்களைத் தொடராதிருப்பதற்குச் சமஸ்கிருதங்களைக் கற்கவேண்டியதும், வைதீக கர்மாநுஷ்டானங்களை செய்வதுவரவேண்டியதும், வேதங்களைப் பாராயணஞ் செய்துவரவேண்டியதும், விஸ்வப்ராம்ஹணீகத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரத் தலைப்பட்டுக்கொண் டிருக்கிற நம்மவர்களெல்லோருக்கும் ஏற்பட்ட முக்கியகடமையாம்.

இவ்விதஐதீகத்தை விஸ்வகர்மகுலத்திலவரித்த கிரதுவின் புத்திரர்களும், ஊர்த்தரேதஸரும், கட்டை விரற்கடையளவுள்ளவர்களும், சூரியப்பிரகாசிகளுமான “வாலகில்யர்” என்கின்ற அறுபதினாயிரம் மஹரிஷிகளும் சூரியனைக் காத்துக்கொண்டு, பிரணவ்வியாகிருதிகாயத்திரி மந்திரஜபங்களால் அவ்வஸுரரை நாசஞ்செய்து காக்கப்பட்டு வருகிறார்களென்றும் முந்நூல்களால் வெளியாகின்றன.

இத்தியாதி விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, இதுவரையுள்ள நம்மவர்களிற் பெரும்பாலோர், சமஸ்கிருதபாண்டியத்தையும், வைதிககர்மாநுஷ்டானவிதிமுறைகளையும், வேதாத்தியயனங்களையும், அநுஷ்டிக்கப் பெறாதிருப்பது நம்வர்களின்முன்னேற்றத்திற்கும், விஸ்வப்ராம்ஹணீகதருமத்திற்கும் பங்கமுற்றிருப்பதை ஆலோசித்து, இனியுள்ள விஸ்வப்பிராம்ஹணச்சிறுவர்களுக்காவது சமஸ்கிருத பாண்டியத்தையும், வைதிககர்மாநுஷ்டானவிதிமுறைகளையும், வேதாத்தியயனங்களையும் போதித்துப் பெரும்புகழைப்பெற்றுப்பலா மென்கிற நன்னோக்கத்துடன், சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதகிரி மேஸ்திரி வீதி 5/10.வது நெம்பருள்ள கிருகத்தில் பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியார் அவர்களால் ஷெடி வேதபாடசாலையை ஸ்தாபித்து, இதுகாலபரியந்தம் தமதுசொந்தஐவேஜிலிருந்தே பாதுகாக்கப்பட்டு வருவது யாவரு மறிந்தவிஷயமே!

ஷெடிபாடசாலையை ஆதரிக்கத்தலைப்பட்டிருந்த விஸ்வகர்ம குலோத்தாரணசபையும் கைவிடப்பட்டதாக, தற்காலம்வெளிவந்திருக்கின்ற விளம்பரத்தினால் வெளியாகின்றன. இதுவரைஷெடிபாடசாலையைக் கைசோரவிடாமல் பரிபாலித்துக்கொண்டு வருகின்ற பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சாரியார் அவர்கள் இன்னும் ஷெடிபாடசாலைக்கு வேண்டிய உபாத்தியாயர்களை நியமிக்கவும்; தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், சமஸ்கிருத முதலிய பாடங்களை விர்த்திசெய்யவும், நமது பூர்வீக கிரந்தங்களை அச்சிடவும், வர்த்தமானபத்திரிகை பிரசுரிக்கவும், வெளியூர்வாசிகளான நம்மவர்கள் வருங்காலத்தில் விஜயஞ்செய்யும் சௌகர்யத்துக்காக ஓர்கட்டடங்கட்டவும் வேண்டிய ஏற்பாடுசெய்து கொண்டிருப்பதால், அவ் விஷயங்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்யவேண்டியது நம்மவர்களெல்லோரையும் பொறுத்த கடமையாகவே யிருக்கின்றன.

ஆகையால் இப்பெரிய தருமவிஷயத்திற்கு நம்மவர்கள் ஒவ்வொருவரும். நன்கொடையாகவாவது, மாதாந்தரச் சந்தாவாகவாவது, வேண்டிய திரவியங்களைச் சகாயஞ் செய்து தர்மார்த்த காம மோக்ஷமென்னும் சதுர்வித புருடார்த்த சித்திகளையும் பெற்றுய்யும்படி சதாவும் விஸ்வேஸ்வர பகவானைச் சிந்திக்கின்றோம்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.
Ex. முனிசிபல்கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

# ஆடு கோழிகளின் அடைக்கல விண்ணப்பம்.

இந்து மகா ஜனங்களே! தயவுசெய்து அநாதைகளான எங்களுடைய எளியவிண்ணப்பத்தைக் கவனித்து எங்கள்மீது கிருபைசெய்து இரக்ஷிக்கும்படி தங்கள் கருணையைப் பிரார்த்திக்கின்றோம்.

நாங்கள் கேவலமான ஜீவஜெந்துக்கள் எங்களுக்குத்தாய், தகப்பன், தமையன், தம்பி, மாமன் மைத்துனன் என்று பலரிருந்தாலும், ஒருவரையொருவர் காப்பாற்றும் வல்லமை யுடையேமல்லேம். ஆனால் எங்களை நாங்களே காத்துகொள்ளும் திறமையுமில்லேம். மகாஜனங்களாகிய உங்களாலேயே நாங்கள் காப்பாற்றப்பட்டுஜீவித்துவருகிறோம். எங்களாலானநன்மைகளையும் வஞ்சகமில்லாமல் தங்கள்சமுகத்துக்கு செய்கிறோம். அதாவது உங்களுக்கு நோய்முதலியன உண்டாகாமல் அசுத்தங்களைப் புசித்தும், மலஜலங்களைப்புசித்தும், உங்கள் பிள்ளைகுட்டிகட்கும் உங்களுக்கும் ஆகாரமாகவும் ஔஷதமாகவும் பாலுதவியும், எங்களாலியன்றநன்மைகளைச் செய்து வருகின்றோம். அப்படியிருக்க எங்களைப் பிள்ளைபோல்வளர்த்து ஆதரித்த நீங்களே எங்களைக்கொன்று எங்கள் மாம்ஸாதிகளைப் புசிப்பது ஞாயமாகுமா?

நிரபராதிகளான எங்கள் கழுத்தை அறுத்தும், தோலை யுரித்தும், குடலைப் பிடுங்கியும், சதையைத்துண்டித்தும், எலும்பைமுறித்தும், சித்திரவதைசெய்து தலை, கால், குடல், ஈரல், மலக்குடல் முதலிய எல்லா அவயவங்களையும் புசித்தும் ஆனந்தமடைகின்றீர்களே?

ஐயா மகாஜனங்களே! இப்படி நீங்கள் எங்கள்விஷயத்தில் மனமிரங்காமற் கொடுஞ்செயல்புரிதற்கு நாங்கள் உங்களுக்கு என்ன அபசாரம்செய்தோம்? என்னபாதகம்செய்தோம்? ஒன்றும் செய்யவில்லையே? ஐயா! எங்களைப் பிடித்து நீங்கள் கட்டிவைத்திருக்கும்போது கொல்லப்போகிறீர்களென்று நாங்களறிந்து கொண்டாலும், வெளியிட்டுச்சொல்லிக்கெஞ்சி கேட்டுத் தப்பித்துக் கொள்ளும்படி இறைவன் எங்கட்கு வாயைப் படைத்திருக்கவில்லையே! பேசக்கூடாமையால் கதறுகிறோமே! அலறுகிறோமே! உதைத்துக்கொள்ளுகிறோமே! என்னசெய்தாலும் நீங்கள் மனமிறங்காமல் எங்கள் கழுத்தை அறுத்து உப்பிட்ட சட்டியில் இரத்தத்தைப் பிடித்துவிடுகிறீர்கள்.

எங்களை ஆதரித்துப் பிள்ளைபோல் வளர்த்த நீங்களே எங்கள் உயிருக்குஎமனாகவும், எங்கள் உடலுக்குச் சுடலையாகவும் இருந்தால் எங்கள் குறையை கேட்பார்யார்? ஐயோ! எங்கள்சதையைக் கருக்கியும், கிரக்கியும், உருண்டையாக்கியும், வடையாகியும், குழம்பாக்கியும், கோரைச்செய்தும், தோரணங்கட்டிக் காயவைத்தும், சுட்டும், வறுத்தும், வாயாற மனமாறப்புசித்தும் ஆனந்திக்கின்றீர்களே! நீங்கள்தான் சாகாமல் சிரஞ்சீவிகளாக வாழ்கின்றீர்களா? அல்லது, உங்களுக்கு நோய்முதலியன வாராமலிருக்கின்றனவா? அப்படியுமில்லையே! அப்படி உங்களுக்கு நன்மையுண்டாவதாக இருந்தாலும், எங்களை ஆதரித்த உங்கள்பொருட்டு எங்கள்உடலை அர்ப்பணஞ்செய்த உதமபலன் எங்களுக்குக் கிடைக்கும்.

ஐயா! பகுத்தறிவுள்ள மனிதர்களே! உங்கள் பிள்ளைகுட்டிகளுக்குத் தலைகால் வலித்தாலும், உங்களுக்கு கைகால் வலித்தாலும், உங்கள் வீட்டில் விசேஷங்கள் வந்தாலும், எங்கள் தலைக்கு இடிவிழுகின்றது. உங்கள் குலதெய்வங்கட்கு எங்களைபலியிடுவதாக பிரார்த்தனைசெய்துகொள்ளுகிறீர்கள், உங்கள்பந்துக்களுக்கும் எங்களைப்பிரார்த்தனை செய்துகொள்ளுகிறீர்கள், இது தர்மமாகுமா? உங்களுக்கு இரக்கமில்லையா? இதுகடவுளுக்குசம்மதமா? இதுஞாயமாகுமா? அப்படி உங்களுக்கு நோய்முதலியன வாரே ணுமென்று நாங்கள் ஏதாவது மித்திரபேத

செய்தோமா? கடவுளை வேண்டினோமா? மண்ணைவாரி தூற்றினோமா? ஒருபாவத்தையு மறிகிலோமே! நீங்கள் க்ஷேமமாய் வாழவேண்டுமென்றும் நாங்கள் உங்களால் அன்போடு ஆதரிக்கப்படவேண்டும் என்றும் பிரதிதினமும் கடவுளைப்பிரார்த்தித்தோமே! இப்படியிருக்க, எங்களைக் கொலைசெய்து எங்கள் குடியைக்கெடுத்து நாசமாக்குவது கடவுள் சம்மதமாகுமா? ஐயா! நாங்கள் வாயில்லாத சீவர்கள். உதவியில்லாத ஜந்துகள். அற்பமானபுழுக்கள். உங்களையே தஞ்சமென்று நம்பியிருக்கிற கேவலமான ஜீவன்கள். எங்கள் விஷயத்தில் நீங்கள் இரக்கங்காட்டாதிருப்பது நீதியாகுமா? எங்கள் விஷயத்தில்மனமிரங்கி எங்களைக்கொன்றுதின்னக்கூடாதென்று மிகவும் வற்புறுத்திப் பெரியோர்களெல்லாம் ஏடுகளில் எழுதிவைத்திருக்கின்றார்களாமே! திருவள்ளுவநாயனார் என்னும் மஹான் எங்கள் விஷயத்தில் முழுமனதுடன் அவர்களது அருமைத் திருவாக்கால் இரண்டு அதிகாரம் செய்திருப்பதாகக்கேள்வி. இன்னும் பல மகான்களும் தங்கள்தங்கள் நூல்களிலெல்லாம் எங்கள் விஷயமாகப் பரிந்து பேசி இருக்கிறார்களாமே! அப்படி யெல்லாமிருப்பதை யறிந்திருந்தும் நீங்கள் எங்களை வதை செய்வது எங்கள் துரதிர்ஷ்டமே போலும். நாங்கள் எங்கள்குறையைஇறைவனிடம் முறை யிட்டுக்கொள்ளவும், எங்களை இப்படி கொலையினின்றும் மீட்டுக்கொள்ளவும், அசக்தர்களாக இருப்பதை யறிந்து, எங்களுக்காக மிகவும்பரிந்து எங்களை ரக்ஷிக்கும்பொருட்டுத் தமிழ் வடமொழி வித்துவான்களும், தேசாபிமான மதாபிமானமுள்ள உத்தமர்களும், சிவநேயச்செல்வர்களும், இன்னும் பல அறிவுள்ள மனிதர்களும், எங்களுக்கு வக்கீலாய் இனாமாக ஆஜராகி எங்கள் கக்ஷியை எடுத்துக்காட்டி எங்கள் பொருட்டு உங்களிடம் இடைவிடாமல் வாதித்து வருகிறார்களாம். அதுவும் உங்கள்செவிகட்கு ஏறவில்லையே? தெய்வநீதிகூட எங்களுக்கு அனுகூலமாக இல்லாதிருப்பது எங்கள் துரதிர்ஷ்டமேபோலும். ஐயா! இன்னும் ஆலோசித்துப்பாருங்கள். எங்களைக் கொன்றுதின்னாத பிராமணர், சைவர், வைசியர்முதலியோர்களை நீங்கள் உயர்ந்தவர்களென்று மதிக்கின்றீர்களே! அப்படி மதிக்கிற நீங்களும் புலாலுண்பதைவிட்டும் பலியிடுவதைவிட்டும் என் உயர்ந்தோராகக்கூடாது?

எங்களைக் கொன்று தின்னாத மனிதர்களெல்லாம் நல்ல சரீரபலமும், புத்திநுட்பமும், விசால அறிவும், நீண்டஆயுளும், உயர்ந்தஆசாரமும் உடையோராகயிருப்பது நீங்கள் அறியாதவிஷயமா? எங்களையும், இன்னும் பெரிய மிருகங்களையும் புசித்துவந்த அன்னிய தேசத்தார்கூட இப்போது இரக்கமும், ஜீவகாருண்யமும் மேலிட்டு எங்களைப்புசிக்காமல் நீக்கிவருகிறார்கள். இயற்கையிலேயே சீவகாருண்யமுள்ள நீங்கள் கண்டபடி தின்னுவது என்ன கொடுமை? அந்தோ! ஜீவகாருண்ணிய மிகுந்து வருகின்ற அன்னியதேசங்கட்குப்போய்த் தப்பிப் பிழைக்கலா மென்றாலும், கப்பலுக்கும் இரயிலுக்கும்கையிற்காசுகிடையாதே. கிடைத்துப் போய்ச்சேர்ந்தாலும், அங்கும் உங்கள் வகையராக்கள் இருப்பார்களே. ஐயோ! ஒருவழியாலும் தப்பித்துக்கொள்ள இடமில்லையே. எந்தச் சண்டாளன்காலத்தில் உங்கள் பரம்பரையார் எங்கள் பரம்பரையாரை தின்னுவதற்கு உடன்படிக்கை ஏற்பட்டதோ தெரியவில்லையே. போனது போகட்டும். இனியாவது எங்கள்மீது கிருபைசெய்து காளிகருப்பனுக்குக் காட்டிக்கொல்லாமலும், கல்யாணம், காட்சிகளில் எங்கள்உயிரை வாங்காமலும், நீங்கள் அருநரகத்திற்கு ஆளாகாமலும், உங்கள் திருக்கைகளையும் அறியவாய்களையும் வணக்கமாகப் பிரார்த்திக்கின்றோம். இதுபோலவே உலக மாதாவாகிய நமது மாரியம்மைக்கும் இந்தவருஷத்தில் மநுச்செய்து கொண்டிருக்கிறோம்.

இங்ஙனம் அடிமைகள்
(ஒப்பம்) ஆடு கோழிகள்.

நாங்களும் அப்படியே பிரார்த்திக்கின்றோம்.
அடிமைகள்
(ஒப்பம்) மீன் குஞ்சு மான்கன்று
வகையராக்கள்.

## மாரியம்மை.

பிரஜைகளே! ஆடுகள், கோழிகள், மீன்குஞ்சுகள், மான்கன்றுகள்முதலான எளிய பிராணிகள்கூட இந்த வருஷத்தில் நமக்கு அனுப்பியிருக்கும் ஒருபரிதாபமான மநுவினால் நாம் உங்கள்மீது அளவில்லாத மனஸ்தாபம் அடைகின்றோம். அந்த மநுவிற்கூறியிருக்கிற எல்லாவிஷயங்களும்யதார்த்தமானவையேயாகும். நிரபராதிகளான அந்த ஜெந்துக்களை நீங்கள் கொலைசெய்வது பெரிய அக்கிரமம்.

நம்மை திருப்திசெய்வது, நம்முடைய அனுக்கிரகத்தைப்பெருதற்பொருட்டு நீங்கள் அவைகளைக்கொன்று நமது சந்நிதியிற் பொங்கவிடுகின்றீர்கள். இந்த அக்கிரமமான செய்கையால் நாம் ஒருபோதும் திருப்தியடையமாட்டோம். உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவுமாட்டோம்.

நமது சந்நிதியைக்கொலைக்களமாக்கி, நம்முடையபெயரைக்கெடுத்து நமதுவீதிகளையெல்லாம் அசங்கியமான இரத்தவாடை வீசச்செய்து நீங்களும் கொலைபாவமாகிய பெரும்பாவத்துக்கு ஆளாகிறீர்கள். ஆனல், அப்பழியை நமது தலையிற்சுமத்தப்பார்க்கிறீர்கள். நாம்உங்களை அப்படிச்செய்யும்படி தூண்டாததோடு அக்கொடுஞ்செயலை முழுதும் வெறுக்கின்ஹோம். உங்கள் அறிமையாயால் நீங்கள் செய்கிற இக்குற்றத்திற்கு நீங்களே ஜவாப்தாரிகளாகின்றீர்கள்.

மனிதர்களாகிய உங்களைப்போலவே ஆடு, கோழிகளும், மீன்கள்முதலிய எல்லாஜீவவர்க்கங்களும், நமது கருணைக்குப் பாத்தியப்பட்டவைகளேயாம். அப்படியிருக்க, அவைகளைப் பலிவாங்கி உங்களை ரக்ஷிப்பது நமது பெருமைக்கு மிகவும் குற்றமுண்டாகும்.

ஆதாலால், இதன் மூலமாக நாம் செய்கிற உத்திரவென்னவென்றால், இதுமுதல் நம்முடைய சந்நிதானத்தில் எந்த ஜீவனையும், கொலைசெய்யவாவது ஹிம்சிக்கவாவது கூடாது. அப்படிச்செய்தால் நம்முடைய கடுமையான ஆக்ஞை உங்களைப் பெரிதும் பாதிக்குமென்பதை யறியவும்.

நம்முடைய அனுக்கிரகத்தைப் பெறவேணுமென்றால் நீங்கள் மிகவும் பரிசுத்தமாக நமது சந்நிதானத்தில் அன்போடு பாற்பொங்கலிட்டு உங்கள் இஷ்டசித்தியைப் பெறக்கடவீர்கள்.

(ஒப்பம்) உங்கள் அன்புள்ள **மாரியம்மை.**

நாங்களும் அப்படியே உத்திரவு செய்கிறோம்,

காளிகருப்பன் வகையறுக்கள்.

நா. நீ. சதானந்தன்.

## பலவான்குடிநகர விஸ்வகர்ம சுஜாதியாரின் நன்கொடை.

பிரம்மஸ்ரீ மு. அ. அளகப்பாச்சாரியார்,
பிரம்மஸ்ரீ கி. ம. முத்துசாமி ஆச்சாரியார்,

மேற்கண்ட குலாபிமானிகள் இருவரும் நம்மகுலாபிவிர்த்தியின்பேரி லிருந்த ஊக்கத்தினல் (30-10-13)ல் சென்னை விஸ்வகர்ம வேதாத்தியயனபாடசாலைக்கும், நமது விஸ்வகர்மகுலோபகாரிப் பத்திகைக்கும் 30 ரூபாய் மணியாடர் அனுப்பினர்கள். அதன்விபரம்.

பிரம்மஸ்ரீ மு. அ. அளகப்பாச்சாரியாரவர்கள்
நமதுபத்திரிகைக்கு வரு சந்தா ரூ. 3—0—0
வேதாத்தியயன பாடசாலைக்கு ரூ 10—0—0
பிரம்மஸ்ரீ கி.ம. முத்துசாமிஆச்சாரியாரவர்கள்
நமதுபத்திரிகைக்கு வருஷசந்தா ரூ. 3—0—0
ஷை பாடசாலைக்கு ரூ. 5—0—0

ஷையார்கள் பட்டறையில் வேலைசெய்யும் நம்மவர்களிடம் பாடசாலைக்காக தண்டிய ரூபா 9-0-0 ஆக மொத்தம் ரூபா 30 அனுப்பியுள்ளார். இப்படிப்பட்டகுலாபிமானிகள் இன்னும் பலர் உதவிபுரிவரேல் நம்குலதர்ம பாடசாலை முதலாகிய காரியங்கள் அதிசீக்கிரம் கைகூடுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஷை குலாபிமானிகள் இப்பத்திரிகையைப் பார்த்தவுடன் கருணைகூர்ந்து நன்கொடை யளித்ததிலிருந்து அவர்களுக்குள்ள குலாபிமானம் நன்குவிளங்குகின்றது. அதற்காக நாம் அநேகவந்தனம் செலுத்தக் கடமைப்பட்டவர்களாக விருக்கின்றோம். மற்ற நம்குலாபிமானிகள் அபிமானத்தையும், நன்கொடையையும், அடுத்த பத்திரிகையில் வெளியிடப்படும்.



# வர்த்தமானக் குறிப்புகள்.

**நமது ராஜப்பிரதிநிதி சென்னைக்கு விஜயம்.**

நமது ராஜப்பிரதிநிதி தமது உத்தியோகமுறையில் ஒருமுறை சுற்றுப்பிரயாணஞ்செய்யவேண்டியது அவரது கடமையானதால், அவர் டெல்லிமாநகரை விட்டுப்புரப்பட்டு பலஊரை சுற்றிக்கொண்டு சென்ற அக்டோபர்மீ 15உ கபர்த்தலாபோய்ச்சேர்ந்தார். ஆங்கிருந்து புறப்பட்டு பிக்கானீர், குஜ்னீர், தவுலத்தாபாத், ஹைதராபாத், சிக்கந்தராபாத், பீஜாப்பூர், சிவமுகா, மைசூர், பெங்களூர், பௌரங்கிப்பேட்டை, மதுரை, திருச்சினாப்பள்ளி இவ்விடங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு நாளது நவம்பர்மீ 24உ நமது ராஜப்பிரதிநிதி சென்னை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்தவார். அப்போது பல சங்கத்தார்களும்ராஜப்பிரதிநிதிக்கு அட்ரஸ் வாசித்துக்கொடுப்பார்கள். 26உ ராஜப்பிரதிநிதி தம் மனைவியாருடன் சென்று புதிய முனிசிபல் கட்டடத்தை திறப்பார். அப்போது அக்கட்டடத்திற்கு சில அலங்காரங்கள் நடைபெறும். இரண்டுநாள் தங்கியிருந்து 28உ புரப்பட்டு கட்டாக், கயா, ஆலவார் முதலானமற்றும் சிலதேயங்கள் சுற்றுப் பிரயாணஞ்செய்து டிசம்பர்மீ 5உ டெல்லிமாநகர் போய்ச் சேருவார்.

### சிலோனில் நடந்த ஓர் ஆச்சரியம்.

இவ்வருஷம்ஸிலோனில் நேர்ந்தவெள்ளத்தினல் பலஉயிர்ச்சேதங்கள் நேர்ந்தனவென் றறிகின்றோம். அப்போது ஓர்மாது தன் குழந்தைக்கு ஸ்நானம் செய்வித்து நதிக்கருகிலிருந்த ஒரு மரத்தொட்டியில் வளர்த்திவிட்டு தன் சொந்தக் காரியத்தின்மேல் போய்விட்டனளாம். அப்படிப் போனவள் திரும்பி வருவதற்குள் குழந்தையை மரத்தொட்டியுடன் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விடவே, அதனைக்கண்ட தாய் கதறியழவும், அக்குழந்தையைக் காப்பாற்ற பலர் முயற்சிசெய்தும், மரத்தொட்டியுடன் குழந்தை காணமற் போய்விட்டது. கடைசியாக அத்தொட்டி சிலதூரம் சென்றபின் தொட்டியுடன் குழந்தை கரையில்வந்து சேர அங்கிருந்தவர்கள் தொட்டியில் குழந்தை உயிருடனிருப்பதைக் கண்டு ஆவலுடன் ஆதரித்தார்களாம்.

**நிலக்கரிச்சுரங்கத்தில் நேர்ந்த ஒரு விபத்து**

கார்டிப் என்னும் பட்டணத்திலுள்ள ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் நேர்ந்த விபத்தினல் 417-பேர் மாண்டுபோனர்களெனத் தெரியவருகிறது. சுமார் 70-வருஷங்களாக இவ்வித விபத்து சுரங்களில் நேர்ந்ததில்லையெனச் சொல்லப்படுகிறது.

**கூண்டிலிருந்து தப்பித்தோடிய சிங்கங்கள்.**

ஜெர்மனியிலுள்ள லீப்ஸிக் என்ற பட்டணத்தில ஒரு ஸர்க்கஸ் கம்பெனியார் மிருகப்பெட்டியொன்றை வழியே இழுத்துகொண்டு போகையில், அப்பெட்டியின்மேல் ஒரு டிராம் வண்டி வந்து மோதவே, பெட்டி உடைந்து அதனுள்ளிருந்த சிங்கங்கள் வெளிப்பட்டு ஓர் ஹோட்டலுக்குள் பிரவேசித்து மெத்தையின் மேலேரி அட்டகாசம் செய்யத் துணிந்ததாம். உடனே போலிஸார் ஆயுதசகிதமாய் பிரவேசித்து அவைகளைச் சுட்டுக்கொன்றனராம். அதில் இரண்டு சிங்கங்கள் அகப்படவே யில்லையாம்.

### சென்னையில் நடைபெறப் போகும் தொழிற்காட்சி.

அடுத்துவரும் கிறிஸ்துமஸ் பண்டிகையில் அதாவது டிசம்பர்மீ 24உமுதல் 1914ளு ஜனவரிமீ 2உ வரையில் பீபில்ஸ் பார்க்கில் ஒருபொருட்காட்சி திறந்துவைக்கப்படும். அப்போது பலவிதசாமான்களும், யந்திரங்கள்முதலானவைகளும் வைக்கப்படும். அதில் சில சாமான்கள் விற்பனையும் செய்வார்களாம். இதில் நம் நாட்டுப்பெண்களும் தங்களால் செய்யப்பட்ட சாமான்களைக் கொண்டுவந்து வைப்பார்கள். அதனைப் பார்க்கச் சென்ற ஸ்திரீகளும் தாமும் அவ்விதம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுவார்கள்போலும்!

### ஒரு ஆச்சரியமான ஏரி.

லேக்யார்க் என்னு மிடத்தில் ஒரு ஏரி 13 வருஷகாலம் ஜலமில்லா திருக்கிறதாம். அங்குள்ள ஜனங்கள் அவ்வேரியில் உழுது பயிர் செய்கின்றனராம். 13 வருஷமானதும் அவ்வேரியில் ஜலம் சுரந்து 12 அடியுயர முதல் 15 அடியுயர அளவு பெருகி நிற்கின்றதாம்.

---

### ஆமையும் அதன் ஜீவசக்தியும்.

ஆமையின் தலையை வெட்டி யெடுத்துவிட்டால், அது 400 முழந்தூரம் நகர்ந்து செல்லுமாம். அதன் ஈரலை யெடுத்துத் தொங்கவைத்தால் அது பலநாளைக்குத் துடித்துக்கொண்டிருக்குமாம்.

---

### காகத்திற்கு கண்தெரிவித்த ஒரு வைத்தியர்.

லண்டினில் ஒரு டாக்டர் கண்தெரியாது கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒரு காகத்தைப் பிடித்து அதன்கண்ணின் டலையையுரித்து சுத்தஞ்செய்து, மறுபடி முன்னிருந்ததுபோல் கண்ணையமைத்தும், அதற்குச்சரியா கண்தெரியாததால் அதற்கேற்றமூக்குக்கண்ணாடி யொன்றைச் செய்து கண்ணில் மாட்டவே, நன்றாய்க் கண் தெரிந்ததாம். இப்போது அக்காகம் லண்டன் மிருகக்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

---

### அதிக வயதான ஒரு மரம்.

இங்கிலாந்து தேசத்துள்ள ஸப்பக் என்னுமூரில், கருங்காலி மரமொன்றிருக்கிறது. அதற்கிப்போதுவயது 2000வருடமாகிறதாம். அதன் அடிமரமாத்திரம் 36 அடி சுற்றளவுடைத்ததென்று சொல்லப்படுகிறதாம்.

---

### தும்மல்மரம்.

தென் ஆப்பிரிக்காவில் தும்மல்மரமொன்று ஒரு மரமிருக்கிறதாம். அதை வாளால்அறுக்கும்போது அதிலிருந்து விழுந்தூளின் காரத்தால் அதை அறுப்பவர் தும்மிக்கொண்டே யிருப்பாராம்; அதையிழைக்கும்போதும் இழைப்பவருக்கும் தும்மலுண்டாகிறதாம்.

### ஒரு சிறுமியின் சங்கீதப் பயிற்சி.

தஞ்சாவூரில் வசிக்கும் மிஸ்டர் ரகுபதி ராவின் குமாரத்தியாகிய 11-வயதுள்ள கமலாபாய் என்னும் சிறுமி சங்கீதவித்தையில் மிகத்தேர்ந்திருக்கின்றனளாம். இப்பெண்மணியின் சங்கீதத்திற்கு மகிழ்ந்து, மைசூர் மகாராஜா 2000 ரூபாயும், சில விலையுயர்ந்த ஆடைகளும் தந்தனரெனத் தெரியவருகிறது.

---

### ஒரு திருடனது சாதுரியம்.

இங்கிலாந்து தேசத்திலுள்ள காரன்வாலில் வசிக்கும் ஜேம்ஸ்கீம் என்னும் ஒரு பிறவிக்குருடன் ஒவ்வொரு நாளும் ஒருவருடைய உதவியின்றி 17-மைல் தூரம் பற்பல விடங்களுக்குச் சென்று தேயிலை விற்று பிழைக்கின்றானும். ஒருநாளாவது அவன்வழி தப்பிப் போனதேயில்லையாம். அவன் எந்தப் பொருளையும் தொட்டுப்பார்த்து இது இன்ன பொருளென்றும் இன்னின்ன நிறமுடையதென்றும் கூறிவிடுகிறானும்.

---

### 105 வயதுள்ள ஒரு வித்தாப்பியர்.

பிரான்சு தேசத்திலுள்ள பாரிசில், மான்ஷியர் பியரே ஷமால் என்பவரொருவரிருக்கின்றார். அவருக்கிப்போது வயது 105. அவர் 60-வது வயதுமுதற்கொண்டு பால்மாத்திரமே சாப்பிட்டுக்கொண்டு வருகின்றாராம். இவர் இரண்டு பிரான்சு சக்ரவர்த்திகளையும், மூன்று அரசர்களையும், 10 பிரசிடெண்டுகளையும் பார்த்திருக்கிறாராம். அவர் குழந்தையாயிருந்தபோது அவரை நெப்போலியன் கையிலெடுத்துவிளையாடியிருக்கின்றாராம். அவருக்கிப்போது பிரான்சுக்கவர்ன்மெண்டார் ஏழைகட்குதவும் சட்டத்தின்படி நாளொன்றுக்கு 30-ஸெண்டு கொடுத்து வருகின்றனராம்.

---

### 100 வயதுடையவர்களின் தொகை.

பல்கேரியாவில் 3883 பேரும், ருமேனியாவில் 1074 பேரும், ஸெர்வியாவில் 573 பேரும், ஸ்பெயினில் 410 பேரும், பிரான்வில் 213.



பேரும், இத்தாலியாவில் 146 ,பேரும், இங்கிலாந்திலும் ஸ்காட்லந்திலும் 92 பேரும், ருஷியர்வில் 89 பேரும், ஜர்மனியில் 76. பேரும் நார்வேயில் 23 பேரும் ஸ்வீட்னில் 10 பேரும் பெல்ஜியத்தில் 5பேரும், நூறுவயதுடையவராகவிருக்கின்றனரென்று ஜர்மன்தேசத்தில்வெளியான ஜனகணிதத்தால் தெரியவருகின்றது.

---

### மிருகங்களால் நேர்ந்த ஜனசேதத்தின் கணக்கு.

இந்தியாவில் இங்கிலீஷ்காரர்கள் வேட்டைகளாடியும் கொடியமிருகங்களுக்கிரையாகிறஜனங்களின் தொகை குறையவில்லை யென்பது அடியில்வரும்கணக்கால்தெரிகிறது. புலிகளால் 822 பேர்கள், பெருநரிகளால் 366 பேர்கள், கரடிகளால் 428 பேர்கள், யானைகளால் 77 பேர்கள், முதலைகளால் 244 பேர்கள்,குடத்திகளால் 41 பேர்கள், காட்டு நாய்களால் 21 பேர்கள், பாம்புகளால் 23000ம் பேர்களுக்கு அதிகமாம்.

---

### வயோதிகமுடைய ஒரு மாது.

ஜெர்மெனியில் வயோதிகமுடைய மாது ஒருவள்வசிக்கின்றனள். அவளுக் கிப்போது 126-வயதாகிறதாம். அவளுடைய மகனுக்குத் தற்போது 89-வது வயது நடைபெறுகின்றதென்றும், அவளுடைய புத்திர புத்திரிகளின் வழியாகத் தோன்றிய சந்ததிகள் சுமார் இருநூறு பெயர்வரை இருக்கிறார்களென்றும், அவளுடைய பேரனுக்குப் பேரனுன இரண்டு குழந்தைகளிருக்கின்றனவென்றும் சொல்லப்படுகின்றது.

---

### கனமுள்ள ஒருகுழந்தை.

அமெரிக்காவிலுள்ள கானடாதேசத்தில் ஒரு குழந்தைக்கு 2வருடமும் 2-மாதமுமாகிறதாம். அதன் நிறையோ 127 ராத்தலும், அதன்மார்பு 40 அங்குலமு மிருக்கிறதாம். இக்குழந்தையை அதன் பெற்றோர்களால் தூக்கமுடியவில்லையாம். இது மனுஷப்பிறப்பென்று சொல்லுதல் எவ்விதம் பொருந்தும்.

### போர்ட்லாண்டில் சிறுவர்கள் போலீஸ்.

போர்ட்லாண்ட் என்னு மூரில் பத்துவயதுக்குக்குறையாமலும், 15-வயதுக்கு மேற்படாமலுமிருக்கும் 200-பேர்வரையில் ஒன்றுசேர்த்து போலீஸ் டிபார்ட்மெண்டொன்று ஏற்படுத்தியிருக்கிறார்களாம். இப்போலீஸ் சிறுவர்களின் வேலை, சிகரெட் பிடிக்கிறவர்களையும், வீணுகக் கல்லெறிகிறவர்களையும், பாடசாலைக்குப்போகாமல் பதுங்கிக்கொண்டிருக்கிற சிறுவர்களையும் கண்டுபிடிப்பதே இவர்களின் தொழிலாம்.

---

### பெருத்த தேகமுள்ள ஒரு பெண்.

லீஸ்டர் என்னுமிடத்தில் மிஸ் லாம்பர்ட் என்ற ஒருபெண் இருக்கின்றனளாம். அவளுக்கு வயது இருபத்தொன்றே யாகிறதாம். அவள்நிறையோ560-பவுன் எனச்சொல்லப்படுகின்றது.

---

### விலையுயர்ந்த ஒரு முத்து.

பம்பாயில் யார்க்கட்டடத்திலிருக்கும் மிஸ்டர் N. கூட்டின் வசத்தில் பிரபலமானமுத்தொன்றிருக்கிறதாம். அதன்மதிப்போ 15000-பவுன் எனத்தெரியவருகிறது.

---

### அதிக நாள்சென்ற ஒரு மரம்.

இங்கிலாந்து தேசத்தில் சப்பக் என்னுமிடத்தில் கருங்காலி மரமொன்றிருக்கிறதாம். அம்மரத்துக்கு இப்போது வயது 2000வருடமென்றும், அதனுடைய அடிமரம் 36-அடி சுற்றளவுடையதாயிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

---

### நாய்க்குட்டிகளின் மாற்றுத்தாய்.

லண்டன் லோஸ்ட்ரீட்டில் வசிக்கும் மிஸ்டர் ஆல்ப்ரட்ஸ்டான் என்பவர் வளர்க்கும் பூனையொன்று மூன்று நாய்குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்த்து வருகிறதாம். அந்த நாய்க்குட்டிகள் பால்கொடுக்கும் பூனையினிடத்தில் வெகு அன்பாகவளர்ந்து வருகிறதாம்.

### குருடர்களின் காட்சி.

மான்செஸ்டர் என்னுமிடத்தில் மிஸ் காத்த லீன்வெல்ஸ் என்பவருக்கு ஒரு வருஷகாலம் கண் தெரியாமலிருந்ததாம். தன்பாட்டி இறந்த போது, அவளுடையதுக்கம் சகியாமல் அவஸ்தைப்பட்டு அழுகையில் நல்லபார்வை யுண்டாயிற்றும். ஒருவனுக்கு முப்பது வருஷம்வரையில் குருடாயிருந்து ஒருசமயம் கண்ணில்விழுந்த தூசியைத் துடைத்துக் கொண்டபோது கண் செவ்வையாகத் தெரிந்ததாம். மற்றொருவனுக்குச் சிலவருஷகாலம் கண்மூடிக்கொண்டிருக்கையில், அவனுக்கு நேர்ந்த பல்வலியால் ஒருபல்லைப் பிடுங்க நேர்ந்தபோது கண்ணும் திறந்து கொண்டதாம்.

---

### பலவருஷங்களாக நித்திரைகொள்ளாத ஒரு ஸ்திரீ.

புடாபெஸ்த் என்னுமூரில் பலவருடங்களாக நித்திரைசெய்யாமல் ஒரு ஸ்திரீ இருக்கின்றுளாம். அவள் தூங்காதிருப்பதற்குக் காரணம் சுமார் 17-வருஷங்களுக்கு முன் தனது அரும் புதல்வியை சில திருடர்கள் களவாடப்பிரயத்தினப்பட்டதாகவும், அது முதலாக அவள் நித்திரை கொள்வதை விட்டுவிட்டதாகவும் சொல்லுகிறுளாம்.

---

### ஒரு ஆச்சரியக் கலியாணம்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஐக்கிய மாகாணத்தில் ஆகாயரத சஞ்சாரியான மிஸ்டர் ஸ்மித் என்பவர் மிஸ். எமேகோட் என்ற பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளக் கருதினராம். பெண்ணும் அவரையே மணந்து கொள்ள இசைந்தனளாம். ஆனுல், அப்புருடருடைய தொழில் ஆபத்துக்கிடமான தெனக்கருதி பெண்ணின் தாய்தந்தையர்கள் அக்கலியாணத்துக்கு சம்மதிக்கவில்லையாம். இதையறிந்த ஸ்மித் ஓர் நாள்தன்னுடைய ஆகாயக் கப்பல்மார்க்கமாகப்பறத்து வந்து, பெண்ணின் வீட்டுக்குச் சமீபத்தில் வந்திறங்கி ஏற்கெனவே இவர்களுக்குள் முடிவு செய்துகொண்டபடி அப்பெண்ணை அந்த ஆகாயரதத்தில் ஏற்றிக்கொண்டு 75மையில் தூரம் பறந்துசென்று ஹல்ஸ்டேல் என்னுமூரில் இறங்கி இருவரும் கலியாணத்தை முடித்துக் கொண்டார்களாம். அப்பெண் பின்பு தாங்கள் முடித்துக்கொண்ட சங்கதியை தம் தாய்தந்தையர்களுக்குத் தெரிவித்து மன்னிப்பு கேட்டுக்கொண்டனளாம்.

---

### கார்டெழுதுவதில் மிக்க திறமையுள்ள வாலிபன்.

சிலநாளைக்குமுன் அலஹாபாத்தில் நடைபெற்ற ஒரு பொருட்காட்சிச் சாலையில் ஜோகேந்திர நாத் சட்டர்ஜி யென்னும் ஒரு வங்காள வாலிபனெழுதிய காலணக்கார்ட்டு வைக்கப்பட்டிருந்தது. அதில் 40991 எழுத்துக்கள் சேர்ந்த 9380 சொற்களடங்கிய 320 வரியாக எழுதப்பட்டிருந்தனவாம். அக்கார்டைப் பூதக்கண்ணுடி போட்டுக்கொண்டு பார்த்தால்தான், வாசிக்க சாத்தியப்படுமாம்..

---

### விஸ்வப்ரம குல தர்மபரிபாலன சபை.

சென்னை பெரம்பூருக்கடுத்த சிறுவள்ளூர் கிராமத்தில் வசிக்கும். விஸ்வகர்ம சந்ததியார்கள் 1913ஞு அக்டோபர்மீ 30உ குருவாரம் இரவு7-மணிக்குஷெ கிராமம் முனிசாமிஆசாரி வீதி பிரம்மஸ்ரீ நாகப்பாச்சாரியாரவர்கள் கிருஹத்தில் கும்பகோணம் ஆதிசங்கராசாரியஸ்வாமிகள் மடத்திலிருந்து வந்திருக்கும் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்கள் அக்ராசனத்தின்கீழ் ஷெ சபையை ஸ்தாபனஞ்செய்தார்கள்.

அச்சபையின் மூலமாக ஷெ குலாசார ஒழுங்கீனங்களை அப்போதைக் கப்போது கவனித்துவருவதும், அக்கிராமத்திலுள்ள ஸ்ரீவைதீசுரர் ஆலயதர்ம பரிபாலனத்தை விர்த்திக்குக் கொண்டுவருவதுமேயாம் இதுபோன்ற சபைகள் பலகிராமங்களிலும் ஏற்பட்டுவரும்படி ஸ்ரீ விஸ்வேஸ்வரர் துணை செய்வாராக.

---

துக் கொண்டுபோய் உயர்ந்த ஆடையாபரணங்களைத் தந்து அதிக சந்தோஷத்துடன் வாழ்ந்துவருநாளில், பாக்கியவதியை அளகாபுரத்திறைவனானவன் வந்து விவாஹஞ் செய்துகொண்டனன். பின்பு புண்ணியவதியை இராஜகிரிக்கிறைவன் வந்து விவாகஞ்செய்துகொண்டனன். அது முதல் இவ்விருபெண்களும் இவ்விரதத்தை யநுஷ்டித்து வந்தார்கள். இப்படியிருக்க, ஓர்நாள் பாக்கியவதி சுக்ரவாரதினம் ஸ்நானஞ்செய்யும்போது நோன்புதாரத்தைக் கழற்றி அவரைப்பந்தலில் வைத்து மறந்துவிட்டனள். அன்று முதல் வறுமையதிகரித்துக் கஷ்டமுண்டாகியதுந்தவிர தங்கள் இராஜ்ஜியத்தைப் பகைவராகிய வேற்றரசர்கள் கைக்கொள்ள, அதனால் கஷ்டங்களை அநுபவித்துவரும்போது, பாக்கியவதி தன்புத்திரனையழைத்து அப்பா! இராஜகிரியிலேஉனது பெரிய தாயாரிடஞ்சென்று கொஞ்சம் திரவியம், பெற்றுக்கொண்டு வருவையாகில் நாம் பிழைப்பதற்குக் கூடும். இல்லாவிடில் நாம் கஷ்டமடைந்தே தீரவேண்டுமென்றுகூறவே அப்புத்திரன் தனது பெரியதாயினிடஞ் சென்று தங்கள் குறைகளைத் தெரிவிக்க, அப்புண்ணியவதி கொஞ்சந்திரவியத்தை முடிந்து மூட்டையாகக்கட்டிக்கொடுக்க, அதைச் சிரசின்மீது வைத்துக்கொண்டு வழிநடந்துவருஞ்சமயத்தில் ஓர்கருடன்வந்து அத்திரவியமூட்டையை அடித்துக்கொண்டுபோய்விட்டது. மறுபடியும் தனது பெரிய தாயினிடஞ்சென்று அம்மா! நீதந்தருளிய திரவியமூட்டையை ஓர் கருடன்வந்து அடித்துக்கொண்டு போய்விட்டதென்றுசொல்ல, மறுபடியும் அப்பிள்ளையினிடம் கொஞ்சந் திரவியத்தைக்கொடுத்து பசிப்பிணியை நீக்குவதற்குக் கட்டமுதுங் கட்டிக்கொடுத்தனுப்பினாள். அவைகளைப் பெற்றுக்கொண்டு சந்தோஷகரமாய்ச் செல்லும்போது அப்பிள்ளைக்கு பசியதிகரிக்க, ஓர் குளக்கரையிலிறங்கி, கொண்டுவந்தகட்டமுதையும் திரவியமூட்டையையும் கரையில்வைத்துவிட்டு கைகால்களைச் சுத்திசெய்யுஞ் சமயத்தில் ஒரு திருடன் அவைகளை யடித்துக்கொண்டு போய்விட்டனன்.

அவற்றை யோர்ந்த அப்பிள்ளை மறுமடியும் தனது பெரிய தாயினிடஞ்சென்று நடந்தவற்றையறிவிக்க ஆ-ஹா! ஈதென்ன தரித்திரம் அப்பா! உனது தாயார் நோன்பு நோற்றுவருகின்றனளா? இல்லையா வென்று கேட்க, அந் நோன்பு நோற்கிறதில்லையென்று சொல்லவும் ஐப்பசிமீ வருமளவும் அப்பிள்ளையை தன் தாயாரிடம் அனுப்பாமல் தன்னிடத்திலேயே வைத்திருந்து தான் நோற்கிற நோன்புடனே பாக்கியவதிக்கும் ஓர் நோன்புக்கயிறு வைத்து நோற்று அந்தக்கயிற்றோடு பலகாரமும், தாம்பூலமும், மஞ்சளும், இன்னுஞ்சில ஆடையாபரணங்களும், திரவியங்களும் இப்பிள்ளையினிடம்கொடுத்து சிலசேவகர்களையும் கூட்டி அனுப்பினாள்.

அவைகளைப்பெற்றுக்கொண்டு இவர்கள்வரும் வழியில் கருடன் முன் தூக்கிக்கொண்டுபோன திரவிய மூட்டையை இவர்களுக்கெதிரில் கொண்டுவந்து தொப்பென்று போட்டுவிட்டுப்போய்விட்டது. அதையெடுத்துக்கொண்டு, கொஞ்சதூரம் நடக்கின்றபோது முன் திருடன் பறித்துக்கொண்டுபோன திரவியத்தையுங் கொண்டுவந்து கொடுத்துவிட்டனன். அதையும்யெடுத்துக்கொண்டு போம்பொழுது வழியில் ஒருசப்தமுண்டாயிற்று. அது என்ன சப்தமென்று அசைவற்றுக்கேட்டபோது, அப்பா! உன்தாயானவள் வழக்கம்போல் நோன்பு நோற்காததனால்தான் இவ்வளவு கஷ்டங்கள் உண்டானது, இனிமேல் விடாமல் நோன்பு நோற்று வாருங்கள் என்று சொல்ல, அதைக் கேட்டு ஆச்சரியமடைந்துகொண்டே தன்வீடு போய்ச்சேர்ந்தனன்.

அப்பிள்ளையைக்கண்டதாயாகிய பாக்யவதி எதிர்வந்துநிற்க, அப்பிள்ளைகொண்டுவந்த நோன்புதாரத்தையும், பற்பலபலகாரவகைகளையும், ஆடையாபரணாதிகளையும் கொடுத்து நடந்தவற்றை யெல்லாந் தெரிவித்து இனி நோன்பை மறவாமல் நூற்றுவரும்படி தனதுபெரிய தாயார் சொல்லி யனுப்பினதையுந் தெரிவித்து வழியில்சொல்லிய அசரீரி வார்த்தையையுஞ் சொல்லவே,மெய்தானென்றுஎண்ணி, வீணாய்

விரதத்தை விட்டேனே இதுவும் அபசாரந் தான் என்றுசொல்லி வருத்தமடைந்து ஸ்நானஞ்செய்து மடியுடுத்தி குங்குமந் தரித்து கேதாரியீஸ்வரனை நினைந்து பாக்யவதிநோற்றுக் கொடுக்கக் கொண்டுவந்த நோன்பு கயிற்றைத் தரித்துக்கொண்டனள். அன்றே பாக்கியவதி புருஷனான அளகாபுரிக்கிறைவன் பகைவர்களால் கொண்டுபோன இராஜ்யத்தையும் பண்டாரத்தையுங் கைப்பற்ற நினைத்து அவர்கள் மீது உயுத்தம்புரிந்து வெற்றியடைந்து, இராஜ்யங்களையும், ஆனைசேனைகளையும் கொண்டு வந்தான். அதுமுதல் வருஷப்ரதி வருஷம் அந்நோன்பை மறவாமல் பாக்கியவதி அநுஷ்டித்து புருஷனுடன் சகல சௌபாக்கியத்தையும் பெற்றுவாழ்ந்தார்கள். அதுகாரணமாக உலகத்தில்யாவரும்அதை அநுஷ்டித்துவருகிறார்கள்

## ஸ்கந்த ஷஷ்டி.

முன்னொருகாலத்தில் சிவசுப்ரமண்யர் கைலாயத்திற்குப்போய் அதன்சாரலில் தம்முடையவாகனமும் கொடியுமாகிய மயிலையும் சேவலையும் விடுத்துஉள்ளேசென்று, பரமசிவனையும் பார்வதாதேவியையும் வணங்கித்துதித்து நிற்க, அதுகண்டபரமசிவன் சந்தோஷப்பெருக்கினால் அவர்முன்னே திருநடனஞ்செய்தருளினார். அப்போதுமஹாவிஷ்ணுவும் பிரமதேவனும் வந்து தங்கள்வாகனங்களாகிய கருடனையும் அன்னத்தையும், அக்கைலைமலையின் ஒருபக்கத்தில்விட்டு உள்ளேபோயினர். அச்சமயத்தில் அங்கேசாபத்தால் பூதகணத்தலைவர்களாயிருந்த சூரன், பதுமன், சிங்கன், தாருகன், ஆகியநால்வரும் மயிலுக்கும் சேவலுக்கும் அருகிற்சென்று அவற்றைநோக்கி முருகக்கடவுளுக்கு வாகனமும் வெற்றிக்கொடியுமாகிய உங்களுடைய பராக்கிரமத்தையெடுத்துச் சொல்லவல்லவர்யார், அப்படியிருந்தும் கருடனும், அன்னமும் தங்களுக்கு மிஞ்சியவல்லவர்கள் இல்லையென்று உங்களையவமதித்து உங்களுடன் போர்செய்யச்சித்தமாவிருத்தலால் நாங்கள்உங்களுக்குச்சகாயமாய்வருகிறோம்என்று கலகஞ்செய்தார்கள்.

அதைக்கேட்டமயிலும் சேவலும் அவர்களைச்சேர்த்துக்கொண்டு கோபத்துடன் சீறிக்கருடனையும் அன்னத்தையும் விஷ்ணுலோகம் பிரமலோகம் வரையிலும் அடித்துத்துரத்தித் திரும்பிக் கைலைமலைச்சாரலில்வந்துசேர்ந்தன தேவர்களிதைச்சகிக்கமாட்டாது கைலாயத்துக்கோடிவந்து திருநடனதரிசனஞ்செய்து வெளியேவந்த சுப்ரமண்யரோடு முறையிட்டார்கள்; அவரதற்கிரங்கி அந்தபூதகணத்தோர் நால்வரையும் அழைப்பித்து, நீங்கள் இக்குற்றத்திற்காக உலகத்தில் அசுரகுலத்திற்பிறந்து அங்கும் தேவர்களுக்குத்துன்பஞ்செய்வீர்கள், அக்காரணத்தால் நம்முடைய வேலாயுதத்தாலிறந்து கதியடையக் கடவீர்கள் என்று சாபித்தருளினார்.

அப்போது சூரனும் பதுமனும் அவரையடிவணங்கித்துதித்து நாங்கள் பிறக்குங்குலத்தில் செய்யுந்தவத்தால் தங்கள் வேலாயுதத்தினால் இறக்கும்போதுநாங்கள்மயிலாகித் திருவடியைத்தாங்கவும் சேவலாகிக்கொடியாயிருக்கவும் கிருபைசெய்தருளவேண்டுமென்று வேண்டி வரம்பெற்றுக்கொண்டு இருவரும் ஒருருவமாய் மாயையின்வயற்றில் சூரபத்மனென்னொருவனும், சிங்கமுகனென்னொருவனும், தாருகனென்னொருவனும் இவ்வுலகில் அசுரர்களாய் பிறந்தார்கள். அவர்கள்,பின்பு வீரயாகமுதலிய தவங்களைச்செய்து,ஈசுவரனிடத்தில் பிரபலவரங்களைப் பெற்றுக்கொண்டு, அதிககர்வத்தினால் தேவர்களுக்கு மிகத் துன்பஞ்செய்துகொண்டு ஆயிரத்தெட்டண்டங்களையும் ஆண்டிருந்தார்கள். அவ்வருத்தங்களைச் சகிக்கமுடியாதவர்களாய் தேவர்கள் பரமசிவனிடத்துவிண்ணப்பம்பண்ண அவர் அத் தேவர்களின் துன்பத்தைநீக்கும் பொருட்டுக் குமாரசுவாமியை யுற்பத்தி செய்யவெண்ணி ஐந்து



முகங்களோடும் அதோமுகமும் கூடினவராய் பார்வதிதேவியாருடைய திருமுகத்தை நோக்கும்போது அப்பரமசிவன் தேகத்தினிடமாய் நின்று அநந்தகோடிசூரியப்பிரகாசம் பொருந்திய மஹாவீரியம் உண்டாய் நெற்றிக்கண் வழியாக ஐப்பிசி மாசம் பூர்வபக்ஷத்துப் பிரதமைதிதியில் ஆறுபொறிகள் தோன்றி, துவிதியைதிதியில் பரமேஸ்வரி கெற்பஸ்தகமாயிருந்து, திருதியைதிதியில் அக்கினிபகவானிடத்தில்கொடுக்க, அவன்வகித்து சதுர்த்திதிதியில்கங்கையில்விட,கங்கைச்சகியாமல்சரவணத்திற்சேர்க்க, ஆறுகுழந்தைகளாகத் திருவவதாரமாய் பஞ்சமிதிதியில் கிருத்திகா தேவிகளால் பால் கொடுக்கப்பட்டு ஷஷ்டிதிதியில் பார்வதிதேவியார் பரமேசுவருடன் எழுந்தருளிவந்து குழந்தைகளையெடுக்கஒரே திருவுருவமாய்ஆறுமுகமும், பன்னிரண்டு கரமுமான திவ்யஸ்வரூபத்தைத்தரித்துத்தேவர்களை யநுக்கிரகித்ததனால் இந்த ஆறுதினங்களும் குமாரஸ்வாமியினுடைய யுற்பவதினங்களாகவே குமாரதந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதன் காரணமாக உலகத்தில் இவ்விரதத்தை அநுஷ்டித்து வருகிறார்கள். இந்த விரதத்தை யநுஷ்டிப்பவர்களுக்கு சகலபாபங்களும் சக வியாதிகளும் ஒழிந்து அஷ்ட ஐஸ்வர்யமும் கல சம்பத்தும் உண்டாகும். எண்ணிய கோ ரிக்கைகளெல்லாம் சித்தமாய் நிறைவேறும் வருடந்தோரும் ஐப்பசிமாசப் பூர்வபக்ஷம் பி தமைதொடங்கி ஷஷ்டிவரையில் கந்தஷஷ்டி விரதத்தை யநுஷ்டிப்பவர்கள் அந்த ஆறுதின மும் இரண்டுகாலங்களிலும் நித்யாநுஷ்டான ங்களைமுடித்துக்கொண்டு கும்பத்திலும், பிம் பத்திலும், யந்திரத்திலும் சுவாமியை ஆவாஹி த்துப்பூஜித்து ஜபமும்சந்தர்ப்பணைமுதலியவற் றை விதிப்படிநடத்த வேண்டும். இவ்விரதத்தி ற்கு உபவாசமாயிருக்கவேண்டும், அல்லது ஹ விசுமுதலியவைகளைச் சொற்பமாய்புசிக்கவே ண்டும்.

இவ்விரதத்தை முசுகுந்தன்முதலிய சக்ரவர்த்திகளும் அநேகமஹரிஷிகளும் அடைந்தபலனையும் அதின்மகிமைகளையும் கந்தபுராணம் தேவகாண்டத்தில்காணலாம்.

## சர்வாலய தீபதரிசனம்.

ஸ்ரீகைலாசத்தில் பரமசிவன் பார்வதிசமேதராய் வீற்றிருக்கும்போது ஒருநாள் அங்கேற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒன்று ஒளிமழுங்குந்தருணத்தில் ஒரெலி, அபுத்திபூர்வகமாய் அதைத்தன்முகத்தால் தூண்டிப் பிரகாசிக்கச்செய்தது அதைநோக்கிக் கைலாசபதி திருவுளத்திற் கிருபைகூர்ந்து அவ்வெலிக்குத் தானவசரீரமும் தண்டச்செல்வமுங் கொடுத்து பூமியில் பிறக்கும்படி கடாக்ஷித்தருளினார். அவ்வெலியானது அக்கைலாசபதியினுடைய கடாக்ஷத்தினாலே மஹாபலி சக்கரவர்த்தியாய்ப்பிறந்து, சகல ஐஸ்வர்யத்தையும் அநுபவிக்குங் காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்திற்குப் போக வெத்தனித்துத் தன் இராஜசின்னமுதலிய சகல ஆடம்பரத்துடன் சிவாலயத்துட் பிரவேசித்து பிரதக்ஷிணம் வருகையில் அவ்விடத்தி லேற்றியிருந்த தீபநெய்யில் ஓர்துளி இச்சக்கரவர்த்தியின் தேகத்திற் சொட்டியது; உடனே சக்கரவர்த்தியின்தேகமுழுமையும் வ்ரணம் (புண்) கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் பரமேசுவரர் கிருபைகூர்ந்து சக்ரவர்த்தியே! நீமிகவும் அகங்காரியாகையால் இஃதுண்டாயிற்று; நீ இன்றுமுதல் உத்தேசித்து நெய்முதலியபொருள்களால் ஆலயங்கட்குத் தீபமேற்றுவையேயானால் உனக்குஇந்தவ்ரணந்தீர்ந்து சாயுச்சிய பதவிகிடைக்குமென்று அசரீரியாகத்திருவுளம்பற்றியதைக் கேள்வியுற்ற சக்ரவர்த்தியானவர் ஆனந்தமடைந்து அக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலும் மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபமேற்றிக்கொண்டுவருங்காலத்தில் ஒருநாள் ஸ்ரீகைலாசபதியான சிவபெருமானானவர் திருவுளமிரங்கிக் கார்த்திகைமாசம் பூர்வபட்சம், கார்த்திகை நட்

சத்திரத்தில் தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்ரவர்த்திக்குச் சாயுச்யபத மளித்தருளினார். அக்காலத்தில் சிவதரிசனத்திற்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அச்சோதியைக் கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உக்ர உஷ்ணந்தணியும் பொருட்டுப் பொரி யவல் நிவேதனம் பண்ணினார்கள்.

இவ்வாறு கைலாசபதி மாபலி சக்ரவர்த்திக்குச் சோதிரூபமாக தரிசனம்கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள்தோறும், கார்த்திகைமாசம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தீபம் வைக்கவும், சுட்கப்பனை (சொக்கப்பானை, கட்டவுமாயிற்று.

இதற்கு ஆகமவிதிஎன்னெனில், கார்த்திகை நக்ஷத்திரத்திற்கு முன்னாளாகிய பரணிநக்ஷத்திரத்தின் சாயுங்காலம் அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலானவைகளின் மூலமாக மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத்தீபத்தை சுவாமிசன்னிதியிற்றானே பூஜித்து வைககவேண்டும்; அதற்குமேல் தென்னை, பனை' கமுகு, வாழை, மூங்கில்என்னும் இந்த மரங்களில், ஓர் விதமரத்தை ஆலயத்திற்கும், இந்திரதிக்குக்கும் மத்தியஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும்; இம்மரத்துக்குத் தீபதண்டமென்றுபெயராம். இத்தீபதண்டம் கர்பக்கிருகத்துவிமானம் எவ்வளவுஉயரமோ அவ்வளவுஉயரமாவது அந்தவிமானக்கழுத்தினளவாவது இருக்கவேண்டும். இவ்விததீபதண்டத்துடன் உலர்ந்தஓலையாவது சருகாவது விமானம்போல் கட்டவேண்டும். மேற்சொன்ன பரணி நக்ஷத்திரத்துக்கு மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்தசமேதமாய் சோமஸ்கந்தமூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி மேற்படிதீபம் சுவாமிக்குமுன்னேவரும்படியாகக் கொண்டுவந்து தீபதண்டத்தை சம்ஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அத்தண்டத்தின்மேல் வைத்துச் சருகுகளைக்கொளுத்திவிட்டு அச்சருகுகள்எரிந்தபின்பு மேற்படிதண்டத்தைச் சேதித்துவிடவேண்டும். அந்தச்சோதியைச்சிவமாகப் பாவனைச்செய்துதரிசிப்பவர்களுக்குஇம்மையிற்செல்வமும், மறுமையில்மோக்ஷமுமுண்டு. மலையைச்சேர்ந்தஸ்தலங்களில் நக்ஷத்திரம்பிரதானமாகவும், சமுத்திரஞ் சேர்ந்த ஸ்தலங்களில் பௌர்ணமிபிரதானமாகவும் தீபம்வைக்கவேண்டியது. இவை ஆகம முறைமை.

## திருவண்ணாமலை தீபதரிசனம்.

முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணுவுக்கும் பிரமதேவனுக்கும் பிரமவாதம் நேரிட்டதால் அதைத்தீர்க்கும்பொருட்டாகச் சிவபெருமான் அக்கினிமலைவடிவாய் அவர்கள்மத்தியில் நிற்கவே சிவத்தினது அடிமுடியைக் காணா நிமித்தம் பிரமதேவன் அம்ஸவடிவமாய் ஆகாயமார்க்கமாய் மேலுலக முழுதுஞ் சென்று தேடியும் முடிகாணாமையால் அலுப்புற்று பூவுலகத்தில் வந்துசேர்ந்தனன். மகாவிஷ்ணுவானவர் வராக அவதாரமெடுத்துப் பாதாளலோகமுழுதும்சென்று பார்த்தும் அடி காணாமையால் அலுத்து பூவுலகில் வந்துசேர்ந்தனர். இவைகளையறிந்த சிவபெருமான் ஓர் அக்னிமலைவடிவாகி அவ்விருவர்களின் கலகத்தைத்தீர்த்தருளினார். பின்பு அவர்கள் வேண்டுதலினாலே அவர் ஒரு சிறிய மலையுருக்கொள்ள, அதைக்கண்டபிரமதேவனும் மகாவிஷ்ணுவும் மகிழ்ச்சியோடவரைநோக்கிச் சுவாமி! இம்மலையினுச்சியில் ஒருஜோதிஎந்நாளும் தெரியும்படிக்குக் கிருபை செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானானவர்,

“கார்த்திகைக்குக் கார்த்திகைநா ளொருசோதி
மலைநுனியிற் காட்டாநிற்போம்
வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிப்பிணியில்
லாதுலகின் மன்னிவாழ்வார்
பார்த்திவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு
தவறுமிது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு
முத்திவரங் கொடுப்போ மென்றார்”

அப்படி யருணாஜலபதி திருவாய் மலர்ந்தருளியபிரகாரம் அம்மலையின்மேல் தீபதரிசனமாகிக்கொண்டுவந்த பாவனையாக இப்போதும் தீபதரிசன மாகின்றபடியால் அத்தினத்தில் இந்திர தீர்த்த முதலிய தீர்த்தமாடி கிரிவலம் வந்து தீபதரிசனஞ்செய்து துதிப்பவர் அளவிலாச்சம்பத்தையு மோக்ஷத்தையு மடைவர் என்பதாம்.



## சங்கரசில்பி சரித்திரம்.

கேளுங்கள்சாதுக்களே! முன்னே பண்டரிபுரத்தில் எழுந்தருளிய கடவுளை இடையறாது பக்திசெய்து அதனால்முத்தியடைந்த நரஹரிபக்தரின் சரித்திரத்தைச் சொன்னோம். இனி சங்கரசில்பியின் சரித்திரத்தையெடுத்துச் சொல்லுகிறோம் அன்புடன்கேட்பீர்களாக, என்று நாபாசிமுனிவர் கூறுகின்றார்.

சாதுக்களே! உஜ்ஜயினீநகரத்திற் கருகிலுள்ள மஹாகாலமென்கிற க்ஷேத்திரத்தில் பஞ்சப்ரம்மசந்ததியிலுற்பவித்த சங்கரசில்பியென்பவர் ஒருவரிருந்தார். அவர் சாக்ஷாத் ஸ்ரீ நீலகண்டசர்வேசனாகிய பரமசிவத்தினிடத்தில் இடையறாத அன்புபூண்டு பக்திசெய்து வாழ்ந்துவருநாளில் ஓர்நாள் அந்த க்ஷேத்திரத்தில் வைசியகுலத்திற் பிறந்த சுகபதி யென்னும் பிரபுவானவர்சங்கரசிற்பியினிடம்வந்து, ‘ஐயா! சிற்பாச்சாரியரே! அடியேனுக்குச் சிலநாளாக ஓர் எண்ணமிருக்கிறது, அந்த எண்ணமானது தங்களால்தான் நிறைவேறவேண்டும். அதாவது, நமதூருக்குஅடுத்த பானுபதிஎன்னுங்கிராமத்தில் எமது பெரியோர்களால் ஓர் சிவாலயங்கட்டி சிலாவிக்கிரகங்களும் இலிங்கமூர்த்தியும் செய்துவைத்து சம்ப்ரோக்ஷணை முதலியவைகள் நடந்துவெகுகாலமாய் நித்யபூஜாநைவேத்யங்களும் குறைவறநடந்து வருகின்றன. அவ்வாலயப்ரம்மோற்சவாதிகளை நடத்துவதற்குத் தாம்பிரவிக்கிரகப் பெருமானில்லாமையினால் அப்பெருமானைச் செய்துவைத்து உற்சவாதிகளை அதிவிமரிசையாய் நடத்தவேண்டுமென்கிற அவாவிருப்பதனால் அவ்விக்கிரகத்தைச் சிற்பசாஸ்திரவிதிப்படி தங்கள் கரத்தினாலேயே சிருஷ்டித்துக் கொடுத்தருளவேண்டும்” என்று கேட்க, அவ்விதமேசெய்துகொடுப்பதாய் வாக்களித்து ஓர்நல்ல முகூர்த்தத்தைநியமித்துக்கொண்டு அந்நாளையில் அவ்விக்கிரக வேலையை ஆரம்பித்து சிற்பசாஸ்திரவிதிப்படி பத்துமாசத்தில் பூர்த்திசெய்துவைத்து அவ்வைசியப் பிரபுவாகிய சுகபதியை அழைத்து, “ஐயா! சுகபதிப்ரபுவே! உம்முடைய விக்கிரகவேலை முடிந்துவிட்டது; இனிபெற்றுக்கொண்டுபோகலாம்” என்ன, அதற்கு பிரபுவிக்கிரகத்தைதரிசிக்கவேண்டியவனாயிருக்கின்றேன்; ஆதலால் அப்பெருமானைக் காண்பியுங்கள்; என்று கேட்க, அதுகேட்ட சில்பியானவர் கொண்டுவந்து காண்பிக்கவும், அச்சுகபதி அவ்விக்கிரகத்தைக்கண்டு ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்ந்து அச்சில்பாசாரியருக்குச் சன்மானமுதலிய பொருள்களியாவுந்தந்து, அவ் விக்கிரகத்தைக் கொண்டுபோய் அவ்வூர்க் கருகேயிருக்கின்ற கந்தவதிஎன்னும் நதியிலே ஜலவாசமாக வைத்துவிட்டுச் சென்றனர். அதை யறிந்த திருடர்கள் சமயம்பார்த்திருந்து அதனை யபகரித்துக்கொண்டுபோய் விட்டனர்.

அதையறியாமல் அவ்வைசிய குலதிலகராகிய சுகபதியானவர் கும்பாபிஷேகஞ் செய்வதற்கு நல்லமுகூர்த்தநாள்நியமித்து ஹோமாதி முதலியவைகளுக்குச் சாமக்கிரியையசேகரம்பண்ணிக்கொண்டு அவ்

வாலயமுழுதும் பந்தரிட்டு, புஷ்பமாலைகளால் தோரணங்கள் கட்டி துவசங்கள்நாட்டி, வாத்தியகோஷத்துடன் கந்தவதீநதிக்கரையைவந்தடைந்து அவ்விடத்தில்செய்யத்தகுவனவாகிய சடங்குகளைச்செய்து முன் ஜலாதிவாசமாக வைத்தவிடத்திற் சென்று பார்த்தபோது அவ்விக்கிரகங் காணாமையால் அந்நதிமுழுதுந் தேடியலைந்து, திகைத்துப் பெருமூச்சுவிட்டு "அந்தோ! நான் என்செய்வேன், எத்தனைகாலமாக இப்பெருமானைச் செய்துவைக்கவேண்டுமென்று நினைத்து முடிவுபெற்றும் காணாமையினால் நான் பாவியாய்விட்டேனே! இனி யென்னசெய்யப்போகிறேன்! கும்பாபிஷேகஞ் செய்வதற்கு உரிய காரியங்களெல்லாம் குறைவற சேகரித்திருந்தும் இப்படிப்பட்ட அநீதமானகாரியம் யாரால் நடந்தேறியதோ! அல்லது சிவபெருமானின் திருக்கூத்தோ! இனி நம்முயிரை இவ்வுலகினிடத்து வைத்திருப்பது தகுதியன்று. உயிர்விடுவதேநலம், என்று துணிந்தவராய் கட்கத்தை யெடுத்துக் கண்டத்தின்மீது வைக்குஞ் சமயத்தில் சங்கரசில்பியானவர் ஓடிவந்து அக்கட்கத்தை ஈர்த்தெறிந்து ஐயா! சுகபதிப்பிரபுவே! ஈதொரு பெரியகாரியமா? இப்படியுயிர்விடுவதால் உலகம்பழிக்காதோ? ஆகிலும்பெரிதல்ல இன்னும் கும்பாபிஷேகஞ் செய்வதற்கு மூன்றுதினமிருக்கிறது; அதற்குள்ளேயே இவ்விக்கிரகத்தை முன்னிலும் அதி உன்னதமாக முடித்துத்தருகிறேன் நீர்கவலைப்படவேண்டிய தில்லையென்று பலவாறுசுகபதிப்பிரபுவைத் தேற்றி அவரை யழைத்துக்கொண்டுபோய் அவரிருப்பிடம் சேர்த்துவிட்டு மூன்று நாளுக்குள் தீர்த்துக் கொடுக்கின்றேனென வாக்களித்துவிட்டு வரும்போதே இச்சங்கர சில்பியாரின் பக்தியை வெளிப்படுத்துநிமித்தம் உமாபதியான கடவுள் அச்சங்கரசில்பியாரை தாபஜ்வரத்திற்காளாக்கினர்.

அந்த சுரநோயுடனே தன தில்லஞ்சென்று படுக்கையில் வீழ்ந்து எழுவதற்கும் சக்தியற்றவரா யிருக்குஞ்சமயத்தில், சுகபதிப்ரபுவானவர் சில்பாசாரியின் வீட்டிற்கு வந்து "எவ்வளவு வேலையாயிற்று" என்று படுக்கையிலிருக்கின்றவரைக்கேட்க "இதுபரியந்தம் உம்முடைய வேலையைத்தான் செய்துவிட்டுவந்து சற்று இளைப்பாருகிறேன். தாங்கள் அடிக்கடி வரவேண்டாம். உங்கள் காலவரையறைப்பிரகாரம்தீர்த்துக்கொடுப்பதாய்வாக்களித்திருக்கின்றேனே அதுதவறுவேனு?" என்றுசொல்ல; அதுகேட்டுச்சுகபதியானவர் "ஈதென்ன!படுத்துக்கொண்டிருந்தால் இன்னும் கும்பாபிஷேகம் ஒருநாள்தானே இருக்கிறது; நீர்தானே என்னை முன்னுக்குக்கொண்டுவருபவர்? நீர்தானேஎன்னுயிரைக்காப்பாற்றுகின்றவர்? நீர்தானே மூன்று நாளையில் கொடுக்கக்கூடியவர்?" என்று பலவாறாக வியசனப்பட்டு "நாளையதினம் போது சாயுங்காலத்திற்குள் விக்கிரகத்தைக் கண்ணினால் கண்டாலொழிய உயிர்தரிக்கமாட்டேன்." என்று சொல்லிவிடடுத் திரும்பிப்போந்தனர். இவைகளையெல்லாம் கேட்ட சங்காசில்பாசாரியர் சிவபெருமானை நினைந்து "அந்தோ! என் சுரப்பிணி நீக்காமலிருப்பதால் என் வார்த்தைகளெல்லாம் பொய்த்துப்போகின்றனவே. யான் எவ்விதம் விக்ரகவேலையைப் பூர்த்திசெய்யப் போகிறேன்? அச்சுகபதிக்குச் சொல்லிய காலவரையறையும் நெருங்கிவிட்டதே! இனி கிணற்றில் விழுந்து உயிர்துறப்பதே நலம்" எனக் கருதினவராய் அச்



சுரப்பிணியுடன் தட்டுத்தடுமாறிக்கொண்டெழுந்திருந்து தன்வீட்டிற்கருகேயுள்ள கிணற்றின் அருகே வந்து "ஓஜெகதீசா! கைலாசவாசா! நடராஜா! திரிநேத்ரா!" என்று பலவாறாக சிவபிரானுடைய திருநாமங்களைச் சொல்லி துதிசெய்யுஞ் சமயத்தில் அந்தச் சிற்பாசாரியின் பக்திக்கு மனமகிழ்ந்த கைலாசபதியானவர் தனக்குரிய சிவச்சின்னங்களை யெல்லாம் நீக்கி, மானிட வடிவமெய்தி பட்டு பீதாம்பரங்களை மடியாத்தரித்து மேலுத்தரீயந் தரித்து விபூதிருத்திராக்க மணிந்து ஓர்பிரமசாரியைப்போல் பிராமணத்திருவுருக்கொண்டு அக்கிணற்றினருகே வந்துநின்று, "இருகண்களையுமூடித்துதிசெய்கின்ற சில்பாசாரியரே! நீரோ மஹா புண்ணியர், நீரிக்கிணற்றைவிட்டகலும் நான் உம்மிடம் வந்து அதிகநாளாகிறது. நான் அன்னமருந்தி மூன்றுநாளானபடியால் அதிகபசியுடன் வந்திருக்கின்றேன். எனக்கு ஒருபிடி அன்னமளிப்பீராகில் உமக்கு அனந்த புண்யங்கள் உண்டாகும். உம்பெயர் எங்கணும் வழங்கிவரும்." என்று பலவாராகக் சொன்னபோது சில்பாசாரியர் பார்த்து "கிணறு வெட்டப்போன விடத்தில் பூதமுண்டானது போலவும், சிவபூசைவேளையில் கரடி புகுந்தது போலவும், விருந்து வந்துவிட்டதே! ஆகிலும் பெரிதல்ல, பசிப்பிணியை தீர்த்துவிட்டு நாம் கொண்ட எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்" என்று நினைத்து வந்தபிரமசாரியை அன்புடன் அழைத்துக்கொண்டு வந்து தான் வேலைசெய்யுமிடத்தி லமரச்செய்து தனது வீட்டிற்குச் சென்று மனைவியை நோக்கி, 'பெண்ணே! பிரமசாரியர் ஒருவர் வந்திருக்கின்றார். சீக்கிரம் சமையலாகட்டும். முன்னே அவர் சற்று பசிதணிந்திருப்பதற்கு பக்ஷண மிருக்கிறதா?" என்று கேட்க, அவ்வம்மையார் பாயசம் செய்து பாத்திரத்தி லிட்டுக் கொடுக்க, அதனை வாங்கிக்கொண்டு அப்பிரமசாரியருக்குக்கொடுக்க, அவர் அப்பாயசத்தை அன்புடன்பெற்று அருந்தி "ஆஹா! இவ்வளவு மதுரமான பாயசம் எனக்கு எக்காலத்திலும் கிடைக்கப்பெற்றிலேன். இன்னும் கொஞ்சம் கொண்டுவாரும்" என்று கேட்க, அவர் அவ்விதமேகொண்டுவர வீட்டிற்குச் செல்லும் சமயத்தில் வந்த பிரமசாரியானவர் தானிருந்த இடத்தில் தாம்பிரத்தினால் அதி ரூபலாவண்யமும் சிற்பசாஸ்திர விதிப்படியுள்ளதுமான ஓர் சிவரூபவிக்கிரகத்தைத் தன தருளால் உண்டாக்கி வைத்துவிட்டு மறைந்தருளினார்.

பிறகு அந்த சில்பாசாரியர் வீட்டுக்குச் சென்றுமிகுதியாயுள்ள பாயசத்தைக்கொண்டுவந்து அவரைப் பார்த்தபோது அந்த பிரமசாரிய ரில்லாமல் அவரிருந்த இடத்தில் திவ்வியமானவிக்கிரகமொன் றிருக்கக் கண்டு "ஈதென்ன ஆச்சர்யம்! இந்தவிக்கிரகமானது இப்பொழுதேபுதிதாகசெய்து முடிந்திருக்கின்றதே! பெட்டியிலிட்ட ஆயுதமும் இங்குவந் திருக்கின்றதே! இந்த விக்கிரகத்தைச்செய்து சிதறிக்கிடக்கின்ற தாம்பிரத்தூள்களும் பரவி யிருக்கிறதே! கருக்கட்டிவார்த்த உலையிலும் அனலிருக்கின்றதே! இது ஒருநாளில் செய்துமுடியக்கூடியவிக்கிரகமல்லவே! சாக்ஷாத் ஜகதீசனால் செய்யப்பட்டதே யொழிய மற்றவரால் செய்யமுடியாது! வந்தவர் சிவபெருமானேயன்றி வேறில்லை, என்று நினைத்து இது "என் புண்யமே புண்ணியம். இனி நான்பிழைத்துவிட்டேன், ஓஜகதீசா!உன்னுடைய காருண்யத்தை என்னவென்று

எடுத்துக் கூறுவேன்? உன் திருவிளையாட்டை யார் கண்டுகொள்ள வல்லவர். இன்னும் சற்று நேரமிருந்து மிகுதியான பாயசத்தையும் அருந்திவிட்டுப் போதலாகாதா? நான் பாபியோ? எனக்கு பார்வதி சமேதராய் தரிசனங் கொடுக்கலாகாதா? இப்படியும் அடியேனை வஞ்சகம் செய்யலாமோ?" என்று ஆனந்தக்கூத்தாடி சகஸ்த்ர நாமங்களை உச்சரித்து அசைவற்று நிற்கையில் சிவபெருமான் பார்வதி சமேதராய் ரிஷபத்தின்மீ தாரோகணித்துவந்து,, அப்பா! "எனதடியவனாகிய சிற்பாசாரியரே! உனதுபக்திக்குமகிழ்ந்து நீசெய்யும்வேலையை நான்செய்து வைத்துவிட்டுப்போனேன். நீஉனது காலவரையறைப்பிரகாரம்கொடுத்து கும்பாபிஷேகமுதலிய யாவும் செய்விக்கும்படிச்சொல்வாய். இதுமுதல் அவ்வாலயத்தில் எனக்குப் பாயசம் செய்து நிவேதனஞ்செய்யும்படி யடியவர்கட்குச்சொல்வாயாக. அவ்வித பாயசஞ்செய்து அன்புடன நிவேதனம் செய்பவர்களுக்கு வேண்டிய இஷ்ட சித்திகளையும் சகல சௌபாக்யத்தையும் கொடுத்தருளுவோம்" என்றுகூறி "இன்னும் நீ சிறிது காலம் இவ்வுலகத்தில் சுகமாக வாழ்ந்திருந்து என் திருவடி நிழலை யடைவாய்' என்று வாக்களித்து அந்தர்த்தானமானார்.

இப்படியிருக்க, அச்சுகபதி யென்னும் பிரபுவானவர் சில்பாசாரியினிடம் வந்து "விக்கிரகம் தீர்ந்துவிட்டதா?" என்று கேட்க, "அதுஎன்னால்தீரவில்லை. அண்டரண்டபுவன சராசரங்களை யெல்லாம் உண்டாக்கியருளிய சாக்ஷாத் எம்பெருமான் முடித்து வைத்திருக்கின்றார் வந்து தரிசியும்" என்று காட்டின மாத்திரத்தில் அப்பிரபுவானவர் மிக்க ஆவலோடு சென்று அவ்விக்கிரகத்தைத் தரிசித்துப் பணிந்து ஆராவின்பத்திலாழ்ந்து ஆனந்தக்கூத்தாடி தேகம் புளகாங்கிதங்கொண்டு என்பு நெக்குருகப் பதிகங்களைப்பாடி ஐயாசிற்பாசாரியரே! இவ்விக்கிரகத்தைச் சாக்ஷாத் சிவருமானால் செய்யப்பட்டதேயன்றி வேறில்லை. இது மூன்றுநாளில் முடியாதென்று உலகத்தி லுள்ளவர்களெல்லாங் கூறினார்கள். யானும் காலவரையறை பார்த்துவிட்டுமுடியாவிட்டால்உயிர் விடத்துணிந்தேயிருந்தனன். அது உமது பக்தியாலும் சிவனருளாலும் முடிந்துவிட்டது, உனது பக்தியேபக்தி! உன்மாட்டு அப்பெருமான் வைத்த அன்பே அன்பு! "உன்னால் யானும் பிழைத்தேன். இனி யான்கொண்ட விரதம் பூர்த்தியாய்விட்டது" என்று அச்சில்பாசாரியரின் அடிபணிந்து "தேவரீருக்கு என்னகைம்மாறு செய்யப்போகிறேன்" என்று சொல்லி தனக்குள்ள சொத்துக்களில் பாதி சில்பாசாரியருக்குக் கொடுத்துமனமகிழ்வித்து, அவரிடம் உபதேசம்பெற்று, அவரையே ஆசாரியராய்க் கொண்டு அவ்விக்ரகத்தைப் பெற்று அவர் கரத்தினாலேயே மந்த்ரபூர்வகமாய் கும்பாபிஷேகஞ் செய்வித்து பக்தி செய்துக்கொண்டு வந்தனர். அதுமுதல் சில்பாசாரியரும், இடைவிடாது பக்திசெய்து சிலகாலம் வாழ்ந்துவந்து முத்தியடைந்தனர். அதுகாரணமாக அப்பெருமானுக்கு சில்பமூர்த்தி யென்று பெயர்வந்தது.

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ராஹ்மணே நமః

# விஸ்வகர்ம குலோபகாரி.

OF THE REGISTRAR

## ஒற்றுமை.

அலைகடல் சூழ்ந்த அகிலத்தின் கண் "ஒற்றுமை வேண்டும், ஒற்றுமை வேண்டும்" என்னுங் கூக்குரலால் 'ஒற்றுமை' என்னும் பதமானது, தற்காலத்தில் உலகினர் பலராலும் அடிக்கடி நமது செவிப்புலனும் சலிப்படையும்படி, வழங்கிவரக்காண்கிறோமல்லவா? இப்படிப் பன்முறை தற்போது வழங்கிவருவதற்கு இன்றி யமையாததாய் நிற்கும் இப்பதத்தின் அர்த்தந்தான் என்னை? அஃது உள்ளபடி தற்போது நம்மால் அநுஷ்டிக்கப் படாமையாலன்றோ, பலதரமும் நமது கர்ணேந்திரியத்தை விட்டுப் பிரியாதிருத்தற்கு ஹேதுவாயிற்று? என்னும் ஆசங்கை நமக்கு வரக்கூடுமென்பது அதிசயமன்று. ஆயினும் இப்பதத்தின் உண்மைப்பொருளையும், அதைக்கிரமப்படி யநுஷ்டானத்திற்குக் கொண்டு வாராமையால் வரும்பயனையும் பற்றிய விசாரத்தில் இப்போது நாம் தலையிட்டுச் சிறிது சீர்தூக்கிப்பார்த்துப் பின்னர் அதன் அத்தியாவசியத்தைப் பற்றிப் பேசத் தொடங்குவாம்.

"எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்" என்னும் முதுரையையும் நாம் கவனிக்கவேண்டுவது நியாயமாதலின், இப்பழமொழியையே பீடிகையாகக்கொண்டு, "ஒற்றுமை" என்பதைப்பற்றிப்பரியாலோசிப்பாம். அப்போது "ஒற்றுமை" என்பது ஒருமித்து நடத்தல் என்னும் பொருளையே புலப்படுத்தும். படுத்தவே, எது அல்லது எவை? எவருடன்? எதனை? ஒருமித்து நடத்தல் வேண்டும் என்னுங் கேள்வி நிகழ்கின்றது.

அதற்கு, ஒருகுலத்திற் பிறந்தா ரொருவர் தமது மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண சாக்ஷியாய்த் தம்மைப் போன்ற சேதனருடன் ஒருமித்து, தமது குலாபிவிருத்திக்கு உரித்தானசெயல்களை நடத்துதல் வேண்டும் என்று விடைபகரலாம். ஆயின், அவ்வித நடை தற்காலத்தில் நம்மவருள் நடைபெற வில்லையோவெனின், இல்லையென்றே சொல்லலாம். அது, தற்காலத்தில் நாம் மேல் நிலைமைக்குவாரமல் நாளடைவில் க்ஷீணதசையையடைந்து வருவதினாலேயே குன்றின்மேலிட்ட தீபம்போல் பிரகாசியாது குடத்திலிட்ட தீபம்போல் ஒளிகுன்றி வருகின்றதென்பதை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு ஒற்றுமையானது நம்முன் நிலை பெருமைக்குக்காரணம் யாதோவெனின். நாம் அதைக்கிரமப்படி அநுஷ்டானத்திற்குக் கொண்டுவாராது ஏககாலத்திலேயே உலகப் பொதுநோக்கத்திற்குக் கொண்டுவர முயல்கின்றமையேயாம்.

ஆகவே அவ்வொற்றுமையானது பிரதமத்தில் எவ்விடத்தில் வேரூன்ற வேண்டுமோ அவ்விடத்தைப்பற்றி நாம் பேசுவது

அத்தியாவசியகமாம். அந்த இடந்தான்
குலப்பிறப்பென்பர். ஒவ்வொரு குலத்தி
லும் பிறந்தா ரொவ்வொரும் தத் தமது
குலத்தின் மேல்நிலைமைக்கானவிஷயத்தில்
சிரத்தைகொண்டு ஒருமித்த மனத்தராய்
உழைத்துவரின் அவ் வொற்றுமையான
து நிலைபெற்று உலகப் பொதுநோக்கத்
திற்குச் சிறிதும் பிரதிகூலப்படாது, அநு
கூலப்பட்டே வருமென்பதற்கு ஐயமே
யின்றும். இஃது அறையிலாடி அம்பலத்
திற்கு வரவேண்டும் என்னும் பழமொ
ழிக்கிணங்கியு மிருக்கின்றது. ஆதலின்,
பிரதம விஷயமாகிய குலப்பிறப்பில் இவ்
வொற்றுமையானதுவேறான்றும்படி அநு
ஷ்டிக்கவேண்டிய முறைமையை நாம் கவ
னிக்க வேண்டுவது இன்றி யமையாத
தாம்; அப்போதுதான் ஒற்றுமை யென்
னும் பேச்சானது வாய்அளவினின்றும்
செய்கையளவிற்கு வரக்கூடும். எப்பழிப்பு
நேரினும் பரிகாரம்உண்டு. ஆனால், குலப்
பழிப்பிற்கோ பிராயச்சித்தம் ஒருசிறிதும்
இல்லவேயில்லை. ஆகையால் குலத்திற்பிறந்
தமேன்மக்கள் பெருந்தன்மை, மேன்மை,
ஆசாரம், உபசாரம் முதலிய நற்குண நற்
செயல்களை மேற்கொண்டு தம்மினத்தா
ரோடு ஒன்றுகூடி தம்குலாபி விர்த்திக்
கான செய்தக்க செயல்களை நடத்துவதில்
கண்ணோக்க முள்ளவர்களா யிருப்பர்.
ஏனெனில் அற்ப பழிநேரினும் அது சந்
திரனிடத்துள்ள சிறுகளங்கம் எப்படிமே
லின்றுயாவர்க்கும் விளங்கும்படி பிரகா
சிக்கின்றதோ அப்படிப் பிரகாசிக்கநேரும்
என்கிற பீதியினாலேயாம். இவ்வொற்
றுமை, குலாபிவிர்த்திக்குச் சாதகமாக்கு
வதற்கு முன்னர், நாம் கவனிக்கவேண்
டியபடி இன்னொன்றுண்டு. அது ஒவ்
வொருவரையும் பந்தித்துள்ள பெற்றார்;

சகோதரர், களத்திரம், புத்திரமித்திர பந்
துவர்க்கங்கள் என்னும் முதற்படியாம்.
இம்முதற்படியில் ஒற்றுமையானது கைகூ
டின் பிறகு குலப் பொதுநன்மைக்கும்
அதன்மேல் உலகப் பொதுநன்மைக்கும்
அதனைச் சாதகமாக்கவேண்டும்.

பரதன் மேன்மை பெற்றது எதனால்?
குடிப்பிறப்பை கவனித்ததனா லன்றோ?
கானகவாசியாகிய ஒருவேடன் இக்குடிப்
பிறப்பைகவனித்தபரதனைப்பார்த்து ஐயா!
உம்மை நான் புகழ்வது வேறொன்றற்
கன்று; தாங்கள் தங்கள் குலவிஷயத்தில்
கருத்தூன்றி எப்படி சூரியனானவன் தன
து கிரணங்களின் ஒளியால் மற்ற ஒளிகளை
எல்லாம் தனக்குள் அயிக்கியப் படுத்திக்
கொள்ளுகிறானோ, அப்படி தங்கள் மரபி
னோரது புகழ்களையெல்லாம் தங்களுடைய
புகழில் அடங்கச் செய்துகொண்டதற்கே
யாம்" என்று புகழ்ந்துள்ளமையை நாம்
மறத்தற்கூடாது. குலத்தின்கண் ணிகழ்
தற் பாலதாய குற்றங்களைக் குணமாகக்
கொண்டு, கரும்பைக் கடித்துத் தின்றா
லும், இடித்துத்தின்றாலும் சுவை பொன்
றே என்பது போன்றும், "கோடிகொடுத்
தும் குடிப்பிறந்தார் தம்முடன் கூடுதல்
கோடி பெறும்" என்றும் ஔவைப்பெரு
மாட்டியின் அருள்வாக்கிற் கிசைந்தும்,
குலத்தின்உயர்வுக்கானவிஷயங்களில் ஊக்
கமேலிட்டு, சதுர்வித உபாயங்களால்
இனத்தாரை யணைத்துப்பிடித்துச் செய்
தக்கவற்றை நாம் செய்தலே வேண்டும்.
பட்சி ஜாலங்களில் சண்டாளத்துவம்பெற்
றுள்ள காகமுமல்லவோ தனது இனத்தை
க்கைசோர விடுவதில்லை. அங்ஙனமிருக்க
ஆறறிவினராகிய நாம் நமது இனத்தை
வீண்பழிசுமத்தி அகல விடுவது அழகா
மோ? கடும்வெய்யலிற் கால்துடித்து வரு



மவர்க்கு எப்படிமரமானது குளிர்நிழலைக்
கொடுத்து அவர்களது தாபத்தைத்தணிக்
கிறதோ அப்படியும், எப்படி பயன்தரத்
தக்க ஒருமரமானது உள்ளூரிலேயே பழு
த்துநிற்கிறதோ அப்படியும் இருந்து விள
ங்குவதல்லவோ மேன்மக்களது சிறந்த
குணம். புலி பசித்தாலும் புல்லைத்தின்னு
மா? அதுபோல் மேன்மையை விரும்பு
வோர் வறுமையடையினும் இழிதொழில்
செய்ய ஒருபோது மிசையவேயிசையார்.
"சலம்பற்றிச் சால்பிலசெய்யார்மா சற்ற,
குலம்பற்றி வாழ்துமென்பார்" என்னும்
பொய்யா மொழியை நாம் கடைப்பிடித்
தல் வேண்டும்.

நமது குலத்தின் அருமையும் பெரு
மையும் நாம் அறிந்துகொள்ளும் ஆசை
யை அண்டயாதிருப்பதினாலன்றோ? இரு
மையென்று சொல்லப்படும் துன்பக்கடலி
னின்றும் கரையேறுவது கூடாமையா
யிருக்கின்றது. நம்மவர்களுக்குத் தற்
போது இல்லாதபொருள்களில் சிரேஷ்ட
மாயுள்ளது எதுவென்று ஆராயுமிடத்து
அது, ஒற்றுமையென்றேபுலனும். இதனை
நமதுகுலத்தார் பெரும்பான்மையும் அச
ட்டைசெய்து விட்டமையின் நாம்உன்னத
ஸ்தானத்தை யடைவது அரிதாயிருக்கின்
றது. எத்தனைவிதங்களாக இதுபற்றி நம்
மிற் சிறந்தார் பலவழியில் எடுத்துரைத்
தும் அது நம்மவர்செவிக்கு நாராசம்காய்
ச்சிவிட்டதுபோல் ஆய்விடுகின்றது. அல்
லாமலும், சிலர்க்கு அது செவிடன்காதில்
ஊதியசங்குபோலும், குருடன்முன்தோ
ன்றும் சூர்ய ஒளிபோலும் பயனற்றுப்
போகின்றது. அன்றியும் இவ்வொற்றுமை
ச்சம்பந்தமான விஷயத்தை நம்மவரிலெவ
ரேனும் நம்மவரிடம் பேசும்போது, அவர்
கள் அவ்வாறுபேசப்பட்டவரைத் தம்மிஷ்

டப்படி ஏளனம்செய்வதும், துன்பஞ்செய்
வதும், அலக்ஷியப்படுத்துவதும் அம்முய
ற்சிக்கு மாறாகக் கெடுதலைசெய்வதும் சக
ஜமாயிருக்கின்றன. அந்தோ! நமது முன்
னோர்கள் இவ்வொற்றுமையையே பெரும்
பூஷணமாகப் பூண்டுவந்ததாலன்றோ? இந்
நில உலகம் நிலைப்பதற்கான சவுகர்யங்கள்
பலவற்றைப் பலருங் கொண்டாடும்படி
நாட்டிவைத்தனர். இதனை நமதுகுலத்தில்
வழங்கிவரும் சாஸ்திரங்களை நன்கு கவ
னிப்பின் இத்தன்மைத்தென அறிந்துகொ
ள்ளலாம். ஆஹா! நமதுமுன்னோர்கள் சுய
நலனைப் பாராட்டாது குலப்பொது நல
னையே பெரிதுங்கருதி அதன் அபிவிருத்
திக்கான விஷயத்தில் தலையிட்டும், மனஞ்
சலியாது உழைத்துவர என்னபாடு பட்ட
னர். "இன்பம் விழையான் வினைவிழை
வான் தன்கேளிர், துன்பம் துடைத்தூன்
றுந் தூண்" என்னும் தமிழ் வேத[illegible]
த்தை மேற்கொண்டு நமது உயர்வின்
பொருட்டுழைத்த நமது பெரியோர்கள்
செய்யாமற் செய்தவுதவிக்கு நாம் என்ன
கைம்மாறு தேடினோம். ஒன்று மில்லையே?
இது நினைக்க நினைக்க என்ன பரிதாபத்
தையுண்டுபண்ணுகின்றது! எந்தநன்றியை
நாம்மறந்தபோதிலும்செய்ந்நன்றிமட்டும்
ஒரு போதும் மறத்தற்பாலதன்றும். மற
ப்பவர் உயர்வடையாரென்பது திண்ணம்.
ஆகையால் குலாபிமானிகளே! இவ்வொற்
றுமையைக் கடைப்பிடியாதொழுகின் நாம்
நன்னிலைமைக்கு எங்ஙனம் வரக்கூடும்.
கண்ணை இமைகாப்பதுபோன்று இதனைக்
கடைப்பிடித்து, உடையிழந்தவன் கையா
னது எப்படி இழந்த க்ஷணத்திலேயே
சென்றுஇழந்தவனுக்கு உதவிபுரிவதுபோ
ன்று நமது குலாபிவிர்த்திக்கேற்ற காரிய
ங்களை உடனுக்குடன் செய்துவர நாம்முற்

படுவதே நமக்கு இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் வீட்டுப்பயனையும் தருவதற்கேதுவாம். இந்நோக்கத்தைக் கொண்டே நம்பத்திரிகைவாயிலாக நம்மவர்க்கு இதுபற்றி எச்சரிக்க நேர்ந்தது. இனியேனும் நாம் நமது குலத்தின் மேன்மையை முன்னிட்டு ஒருமனப்பட்டவர்களாய் உழைத்துவரமுற்படவேண்டும். அவ்வாறு செய்துவரின் உலகப் பொதுநோக்கத்திற்கும், நமது முன்னவர்களைப்போன்று நாமும் பயன்படக் கூடியவர்க ளாவோம். நாலாறு சேர்ந்தால் ஒருபாலாறாகும். ஒரு கைதட்டினாலோசைகிளம்புமா? தனிமரம் ஒருபோதும் தோப்பாகாதே? இத்தியாதி நியாயங்களால் நமது குலத்தினரியாவரும் ஒன்றுசேர்ந்து ஊக்கபுத்தியுடன் ஆவசியகமான ஒற்றுமைக்குரிய விஷயங்களைச் செய்து முடித்து நமது பூர்வீகரைப் போலவே நாமும்பெரும்புகழ்பெற முயல்வோமாக. எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவானாக.

சி. கி. சுந்தராச்சாரியார்.

## “விஶ்வகர்ம குலோபகாரி”யின் விளக்கம்.

1. இப்பெயர்பூண்ட பத்திரிகை உதையமாயிருப்பதைப்பார்வையிட்டேன். அதன் ஆசிரியரும், சொந்தக்காரரும், பத்திரிகையைச் சரிவரநடத்திக் கீர்த்திபெறத் தகுதியுடையவர்களே. பத்திராசிரியர் தமிழ்க்கல்வியில் நல்ல வித்வான். இலக்கியவிலக்கணங்கள் நன்றாய்த் தேர்ந்தவர். இவருக்குச்செய்யுள்நடையில் எவ்வளவுவல்லமையோ அவ்வளவும் வசனநடையிலுமுண்டு.

2. பத்திரிகை சொந்தக்காரர், பத்திரிகையை 'மானேஜிங்' செய்வதில் நீண்ட அநுபோகமும், சொந்த அச்சாபீசும், பத்திரிகை முட்டுப்படாமல் நடத்தும் சௌகரியமும், தொடர்ந்த உத்சாகமும், பழுத்த குலாபிமானமும் பெற்றவரென்பது நிதெரிசனம்.

3. இவர்க ளெடுத்துக்கொண்ட பத்திரிகாசுதந்தரம் தீர்க்கயோசனை யோடும் எடுத்துக் கொண்டதாய் மதிக்கத்தகும். புனைந்துள்ள பத்திரிகையின் பெயரைத்தனித்து “விஶ்வகர்மன்” “விஶ்வகர்மபோதினி” என்னாது உலகமுதற்கடவுளையும், அதிற்றோன்றியகுலத்த வரையும், அவர்களின் சீர்திருத்த உபகரிப்பாகிய பிரையோஜனத்தையும், விளக்கிக் காட்டுவதாகிய “விஶ்வகர்மகுலோபகாரி” என்னும் பெயர் சாலஅழகுடைத்து.

4. பத்திரிகையின் தோற்றமும், அதன் கிளர்ச்சியும், உருவமும், சித்திரிப்பும், பார்க்கும் போதெல்லாம் மனதைக் கவருகின்றன. இதன்உள்ளீடான பத்திரிகாலக்ஷணக்கிரமங்களும், வரிசைப்பாடும், வியாசங்களின் தொகுப்பும், ஜாதிச்சீர்திருத்தம்,இம்மை மறுமைக்கேதுவாகிய மதவிஷயம், பொதுவர்த்தமானமுதலிய அரிய பெரிய விஷயங்களைக்கவனித்ததில்மனதிற்குமிகக் களிப்பூட்டுகின்றது. இவ்விஷயங்களை அநுபோகம்பெற்றபத்திராசிரியர்கள் நன்குமதிப்பார்களென்பதிற் சந்தேகமில்லை.

5. இனிப் பத்திரிகை தழைத்தோங்குவதற்கு இருவர்களின் விடாமுயற்சியும், பிரயத்னங்கள் மட்டுமே போதியதன்று, நம்மினத்தவருள் விஷய தானிகளுடைய ஜாதி சீர்திருத்தங்களுக் கேதுவாகிய வியாசங்கள் பத்திரிகையில் மலியவேண்டும். இதரவிஷயதானிகளுடைய வியாசங்களை எதிர்பார்ப்பதோடும், பல பத்திரிகைகளையும் பின் தொடரவேண்டும்.



6. நம்மவருள் பலவித்வான்களும்,குலாபிமானிகளும் சென்னை விஸ்வகர்மகுலோத்தாரண சபைப் பிரசுரத்துக்கு முன்வந்து ஆதரித்த விஷயதானிகளை மறப்பதற்குக் காலமுந்தவில்லை. அப்படியுள்ள கொடையாளிகளையும், மற்றைய விஷய தானிகளையும், வினயவந்தனங்களோடும் அவசியம் வேண்டற்பாலதே. எந்தப்பத்திரிகையில் வியாசங்கள் மலிகின்றதோ அத்தனைக்கும் ஜாதியார்களுக்கும் குல சீர்திருத்தங்களுக்கும் ஆதிக்கமுண்டாகும்.

7. இப்பத்திரிகா மகவுதோன்றித்தழுவவதைக்கொண்டு விஶ்வகர்மன் போட்டியிலேற்பட்டதாக நமது நேயர்கள் நினைக்கக் கொஞ்சமும் ஞாயமில்லை. ஜாதியார்களாகிய நாம் தற்காலமிருக்கிற நிலைமைக்குச் சென்னையிலும், வெளிப்பிரதேசங்களிலும் இன்னு மெத்தனை பத்திரிகைகளுதையமானாலும் போதியதன்று. இதனால் நமது பத்திரிகா நேயர்கள் கருணையோடும் வலிந்து முன்வந்து ஜாதியார்களுக்குச் செய்ய வேண்டிய தத்தம் கடமைகளை இப்பத்திரிகை வாயிலாகவும் புரிவார்களென நம்புகின்றனன்.

௮. ஷை இரண்டு நண்பர்களும் பத்திரிகை பிரசுரித்து வெளியேறுவதில் கண்ணுங்கருத்துமா யிருக்கவேண்டிய தவசியமென்றாலும், ஏற்பட்டிருக்கிற வேதாத்தியயன பாடசாலையிலும், ஆங்கிலோவர்னாகுலர் பிரைமரிஸ்கூலிலும், ஜாதியார் சீர்திருத்தத்திலும், பிராணபதனமாயிருந்து வரவேண்டியதென்பதை ஞாபகிக்கலானேன். இனி பாடசாலைகள் முதலியவிஷயங்களில் எடுத்துக்கொள்ளும்பிரையாசையால் உண்டாகும் விர்த்தியாம்சங்களைப் பிரதி மாதங்களிலும் எதிர்பார்ப்பதில் விருப்பம்.

9. ஆனால் மேற்கண்டஎல்லாக்காரியங்களுக்கும்திரவியம் முதற்காரணமாகையால் அதை யீட்டுமார்க்கம் சந்தாதாரர்களை அன்றிமற்றில்லை. சந்தாதாரர்களைச் சென்னையிலும், வெளிப்பிரதேசங்களிலும் அதிகம் சேகரிக்கவேண்டும். சந்தாத்தொகைகளைச்சரிவர வசூலிக்க வேண்டும். நல்லவழியிலுபயோகிக்க வேண்டும். 3 - மாசங்களுக்கொருதரம்வரவுசெலவுகளையும் பாடசாலை நிர்வாகங்களையும் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும். இது முதலிய சத்காரியங்களை ஒழுங்குபடச் செய்வதில்தான் விவேகிகளின் விருப்பமாகுமென்பது எனது நம்பிக்கை.

10. இனி நாம்செய்யவேண்டிய உரிமைகளாவன:—ஸ்ரீ விஸ்வேஸ்வரன் திருவருளினால் ஆங்காங்கு நம்மவர்கள் நல்ல நிலைமையிலும், கல்வியிலும், செல்வாக்கிலும், இயன்றநாகரீகத்திலும் சிறந்து விளங்குவதால் அவரவர்களும், ஜாதியார் முன்னேற்றத்துக்குரிய பல பொது நன்மையின்பொருட்டு, இந்தப்பத்திரிகைக்கு போஷகர்களாகவும், நன்கொடையாளராகவும், சந்தாதாரர்களாகவுமுன்வரவேண்டும். மற்றவர்களை உடன்படுத்தவும் வேண்டும். இவைநமதுரிமைகளாம்.

11. இதற்காகக் கொடுக்கும் போஷகத்தொகை,நன்கொடை, சந்தாமுதலிய தொ

ளைகளும், டம்பார்த்தமாகிய துர்விநியோகங்களுக்கன்று. சொந்த உபயோகத்துக்கன்று. திர்ஷ்ட்டமாக நடைபெற்றுவருகிற ஜாதிச்சிறுவர்களுக்கு வித்தியா தானங்களும், குலோத்தாரணத்துக் கேதுவாகிய பலசீர் திருத்தங்களுமாகிய உத்தமோத்தம புண்ணிய விஷயங்களுக்குமேயன்றி பிறிதில்லை. இவைகளையாவரும் அநுபவ சித்தமாய் நம்பத்தக்கது.

12. மேற்கண்ட சென்னை சிந்தாதிரிப்பேட்டை "விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலை" முதலியசம்பந்தத்தில் போஷகஸ்தான விருப்பமுள்ளவர்கள் ரூ. 25 ஒரே தடவையிலும், பேப்பர்சந்தா பிரதிவருஷமும் செலுத்திவரலாகும். நன்கொடையாளர் சந்தர்ப்பங்களின்படி மனங்கனிந்த எவ்வளவு தொகைகளையும், பிரதிவருஷ சந்தாவையும் செலுத்தலாகும். மேற்படி இரண்டுவழியிலு மீடுபட முடியாதவர்கள் வருஷ சந்தா ஒன்றுமட்டுமே செலுத்திவரலாகும்.

13. இதில் எனது சகோதரர்களோடும் யான் ஒருபோஷகராயிருக்க உடன்படுகிறேன். போஷகர்ஸ்தானத்துக்கு ரூ.25 சரியென்றாவது, அதிகம் கம்மியையாவது, சகோதரர்களிந்தப்பத்திரிகை மூலமாய்த் தெரிவித்து நிரணயிக்கிற தொகைக்கு சித்தமாயிருக்கின்றேன். எல்லாச் சகோதரர்களுக்கும் வந்தனங்கள்.

ஸ்ரீ. மு. முக்கண்ணாச்சாரியர்.
வைஸ்பிரிஸிடெண்டு
விஸ்வகர்ம குலோத்தாரணசபை சென்னை.

## விஸ்வதபிரான்

(12-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இப்படியாக ஆத்மணிநகரத்தில் பிரபாவத்வ முற்பத்தியாயிருந்த அக்காலத்தில் பிரபஞ்சத்திற்கு மூவர்பரமதுஷ்டர்களாய் அகோரச் செயல்களுடையவர்களாய் அரசாட்சிசெய்யலுற்றார்கள். அப்படியானவர்களில் அநாதீஸனொருவன் கங்காநதி சங்கமதீரத்தில் ஜேத்தீரரால் சங்கரிக்கப்பட்டான். மற்றைஇருவர்களாவது:— அதராபுரியில் மகேந்திரன் என்பவனும், ஜீஸங்கி மாநகரத்தில் சக்ரதரன் என்பவனும், வீரப்பிரதாபிகளாய் அவர்களுக்கு அபீஷ்டமானவற்றை யடைவதில் உக்ரமானவர்களாயும், தர்மத்தை லெக்ஷியாதவர்களாயு மவர்கள் காலத்தை மனம்போன போக்குப்படி நடத்திக்கொண்டு வருங்காலத்தைக் கிஞ்சிற்றும் யெண்ணாம லவர்களின் நிகழ்காலத்தையே சந்ததமானதென்று எண்ணியும், அவர்களின் காம்பீரமான நிலைமைகளோடு அதிபலத் தலைவர்களாய் வசிக்கலுற்றார்கள். நிற்க,

ஜேத்தீரர் அநாதீஸனை சங்கரித்தகாலத்திலவனுடைய துணைவர்கள் ஜீசங்கிநகரத்திற்குப் புறப்பட்டுபோய்ச் சேர்ந்து அந்நகரபதியைப்பார்க்க அவன் சிறுங்கம் கிரிகூடபர்வதங்களில் விநோதவாஸமாயிருந்து சிலகாலஞ்சென்று வரவும் அவனிடம் அநாதீஸன் முடிவடைந்ததை முறையிட்டார்கள். துணைவன் போனதைக்கேட்டதும் துக்கதாபமுடையவனாயும் தன்வீரத்துணைவனைக்கொன்றதைப்பற்றி கோபதாபமுடையவனாயு மவனது ஜேஷ்ட குமாரனுக்கு போர்சம்பவித்த இடத்திற்சென்று



அநாதீஸனுடைய அங்கச் சின்னங்களைக் கண்டு வரும்படியாய் ஆக்ஞாபித்தான். அதன்பேரில் அப்பிரதமகுமாரன் கங்கை சங்கமுகத்தைக்குறித்துப் புறப்பட்டான். புறப்பட்டசிறிதுகாலத்தில் விஸ்வதபிரான் ஜெனனவைபவத்தால் பூமிஅதிர்ச்சி ஏற்படலாயிற்று. இப்படியாக, ஜீஸங்கிநாதகுமாரன் சங்கமதீரத்தை யடைந்துபார்க்க அநாதீஸனுடைய சிரக்கூடுமாத்திரமஸ்திசேஷமாய்க் கிடக்கவும், அவ்விடத்தில் பூதபைசாசங்கள் வசித்துக் கொண்டிருந்ததையும் பார்த்துவிட்டுத் திரும்புங்காலங்குஆரண்யமத்தியில் த்வஜஸ்தம்பமொன்று விளங்குகின்றதைக்கண்டு, அதன் சமீபத்தில் சென்று பார்த்து நாட்டப்பட்டிருந்த சிலையில் வரைந்துள்ளதை வாசித்துணர்ந்து அதைப்பெயர்த்தெடுத்துக்கொண்டு ஜீஸங்கி நகர்போய்ச் சேர்ந்தான். நிற்க,

ஜேத்தீரச் சக்கரவர்த்தியாருடைய தேவியின்கர்ப்பத்தில், சர்வபூத தயாபராயும், ஜகத்பாலகராயும், கருணாநிதியுமான யாதொரு மூர்த்தியான விஸ்வதபிரான் ஆவிர்பவித்து, ஆத்மணி நகரத்திலிரண்டு பாலசூரியர்கள் எழுந்தருளியதுபோல் பாஸ்கர உதயகாலத்தில் ஜனனமானார். அத்தினத்தில் பூமி அதிர்ச்சி ஏற்படக்கூடிய காலவரைகிட்டினமையாலும், மார்க்க சங்காரண்யத்தில் பூமிக்குள்ஐந்தனல் கனலால் பஞ்சலோகங்களுமுருகி அக்கினிதண்டமாய் கடினத்வமாகி அவ்விடத்தின் அண்டமுகடு பிளவுபட்டுவெளியானபடியாலும், விஸ்வதபிரான் ஜெனன சம்பவமானபடியினாலும் பூமி அதிர்ச்சி ஏற்படலாயிற்று. அதனால் ஜீவகோடிகள் விஸ்வதலோஹிதா! விஸ்வதலோஹிதா! என்று முழக்கம்பெற்றதுகள். சிறிதுகாலத்தின்பின் லோஹிதரும் ஜனனமானார். விஸ்வதலோஹிதாள் சிசுத்வமாய் வளர்ந்துவருகவும், ஆத்மணிநகரமானது அமிர்தகடத்தைப்பெற்ற தேவருலகம்போல் விளங்காநின்றிருந்தது.

இப்படியிருக்க ஜீஸங்கிநகராதிபதியான சக்ரதரேஸ்வரன் சிங்காதனத்திலிருந்து பிரதானிகள் சூழ்ந்திருக்க சிலையைப்பார்த்து விஸ்வதலோஹிதாள் ஜனனமாகப் போகிறார்களென்ற சங்கதிகளை யுணர்ந்து நெடுமூச்செறிந்து ஆ, ஹா! அன்று பூமி அதிர்ச்சி நிகழ்ந்ததனாலன்றோ" யென்று ஒருசிங்கமானது தன்னிருப்பில்மற்றொரு விலங்கு வரக்கண்டு ஆக்ரமிப்பதுபோல் ஆவேசனாய் தனது குமாரர் ஒன்பதுபேர்களையும் நிறுத்தி சொல்வதாவது:—"இந்த விஸ்வதலோஹிதன்கள் ஜெனித்தபோதே இந்த அதிர்ச்சிசம்பவம் நிகழ்வதானால் அவர்கள் பருவகாலத்தில் என்னசம்பவம் நிகழ்விப்பார்களோ? ஆனால் பிரபஞ்சத்தில் நம்சமுகத்தின்முன் எதிர்முகமாய் நின்ற ஜீவர்களைக்காண்கிலோம், ஆயினும் நம்வீரத்துணைவனான அநாதீஸனைத் தொலைக்கும்படியானவலிமையுடையோர்ஏற்பட்டனரன்றோ! இனி பிரபஞ்சத்தில் மனோபீஷ்டமாய் நாம் சஞ்சாரஞ்செய்வதற்கும் இடையூர் வரலாகுமோ? இனிநீங்களெல்லாம் படைகளோடு நான்குதிக்குகளிலும் பிரவேசமாகி, நாடு, நகர், வனம், கிரி, வனாந்திரம், தீவுகள் யாவற்றிலும் தேடி விஸ்வத லோஹிதாளைப் பிடித்துக் கொண்டுவந்து சேரவேண்டியது; என்று ஆக்ஞாபனஞ்செய்ய, அவ்விதமே உத்தண்டர்களாய் நான்குதிக்கிலும் புறப்பட்டார்கள்.

இப்படியாக இவர்கள் ஆக்கிரமமாய்வரும் சங்கதியானது அயல்நகரத்தரசராலும், தூதுவர்களாலும் ஆத்மணிநகரத்திற் கெட்டவும், ஜேத்ரீரச்சக்ரவர்த்தி முதலானோர் மந்திராலோசனைசெய்ய காசிப ரருளியதாவது:- "இந்தவிஸ்வதலோஹிதாள் பத்துவயது பரியந்தம் துஷ்டர்கள் பார்வையில் தென்படலாகாது. அவர்களை அதுவரை காக்கப்படவேண்டியது. ஆனதால் அவர்கள் காஞ்சனபூமிக்குச் செல்வதேநலமாகும். ஆத்மணிநகரமும் அரசின்றி இருக்கலாகாது." என்றருளியபடி ஜேத்ரீரரிசைந்து ஒருவாறு பாலர்களைப் பிரிவதின்பொருட்டு கவலை அடையப்பெற்றும் மறுபடி தேறுதலுடையவராய் ஒருகம்பீரமான கஜத்தின்பேரில் காசிபரோடு விஸ்வதலோஹிதாளை ஆரோகணமாகச்செய்து, அரசுமுதலானோர் தினகரனைப்பார்த்த கண்களைப்போல் திராடகம்பெற்று ஆசரித்து அனுப்பினர்கள்.

அப்படியே காசிபர், வனம் வனாந்திரத்தைக்கடந்து காஞ்சனபூமியை யடைந்தார். அங்கு ஓர் மகத்தான ஐராவதம் நின்றதுபோல் பிரகாசியானின்றிருந்த கிரியில் செல்வதான குகைத்வாரத்தை யடைந்து, கஜத்தினின்று மவரோகணமாகவும், அவ்விடத்தில் பஞ்சகிருத்தியாதிபர்கள், பெரியோர்கள் வருவதையுணர்ந்து, எதிர்கொண்டு ஆனந்தபரவசர்களாகி, உபசரித்து அஞ்சலியஸ்தர்களாய் எழுந்தருளிய காரணத்தை அறிய அவாவுடைவர்களானார்கள். அப்பொழுது காசிபர் அருளுவது: "நம்சந்ததியர்களே! இவ்வவதார புருஷர்கள் லோகபரிபாலனார்த்தமாய் ஆவிர்ப்வித்திருக்கிறபடியால் இவர்களை அதிபாலத்வம் நீங்கும்வரை துஷ்டர்களினின்றும்காத்துவரவேண்டியது. ஆனதால் தகுந்த கோட்டை நிர்மாணஞ்செய்து அதில் இவர்கள் சகல கலாபயிற்சிபெற்று வரவும், சுகவாசமாயிருக்கவும், நிர்மாணிக்கவேண்டியது உங்கள்கடமையாகும்." என

(தொடரும்)

சாலிவாடிபுராதீனம்
தர்மபதி.

## வித்தியாதானம்.

"தானம்" என்பது பலபொருளொருசொல்லேனும் ஈண்டுத்தம்முடைய பொருளொன்றைப் பிறர்க்கின்பம் பயப்பான் கருதி மனமுவந்தளிப்பதையே பொருளாகக்குறிக்கும். இப்பொருட்டாயதானம் பத்துவகைப்படுமென்பர். சிலர் பதினாறுவகைப்படுமென்பர். சிலர் இருபத்தைந்துவகைப்யடுமென்பர். சிலர். ஆகவே அன்னதானம், சொன்னதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம், வித்தியரதானம் என பலவகைப்பட்டு விளங்குமென்ப. இங்ஙனம் பலதிறப்பட்டுள்ள இத்தானம் யாவும் தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் என மூவகையி லடங்குமென்பர். இதுவே உத்தமதானம், மத்திமதானம், அதமதானம் என பெயர்பெறும்.

இவற்றுள், தலைப்படு தானமாவது:—தருமத்தாற் சம்பாதிக்கப்பெற்ற பொருள்களைக்கொண்டு குற்றமற்ற பெரியோரையடுத்து கொள்ளெனப்பணிந்து மனமுவந்து அளித்தலாம்.



இடைப்படு தானமாவது:—அறிவில்லார், தரித்திரர் முதலியவரைக்கண்டு மனமிரங்கி யீதலாம்.

கடைப்படு தானமாவது:—புகழ், அச்சம், ஆசை, கைம்மாறுமுதலி யாதேனுமொன்றி னிமித்தமாய்க் கொடுத்தலாம்.

இவ்வாறுய தானங்கள் யாவும் பெறுவார்க்கு இன்பத்தைக் கொடுப்பதேயாயினும் வித்தியாதானமொழிந்த மற்றவையெல்லாம் இம்மையில் இன்பமொன்றனையே பயத்தற்பாலது. இவற்றுள் அன்னதானம் பிறிதின்றும். இவ்வன்னதானத்தையும் பின்னதானமாக்கி முன்னதானமாய் நின்று இம்மையிலின்பத்தையு மளித்து மறுமையில்வீட்டையுந் தரக்கூடியது வித்தியாதானமொன்றுமட்டுமே. என்னே? அன்னம் சரீரத்தை வளர்த்தற்குரியது. சிறிதுநேரத்திலழிவது. இரப்பவர்க்குப் பெரிதும் இழிவுறுத்துவது. அன்னத்தையாவது அதனை ஒத்த பிறபொருள்களையாவது யிரக்கப்புகுவதினும் தானிறத்தற்றுணித லினிதன்றோ? இதனானன்றே

"இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற்பறந்து
கெடுக உலகியற்றியான்."

"ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவினிளிவந்ததில்." எனவும் தமிழ்வல்லோர் கூறுப.

அந்தோ! இரத்தலின்கொடுமை இறத்தலினும்பெரிதே. இவ்வளவு பெருந்துயராற்றும் இரப்பாற்பெற்ற தானப்பொருளால் அடையும்பலனோ சின்னாளிலழியத்தக்கதேயன்றி நிலைபேறுடையனவுமின்றும். வித்தையோ எனின்? அறிவைவிர்த்திசெய்வது. இப்பிறவிமுழுது மிருப்பதன்றியும் மறுபிறவியினும் தொடர்ந்துநின்று துணைபுரியத்தக்க போற்றலுடையது. கொடுக்கக் கொடுக்கப் பெருகுவது. ஞாதிகள்முதலியவரால் கவரற்கியலாதது. எப்பொழுதும் மதிப்பைத்தருவது. இணையிலாமகிழ்ச்சியைத் தருவது. அறம், பொருள், இன்பம் எனும் புருஷார்த்தங்களைத் தந்து மறுமையில் வீடுபேறுந்தரவல்லது.

"ஒருமைக் கட்டாங்கற்ற கல்வியொருவற்
கெழுமையும் ஏமாப்புடைத்து." என

நமது தமிழ்ப்புலமைப்பெரியோர் கூறியுள்ளார்கள். இன்னுங் கல்லார்க்குங் கற்றோர்க்கும் பேதங்கூறுமிடத்து,

"விலங்கொடுமக்க ளனையரிலங்குநூல்
கற்றோரோடேனை யவர்."

'கண்ணுடையரென்பவர்கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.' என்றார்தேவர்,

"கல்லாவொருவன் குலநலம்பேசுத
னெல்லினுட்பிறந்த பதராகும்மே" எனவும்,

"கற்றிலாய்கலை கற்றுணரார்முக
முற்றுநோக்கின் மயானத்தை யொக்குமால்."

என்றார் பிறரும், இங்ஙனமாக எழுதுதற்கரிய செழுமையின்புதவும் கல்வியின் பெருமையை கூறற்கியலுமோ? இதனானன்றே,

"என்னதானங்களினு மன்னதானஞ் சிறந்த
தென்பர்பல்லோர் அன்னதானத்திலு மரியது
வித்தியாதானம்."

ஆகவே அன்னதானமுதலிய தானங்களிலும் வித்தியாதானமே மிகச்சிறந்ததென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்பெறும். தானவகையிற்சிறந்தது வித்தியாதானமென்பதை யுணர்ந்து பண்டைக்காலந்தொட்டு உலகிலுள்ளார் அரசாங்கபரிபாலகர் எல்லாம் வித்தியாபரிபாலனம் மிகச்சிறந்ததென பரிபாலித்து வருகின்றனர்.

மேலும் அன்னம் வஸ்திரம் சொன்னம் முதலியவைகளை யொருவர்க்களிப்பினும் அப்பொருள்கள் அவ்வவற்றாலாயபயனை

யளிப்பனவேயாம். வித்தியா தானமோ ஒருவற்குக் கொடுக்கப்பட்டபின் அன்னம் சொன்னம் முதலியபல்வகைப் பொருள்களையுந் தந்து சந்தோஷிப்பிக்கச் செய்வதாம். செய்வோர்(அனைவரும்) அன்னதானமுதலிய பலவகைத்தானங்களையும் செய்தபலனை யடைவாரென்பது நிச்சயம்.

விஶ்வகர்ம குலாசாரஞ் சிறிது குறையுமின்ஞான்று அதனை ஜீரணோத்தாரணஞ் செய்விப்பான் வேண்டி

“தங்குறைதீர்வுள்ளார் தளர்ந்துபிறர்க்குறூஉம்
வெங்குறைதீர் கிற்பார்விழுமியோர்.”

என்பதுபோல

சிரமொரு சிறிதுங்கருதாது உலகங்களிக்கும் பலவகைதானங்களில் மேம்படு தானமாய இவ்வித்தியாதானத்தை நங்குலச் சிறுவர்கட்கு

“வைப்புழிக்கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர்—செறின்வவ்வா
ரெச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.” என்றபடி

ஞாதியர் கவராததும், ஈதலிற்குறையாததும், அரசர் அபகரியாததுமாய் அளித்து அன்ன சொன்ன வஸ்திரபுஸ்தக மாதிய தானமுந்தந்து அவர்களை மேன்மக்களாக்கி நம்மைக்களிக்கச்செய்யும் வேதாத்தியயனபாடசாலை யதிபர்களும் விஶ்வகர்மகுலோபகாரி ஆசிரியாம் ஆச்சாரியவள்ளல்களும் நீடுவாழுமாறும் அன்னார்பேரும் புகழும் கதிரவனொளிசெல்லும் உலகமுற்றும் பாவுமாறும் ஸ்ரீவிஸ்வேசன் திருவருளைப் பெரிதும்.பிரார்த்திக்கின்றனன்.

சுபம்.

குறிப்பு:—மதுரையம்பதி யிற்றோன்றிய சிலபத்திரிகைகளி னுதவியானும் ஏனையருதவியானும் ஒருவாறுவேறுபடுத்தி எழுதி விஶ்வகம்மியர்கட்கு ஞாபகமூட்ட வெளிப்பட்ட இதனைப்பெரியோர் பொறுக்க.

எ. முத்துக்குமாரஸ்வாமி யாச்சாரி,
“செந்தமிழ் மாணவன்”
பறங்கிப்பேட்டை.

---

## உபமன்னியூபுத்திரரான பிராச்சீனசாலன் முதலிய பெரியோர்களுக்கும் கேகயன் புத்திரரான அசுவபதிக்கும் ஆத்துமக் கியானத்தைப்பற்றி நடந்த சம்பாஷணை.

---

ஆத்யந்தமாய் வேதப்பொருளை அறிந்து மேலான பதவிகளைப் பெற்றவர்களான உபமன்னியூ புத்திரரான பிராச்சீனசாலன் பூலுசன்சந்ததியாகிய சத்தியஜனயன், பல்லவி சந்ததியாகிய இந்திரத்தியூமன், சரகராட்சயன் சந்ததியானஜனன், அசுவதராசுவன் சந்ததியான ஊதிலன் ஆகிய இவர்கள் கூட்டங்கூடி நம்முடைய ஆத்மாவென்பதெது? பிரமம் யார் என்கிற பூர்வஞாயமெடுத்துக்காட்டும் வியாக்கியான விசாரணையில் பிரவேசித்தவர்களாகி, இப்பெரியோர் அருணன் புத்திரரான உத்தாலகர் சர்வபரிபூரண ஆத்மக்யானத்தை நன்றாய் அறிந்திருக்கிறாரென்றும், அவரிடத்துக் குடனே போகவேண்டுமென்றும், ஆலோசித்து அவரிடம் போனார்கள்.

ஆனால் அவர் இப்பெரியோர்கள் மிகவும் கற்றவர்களாய் இருந்தும், ஆத்மக்கியானத்தைப்பற்றி நம்மைக்கேட்க வந்திருக்கிறார்களே, அவர்கள் கேட்கிறதற்கு



முழுதுந்தெரிவிக்கநமக்குச்சக்தியில்லையே அவர்களுக்கு வேறொரு போதகரையாவது காட்டவேண்டுமென்று தமக்குள் ஆலோசித்து அவர்களைப்பார்த்து கேகயன் புத்திரரான அசுவபதி என்பவர் சர்வபரிபூரண ஆத்மக்கியானத்தை நன்றாய் உணர்ந்திருக்கிறார். அவரிடத்துக் கிப்போதே செல்லுவோமென்றார்.

அந்தப்படி அவர்களெல்லோரும் வந்தடைந்தபோது, அரசனான அசுவபதி அவர்களுக்குரிய வந்தன வழிபாடுகளைச்செய்தார். மறுநாள்காலையில் அவர்களுக்கு மரியாதைகளோடு விடைகொடுத்தார். ஆனால் அவர்கள் போகாமலிருக்கின்றதையும், அவரால்கொடுக்கப்படும் வெகுமானங்களை அங்கீகரியாதிருப்பதையுங்கண்டு, அவர்களோடு இதனடியில் வருமாறுபேசத்தொடங்கினார்.

அதாவது:—எனது இராச்சியங்களில் கொள்ளைக்காரரில்லை. உலோபரில்லை. மதுபானிகளில்லை. யாகாதிகிருத்தியங்களை அசட்டை செய்பவரில்லை. மூடரில்லை. விபசாரிகளில்லை. நீங்கள் எதில் துன்பமடைந்திருக்கமாட்டுவீர் என்றார். அப்பெரியோர்கள் யாதொரு குறையுஞ்சொல்லி முறையிட்டுக்கொள்ளாததினால் ஓ பெரியோர்களே! நீங்கள் எதைக்கோருவீர்களோ; அதைக் குறித்துஎன்னைக்கேளுங்கள் என்றார். அப்போதும் அவர்கள் யாதொன்றும் கேட்டுக்கொள்ளாததைக்கண்டு ஒவ்வொரு ஆசாரியருக்கு எவ்வளவு கொடுப்பேனோ அவ்வளவுஉங்களுக்கும் தருவேன் நில்லுங்கள் மஹா மேன்மைதங்கிய பெரியோர்களே யென்றார். அப்போதவர்கள் அரசனைப்பார்த்து நாம்உம்மைவந்து கண்டகாரியமின்னதென்று உமக்குத்தெரிவிப்பது அவசியமாதலால் நீர் அறிந்துதொழுகிற சர்வபரிபூரண ஆத்மக்கியானத்தை யெங்கட்குத் தெரிவிக்க வேண்டுமென்று மறுமொழி சொன்னார்கள். அதற்கவர் நாளையதினம், அதை உங்களுக்குத் தெரிவிப்பேனென்றார். அரசனுடைய நோக்கத்தை அப்பெரியோர்கள் தெரிந்துகொண்டு, மறுநாள் சீடர்களைப்போல அவர்களெல்லோரும் கையில்விறகுக் கட்டைகள் பிடித்துக்கொண்டு அரசனிடஞ் சென்றார்கள். அவரவர்கட்கு வந்தனமொன்றுஞ் சொல்லாமல், அவர்களைப்பார்த்து அடியிற்கண்டபடி பேசத்தொடங்கினார்.

ஓ உபமன்னியூ புத்திரரே! நீர் ஆத்மாவாக எதை ஆராதிக்கிறீரென்று வினவினார். அதற்கவர் ஓ வணங்கப்பெற்ற அரசனே! ஆத்மாவாக நீர் தொழுகிறசர்வபரிபூரணமாய்த் தன்மயமா யிராநின்ற வஸ்துவின் ஓர் சிறந்த கூறாகிய வானத்தை நான் தொழுகிறேன். ஆனதால் உம்முடைய குடும்பத்தில் சமயாசார சடங்குகளுக்காக சோமம் பிழிந்து சித்தப்படுத்துவதாய்த் தெரியவருகிறது. நீர் சுடருள்ள அக்கினியைப்போல் ஆகாரத்தைப் பட்சிக்கின்றீர். நீர் உமக்குப் பிரியமுள்ள வஸ்துவாகிய புத்திரன் முதலிய பொருள்களைக் காண்கின்றீர். சர்வபரிபூரண ஆத்மாவாக இதையார் ஆராதிக்கிறார்களோ, அவர்கள் போஜனங்களை அனுபவிப்பார்கள். ஒரு காதலனைக் கருதுவார்கள். அவர்கள்குடும்பத்தில் சமயாசார வநுஷ்டானங்கள் நிறைவேறக் காணுவார்கள். ஆனால் இதுதான் அந்த ஆத்மாவுக்குச் சிரசாக இருக்கிறதென்று மறுமொழிகூறினார். உமது சிரசு நஷ்டமாய்ப் போயிருந்தால் நீர் என்னிடத்துக்கு வந்திருக்கமாட்டீரென்று ராஜா சொன்னார்.

அரசன் அப்போது பூலுசன் புத்திரனை

கிய சத்திய ஜனயனைநோக்கி, ஓ பிரசன்ன யோகன் சந்ததியாரே! நீர் ஆன்மாவாக யாரைத்தொழுகிறீரென்றார். ஓ வணங்கப்பெற்ற அரசனே! நீர் ஆன்மாவாகத் தொழுகிற சர்வபரிபூரண தன்மய சொரூபத்தின் கூறாகிய ஆதித்தனைத் தொழுகிறேன். ஆகையால், உம்முடைய குடும்பத்தில் அநேக நானாவிதசொரூபங்கள் காணப்படுகின்றன. பெட்டைக் குதிரைகள் பூட்டிய ரதங்களும், தனமும், பெண்ணடிமைகளும், உம்மைச் சூழ்ந்திருக்கக்காண்கின்றேன். நீர் ஆகாரத்தைப் பட்சிக்கின்றீர். நீர் பிரியமுள்ள பொருளைக் கருதுகின்றீர். யாவர் இதைச் சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்றார்களோ அவர்கட்கெல்லாம் இந்த அனுபவங்கள் உண்டாயிருக்கின்றன. அவர்களுடையகுடும்பத்தில் வைதிக கர்மாநுஷ்டானங்கள் நிறைவேறக்காண்கிறார்கள். ஆனால் இதுவே ஆன்மாவின் நேத்திரமாக விருக்கின்றதென மறுமொழி சொன்னார். அதற்கரசன் நீர் அந்தகனாயிருந்தால் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றார்.

பல்லவி புத்திரனாகிய இந்திரத்தியூமனைப்பார்த்து வியாக்கிரபாத சந்ததியாரே! நீர் ஆன்மாவாக யாரைத் தொழுகிறீரென்றார். அதற்கவர், ஓ வணங்கப்பெற்ற அரசனே! நீர் ஆன்மாவாகத் தொழுகிற அந்தசர்வபரிபூரணதன்மய சொரூபத்தின் கூறாய் எங்கும்பரந்துவீசும் வாயுவை நான் தொழுகிறேன். அளவிறந்த காணிக்கைகள் உமக்குக் கிட்டப்படுகின்றன. அநேக ரதங்கள் உம்மைச்சூழுகின்றன. போஜனங்களைப் பட்சிக்கின்றீர். ஒரு பிரியப்பொருளைநோக்குகின்றீர். யாவர் இதைச்சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்றார்களோ அவர்களெல்லாம் போஜனத்தையனுபவிப்பார்கள். ஒரு பிரியப்பொருளைக் கருதுவார்கள். அவர்களுடைய குடும்பத்தில் சமயாசார வநுஷ்டானங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கும். ஆனால், இதுவே ஆன்மாவின் உயிர்ப்பாக இருக்கிறதென்று அவர் மறுமொழி சொன்னார். அரசன் உமது உயிர்ப்புப் போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்க மாட்டீர் என்றார்.

அவர் அப்போது சாகராட்சயன் புத்திரரான ஜனனைநோக்கி, ஓ சகராட்சயன் புத்திரரே! நீர் ஆன்மாவாக யாரைத்தொழுகின்றீரென்றார்? அதற்கவர் ஓ வணங்கப்பெற்ற அரசனே! நீர் ஆன்மாவாகத்தொழுகின்ற அந்தச்சர்வபரிபூரண தன்மயமாயிராநின்ற ஆகாயம்பரமாணுவைத்தொழுகின்றேன். அதனால் நீர் தனசம்பத்தையும் புத்திரசம்பத்தையு மடைந்திருக்கின்றீர். போஜன பட்சணஞ் செய்கின்றீர். காதற்பொருளைக் காணுகின்றீர். யாவர் இதைச் சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்றார்களோ அவர்கள் போஜன பட்சணஞ் செய்வார்கள். காதற்பொருளைக் காணுவார்கள். அவர்கள் குடும்பத்தில் சமயாசாரவநுஷ்டானங்கள் நிறைவேறப் பெற்றிருப்பார்கள். ஆனால் இதுவே ஆன்மாவுக்குடலாகஇருக்கிறதென்று விளம்பினார். அதற்கரசன் உமதுடல் அழிந்திருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றார்.

அவர் பிற்பாடு அசுவதராசுவின் புத்திராகிய ஊதிலனைநோக்கி ஓ வியாக்கிரபாதர் சந்ததியாரே! நீர் ஆன்மாவாக எவரைத் தொழுகிறீரென்றார்? அதற்கவர் ஓ வணங்கப்பெற்ற அரசனே! நீர்ஆன்மாவாகத் தொழுகிற பெருஞ்செல்வப் பொருளாகிய உலகமே, அந்தச்சர்வபரிபூரண சுயம்பிரகாசப் பொருளா யிருக்கின்றது.



அதனாலேதான் நீர் சம்பத்துள்ளவராகவும் குடிதழைக்கப் பெற்றவராகவும், இருக்கின்றீர். போஜன பட்சணஞ் செய்கின்றீர். காதற் பொருளைக் காணுகின்றீர். இதை யாவர் சர்வபரிபூரண ஆன்மாவாகத்தொழுகிறார்களோ அவர்கள் இவைபோன்ற அனுபவங்களைப் பெறுவார்கள். பிரியப் பொருளைக் கருதுவார்கள். குடும்பத்தில் சமயாசார வநுஷ்டானங்கள் நிறைவேறப் பெறுவார்கள். ஆனால் இதுவே ஆன்மாவுக் கடிவயிறாக இருக்கின்றதென்று சொன்னார். அரசன் உமக்குச்சலாசயம் வெடித்துப்போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றார்.

(தொடரும்)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

---

## தொழிற் குறிப்புகள்.

இந்த தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையுங் கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள்பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும்.

இவர்களுக்கு வேண்டிய முதற்சாதனங்களான இரும்பு, செம்பு, பித்தளை, ஈயம், வெள்ளி, பொன், மரம், கல் முதலியவைகளின் விவரம்.

இரும்பு:—அடியிரும்பு (Wrought Iron), வார்ப்பு இரும்பு (Cast Iron), எழுகு (Steel) என மூன்றுவகைப்படும்.

(a) அடி இரும்பு அல்லது இரும்பு பூமியின் சுரங்கங்களிலிருந்துவெட்டி எடுத்து நிலக்கரியுடன் சேர்த்து (Blast furnace) என்ற பெரியகுகைகளில் 1600°C சூடாயிருக்கும்போது உருக்கப்பட்ட பின்னர் நமக்கு முக்கியமாய் கம்பிகளாகவும், சட்டங்களாகவும், தகடுகளாகவும், மற்று மநேக விதங்களாகவும் செய்து அனுப்பப்படுகிறது. இந்த இரும்பு ஒன்றை கொல்லன் உலையில் ஒன்றோடொன்று சேர்த்து பத்தவைத்து நமக்கு வேண்டிய உருவமாய் மாற்றிக்கொள்ளும்படி உதவுகிறது.

(b) தண்டவாளத்தில் அதிக நிலக்கரி சேர்ந்திருப்பதால் உலையில் 1530°C சூட்டில் உருக்கி தூண்கள், கிராதிகள், மிஷின் சாமான்கள் மற்று மநேக சாமான்கள் வார்க்கப்படுகிறது. தண்டவாளத்தை இரும்பைப்போல உலையில் காய்ச்சி நீட்டவாவது, வளைக்கவாவது முடியாது. தண்டவாள சாமான்கள் உடைந்து விட்டாலும் வேறு சாமான்களாக்கவேண்டுமானாலும், அவற்றைமறுபடியும்உருக்கிதான் வார்க்க வேண்டும். இது எளிதில் உடையக்கூடியது.

(c). எழுகு கண்டுபிடிக்கப் படுவதற்கு முன், வெங்கலம் அல்லது செம்பிலும், கருங்கல்லிலும் கத்திகேடயமுதலியயுத்த ஆயுதங்கள் செய்யப்பட்டுவந்ததாக அறிகிறோம். ஆனாலிப்பொழுது எல்லா ஆயுதங்களும் எழுகில்தான் செய்யப்பட்டு வருகிறது. இதை உலையில் காய்ச்சாமல் பட்டடையில் அல்லது பணையில்வைத்து அடித்தால் உடைந்துவிடும். ஆகவே, ஷை ஆயுதங்கள் காய்ப்பில் செய்த பிறகு துவைச்சல்போட்டு உபயோகப்படுத்தப்படுகிறது. துவைச்சல் முக்கியமாய் தண்ணீரிலும், (நல்லெண்ணையிலும்)எழுகுசாமான்களின் உபயோகத்திறகுத் தக்கபடி அநுபோகத்தில் நிறத்தை நிரணயித்துப் போடுகிறது வழக்கம். ஆயினும், சில குறிப்புகளைக் கீழெழுதுகிறோம்.

| நிறம். | Cetnigrade தர்மாமீட்டர் சூட்டு அளவு. | எழுகு சாமான்கள். |
|---|---|---|
| 1. மஞ்சள் நீலமஞ்சள் | 243°C | பேனுக்கத்தி, அம்பட்டன்கத்தி முதலிய சிறிய [ஆயுதங்கள். |
| 2. ,, | 254°C | தச்ச ஆயுதங்கள். |
| 3. கருநீலம் | 276°C | வில்லுகள் (கெடியாரம் முதலியவைகளுக்கு) |
| 4. நீலபழுப்பு | 288°C | கத்தி, கேடயம் முதலிய யுத்த ஆயுதங்கள். |
| 5. நீலம் கருநீலம் | 310°C | ஜவ்வாள், அச்சுகள் முதலியவைகள். |
| 6. பச்சைநீலம் | 330°C | அரங்கள். |

## இரும்பு சுத்திசெய்தல்.

1 இரும்புபாத்திரங்களாயின், அவற்றில் இரண்டொருபலம் சோடாமாவு போட்டு தண்ணீர்நிரப்பி பாத்திரம்வெளுக்கிறவரையில் அடுப்பில் வைத்து கொதிக்கவைக்கவும்.

2. மிஷின்சாமான்கள் ஆயுதங்கள்:— பாராபின்(Parafin) யை சீவி தூள் செய்து சுத்தமான மண் எண்ணெயுடன் சேர்த்து கல்தார்க் சீசாவில் 2, 3 தினம் வைத்திருந்து பின்னர் இந்த தைலத்தை ஒருபுருசு (Brush) அல்லது கம்பிளியால் தடவி துடைக்க சுத்தமாகும்.

3. இரும்பு, எழுகு சாமான்களின் துருவை நீக்க:— குருந்தக்கல்லை நன்றாய் தூள்செய்து முதலில் மண் எண்ணெயில் கலந்து தேய்த்து துடைத்தபின் ஷெ(Emery)தூளை (Sweet oil) என்ற எண்ணெயில்கலந்து தேய்த்து துடைக்க சுத்தமாகி பளபளப்பாய் பிரகாசிக்கும்.

4. துருபிடிக்காத மங்கலான எழுகு சாமான்களை மெல்லிய மடித்த கல்தூளை சோப்புடன்(HardSoap) சேர்த்து கம்பிளியால் துடைத்து சுத்திசெய்யவும்.

5. மேஜைகத்தி, பியாஜைகம்பிகள் முதலியவைகளுக்கு பளபளப்பு நீங்காமலிருக்கவேண்டுமாயின் ஷெ சாமான்களை உபயோகத்திற்கு வேண்டும் காலம்வரையில் சுண்ணாம்புதூளில் மூடிவைத்திருக்கவும்.

6. எல்லாவித இரும்பு சாமான்களையும் இரும்பு பட்டச்சீலையில் கொஞ்சம் தேங்காய் எண்ணெயை தடவி தேய்க்க பளபளப்புகொடுக்கும். (தொடரும்)

குலோபகாரப் பிரியன்.

# இந்திய சிற்பமும் அதன் முன்னேற்றமும்

## முன்னுரை.

உலகத்தின்கண் மானிடர்களுய்யுவண்ணம் ஆன்றோர்களியற்றிய நூல்கள் பலவற்றுள்ளும், சிற்பமே பிரதான மெனலாம். உண்மையாகவே, அது மருத்துவநூலுக்கும் முன்னிற்கும். மருத்துவம், வந்தபின் காற்பான்போன்று, வந்தணுகியபிணியை அகற்று முபாயம்உணர்த்தும். சிற்பமோ, வருமுன் காற்பான்போல், மானிடர்களின் சுகாதாரத்தைப்பேணி அதனை விரித்துரைப்பதில் தனக்குத்தானே ஒப்பற்று விளங்கும். அதன் தன்மையை நன்குணராதார் அதனை வீண் நூலி லொன்றென மொழிவர். அம்மட்டு நில்லாது, தோன்றன்மாத்திரத்தில் மாசுபோல்காணும் குணங்களை ஆழ்ந்தறியாது வாய்ப்பறை சாற்றப்புகுவர். அந்தோ! என்ன மதியீனம், நம் மூதாதைகள் நமக்கெனபாடுபட்டு கண்டுபிடித்தளித்தற்கு இதுதானோ கைம்மாறு? பொதுவாய் வினவில், நூற்கள்நம்முன்னோர்களின் அநுபவ சித்தாந்தங்களேயன்றி பிறிதல்ல. நங்காலத்து நமது அநுபவ சித்தாந்தங்களும் முறையே சில நூற்றாண்டுகளுக்குப்பின் நூல்களெனக் கொள்ளப்பெறும்.



இதன் உண்மை உணராது தொன்னூல்கள் வீண்குப்பைகளென இறுமாப்பினர்களால் எற்றுண்டிருப்பது சரியோ? சரியன்று. வேறுசிலர், முன்னூற்கள் பரிபாடையால் மலிந்து கிடப்பன வென்றும், மதியாளன், மதியீனன், என்ற பாகுபாடின்றி பொருள் ஒன்றினையே குறிக்கும் வண்ணம் வரையப்படவில்லை யென்றும், அப்படியின்மையால், அவைகளை வழிபட்டிலகுவது வழுவெனவும் வாய்மதம் பேசுவர். சில நூற்கள் அவ்வாறு கூறப்பட்டிருப்பதை யாம் மறுக்கவில்லை. தெள்ளெனவெள்ளிய நடையில் எழுதிய நூற்களைத்தான் நம்மனோர்கள் நயந்ததென்னை? அவைகளும் அவமதிப்பால் புறக்கணிக்கப்பட்டன.

ஒரு பொருளில் பேரவா உடையோன்கை அப்பொருள் எளிதில் வாய்ப்பின், அதன் பெருமையை அவன், நன்குணரான். கஷ்ட சாத்தியமாய்ப்பெறின், அதனையே கனசெல்வமெனக் கருதுவன். இதுவே உலகவழக்கு. இதையுணர்ந்தே நம்மூதாதைகள், நம்மீது எழுந்த காருண்ய காரியமாக சிற்பல சுவடிகள் நோக்குவார் நுண்ணறிவிற் கேற்றவாறு நியமித்தருளினர். எவ்வாற்றாயினும்பிரபஞ்ச உண்மையையும் தன்நித்தியத்தையும், தமக்குத்தாமே கண்டறிய மன்னுருக்கொண்ட ஒருவருக்கு இச்சுவடிகளின் உண்மையை அறிவதுதானா ஒரு பாரம்? வருந்தினால் வாராததொன்றுண்டோ? வருந்துவதிலும் வழியறிந்து வருந்தினால் வருவதிற்றடையுளதோ? இவ்வழிபற்றி நம் நூற்களைச் சிந்திப்பார்க்கு அவை ஒருக்காலும் கடினமாகா. அவற்றின் ரகசியங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

இதுகாறும் தொன்னூல் ஆராய்ச்சி முறையை விரித்தோம். இனி, சிற்பத்தின் செழிப்பு தற்காலம் குன்றினமைக்கு காரணம் வினவுவோம். ஈகை, இரக்கம், தயை, பொறுமை, சாந்தம், மன்னுயிரைத்தன்னுயிரெனக் கருதல் முதலிய நற்குண நற்செய்கைகளை தலைமேற்கொண்ட நம்முன்னோரும் சிற்சில தூர்க்குணங்களிராமலில்லை. அவற்றில் முக்கியமாய் தாம்கற்றதைகற்றவாறு பிறருக்குச் சொல்லாமை ஒன்று. அஃதென்னை யெனின், தாம்பெற்ற நுட்பமானகருத்துக்களை பிறருக்கு எளிதிலறிவிப்பதில், அறிவிக்கப்படுவோர் புத்திதானே அதிலாழாது, சொன்மாத்திரத்தில் விளங்குமென அஞ்சி விடுப்பதேயாம். மேலும், சிற்பத்திற்கும் கைத்தொழிலுக்கும் வேறுபாடு அதிகமின்மையால், சிற்பவித்தியாரகசியங்களும், அதனாலடையும்ஊதியமும், தம்மட்டோடு நிற்கநினைந்தது முற்காலத்தில் ஒரு பெருங்குற்றமாகா. நாகரீகம் பொலிந்துநிற்கும் தற்காலத்தும், மேற்றிசையார்கள் தத்தம் வித்தைகளை வெளிப்படையாய்த்தோற்றுவித்தாலும், சூத்திரங்களை இயங்குவித்தாலும், அவைகளின்செய்முறைகளையும், அதிநுட்பமான ரகசியங்களையும், ராஜாங்கமூலமாய் அவற்றை தங்கட்கும் தங்கள் வமிசத்தாருக்குமே சுவாதந்திரியப்படுத்திவிடுகிறார்கள். இச்சுவாதந்திரியக்கோட்பாடு முற்காலத்திலுமிருந்திருந்தால் நம்மவர்களும் மேற்குறித்த தூர்க்குணமொழித்து அம்முறையை நாடியிருப்பார்கள். நாடின் யாதுபயன்? சிற்பம், பிரமாணரூபமாய் காட்டப்பட வேண்டியபடியால்இதில் பொதிந்துவைப்பவை அதிகமில்லை. எஞ்சிய சுவற்பபாகங்களை தமக்கே உரிமைப்படுத்திக்கொண்டிருப்பராயின், சிற்பம் வெகுகாலத்திற்கு முன்னரே நிலைகுலைந்திருக்கும். ஏனெனின், சிற்பம் தினே தினே, விருத்தியாகும் நூல்களிலொன்று. அதன்தொழின்முறைகள் ஒன்றையொன்றுபற்றிநிற்கும். செவ்வனே நிர்மாணித்துள்ள கட்டடத்தையோ பிரதிமையையோ பார்த்து மற்றொருவர் பின்பற்றுவது இயற்கை. இதனை தடைசெய்யக்கூடிய சட்டங்கள் தற்காலத்துமில்லை.

சிற்பத்தின்பொலிவு குன்றியதற்கு வேறுகாரணமும் காட்டப்படும். அஃதுயாதெனின், நாளடைவில் சிற்பத்துக்குரியரல்லாத ஏனைய வகுப்பினரும் சிற்பத்தைக்கையாடப்புகுந்ததேயாம். போலியுருக்கொண்ட குற்றமொருபுறமிருக்க, இத்தகையோர் நூலை முற்றுமுணராத்தன்மையால் தத்தம் யுக்திக்கேற்ப சிற்பவிதிகளை விதித்தமையாலும், கைப்பழக்கம் பாரம்பரியத்தை தழுவாமையால், அதுஒழிந்து வாய்பழக்கமேலீட்டால் மனம்போல் நடந்த மற்றொருகுற்றமும் அவர்களைச் சாராநிற்கும். உதாரணமாக, வறுமைப் பிணியால் வருந்தி உழல்வோன் ஒருவன், ஒரு வாவிக்கரையில் தூண்டியிட்டு, மிதப்பின்மேல் கருத்தாயிருந்த ஓர் வலைஞனைக் கண்டு, தானும் அதைப்பார்த்துநின்ற சிலவினாடிக்குள், மிதப்பு உள்ளமுழுந்தியதையும், அவன்கை சரேலென மேலெழுந்ததையும் அக்கயிற்றின் நுனியில் துள்ளிய வெள்ளிய மீனையும் நோக்குவானாயினன். சைவப்பற்றுள்ள இவன், அவ்வலைஞனைக்கூவி, ஐய! இம்மீனை யாதுசெய்வீர் என வினவ, அதற்கு அவ்வலைஞன்கடைகொடு சென்று கால்ரூபாய் பெற்று காலம் கழிப்பேனென, அவ்வளவில் இச்சைவனுக்கு தூண்டியிடல் தம்மரபினர்க் குறிந்தன்று எனத் தெரிந்தும், பேராசைப் பெருக்கால் தானும் அவ்வலைஞன் தொழிலில் மனம் நாடுவானாயினன். மறுநாள் அதிகாலையில் அவ்வாவியைக் கிட்டி தான் ஒரு புதரில் மறைந்து முள்ளெறிந்து நிற்குமளவில், வினைப்பயனாய் ஒரு பெரியமீன் சிக்கவே பூரித்த மனத்தனாய் அதைக்கரையினருகே யிழுக்கவும், அம்மீன் வெகுவாய் துள்ளித்துடிக்கவும், ஒன்றும் தோன்றானாகி, காவுநீத்து, கூப்பிடு துலைவில் தூண்டியிட்டு நின்ற வலைஞனை விளித்து, இம்மீனை விடுத்துத் தாருமென வழைக்க, அதற்கவன் உடன்பட்டபின்னர், ஐய! நீர் பரம்பரை வலைஞரோ, பஞ்சத்திற்கு வலைஞரோ என, இச்சைவ மாதவனும் வெட்கி பஞ்சத்திற்கு வலைஞனென உண்மையை சொல்லியவளவில், வலைஞனும் பின்வருமாறு சிலநீதிமொழிகளைப் புகல்வானாயினன்.

(தொடரும்)

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரி.

## இன்சொல்.

இன்சொல்லாவது கேட்போர் இன்புறுமாறு உள்ளன்புடன் சுய நயம் பாராட்டாது உரைக்கும் மொழியாம். "ஓமோராயினுந்தாழ்வுரை" என்கிறவாக்கியத்தை எக்காலத்தும் மனதிற்கொண்டோர் இன்சொல்லுடையோராகவே யிருப்பர்.

நாற்களைக் கற்றதோடு கற்றவாறு அடங்கினவரும், ஸ்ரீவகாருண்யத்தை மேற்கொண்டோரும், எங்குஞ் சிவமொழிய வேறில்லை என்றதை உறுதியாய்க் கொண்டோரும், தானெடுத்ததேகத்தின் பயனைப்பெற முயல்வோருமாகிய உத்தம புருஷர்கள் இன்சொல்லன்றி மறந்தும் வன்சொல்புகலார்.

"இன்சொலாலன்றி இருநீர்வியனுலகம் வன்சொலாலென்று மகிழாதே" என்று ஆன்றோர் கூறியசெய்யுளை மனதிற்கொண்டு இனிய வார்த்தைகளையே உலகோரியாவரிடத்தும் பேசப் பழகவேண்டும். சொடிய கோபமுற்றகாலத்தில் இதைமிகக் கவனித்தலவசியம். பிறர்க் கெடுத்துரைக்கும் பெரும்புலமையுடைய வித்துவான்களாயுள்ளோருக்கும் கோபம்வந்தால் வன்சொல்லென்றும் சொல்லொணாத என்சொல்லோ வாயினுதிக்கிறது. அறத்தைப் பற்றி தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறுங்கால் "அழுக்காறு, அவா, வெகுளி, யின்னாச்சொல் நான்கும், இழுக்காவியன்றதறம்" என்று அறிவுறுத்தினர்.



சாதாரணவழக்கில்கூட "தானத்திற்சிறந்தது. நிதானம்" என்று சொல்வதுண்டு, அந்நிதானமுடையோரே இன்சொல்லுடையராயிருப்பர். இவர்களே தனக்கு வரும் இன்ப துன்பங்களை வினைவழியுடவிற்கமைந்ததென்றுஅறிந்து விசனமுறார். இவர்கள் முகமே மலர்ச்சியுடைய தென்னலாம். மற்றையோரது இகழ்ச்சிக் குரியது.

சர்வ வளப்பமும் பொருந்தியோரிடத்து பல்லைக்காட்டி, துன்பத்தைமுகத்திற் கூட்டி கற்பகத்தருவே, தர்மபதியே, என்னுமினிய வார்த்தைகளைக் கூறி இரக்கும் எளியோரை, அவர்கள் இன்சொல் கூறுவதிலும் வறுமையுற்று கருணையின்றி வாசல்கடந்திடத் துரத்தித் திருப்புவர்கள். அந்தோ! என்னவன்னெஞ்சம்! செல்வோமென் றிருக்கும் செல்வ முற்றோர்களும் வறிய புன்சொற்கால் வாயிருந்தும்மூடிக் கொண்டு மூகரைப்போலிருந்து விடுகிறார்கள். வாய்திறந்து அன்புடன் ஓர் வார்த்தை கூறினாலென்னோ?

கொடுஞ் சொல்லால் பாவமுண்டென்பதும், இன்சொல்லால் புண்ணியமுண்டென்பதும் யாவரும் அறிந்ததே. யாவராலும் விரும்பப்படுவது புண்ணியமே யன்றி பாவமல்ல. அப்புண்ணியத்தை யடைய சற்கருமங்கள் புரியவேண்டுமென்றும், அதில் தர்மமே முக்கியமாகுமென்றும், அறிவுடையோர் அபிப்பிராயப் படுவார்கள். அத்தர்மமும் இயன்றவளவிற் செய்யவேண்டுமென்றுசொல்லப்பட்டிருக்கிறது. தன்னால் செய்யமுடியாத சமயத்து யாசிப்போர்க்கு இன்சொல்லாற் ப்திலுரைத்தல்வேண்டும். அப்போதுதான் கேட்போரும் செவியேற்று திருப்திகொண்டு செல்வார்கள்.

அதுவுமன்றி பகைவனிடத்திலும் சார்தமாய் இனிய மொழிகளாற்பதில் புகன்றால் அவன், தானேவெட்கமடைந்து தான் பேசியது பிசகென் றறிந்துகொள்வான். ஒருவருக்கு புத்திபுகட்டும்போது அவ்வழகியசொற்களே ஏற்றற்பாலதாகும். ஆகையால் நாம் உட்கபடமின்றி இன்சொற்பேசப் பயிலுதல் அவசியமென் றேற்படுகின்றது. பயிலுங்கால் மறந்தும் பழயவாசனையால் நம்வாக்கில் வன்சொல் வராதபடி ஈசனருள் புரிவாராக.

S. ஆனையப்பாச்சாரி.

## பிரதம போதம்.

சமுத்திரத்திற் கல்லானது கற்பகோடிகாலங்கிடந்தாலும் உள்ளே ஈரம் ஏறாததுபோல வித்தியாபிவிர்த்தியும், நவீன நன்னடையும், ஞான அறிவும், அசேதன வஸ்துக்களும் எளிதிலடையும் இந்த உலகத்தில் தற்காலத்தில் அவ்வற்புத நிகழ்ச்சிகளைக் கண்ணாரக்கண்டுங் காதாரக்கேட்டும், நமது குலமக்களுக்கு அவ்வுணர்ச்சி சிறிதும் ஏற்படவில்லை என்பதுயாவரும் அறிந்ததே. இவ்வாறு கல்வியில் நிரக்ஷரகுக்ஷிகளாயும், பிரபஞ்சவிரோதிகளாயும், மூடனை நோக்கமுடையோர்களாயும், இருக்கும் நம்மவர்களைக் குறைகூறவேண்டுமென்பது நியாயமேயானாலும், மற்றொருவிஷயத்தில் அவர்களை அவ்வாறு பழிப்பது தகுதியன்றென்றே நினைக்க வேண்டியதா யிருக்கிறது. ஏனெனில் இவ்வாறு சீர்கெட்டுச் சிதைந்து கிடக்கும் நம்மவர்களைச் சீர்திருத்திக்ஷேமவாழ்வளித்துக் குலத்தை உத்தாரணம் புரியவேண்டுமென முன்வரும் அநேகபோலிப்பரோபகாரிகளாலேயே நம்வர்களுக்கு நல்லறிவுபுலப்படவில்லை யென்றும், அன்றியும் அவர்களது இயற்கைச் சுபாவத்தன்மையான விபரீதநோக்கங்களே மேன்மேலும் விர்த்தியடைகின்றன வென்றும், இதனாலேயே நமதுகுலத்தில் தாழ்மை நிலையே நன்கு நிலைக்கப்பெற்றிருக்கின்றன வென்றும், தேற்றமாய்க் கொள்ளச் சிறிதும் சந்தேகமேயில்லை குலத்தினரை மேன்மைபடுத்த வேண்டுமென முன்வரும்

ஒவ்வொருவரும் விப்ரவிரோதம், ஜாதித்துவேஷம், தற்பெருமை, போலியகங்காரம், முதலிய உட்பகைக் குணங்களை உள்ளதுகாணாதென்றுமீண்டும் உற்பத்தி செய்கின்றவரும், அக்குணங்களே தகுதியென்று சம்மானிக்கின்றவர்களுமான அவிவேக பூரண குருபீடங்களாக இருக்கின்றார்களேயன்றி உண்மை, யான நியாயவரம்புகளை நிரூபித்து நம்மவர்களைக் கர்வ கண்டனம் புரிந்து அஞ்ஞானாந்தகாரத்தை ஓட்டும் ஞான சூரியர் ஒருவரையுங் காணோம்.

அந்தோ! என்ன விபரீதம்! இத்தகையோரெங்குந் தற்காலந் தலையெடுத்து நிற்பதும் இதுவரை குலசம்பந்தமாய்ப்பலகாரியங்களைச் செய்து முடித்ததும், இன்னும் இவைபோன்றபல செய்யவேண்டுமெனச்சபதம் கூறுதலும், பார்க்கும்போது நமது குலம் இன்னுங்க்ஷீணித்து அதோகதி பாதாளப் பிராப்தியடைதற்கு அறிகுறிகளாக இருக்கின்றனவே. இனி இது எவ்வாறுமுடியும் என்பதை எண்ண விசாரம் விளைகின்றதே! பெரிய நகரங்கள்முதல் கிராமங்களீறாக ஊர்களிலெல்லாமுள்ள நமது குலத்து உத்தமர்களான சிற்சிலர்களெல்லாம் "உடும்பு வேண்டாம் கையை விடு" என்பது போல ஐயா! எங்களுக்கு இந்தப்பெருமைகளெல்லாம் வேண்டாம். உள்ளது உள்ளபடியாக எங்களைமட்டும் விட்டுவிடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் என்று வற்புறுத்தி மனம் வருந்துகின்றார்களே. அறிவிலரெல்லாம் சமயம்வாய்த்துவிட்டதென்று முன்னிலும் அதிகமாய் அக்ரமித்து வெளிகிளம்புகின்றார்களே அந்தோ! இதுதானோ குலாபிவிர்த்தி? இதுதானோ ஞானப்ரவேசம்? இதுதானோ அஞ்ஞானமுடிவு? இதுதானோ அகங்காரஒழிவு? இதுதானோ சர்ஜன சம்மதம்? இதுதானோ தேவதிருப்தி? இந்தவிபரீத பாவனையும்,,விர்த்தியடையலாமா? ஏதோஒரு பயத்தைக் கொண்டு இதுவரையிலும் தமதகங்கார சித்தவிர்த்தியைச் செலுத்துதற்கு அஞ்சிக்கிடந்த அன்னோரெல்லாம் தற்காலம் ஏகச்சக்ராதிபத்யம் செலுத்தத்தாராளமாய் முன்வந்துவிட்டார்களே. இவர்கள் தற்புகழ் பதர்களாகாமலும், சண்டைக்கொருவர்பாற் போகாமலும் அயலாரை இகழ்ந்து நோகாமலும், அஞ்ஞையிற்கிடந்துசாகாமலும், ஓடித் திரிவதற்கின்றி அவர்களைக் கபாடபந்தனம்புரிந்து கருத்தை ஊட்டிக் கனத்தைக்காட்டுவாரொருவருங்காணோமே. இத்தகைய அநீத நிகழ்ச்சியைக்கண்டு கவன்று தமது மனமோடு செயலுங்குன்றி இருந்த இடத்தினின்றும் அசையாநிலையாய்நிற்கும் எம்மில் ஈடுபட்ட அறிஞரனைவருக்கும் ஊக்கமூட்டி அவர்களை இட்டுக்கொண்டு வந்து உலவும்படி செய்து அவர்கள் கருத்திற்கு உடந்தையாக வருகின்றவர்கள் ஒருவரையுங்காணோமே. என்னபிரயோஜனத்தைக்கருதி இத்தகையபெருமுயற்சிகள் நிறைவேறுகின்றதோ தெரியவில்லை. இச்சந்தேகத்தைஇவர்களெமக்குச் சிறிது தெளிக்கமாட்டார்களா? இந்தமுயற்சிகளுக்கு நமது குலத்துப் பல போலிக் கல்விமான்களும் 'படிப்பற்ற பதர்களும் நான் நான் என்று முன்வருவதையும்அவர்களால் ஏதேதோ பெருங் காரியங்கள் முடிவதாக முடிவதையும் கண்ணுற்ற எம்போலிய அறிவாளிகள் இவைகளெல்லாம் நம்கருத்திற்குப்பெரிதும் முரண்பட்டதே என்பதைக்குறித்து வருத்தமொருபக்கமிருப்பினும் அவற்றையும் பாராட்டாது அவர்களிடம் வந்து "ஐயா! நீங்கள் வெகு பிரயாசைப்பட்டு இவ்வாறுசெய்வது மிக்கநலமே. இனி நமது குலத்தினர் சுயசீர்திருத்த நிமித்தமாய்ச் செய்ய வேண்டியது இவைகளல்ல. இவைகள் தான் என்று சிலஅபிப்பிராயங்களைச் சொன்னாலும் சிறிய வியாசங்களைக் காட்டினாலும் உடனே அவர்கள் திடுக்கிட்டு அவர்கள் மனம்நோகும்படி அவற்றை யெல்லாம் புறக்கணித்துத் தள்ளிவிடுகின்றார்களே. காலவியலை அறியுமறிவும், உண்மைநோக்கமும், சுயநலவெறுப்பும், பொது நலவிருப்பும், சிறிதுமில்லாத பெருமான்கள் அநேகர்பற்பல பிரயத்தனஞ் செய்வது என்ன நன்மையைத்தரும். எவ்வாறு நடந்தாலும்அவற்றில்? நடுநிலைமையுள்ள புண்ணியபுருஷர் இருப்பதாகச் சிறிதுந் தோன்



றவில்லையே! புண்ணிய புருஷரில்லையேனும் காலவியலைக் கவனிக்குங் கருத்தாளியேனுமில்லையென்றுந் தேற்றமாயறிகிறோம். நமது தேசத்திலுள்ள எண்ணிறந்த ஜாதியார்களுக்கும் தத்தமக்குமுள்ள ஜாதியகங்காரங்களையும், சமயாகங்காரங்களையும், தொழிலகங்காரங்களையும் தற்காலத்தில் கடவுள் வேராறுத்துச் சமத்துவமாய் பரிபாலிக்கத் திருவுளம்பற்றி இப்பெருங் காரியத்திற்கென்றே காலங்கள், இயற்கைப்பொருள்கள், பூதங்கள், தேகங்கள் ஆதிய பிரபஞ்சத்தையே வேறுபடுத்தி சகல ஜாதியார்களுக்குமுள்ள அகங்காரங்களையும் இருக்கிறயிடமுந் தெரியாமல் நிர்மூலமாக்கிவரும் இக்காலத்தில் காலசுபாவத்தையும், கடவுள் கருத்தையுங் கண்ட கண்ணாளிகளான ஏனைய எண்ணிறந்த ஜாதியார்களடங்கலும் கடவுள் கருணையைக் கண்டுகளித்து சமத்துவபாவனை பெற்றோர்களேனும் பிறப்பிடத்தைப் பெருமை படுத்தவேண்டுமென்பது ஒரு முக்கியகடமை என்ற நியாயத்தால் அவற்றைத் தாமே பெருமைபடுத்தியும், பெருமைபேசும் பிறரைக் கண்டால் மறைத்தும் அவற்றிற் பராமுகம் பாராட்டும் இக்காலத்தில் அவ் வகங்காரங்களைக் களையாமலும் மேலும் மேலும்அதிகமாயடையப் பெருமுயற்சிகளைப் புரிந்தும் ஸ்ரீ விஸ்வேஸனுக்கு முற்றும் விரோதமான குணங்களையே விர்த்திசெய்து கொண்டுவருகிறார்களென்றால் அவர்கள் குணவிசேஷத்தை என்னென் றெடுத்தெழுதுவோம்? இவற்றில் இவர்கள் கண்ணுவர்களா? அவர்கள் கண்ணுளர்களா"? (தொடரும்.)

வரகவி. S. சுந்தரம்,

மார்க்கயன் கோட்டை.

## வாழ்த்து.

### விருத்தம்.

பொன்னுலகி லந்தரதிற் பூதலத்தி லகம்புறமும் புணர்ந்தோன் றாக, மன்னியுயிர்க் குயிராகி மறைமுடிவாய் வாக்குமனத் தணுகாதாகித், துன்னியமெய் யன்பாகச் சுகமாகிச் சுகாதீதச் சோதி யாகி, யென்னிதயக் குகையமரும் பரம்பொருளே யென்னாளு மினிது காக்க.

இத்தலத்து மெத்தலத்து மிசைமலிந்த புருடரொனு மியல்மெய்ப் போதச், சித்தமுடன் பஞ்சமுகச் செழுஞ்சுடராய் பன்னெறியுஞ் சிறக்க நாட்டி, யத்தமன மற்றவன்றனடியடியர்க் குறுதிதரு மணியைத் தாங்கி, வித்தகமாயிலகிவரும் விஸ்வகர்ம குலத்தினுக்கு விருந் தன்னனே.

மன்பதைக்கு மெய்யறிவும் வானவர்கட் காகுதியும் மனத்திற் றூய்மை, யன்புடையர்க் குயர்யோக மறமார்க்கஞ் சகமார்க்க மலதை நீக்கி, யின்பணுகக் கல்விநல மினம்பலவுந் தாங்கிவரு மிணையி லான்மெய்த், துன்பறவே நாளுளுஞ் சுகமணுகி நீடூழி துலங்க மாதோ.

அன்புளீர்:—

பல்வளமிக்க இச்சென்னைமா நகரில் "விஸ்வகர்ம குலோபகாரி" யென்னும் பெயர் பூண்ட பத்திரிகாமாது தன் மீது நவமணிக ளழுத்திய பலவிசித்திராபரணா லங்காரத்துடன் வந்தாள். அவளைக் கண்டவுடன் அணி விசேஷங்களைக் கண்ணுற்று மிகவும் சந்தோஷமடைந்தாம். அத்துடன் இப்பெண்மணி இன்னும் நாளடைவில் மதிப்பற்ற உயர்ந்த ஜீவரத்தினங்கள் பதித்த மகோன்னதமாகிய உத்தம ஆபரணங்களைத்தரித்து பார்ப்பவர் கண்ணும் மனமும் நீங்காதிருந்து இன்பத்தினைத்தந்தும் பெற்றுஞ் சத்புத்திரலாபத்தையும் அடைந்து நிலவுலகத்தில் நீடூழிவாழுமாறு சர்வேஸ்வரன் றண்ணளிபுரிவாராக.

### பத்திரிகை.

பன்ம[illegible]கொழிக்கு[illegible]தெண்ணீர்க் கடலுடையுடு[illegible]விப்பாரிற் [illegible]பாகபுண்ணிய விசேஷத்தா[illegible]ல்வகைத்தேசமுமீத்தும் அடைதற்கரிய ம[illegible]டயாக்கையைப்பெற்ற மானவனு

தியார் யாவரும், ஒருவகையினராகவும், துணை கரும வேறுபாட்டினாற் சில ஜாதிகளாகவும், பேதவுணர்வுடைய மந்தமதியின ராசாணையினாலும், காலதேச ஆசாரத்தாலும் பல ஜாதிகளாகவும் பிரிந்து கலக்கமடைந்து துன்புறுமாக்கள் பண்டைக்கால வழக்கவொழுக்கங்களும் பலதேய சரித்திரமும், பலமதப்பிரிவும், பல ஆசாரப்பிரிவுகளும், தாமே சஞ்சரித்தும் நூற்களையாராய்ந்தும் அறியக்கூடாத பல அரிய விஷயங்களை இப்பத்திரிகை யெளிதிற் காண்பித்தலினால் *தெய்வீக தர்ப்பணத்திற்கு ஒப்பிட்டுக்கூறலாம்.

சற்குருவானவர் காருண்யத்தினாற் றன்னையடைந்தவதிகாரிகளுக்கு காலதேசவர்த்தமான சக்தி இவைகளுக்கு பொருத்தமாகவும் திருத்தமடையுமார்க்கத்தினைப் போதிப்பதேபோல இதுவும்பல நாகரீகமிகுந்த அரசர், வித்வான்கள், தொழிலாளர், புருஷன், ஸ்திரீ, மிருகம், முதலியவற்றின் குணகுணங்களை யெடுத்துக்காட்டி, கொள்ளத்தக்கனவற்றை வற்புறுத்திகூறுமாற்றாற் சற்குருவுக்கு நிகரெனச் சாற்றவுங்கூடும்.

தொழிலாலும், அழலாலும், இரவியாலும், வெதுப்புற்றயர்ந்த ஜீவர்கள் சந்திரனைக்கண்டவளவி லின்ப மெங்ஙனமெய்துவரோ, அதுபோல தேசாந்தரங்களிலும் கோர்ட்டுகளிலும், அரசாங்கங்களிலும் நடக்கும் வர்த்தமானங்களும், பலதேசவியாபாரநோக்கங்களும், கைத்தொழிற்சிறப்பும் உணராது மனம் அதிகதாபமடைந்த மனிதர்கள் அததனையுணர்ந்தின்புறச்செய்தலாற் பூரணச் சந்திரனுக்கு நிகராகவும் புகலலாம்.

ஒரு புருஷன் தானுயர்நிலையை நாடுவானாயின் தனது குறைகளையும் தான்பூர்வமிருந்த நிலையையும் அதற்குரிய அத்தாக்ஷிகளையும் எடுத்துப்பலமுறை பல இதிகாசமூலமாகவுரைக்க அதனைக்கேட்ட புருடன் விருதாவாக இவன் இத்துணைகூற[illegible]டியதின்று ஆயின் அதனை விசாரிக்கலா[illegible]ன்று நினை[illegible] அவனால் யாவுங்கேட்டு இவன்கூறுவது [illegible]ருதி யுக்தி யனுபவத்திற்கு ஒத்ததாகவிருந்[illegible]வாளாவிதுகாறும்பராமுகப்பட் டயர்ந்திரு[illegible]தாம், இனி யிவற்குவேண்டியன புரிந்து குறைநீக்கி யின்புறச்செய்தல் கடனாகவெண்ணிச் செய்துமுடிப்பதுபோல ஒவ்வொருதேசத்தாரும், ஒவ்வொருமதத்தினரும், ஒவ்வொருஜாதியாரும், தம்தம் குறையை அரசாங்கத்தார் மூலமாக நீக்கவோ, அன்னியர் தம்மை இகழ்வது தவிர்க்கவோ, தம்மினத்தார்கல்வி,ஒழுக்கம், தொழில் இவைகளால் மேல்நிலைமைந்து வரவேண்டுமாயின் பத்திரிகையே அதனை வெளிப்படுத்திக் காட்டச் சிறந்தசாதனமாக இருக்கின்றதென்பது புத்திமான்கள்யாவரும் ஒத்துக்கொள்ளத் தக்கவிஷயம். ஆதலினால் இதனை ஒவ்வொருவரும் வாங்கி யன்போடு யாசித்துப் பொருள்களை யகத்திற் றரித்துத் தக்கனபுரிந்து சன்மார்க்கநெறியினராகி யின்புறுமாறு சர்வேஸ்வரன்கிருபை பாலிப்பாராக.

அத்துடன் தத்கால நாகரீக ரீதியாக ஒவ்வொருதேசத்தாரும், ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு ஜாதியாரும், தத்தம் குறைகளை நிவர்த்தி செய்து கொள்வான் பலருமறிய வெளிப்படுத்துவது பத்திரிகையாதலால், இதுகாறும் இந்தவம்சத்தினர் மகாமோகமென்னும் நித்திரா பீடிதர்களாகவே யிருந்து வந்தனர். இப்போது சிற்சில அறிஞர்களால் சபைகூட்டியும், காங்க்ரஸ் சேர்த்துப் பலவிஷயங்களைப் பேசியும்,பாடசாலைஸ்தாபித்து இலவசமாகவித்தியாதானம் செய்தும், பத்திரிகை வெளிப்படுத்தியும் வரும்சமயத்தில் இதிலும் பேதமடைந்து பிணக்குற்று இருப்பதாக வதந்தியுலவியது. அதனைக் கேட்க மிகவும் வியசனமாகவேயிருந்தது. இனியாவது அவர்கள் அவ்வித பிணக்கினை யொழித்து இணக்கமாகப் பலரும் மணமிக்க மலரில் மானஞ் செய்யுமாறு ஒத்துழைத்தாவது, தனித்தாவது மனப்பிளவின்றி தாம்தாம் மேற்கொண்டவிஷயங்களை விர்த்தி செய்வதிற் கண்ணுங்கருத்துமாக முழுக்கவனஞ்செலுத்தி வருவார்களாயின், ஒவ்வொரு புத்திமான்களுக்கும் மனக்கிளர்ச்சியும் தன் மனச்சாந்தியும்பெற்று இகபரசௌக்கியங்களையடையுமாறு எல்லாம்வல்ல முழுமுதற்கடவுள் கிருபைபுரிவாராக.

பொதுநன்மையை விரும்பும் ஓர் சாது.

* தர்ப்பணம் கண்ணாடி



## தந்தை தாய்ப் பேண்.

"தந்தை தாய்ப் பேண்" என்று ஒளவை கூறியதை ஆராய்ந்து நோக்குமிடத்து நமது தந்தையையும் தாயையும் தேகசவரக்ஷணை செய்து காப்பாற்றுவதுஎன்று மாத்திரமன்று, அவர்கள் சொற்கேட்டு நடந்து, அவர்களை யின்புறச் செய்து வழிபட்டு வருதலென்றும் கொண்டால் மிகச்சிறப்புடையதாம்.

தாயானவள் நம்மைப் பத்துமாதஞ் சுமந்து பெற்று குழவிப்பருவத்து பாலூட்டிவளர்க்குங்கால் நமக்கோர் நோயுற்றபோது தான்பத்தியமிருந்து காத்தும் சந்தேக பாதுகாப்பில் கண்ணுங்கருத்துமாயிருந்து வளர்த்து வருகின்றனள். தான் உயிரோடிருக்கும்வரை தன்புதல்வன் வாழ்க்கையிலும் தேக பாதுகாப்பிலும் மறந்தும் கேடு நினையார்.

தந்தையானவர் நாம் புத்திரனா யுதித்த முதல் நமக்குக்கல்வி அபிவிருத்தி செய்வதிலும் நம்மை உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டு மென்பதிலும் முழுக்கவனஞ்செலுத்தி அதற்காகவேண்டிய பிரயத்தனங்களையே செய்து வருகிறார். நாம் அவர் எண்ணியபடி பூர்த்திசெய்ய முயல்வது நம்கடமையாகும்.

மகன் செய்யவேண்டிய கைம்மாறு "மகன் றந்தைக்காற்றுமுதவி இவன்றந்தையென்னோற்றான் கொல் லெனுஞ்சொல்" என்றபடி உலகோர் புத்திரன் கல்வி அறிவு ஒழுக்கத்திற் சிறந்தோனா யிருப்பதைப்பார்த்து, இவன் தந்தையைச் சிலாகித்தும் பேசுதலாம்

"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்று கூறியுள்ளதைக் கவனிக்கின் பெற்றோரே முதல் முதலில் நமக்கு வார்த்தைகள் கற்றுக் கொடுப்பதாலும், அவர்களே நமக்கு ஒருதெய்வம் உளது என்பதைத் தெரிவிப்பதாலும் அவர்களை முன்னறிய வேண்டிய தெய்வமெனத் தெரிவித்துள்ளார்.

"தந்தைசொல்மிக்க மந்திரமில்லை" "தாய் சொற்றிறந்த வாசகமில்லை" என்றவாக்கியங்களுக்கிணங்க ஸ்ரீ இராமபிரான் தமது சிற்றன்னையின் வாக்கின்படி தந்தையின் சொல்லைக் காப்பாற்றுவதற்கு வனவாசஞ் சென்று நிறைவேற்றியது நம்மெல்லோர்க்கும் ஓர்நல்லதிருஷ்டாந்தமாம்.

ஆகையால் நாம் பெற்றோர்சொற்படி கேட்பதில் சிறிதுந் தவறக்கூடாது. சிலசமயங்களில் அவர்கள் சொல்வது தன் அபிப்பிராயத்திற்கு முரண்படுமானால் அவர்களிடத்தில் இதவார்த்தையாகப்பேசி மிகவணக்கத்துடன் தெரிவித்து அங்கீகாரம் பெறவேண்டும். இதைவிட்டு மடமையால் தடியெடுத்துக் கொள்வது சரியன்று. அவர்கள் வயோதிகர்களாகஇருப்பதால் சிறிதும் அவர்களுக்குத் துன்பம் விளையாது சந்தோஷமுண்டாகும்படிச் செய்யவேண்டும்.

சர்வசங்க பரித்தியாகம் செய்தபட்டினத்தடிகளும் தன் தாய் இறந்தபின் இடுகாட்டில் வைத்து தீயிடும்போது நமக்கும் அன்னையின் அன்பைத்தெரிவிக்க பலவாறாய்க் கதறியிருக்கின்றார்.

ஆகையால், இல்வாழ்க்கையி லீடுபட்டு ஒழுக்கத்திற் றவறாதிருக்கவேண்டிய நாமும் நம் பெற்றோரின் மனோபீஷ்டப்படி நடந்து அவர்களை அன்புடன்பணிந்து அவர்கள் தேகசௌக்கியத்தில் மிகக்கவலை வைத்துப் போற்றி ஒளவை கட்டளையை நிறைவேற்றுவோமாக. இவற்றில் சிறிது தவறுவோமாயின் நாளை நம்புத்திரன் நமக்கும் துன்பமே செய்துவிடுவான் ஆகையால் நம் கடமையைச்சரியாய் நிறைவேற்ற அருட்பெருங் கடலாகிய அண்ணல் தண்ணளி புரிவாராக.

P. சொக்கலிங்காச்சாரி.

## விஸ்வகர்ம வம்ச சாகா சூத்திர விஷயம்.

ஸ்ரீமதகண்ட மண்டல, ஸார்வ பௌம, சத்தியவாக்கிய துரந்தர, மநுநீதி ப்ரயுக்த, இண்டியா ஜ்யார்ஜ் மஹாசக்கிரவர்த்தி பரிபாலநதேசஸ்த, ப்ரசித்த ப்ருந்தாவன, மசலிபட்டண, கிருஷ்ணா, கோதாவரி, குண்டூர், புனா, சென்னபுர்யாதி சகல தேசஸ்த, சமஸ்தவிஷய வாஸ்தவ்ய, சுருதிஸ்மிருதி, சில்பாகமபுராணே திஹாசாதி, பாராவார, பாரங்கதாநாம், சகல வித்யாநவத்ய, இருத்ய, கத்ய, பத்ய, காவ்ய, நாடகாலங்கார, சித்ராலங்கார, நிர்மாண, சாதுரீதுரீணும், யஜந, யாஜநாத்யய நாத்யாபந தாநப்ரதிக்ரஹ ஷட்கர்மாதிகார, முக்யஸ்த, கிரகஸ்தாசிரமாச் சார்யாக்னிஷ்டோமாதி ராத்ராப்தோர்யாம, சாந்தபன, வாஜபேய, பௌண்டரீகாஸ்வமேதாதி, சதக்ரத்நிரத, நிஷ்டாகரிஷ்டமாந, மனு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞாச்ச, பிரதிநாம சூசக, சாநக, சநாதநாஹ பூநபிரத்நஸுபர்நாதி பஞ்சவிம்சத் யுத்தரசத பிரம்மரிஷி கோத்திரோத்பவ, அய, தாரு, தாமிர சிலாஸுவர்ண கர்மோத்தாரக, ஸ்ரீமத் பௌருஷேய பிராம்மண வித்வத் மஹா ஜநாநாம் ஸந்நிதௌ.

மீனாக்ஷிபுரவாசஸ்ததைவக்ஞ முத்து ஆச்சார்யேண, ப்ரணம பூர்வ கம்மயாகிருத விக்ஞாபன பத்திரிகா.

நம் விஸ்வகர்ம வம்சத்தவர்களின், கல்வி, கேழ்வி, சிற்பம், கைத்தொழில், ஆசாரமுதலியவைகள் அபிவிர்த்தி யடையும்பொருட்டு குலாபிமானிகள் அபரிமிதமான திரவியசெலவுகளையும், சரீரபிரயாசங்களையும், வகித்து, பத்திரிகை, சபை, பாடசாலை முதலான ஸ்தாபனங்களைச்செய்து, அதினாலனேக நன்மைகளடைந்து வருவதைப்போலாக, பௌருஷேயர்களின் சிஷ்டாசார, நித்திய நைமித்திகங்கள், தகைச்சலின்றி சாஸ்திரோக்தமாக நடைபெறுங்காலம், சமீபித்திருக்கிறதென்று தெரிந்து நித்தியநைமித்திக கர்மங்களை சாஸ்திரவிரோதமாக பலரும், அனுஷ்டிக்கிறதினா லிவ்விஷயத்தை வித்வத்மஹா ஜனங்களிடத்தில் தெரியப்படுத்தினால் சுருதிஸ்மிருதிகளுக்கு ஒற்றுமையான வழியில் வந்துவிடுமெனக்கருதி, இப்பத்திரிகையி லெழுதலாயிற்று.

நித்தியநைமித்திக கர்மங்களுக்கு அடிஸ்தானமாயிருப்பது சாகை சூத்திரங்களேயாம்.

திரிகாலங்களிலும் பண்ணப்பட்ட நித்திய கர்மங்களின் அபிவாதையி லொருவன், எந்தசாகைசொல்கிறானோ, அந்தசாகைக்குள்ள சந்தியாவந்தனமே, அவனநுஷ்டிக்க வேண்டுமென்றும், அந்தசாகைக்கு சொல்லிய முக்கியகாலகௌணகாலங்களிலவன் உபாகர்மஞ்செய்துகொள்ளவேண்டு மென்றும், எந்த சூத்திரம் சொல்கிறானோ, அந்த சூத்திர ரிஷியினாலவன் சொல்லப்பட்ட சாகைக்கு கிருகிய சூத்திரம் செய்திருக்கவேண்டுமென்றும், அந்த கிருகிய சூத்திரப்பிரகாரமே, அவனுக்குக் கர்ப்பாதான முதல் ஷோடசகர்மங்களான நைமித்திககர்மங்கள் நடத்தவேண்டும் மென்றும், ஸ்மிருதிகளிலும், கல்பசூத்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதை நன்றாய் கவனிக்கவேண்டும்.

**சாதாதப: வசனம்.**

பஹ்வல்பம் வாஸ்வகிருஹ்யோக்தம் யஸ்யகர்மப்ரசோதிதம், தஸ்யதத்வதி சாங்கிரார்த்தேக்ருதேஸர்வம்க்ருதம் பவேத். யாவனொருவன் அபிவாதையில் சொல்லுகிறஸ்வ கிருகிய சூத்திரத்தின் பிரகாரமே அவனுடைய சகலகர்மங்களும் நடத்தப்படவேண்டு மென்றும்.

**பாரத்துவாச:**

ஸ்வக்ருஹ்ய யோக்தகாலே உபாகர்மம்க்ருத்வா, ஸ்வாத்யாயதீயதயீதிஸ் மாஞைத்.

எந்த சூத்திரம் சொல்கிறானோ அந்த சூத்திரத்துக்கு யெந்தசாகையோ அந்த சாகைக்குச் சொல்லப்பட்டமுக்கியகாலகௌணகாலத்தில் உபாகர்மம் செய்து தன்னுடைய வேதத்தை அத்தியயனம் பண்ணவேண்டு மென்றும்,



**காத்தியாயன:**

ஸ்வசாகாஸ்ரய முத்ஸ்ருஜ்ய பரசாகாஸ்ரயஞ்சய:, கர்த்துமிச்சந்திதுர்மேதா மோகம்தத்தஸ்ய சேஷ்டிதம்.

யாவனொருவன் தன்னுடைய சாகையைவிட்டு அன்னிய சாகையை யனுஷ்டிக்கிறானோ அவன் பாபியாகி நரகத்தையடைவ னென்றும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் ஒருவன் அபிவாதையில் தான்சொல்லிக்கொள்ளும் சூத்திரம், எந்தரிஷியின் பெயராகவிருக்கிறதோ, அந்தரிஷியினால் தான்சொல்லிக்கொள்ளும் வேதத்துக்கு கிருகியசூத்திரம் செய்திருக்கவேண்டும். அந்த கிருகிய சூத்திரவிதிப்பிரகாரமே தன்னுடைய சோடசகர்மங்களை நடத்தப்படவேண்டுமென்றும், ஒருவன் தன்னுடைய சாகைக்கு யேற்பட்ட முக்கியகால கௌணகாலங்களில் உபாகர்மஞ்செய்து தன்னுடைய சாகையில் தான் சொல்லிக்கொள்ளும் வேதம் எதாயிருக்கிறதோ அந்த வேதத்தை அத்தியயனம் பண்ணவேண்டு மென்றும், தன்னுடைய சாகைக்கு சொல்லி யிருக்கிற. உபாகர்ம முக்கியகாலம் கௌணகாலத்தையும், சூத்திரத்தையும் விட்டுவிட்டு, அன்னியசாகைக்கு சொல்லியிருக்கிற உபாகர்ம முக்கியகாலம். கௌணகாலங்களிலும், அன்னியசாகைகளுக்குச் சொல்லியிருக்கிற சூத்திரப்பிரகாரம், கர்மங்களை யனுஷ்டிக்கிறவன் பாபியென்றும், நரகத்தை யடைவனென்றும், ஸ்மிருதிகளில் கூறியிருக்க, இவ்விஷயத்தை கிஞ்சிற்றேனு முணராமல் அபிவாதையில் சொல்கிற சாகா சூத்திரத்துக்கும் தானனுஷ்டிக்கிறதற்கும் பரஸ்பர விருத்தமாகவும், சாஸ்திரவிரோதமாகவுமிருக்கிறதை அடியிலெடுத்துக் காட்டுகின்றனம்.

ருக்சாகைக்கு ஆசுவலாயன சூத்திரமென்றும், யஜுசாகைக்கு ஆபஸ்தம்ப சூத்திரமென்றும், சாமசாகைக்கு போதாயன சூத்திரமென்றும், அதர்வணசாகைக்கு காத்தியாயனசூத்திரமென்றும், பிரணவசாகைக்கு ரௌப்யாயன சூத்திரமென்றும் நம்மவர்களில் சிலர் சொல்லிக்கொள்கிறார்கள். இவர்களனுஷ்டானம், முழுவதும் யஜுர்வேதசந்தியாவந்தனமாகவும் சுபாசுபங்களில் ஆபஸ்தம்ப சூத்திர பிரகாரமும், உபாகர்மம் யஜுர்வேத முக்கியகால கௌணகாலத்திலும் நடத்துகிறார்கள்.

இந்தப்படி ஒரேவிதமாக அநுஷ்டிக்கிறவர்கள் பலசாகைகளையும், பல சூத்திரங்களையும், சொல்லிக்கொள்வதில் யாது பிரயோசனம்? அபிவாதையிலொன்றைச்சொல்லி யொன்றை நடத்துவதினால் பதித்வமும், தோஷமு முண்டாகின்றது. வசனம். (தொடரும்.)

ஜோஸியர்-முத்தாச்சாரியார்
மீனாக்ஷிபுரம்.

## விதியும் வினையும்.

விதி என்பது கட்டளை எனவும், வினை என்பது செயல் எனவும் பொருள்படும். ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த செயலுக்குறிய பலாபலனை அவரவரே அநுபவிக்கவேண்டுவது நியமமாதலின், நற்பயனை அநுபவிக்கும்போது எப்படி அப்பயனுக்குரிய செயலை ஒவ்வொருவரும் தத்தந் தலைமேற்கொள்ள இச்சிக்கின்றனரோ, அப்படியே துர்ச்செயலால்வரும் துர்ப்பயனையும் ஏற்கவேண்டுவது கிரமமல்லவா? ஆகவே மக்கள் செய்யும்செயல்களை யநுசரித்து அவர்களுக்கு ஈஸ்வரன் நியாயா நியாயவாயிலாக அநுகூல அல்லது பிரதிகூலபலனை அளித்து வருவதையே ‘விதி’ என்றும் அதற்கு ஹேதுவான செயலையே ‘வினை’ என்றும் வழங்கிவருகின்றோம். இவ்விதியும், வினையும்உலகவியவகாரத்தில் பெரிதும் ஈடுபட்டுள்ளார்க்கு இன்றியமையாதனவாம். பாரமார்த்திக நோக்கைப் பற்றினவர்க்கோ, வித்தியாசம் அறவே ஒழிந்து போகின்றனமையின் அவை இரண்டு

மின்றும். பின்வருவன மேற்சொன்னவற்றை வற்புறுத்தும்.

லௌகீகரைப்பற்றி:—

"முற்பகற்செய்யிற் பிற்பகல்விளையும்" "பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும்" "தினைவிதைப்பவன் தினையறுப்பான்" "சுரையொன்று போடவிரையொன்று காய்க்குமா" "அறத்தாறிதுவென வேண்டாசிவிகை, பொறுத்தானோடூர்ந்தானிடை" "கடப்பாரெவரே கடுவினையை" "தத்தம்விதியின் பயனேபயன்" "இட்டாருக்கிட்டபலன்"

"தேற்றமுற் பவத்திற்செய்த தீங்குநன்கெனுமிரண்டும், ஆற்றல்சால் கருமமென்ப ரக்கருமத்தைநோக்கிச், சாற்றுமிப்பிறல் யார்க்குந்தரித்திரம் செல்வநல்கிப், போற்றுவனுயிரையெல்லாம் பொலிசுடர்த் திகிரிவள்ளல்"

இந்தச் சீவனால் வருவது பகையெலாமிவன் செயலென்னாமல், அந்தந்தத் தேவனால் வருமென்ற மூடர்க ளதோகதியடைவார்கள்" முதலியன

பாரமார்த்திகரைப்பற்றி:—

"அவனன்றியோரணுவு மசையாது"
'மறலியுயிர்குடிக்த கான்முளையேசாலுங்கரி"
"ஊழையுமுப்பக்கங் காண்பர்"

"நீதறுசெல்வம்பெற்றும் சிலர்பொசிப் புறுதிகூரார், யோதரப்பொசிப்போமென்பார் கூர்வர்நல் குரவுஞ்சேர்வர், ஆதலால்புருடன் றன்னாலறிந்துசெய் செயலொன்றில்லை, ஏதமுன்முயற்றியெல்லாமிறை வன்றன்முயற்றியாமல்"

"சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்
கபாயமொருநாளுமில்லை—உபாயம்
இதுவேமதியாகு மல்லாதவெல்லாம்
விதியேமதியாய் விடும்"

"மிக்கோனுலகளந்த மெய்யடியேசார்பாக
புக்கோருவினைபோற் போயிற்றே"

"உடையவன் மூக்குறுங் கயிற்றினுய்க்குமேல்
விடையவன் கைவழி மேவு மாறுபோல்
நடைபெறு முலகமோர் நாதனு லென்றால்
படிமிசையொருவருக் கொருவர்பற்றெவன்"
முதலியன

என்சிற்றறிவிற் கெட்டிய இக்கொள்கையில் தவறுள்ளதேல் அறிஞர் இப்பத்திரிகை வாயிலாக அறிவிப்பார்களாக.

வினையைப்பற்றிய சங்கை பலர்க்கும் அடிக்கடிநிகழ்ந்து வருதலின் இஃது எழுதலாயிற்று.

வித்துவான்.
ம. இராஜகோபால் பிள்ளை.

## கடிதம்.

### ஐந்துநாள் விவாஹத்திற்குச் சுருதிஆதாரம்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை "விஸ்வகர்மகுலோபகாரிப்" பத்திரிகை ப்ரொப்ரயிட்டர் பிரமஸ்ரீ கொ கன்னியப்பாச்சாரி அவர்கள் திவ்வியசமுகத்திற்கு திருச்சினாப்பள்ளி ஜில்லா முசிரிதாலுக்கா சமஸ்தானம் ரெட்டியார் துரையூர் விஸ்வப்ரம்ஹ சபையாரனைவரும் வேதோக்த நமஸ்காரம் உபயக்ஷேமம்.

தங்களது விஸ்வகர்மகுலோபகாரி முதல் நெம்பர் பத்திரிகையின் 4-வது பக்கத்தில் சந்தவேலூர் பிரம்மஸ்ரீகோவிந்தாச்சாரியாரவர்கள் விவாகவிஷயமாய் எழுதியவியாசத்தில் தற்காலம் நம்மவர்கள் ஐந்துநாள் விவாகஞ் செய்து வருவதால்திரேககஷ்டமும்,திரவியகஷ்டமும் அதிகமிருக்கிறதென்றும், மூன்றுநாள் விவாஹம் நடத்திவந்தால் கஷ்டமிராதென்றும்,விப்பிரர்முதலியோர்கள் மூன்றுநாள் விவாஹம் செய்யவில்லையாஎன்றும்,நாமென் அதுபோல் செய்யக்கூடாதென்றும் ஐந்து நாள் விவாகம் கட்டாயம் நடத்தவெண்டு மென்று எந்தச்சுருதியிலும் காண்கிலம்என்றும், அச்சுருதி ஆதாரத்தை எடுத்துக்காட்டினாரில்லை யென்றும் எழுதியுள்ளார். ஆகையால் ஐந்துநாள் விவாகம்



நடத்த வேண்டுமென்கிற சுருதி ஆதாரத்தை எங்களுக்குத் தெரிந்த அளவில் இதனடியிலெடுத்துக்காட்டி யிருக்கின்றோம் அதையாவரும் கவனிப்பீர்களாக.

ஸ்ருதி.

விவாஹேபஞ்சராத்ரம்ச பஞ்சமூர் தீஸ்வரம் யஜேத், ஜ்யோதிப்ரத முபாக்னிஞ்ச த்ருதீயம் கடவாஸ்துச

நாந்தீதேவாஸ்துரீயஸ்ச அங்குரார்பணஸ்தம்பகம், ஜத்ரதேவோத விஸ்வஞ்ச ருத்ராவர்த க்ரஹஸ்ததா.

ஈஸாநஃ ஸர்வதேவாநாம் தஸோகோருத்ரதேவதாஃ த்யஸ்த்ரிம் ஸத்கோடிதேவா வேதிகாராதநம் சுபம்

ஔபாஸநம ஹோராத்ரிஃ பஞ்சாக்நோர்ஹோமஹோஷ்யகம், அக்நிம் ஜுஹோத்யயாஸ்சேதிஜயாதிந்வாஸ்துயகம் ஹோமகம்

பஞ்சஸாதாக்ய பூர்ணயாம் ஔபாஸ நவிஸர்ஜநம்.

இந்தச் சுருதி வாக்கியத்தில் சொல்லியபடி விவாகம் பஞ்சராத்திரி செய்யவேண்டுமென்றும், பஞ்சமூர்த்திகளை ஆவாகனம் செய்யவேண்டுமென்றும், பலான தேவதைகள் என்றும், ஔபாசனம் பஞ்சதினம் திவோராத்திரியாய் பஞ்சவித ஔபாசன மந்திரங்களைச் செய்யவேணு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியங்களை அனுசரித்து முன்னோர் செய்துவந்திருக்கின்றார்களே தவிரவேறில்லை.

ஸ்ருதி.

ஸோமஃ ப்ரதமோவிவிதேகநதர் வோவிவித உத்தரஃ, த்ருதீயோ அக்னிஷ்டேபதிஸ்து ரீயஸ்தே மநுஷ்யஜாஃ.

விவாஹே.

ஏகாஸய்யாஸநம வஸ்ரம் ஏகபாத்ரந்து போஜநம், ஏகத்ரமங்களம் ஸ்நானம் தம்பத்யோஃ பஞ்சராத்ரகம்.

என்னும்இந்தச் சுருதிவாக்கியங்களையும் கவனிப்பீர்களாக.

விஸ்வப்பிரம்ம சபையார்,
திருச்சி முசிரிதாலுக்கா,
ரெட்டியார் துரையூர்.

## வர்த்தமானக் குறிப்புகள்.

### சென்னையில் ராஜப்பிரதிநிதி விஜயம்.

நமது ராஜப்பிரதிநிதி தமதுபரிவாரங்கள் சகிதமாய் சென்றமீ 24௳ பகல் $12\frac{1}{2}$-மணிக்கு சென்டிரல் ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். அவர் வரவை எதிர்ப்பார்த்திருந்த ராஜமன்னர்களும் உயர்பதவி உத்தியோகஸ்தர்களும் மற்றும் பல பிரமுகர்களும் முன்னாடியேவிருந்து மண்டபத்தில் ஒன்றுகூடி எதிப்பார்த்திருந்தனர். ராஜப்பிரதிநிதி வந்திறங்கியதும் மரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. ராஜப்பிரதிநிதி சரியாய் $12\frac{1}{2}$ மணிக்கு விருந்துமண்டபம் வந்துசேர்ந்து அங்கு கூடியிருந்தவர்களின் மத்தியில் மனப்பூரிப்புடன் வந்தனம் செய்து நின்றார். அப்போது சென்னைக்கவர்னர் ராஜாக்களையும், உத்தியோகஸ்தர்களுள் சிலரையும் ராஜப்பிரதிநிதிக்கு அறிமுகம் செய்துவைத்ததும் ராஜப்பிரதிநிதி சகிதம் கவர்ன்மெண்ட் ஹவுசுக்குச் சென்றார்கள். அங்கு பல சங்கங்களாலும், சபைகளாலும் கொடுக்கப்பட்ட வரவேற்பு பத்திரங்கள் வாசிக்கப்பட்டது. அவைகட்கு ராஜப் பிரதிநிதி சாங்கோபாங்கமாய் சுருக்கி பதில் சொல்லிவிட்டு மாலை சென்னை துறைமுகத்தைப்போய் பார்த்துவந்தார்.

அடுத்த நாளாகிய 25௳ காலை ராஜப்பிரதிநிதி யூனிவர்ஸிடி புத்தகசாலைக் கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டும் சடங்கை நடத்தினார். 10-மணிக்கு மேல் ஹைகோர்ட்டைப் பார்க்கச்சென்றார். அங்கு அவரை சீப்ஜஸ்டிஸால் வரவேற்கப்பட்டு கோர்ட்டு முழுதையும் காண்பிக்கப்பட்டது பகலில் சில மன்னர்களுக்கு பேட்டிகொடுத்தார். மாலை 4-மணிக்குமேல் ராஜப்பிரதிநிதி கிண்டி கவர்ன்மெ

ண்டு ஹவுசுக்குச்சென்று அங்குள்ளவிசேஷங்களைப் பார்வையிட்டுத் திரும்பினர்.

மறுநாளாகிய 26உ காலை ராஜப்பிரதிநிதி தமது மனைவியாருடனும், மற்ற உத்தியோகஸ்தர்களுடனும் மோட்டாரில் பீபில்ஸ்பார்க்கில் புதிதாய்க்கட்டப்பட்ட 'ரிப்பன்பில்டிங்ஸ்' என்னும் முன்சிபல் கட்டத்தில் வந்திறங்கினர்கள். அன்று நடைபெறும் சடங்கைப்பார்க்க அழைக்கப்பட்டிருந்த சீமான்களும், சீமாட்டிகளும், அங்கு அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கூடியிருந்தார்கள். ராஜப்பிரதிநிதி தமது ஆசனத்தில் வந்தமர்ந்ததும் முனிசிபல் பிரசிடெண்டால் கொடுக்கப்பட்டவரவேற்புப்பத்திரம் வாசிக்கப்பட்டன. பிறகு, ராஜப்பிரதிநிதி தமது ஆரம்ப பிரசங்கத்தை முடித்ததும் அவரதுகரத்தால் கட்டடத்தின் ஓர் பாகத்தின் கதவைத்திறந்துவைத்தார். உடனே மாலை மரியாதைகள்நடத்தியதும் தமது மோட்டாரிலேறி கவர்ன்மெண்டு ஹவுசுக்குச்சென்றார். இடைவேளையில் பல ராஜமன்னர்களுக்கு பேட்டி கொடுத்தார். மாலை 4-மணிக்குமேல் காஸ்மாபொலிடன் கிளப்புக்குச்சென்று அங்கு நடத்தப்பட்ட உபசாரணைகளை ஏற்று கூடியிருந்த பிரமுகர்களிடம் சம்பாஷணை செய்துவிட்டு கவர்ன்மெண்ட்ஹவுசுக்குத்திரும்பினர். இரவு போஜனகாரியங்கள் முடிந்ததும் 10-மணிக்கு மேல் ராஜப்பிரதிநிதி தமது பரிவாரங்கள் சகிதம் மோட்டாரிலேறி ஸென்டிரல் ஸ்டேஷன் வந்தடைந்தார். அப்போது அவரைவழிகூட்டி அனுப்ப சென்னைக்கவர்னரும் உயர்பதவி உத்தியோகஸ்தர்கள் பலபேரும் ஸ்டேஷனில் வந்திருந்தார்கள். இவர்களுடன் ராஜப்பிரதிநிதி சற்றுநேரம் சம்பாஷணை செய்துவிட்டு தனி ஸ்பெஷல் வண்டி ஒன்றிலேறிக் கல்கத்தாவுக்குச் சென்றார். பின்பு, மற்றும் பல ஊர்கள் பிரயாணம் செய்துவிட்டு இம்மாதம் 5உ காலை டெல்லிபோய்ச்சேர்ந்தார்.

---

### காட்டேலிகள் தோலால் உடைகள்.

ஹாலந்து தேசத்து ஜனங்கள் காட்டெலிகளின் தோலைக்கொண்டு பலவிதமான உடைகள் தயார்செய்கிறார்களாம். இத்தோல்கள் அநேகமாய் அமெரிக்காவிற்கு அனுப்பப்படுகிறதாம். இவ்வியாபாரத்தால் சென்றவருஷம் ஒருவர் 15000 பவுன் சம்பாதித்தாராம்.

---

### ஒரு ஆகாய சஞ்சாரியின் சாமர்த்தியம்.

பாரிஸ் நகரத்தில் ஜிஸ்பெர்ட் என்ற ஒரு ஆகாயரதசஞ்சாரி 31 நிமிஷத்தில் 688 மைல் தூரம் சஞ்சாரஞ்செய்து தக்கபரிசுபெற்றாராம்.

---

### ஜப்பான் தேசத்துப் பெண்களின் தொழில்.

ஜப்பான் தேசத்துப்பெண்கள் எத்தொழிலும் வல்லவர்களென்பது நேயர்களறிவார்கள். இப்பெண்கள் குளிர்காலம்தவிர, அதாவது. (தை, மாசி, பங்குனி) மற்றமாதங்களில் கடலுக்கடுத்து வசிக்கும்பெண்கள் கடலில் இறங்கி முத்து குளிக்கும் தொழிலைச் செய்கிறார்களாம் இவர்கள் தங்கள் குழந்தைகளுக்குகூட நீந்தக் கற்றுக் கொடுக்கிறார்களென்றும் சிறு பெண்களாயுள்ளவர்கள் 12-வயது வரையில் பள்ளியில்வாசித்துவிட்டுப்பின்பு முத்துக்குளிக்கும் தொழிலையே அநுசரிக்கிறார்களென்றும் சொல்லப்படுகின்றது. அப்பெண்கள் முத்து குளிக்கும்போது தாங்கள் இயற்கையாய்த் தரித்துள்ள ஆடைகளைக்களைந்துபோட்டு அதற்குண்டான உடைகளைத்தரித்துக் கூந்தலையிருக்கிக்கட்டிச்செல்வதுடன் கண்ணில் தண்ணீர் படாதபடி கண்ணாடியும்தரித்துக்கொள்ளுகிறார்களாம்.

---

### பெண்வேடதாரியின் மோசம்.

பிரசலா என்னுமூரில் தனவந்தனான ஒரு வியாபாரியிடம் காரால் ரேஸலா எனப் பெயர் பூண்ட ஒருவன் பார்ப்போர் எளிதில் மயங்கும்படியான பெண் வேடந்தரித்து வந்து அவ்வியாபாரியை மயக்கிமணஞ் செய்துகொண்டானாம். ஆனால், மணக்கோலம் முடிந்த 2-மணி நேரத்திற்குள் சுமார் 12,000 பவுன் விலையுள்ள ஆபரணங்களை அபகரித்துக்கொண்டு மறைந்து போய்விட்டானாம். முடிவில் இப்பெரும்மோசக்காரன் ஹாம்பர்க் என்ற விடத்தில் அகப்பட்டு இரண்டுவருஷக்காவல்தண்டனையடைந்தானாம்.

---



### ஒரு ஆகாயவிமானியின் அற்புதச்செய்கை.

மேனாட்டில் ஓர் ஆகாய விமானியாகிய மிஸ்டர். எம். பெகுயென்பவர் தனது ஆகாய விமானத்திலேறி வெகு விரைவாக ஆகாயத்திற்சென்ற சில நேரத்திற்குள் மேகங்களுக்குள் மறைந்து பிறகு வெளிப்பட்டுஇரதத்தை தலைகீழாய் கவிழ்த்து தரையைநோக்கிப் பாய்ந்து வருகையில் சுமார் 3000 அடி உயரத்தில் விமானத்தை சரியாகத்திருப்பி அவ்விடத்தில் அரைமணிநேரம் சஞ்சரித்தபடியேகாண்போர் மனம் கலங்கும்படி கரணங்கள்போட்டுக் காட்டினராம். இன்னும் சிலநாளைச்குள் இவ்வித ஆகாயவிமானிகள் வானத்தில் பறவைகள்போல் சஞ்சரிப்பார்கள் போலும்.

---

### ஒரு மலைப் பாம்பு.

களுத்தரைக் கடுத்துள்ள ஒரு குடியானவன் அடுத்த கிராமத்துக்குப் போகும்போது இடைவழியில் படுத்திருந்த மலைப்பாம்பினால் இடறிவிழுந்தான். உடனே அவன் இதுவெள்ளத்தினால் வந்த மரமெனக்கருதி உதவிக்காக அயலாரைத் துணை செய்யும்படி வேண்டினான். எல்லோரும் ஏகோபித்து அப்பாம்பைப் பிரட்டத்துணிந்தபோது பெரும் பாம்பெனக்கண்டு அதனை அடித்துக் கொன்றார்கள். அப்பாம்பு $2\frac{1}{2}$-அடி கனமுள்ளதாயும் 14-அடி நீளமுள்ளதாயும் இருந்ததோடு அதன்வயற்றில் 21-முட்டைகளுமிருந்தனவென்று தெரியவருகிறது.

---

### விவாக மாகாதவர்களின் தொகை.

அமெரிக்காதேசத்தில், 80-லக்ஷம் ஆண்பிள்ளைகளும், 90-லக்ஷம்பெண்பிள்ளைகளும்விவாகமில்லாதிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் அங்குள்ள ஆண்களும் பெண்களும் விவாகத்தை வெறுத்திருப்பதுதானென்று சொல்லப்படுகின்றது. இதனால் ஆண்பிள்ளைகள் வீண் செலவுசெய்யவும் துர்மார்க்கத்தில் பிரவேசிக்கவும் இடங்கொடுக்கிறதாம். சில ஸ்திரீகள் தங்களை போஷிக்கக் கணவனில்லாமல் எந்திரசாலைகளில் கஷ்டப்பட்டுக் கிடைக்கும் சொற்ப வரும்படியைக்கொண்டு ஜீவிக்கிறார்களாம். அநேகமாய் இப்பெண்களுள் பலர் தாங்கள் ஜீவிக்கக்கூடிய பொருள் இருந்து, விட்டால் ஒருவனுக்கு உட்படுகிற துன்பம் தனக்குவேண்டியதில்லையென்ற நோக்கத்துடன் ஆயுள் முழுமையும் கழித்து விடுகிறார்களென்று ஒரு ஸ்திரீ பத்திராதிபர் தெரிவிக்கிறார்.

---

### நாயின் நற்புத்தி.

இங்கிலாண்டில் வசித்துவந்த ஒரு குடியானவன், ஒருநாள் கட்டைகள் கொண்டுவரும்பொருட்டு 10-மையில் தூரமுள்ள ஒரு காட்டுக்குச் செல்லுகையில் அவனது நாயும் உடன்சென்றதாம். அவன் கட்டைகளை வெட்டி வண்டியில் போட்டுக்கொண்டு திரும்புகையில் கூடவிருந்த நாயானது கெற்பமானதால் மூன்றுகுட்டிகளை போட்டதாம். நாயுக்குடையோன் அக்குட்டிகளை காட்டிலேயே எறிந்துவிட்டு நாயைமாத்திரம் வண்டியில் ஏற்றிக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்துவிட்டானாம். வீடடைந்த நாயானது அன்றிரவே குட்டிகளின்மேல் வைத்திருந்த அன்பால் மூன்றுதடவை காட்டுக்குச் சென்று ஒவ்வொரு குட்டியாய்க் கொண்டுவந்து தன்னிடம் சேர்த்துக்கொண்டதாம். அந்த நள்ளிரவில் மூன்று தடவைக்கு 60-மைல் தூரஞ் சென்ற காரணத்தால் அதிகக் களைப்படைந்து அதன்குட்டிகளின் பக்கத்தில் படுத்தபடியே செத்துக்கிடந்ததாம்.

---

### பெரும் பஞ்சம்.

வங்காளமாகாணத்தைச்சேர்ந்த பரித்பூர்ஜில்லாவின் சில பாகத்தில் பஞ்சம் பரவியிருப்பதால் சுமார் 250-கிராம ஜனங்கள் சரியான உணவின்றி வருந்துகிறார்களென்றும், தற்போது அம்மாகாணக் கவர்ன்மெண்டார் விவசாயிகளுக்கு 21,000 ரூ கடனாக கொடுத்து உதவியிருக்கிறார்களென்று மறிகின்றோம்.

---

### பன்றியை விழுங்கிய பாம்பு.

ஹாங்காங் கென்னும் நகருக்கடுத்த டெய்ஞோவென்ற ஊரில் பெரும்பாம் பொன்றை சுட்டார்களாம். உடனே அப்பாம்பைச் சோதித்துப்பார்க்க அதன்வயற்றினுள் 64-பவுன் எடையுள்ளபன்றி யொன்றிருந்ததாம்.

---

## நேர்த்தியான காகித மண்டபம்.

இரீனிச்சி என்னுமூரிலுள்ள நட்சத்திர ஆபீசின் மண்டபம் வெகு அலங்காரமாக காகிதத்தினால் செய்யப்பட்டிருக்கிறதாம். அம்மண்டபத்தின் நிறையோ 20-டன் என்று தெரியவருகிறது.

---

## முதலைக் குட்டிகளின் உற்பத்தி.

முதலைகள் தாமிடும் முட்டைகளை ஆற்றின் கரையோரங்களில் புதைத்து விடுகின்றனவாம். அம்முட்டைகளில் குட்டிகள் உற்பத்தியாகி வெளிப்படுந் தருணத்தில் முட்டைக்குள்ளிருந்தபடியே ஓர்வித சப்தமிடுகின்றதாம். அதுகண்டுமுதலைகள் முட்டைகளிருக்குமிடஞ் சென்று அம்முட்டைகளை வெளிப்படுத்த உடனேமுதலைக் குட்டிகள் வெளிப்படுகின்றதாம்.

---

## ஒரு புதிய எந்திரத்தின் சக்தி.

டென்மார்க் என்னும் ஊரில் புதியதாய் தூரதிருஷ்டிக் கண்ணாடி யொன்று கண்டுபிடித்திருக்கிறார்களாம். இக்கண்ணாடியைக்கொண்டு எவ்வளவு தூரமாயிருந்தாலும் அங்கு நடைபெருகிற சகலசங்கதியையும் தெரிந்து கொள்ளச்சாத்தியப்படுகிறதாம். இதற்குக் காரணம் மின்சாரசக்தியே யெனச்சொல்லப்படுகிறது.

---

## மரியாதையுள்ள மிருகங்கள்.

அபிஸீனியா என்ற காட்டில் அனேகமைல் தூரங்களுக்கு முன்பாக மிருகங்கள் குடிப்பதற்கு தண்ணீர் கிடைப்பதில்லையாம். அதனால் காட்டுமிருகங்கள் வெகுதூரங்கள் சென்று தண்ணீருள்ள விடத்தில் எல்லாமிருகங்களும் ஒன்றாய்வந்து சேருகின்றதாம். அப்படிச்சேரும் மிருகங்கள் தங்களிஷ்டப்படி தண்ணீர் குடிப்பதில்லையாம். முதலில் யானைகள் இறங்கி தாகசாந்தி செய்து கொண்டபின் காண்டாமிருகங்கள் தண்ணீர்குடிக்கச் செல்லுமாம். அதன்பின் காட்டுக் குதிரைகளும், மற்றமிருகங்களும் சென்றுநீருந்திச் செல்லுமாம். இந்தச்சந்தர்ப்பத்தில் பகையுள்ள மிருகங்கள்கூட ஒன்றோடொன்று சண்டை யிடுவதில்லையாம்.

---

## வீதிக் குப்பைகளைச் சுத்தஞ் செய்யும் விநோதம்.

மேல் ஆபிரிக்காவில் பிராஞ்சியார் ஆளுகைக்குட்பட்ட கோமிஎன்னு மிடத்தில் ஒரு கான்ஸ்டேபில் வீதியே செல்லும்போது அவ்வீதியில் எங்கேனும் குப்பை இருப்பதைக் கண்டுவிட்டால் அக்கான்ஸ்டேபில் அங்கேயே நின்றுகொண்டு அவ்வழிச் செல்லும் ஸ்திரிகளை மடக்கி அக்குப்பைகளைக் கூட்டி ஓர்புரம் ஒதுக்கும்படி செய்வானாம். ஆனால், புருஷர்களை மாத்திரம் இத்தொழிலுக்கு விடுகிறதில்லையாம்.

---

## ஆகாய ரதத் தபால்.

பிரான்சுதேசத்தில், ஆகாயரதத்தின்மூலமாக தபால்கள் அனுப்பும் முறையை பரீட்சிக்கப்பட்டுவருகிறதாம். சமீபத்தில் பாரீஸ்நகரத்தில் இருந்து பாப்லாக் என்னும் ஊருக்கு ஆகாயரதத்தின் மூலமாகத் தபாலும் அனுப்பப்பட்டதாம்.

---

## வியாதியைக்கண்டறியத்தக்க நவீன எந்திரம்.

ஒரு வியாதியஸ்தனுடைய வியாதி இப்படிபட்டதென்பதை எளிதில் கண்டுகொள்ளும்படிக்கு "ஹார்ட்பரோமீடர்" என்ற எந்திரமொன்று கண்டுபிடித்திருக்கிறதாம். இந்த எந்திரத்தைக்கொண்டு வியாதியஸ்தனுக்கு யாதொருதொந்தரவுமில்லாமல் அவனது வியாதியின் தன்மை இத்தன்மை யுடையதென்று கண்டுகொள்ள எளிதாக யிருக்கின்றதாம். இந்த எந்திரத்தை இப்போது லண்டன் ஆஸ்பத்திரியில் உபயோகப்படுத்திவருகிறார்களாம்.

---

## ஒருபுதிய எந்திரம்.

கிறெப்போகிறுப்பென்னும் ஓர்வித எந்திரம் இத்தாலியா இஞ்சினீயரால் கண்டுபிடித்திருக்கிறதாம். இந்த எந்திரத்தைஒருவீட்டின்தெருவாயலுக்கு முன்பாக கட்டிவைத்தால் அவ்வீட்டிற்குள் போவோர் வருவோர்களின் உருவங்களை அப்படியே பதிவுசெய்து கொள்ளுகிறதாம். இந்தஎந்திரத்தின் சூழ்ச்சியால் திருடர்களகப்படுதலும் வெகு எளிதாகுமல்லவா?

---

## பசுக்களுக்கு மூக்குக் கண்ணாடி.

பர்மிங்ஹாம் என்ற ஊரில் ஓர்வர்த்தகர் மூக்குக்கண்ணாடித் தொழிலையே செய்து அதிக திரவியத்தைச் சம்பாதித்தனராம். அநேகமாய் இக்கண்ணாடிகள் ஸைபீரியாவிலுள்ள ஜனங்களே.வாங்குகிறார்களாம். இப்படி இவர்கள்வாங்குவதற்குக்காரணம். அத்தேசத்தில் பனிக்கட்டிமிகுதியென்றும் அப்பனிக்கட்டிகள் நிறைந்தபுற்களை மாடுகள்மேயும்போது அப்புற்களின்மேல் சூரியவெப்பம்பட்டதும் பசுக்களுக்கு கண்தெரியாமல்போய்விடுகிறதென்றும், அதனால் மேற்படி மூக்குக்கண்ணாடியை தோலில்மாட்டி மாடுகளுக்குகட்டிவிட்டால் அவைகளுக்கு கண்நன்றாய்த் தெரிகின்றதென்றும் சொல்லப்படுகிறது.

---

## அலுமினியத்தில் வஸ்திரங்கள் செய்ய முயற்சி.

உலகத்தில் உற்பத்தியாகி நடமாட்டத்திலிருக்கும் உலோகங்களில் அலுமினியமுமொன்றென்பது உலகமறிந்தவிஷயம். ஆனால், அலுமினியபாத்திரங்களுக்கு அதன் ஆரம்பத்திலிருந்த பெருமை தற்போதில்லையானாலும் அதன்வியாபாரக்கடைகள் எங்கும் விசேடப்பட்டிருப்பது நாம் சொல்லவேண்டுவதில்லை. இந்த அலுமினியத்தொழில் இன்னும்விர்த்திகொள்ளும்நோக்கமாக அலுமினியத்தை நூல்போன்று கம்பியாக இழுத்துப் பட்டுடனும் மற்றும் நூல்களுடனும் சேர்த்து உயர்ந்தவஸ்திரங்கள் செய்யப்போவதாக ஓர் வதந்தி யுலாவுகிறது. அன்றியும், இந்த அலுமினிய வஸ்திரத்துக்கு இஷ்டமான நிறங்களைக் கொடுக்கவும் சாத்தியமாகுமென்றுஞ் சொல்லப்படுகின்றது.

---

## தீயினால்நேர்ந்த பரிதாபமரணம்.

ஆர்கோடியாவிலுள்ள ஒரு ஒட்டலில் தீப்பிடித்து அதனால் 25-பேர்மரண மடைந்தார்களென்றும், சிலர் நெருப்புக்குபயந்து அக்கட்டடத்தின் ஜன்னல்வழியாகக் குதித்ததில்காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சையி லிருக்கின்றார்களென்றும் தெரியவருகிறது.

---

## கொசுக்களைப்பிடிக்கும் ஒருபுதிய எந்திரம்.

மேனாட்டில் கொசுக்களைப்பிடிக்கும் எந்திரமொன்று கண்டுபிடித்திருக்கிறதாம் அந்தஎந்திரத்தை ஓரிடத்தில் வைத்துவிட்டால் கொசுக்கள் தானாகவேவந்து அந்தஎந்திரத்தில் விழுந்து சாகின்றதாம் ஆனால், எந்திரத்தினுள் ஒரு சிறுகண்ணாடிக்குழாய் வைக்கப் பட்டிருக்கிறதென்றும், அதில்சாஸ்திர ஆராய்ச்சியாலான சூட்சங்கள் அடங்கி யிருக்கின்றதென்றும், கொசுக்கள்வந்து விழுந்ததும் அக்குழாயில்தடவப்பட்டிருக்கும் சபையில் ஒட்டிக்கொண்டு சாகின்றனவென்றும் சொல்லப்படுகின்றது.

---

## வெடிமருந்தால் நேர்ந்தவிபத்து.

காளாஸ்திரியில் 16-வயதுள்ள ஓர் சிறுவன் ஓர்நாள் டப்பாசு மருந்தை பெரிய பொட்டலமாகக் கட்டி சுவரின்மீதடித்தானாம் ஆனால், அதுசமயம் அதுவெடிக்காமற்போகவே அதை அச்சிறுவன் மறுபடியும் கீழேவைத்து ஒருபெரிய கருங்கல்லைக்கொண்டு ஓங்கியடித்தானாம். அதுபீரங்கிச்சப்தம்போல வெடித்ததும் கருங்கல்லானது இரண்டாய்வெடித்து ஒருதுண்டு வீட்டின்கூறையின்மேல் தங்கிக்கீழேவிழுந்து பொடிபொடியாய்ப் போய்விட்டதாம் மற்றோர்துண்டு அச்சிறுவனின் மண்டைமேல்தாக்க மண்டையுடைபட்டு உடனே உயிர்துறந்தானாம் ஆனதால், சிறுவர்களின் தகாதவிளையாட்டில் சந்தோஷங்கொண்டிருக்கும் தாய்தந்தையார்களுக்கு ஈதோர் எச்சரிக்கையாகும்.

---

## பூமிக்குள் அகப்பட்ட ரங்கநாதர்.

கரூரில் இரங்கநாதசுவாமி ஆலயத்தில் அருகேபுதிதாய் மடப்பள்ளியொன்று கட்டும்படி நியமித்து அஸ்திவாரத்திற்காக பூமியைத்தோண்டி மண்பறிக்கும்போது அப்பூமிக்குள் இரங்கநாதஸ்வாமி சிலையொன்றிருக்கக்கண்டு அதனையெடுத்து வைத்திருக்கின்றார்களாம். அது திப்பு சுல்தான் காலத்தில் மண்ணில்புதைத்திருக்க வேண்டுமென்று சிலருடைய எண்ணமாம்.

---

## இறந்தவனுக்கு உயிர்வந்தது.

சென்றமாதம் 18உ கல்கத்தாவில் ஒருவன் வாந்திபேதிவியாதியால்மரணமடைந்ததாகவும் அங்குள்ள காளி கட்டடத்திலுள்ள மயானத்தில்அவனை தகனஞ்செய்வதற்காகக் கொண்டுபோய் செய்யும்சடங்குகளைச் செய்துமுடித்து தீயிடத்தயாரா இருக்கும் சமயத்தில் அவன் கண்விழித்துப் பார்த்து ஜெலங்கொண்டுவந்து கொடுங்கள் அதிக தாகமாயிருக்கிற தென்று கேட்டதாகவும் உடனே அவனைச் சார்ந்தவர்களெல்லாம் அழைத்துக் கொண்டுபோன தாகவும் அவன் இப்பொழுது சிகிச்சையிலிருக்கிறதாகவும் தெரியவருகிறது.

**ஓர் விநோத சம்பவம்.**-மாயவரம்தாலுக்காவைச்சேர்ந்த நெய் குப்பை யென்னும் ஊரில் 12-வயதுடைய ஒரு பெண்வயற்றி லிருந்து கிராமபோன்மாதிரியாக ஓர் சப்தம் உண்டாயிருக்கிறதாகவும் அச்சப்தம் கொஞ்சநேரம் பொருத்து பொருத்து சப்திக்கிறதாகவும் வதந்தியுலாவுகிறது.

## தர்மகர்த்த புதியநியமனம்.

சென்னை ஸ்ரீ காளிகாம்பாளென்னும் காமாக்ஷியம்மன் தேவஸ்தானத்தின் தற்கால தருமகர்த்தருக்கு தமது உத்தியோககாலம் பூர்த்தியாய் விட்டபடியால் வேறுதர்மகர்த்தரை நியமிக்கும் பொருட்டும், தேவஸ்தானக் கணக்குகளை அச்சிட்டு வெளிப்படுத்தும்பொருட்டும் நாளது மாதம் 2உ ஷை தேவஸ்தான தர்மபரிபாலன சபையாரால் மீட்டிங்குகூடி தீர்மானித்தபடி நிறைவேற்ற ஷை 21உ ஆதிவாரம் காலை 7-மணிக்கு மறுமீட்டிங்கு கூடப்படும் அப்பொழுது தேவஸ்தானத்தின் தர்ம பரிபாலன சபையைச்சேர்ந்த அனைவரும்விஜயஞ்செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஓர் அறிவிப்பு**-புதுக்கோட்டை மஹாராஜா அவர்களுடைய புதிய அரண்மனைகட்ட வேலைக்காக மரத்திலும், கல்லிலும் சாதுர்யமாய்சிற்பவேலை செய்யக்கூடிய ஆட்கள் தேவையென்றும் நன்றாய் வேலைசெய்யக் கூடியவர்களுக்குத்தகுந்த சம்பளம் கொடுக்கப்படுமென்றும், புதுக்கோட்டை கஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## புத்தக வரவு.

இதுவரை தமிழில் வாராததும், மிக அருமையானதும் பலரும் வாசிக்கத் தக்கதுமான புட்பந்தமென்னும் நூல் ஒன்று நமதுபார்வைக்கு வரப்பெற்றோம். இந்நூல் மாதம், திதி, நட்சத்திரம்,கிரக மிவைகளின் கூட்டுறவாலுந் தசதாதுக்கள் முதலியவைகளின் சேர்க்கையாலும் மழைபொழிகாலத்தை நன்குவிளக்குகின்றது. இது ஸ்ரீ உமாமஹேஸ்வரர் சர்வமங்களேஸ்வரியாய் விளங்கும் ஸ்ரீ உமாமஹேஸ்வரியார்க்குத் திருவாய் மலர்ந்தருளியதாகத் தெரியவருகிறது. மதுரைத் தமிழ்ச் சக்கத்தாரால் நன்கு மதிக்கப்பெற்றுச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்ததாகவுந் தெரிகிறது. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து சுவாமிகளாலெழுதப் பெற்ற முகவுரையோடு கூடி யாவரும் நன்கு மதிக்கப்பெற்றதாகவும் இருக்கின்றது. இதன் விலை அணா-நான்கு.

இஃதொவ்வோர் செந்தமிழ் நேயர் கிருஹங்களிலும் இருக்கற் பாலது. வேண்டுவோர் அடியிற்கண்டவிலாசதாரரிடம் வி. பி மூலமாயினும் நேரிலாயினும் பெற்றுக்கொள்ளலாம்.

**கு. ஏ. குமாரஸ்வாமி யாச்சாரி,**
ஏகாம்பர ஆச்சாரி வீதி,
பறங்கிப் பேட்டை.

**ப. அ. கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளை,**
முதலியார் வீதி,
பறங்கிப் பேட்டை.

ஸ்ரீ ரங்கராஜ விஸ்வப்பிராமண தர்மரக்ஷிணி மனோரஞ்சிதசபையாரால் வெளிப்படுத்தியசபையின் வரவு செலவுக ளடங்கிய புத்தகமொன்று வரப்பெற்றோம் அதில் பரிதாபிவருஷத்திலும் பிரமாதீசவருஷத்திலும்நடந்த சமாராதனை வரவு செலவுகள் குறிப்பிட் டிருப்பதோடு அத்தருமத்திற்கு உதவி செய்தோர்களின் பெயர்களும் குறிப்பிட்டிருக்கின்றன. இக்கனவான்கள் இதுபோலவே பொருளுதவிசெய்து ஷை கைங்கரியத்தைப் பூர்த்திசெய்யுமாறு விஸ்வேஸ்வரன் திருவருள் பாலிப்பாராக.



## ஏ கா த சி.

இவ்விரதத்தை அநுஷ்டிப்பவர்கள் ஒவ்வொருபட்சத்து தசமி திதியில் நித்தியகர்மாநுஷ்டானங்களை முடித்து அன்று ஒருவேளைபோஜனமருந்தி பகவத்தியானத்திலேயே இருக்கவேண்டும். அடுத்தநாள் ஏகாதசி புண்ணியதினத்தில் அன்றுபகலும் இரவும் அன்னாகார நித்திரையின்றி சத்கால க்ஷேபங்களைக் கேட்டும், பகவத் பஜனைசெய்தும் விரதத்தைக் குறைவின்றி அநுஷ்டித்து மறுநாள் துவாதசிதினம் ஸ்நான அநுஷ்டானங்களைமுடித்து பகவானுக்கு ஆராதனைசெய்து பகவத் பக்தராகிய அதிதிகளோடு தாமும் ஒருவேளை போஜனமருந்தி இரவில் நித்திரைசெய்யவேண்டும். இவ்விதம் ஒவ்வொருபட்சத்தில்வரும் ஏகாதசிவிரதத்தை அநுஷ்டித்து அதனாலாயபயனைப் பெற்றோர்களின் சரித்திரத்தை இதனடியிற் காண்க.

### மார்கழிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

கிருதயுகத்தில் சந்திரவதிஎன்னும் பட்டணத்தில் அரசுபுரிந்த நாடீஜங்கன் என்னும் தைத்தியனுடைய குமாரனான முரு என்பவன் இந்திரனைவென்று, சுவர்க்கத்தைக் கைக்கொண்டு அரசுபுரிந்து வந்தனன். இந்திரன் புகலிடமின்றி வருந்தி விஷ்ணுவைச் சரண்புக, அவர் அத்தைத்தியனை வெல்ல முடியாதவர்போல் நடித்துப்புறந்தந்து,ஒருமலைக்குகையுண் மறைந்து நித்திரைசெய்தனர். அங்குச் சென்று அவரை வருத்திய அத்தைத்தியனை அம்மூர்த்தியின் திருமேனியில் அவரிச்சையிற்றோன்றிய ஒருகன்னிகை யெதிர்த்து வென்று, இந்திரன் மனக்குறையைத் தீர்த்தனள். ஏகாதசி திதியிற்றோன்றினமையின் அக்கன்னிகைக்குப் பெருமான் ஏகாதசி எனப் பெயர் சூட்டி "இத்தினத்தில் நம்மைக்குறித்து விரதமநுஷ்டிப்பார்க்கு நாம் சகல போகங்களையு மளித்து, இறுதியில் நமதுலகையும் கொடுப்போம்." என்று வரந்தந்தனர். எனக் கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குத் திருவாய் மலர்ந்தருளினதாகப் பவிஷ்யோத்தர புராணங் கூறுகின்றது.

### மார்கழிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

பூர்வம் கோகுலத்தில் செங்கோல் நடாத்தி வந்த வைகாநஸன் என்னும் இராஜருஷி ஒருநாள் இரவில் தன் தந்தை நரகத்திலிருந்து துக்கப்படுவதாகச் சொப்பனங்கண்டு பரிதபித்து, அக்காரணமறிய எண்ணமுற்றனன். பின்பு அந்தணரிட்ட கட்டளைப்படி ஆரணியத்தில் பருவத முனீஸ்வரரையடைந்து, தான்கண்ட சொப்பனத்தைச் சொல்ல, அவர் ஞானத்தாலுணர்ந்து "உன்றந்தை தனக்குரிய பல மனைவியரையும் ஒப்பநோடாத பக்ஷபாதத்தால் அருநரகடையலாயினன். என்றுசொல்ல அறிந்து அதன் நிவர்த்திக்காக அவர் சொல்லியபடியே இவ்விரதத்தை அநுஷ்டித்து அப்புண்ணியத்தைப் பிதாவுக்குக் கொடுத்து அவனைச் சுவர்க்கத்துக்கேற்றினர் என்றுஸ்ரீகிருஷ்ணபகவான் தருமநந்தனருக்குச் சொன்னதாக பிர்மாண்ட புராணம் சொல்லுகின்றது.

### தைமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

பூர்வம் சம்பாவதி என்னும் நகரத்தில் அரசுபுரிந்துவந்த மகிஷ்மான் என்னும் அரசனுடைய மூத்தகுமாரன் லும்பகன் என்பான் மிக்க இம்சைசெய்பவனா யிருந்தமையால் அரசனால் கோபிக்கப்பட்டு ஆதரவில்லாமல் காடடைந்து வருந்திக்கொண் டிருந்தனன். ஒருநாள் அவன் உணவிற்சென்றுதேடிய பழவர்க்கங்களை தான் காட்டையடைய ஏற்பட்டதே யென்னும் வெறுப்பினால் உண்ணாது "இது நாராயணனுக்குப் பிரீதியாகுக" என்று வீசி அன்றிரவு முற்றும் உண்ணாது,உறங்காதுமிருந்தனன். அத்தினம் இவ்விரததினமானமையால் அபுத்தியாற் செய்த காரியத்தைப் பெருமானுகந்து அவனுக்கு நல்லுணர்வுகொடுத்து அரசினையடைய அநுக்கிரஹித்து கடைசியில் தமதுலகத்தையு மருளினர் என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் யுதிஷ்டிரருக்குச் சொன்னதாக பிரமாண்டபுராணங் கூறுகின்றது.

### தைமீ சுக்லபக்ஷ ஏகாதசி.

பூர்வம் பத்திராவதிஎன்னும் பட்டணத்தில் அரசுசெய்துவந்த சுகேதுமந்தன் எனுமரசன் சைப்பை என்னும் தன்மனைவியோடு வாழ்ந்துவருங்காலத்தில் புத்திரப்பேறின்றி அருந்தவம்புரியக்கருதி வனமடைந்தனன். அங்கு தீர்த்த ஸ்நானத்துக்குவந்த ஒரு முனிவரைக் கண்டுவணங்கி தன் குறையைக்கூறி, அவரால் இவ்விரதத்தின் மகிமையுணர்ந்து தனதுநாட்டையடைந்து அதனை அநுஷ்டித்து சற்புத்திரனைப் பெற்றனன். என்று கிருஷ்ணபகவான் தருமநந்தனருக்கு அநுக்கிரகித்ததாகப் பவிஷ்யோத்தர புராணம் சொல்லுகின்றது.

### மாசிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

பூவுலகில் ஒரு பிராம்மண ஸ்திரீ பலவிரதாநுஷ்டானங்களைச்செய்பவளாயிருந்தும்அதிதிகளுக்கு அன்னமிடாதவளாயிருக்க; அவளைச் சோதிக்குமாறு நாராயணன் ஓர் பிக்ஷுகனாய்

வந்து யாசிக்க அப்பிக்ஷகனுக்கு ஓர் மண்ணுங்கட்டியை பிக்ஷபாத்திரத்தில் அவள் இட, மண்ணுங்கட்டியேனும் பெருமானுக் கிட்ட விசேஷத்தால் அவள் சிலகாலமிருந்து இரந்த பின்பு சுவர்க்கம் அடைந்தனள். அங்கு உணவின்றி வருந்திய அவள் விஷ்ணுவை உபாசித்து அவரால் பூர்வஜென்மபாபத்தையுணர்ந்து அவருணர்த்தியபடி தனது வீட்டிற்குவந்த தேவகன்னிகைகளால் ஏகாதசி புண்ணியவிரதமெனத்தெரிந்து, அதை அநுஷ்டித்துச் சகலைசுவரியத்தையு மடைந்தனள். என்று நாரதருக்குக் கிருஷ்ணன் கூறியபடி தால்ப்பிய முனிவருக்குக் கபஸ்திமுனிவர் கூறினதாகப் பவிஷ்யோத்தரபுராணம் பகருகின்றது.

### மாசிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

தேவசபையில் கானஞ்செய்துகொண்டிருந்த புஷ்பவதி மாலியவான் என்னும் கந்தருவஸ்திரீபுருஷர்கள் ஒருவர்மீதொருவர் காமசித்தராய்த் தாளஞானம் விட்டுப்பாடின குற்றத்தால் இந்திரனாற் சபிக்கப்பட்டு பிசாச வடிவமடைந்தனர். அவர் ஒருகாட்டில் ஓரரசவிருக்ஷத்தினடியில்வசிக்குங்கால், அபுத்தியால் இவ்விரததினத்தில்உபவாஸமிருந்து பாவமோசனமடைந்துசுவர்க்கஞ்சென்று தமது பாபவிமோசனத்தை இந்திரனுக்குக்கூறி மகிழ்வித்தனர். என்று கிருஷ்ணன் தருமராஜனுக்குச் சொல்லியருளியதாகப் பவிஷ்யோத்தர புராணங் கூறுகின்றது.

### பங்குனிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பகதால்பமுனிவரிடம் கேட்டபடி இவ்விரதமநுஷ்டித்து அப்பலத்தால்கடலைக்கடந்து இராவணவதம்நடத்தினார். என்று பிரமன் நாரதமுனிவருக்குக் கூறியருளியதாக ஸ்காந்தபுராணஞ் சாற்றுகின்றது.

### பங்குனிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

வைதிசம் என்னும் நகரத்தில் அரசபுரிந்த சைத்ரரதனென்னும் அரசன் தனது நாட்டில் அனைவரும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கச்செய்ய, ஒருநாள் இரவில் ஒரு கூலிக்காரன் அவ்விரதங்காரணமாகப் பிறர்நடத்தும்விபவங்களை ஊணுறக்கமின்றிப் பார்த்தபடியிருந்தனன். அன்று அவன் ஜாகார உபவாஸஞ்செய்தபலனால் அவன் சகல போகங்களையும் பெற்று, மறுமையில் வசுதரன் என்னும் அரசனாய்ப் பிறந்து லக்ஷங் கிராமங்களை ஆண்டுவந்தனன். ஒருநாள் அவன் வேட்டைக்குச்சென்று வேட்டையாடிக் களைத்துறங்க; அங்கு பகைவர்கள் கொல்ல எத்தனித்தபோது ஏகாதசி விரதபலனைப் பூர்ணமாகப் பெற்றிருக்கின்ற அவனது சரீரத்தில் விஷ்ணுவின் மாயாசக்தியான ஒரு கன்னிகைதோன்றி அவர்களைக் கொன்றனள். என்று மாந்தாதாவுக்கு வசிஷ்ட முனிவர் கூறியதாகப் பிரமாண்டபுராணம் பகர்கின்றது.

### சித்திரைமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

சைத்திரரதம் என்னுங் வனத்தில் தவம்புரிந்து கொண்டிருந்த மேதாவி முனிவருடைய தவத்தைக் கெடுக்கும்படி இந்திரனேவலால் வந்து மயக்கிய மஞ்சுகோஷை எனும் தேவஸ்திரீயை அம்முனிவர் ஏழுபத்தைந்துவருடம் நூறு மாதம் மூன்றுநாள்வரையுங் கூடி இன்பநுகர்ந்து பின்தெளிந்து, "என் தவத்தைக்கெடுத்தவ ளிவளல்லவா"? என்றுசினந்து, அவளை "நீபிசாசாக" என்று சபித்தனர். பின்னர், அம்மாது வேண்டிக்கொள்ள இறக்கமுற்று "இவ்விரதம் அநுஷ்டித்து விமோசனமடைதி" எனக்கூறித் தாமும் தமது பிதா சியவன முனிவர் கட்டளைப்படி இவ்விரதமே யநுஷ்டித்துத் தவத்தைவிட்டு மயங்கிய தமது பாவத்தையும் போக்கிக் கொண்டனர். என்று ரோம முனிவர் மாந்தாதாவுக்குக் கூறியபடி கிருஷ்ணன் தருமபுத்திரருக்குக்கூறியதாகப் பவிஷ்யோத்தர புராணம் கூறுகின்றது.

### சித்திரைமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

பாதலத்தில் அரசுபுரிந்திருந்த புண்டரீகனென்னும் அரவரசன் சபையில் இசைபாடிக் கொண்டிருந்த லலிதன் என்னும் கந்தருவன் தனது மனைவி லலிதையை நினைத்துக்கொண்டு, காமவிகாரியாய் இசைதவறி அபஸ்வரங் கலந்தோத, அதனைக் கர்க்கன் என்னும் நாகவரசனாலுணர்ந்த புண்டரீகன் அக்கந்தருவனை "அரக்கனாக" என சபித்தனன். அதனையுணர்ந்து லலிதை தனது நாயகனுக்கு நேர்ந்த சாபத்துக்குப் பரிகாரந்தேடுவாளாய், விந்தமலையிற் றவம்பூண்டிருந்த ருசியசிருங்க முனிவருக்கு விண்ணப்பிக்க, அவருரைத்தபடி இவ்விரத மநுஷ்டித்து அப்பலனைப் புருடனுக்குதவி அவனைச் சாபத்தினின்றும் விடுவித்தனள் என்று திலீபராஜனுக்கு வசிட்டர் உணர்த்தியபடி கிருஷ்ணன் தருமபுத்திரருக்கு அருளியதாக வராகபுராணம் வகுக்கின்றது.

### வைகாசிமீ கிருஷ்பக்ஷ ஏகாதசி.

இவ்விரதம் உருத்திரன் மாந்தாத துந்துமாரன் முதலியோரால் அநுஷ்டிக்கப் பெற்றதென்றும், இத்தினத்தில் பலவிதமான தானங்களைச்செய்ய அவை அதிக பலனைத் தரத்தக்கவாகுமென்றும், பிதிரர்களுக்குப் பிரீதிதரவல்லதென்றும் கிருஷ்ணன் தருமபுத்திரருக்குக் கூறியதாகப் பவிஷ்யோத்தர புராணம் பகருகின்றது.



### வைகாசிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

ஸரஸ்வதீ நதிதீரத்தில் பத்ராவதிஎன்னு நகரில் த்யுதிமான் என்னும் அரசன் அரசுபுரியுங்கால், அப்பட்டணத்தில் தனபாலனென்னும் ஒருவணிகனிருந்தான். அவன்குமாரர் ஐவருள் திருஷ்டபுத்தி என்பான் பரமபாபியாகையால் அரசனால் நாட்டைவிட்டுதுறத்தப்பட்டு கங்கையையடைந்து அங்கு ஸ்நானமாடிக் கரையேறிய கௌண்டின்ய முனிவருடைய வஸ்திர ஜலபரிசத்தால் பரிசுத்தனாய், அவர்கூறியபடி இவ்விரத மநுஷ்டித்து முத்தியடைந்தனன் என்று இராமமூர்த்திக்கு வசிஷ்டமுனிவர் கூறியபடி கிருஷ்ணமூர்த்தி தருமராஜனுக்கருளியதாகக் கூர்மபுராணங் கூறுகின்றது.

### ஆனிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

இதில் மகாதானஞ்செய்தவர் பரலோகத்தையடைவார்கள். ஸ்திரீவதை சிசுவதைகளைச் செய்தவர்களேனும் இவ்விரத மநுஷ்டித்தால் அப்பாவங்களைப் போக்கிக்கொள்வர் என்று தருமராஜனுக்குக் கண்ணபிரான் கூறியருளினதாகப் பிரமாண்டபுராணம் பகருகின்றது.

### ஆனிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

பீமசேனன் உபவாசமாகவிருந்து ஏகாதசி விரத மநுஷ்டிக்க முடியாதென வேண்ட, வியாசர் ஏகாதசி மகாத்மியத்தை யருளிச் செய்து அவசியம் இது செய்யத்தக்கதென வற்புறுத்த, அவன் அநுசரித்துப் பலவித விசேஷங்களை யடைந்தனன். என்று கிருஷ்ணபகவானிடம் கேட்டபடி வியாசர் பீமனுக்கு அருளியதாக பிரம வைவர்த்தபுராணம் பேசுகின்றது.

### ஆடிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

குபேரனுக்கு நித்தியமும் சிவபூசைக்குப் புஷ்பங்கொணர்ந்து தரும் ஹேமமாலி என்பவன் அக்காலத்திலதனைத் தராது தனது மனைவி சுந்தரியினிடங் கூடி மகிழ்ந்திருக்க, புஷ்பமில்லாது பூஜாகாலந்தவிர்ந்த குபேரன் அவனைக் குஷ்டனாகசபித்தனன். ஹேமமாலி விசனமுற்று இமபர்வதத்தில் வசித்துகொண்டிருக்க; அங்குத் தவஞ்செய்துகொண்டிருந்த மார்க்கண்டேயமுனிவர் ஒருநாள் அவனை கடாக்ஷித்து இவ்விரதவிசேஷத்தை யருள, அதின்படி அவனநுசரித்து ரோகநிவர்த்தி யடைந்தனன். என்று தருமபுத்திரருக்குக் கிருஷ்ணபகவான் திருவாய்மலர்ந்தருளியதாகப் பிரம வைவர்த்த புராணங் கூறுகின்றது.

### ஆடிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி

மாந்தாதா தனதுநாட்டில் மூவாண்டு மழையின்றி வருந்தி ஆங்கிரச முனிவரிடம் விண்ணப்பித்து, அவர்அனுஞ்ஞையின்படி இவ்விரத மநுஷ்டித்து மழை வருஷிக்கச் செய்துகொண்டனனென்று கூறி, மேலும் பலவித தரும விசேஷங்களையும், அதன் மான்மியங்களையும் பிரமதேவர் நாரதமுனிவருக்குக் கூறினர். இதனைக் கிருஷ்ணமூர்த்தி தருமநந்தனருக்குக் கூறியருளினதாகப் பவிஷ்யோத்தர புராணம் பகருகின்றது.

### ஆவணிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

இது பாபாஹிதமாக்கும் உத்தமவிரதமென்றும், இதில் விஷ்ணு சந்நிதியில் தீபாவலிகளைவைத்தும் பூஜிக்கவேண்டுமென்றும், பிரமதேவர் நாரதருக்குக் கூறியவாறு தருமபுத்திரருக்குக் கிருஷ்ணன் சொல்லி யருளினனென்று பிரம வைவர்த்தபுராணம் பேசுகின்றது.

### ஆவணிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

மகிஷ்மதி பட்டணத்தின் அரசனான மஹீஜித் என்பவன் புத்திரப்பேறின்றி தனது மந்திரி புரோஹிதர்களை இதற்குக் காரணமறியுங்களெனக்கூற; அவர் நகரவாசிகளோடு வனமடைந்து அங்குரோமச முனிவரைக்கண்டு விண்ணப்பித்தனர். அவர் அரசனது பூர்வஜன்மத்தையுணர்ந்து பூர்வம்நடுப்பகலிற் கன்றோடு நீரருந்திக்கொண்டிருந்த பசுவை யோட்டித்தான் நீரருந்தியபாவத்தால் புத்திரனை யிழந்தானென் றுணர்த்தினதன்றி, அதற்குப் பரிகாரமாக இவ்விரத மநுஷ்டிக்கும்படி கட்டளையிட்டனர். அதனை மந்திரிகளுரைக்க, அரசன் அவ்விரதத்தை அநுஷ்டித்துப் புத்திரப்பேறடைந்தனன் என்று கிருஷ்ணபகவான் தருமநந்தனருக் குணர்த்தியதாகப் பவிஷ்யோத்தர புராணம் பகருகின்றது.

### புரட்டாசிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

அரிச்சந்திரன் அரசினையும் மனைவியையும் மகனையுமிழந்து வனத்தில் வசிக்கும்போது அங்குக் கௌதம முனிவரால் இவ்விரத விசேஷமுணர்ந்து, அதனை அநுஷ்டித்து இஷ்டலாபம் அடைந்தனன் என்று கிருஷ்ணபகவான் தருமபுத்திரருக்குக் கூறியதாகப் பிரமாண்டபுராணம் பேசுகின்றது.

### புரட்டாசிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

இது பரமோத்தமமானதால் இதில் வாமனமூர்த்தியை உபாசிக்கவேண்டுமென்றும், வா

மனான திரிவிக்கிரம மூர்த்தியின் வைபவம் இத்தகையதென்றும், கிருஷ்ணமூர்த்தி தருமராஜனுக்குக் கூறியதாக ஸ்காந்த புராணஞ் சாற்றுகின்றது.

### ஐப்பசிமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

கிருதயுகத்தில் மகிஷ்மதிபட்டணத்தில் அரசுசெய்திருந்த சத்ருசங்காரனென்னும் இந்திரசேன ராஜனிடம் நாரதமுனிவரெழுந்தருளி, நின்னுபிதா யமபுரத்தைவிட்டுச் சுவர்க்கம் புகுமாறு இவ்விரதமநுஷ்டிக்கச் சொல்லினனெனக் கூற, அவ்வாறேயே அநுஷ்டிப்புமுறையுணர்ந்து அநுஷ்டித்துத் தந்தையைச் சுவர்க்கம் புகுவித்தான் என்று கிருஷ்ணபகவான் தருமநந்தனருக்கு அருளியதாகப் பவிஷ்யோத்தர புராணம் பகருகின்றது.

### ஐப்பசிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

மிக்க சிறப்புடையதாகையால், இதிற் பலவித தானங்களைச்செய்வது உத்தமமென்றும், ஏகாதசி விரதமென்பது இத்தகைய பலனைத் தரத்தக்கதென்றும், கிருஷ்ணமூர்த்தி தருமபூபதிக்குக் கூறியதாகப் பிரமவைவர்த்த புராணம் பகருகின்றது.

### கார்த்திகைமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

முசுகுந்த சக்ரவர்த்தியின்மகள் சந்திரபாகையை மணந்த சோபனன் என்பவன் ஒருநாள் மாமன் மனைக்குவர, அங்கு அவனும் அந்நகரவாசிகளும் ஏகாதசி விரதத்தை அநுஷ்டித்து உபவாச ஜாகாரங்களைச்செய்ய, அதைக்கண்ட சோபனனும் அநுஷ்டித்து மறுநாளுதயத்திற் பசியால் இறந்தனன். அவன் அவ்வொருதின விரதபலத்தாலேயே தேவனாகி மந்த்ரபருப்பதத்தில் பூர்வஜந்ம வுணர்ச்சியோடு அரசுபுரிகையில், அந்நாட்டுச் சோமசன்மனென்னும் வேதியனொருவன் ஆங்குச்செல்ல, சோபனன் அவனைத்தன் மனைவி மாதுலருடைய க்ஷேமங்களை விசாரித்தனன். இவ்விஷயத்தை அந்தணன் சந்திரபாகைக்குணர்த்தவே, அவள் தனது கணவனை யடையவிரும்பி வனமடைந்து அங்கிருந்த வாமதேவ முனிவருபதேசப்படி இவ்விரத·நோற்றுத் தேவசரீரம்பெற்று நாயகனை யடைந்தனள். என்று தருமராஜனுக்குக் கிருஷ்ணபகவான் கூறினதாகப் பிரமவைவர்த்த புராணம் பகருகின்றது.

### கார்த்திகைமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

ஆடிமாதச் சுக்கிலபக்ஷ ஏகாதசியிற் சயனித்து புரட்டாசிமாதச் சுக்கிலபக்ஷ ஏகாதசியிற் பரிவர்த்தனம் பண்ணிய பகவான் அறிதுயிலொருவியதினம் இதுவே: இப்பெருமானை ஏகாதசிதினத்தில் இன்னின்ன புஷ்ப பத்திரங்களாற் பூஜித்தவன் இன்னின்ன பலனைப் பெருவானென்றும் இந்திந்த தானங்களைச்செய்தவன் இன்னின்ன பலனை யடைவானென்றும் பொதுவிதிகளை கூறினதன்றி இவ்விரதமான்மியங்களையும் நாரதருக்குப் பிரமதேவன் விரிவாக அருளியபடி தருமநந்தனருக்குக் கண்ணபிரான் அருளியதாக ஸ்காந்தபுராணஞ் சாற்றுகின்றது.

### அதிகமீ கிருஷ்ணபக்ஷ ஏகாதசி.

காம்பிலி தேசத்தில் சுமேதன் என்னும் பிராமணன் தரித்திரனாகவிருந்து கௌண்டின்னிய முனிவரால் இவ்விரதோபதேசஞ் செய்யப்பெற்று அதை அநுஷ்டித்து செல்வத்தைப்பெற்று மகிழ்ந்தனன். என்றும், மற்றும் அனுஷ்டித்துப் பேறுபெற்றோர் வைபவங்கள் பலவென்றும், கிருஷ்ணபகவான் தருமநந்தனருக்குக் கூறியதாக ஸ்காந்தபுராணஞ் சாற்றுகின்றது.

### அதிகமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி.

கிருதவீரிய மகாராஜன் மனைவி பத்மினி என்பவள் இவ்விரதமநுஷ்டித்துக் கார்த்தவீரியனென்கிற புத்திரனைப்பெற்று சகலசம்பத்துக்களையுமடைந்தனளென்று புலஸ்திய முனிவர் நாரதருக்குக்கூறியதாக ஸ்காந்தபுராணங் கூறுகின்றது.

---

இவ்வாறு இவ்விரதமதை உருக்குமாங்கதன் முதலிய அநேக பக்தர்களும் அநுஷ்டித்து பலப்ராப்தி யடைந்ததால் உலகில் யாவரும் இவ்விரதத்தை அநுஷ்டித்து வருகின்றார்கள்.



## அம்பிகை பக்தர் சரித்திரம்.

கேளுங்கள் சாதுக்களே! முன்னே மஹாகாலமென்கிற க்ஷேத்திரத்தில்பஞ்சப்ரஹ்ம சந்ததியிலுற்பவித்த சங்கரசில்பியின் சரித்திரத்தைச் சொன்னோம். இனி அம்பிகை பக்தரின் சரித்திரத்தை யெடுத்துச்சொல்லுகிறோம். அன்புடன்கேட்பீர்களாக, என்று நாபாசிமுனிவர் கூறுகின்றார்.

சாதுக்களே! ஐந்தாம் வேதம் என்று சொல்லப்படுகிற பாரதத்திற்குக் காரணகர்த்தர்களாயிருந்த பாண்டவர்கள் கௌரவர்கள் ஆண்ட குருக்ஷேத்திரத்திற்குத் தலைநகராயிருந்து தற்காலத்தில் டெல்லியென்று பெயர்வாய்ந்துள்ள அஸ்தினாபுரிக்கு அருகில் தனேஸ்வரமென்கிற ஊருக்கு சிறிதுதென்கிழக்கிலுள்ள அநுஜா யென்னும் திவ்யக்ஷேத்திரத்தில் விஸ்வகர்மகுலத்திற் பிறந்தவரும், தாருவேலை செய்பவரும், சனாதன கோத்திரத்தை யுடையவரும், சகலவேதாகம புராணேதிகாசங்களை ஐயந்திரிபற ஓதியுணர்ந்தவரும், சாக்ஷாத்பரமேஸ்வரியின் திருவடித் தாமரையைத் தமது இருதயத்தில் அலரச் செய்தவரும், அடியார்பக்தியிற் சிறந்தவரும், குபேரசம்பத்துடையவருமாகிய அச்சுதஸ்தபதி என்பவரொருவரிருந்தார்.

அவர் கற்பில் அருந்ததிக்குச் சமானமான நீலாக்ஷி யென்னும் மாதுசிரோமணியை மணந்து, சிலநாள் புத்திரப்பேறின்றி அம்பிகையைநோக்கித்தவஞ்செய்து, அம்பிகையின் அருளால்சுயம்பிரகாசமான ஞானமுள்ள ஒரு பெண் மகவைப்பெற்று இல்லறதருமத்தை வழுவாது நடத்திவந்தார்.

அவ்விதம் நடத்துவதுமன்றி தருமமே தமக்குப் பற்றுக்கோடாகக்கொண்டு, தமது கிருஹத்தை நாடிவரும் அடியார்களுக்கு, கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்புஎன்கிற அறுவகைச்சுவையுடையனவாய், நக்கல், பருகல் உண்ணல், தின்னல் என்னும் நான்கிற்கும் விஷயமாயுள்ள உணவுகளை அவரவர் இஷ்டப்படி அன்னமிட்டு வருங்காலத்தில் சாக்ஷாத் ஜகன்மாதா வாகிய பராசக்தி இவரது பக்தியை வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டு, நாளுக்குநாள் அடியார்கள் கூட்டம் அதிகமாய் பக்தருடைய கிருஹத்தைநாடும்படிச் செய்தாள். அவ்வடியார்களுக்குத் திருவமுதளிக்கும் கைங்கர்யத்திலேயே தமது திரவியமெல்லாங் குறைந்துபோய் மிகுந்த வறுமையை யடைந்தார்.

அதனால் ஓர்காலத்தில் தானும், தனது தர்மபத்னியும், தனது செல்வப் பெண் குழந்தையும் மூன்றுநாள் அன்னபானாதிகளின்றி பட்டினிகிடந்து ஆற்றொணாப் பசியின்கொடுமையால் மானாபிமானத்தையும், வெட்கத்தையும், லஜ்ஜையையும் இழந்து அயலாரிடத்துக் கடன்கேட்டும் அவர்கள் உதவாதபடியால் அச்சுதஸ்தபதி நெற்களத்திற்குச்சென்று அங்கு சிந்திகிடக்கின்ற நெற்களைக் காற்படியளவுக்குச் சேகரித்துக்கொண்டுவந்து தனதுமனைவியினிடம்கொடுக்க, அம்மாது அதனை அன்போடுவாங்கி உரலிலிட்டுக் குத்தி, நீரிட்டு அதிற்செறிந்துள்ள கற்களைக் களைந்து, பக்குவமாகச் சமையல்செய்து வைத்துவிட்டு தனது நாயகனை நோக்கி, “சுவாமி! சமையல் ஆயிற்று. “என்ன, உடனே அச்சுதஸ்தபதி ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தன ஜபதபஹோமங்களாகிய நித்யகர்மாநுஷ்டானங்களைச் சரிவர முடித்துக்கொண்டு ஸ்ரீசூக்தம் ருத்ரநமக சமகங்களைப் பாராயணஞ் செய்து அவரது வழக்கம்போல் அவ்வூரிற் றிருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ காமாக்ஷியம்மை சந்நிதா

ணத்திற்குள் சென்று அம்பிகையை வணங்கி தரிசனம் செய்துகொண்டு தனது கிருஹத்திற்குத் திரும்பும்போது, இவர் அன்பை மகிழ்வுடன்வியந்த ஞானாம்பிகையான காமாக்ஷி, இவரை ஆட்கொள்ளக் கருதினவளாய், இவரது ஏழுவயதுள்ள பெண்குழந்தையின் உருவந்தாங்கி அவர் எதிர்நின்று, "ஆ! என் தந்தையே! எனக்குப்பசி அதிகரித்திருக்கிறது. என் தாயை போஜனமளிக்கக் கேட்டும் நீர்வரவேண்டுமென்று சொல்லுகிறாள். ஆகையால் உம்மைஅழைத்துக்கொண்டு போவதற்கு ஓடிவந்தேன். உலகில்பிரகாசிக்கின்ற சூர்யஉஷ்ணத்தால் எனது பாதங்கள் கொவ்வைக்கனிபோல்கொப்புளங்கள் நிறைந்துள்ளன. அதனால் நான்உம்முடன் திரும்பி வருவதற்கு அசக்தியாயிருக்கிறேன். ஆகையால் நான் உம்முடன் நடந்து வருவேனாயின் அதிகஉடற்றளர்ச்சியை எய்துவேன். நீர் என்னை தோளின்மேல் தூக்கிச்சென்றாலும் சூர்யோஷ்ணத்திற்கு ஆற்றாது துணங்குவேன். ஆகையால் நீரேசென்று கூடிய சீக்கிரத்தில் ஓர்வாய் அன்னம்கொண்டுவந்தால்உண்டு களைதீர்ந்து உயிர்தரிப்பேன். இல்லையெனில் என்னுடலில் உயிர்நிற்றல் அரிதாகும்." என்று தளர்வையெய்தியவள்போல் சொன்னாள். அதைக்கேட்ட அச்சுதஸ்தபதி, "குழந்தாய்! இம்மண்டபத்தினிடத்திலேயே இருப்பாய். நான் அதிசீக்கிரமாய்ச்சென்று உனக்கு அன்னம் கொண்டுவருகிறேன். அதையுண்டு உன் தளர்வைப் போக்கியபின் அழைத்துக்கொண்டு போகிறேன் பத்திரமாயிரு, என்று சொல்லி, குழந்தையை அங்கேயிருத்தி தன் வீட்டிற்குள் புகுந்து தன் மனைவியை அழைத்தார்.

அம்மங்கையர்க்கரசி பசியாற் களைத்து இருந்தமையால் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கவும், அதைக்கண்டு, நித்திரையில் எழுப்பினால் பாபம் சம்பவிக்குமென நினைத்து சமையலறையிற்சென்று முன் சமைத்து வைத்த பாண்டத்தோடு எடுத்துக்கொண்டு ஓர்பாத்திரத்தில் ஜலமுங்கொண்டு "நம் குமாரத்தி காலத்தாழ்வால் களைத்து விழுந்தனளோ? அல்லதுஉயிர் துறந்தனளோ? என்ன ஆபத்திலிருக்கின்றனளோ? அறியேன்" என்று ஓடி அம்மண்டபத்தைச் சேர்ந்து பார்த்தபோது, அம்பிகையாகிய அக்குழந்தை அயர்ந்து நித்திரை செய்வதைக்கண்டு "அம்மா! குழந்தாய்! என்கண்மணீ! நினக்குப் பசியின் கொடுமையால் தளர்வுவந்துற்றதோ? அல்லது நித்திரையோ? ஒன்றுந் தெரியவில்லையே? இதற்கென்செய்வேன்" என்று தனதுகரத்தால் குழந்தையை எடுத்து தன்மார்பின்மீது சார்த்திக்கொண்டு, ஜலத்தினால் குழந்தையின் முகத்திலுள்ள வியர்வை நீரைத்துடைத்து, தனது வஸ்திரத்தினால் சிறிது விசிறி இளைப்பாற்றவே, குழந்தை துயில்நீங்கியதுபோல் எழுந்திருக்க, தான்கொண்டுவந்த அவ்வன்னத்தைப் பக்குவமாகப் பிசைந்து குழந்தையாய்த் தோன்றிய அப்பராதேவதைக்குஊட்டவே, அக்குழந்தை அதிக அன்புடன் அவ்வன்னத்தை சுவைத்துச் சுவைத்து "என் தந்தையே! இவ்வன்னத்தைப்போல் உருசியுள்ள அன்னத்தை யான் ஒருபோதும் உண்டதில்லை. வீட்டில் என் தாயும் சமைத்து போட்டதுமில்லை. இதுவன்றோமதுரமான அன்னம். இதுபோல் நான் இன்னும் என்றைக்கு உண்ணநேருமோ!" என்று சொல்லிக்கொண்டே அவ்வன்னமுழுவதையும் உண்டு "எனக்கு இன்னும்பசிப்பிணிநீங்கவில்லை" என்று சொல்ல தந்தையானவர் "குழந்தாய்! நாளையதினம் அதிகமாகச்சமைத்துஉனக்களிக்கின்றேன். இன்றையதினம் கிடைத்தஅளவிற்குச்சந்தோஷப்படுவாய்" என்று சமாதானம் சொல்ல "என் தந்தையே! என் தாய்! இதுபோலவே வேறொருபாண்டத்தில் சமைத்து வைத்திருக்கின்றாள். அதைக் கொணர்ந்தால் நான் அன்போடு உண்டு வீட்டிற்கு உம்முடன் திரும்புவேன். இல்லையேல்நின்னுடன் வீடுசேர்வதற்கிசையேன்" என்று குழந்தைவடிவாய்வந்த அம்பிகை வேத



த்தை உச்சரிக்கும் திருவாய்மலர்ந்து கூறினாள். அவ்வசனத்தைக் கேட்ட அச்சுதஸ்தபதி சீக்கிரமாய்த் தமது கிருஹத்தையடைந்து மனைவியை அழைக்க, அப்பெண்மணி நாயகன் குரலைக் கேட்டமாத்திரத்தில் துரிதமாக ஓடிவந்துநிற்க, அமுது வேறுபாத்திரத்தில் சமைத்துவைத்திருக்கின்றையாமே! அது நமது குழந்தைக்கு வேண்டியிருக்கிறது. அதை அதிவிரைவாகப்போய் எடுத்துக்கொண்டுவந்து கொடு, முன்கொண்டுபோன அமுதெல்லாம் குழந்தை உண்டுவிட்டாள். இந்த அமுதுகொண்டுபோவதற்கே ஓடிவந்தேன், குழந்தையை மண்டபத்தில் நான் தனியாக விட்டுவந்திருக்கின்றேன். எங்குவைத்திருக்கின்றாய்? நானாகிலும் எடுத்துக்கொள்ளுகிறேன். காலம் தாழ்கிறதே! இருக்குமிடத்தைச் சீக்கிரம் சொல்லென்று கேட்டனர். அவ்வம்மையார், புருடனைப்பார்த்து "குழந்தை எங்கிருக்கின்றாள்" என்று கேட்க, அதோ மண்டபத்திலிருக்கின்றது. "அன்னமிடு" என்று உன்னைக் கேட்டதாமே! நீ அதற்கு நான்வந்தபிறகு அன்னமிடுவதாய் சொன்னதாகவும் அதனால் பசிக்கு ஆற்றாது என்னை அழைத்துவர வெயிலில் ஓடி வந்தது. அதிக களைப்புடன் என்னைக்கண்டது. சூர்யோஷ்ணம் பொறுக்கமுடியாமல் கால்கள் கொப்பளித்துவிட்டன. நடக்கமுடியாததாயிருக்கிறது அதனால் தான் யான் அழைத்துவரவில்லை. அன்னமுண்டால்தான் நான் வீட்டிற்குவரமுடியுமென்கிறது. அதைக்கேட்டு நான் இவடம்வந்து உன்னைப்பார்த்தபோது நீ, நித்திரைசெய்து கொண்டிருந்தாய். ஈதோ இப்பாத்திரத்திலுள்ள அன்னத்தையும் ஜலத்தையும் கொண்டுபோய் உண்பித்தேன். அதையெல்லாம் அதிகஅன்புடன் உண்டும்பசியடங்கவில்லையென்கிறது. நீவேறுபாத்திரத்தில் அதேபோன்ற அன்னம்சமைத்துவைத்திருக்கிறதாகவும் அதையுங்கொண்டுவந்தால்தான் இளைப்புதீர்ந்துவீடுசேர்வேன் "என்கிறது. ஆகையாற்றான் ஓடிவந்தேன்" என்றார். அதைக்கேட்டமனைவி, ஈதென்னபயித்தியமாயிருக்கிறது! குழந்தை இதோநித்திரைசெய்கின்றாளே! என்றாள். அதைக்கேட்ட அச்சுதஸ்தபதி ஆனால்கூப்பிடுபார்ப்போம். குழந்தைதான் அங்கிருக்கின்றனளே! என் வார்த்தை என்ன அவ்வளவு பொய்யாகவா மதிக்கின்றனை! என்று அச்சுதஸ்தபதிகோபிக்கவே, அவ்வம்மையார் தனது பிராணநாயகரது கரத்தைபற்றி அழைத்துக்கொண்டுபோய் அடுத்தஅறையில் குழந்தைநித்திரைசெய்வதைக்காட்ட, திப்பிரமைகொண்டவராய் "குழந்தையை எழுப்பிக்கேட்டால் எல்லாம்தெரிகிறது" என்ன, அம்மையார் குழந்தையை எழுப்ப, குழந்தை எழுந்தது. அப்போது அச்சுதானந்தர் குழந்தையைப்பார்த்து, "அம்மா; நீ என்னை ஆலயமண்டபத்தினருகே பார்க்கவில்லையா?

நான் உன்களைதீர அன்னங்கொணர்ந்து ஊட்டவில்லையா? இன்னும் அன்னம் கொணரும்படி எனக்குச் சொல்லவில்லையா? பொய்பேசாதே. நிஜத்தைப்பேசு. இவ்வளவும்செய்துவிட்டுநான்வரப்பார்த்து என் பிறகே எனக்குத் தெரியாமல்வந்து நித்திரைசெய்கின்றனையே! இப்பாசாங்கு உனக்கடுக்குமா? என்று வினவினர். அதைக்கேட்டுகுழந்தையானது "ஆ! என் தந்தையே! நான் இன்று காலை உதயமுதல் இதுபரியந்தம் வீட்டைவிட்டு வெளியே போகவில்லையே! நீர்சொல்லும் வார்த்தைகள் சிறிதும் ஒவ்வாதிருக்கின்றனவே! என்று சொல்ல, அப்போது மனைவியார்நாயகரது முகத்தைநோக்கி மூன்றுபேருக்குச்சமைத்த அன்னத்தை இவ்வொருகுழந்தையா அருந்திவிடும்? ஒருபிடி அன்னம்இக்குழந்தைக்குப் போதுமானதாகுமே! நீர்கொண்டுபோன பாத்திரத்தைக் காலியாய்க் கொண்டுவந்ததாய் சொல்கின்றீரே! இன்னும் வேறு பாத்திரத்தில் அமுதுள்ளதாகவும்கேட்கின்றீரே! முன்கொண்டுபோன "பாத்திரத்தைக் காட்டும் பார்ப்போம்" என்று கேட்க, அச்சுதஸ்தபதி கோபாக்ராந்தராய் அப்பாத்திரத்தை மனைவியின் கையில் கொடுக்க, அவ்வம்மையார் அப்

பாத்திரத்தைப் பெற்று, அதன்மேல் மூடியிருந்த வஸ்திரத்தை யெடுத்துப்பார்க்க, அப்பாத்திரம் நிறைய அன்ன மிருக்கக் கண்டு ஈதென்ன நாம் குழந்தைக்கு முன் ஊட்டிப் பசியாற்றுவித்து நித்திரைசெய்ய வைத்தோமே! அவ்வன்னமேனும் குறைந்துதானே இருக்க வேண்டும்! மேலும் நாம் இன்று முக்கால் பாத்திரந்தானே சமைத்தோம்! இப்போது முழுப்பாத்திரம் அன்னமிருக்கின்றதே! இதற்கென்ன காரணமென்று தன்நாயகனுக்குக்காட்ட அவருங்கண்டு ஆச்சர்யப்பட்டு அத்யந்த குதூஹலத்தை யடைந்து இவை சாக்ஷாத் காமாக்ஷியம்பாளின் திருவிளையாட்டே யாகும். நாம் இயற்றிய புண்யத்தின் பலனே பலன். நமது திருவமுதை அம்பிகை திருவாய் மடுத்தருந்தினளே! நாம் க்ருதார்த்தர்களாய் விட்டோம். ஸ்ரேஷ்டர்களானோம், உத்க்ருஷ்டரானோம், நாம் இனியெய்தப்பெறும்பேறு யாதொன்றுமிலது; என்று மகிழ்ந்து அவ்வம்மையாரும், அச்சுதஸ்தபதியும் பெண்குழந்தையும், அவ்வன்னத்தைப் பரதேவதைக்கு நிவேதனம் செய்யக்கருதி அதிபக்தி சிரத்தையுடன் அம்பிகையான காமாக்ஷியம்மையார் ஆலயத்திற்குள்சென்று, அவ்வாலயத்தில் முன்னிருந்தகுழந்தை யொருக்கால்வேறுயிருக்குமோவென சந்தேகித்து தேடிப் பார்த்து இல்லாமையினால், இது அம்பிகையின் திருவிளையாட்டேயன்றி வேறில்லை யென நினைத்து, 'ஆங்கு பக்திபூர்வகமாய் மூலஸ்தானஞ் சென்று நிவேதனஞ் செய்யும்போது, அம்பிகை கருணைகூர்ந்து "உமது பக்திக்கு வியந்தோம்" நீர் ஊட்டிய திருவமுதை முன்னமே அருந்தினோம். எம்மனம் திருப்தியாய்விட்டது. உமக்கு இனியோர் குறைவும் உண்டாகாது. உமது கிருககிர்த்தியத்திற்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் குறைவற அளிப்போம். அதனைக்கொண்டு சுகஜீவனம் செய்துகொண்டு சதா நமது பாதாரவிந்தத்தில் பதிந்த பக்தியுடையவர்களாய் இருங்கள் என்று அசரீரிவாக்கியம் உண்டாகச்செய்தாள்.

பரதேவியின் கடாட்ச வீக்ஷண்யத்தை யறிந்து அம்பிகையின் புகழைநாவாரப் பாடி, ஆநந்தக்கூத்தாடி, தோத்திரஞ்செய்து வணங்கி, தமதில்லமடைந்து அத்தேவதாபிரசாதத்தை ஆனந்தமாகப் புசித்து, அன்றிரவு வீட்டிற்கு தீபம்வைக்கச்சத்தியின்றி இருட்டறையில் படுத்து இவர்கள் நித்திரைசெய்யும்போது, அவ்வறையில் ஓர் பெட்டியின்மீது மின்னலையொத்த ஓர்பிரகாசம்தோன்றியது. அது இன்னதென்று இருளில் அறியக்கூடாதவராய், காலையில் எழுந்துபார்த்தபோது அது ஓர் இரத்தினமாக இருக்கக்கண்டு இது அம்பிகையின் அருளால் கிடைத்ததென்று அதைக் கொண்டுபோய் மதிப்பிட்டுப் பதினாயிரம் வராகனுக்கு விற்று அத்திரவியத்தைக் கொண்டு வெண்கல ரதமொன்றியற்றி தேவிக்கு அர்ப்பணஞ்செய்தார்.

ஓர் சுபதினம் குறித்துக்கொண்டு அந்தரோற்சவம்நடத்தும்போது தேர்க்கால் ஆழத்தில் புதைந்திடவே, நிலைக்குக்கொண்டுவர ஒருவராலும் முடியாமல் வருந்திசோர்வடையும்போது அச்சுதஸ்தபதி, தன் சிரசை ரதக்காலில் முட்டி தேவியின் பீஜாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு அந்த ரதத்தைத் தள்ளதள்ள, தேவியின் கிருபையால் இரதம் இடம்பெயர்ந்து ஓடி நிலையில் சேர்ந்தது.

இதைக்கண்ட ஜனங்க ளெல்லோரும் அன்றுமுதல் அச்சுதஸ்தபதியினிடத்தில் அச்சத்தையும். அன்பையும் ஒருசேரச் செலுத்தினவராய் அவரை "அம்பிகை பக்தர்" என்று அழைக்கத்தொடங்கினார்கள். அது முதல் அவருக்கு அம்பிகை பக்தரென்ற நாமதேயம் வழங்கிவந்தது நமது பரமசாதுவான அம்பிகை பக்தர் அம்பிகையின் திருவடியில் பதிந்த மனதுடையவராய் பக்திசெய்து சிலகாலம்வாழ்ந்திருந்து பரமானந்தப் பெருங்கடலாகிய மோக்ஷசாம்ராஜ்யத்தை அடைந்தனர்.

சுபம்.

உ

ஸ்ரீமத் விராட் விஶ்வப்ரஹ்மணே நம:

# விஶ்வகர்ம குலோபகாரி.

## நல்வழி.

சராயுசம் (கரு) அண்டசம் (முட்டை) உற்பீசம் (நிலம்) சுவேதசம் (வியர்வை) என்னும் சதுர்வித யோனி பேதங்களைக் கொண்டு, தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றங்கள் உண்டாகின்றன. இத்தோற்றங்கள் எண்பத்து நான்குலக்ஷம் பேதமுடையனவாம். இவற்றுள், நல்வழி யின்னது தீவழி யின்னது என்று தெரிந்து பின்னதைவிட்டு, முன்னதைநாடி மீண்டும் ஜனனக்கடலில் வீழாவாறு உந்நத நிலையைப் பெறுதற்குரிய தோற்றம் மக்கட் பிறப்பேயாம்.

மற்ற அறுவகைத் தோற்றமும் மக்கள், தாம்செய்த நல்வினைதீவினைக்கீடாக வருவனவாம். இதனால்மக்களாய்ப்பிறத்தலின் அருமையித்தன்மைத்தென விளங்குமன்றோ? அம்மக்கள் தோற்றத்திலும், அங்கஹீனம் முதலிய குறைபாடுகளுள் ஒன்றுமின்றிப் பிறத்தல் அருமையினும் அருமையாம். மனிதசரீரம்என்னும்அருமையாகிய பட்டாடையை இரவலாகப்பெற்றுப் பிரபஞ்சமாகிய நாடகசாலையில் நடிக்கவந்த நாம், நமது நடனத்தை எவ்வாறு நடித்தால் சூத்ரதாரியும் பிறரும் நேத்ரானந்தமாகக் கண்டு களிப்பரோ, அவ்வாறு நடிப்பதன்றோ நமக்கு நன்மையை விளைவிக்கும். நடிக்கவேண்டுவதாய முறையை நழுவவிட்டு மாறாய் நடிப்பவர்க்கு எங்ஙனம் கீர்த்தி உண்டாகும்?

நடனசாலையில் நடிக்கப்புக்கோர் தமக்கும் தமது வேடத்திற்கும் எப்படி உண்மையில் அசம்பந்தரா யிருக்கின்றனரோ அப்படி நாம் நமக்கும், (சரீரத்திற்கும்) உலக வாழ்விற்கும் சம்பந்தரா யிருக்கின்றோம் என்றுணர்ந்து மெய்ஞ்ஞானம், பூஸ்திதி, தருமம், கீர்த்தி, விவேகம், கல்வி, நற்குணம், பாண்டித்யம் முதலியவற்றுள் யாதாவதொன்றிலேனும் சிறந்து ஒப்புக்கொண்ட நடனத்தொழிலைச் செவ்வனே நடத்தி மேன்மையடைய வேண்டாமா? இவ்விதம் நாம் மேன்மை யடைவதற்குக் காரணமாயிருப்பது எதுவோ, அதுதான் நல்வழி.

சர்வலோகசரண்யனான இறைவன் ஒவ்வொருவருக்கும் இப்பிரபஞ்சமாகிய உத்தியோகசாலையில் குடும்பமெனும் வகுப்பை ஒழுங்காக நடத்திவரும் தொழிலையளித்துத் தானேற்படுத்திய விதிவிலக்குகளை யனுவளவுந்தவறாமலும் குடும்பவகுப்பில் கூக்குரலுண்டாகாமலும், எவன் தனது கடமையைச் செய்துவருகிறானோ அவனுக்கு மோக்ஷமாகிய ஊதியத்தைக் கொடுத்தருளுகிறான். போலி உத்தியோகஞ் செய்யவந்த நமக்கு இவ்வுலகில் என்ன சுதந்தர மிருக்கின்றது? சுதந்தரம் உண்மையிலில்லாவிடினும் யாதாவது ஒருதொழிலை ஏற்றுக்கொண்டவன் அதனைத் தன் சொந்தமாகவே பாராட்டி எஜமானைப் பிரியப்படுத்த எப்படி நடந்துவருவானோ அப்படியே நாம் இறைவனைப் பிரியப்படுத்த, அவ்விறைவன் விதிவிலக்கை யனுசரித்து அவன் கொடுத்தருளிய தொழிலைக் குறைவறச் செய்துவந்தாலன்றோ நமக்கு முத்தியாகிய சம்பளம் சித்திக்கும். எவரெவர் திறத்து எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமோ அவ்வாறு நடக்க ஏற்பட்டுள்ள

ஒழுங்குகளை நாம் கைப்பற்றி யொழுகுவதே நல்வழியாம்.

தாய், தந்தை, மனைவி, மக்கள், உடன்பிறந்தார், சுற்றத்தார், சிநேகிதர், விருந்தினர், ஆசிரியர், அரசர், கடவுள் முதலானவரிடத்துச் செலுத்தற் பாலனவாகிய மரியாதைகளை விதிப்படி செலுத்த நாம் கற்றுக்கொண்டபடி முயல்வதே நல்வழியி லொழுகுவதாம். நாம் இத்தனைநாள் இவ்வுலகில் இருப்போமென்பது நிச்சயிப்பதுகூடாமையால், நம்வாணாட்களைவீணாக்காது நம்மாலியன்ற நன்மையைப் புரிந்து அவற்றைப் பயன்படும் நாளாகச் செய்துவந்தால் பிறவிக் கடலைக்கடக்கும் பெரும்பாக்கியத்தைப் பெற்றவராவோம்.

நல்வழியி லொழுகும் ஒழுக்கமே யாவர்க்குஞ் சிறப்பைத்தருதலால், நாம் அவ்வொழுக்கத்தை நமதுயிரினும்சிறந்த தொன்றாக வெண்ணிப் பாதுகாக்கவேண்டும்.

“நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந்
தீயொழுக்க, மென்று மிடும்பை தரும்”

“ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்”

“ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்
கத்தி, னெய்துவ ரெய்தாப் பழி”

என ஆன்றோரும்பணித்திருக்கின்றனர். ஆதலால் இப்படிப்பட்ட நல்வழியின் இலக்கணத்தை நாம் ஒவ்வொருவரும் எப்படியாவது அறிந்து அதனை கடைப்பிடித்தொழுகல்வேண்டும்.

அன்றியும், நாம் நம்மை நல்வழிக்கணிறுத்தவல்லராய நல்லோர்களின் கூட்டுறவில் வாழவேண்டும்; ஏனெனின், ஜலமானது பாலைச்சேரின் பால்மயமாகவே விளங்குமன்றோ? ஆதலால் நல்லார் கூட்டுறவில் வாழ்ந்து சற்புருஷர்கள் வெளியிடும் நன்னூற்களை பொறுமையாக வாசித்து வருபவர்க்கு நல்வழியி லொழுகுவது தானே சித்திக்கும்.

**பத்திரிகாசிரியர்.**

50-வது பக்கத்தின் தொடர்ச்சி

# இந்தியசிற்பமும் அதன்முன்னேற்றமும்.

## முன்னுரை

ஐய! இக்கோலத்தொழில் எங்கட்குரித்து. என்மூதாதைகளின் வழிப்பற்றியே நானும் இத்தொழிலை இளமையிலேயேகைப்பற்றினேன். மீன்குஞ்சுக்குநீந்தப் பழக்கினாரிலை. வாத்துக்குஞ்சுகள் முட்டையினின்று வெளிப்பட்ட வக்கணமே நீரினிடைமூழ்கியுலவும். இத்தருமம் அவைகட்குடன்பிறப்பு. அவற்றை அவைகட்குப் போதித்தாரிலர். ஒருவர் தம் நடையை நடைப்பழக்கத்தாலும், கவி, நாப்பழக்கத்தாலும், கல்வி, மனப்பழக்கத்தாலுமே பெறுவர். கைத்தொழிலோ, கைப்பழக்கத்தாலன்றி வெறும்மனப்பழக்கத்தா லடைவதன்று. கைப்பழக்கமோ வெனின், பல காலத்தின் பிரயாசைக் காரணமாய் கைகூடும். அதின் நுட்பமோ, நூற்றிலொருவர்க்கெய்தும். அதை அறிபவரோ, ஆயிரத்துக்கொருவராவர். இக்காரணம் பற்றியே ஒவ்வோர்வினைஞரும் இந்நாட்டில் ஓர் சார்பாய்த் தனித்தார்கள். இப்பாகுபாடு இது ஒழிந்த மற்றயநாடுகளிலும், முக்கியமாய் மேற்றிசையாரிடமும் விளக்கமாய்காணப்படவில்லையெனின், அவர்களின் நாகரீகமும் மதக்கோட்பாடுகளும் நம்முடையவற்றிற்கு முற்றும் முரணாகயிருத்தல்பற்றியேயாம். இவைகளனைத்தையும் நாம் ஒருங்கேஒழித்து மற்றவரைப் பின்பற்றுவது நம்மாலியலாத காரியம். அக்காலம் ஒன்று ளதேல், அதுமனதிற்கு எட்டாத துலைவில் நிற்கும். ஆனதுபற்றியே, நீர் வேறுகுலத்தவராதலால் தூண்டினியின்றும், மீனைவாங்கவும், அதனை நிமிர்க்கும் கைலாகினால் மீனின் துடிப்பையொடுக்கவும் இயலாது விழுத்தீர். இனிஇத்தொழிலை தொலையும். உமதுமரபினர் தொழிலைபின்பற்றும். அதனால்உமக்கு கீர்த்தி விளையும் என்று சொல்லி விடைபெற்று செல்வானாயினன். இக்கதையின் படிப்பினை யாவரும் உணர்வார். கேவலம், மீன்வாணிபம் அக்குலத்தின் இயற்கை குணத்தை ஒட்டியதென்றால், சிற்பவித்தைக்கு அத்தகைமை இன்றியமையாத்து என் வற்புறுத்திக்கூறவும் வேண்டுமோ?

சிற்பம்சிறந்தோங்காமைக்கு மற்றொரு காரணமும்உண்டு. கட்டியவீட்டிற்கு குற்றம் நாட்டுவது சிற்பநூல் வல்லோர்க்கன்றி ஏனையோருக்கு முரித்து எனக் கருதுவதே. இதுபொதுவாய் யாவரிடத்தும் காணப்படு மோர் குறை. ஏதேனும் ஓர் கட்டிடம் கட்டும்போதாவது, கட்டிய பின்னராவது பலர்கூடி தத் தம்மனதிற்கு தோன்றியவாறு, முக்கியமாய், அதன் குற்றங்களையேஎடுத்துச்சொல்வதுவழக்கம். அப்படிச்சொல்வது ஓர்சமயம் உண்மையைத் தழுவியும் நிற்கும். அக்கட்டிடம் ஓர் உண்மையான சிற்பாசாரியால் கட்டப்பட்டிருக்குமாயின் பெரும்பான்மையாய் அன்னியர் அபிப்பிராயமனைத்தும் தவறாகவேயிருக்கும். ஏனெனின் அந்த சிற்பாசாரியர் அக்குற்றங்களை யெல்லாம் முன்னுணர்ந்து அவைகளை முற்றும் களைந்திருப்பாரென நாம் நம்புவது தவராகா. சிற்பாசாரியினது வேலையும், கடமையு மிதுவே. இதைஉணராது, கட்டிடத்திற்குரியோன், பலர் புகல்வதைக் கேட்டு ஒவ்வொருவரையும் மனம்மகிழ்விக்க நினைந்து சிற்பாசாரியனது வரம்புகடந்து நடப்பானாயின், கழுதையைச்சுமந்து சந்தைசென்ற கிழவனுக்கும் அவன் மகனுக்கும் வாய்த்த கதியே வாய்க்கு மென்பதற் கையமில்லை. உதாரணமாக, மேற்றிசைசிற்பாசாரியர் ஒருவர் ஒருலட்சாதிகாரிக்கு ஒரு வசதித்தலமும், அதைக்கட்டப்பட வேண்டிய முறைகளையும் விளக்கியளித்தனர். அதைப்பெற்று அதின்படியே கடைக்கால்நாட்டி வருங்கால், அயலில் வசிக்கும் மற்றொருபிரபு தன் மனதிற்கு தோன்றிய சிற்சில மாறுதல்களை வற்புறுத்திக்கூற, இவர் ஒன்றும் தோன்றாராகி வெளியூரில் வசித்த அச்சிற்பாசாரிக்கு அதைக்குறித்து ஓர் கடிதமெழுதினர். சிற்பாசாரியனும் அதைப் பார்த்து இவரது அறியாமைக்கு மனமெகிழ்ந்து பின்வருமாறு உத்தரம் வரைந்து விடுத்தனர்.

“அன்பார்ந்த ஐய, நீவிர்விடுத்தகடிதம் காமேற்கப்பெற்றேன். கடிதத்தைப்பெற்ற மகிழ்ச்சிவிஷயத்தின் அறுவருப்பால் வெகுவாய் குறைவெய்தியது. தமதுவீட்டைத் தம்நண்பர்மனம்போல் கட்டுவதில்எனக்கு தடையொன்றுமில்லை. ஆனால் ‘எண்ணித் துணிகக் கருமம், துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு’ என்ற இவ்வான்றோர் வாக்கியம் நம்மிருவருக்குமே பொருந்தமாகிறது. நிற்க, தம்நண்பர் வற்புறுத்திக்கூறும்மாறுதலால் சொற்பபணம் மிகுதிப் படுமென்பதை யாம்மறுக்கவில்லை. அதன்படி கட்டுவீராகில், சுவரினிடை ஒதம் தாங்கல், சுவர்விரிதல், கடைக்கால் சிற்சிலபாகங்களில் ஆழ்தல், கதவுகள் கிட்டிக்கொள்ளல், அதைத்தவிர்க்க ஓரங்களைச்சீவியொழிப்பதால் வெயிற்காலத்து, கதவு, சன்னல்களினிடையே தோன்றும் வெளியும் அதனுள் நுழையும் ஒளியும், சுண்ணாம்பு பூச்சு மூட்டுவிட்டு படைபடையாய் தலைமீது வீழ்தல், மேற்கூரையின் மரங்கள் சீக்கிரம் கடையற்று கரையானுக் கிரையாதல், அவைகளைப் புதிப்பிக்கும் தோறும் நேரும் வீண் சிலவு, அதனால் தமக்குறும் மனக்கிலேசம் எமக்கிழையும் வீண் அபவாதம் முதலிய இன்னனைய சுமையை தாங்கவல்லேனல் லேனாதலால், தம்நண்பர் கருத்திற்குஒருக்காலுமிசையேன்” என்றார். அந்த லட்சாதிபதி பின்னர் யார்மொழியைப் பின்பற்று

வர்! நண்பர்காள்! ஊகித்தறியுங்கள். சிற்பாசாரியனை இனிமுற்றும் நம்புங்கள். மதியீனர் சதியுரைக்கு செவிகொடாதீர்கள் இனிசிற்பம் செழித்தோங்கும் வழியை நாடுங்கள். சொன்னோம்! சொன்னோம்!

சிற்பம் இனிதழைதர வேண்டின் பொதுசனசமூகம் அதன் ஆவசிகத்தை நன்குணரக்கடமைப் பட்டவராவர். இன்றேல், சிற்பாசிரியர் எல்லாம்வல்ல இறைவனாயினும் என்செய்வார்? அவர்வித்தை என்பயக்கும்? பொதுசனங்கள் அவரைநம்பி நாடாவிடில் அவர்தம் நூலின்நுட்பத்தை யார்க்குரைப்பர்? எங்ஙனம் தம்திறத்தை நாட்டுவர்? அழகை ஒருங்கேதிரட்டி எங்ஙனம் புகட்டுவர்? அருமைவாய்ந்த வெளித்தோற்றமும், இன்பம் பெருக்கும் உள்ளமையும் பெற ஒவ்வொருவருள்ளும் எழும் ஆசையெனும் பெருங்கனலை சிற்பமெனும் சிவிறி கொண்டு எங்ஙனம் மூட்டுவர்? சுருங்கிய சிலவில், நெருங்கிய அறையுடன், படர்ந்த முற்றமும், விரிந்தகூடமும், சமைக்கு முபாயம் எவ்வாறு ரூபித்தருளுவர்? மணிமாட மாளிகைகளும், கூடகோபுரங்களும், வாவிக்கூபத் தடாகங்களும் எங்ஙனம் பொலிந்துவிளங்கும்? நாகரீகமலிந்த நம்நாடென எங்ஙனம்நவிலப்பெறும்? நம்பின்தோன்றுவோர்க்கும், நாகரீகம் சொரிதரப் பெறும் மேனாட்டாருக்கும் நம்மில் மதிப்பு தோன்றுவிக்குமுபாயம் பிரிதுயாதுளது? நண்பர்காள்! சிந்தியுங்கள். பிணியாளன் ஒருவன், நோய்தீர்க்கும் நல்வைத்தியனையே நாடுவான். அத்தகைமைபோல், பொது சனங்களும் நல்லாசிரியனையே கோரவேண்டும். நிற்க, கால்வாயன், அரைவாயன், மற்றுமொரு வெறுவாயன், உடம்பெலாம் வாயாய் பிதற்றுமொரு பெருவாயன், முதலியோரை நீக்கி நல்லோவியனையே அடையமுயல வேண்டும். அதினால் வருமின்பம் எண்ணில. நம்மனோர் இனியேனும் துயில் நீத்து இந்நெறிபற்றி நிற்பாராக.

## 2. இந்தியாவின் பெருமையும், அச்சிற்பத்தி னுரிமையும்.

அருமை வாய்ந்த நமது இந்தியாதேசமானது, தனக்குள்ளே ஒரு சிற்றுலகமாகக் காணப்படுகின்றது. எனெனின், இயற்கையின் வனப்பும், அதன் கம்பீரமான தோற்றமும், நகர்களின் செழிப்பும், ஒருங்கே நிறைந்து இங்குகாணப் படுவதுபோல்வேறெங்கும் காணப்பெறுவதருமை அதனுள்ளும்,ஒரு புறத்தில் கல்வி கேள்விகள் வாய்ந்த வகுப்பினரும், யுத்தத்தில் பின்னடையாரண் வீரரும், தொன்றுதொட்டு பயிர்த்தொழில் நடாத்தும் மாந்தரும் எந்நாளுமே சலனமடையாத விசாலித்த அறிவுடைய சிற்பிகளும், நிறைந்து நிற்கவும், மற்றொருபுறத்தில், புதர்களிலும், மலையி னுச்சிகளிலும், பெருமர வனங்களிலும், வெயில், பசி, தாகமின்றி, தத்தம் நிலைமையை நினைக்குந்தோறும் உவகைபூத்து, அந்நிலை ஒழிந்து வேறுநிலை எய்த நினையாது, தம்மூதாதைகளின் வழிபற்றி பல்லாயிர வருடங்களாக மாறுதலையின்றி உரிமையாய் வசித்துவந்தவர்கள் இந்நாடொழியவே றென்னாட்டினு மில்லை வேகம் வாய்ந்து,விரிந்தாழ்ந்த நதிகளையும், எக்காலத்தும் மஞ்சுலாவிய மலைத்தொடர்களையும், மணல் மூடிய பாலைவனங்களையும், முதிர்ந்த பருமரங்கள் மிகுதடர்ந்த காடுகளையும், பொன்,வெள்ளி, தாம்பிரம், இரும்புமுதலிய பல உலோகங்களையும், மதிப்பிலா பல்வகை இரத்தினங் களையும், நித்தில முயிர்க்கும் வேலைக்கரை களையும் ஒருங்கே தன்னுள்ளடக்கி, அவையனைத்தையும் தன்னருமை மைந்தர்கட்கின்றும், அயல்மாந்தர் பேராசைதீர பெருக்கவளிக்கும் தன்மையால் கற்பகத்தருவை யொத்த நாடு இந்நாடொன்றேயாம். ஆராயுமிடத்து, வேறெந்நாட்டினும் பலமதத்தினர் ஒருங்கே குலவி நின்றதும்,தம்மதக்கோட்பாடுகளுக் கிணக்கமுற தம் கருத்துகளையும், கொள்கைகளையும், கற்பனைசக்திகளையும், தம்கைத்தொழிற்களிலும், சிற்பத்திலும், பொருத்த முறதழுவிக் காட்டினார் களில்லை. எத்திறத்தவருமே, தங்களாலயங்களையும்; பொதுமண்டபங்களை



யும், வசதித்தலங்களையும், ஆகிருதியினாலும், உருவத்தினாலும், அருமைவாய்ந்த வேலைப்பாட்டினாலும், சூழ்ந்து விளங்கும் நந்தவனங் களினாலும், பார்ப் போர்கண்களையும், உள்ளத்தையும் கவரும்வண்ணம் அமைந்திருப்பினும், இத்தேசத்தார் போன்று தத்வார்த்தங்களை திரட்டி, அவைகளினிடத்தே குறிப்பாய் உணர்த்துமாறுநிலை நாட்டினவர்களன்று.

கிரீஸ்தேசத்து சிற்பமானது, இற்றைநாள்வரை மானிடரால் சிருட்டிக்கப்பட்ட சிற்பங்களனைத் துள்ளும், குற்றமற்றதெனவும், தொன்மையுற்றதெனவும், சரித்திரநூல் வல்லோரனைவருமறைவர். அவற்றின் கம்பீரமான தோற்றமும், மனக்கிளர்ச்சியை உண்டுசெயுமழகும், கட்டிடங்களின் ஒவ்வோர் பாகமும், மற்றவைகட்டு பொருத்தமுற இணங்கும் மாட்சியும், உன்னதமேயின்றி வெறும் பரிமாணமாத்திரத்தாலும், கூட்டுறவாலும், பார்ப்போருளத்தை மகிழ்விக்கும் தன்மையும், நாநாவித சித்திரரேகைகள் படர்ந்த சலவைக்கற்றூண்களை அபரிமிதமாய் தம்வயப்படுத்தி விளங்கலாலும், அச்சிற்பம் ஒப்புவமையற்று பிரகாசிக்கின்றதென்பதற்கு ஐயமில்லை. வெகுபுத்தி நுட்பத்துடன், பரிமாண பாகுபாடு செவ்வனே யுணர்ந்து, சித்தரித்துள்ள இவ்வழகிய தூண்களை வேறு மாறுதலையின்றி இற்றைநாளும், காலதேசப்பாகு பாடுணராது, மேனாட்டு ஓவியரனைவரும் கையாடி வருவதினாலேயே அவைகளின்பெருமைபெரிதும்புலப்படும். இக்காரணங்களினால்மட்டுமே, அச்சிற்பம் நம்மினும் சிறந்ததென நாட்டுவதற்கில்லை. ஏனெனில், கிரேக்கர்களும், உரோமர்களும்,இந்தியர்களினும், நாகரீகத்திலும், யுத்தத்திலும்,வீரத்தன்மையிலும், முற்பட்டவர்களாயினும், சிற்பத்தில் இந்தியர்களினும் முற்பட்டிருந்தார் களென்றெப்ப ஒருக்நாலும் மனமிசையோம். கிரேக்கர்களும், உரோமர்களும் யுத்தப்பிரியராய் தம்நாடுநீத்து, அயல்நாடுபோந்து திரும்பிய பின்னரே தங்கள் சிற்பவன்மையை நிலைநாட்டினரென்பர். எனவே, அவைகளனைத்தும் அவர்களது கற்பனைசக்தியினின்றும் வெளிப்பட்டவைகளெனச் சொல்வது முற்றும் பொருந்தாதென்ப. ஆங்காங்குதாம் கண்ணுற்றவைகளை ஆதாரமாய்க் கொண்டு அவற்றை பெருக்கியேனும், சுருக்கியேனும்,தம்கற்பனைசக்தியுடனிசைத்துக் காட்டியிருக்கலாம். இன்றேல், அவைகளனைத்தும் அவர்களறிவினின்றும் முளைத்தெழுந்து பிரதிபலித்ததென்பதற்கு ஆதாரம்யாதுளது?

தொடரும்.

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்.
சென்னை சிற்பவித்தியா சங்கத்தின்
அங்கத்தினர்

# இதோபதேச நீதிமொழிகள்.

## பிறப்பும் அதனுயர்வும்.

சகோதரர்களே இவ்வுலகில் பிறக்கும் (84) எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவஜெந்துக்களிலும் இம்மானிடப் பிறப்பெய்துதல் அரிதினும் மகா அரிதென ஆன்றோர்களால் எத்தனையோ நூல்களில் எடுத்தெடுத் தறைந்திருக்கிறார்கள்.

அதில் நமது திரு ஔவையாரவர்கள் "அரிதரிது மானிடராவதரிது" என்றும், இதனை வடநூலார் "துர்லபோமானுஷோதேஹ" என்றும், தாயுமானவர் "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்" என்று மிக வற்புறுத்தியும், மற்றொருபேரறிஞர் "அவ்வுலகில் வாழுமுயிர் எழுபிறப்பி னுண்மிக்க காக்ஷி பெறு நரஜென்மமாய்க்,கருதப் பிறத்தலரிது" என்றும், நமது முன்னோர்

களால் இம்மானிடப் பிறப்பின்மகிமையை எடுத்தெடுத்து எத்தனையோ நூல்களில் நமது நன்மையைக்கருதி வற்புறுத்தியம்பி நீதிமொழிகூறி, போதனைசெய்திருப்பதை எடுத்தோத நாவும், எழுதிவரக் கையும் அதனைஉற்றறியமனமும்எத்தனையோ வேண்டும் எனினும், எண்ணிநிற்கும் மனமுடையோர்க்கு ஒன்றே போதுமென்பது உண்மையாகும். ஆகையால் இவ்வளவு உயர்வுதங்கிய ஜென்மமெடுத்தும் கல்விகற்காது காலங்கழித்து மூடனெனப் பெயரெடுப்பதைவிட வேறு அபகீர்த்தியும் அதைவிட வேறு துன்பமும், அதைவிட வேறு துயரும், அதைவிட வேறு இழிவுமில்லையெனக் கற்றறிந்த ஒவ்வொரு கனவான்களும் கண்கூடாகக் கண்டறிந்த மெய்யான காக்ஷியாகும்.

இதனைச் சுருக்கிச் சொல்லுமிடத்து "மக்கள் யாக்கையிற் பிறத்தலே அரிது மற்றதினிற், துக்க கண்குருடூமையத் துறத்தலுமரிது, நற்குலத்திடை வருதலுமரிது ஞானத்தால், முக்கணீசனுக் காட்படல் முற்றிலுமரிதே" என்று முதுமொழிச் செய்யுளாலும் அறியலாகும். அவ்விதம் மானிடப்பிறப்பும், அங்கவீனமுமின்றி உயர்குலத்திற் பிறந்தும் கல்வி கற்றும் முதுநூலறிஞரின் முதுமொழிக் கேள்வியில்லாவிடின் இவ்வனைத்தும் பிரயோஜனமின்றி கெட்டுவிடுமென்று ஆன்றோர்களின் ஆழ்ந்த துணிபாகும்.

**திருக்குற்றலப் புராணம்.**

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவி எழுந்தாலன்றிக், கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும், பெருகிய செல்வமு மறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க்கன்றி, திருவளர் புண்ணியபாபம் இம்மைமறுமையும் வீடுந் தெரியாதன்றே"

என்ற முதுமொழியாலும் கேள்வி அவசியமென்பது தெள்ளிதிற் றெரியலாகும். அன்றியும் நாயனார் "கற்றிலனாயினுங் கேட்க வஃதொருவர்க் கொற்கத்தி னூற்றாந் துணை" என்றும், "இழுக்க லுடையுழி யூற்றுக்கோலற்றே, யொழுக்கமுடையார் வாய்ச்சொல்" என்றும், "நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய வாயின ராதலரிது" என்றும், "செவியிற்சுவையுணரா வாயுணர்வின் மாக்க ளவியினும் வாழினுமென்" என்றும், வற்புறுத்தி கற்பதினுங் கேள்வி அவசியமென்றும், அஃதில்லாதிருந்தும் உயிர்வாழ்வதினும் இறத்தலே மிக்க இன்பமென்றும், நாயனார் அவ்வளவு கண்டிப்பாய்க்கூறியிருப்பதினாலும், நமது திரு ஒளவையாரவர்கள் "கேள்விமுயல்" என்றும், "மேன்மக்கள் சொற்கேள்" என்றும், "பெரியாரைத் துணைக்கொள்" என்றும் சொல்லிய பேரமுத இனியவாக்காலும் பெரிதும் அறியலாம்.

அன்றியும், கல்வி கேள்விகளில் எவ்வளவுபிரபலமுற்றிருப்பினும் மறதியென்னுங் கொடிய வஞ்சகனிடத்திலகப்பட்டு உழலாமல் ஞாபகம் என்னும் அரியமித்திரனிடம் இடையறாது பழகி யொழுகி தாம் கற்றறிந்த செய்யுட் பொருளின் ரஸத்தை யருந்தி அதற்கேற்ப புருஷார்த்தமாகிய தானதர்ம சிந்தனையை மேற்கொண்டொழுகித் தாமுதித்த குலதர்மங்களின் க்ஷேமாபிவிருத்தியைக் கருதியும், இரப்போர்க்கீந்து ஏழைகளைக் காப்பற்றியும், அன்னசத்திரம் வித்தியாசாலைகளை ஏற்படுத்திப் பொதுஜன க்ஷேமார்த்த உதவிகளைப் புரிந்தும் இன்னும் அனேகவித உத்தமோத்தம தர்மங்களையும் தன் சத்திக்குத் தகுந்தவாறு மனோவாக்குக் காயங்களால் செய்தும், செய்வித்தும், தமது பூதவுடம்பழியினும், புகழுடம்பழியாது வேதநெறி நின்றொழுகி மேன்மையுற்று தாமெடுத்த மானிடஜன்ம புருஷார்த்த நற்பயனையடைந்து, தீவினையென்னும் பசியை யகற்றி, இறைவனருளென்கிற இன்பசாகரத்தழுந்தி, இன்புற்றனந்தித்தலே மக்கட் பிறப்பிற் குற்ற தக்கதோர் உன்னத நெறிமுறையாகும். இதனை விட்டு கல்விச் செல்வ மிகுந்தவுடன் தாரித்திரியன் புதையல் கண்டெடுத்தது போல் தலை தடுமாறி நியாயம் அநியாயம் தெரியாது



நல்லவர்கெட்டவரென்றறியாது ஆணவம், மாயை, காமியம் என்னும் மும்மலத்தழுந்தி கொலை, களவு, கள், காமம், பொய் என்கிற துர்விநியோகத்திற் றமது பொருளை யழித்து உலகோர்களா லிகழப்பெற்று வாழ்தலானது இவ்வுலகில் அஃதோர் நரகத்துன்பம் ஒக்குமென்று மேலோருரைத்துளார்.

அறநெறிச்சாரம்

விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான், பெருந்தக் கவரையும் பேணன்—பிரிந்துபோய்க், கல்லான் சடுவினைமேற் கொண்டொழுகுமேல், இவ்வாழ்க்கை யென்பதிருள்" என்றார்.

இதுபற்றியன்றோ நாயனார்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமைநன்று" என்றார்.

ஆகையால் ஒப்புரவோடு உலகில் ஒழுகி நற்புகழோடு நாட்டில் வாழ்தலே நல்லவர்கட் குற்ற நடுவுநிலைத்தான நன்னெறியொழுக்கமாகும்.

1. கற்றலும் வேண்டும், கேட்டலும் வேண்டும், கண்ணுடன் கருத்ததும் வேண்டும்.

2. கற்றலும் வேண்டும், நிற்றலும் வேண்டும், கருணையுங் காத்தலும் வேண்டும்.

3. கற்றலும் வேண்டும், உற்றலும் வேண்டும், கையதும் மெய்யதும் வேண்டும்.

4. கற்றலும் வேண்டும், போற்றலும் வேண்டும், கடவுளைத்தொழுதலும் வேண்டும்.

(1-கல்விகேள்வி கற்றல், 2-பகுத்தறியக் கற்றல், 3-மயக்கறக்கற்றல், 4. அன்புருகக் கற்றல்.) இதுவே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டைகூடல், என்னும் முதுநெறியுடையோர்களின் முதிர்நெறி முறைகளாம்.

**குலாபிமானமும் கூடியுழைத்தலும்.**

உலகெலா முணர்ந்தோதற் கரியவனாகிய ஸ்ரீ விராட்விசுவப்பிரம மகா மந்திர மூர்த்தியால் சிருஷ்டித்தருளப் பெற்ற இப்பூவுலகின்கண் கல்வி, செல்வம், கௌரவம், உதாரம், பலம், கீர்த்தி, அழகு முதலிய எப்பொருட் செல்வங்களாலும் எய்தப் பெறும் எப்புகழும் நற்புகழாகாவென்றும், ஒருவன் தான் பிறந்த குலாசார சீர்திருத்தக் கொள்கையைத் தனக்கு என்று மழியா நன்றியைக் கொடுக்கும் நற்புகழுடைய நன்னிதிக்களஞ்சியமெனக் கைக்கொண்டு தனது குலமேன்மைக் குற்ற குலாசார சீர்திருத்தக் கொள்கைகளை உலகிற்பரவச்செய்து தனது குலத்திற்கு வேண்டிய நன்மைகளை விடாமுயற்சியோடும், திடமனத்துடனும் எவனொருவன் செய்கிறானோ, அவனே தன்யன்; அவனே மகா புண்ணிய புருஷன்; அவனே மாணுடயாகத்தை மகிமையுடன் செய்பவன்; அவனே தேவர்களுக்கும் அன்புடைய திவ்யபக்தன்; அவனே குலோத்தமன்; அவனே குலதீபகன்; அவனே குலாபிமானி அவனே குலசிரேஷ்டன்; அவனே குலகுரு; அவனே குலமாதா; அவனே குலத்தியாகி; அவனே குலப்பிரதாபன்; அவனே குலதீரன்; அவனே குலசூரன்; அவனே குலசிகாமணி; அவனே குலபாலன்; அவனே குலசீலன்; அவனே உத்தமர்துதிக்கும் பக்தியிற்சிறந்த நற்குல முதித்த நரசிகாமணியாகும்.

இக்குலோத்தாரண, குலாபிமான் குலபரிபாலன, குலசிகாமணிக்குத் தெய்வமுந்துணை நின்று எக்காரியத்திலும் விக்கினம் வாராமல் தடுத்தருளி அவ்வுத்தமர் முயலுங்காரியத்தில் முன்னவனாய் நின்று இஷ்டசித்தியாகும் வண்ணம் கஷ்டமின்றிக்கூட்டி முடித்து, இன்பநலம் என்றும் அளித்து, அன்புடன், காத்து அனுதினமும் இரக்ஷித்தருளுமென நமது தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனாரவர்கள் தமது திருவருள் சுரந்து திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள்.

அவைவருமாறு:—

**திருக்குறள்.**

கருமஞ்செய வொருவன்கைதூவேனென்னும் பெருமையிற் பீடுடையதில்—என்றும்

குடிசெய்வ லென்னு மொருவர்க்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்—என்றும்

தான்வற்புறுத்திக் கூறி மனிதர் ஒற்றுவாழ்ந்து குடிசெய்து குவலயத்தில் கூடிவாழும்படி கூறியிருக்கின்றனர். அன்றியும், ஒரு மனிதனுக்கு நல்லாண்மை என்பது மேற்கூறிய கல்வி, செல்வம், கௌரவம் முதலியவைகளால் ஏற்படும். செருக்கு முதலிய ஆண்மைகள் ஆண்மையல்லவென்றும் தான்பிறந்த குலத்திற்குப் பிறரால்வரும் தூஷணை குற்ற முதலிய இடையூறுகளை உடனே முயற்சி செய்து தடுத்துத் தனது குலத்திற் குற்றபெருமைகளை. உபந்நியாஸ முதலிய நற்போதனைகளாலும், குலாச்சார சன்மார்க்க நீதிபோத நிகழ்த்தும் வர்த்தமானப் பத்திரிகைகளாலும் தமது குலாசார நீதிபோத நூல்களை வெளிப்படுத்துவதினாலும் நெற்பயிர்களுக்குக் களையை நிவர்த்திசெய்வதுபோல் நற்குலத்திலுற்ற குற்றத்தை நிவர்த்தித்துத் தனது குலத்தோர்களுக்கு நற்கல்விகளையும், நந்நீதிகளையும், நற்றுதிகளையும் நற்போனைகளையும் நாளும் போதித்து நந்நீதியுடைய வர்களாய், நற்சீலமுடையவர்களாய், நற்குண முடையவர்களாய், ஞானோதய வான்களாய் நாட்டில் விருத்தி யடைந்து நன்கு விளங்கும்படிச் செய்து வருபவர்களே நல்லாண்மையிற் சிறந்த குலோத்தம புண்ணியபுருஷ சிகாமணிகளென்றும் நமது நாயனாரவர்கள் நவின்றிருக்கிறார்கள் அவை வருமாறு.

திருக்குறள்.

“நல்லாண்மையென்ப தொருவர்க்குத் தான் பிறந்த, இல்லாண்மை ஆக்கிக்கொளல்” என்றும்.

நாயனாரவர்கள் நாட்டிற்கு நன்மைபயக்கும் வண்ணம் உண்மை யுரைத்திருப்பதால் நமது குலசிரேஷ்டர்களான, குலோத்தம புண்ணிய புருஷர்களான குலசிகாமணிகள் நமது குலோத்தாரண விஷயத்தில் நன்மனதோடு எந்நாளும் உழைத்து நமது குலமானது நாட்டிற்கு நாயகமாய் பன்னாளும் இந்நலத்துடன் இன்பந் தழைத்து இடரிலாது வாழும்படிச் செய்து இறைவனாகிய ஸ்ரீ பரப்பிரம சுவரூபியான ஸ்ரீ விராட் விசுவப்பிர்ம மகாமந்திர மூர்த்தியின் திவ்ய திருவருளைப் பெற்று நன்னலத்துடன் இந்நிலத்தில் வாழும்படி பன்னாளும். கோருகின்றனன்.

V. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதி
ஜோதிஷர்,
ஆரியன் சோதிடசாலை ஆபீஸ் திருவாரூர்.

## அறிவு.

அலைகடல் சூழ்ந்த இவ்வவனி யின்கண் ஸ்ரீ விஸ்வேஸ்வரனாற் சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளுள் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் வேற்றுமை யுண்டென்பது யாவருமறிந்தவிஷயமே. மிருகங்களுக்குகாண்டல், கேட்டல், மோத்தல், உருசித்தல், பரிசித்தல் என ஐந்து உணர்ச்சிகளுண்டு. இவ்வுணர்ச்சி அல்லது அறிவிற்குக் காரணம் மிருகங்களின் தாதுக்களேயாம். இத்தாதுக்கள் பிறபொருளை பரிசித்தலினால் மேற்கூறிய ஐவகைஉணர்ச்சியு முண்டாகின்றன. மிருகங்களின் மெய், வாய், கண், மூக்கு, செவிஎன்னும் பஞ்சேந்திரியங்களின் தாதுக்கள் பிறபொருள்களை மூன்றுவிதமாகப் பரிசிக்கின்றன. எங்ஙனமெனில் வாயும் மெய்யும் தம்மேல் பிறபொருள்கள் தாக்குதலினாலுருசியையும் பரிசத்தையும் முறையே அறிகின்றன. மூக்கு பிறபொருள்களின் நுண்ணிய அணுவாய் அப்பொருட்கும் தனக்கு மிடையிலுள்ள வாயு மூலமாய் சென்று அதன் துவாரத்தினுட்புறத்திற் படுதலினால் உணர்வடைகின்றது. செவியும் கண்ணும் தம்மெதிர் நிற்கும் பொருள்கள் வாயுவிலும் ஆகாயத்திலு முறையே சலனங்களை யுண்டாக்க, அச்சலனங்கள் நீரிலுண்டாகும் அலைகள் போற் பரந்து தாக்க உணர்கின்றன. இப்படி எவ்வகைப்பட்ட உணர்ச்சிக்கும் மூலஸ்தானமாய் விளங்குவது மூளையேயாம். எப்பொறியி லெப்பொருள் தாக்கினாலும் அதை உணரத்தக்கது மூளையேயாதலால் அறிவிற்குப் பற்றுக்கோடு தாது சங்கமம் பொருந்திய தலையேயாம். சீவவர்க்கங்கள் பஞ்சேந்திரியங்களால் உணர்ச்சியைப் பெற்று பின்ன ரதனை கவனிக்குஞ் சக்தியே மனமெனப்படும். மிருகங்களானவைகள் தம்தம்நிலைமைக்குத்தக்க இயற்கையறிவை யுடையனவாய்ச் சீவித்து ஒரேவகையான பழக்க முடையவைகளாய்த்தாம் உண்டானகால முதல் இதுகாறும் யாதொரு நூதன சம்பவங்களை முயற்சி செய்யாமலும் ஒன்று தன்னினமாகிய மற்றொன்றைப் பார்க்கிலும் தேர்ச்சியடையாமலுமிருக்கின்றன. பல்லாயிரம் வருடங்கட்கு முன்கட்டின, கூண்டின் வண்ணம் குருவி தற்காலத்தும்கூண்டுகட்டுகின்றது. தேன்கூண்டின் அமைப்பு மிகவிசித்திரமானவையென்றுசொல்லவேண்டுமேனும் ஆதிமுதலாய் அமைக்கப் பட்டதேன்கூடுகள் இவ்வாறே யமைக்கப் பட்டதேயன்றி காலத்துக்குக் காலம் தேனீக்கள் தேர்ச்சியடைந்து இவ்வாறு அமைத்திருக்கின்றன வென்பதற்கு யாதொரு ஆதாரமுமில்லை. மிருகங்கட்கு இவ்வாறுய அறிவு இயற்கை யென்றும், இயற்கைப் பழக்கமென்றும் ஊகிக்க வேண்டியதாகும்.

மிருகங்கட்கு மக்கட்கும் பஞ்சேந்திரியவுணர்ச்சி ஒரேவிதமாயினும், மக்களோ அப்பஞ்சேந்திரியங்களோடு யுக்தியெனும் அகவிந்திரியமுஞ் சேர்ந்து ஆறறிவுடையராய் ஒவ்வொன்றையும் பகுத்தறிவு முணர்ச்சி திட்பத்தானே சிறந்தவ ரென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில் விளங்கும். இது செய்வது, இது செய்யப்படாதது என்னும் விதிவிலக்குகளைப் பகுத்தறியுமுணர்ச்சி எவர்க்கில்லையோ அவர்கள் மிருகங்கட்குச் சமானமானவர்கள் என்பதே அறிவாளர் கொள்கையாம். மனிதருக்கு பகுத்தறியுந் தன்மை அவரவர் சார்ந்திருக்கும் இனத்துக் கேற்றபடி யென்றும், அவரவர்கட்கு இயற்கையிலே பகுத்தறிவு கிடையாதென்றும் சிலரபிப்பிராயம். ஆயினும் அவர்கள் சொல்வது முற்று மபத்தமென்பதும் சரியல்ல. மனிதர்களுடைய இயற்கையறிவு சேர்க்கைக்குத் தக்கதாய் உண்டாவதென்ப துண்மை. இதுபற்றி சீர்படவேண்டிய ஒவ்வொருவர்களும் சன்மார்க்கத்தை மேவவேண்டு மென்றும், நல்லோரை நாடவேண்டுமென்றும் தீயாரை, விட்டகலவேண்டுமென்றும் பண்டைக்காலத் தான்றோர் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். பகுத்தறிவு பழக்கத்திற் கேற்றபடி திருந்துந் தன்மையாலே பகுத்தறிவு மக்களிடத்தில் இயல்பாக இல்லை யென்று சாதிப்பது தர்க்கலட்சணமாகுமா? எங்ஙனமெனின் “இணக்க மறிந்திணங்கு” எனக்கூறிய ஆன்றோர்வசன மின்னது நல்லிணக்கமென்றும் சங்கமென்றும் இன்னதை அஃதல்ல என்றும் ஆதியில் அறிந்து கொள்வதற்கு பகுத்தறியுமுணர்ச்சி ஒவ்வொருவர்களுக்கும் அத்தியாவசியகமாம். “வித்தில்லா சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை” எனக்கூறுமாறு மனிதர்களுக்கு ஆதிதொட்டு இயல்பாக இல்லாத ஓர் தத்துவம் இடையிலுண்டா தலில்லை. பின்னர் பகுத்தறிவு எனும் தத்துவம் சுபாவத்தில் சமட்டிரூபமாயிருந்து பின்சேர்க்கையால் பழக்கம் என்பதற் கேற்ற பிரகாரம் பலமுறுகிறதென சொல்வதே சரியாம். பகுத்தறிவு முற்றுமேயில்லை சார்பினாற்றான் உண்டாகிற தென்பதை வாதிப்பவர்கள் விளக்கிக் காண்பிப்பார்களாக. உலகத்தில் அறிவைவிட உயர்ந்தபொருள் யாதொன்று மில்லை. விலையேற்றமுள்ள நவரத்தினங்கள்பொன் முதலிய லோகவகைகளும் அறிவிற்கு இணையாகா. நீராவியந்திரம் மின்சாரத்தபால் முதலிய மிக்க அதிசயமான ஏற்பாடுகளெல்லாம் அவற்றைக் கண்டுபிடித்தவர்களினது அறிவின் திட்பநுட்பத்தை விள

க்கிக் காண்பிக்கின்றன வன்றே? அஃதின்றி அவர்களின் செல்வம் குலமுதலியவவற்றை சிரேஷ்டமாய்க் காண்பிக்க வில்லையோ? ஆனது பற்றி அறிவே பிரதானப்பொருளென்பதும், மற்றவைக ளவ்வளவு சிறப்புடையன வல்ல வென்றுரைப்ப தற்குந் தடையுண்டோ? அறிவாளர்களுக்குச் சொந்த தேசமென்று மன்னிய தேசமென்று மில்லை. அறிவுளோர்க்கு எல்லாத் தேசங்களும் சொந்த தேசமே. அவர்களுக்குப் பகைவரென்றும் சிநேகரென்று மில்லையே. அறிவாளர்கள் நடந்து கொள்ளும் சாதுரிய அறிவால்எல்லாரும் அவர்களுக்கு நட்புள்ளவர்களா யிருப்பார்க ளன்றே? இது பற்றியே செந்நாப்போதரும் "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா, னட்பாங் கிழமைதரும்" என கூறியுள்ளார்.

**சீகாளத்தி புராணம்**

"பொன்றலி நட்பினுக்கு
புணர்வோடு பழகல்வேண்டா,
நின்றநல் லுணர்ச்சிதானே
நிறைக்குமென் றுணர்ந்தநல்லீர்"

என்றதும் அதனை அறிவுடையவர்களின் நேசத்தையாவரும் விரும்புவார்கள். அரசனும் அவனுடைய சிநேகத்தை விரும்பி வேண்டியவற்றைச் சம்மானஞ் செய்வானன்றே? "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என ஆன்றோர் கூறியுள்ளார்கள். அறிவுடையோர்கள் எவ்வித ஆபத்து வரினும் அதனின்றும் விலக்கிக் கொள்வார்கள். அறிவுடை யோர்களை வெல்லுவதற்கு ஒருவராலும் முடியாதென்பது திண்ணம். நீரையுடைய ஆறானது தன்னை அடைந்த பொருளைப் பெருஞ்சமுத்திரத்திற் சேர்ப்பது போல அறிவானது ஒருவனை அடைதற்கரிய மேனிலையிற் சேர்க்கின்ற தன்றோ?

சகல வளங்களையுமுடைய தேசமாயினும் அறிவாளரில்லாவிடத்து அதுதேசமாகுமா? இதுபற்றி "சான்றோரில்லாத் தொல் பதியிருத்தலிற், றேன்றேர்குறவர் தேய நன்றே" என்று மேதாவிகள் கூறிய வசனமிங்கு அறியத்தக்கது. மக்களின் அறிவு சிறுபான்மை யியற்கையாயினும் பெரும்பாலும் மக்களின் அறிவு பெரும்பான்மை தாங்கொண்ட மக்களின் சேர்க்கைக்குத் தக்கவா றுண்டா மென்பதே ஏற்புடைத்தாகும். இயற்கையுஞ் செயற்கையுஞ் சேர்ந்த சமூகமே மக்களின் அறிவாம். சரீரம் வளரவளர மூளை விர்த்தியாகி அறிவு விர்த்தியடைகின்ற தல்லவா? மக்கள்யாவரும் ஒரேதன்மையினராக விருந்தும் அநேகர் தீவிரமான அறிவுடையோர்களாகவும் அநேகர் அஃதில்லாராகவுமிருக்கக்காண்கிறோம். அவ்வாறிருப்பதற்குக் காரணம் யாதென்பதை ஆராயின் மக்களின் மூளைக்குத்தக்கபடி அறிவும் பொருந்தியிருக்கு மென்பதே நியாயமாம். மக்கள் தாம் தாம் பழக்கத்திற்குத் தக்கவாறு அறிவுடையரா வரென்பது பிரத்தியட்சப் பிரமாணமன்றோ ? இவ்வா றுண்டாகு மறிவே சாதாரணமாம். இச் சாதாரண அறிவானது மக்களெவர்களிடத்தும் விளங்குவதாம். இச் சாதாரண அறிவினின்று தோன்றுவதே தீவிர அறிவாம். இத்தீவிர அறிவே ஒவ்வொன்றனையும் பகுத்துணருமாற்றலுடையதாம். இத் தீவிர அறிவானது இன்றியமையாச் சிறப்புடைத்து. இத்தீவிர அறிவு கல்வியாலன்றி வேறெவ்விதத்தானும் எய்தப் பெறுதென்பதே கற்றறிந்த மேலோரின் கொள்கையாம். "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத்தூறு மறிவு." என்றார் பொய்யில் புலவர். தீவிர அறிவே ஒரு பொருளின் தத்துவத்தைச் சந்தேகமற உணரத்தக்கதாம். நாயனாரும் "எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருண், மெய்ப்பொருள் காண்ப தறிவு." எனக் கூறினர்கள்,

ஆகலின் இஞ்ஞான்றெம்மிறை ஸ்ரீவிஶ்வப்பிரமத்தின் பெருங்கருணை நலத்தால் அறிவை யபிவிர்த்தி செய்யும் பொருட்டாகத் தோன்றிய நம் விஶ்வகர்ம குலோபகாரியும், நம்மவரீடேறத்தக்கதாய நற்பல



THE REGISTRAR OF BOOKS ... MADRAS

னளித்து பேரறிவைப் பரப்பி சுகுணத்தை விருத்தியாக்கி வேதாகம புராணேதிகாச பெருங்கருத்துக்களைத்தந்து நங்குலச் சிறார்களுக்குப் பிராமணத்துவத்தை வெளிப்படுத்தி நம்மவரைக் களிக்கச் செய்து நங்குழவிகளையு மேன்மைப்படுத்தி வனையரையும் அறிவில் அபிவிருத்தி யுடையாராக்கி, நம்மெளியவரையும் ஈடேற்றி நற்போத கருத்தை வெளியிடும் வேதாத்தியயனபாடசாலையும் பெரும்பயனளித்துப் பல்லாண்டிப் பாரினிற் பரிவுடன்வாழ எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்யாற்பன்முறை நமஸ்கரிக்கின்றனன். சுபம்.

குறிப்பு:—இவ்வியாசத்தினைநம்மவர்கள் மீதுள அன்பின் மிகுதியால் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளின் பேருதவியைக் கொண்டும் பிறருதவியைக்கொண்டும் என் சிற்றறிவிற் கெட்டியவரை ஒருவாறு கூட்டியுங் குறைத்தும் எழுதிவெளிப்படுத்தியுள்ளேன். இதனைத் தமிழுலகம் பொறுக்குமாறு பணிகின்றனன்.

ஏ. முத்துக்குமாரஸ்வாமி யாசாரி,
செந்தமிழ் மாணவன்.
பறங்கிப்பேட்டை.

## மநநிலை.

அவயவமுடையதாய், அழிவு பாடுறுவதாய், அரக்குச் சுவர்ணம் முதலியவற்றைப்போல அளவிறந்த சங்கற்பவடிவ பரிணமயோக்யத்திரவியம் மனமாம். அது சம்சயவடிவ சங்கற்பத்தையும், நிச்சய வடிவ சங்கற்பத்தையும், யான் எனதென்னும் அபிமானவடிவசங்கற்பத்தையும், யாதாவதொன்றைச் சிந்திப்பது வடிவ சங்கற்பத்தையும் உடைத்தாயிருப்பது பற்றி, முறையே மனம்,புத்தி, அகங்காரம்,சித்தமென்று சொல்லப்படுகின்றது. அது பிரகாசவடிவ சத்துவகுணம், பிரவிர்த்திவடிவ ரஜோகுணம், மோகவடிவ தமோகுணமென்னும் முக்குணங்களையு முடையதாம். முக்கூறுடைய நெரிஞ்சிமுள் யாதாவதொரு கூற்றை மேலாக உடைத்தாயிருப்பதுபோல, மனமும் மேற்கூறிய குணங்களுள் யாதாவதொன்றை மேலாகவுடைத்தா யிருப்பதாம். அதனிடத்துச் சத்துவகுணம் மேற்பட்டிருக்கும்போது அன்பு அருள் ஆத்மசாஸ்திர விசாரம் முதலியன உண்டாவனவாம் ; ரஜோகுணம் மேம்பட்டிருக்கும் போது உலகவாசனை தேகவாசனை சாஸ்திரவாசனை என்பன உண்டாவனவாம் ; தமோகுணம் மேம்பட்டிருக்கும்போது இடம்பம், கெர்வம், அகங்காத அகங்காரம், காமம்,வெகுளி, கடும்பற்றுள்ளம் (லோபம்), அவிவேகம், ஆலஸ்யம், பயம் முதலியன உண்டாவனவாம்.

சத்துவகுணத்தின் பயன். மோக்ஷசாதனமாகவும், ரஜோகுண தமோகுணங்களின்பயன் பந்தசாதனமாகவும் இருத்தலின் சத்துவகுணம், மிகுவதற்கேதுவாய நல்லாரிணக்கம், நற்சிவபூசை, ஞானசாஸ்திர ஆராச்சிமுதலியவற்றை அத்தியாவசியகமாகச் செய்து வரல்வேண்டும். இவற்றை உறுதிப் பாடாகச்செய்து வந்தால் மழைக்காலத்துச் சுரைக்கொடி மிகவிரைவாகவளர்வதுபோல, சத்துவகுணம் மிகவிரைவாக வளர்ந்துவருவதாம். உபநிடதம் கூறும் சிருஷ்டிக்கிரமப்படி மனம் சத்துவகுணமுடையதாயிருப்பினும், ஆற்று நீரோட்டம் போலப்பிரவாக அநாதியாகவரும் ஜன்மாந்திரங்களிற்செய்த தீய கர்மங்களின் பயனாக ரஜோகுணமும், தமோகுணமும் வெண்கலிங்கத்தில் (வெள்ளைவஸ்திரத்தில்) சாம்பல் முதலியவற்றின் சம்பந்தத்தால் அழுக்கமைவதுபோல அம் மனத்தின்கண் அமைகின்றன.

அக்கலிங்கத்தைத் துவைத்த விடத்து அதன்கண்ணுள்ள மாசுநீங்குதலும்,உள்ள வெண்மை வெளிப்படுதலும் பிரசித்தமாமன்றோ? அங்ஙனமே சத்துவகுணம் மேம்படுவதற்குச் சாதனமான சாஸ்திர

ய்ச்சி முதலியவற்றைச் செய்யுமிடத்து மனத்தின்கண்ணுள்ள ரஜோகுணமும், தமோகுணமும் நீங்குதலும் உள்ளசத்துவகுணம் விளங்குதலும் சித்தியாம். சத்துவகுணம் மிகமேலிட்டு ரஜோகுணமும் தமோகுணமும் மிகக்கீழ்ப்பட்டுள்ள மனந்தான் மோக்ஷசாதனமனமாம்.

இம்மன முடையவர் தாம் இப்பிறப்பிலேயே இனிப்பிறவாநிலையையடைவதற்கு ஏற்ற அதிகாரியாவர். மனத்தின் ஒருமைப்பாட்டை விரும்புகின்றவர் மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்னும் நான்குகுணமும் தமக்குறவாக ஒழுகல் வேண்டும்.

சாதுபுருடர்களின் சிநேகமே மைத்திரியாம்; துக்கிகளிடத் துண்டாகும் இரக்கமே கருணையாம்; நற்கருமங்களைச் செய்வார்மீதுண்டாகும் சந்தோஷமே முதிதையாம்; பாவகர்மங்களைச் செய்வார்மீது ராகத் துவேஷமில்லாதிருப்பது உபேக்ஷையாம். இந்நான்குகுணங்களும் எவரிடத்துப் பூரணமாக இருக்கின்றனவோ அவர்சத்துவகுண மனத்தை யுடையவராயிருப்பர். அவர்தாம் சாதுக்களென்று சொல்லுதற்குரியர், அவர்மனம் எப்போதும் கலங்குதலின்றி ஒருமுகப் பட்டே இருப்பதாம். இவ்வொருமுகப்பட்ட மநநிலையை நம்மனோர்பெறப்பெரிதும் முயலுதல் வேண்டும். முயலுமாறு நம்மீது எல்லாம் வல்லஇறைவன் கருணைபுரிவாராக.

" மனதுசத்துவசொரூப மற்றிரண்டும் வந்துகலந்தனவவற்றை மாற்றினாற்போந், தனது சன்மார்க்கத்தைவிடா திருந்தபோது தாமதமு மிராசதமுஞ் சமிக்கும் பின்னைக், கனபரிணமஞ்சலனம் போம் போனக்கால் களங்கமற்று நின்றவாகாயம்போலும், நினதுளமப் படியாமப் பிரமத்தென்றுப் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந்தானே.

என்னும் கைவல்ய நவநீதச் செய்யுள் இங்கு கவனிக்கத்தற்குரியதாம்.

**கோ- வடிவேலு செட்டியார்.**

## தொழிற் குறிப்புகள்.

### இரும்பு சுத்திசெய்தல்.

7. இரும்பு, எழுகு சாமான்களில் துருபிடியாதிருக்க ; இரும்பு அரத்தூளை தண்ணீர் கலந்த பாஸ்பாரிக் ஆசிட்டில் (Phosphoric acid) போட்டு பின் அந்த திராவகத் தண்ணீரில் ஷை சாமான்களை இரண்டொருமணிநேரம் கொதிக்கவைத்து சுத்தமாய் அலம்பினால் பசுமையோடு கூடிய கறுப்புநிறமாயிருக்கும். லின்சீடு அல்லது பராபின் (Linseed or Praffin Oil) எண்ணையிட்டுத் துடைக்க கருநீல வர்ணமாகும். பிறகு இவற்றில் துரு சுலபத்தில் பிடியாது.

8. மெருகிட்ட வார்ப்பிட இரும்பு சாமான்களின்பேரில்எலிமிச்சம்பழரசத்தைப் பூசினால் கருவெங்கலவர்ணமாகும். இதன்மேல் அரக்கு வார்னிஷ் பூச அழகாய் பிரகாசிப்பதோடு துரு பிடியாது.

9. வார்ப்பு இரும்புகுழாய்கள் முதலிய சிறிய சாமான்கள் முதலியவற்றின்மேல் கருப்பு வர்ணம் பூச :—

நிலக்கரியினின்று மெடுக்கப் படுகின்ற கீல் (Pitch) யை 149oC சூட்டில் உருக்கிய பின் ஷை சாமான்களை ஏறக்குறைய ஒருமணி நேரம் அதில் போட்டு, அவற்றில் அதே சூடு உண்டாகும் வரையில் வைத்திருந்து, பின்னர் எடுத்து, அவற்றின்மேல் பற்றிய வர்ணம் சமகனப்படும்படி சாய்த்து வைக்கவும்.

10. வார்ப்பு இரும்பு வெங்கலம்போல் பிரகாசிக்கச்செய்ய :—

ஷை சாமான்களை வெண்மையாய் சுத்தி செய்தபிறகு அவற்றின்பேரில் விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட யாதாமொரு எண்ணையை மேலே ஒரே கனமாக தடவி உலையில்வைத்து சூடேற்றி துலக்க கபில வர்ணமான பளபளப்பை அடைகிறது.



11. கீழே குறித்த உலோகங்களை சுத்தி செய்ய முதலில் தண்ணீரில் ஒவ்வொரு திராவகத்தையும் தனித்தனியாக் ஒன்றின்பின் ஒன்றாக சேர்க்கவேண்டும். பீங்கான் அல்லது மண்சட்டியில் சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

| உலோகம். | தண்ணீர். | நைட்ரிக் ஆசிட். | சல்ப்பூரிக் ஆசிட். | முராட்டிக் ஆசிட். |
|---|---|---|---|---|
| இரும்பு | 100 | 3 | 8 | 2 |
| வார்ப்பு இரும்பு | 100 | 3 | 12 | 3 |
| செம்பு, பித்தளை | 100 | 50 | 100 | 2 |
| நாகம் | 100 | — | 10 | — |
| வெள்ளி | 100 | 10 | — | — |

இதில் குறிக்குமெண்கள் அவ்வவற்றில் அவ்வளவு பாகமென தெரிக.

12. செம்பு, பித்தளை, நிக்கில், ஜர்மன் வெள்ளி, வெள்ளிசாமான்களில் களிம்புப் பிடித்து பச்சையாயும் அழுக்காயுமிருந்தால் சுத்திசெய்ய :—

ஷை உலோககாசுகளையும் மற்றும் சிறிய சாமான்களையும் ஓர் புதிய மண் சட்டியில் போட்டு ஜலம்விட்டு அதில் மெல்லிய சீயக்காய் தூளையும், கால் பாகம் உப்பையும் போட்டு கொதிக்கவைத்து அலம்பி சுத்தி செய்யவும்.

***

13. இரும்பின்மேல் செம்புமுலாம் செய்ய :—

3- அவுன்ஸ் மயில்துத்தத்தைத் தண்ணீரில் கரைத்துக்கொண்டு அரைக்கால் அவுன்ஸ் சல்பூரிக் ஆசிட் சேர்க்கவும். இதில் சுத்திசெய்த இரும்பை நனைத் தெடுத்து, நல்லதண்ணீரில் கழுவ, செம்பு பூசியதாகிறது.

***

14. இரும்பை ஒருநிமிஷத்தில்உருக்க- இரும்பை வெண்மையாய்ப் பழுக்கக் காய்ச்சி கெந்தகத்தைப் போடவும், உடனே மணிமணியாய் உருளும், திருஷ்டாந்தமாக ஓர் மெல்லிய கம்பி துண்டை உருக்கிப் பார்க்கலாம்.

***

வார்ப்பு இரும்பை கடினப்படுத்த :—

| | | |
|---|---|---|
| உப்பு | 86 | அவுன்ஸ் |
| வெடியுப்பு | 4 | ,, |
| ப்ரசியேட் பொட்டாஷ் | 2 | ,, |
| சைனேட் பொட்டாஷ் | 4 | ,, |
| சல்பூரிக்ஆசிட் | 3 | ,, |

இவற்றை 5 கியாலன் மழை தண்ணீரில் கரைத்து, வைத்துக் கொண்டபின் வார்ப்பு இரும்பை பழுக்கக்காய்ச்சி இந்த சேர்மான தண்ணீரில் தோய்க்கவும். ஒரு தடவையில் போதுமான கடின முண்டாகாவிடின் மறுப்படியும் காய்ச்சிதோய்க்கவும்.

***

15. வார்ப்பு இரும்பை அடி யிரும்பு போல நயப்படுத்த :—

1. வார்ப்பு இரும்பை பழுக்கக்காய்ச்சி தண்ணீரில் தோய்த்து, மறுபடியும் காய்ச்சி உலைச்சாம்பலில் சொருகி, ஆறியபின் எடுக்கவும்.

2. ஷை. இரும்பை பழுக்கக் காய்ச்சி நிழலில் வைக்க அது கருநிறமாகிவருகை யில் பூந்திக்கொட்டை (Soap nut) ஊரிய தண்ணீரில் தோய்க்கவும்.

***

16. மட்டஇரும்பை உறுதிப்படுத்த :—

ஒன்றரைபாகம் கருமாங்கனீஸ் (Manganese diosoide), ஆறுபாகம் அன்ன பேதி அல்லது மயில் துத்தம், ஆறுபாகம் உப்பு இவற்றை மழை ஜலத்தில் நன்றாய் கரைத்து தண்ணீரெல்லாம் வற்றும்படி காய்ச்சி, தங்கிய உப்பை தூள்செய்து கொஞ்சம் புழுதி மண்ணுடன் சேர்த்து வைத்துக்கொள்ளவும். இரும்பைக்காய்ச்சி இந்த மண்ணில் செலுத்த, அதிலிருக்கும் அசுத்தம் நீக்கி, குதிரைலாட ஆணிகள் செய்யக்கூடிய கடினமாகிறது.

***

17. இரும்பினின்று எழுகை கண்டுபிடிக்கும் விதம் :—

நைட்டிரிக் ஆசிட்பட்டவுடன் கருத்தால் எழுகென்றும், எவ்வளவுக்கெவ்வளவு கருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு கடினமான எழுகென்றுங் கொள்ளவும். நல்ல எழுகு, மெதுவான ஸ்திதியில் எங்கும் ஒரேவிதமான கருநீலமாய்த் தோன்றும், கடின ஸ்திதியில் எங்கு மொரேவிதமான மழுங்கின வெண்மையாய்த் தோன்றும், வெடித்ததுபோலவும் கோடுகோடாகவும் தோன்றின் அது நல்ல எழுகல்ல. நல்ல எழுகை வெண்மை நிறமாய் பழுக்க காய்ச்சினாலே துண்டித்துப் போகும் ஆனால் சுமாராய் சிவக்கக் காய்ச்சினால் பட்டறையில் வைத்து அடித்து நீட்டலாம்.

**குலோபகாரப்பிரியன்.**

53-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## பிரதமபோதம்.

நமது ஜாதியில்மட்டும் தற்காலம் ஜாதி யகங்காரம் மிக மீசுரமாய் வியாபிக்கலா யின.) இப்பிரஸ்தாபம், நமது சக்ரவர்த்தி யின் இருக்கையான ஐரோப்பா வரையி லுஞ்சென்றிருக்கிறதாக வதந், திகுறைந்த பாட்டைக்காணோம். சமஸ்கிருதம்படித்த கல்விமான்களெல்லாம் வேதங்கள், சாஸ் திரங்கள் முதலியவற்றை உண்டுபண்ணிய வர் நமது 'விஸ்வப்பிரம்மா' தான் என்று கண்டுகொண்டார்கள். அவற்றைநிரூபிப்ப தற்கு ஆதாரமான சுலோகங்களை யெல் லாம் மனப்பாடம் பண்ணிவிட்டார்கள். இன்னுங் கிரந்தங்களை எங்லாங் கிண்டலா னார்கள். தமிழ்க் கல்விமான்களெல்லாம் பாகவதம், இராமாயணம், பாரதம், புரா ணங்கள் முதலிய நூற்களில் தமது ஜாதி சம்பந்தமாய்ப் பேசும் எழுத்துக்களையும் விடாமற் கண்டுகொண்டார்கள். "புலவர் பாடுநரே கூத்தர் புதனும்பர்கவி கண்ணா ளர்" என்று சூடாமணிநிகண்டில் 'புலவர்' என்ற நமக்கொரு நாமம் இருப்பதையுங் கண்டெடுத்துப் பிரயோகித்துக் காட்டலா னார்கள். படிப்பற்றபாமரர்களுக்கோ உலக சம்ரக்ஷணைக்கு இன்றியமையாத பிரத்தி யக்ஷ தொழிற்பெருமை கைகண்டபலனாக இருக்கவே யிருக்கின்றது. ஆங்கிலக்கல்வி மான்களோ, சைனா முதலிய தேசத்தார் களையும் தம் மினத்தாரெனச் சாற்றலானா ர்கள். இத்தகைய பெருமுயற்சிகளை ஒன் றுக்கு அனந்தம்பேர்கள் அல்லும்பகலும் அனவரதமும் அநேக கவலையாய் அயர் விலா உழைப்புடன் பாடுபட்டதையும், பாடுபடு கின்றதையும், நிஷ்பிரயோஜன மென்று நினைத்துத் தள்ளுதற்கு முடிய வில்லையே. அந்தோ! நம்மவர்களைப் பிணி த்திருக்கும் ஜாதி யகங்காரத்தின் வலிமை எளிமையைக்குறித்து படிப்புவாசனை யுள் ளவரிடத்திலும், படிப்புவாசனை யில்லவ ரிடத்திலும் உள்ள தாரதம்மியத்தைப் பார்க்கும்போது படிப்புவாசனை யுள்ளவ ரிடத்திலேயே மிகுதியாகக் காணப்படு கின்றதே. இந்த விபரீதபாவனைக்கா, அவ ர்கள்படித்தது? படிப்பிருந்தால்அவைஇவ ற்றிற்குத் தானுவந்துதவும். நான் இந் தந்தக் கிரந்தங்களில் ஜாதி விஷயமாய் இன்னென்ன ஆதாரங்களைக் கண்டுபிடித் திருக்கின்றேன். நான் இந்தந்தக் கூட்டங் களிற் சென்று நமது குலத்தைப்பற்றிப் புகழ்ந்து பேசியிருக்கிறேன். நான் நீங்கள் பிராமணா ரல்லவென்று சொல்லிய இந்தந் தப் பிராமணர்களை இந்தந்தவாறு பேசி வாயடக்கி யிருக்கிறேன். என்று இன்னும் பலவாறுசப் படிப்பாளரும் படிப்பற்ற பத ர்களும் அண்டகடாகம் வெடிக்கப் பேசிக் களித்து ஆனந்த நிர்த்தனம் புரிகின்றார் களே இது என்ன பெருமை? இது என்ன அகங்காரம்? நமது பஹா ஜனங்களின் பொதுநீதிதா னிவ்வளவென்றால் நாகரிக மலிந்து கிடக்கும் பெரிய நகரங்களில் வசி க்கும் நங்குலத்தார்களுக்காவது அவ்வுண ர்ச்சி சிறிது தட்டியிருக்கின்றதா என்று பார்த்தாலும் அவர்களிடத்திலும் காணப் படவில்லை. அவர்கள் தொல்லைகளேதோ, அவர்கள் மொல்லைகளேதோ, அவர்கள் காரியங்களேதோ, அவர்கள் வீரியங்க ளேதோ, அவர்கள் நடிப்புகளேதோ, அவர்கள் பிடிப்புகளேதோ, அவற்றிலே யேதான் அவர்கள் ஓயாத கண்ணுங் கரு த்தும், நகரங்களில் அநேக தேவாலயங்க ளிருக்கின்றன. அவ்வாலயங்கள் ஒவ்வொ ன்றினும் தினந்தோறும் நிகழும் திரிகால பூஜைகளிலும், மாதங்கடோறும் நிகழும் மஹோற்சவங்களிலும், திரள் திரளான ஜனங்கள் எம்பிரானது திருவருளாகிய செல்வத்தைக் கொள்ளைகொள்ள நயந்து பணிவோரும் பணி துணிவோரும் பத மணிவோருந் துயர் தணிவோருமாய் இரு க்கும் வெகு ஜனக்கூட்டத்துள் நமது சில மாதிரி புருஷர்களின் வரவு காணவேண் டுமே கடவுள் தரிசனங் கிடைத்தாலும் அவ்விடத்தில் நம்மவர் தரிசனந்தான் அரு மையாக இருக்கின்றது. தொடரும்.

**வரகவி. S. சுந்தரம்,**
**மார்க்கயன்கோட்டை.**

47-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## ஆத்துமக் கியானத்தைப்பற்றி நடந்த சம்பாஷணை.

கடைசியில் அவர் அருணன் புத்திரரா கிய உத்தாலகரை நோக்கி, ஓகோதமன்சந் ததியாரே! ஆத்மாவாகநீர் யாரைத்தொழு கின்றீர்என்றார், அதற்கவர்ஓவணங்கப்பெ ற்றஅரசனே நீர்யாரை ஆன்மாவாகத்தொ ழுகின்றீரோ, அந்தச்சர்வபரி பூரணசுயம் பிரகாசவஸ்து வாகிய அசையாத பிரிதி வைத்தொழுகிறேன். ஆகையால்நீரும் சந் ததியோடும், கால் நடைகளோடும். நிலை யில் நிற்கின்றீர். போஜனபட்சணஞ் செய் கின்றீர். காதற்பொருளைக் காணுகின்றீர். யாரார் சர்வபரிபூரண ஆன்மாவாக இதை த்தொழுகின்றார்களோ அவர்களெல்லாம் இப்படிப்பட்ட அனுபவங்களை யடைகிறார் கள். காதற்பொருளைக்காண்கின்றார்கள். குடும்பத்தில் சமயாசார வனுஷ்டானங்களைப் பெறுகிறார்கள். ஆனால் இந்த வடிவங்களே ஆன்மாவினுடைய பாதங்களா இருக்கின் றனவென்று விளம்பினார். அரசன்உமதுபா தங்கள் முடமாய்விட்டால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றார்.

அவர்களனைவரையும் அரசன் நோக்கிப் பொதுவாக இந்தச் சர்வ பரிபூரண ஆன் மாவைத் தனித்தனி ஒவ்வொரு வஸ்து வாயிருப்பதாய் நீங்கள் ஆலோசித்துத் தனித்தனியான அனுபவத்தில் பங்குகொ ள்ளுகிறீர்கள். அதன் வெளிப்படையான கூறுகளாகக்காண்பதும். மனச்சாட்சியால்

பூகிப்பதுமாகிய அதை யாரார் சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்ருரோ, அவர் எல்லா உலகங்களிலும், எல்லாவஸ்துக்களிலும், எல்லா ஆத்துமாக்களிலும் ஆகாரத்தை யனுபவிக்கிருர். அவருடைய சிரசு இந்தச் சர்வ பரிபூரண ஆத்துமாவின், சிரசைப்போலப் பிரகாசமுள்ளதாயிருக்குன்றது. அவருடைய கண் சமமாகப் பலவிதப்பட் டிருக்கின்றது. அவருடைய உயிர்ப்பு சமமாகப் பாவி யிருக்கின்றது. அவருடைய உடல் ஏராளமானதா யிருக்கின்றது. அவருடையஉடல்ஏராளமானதா யிருக்கின்றது. அடிவயிறு நிறைந்ததாக இருக்கின்றது. அவருடையபாதங்கள்பூமியாக இருக்கின்றது. அவருடைய மார்பு பலிபீடமாக இருக்கின்றது. அவருடைய மயிர் குசப்புல்லாக இருக்கின்றது. அவருடைய இருதயம் கிரகாக்கினியாக இருக்கின்றது. அவருடையமனது செந்தீயின் சுவாலையாயிருக்கின்றது. அவருடையவாய் பலியாக இருக்கின்றது என்று கூறினர்.

அவர்க்கு முதலில்கிடைக்கிற போஜனம், நைவேதனம்செய்யப்படவேண்டும். அவர் செய்கிற முதல் நைவேதனம் சித்தியாவதாகவென்கிறமொழிகளோடு ஆகுதிசெய்யப்படவேண்டும், இவ்விதமாக உயிர்ப்பும் திருப்தி யடைகின்றது. அதில் நேத்திரம் திருப்தியடைகின்றது, நேத்திரத்தில் சூரியன் திருப்தி யடைகிருன். சூரியனில் ஆகாயம் திருப்தி யடைகின்றது. ஆகாயத்தில்வானமும், சூரியனும், அவைகளைச்சார்ந்தமற்றவைகளும், பூரணமடைகின்றன. அதற்குப்பிற்பாடு, உண்டியைப் புசிக்கிறவர் சந்ததியோடும் கால்நடைகளோடும் பூரணமாய்த்திருப்தி யடைகிருர், உண்டியினுல் சத்துவமுண்டாகின்றது. தெய்வ ஆராதனைகளால் சிறப்பை யடைகிருர்.

ஆனுல் சர்வபரிபூரண ஆன்மாவை யறியாதவன் அக்கினிக்கு ஆகுதி செய்கிறது. ஒருவன் சாம்பரில் கட்டைக்கரிகளை எறிவதற்குச்சமானமாக இருக்கின்றது. ஆத்துமக்கியான மடைந்தவன் நிவேதனஞ்செய்வது எல்லா உலகங்களிலும், எல்லா வஸ்துக்களிலும்எல்லா ஆத்துமாக்களிலும் ஆகுதி செய்தவனுகிருன். அக்கினிக்குள்ளெறிகிற உலர்ந்தபுல்நுனி வேகமாகப்பற்றிக்கொள்வதுபோல அந்தமனிதனுடைய பாபங்களெல்லாம்.நசிக்கப்பட்டுப்போகின்றன. இதையறிந்தவன் நிவேதனத் தின் மீதியை மனதறிந்து சண்டாளனுக்குக் கொடுத்தபோதிலும் சர்வபரிபூரண ஆத்மாவுக்கு மாத்திரம் நிவேதனம் செய்ய வேண்டும். ஏனென்ருல் இந்தவிஷயத்தில் சொல்லப்பட்டவசனத்திலேஇந்தவுலகத்திபசியுள்ள குழந்தைகள் அவரவர்கள் தாயைச்சுற்றிக்கொண்டு வருத்துவதுபோல எல்லா ஜீவர்களும், தைவ நிவேதனத்தையும், ஆராதனைகளையும் காற்றுக்கொண்டிருக்கிருர்களெனவும், சாமவேதத்திலுள்ள சாந்தோக்கிய உபநிடதம், ஐந்தாவது அத்தியாயத்தில் ஒருவிசேஷ பிரசங்கமாகச் சொல்லப்பட்டிருப்பதாக வெளிவந்திருக்கிற வேதசனங்கள்முறையிடுகின்றன.

V. மௌனதரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல்கௌன்சிலர்.
பழனிஸ்தலம.

57-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## விஸ்வகர்ம வம்ச சாகா சூத்திர விஷயம்.

**தர்மசாஸ்திரோதக்ஷ:**

ஸ்வகம் சூத்திரம் பரித்யஜ்ய
யதந்யத் குரு தேதுவிஜ:
அக்ஞாநாத தவாக்ஞாநாத்
யக்தேநப திதோபவேத்.

தெரிந்தாவது தெரியாமலாவது தன்னுடைய சூத்திரங்களைத் தள்ளிப்போட்டு அன்னிய சூத்திரத்தின் வழியாக கர்மானுஷ்டானங்களை நடத்துகிற துவிஜன் பதிதனுவானென்றும்; கண்டோக்தியாக



ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் நம்மவர்கள் சாகா சூத்திரங்களைப்பற்றியெழுதிய புஸ்தகங்களில் சாம சாகைக்கு போதாயன சூத்திரமும், அதர்வண சாகைக்கு ரௌப்பியாயன சூத்திரமும் எழுதியிருக்கிருர்கள்.

அதாவது போதாயனர் யஜுர்வேதத்துக்கு கிருகியசூத்திரம் செய்திருக்கிருர். சாமவேதத்துக்கு திராஹியாயனர் கிருகிய சூத்திரம் செய்திருக்கிருர். இவ்விஷயத்தினுல் சாமவேதத்துக்கு போதாயன சூத்திரம் வரவேமாட்டா தென்பதுமாத்திரமல்ல. அந்தப்படி சொல்வது மாத்திரமல்ல. அந்தப்படி சொல்வது முற்றிலும் பிசகாகவு மிருக்கிறது. இதற்குசுருக்கமாக ஓர் திருஷ்டாந்தம் அதாவது யஜுர்வேதிகளில் போதாயன சூத்திரர்காரர் போதாயன அமாவாஸ்யை யனுஷ்டிக்கிறதேயன்றி சாமவேதிகளுக்கு போதாயன அமாவாஸ்யை யனுஷ்டான மில்லை.

சாமவேதத்துக்கு திராஹியாயனரும், ஜைமினியும், சாட்டியாயனரும், கிருகிய சூத்திரம் செய்திருக்கிறதினு லவர்கள் அந்த வேதத்துக்கு சூத்திரக்கர்த்தர்களை யல்லாமல்,போதாயனர் சாமவேதத்துக்கு சூத்திரகர்த்தரென்று சொல்வது சாஸ்திர விரோதமல்லவா?

தவிரவும் காத்தியாயனர் சுக்கில யஜுர் வேதத்துக்கு கிருகிய சூத்திரம் செய்திருக்கிருரேயன்றி, அதர்வண வேதத்துக்கு சூத்திரம் செய்யவில்லை. அதனுல் சுக்கில யஜுர்வேதிகளுக்கு காத்தியாயன சூத்திரமேயன்றி, அதர்வணவேதிகளுக்கு காத்தியாயன சூத்திரமென்று சொல்வது ஆக்ஷேபமேயாம்.

பிரணவ வேதத்துக்கு சாகாசம்ஹிதா உபநிஷத் முதலியவைகளும் கிருகிய சூத்திரமும், அத்தியயனபாடமுமில்லாம லிருக்கும்போது ரௌப்பியாயன மென்ற ஓர் சூத்திரங்களின்வழியாக நடப்பித்துக்கொண்டு வருவது சாஸ்திர சம்மதமாகுமா?

இவைகளெல்லாம் சுருதி ஸ்மிருதிக்கும் கல்பசூத்திரத்துக்கும், எவளவுகோணலாகயிருக்கிறது.

விசேஷித்தும் ஆருஷேயர்க ளனுஷ்டானத்திலிருக்கிற ருக், யஜுர், சாம மென்ற மூன்று வேதத்துக்கும் உத்தரதெக்ஷிணதேசகிருகிய சூத்திரங்களாக போதாயன, ஆசுவலாயன, ஆபஸ்தம்ப, சாங்கியாயன, திராஹியாயன, கௌஷீதக, ஜைமினீய, கௌதமீய,காத்தியாயன, சத்தியாஷாட, அக்னிவேசிய, பாரத்வாச, இரண்யகேச, மாதுனீய, வைசானச, சாண்டில்லிய, வாதூல, லாட்டியாயன, அகஸ்திய, சாகவல்லிய, சாம்பவீய, சௌனகீய, கௌண்டிந்நிய, கோபிலமுதலியவைகளும், தவிரவும் புராணபட்டீயம பெபலிபட்டீய முதலான சூத்திரங்களும் காணப்படுகிறது. இந்த சூத்திரங்களுக்கு அந்தந்த சூத்திரங்கள் செய்த ரிஷியின் பெயரைப்போலாகவே சூத்திரநாமங்க ளேற்பட் டிருக்கின்றன. முன்சொல்லிய சூத்திரங்களில் ரௌப்பியாயனமென்ற பெயரைக் காணவில்லை. அதில்நாம் சொல்லப்பட்ட மற்றசூத்திரங்களின் பெயர்கள்காணப்படுகிறது.

அன்றியும் வேதசாஸ்திர இதிகாசபுராண சிற்பாகமங்களில் வேதம்நான்கென்று கோஷிக்கிறதே யல்லாமல் ஐந்தென்ற சப்தத்தைக் காணவில்லை. (சத்வாரோ வேத:) என்று தான் கற்பசூத்திரங்களிலும், மீமாம்சாதி கிரந்தங்களிலும், வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. விசேஷித்தும் விஸ்வகர்மபுராணம் அத்தியாயம் (உகூ-ல) (சதுர்வேதோ பக்ரமஞ்ச) என்று நாலுவேதமும் அத்தியயனஞ் செய்யவேண்டுமென்றும் காணுகிறது. இந்த நாலு வேதத்தையும் உபாகர்மகாலங்களில் அத்தியயனம் செய்கிருர்கள். இதில் அதர்வண வேதத்துக்கு ஆரம்ப மந்திரமாத்திர மிருக்கிறதேயல்லாமல் அதினுடைய சாகா சூத்திரங்களும், சந்தியாவந்தனங்களும், இவ்விடத்தில்காணவில்லை. உத்தரதேசங்களில் அதர்வண சாகா சூத்திர சந்தியா

வந்தனாதிகளுமிருக்கலாமென்று ஓர் லக்ஷியத்தினால் நினைக்கிறேன். அதாவது அதர்வண சம்மிதாகாண்டம் (உ0) என்றும் வாக்கியம் (௬௩ரு) என்றும் அன்வாகம் (௱) க்குமே யுண்டென்றும், சூக்தம் (எ௬0) க்குமே யுண்டென்றும் உபநிஷத்து (ரு0) க்குமே யிருக்கிறதாகவும் புலப்படுகிறது.

பிரணவ வேதத்துக்கு சம்ஹிதை, சாகை, சூத்திரம், உபநிஷத்துக்களொன்றும் காணவில்லை. ருக், யஜுர், சாமமென்ற மூன்று வேதத்திற்குசந்தியாவந்தனமும், சிரௌத சூத்திரங்களும், கிருகிய சூத்திரங்களும், உபாகர்ம முக்கியகாலம் கௌணகாலங்களும் சொல்லியிருக்கிறதேயல்லாமல் அதர்வண பிரணவ வேதங்களுக்கு சந்தியாவந்தனமும், ஸ்ரௌதசூத்திரங்களும், கிருகியசூத்திரங்களும், உபாகர்ம முக்கியகாலம் கௌணகாலங்களும் நான் பார்த்த ஸ்மிருதிகளில் சொல்லப்படவில்லை.

மூன்று வேதங்கள்தான் பிரதானமாயிருக்கிறதென்று மூலஸ்தம்பத்திலும் நாகரகண்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிற வசனம்.

அனந்தாவேத யோமத்யே
பஞ்சவேதஸ்ய நாமயோ:
அகம்மியாசைவ வேதஞ்ச
த்ரையீரத்னத்ரி வேதயோ:

வேதங்களனந்தமென்றும், அதில் ஐந்து வேதங்கள் நாமத்தோடு கூடினதென்றும், அந்த ஐந்திலொரு வேதம் பெயர் மாத்திர முள்ளதாய் நடப்பில் வரவில்லையென்றும், ஒரு வேதம் அறியப்படாததாயிருக்கிறதென்றும், மற்ற மூன்று வேதங்கள் சாகை சூத்திரங்களோடு மூன்று ரத்னங்கள்போல உலகத்தில் பரிஷ்காரமாய் பிரகாசிக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

நம்மவர்கள் அனுஷ்டிக்கவேண்டும் சோடச கர்மங்களைப்பற்றி குண்டூர் பிரம்மஸ்ரீ சேஷாசலாவதானி யவர்களெழுதிய சோடசானுக்ரமணிகா புஸ்தகத்தில் அவர்கள் கோத்திரம், அபுவனசரென்றும், சாமவேதியென்றும், திராஹியாயன சூத்திரமென்றும் எழுதி யிருக்கிறார்கள். இது சுருதிஸ்மிருதிகளுக்கு யனுசாரணையாகவே யிருக்கிறது. ஆனா லிவர்களெழுதிய சோடசகர்மங்கள் ஷெடி அவதானியவர்களின் சாகை சூத்திரங்களுக்கு உபயோகமில்லாமலிருக்கிறது அதாவது சாமமந்திரங்களும், சாமசூத்திர கர்த்தர்களான திராஹியாயனாதி சூத்திரங்களின்படியுள்ள தந்திரங்களாகவும் காணவில்லை. யஜுர்வேத ஆபஸ்தம்ப சூத்திரத்துக்கே ஏகதேசம் சரியாகவிருக்கிறது. இவர்களின் கருத்து ஐந்து சாகைக்கும் சூத்திரத்துக்கும் பொதுவாக வுபயோகப்படுத்தவேண்டுமென்றே அவதாரிகையில் கூறியிருக்கிறார்கள் ஆனதினால் நம்மவர்கள் பல சாகைகளும், பல சூத்திரங்களும்சொல்வதில் யாதுபிரயோஜனம். மேலும் அந்த புஸ்தகத்தை நம்மவர்கள் யாவரும் பார்த்து நம் ஜாதிக்கு யிதுதானுரிமைத்தானதென்று ஐந்து சாகைக்காரர்களும் பொதுவாக யனுஷ்டிப்பார்களானால் சுருதிஸ்மிருதிக்கு யெவ்வளவ ஆக்ஷேபகரமாயிருக்கிறது.

(சப்தரிஷீந்பரயேகமாஹு:) என்றால்ஏகரூபமாயிருக்கிற விஸ்வகர்மாவினாலே அத்திரி ஆங்கீரசாதிசப்தரிஷிகளுண்டானார்களென்றும், சப்தரிஷிகளும் யேகராயிருக்கிறவிஸ்வகர்மஸ்வரூபமென்றும், அர்த்தம் ஜனிக்கிறது. இந்தசுருதிக்கு யனுசரணையாக ஆங்கீரசரிஷி விஸ்வகர்ம வம்சமென்று வியாசப்புரோக்தமான ஸ்ரீகாசிகாண்டம் 86-வது அத்தியாயத்தில் விஸ்வகர்மேச லிங்கவுற்பவ சரித்திரத்தில் துவஷ்டா வொருவருளரென்றும், அவர் புத்திரர் விஸ்வகர்மாவென்றும், அவர் உபநயனஞ்செய்து வேதாத்தியயனஞ் செய்வதற்காக குருகுலவாசமும், பிக்ஷாடனமுஞ்செய்து வித்தைகளைக்கற்றுப் பின் குரு சம்பாவனைக்காக குரு முதலியவர்களின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றும்பொருட்டு வனத்தில் பிரவேசித்து விஸ்வகர்மாவாகிற்பிரம்மசாரியானவர் தன்னைத்தானே ஆலோசிக்கிறார். (தொடரும்)

ஜோஸியர்-முத்தாச்சாரியார்
மீனாக்ஷிபுரம்.

42-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## விஶ்வதபிரான்.

யாதொரு காஞ்சனபூமி வாஸர்களான பஞ்சகிருத்யாதிபர்கள் விஶ்வதலோஹிதால் சுகவாசரக்ஷணையின்பொருட்டாகோட்டைநிர்மாணஞ் செய்யவேண்டிய கைங்கர்யத்தை யடைந்தோம். அதுநம்முடைய நற்பாக்கியமே. நம்முடைய சிருஷ்டித்வமானது லோகத்தில் பிரபாவமாய் விளங்குவதற்குக்காலம்வந்ததுபோலும். இதுகாறும் லோகத்தில் வாய்ந்திராத ஒரு அற்புதக் கோட்டை நிர்மாணமாக சக்தியை யாதொரு விஶ்வேஸ்வரன் நமக்கு அருளியிருக்கலாம் ஆனதினால்தான், இந்தத்திருமொழிச்சிரவணமானோம். யாதொரு விஶ்வேஶ்வரனே திருவுருக்கொண்டு வந்தாற்போல விஶ்வதலோஹிதாள் விஜயசன்னத்தர்களாயிருப்பதால் இன்றுநம்வாசம் விஶ்வலோகத்திற்கு உவமையாகக் காரணமாயிற்று. நல்லது, விஶ்வேஸ்வரன் திருவருளை முன்னிட்டு இனிதாய் ஓர் அற்புதக் கோட்டையை நிறைவேற்றுவோம்; என்றுனந்த பரவசர்களாய் நிர்மாணிக்கத் துடங்கினார்கள். அப்படியாக.

ஜகன்மோகனப் பிரஸித்த பாராவார, விஶ்வதூத, காஞ்சனபூமௌவாஸ, இயம நிய மாத்யாதி அஷ்டாங்க யோக அணிமா சித்யாதர விஶ்வேஶ வீக்ஷண்யமுக்த குருணும் சடாக்ஷ வீக்ஷண்யப்ராப்த, வேதாத்யயன விரதாசார பிரம்ம தர்மகர்மப் பிரகிருத்ய சத்யவதன சுந்தரமுக விஶ்வக்ஞ தைவீகரூப மந்த்ர தந்த்ர சூஸ்த்ர சூஸ்த்ர ஜெகதீய சிருஷ்டி தர பஞ்சகிருத்தியாதிபர்கள் காந்தக் கோட்டையை நிர்மாணஞ் செய்தார்கள்.

பூர்வ திக்முகமான காந்தக்கற்கோட்டையையுடையதாக மாந்தை நகரத்தை நிர்மாணஞ்செய்தார்கள். அதன் காக்ஷியை சுருங்கச் சொல்வாம். எப்படி விளங்கிற்றென்றால்,

ரதச்சாலை கஜச்சாலை அஸ்வச்சாலை சகுஸ்றசாலைகளை உடையதாக சக்ராகாரவீதியானது அமைந்துள்ளது. கோட்டையோ சக்ராகாரமாய் நின்று விளங்கும். அந்த ரதச்சாலை வீதியானது, கடலில் தாக்கியுள்ளது. அந்தக் கோட்டைக்கு ஒரே வாசல்தான் உண்டு. அந்த காந்தக்கற் கோட்டைக்குள் சுற்றங்கம் விடப்பட்டு சாதாரண கோட்டைச் சக்கராகாரம் உள்ளது. அந்த பகிர்முக ஏக வாசலைத் தவிற உள் ஆறு வாசல்கள் உள்ளன. அவ்வாறு வாசல்களின்நிலையே, பஞ்சகிருத்யர்களுடைய மனை, மண்டப, அங்கசாலைகள் நிர்மாணசாலைகள் அமைந்துள்ளன. அப்பால் பஞ்சகிருத்தியர்களுடைய வாசஸ்தானங்களைக் கடந்துநின்றாலோ! கோட்டைக்கு மத்திமையான மாக்ஷிமைஸ்தானத்தின் வலபுரம் இடபுரமான இரண்டுபாரிசத்திலும், சூரிய புஷ்கரணி சந்திரபுஷ்கரணிஎன்றுஇரண்டு தடாகங்களுள்ளன. அந்த விஶ்வப்பிராம்மணர்கள் கைலாயத்திற்குச் சென்று கங்கையின் ஒருபாகத்தைக்கொணர்ந்தாற்போல, அத் தடாகங்களில் அப்புவும் சுத்தஸ்படிகமாய்வானத்தின்காக்ஷிகளைப் பிரதிபலித்து விளங்கின. அங்கு தீரபாரிசங்களில் பீடபூமிகள், பூங்காவனங்கள், தருதலவாசங்கள் மனோகரமாயிருந்தன. அத்தடாகங்களின் அப்பால் மேல் பாரிசத்தில் தென்வடல் தீர்க்கத்தில் முன்னமே கூடமென்ற கிரியானது நிர்மாணத்தின்பின் மாந்தை கூடமென்ற மகா நாமகரணம்பெற்று விளங்காநின்றது. மேல்கண்ட இரு தடாகங்களின் மத்தியில் நிர்மாணமாக்கப்பட்ட மலையானது கீழ்மேல் தீர்க்கமாய் அந்த கூடத்தை ஒட்டிநின்று விளங்குவதாகும். அந்த மலையின்பேரில் சதுர திரிகோணச்சிரம்ங்களையுடைய மண்டபங்கள் பஞ்ச கலசங்களோடுங் கூடி விளங்காநின்றது. இந்த மலரகித பரிசுத்த வாசத்

திலேதான் விஸ்வதலோஹிதாள் வாசஸ்தானமாகும்.

அந்த மாந்தைகூடத்தின் மேல்பாரிசத்திலோ! என்ன நிலைமைகளைச் சொல்வோம்! அங்கு விஸ்வதாபிரானுக்கு அஷ்டமாசித் யஷ்டாங்க யோக சித்துக்களையும் ஆத்மஞானங்களையும் அருளக்கூடியபெரியோர் வாசமாம். அங்கு வனமாய் நிற்கும் அதன் நிலைகளை இங்கு விவரிக்க சாத்தியமன்று. கடலொலியையுடைய மாந்தைக்கோட்டையின் கலசமானது வானோர்களுக்கும், பூமியில் திலகமாகிய மகாமேருவின் சிகரமோ என்று ஐயுற்றார்கள். ஈஸ்வரன் பிரபஞ்சத்திற்கு சிருஷ்டிதிதி சம்ஹார திருவிதாம்ஸங்களை அனுக்ரகிக்க புருஷரூபமாகி திருக்கோவிலாக மாந்தைநகர் உருவமாயிற்றே! என்றுபூவுலகமும்வானுலகமும் திருதிஷ்டியடையும்படி மாந்தைநகர் கலசம்விளங்காநின்றது. இப்படியான அந்த மாந்தைக் கோட்டையில் விஸ்வதலோஹிதாள் ஆத்மணி நகரத்தி லிருந்தது போல் மதிவதன விலாசர்களாயிருந்து வசிக்கலுற்றார்கள். அந்த மாந்தைக்கூடத்தை ஒட்டின மலைபாரிசங்களிலும், பூங்காவனத்திலும் மாளிகையிலும் யிருந்து திருவிளையாடல் புரிவார்கள். விஸ்வத லோஹிநாளுக்கு ஏழெட்டு வயது பிராயங்கள் ஆகிக்கொண்டு வரவும், அவாள் வேத வேதாங்கங்களை கற்றவர்களாயும், பிரபஞ்ச தருமங்களை உணர்ந்தவர்களாயும், உத்தம தர்ம நடைநிலைகள் இன்னதென்று உலகோரறியும்படி தன் குணங்களால் உவமிக்கிரவர்களாயும் ஆனார்கள். ஸ்நான கர்ம சந்தி ஆசாரங்களைச் சிந்துக்க ளாடுவதுபோல் அனுசரித்து வருவோர்கள். யாவரும்

விஸ்வதா! என்று கூப்பிட்டுப் பார்ப்பவர்களும், விஸ்வதா! என்று நாமத்தை உச்சரிப்பவர்களும், விஸ்வதா! என்று சொல்லி சிரமம் பரிகரிப்பவர்களும், விஸ்வதா! என்று கீதமுடையோர்களும், கற்பகத் தருவைச் சார்ந்தார்போலும், இந்த நாமத்தைக் கேட்போர்கள் திருவமுதுண்டதுபோலும் ஆகலாயிற்று. ஜேத்திரர் விஸ்வத லோஹிதாளை நினைத்து பரவசமாய் தபஸில் இருந்ததுபோல் காத்திருந்து: முப்பது பக்ஷங்களில் ஒருமுறை கிருத்திகவிமானத்தில் பத்தினி சமேதராய் ஆரோகணித்து மாந்தைநகர் கலசத்தை நோக்கிவந்து காஞ்சன பூமியிலேயே இறங்கி கோட்டைக்குள் சென்று, விஸ்வத லோஹிதாளை தெரிசனஞ்செய்து போவார்கள். பூமியில் தர்மப்பிரகிருதியானது என்னகாக்ஷியர்த்தங்கை உண்டுபண்ணப்போகிறதோ; அதற்குக் காரணபுருஷர்களான விஸ்வதலோகிதாள் சகலகலா வல்லபர்களாய் நிதர்சன குணபவ்வியர்களாய், குணரூபர்களாய், மாந்தைக்கோட்டையில் இளம்பிராயபருவம் கடப்பவர்களாய் வாசஞ்செய்யலானார்கள்.

இப்படியிருக்க ஜீஸங்கிநகராதிபதியான சக்ரதரேஸ்வரன் ஆக்ஞைப்படி நான்குதிக்குகளிலும் வீரர்கள் பரவினார்கள் அவர்கள் தெய்வானுக்ரகபல சாம்ராஜ்யபத்திற்கனுகூலமான தேவபூஜை காரியங்கள்யாக கர்மங்கள் தபசுகள் யோகங்கள் உடைய சிஷ்டர்களை யெல்லாம் மெலியுறச் செய்தார்கள். அக்காரியங்களும் நசிக்கும்படியாகச் செய்தார்கள். சக்ரதரேஸ்வரனுடைய ஸார்வ பௌமராஜ்யமாகச் செய்தார்கள். அவர்களை யாகபூஜைமுதலான உத்தமகிருத்தியங்களை ஏற்றார்கள். விஸ்வதலோஹிதாளுக்கு நாராசமாயிருந்தார்கள். பின்னும் யம தூதர்கள்போல் காணப்பட்டார்கள். எங்கும் பரவிப்போனார்கள். காந்தக்கற்கோட்டையையும் கண்டார்கள். சிலர் அந்தக்கோட்டையையும் ஆவலாய்க்கிட்டினார்கள். கோட்டையின் அற்புதத்தைப் பார்த்து விஸ்வத லோஹிதாளின் நிவாஸமென்றே மதித்தார்கள். கோபமும் கொண்டார்கள். ஒருபக்கம் ஏக்கமும் அடைந்தார்கள். பார்த்தார்கள். கோட்டையின் வல்லபத்தைப்பார்த்து என்று உதித்ததோ யிதுவென்றார்கள். இன்று வந்ததோ நம்மரசுக் கீனம் என்றார்கள்.

(தொடரும்-)

**சாலிவாடி புராதனம்,**
தருமபதி.



## சத்திய சம்வாதம்.

(ஆதவன், பிரபோதன், என்ற இரு நண்பர்களின் வினா விடை.)

ஆதவன்:—நண்ப! முன்மாத பத்திரிகையில் வரைந்து விடுத்த வாழ்த்து என்னும் வியாசத்தில், இப் பத்திரிகையை வனிதாவடிவாக வருவகித்ததின் அபிப்பிராயத்தினை அறிய விருப்பமுளேனாகையின், தாங்கள் கிருபாமூர்த்தியும், உண்மை யன்புடையரும், சகல சாஸ்திர வித்பன்னரும், பல தேசாடனரும், என்பா லத்தியந்த மன்புடையராதலின் கிருபைகூர்ந்து அதனை விரித்துரைக்க விரும்புகின்றேனென்றனன்.

பிரபோதன்:—நண்ப! உனது வசனாமிர்தத்தினைச் செவிமடுத்தின்புற்றனம். அதற்கு விடையைக்கேள். சத்விஷயங்களைக் கேட்பதில் அதி குசலமுடையனாவகிலும், சண்டு கூறப்புகும் அரியவிஷயத்தினைச் சாவதான சித்தமுடையவனாக விருந்து கேட்பாயாக:—

உலகின் சிருட்டிகாலத்தினின்றும் பிரஜாவிருத்தி யிருபகுதியாயினவாகச் சுருதியாதிகளிற் கேட்கப்படுகிறது. அதாவது:— பிரம்மாவினின்று வந்தவர்களும், சூரியனின்று வந்தவர்களுமாவர். இவற்றில் சூரியனுக்கு அரியெனவும் பரியாய நாமமுளது, அரியின் வழி வந்தவர்கள் ஆரியர்களெனவும், அங்ஙனே பிரமாவுக்கு ஆதிபுருஷனெனவும் பெயர் பிரதி நாமமாதலின், அவர் வழிவந்தவர் பௌருஷேயர்களெனவும் கூறப்படும். பௌருஷன் என்பதின் பொருள் விவேக வைராக்கியத்துடன் லௌகீக வைதீக பாரமார்த்தீகபலன்களைதனையும் விரும்பி யடைபவன் யென்பதூஉமாம். மற்றும் புருஷன் ஸ்ரீ யினிடத்தில் அத்தியந்தம் பிரீதி யுடையவனாகவும், ஸ்ரீ புருஷனுக்கு இன்ப சாதனமாகவும் கூறுவதாலும், பஞ்சானனேத்பவர்களாய இவர்களுக்கு அத்தியந்தம் பிரீதியுண்டாக்கவந்ததாதலின் இதனை ஸ்ரீவடிவாகக் கூறினம்.

ஆதவன்:—அன்புடைய அருமைத்தோழனே! இதுகாறுங் கூறியவற்றில் என்னறிவிற் சில சம்சயந் தோன்றுகின்றது. அதனை நிவர்த்திசெய்யப் பிரார்த்திக்கின்றேன். அஃதாவது, ஸ்ரீ புருஷனுக்கு இன்பசாதனமாகக் கூறினீர். புருஷரில் பலதிறத்தினராக விருக்கின்றனரே. அதாவது, நபும்ஸகன், பாலன், விருத்தன், நோயாளி, உன்மத்தன், விரக்தன், யோகி, ஞானியாதியரும் விருப்பங்கொள்வரோ?

பிரபோதன்:—ஆம், நீ கூறியது காலவிசேஷத்தினைக் கொண்டவர்களைக் கருதி கேட்கின்றாய். நன்று, மனிதன் யென்பது மனத்தின் சகாயத்தா லிதாஹிதங்களையறிச் சுகதுக்கங்களையனுபவிப்போனென்பதுபொருளாதலின், இத்தகைய மனமுள்ளளவும் சராசரவுயிர் யாவற்றிற்கும் சகசமான இச்சைநீங்குவது ஒருபோதுமின்றாம். இதனாலன்றோ; ஆந்தரகவி மகாபுருஷஸிம்மமாக விளங்கிய வேமன்னஸ்வாமிகளும், "வெர்ரிவாடிகினைன, வேஷதாரிகினைன, போகிக்கைன, பரமயோகிக்கைன, ஸ்ரீ சூகினம்புடு சித்தப்புரஞ்சனு, விஸ்வதாபிராம வினுரவேமா" எனக்கூறியுள்ளார் என்றனன்.

ஆதவன்:— இத்துணைக் கூறியவின்மொழியைக் கேட்டு என தாப்தராகிய தங்கள்வசனம் உண்மை யெனவே நம்பினும் இதனுண்மை தெரிய விரும்புகின்றேன், அதாவது எக்காலத்தும் எவ்வித புருஷனுக்கும் இச்சை நீங்குவதின்றெனப் பொருளாகின்றதே. சிதேந்திரியர்களெனவும், பிரஹ்மச்சரிய நயிஷ்டிகாளெனவும் கேட்கப்படுகின்றது உண்மையா, போலியா, அதனுண்மையை அன்புடன் கேட்க விரும்புகின்றேன் என்றனன்.

பிரபோதன்:—நண்ப! நீ கூறியது முண்மையே. அதன் விபரம் கூறுவேன். சிரத்தையுடன் கேட்பாயாக. ஜீவர்களுக்கு உலகம் (நாமரூப வடிவப்பிரபஞ்சம்) ஒருகாலத்தில் சத்தியமாகவும், ஒருக்கால்

விசித்திர அமைப்பினைக் கொண்டு (பரோக்ஷமாக) கர்த்தாவினிடம் மனம் பற்றுதலும் ஒருக்கால் கடவுள் அருள் விளையாட்டாகவும், ஒருக்கால் பரமாகவும் விளங்கும். இதனையே “ஒருகாலமுன்செய்வினையளவும் யோகி யுபிநலகாதியைக் காண்பன், ஒருகாற்காணான், ஒருகாலிற்றேற்றமெலாம் பரமாய்க்காணும், உளபரி சேயாயொன்றுங் காணான்” என்று பிரமகீதை கூறுவதும் “ஆகார புவனமின்பாகாரமாக அங்ஙனே” என ஸ்ரீ தாயுமானப்பெருந்தகையாரும் கூறியவதனால் முடிவாகிய நாமரூபந் தோன்றாத பரபோதானந்தவடிவம்விளங்கினகாலத்தில் தான் இச்சையின் அத்தியந்த நிவர்த்திவரும். வினையமுன்று நிலைகளும் மாறுதலையடையும், என்றனர்.

ஆதவன்—: இங்ஙனங் கூறிய ஆப்தவாக்கிய சல்லாபத்தால் சமனமடைந்த மனமுடையவனாகியும், அத்தகைய பரபோதானந்த மடையுமார்க்கத்தினை யடியேன்பெற்றுளன்றும் மாறுதலற்ற இன்பவாழ்வினையெய்த விரும்பியுளேனென்பது திருவுளத்துக்கே தெரியும். ஆயினும் என்மீது கிருபைகூர்ந்து அதனைப் பெறுமார்க்கத்தினைப் போதிக்க விரும்புகிறேனென்றனன்.

பிரபோதன்— அன்ப! நின்வினாவினால் மனம்பரமானந்தமாகின்றது. ஆயினும்எடுத்துக் கொண்டவிஷயத்தினை முடித்துப்பின்பு நீ எதெதனை விரும்புகின்றாயோ அதனைக் கூறுவெனென்றனர்.

ஆதவன்— எடுத்துக் கொண்ட விஷயமென்ன?

பிரபோதன்— விஸ்வகர்ம குலத்தினர் பௌருஷேயர் களாதலினாலும், புருஷன் ஸ்ரீயை விரும்புவது யியல்பாதலினாலும், ஸ்ரீ வசன முதலியவற்ற வின்பஞ்செனித்தலினாலும் ஸ்ரீரூபமாக வுருவகித்ததெனவுணர்க. அன்றியும் ஸ்ரீயென்பதன் பொருளும், திருவென்பதன் பொருளும் ஒன்றென மொழிவர். ஸ்ரீஎன்பதற்கு முக்கியப்பொருள் பெண்ணாகவும், லக்ஷ்மியப்பொருள் அகண்டைக ரசபோதானந்த வடிவ ஆத்மாவென்பதுமாம். ஆதலினால் உள்ளுறைப் பொருளாகிய சிதாத்மாவை யுணர்த்து முகத்தாற் பெண்ணெனப் பெயர் புனைந்தது சாலவும் வியக்கற்பாலதாமென்றுணர்க. இதனைக் கருதியே நோயினர் பாதுகாப்புச் சாலைகள்முதலிய பல விடங்களில் பருவப்பெண்களை யமர்த்தியதுமென்றுணர்க.

ஆதவன்:—நண்பனென்னும் பொருட்குறிய குணந்தினையடைந்த தங்கள் வசனத்தினாலுளங்குளிர்ந்தேனாயினும்; இன்னும் வினாவற்குளவற்றைக்கேட்கின்றேன். அதாவது, பத்திரிகையைப் பெண்ணாக வுருவகித்தது மிகவும் நலமே. அவளணியும் அணிகளும் மேறொன்னத ஜீவரத்தின ஆபரணமும் நற்புருஷரை யடைதலும், உத்தமசந்ததி பெறலும் என முன் பத்திரிகையில் வரைந்துளது. அதனையும் விபரமாக அறிய விரும்புகின்றேன் என்றனன்.

பிரபோதன்:—சரியை, கிரியை, யோகம், ஞானம், மோனம் என்னும் பொருளாகிய மணிகளாலமைத்த பல விதிகாச மூலமாகிய சுவர்ணங்களாலியற்றிய விசித்திராபரணங்களென்பதும், மற்றும் சாதியாசாரம், சமையாசாரம், தேசாசாரம், கருமாசாரம், ஞானசாரமென்பன இரத்தினமென்பதும் பொருளாம். இதில் இதுகாறும் மோனஞான விஷயுங் குறைவாக விளங்கியதால் பல செவிவிகளாகிய அறிஞர்களாற் போற்றப்பட்டும், வித்வான்களாகிய புருஷர்கட்கு மனோரதமாகியும், சத்தியஞானபுத்திரனை யுண்டுபண்ணியும், நிரதிசய சகசானந்த வாழ்வினைப் பெறுந்தன்மை யுடைமையின் “இல்லாளகத்திருக்க வில்லாததொன்றில்லை” எனவும் “கற்புடுத்து நாண்மெய்ப்பூசி நற்குண நற்செய்கை பூண்டாட்கு மக்கட்பேறென்பதோர்செல்வமொன்றுண்டாயின்,கொண்டாற்குச் செய்தவம் வேறின்று” எனவும் “கற்புடையாடன்மனையென மகிழ்ச்சிகூர்ந்திருப்பன்” எனப் பன்னெறியின் பான்மையுணர்ந்த பலருங் கூறியிருத்தல் நன்கு சிந்திக்கற்பாலதாம்; என்று கூறியுபசாந்தமடைந்தனர்.

ஆதவன்:—அறிஞசிரேஷ்ட! தாங்களிதுவரையும் என்மேற் கருணைபாலித் தியம்பியது மிகவும் நலமேயாயினும், இவ்வரிய வசனத்தினாலும், பூர்வபுண்ணிய விசேஷத்தினாலும், நற்கால கருமத்தினாலும், எனது இஷ்ட தெய்வ சகாயத்தினாலும், சத்துக்கள் சாங்கத்தியத்தினாலும், தங்கள் தெரிசன மகாத்மியத்தினாலும், என்மனதில் சில சங்கற்பமுண்டாயின. அதாவது, காரியத்தினைக் கொண்டு காரணத்தினைத் துணிதலென்னும் அனுமான வளவையினால் தங்கள் வசன புஷ்டியினால் பல நுண்ணிய விஷயமுணர்ந்த மகாத்மாவெனத் துணிந்துளேனாதலின், என் மனதிலுள்ள அறியாமை யென்னும் அந்தகாரம் காணாதேகும்படி, ஞானபானுவைப் பெற வவாவுடையேனாதலின், என் கோரிக்கையினை முடிக்கவேண்டுமென்று அதிவினையபூர்வக விக்ஞாபனம் செய்துகொண்ட ஆதவன் (மிகவும் தபஸ்ரேஷ்டன்) இனியமொழி கேட்டுப், பிரபோதன் (சர்வாதார சர்வமங்கள ஞானசொரூபன்) கூறுதலாவது: உத்தமகுண சத்சீல! நீ கூறியது நியாயமே “வேண்டுவார் வேண்டுவதை யீவான் கண்டாய்” என்ற மணிவாசகவள்ளல் வாக்கின்படி உன்பாவனை எவ்விதமுளதோ; அதற்கீடாகச் சர்வேஸ்வரன் எமதறிவினின்று உன் சங்கைக்குத் தாம் புகன்றின்புறச் செய்வாரென்றனர்.

தொடரும்.

பொதுநன்மையை விரும்பும்

ஓர்சாது.

## ஈகை.

ஈகையென்பது வறியா யேற்றார்க்குக் கொடுத்தலாம். அவ்வீகை அறத்தின்பகுதியே யாகும், அறனும் அருளுடையான் கண்ணதேயாகும. அவ்வருளுடைமையும் அன்போடளித்தலாற் றெரியும். இவ்வித அருளுடையோரே சுரிகுழற் கருங்கண் துணைவியை யீந்தவரும், நெல்முளைவாரியின்னமுதருத்தினவரும், கோவண நேர் தனை நிறுத்துக் கொடுத்தவரும், இவை போன்ற அரிய பெரிய ஈகைகளால்முத்தியடைந்தோருமென புராணங்களில் கூறப்பட்டுள்ளன. இத்தர்மசீலர்களே பார்த்தவிடமெல்லாம் பரமனெனக் கண்டு யாவரெது கேட்பினு மனமுவந்தளித்து ஈசன்றொல்கழற் குரியவரானார்கள்.

பிறவிப் பெருங்கடல் நீந்தக்கருதினோர் இப்பெரியோர் தம்கொள்கைகளையேமேற்கொள்ள விரும்புவர். அவர்கள் நெறியாவன:—நல்வழியாற் பொருளீட்டி வேண்டினோர்க்குவேண்டியவாறளித்தலாம். இவ்வகையால் யாவரும் சரீரசுகம் ஆன்மசுகமென்னு மிவைகளை யடைதல் திண்ணம். பொருளுடையோர் தாமீதல்கூடும். ஏனையோரா லியலாதென்றெண்ணுவது சரியன்று. “ஆற்றுப் பெருக்கற்றடி சுடுமந்நாளு மவ்வாறு ஊற்றுப் பெருக்காலுலகூட்டும்” என்றாற் போல் பொருளில்லாரும் மனதில் ஈரமென்பதொன்றுடையோரானால் தம்மாலியன்றதைக்கரவாதளிப்பர். சற்புத்திரரானவர்களும் தம் தந்தை இரப்பார்க் கீந்தே நல்கூர்ந்தாரென்றாலும், ஈகையென்னுஞ் சிறந்த குணத்தை கனவிலுமறப்பரோ.

பொருள் கிடைத்த போது புரிந்துவிடலாமென்றிருப்போர்க்கே “அன்றறிவாமென்னாதறஞ் செய்க” என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நாய்காணிற் கற்காணாவகையும் நமக்கு ஞாபகமிருக்கலாம். நேர்க்

குமிழிபோல் நிலையற்ற தேகமழியுங்காலம் அறியொணாமையால் கிடைத்த காலத்தே செய்தல் நன்றாம். செய்த தருமமும் இறக்குங்கால் நீங்காத் துணையாம்.

முற்பவத்தில் இரப்போர்க் கீயாது சேர்த்துவைத்தோரே இப்பிறப்பில் வறுமையுற்று யாசிக்கிறார்களென்பது ஆன்றோர் துணிபாம். அவர்களைப்போல் நாமும் அர்த்தத்திலாசைவைத்து அறம்புரியாவிடின் நமக்கும் பின் அதுவேகதியாய்விடு மாதலால் "நல்லாறெனினுங் கொளறீது, மேலுலக மில்லெனினு மீதலே நன்று" என்ற வள்ளுவர் வாக்கின்படி இரத்த விழிவென்பதையும் இல்லார் விரும்பினதை மென் மொழியாலுண்ணெகிழ்ந்து ஈதல் வேண்டு மென்பதையும் மனதிற் கொள்ளல்தகுதியாம்.

ஆனால் சிலர் தன் பிள்ளைகளுக்கு ஆஸ்தி வேண்டும், தனக்கும் தனவந்த னென்ற பெருமை வேண்டுமென்ற நோக்கத்தோடு, தான்பிறர்க் கீயாதும், வாயாரவும் வயிறு நிறையவும் உண்ணாதும்சேர்த்துவைத்துக் காலமானபின், பிள்ளைகள் சமயம்வாய்த்த தென்று அள்ளி யிட்டிறைத்து ஆனந்தங் கொள்ளுகிறார்கள். சிலர், தனக்குபுத்திரப் பேறில்லாம லிருக்க, வெகு சிரமப்பட்டு சேர்த்துவைத்து சுவீகாரம் ஏற்படுத்திக் கொண்டோ இல்லாமலோ யமலோகம்செல்ல, யாரோ ஒருவன் பாத்தியம்பெற்று அப்பொருளை தாசி வேசிகளுக்குச் செலவிட்டு தாரித்திரியமடைந்து வியாதியாளனு மிருக்கின்றனன்.

சிலர் தான் சம்பாதிக்கும்பொருளை தன் பெண்டிர் பிள்ளைகளுக்கு முதவாது பொதுப்பெண்களையே தெய்வமென எண்ணி சூது, மதுபான முதலியன கைக்கொண்டுழன்று, கைப்பொருளழிந்தபின் அப்பொதுமகளிராலுந் துரத்தப்பட்டு குடிக்கக் கூழில்லாமலுந் திண்டாடுகிறார்கள். சிலர்பங்காளிகளுடன் வாதிட்டு பல்வகையிற் கோர்ட்டு வியவகாரங்களிற் கண்டவாறு செலவிடுகின்றனர். சிலர்விவாகம், உத்திரகிரியைகளில் ஏராளமாயும்அளவுகடந்து வீண்பெருமைக்குச் செலவிடுகிறார்கள். விலாப்புடைக்கத் தின்றுதானம்வாங்குவதே தமக்குரியதென்றுபாராட்டி திரியும் விப்பிரர்களுக்குரூபாய்க்கணக்காய்ப்பூரிகொடுப்பதைகுடிக்கக்கஞ்சியின்றிவருந்தும் ஏழைகளுக்கு அன்னமிட்டால் புண்ணியக் குறையுண்டாமோ. திடகாத்திரராயிருந்தும் சோம்பேரிகளாய்த்திரிந்து கெடுதிவிளைப்போமென்றுபயமுறுத்துபவர்க்கு பயந்தளிப்பவர், அங்கவீனர்களாய் வலிகுன்றினோர்க்கீவதால்பாவமடைவரோ. சிலர் தமக்குபொருளில்லா திருந்தும் பிறர் பாற்கடன் வாங்கிதர்மவழியிற் செலவிட்டு கடனைத்திருப்பிக் கொடாவிட்டாலும் செய்துள்ள தர்மத்தாற் புகழெய்தியுள்ளனர். அக்கடன்கொடுத்தோர் தாமே அவ்வறங்களை யியற்றி அப்புண்ணியம் பெற்றாலென்னோ? இவர்களைக் கருதிதான் "பிறர்க்குதவிசெய்யார் பெருஞ்செல்வம் வேறு பிறர்க்குதவி யாக்குபவர் பேறு" என்றும் அதற்குதாரணமாக பானஞ்செய்யப் பயன்படாத கடல்நீரை புயல்முகந்து சென்று உலகிற்குதவுதலையும் கூறியுள்ளதுபோலும்.

பெரும்பான்மையும் செல்வமுற்றோர்களே மனஞ் சிறிது முருகாது வாசல்வந்திரந்தோரை வாயில் வந்தவாறு வைதுத் துரத்தியும், சில சமயத்தில் கண்ணிருந்தும் குருடரைப்போல் கர்வமுற்றிருக்கின்றனர். இதற்குக் காரணம் நசிக்கக்கூடிய தேகம் உற்பவித்தொழிதற்குள் வளர்ந்திருந்தழியும் பொருளை நிலையுள்ளதெனக்கொண்ட அறியாமையும் பின்வருஞ் சன்மங்களில் தனக்குறும்பயனை நினையாமையுமாம். செல்வமானது நாம் பிறக்கும் பொழுதுகொண்டுவந்ததுமல்ல, இறக்கும் பொழுது கொண்டுபோவதுமல்ல, இடையிலீஸ்வரன்கிருபையால் நமக்குக்கிடைத்ததென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கது. இதை எவ்வகை வழங்கினால் உய்வகையாகும் மென்பதை யறிந்து செலவிட்டுவரின் புண்ணியப் பேற்றை யடையலாம். அவ்விதம் செய்யாவிடின் "ஈயார் தேட்டைத் தீயார்கொள்வர்" என்றபடி



கொடியோர் நம்மை வதைத்தும், வருத்தியும், அபகரித்துச் செல்வரென்பது நமக்குத் தெரிந்ததுதான். ஆனால் தர்மத்தில் பொருளைச் செலவிட்டால் அதனால்வரும் புண்ணியத்தை யாரும் கொள்ளைகொள்ள முடியாதென்பதும் நிச்சயமே. ஆகையால், பசிநோயால் நொந்தவர்தமை நோக்காது நுகர்ந்திடுங் கொடியோர்க்கும், வைத்திருக்கும் பொருளை வழங்காது கையிழந்தபின் வருந்தும் உலோபிகளுக்கும் "ஈத்துவக்கு மின்பமறியார்கொல் தாமுடைமை, வைத்திழக்கும் வன்கணவர்" என்று பெரியார் அறிவுறுத்தியதை ஆராய்ந்து தர்மசாஸ்திரங்களிற் கூறிய வறங்களை தவறாதியற்றி வருவோமாக. அநேகமாய் நம்மினத்தில் கற்றோர் மிகக் குறைவால் "நான்முறை தெரிந்து சீலத்தொழுகு" என்றபடி அறிந்து நடத்தக் கூடாமையாயிருக்கிறது. இனி நம் சிறுவர்களுக்காவது கல்வியை விருத்திசெய்து வருணாச்சிரம தருமங்களி லொழுகிவரச் செய்ய சில அபிமானிகள் முன் வந்திருப்பது குலத்திற்கு க்ஷேமகாலமென்றே நினைக்கவேண்டும். இவ்விதம் முயற்சிப்பவர்களுக்கு நாம் தகுந்த பேருதவிபுரியவேண்டும். அச்சிறுவர்களும் நல்லொழுக்கத்தில் பழகி சற்கருமங்கள் புரிந்துவருவதா லுண்டாகும் புண்ணியத்திற்குக் காரணபூதராயிருந்த நமக்கும் புண்ணியமுண்டாகும். நம்மவர்களிலநேகர் தமக்குற்ற வறுமையால் சிறுவர்களை பள்ளிக்கனுப்பச் சக்தியின்மையால் அவர்க்கு வேண்டிய உதவி புரிந்து கல்விகற்கச் செய்தல் நலம். பாடசாலை இல்லாத இடங்களில் ஸ்தாபித்தல் மிகவும் நன்று, அவ்வாறியலாதாயின் ஸ்தாபித்துள்ளோர்க்கு இயன்ற பொருள் சகாயம் செய்தால் விசேஷ புண்ணியமாம்.

இவ்விதமாய் வித்தியாபிவிர்த்திக் குதவுவதுடன் தேவாலய கைங்கர்யங்கள், குருடர், முடவர், சிறுகுழந்தைகள், வியாதியஸ்தர், வயோதிகர் முதலானவர்களுக்கு அன்னமிடுதல் முதலிய தருமங்கள் செய்தல் சிறந்த புண்ணியமாம்.

கர்னனை வரையாது கொடுக்கும் வள்ளலெனச் சாதாரணமாய் யாவரும்சொல்லுகிறார்களன்றோ? அப்பெயரை அழியாது நிலைநிற்கச் செய்தது அவ்வள்ளன்மையேயாம். தற்காலத்தில் சென்னைபுரியிலிருக்கும் பச்சயப்பன் காலேஜும், மற்றவிடங்களிலுள்ள சில சத்திரங்களும், வைத்தியசாலைகளும் ஸ்தாபித்தோர் பெயராலேயே வழங்கப்படுதலால் அவர்கள் புகழ் எக்காலமும் அழியாது நிலைபெற்றிருக்கின்றது.

நாம் காக்கைக்கு அன்னமிட்டால் கரைந்துண்ணுவதைக் காண்கிறோம். மனிதர்களைப் போல் சுயநலங்கருதி தனித்துண்ணல் கிடையாது. அக்காக்கையினும் மிக்க பகுத்தறிவுடைய நாம், அற்றார் அழி பசிதீர்த்தும், பிதிரர் தேவர், விருந்தினர், சுற்றத்தார், முதலியவர்களிடத்தும் அறநெறி வழுவாது விதித்தன செய்தல் கடனாம். ஆகையால் நாம் நமது குலத்திற்கும், மற்றும் உலகத்திற்கும் உளதாகிய குறைகளை நாமாவது, தக்கவர்களின் வழியாவது பொருளீதல் முதலியவற்றால் நிவர்த்தித்தும் குறையுடையோர் தமதல்லல்தீர்ந் தகமகிழ்வதால் உண்டாகும் புண்ணிய மெய்தியும் இன்புறுமாறு இறைவனருள் புரிவாராக. பின்வருஞ் செய்யுளும் எக்காலும் ஞாபகத்திலிருத்தற்குரியதாம்.

"இன்சொல் விளைநிலனா மீதலே வித்தாக வன்சொற்களைகட்டு வாய்மை யெருவட்டி அன்புநீர் பாய்ச்சி யறக்கதிரீன்வோர் பைங்கூழ் சிறுகாலைச்செய்.

தொடரும்.

S. ஆனையப்பாச்சாரி.

## விதவா விவாக விவாத விநோதம்.

காப்பு.

மருகு தண்பொழில் குருகை நாதனை
யுருகி வாழ்த்துவாம் பெருகு நன்மையே.

கலி வெண்பா.

சென்னைத் திருப்பதியில் சீரா யவதரித்து
முன்னை வினையகல மூதுலகில்—மன்னி. (1)
உறுதி பலபலவும் ஓதிப்பே ரின்பம்
பெறுநீர் எனக்கருணை பெய்யும்—வெறிகிதமுங் (2)
கூர்விசுவ கன்ம குலோப காரியெனும்
பேர்விசய நங்காய் பெரியர்சிலர்—தேர்விடய (3)
மாசச் சுருதியுடன் வல்லதோர் யுக்தியனு
போகப் பெரும்வழியில் போரிட்டுத்—தாகந் (4)
தணியாரா யின்னுந் தவித்திளைஞர் மோகப்
பிணியாற்றுப் பெற்றியினிற் பேசும்—பணியாம் (5)
விதவா விவாக விவாதவினோ தத்தை
இதவாய்க்கண் ணுற்றவெளி யேனும்—மதவேழக் (6)
கூக்குர லுக் கேனென்றுன் கொற்றத் திருவடிநல்
வாக்குறவே வாழ்த்தியந்த வாதத்தை—நோக்கியென (7)
துள்ளமதி லுள்ள வுலகவழக் கையெடுத்துத்
தெள்ளத் தெளியநன்கு செப்பலுற்றேன்—ஒள் அனமே! (8)
நீயுந் தயைபுரிந்தென் நீர்கருத்தை யன்பினெழில்
ஏயும் உனதகத்தே யேற்றவர்க்கும்—நேயமொடு (9)
காட்டுவாய் ஆழ்ந்த கருத்தமைய நல்லறிவை
யூட்டுவாய் நந்தேயத் தூடுவினை—யாட்டாக (10)
நேற்றின் றுண் டானதல நீண்டநா ளாய்ச்சில்லோர்
மாற்றுயர்ந்த மெய்யறிவை மாற்றியிது—நாற்றிசையோர் (11)
பூண்டவா சாரப் யுணர்ப்பிற் பொருத்திநந்தம்
மாண்டவா சாரநெறி மாய்விப்பான்—வேண்டும் (12)
வழியில் முயலவெறும் வாசாஞா னத்தில்
இழியும் படிவைத் திகழ்விற்—கழிவதலால் (13)
முற்றுப் பெறக்காணேம் மொய்கலியி னாட்சியில்நாம்
பெற்றுளவி யப்பினுளிப் பேறுமுறல்—கற்றவர்க்கு (14)
மாவதிச யம்மாமோ மாதரசி! ஆகிலும்நம்
சேவகத்தைத் தேசத்தின் க்ஷேமமெனி—ஆவலுடன் (15)
செய்யவேண் டாவோ! சிலரிவ்வா தந்தையாற்
செய்யமேற் கொண்டதாய்ச் செப்புகின்றார்—ஐயன்வி (16)
சித்திரசி ருட்டிதனில் சேர்சிவ ராசிகளோ
எத்தனையுண் டத்தனைக்கும் எய்ந்தொன்றை—இத்தரையில் (17)



மக்கள்வகுப் பில்அங்க மாண்பினர்த மக்குமட்டும்
ஒக்கவைத்து மற்றவற்றை யோதுபரன்—பக்கல்விடல் (18)
தானோ கருணையெனி லற்றன்று சாற்றுதங்கேள்
ஞானோபா யத்தால் நலந்தீங்கை—மானே! (19)
பகுப்பாருள் காமப் பயனறிமுன் கேள்வர்
உகுப்பார்க்கன் றேவென் றுரைப்பார்—சுகப்பதியின் (20)
இன்பந்துய்த் தாரஃ திலரா மிருவருளும்
அன்பர்கெடி னவ்வின்பத் தால்நேரும்—துன்பந்தான் (21)
கண்ட இளம்பிடிக்கோ காணாத் துவரிதழ்க்கோ
உண்டதிகம் உன்னியிதை யோதச்செய்—மண்டலத்தில் (22)
உள்ள அநுபவமோ ஓர்சுவையுண் டார்தமையக்
கொள்ளைச் சுவையினின் றுங் கொள்வதற்குத்—தெள்ளமுதே! (23)
கஷ்ட மெனப்பெரிதுங் காட்டுகின்ற தாதலினால்
இஷ்டப் படிபேசல் எற்றுக்கோ?—நஷ்டம் (24)
இலையொன்றும் நம்மனமே எச்செயற்கும் ஏதாய்த்
தொலைகின்ற தாலதைநல் சூழ்ச்சி—வலையிட்டு (25)
நன்னெறியி லேநிறுத்தி நற்கிரியை மேற்கொண்டு
முன்னை வினையொழித்து முத்திபெறத்—தொன்னெறியோர் (26)
தீயவற்றின் கேடுந் தெரிந்து விடுஞ்சூதும்
நேயத்தி னாற்பின் நிகழ்பயனும்—ஆயத் (27)
தெளியும் படிசொன்னார்; தேர்ந்தோர் குலமா
தளியுற் றுலகவியல் ஆரக்—களியுற்றுச் (28)
சந்ததிவேண் டித்தானே தன்கொழுனற் குந்தனக்கும்
சிந்தைவருங் காலமது சேருமட்டும்—சந்தோஷ (29)
மாயிருக்க வேண்டும் மருவத் தகுபருவம்
மேயினபின் சேர்ந்துவக்க வேண்டுநலம்—ஆயவல்ல (30)
சந்ததிபெற் றன்னதொரு சத்காலந் தான்றனக்கு
வந்திடினும் வாராது வாழ்ந்திடினும்—முந்தை (31)
வினையினாற் றன்கணவன் வீயநேரிற்பின்
இனியான் புரிவதெவன் இட்ட—தனியான (32)
பேறிதுவென் றேதெளிந்து பின்னுள்ள நாளளவும்
வேறுசிந்தை யற்றிந்த மேதினிக்கேன்—ஏறிவந்தோம் (33)

(தொடரும்)

வித்வான், ம. இராஜகோபால பிள்ளை.

## விஶ்வகர்ம குலோபகார உபந்நியாசங்கள்.

நமது வேதாத்தியயன பாடசாலையில் நம்மினோர்கள் நன்னிலையடையும் பொருட்டுப் பிரதி ஆதிவாரம் மாலை 3-மணி முதல் 6-மணி வரை வித்வ ரத்தினங்களைக் கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்து வர ஏற்பாடானபடி 1913-௵ டிசம்பர் ௴ 28ந் தேதி ஆதிவாரம் பிற்பகல் பிரமஸ்ரீ தி. மு. முக்கண்ணாச் சாரியரவர்கள் அக்ரா

சனத்தின் கீழ் ஸ்ரீமத்வித்வான் ம. இராஜகோபால பிள்ளை யவர்கள் குலோத்தாரணமென்பதைப் பற்றிப் பேசுங்கால் பாதன், பாண்டவர், பாசுராமர் இவர்கள் சரித்திரத்தை மேற்கோளாகக் காட்டி நாமிருக்க வேண்டிய நிலைமையையும் நம் சிறுவர்களிருக்கவேண்டிய நெறியையும் கல்வியினாய பயனையும் அபாரமாக எடுத்துந்தெளிவுறத் தெரிவித்தார்.

பின்னர் சங்கராபுரம் வித்வான் பிரமஸ்ரீ வேங்கட சுப்பாச்சாரிய ரவர்கள் கல்வியென்னும் விஷயத்தை வகித்துக்கொண்டு பாஞ்சாலர், துரோணர், முதலியோரது சரித்திரத்தை எடுத்துக் காட்டி நமது குலத்தினர் சிறு பிராயத்தினின்றும் ஒற்றுமையுங் கல்வியும் அடைந்துவருவது அத்தியாவசிய மென வற்புறுத்திக் கூறினர்.

பிறகு வித்வான் பிரமஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்காரவர்கள் பக்தியைப் பற்றி விரிவாய்க்கூறி சிறுவர்களுக்குக் கல்வியும் பக்தியும் இன்றி யமையாதவையென விளக்கமுறத் தெரிவித்தனர்.

கடைசியாய் அக்ராசனபதி யவர்கள் உபந்நியாசகர்களது கல்வித் திறத்தையும், போதனா சக்தியையும் புகழ்ந்து பேசினர். அவர் கூறியவற்றை தேனை நுகரும் வண்டினங்கள்போல் சபையிலுள்ளார் யாவரும் கவனமாய்க்கிரஹித்து, தம் சந்தோஷத்தை கர கோஷங்களாற் காட்டினர். பிரமஸ்ரீ கொ. கன்னியப்பாச் சாரியாரவர்களால் மாலை மரியாதைகள்நடத்தப்பட்டன

1914-வரு ஜனவரி மீ 4-உ ஆதிவாரம் மாலை 3-மணிக்குமேல் இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்கள், சுவதர்மம் என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு வருணத்தாரும் தத்தம் கடமைகளைச் சரிவர நடத்திவந்தால் தான் முன்னேற்றமடையக் கூடுமென சித்தாந்தப்படுத்துவதற்காய மேற்கோள்களை அநேக தேச சரித்திரங்களினின்றும், புராணங்களினின்றும் எடுத்துக் காட்டி நம் சிறுவர்களை நன்னடக்கையிற் செலுத்துவதே குலோத்தாரணத்திற்கு இன்றியமையாத தென்று தமது நுட்பமான கல்வி கேள்வி அநுபவத்தினால் யாவரும் வியக்கத்தக்க வாறு எடுத்துக் கூறினார்கள் அவர் இதோபதேச வார்த்தைகளை இப்பத்திரிகையி லெழுதப்புகின் விரிவாகுமென்று இத்துடன் விடுத்தனம். சுருங்கச்சொல்லில், நமது குலச்சிறார்களை கல்வி ஒற்றுமை, ஆசாரம், நீதி, இவைகளில் பழகச் செய்தல், நமது குலப் பெண்களுக்கு குழந்தைப் பருவத்தில் விவாகம்செய்யாதிருத்தல், ஆண்மக்கள் விருத்தாப்பிய விவாகஞ் செய்யாதிருத்தல், ஜீவஹிம்சை செய்யாதிருத்தல் முதலியனவாம்.

பிறகு அப்போது விஜயஞ் செய்திருந்த ஈரோடு, பிரமஸ்ரீ ஈ. எஸ். ஆர்த்தநாரி ஆச்சாரியாரவர்கள் ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியா ரவர்களுடைய உபந்நியாசத்தின் அருமைப் பாட்டிற்கு வியந்து கூறியும் நம் குலோபகாரார்த்தமாக அவர் உபந்நியாசம் செய்து நல்லொழுக்கச்சுடர் கொளுத்தியது நமது புண்ணியப் பயனேயென்றும் சொல்லி ஸ்ரீமத் செட்டியாரவர்களுக்கு வந்தனோபசாரத்துடன் புஷ்பமாலைகளளித்துப் புகழ்ந்தனர்.

பின்பு நமது பாடசாலைக் கென்றேற்படுத்தப்பட்ட உண்டியல் இப்போது சென்னையில் மாத்திரம் இரண்டுமாத மாகத் தண்டியதை அக் கூட்டத்தில் திறந்து பார்த்ததில், பொன் விராகனிடை ஒன்றையும் ஒரு குன்றி மணியும், வெள்ளி ஐந்துரூபா எடையும், ரொக்க நாணயத் தொகை ரூ 9-11-3-ம் இருக்க அத்தொகை கணக்கில்பதிவு செய்யப்பட்டது. இவ்வருவின் துறையை நம் குலத்தவர் இனிகவனித்து உண்டிக்கு திரவிய முதலியனவளித்து வருவரேல் போதிய பொருள்கிடைத்து அதனால்பாட சாலையும், மற்றையமுன்னேற்ற விஷயங்களும். கைகூடு மென்பதற்குச் சந்தேகமில்லை.



# பத்திரிகை வரவும், மதிப்புரையும்.

நங்குலோபகாரியை நன்குமதித்து, நம் பார்வைக்குப்பிரதியாகவிடுத்தகீழ்குறித்த பத்திரிகைகளை வந்தனத்துடன் வரவேற்கப்பெற்றோம்.

**1. யதார்த்தவசனி, கும்பகோணம்.**

திறமைவாய்ந்த பத்திரிகாசிரியரால் நடத்தப்படு மோர் தமிழ்ப் பத்திரிகை.

வருடசந்தா உள்ளூருக்கு ரூ. 3–0–0
வெளியூருக்கு ரூ. 4–0–0

**2. ஜனானுகூலன், தஞ்சாவூர்**

இதன் மகுடத்துக்கிணங்க, பல வருடங்களாக பொது ஜனங்கட்கு அநுகூலம் புரிந்து விளங்குமோர் வாரந்தப்பத்திரிகை. யாவராலு மெச்சப்படு மிப்பத்திரிகாசிரியரை யாமும்வியந்துகூறல் மிகையென அஞ்சிவிடுத்தாம்.

வருடசந்தா ரூ. 3–0–0

**3. திராவிடாபிமானி, சேலம்.**

பத்திரிகாலட்சணம் முற்றும் வாய்ந்து விளங்குமோர் வாராந்தப் பத்திரிகை. இதனுருவமும், அமைப்பும், விஷயபுஷ்டியும், அட்சர நுல்லியமும், இதனை நடாத்துபவரின் ஊக்கமும் வியக்கத்தக்கவையே.

வருடசந்தா ரூ. 3–0–0

**4 இராஞ்சிதபோதினி இரங்கூன்.**

"சரீர ஆரோக்கியம், நவீன உணர்ச்சி, ஆத்மிக விசாரம், ஆகர்ஷண சுவஸ்தம், முதலிய பெரும்விஷயங்களை எடுத்துரைக்கும் ஓர் அரிய வாராந்தப்பத்திரிகை. அச்சிடப்படும் கடிதத்தினுயர்வும், விஷயங்களின் அருமைப்பாடும் மனதைப் பெரிதும் கவர்கின்றன.

வருடசந்தா ரூ. 4–0–0.

**5. பாண்டியன், இரங்கூன்.**

பிரதி புதவாரந் தோறும் வெளிவருமோர் தமிழ்ப் பத்திரிகை.பொது விஷயங்களில் ஊக்கம்காட்டி அதனை வாசிப்போர்க்கு அறிவுறுத்துவதில் சிறந்து விளங்குகிறது.

வருடசந்தா ரூ 5–0–0.

**6. விச்சுவகர்மன், யாழ்ப்பாணம்.**

மாதமிருமுறை வெளியாகும் ஓர் அருமைவாய்ந்த தமிழ்ப்பத்திரிகை. தேசக்ஷேமத்திற்குரியநல்விஷயங்களையும், மற்றைய நன்மை பயக்கும் விஷயங்களையும் வெளியிடுகிறது. தாம்புனைந்த பெயருக்கேற்ப ஜாதிய விஷயங்களையும் இனி வெளியிடல் அதன்கடமையேயாம்.

வருடசந்தா ரூ. 2–8–0.

**7. விஸ்வகர்மன், சென்னை.**

குலாபிமானம் பூண்டு குலதர்மஞானம் சிலாசாஸன ஆராய்ச்சி, சாஸ்திரவிசாரணை, சரித்திர பரிசீலனம் முதலிய அரியபெரிய விஷயங்களை தங்குலத்தினர்க்கும், மற்றவர்க்கும் புகட்டுமோர் உயர்தர மாதாந்தப் பத்திரிகை. பத்திரிகாநுபவமும், நிரம்பிய கல்வியும்வாய்ந்த பத்திரிகாசிரியரால் நடத்தப்படுமிப் பத்திரிகையை, குலாபிமானிகளனைவரும் கைசோர விடாது முற்றும் ஆதரித்து வரவேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

வருடசந்தா மெம்பர்கட்கு ரூ. 3–0–0

**8. கலைமகள், புதுவை.**

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் மாதமொருமுறை வெளிவரும் ஓர் செந்தமிழ்ப் பத்திரிகை. தமிழ்ப் பாஷையின் பெருஞ்சிறப்பினை, இலக்கிய, விலக்கணமெனும் கண்ணாடிகொண்டு குற்றமற பரிசோதித்து, இத்தமிழுலகோர் வியக்கும் வண்ணம் எழுதப்படும் வியாசங்கள் மலிந்து கிடக்கும் இவ்வுயர்தரப் பத்திரிகையை தமிழறிஞர் ஒவ்வொருவரும் கைக்கொள்ளுவதவசியம்.

வருடசந்தா ரூ. 3–0–0

**9. ஆத்மாபிவர்த்தனி, கீழநத்தம். திருநெல்வேலி ஜில்லா.**

இனிய தமிழ்நடையில் எழுதப்பெற்று, உயர்தரக் கல்வி வாய்ந்த பத்திராதிபரால் நடத்தப்படுமோர் மாதாந்தப் பத்திரிகை. இதில் ஆத்மஞானமுதலிய பாரமார்த்திக விஷயங்கள் மட்டுமே யன்றி, இகத்துக்குரிய பலவிஷயங்களையும், அன்னியர் சாஸ்திர ஆராய்ச்சி முதலிய அரிய விஷயங்களையும் திரட்டிக் கூறுவதால் இதனையாவரும் விரைந்தேற்றுக்கொள்வ தவசியம்.

வருடசந்தா ரூ. 1-8-0

**10. சக்ரவர்த்தினி, சென்னை.**

மாதராடவர்கட்கு இன்றியமையாத ஓர் தொன்மையுற்ற மாதாந்தப் பத்திரிகை. இதன் பத்திராசிரியர், ஸ்ரீமத் வித்வான் கோ. வடிவேலு செட்டியாரவர்களென்றால், இதன் பெருமையை விரித்துரைக்கவும் வேண்டுமோ? இதனை ஒவ்வொருவரும் பெற்று, வாசித்து, அதன்படி யொழுகி களிப்புறுவது அவசியம்.

வருடசந்தா ரூ. 2-0-0

**11. வித்தியாபூஷணி, சென்னை.**

பாரதமித்திர சபையாரால் பிரசுரிக்கப்படுமோர் மாதாந்த தமிழ்ப் பத்திரிகை. அறிவைத்தீட்டி, ஆனந்தம் ஊட்டுவதே அதன் முக்கிய நோக்கமாகையாலும், இவ்வரிய செல்வங்களை விரும்பாதவர்கள் இப்பூவுலகிலில்லை யாதலாலும் சிறியோர், பெரியோரனைவரும் இதனை வாசிப்பதவசியம்.

வருடசந்தா ரூ. 2-0-0

**12. வித்தியாவதி, இராயபுரம் சென்னை.**

இம்மகுடம்புனைந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை, உருவத்திலும், விஷயங்களின் அருமைப் பாட்டிலும், நீதிகளை விளக்கு முறையிலும் ஒப்பற்று விளங்குகிறது. இதனைத் தமிழறிஞர் ஆதரிப்பதவசியம்.

வருடசந்தா ரூ. 1-12-0

பத்திரிகாசிரியர்
**வி. க. துலேரபகாரி.**

**முக்கிய அறிவிப்பு.**

1. நமது பத்திரிகைக்கு பலரும் அன்புடன் விஷயதானம் புரிந்துவருவதற்கு வந்தனம் செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். வியாசங்கள் மேன்மேலும் வந்து கொண்டிருப்பதுபற்றியும், அவற்றைப்பெறும் வரிசைக் கிரமத்தை அநுசரித்தே அவைகள் பிரசுரிக்கப் படவேண்டிய நிமித்தம்பற்றியும், உடனுக்குடன் அவைகளை முழுதும் வெளிப்படுத்தற் கூடாமையாகிறது.

முக்கியமானவியாசங்கள் ஒருபோதும் புறக்கணிக்கப்பட மாட்டா. இதனை விஷயதானிகள் தயைசெய்து குறித்துக்கொள்வார்களாக. பிரசுரிக்கக் கூடாத வியாசங்களை விஷயதானிகட்கு அறிவிக்கும்பொருட்டு இனி பத்திரிகையி னோர்பாகத்தில் குறிப்பிடப்படும்.

விஷயதானிகளும், சந்தாதாரர்களும் நம் பத்திரிகையை இதுபோல முழுதும் அபிமானித்துவரின் கூடிய சீக்கிரத்தில், இதனை மாதமிருமுறை பிரசுரிக்க எண்ணங்கொண்டிருக்கிறோம். ப - ர்.

---

சென்னை ஸ்ரீகாளிகாம்பாளென்னும்
காமாக்ஷியம்மை தேவஸ்தான
**புதியதர்மகர்த்த நியமனம்.**

1913ஞு டிசம்பர்மீ 21வ ஆதிவாரம் காலை ஷை தேவஸ்தான மண்டபத்தில் கூடிய ஜெனரல் மீட்டிங்கில் பிரம்மஸ்ரீ வே. தக்ஷிணாமூர்த்தி ஆச்சாரியாரை ஷை தேவஸ்தானத்திற்கு தர்மகர்த்தராக தெரிந்தெடுக்கப்பட்டு ஷை மீ 31வ தாமதுஉத்தியோகத்திலமர்ந்தனர். பிரம்மஸ்ரீ வே தக்ஷிணாமூர்த்தி ஆச்சாரியார், ஊக்கமுடையவராகையால் இவர்காலத்து தேவஸ்தான விஷயங்கள் சீர்திருந்தி நன்னிலைக்கு வருமென்று நம்புகிறோம்.

# கடிதங்கள்.

சென்ற நவம்பர்மீ பத்திரிகையின்
13-வது பக்கத்தில்
"விஸ்வகர்ம குலோபகாரிப் பத்திராதிபர்
நீடும்வாழ்க" வென்ற

## நடுவெழுத்தலங்கார விடுகதை வினா விற்கு விடை.

| வினா. | | விடை. | | |
|---|---|---|---|---|
| வான் | ... | உத | வி | ந்தி |
| சிவை | ... | மஹேஸ் | ஸ் | வரி |
| வருடம் | ... | சர் | வ | தாரி |
| தாமரை | ... | பங் | க | யம் |
| திதி | ... | சது | ர் | த்தி |
| இலட்சுமி | ... | திரு | ம | கள் |
| கடை சரக்கு | ... | சத | கு | ப்பி |
| மோக்ஷம் | ... | சிவ | லோ | கம் |
| கனி | ... | மாம் | ப | ழம் |
| தலம் | ... | சிவ | கா | ஞ்சி |
| மிருகம் | ... | கவ | ரி | மான் |
| தேவதலம் | ... | திரு | ப் | பதி |
| மதன் | ... | சம் | ப | ராதி |
| அயன்மனைவி | ... | சாவி | த் | திரி |
| ஆகமம் | ... | சாத் | தி | ரம் |
| செல்வன் | ... | வீர | ரா | மன் |
| மிருது | ... | சாந் | தி | ரம் |
| சிவன | ... | தற் | ப | ரன் |
| உடல் | ... | உயி | ர் | நிலை |
| மன்னன் | ... | அற | நீ | தன் |
| ஆகாயகங்கை | ... | விண் | டு | நதி |
| பஞ்சயமாதிலகுமார் | | பெரு | ம் | பதி |
| மரம் | ... | இரு | வா | ட்சி |
| துதி | ... | புக | ழ் | ச்சி |
| மலை மல்லிகை | ... | சக் | க | ரம் |

ஒதியத்தூர் கோட்டம்
**கோ. து. நாராயண ஆச்சாரி.**

## குல பஞ்சாயத்து.

1913ஹு நவம்பர்மீ 14உ 1089 ஆண்டு அற்பசிமீ 29உ சிதம்பரம்தாலூக்கா கஸ்பாவில் தஞ்சாவூரி லிருந்து வந்திருக்கும் T. S. பாபுசாமிபத்தர்-1. சாத்தூர் தாலூகா சிவகாசியிலிருக்கும் த. மா. தளவாய்ச்சாமி ஆச்சாரியார்-2. தாங்களிருவர்களுக்கும் ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூக்கா ராஜபாளையம் கிராமம் பழயபாளையம்-1. பூபாலராஜக்கோட்டை கிராமத்தார்களுக்கும்-2. விஸ்வப்பிரம்ம சந்ததியார்கள் எழுதிக்கொடுத்த ஒப்பந்தமுச்சலிக்கா என்னவென்றால்:—

தங்களுடைய முன்புக்கு உபயஸ்தாளும் வம்சா சீர்திருத்தத்தின் பொருட்டு பழயபாளையம் விஸ்வப்பிரம்ம சந்தத்தியார்கள் மௌண்டு ரூபாய், 25ம் பூபாலராஜக்கோட்டை விஸ்வப்பரம்ம சந்ததியார்கள் மௌண்டு ரூபாய் 25ம் கொடுத்து தங்களை பஞ்சாயித்தாராக கோரி நம் குலாபிமான கர்மவிஷயங்களை சீர்திருத்தி தங்களுடைய ஆர்டருக்கு உபயஸ்தார்களும் சம்மதிக்கிறதென்றும் மீறினவர்களுடைய மௌண்டு ரூபாயை தங்களுடைய அபிப்பிராயப்படி செய்கிறதென்றும் சம்மதித்து உண்மையாயும் உறுதியாயும் இதனடியில் மனப்பூர்வகமாய் கையெழுத்து வைத்திருக்கிறோம்.

சாக்ஷிகளின் விபரம்.

(ஒப்பம்.)

1. சிதம்பரமாச்சாரி.
2. சொக்கலிங்கமாச்சாரி.
3. வெ. சிவராம கிருஷ்ணமாச்சாரி.
4. ச. செல்லமுத்து ஆச்சாரி.
5. திருவழி ஆச்சாரி.
6. பொன்னையாச்சாரி.
7. ந. இருளப்பாச்சாரி.
8. குப்பையாண்டி ஆச்சாரி.

**சதானந்தன்.**

நரசிங்கநல்லூர், சாதுசங்க மகாசபையின்

## மகுடாபிஷேகதின் வைபவம்.

டில்லிமாநகரில் மாகூமைதங்கிய சக்கிரவர்த்தியார், சக்கிரவர்த்தினியார் இருவர்களுக்கும் முடிசூட்டிய தினத்தை இந்தியாதேசத்தாரனைவரும்ராஜவிசுவாசத்தோடும். பரமோத்சாகத்தோடும், ஒவ்வொரு வருஷமும் டிசம்பர்மீ 12ல் கொண்டாடுகிறார்கள். சத்சங்கத்தாலடையும் பயனை பலரும்பெறுமாறு சாதுசங்கங்கள் கூட்டுவதிலேயே சதாஉழைத்துவரும் சுவாமி கருணாநந்தர் அரசன்தெய்வீகத்தன்மையுடையவரென்பதையும், நாம் வணங்கத்தக்கவரென்பதையும் அடிக்கடிஞாபகப்படுத்தும் பொருட்டு பிரதிவருஷமும்பலஇடங்களில் அத்தினத்தைக் கொண்டாடுவதைப்போல் இவ்வருஷமும் திருச்சியில் 12-12- 1913ல் நேஷனல் ஹைஸ்கூலில் கொண்டாடினார். அன்று மாலை 4-45 மணிக்கு அந்தஸ்கூல் மாணவர்கள்; உபாத்தியாயர்கள், மற்ற கனவான்கள் யாவரும் கூடினதும் போட்டோ எடுக்கப்பட்டது. பிறகு அந்தஸ்கூல் ஹாலில் சபை கூடிற்று. சமஸ்கிருத வித்துவானும் பிரக்யாதி பெற்ற வைக்கீலுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ A. V. கோபாலாச்சாரியார் அவர்கள் M. A. B. L. அக்ராசனம் வகித்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ T. V. சுவாமிநாதய்யரவாகள். B. A. L. T. நல்வரவு கூறி சுவாமிகள் இதுவரை செய்துள்ள நன்மைகளை எடுத்துக்கூறினார்கள். பிறகு மகா-ள-ள-ஸ்ரீ S.K.நாராயணசுவாமி அய்யரவர்கள் 'ராஜவிசுவாசமும் பக்தியும்' என்பதைப்பற்றி சாங்கோபாங்கமாய் பிரசங்கித்தனர், மகா-ள-ள-ஸ்ரீ பண்டிட்-சேதுராமய்யரவர்கள் ராஜவிசுவாசத்தைப்பற்றி தமிழிற்பேசியும் தன்னாலியற்றப்பட்ட மகுடாபிஷேக பிரபந்தத்தையும் வாசித்தனர்.

கடைசியாய் அக்ராசனாதிபதியவர்கள் ராஜனை விஷ்ணுவைப்போல்பாவிக்கவேண்டுமெனவும், அவருக்கு நாம் குழந்தைகளெனவும், நமக்கு அவர் பிதாவெனவும், அவ்விதமிருக்கும் மேன்மைகுணங்களை நமது ராஜப்பிரதிநிதியவர்கள் தம்செய்கையாற்காட்டுகிறார்களெனவும், ராஜவிசுவாசத்தைசாதுக்கள் கொள்ளவேண்டியதேயில்லையென்று நினைப்பதுபிசகெனவும், கடவுளிடத்தில் பக்தி செலுத்தவேண்டியது கற்புடைய மனைவியும் அவள் பதியும் போலவும், தாயும் பால்குடிக்கும் குழந்தையும் போலவும், சிஷ்யனும் குருவும் போலும் இருக்கவேண்டுமெனவும் மிக விரிவாய்க் கூறிமுடித்தனர்.

வந்துளோர்க்கு வந்தனமளித்ததும் மிட்டாய்,பழம்,தாம்பூலம் வழங்கியபின் சபை கலைந்தது. சுவாமிகள் செய்து காட்டுவது போல் நாமும் அரசனிடத்தில் அன்பு செலுத்துவோமாக.

**கண்டுகளித்தோன்.**

---

சென்னை விஸ்வகர்மகுலோத்தாரண சபையின் நிலைமையைப் பற்றி வினவிய நிருபக்காரர்கட்கு

## அறிவிப்பு.

விஸ்வப்ராம்ஹண குலாபிமானிகளே! மேற்கண்ட விஷயமாய் எமக்கு வந்திருக்கின்ற கடிதங்களனந்தம். அவை யொவ்வொன்றிற்கும் பதிலெழுதி யனுப்புவதென்ற லெமக்கு அவகாச மிருக்கமாட்டாதென்பதை அறிவீர்கள். இவ்விஷயத்தை நங்குலோபகாரி மூலமாக் வெளியிடலாமென்றாலோ "பழிப்பனப்பகரேல்" என்ற ஆன்றோர் வாக்கியத்திற்கஞ்சி அவற்றை இப்போது வெளியிட வெம்மனந் துணியவில்லை. என்றாலும்,சபையில்நடந்திருக்கிற தவறுதலான நடவடிக்கைகளைப் பற்றி வேண்டிய ஆதாரங்களுடன் எப்பொழுதும் ரூபிக்கத் தயாரா யிருக்கின்றோம். ஷை சபையின் பூர்வகமிட்டி மெம்பர்கள் 14 பேர்களில் மூவர் மட்டுமே பிளவுபட்டு தற்காலம் ஷை சபையைநடத்துகிறார்கள். இதன் விர்த்தாந்தங்களையும், இனிமேல் நடக்கும் காரியங்களனைத்தையும் காலக்கிரமத்தில் சபையின் வைஸ்பிரிசிடெண்டுகளிருவரும் அநுபந்தவாயிலாய் வெளிப்படுத்துவார்கள்.

**கோ. கன்னியப்பாச்சாரி.**

# வர்த்தமானக் குறிப்புகள்

## ஸ்டாம்பு விற்பனைசெய்யும் நவீனஎந்திரம்.

ஸிலோனைச் சார்ந்த ஒரு போஸ்டாபீசார் தற்போது ஒரு புதிய எந்திரம் தருவித்திருக்கிறார்கள். அந்த எந்திரம் பிறருடைய உதவியின்றி தபால் தலைகளை விற்பனை செய்ய உபயோகப்படுத்தப்பட்டுவருகிறது அந்தஎந்திரம் இப்போது 10-சதம் ரூபாயில் 10ல் ஒருபாகமுள்ள தபால் தலைகளை தான் விற்பனை செய்கிறதாம். ஆனால் எந்திரத்தின் ஓர்பாகத்தில் 10 சதத்தைப் போட்டுவிட்டால் அத்தொகை உட்சென்றதும், மற்றோர் பாகத்தில் அத்தொகையின் மதிப்புக் குறிய தபால் தலைகளை வெளியே தள்ளிவிடுகிறதாம். மேலும், நாணயங்கள் சரியானபடியில்லாமல் தவறுதலாயிருந்தால் அவைகளை அந்த எந்திரம் ஏற்றுக்கொள்ளாமல் உடனே வெளியே தள்ளிவிடுமாம். இந்த எந்திரம் சரியாய் வேலை செய்யுமானால் மற்ற ஸ்டாம்புகளையும் விற்பனை செய்ய எந்திரங்கள் தருவிப்பார்களென்றும், அந்த எந்திரத்தின் விலை 675 ரூபாய்தானென்றும் சொல்லப்படுகின்றது.

## ஆகாயரத சஞ்சாரி.

பிரான்ஸிய ஆகாய ரதசஞ்சாரியான மிஸ்டர் வெட்ரின்ஸ் என்பவர் தாம் ஆகாய ரதத்தின் மூலமாக உலகத்தைச்சுற்றி வரஉறுதிகொண்டு புறப்பட்டு பாரிஸிலிருந்து கெய்ரோவுக்குப் போய் பின்பு ஹங்கரி நாட்டின் மார்க்கமாய்ச் சென்று பெல்கிரெட்டி லிறங்கினார். அங்கு ஒரு பத்திரிகைப் பிரதிநிதி யிடத்தில், பேசிவிட்டு தாம்பலஸ்தீன் மார்க்கமாக இந்தியாவுக்கும், இந்தியாவி லிருந்து ஆர்ச்சிப்பிலாகோ என்ற தீவுக்கும், ஆங்கிருந்து ஆஸ்திரேலியாக் கண்டத்துக்கும் ஆகாயரதத்தின் மூலமாய்ச் செல்ல யுத்தேசித் திருப்பதாய்ச் சொன்னாராம்.

## புதிய ஆகாய ரதங்கள்.

மிஸ்டர் பிளேரியட் என்பவரால் தற்போது செய்யப்படும் ஆகாய ரதங்கள் மேலோங்கிச் செல்லுவதுடன் தரையின் மீதும், தண்ணீரின் மீதும் எளிதாகச் செலுத்தக்கூடுமாம்.

## ஓர் ஆகாயரதசஞ்சாரிக்கு நேர்ந்த விபத்து.

இசிலெஸ் மொனியோஎன்னு மூரிலிருந்து மிசிறக்குப் பிரயாணஞ் செய்யத் துணிந்த மெஸ்டன் கோட்என்ற ஆகாயரத சஞ்சாரி, ஸ்தம் பூலுக்கும் பெல்கிறேட்டுக்கும் சென்று ஆங்கிருந்து வெளிப்பட்டபோது இடைவழியில் ரதமானது தாரஸ்மலையில்மோதுண்டுபழுதடைந்து போயிற்றாம். ஆனால், அதன் சாரதியான மெஸ்டன் கோட் என்பவர் அவ்வாபத்தினால் யாதொரு துன்பமுமடையாது தப்பித்துக் கொண்டனராம்.

## ஒரு புலியின் போராட்டம்.

ஒரிஸா மாகாணத்தைச் சார்ந்த நாயகரா என்ற கிராமத்துள் ஒரு புலியானது சென்று அகப்பட்டவர்களைக் கொன்று தின்றுவிட்டுப் போய்விடுகிறதாம். அப்புலிக் கிதுவரையில் இரையானவர்கள் 50 பேர் வரையிலிருக்குமெனக் கருதப்படுகின்றது. ஆனால், அதனைக் கொல்லுவதற்கு புலி வேட்டையில் வல்லவரான மிஸ்டர் மோர்டன் என்பவர் வெகு நாளாய் எதிர் பார்த்திருந்தும் அத்திருட்டுப் புலி அகப்படவில்லையாம்.

## பார்ப்போர் பிரமிக்கத்தக்க பெரும் புத்தகம்.

சைனாவிலுள்ள வைத்ய சங்கத்தார் தற்போது ஒருபுத்தகம் தயார் செய்திருக்கின்றார்களாம். அதன் நீளம் 7-அடியும், அகலம் $3\frac{1}{2}$-அடியுமாக யிருப்பதுடன் அப்புத்தகத்தின் நிறை 1203 ராத்தலென்றும் சொல்லப்படுகின்றது.

## ஒரு நாயினது அறிய செயல்.

பிரான்ஸ் தேசத்தைச் சார்ந்த பாரிஸ் நகரத்தில் ஒரு நாயானது, தன்னை பாதுகாத்து வந்தவர் திடீரென்று இறந்துபோகவே அத்துக்கத்தைச் சகியாது அவரைப் புதைத்தவிடத்திலேயே ஒருவாரம் வரையில் அன்னாகாரமின்றி படுத்திருந்து உயிர் துறந்ததாம்.

### ஒரு அமெரிக்கா பெண்ணின் வெறுப்பு.

அமெரிக்காதேசத்திலுள்ள ஒரு பெண்ணானவள், தான் ஆணைப்போல் உடைதரித்துக்கொள்ள உத்தரவாகவேண்டுமென்றும், அப்படி உத்தரவானால் தற்போது புடவையைக்கட்டிக்கொண்டு கஷ்டத்துடன் சம்பாதிக்கும் பொருளைக்காட்டிலும் அதிகமாக வாரத்தில் மூன்று பவுன் சம்பாதிக்க சாத்தியமாகுமென்றும் பிரசிடெண்டு மிஸ்டர் வில்லியம் என்பவரிடம் மனுசெய்து கொண்டாளாம். ஆனால், பிரஞ்சு நாட்டில் தாடிவளர்த்துக்கொண்டு ஆண்பிள்ளைபோல் நடிக்கும் பெண்கள் ஆண் உடைகளையும் தரித்துக்கொள்ளலாமென்ற விதி 18-ம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கிறதாம்.

---

### செல்வத்தில் மிகுந்தவர் தேகவியோகமடைந்தார்.

ஸ்காட்லண்டில் வசித்தவரும், நிலக்கரி சுரங்கங்களின் தலைவருமான மிஸ்டர் வில்லியம் வோ என்ற தனவந்தர் சமீபத்தில் இறந்துபோய்விட்டார். இவருக்கு இருபத்திரண்டு கோடியே இருபத்தைந்து லக்ஷத்து எண்ணாயிரத்து இருநூற்று அறுபத்தொன்பது பவுன் மதிப்புள்ள பூஸ்திதிகளிருப்பதாகத் தெரியவருகிறது. ஐயோ பாபம்! இப்பெருந்தனவந்தரையும் இயமன் விட்டானில்லையே!

---

### பாய்பின்னும் தொழிலும் ஜப்பானியர் ஊக்கமும்.

பாய்பின்னுந் தொழிலில் ஜப்பானியரே முதன்மைப் பட்டவர்களாவார்கள். ஆனால், இவர்கள் பாய்களைப் பின்னி அன்னியதேசங்களுக்கனுப்பும் வியாபாரத்தைச் செய்து வந்ததில் அனேகமாய் அமெரிக்காவே ஜப்பான்பாய்களை வாடிக்கையாய்வாங்கிவருகிறார்கள். ஆனாலிப்போது அமெரிக்காவில் புதுமாதிரியான ஓர் வித பாய்பின்ன ஆரம்பித்திருக்கிறார்கள். இது கண்ட ஜப்பானியர் தங்கள் வியாபாரம் நின்று போகுமெனக்கருதி அமெரிக்கருக்குப் போட்டியாக அவர்கள் செய்யும் புதுதினுசு பாய்போலவே இவர்களும் செய்ய முயன்றுவருகிறார்கள். இவர்கள் இயற்கையாய் மூன்றுவித கோரைகளால் புது தினுசான பாய்கள் செய்துவருவதுடன், இன்னும் பலநூதனபாய்களைச் செய்து தங்கள் வியாபாரத்தை அதிகப்படுத்தும்முயற்சியைச் செய்து வருகின்றனர்.

### ஒரு செம்படவனுக்கு அகப்பட்ட முத்துச்சிப்பி.

பம்பாய்க் கருகாமையில் ஒரு செம்படவன் முத்துக்குளிக்கு மிடத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்தான். அப்போது ஓர் தரம் அவனது வலையில் மீனுடன் முத்துச்சிப்பியொன்று வந்தது. ஆனால், அதை அவன் கவனிக்காமல் மற்றவேலையையும் முடித்துக்கொண்டு வழக்கம்போல் சந்தைக்குச் சென்று மீன்களை விற்கும்போது முத்துச்சிப்பியைக் கண்டு அதை எடுத்து வைத்துக்கொண்டான். பின்பு அந்த சிப்பியை எடுத்துக்கொண்டுபோய் ஒரு மார்வாடியினிடம் விலைக்கு விற்கும்போது அதனை அந்த மார்வாடி அணா 8-க்குக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவ்வழியே சென்ற ஒருவன் அந்தமுத்துச்சிப்பியை ரூபாய் 5-க்கு கேட்டான். இதற்குள் அவ்வழியேவந்த மற்றொருமுத்துவியாபாரி, தான் ரூபா 200 கொடுப்பதாகச்சொன்னான். இதனைக்கண்டு செம்படவன் சந்தேகங்கொண்டு இந்த முத்துச்சிப்பி நல்ல விலை போகக்கூடுமென்ற எண்ணத்துடன் உடனே பம்பாய்க்குச்சென்று ஓர் வியாபாரியினிடம் காட்டினான். அந்த வியாபாரி அந்த முத்துச்சிப்பியை பிரான்சுக்கு அனுப்பவே அதை 6000 பிராங்க்ஸ் விலைக்கு விற்கப்பட்டதாம். ஆனால், அத்தொகையில் செம்படவனுக்குப் பாதிதான் கிடைத்ததாம்.

---

### காருண்யமுள்ள கன்னிகைகள்.

ஆஸ்டிரேலியா தேசத்தைச் சார்ந்த ப்ரேச் என்னுமூரிலுள்ள ஓர் எந்திர சாலையில் தொழில் செய்துக்கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளை அகஸ்மாத்தாய் ஒரு எந்திரத்தில் மோதுண்டதில் உச்சந்தலைச் சதை வெட்டுண்டுபோயிற்றாம். அப்பெண்ணின் பிராணனைக்காப்பாற்றுவதற்கு முன்வந்த இரண்டு டாக்டர்கள் வேறு பெண்களுடைய தசைவேண்டுமென்று சொன்னார்களாம். அது கேட்டு ஒரு கனவான் தசையை அறுத்துக்கொடுக்கும் பெண்களுக்கு தகுந்தவெகுமதிகொடுப்பதாகவாக்களிக்கவே பணத்துக் காசைப்பட்டு நூற்றுக்கணக்கான பெண்கள் தங்கள் தசையைக்கொடுப்பதாக முன்வந்தார்களாம். உடனே டாக்டர்கள் ஆப்ரேஷன் செய்யக்கூடிய ஆயுதங்களையெடுத்துக்கொண்டு அப்பெண்களிடம்சென்றதும்அவர்கள் ஒருவர் பின்னொருவராய் ஓட்டம்பிடித்தார்களாம். ஆனால், அதிலொருத்திகிடைக்கும்

பொருளைக் கொண்டு தன் பிள்ளைகளைக் காப்பாற்றும் நோக்கமாக தைரியத்துடன் நிற்கவே இதனைப் பார்த்துக்கொண்டிருந்த மூன்று பெண்கள் தசையைக் கொடுக்கத்தாங்கள் உடன்படுவதாகவும் இனும் கொடுப்பதாக வாக்களித்த கனவான் அப்பொருளை மேற்கண்ட ஏழை பெண்பிள்ளைக்கே கொடுத்துவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அவர்கள் தசையைக் கொடுக்க இசைந்தனரென்றும், அப்பெண்களின் தடையிலிருந்து தசையை வெட்டியெடுத்துக் காயப்பட்ட பெண்ணின் தலையில்வைத்து சரிசெய்தார்களென்றும், கடைசியில் நால்வரும் சுகப்பட்டு வீடுசென்றார்களென்றும் சொல்லப்படுகின்றது.

---

## சிலபொருள்கள் ஏற்பட்ட வருடத்தின் ஞாபகம்.

1461-ம் வருஷத்தில் போஸ்டாபீசும், 1477-ம் வருஷத்தில் கைக் கெடியாரமும், 1493-ம் வருத்தில் அச்சாபீசும், 1559-ம் வருஷத்தில் நான்கு சக்கர வண்டியும், 1588-ம வருஷத்தில் பத்திரிகையும், 1590-ம் வருஷத்தில் தூரதிருஷ்டிக் கண்ணாடியும், 1783-ம் வருஷத்தில் ஆகாய விமானமும், 1829-ம் வருஷத்தில் நெருப்புகுச்சியும், 1830-ம் வருஷத்தில் இரும்பினால் செய்யப்பட்ட ஸ்டீமரும், 1830-ம் வருஷத்தில் ஸ்டீல்நிப்புகளும், 1839-ம் வருஷத்தில் சாதாரண கவர்களும், 1860-ம் வருஷத்தில் கோச் வண்டிகளும் முதன் முதலாகச் செய்யப்பட்டு உபயோகத்துக்கு வந்ததாகத் தெரியவருகிறது

---

## நீண்டநாள் பட்டினியோடு இருந்தவன்.

பிரான்ஸ் தேசத்துப் பட்டாளத்தைச் சேர்ந்தஒருஉத்தியோகஸ்தன் 100-அடி ஆழங் கொண்ட ஓர்சுரங்கத்தின்பக்கத்திற்செல்லுகையில் கால்தவறி அதில்விழுந்து விட்டானாம். அது சமயம் அவனை ஆதரிப்பாரற்று 28-நாள்வரை பட்டினியோடு கிடக்கையில், அவ்வழியே சென்ற ஒருவன் அச்சுரங்கத்தில் அழுகைக்குறல் கேட்டு சோதித்துப் பார்த்ததில் பட்டாளத்தான் பேசுதற்குஞ்சக்தி யற்றிருந்ததைக் கண்டு உடனே அவனுக்கு ஆகாரம்கொடுத்து சாந்தப்படுத்தி விசாரணைசெய்ததில், அவன் தன்னை எடுத்து வெளியே எடுத்துவிடுவாரின்றி அச்சுரங்கத்திலேயே 28-நாள் வரையில் பட்டினியோடிருந்ததாகச் சொன்னானாம்.

## செம்பு பாத்திரங்களும். அதனால் நேரிடும் கெடுதல்களும்.

சாதாரணமாய் நமது வீடுகளில் செம்புபாத்திரங்களையும் வழங்கிவருகிறோம். இப்பாத்திரங்களில் சமையல்செய்வதாலும், மற்றும்வேறு பதார்த்தங்கள் வைத்தும் உபயோகப்படுத்துவதாலும், ஆகாரங்கள்அதில் அதிகநேரமிருப்பதினால் கெட்டுப்போய் விடுகின்றதென்றும், அதைப் புசிப்பதால் தேக சௌக்கியத்திற்குக் கெடுதலுண்டாகி, வயற்றுக்கடுப்பு முதலாகிய வியாதிகள் உண்டாகிறதென்றும் சிலடாக்டர்கள் சொல்லுகிறார்கள்.

---

## ஒரு ஹோட்டல்வைப்பதற்கு முப்பதுலக்ஷம் பவுன் செலவு.

நியூயார்க் என்னும் நகரத்தில் வசிக்கும் ஓர் தனவந்தன் ஹோட்டல் வைப்பதற்கு முப்பது லக்ஷம்பவுன் மதிப்பிட்டு ஊருக்கு மத்தியில் நான்கு புறமும் வாயல்கள் உடையதாய் ஓர்கட்டிடம்கட்டி வருகின்றாராம். இக்கட்டிடத்தில் 25-மெத்தையும் 1600 படுக்கைஅறைகளும் 1000 ஸ்நானக் கட்டங்களும் அமைக்கப்படுமாம். ஆனால் இக்கட்டிடம் கூடியசீக்கிரம் முடிவு பெறுமென்றும், இதற்குமட்டும் பதினைந்துலக்ஷம்ரூபாய்தான் செலவாகுமென்றும் சொல்லப்படுகின்றது

---

## ஆச்சரியப்படத்தக்க மெழுகுவத்தி.

உலாந்து தேசத்தில் புதிதாக ஓர் மெழுகுவத்தி செய்யப்பட்டுவருகிறது. அதன் உயரம் 16 அடியும், அகலம் 18-அங்குலமும், நிறை400 ராத்தலென்றும், அதற்கு பிடிக்கும் செலவு 300-பவுன் என்றும் சொல்லப்படுகிறது. இப் பிரமாண்ட வத்தியை தினம் எரியவிட்டால் 9-வருஷத்திற்கும், வருடம் ஓர் நாள் எரியவிட்டால் 3000-வருடத்திற்கும் உபயோகப்படுத்தலாமெனப்படுகிறது.

---

## முத்தமிடுந் தொழிலைச்செய்து பொருளீட்டும் பெண்கள்.

ஒஹியோவைச் சேர்ந்த சாலமி என்ற நாட்டில் வசிக்கும் சில பெண்கள் அன்னிய புருஷருடன் முத்தமிடுந் தொழிலைச் செய்து சுமார் 2000 பவுன் சம்பாதித்தார்களாம். ஆனால், இப்பெண்களிடம் முத்தமிட இசையும் புருடர்கள் ஒவ்வொருவரும் தடவை ஒன்றுக்கு (நான்கு ஷில்லிங்) அதாவது ரூபா 3 கூலி கொடுக்க வேண்டுமாம்.

## தெப்பப்போன்ற ஒரு நவீனஉடுப்பு.

கப்பல்யாத்திரைசெய்வோருக்கு இடையில் பலவித விபத்துகள் நேரிடுதல் இயல்பாக யிருப்பதைக்கருதி இனியும் அவ்விதம் நேராமலிருக்க தகுந்தவழிகளை செய்யும்பொருட்டு சர்வதேசக் கான்பரஸ் ஒன்றுலண்டனில் நடத்தப்போகின்றார்கள் அக்கான்பரன்ஸுக்கு செல்லும்சிலரிடம் ஓர் தையற்காரன் தான்புதிதாய்க் கண்டுபிடித்த நவீனஉடுப்பொன்றைக் கொண்டுவந்து காட்டி இதாப்பலில் ஆபத்துநேரிடுங்கால் தெப்பத்துக்குபதிலாக ஒருவன் உடுத்திக்கொண்டு செல்லலாமெனச் சொன்னான். அவ்வுடுப்போரப்பரும்அலுமினியமும் கலந்துசெய்யப்பட்டதாகும். ஆனால் அந்த தையற்காரனே அந்தஉடுப்பை உபயோகப்படுத்திக் காட்டும் பொருட்டு பலமேதாவிகளின் முன்பாக அதனைத் தரித்துக்கொண்டு "தேம்ஸ்" என்ற ஓர் நதியில் குதித்தான். அந்த நதிபோ அதிக ஆழமுடையது. அதில் அவன் ஒருமணி நேரம் வரையில் நீரின்மேல் படுத்திருந்தானென்றாலும் அந்த நீரோட்டமானது அவனை சிலதூரம் கொண்டுபோய் விட்டது. அது சமயம் அவனது காப்புக்காக அவன் போகுமிடமெல்லாம் நீராவிக் சப்பல்கள் அனுப்பப்பட்டது. அந்த உதவியை அவன் விரும்பாமலும், தமது தேகத்தை கிஞ்சித்தும் நினையாமலும் கரை சேர்ந்தான். இந்த நுட்பமான உடுப்பு தோணியைப் பார்க்கிலும் மிக மேலான தாகத் தோன்றுவதால் கூடிய சீக்கிரத்தில் உபயோகத்துச்கு வருமென்றே நம்புகின்றோம்.

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள் குருபூஜை.

சென்னை, சமரசஞானசங்கத்தின்6வது வருஷோத்ஸவமாக பிரதிவருஷம்போல், பிரமாதீசவருஷம் மாசிமீ 5உ (16-2-14) சோமவாரம் விசாகநக்ஷத்திரங்கூடிய புண்ணியதினத்தில் திரையின்றிய கடல்போல சித்தசலனந்தீர்ந்து தெவிட்டாதபரமானந்த வடிவமாக விளங்கிய ஸ்ரீ தாயுமானசுவாமிகளின் 252-வது குருபூஜை சென்னை வண்ணாரப்பேட்டை, யோகானந்தாஸ்ரமத்தில் நடைபெறும். அன்றுகாலை சுவாமிகள் திருவுருவத்திற் கலங்காரதூபதீபாராதனையும், பகலில் மகேஸ்வரபூஜையும், மாலையில் சிலபெரியோர்களால் சத்விஷயமான பிரசங்கங்களும் செய்யப்படும். அன்பர்கள் யாவரும் விஜயஞ்செய்து நேத்திரசுரோத்திரானந்த புண்ணிய பலன்களைப் பெருவாராக. பொருளுதவிபுரிய விரும்புவோர் முன்னதாகசெய்தல் நலம்.

## திருவண்ணாமலை விஸ்வப்ராம்மண சத்திர தர்மகைங்கர்யம்.

இதனால் விஸ்வப்பிராம்ஹண சந்ததியாரனைவருக்கும் தெரிவிப்பதுயாதெனில்:— ஷை சத்திரத்திற்கு சிலபுண்ணியர்களுதவியால் 7000-ரூபாவரை செலவிட்டு சத்திரக் கட்டிடங்கள் பூர்த்தியாய் விட்டன. இப்போது பின்கட்டில் சமையலறைகள் கட்டுவதற்கும், பூச்சுவேலைக்கும், சுமார் 5000 - ரூபா வரை செல்லுமானபடியால் இதுவிஷயமாக சென்னைக்கு வந்திருந்தேன். சூளையில் பிரம்மஸ்ரீ ருத்திரப்பாச்சாரியாரும்- பிரம்மஸ்ரீ பெ. கிருஷ்ணசாமிஆச்சாரியாரும் ஒருவாரம் வரையில் என்னுடன் இருந்து என்னையும் ஆதரித்து நம்மவர்களிடம் ரூபா 50 - க்கு மேல் வசூல்செய்து கொடுத்துகௌரவப்படுத்தி அனுப்பினார்கள். இதுபோலவே சென்னை இராஜதானியிலுள்ள நம்மவர்கள் எல்லோரும் ஷை விஷயத்தில் ஊக்கங்கொண்டு தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து ஷைகைங்கர்யத்தைப் பூர்த்திசெய்விப்பதற்காகிய பிரயத்தனம் செய்வீர்களென்று. வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சங்கராபுரம்,
தா-வேங்கிடசுப்பாச்சாரி.

## ஸ்ரீ வேங்கட சாஸ்திரியார் சரித்திரம்.

கேளுங்கள்சாதுக்களே! அஸ்தினுபுரிக்கருகில் தனேஸ்வர மென்கிற ஊருக்கு சிறிது தென்கிழக்கிலுள்ள அநுஜாவென்னும் திவ்விய திருப்பதியில்வாழ்ந்து பக்தி செய்து முத்திபடைந்த அம்பிகை பக்தரின் சரித்திரத்தைச் சொன்னோம். இனி வேங்கடசாஸ்திரி என்னும் திருநாமத்தையுடைய பரம சாதுவானவர் பரமேஸ்வரனது தண்ணருள்நீழலுக்குப் பாத்திரரான திவ்விய சரித்திரத்தை எடுத்துச் சொல்லுகிறோம்; என்று காபாசி முனிவர் நவிலத்தொடங்கினர்.

உத்தரதேசத்தில் அம்பாலா என்னும் நகரத்தில், பஞ்சப்ரம்ஹ குலத்தில் ஜனித்தவரும், சிவபெருமானிடத்தில் அன்பைப்பதியச் செய்தவரும், நல்லொழுக்கங்களில் சிறந்தவரும், வேதாதி காசங்களின் பொருளை யுணர்ந்தவரும், அடியார்களுக்கு அறுசுவை யமைந்த உணவுகளை அன்புடன் வேண்டிய வாறு அமுது செய்வித்தவருமான வேங்கட சாஸ்திரி என்பவர் ஒருவர் இருந்தார். அச்சிரேஷ்டர் பிரதிதினமும் அவ்வூர் குளக்கரையி லிருக்கும் சிவலிங்கப் பெருமானை கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, என்கிற பல வகைப்பட்ட புஷ்பங்களையும், தெய்வீகத் தன்மையுள்ள பைந்தளிர்களையும் கொண்டு அர்ச்சித்து அறுசுவையன்னம் படைத்து, நிவேதனம் செய்து வணங்கி தமது இல்லம் அடைந்து தம்மை நாடி வருவோர்க்கு ஜோதிஷம் சொல்லி அதன் வழிவரும் ஊதியங்கொண்டு ஜீவித்து பரமசிவனிடத்தில் பேரன்புவைத்து பக்தி செய்துவரும் காலத்தில், சாக்ஷாத் அண்டரண்ட சராசரங்களுக்கும் அதிபதியாய் விளங்கும் பரமேட்டியாகிய பரமசிவன் இவரது அன்பை பரிசோதிக்க தமது இருதய கமலத்தில் நினைந்தார். நினைந்த மாத்திரத்தில், இவருக்கு பெருமிடித் துன்பம் வந்துற்றது. அடியார்களுக்கு அன்னம்படைக்கும் நியமனம் மாறிப் போய்விட்டது. அன்றியும் பரமசிவனுக்கு நிவேதனத்திற் குரிய தேவதாப் பிரசாதம் தயார் செய்வதற்கும் செல்வம்கிடைப்பது துர்லபமாயிற்று. இக்கொடியவறுமையிலேயும்கூட பரமசிவனுக்கு சிவாகம விதிப்படி பால், தயிர், தேன், இளநீர், அன்னம், சொர்ணம்முதலிய அபிஷேகங்களைச் செய்துமறுபடியும் சுத்தோதக ஸ்நானம் செய்வித்து மான்மதம், கலவைச்சாந்து முதலியவை அணிவித்து திவ்விய பரிமள கந்த புஷ்ப அலங்காரார்த்தம்செய்து அக்ஷதையிட்டு திவ்விய பீதாம்பரத்தால் போர்வை யுடுத்தி, தீபநைவேத்திய தாம்பூல பலாதிகளை அப்பெருமானுக்கு சமர்ப்பித்து கர்ப்பூர நீராஞ்ஜனம்செய்து பஞ்சாக்ஷர மந்திரத்தை உச்சரித்து சிவத்தியானம் செய்து கொண்டு இருந்தார்.

இந்தப்பிரகாரம் வேங்கடசாஸ்திரி என்பவர் தாரித்திரியம் என்கிற கடலிடைப்பட்டு உழன்று தமது ஆயுள் நாளைக்கழித்துக்கொண்டு சிவபெருமானிடத்தில் பக்தியில் நிற்புழி, ஓர் சமையம் மூன்றுநாள் முழுவதும் தாமும்தம்மனைவியும் ஆகாரத்திற்கு வழியின்றி உபவாசமா யிருந்தார்

கள். அப்பொழுதும்கூட, சுவாமிக்கு இன்று நிவேதனஞ் செய்வதற்கில்லையே, நம்முடன் உபவாச மிருக்கச் செய்துவிட்டோமே; என்று விசனத்துளாழ்ந்தார். கன்றுவருந்தக்கண்ட ஆவைப்போல் பதைத்தார். பெருமூச் செறிந்தார், ஐயகோ வென்று. விழுந்தெழுந்தார். 'ஐயனே! உமக்குப்பசிப்பிணி வருத்தாநிற்குமே' என்று ஏங்கினார். பரசிவனை பசித்திருக்கச் செய்தோமே, கொடுமை, கொடுமை என்று அலறி கண்ணீர் பெருக்கினார். இவைற்றைக் கண்டவர் கேட்டவர் ஓடோ ஓடியும்வந்து, "அய்யா சாஸ்திரிகளே! நீர் இதுகாறும் இல்லாமல் இன்றைக்குப்பெருங்குறலிட்டுக் கதறுகின்றீரே எனக்கேட்டலும் "சாஸ்திரிகள் அந்தோ! எனது வழிபடு கடவுளாகியசிவலிங்கப் பெருமானை இன்று பசித்திருக்கச் செய்துவிட்டேன். என் செய்வேன்! இப்பழி எச்சென்மத்தில் தீரும், மகா அபராதம் செய்துவிட்டேனே,.நீலகண்டத் திருமேனியார் எவ்வாறு பசியைச் சகிப்பார். நிவேதனத்திற்கும் சிறிதும் அமுது கிடைப்ப தரிதாய் விட்டதே, என் செய்வேன், என் செய்வேன்!" என்று இரங்குவதைப் பார்த்து ஆங்கு கூடிய ஜனங்கள் "அய்யா! சாஸ்திரியரே, நீரோ போசனமின்றி மூன்று நாளாய் உபவாச மிருக்கின்றீர். இந்தகைய தாரித்திரியத்தில் அழுந்தி உழலும் உமக்கு சிவபூஜை யேன்? நிவேதனமேன்? உம்முடைய குக்ஷிபாதையை நீக்கிக்கொண்டல்லவோ சுவாமிக்கு பூஜை நிவேதன முதலியவற்றை கவனிக்கவேண்டும், அப்படிக்கின்றி நீர் முதலில் சுவாமிக்கு அமுது கிடைக்கவில்லை யென்று பரிதபிக்கின்றீரே! இஃதென்ன உமக்கு கல்ல பைத்தியம் பிடித்து விட்டது போல் காண்கின்றது வெகு அழகிது என்றார்கள். மறுபடியும் அவர்கள் சாஸ்திரிகளைநோக்கி நீர் நாடோறும்நிவேதனத்திற்குக்கொண்டுபோகின்ற பல் ஆகார பக்ஷணங்களை கடவுள் புசிக்கின்றாரா? புசிக்குங் கடவுள் நாமிருக்க அதிசயமான வார்த்தையைப் புகல்கின்றீரே, அப்படிஉண்ணத்தக்க சிவலிங்கப் பெருமானா யிருந்தால் அவருக்கு நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர்காணிமானியம் விட்டு அதில் விளையும் செந்நெல்லை அவருக்கு நிவேதனத்திற்குக் கொடுக்கமாட்டோமா? என்று பலவாறு இகழ்ந்துரைத்தார்கள். சாஸ்திரியார் அவர்களை நோக்கி, ஐயா! நீங்களெல்லோரும் ஆள் ஒன்றுக்கு ஒவ்வோர் காணி வீதம்சிவபெருமானுக்கு தானம்செய்து தானபத்திரம் எழுதுவது உண்மையானால் அவர் அமுதருந்துவதை நீங்களே கண்ணாரக் காணலாம் நானே உட்கொள்ளும்படிச் செய்கிறேன். எம்பெருமானை இகழ்ந்து பேசாதீர்கள் இது சத்தியமான வார்த்தையென்று நம்புங்கள் என்றார்.

அவ்வார்த்தைகளைக்கேட்டவர்கள் கூறுகின்றார்கள். அதாவது, நாங்கள் அனைவரும் ஆள்ஒன்றுக்கு ஒருகாணிவீதம் சுவாமிக்கு தானம்செய்து தானபத்திரம் எழுதிக்கொடுக்கத் தடையில்லை. சுவாமி அமுதருந்தாவிட்டால் நாங்கள் விடப்போகும் நிலத்தையும் எழுதிக்கொடுக்கும் தானபத்திரத்தையும் எங்கள்வசமே ஆக்கிக் கொள்வோம். நீரும் தண்டனைக்கு உள்ளாகவேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்தினார்கள்: அவ்வார்த்தைகளைச் செவிசாத்திய வேங்கட சாஸ்திரியார் சொல்லுகின்றார்.

அதாவது, ஐயா! நீங்கள் சொல்வது சரியே, எமது கடவுளாகிய சிவலிங்கப் பெருமான் இன்று உங்கள்கண்காண அமுதருந்தாவிட்டால் உங்களிஷ்டப்படி செய்துகொள்வது மல்லாமல் உங்களால் விதிக்கும்தண்டனைக்கும் உட்படுகின்றேனென, இவைகளைக் கேட்டயாவரும் ஆள் ஒன்றுக்கு ஒருகாணிநிலம்கொடுப்பதாய்தானபத்திரம் எழுதிக்கொடுத்தனர். அதைப் பெற்றுக்கொண்டு அவர்களால் கொடுக்கப்பட்ட ஒருபடி செந்நெல்லரிசியும் பெற்று தமது இல்லமடைந்து மனவியை அழைத்து அம் மாதுசிரோமணியினிடம் அவ்வரிசியை யீந்து, இதைச் சீக்கிரம் கொண்டுபோய் சர்க்கரைப்பொங்கல் செய்து கொடுத்தால் இன்றைய தினம் சுவாமிக்கு அங்கம் குளிர அமுது அருந்துவிப்போம் “என்றனர். பெண்கள்நாயகமாகிய அவரது தர்மபத்தினி அதிவிரைவில்ஸ்நானம்செய்து அதி சுசீலமாய் பாத்திரங்களை சுத்திசெய்து அத்யந்த பக்திசிரத்தையோடு சிவபஞ்சாக்ஷர மந்திரத்தை நாவால் உச்சரித்துக் கொண்டு தன் ப்ராணநாயகர் சொன்னவாறு அட்டுத்தொழில் முடித்து தட்டில்வைத்து பரிசுத்தமான வஸ்திரத்தினால் மூடிக் கொடுத்தார்.

இதற்கு முன்பே சாஸ்திரியார் யக்ஞமுதலிய நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பரிசுத்தராய் ஓர் தட்டில் அபிஷேகத்திற்குரிய நெய், பால், தயிர், தேன், சந்தனம், விபூதி, அரைத்த பச்சிலை சிக்கிலிக் கிழங்கு, வெட்டி வேர் முதலியவைகளும், உடுத்துவதற்குஉயர்ந்த பட்டு பீதாம்பரங்களும், அலங்காரத்திற்கு மஞ்சள், குங்குமம், கந்தம், புஷ்பம், முதலியவைகளும், வாசனைத் திரவியங்களுமாகிய இவற்றை தயாரித்துக்கொண்டுதர்மபத்தினியால் செய்துகொடுக்கப்பட்ட நிவேதன ப்ரசாதத்தையும் எடுத்துக்கொண்டு அங்குள்ள ஜனங்களையும்கூட்டிக்கொண்டுபோய் சுவாமி சந்நிதானம்சேர்ந்து சாஸ்திரோக்தமாய் ருத்திரநமகசமக பாராயணத்தோடு அம்பிகாநாதனுக்கு அபிஷேக அலங்காரார்த்தம் செய்து, கொண்டுபோன பிரசாதத்தை சுவாமிக்கு முன்பாக வைத்து ஆனந்தபரவசராய் ஸ்தோத்திரம் செய்து பலப்ரசாத தாம்பூலம் சமர்பித்து கற்பூர நீராஞ்ஜனம்செய்து, அன்புடனின்று ஐயனே! கைலாசவாசா! தேவதேவா! ஜீவாத்மபரிபூரணா! சந்திரசேகரா! கங்காதரா! நீலகண்டா! காலகாலா! என்றுசிவநாமங்களை உச்சரித்து, இன்று தேவரீரை இகழ்ந்துபேசும் இக்கொடிய பாதகரோடு சபதம்கூறிக்கொண்டேன். அச்சபதத்தை நிறைவேற்றவேண்டும். அஃதி யாதெனில், யான்கொண்டுவந்த பிரசாதங்களை நீர்வுட்கொள்ளவேண்டும். இல்லாமற் போனால் நான் தண்டனைக்குள்ளாக வேண்டும். நீர் உட்கொண்டால்இவ்விடத்திலுள்ளவர்கள் எல்லோரும் ஒவ்வோர்காணியைதேவரீருக்கு இனாமாகவிட்டு தான தஸ்தாவேஜு எழுதிக்கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

தேவரீர் இவ்விலிங்க சொரூபத்தி லிருப்பதும் உண்மையானால், அடியேன் தேவரீர் திருவடித் தாமரையில் அன்பை வைத்திருப்பதும் உண்மையானால், இப்பிரசாதங்களை வாய்மடுத் துண்ணவேண்டும்; என்று பிரார்த்தித்ததும் சிவபெருமான் அவரது அன்பைவியந்து அவர்நிவேதனம் செய்த அன்னத்தையெல்லாம் புசித்துவிட்டார். அப்போது தேவர்கள்மலர்மாரிபொ

ய்தார்கள். வேங்கடசாஸ்திரி சிரசின்மேல் கூப்பிய கரத்தோடு ஆனந்தக் கூத்தாடினார். அவரது புகழை நாவாரப் பாடினார்.

அப்போது சிவபெருமான் சிவலிங்கத்தினின்றும் எழுந்தருளி அப்பனே! உன்பக்திக்கு நாம் மகிழ்ந்தோம். உன்வார்த்தையை நிலைநிருத்தும் பொருட்டு அன்னத்தையெல்லாம் உட்கொண்டோம், அவர்கள் தானமாகவிடப்பட்ட நிலங்களினின்று வரும் ஊதியத்தைக்கொண்டு எனக்கு இத்தடாகக் கரையிலேயே ஆலயமொன்று கட்டி வைத்து பிரதிதினமும் என்னைப் பூசித்து குபேரசம்பத்தைப்பெற்று நீயும்உன்மனைவியும் சிலகாலம் இவ்வுலகத்தில் வாழ்ந்து எமது திருவடி நீழலில் வந்தடைவீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளி சிவலிங்கத்தில் ஐக்கியமானார்.

அப்போது அச்சிவலிங்கத்தி னெதிரிலிருக்கும் ஆலவிருக்ஷத்தின் கீழிருந்த ஜனங்களில் சிலர் இந்த சாஸ்திரியின் பக்தியைப்பார்க்கலாமென்றும், இவர் செய்யும் பூஜைகளைக்கண்டு ஏளனஞ் செய்து இவரால் என்ன ஆகப்போகிற தென்றும், சிலர் நாம் எழுதிக்கொடுத்த தஸ்தாவேஜு நம்மிடந்தான் வந்து சேரப்போகிறதென்றும், சிலர் நிவேதனம் வைத்திருக்கின்ற பிரசாதத் தட்டின்மேல்மூடிய சீலை மூடியபடியே இருக்கிற தென்றும், சிலர் நிவேதனத்தட்டை எடுத்துக்கொண்டு வந்தால் யாவும் தெரிகிறது என் அவசரப்படவேண்டுமென்றும், பேசிக்கொண்டிருக்கையில் சாஸ்திரியார் பூஜாகாரியத்தை முடித்துத் திரும்பி வரும்போது அவர்களெல்லாம்ஒன்றுகூடி சாஸ்திரியாரை நமஸ்கரித்து பிரசாதத் தட்டைக் காண்பிக்கும்படிச் சொல்ல, அத்தட்டின்மீது மூடியிருந்த வஸ்திரத்தைஎடுத்துக்காண்பிக்க இவ்வற்புதத்தைக் கண்ணாரக்கண்டு சாஸ்திரியாரின்பக்திக்கு ஆச்சரியப்பட்டு அவர்கள் வாக்களித்தபடி சுவாமிக்கு தானமாக நிலங்களைவிட்டு சாசனங்கள் எழுதுவித்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு சாஸ்திரியாருக்கு உதவியாயிருந்து ஆலயம்கட்டுவித்து பக்திமார்க்கத்தில் ஒழுகாநின்றனர்.

அன்றுதொட்டு அவ்வூரார்கள் சாஸ்திரிகளை ஈஸ்வரனாகவும் அவரதுபத்தினியை பரமேஸ்வரியாகவும் மதித்துஅன்புபூண்டு வழிபட்டு வந்தனர். சாஸ்திரிகளும்அவர்களது வந்தனை வழிபாடனைத்தையும் தாம் அங்கீகரியாமல் ஈஸ்வரனுக்கே அர்ப்பணம் செய்து அவர்கள் உஜ்ஜீவிக்கும் வண்ணம் கருணை கூர்ந்தனர். இங்ஙனமே சிலகாலம் இவ்வுலகின்கண் சிவபிரானை வழிபட்டு பின்பு அவரதுதிருவடிநீழலை யடைந்தார்.

சுபம். சுபம். சுபம்.

# விச்வகர்ம குலோபகாரி விசேஷ அநுபந்தம்.

## குடந்தையில் விஸ்வகர்ம கான்பரன்ஸ்.

இப்பெயர்கொண்ட நம்மவர் மஹாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்ற அவசியத்தை வற்புறுத்தி ஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயர் எமக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கின்றனர். இவ்வித நோக்கம் அவ்வூரில் இன்று புதிதாகத் தோன்றினதல்ல. சில வருடங்களுக்கு முன் அவ்வூரில் கூடிய வைசிய கான்பரன்ஸ் முகமாக இவ்வுணர்ச்சி முதலில் தோன்றி அவ்வருடத்திலே நம்மவர் கான்பரன்ஸும் நடத்தவேண்டுமென்றும், வேண்டிய பொருள்சகாயம் செய்ய அவ்வூர் கனவான்கள் பலரும் முன்வந்திருந்ததாகவும் யாம் கேள்விப்பட்டதுண்டு. தென்னாட்டிற்கு முக்கியமான ஸ்தலங்களிலொன்றானதுபற்றி அவ்வூரில் பல ஜாதீய பெருமுயற்சிகள் இடையூறின்றி முடிவு பெற்றிருக்கின்றன. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை அங்கு நடந்த இரண்டு விச்வகர்ம ஸோம யாகங்களே. பண்டித சிகாமணியும், விஸ்வகர்ம குல பூஷணருமான காலஞ்சென்ற ஸ்ரீ கண்ணுஸ்வாமி தீக்ஷிதரவர்கள் முதல் யாகத்தைச் சம்பூர்த்திசெய்து குன்றாப் புகழெய்தினர். இரண்டாவது யாகத்தை இனிது நிறைவேற்றி கீர்த்தி பெற்றவர்தாம் இக்கான்பரன்ஸ் விஷயமாய் எழுதியுள்ளாரென்றால், இவரது குலாபிமானத்தை இங்கு வியந்து கூறல்மிகையேயாம்.

நிற்க, தென்னாட்டில் நம்மவர் கான்பரன்ஸ் நடைபெற வேண்டிய தவசியமே. அதனால் நமது குலத்தினர்க்கு விசேஷ நன்மையுண்டாகலாமென்று நாம் நிச்சயமாய் நம்பலாம். ஆனால் இவ்வித நல் விஷயங்களில் நாம் எதிர் பார்க்கக்கூடிய இடையூறுகளும் எதிர்பாராதபல இடையூறுகளும் நேருவது சுபாவம். திரவியமின்மை, ஒற்றுமையின்மை, உபந்நியாசகர்களின்மை இவை போன்றவைகளே நாம் எதிர்பார்க்கக் கூடிய இடையூறுகள், எதிர் பாராத இடையூறுகளைப்பற்றி யாம் பேசுவது வியர்த்தமாகையால் அதனைக் கவனியாது, எதிர்பார்க்கக்கூடியதுமேலே கூறிய இடையூறுகளைப்பற்றியும், அவைகளை குடந்தை கான்பரன்ஸ் அபிமானிகள் எவ்விதம் தவிர்த்து எடுத்த அரும்பெரும் காரியத்தை முடிப்பார்களென்பதையும் நாம் ஆலோசிக்கவேண்டிய தவசியமாகிறது. முதலில் திரவியமின்மையை எடுத்துக் கொள்வோம். இம்மஹா நாட்டிற்கு, சென்னை இராஜதானி முழுவதுமிருந்து பிரதி நிதிகள் வருவதாகவும், அவர்களின் தொகை சுமார் 1000 மென்றும், அம்மஹோற்சவம் மூன்றுதினமென்றும் வைத்துக்கொண்டு, இவர்கட்கு போஜனாதி வசதி முதலாகிய சௌகரியங்கள் முட்டுப் படாமலும், கௌரவஹானி நேராமலு முதவி உபகரிக்க வேண்டுமானால் தலையொன்றுக்கு ஒரு ரூபாய் விழுக்காடு வைத்தால் நாளொன்றுக்கு ரூ. 1000 மும், 3-நாளுக்கு ரூ. 3000ம் வேண்டும். இதற்குமேல், மற்றைய டாம்பீகச் செலவுகள் பலவுமிருக்கின்றன. அவைகட்கும் மற்ற சில்லரைச்செலவுகளுக்கும் ஓர் ஆயிரமேனும் வேண்டும். எனவே, இந்நாலாயிர ரூபாயை முதலில் வைத்துக் கொண்டே இத்துணைப் பெரிய காரியத்தை யோசிக்க வேண்டுமேயன்றி ஸ்ரீ உபாத்தியாயரவர்கள் கடிதத்தில் கூறியபடி, சென்னையிலிருந்து சிலர் குடந்தைக்குச் சென்று சுமார் ஒருவாரமோ, இரண்டு வாரமோ தங்கி அவ்விடத்திலேயே வசூல் செய்து ஓர் மஹாநாட்டை கூட்டிக்காண்பிக்க வேண்டுவதும், அதனை நிறைவேற்றிக்காட்டும்வதும் எவ்வளவு அசம்பாவிதமான காரியம். உள்ளூராருக்கே பணம் வசூல்செய்வ தியலாதென்றால் ஒரு வாரமோ இரண்டு வாரமோ தங்கக்கூடிய வெளியூர் குலாபிமானப் பழங்கட்டு எங்ஙனம் அன்னிய ஊரார் கட்டுப்பட்டு தங்கள் பொக்கிஷங்களைத் தடையின்றி திறந்துவுவார்களோ தெரியவில்லை. ஆகையால், உள்ளூர் கனவான்களும், கான்பரன்ஸ் அபிமானிகளும் முதலில் ஒரு கூட்டம் கூடி, அதினின்றும் ஒரு கமிட்டி ஏற்படுத்திக்கொண்டு வசூல் முதலிய காரியங்களை அன்னியர் உதவியின்றி ஆரம்பித்து, குறித்ததுகை சேர்ந்தவுடன் பல ஊர்களிலிருந்து பிரதி நிதிகளைக் கோருவதே அழகாகும். பொருளைச் சேகரி

கும் கஷ்டம் பெரிதாகையால், அதில் தலையிடு முன்னமே, இம்மஹாநாடு நம் ஜாதியரின் தற்கால நிலைமைக்கு, அவசியமாவென்றும், அதில் ஆராய்ந்து தீர்மானத்திற்குக்கொண்டுவரவேண்டிய விஷயங்களையும், அவைகளின் ஆவசியங்களைப் பற்றியும், அவைகளினால் குலத்திற்கோர் சாஸ்வதமான நன்மை யுண்டாகுமா வென்றும் நன்காலோசிக்கவேண்டியது நமதுக்கடமையாகும். இதைவிட்டு,ஓர் உல்லாசக் கூட்டம் மூன்றுநாள் கூடி பிறகு ஒரு உபயோகமான வேலையுஞ்செய்யாமல் உறக்கங்கொள்வதற்கோ இவ்வித நிற்பாக்கிய ஸ்திதியில் ஆயிரக்கணக்கான தொகையை செலவிடுவது?

இவ்வித அரும் பெருங் காரியங்களை நிறைவேற்ற ஒற்றுமையே இன்றியமையாத சாதனமாகும். இதனையும் யோசிக்குங்கால் குடந்தைவாசிகளிடம் ஒற்றுமைப் பெருக்கமிருப்பதாகத் தெரியவில்லை. இதனை வெளியூராரைப் பணவசூலுக்கு அழைப்பதிலிருந்தே ஒருவாறு ஊகித்தறியலாம். அவ்வூரில் பலவருடங்களுக்கு முன் ஒற்றுமையிருந்ததென்றும், ஜாதியின் சுபாவத்திற்கேற்பதற்காலம் கட்சிப்பிரதிகட்சிகள் ஏற்பட்டு ஊர் இரண்டுபடாமல் மூன்று, நான்குமுதலிய தொகைக்குமேல் பிளவுபட்டிருப்பதாகத் தெரிந்திருக்கிறேன். இப்படியிருப்பதுஒருஅதிசயமல்ல.எல்லாவளமலிந்த இச்சென்னையிலேயே கட்சிப் பிரதி கட்சிகளுண்டாகி, ஒழுங்கீனமான நடவடிக்கைகளில் மனமேவி அதனைக்குறைவற நடத்திவருகிறார்களென்றால், வெளியூரைப்பற்றிக் கேட்பானேன்? கூரையேறி கோழிபிடிக்கக் கூடாத இச்சென்னைவாசிகளா அன்னியஊராருக்கு வானத்தைக்கீறி வழிகாட்டப் போகிறார்கள்? இவ்வித மயக்க உணர்ச்சியை இனிதவிர்த்து, சுயம் பிரயாசையை மேற்கொண்டு, ஜாதீய நற்காரியங்களை செய்து முடிக்கவேண்டுமே யன்றி, அந்நியர் உதவியை மலையாக எண்ணி வீணே அவலம்பிக்கலாகாது. "அக்கரைக்கிக்கரை பச்சை" என்பதையும் "தூரதிருஷ்டிக்கு தோப்பு நெருங்கிப் பார்த்தல் தனிமரம்" என்னும் பழமொழிகளாற் றூண்டப்பட்டவர்களாய் மலைப்புதீரவேண்டும். நிற்க, உபந்நியாசகர்களைப் பற்றியோசித்தால்அப்பெயர் கொண்ட பூமான்கள் நம்குலத்தில் மலிந்துகிடக்கவில்லை. அவர்களின்தொகையை நமதுகைவிரலில் எண்ணிவிடலாம். உயர்தரக்கல்விவாய்ந்திருப்பதாகச்சொல்லிக்கொள்பவர்களிடமே பிரசங்க சக்தியும், பிறருக்கு எடுத்துரைக்கும் வன்மையுமில்லை. ஓர் சிறிய கூட்டத்தில் இரண்டொருவார்த்தை பேசி அமர்வதற்குள் வியர்வைப் பெருகி, ரோமம் சிலிர்த்து, நாக்குழறி, எடுத்ததொன்று முடித்ததொன்றாகப் போவதை நாம் இச்சென்னையில் கண்ணாரக்காண்கிறோம். கதவை அடைத்துக்கொண்டு, பேனாவை ஆழத்தோய்த்து, விதண்டவாதங்களை எழுதுவது ஒருவாறு கூடுமேயன்றி சபாரஞ்சிதமாகவும், சமயோஜிதமாகவும், ஓர் பெருங் கூட்டத்தின் கவனத்தைமுழுதும் தம்மிடத்து கிரஹிப்பதென்றால் பெரும் சிரமமல்லவா? நாஷனல் காங்ரஸ் முதலிய மஹாநாடுகளில் சிங்கம் போல் கர்ச்சித்து, பேரிரைச்ச விட்டுப் பேசி மெச்சப்பெற்றகனவான்கள்ஒருவரேனும் நமது உயர்தரக் கல்வி வாய்ந்தவகுப்பிலிருக்கிறார்களா? அந்தோ!நம்குலத்திற்கு இதை விட தௌர்பாக்கியம் வேறுண்டோ?

இவ்விடையூறுகளை யெல்லாம் யோசித்தால் நம்மவர் கான்பரன்ஸ் கூடுவது சுலபசாத்தியமான காரியமன்று. ஆகையின் நம்மவர் முதலில் ஜில்லா கான்பரன்ஸுகளை கூட்டிப் பழகவேண்டும். தங்கள் ஜில்லா வாசிகளான ஓர் தலைவரைத்தெரிந்து எடுத்துக்கொள்ளவேண்டும். தாங்களே அதற்கு வேண்டிய திரவியம் சேகரிக்க வேண்டும். தங்களுக்குள்ளே உபந்நியாசகர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். கான்பரன்ஸ் நடத்துமுறைகள் தெரிந்தவர்களுண்டானால் அவர்கள் சகாயத்தை உள்ளூரிலேயே கோரவேண்டும். இல்லையென்றால், வெளியூரிலிருந்து சிலரை சகாயிகளாக அழைக்கலாம். இவ்வித சிறிய முயற்சிகளால் பழக்கமும், சிக்கனமும் பெறலாம். இதில் செலவிடும் பொருளும்விரயமாகாது. இவ்வித சிறுமுயற்சிகளே நாளடைவில் பெரியபயனைத் தருவனவாகும். எமதபிப்பிராயம் தப்பென்றால், அதைப் பற்றி மறுமுறைபேசவும், மற்றைய அபிப்பிராயங்களை வெளியிடவும் தயாராயிருக்கின்றோம்.

**கோ. கன்னியப்பாச்சாரி,**
சென்னை.

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ரஹ்மணே நம

# விஸ்வகர்ம குலோபகாரி.

## நங்குலப் பெண்கல்வி.

அலைகடல் சூழும் அகிலத்தின் கண் அடையக்கூடிய இன்பங்களனைத்தையும் அடைபவர்கள் மானிடரேயாவர். அம்மானிட வகுப்பைப் பிரிக்குமிடத்து, அவர் ஆண் பெண்ணென இருவகுப்பாய் விளங்குகின்றனர். இவ்விருவகுப்பினருமே உலகத்தின் இன்பங்களைப் பெரிதும் அடைய உரித்தானவர்களா யிருக்கின்றார்கள். ஆடவர்கள் அவ்வின்ப சுகத்தை எத்துணை அநுபவிக்க வேண்டியவர்களெனவும், பெண்டீர் அதனை எவ்வளவு அநுபவிக்க வேண்டியவர்களெனவும், சற்றுவிசாரிக்கப்புகின், பொதுவாய் அவ்விரு வகுப்பாருமே அவரவர்கட் குரிய இன்பங்களை யநுபவிக்க உரியவராகிறார்களே யன்றி, ஒரு சார்பார் அதனை மிகுதியாகவும், பிறிதொரு சார்பார் அதனை குறைவாகவும் அநுபவிக்கும் வண்ணம் இயற்கையில் அமைக்கப்படவில்லை யென்பது தெற்றென விளங்கும். அன்றியும், தனித்து அடையக்கூடியஇன்பங்கள்ஒருபுறமிருக்க, ஆடவர் மகளிர் இருவரும் ஒருமித்து அடையவேண்டிய இன்பங்களும் உள, ஏனெனின், ஆணின்றிப்பெண்ணிலை, பெண்ணின்றிஆணிலை; என்ற சாம்பிரதாயம் யாவரு மறிந்ததன்றோ? ஆனது பற்றி, ஞானம், ஆண் பெண்ணாகிய இருபான்மையருக்கும் பொதுவென்றும், அதனைப் பெறுவதாகிய வழியில் அவர்கள், முயன்று, அதனை அநுபவித்த லத்தியாவசியகமென்றுமேற்படுகின்றன. ஞானம், கல்வி வழியில் அடைவதன்றி வேறு சுலபவழியில் அடையக்கூடியதன்று. கல்வி எத்துணை அதிகமாகவும், ஊக்கமாகவும், கற்கப்படுகிறதோ அத்துணை மடங்கு அறிவுதானேவிசாலிக்கும்இயல்புடைத்து. இங்ஙனமிருக்க, நம்மவரிற்சிலர், ஆடவருக்கேபோதுமான கல்விஞானம் தற்காலத்தில்லையாகையால், அதனை அவர்களடையும் வரையில், பெண்டிருக்கு அஃதிப்பொழுது அநாவசியகமென்று நினைப்பதும், அதனை வாய்ப்பறை சாற்றுவதும் தொழிலாகக்கொண்டிருக்கின்றனர்.

இது சமுத்திரத்தின் அலைகள் ஓய்ந்த பின்னரே ஸ்நானஞ்செய்யக் கருத்துகொண்டு காத்திருந்தவன் செயலை ஒக்குமன்றோ? சமுத்திரத்தின் அலைகள் ஓய்வதெக்காலம்? இவ்வறிஞன் தலைமூழ்கித் திருப்தியுறுவது எப்பொழுது? ஆகையின், ஆடவர் கல்வியில்கவனத்தை இப்பொழுது செலுத்திவருவது போலவே, பெண் கல்வியிலும் நமது கவனத்தை இக்கணமேசெலுத்தக்கடமைப்பட்டவராகிறோம். இன்றேல், நம்மாடவர் கல்விஞானம் மட்டுமே ஒருசிறிதும் குலாபிவிர்த்திக்குப்பயன்படாது. எவ்வாறெனின், இருபத்துநான்கு மணிநேரமுடைய ஒருதினத்தில், பன்னிரண்டு மணிநேரம் நம்முடைய வீட்டில், மனைவி, மக்கள்களுடன் நெருங்கிப் பழகுவதிலும், சம்பாஷிப்பதிலும் நாம் காலங்கழிக்க நேரிடுகின்றதன்றோ, இத்துணை நேரம், வெளியார்களுடன் ஊடாடிப்பழக நமக்கு நேருவதேயில்லை. ஒருவர் தம் நடவடிக்கைகளின்,குணதோஷங்களைப் பெரும்பான்மை தங்கள் நட்பின்வழியாலும், சவகாச விசேஷத்தாலும் பெருகிறார்களென்பது யாமனைவரும் அறிந்த உண்மையாம்.

மதுஉண்போன் கூட்டுறவில் வாழ்பவன் மதுபானத்தை நாடுவதும், கவறாடும் கழகத்தி லுழல்வோன், மிகமிஞ்சி சூதாடுவதும், இயற்கையன்றோ? ஆகையின் சிற்சிலமணிநேரமட்டுமே, சற்சனர் சகவாசத்தைப்பெற்று, பிறகு வீடடைந்து மற்றநேரமுழுதும், கல்வி அறிவிலிகளான மனைவி மக்கள்களிடத்து அன்புடன் பழகுவதும், அவர் மௌட்டீகமொழிகட்குவிருப்பின்றிச் செவிசாய்த்து நிற்பதும், அவர்களைத் திருப்தி செய்வதற்கென்றே அவர்கள் விரும்பும் தகாதசெய்கைகட்கு உடன்பட்டு நிற்பதும், எத்துணை அநர்த்தங்கட்கு ஆஸ்பதமாக விருக்கின்றனவென்பதை நம்மவர்கள்இனியேனும் சிந்திக்கவேண்டும். கல்வி அறிவுற்ற நம் ஆடவர்களே இவ்வாறு துன்பக்கடலில் ஆழ்ந்தால் பெண்களின் அறிவு எவ்வாறு விசாலிக்கும்? இவர்கள் சந்ததி மற்றவர் நிந்தனையினின்றும் தப்புவ தெப்படி?

கல்விஞானத்தாலன்றோ அறம், பொருள், இன்பம், வீடென்னும், நாற்பயனு முண்டாகின்றனவென நூல்கள் அறைகின்றன. ஆகையின் பெண்டிருக்குக் கல்விஞானமென்னும் வித்தை, அவர்கள் மனமாகிய பூமியில்விதைத்துச் சிரத்தையெனும் நீர் பாய்ச்சிப் பாதுகாத்து வருவோமாகில் அறிவென்னும் பயிரானது ஓங்கிவளர்ந்து அதனாலுண்டாகும் பகுத்தறிவாகிய ஞானமே அவர்களை ஆதரிக்காதா? அந்தோ! அவர்களைமானிடவகுப்பிற் சேர்ந்தவரென நினையாது அடிமைகளெனவெண்ணி நமது விருத்தியிலேயே கண்ணுங்கருத்துமாக விருந்து அவர்களைக் கவனியாதிருத்தல் நமது குலத்திற்கும், நம் குலமேம்பாட்டிற்கும் விருத்தமன்றோ? மாதர்கல்வியின் ஆவசியகத்தைச் சுருக்கிக்கூறுமிடத்து, அது நாயகனது சொல்லுக்கு மாறுபாடின்றி நடத்தலும், நாயகனையே தெய்வமாகக் கொள்ளுதலுமாம்.

அங்ஙனம் நடந்து கொள்ளும்வகை யிற்றென அறிந்தொழுகுவது கல்விஞானத்தாலுண்டாகும் பயனன்றோ? நாயகன் தன் தொழிலில் கஷ்டமடைந்து வீடடைய, அவன் தேக சௌகர்யத்திற் கேற்றவாறு உண்டி பாகங்களைச் செய்து அவனுக்குப் பக்குவபாகமாயூட்டிப் பாதுகாத்து வருவதற்குப் பாகசாஸ்திரக் கல்விஞான மவசியமன்றோ? புருடன் ஆனந்தசாகரத்தி லழுந்தும்படி பெரியோர்களின் பாடல்களை இசைகூட்டித் தாளபேத ராகஅபசுரமின்றிப் பாடிப் பரமானந்தத்தி லபிக்கச் செய்வதற்குச் சங்கீதசாஸ்திரக் கல்விஞானம் அவசியமன்றோ? மாமன், மாமி, நாத்தி, மைத்துனன், மூத்தோர்களை ஆதரிப்பதற்கும் அவரவர்களின் குணானுபவங்களைத் தெற்றெனத் தெளிந்து அவர்களுக்குப் பணித்தொழில்புரிவதற்கும், அவர்களதுஆசீர்வசனம்பெற்று வாழ்ந்து வருவதற்கும் அநுபவ சாஸ்திரக் கல்வி ஞான மவசியமன்றோ? புருடனுக்கு வறுமைவந் துற்றகாலத்து ஊனுடை பூஷணாதிகளுக்கு வருந்தாது, அவனனுபவிக்கும் சுகதுக்கங்களைத் தானுமனுபவித்து வாழ்வதற்குரிய நீதிசாஸ்திரக் கல்விஞான மவசியமன்றோ? தானீன்ற குழவிகட்குப் பிணிமுதலியவையணுகா திருத்தற் பொருட்டு வேண்டும் சிகிச்சைக்கு ஒருவரைத் தேடாது அவைகளை தாமேபுரிந்து குறைவரப்பாதுகாத்து வளர்க்குந் தன்மையை யறிந்துகொள்வதற்கு ஆயுர்வேத சாஸ்திரக்கல்வி ஞானமவசியமன்றோ? வறுமையின் கொடுமையால்நம்மக்களைத்தினப்பள்ளிக்கூடங்கட்கு அனுப்ப முடியாமல் நாம் கைதொழிலில் அவர்களை பழக விடுவது சகஜமன்றோ? ஆதலின், அப்பிள்ளைகட்கு இரவில் போதுமானபடிப்பை இலவசமாய்க் கற்பிப்பதற்குத் தாய், சகோதரி முதலியோருற்ற துணையன்றோ? பெண்டிருக்கு அறிவற்ற புருடன் வாய்த்தகாலத்து அவனுக்குப் புத்திபுகட்டி அவனை நல்வழியிற் றிருப்பிவைத்து தானும் புருடனுடன் ஒற்றுமையோடொழுகிக் கற்பையேகலனாகத்தரித்து வாழ்வதற்குரிய கற்புநூற் கல்விஞான மவசியமன்றோ?



இவ்விஷயங்களுக்கெல்லாம் பெண்டிருக்கு நீங்காத்துணையாயிருப்பது கல்விஞானமேயன்றி வேறன்று, ஆதலால்நமது குலோற்பவர்கள் நமது பெண்குழந்தைகட்குச் சிறுவயதிலேயே கல்வி கற்பிக்கப் புகுவார்களாயின், அவர்கள் எவ்வனகாலத்துத் தத்தம் மக்களை அவர் மனம்சென்ற வழி செல்லவிடாமலும், துர்ப்பாஷையை வசனிக்க வொட்டாமலும், துர்நடக்கையையுடைய சிறுவர்களிடம் பழகவிடாமலும், தீயவழிகட் காளாக்காது நல்லவழிக் காளாக்கி வருவார்கள். இதனாற்றான் நம் மக்கள் நல்லொழுக்கம் வாய்ந்த குலமக்களாவர். இக்கான்முளைகளாலன்றோநங்குலம் தழைத்தோங்கி வமிசமும் வாழையடிவாழையாய் வளர்ந்து கல்வியும், செல்வமும், நாகரீகமும் நிறைந்து விஸ்வேஸ்வரன் திருவருட்கிலக்காகும். அஃதின்றி, பெண்டிர் கல்வியைக் கவனியாதிருப்போமாயின், இன்னும் வெகுகாலம் கீழ்நிலைமையிலேயே வாழவேண்டி வரும். ஆகையால், பெற்றோர்கள் எவ்வளவு எளியவராயினும், கல்விஞானமென்னும் ஸ்ரீதனத்தைத் தமக்கியன்றவளவு தங்கள் பெண்மணிகட்குக் கொடுப்பதே நலம். அதுவே நமது குலத்திற் கழகுசெய்யும்.

**பத்திரிகாசிரியர்.**

---

## வாழ்த்துக்கவி.

---

**பதினறடி யாசிரிய விருத்தம்.**

சீர்மருவு புவனமீ ரேழும் படைத்துச் சிறந்தோங்கு ப்ரணவ மூலத்
திருவளர் பராத்பர விராட் விஸ்வ ப்ரம்மத்தின் திவ்யமுக மைந் ததனிடைக்
கார்மருவு மயனரி கனம்பெருகு ருத்திரன் ககனவிறை யிரவி யிவர்கள்
கண்யமனு மயத்வஷ்ட சிற்பி விஸ்வக்ஞராங் கர்த்தாக்க ளாயுதித்தே
பேர்மருவு சானக சனாதன புவனசப் பிரத்னச சுபர்ணச சுரப்
ப்ராம்மணர்க ளாம்விஸ்வ கர்மவம் சோத்பவ ப்ராஜைகளென் ஞான்றும் வாழ்க
நார்மருவு காமாட்சி யாந்தேவி மந்திரமிந் நாடெங்கு மோங்கி வாழ்க
நாட்டமோ டைம்மறைச் சாத்திர புராணகலை நாளுஞ் செழித்து வாழ்க
ஏர்மருவு சிற்பங்கள் முப்பத்தி ரண்டவையு மென்றுநீ டித்து வாழ்க
எண்டிசைய ரோடுநவ ரதிபிரதி தேவர்மூ வெண்மலை ஜொலித்து வாழ்க
தார்மருவு புயபஞ்ச ஜார்ஜுசக் கிரவர்த்தி தனிச்செழுங் கோனும் வாழ்க
தாணிதனி லேப்ரம்ம க்ஷத்ரியவை சியசூத்ர சாதுர்வரு ணத்தர் வாழ்க
பார்மருவு சென்னைநல் விஸ்வகர் மகுலோப காரிபத் திரிகை வாழ்க
பாடசா லையிலுள்ள பாலரோ டார்யர்மிகு பண்புடன் ஓதி வாழ்க
நீர்மருவு கொ. கன்னி யப்பரொடு சுந்தரர் நிலவியே நீடும் வாழ்க
நியமமோ டொதியநகர் நாரண னிதம்போற்று நிமலனடியும் வாழ்கவே.

**நோட்டம் - நாராயண ஆச்சாரியர்,**
**ஒதியத்தூர்,**
**வேலூர் தாலுக்கா.**

69-வது பக்கத்தின் தொடர்ச்சி

## இந்தியசிற்பமும் அதன் முன்னேற்றமும்.

நிற்க, கிரேக்கர்களும், உரோமர்களும், தத்தம் தேவாலயங்களையும், நியாயத்தலங்களையும், பொதுமண்டபங்களையும், வசதித்தலங்களையும், லட்சணபேதம் கொஞ்சமுமின்றி ஒரேமுறையாய் நிருமாணித்தார்களே யன்றி, பல்வகை ரூபபேதத்தால் ஒன்றின் உயர்வையும், பிறிதொன்றின் தாழ்வையும்குறிப்பிக்கும் வண்ணம் சமைத்தவர்களன்று. இந்து தேவாலயங்களோவெனின், தத்வார்த்தங்களை ஒருங்கேதிரட்டி சுட்டுதல் மாத்திரமேயன்றி, சுற்றியிருக்கும் மற்றெல்லாப் பொருள்கட்கும், உயர்ந்து மேல்நிற்கும் கெம்பீரமான, உன்னத கோபுரங்களையும், பிரகாசித்து விளங்கும் விமானங்களையும் தம்மிடத்தே கொண்டிருப்பதால், யாத்திரையால் அயர்ந்து செல்வோர் அவ்வாலயங்களை கிட்டுமுன்னரே அவர்களின் பார்வையை தம்மிடத்தே வலிந்து இழுத்துப் பரவசமுறச்செய்யும் சக்தியிலும், அன்னோர்கட்கு வழிநடையாலாகிய அயர்ச்சியைத் தவிர்ப்பதிலும், பக்தியை ஊட்டுவதிலும் இணையற்று விளங்குகின்றன. சமீபத்தில் செல்லச் செல்ல, அவ்வாலயங்களின் வெளிப்புறத்தில் சனத்திரளுற்ற பற்பல குளிர்ந்த மண்டபங்களையும், அவற்றினருகே புண்ணிய தீர்த்தங்களையும், அவற்றைச் சுற்றிலும் அழகமைந்தபடித்துறைகளையும், மத்தியில்,சிற்றலைகள் மோதப்பெரும் நீராழி மண்டபங்களையும், அந்நீரினிடை மூழ்கி தினகரன் வெப்பமொழித்தலோடும், புனிதரானோமெனும் மனக்கிளர்ச்சியால் குதூகலிக்கும் கூட்டங்கள் தங்கமறைவிடமும், சோகந்தீரநிழலளிக்கும் அரசு, ஆல், வேம்பு போன்ற ஏனைய பசுமரங்களையும், அவற்றின் ஆவசிகங்களையும், முன்னுணர்ந்து நிருமித்தவர் இந்துக்களேயன்றி மற்றையர்களன்று. மூக்கின்மேல் கைவைத்து, பிடரிநோவ அண்ணாந்து பார்க்கப்படவேண்டிய ஆகிருதிவாய்ந்து விளங்குகிற கோபுரவாயிலைக் கடந்து செல்லுங்கால்' ஆங்காங்கு அபரிமிதமாய் உபயோகிக்கப் பட்டிருக்கும் பிரமாண்டமான கற்களாலும், அவற்றினிடையேசெய்திருக்கும் சித்திர வேலைப்பாட்டினாலும், மானிட உழைப்பையும், பெருமையையும் விரித்துக்காட்டுவனவாய் இவ்வாலயங்கள் அமைந்திருக்கின்றன. இம்மட்டுமன்று. இத்தகைய ஒளிவிடும் மண்டபங்களையும், கதிரவன் காயப்பெரும் சுற்றுப் பிரகாரங்களையும் கடந்து குருகிய வழியே மெல்ல நடந்து, இருண்ட தோற்றம் வாய்ந்த கர்ப்பக்கிரகத்தைச் சந்நிதியில் சென்றடையுங்கால், தமக்குத்தாமே உதிக்கும் மத உணர்ச்சியையும், மறுமையி னகிர்ச்சியையும், பக்தியின் முதிர்ச்சியையும், பெறப்படுவனவாய் மற்றெந்த ஆலயங்களும் அமைக்கப்படவில்லை. இந்துக்களின் குடியிருப்புக்கட்டிடங்களோவெனின், ஏகாந்தமாயும், குளிர்ச்சி பொருந்தியனவாயும், நற்காற்றுலாவுவனவாயும், பெண்பாலர் தனித்து இதரர் கட்புலனிற் கிலக்காகாது, தத்தம் வீட்டு வேலைகளை செய்துகொண்டிருப்பதற்கும், ஆடல், பாடல் சங்கீதாதிய நற்கருமங்களை, அன்னியர் கட்புலனும், செவிப்புலனும் காமுறுவண்ணம் பயில்வதற்கும், சிறார்கள் விளையாட்டயர்வதற்கும், ஏற்றனவாய் அமைக்கப் பெற்றிருப்பதை யாவரும் ஆமோதிப்பர்.

இந்திய சிற்பத்தினேற்றத்தை விரித்துரைப்பதை இம்மட்டோடு கிடத்தி, இனிஅச்சிற்பம் வெளிநாட்டினின்று பெறப்பட்டனவாவெனவினவுவோம. பேராசைப்பெருக்காலும், தற்செயலாகவும் சிந்துநதிவ்வாயிலாய் இந்தியாவினுட்புகுந்த சாதியர் எண்ணிறந்தவராயினும், அவர்களின் நாகரீகமெனும் அலைத்திரள்களால் இந்தியர் சுவற்பகாலம் தாக்குண்டிருப்பினும், இவர்கள் மதத்தையும், பண்டையநாகரீகத்தையும், தொழின்முறைகளையும், சிற்பத்தையும் அவைகள் பீடியாதொழிந்தன. இந்தியர்களோ, இந்நாடு நீத்து வெளிநாடு போந்தவரன்று. கொடுங்கொள்ளைகொண்டு தம்தேசம் திரும்பிய பல் சாதியரை இந்தியர் பின்தொடர்ந்து சென்றவருமன்று. இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களுக்குமுன் சிந்துநதியைக்கடந்து இந்நாடடைந்த ஆரியர்களும், தென்பாகத்தின் பூர்வகுடிகளான திராவிடர்களும், உள்நாடுவிட்டகன்றாரிலை. ஏனெனின், இந்தியாவி னியற்கையமைப்பு, அடிக்கடி வெளிப்போக்குக்கு அடுத்ததன்று. வடக்கில் உறைபனியால் மூடியமலைத்தொடராலும், கிழக்கில் கண்ணுழையாக் காடுகளாலும், எஞ்சியபாகங்கள் கடலாலும் சூழப்படிருப்பதுபற்றியேயாம். இதனோடும், உள்நாடு முழுதும்பரவி, முதிர்ந்து நின்ற ஆரியதிராவிடப் பகைமையுமொன்று. தடையேதுமின்றி, வடதிசை ஆரியர் தென்திசைக்கேகலும், தென்திசைத் திராவிடர் வடதிசைக்கேகலும், தம்முளே போரின்றி ஒருமித்துவாழாத்தன்மையும், தொன்னூல்வல்லோரனைவரு மறிவர். ஆகையின், இந்தியர் தாமே வெளிப்போந்து ஆங்கு கண்ணுற்றவைகளை ஆதாரமாய்க்கொண்டீண்டு தங்கள் சிற்ப வன்மையை நிலைநாட்டினரென்பது மிக்க நகையாடற்பாலது.

இந்தியாவை படையெடுத்த ஏனையசாதியரால் இந்தியர் போதிக்கப்பட்டிருக்கலாமெனும் மற்றொரு சந்தேகமும் தானே நிகழும். காயாதமரமீது கல்லெறிவாரில்லைபோல், பல்வளம்பொருந்தாத நாடொன்றை அன்னியர் ஆசித்து யுத்தசன்னதரா யடைந்தனரென்பது அறிவீனம். ஆகையின், சிற்பமொடு, மற்றயச் செல்வமும், நாரீகமும் பொலிவுற்று இந்நாடு விளங்கிற்றென்பது தானே அமையும். பகைமையால் போர்புரியும் அயல்மாந்தரிடமிருந்து அழித்தல், தகர்த்தல், தொலைத்தலாகித் தீத்தொழிலையே போரிடப்படுவோர் பெரிதும் அடைவரேயன்றி ஆக்கல் தொழிலைப் பெறுவதில்லை யென்பது யாமனைவரும் கண்கூடாக் கண்டஉண்மை. எனவே, இந்தியர்பகைவரிடத்து துன்பமே எய்தினரல்லால், மற்றெவ்வகை இன்பமும் பெற்றவரலவே.

வேறு சில மேனாட்டு நூலாசிரியர், இந்திய சிற்பத்திற்கும், ஈகிப்துதேச சிற்பத்திற்கும் ஏதோ சிற்பல தோற்றத்தில் ஒற்றுமை நிகழ்வதுபற்றி, இவ்விருநாட்டாரும் தங்களபிப்பிராயங்களை கலந்துகொண்டிருக்க ஏதேனுமொரு மார்க்கம் முற்காலத்தி லமைந்திருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஈகிப்தியரை ஒத்திட்டுக் கூறுதலால் யாமும் பண்டையராயினோமென ஒருவாறுகளிப்புற்றாலும்,மற்றவர்க்குண்டாயிருக்கும் சர்ப்பனையான அபிப்பிராயத்தை விரித்து சமாதானம்கூற லிங்குஆவசிகமாகிறது.

அவ்வொற்றுமைகள் யாவை எனவினவில், இருபான்மையரும், பிரமாண்டமான கற்களை மிதமிஞ்சி தங்கள் கட்டிடங்களிடத்தே வைத்தல், சிலாசாதனம் என்னும் வெட்டெழுத்துக்களை தாராளமாய் உபயோகித்தல், தூண்களிலும்,சுவர்ப்புறங்களிலும், பிரதிமைகளை நிருமித்தல், ‘பிரமிட்ஸ்’ என்னும் ஈகிப்தியகூர்நுனிக்கோபுரங்களைப் போன்று இந்தியகோபுரங்கள் விளங்குதல், ‘ஸ்பிங்கஸ்’ என்னும் ஓர் கற்பிதமிருகத்தை ஒத்து இந்திய ஆலயங்களில் இடபங்களை பிரதிட்டை செய்திருத்தலாகிய இவைகளே அவற்றுள் முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன.

இவ்வொற்றுமைகளனைத்தும், தற்செயலாயமையப் பெற்றனவேயன்றி இருதிறத்தாரது நட்பின் வழியாய் பெறப்பட்டவைகளாகா. ஏனெனின், இரண்டு, அல்லதுமேற்பட்ட சாதியரின் தொழின் முறைகளில் ஏதேனும் ஒரு பொதுத் தோற்றம், புணர்நிலை நினைவாலும், சுபாவீகமாகவும் அமைவது இயற்கை. எச்சாதியராயினும், மனிதர்களின் தேவைகளும், குறைபாடுகளும், அவற்றைத் தவிர்க்கும் மார்கங்களும் சற்றேறக்குறைய ஒருவகைத்துவென, யோசிக்குமளவில் யாவருக்கும் புலப்படும். நிற்க, திரளாக கற்களகப்படுமிடத்து கற்களை உபயோகப்படுத்துவது இயற்கையன்றோ? பிரமாண்டமான கற்களைத் தகர்த்து கரைவழியேகொண்டு செல்லக்கூடாதகாலத்து, பிணைவழியே சீவிய நதிகளான ‘நைல்’ என்னும் ஈகிப்திய நதிவழியேயும், ஒவ்வொரு புண்ணியத் தலங்களருகிருக்கும் இந்தியநதிகளின் வழியாகவும், இருதிறத்தாரும் சுலபமாய் தாங்கள் கோரியவிடத்

தே கொண்டுசேர்த்தனர். கரைசேர்ந்ததும் அக்கற்களை ஈஜிப்திய அடிமைத்திரள்கள் கூலியின்றி, கட்டாயவேலைக் குட்படுத்தப்பட்டவாற்றாலும், இந்தியர்களின் தேவைகளும், வாழ்நாள் கழிக்குமார்க்கமும், மிகச்சொற்பமானதுபற்றி குறைந்த கூலிக்குடன்பட்டு, வேலைகளை வெறும் வேலைப்பாட்டிற்குமட்டுமேமகிழ்ந்து ஏற்கும் தன்மையராதலாலும், தத்தம் வேலைகளை எட்டுணையும் சிரமமின்றி இனிதுமுடித்தனர். ஈஜிப்தியரின் வெட்டெழுத்துக்களை ஆராயுங்கால், அவைகள் சித்திரவெழுத்துக்களா லமையப்பெற்றிருப்பதாலும், அவ்வித எழுத்துக்களிலொன்றேனும், இந்துக்களின் வெட்டெழுத்துக்களினிடத்து காணப்படுவதில்லையால், இப்பொருத்தம் மனோகற்பிதமேயன்றி உண்மையானதன்று.

தூண்களினிடத்தும், சுவர்ப்புறத்திலும், பிரதிமைகள் காணப்படுவது உண்மையாயினும், ஈஜிப்திய பிரதிமைகள் மானிட உருவத்தைமட்டுமே பெற்றிருக்கின்றன. இந்துப்பிரதிமைகளோ, மானிட உருத்தாங்குவது மன்றி, யானை, குதிரை, இடபம்போன்ற பலமிருகவர்க்கங்களையும், கண்டபேரண்டம், யாளி, சிம்புள் போன்ற பல கற்பித மிருகங்களையடையப்பெற்று, ஈஜிப்தியரின் பிரதிமைகளினும்சிறந்து விளங்குதலாலும், இப்பொருத்தமும் அறியாமையா லறையப்பட்டதேயன்றி ஆராய்ச்சி முறையால் நாட்டப்பெற்றதன்று. பூமியின்மத்திய கவர்ச்சியொன்று உண்டென்றும், அக்கவர்ச்சியின் மத்தியபாகம் ஒவ்வொரு பதார்த்தங்களின் அடிவாரத்தே அமையப்பெற்றிருக்கும் உண்மையை இருதிறத்தாரும் முற்றுமுணர்ந்திருந்தமை பற்றி, தங்கள் உன்னதமான கட்டிடங்களை அடி பெருத்தும், நுனிசிறுத்தும் கட்டியது ஒரு பொருத்தமாகுமா? ஈஜிப்தியர் தங்கள் கூர்நுனிக் கோபுரங்களை, மரித்தோர் தேகங்களை தைலமூட்டி பலநூற்றாண்டும் பதமழியாதிருக்கச் செய்வதற் கென்றே நிருமித்தனர். இந்தியர், புன் புலாலாகிய தம் தேகத்தை மிக்க இழிவுப்படுத்தி மோட்சசாதனத்தை உயர்வுப்படுத்துமாறு தங்க ளாலயங்களையும், கோபுரங்களையும் நிலை நிருத்தினரென்றால், இவ்விருதிறத்தினரது மத உணர்ச்சியும், கருத்துக்களும் ஒன்றெனக் கூறுவது எட்டுணையும் பொருந்தாதென்ப. இறுதியில், 'ஸ்பிங்க்ஸ்' என்னும் கற்பித மிருகத்தை உற்றுநோக்குங்கால், இஃது உருவத்தில் சிங்கத்தை ஒத்தும், மனிதர் முகத்தையும் பெற்றிருப்பதாலும், அவைகளை அன்னோர் தேவாலயங்களி லமைக்கப்படாமையாலும், சுபாவீகரூபமுடன், தத்வார்த்தத்தைக் குறிப்பாய் உணர்த்துவனவாய், இந்திய தேவாலயங்களிடத்தே அமைந்துள்ள இடபங்கட்கு அவற்றை ஒப்பிட்டுக் கூறுதல் சரியன்று ஆகையின், இத்தேசத்து புராதன சிற்பத்தின் பயனுயெழுந்து, பண்டைய நாகரீகத்தை விளக்குவனவாய், இக்கட்டிடங்கள் ஒப்புயர் வற்று நிற்றலாலும், சில செய்முறைக் குற்றங்களுரையதால், திராவிடமாதிரிக் கட்டிடங்களை ஒப்புக்கொள்ளாமல் இகழ்ந்துபேசும் அன்னியருங்கூட, அவைகளின் அலங்கார விசித்திரங்களையும், கலப்பிலா கற்பிதங்களையும், நுண்ணிய வேலைப்பாடுகளையும் கண்ணுறுந்தோறும், மதிப்புடன் வெகு ஆவலாய்தம் நாடிமீது கைவைத்து, கண்ணிமையா வண்ணம் கவனிப்பது பற்றியும், இச்சிற்பத்தின் வனப்பு, பழஞ்சரிதையாளர் விசாரணைக்கும், கவிவாணருடைய வர்ணனைக்கும் ஏற்றனவாய் துலங்குகின்றன.

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரி.
சென்னை, சிற்பவித்தியா
சங்கத்தின் அங்கத்தினர்.

91-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## விதவா விவாக விவாத விநோதம்.

அவ்வினையைத்தீர்த்தா னந்தக்கடலாழச்
செய்வினையைச் செய்வதுவே தேர்ந்துவந்த—உய்வினைகூர் (34)
மாதுடரின் தன்மையென வான்மதியினன் மதித்துத்
தானிருக்கும் வீட்டிற்குஞ் சந்ததி—தானிருப் (35)
பின்அதற்குந் தன்பதியின் செல்கதியாம் பேற்றிற்கும்
மன்னுசெய லத்தனைக்கும் மாய்ந்தகணை—வன்னுடைய (36)



பேரே வழங்கப் பெறுவதால் எப்படியான்
நேரே மறுமணத்தை நேசிப்பேன்—சீரோறும் (37)
என்போன்ற செல்வியர்முன் இச்சகம்பே சித்தமது
புன்போகம் யாவர்கும் பொன்பெற்ற—அன்பினொடும் (38)
நல்கும் விலைமாதர் நாடிவாழும் மனைக்குப்
புல்குங் கணவர்பலர் போந்திருந்தும்—தொல்கும் (39)
பிடுநல் விதிமுறையிற் பெற்றபதி யின்றி
விடுகின் றமையிற்றம் வெற்றுச்—சுடுபெயரே (40)
இட்டதா லே"மை விழியார் மனையகல்"என்
றெட்டிட்டா ளெம்மினிய ஒண்பாட்டி—சட்டமுடன் (41)
யானும் பலரை யிசைந்துமணக் கப்பெற்றால்
பானும் மதியும் பாந்தாமன்—தானும் (42)
இருக்குநாள் மட்டுமென தில்லந் தனக்கென்
உருக்கமுள நாயகன்பேர் ஓர்பால்—இருக்கவுமற் (43)
றோர்பாலென் பேருமின் றோங்கிநு லுத்தமியர்
ஆர்தா மெனைமதிப்பர் ஐயகோ!—சீர்தான் (44)
எதுமணை மேனப்போ திஷ்டப் படிநடக்கின்
றீமதன்றோ வேண்டியெனைச் சேர்வோர்க்குப்—பூதலத்தில் (45)
உற்பவிக்குஞ் சந்ததியை யுற்றெவரும் எளனமாங்
கற்பனைகள் செய்து கழறுவரோ—பற்பலவாஞ் (46)
சீவரா சிக்கும் சிறந்தநமக் கும்பேதம்
எவர்தா மப்போ தெடுத் துரைப்பார்—பூவையருள் (47)
மானங் கருதுகுல மாதர்விலை மாதருடன்
ஈனக் குடிசட்டி என்றிவ்வா—றேனிருப்பர் (48)
வித்தியா சத்தில் விளங்கும் புவிநம்மால்
வித்தியா சம்போய் விளங்காதோ—முத்தியையார் (49)
கண்டார் புராணத்தின் கட்டுக் கதைநம்மால்
சண்டாளம் பெற்றொழிந்து சாகாதோ—பெண்டாள (50)
அப்பன் மகன்மாமன் அண்ணனு ஜன்பாட்டன்
ஒப்பில் மருமகனென் றோதுமுறை—தப்பிற் (51)
பிழையென்றே யென்றிவணம் பேசும் படிநேர்
வழியிற் புகஎன் மனம் வாரா—தொழுகின்ற (52)
துத்தமிய ருண்மையால் ஓதுலகந் தானுளதென்
றெத்துரைக்கும் வாசகத்தை யோம்புவேன்—சத்தியமாய் (53)
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யுமழை என்பேனே—நில்லாத (54)
அற்பசுகத் தின்பொருட்டாய் ஆணைகடப்பதுமோர்
பொற்பசுங்கொ டிக்கரிய பூஷணமோ—அற்புதவும் (55)
வேத விதிமுறையால் மேயகண வன்னிருந்து
ஆதரிக்குஞ் சத்தியுட னைசையுறின்—நீதவிதி (56)
கொண்டெடத் தனைபெண்டீர் கொள்கினும்யான் கோபியேன்
தண்டிக்க ஞாயமிலை தான்மகிழ்ந்து—கொண்டவர்பால் (57)

மேவுமருஞ் சந்ததியும் மெச்சுமவன் பேரதையே
தாவுமது வாமோ தவறென்பேன்—கூவியென்றாள் (58)
என்றிப் படிபேசும் எந்திழையை வேறொருத்தி
நன்றுரைத்தாய் பெண்மக்கள் நாயகமே—ஒன்றுகேள் (59)
செய்யதம யந்தியெனும் தேவியுந்தன் நாயகனை
வெய்யவனத் திற்பிரிந்து வெந்துயரால்—செய்யும்வினை (60)
மற்றொன்றுங் காணாளாய் மாதா வகஞ்சேர்ந்து
பெற்றவரைக் கொண்டே பிரிதொர்மணம்—பற்றச் (61)
சுயம்வரத்தை நாட்டினது சுந்தரியே யிப்பார்
இயம்புமதற் கென்சொல்வா யென்று— நயம்பெறவே (62)
கேட்கக் குலமாதுங் கூறுவாள் கேண்மையொடு
மீட்கத் தவிர்ந்துநள வேந்தர்பிரான்—நாட்கடத்தி (63)
வந்தமையால் மாதராள் மன்ன னிருப்புணர்வாள்
இந்தவிதஞ் செய்ததலால் ஏதமொன்றுஞ்—சிந்தையினிற் (64)
கொண்டிலளோ கானவனைக் கொன்ற அவள்சரிதம்
கண்டிலைகொல் முற்றுங் கருங்குழலே—மிண்டர்சிலர் (65)
இன்ன சரித்திரங்க ளெல்லாம்பொய் யென்றுசொலிப்
பின்னு மவற்றுட் பிழைபோன்று—மன்னுசில (66)
பாகத்தைக் கூர்ந்த பரிசீ லனமின்றி
வேகத் தொடுமறுக்க மேவுகின்றார்—கோகிலமே! (67)
யானை மதங்கொண்டால் யாரிகழ்வர் நாயெனிலோ
ஈனமுறும் ஈதுலகத் தின்னியற்கை—ஆனை (68)
பெருநெருப்புக் கீரமுண்டோ பேசினிவற்றை
வருநிதிய மொன்றுமிலை மற்றித்—தரைதனிலே (69)
நந்தம் வலிக்கொத்து ஞாயப் படியல்லோ
முந்தநலம் என்று மொழிந்திடலும்—இந்துநுதல் (70)
நல்ல திதுநிற்க நங்கையரு மாடவரும்
எல்லா விஷயத்து மேய்ந்திருக்கத்—தொல்லுலகில் (71)
ஆடவர்க்கு மாத ரடங்கினவ ரென்பதேனோ
ஏடவிழ்பூங் கோதா யிசையென்ன—ஆடகப்பொன் (72)
அந்த விசித்திரத்தை யாயிழையே காணாயோ
பந்தமொடு முத்தியருள் பண்ணவனார்—தந்த (73)
நமக்குங் கீழ்சீவ ராசிகளு ளாண்பெண்
தமக்குத்தா மெந்தவி தத்தி—லமைந்து (74)
நிமலன்சங் கற்பநிலை நின்றொழுகக் காண்டும்
அமல நிலையதுவே யன்றோ— முமலஞ்சேர் (75)
நாமோ அறிவில் நடுநா யகம்பெற்றுந்
தாமோ தரனுந் தனிப்பரனை—ஏமாற்ற (76)
முந்துகின்றோம் ஈதன்றோ முக்கியமா நந்தன்மை
சிந்திக்கின் என்னும் சிரிப்பன்றிச்—சுந்தரமே! (77)
மன்னச்சம் நாணம் மடம்பயிர்ப்பல் லோநமது
சன்னத்து மேலுந் தகவுடைய— என்அனைநம் (78)

பீதசித் தங்கண்டு "பேதைமை என்பதுதான்
மாதர்க் கணிகல" மாமென்று—போதித்தாள் (79)

பின்னும்"பெண் புத்தியோ பின்புத்தி" என்றுலகம்
மன்னும் பழமைபெறு வாசகமும்—உன்னிடுவாய் (80)

இன்னநியா யங்களால் என்னசதுர் கொண்டுகலை
மின்னை மலைபயந்த மெல்லியலைப்—பொன்னை (81)

நிகர்த்திருந்தா லுஞ்சமய நேர்போது நம்மிற்
பகரும் பெரும்பாலார் பார்க்கிற்—றகருளமே (82)

பெற்றுநிற்ப ராதலினால் பேதையர்நாம் ஆடவர்க்குச்
சற்றுஞ் சமமாகோம் சத்தியமே—மற்றும் (83)

ஆசாரத் தின்திருத்தக் காரர் பலர்கூடி
வாசாஞா னத்தை வழங்கியே—தேசத்தை (84)

நன்னிலைக்குக் கொண்டுவர நாடிவரு கின்றனர்காண்
எந்நிலையும் இன்னும் எழக்காணோம்—முன்னிலையே (85)

முற்று முலாவுவ தல்லால் முடிவுபிற
பெற்றுலவ வில்லையால் பேசவர்தம்—வெற்றுரைகள் (86)

தென்னா லிராமனெனுந் தீரன் கருமைதனை
மின்னார்வெண் மையாக்க மேவியதைக்—கன்னற் (87)

கரும்புமொழி யாளே'நி கர்த்தனவே கர்த்தன்
விரும்புசங்கற் பத்தையெவர் வெல்வர்—இரும்புவியில் (88)

வீணருரை கேளாதே வித்தகர்தம் பொன்னுரைபோல்
நாணமதை நாணயமாய் நண்ணியே—காணும் (89)

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்று
திறனறிந்து சொன்ன சிறப்பாம்—உறுதியினை (90)

எண்ணி யநுதினமும் ஏற்ற முறவாழ்வாம்
திண்ண மொருதீங்குஞ் சேராது—கண்ணனையாய்! (91)

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண்" டாயினெனுந் தேவர்சொலும்—உண்மையினைக் (92)

கொண்டொழுகின் இம்மைக்கும் கூறு மறுமைக்கும்
கண்ட சுகமுற்றுங் காணலாம்—மண்டலத்தில் (93)

வாய்ந்தகண வன்கூடி வாழ்போதும் மற்றவன்றான்
மாய்ந்தவிடத் துஞ்சிந்தை மாறாமல்—ஆய்ந்துநின்று (94)

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"யென்பர்—மெய்யே (95)

என்றிவ் வணமுரைத்தாள் இன்சொற் குலமாது
மன்றல் விதித்த மறைப்பொருளை—நன்று (96)

நிதானத் துடனாய்ந்து நீண்டகுலா சார
மதானு சாரம் வழாது—சதாரம் (97)

பெருமானை வாழ்த்திப் பெருங்கருணை யோடு
வருமானந் தன்னை மதித்து—நிருமாண (98)

நன்னியதி மீறாது ஞாயப் படிநடந்து
மன்னிடுவோம் பேரின்ப வாழ்வதனில்—நன்னுதால்! (99)

வான்வாழி மண்வாழி வல்லாங் கிலவாசு
தான்வாழி யென்றுந் தழைத்து. (100)

முற்றிற்று.

வித்வான் ம. இராஜகோபால பிள்ளை.

# சென்னையில் தமிழ்ப் பத்திரிகாசிரியரின் சங்கம்.

தமிழ்ப் பத்திரிகைகட்கு தாய்ப்பத்திரிகையான சுதேசமித்திரனில் வெளியிட்டிருந்த அபிப்பிராயத்தை அநுசரித்து ஆத்மாபிவர்த்தனி பத்திராதிபர், தமிழ் பத்திரிகாசிரியர்களின் சங்கமொன்று கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று தம் பத்திரிகையில் வற்புறுத்திக் கூறுகிறார். பத்திரிகாசிரியர்களின் சங்கமிருக்கவேண்டியது மிகவும் அவசியமானதே. இச்சங்கத்தால் பத்திரிகைகள் மேம்பாடடைவதிலும், அவைகளின் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை முற்றும் உணர்ந்து ஒழுகும் லாபத்தையும் பெறுவார்களென்பதற்கு ஐயமில்லை. தமிழ்ப் பத்திரிகைகளின் சப்தமும், தைரியமும், உற்சாகமும் இதனால் அதிகரித்து, தமிழுலகத்திற்கு பெருத்த நன்மையை உண்டுசெய்யும். ஆனால், அவ்வித சபைகள் கூடும்போதும், விஷயங்களைக் கலந்து யோசிக்கும்போதும், பொதுஜன சமூகத்திற்கு இடந்தரலாகாது. ஏனெனில், அங்கு யோசிக்கப்படும் விஷயங்களனைத்தும் பத்திரிகாசிரியர்களின் பொறுப்பு, பொதுஞானக்கல்வி முதலிய விஷயங்களாகவிருக்குமேயன்றி பொது ஜனங்களுக்கு ருசியைத்தரக்கூடிய வெறும்விநோதக்காட்சியாகவிராது. ஆகையின், இவ்வித சங்கங்களை பகிரங்கமான இடங்களில் கூடுவது உசிதமன்று. தற்காலம் கூடப்படும் இரகசிய சங்கங்களில் முதன்மை பெற்று விளங்கும் “மேசானிக் லாட்ஜகள்” எவ்வழியில் நடத்தப்பட்டு வருகிறதோ அவ்வழியில் இச்சங்கமும் நடத்தப்படவேண்டும். பொறுப்பு வாய்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தர், சிலர்மட்டுமே அக்கூட்டங்களிலிருக்க அநுமதி பெறுவார்கள். இதனால், கவர்ன்மெண்டார் இச்சங்கத்தில் நடக்கும் விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடும். இச்சென்னை ராஜதானியின் சட்ட நிருபண சபைகளின் மெம்பர்களை அதிகமாக்கப்பட்டிருப்பதாலும், அவர்கட்கு முன்னிலும் அதிக சுதந்திரத்தையும், கேள்விகள் கேட்கும் பாத்தியங்களையும் நமது காருண்ய கவர்ன்மெண்டார் கொடுத்திருப்பதால் ராஜாங்க விஷயமாக இச்சங்கங்களில் கண்டித்துப் பேசவும், அவைகளை ஓர் தீர்மானத்திற்குக் கொண்டுவருவதற்கும் அவசரமும், அவசியமும் ஏற்படாது. ஆகையால், இச்சபையின் ஸ்தாபனத்திற்கு ஒரு இடையூறும் நேராதென்பது திண்ணம்.

சபையை அங்ஙனமே ஸ்தாபித்துவிட்டால், அதனை ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் கூடி, பிறகு பல மாத காலம் உறங்கிவருவது சரியாகாது. மாதமோர் முறையேனும் கூடி, பத்திரிகா தர்மத்தையும், அதன் சுதந்திரங்களைப்பற்றியும் அனுபவமும், உயர்தரக்கல்வி பெற்றிருக்கும் ஆசிரியர்களால் மற்றவர்களுக்குப் போதிக்கப்படவேண்டும். பத்திரிகைகளின் பெருமையும், கௌரவமும் குறைந்து, அவமதிப்பு பெருகாவண்ணமவைகளை நடத்திவரும் மார்க்கங்களை யுணர்ந்து அதன்படி நடக்கவேண்டும். நாகரீகம் பொலிந்து நிற்கும் மேல்திசையார்களின், நவீனநடைகளைப் பயின்று, அவர்கள் தங்கள் சந்தாதாரர்களையும் மற்றவர்களினுடைய மனதைக் களிக்கச்செய்து வருவதுபோல் நாமும் செய்யப் பிரயத்தனப்படவேண்டும். பத்திரிகாசிரியர்கள், யாதொரு காரணமின்றி பகைமைபூண்டு, பத்திரிகைகளின்கௌரவத்தையும், தங்கள் கல்வித்திறத்தையும் பலரும் இகழும்வண்ணம் தாழ்த்தி, பேனாமுனையில் போர்புரியும் தகாத செயலை முற்றும் களையும் வழியைத் தேடவேண்டும்.

ஆகையின், இச்சங்கம் ஸ்தாபிக்கப்படின், இத்தமிழ் நாட்டிற்கு பெருத்த லாபத்தைக் கொடுக்குமென்று யாமும் அபிப்பிராயப் படுகிறபடியால், அவ்வித முயற்சியை யாம் மனதார ஆமோதிப்பதோடு, ஆங்கு வேண்டிய உதவி புரியவும் சித்தமாயிருக்கின்றேம்.

ப—ரீ.



## ஸ்ரீ விஸ்வப்ரம்மஸ்துதி.

### ஆனந்தக்களிப்பு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

ஸ்ரீ விஸ்வப்ரம்மமே யாதி—யெனுந்
தேவனையாம் பணிவோந் துதியோதி (ஸ்ரீ)

(1) மேவும்பராபர தேவன்—அண்ட
மேல்பகிரண்டத் தேஜோமய மாவன்
தாவுஞ்சராசர ஜீவன்—எல்லாஞ்
சார்ந்துநின்றெங்குந் தழைத்தரு ளீவன் (ஸ்ரீ)

(2) நேமச்சுருதிப்ர தாபன்—நம்மின்
நினைவுஞ்சொல்லறியா நித்யாநந்த க்ஷேபன்
சேமப்புராதன பூபன்—*மதிக்ஷ
க்ஷீரமயில்செவ்வி யோரறி தீபன் (ஸ்ரீ)

(3) ஆதியுமந்தமு மில்லான்—துரி
யாதீதமாகிய ஜோதிய துள்ளான்
† சாதிசமயமொன் றில்லான்—எல்லாந்
தானே தானாகித் தழைத்திட வல்லான் (ஸ்ரீ)

(4) ஓமெனும்பிரணவ வேதம்—அதி
லூன்றிநின்றானதண் டாகார நாதம்
ஆமெனுஞ்சாதுக்கள் பாதம்—அதை
யர்ச்சிக்கவே பெறுவோம் ப்ரம்மபோதம் (ஸ்ரீ)

(5) ‡சமயமெனும் பல வாறு—சென்று
தாவிவீழும் பெருஞ்சாகர நீரும்
அமையுமுடற் குயிர்க் கூறும்—அகி
லாண்டமு மேயகன் றதைப் பாரும் (ஸ்ரீ)

---

* மதிய முண்பாரோ யோகத்தால் த்ரேகத்தை நீடச்செய்து முத்தியைப்பெறுவார்களென்பதற்குப் பிரமாணம், தாயுமான சுவாமிபாடல்—“ தேகப் பவுரிகுலையாமலே கவுரிகுண்டலியாயி பண்ணவித னருளினாலே, விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே வேண்டுவே னும் தடிமைநான்”என்றும் கூறப்படுகிறது.

† சாதி சமய மில்லாதவர் என்பதற்கு பிரமாணம். குலமிலான் குணங்குறியிலான் குறைவிலான் கொடிதாம், புலமிலான் தனக்கென்னவோர் பற்றிலான் பொருந்து, மிலமிலான் மைந்தர் மனைவியில்லா னெவனெவன் சஞ்சலமிலான் முத்திதரும் பரசிவனெனத் தகுமே.” எனக்கூறும் தாயுமானவர் திருவாக்கானு முணர்க.

‡ சகலசமயமும் கடவுளையே நாடிச் செல்லும் என்பதற்குப் பிரமாணம். தாயுமானசுவாமி பாடல்—“ கூறனைத்துங் கடந்தவெல்லைச் சேடமாகி, குறைவறநின் றிடுநிறைவே குலவா நின்ற, வாறனைத்தும் புகுங்கடல்போற் சமயகோடி, யத்தனையுந் தொடர்ந்துபுகு மாதிநட்பே” என்பதானு முணர்க.

(6) *காமாதியோர்குல பேதங்—களை
காரணஞானப் படைகொண்டு சேதம்
ஆமாறுசெய்வமேல் வேதம்—பணி
யச்சுதனீகுவனே †துர்யா தீதம் (ஸ்ரீ)
(7) வாசிப்பழக்கமுங் கொண்ட—நன்
மனலயஞ்செய்து மதியமிழ் துண்டே
பேசு மவஸ்தையாங் குன்றே—தாண்டிற்
பெற்றிடுவோந் ‡துரியாதீத மன்றே (ஸ்ரீ)

* காமாதியாசைகளை விடுதலே முத்தி பெறற்கு யோக்ய சாதன மென்பதற்குப் பிரமாணம் வேமன்னபத்தியம்—" குக்கதினினவாடு குணமைன சங்கம்பு பந்திதினினவாடு பரமயோகி, ஏனு கேதினேவாடு யெந்தசுக்ஞானிரா விஸ்வதாபிராம வினரவேமா" என்னு மிதன் கருத்தாவது, நாயின் குணமாகிய கோபத்தை யொழித்தவன் சன்மார்க்கத்தார் கூட்டத்து ளொருவனுதம். பன்றி மலமிச்சிக்குந் தன்மையைப்போன்று இச்சிக்குங் காமயிச்சையை யொழித்தவன் மஹா யோகீஸ்வரனுகும் யானையின் குணமாகிய மதத்தை யொழித்தவன் அளவிட்டு சொல்லுதற் கரிய மகத்வம் வாய்ந்த மெய்ஞ்ஞானியாகும் என்பதாம்.

† திருமூலர் திருமந்திரத்தில் துரியமிருப்பது சாக்கிரத்துள்ளே கரிகள்பதினைலு நஞ்சுண்டற்றது, "பரியபுரவியும் பாரிப்பரங்கிடம் துரியமிருந்திடஞ் சொல்லவொண்ணதே" அதாவது, கருவிகாணுதிபதினலும் பற்றற்று ஜீவாத்துமா தானே மூலாதாரத்திற் சென்றேங்கி மலம், மந்தம், மாய்கை பரிசங்களையறியாமல் நின்றபோது துரியாதீதமென்று பேராம்.

‡ துரியாதீத நிலையைப்பற்றி போதலூர் வீரப்பிரம்மங்கா ரவர்கள் சிஷ்யரு ளொருவர் கூறிய ஆந்திர கீர்த்தனப் பிரமாணம் இதனடியிற் கூறுதும்,

கங்கா யமுனலுகூடி கனமைன சாஸ்வதி
பொங்குசு பிரவாஹிஞ்சே போடி மச்சடரா (கங்கா)

(1) ஆங்கஜாரி ப்ரம்மவிஷ்ணு லண்ட்டியுண்டே தச்சட
செங்கல்வ கோணலோபல ரங்குலய்யே தச்சட
சங்கமய்யே நதுலுமூடு ஸரஸலுண்டே தச்சட
லிங்காங்கமு பங்கமை லீலமய்யே தச்சட (கங்கா)

(2) சித்தஜனி பலிமார்ச்சி சித்துபாபே தச்சட
சத்துதெலிசி சமரஸம்பை சாதிஞ்சே தச்சட
வத்திலேக வெலுகுசுண்டே ஹோங்கார மச்சட
அத்துகோதி யமஸலிபுடு ஆடுசுனே தச்சட (கங்கா)

(3) நாதபிந்து களலுபைக நாதமவெலிகெ தச்சட
பேதமுடிகி இந்த்ரியமூல பீஜமணசே தச்சட
நாதமுடிகி தன்னுதலசி மோதமுந்தே தச்சட
ஸாதுஜனலு த்ருஷ்டிநிலபே சத்தியலோக மச்சட (கங்கா)

(4) ஸூர்யசந்த்ருலு அண்ட்டரானி வேல்புலுண்டே தச்சட
சாந்த்ரமைநாம் தாம்ப்ரமண்டல ஸௌபான மச்சட
இந்த்ரநீல மைத்தியவெலிகி விதுர்லோக மச்சட
பத்ரமைன பதவினண்ட்டின பாவதீத மச்சட (கங்கா)

(5) பக்திகளிகி யன்னியார்யுலு பஜனசேஸே தச்சட
முக்திகாந்த நிவாஸிஞ்சே முக்யபட்டண மச்சட
ரக்திகலிகி ஸஹஸ்ரார ராஜீவ மச்சட
யுக்திமீரக வசந்தாசு னுனரபல்கிந்த் தச்சட (கங்கா)

பொதுநலம் புரிவார்க்கடியன்
கூந்தலூர் து. சுப்ரமண்ய ஆச்சாரி,
மங்கலம்பேட்டை

(தொடரும்.)



## இதோபதேச நீதிமொழிகள்.

எனது அன்பின்மிக்க அரியசகோதரர்காள்!
கல்விநலந்தெரிந்த கவிசிகாமணிகாள்!

உலகமும் பல்லுயிரும் ஒன்றி நிறைந்தோங்கி
இலகுஞ் சிவனெம் மிறை,—ஆதலால்

உலகெலாமுணர்ந் தோதற்கரியவனுகியும், எல்லாம்வல்ல இறைவனுகியும், ஸர்வகாரணனுகியும், எள்ளினுள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்து (ஆத்மஸ்வரூபியாய்) விளங்காநின்ற கடவுளை நாம் எல்லாக் காரிய முயற்சிக்கும் முதலிற் றெழவேண்டுமென்பது மனிதருக்குக் கடமையாக விருக்கிறது. இதுபற்றியன்றே ஆன்றோர்களும்,

"பாரெலாம் பகைசெய்தாலும் பராபரன் கருணை யுண்டேல், சாருமோர் துயருமுண்டோ தாயினு மினியவையன், சீருளின்றேல் யாருந் தோர்கரி பரிபதாதிப், போணி யுடையோ மேனும் பிழைக்கும்வா றெவன்கொல் நெஞ்சே" என்றும் கூறியுள்ளார்கள்.

உலக முழுமைக்கும் பகவானே ஆதியாக விருக்கிறார் என்பதற்கும், அவனையன்றி நமக்கு யாதொரு ஆதரவுமில்லை என்பதற்கும், தெய்வப்புலமைத்திருவள்ளுவநாயனர் கூறிய, திருக்குறளில்—" அகரமுதல வெழுத்தெல்லாமாதி, பகவன் முதற்றே யுலகு" என்றும், "கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன், நற்ற டொழாஅரெனின்" என்றும், நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளக்கி எடுத்துரைத்திருக்கின்றனர். அப்படிக்கொத்த எல்லாம்வல்ல இறைவனுடைய பாதாரவிந்தத்தைத் தொழாதவன் பெண்டு பிள்ளை பண்டுபலாதிகளிற் களித்து அடியாரைத் தொழாது, அரனைப்பூசியாது, அவனியில் ஐசுவர்யத்துடன் வாழ்வதிற்பயனென்ன? "தோற்றம் நிலக்குப்பொறை,, என்னும் நாயனர் கருத்திற்கிணங்க, நாட்டியப் பொம்மைபோல் பார்க்கிறவர்களுக்கு ஒருதவியுமின்றி நேத்திரத்திற்கு மட்டும் ஆடையாபரணுதி அலங்கார நடிப்பினல் ஆனந்தத்தைக் கொடுப்பதுபோலுமாம். இதுபற்றியன்றே கருணைமிகுந்த சிவனருள்வாய்ந்த நம் ஆன்றோர்கள் நமக்கு மிகவும் வற்புறுத்திநின்றும், நடந்தும் இருந்தும், கிடந்தும் நினை; என்றுஞ், சிவன்றுளினை என்றும்,

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள், கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள், பெண்ணுறும்பாகனைப் பணியுந் தலைகளே தலைகள், பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள், பண்ணவன்றன் சீர்பாடு நன்னவே நன்னப், பரன்சரிதையேகேட்கப் படுஞ்செவியே செவிகள், அண்ணல்பொலன் கழனினைக்கு நெஞ்சமேநெஞ்சம் - அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை" என்றும்,

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய், ஆவுரித்துத்தின் றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில், அவர்கண்டீர்யாம்வணங்குங் கடவுளாரே"என்றும்,

"பாதியா யழுகினகால் கையரேனும், பழிதொழிலுமிழிகுலமும் படைத்தாரேனும், ஆதியாய் அரவணையாய் என்பராகில், அவரன்றே யான்வணங்கு மடிகளாவார், சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோரேனும், சதுர்மறையால் வேள்வியால் தக்கோரேனும், போதில்நான் முகன்பணியப் பள்ளிகொள்வான், பொன்னரங்கம் போற்றுதார் புலையராமே" என்றும்,

" ஆரணநான்குமோதி யறிந்தபேரறிஞனேனுங், காரண வேள்விநூறுங் கருத்தினின் முடித்தாரேனும், வாரண முரித்தவள்ளல் மலரடி தன்னில்வைத்த, பூரண வேட்கையில்லான் பொருந்திடான் முத்தியன்றே" என்றும்,

"அவித்தவித்து முளையாது தாண்டவக்கோனே, பக்தியில்லார் கதியடையார் தாண்டவக்கோனே" என்றும்,

"சிவசிவ வென்னத் திருநடமாடுஞ்
சிவசிவ வென்னச் சிவனுஞ்சித்தி
சிவசிவ வென்னச் சிவனுமுத்தி
சிவசிவ வென்னச் சிவகெதியாமே" என்றும்,

"அவனையொழிய அமரருமில்லை, அவனன்றிச்செயு மருந்தவமில்லை, அவனன்றிமூவரா லாவதொன்றில்லை, அவனன்றி யூர்புகும் வாறறியேனே" என்றும்,

"கோடிஜந்மார்ஜிதை: புண்ய:, சிவபக்தி: பிரஜாயதெ" என்றும்,

"பல்லூழிகாலம் பயின்றுஅரனை யர்ச்சித்தால்,நல்லறிவு சற்றே நகும்" என்றும்,

இன்னும் எத்தனையோ விதங்களால் நமது தன்மையைக் கருதிக் கருதி, ஆன்றோர்கள் எடுத்தெடுத்து வற்புறுத்திச் சுட்டிக்காட்டி கூறியிருக்கின்றனர்கள். இவைகளையெல்லாம் நாம்ஒருகணப்போதேனுஞ் சிந்தியாது,ஆயிரஞ் சொன்னாலு மறியாத வஞ்சநெஞ்சப், பேயரொடுகூடிற்பிழைகாண் பராபரமே"என்றும்,

"சூதாடுவோர் போற் றுவண்டு துவண்டு மனம், வாதாடில் என்னபலன் வாய்க்கும் பராபரமே"என்றும் அமுதவாக்காற் கூறியபடி மனமலைந்து சிவனடியை சிறுபொழுதேனுஞ்சிந்தியாது ஜென்மமெடுத்து இச்செகத்தி லிருப்பதிற் பலனென்ன விருக்கிறது. ஒன்றுமில்லை.

சிவஞான சித்தியாரில்

"மாணிட்ப்பிறவிதானும் வருத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்துபாடும் ஆன்பணிக்காகவன்றே, வானிடத்தவருமண்ணில் வந்தரன்றனையர்ச்சிப்பர், ஊனெடுத் துழலுமாந்தரொன்றையுமறியா ரந்தோ" என்பதை நினைந்து அவத்தொழிலென்னும் மெய் யழுக்கை அருச்சனை யென்னு புனலினாற்கழுவி, சிவனடியாரைத்தினந்தினமுந்தொழுது "உருவநினைப்பவற் குள்ளூறுஞ்சோதி"என்னும், மகாவாக்கியத்தை மனதிலுன்னி, எல்லாம்வல்ல நமது இறைவனாகிய சாக்ஷாத் ஸ்ரீ விராட்விஸ்வப்பிரம்மமூர்த்தியை நினைத்து இடையறாது துதித்து, இன்பநலமெய்தி இவ்வுலகிற் புகழுடன்வாழ்ந்து, அவ்விறைவனருளைப் பெற்று இன்புற்று வருவீர்களெனப் பன்முறையும் எமது அன்பின் மிக்க சகோதரர்களாகிய பஞ்சப்பிரம்ம சந்ததிகளனைவர்களையும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

V. வைத்தியநாதஸ்வாமி ஸ்தபதி
ஜோதிஷர்,
ஆரியன் சோதிடசாலை ஆபீஸ், திருவாரூர்.

---

82:வது பக்கத்தின் தொடர்ச்சி.

## விஸ்வகர்ம வம்ச சாகா சூத்திர விஷயம்.

---

அதாவது, குரு முதலியவர்களுடைய வாக்கியங்களை நிறைவேற்றுகிறதற்கு சிரேஷ்டமான ஆங்கிரச வம்சத்தில் பிறந்தும், பலமில்லாதவனைப்போ லிருக்கிற எனக்கு யார் சகாயஞ் செய்யப்போகிறார்களென்றும் சொல்லுகிறார். வசனம்,

காசிகண்டம் அத்தியாயம் அசு.
கச்சமேத்ர ஸஹாயஸ்யாத்
தீக்ஷ்ணா துர்பெலஸ்யவை.

மேலும், சிற்பம் விஸ்வகர்மீயம்
கோத்திராத்தியாயம்.
ஆதித்யஸே நயேவோக்தம்
ஆதிஸார ஆங்கீரஸ:
ஆத்மார்ப்புத ஸமாயுக்தம்
ஆயுர்த்த யஞ்சபஞ்சகா:

ஆதித்தியஸேந ஆதிஸார ஆங்கீரச ஆத்மார்புத ஆயுர்த்தய என்றும், பஞ்சாரிஷேய பிரவரத்தில் ஆங்கீரச ரிஷியும் சேர்ந்திருக்கிறதாய் காணுகிறது. ஆகையினால், ஆங்கீரச சம்பந்தம் விஸ்வகர்ம்ம வம்சத்திற் கேற்பட்டிருக்கிறது மல்லாமல், ருக்யஜுர் வேதங்களில் ஆங்கிரசாதி கோத்திர முடையவர்கள் விஸ்வகர்ம வம்சஸ்தர்க ளென்றும் சொல்லியிருக்கிறது. அதை மாற்றி (பஞ்சரிஷீந் பரயேகமாஹு:) என்று சொன்னதின் காரணமும், இன்னமு மனேக பதங்களை பேதமாக எழுதினதின் காரணமும் தெரியவில்லை.



ஆருஷேயர்களில் ஒரு கோத்திரத்துக்குப் பல சாகைகளு மிருக்கிறது அதாவது, காசிப கோத்திரத்தி லுள்ளவர்கள் ருக்சாகையிலும், யஜுர் சாகையிலும், சாம சாகையிலு மிருக்கிறார்கள். ஆகையினா லின்னகோத்திரத்துக்கு, இன்ன சாகைதான் வரவேண்டுமென்ற நிபந்தனைகள் ஸ்மிருதிகளில்காணவில்லை. ஒரு சாகைக்கு பல சூத்திரங்களு மேற்பட்டிருக்கிறது.

புறு பிர்ம்மஸ்ரீ பாலசாஸ்திரிராவுஜி சாஸ்திரி க்ஷீரசாகா ரவர்களால் பிரசுரம் செய்யப்பட்ட புஸ்தகங்களில் நம்முடைய விஸ்வகர்ம வம்சஸ்தர்களுக்கு (௱உரு) கோத்திரங்களல்லாமலும், விசேஷமாய் உத்தரதேசங்களிலிருக்கிற விஸ்வகர்ம வம்சத்தவரான பஞ்சகௌடாளுக்கு பிருகு, ஹாரித, குத்ஸ, கண்ணுவ, கௌதம,பாரத்துவாச, கௌர்க்க,அத்திரி,கௌண்டின்னிய முதலான அனேக ரிஷிகோத்திர மிருக்கிறதாகவும், சாகை சூத்திரானுஷ்டானங்கள் ஆருஷேய பௌருஷேய பேதமில்லாம லிருக்கிறதாகவும் காணுகிறது. ஷேடியார்கள் ளெழுதிய சோடச சமஸ்கார ரத்நமாலா கிரந்தம் ருக்வேத ஆசுவலாயன சூத்திரம் உத்தரதேச பாடங்களுக்குச் சரியாக விருக்கிறது

அன்றியும் பெங்களூரில் நம்மவர்களால் பிரசுரம் செய்த நாகரகண்ட ஆந்திரகாவியத்தில், மனுவுக்கு காசியப பிரஜாபதி பிறந்தார். அவருக்கு மயப்பிரம்மாவின் புத்திரி, பிராம்மணி, திதி, அதிதி, கத்ருவை முதலான (ம௲) பேர்களைக் கலியாணம் செய்தாரென்றும், மனுவுக்கு ஆங்கீரச புத்திரி காஞ்சனையும், மயனுக்கு பராசரர் புத்திரி சௌம்மியையும், துவஷ்டாவுக்கு திரிஜய நதியையும், சில்பிக்கு பிருகு புத்திரி காருணியையும், விஸ்வக்ஞனுக்கு ஜைமினி புத்திரி சந்திரை யென்பவளையும் விவாகம் செய்தனர்; என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் ஆருஷேய பௌருஷேய சம்பந்தங்கள் காணுகிறது. தவிரவும், சாகா சூத்திர கர்மானுஷ்டானங்களில் பேதமில்லையென்று ரதகாராதிகரணே பிர்ம்ம வைவர்த்த புராணத்திலும் காணப்படுகிறது. வசனம்,

ஷடங்கவேத விதுஷாம்ஸ
தர்மபத காமிநாம்
யொதர்மப்ரோச் சியதேவேதை
ஸ்ஸதர்மோ விஸ்வகர்மண:

சனத்குமாரசம்மிதை சிவஷண்முக சம்வாதம் பிராம்மணநிர்ணயம் அத்தியாயம் உரு.

ஸ்நாநம் சந்தியாத்திரி காலேஷு
அக்னிஹோத்ரம் ததைவச
நித்ய நைமித்திகம் கமத்விஜாதீ
நாம்ய தாக்ரமம்.

இந்தவசனங்களினால் சாகாசூத்திர நித்யநைமித்திக அக்னிஹோத்திராதி கர்மானுஷ்டான தர்மங்கள் ஆருஷேயருக்கும், பௌருஷேயருக்கும் பேதமில்லை யென்று சொல்லப்படுகிறது. ஆனால் சிலகிரந்தங்களில் பௌருஷேயர்களுக்கும் பஞ்சசாதாக்கியஹோமம் கர்மசாத்குண்ணியார்த்தமாக விசேஷமாய் செய்யவேண்டுமென்றும் காணுகிறது.

மேலும், ஒவ்வொருவிடங்களிலு மிருக்கிற நம்மவர்கள் ஒற்றுமையில்லாமலும்வித்யஸ்தமாயொன்றுக்கொன்று முரணையும் அச்சிடப்பட்டிருக்கிற சாகாசூத்திரங்களை அடியிலெடுத்துக் காட்டப்படுகிறது.

கஅஎ0ௐ விசாகபட்டணத்தில் அச்சடித்த கோத்திரகாண்டத்தில் ருக் யஜுர் சாம அதர்வண பிரணவமுதலிய ஐந்து சாகைகளுக்கு முறையே சானக, சநாதந, அபுவனச,பிரத்னச, ஸுபர்ணச முதலானவைந்து சூத்திரங்களுண்டென்றும்

௧௮௮௪௵ விசாகபட்டணத்தில் அகாராதியாயச்சிட்ட கோத்திர காண்டத்தில், ருக்காதி பஞ்சசாகைகளுக்கும் ஸாநக, மன்யுபத, சமந்த, வநஜ, சத்யக, சனுதந, மானுஷ, வர்த்தகீ, விஸ்தோமுக, ரைவத, அபுவந, சம்வர்த்த, லோகோச, போதாயன, பிரபோன்னத, பிரத்னச, பிரஹர்ஷண, வாஸ்துக, விஸ்பத்ர, சக்வர, சுவர்ணச, மணிபத்ர, ஆதித்யஸேந, மைத்திரேய, போதக முதலிய இருபத்தைந்து சூத்திரங்களுண்டென்றும்,

௧௯௦௨௵ விசாகபட்டணம் பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகள் வராஹ நரசிம்மாச்சாரியரவர்களால் செய்த விஸ்கர்மாந்வயப் பிரதீபிகா கிரந்தத்தில், ருக்யஜு முதலான பஞ்சசாகைகளுக்கும் ஸானகமுதல் போதகவரைமுன் சொன்னபடியேஇருபத்தைந்துசூத்திரங்களுண்டென்றும், உபநாமசூத்திரங்களாக சானக, சனுதன, அபூவனபிரத்ந சுபர்ணுதிரிஷிகளுக்கும்,ருக்காதிசாகைமுறையே ஆசுவலாயன, ஆபஸ்தம்ப,ஹிராத்தியாயன, ரௌப்பியாயன, காத்தியாயன சூத்திரங்களென்றும்.

மைசூர் பிரம்மஸ்ரீ அத்தியக்ஷ சிருவேலபார்த்தசாரதி யாச்சாரியவர்களால் பிரசுரம்செய்த பத்திரிகையில், ருக், யஜுஸ், சாம, அதர்வண, பிரணவாதி சாகைகளுக்குமுறையே, ஆசுவலாயன, ஆபஸ்தம்ப, போதாயன, காத்தியாயன, ரௌப்பியாயன சூத்திரங்களுண்டென்றும்.

குண்டூர் விஸ்வபிராம்மணமஹாஜனசபா அத்யக்ஷ பிரம்மஸ்ரீ வெங்கடசுப்பிரமணிய சாஸ்திரிகளாலும் பிர்ம்மஸ்ரீ யரலயர்த்தி ஆஞ்சனேய சாஸ்திரிக ளவர்களாலும், பிரம்மஸ்ரீ வட்டேபாடி நிரஞ்சனசாஸ்திரிகளாலும், எழுதின பத்திரிகைகளில் ருக், யஜுஸ், சாம, அதர்வண, பிரணவாதியைந்து சாகைகளுக்குமுறையே, ஆசுவலாயன, ஆபஸ்தம்ப, திராஹ்யாயன, காத்தியாயன, ரௌப்பியாயன, முதலிய வைந்து சூத்திரங்க ளுண்டென்றும்.

௧௯௦௬௵ புனுபாலசாஸ்திரிராவுஜி சாஸ்திரி க்ஷீரசாகர ரவர்களால் அச்சடிக்கப்பட்ட விஸ்வப்பிரம்மகுலோபஸாஹ கிரந்தத்தில் ருக், யஜுர்முதலான பஞ்சசாகைகளுக்கு முறையே, ஆசுவலாயன, ஆபஸ்தம்ப, தாக்ஷாயன, போதாயன, காத்தியாயன சூத்திரமென்றும்.

௧௮௮௦௵ சென்னையில் தெலுங்கி லச்சடித்த சித்தூர் தீர்ப்பு புஸ்தகத்தில் ருக்காதியைந்து சாகைகளுக்கு முறையே, ஆசுவலாயன, ஆபஸ்தம்ப, காத்தியாயன, ரௌப்பியாயன, போதாயன சூத்திரமென்றும்.

௧௮௦௪௵ சென்னையி லச்சடித்ததும் பிரம்மஸ்ரீ முத்துச்சாமி பாரதியவர்களா லியற்றியதுமான தமிழ் விஸ்வப்பிரம்மபுராணத்தில் ருக்காதி பஞ்ச சாகைகளுக்குமுறையே, ஆசுவலாயன, ஆபஸ்தம்ப, போதாயன, காத்தியாயன, ரௌப்பியாயன சூத்திரமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் பலவிதமாக சூத்திரபேதங்களிருக்கின்றன. அல்லாமலும் சாகா வித்யஸ்தங்களையும் காட்டப்படுகின்றன

௧௮௯௨௵ சென்னையி லச்சிட்ட தெலுங்கு மூலஸ்தம்ப கிரந்தத்தில் மனு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞமுதலான பஞ்சரிஷிகளுக்கு முறையே, சாம, யஜுஸ், ருக், பிரணவ அதர்வண சாகையென்றும்.

௧௮௮௦௵ சென்னையிலச்சடித்த தெலுங்கு ரதகாராதிகரண விசாரகிரந்தம் ௫௨ வது சங்கையில் மநு, மய, துவஷ்டா, சில்பி, தக்ஷமுதலான பஞ்சரிஷிகளுக்குமுறையே, சாம,யஜுஸ், அதர்வண, பிரணவ, ருக், சாகை யென்றும்.

௧௮௯௦௵ சென்னையிலச்சிட்ட ஸ்ரீமத்வெங்கடாச்சாரிய சுவாமிகளால் செய்தவிஸ்கர்ம புராணம் தெலுங்கு புஸ்தகத்தில் மநுவாதி பஞ்சரிஷிகளுக்குமுறையே, ருக், யஜுஸ், அதர்வண, சாம பிரணவ, சாகையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரம் சாகாசூத்திரங்கள் பலவிதமாகவும் இதைப்போலவே கோத்திரம், பிரவரை, குண்டம், தண்டம்முதலியவைகளும் வித்யஸ்தமாகவே யிருக்கிறது.



இந்தப்படி பரஸ்பரவிருத்தமாயும், சாஸ்திர விரோதமாயும், நம்மவர்களனுஷ்டானம் செய்துவருகிறதை சாஸ்திரோக்தமாக சாகை சூத்திரமுதலியவைகளை கிரமமாயேற்படுத்தி யதற்குத் தக்கவாறு சந்தியாவந்தனங்களையும், உபாகர்ம முக்கியகாலம்கௌணகாலங்களையும்,சோடசகர்மங்களையும், வரிசைப்படுத்தவேண்டுமென்றதையும், அவ்விதமொழுங்கு படுத்தியதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்பதையும் பிரதம காரியமாக வெண்ணி, இவ்விஷயங்களை வித்வாமிசர்களான பண்டிதர்கள் யாவரும் தீர்க்காலோசனை செய்து, ஆங்காங்குள்ள சபைகளிலோ, அல்லது சென்னை, திருச்சி முதலான சென்ட்ரல் சபைகளிலோ, வடதேச குண்டூர் விசுவப்பிராம்மண மஹாநாடு கூடப்போகும் சபையிலோ, அல்லது தென்தேசத்தி லொரு மஹாநாடு கூட்டி அந்த சபையிலோ, தீர்மானம் செய்ய வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்.

பௌருஷேய பிராம்மணர்க்ள் பஞ்சமுகோற்பவர்க ளென்றும், பஞ்சவேதிக ளென்றும், பிருசீனமாயிருக்கிற விஸ்வகர்ம புராணம், மூலஸ்தம்பம், சிற்ப மஹாவிஸ்கர்மீயம், நாகரகண்டமுதலான கிரந்தங்கள் முறையிடுவதால், அந்தந்த முகங்களினின்றும் உண்டானவர்களுக்கு அந்தந்த முகங்களிலிருந்து முண்டான வேதங்கள் ஸ்வசாகாயாயிருக்கிறதினுல் இவைகளுக்கு விருத்தமன்னியில் சாகாசூத்திரங்களையும், உபாகர்ம முக்கியகாலம் கௌணகாலங்களையும், நிர்ணயிக்கிறதற்கு எனக்குயோர் அபிப்பிராயம் தோன்றுகிறது. அதை யனேக வித்துவாமிசர்களுடையவும், சபைகளினுடையவும், அபிப்பிராயங்களும், தீர்மானங்களும் தெரிந்து வெளியிடலாமென்றெண்ணமிருக்கிறது.

இவ்வித சாகாசூத்திர பேதங்களைத் தெரிவித்து,அதைவரிசைப்படுத்தவேண்டியதற்காக பத்து வருஷத்திற்கிடையி லுத்தர தெக்ஷண தேச நம் வம்சஸ்தர்களும், பண்டித சிரோமணிகளுமான அநேக வித்வாமிசர்களுக்கும், சபைக்கும் தெரியப்படுத்தினது மல்லாமல் சென்றவருஷம்நடந்த குண்டூர் மண்டல விஸ்வபிராம்மண ஷஷ்டதனுரு மஹாஜன சபைக்குஇவ்விஷயங்களை இங்கிலிஷிலும்,ஆந்திரத்திலும், தமிழிலுமாக (௩௰)பக்கம்வரை யெழுதியனுப்பியும் இவவிபரங்களைப்பற்றி சபையில் தீர்மானம் செய்யவேண்டுமென்று பிரத்தியேகமாக பிரம்மஸ்ரீ ஆஞ்சநேய சாஸ்திரிகள், நிரஞ்சன சாஸ்திரிகள், வீரபத்திராச்சாரியார், சபை அத்யக்ஷர் முதலானவர்களுக்கெழுதியும் பதில் கிடைக்க பெற்றிலேன்.

ஆனுல், நம்குல விருத்தாந்தங்க ளெழுதிய உத்தரதெக்ஷண தேச பண்டிதர்களான நமது சகோதரர்கள்,சாகாசூத்திர பேதங்களைப்பற்றி கவனித்திருக்க மாட்டார்களே தவிர, அதைப் பார்க்கும் விஷயத்தி லுடனதற்கு விதிசொல்லி யனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவும் சக்தரகளேயாம்.

ஆகையினுல் உத்தர தெக்ஷணதேசங்களிலிருக்கிற விஸ்கர்மாக்கள் யாவரு மொன்றுபோல ஆசரித்து நடக்கவேண்டியதாகவும் நித்திய நைமித்திக கர்மானுஷ்டானங்களுக்கு அடிஸ்தானமாகவு மிருக்கிற சாகா சூத்திரபேத விஷயங்களைப் பத்திரிகை மூலமாய்த் தெரிவித்தால் யாவருக்கும் தெரிந்து சபைகளிலாலோசித்து சமஸ்த விஷயங்களையும் நன்றாய் கவனித்து சாஸ்திரோக்தமான யேற்பாடு செய்து தீர்மானிப்பார்க ளென்றும், ஒவ்வொரு பண்டிதர்களும் தமது அபிப்பிராயத்தை பத்திரிகை வாயிலாக வெளியிடுவார்க ளென்றும் இப்பத்திரிகையை ஆந்ரம், மஹாராஷ்டிரம், கன்னடம் தெரிந்தவர்கள் தயவு செய்து, அந்தந்த பாஷைகளில் மொழிபெயர்த்து, தம்முடைய நண்பர்களுக்கும், சபைகளுக்கு மெழுதி பிரசுரம் செய்து அவர்களி னபிப்பிராயத்திற்கும், தீர்மானத்திற்கும், பதிலறிவிப்பார்களென்றும், பூரணமான நம்பிக்கையோடு சதா எதிர்பார்த்துக்கொண் டிருக்கும்.

ஜோஸ்யர் முத்துஆச்சாரியர்
மீனுக்ஷிபுரம் நாகர்கோவில் போஸ்டு.

## தொழிற் குறிப்புகள்.

[இந்தத் தலைப்பின்கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும் கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக் கொண்டால் விடையளிக்கப்படும்.]

உலோகங்களும், அவைகள் உருகும் சூட்டின் அளவும்:—

உலோகங்களை ஒன்றோடொன்று சேர்த்து உருக்குகையில் பின்வரும் அட்டவணையைக் கைப்பற்றி, எது உருக அதிகசூடு வேண்டுமோ அல்லதுநேரஞ்செல்லுமோ, அதை முதலிலுருக்கிக்கொண்டு பின்னர் சொல்லும் முறையாய் ஒன்றின்பின் ஒன்றைச்சேர்த்து உருக்கவேண்டும். இல்லையேல், நமக்கு வேண்டியசேர்மானங் கிடைப்பதருமையாகிவிடும்.

| உலோகம். | உருகும் சூட்டளவு Contigrade |
|---|---|
| பாதரசம் | -39° |
| பனிக்கட்டி (Ice) | 0° |
| தண்ணீர் கொதித்தல் | 100°-210°F |
| வெண்ணெய் அல்லது மெழுகுவர்த்தி | 30° |
| தேன் மெழுகு | 65° |
| கெந்தகம் | 114° |
| வெள்ளீயம் | 228°-232°C |
| நிமிளை (Bismuth) | 264°-268°C |
| காட்மியம் (Cadmium) | 326° |
| காரீயம் | 322°-335°C |
| நாகம் | 419°-422°C |
| சுருமா, நிமிளை (Antimony) | 629° |
| மாக்னீசியம் | 632° |
| அலுமினியம் | 654° |
| வெள்ளி | 960°-1000°C |
| பித்தளை | 101°5 |
| செம்பு | 1080°-1100°C |
| தங்கம் | 1061°-1250°C |
| நிக்கில் | 1400°-1450°C |
| வார்ப்பு இரும்பு | 1530° |
| அடி ,, | 1600° |
| பிளாட்டினம் | 1775°-1800°C |
| மாங்கனீஸ் | 1800°-1900°C |

உலோக சம்பந்தம்:—

இரண்டு அல்லது மேற்பட்ட உலோகங்களை ஒன்றாயுருக்கி கூட்டுறவுபடுத்தலால் என்றும் மாறுபாடடையாத ஓர் புது உலோகமுண்டாகிறது. இதற்கு சேர்மானம் அல்லது கலப்பித உலோகம் (Alloy) என்று பெயர்.

கூட்டுறவுபடுத்தப்படும் உலோகங்களில் பாதரசம் (Mercury) முக்கியமாய் சேர்க்கப்பட்டால் புதிதாயுண்டாகு முலோகத்திற்கு இரசபூயம் (Amalgam) என்று பெயர்.

புதிதாயுண்டாகும் கலப்பித உலோகம் (Alloy), அதில் சேர்ந்துள்ள தனித்தனி உலோகமுருகுங் காலத்தைவிட சீக்கிரத்திலுருகக்கூடியதாகிவிடுகிறது.

| நெம்பர். | வெள்ளீயம். | காரீயம். | நிமிளை. | சூட்டளவு Centi-grade. | ஷரா. |
|---|---|---|---|---|---|
| 1 | 1½ | 1 | — | 168° | சாதாரணமாயுபயோகப்படுவன. |
| 2 | 2 | 1 | — | 171° | |
| 3 | 1 | 2 | 2 | 113° | பத்தவைப்புக் குதவியாக ரோஜனம், நவச்சாரம், முறிக்கப்பட்டமூராட்டிக் ஆசிட் கொள்ளவும். |
| 4 | 2 | 2 | 1 | 144° | |
| 5 | 3 | 3 | 1 | 151° | |
| 6 | 4 | 4 | 1 | 160° | |
| 7 | 1 | 1 | 4 | 94° | இவற்றை 2, 3, தடவை உருக்க நன்றாய்கலந்துவிடும். இதில் புது உலோகமொவ்வொன்றும் சிறிய வஸ்துக்களை அஸ் வார்த்துவைத்துக்கொள்ள உதவுகிறது. |
| 8 | 5 | 3 | 3 | | |
| 9 | 1 | 1 | 2 | — | |
| 10 | 1 | 2 | 3 | — | |
| 11 | 3 | 2 | 5 | — | |
| 12 | 3 | 5 | 8 | — | |
| 13 | 2 | 3 | 5 | — | |
| 14 | 2 | 4½ | 7½ | — | |

காரீயம், வெள்ளீயம், வெள்ளீயக்கலப்புலோகம் முதலியவற்றை எந்த ஆசிட்டி



னுதவியாலும் சுத்திசெய்யக்கூடாது ஆனாலிவை காஸ்டிக்சோடா (போட்டாஷ்) கலந்த தண்ணீரில் சுத்திசெய்யப்படுகின்றன.

அச்சாபீஸ் எழுத்துகள்:—3-பாகம் காரீயம், 1-பாகம் நிமிளை (Antimony) கூட்டி உருக்கிவார்க்கப்படுகிறது. இந்தகலப்பு காரீயம் கடிசும் எளிதிலுடையக் கூடிய சுபாவத்தையு மடைகிறது.

வெண்கலம்:—

| நெம்பர். | செம்பு பாகம். | நாகம் பாகம். | வெள்ளீயம் பாகம். |
|---|---|---|---|
| 1 | 7 | 3 | 2 |
| 2 | 1 | 12 | 8 |
| 3 | 89 | 3 | 8 |
| 4 | 95 | — | 5 |

உருக்குகையில் செம்பை உருக்கிக்கொண்டு பின்நாகத்தைச்சேர்க்கவும்; இரண்டுங்கலந்தபிறகு வெள்ளீயத்தைப்போடவும். எல்லாம் தெளிந்துருகும்போது வேண்டிய உருவமான கருக்களில் வார்த்துவிடவும்.

பித்தளை:—

| நெம்பர். | செம்பு பாகம். | நாகம் பாகம். | வர்ணம்; உபயோகம். |
|---|---|---|---|
| 1 | 4 | 1 | சாதாரணமாய் கிடைப்பன. |
| 2 | 1 | 1 | |
| 3 | 2 | 1-முதற் 1½ | பழுத்ததங்கம் |
| 4 | 3-முதல் 5½ | 1 | |
| 5 | 11 | 2 | தங்கம்-தகடு. |
| 6 | 8 | 5 | உயர்ந்தது பொத்தான்கள் செய்யவும் தகடு ஆக்கவும். |
| 7 | 3 | 1 | தகடு. |
| 8 | 9 | 1 | |

சைனுக்காரர் வெள்ளைசெம்பு:—

இரும்பு 3-பாகம், நிக்கில் 32-பாகம், செம்பு 40-பாகம், நாகம் 25-பாகம்சேர்த்துருக்கி வார்த்து பின் வேண்டியபடி உபயோகப்படுத்திக்கொள்ளவும்.

## நற்குலம் கடைத்தேறுவ தெப்படி?

குலோபகாரம்பூண்ட அழகிற்சிறந்தபெண்கள் நாயகமே! நடுநிலைமையுற்றஎங்குலநங்காய்! நின்குலமும் குழந்தைகளும் தற்காலமிருக்கும் நிலைமையை கண்ணுற்று இனிஅவர்கள் சீர்பெறுவதற்கான மார்க்கத்தை போதிப்பதாலன்றோ நின் பெயரும் புகழும் நீடூழிநிற்கும், அதைவிட்டு அவர்கள் மனம் போன போக்கெல்லாம் போகவிட்டு அவர்கட்கு தருணமழைபோலுதவாது அவர்களைத் தவிக்கவிட்டு நீ தனித்து நிற்பது உனக்கழகோ? கல்லாரும், உயர் தரக்கல்வி பெற்றோரும், குலவெறிபற்றி பிடர்பிடித்துத் தள்ள, வாய்மதம் பேசி, வீம்புகள்கூறி, மெய்அறிஞர்போல் நடித்து உலகையும், தம்மையும் வஞ்சித்து வருபவர்களாய்க் குலோத்தாரணம் செய்யும் பொருட்டு முன்வந்து பல சபைகளையும் சங்கங்களையும் கூட்டி ஜெய விருது கூறிவருவதையும் வந்ததையும், நின் கண்ணாரக்கண்டும், காதாரக்கேட்டும், நின் மனதார எங்கள் அஞ்ஞான விருளைப் போக்கி, உண்மையானவும், உத்தமமான பிரயத்தனம் ஈதென எங்கட்கு இதுகாறும் விளக்கினையில்லை. ஒவ்வொருவரும் தங்களையும், தங்கள் பிரயத்தனங்களின் மேம்பாட்டையும் வியந்து கூறி, பிறர் பிரயத்தனங்களை வாய் கூசாமல் நிந்தித்து தங்கள் சிற்றறிவு ததும்ப களிப்புறு

கின்றார்கள். படியாதவர்கள், ஏதேனும் ஒரு அற்ப காரியம் செய்துமுடித்துவிட்டாலோ, அவ்வணுவை மகமேருவாக்கி, சிரக்கம்பம் செய்கிறார்கள். படித்தவர்களோவென்றால், தாங்கள் செய்துவரும் இழிவான காரியங்களை, தங்கள் கல்வி சாமர்த்தியத்தாலும், சொல்வன்மையாலும், தம்மைப்போன்ற இரண்டொரு கற்றறிமூடரின் உபபலத்தாலும் சிறப்புப்படுத்தியும், இல்லாததை யுண்டெனக் கற்பித்தும், உள்ளதை இன்மையாக்கியும், கேட்போர் மனத்தையும், அவர்கள் தன, வாக்கு, காரியாநுகூலங்களை கவர்வதின் பொருட்டே, தமக்கு நாவுண்டாக்கப்பட்டிருப்பதாக எண்ணி நடுவுநிலைமையு மிழந்து, தம்மைச் சார்ந்தாரைமட்டுமே புகழ்ந்து தோற்றன் மாத்திரத்தில் உத்தமரூபிகளாகத் தோன்றி பொய்ப்புகழடைகிறார்கள்.

வேறு சிலர், ராமன் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன, எங்கள் வயிற்றுச் சோறும், பெண்கள் சீலையும், பொருந்தினால் போதுமென்று நினைத்து மௌனமாகயிருந்து சாதுக்களெனக் கொண்டாடப்படுகிறார்கள். இன்னும் சிலர், வன்சொற்கள் கூறி பொதுக்கூட்டங்களைக் குலைத்து, கோர்ட்டுக்கிழுத்து, கோவிற் சொத்துக்களை சூறைவிடுகிறார்கள். மற்றும் சிலர், சபைகளை நடத்தும் முறைகளை முற்றுமுணர்ந்தவர்போல் பாவித்து, அரிய பெரிய காரியங்களைச் சாதித்துவிடுவோமென்று வீண் மனோராஜ்யம் செய்வதோடு நில்லாமல், கற்றார், கல்லாதார், உற்றார், உறவினர், மற்றோர் யாவரும் தம்மை செம்மறிக் கடாக்கள்போல் பின்பற்ற வேண்டுமென்ற கருத்தினராய் மமதைகொண்டு மெய்மறந்து நிற்கிறார்கள். வேறு சிலர், "கற்றது கைம்மண்ணளவு கல்லாதுலகளவு" என்பதைக் கருதாது, கல்வி கரைகண்டவர்போல் அபிநயித்து, நல்லகண்களையும் குருட்டுகண்களாக்கி, மேனோக்கம் கொண்டு, மது உண்டோர்போல் மயக்க உணர்ச்சி பெற்று, அல்லாடித்திரிகிறார்கள். இன்னும் சிலர், வயது, அநுபவம், சக்தி, மனோபலம், செல்வாக்கு முதலியவைகளை ஆராயாது, அவசரப்பட்டு, கனிவிக்கப்பட்ட கனிபோல், தன் பெயர் அக்கணமே எங்கும் பிரக்யாதியாக வேண்டுமென்கிற பேராசைகொண்டு, தம் சகபாடிகளை வஞ்சித்து, தம் சித்தமே சட்டமாகத் துணிந்து, அதனைஒப்புக்கொள்கிறவர்களைமட்டுமே தம்மோடு சேர்த்தும், அதனைக் கண்டித்து நிற்பவர்களை, தான் தோன்றித்தனமான புன் சொற்கள் புகன்றும், அப்புனிதரின் புகழைக் குலைத்துவிடும் சக்தி தமக்கு வாய்ந்திருப்பதாக நினைந்து, அவமதிப்புக்காளாகிறார்கள். வேறு சிலர், நல்ல சங்கங்களைக்கூட்ட நினைத்தும், குளிக்கப்போயும் சேறு பூசிக்கொண்டவன் செயலையொத்து, மற்றவர்கள் சவுகரியங்களை கவனியாது, தங்கள் வீட்டுக்கருகாமையில் பொதுச்சபைகளை ஸ்தாபனம் செய்துகொண்டும், அல்லது சாயுங்காலத்தில் உல்லாசமாகத் தம்மைப்போன்ற விடைபுருடர்கள் கூடி காபி, பட்சணாதிகளை வாய்மதிக்கவும், பொதுமகளிர் ஆடையாலங்கிர்தர்களாய் மாலைப்போழ்தில் கலீர் கலீர் என சப்திக்கும் நடையொடு கைவீசி ஓயாதுலவும் தெருக்களிடையிலவைகளை ஸ்தாபித்தும், வரவுக்கு மிஞ்சிய செலவுசெய்தும், மூலதனத்தை வேரொடு களைந்து வருவதோடு நில்லாது, ஏதோ செப்பிடுவித்தைக்காரன் உலப்புவதுபோல் ஒரு பிரம்மாண்டமான காரியத்தை சாதித்துவிடப் போகிறதாகவும், அதனை வேதவாக்கியமாகக் கொள்ளும்படிக்கும், பலரையும் வற்புறுத்துகிறார்கள்.

மற்றும் சிலர், முன்பொருக்கால் தரும்மையிகழ்ந்தவன் தூயவன்போல் நடித்து, தாம் யாதொரு புகழையும் விரும்பாதவர்களென பிறர் அபிப்பிராயப்படும்படிக்கு, வாய் குவிந்த ஓர் பாத்திரத்திலுள்ள தின்பண்டங்களை யெடுக்க தன் குட்டியின் கையைப் பிடித்துவிட்டு தானதனை கைக்கொள்ளும் தாய்க்குரங்கை ஒத்து, வாயொன்றுமில்லாத, ஸ்தோத்திர பிரியர்களின் பே



னை முன்னணியில் நிறுத்தி தாம் பதுங்கி நின்று, சமயம் வாய்த்தால் அவர்களைச்சந்தியில் இழுத்துவைக்கும் எண்ணத்தை எவ்வண்ணமோ மறைத்துவைத்து, தம் சுயகாரியம் கைகூடும்காலத்தை எண்ணியெண்ணி ஏங்கிவருகிறார்கள். வேறுசிலர், பொது சபைகளென்று ஏற்படுத்தி, அதில் பொதுவான காரியங்கள் நடத்தப்படுமென்று பறைசாற்றி, உள்ளூரில் உபபலமில்லாமையால், வெளியூர்வாசிகளை வருந்தியழைத்தும், அவர்களுழைப்பை இலவசமாகப் பெற்றும், பணங்களை அவர்களிடமிருந்து ஏராளமாக வசூலித்தும், அவர்களை 'வெளியூரார்' என்று புறக்கணித்து, அவர்கட்கு யாதொரு சுதந்திரமும் கொடாத நயவஞ்சகர்களாகவு மிருக்கிறார்கள்.

மற்றும் சிலர், ஜாதி வேற்றுமையை முற்றும் களைந்தவர்போல் அபிநயித்து, சமயம் வாய்க்கும்போது, தம்மினத்தாரை (அதாவது தமிழர், தெலுங்கர், கன்னடியர் என்னும் பிரிவுகள்) கைதூக்கிவிடுவதும், தமிழர் பிரயத்தினம் ஓங்கினால் அவர்கள் தலையிலிடிப்பதற்கென்று, தெலுங்கரின் உயர்வையும், உழைப்பையும் பெருக்கியும், அடிக்கியும் காட்டி, பிறகு அவர் மனஸ்தாப மடையாவண்ணமும், தமது அநாதரவான நிலைமையைக் கண்டும், அவர்கள் உதவியைப் பின்புத்தியால் ஆசித்து அன்னோர்கட்கு தோட்டவிருந்து, புகைப்படம் பிடித்தல், பூமாலை சூடுதல் முதலிய சூழ்ச்சிகளை தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சில சங்கத்தார், கண்ணாளிகளான தலைவர்களின் கண்டனைக்கு பயந்து, சோளக்கொல்லை பிரளிப்பொம்மைபோன்ற, வாய்செத்தஉயிர்ப்பிணங்களைத்தலைவராக்கியும், சபையில்கோணாமல், நாணாமல், வாய்திறக்கக்கூடாத வன்கண்ணாளரைக் காரியாதிகாரிகளாக்கியும், நன்று தீதறியாத நாயகர்களை வாய்திறவாது, தலையசைத்து கைதூக்கும் காரியம் ஒன்றையே சாதிக்கும்படி தேர்ந்தெடுத்தும், அன்னோர்களை இந்திரன், சந்திரன் இமைமயோரென்று பலவிதமாக வர்ணித்தெழுதியும், விளம்பரப்படுத்தியும் வருகிறார்கள். இவர்களின் விளம்பரங்களைக்கண்டு மயங்காதார்யாரே? ஆகையால் குலோபகாரியே! உண்மையாய் உழைத்து வருபவர்களை வேடதாரிகளினின்றும் பிரித்துக்காட்டி, அவர்கள் செய்து வரும் பிரயத்தனங்களின் அநுகூலங்களை வெகுஜனங்கட்கும் அறிவிப்பது நின்கடமையன்றோ? அல்லாமலும், நின்குலமக்கட்கு சதாகாலமும் அறிவைப்பரவச் செய்வதற்கான மார்க்கங்களைப்போதித்தும், அவர்களை சீர்பெற்று வாழச்செய்தும், நின்குலச் சிறுவர்கட்கு வைதீகக்கல்விமட்டு மேயன்றி, பிரதம, மத்திமக்கல் விகளையும் போதித்தும், மாதராடவர்கட்கு சற்புத்தி புகட்டியும், புகழ் பெற்று நிற்கும் நின்நன்முயற்சியாலன்றோ நம்குலம் கடைத்தேறவேண்டும். இதனை விட்டு, பெயர் ஊர் தெரியாத பதஷ்டர்களின் படுமுயற்சியால் நம் குலம் முன்னேற்றமடைவதும் மற்றவர்களால் மதிக்கப்படுவதும் ஒருக்காலு மில்லை. ஆகையால், நற்காரியங்களில் விதண்டாவாதம் செலுத்தாமலும், வேறொருவர் பிரயத்தனங்களை வீணே யிகழாமலும், தத்தம் கருமங்களில் கண்ணுங்கருத்துமா யிருந்துவர நமக்கு விஸ்வேசன் திருவருள் பாலிப்பாராக.

**சமரச சரபம். கோ. விஸ்வநாதாச்சாரி,**

84-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## விஸ்வதபிரான்.

**இதை அழிக்கவல்லபம் உடையோமோ என்று ஆக்ரமித்தார்கள். எங்கும் சூழ்ந்துபார்த்தார்கள். கையினால்தகர்க்கவோ இடமில்லை. கல்லினால் தகர்த்தாலோபலனில்லை. ஆயுதத்தினால் தகர்த்தாலோமுடியாது. இதற்கு எவ்வித உபாய மென்று யோசித்துத் தங்கினார்கள்.**

இப்படியிருக்க விஸ்வத லோஹிதாளுக்கு பத்துப் பன்னிரண்டு வயது பிராயங்கள் சமீபித்துக் கொண்டிருக்கவும், காசிபமகாரிஷியானவர் யோசித்து இனிமேல் விஸ்வதர் பூபாரத்திற்கு இசைந்தவராக யிருக்கிறபடியினாலே, காந்தக் கோட்டையைவிட்டு இவர்களுடைய பாதஸ்பரிசத்தால் பூமிக்கு விரகதமனம் உண்டாகட்டும், இவர்கள் சங்கரீஸ்வரனை தெரிசனம் செய்யட்டும் என்றுகருதி, கோட்டையைச் சுற்றி சத்துருக்களுடைய முற்றுகையாயிருப்பதால், அங்குள்ள மாந்தை யாளர்களுக்குத் தெரிசனமளித்து விஸ்வதலோஹிதாள் பூபரிபாலனார்த்தமாய் வாமனகிரிக்கு விஜயமாக வேண்டியபடியால் உபாய மார்க்கத்தையும் அஸ்திர சஸ்திரங்களையும் நிர்மாணிப்பீர்களாக என்று திருவாக்கருள, அவ்விதமே மாந்தைக் கோட்டைக்குள் நின்றும் ஒருயோசனை தூரம் சுரங்கமார்க்கம் இயற்றினார்கள். அஸ்திரசஸ்திரங்களும் இயற்றிக்கொடுத்தார்கள். அதன் பேரில் காசிபர் அந்த ஜெகசிருஷ்டி பாலர்களுக்கு "நீங்கள் நிர்மாணிக்கும் ஜெகத்கிருத்தியங்கள் என்றும் விளங்குவதாக உங்கள் நன்றி சுகிருதங்கள் என்றும் நிற்க" என்றும் ஆசிகூறி விஸ்வதலோஹிதாளோடுபுறப்படலானார். அப்படியாக சுரங்கமார்க்கத்தின் மூலமாகக்காஞ்சனபூமியைக்கடந்து பூமியில் தோற்றமாகிச் சரண கமனர்களாக ஆனார்கள்.

அப்படியே மார்க்க சங்காரண்ணியத்தை அடைய, அவ்வாரண்ணியத்தின் காக்ஷிகளையும் நாமகாரணங்களையும் லோகபாலகர்களுக்குஅறிவித்துக்கொண்டுவருகவும், பூமி அதிர்ச்சிக்குக் காரணமாகத் தோன்றியிருந்த அக்னிதண்டத்தைப்பார்த்தார்கள். காசிபர் அபயாஸ்தமாகி, "விஸ்வேஸ்வரனை தியானித்துஇந்தருத்ரதண்டத்தை தரிப்பாயாக" என்றருள, விஸ்வதபிரான் ஞானோதயப் பிரபாமுகராகி அந்த ருத்ரதண்டத்தை தரித்தார். அப்பாலவ்வாரண்ணியத்தைக் கடந்து, வாமனாச்சிரமத்தின் எல்லையை அடைந்து, அவ்விடம் ஜெகதாலம்பந்தியில் நீராடி திருச்சின்னங்களணிந்து மனதைக் கவருவதான மலர்களை அணிந்து கனிவர்க்கங்களை யருந்தி சுகாஸீனமாயிருக்கும்படிச் செய்து, ஆச்சிரமத்தை அடைந்து சங்கரீஸ்வரனுடைய தெரிசனப் பிரஸாதப்பிராப்தியானார்கள், பின்பு அத்தினத்தில் காசிப மகாரிஷியும், விஸ்வதபிரானும்நிகழவேண்டிய பிரபஞ்ச பரிபாலனங்களைக் குறித்து சிந்தித்து நிஷ்டாபரரானார். இப்படியிருக்க அன்று நடுப்பகலில் அந்த வாமனகிரியினின்றும் வழக்கம் போல் தேவயோனி உற்பவர்களான கின்னரர்கள் சங்கம் வரவும், அந்த ஆச்சிரமத்தினின்றும் பிரமிப்பும் ஆநந்தநர்த்தனமு முடையவர்களாய் அந்தத்திருமேனிகளைக்கண்டு வணங்கி நின்றார்கள். அப்பொழுது அவர்களுக்கு விஸ்வதபிரான் ஆதரவான அன்புமொழிகூற, அவர்களுடைய ஹிருதயகமலங்கள் விகஸிதமாகி அடியார்களானார்கள்.

இவ்வைபவத்தைக் கண்ட காசிபமகாரிஷியானவர் களிப்படைந்து, இனி விஸ்வததர்ம குமாரனுக்கு கல்யாண குணசம்பவங்கள் தெய்வசங்கல்பத்தால் நடக்கும்; என்று, சுத்தபரிபூரணராய், விஸ்வதலோஹிதாளைப் பார்த்து, "நீங்கள் இந்த கணங்களோடும் புரப்பட்டு ஆத்மணி நகரத்தை அடைவீர்களாக. நாம் கந்தமாதனகிரிக்குச் செல்கிறோம்" எனவும் ஆசக்தவசனங்களைக்கூறி, திருவாக்குகளை எதிர்நோக்கியுள்ள பாலர்களுக்கு, அருளினதாவது:—உங்களுங்கு பிரபஞ்ச தர்மச்சூடுதலான ஏகசக்ராதிபத்யக்கிரீட தாரணப் பிரபாவத்திற்கு வருகிறோமென மறுமொழிகூர்ந்து, பாலர்களிடம் விடைபெற்றுச் சென்றார்.

அப்பால் அக்கூட்டத்திற்குத் தலைவராயும், பராக்கிரம சாலியாயும், சுவேதவர்ண முடையவராயுமான சுபத்திரன் விஸ்வதபிரானுடைய உத்திரவுப்படி சங்கத்தோடு கோலாகலமாய்ஆத்மணிநகரத்தைக்குறித்துப் புறப்பட்டார்கள், அப்படியாக அந்தக்கூட்டமானது வாத்திய கோஷங்களைத்வனிக்கப் பெற்று ஆத்மணி நகரத்தைக்கிட்டிற்று, இவ்வாறு விஸ்வதபிரான் எழுந்தருளும் செய்தியானது நகரத்திற்கு எட்-

டவும், பிரஜைகள் சந்தான பரிவாரங்களோடுந் திரண்டு ஜனப்பிரவாகமாய் விஸ்வதபிரானை எதிர் கொண்டதனுல், நகரமானது, பிரஜையின்றியிருந்து, கைலாயத்தினின்று விஸ்வதபிரான் ஜன சமூகங்களோடும் அப்பொழுதுதான் ஆத்மணி நகரத்தில் பிரவேசிப்பதுபோலாயிற்று, அப்படியாக அரண்மனையில் சன்னத்தராகி சக்கிரவர்த்தியாரின் சிங்காசனகொலு மண்டபத்தில் நிறைந்துள்ள ஜன சமூகத்தி திலகமணியாய், வேலாயுதத்தைத் தரித்த சுரமண்யக் கடவுளைப் போன்று, ருத்ரதண் தாரியாய் பிரகாசித்திருந்தார் விஸ்வதமூர்த்தியானவர்.

(தொடரும்)

திருநெல்லை - சாலிவாடி புராதீனம்,
தர்மபதி.

---

## விஸ்வபிரம்ஹ மென்கிற விஸ்வேஸ்வர பகவான்பேரில்
### மிட்டாய்க் கண்ணிகள்.

இராகம் நாதநாமக்கிரியை தாளம் ஆதி

**பல்லவி.**

மதுரசுவையநிர்த மிட்டாயிருக்குது
வாங்குமன்பர்களிங் குண்டானுல்
வஞ்சகப்பிரபஞ்ச சஞ்சலந்தவிர்த்தருள்
வழங்கும்விஸ்வப்பிரம்ஹ மிட்டாயி.

**கண்ணிகள்.**

(1) சதுர்பரவியவிஸ்வ லோகேஸ்வரனெனத்
தத்துவங்கொண்ட மிட்டாயி
முதுமறைமுடிவினில் நடனதேஜோமய
மூர்த்தியாய்வந்த மிட்டாயி (மதுர)

(2) ஆதிபராபரையின் சத்வகுணமகிமை
யாலெங்கும்நிறைந்த மிட்டாயி
ஜோதிஸ்வரூபமாக ஜ்ஜனகாதிமுனிவர்முன்
தோன்றியசற்குரு மிட்டாயி (மதுர)

(3) அணிமாதியஷ்டமா சித்தியும்பெற்றுள்ள
அன்பர்கள்போற்று மிட்டாயி
மணிகொண்டதிவ்யதே ஜோமயவிஸ்வப்ரம்ஹ
வஸ்துவாய்வந்த மிட்டாயி (மதுர)

(4) பிரபஞ்சசில்பாச்சாரி விஸ்வகர்மாவெனப்
பெரும்புகழ்பெற்ற மிட்டாயி
சரதபஞ்சப்ரம்ஹ வம்ஸஸ்தர்களாற்பிர
ஜாவிர்த்திசெய்த மிட்டாயி (மதுர)

(5) கற்கண்டுஜீனிதேன் கலந்தோருருபமான
கருணைப்ரவாக மிட்டாயி
சிற்பரவகண்டசாக்ஷாத்காரவற்புத
தேசிகனுன மிட்டாயி (மதுர)

(6) சருவலோகசரண்ய சாக்ஷாத்பரப்ரம்ஹ
சைதன்யமான மிட்டாயி
திருமருவியவேதச் சிலம்பொலிபொற்பாத
தெரிசனந்தந்த மிட்டாயி (மதுர)

(7) வாலவயதிருந்த மஹிமைபலவுமுன்போல்
வழங்கிடவந்த மிட்டாயி
காலபாசத்தைத்தவிர்த் தன்பர்கடனைமுற்றுங்
கரையேற்றவந்த மிட்டாயி (மதுர)

(8) ஆதிலக்ஷியங்கடந் தப்புறத்தொளிர்கின்ற
அமலப்ரகாச மிட்டாயி
பாதிமதிதரித்த பரசிவவிஸ்வகர்ம
பரம்பொருளான மிட்டாயி (மதுர)

(9) ஏகாக்ரகசிந்தமாயிருந்து தவம்புரிய
இன்பமருள்செய்யும் மிட்டாயி
சாகாதவரமுடனன்பர்தமக்குமுத்தி
தந்தருள்புரியும் மிட்டாயி (மதுர)

(10) அந்தரவானவர் சந்ததம்போற்றிய
ஆதிவஸ்துவெனும் மிட்டாயி
மந்திரவேதஸ்வரூபமுடன்விளங்கும்
வரதமெய்ஞ்ஞான மிட்டாயி (மதுர)

(11) இருவினைப்பயனை யெடுத்தசரீரமுடன்
என்னையீடேற்று மிட்டாயி
சருவபரிபூரண வகண்டசாக்ஷாத்கார
சைதந்யமான மிட்டாயி (மதுர)

(12) சனிதிசைபோலிந்தச் சந்திரன்றிசைமுற்றுஞ்
சகலபலன்தரு மிட்டாயி
தனிமுதலாகிய சாக்ஷாத்பரப்பிரம்ஹ
தாரகசொருப மிட்டாயி (மதுர)

(13) பதிதபாவனஞான பண்டிதனுறைய
பரசிவமான மிட்டாயி
கதிகண்டுதமியேற்குச் சகலசௌபாக்யமுந்
தந்தருள் புரியுமிட்டாயி (மதுர)

(14) ஓங்காரகுண்டலி மத்தியில்நடமிடும்
ஓம்நமசிவய மிட்டாயி
ரீங்காரவாதிசக்தி ரூபவிராட்டென
நீடும்விளங்கிய மிட்டாயி (மதுர)

(15) சகலவிஸ்வப்ரம்ஹ சந்ததியார்களுந்
தழைத்தோங்கச்செய்யும் மிட்டாயி
இகபரமிரண்டினுக் கெட்டாதவஸ்துவா
யெங்கும்நிறைந்த மிட்டாயி (மதுர)



(16) சந்ததம்மௌனகுரு ருத்திரமூர்த்திக்கவியின்
சஞ்சலமாற்றிய மிட்டாயி
பந்தபாசந்தனை நீற்றன்பருக்கருள்
பாலிக்கவந்த மிட்டாயி (மதுர)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.
Ex. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

---

(84-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## ஈகை

ஈவதிலும் கொடுத்தாரின்னாரென் றறியாவண்ணம் அளித்தலே மிக உத்தமதர்மமாம். இவ்வாறு செய்வோரேபெரியோரெனப்படுவர். இவர்களை பலாவுக்கொப்பிட்டுக்கூறப்படும். எப்படியெனில், பலாமரமானது மற்றவிருக்ஷங்களைப் போல பூத்துப்பின் காய்ப்பதில்லை. வேர்முதல் மரமுழுதும் ஈங்கும் காய்க்கும். பழமும் மேற்புறத்தில் முள்ளுடையதாய்க் காணப்படினும் அதினுள் உள்ள சுளைகள் மிகவுருசியாயிருக்கும். அதுபோலவே பெரியோர்களும் தாம்செய்யக் கருதும் உபகாரத்தை பிறருக்கு புகன்று புரியார். பல்வகையானும் பரிந்தியற்றுவர். முதலில் கெடுதியாகப்புலப்படினும் முடிவில் நன்மையுடையதாகவே யிருக்கும். ஆகையால் இவ்வித தர்மமே மேன்மையுடையதாம்.

சாதாரணமாக பெரும்பாலரும் பிறரறியச் செய்யும் தர்மமே மிகவுளது. இது சிறியோராலாற்றப்படுவதென கூறப்படுகிறது. இவர்களை மாமரத்திற் கொப்பிடலாம். எவ்விதமெனில் மாமரமானது பூத்துப் பிறகு காய்ப்பது. பழங்கள் பார்வைக்கு ரமணியமா யிருப்பினும் சுவைத்தற்கு சில மதுரமாயும், சில புளிப்பாயுமிருக்கின்றன. இதுபோலவே இச்சிறியோர்களும் தாமியற்றும் தர்மத்தைப் பலரும் புகழ வேண்டுமெனக் கருதி நாடெங்கும் தெரிவித்துச் செய்வார்கள். அவர்கள் செய்வதிற்சிலது புண்ணிய கருமமேனும், பல இடம்ப சம்பந்தமான வீண்செலவுகளால் பார்ப்பவருக்கு அழகாய்க் காணப்படினும், குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டவர் தன்மைபோல பாவச் செயல்களாய் முடிகின்றன. ஆனால் இவர்கள் சிறிது கவனித்து திருத்திக் கொள்வாராயின் தாம் எண்ணிய கருமமெல்லாம் புண்ணிய கருமமாக நிறைவேறும்.

இன்னும் கயவோரெனச் சொல்லப்படுபவர் ஒருவகையினருளர். இவர்களை பாதிரிமரத்திற் கொப்பிட்டுச் சொல்லப்படும். பாதிரிமரமானது மிக அழகுடைய புஷ்பத்தையுடையதானாலும் காய்க்காமலும், அப்பூவும் வீணாகவுதிர்ந்து போய் யாருக்கும் பயன்படாது நிற்பதாம். அதுபோலவே, அக்கீழோரும் தன்னிடத்துப் பொருளிருந்தும் பிறர்க் கீபவர்போல் வாய்ப்பறை சாற்றினும் கிட்டநெருங்கிக் கேட்போருக்கு, காயாமரமும், வறளாங்குளமும், கல்லாவுமென்ன நிஷ்பலமாக விருப்பதுமன்றி, பொருள்காத்த பூதமாக நடைப்பிணமாயிருந்து திரிவர். இவ்வகை மனிதர் உயிர் இருந்தும் இல்லாதவரேயாவர்.

ஈதல்தான் அறத்தினாலாயபயனைப் பெற முக்கிய ஆதாரமெனத் தெரிகிறது. இதைக் குறித்தே இன்சொல்லென்ற பூமியை சமப்படுத்தி, அதில்வாய்மையென்ற எருப்போட்டு, ஈதலென்ற விதையையிட்டு, அன்பென்னும் நீரைப்பாய்ச்சி, வன்சொல்லென்ற களையைப் பிடுங்கி எறிந்து, அறமென்ற கதிரைக்கொடுக்கும் ஒப்பற்றபயிரை ஒவ்வொருவரும் வளர்க்கவேண்டுமென அறிந்தோர் அறிவுறுத்தியிருக்கின்றனர்.

“சாதி யிரண்டொழிய வேறில்லை” சாற்றுங்கால், நீதிவழுவா நெறிமுறையின் மேதினியில்—இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுல

த்தோர், பட்டாங்கிலுள்ளபடி" என்று ஆன்றோர் கூறியதை ஆழ்ந்து நோக்குமிடத்து, இல்லையென்றிரப்போர்க்கு இட்டவரே பெரியோரென்றும், தயையுடன்தாராதவரே தாழ்ந்தோரென்றும், வேறுவிதமான சாதிவித்தியாசமின்றெனவும் விளங்குகிறது. ஒருவராவது தாம்தாழ்ந்த குலத்தவரென்று பிறர் கூறச்சம்மதியார். அவர் அறங்கடையில் நின்றொழுகி வருவாராயின், தம்மைபிறர்மதிக்க விரும்புவது சரியாமோ? ஆனால் உயர்ந்தவராக விரும்பவேண்டியதவசியமே, தாம்செய்வது தவறுஎன்று தெரிந்தபின்னாவது திருத்திக் கொள்ள முயலுதல் வேண்டும். நம் முயற்சியும் இடையூறின்றி நிறைவேற நல்லோரிணக்கமிருந்தாலன்றிஆகாததாம் "நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்" என்பது நாம் நன்கறிந்ததே அம்மேலோரின் கூட்டுறவால் "நெருநலுள னொருவனின்றில்லை யென்னும், பெருமையுடைத்திவ்வுலகு" என்ற பெரியோர் வாக்கியம் இடைவிடாது மனதில்நின்று ஏத் தீக்கருமமும் புரியாது அன்னோர் காட்டும் அறநெறி யொழுகி நன்னிலை தன்னை நலனுறப் பெறுவோம்.

ஆகையால் நாம் வறுமையுற்றிரப்போர்க்கு இல்லை யென்றுரைத்தும், அவ்வீகைக்கனுகூலமாகிய நற்குணங்களைக் கைக்கொண்டு, அந்நற்குணங்களை யடைய பெரியோர் பாற்பழகியும், அவ்விதம் பழகுங்கால் அரனடி வணங்கி அவனருளைப் பெற்று புண்ணியமுடைய புனிதராய் வாழ்வோமாக

S. ஆனையப்பாச்சாரியார்.

(87-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## சத்திய சம்வாதம்.

ஆதவன்:—தெய்வத்திருவருள் கைவந்த குணத்திற் சிறந்துவிளங்குந் தேவரீர் பணித்தவாறு என் குறைகள் யாவையும் நிவர்த்திசெய்யுமா றவாவுடையேன்.

பிரபோதன்:—பூர்வபுண்ணியப் பொலிவாற்புத்திநுட்பமுற்றும்சதுர்கள்பாலன்புற்றும், அவர்களாற் பல அரிய நுண்ணிய விஷயங்களை யுணர விசைந்த கெம்பீர! ஈண்டு கூறப்புகும் அண்டவிஷயத்தினை மிகுந்த சாவதான சித்தமுடன் கேட்டி.

ஆதவன்:—எனதிஷ்ட தெய்வ வடிவாயெழுந்தருளி எனதிதயத்தினையோர்ந்தும் பிரசன்ன முகத்துடன் அந்தியந்த கிருபையோடும் ஆரம்பிப்பமென்னு மொழி கேட்டும், அதனை என்மனதில் நினைக்க நினைக்க வெனையறியாது எனதுளம் பூரித்து மயிர்க்குச்செறிந்து விம்மிதமடைகின்றது.

பிரபோதன்:—கடவுள், பிரமம், சிவம், பரம், அறிவு, ஆத்மா என்பனவொருபொருள் வாசகம், அனாதிமுத்தமாகவுள்ள கடவுள் பிரவாக வனாதிவாசனை வசத்தினால் ஜீவர்கள் காரணசரீரமாகிய அஞ்ஞானாந்தகாரத்திற் கட்டுண்டு நுணர்வுமாழ்கிக்கிடப்பதைக்கண்ணுற்றுத்தமது திருவருட்பெருக்கால் ஆகாசாதி சூக்ஷம பஞ்சபூதங்களையும், அதன்காரியமாகிய தேவகந்தருவ சித்தவித்தியாதர சரீரங்களையும், அஃதுறைவான் தேவலோகாதி பலவுலகங்களையும், அஃதுண்பான் அப்ஜரையமிர்தமாதிய பலவுன்னத விசித்திர போகங்களையும், அவற்றினைச் செவ்விதினடாத்தப் பிரமேந்திராதி புங்கவர்களையும் உண்டு பண்ணிச் சின்னாட்டையயுடனமைவுற்று நோக்கவும், அவர்கள் போகத்திலதிருசரர்களாகவும், உச்சநீசபதவி விவகாரங்களின் மானத்தினால் ராகத்துவேஷாதியும், பலபிணியும் அடைந்துவருவதைக் கண்ணுற்று, இச்சிருட்டியினால் நிஷ்பலமேயன்றிச் சபலமின்றென வுளங்கொண்டு, அப்பூதங்களைப் பஞ்சீகிருதம் (ஒன்றுடனொன்று அளவுபடச் சேர்த்தல்)செய்து, அதாவது, தூலபஞ்சபூதஞ்செய்து, அதனுள் மலையாறு, கடல், வனம், தீபம், முதலியவற்றைவகுத்து, அதனிலு



றைவான் எக்ஷராக்ஷஸ பைசாச பூதவரை சிம்ம காண்டாமிருக எண்டபேரண்ட பசுபக்ஷி யானை புலி கரடி நாகவர்க்கவிருக்ஷ புற்பூடாதியாவும்படைத்தும், அஃதுண்ணும் பல்வகைப்பொருளும், வகுத்துச் சின்னாளைக்க, அவைகளும் முன்போலப்போக விவகாரத்திலேயே பலவிதக் கிலேசங்களையடைந்து வருந்துவதைப் பிதாமகன் கண்ணுற்று மிகுந்த வியாகூலத்துடன் பன்னாட்டவங்கிடந்துஞ், சொப்பிரகாசச் சுயஞ்சைதன்யத்தின் விளக்கத்தினால் மானவசிருஷ்டியினைச் செய்ததாகவும், இவர்கள் மனவுணர்வு (பகுத்தறிவு) டையவர்களாக விருத்தலைக்கண்டுவியந்து தான்செய்தசெயல் நற்பலன்பெறுமென்றுமதித்து, அதாவது, ஒரு உபாத்தியாயர்தான் கற்பித்த வித்தையினை பரீக்ஷித்து மனந்தேரிப் பிள்ளைகள்நல்லநிலைக்கு வருவார்களென மனந்தெளிந் தின்புறுவதுபோல, இன்புற்றனன். இதனை "மடல்விரிந்த மரைமலர் வைகுவோன், சடமனைத்தையுந்தந்து முவந்திலன், இடராறக்குமென்றெண்ணி நன்மானுட, வுடல் படைத்தபின் னோகையுற் றனரோ" என்ற கவியாற் றெளிக.

ஆதவன்:—ஆயின் மானவஜாதிகள் யாவும் என்னசெய்தனர்.

பிரபோதன்:—இவர்களும் மேலிருவகைச்சிருட்டி போலவே "காலையே கண்டெழுதல் காணுமலை புணர்தல், மாலைக் குளித்து மனைபுகுதல், சாலவுந்தன், உற்றாரோடுண்ட லுயிரோம்ப விர்குணகள், கற்றாரார் காகத்தைக்கண்டு" என்றபடி தற்சூழ்ந்துள்ள பசுபக்ஷிகளின் வழக்கவொழுக்கங்களைக்கண்ணுற்று மவ்வழிநடந்து பிணியாலும், வறுமையாலும், போகத்தாலும், பசியாலும், மரணத்தாலும், கலக்கமெய்தி வருந்துவதைப் பரமேட்டி திருவுளத்தமைத்து இச்சீவர்கள் நல்லன செய்து, அல்லன நீத்துங் கடைத்தேறும் பன்மார்க்கத்தினையும் தொகுத்தும் வகுத்தும் கூறியதுதான் முதனூலாகிய வேதமென மொழிவர் அறிவுடையர்.

ஆதவன்:—வேதத்தினை அபௌருஷேய (புருஷனாற் கூறப்படாத) வாக்கியமெனவும், ஈஸ்வரவாசகமெனவும், அனாதியெனவும் கூறுவதின் அபிப்பிராயமென்ன.

பிரபோதன்:—நீ கேட்டது சாலவும் நன்று. கர்த்தா, போக்தா, விக்ஞாதா, முதலிய அகங்காரத்துடன் ஒன்றுபட்ட ஜீவ விளக்கத்தினால் சொல்வது பௌருஷேயம், அங்ஙனமன்றி, தனக்குத் தெரியாத ஒரு பாஷையினை யோகசித்தி வல்லுனர்கள் அல்லது, தத்காலத்தில் மெஸ்மரிஸ (மனோதத்துவசாஸ்திர)ப்பழக்கமுடையார் தமது மனோபலத்தினால் ஒருவனுணராத பாஷையினை அவன் வாக்கினால் சொல்விப்பது போல, சுட்டுப்போதங்கலவாத பரபோதானந்த மயமாகவிருந்த நிலையிலிருந்தே வசனிப்பது தான் வேதமெனவும், அருள்வாக்கெனவுங் கூறுவது ஆன்றோர் மரபு. இதனைச் சுருதியும், பிரஹ்மவேத்தாபிரஹ்மமே என்று கூறியது இதன் பொருள். பிரம்மத்தையுணர்ந்தவர் வசனம். வேதமே எனத் தேற்றேகாரங்கொடுத்தோதியுளது. இதனை விளக்குதும் கேள். எவன் எது கூறுவனோ அவன் அதன் பொருளறிந்துதான் கூறவேண்டும். பிரம்மாவோ பிரணவ தார்ப்பரிய முணராது நம் குமாரசிவத்தின் கரத்தாற் குட்டுண்டு சிறைவாசமெய்தியது யாதுகருதியெனின், பிரம்மாவுக்கு வேதனெனப் பெயருளதாதலினால் வேதஞ்சொன்னவன் என்றது பொருளாகவும், அவன் பொருளறியாது கிளைக்காரனென்றது கற்போதங்கொண்டு கூறியதன்றெனவுமறிக. தூலசூக்கும சரீரபேதமும் போதமுந் தோன்றாது போதானந்த மயமாக விருந்து கூறியதாம். இஃது ஒவ்வொதெனவையமுனைக்குரைதேல் கூறுதும். பஞ்சகிருத்தியத்தாண்டவஞ் செய்யும் பரஞ்சுடராகிய சம்பு திருக்கூத்தினைக் கண்ணுற்றவளவில் ஊன் மறந்து உணர்வாகவிளங்கிய முனிபுங்கவர் கரத்துள் வீணை தானேவாசித்தது எவ்விதமோ அவ்விதமென் றனுமானித்துணர்ந்துதெளிக. "கின்னரியைத் தொட்டவர்

போற் கேட்டவளவுக் களவு, சொன்னதலவெங்கள் சுவாமியுரை—மன்னடத்தி,லானந்த மூர்ச்சிதர்கை யாடகயாழ் தன்னிலே, தானு நலம் போலமெழிந் தான்" என்னும் ஒழிவிலொடுக்கத்தா லுணர்க. மற்றும் கர்ணன் தான்புத்தகத்திலடியுண்டு களைத்துக் கிடக்கவும், தருமதேவதையின் சகாயத்தினால் பாணங்களைச் செலுத்தியதும் தற்காத்ததது மாமெனவுணர்க. அன்றியும் இரட்டைப்புலவர்கள் தாம் பாடிய ஸ்ரீ காஞ்சிபுலாவும், நல்காத்தூர் புராணமும் அரங்கேற்றுஞான்று சபையிலுள்ளார் விகடசக்ர விநயகர்ஆலயமில்லாததும், நதிக்குத்தென்பாலிருக்கு மாலயத்தினை வடபாலுள தாகப்பாடியதுங் கேட்டு மறுத்துக்கூறவும், அதற்கவர்கள் "யாமுமறியேம் அவளும் பொய் புகலாள்" என்றதும் மனத்திற்றரித்துணர்வது கடனும்.

தொடரும்.

பொது நன்மையை விரும்பும்

ஓர்சாது.

# பல குறிப்புகள்.

### ஆங்கிலேய வைதீகக்கல்வி.

நம்மவர்களிற் சிலர் வைதீகக் கல்வியை இகழ்ந்து, ஆங்கிலேயக் கல்வியைப் புகழ்ந்து, அதைமட்டும் நமது சிறுவர்களுக்கு போதிக்க வேண்டுமென்று பல நியாய வழியாக நிரூபிக்கப் பார்க்கிறார்கள். மற்ற ஜாதியர்களைக்காட்டிலும் விப்பிரர்கள்மட்டும் ஏன் ஆங்கிலேயக்கல்வியில் பிரகாசித்து விளங்குகிறார்களென்பதை ஆழ்ந்துபார்த்தால் அதனுண்மை அவர்களுக்கு விளங்காமற் போகாது. ஆனதுபற்றியே, நமது வேதாத்தியயன பாடசாலையில் வைதீகக் கல்வியோடுங்கூட, பொதுக் கல்வியாகிய ஆங்கிலேயக் கல்வியையும் நம் சிறுவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகிற தென்பதை நம் குலோற்பவர்கள் நன்றாய்த் தங்கள் கவனத்தில் வைக்கவேண்டும்.

***

மத்திமக் கல்வியை அபேக்ஷிக்கு மெளிய சிறுவர்கள் சிலருக்குச் சம்பளம்,வஸ்திரம் முதலியவைகள் கொடுத்து உதவி புரிய எண்ணங்கொண்டிருக்கிறோம் அவர்கள் கல்வியில் சுருசுருப்பும், பரபரப்பும் காட்டக்கூடியவர்களென்றும், உபகரித்தால் முன்னுக்கு வரக்கூடியவர்களென்றும், தகுந்த மூன்று கனவான்களிடமிருந்து நற்சாட்சிபத்திரம் வாங்கி யனுப்பவேண்டும்.

***

உயர்தரக்கல்வியிலும்,தொழிற்கல்வியில் மனதைச் செலுத்தி அதனை அபேட்சித்து நிற்கும் சிறுவர்கள் நம்மிடமிருந்து உபகாரச்சம்பளம் பெறக்கருதி நமக்கு அடிக்கடி மனு செய்து கொள்ளுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் ஆதரிக்கவேண்டுமென்ற அவா மிகுதியா யிருப்பினும், அதனை இடையூறின்றி நடத்தி வருவதற்கு பொருளின்மையால் வியாகூலமடைகிறோம். இதனை நம் குலாபிமானிகள் கவனித்து இவ்வித தருமங்கள் ஈடேறுமாறு பொருளுதவி புரிவது நலம்.

***

நமது வேதாத்தியயன பாடசாலையிலிருந்து, வெளியூருக்கு, பௌரோகிதம் செய்து வைக்கக்கூடிய சிறுவர்களை அனுப்பும்படி கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த பாடசாலையில் படிப்பவர்களுள் பெரும்பான்மையோர் சென்னை வாசிகளாகையால், வெளியூருக்குப்போக அஞ்சுகிறார்கள். தகுந்த வருமானம் கிடைக்குமிடங்களுக்கு சிலரேனும் போவதில் தடையிராது.

***



வெளி ஜில்லா வாசிகள், தங்கள் சிறுவர்களுக்கு வைதீகக்கல்வி கற்பிப்பதற்கு சாதனமாக, இச்சென்னையில் அம்மாணவர்கட்கென விடுதிச்சாலைகள் ஏற்படுத்துவது அவசியமாகிறது. இப்பெரு முயற்சிக்கு பொருள் நிரப்பவும் வேண்டியிருப்பதால் இதனைச் சேர்க்கும் மார்க்கத்தை நம் குலாபிமானிகள் யோசித்து தெரிவிப்பார்களாக.

***

நம் குலோபகாரிக்கு "விஸ்வகர்ம குலோத்தாரண பிரஸ்" என்ற ஓர் சொந்த அச்சுக்கூடமிருப்பதை நம் நேயர்களறிவார்கள். ஆயினும், அந்த அச்சுக்கூடம் பத்திரிகைகள் பிரசுரம் செய்வதற்கென்ற உத்தேசத்துடன் முதலில் அமைக்கப்படாமையால், இனி நவீன இயந்திரங்களின் உதவியைக்கொண்டு நம் பத்திரிகையை பரிமளிக்கச்செய்து, நமது சந்தாதாரர்களையும் களிக்கச் செய்யவேண்டுமென்பது நமது கோரிக்கை. ஆகவே, நேயர்கள் வேறு உதவி புரியக்கூடாதகாலத்து, தங்கள் சந்தா தொகைகளைக் கேளாமலே அனுப்பி எம்மை உற்சாகப் படுத்துவார்களென்று நம்புகிறோம்.

***

இப்பத்திரிகையில் வரும் ஊதியத்தை, பாடசாலை முதலிய குலோத்தாரண விஷயங்களில் மட்டுமே செலவிடப்படுகின்றதென்பதை இன்னுமொருமுறை ஞாபகப்படுத்துகிறோம். ஒரு காசளவேனும் சொந்த உபயோகத்திற்கும், வீணான டம்பக் காரியங்களுக்கும், ஓயாத குலவாதுகளுக்கும் செலவிடப்படுகிறதில்லை யென்பது உண்மை வசனம். இதனை சந்தேகிக்கும் கவான்கள் கணக்குப் பரிசோதனை செய்து கொள்வதற்கு எக்காலத்திலும் தடையிராது.

***

சென்னை யொழிந்த மற்ற ஊர்களிலுள்ள நம்மவர்கள்ஆச்சாரியென்பதைவிட்டு தங்களைத் தாமே "ஆஸாரி" என்று சொல்லிக்கொள்வதற்கிணங்க, சென்னை கவர்ன்மெண்டாரும், அப்படியே அவர்களனைவருமழைக்கப்படவேண்டுமென்று ஒருமுறைக்கிருமுறை உத்திரவிட்டிருப்பதைக் குலாபிமானிகள் முன்னரே அறிவார்கள். ஆகையால், தகுந்த முகாந்திரம் காட்டி அவ்வுத்திரவை ரத்து செய்யும்படிக்கு சென்னை துரைத்தனத்தாரைக் கேட்டுக்கொள்வதற்கு பல ஊரிலும் மகாநாடுகூடி தங்கள் உணர்ச்சியை ஓர் தீர்மான வாயிலாய் விளக்கி, மநுக்கள் அனுப்புவிக்க சுருசுருப்புக்காட்டுவார்களென்று நம்புகிறோம்.

***

ஜாதீய விஷயங்களிலும், ஒற்றுமை அபிவிர்த்தியிலும், குலோத்தாரண விஷயங்களிலும், தலையிட்டு, ஊக்கத்துடன் உழைத்துவரும், திருச்சி விஸ்வப்பிரம்ஹ மஹாஜன சென்டரல் சபையார், நம்மவர் இழந்துபோன "ஆச்சாரி" என்னும் பட்டப்பெயரை மீட்கும்படியான எம்முயற்சியிலும் நாம் மனதார ஒத்துழைக்கத் தயாராயிருக்கின்றோம். மநு முதலியவைகளையும், மற்றும் வெளி ஜில்லா வாசிகளுக்குத் தெரிவிக்கவேண்டிய விஷயங்களையும், அவர்களுக்கு தெரிவிக்கும் கடமையையும் நம் "குலோபகாரி" ஒருவர் வேண்டாமலே சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றனள்.

***

வெளி ஜில்லா வாசிகளான நம் சுஜாதி கனவான்கள், சென்னைக்கு வர நேர்ந்தால், கட்டாயமாக நமது பாடசாலையைப் பார்வையிடவேண்டுமென்று வேண்டுகிறோம். சென்ற சில வருடங்களுக்குள் நூற்றுக் கணக்கான கனவான்கள் விஜயம் செய்யும்படியான பாக்கியத்தைப்பெற்றோம். இனி அங்ஙனம் வருபவர்களின் நாமதேயங்களையும், அவர்களின் ஏகதேச அபிப்பிராயங்களையு மவர்கள் சுவஸ்த லிகிதத்தில் வரையும் வண்ணம்ஓர் ரிஜிஸ்டர் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அபிப்பிராயங்களின் சாராம்சத்தை இனி வெளியிடக்கூடும்.

***

# கடிதங்கள்.

**விஸ்வகர்ம வேதாத்திய்யன பாடசாலைக்கு போஷகர்கள்.**

ஐயா! விஸ்வகர்மகுலோபகாரியின்மூன்ருவது சஞ்சிகையில் வெளியிட்டிருந்த "விஸ்வகர்ம குலோபகாரியின் விளக்கம்" என்றவியாசத்தை வெகுகவனத்துடன் வாசித்தேன். அதை என்சிநேகிதர்களுக்கும்படித்துக்காட்டினேன் பத்திரிகை விஷயங்களையும், பாடசாலை விஷயங்களையும் மிகவும்தெளிவாக எழுதப்பட்டிருப்பதைத்தெரிந்து சந்தோஷப்பட்டோம். நம்மவர்களில் சிலர் ஆரம்பசூரர்களாயிருந்து பிறகு அடங்குமிடம் தெரியாமல்போய் விடுகிருர்களென்று பலரும் நிந்தனைசொல்ல முன்வருவார்களேயன்றி, ஒத்தாசைசெய்து அவர்கள் செய்யும் பிரயத்தினங்களை முன்னுக்குக்கொண்டுவருகிறதில்லை. ஆகையால் நம்ஜாதிதற்காலமிருக்கிறநிலைமையை, பெரியபட்டணங்களிலிருக்கிற தங்களைப்போலொத்த குலாபிமானிகள் எடுத்துக்கொள்ளும் சிரமத்தால்தான் சீர்படுத்தவேண்டும். நாங்கள் கிராமவாசிகள். எங்களுக்கு வெளிஜில்லா விஷயங்கள் அதிகமாக தெரியாதபடியால் நாங்கள் ஜாதி விஷயமாக ஒன்றைச்செய்துமுடிக்கசக்தியற்றவர்களாயிருக்கிறோம். எங்களாலியன்ற அளவுசரீரப்பிரயாசை எடுத்து ஒத்துழைப்பதற்கும், கூடியவரையில் பொருள்சகாயம்செய்வதற்கும் கட்டுப்படுவோம். ஆனல்போஷகர்களா யிருப்பதென்ருல் ரூ. 25 அதிகமாகத்தோன்றுகிறது, ஏனென்ருல், அதோடுகூட பிரதிவருஷமும் பத்திரிகைசந்தாவும் கொடுக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் போஷகர்ஸ்தானத்திற்கு ரூ. 15 ஆகக்குறைத்துவைத்தால், வெகுபேர்கள் மேற்படி தொகையை சந்தோஷமாய்க் கொடுத்துதவி செய்வார்களென்று நம்புகிறேன். எங்களூர் கிராமமாயிருந்தாலும். 5-போஷகர்களை சேர்த்துக்கொடுக்கத் தயாரா யிருக்கிறேன். மெல்ல மெல்லப் பாயும்தண்ணீர் கல்லுருகப்பாயும் என்பதையும், பலதுளி பெருவெள்ளம் என்பதையும், கவனிக்கும் நாங்கள் நிரணயித்திருக்கிற சொல்ப தொகையை வெகுஜனங்களும் அங்கீகரித்து அந்ததீர்மானத்தை தயவுசெய்து அடியேனுக்குத்தெரிவிக்கும்படிக்கு பிரார்த்திக்கிறேன். ஏதோ, எனக்குதோன்றியதை எழுதினேன். என்பிழையை தயை செய்து பொறுக்கவேண்டும்.

இப்படிக்கு: தங்கள்
ஊழியன்
**த. சாந்தலிங்க பத்தர்.**
குந்தனவேலை, தஞ்சைஜில்லா.

நிரூபநேயரின் அபிப்பிராயம் கவனிக்கப்பட்டுவருகிறது, கூடியசீக்கிரத்தில் முடிவுதெரிவிக்கப்படும். ப—ர்

## விஸ்வகர்ம புரஸ்தாபனம்.

ஆதியில் அண்டபுவன சராசரங்கள் அனைத்தையும் படைத்துக்காத்த ஜகத்கர்த்தாவான "விஸ்வகர்மன்" என்னும்விஸ்வேஸ்வர பகவான் திருவருளை முன்னிட்டு, அவரது திவ்வியநாமதேயத்தை பக்தஜனகோடிகள் என்றும் நினைவுகூறும்படி, பழனிஸ்தலத்தில் வசிக்கும் மாஜி முனிசிபல் கௌன்ஸிலர்களிலொருவரும், திருச்சி விஸ்வப்ராம்ஹ மஹாஜனசென்ட்ரல் சபையின்வைஸ்பிரசிடெண்டுகளிலொருவரும், பழனி பொது நன்மைசங்கத்தின் காரியதரிசியும், மலபார்ஆசாரி ஐயாதியார் மடாதிபதியும் ஆகிய பிரம்ஹஸ்ரீ V மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார் அவர்களுக்கும் அவரது சகோதரரான பிரம்ஹஸ்ரீ V. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியார் அவர்களுக்கும் பாத்தியமானதும், பழனியாண்டவர் சந்நிதானத்திற்கெதிர்ப்புறமுள்ளதும், தென்புறம் ஜலசௌகரியமுடையவைகாபுரிக்குளமும், தேவஸ்தான பங்களாவும், மேல்புரம் தாலூகாகச்சேரியும், வடபுறம் இனிவரப்படுத்தப் போகிறரயில்வே சங்ஷனும்,மிகுந்தஜல சௌகரியமுடைய சுப்ரமண்யபுரமும், ரோமான்கத்தோலிக் ஆலயமும் கீழ்புறம் சிவகிரிப்பட்டி எல்லையும் புடைசூழப்பெற்றதுமாகிய அடியிற்கண்ட [ஊரடிப்புஞ்சை] காலி இடங்களில் "விஸ்வகர்மபுரம்" என்கிறபெயருடன் சிற்பசாஸ்திரோக்தப்படி சங்கஸ்தாபனஞ் செய்து, அதில், தரும சத்திரங்கள், மடவாலயங்கள் வீடுகள், கடைகள், கட்டிவசிக்க விருப்பமுடைய வர்களுக்குப் போதுமான இடங்களைக்கிரயஞ் செய்து கொடுத்து ஜனங்களைக் குடியேற்றி,டவுனைவிர்த்திசெய்ய முயற்சித்துக்கொண்டிருப்பது யாவருஞ் சந்தோஷங் கொண்டாடத்தக்கதே.

மிகுந்த உன்னதமும், பந்தோபஸ்தும், ஜல சௌகரியமும் உள்ள மேற்கண்ட இடங்களில் விஸ்வப்ராம்ஹண குலாபிமானிகளின் திரவிய சகாயத்தைக்கொண்டு யாத்திரை ஸ்தலமாகிய இந்தப்பழனி க்ஷேத்திரத்துக்கு வரும் யாத்திரீகர்களான விஸ்வப்பிராம்ஹணமஹா ஜனங்களின் வசதிக்கும் போதுமான சௌகரியத்துடன் ஓர் மடாலயத்தைக் கட்டிப் பிரதிஷ்டை செய்து அதில்தங்கள்வம்ச பரம்பரையாரையே குடிவைத்து, வந்தவர்களுக்கு வேண்டியவுபசாரணைசெய்து வரும்படியான ஏற்பாடுசெய்ய ஆயத்தஞ்செய்துகொண்டிருக்கிருர்கள் சர்வவல்லமையும் படைத்த விஸ்வேஸ்வரபகவான் இவ் விஷயமானது முற்றுப்பெறும்படி திருவருள் புரிவாராக சுபம். சுபம். சுபம்

### இடங்களின் விபரம்.

1. தாராபுரம் புதுரோட்டுக்கும் கிழக்கு. ரோமான்கத்தோலிக் ஆலயத்துக்கும் தெற்கு. வெங்கடசாமி நாயுடு காட்டுக்கும மேற்கு. சால்டாபீசுக்கும் வடக்கு. இந்தமாலுக்குள்பட்ட ஊரடிக் காலியிடம்.

2. சால்டாபீசுக்கும் தெற்கு. நாராயணசாமி நாயுடு காட்டுக்கு மேற்கு. தேவஸ்தானபங்களாவுக்கும், சி. த. நாரா. சிதம்பரம்செட்டியார் காலி இடத்துக்கும் வடக்கு. தாராபுரம் புது ரோட்டுக்குக் கிழக்கு. இந்தமாலுக்குள்பட்ட ஊரடிக்காலியிடம்.

3. தாலூகா கச்சேரி கேட்டு வாசலுக்கும் வடக்கு. ஷை கம்பவுண்டுக்கும் கிழக்கு. அங்கணமுதலி வீட்டுக்கும் தெற்கு தாராபுரம் புது ரோட்டுக்கும் மேற்கு. இந்த மாலுக்குள்பட்ட ஊரடிக்காலியிடம்

**K. முத்தாச்சாரியார்.**
பஞ்சப்ரம்ஹசந்ததி பௌரோஹிதம்
பழனிஸ்தலம்.

## போதுலூர் வீரப்பிரம்மேந்திர சுவாமிகள் கும்பாபிஷேக மஹோத்ஸவம்.

சென்னை சூளை விஜயவிக்னேஸ்வரர்கோயில் வீதி 44-வது நெம்பர்க்ருஹம் ப. வெங்கடாஜலாச்சாரியார் குமாரர் குப்புசாமி ஆச்சாரி-1, ப. ஆறுமுகாச்சாரியார்-2, ஆக இரண்டு பக்திமான்களால் ஸ்ரீ வீரப்பிரம்மேந்திரஸ்வாமிகள் விக்கிரகமும், ஸ்ரீ கோவிந்தம்மாள் விக்கிரகமும் இவர்கள் சிஷ்யர் சித்தையா விக்ரகமும் இம்மூன்று திருவுருவமும் தாம்பிரத்தினல் வார்ப்பித்து அவைகளுக்குரிய வேலைகளெல்லாம் பூர்த்திசெய்யப்பட் டிருக்கிறது. அவ் விக்கிரகங்களுக்கு நாளது பிரமாதீசஞு மாசி மீ 3உ சனிவாரம் காலை 2-மணிக்கு சென்னை சூளை ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி சமேத விஸ்வநாதஸ்வாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைசெய்வித்து, மாலை 5-மணிக்குமேல் கருக்கோல பிரதக்ஷிணத்துடன் கடப்பை ஜில்லா பத்வேலி தாலூகா கந்தி மல்லய்யபுரம் போதலூர் ஸ்ரீ வீரப்பிரம்ஹ மடத்திற்குக்கொண்டுபோய் ஷை மீ 12உ சிவராத்திரிபுண்ணிய காலத்தில் கும்பாபிஷேகஞ் செய்விக்கப்போகிறபடியால் பக்திமான்களியாவரும்அவ்வைபவத்தைக்கண்டு தெரிசித்த லத்யாவசியகம். பிரார்த்தனைக்காக காணிக்கை முதலியவை செலுத்துவோர் பிரதக்ஷிண காலத்தில்வரும் உண்டியில் செலுத்தலாம். சிவராத்திரி புண்யகாலத்தில் விஸ்வகர்ம சந்ததியிலுதித்த சென்னை வாசிகளில் சில புண்ணியவான்கள் ஷை மடாதிபதி சுவாமிகளுக்கு தங்கத்தினல் யாளிமுகக் கடசகங்கணங்கள் செய்தளிக்கப்படும்.

**(ஷை மடத்திற்குப் போவதற்கு.)**

சென்னையி லிருந்து கடப்பைக்கு 3-வது வகுப்பு மெயில்சார்ஜ்2–2–0 கடப்பையிலிருந்து சென்னூர் மார்க்கம் 30-மயில் ஐந்துபேர் ஏறும்மாட்டுவண்டி 1-க்கு போகவா சத்தம் ரூபாய் 8–0–0 சிவராத்திரி காலத்திற்கு மூன்று நாள் முன்னுதாகப் பிரயாணஞ் செய்யவேண்டும். போகவும் வரவும் ஒருவாரம் செல்லும்.

## படங்கள் வரவு.

அஷ்டோத்திர சதலிங்கப்படம் ஒன்றும், அஷ்டோத்திர சஹஸ்ரலிங்கப்படம் ஒன்றும், ஏகாதிக சகஸ்ரலிங்கப்படம் ஒன்றும், மதுரை மீனாக்ஷியம்மையார் திருவுருவப்படம் ஒன்றும் நமக்கு வரப்பெற்றோம். மேற்படி படங்கள் அதி உன்னதமாயும், பார்ப்போர் மனதைப் பரிப்பதாயும், பரமானந்தத்தை விளைவிப்பதாயும், சைவசிகாமணிகள் கிருஹத்தில்வைத்து ஆராதிக்கக்கூடியதாயும், ஆகமவிதியை அனுசரித்து ஓவியர்களாலெழுதப்பட்டு அதனைக்கொண்டு எக்கிரே வேலைசெய்து கிளேஸ் கடிதத்தில் டிம்மிசைசில் அச்சிடப்பட்டிருக்கின்றது. இப்படங்களை ஒவ்வொரு சைவசிகாமணிகளும் மற்றேனையோரும் பெற்று பூசிக்க வேண்டிய தத்தியாவசியக.

இப்படங்கள் வேண்டுவோர் இதனடியிற் குறிப்பிட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தி. மு. அருணசலமுதலியார்,
மாணிக்கவாசகர் பிரஸ்,
நெ. 94. சாமி நாய்க்கன் ரோட்,
சிந்தாதிரிபேட்டை, சென்னை.

## புத்தக வரவு

கமுதிதாலுக்கா சத்தமடம் கிராமத்தில்வசிக்கும் சங்கீத்சாஹித்யவித்வான் பிரம்மஸ்ரீ சி. சின்னசாமிஆச்சாரியரவர்களாலியற்றப் பட்ட சிவசுப்ரமணயர் பேரின்ப ரசக்கீர்த்தனையொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். அதில்குருபரக்கண்ணி, பஞ்சரத்நத் திருப்புகழ், பிணிநீங்கு திருப்பதிகம், தோத்திரமஞ்சரி நாமாவளித்திரட்டு ஆகிய விவைகள் அடங்கியிருக்கின்றன. இதில்ஒவ்வொரு கீர்த்தனைகளும் சொன்னயம் பொருணயம் பக்திரசம்முதலியவைகள் மலிந்து படிக்கப்படிக்கப் பரமாநந்தத்தைவிளைவிக்கின்றது, இத்தகைய வித்வசிரோமணிகள் நமது குலோபகார விஷயமாய் தமது கல்வியினாலாயபயனைக் கருதுவார்களென்று நினைக்கின்றோம்.

## முக்கிய கவனிப்பு.

நமது பத்திரிகைகளுக்கு பலரும் அன்புடன் விஷயதானம்புரிந்து வருவதற்கு வந்தனஞ்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். வியாசங்கள் மேன்மேலும் வந்துகொண்டிருப்பதுபற்றியும், அவற்றை வரிசைக்கிரமத்தை அனுசரித்தே அவைகளைப்பிரசுரப்படுத்த வேண்டியதிமித்தம் பற்றியும், உடனுக்குடன் அவைகளை முழுதும் வெளிப்படுத்தா திருப்பதே வியாசதானிகளுக்கு மனஸ்தாபமுண்டாகிறது. இங்ஙனமிருக்க சிலர்வேறு பத்திரிகைக்குளழுதி அனுப்பி வெளிவந்த வியாசங்களைத் திரும்பவும் எமக்கனுப்புவது உசிதமல்ல. ஆகையால் அத்தகைய வியாசங்களை எமக்கனுப்பா திருக்கும்படி வேண்டுகின்றோம். இதனைவிஷயதானிகள் தயைசெய்து குறித்துக்கொள்வார்களாக.

பிரசுரிக்கக்கூடாத வியாசங்களை விஷயதானிகட்கு அறிவிக்கும்பொருட்டு இனி பத்திரிகையி னோர்பாகத்தில் குறிப்பிடப்படும்.

விஷயதானிகளும், சந்தாதாரர்களும் நம் பத்திரிகையை இதுபோல முழுதும் அபிமானித்துவரின் கூடிய சீக்கிரத்தில், இதனை மாதமிருமுறை பிரசுரிக்க எண்ணங்கொண்டிருக்கிறோம்.

ப—ர்.

கற்றவர்தா மென்னுங் கயவர்களின் தன்மதிப்பேன்
உற்ற கலைமடந்தை யோதுகின்றாள்—முற்றும்
தெரிந்தாரு மொன்றுந் தெரியாதா ரில்லையெனில்
பொருந்தாதோ வான்றோர் பொருள்.



# வர்த்தமானக் குறிப்புகள்.

## அதிக நீளங்கொண்ட ஓர் வாராவதி.

சீன தேசத்தைச் சார்ந்த சங்காங் என்னும் ஊருக்கருகில் சிங்க வாராவதியொன்றிருக்கிறதாம். இந்த வாராவதி மஞ்சக்கடலின் ஓர் பாகமான கடற்கழியின்மேல் கட்டப்பட்டுள்ளதாம். இது கல்கட்டடத்தில் மூந்நூறு வளைவுகொண்டதாயும் ஐந்தேகால்மைல் நீளமுள்ளதாகவு மிருக்கின்றதாம்.

## ஜலாதாரம்.

செங்கற்பட்டு முனிசிபாலிட்டிக்கு 15 காலன் ஜலசப்ளைசெய்ய 2-லக்ஷம் ரூ-பாய் மதிப்புத்திட்டம் போடப்பட்டிருக்கிறது.

## இந்தியருக்கும் ஐரோப்பியருக்குமுள்ள இரத்தசுத்தம்.

கல்கத்தா மெடிகல்காலேஜியைச் சேர்ந்தவர்கள் இந்தியர்களுடைய இரத்தத்தைப்பரீட்சை செய்ததில்100ல் 80பாகமேசுத்தஇரத்தமாய்இருக்கிறதென்றும், ஐரோப்பியருடையஇரத்தத்தைப் பரீட்சைசெய்ததில் 100க்கு 100 சுத்தமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

## ஓர்விநோதம்.

அமெரிக்காவில் ஒரு பெரியடாக்டர் ஓர் பெண்மணியின் செவிவழியாய் வாயுவைநிறுத்தி அப்பெண்மணியின் பிராணனைப்போக்கி அச்சவத்தை ஓர்மரப்பெட்டியிலிட்டு மூடி பூமியில் 15அடி ஆழத்தில் வைத்து மேல்மண்மூமூன்றுநாள் சென்ற பிறகு முன் மண்ணில் புதைத்தபெட்டியை எடுத்துத்திறந்து அப்பெண்ணின் செவிவழியாய் காற்றை உள்ளுக்குவிட நித்திரை தெளிந்தெழுந்தவள்போல் எழுந்தனளாம்.

## கோஷா ஆஸ்பத்திரி கட்டடம்.

நாகை ஆஸ்பத்திரிக் காம்பௌண்டிற்குள் கோஷா ஸ்திரீகளுக்கென்று ஒருகட்டடம் 5000 ரூபாய் செலவுசெய்து கட்ட மகம்மது மரைக்காயரென்பவர் ஒருவர் முன்வந்திருக்கின்றனர்.

## வாழைப்பழத்தில் சாராயம் செய்தல்.

பார்படோஸ் என்னு மொரு தீவில் வாழைப்பழ ரசத்திலிருந்து சாராயம் வடிக்கின்றார்கள். இந்த சாராயம் செய்யும் முறையாவது பழங்கள் நன்றாகக் கனிந்ததின் பின்பு மேல் தோலை உரித்துவிட்டுக் கொதிக்கிற தண்ணீரில் போட்டுக் கரைத்து ஒரு இரவு முழுதும் வைத்திருந்து பின்பு வடிகட்டினால் குடிப்பதற்கு இனிப்புள்ளதாயும் நல்ல குடிவகையாகவுமாகிறதாம். ஆனால், அது அதிக போதைக் கொடுக்கக்கூடியதா யிருப்பதால் சொற்பமாகவே குடிக்கவேண்டுமாம். இந்தச் சாராயத்தை ஒரு வாரத்திற்குமேல் வைத்திருந்தால் அதிகப் புளிப்பேறி உட்கொள்ள உதவாமற்போய் விடுகின்றதாம்.

## ஒரு சிறுவனுக்கும் சிறுத்தைக்கும் நேர்ந்த சண்டை.

கடப்பை ஜில்லாவைச்சேர்ந்த மாரல்லா வென்ற கிராமத்தில் வசிக்கும் யாதவகுலத்து வாலிபனொருவன் சென்ற மாதம் வழக்கம்போல் தன் ஆடுகளை காட்டில் மேய்த்துக்கொண்டிருக்கையில் அந்த சிறுத்தை யொன்று வந்து ஓர் ஆட்டின் கழுத்தைக் கவ்விற்றாம். அது கண்டு இடைப்பய்யன் ஓடோடிச் சென்று சிறுத்தையைத் தாக்க அச் சிறுத்தையானது ஆட்டை விட்டுவிட்டு எதிர்பட்ட வாலிபனின் இடதுகையைக்கவ்விக்கொண்டதாம். உடனே வாலிபச்சிறுவன் தனக்கு சேர்ந்த விபத்தைக் கொஞ்சமும் பொருட் படுத்தாமல் வலதுகையால் அச்சிறுத்தையின் கழுத்தின் கீழ்பாகத்தைக் கிழித்துவிட்டானாம். சிறுத்தையும் இறந்துபோயிற்றாம். உடனே காயமுண்ட வாலிபனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டு சிகிச்சையிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வாலிபனின் துணிகரமான வீரச்செயலுக்கு கவர்ன்மெண்டார் தக்க பரிசு கொடுப்பார்கள் என்று நினைக்கிறோம்.

## மதுரையில் காலேஜ் ஓட்டல்.

இதற்குகவர்ன்மெண்டார் முப்பத்தெண்ணாயிரம் ரூபாய் கொடுப்பதாக உத்திரவுசெய்திருக்கிறாராம்.

## ஓர் பெண்ணுக்கு தன் கணவனால் நேர்ந்த விபத்து.

கொழும்பு கண்டியில் வசிக்கும் யணிகாவென்ற சிங்களவனொருவன், தனது மனைவி கர்ப்பவதியாயிருந்து பிரசவத்திற்காக அவளது தாய்வீடு சேர்ந்திருக்கையில் ஓர்நாள் அவளை தன் வீட்டுக்கழைத்துச்செல்ல புருடன் விரும்பினனும். அவனது கருத்துக்கு அப்பெண் உடன்படாமையால் புருடன் கோபவெறியுடன் கத்தியைக்கொண்டு மனைவியின் தேகமெங்கும் குத்திவிட்டானும். உடனே அப்பெண் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகப்பட்டு சிகிச்சையி லிருக்கையில் உயிர்துறந்த ஆண் குழந்தையைப் பெற்றாளாம். இவ்வித நிலைமையில் கொடுமை செய்யத்துணிந்த அப்புருடனின் நெஞ்சம் என்ன கல்நெஞ்சமோ?

---

## இவளென்ன ராட்சதப் பிறப்போ?

மலிஸ் ஸாகூபர் என்னும் நீக்ரோ பெண்ணொருவள் சிலநாளைக்குமுன் காலஞ்சென்றனள். ஆனல், அவள் இறக்கும்போது 715 ராத்தல் எடைகொண்டிருந்தாளாம். அவள் இறப்பதற்கு ஐந்து மாதத்திற்குமுன் 145 ராத்தல் எடைகொண்டவளாயிருந்தாளாம். இந்த ஐந்து மாதத்திற்குள் அவளது சரீரம் மாதம் 100 ராத்தல் எடை அதிகரித்துவந்ததென்றும், அவள் இறந்ததினத்தன்று பரிசோதனை செய்ததில் அவளது கழுத்தின் சுற்றளவு ஒரு கஜமும், இடுப்பின் சுற்றளவு 111 அங்குலமும் இருந்ததாம். இப்பெண் இன்னும் ஒரு மாதம் உயிரோடிருந்தால் ஒரு சிறு யானைக்குட்டியைப்போ லிருப்பாளென்று அவளைப் பரிசோதனை செய்த டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டார்களாம். ஆனல், அவளது தேகம் அவ்விதம் பெருத்ததற்குக் காரணம் இன்னதென்பது எந்த டாக்டருக்கும் புலப்படவில்லையாம்.

---

## ஓர் இளங்குழைக்கு நேர்ந்த மாணம்.

இம்மாதம் 2உ மாலை 6-மணிக்கு சென்னை சிந்தாதிரிபேட்டை கிழவசெட்டி தெருவில் வசிக்கும் மிஸ்டர் தா. செங்கல்வராய ஆச்சாரியின் நான்கு வயதுள்ள பெண் குழந்தையானது, தனது ஆட்டப்பிராக்கின்மேல் அடுத்த முங்கபதி நாயக்கன் வீதியாக தன் பாட்டன் வீட்டினின்றும் தனித்து வருகையில் அவ்வழியேவந்த ஒரு பண்வண்டி சக்கரத்தில் மோதுண்டு கீழே விழுந்துவிட ஒருகாலின் மேல் சக்கரமேறி பாதமானது நசுங்குண்டு போயிற்று. உடனே குழந்தையை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சிகிச்சை செய்யப்பட்டும் குணப்படாமல் அடுத்தநாள் குழந்தை இறந்துபோயிற்று. அந்தோ பரிதாபம்! தெருவழியேசென்ற அச்சிறு குழந்தைக்கு கொடிப்பொழுதில் ஒருவராலும் எதிர்பாராத விபத்து நேரிட்டதைக்கேட்ட பெற்றோர்களின் மனம் எவ்வாறு துடித்திருக்குமென்பது நாமிங்கு கூறவேண்டியதில்லை. ஆனதால், குழந்தைகளைப் பெற்றோர்கள் தங்கள் அருங்குழந்தைகளைத் தனிவழி போகவிடாது பாதுகாப்பது அவரவர்களின் கடைமையென்பதை இங்கு குறிப்பிடுகின்றோம்.

---

## ஒரு பெண்ணின் அபாரசக்தி.

யுனைடெட் ஸ்டேட்சுக்கடுத்துள்ள ரோட்தீவில் சுமார் 11 வயதுள்ள பியுலாமில்லர் என்ற ஒரு பெண் இருக்கின்றனள். அப்பெண் தனக்கு மறைவாகவுள்ள எந்தப்பொருளையும் தான் நேரே கண்டதுபோல் குறிப்பிட்டுச்சொல்லி வீட்டிலுள்ளோரைக் களிப்படையச் செய்துவந்தாளாம். இவைகளைக் கண்ட அப்பெண்ணுக்குடையோர் அவளது அபாரசக்தியைச் சோதிக்கக்கருதி அவளை நியூயார்க் என்ற பட்டணத்திற்குக் கொண்டுபோனர்களாம். அங்கே அப்பெண் மூடப்பட்டிருந்த ஓர் அறையினுள் இரும்புப் பெட்டியி லிருந்த நோட்டுகளின் நம்பரையும், சிலரென்றவரும் மனிதர்களின் சட்டப் பையிலிருந்த சாமான்க ளின்னவை யென்றும் சொன்னதால், அவள் அதற்குமுன் எப்போதும் பார்த்திராத சகல பொருளையும் அப்பெண்ணல் சொல்லக்கூடுமென்று ஏற்பட்டதாம். இது கண்டு பலர் அது மாயாசக்தியா யிருக்குமென்று ஊகித்தார்களாம். அப்பெண்ணை டாக்டர்கள் இரண்டுமணிநேரம் பரிசோதனை செய்தபின்பு அப்பெண் மாயாசக்தியைக் கையாடிவருகிறாளென்று சொல்வதற்கு ஆதாரமேயில்லையென்றும், ஆனல் எக்ஸ்ரேஸ் என்னும் ஓர் நூதன வெளிச்சத்தின் குணத்தையுடைய திருஷ்டியையும் அசாதாரணமான மனே சக்தியையும் உடையவளென்றும் உறுதி செய்தார்களாம்.

---

## பாணவெடியால் நேர்ந்த விபத்து.

ரூவான்வலைத் தோட்டத்தைச்சேர்ந்த ஆங்கிலேய ரொருவர் ஓர்நாள் பாணவெடிகளைச் சித்தப்படுத்திக்கொண்டிருக்கையில், அகஸ்மாத்தாய் ஒரு வாணவெடி வெடித்து அவரது நெற்றியில் தாக்க அவர் தக்ஷணமே இறந்துபோனர்.



---

## கொழும்பு பட்டணத்தில் கருவாடு தொழில்.

யுனைடெட் இம்போர்ட் ஏஜண்டான மிஸ்டர் லீ என்பவர் ஏராளமான கருவாடுகளை கொழும்பு டாம் வீதியில் இறக்குமதி செய்திருக்கின்றனராம். அக்கருவாடுகள் நாற்றமில்லாமலிருப்பதுடன் சுலப விலைக்கும் விற்கப்படுகின்றதாம். ஆங்கிலேயர்கள் அனேகமாய் தாவர போஷகர்க ளாய்விட்டபடியால் இங்கிலாந்து முதலான தேசங்களிலுருந்து இக்கருவாடுகள் வெளியேற்றப்பட்டதென்று ஊகிக்கின்றோம். நம் நாட்டாரோ எத்தொழிலும் முற்பட சக்தியற்றவர்களா யிருக்கின்றார்கள்.

---

## ஒரு நங்கைக்கு கிடைத்த நாயகனின் வேடிக்கை.

ஒண்டாரியோ என்ற நகரத்தில் வசித்த மிஸ் அலிஸ் ஜாக்கப்ஸன் என்னும் மாது தனக்கு நாயகனுக ஒருவனை நிற்ணயம் செய்து சகல ஏற்பாடுகளும் முடிந்து விவாகத்தை நடத்தத் துணிந்த சமயத்தில், மணமகள் தனக்கு மாப்பிள்ளையாக வந்தவன் தன்னுடைய சகோதரனெனக் கண்டுவிட்டாளாம். அதனல் அவளுடைய விவாகம் நடைபெறுமல் தடைபட்டு போயிற்றென்றாலும், இப்படி இவள் ஏமாந்ததற்குக்காரணம் இப்பெண்ணும் இவள் சகோதரனும் சிறு பிராயத்திலேயே ஒருவரை யொருவர் விட்டுப்பிரிந்து வசிக்கும்படி நேர்ந்த காரணத்தால் முதலில் அவனது அடையாளங் கண்டுபிடிக்க சாத்தியப்படாமல் போயிற்றும்.

---

## மாட்டுவண்டிகளுக்கு இனி பிழைப்பில்லை.

பம்பாயில் தற்போது ஒரு புதிய கம்பனி ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது. அக்கம்பனியார் மூன்று முதல் பத்து டன் வரையில் பாரம் சுமக்கக்கூடிய பல மோட்டார்வண்டிகளைச் சித்தப்படுத்தியிருக்கிறார்களாம். இவ்வண்டிகளைக்கொண்டு இதுவரையில் மாட்டு வண்டிகள் செய்துவந்த வேலைகளைச் செய்வார்களாம். அதாவது, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டுபோகும் கம்பனி சாமான்களும் ஏற்றுமதி இறக்குமதி சாமான்களும் இந்த மோட்டார் வண்டிகளால் சீக்கிரம்போய்ச் சேர்ந்துவிடுமாகையால் மாட்டு வண்டிகளை எவரும் விரும்பமாட்டார்கள். இவ்விதம் மோட்டார் வண்டிவிடும் கம்பெனிகள் வேறு சிலநாடுகளிலும் தற்போது ஏற்பட்டிருக்கின்றன. இதுபோலவே இச்சென்னையிலும் மற்ற வூர்களிலும் கம்பெனிகள் ஏற்பட்டு பலருடைய வேலையையும் செய்யத்தொடங்கிவிடுமானல் அப்போது மாட்டுவண்டிகள் செய்துவரும் சகல வேலைகளும் அடியோடு தொலைந்துவிடுமென்று ஊகிக்கின்றோம்.

---

## அக்கினி மலை.

ஆப்ரிம் என்ற தீவிலிருக்கும் ஒரு அக்கினி மலையானது சிலநாட்களாக நெருப்பும் புகையுமாகக் கிளம்பி அனேக நாட்டை நாசமாக்கிவிட்டதாம். ஆனல், அவ்விடத்தில் குடியிருந்த வெள்ளையர்கள் தப்பித்துக்கொண்டார்களென்றாலும், சுதேசிகளே அந்த நெருப்புக்கு இறையாகிவிட்டார்களாம். அப்பொழுது பிரான்ஸ் என்ற பெயர்கொண்ட ஓர் பிரான்சு தேசத்துக்கப்பல் சுமார் 500 சுதேசிகளை விபத்தினின்றும் காப்பாற்றியிருக்கிறதாம். அவர்களுள் அனேகமாய்க் குழந்தைகளும் பெண்களுமெனச் சொல்லப்படுகின்றது. இதனல் புருடர்கள் அக்கினிமலையின் விபத்துக்குப் பயந்து தங்கள் பெண்டுளையும் பிள்ளைகளையும் தனியே விட்டுவிட்டுச் சென்றிருக்கவேண்டுமெனக் கருதப்படுகின்றது. தற்போது பிரஸ்தாபவூர் முழுதும் சாம்பல் மயமாகக் கிடப்பதுடன் நதிகளிலும் ஓடைகளிலுங்கூட கந்தகமயம்போன்ற அக்கினி வீசிக்கொண்டிருக்கிறதெனத் தெரியவருகிறது.

---

## ஸ்டீமர்களின் ஓட்டம்.

சமுத்திரங்களில் ஓடும் ஸ்டீமர்கள் அதிக வேகத்துடன் செல்லும்போது உடனே நிறுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் அதன் கருவியை உபயோகப்படுத்தியபோதிலும் அக்கப்பல்கள் அரை மைல் தூரஞ்சென்றுதான் நிற்குமாம்.

---

## பூமியதிர்ச்சியால் நேர்ந்த பெருஞ்சேதம்.

க்ரேக் தேசத்தைச் சார்ந்த ஏலிஸ் பெலோப்பென்ஸஸ் என்றவிடத்தில் உண்டான பூமியதிர்ச்சியால் அனேக கட்டடங்களும், பல சாமான் வகைகளும் சேதமடைந்தனவாம்.

## ஆகாய விமானக் கல்விச்சாலை.

ஆகாய விமானம் செலுத்தும் முறையைக் கற்கும்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் ஸீதாப்பூரில் ஆகாயவிமானக் கல்விச்சாலையொன்று ஸ்தாபிக்க தீர்மானித்திருக்கின்றனர். இச்சாலை இந்திய ராணுவ இலாகாவின் மேற்பார்வையில் நடத்தப்படுமாம். ஆனால், இதில் எல்லோரையும் சேர்த்துக்கொள்ளாமல் இந்தியன் சிவில்சர்விசிலும், மிலிடெரி சர்விசிலும் சேர்ந்தவர்களைமாத்திரமே சேர்த்துக்கொண்டு விமானத்தை செலுத்தும் முறையைக் கற்பிக்கப்படுமென்றறிகின்றோம்.

## ஒரு ஆச்சரியமான குளம்.

நிஜாம் ராஜ்ஜியத்தில் மீர் ஆலம் எனப் பெயர்கொண்டதோர் குளமிருக்கின்றதாகவும், இதன் சுற்றளவு 3 மைலும் 60 அடி ஆழமுங் கொண்டதாகவும், இது 1779ம் வரு ஸ்ரீரங்கப்பட்டினம் பிடிபட்டபோது பிரிட்டிஷ் ஐதராபாத்துத் துருப்புகளுக்கு அகப்பட்ட கொள்ளைப்பொருளைக்கொண்டு இத்தடாகம் கட்டப்பட்டதெனவும் சொல்லுப்படுகின்றது.

## ஒரு பெண்ணின் துணிந்த செய்கை.

மைமென்சிங்கென்ற விடத்தில் ஒரு பங்காளி விஷபேதி கண்டு இறந்துபோனான் அவனது மனைவியான இளம்பெண், புருடன் இறந்த பெருந்துயரைச்சகிக்காமல் கிரோசின் எண்ணெயை தேகமெங்கும் ஊத்திக்கொண்டு தீமூட்டிக்கொண்டனள். ஆனால், அவளது பந்துக்கள் அத்தீயை உடனே அணைத்தபோதிலும் கிஞ்சித்தும் குணப்படாமல் அப்பெண்பால் இறந்துபோனாள்.

## தபாலில் அனுப்பப்பட்ட ஒரு வீட்டுக்கட்டடம்.

சிகாகோ வென்ற நகரத்தில் சில நாளைக்கு முன் மண்ணால் செய்த வஸ்துக்களுக்காக பெரிய பொருட்காக்ஷி யொன்று ஏற்படுத்தப்பட்டது. அதில் ஒரு சாக்ஷி செங்கல்லால் கட்டப்பட்ட ஓர் வீட்டை வெகு சீக்கிரத்தில் கட்டிக்காட்டவேண்டியதாய் நேரிட்டது. ஆனால், அக்கட்டடம் அப்பொருட்காக்ஷியில் ஒருவருக்கு பரிசாகக் கொடுத்துவிடத் தீர்மானிக்கப்பட்டது. அக்கட்டடத்திற்குவேண்டிய செங்கல்லுகள் சீக்கிரமாகச் சிகாகோவுக்குப் போக நேரிட்டபடியால் அக்கல்லுகளைப் பார்சல்களாகக்கட்டி 25,000 பார்சல்கள் தபாலில் அனுப்பப் பட்டதாம். போஸ்டாபீஸ் அதிகாரிகளும் அந்தப்பார்சல்களைத் தாமதப்படுத்தாமல் அவ்வளவு பார்சல்களையும் உடனே சேர்ப்பித்து தங்கள் சாமர்த்தியத்தைக் காண்பித்தார்களாம். ஆனால், பொருட்காக்ஷி முடிவில் அக்கட்டடத்தின் கற்களைத் தனியாகப்பிரித்து அதைப் பரிசு பெற்றவர் எவரோ அவர் குறிப்பிடுமிடத்துக்கு தபால் மூலமாகவே அனுப்பப்படுமெனச் சொல்லப்படுகின்றது.

## அமரிக்கா யுனைடெட் ஸ்டேட்சும் பத்திரிகைகளும்.

இவ்வுலகத்தி லுள்ள மற்றெல்லா தேசங்களைப்பார்க்கிலும் அதிகப் பத்திரிகைகளைக் கொண்டு விளங்குவது அமரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸ் தேசம் ஒன்றே என்று உறுதியாகச் சொல்லலாம். இங்கு 21,435 பத்திரிகைகள் நடத்தப்படுகின்றன. இதில் 2500 பத்திரிகை தினப்பதிப்புகளாய் வெளிப்படுகின்றதாம். இவற்றுள் 700 பத்திரிகை ஜெர்மன் பாஷையிலும், 40 பத்திரிகை டச்சுப்பாஷையிலும் நடத்தப்படுகின்றதாம். ஐரோப்பாவிலோ ஜெர்மனி பத்திரிகைகள் முதன்மைப்பட்டதெனச் சொல்லலாம். இங்கு 10000 பத்திரிகைகள் நடைபெறுகின்றன. இதில் 1500 பத்திரிகைகள் தினசரிகளாய்த் தோன்றுவதுடன். பிரான்ஸ், ஆஸ்ட்ரியா இவ்விரண்டிடத்தில் 5,600 பத்திரிகைகளும், கிரேட்பிரிடனில் 4,400 பத்திரிகைகளும், ஸ்பெயின், ருஷியா இவ்விரண்டிடத்திலும் 2,000 பத்திரிகைகளும், ஏஷியாயில் ஜப்பான் தலைமையாயிருப்பதால் இதில் 2,000 பத்திரிகைகளும் நடைபெறுகின்றதாம். ஆனால், இந்தியாவிலோ 1.800 பத்திரிகைகளுக்கு குறைவாகவே நடைபெறுகிறதெனச் சொல்லப்படுகின்றது.

## ஒரு நிலக்கரிச்சுரங்கத்தில் நேர்ந்த விபத்து,

கோலராலோ என்ற விடத்திலுள்ள வல்கன் என்னும் நிலக்கரிச்சுரங்கம் திடீலென வெடித்து அதினுள் வேலை செய்துகொண்டிருந்தவர்களுள் இருவர் தவிர மற்றவர்கள் மரணமடைந்தார்களாம். ஆனால் அவ்விபத்தில் சுமார் 38 பேர் இறந்திருக்கவேண்டுமெனக் குறிப்பிடப்படுகின்றது.

## ஓர் நன்கொடை.

தென்னாபிரிக்கா இந்துக்களின் கஷ்டநிவர்த்தியின்பொருட்டு ஹைதராபாத்து நிஜாமரசர் 5000 ரூபாய் கொடுத்திருக்கின்றனர்.

## இராமசுனர் சரித்திரம்.

கேளுங்கள் சாதுக்களே! முன்னே உத்தரதேசத்தில் அம்பாலா என்னும் நகரத்தில் பஞ்சப்ரம்ஹ வம்சத்தில் ஜெனித்த ஸ்ரீவேங்கட சாஸ்திரியாரின் சரித்திரத்தைச்சொன்னோம். இனி டில்லிப்பட்டணத்தில் நிவாசமாயிருந்து அம்பிகையின் அருட்பிரசாதத்தைப் பெற்று அதனால் வெற்றிபெற்று முத்தியடைந்த சரித்திரத்தைச்சொல்லத் தொடங்குவாம்; என்று நாபாசிமுனிவர் கூறுகின்றார்.

நீர்வளம் நிலவளம்பொருந்திய டில்லிப்பட்டணத்தில் விஸ்வப்பிரம்ஹ வம்சத்தில் உற்பவித்தவரும், சகல வேதாகமங்களை ஐயந்திரிபற வோதியுணர்ந்தவரும், சுபர்னசரிஷி கோத்திரத்தை யுடையவரும், ஸ்ரீ காமாக்ஷி அம்மையின் திருவடித் தாமரையினீங்காத பக்தியைச் செலுத்துபவருமான சுக்ஞானசுனர் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவருக்கு கிரகாச்சிரம தருமத்தைச் சரிவர நடத்துவதற் கனுகூலமான மஹாபாக்கியவதியாகிய ஞானபாய் என்னும் பெயரையுடைய மாதுசிரோமணி வாய்த்தனர். அவர்களிருவரும் காமாக்ஷி யம்மையின் அநுக்கிரகத்தைப் பெற்று, நோற்ற நோன்பின்பயனெல்லாம் உருண்டு திரண்டு வந்ததேபோல அவர்கட்கு ஓர் புத்திரசிகாமணி யுற்பவித்தார். உற்பவித்தவுடன் மகிழ்ச்சிப் பெருங்கடலில்மூழ்கி தங்கள் செல்வப்புத்திரனுக்கு ஜாதகன்மம்புரிந்து, இராமசுனனென்னும் நாமகரணம்சூட்டி, அன்னப்பிராசனம், சவுளம், வித்தியாரம்பம், உபநயனம் ஆகிய வைதீககர்மங்களை வேதோக்தப்படி அந்தந்த காலத்தில் நடத்திகுதூஹலித்துவந்தார்கள். இராமசுனரும் சோடசகலைகளும் நிறம்பெற்ற பூரணச்சந்திரனைப்போலபிரம்மதேஜஸுடையவராய் வளர்ந்து வருங்காலத்தில் ஸ்ரீகாமாக்ஷியம்மன் றிருவருட்பேற்றை யடைய அவள பக்தியை இடைவிடாதுபுரிந்து, உலகத் குரித்தான பஞ்சகிர்த்தியங்களில் யாவ கும் இலக்ஷ்மி விலாசத்தைக் கொடுக் தக்கதும். நாகரீகத்தை யுண்டாக்குவது பேரழகுசெய்வதுமான திவ்விய சுவர் ரஜிதஆபரணங்களைச்செய்வதாகிய சிரு டித்தொழில்செய்து அதில் கைதேர்ந் ராய் வாழ்ந்துவந்தார்.

இப்படி யிருக்க, டில்லிப்பட்டணத் நபாப்பென்னும்பாதுஷா சக்ரவர்த்தியா வர், தமதரண்மனைக்கு வேண்டிய ஆப ணங்களைச் செய்வதற்காக மந்திரியை யழைத்து, பொன்வேலையில் அதிஉன்ன மாகச் செய்யக்கூடியவரும், கெடுப்பிரக ரம்செய்து கொடுக்கக்கூடியவரும், சத் யம்பிசகாமல் நடந்து கொள்பவருமான விஸ்வகர்மாக்கள் யாரிருக்கின்றனா ரென் கேட்க, அவ்வார்த்தையைக் கேட்ட ம திரியானவர் நமது அரண்மனை வேலையை செய்துவந்த சுக்ஞானசுனரின் புத்திரரான இராமசுனரென்னும் விஸ்வக்ஞாச்சாரிய ரென்பவர் ஒருவர் இருக்கின்றார். அவரோ மிகுந்த உத்தமகுணமுடையவர். யாவரும் கொண்டாடத்தக்கவர். பொய் களவுமுத லியவை யொழித்தவர். தெய்வ பக்தியிற் சிறந்தவர். அவரே அவர் தந்தைக்குப்பின் நமது அரண்மனைவேலைக்குரியவர். பொற் பணிகளை மிக வழகாகச்செய்து கொடுக் கக்கூடியவர். ஆகையால், அவரை யழைத்து அவரிடம் பொன்னைக் கொடுத்து நமதரண்மனைக்கு வேண்டிய ஆபரணங் களைச் செய்யும்படி புத்திரவளிப்போமானால் அவ்வாறே திவ்வியா லங்கிருதமான ஆபரணங்களைச் செய்துகொடுப்பார்; என்று மந்திரியானவர் சொல்ல, அவ்வார்த்தையைக்கேட்ட நபாப்பென்னும் பாதுஷா சக்ரவர்த்தியானவர் இராமசுனருக்கு நிருபமொன் றெழுதி மந்திரியினிடம்

கொடுத்து இந்நிருபத்தை இராமசுனாருக்குக் கொடுத்துவரவேண்டு மென்ன, மந்திரி அந்நிருபத்தைப் பெற்றுக்கொண்டுபோய் இராமசுனாரிடம்கொடுக்க, இராமசுனார் அதை அன்போடுபெற்று வாசித்து அதிலுள்ளவிஷயங்களை யுணர்ந்து மந்திரியினுடன் புறப்பட்டு வந்து நபாப்பைக்கண்டதும், நபாப்பாகிய சக்ரவர்த்தி இராமசுனாருக்கு ஆசனமளிக்கும்படிச்செய்து அதிலவரை யமரவைத்து, சிலநேரம் இருவரும் வார்த்தையாடிய பிறகு இராமசுனாரின் பக்தியையும், குணாதிசயங்களையும், வாக்குசாதுர்யத்தையும், நாணயகுணத்தையும் நோக்கி வியப்புற்றவராகி, இவர் கைபடநமதரண்மனை ஆபரணங்களை முடித்துக் கொள்ளுவோமாகில் குடும்பவிர்த்திக்கேது உண்டெனக் கருதி மந்திரியை அழைத்து, பத்தரைமாத்துள்ள பசும்பொன்னைக் கொடுக்கும்படிச் சொன்னார். மந்திரி சக்ரவர்த்தியின் கட்டளையை சிரமேற்கொண்டு பத்தரைமாத்துள்ள உயர்ந்த பொன்னைக் கொண்டுவந்து தலையிலிட்டுத் தூக்கி ஒருபாரம் இடைகொடுத்தனர். இராமசுனார் அதைபெற்றுக்கொண்டுநபாப்பினிடம் விடைபெற்று தனதில்லஞ்சென்று சுவர்ணத்தையுருக்கித் தக்கபடி பாகுபாடுசெய்து நபாப்பு சொல்லியபடி ஆபரணங்களைச் செய்யத்தொடங்கினார்.

இப்படியிருக்க இராமசுனார் வழக்கம்போல அவ்வூரில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீகாளிகாம்பாளென்னும் காமாட்சியம்மையின் ஆலயத்திற்குச் சென்று, அம்பிகையைத் தெரிசித்து மனங்கசிய, என்புநெக்குருக, தேகம்புளகாங்கிதங்கொள்ள, நாத்தழும்பேறத் தோத்திரஞ்செய்து, கண்களினின்று ஆனந்தபாஷ்பம் தாரை தாரையாய்ச் சிந்தும்படி சிற்சுகோதய வின்பவாரியில் ஆழ்ந்து, மோனநிலையிலிருக்கும்போது ஸ்ரீகாமாட்சியம்மையார் இவரதுபக்தியை யாவரும் வெளிதிலறியும்படி ஆட்கொள்ளுநிமித்தம் இவருக்குப் பிரசன்னமாகி, எனதன்பனே! நீ எனது பக்தனாயிருந்தும் இவ்வாலயஞ் ஜீரணமாயிருப்பது உனக்குச்சம்மதமோ? ஜீரணோத்தாரணம் செய்பவர் உன்னையன்றி வேறெவர் செய்யப்போகின்றனர்; என்று சொல்லி மறைந்துவிட்டனர். உடனே இராமசுனார் நிஷ்டைகலைந்து நான்செய்த புண்ணியமே புண்யம், நான்செய்த பாக்கியமேபாக்கியம், உமது தெரிசனங்கண்டு உமது வார்த்தையைக் கேட்டவனாகிய நான்இனி பிறவிக்கடலுக்கு ஆளாகுவேனோ? என்னை ஆட்கொண்ட அம்மணி! உன்வாக்கைத்தட்டி நிற்பேனோ? நபாப்பினால் கொடுக்கப்பட்ட ஒருபாரம் பொன்னையும் உமக்கே செலவிடப்போகிறேன், இதைவிடநான் அடையும் பேறு வேறொன்றுளதோ; என்று ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு தனதில்லமடைந்து, பொழுதுவிடிந்தவுடன் ஆலய ஜீரணோத்தாரணஞ்செய்ய விரும்பி நபாப்பினால்கொடுக்கப்பட்டபொன்னில்சிறிதுசிறிதாக ஆலயத் திருப்பணிக்கும், தேவியின் ஆபரணாதிகளுக்கும் உற்சவாதிகளுக்கும் செலவு செய்துவிட்டு, தேவியின் பூஜையிலேயும், யோகநிஷ்டையிலேயும், பக்திமயமான சங்கீர்த்தனத்திலேயும் காலங்கழித்து வந்தனர்.

இதையறிந்த இராமசுனாரின் ஞாதியர்கள் பொறாமைகொண்டு அவரனுபவிக்கும் ஊதியத்தை தாங்க ளனுபவித்தற்கில்லையே என்று நபாப்பினிடம்சென்று, ஐயா! சக்ரவர்த்தியாரே! தாங்கள் இராமசுனாரிடம் ஆபரணஞ்செய்துகொடுக்கும்படி கொடுத்தபொன்னை ஸ்ரீகாமாக்ஷியம்மையின் கோயில் திருப்பணிக்கும், அவ்வம்மையின் ஆபரணத்திற்கும், உற்சவாதிகளுக்கும் செலவு செய்துவிட்டனர். அப்பொன்னில் நூற்றிலொருபங்காகிலும் இப்பொழுது அவரிடம்கிடையாது. இன்னும் சில நாட்களுக்குள் இருப்பதும் போய்விடும்போல் தெரிகிறது. ஆகையால் தாங்கள் இதைகவனிக்க வேண்டும்; என்று சொல்லியதுமன்றி, நீங்கள் தாயாதிகளாயிருந்தும் தெரிப்படுத்தவில்லையென்று எம்மை தண்டிக்கப் போகிறீர்களென்று தெரிவித்து விட்டோம். இனி தங்களுடைய சித்தம் எப்படியோ

"விஸ்வகர்ம

அறியோம்; என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

உடனே நபாப்பு இராமசுனாரின் மீது அதிககோபங்கொண்டவராய்சேவகர்களை யழைத்து, இராமசுனாரைக் கையும் பிடியுமாகப் பிடித்துக்கொண்டுவர உத்தரவளித்தனர். சேவகர்கள் அரசன்கட்டளையை சிரசாவகித்து, அதிசீக்கிரமாய்ச்சென்று இராமசுனாரை பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். சக்ரவர்த்திஇராமசுனாரைக்கண்டு அதிக கோபமாய் அரண்மனை ஆபரணங்களாயிற்றா என்றார். அவ்வார்த்தையைக் கேட்ட இராமசுனார் ஆபரணம் தயாராகிக்கொண்டுவருகிறது. ஆனால்அரைகுறையாயிருக்கிறது என்றார். சக்ரவர்த்திநாம்கொடுத்த பொன்னெல்லாம் இருக்கிறதாஎன்றார்? இராமசுனார் ஆ!ஹா! இருக்கிறது என்றார். சக்ரவர்த்தி நாளையதினம் நீர் அவற்றை எல்லாம் எடுத்தலளவையிட்டு சரிகாட்டாவிட்டால் உம்மைத் தண்டித்து விடுவோம் என்றார். இராமசுனார் ஆக்ஞைப்படிகொடுத்த சொர்ணத்தைஅப்படியே காட்டுகிறேன் என்றார். சக்ரவர்த்தியின் கொடூரவார்த்தையைக் கேட்ட இராமசுனார் விடைபெற்றுக்கொண்டு உடல் நடுங்கி நாம் என்ன செய்யப் போகிறோம்; பொன்னெல்லாம் தேவி திருப்பணிக்குச் செலவழித்துவிட்டோமே, நாளைய தினம் இடையிட்டு, காண்பிக்க வேண்டுமே என்று கவலைகொண்டவராய்; அவ்வூர்ஸ்ரீ காமாக்ஷி தேவியின் கோயிலுட்சென்று பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரம் செய்து தேவியின் சகஸ்ரநாமங்களை உச்சரித்து, சிவபஞ்சாக்ஷரி மந்த்ரத்தை சபித்து எ! ஜகந்மாதா! ஜகத்ரக்ஷிகி! ஜகத்பாந்தவி! ஜகந்மோகினி! எசிவாத்ரி! எகாத்யாயனி! எகாளி! சாம்பவி! ஜடாதரி! என்விண்ணப்பத்தை அங்கீகரிப்பாயாக. சக்ரவர்த்தியின் பொன்னையெல்லாம் உன்னுடைய தேவாலயஜீர்ணோத்தாரணத்திற்கும், திருவாபரணத்திற்கும், மகோற்சவவைபவத்திற்கும் செலவழித்துவிட்டேன். சக்ரவர்த்தி கொடுத்த சுவர்ணத்தை நாளையதினம் எடுத்தலளவையைக் காட்டாவிடில் ஆக்ஞைக்கு உள்ளாகவேண்டுமென்று சொல்லுகிறார். அதற்கு நான் என்னசெய்வேன். என்னுடைய ஞாதிகளெல்லாம் சக்ரவர்த்தியினிடம் போய் வாய்த்த சமயத்தைக் கைவிடாது என் இருப்பை சொல்லிவிட்டார்கள். சக்ரவர்த்திக்கு தேவாலயத்திற்கு செலவிட்டதாக தெரிந்துவிட்டது. என்னை இதுவிஷயமாக காப்பாற்றத் தகுந்தவர் ஒருவருமில்லையே. நீயே எனக்கு புகலிடமாயிருக்கின்றனை.

என்னைக் காப்பாற்றுவதுன்பாரம்; என்று தன்விண்ணப்பத்தைத் தெரிவித்து வீடுசேர்ந்து இதுவே கவலையாக அன்னாகாரமின்றி படுத்து நித்திரை செய்துகொண்டிருக்கும்போது, இதையோர்ந்த பர்வதராஜகுமாரியாகிய சாம்பவிஇராமசுனாரின் கனவில் ப்ரத்யக்ஷமாகி குழந்தாய் நீஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நீநாளையதினம்உன்னிடத்திலுள்ள சுவர்ணத்தை எடுத்துக்கொண்டுபோய் துலைத்தட்டிலிட்டு எடுத்தலளவையைச்சரிக்காட்டும்போது குறைந்த பொன்னுக்குச்சரியாய் பொன்னுள்ள தட்டில் நாம் ஆரோகணித்தருள்வோம்; என்றனள். இவ்விதங் கூறினமாத்திரத்தில் துயில்நீங்கி அம்பிகையின் திருவருட்கடாக்ஷத்தையுணர்ந்து மனங்கசிய ஸ்தோத்திரஞ்செய்து பொழுதுவிடிந்ததும் ஸ்நானபானஞ்செய்து, தேவிபூஜையை முடித்துக்கொண்டு, தன்னிடம் இருந்த சிறிதுபொன்னைக் கைக்கொண்டு அரண்மனைசென்று நபாப்பின் முன்பாக ஓர் துலைநிறுத்தி, அத்துலையில் கொண்டுபோன பொன்னை ஓர்தட்டிலிட்டு மற்றோர் தட்டில் ஒருபாரமுடைய படிக்குண்டு வைக்க, சர்வலோகநாயகியாகிய பராசக்திஅடியவராகிய இராமசுனாரை காப்பாற்றும்பொருட்டு ஒருவருடைய த்ருஷ்டிக்கும் புலப்படாமல் சக்ரவர்த்தியின் பெண் மகவிற்குமாத்திரம் புலப்படும்படி திருவுள்ளங்கொண்டு பொன்னுள்ள தட்டில் திவ்வியமங்கள ஸ்வரூபத்தோடு சூல தண்ட பசாங்குச சங்குசக்ர கதாகட்க வீணாபுஸ்தக பாணியாய், திவ்ய ரத்னாபரணம் அணிந்து ஜ்வலிக்கின்ற பட்

டுபீதாம்பர வஸ்திரம்தரித்து கோடிசூர்ய ப்ரகாசம்போல் பிரகாசித்து ஆரோகணித்திருக்க, இராமசுஞர் சக்ரவர்த்தியாருக்கு எடை சரியாய்க்காட்டினர். அதைநோக்கிய சக்ரவர்த்திக்குக் கோபந்தணிந்து ஆனந்தக்கடலில்ஆழ்ந்து இராமசுஞரை மன்னித்து தனக்கு கோபம்பிறப்பித்த இராமசுஞரின் ஞாதிகளைத் தண்டிக்கவேண்டுமென்றுகூறியபோது, இராமசுஞர் தமது ஞாதிகளை மன்னிக்கச் செய்யவேண்டுமென்கிற எண்ணமுண்டாகி பரமகாருண்யமுடையமனதோடு சக்ரவர்த்தியை வேண்டிக்கொண்டிருக்க, சக்ரவர்த்தியின் பெண்குழந்தை தன் தந்தையிடம் ஓடிவந்து, ஐயா! தராசுத்தட்டில் யாரோ ஒரு பெண் அதிக ரூபலாவண்யமாக வந்து உட்கார்ந்திருக்கின்றள்; என்று கூற, நபாப்பின் கண்ணுக்குப் புலப்படாமையால், இராமசுஞரை நோக்கி, ஐயா! இராமசுஞரே! தட்டில் உட்கார்ந்திருக்கும் பெண் என் கண்களுக்குத் தோற்றவில்லை, அப்பெண்மணி யாரென்று கேட்க, அப்பெண்மணிதான் எனது தெய்வம், அவ்வம்மையார்தான் எனது தாய், அவள்தான் உலகரக்ஷகி, அவள்தான் உம்மையும் எம்மையும் காத்து ரக்ஷிக்கின்றவள்; என்று சொல்லவும் ஆ! ஹா! ஆஞல் அப்படிப்பட்ட தெய்வத்தை நான் தெரிசிக்கவேண்டியவனு யிருக்கின்றேன், தேவரீருடைய பக்தியே பக்தி, உனதன்பே யன்பு, உமது புண்ணியமே புண்ணியம், உவது ஜென்மமே மானிட ஜென்மம், நீரே தேவர், நீரே முனிவர், நீரே மஹாருஷி உம்மைவிட இவ்வுலகில் ஒரு புண்யசீலரையுங் கண்டதேயில்லை; என்று பலவாராகத்துதித்துப் புகழ்கூறி அத்தெய்வத்தை அடியேனுகிய எனக்குத்தெரிசனமாகும்படிச் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளவே, அங்ஙனமே இராமசுஞர் இச்சாசக்தி க்ரியாசக்தி ஞாஞசக்தி என்று அறிஞர் கொண்டாடும் பராதேவதையை நோக்கி, அம்மணி! அடியேனை கேட்டுக்கொள்ளும் சக்ரவர்த்திக்கு உனது தெரிசனமாகவேண்டும்; என்றுதோத்திரம்செய்ய, சங்கரியும் இராமசுஞர் பக்திவலையில்பட்டு சக்ரவர்த்திக்கு ப்ரத்யக்ஷமாக, சக்ரவர்த்தியும் மாதாரன்ன பூர்ணேஸ்வரியின் திவ்யமங்களவிக்ரகஸ்வரூபத்தைக் கண்ணாரத்தரிசித்து ஆனந்தக்கூத்தாடி, அன்புமேலிட்டு, கண்களிலிருந்து ஆநந்தபாஷ்பம்சொரிய அங்கம் சிலிர்க்க என்பு நெக்குருக பரவசமடைந்து தோத்திரம்செய்து இராமசுஞரைத் தாவித்தழுவி யான் கிருதார்த்தனுனேன், நீர் பரமபக்தர், மகா பாபியாகிய நான் உம்மை வருத்தினேன் அவ்வபசாரத்தை நீர் இன்று க்ஷமித்தருளவேண்டும்; என்று பலவாறாக கேட்டுக்கொண்டனர். தான்செய்தகொடுமைக்காக மனம் நொந்தனர். அன்புவார்த்தையைக் கூறினர். இராமசுஞரை தனக்கு ஆச்சாரியாராகப் பாவித்தனர். அவர் இரண்டுதிருடிகளையும் தன்கரங்களினுல் பற்றி தமது சிரம் அவர் பாதம்படிய சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர். அவ்வளவில் பராசக்தி அந்தர்த்தானமாயினள்.

பிறகு நபாப்பின் பக்தி மேலீட்டினுலும், அன்பின் பெருக்கத்தினுலும், தேவியின் தரிசனத்தைப்பெற்ற சந்தோஷத்தினுலும், முன்தட்டிவிடப்பட்ட பொன்னை அம்பிகையின் கைங்கர்யத்திற்கே கொடுத்தருளி தனக் குபதேசம் செய்யும்படிச் சொல்ல, இராமசுஞர் சக்ரவர்த்திக்கு ஆசாரியராய் குருபதேசம்செய்து அனுக்ரகித்து சக்ரவர்த்தியால் விடப்பட்டமானியத்தைக் கொண்டு காளிகாதேவி யென்னும் காமாக்ஷியின் தேவாலய நித்யநைமித்ய கைங்கர்யங்களை குறைவறச்செய்து பரமசாதுவாய் ஞாஞம்பிகையின் தன்னருளால் தாஞம் தன்தர்மபத்தினியும் சிலகாலம் வாழ்ந்து அம்பிகையின் திருவடி நீழலை அடைந்தார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

ஶ்ரீமத் விராட் விஶ்வப்ரஹ்மணே நமஃ

# விஶ்வகர்ம குலோபகாரி.

மலர் 1. | 1914௵ மார்ச்சுமீ பிரமாதீச௵ பங்குனிமீ | இதழ் 6.

OFFICE OF THE REGISTRAR OF B... MADRAS.

## மெய்ஞ்ஞான தீபம்.

### புத்தர் மஹாவாக்கியம்,

ஒன்று விசேஷமாக நல்லதென்றுவது, விசேஷமாகக் கெட்டதென்றுவது கேள்விமாத்திரத்தாலேயே நம்பவேண்டாம்; உண்மையாக இல்லாவிடில் எழுதிவைத்திருப்பார்களா என்றுஎண்ணி, அதனுலேயே உண்மையென்று தீர்மானிக்கவேண்டாம்; அனேகஇடங்களில் பாரம்பரியமாக வழங்கி வந்த ஐதீகமென்று அதனுலேயே அதில் நம்பிக்கை வைக்கவேண்டாம்; ஒரு விஷயத்தை அநேகர் நம்புகின்றூர்களே யென்று அதனுலேயே அதனை நம்பவேண்டாம்; அநேகர் நம்புவதால் அதனுலேயே அது உண்மை என்று நினைக்கவேண்டாம்; ஓர் மகாத்மாவால் வரையப்பட்ட கதை ஒன்று காட்டப் பட்டதினுலேயே அதனை நம்பவேண்டாம்; ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடிய வொன்றை தேவனுல் செய்யப் பட்டிருக்கலாமென்று கற்பனை உதிப்பதினுலேயே அதனை நம்பவேண்டாம்; பெரியோர்களாலும், சமயாச்சாரியர்களாலும், சொல்லப்பட்டவை யென்று அதனுலேயே நம்பவேண்டாம்; உத்தேச அநுமானங்களால் எழும் விஷயங்களையும் நம்பாதே; சிநேகிதர்கள் பலர் கூடி உன்னை கட்டுப்படுத்துவதால் அதனை ஒப்பாதே; ஒவ்வொரு விஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து, அது சகலருக்கும் நன்மையைத்தருவதென்று ஐயமற உய்த்துணர்வாயாகில், அப்பொழுது அதனை நீ உன் மனமார ஒத்துக்கொண்டு, அதன்படி நிற்பாயாக,

* * *

### செல்வத்தினியல்பு.

விடாமுயற்சியுடன் உழைக்கும் கலங்காத நெஞ்சினர்களை செல்வம் வலியச்சென்றடைகின்றது. மனோபலமற்றவர்களோ விதி வழியே ஏதேனும் கிடைக்காதாவென்று ஏங்கிச் சோம்பலை வளர்த்து வருவார்கள். ஆகையால், விதிவசத்தின் நம்பிக்கையைவிட்டு, உனது முழுமனதோடும், உனது பலத்தைச்செலுத்தி ஓர் காரியத்தைச் சாதித்துப்பார். அப்படிச்செய்தும் அதனைச்சாதிக்கத் தவறுவாயாஞல் அந்நிந்தனை உன்னை ஒருபோதும் சாராது.

* * *

### நற்கீர்த்தியின் உன்னதம்.

ஆண் பெண் ணிருபாலர்களின் நற்கீர்த்தியே அவரவர்களின் ஆத்மாவிற்குகந்த ஆபரணமாக விளங்குகிறது. கேவலம் பணத்தினுல் செய்து புனையக்கூடிய ஆபரணங்களை யொருவர்திருடுவது பெருத்த நஷ்டமாகா. அவ்வாபரணம் ஒருவரால் திருடப் படுவதற்குமுன் உன்னுடைய சொத்தாகவிருந்தது. திருடப்பட்டவுடன் அவருடையதாக மாறிவிட்டது. உன்னிடம் அந்தசொத்து வருமுன்னும், திருடப்பட்டபின்னும் எத்தனையோ ஆயிரங்கணக்கான மாந்தர்களுக்கு அது சொந்தமாகவிருந்தது. ஆகையினுல் அதுஒருபெருத்த சம்பத்துமன்று, நஷ்டமுமன்று. ஆஞல் உனது நல்ல கீர்த்தியைச் சிறு களவுசெய்கிற பாதகனுக்கு நீ இடந்தராதே. இக்களவினுல் திருடுபவன் தனவந்தனுகாவிட்டாலும், நீ பரம ஏழையாகி விட்டாயென நிச்சயமாகநம்பு.

* * *

## கைத்தொழிலே நம் மேம்பாட்டிற்குமுக்கிய காரணம்

பூர்வசரித்திர ஆராய்ச்சியாலும், நவீன சரித்திரங்களின் மூலமாகவும் கைத்தொழில்களின் கனத்தை ஆராய்ந்தால், அவைகளே ஒவ்வொரு தேசத்தாரின் நாகரீகத்திற்கும், செல்வத்திற்கும், பொது ஜனங்களின் உன்னத நிலைமைக்கும் முதற்காரணமாக விளங்குவது நெற்றெனப் புலப்படும். நம் நாட்டாரைவிட அயல் நாட்டார் உன்னதம்பெற்று, நம்மிலும் பெருமையுற்று கீர்த்தியுடன் தாரித்திரியத்தில் தாழாமல் தழைத்தோங்கி வாழ்வது அவர்கள் கைத்தொழிலில்வைத்த இடையறா கவனந்தாலன்றோ? உலகத்திலுள்ள ஜாதியார்கள் யாவரையும் ஒருங்கே சீர்தூக்கின், ஐரோப்பியர்களே கைத்தொழிலில் மிக்க ஊக்கம் பெற்றவர்களாய் உலகில் பிரதமஸ்தானத்தை வகித்து, ஒப்பற்று நிற்கிறார்கள். இச்சாதியார் இப்பொழுது கைத்தொழிலில் எவ்வாறு பிரபல முற்றிருப்பதாக நமக்குத் தோன்றுகிறதோ அவ்வாறே பூர்வத்திலும், அக்காலஸ்திதிக்கேற்ப, பெருமை பெற்றிருந்தார்களென்பதையும், கைத்தொழில் முயற்சியிலும், நூதன இயந்திர மியற்றும் வலிமையிலும் வியக்கத்தக்க விதமாய் அவைகளே தம்ஜாதிக்குரிய விசேஷண குணங் குறிகளிலொன்றாகப் பெற்றிருந்தார்களென்பதையும் ஆராய்ச்சியாலறிகிறோம். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களிலுள்ள சாமானிய ஜனங்களிடமிருந்த இவ்விததொழில் முயற்சியின் ஊக்கத்தாலன்றோ, அவ்விராச்சியங்களின் அஸ்திவாரம் ஊடுருவிச் சென்று, அவைகளின் மகத்தானமேன்மைக்கு முதற்காரணமாயிற்று. அத்தேசத்தாரின் செழுமைக்கும், அதிதீவிரவளர்ச்சிக்கும், அவர்கள் வர்த்தகத்தில் காட்டும் முகமலர்ச்சிக்கும் காரணம் கைத்தொழிலின் பலமன்றி வேறில்லை. அவர்களின் ஓய்வொழிவற்ற ஏகத்துவமான முயற்சியாலும், தொழில்வல்லோர்களுடைய உரம்பெற்றகைகளும் திடமுள்ள மனமும் தினே தினே ஒத்துழைத்ததின் பயனாகவும், தொழிற் பிரிவினைகளின் காரணமாகவும், முக்கியமாய் நாணய வரிசையாலும், அதனாலடையும் பொதுஜனாதரவின் பெருக்கத்தாலும், அவர்கள் கீர்த்தி ஓங்கி எழுந்ததேயன்றி, கேவலம்சோம்பலின்காரணத்தினாலும், தற்புகழ்ச்சியின் முதிர்ச்சியாலும், அற்பசந்தோஷத்தாலும், அகம்பாவத்தாலும் அடையப்பெற்றதன்று. கண்ணியமான கைத்தொழிலும், அறிவாளிகளான கைத்தொழிற் பிரியர்கள் மற்ற சாமானிய ஜனங்களிடத்து வைத்த அன்பும், அவர்கள் அறியாமைக்கிரங்கி அவர்களைக்கரைசேர்க்க வேண்டி அவர்கள்பால் செலுத்தும் கடமைகளும், தேசப்பொது க்ஷேமமெனும் ஓர் ராஜபாட்டையைக் கடைப்பிடித்துச் செல்வனவாகவிருக்கின்றன. மானிட சரீர அமைப்பைமட்டுமே ஆராய்ந்தாலும், சரீரமும், அவயவங்களும், தசையும், நரம்புகளும், மூளையின் அமைப்பும் கடின உழைப்புக்கு ஏற்றனவாய் அமைக்கப்பட்டிருக்கும் உண்மையை உணரலாம். இவ்வுண்மையை உணர்ந்தவர்களே உலகஞானத்தைப் பெரிதும் அடைந்து, கைத்தொழிலாகிய சரீர உழைப்பே மானிடர்களின் மேன்மையான மனோவிர்த்திக்கு முக்கிய காரணமென்று கண்டு தேறுவார்களேயன்றி, திடனொன்றும் வேண்டாத மிருதுவான வேலைகளை வெயில், மழை, பனி முதலியவைகளிலடிப்பட்டுத் தேறாமல், உள் வீட்டிலிருந்து உறக்கமுடன் செய்து அயலார் ஒருவரும் உதவிபுரியவில்லையே யென்று ஆகுலித்து, தங்கள் வருமான மிழந்து, வாழ்நாளில் ஏக்கமுற்றவர்களாய்வருந்தி சிந்தை உழல்கின்ற மானிடவகுப்பார் இத்தேசத்தில் பலரிருப்பினும், அத்தகையோரை அந்நிய நாட்டில் காண்பது அருமையினும் அருமையாகும். உண்மையாகவே அங்கப் பழுதுற்றாலன்றி கைத்தொழிலை இகழுகின்றவர்களை அயல் நாட்டில் காணப்பெறுவதருமை.

இந்நாட்டுக் கைத்தொழிலின் சிறப்பு மற்ற நாட்டாரால் வியக்கப்பட்டிருப்பது வாஸ்தவமாயினும், அவ்வியப்பு அவர்களின் விசித்திரவேலைப்பாட்டிற்கும், கைத்தொழிலாளிகள் தம்விதியை வீணே நொந்துகொள்ளுநட்பொறுமைக்கும்ஓர்வேலையை ஆரம்பமுதல் கடைசிவரையில் தாமே செய்து முடிக்கும் குணநிசயத்திற்கும், காட்டப்பட்டதேயன்றி இவர்கள்தொழில் முறையின் லோகோபகாரத்திற்கும் உன்னதத்திற்கும், அவைகளைவிலைப் படுத்தும் விநோதத்திற்கும், உலகத்தாரின் குறைபாடுகளின் மர்மத்தை இவர்கள் முற்றுமுணர்ந்து அவைகளைத் தவிர்க்கும் உபாயத்தைக் கடைப்பிடித்ததற்குமன்று. இந்நாட்டுக்கம்மியர் தேங்காய்ஓட்டில் தேர்களையும்பசுமஞ்சளில் பரமனையும், அரிசியில் அம்மனையும், கோதுமையில் கோபுரங்களையும், புளியங்கொட்டையில் பலபதுமைகளையும் செய்தும், செய்து கொண்டும், அவைகளின் விசித்திரத்தைத் திருப்பித்திருப்பிப்பார்த்து தாமே மகிழ்ந்தும், அன்னியர்க்கு பன்முறை காட்டி பிரமிக்கச்செய்தும், அவர்களால் மிதமிஞ்சிப் புகழப்பட்டும், அகங்காரிகளாக மாறுபாடடைந்தார்களேயன்றி, அயல் நாட்டாரின் நுட்பபுத்தியையும், மனோதிடத்தையும், கற்பனாசக்தியையும், இயந்திரசாதனங்களையும், கடைகளிலும், வீடுகளிலும், தெருக்களிலும், மலைகளிலும், காடுகளிலும், ஆறுகளிலும், ஏரிகளிலும், ஏராளமாகப் பரப்பி உதாரணபூர்வகமாக நிதரிசனப்படுத்தி அவர்கள் காட்டிவந்ததும், வருவதுமான கைத்தொழிலின் பெருஞ் சிறப்பினைக் கொஞ்சமேனும் கவனித்து, அவ்வழியில்மனதைச் செலுத்தி, அவர்கள்உரிமையின்றியுடையும் உன்னதத்தையும், ஊதியத்தையும் மட்டுப்படுத்தி அவைகளைத் தாமடையநினைந்தவர்களேயின்றும். நினைந்திருப்பின், மற்றவர்களின் தொழின்முறைகளைப் பின்பற்றி, நூதன இயந்திரங்களைக்கண்டு பிடிக்கும் சக்தியையும், அவற்றை பகிரங்கப்படுத்து மறிவையும், அவைகளை அறிவிக்கும் தொழிற்கல்வி ஞானத்தையும் நாடியிருப்பார்களன்றோ?

இவையெலாமொரு புறமிக்க. இத்தேசத்தில் கைதொழில்களுக்கு உரிமையாளரானநம்குலோற்பவர்கள், ஜாதி பந்தத்திலகப்பட்டு, நேரான பிரமசந்ததியென்று கேள்வி மாத்திரத்தாலேயே செருக்குற்று, அன்னிய ஜாதித்தூஷணமெனும் துவஜத்தைத் தூக்கிப்பிடித்து, தம்ஜீவனோபாயமான கைத்தொழிலில் தவனமிழந்து பலநூற்றாண்டும் வாழ்ந்து வந்தது போலவே, நாகரீகம் மலிந்து, ஜாதிபேதம் குறைந்து வரும் தற்காலத்தும் குலதர்க்கமிட்டு வருகிறார்களேயன்றி தாம் பிழைக்கும் வழியையும், தம்மை பிரமசந்ததியாகச்செய்தது தாம் நடாத்திவரும் கைத்தொழிலென்பதை முற்றும் மறந்து இறுமாப்பு கொண்டவர்களாயினர். தற்காலம் இவர்கள் உலகத்தாரால் வைக்கப்பட்டிருக்கும் ஸ்தானபேதமும், அவர்களால்காட்டப்படும் உபேட்சையும், தாராளமாக உபயோகிக்கப்படும் உதாசீன மொழிகளையும் இவர்கள் கொண்ட இறுமாப்பிற்குப் பிரதிபயனாகப் பெறுகிறார்கள். இவ்விதஇறுமாப்பும், உபேட்சையும் இன்று நேற்றுண்டானதாகவிருந்தால், நம் முன் தோன்றிய குலபுண்ணிய சீலர்களால் ஒருவாறு திருத்தப்பட்டிருக்கலாமன்றோ? அவ்வாறு நேராத காரணத்தை ஊநோக்கின், பலாத்காரமாக உயர்வுகொண்டாடிய ஓர் வமிசத்தார் இந்நாட்டில் என்று புகுந்தார்களோ அன்றுதொட்டு நம் குலோற்பவர்கள் தமதுகைத்தொழிலின் கனத்தை அசட்டைசெய்து, ஜாதிப்பித்தைதலைக்கேற்றி, கல்வியிழந்து, கனமிழந்து, பொருளிழந்து, அகாலமாய் ஆவியிழந்து அல்லலுற்றார்களென்பது பொருந்தும். இவ்விதமிடியுற்ற

வாழ்க்கையை கல்வியறிவால் உய்த்துணர்ந்து, கைத்தொழிலால் சீர்ப்படுத்தி, நாணயத்தால் நன்மதிப்புப்பெற்று, ஜாதி,மத பேதமின்றி அமைதியுடன் நடத்தப்பட்டு வருமிக்காலத்திலேனும் நம்குலோத்தமர்கள் சீர்திருத்தம் பெற்று, சிறப்புடன் வாழவேண்டாமா? தமது பூர்வ கைத்தொழில், சிற்பம் முதலியவைகளை அன்னியர் கையினின்றும், அகால மரணத்தினின்றும் மீட்பித்து, உள் நாட்டுச் சகோதரர்களாலும், அன்னிய தேசத்தாராலும் ஒருங்கே மதிக்கப்படும் கண்ணியத்தைப்பெற இனிமுயலவேண்டாமா? ஆகையால், நமது குலப்பணிகளாகிய, இரும்பு, மரம், பித்தளை, பொன், கல்முதலிய வேலைகளின் முற்காலதற்கால நிலைமையையும், அவற்றை சொற்பச்செலவில் இயந்திர சகாயங்களைக் கொண்டு எவ்விதம் நடத்தி இதம் பெறலாமென்பதைப்பற்றியும், அயல் நாட்டாரின் தொழிற் சாதனங்களை எவ்வாறு அடையலாமென்பதைப் பற்றியும், இன்னும் மற்ற அரியபெரிய விஷயங்களையும் உதாரணபூர்வமாகத்தெளிவான நடையில் இனி யாம் எழுத எண்ணங்கொண்டிருப்பதற்கு இவ்வியாசமே முன்னுரையாகின்றது.

பத்திரிகாசிரியர்.

## சினவடக்கம்.

"அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை யாரிரு ளுய்த்து விடும்".

புத்திமான் பெரிய அரசன்; அவனுக்குத் தன்னுள்ளே ஓர்ராஜ்யமுண்டு; அறிவை ஆள்கின்றவனைச் சிங்காசனத்திருந்து செங்கோல் ஓச்ச அவனதந்தக் கரணங்களியாவும் வணக்கமுள்ள ஏவலாளிகளைப்போல வேலைப்பணியும். அவ்விராஜ்யஞ் சிறிதொடுக்கமுடையதாய்க்காணப்படினும் மதனரசன் மிகுந்த செல்வாக்குங்கீர்த்தியுமுள்ளவனைச் சக்கரவர்த்தியினு மேலானவனு யிருக்கின்றனன். அந்தக் கரணத்திற்குமறிவிற்கும் ஒற்றுமையின்றி என்றைக்கும் நம்முள் ஊர்க்கலகம் போலச் சண்டை நடந்துகொண்டே யிருக்கின்றது. இவ்விரண்டனுள் எது மேற்கொள்ளுகின்றதோ அதற்குத் தகுந்தமாதிரி நாம் நல்லோராயுந் தீயோராயு மிருக்கின்றனம். நாம் இந்திரியச் சேட்டைகளை நிக்கிரகஞ்செய்து அவற்றை அறிவோடு இணங்கச்செய்ய வல்லோமாயின் அதைவிட பேரானந்த மொன்றுமில்லை. பகைவர்களது கூறிய அம்பினும் அடங்காப்புலன்களே கொடியனவாம். அவற்றிற்கு நாம் ஆட்பட்டிருத்தலே நோக்கின் பகைவராலிடப்பட்ட பெரிய விலங்கினையுடையார் போலாவோம்.

"தன்னைக்—குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின், பிடிபடுக்கப்பட்ட களிறு" இயற்கையிற் சினமுள்ள ஒருவன் சான்றோரினத் திருத்தல் வேண்டும். இவ்விதம் செய்வதினால் அவன் சீக்கிரத்தில் நற்குணமுள்ளவனாகலாம். சகவாசமானது முக்கியமானது. இதனாலன்றோ சற்சனருறவு சர்க்கரைப் பாகென்பர் பெரியார்; அன்றியும் ஈண்டு சான்றோரில்லாத் தொல்பதி நீங்கக்கூறிய பாண்டியர் கருத்தும் கவனிக்கத்தக்கதே. அதனால் ஒழுக்கமும் குணமுமாத்திரமல்ல, நமது விருப்பமும் நம்மையறியாமலே சீர்ப்படும் தன்னையடக்கியாள்பவன் இவ்வுலகத்தையும் ஆள்கிறான். நாம் மற்றவர்களை அடக்கியாள்வதிலும் நம்மையே அதிகமாக அடக்கி ஆளவேண்டும்.

"நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே, பின்னையான் யாரைப்பெறுகிற்பேன் —நின்னை, அறப்பெறு கிற்பெனேற் பெற்றேன்மற் றீண்டு, துறக்கந் திறப்பதோர் தாள்."



"சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம், பெரியோ ராயிற் பொறுப்பதுகடனே" என்றபடி பிறர் செய்த சிறுபிழைகளை எண்ணுமல் மறப்பதே நன்று. அவற்றை மறப்பதினால் நாம் உயர்ந்தோராவோம். மறவாமல், தீங்குசெய்தவர்களுக்குத் தீங்குசெய்வோமாயின் அவரினும் இழிந்தோராவோம்.

"அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்தறலே" சினமானது மனதிற்குள்ளே உண்டாகிற ஒருவகையான சுரமாம். சுரநீங்கிய பின்பு துர்ப்பல முண்டாவதுபோல சினங்கொண்டவர்களுக்கும் அது நீங்கியபின்பு சரீரத்தில் பலக்குறைவுண்டாகும். புலன்களையெல்லாம் ஒருங்கே அடக்கியாள்வது சிலருக்கு அதிக வருத்தமாதலால் அவர்கள் அவற்றை ஒருவாறு பொருந்தும்படிச்செய்ய முயல்வது நன்று.

"உணர்ச்சியச் சாக வுசாவண்டி யாகப், புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்தகனை, யூர்கின்ற பாக னுணர்வுடையனாகுமேல், போர்கின்ற தாகும் பிறப்பு" நமது நாவினின்று வார்த்தைகள் வெளிப்படு முன்னமே அவற்றை ஆராய்ந்தறிந்து சொல்லவேண்டும். முன்னதாக யோசித்துப் பாராவிடின் பின்பு வார்த்தைகள் நமது நாவினின்று பதறிவெளிப்படாதிரா. ஆகலின் மிகைபடச்சொல்ல லாகாது.

"காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல், ஓவாதே தன்னைச் சுடுதலால்—ஓவாதே, ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும், காய்ந்தமைந்த சொல்லார் கருத்து." நஞ்சினஞ் செல்லாவிடமுஞ்செல்லுமிடமுமுண்டு மேலோரைச் சினந்து கொள்ளுதல் புத்தியீனம். கீழோரிடத்தில்சினந்து கொள்ளுதல் இழிவாகும்.

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக், காக்கினென்? காவாக்கால் என்?" இந்திரியங்களே அறிவினுக்கு முற்பிறந்தவை; நாம் பிறக்கும்போது இந்திரியங்கள் நம்மோடு கூடப்பிறக்கின்றன; நாம் அறிவுடைய ராவதற்கு சிறிது காலம் செல்கிறது. இந்திரியங்களை அவற்றின் போக்கின்படி விடாமல் அடக்கிக் கொள்ளுதலே அறிவுடையோர்து கொள்கையாம். ஒரு கோட்டையைப் பிடித்துக் கொள்வதிலும் அந்தக்கரணங்களை யெல்லாம் நமது வசமாக்கிக்கொள்ளுதலே சிறந்ததென மேலோர்கள் கூறியுள்ளார்கள்.

கோபம் வரும்போதே அதைவேரோடு களைந்துவிடவேண்டும் ஆரம்பத்திலப்படி செய்யாவிடின் அதுவேர்க்கொண்டு விருத்தியாகி ஆரம்பத்தில் நகத்தாற் கிள்ளியெறிவதைப் பின்பு கோடரிகொண்டு வெட்டுவதுபோலாம். எவ்விடத்தில் அறிவும் நீதியும் ஆள்கின்றனவோ அங்கே அமைதியும் சமாதானமும் மல்கிப்பெருகும்; அடக்கமுள்ளவர்க ளிடத்தில் ஆனந்தங்குடிகொண்டிருக்கும்.

மிகமான செல்வமும் பெருந்தன்மையுமிருந்தால் அவ்விடத்தில் அச்சமாவது பொறுமையாவது கொஞ்சமேனு மிரா. இப்படி வாழ்ந்திருத்தலே இன்புற்றுவாழ்ந்திருத்தல் என்று சொல்லப்படும். பொல்லாங்கிழைத்ததற்காக ஓர் அதிகாரம் வகிக்கவேண்டுமென்று விரும்புகின்றவர்கள் சிலரே.

நாம் ஒன்றைப்பற்றி வாதிக்கும்போது ஆதுரத்தோடும், அகங்காரத்தோடும் பேசலாகாது. ஆதுரப்படாமலமர்ந்து பேசினால் உண்மை அறிவிற்குப் புலப்படும் உண்மை. அறிவு விர்த்தியாகவே அது புல்லறிவைப்போக்கி நல்லறிவான ஞானத்தைத் தரும். சோம்பலைக்கொன்று பகுத்தறிவை நுட்பமாக்கும். அச்சத்தை அகற்றி ஆண்மையைத்தரும். மறதியைப்போக்கி ஞாபகசக்தியை நிலைநிறுத்தும். வீண்பெருமை

யைஒழித்து வினயந்தரும். தெய்வநிந்தையைப்போக்கி பக்தியைத்தரும். பக்தியின் மிகுதியால்சாக்ஷாத் விஸ்வேஸ்வரனுடையகிருபைக்குப் பாத்திரராவோம். அவ்விறைவனருளே பிறவி நோய்க்கு மருந்தாகும்.

பிறர் செய்யும் நிந்தனைக்காக கிலேசப்படலாகாது. யாரென்ன நிந்தித்தாலும் மௌனமாய் பொறுத்திருத்தலே நன்று.

"மிகுதியான் மிக்கவை செய்தாரை தாம்தந், தகுதியான் வென்று விடல்"

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்."

நாம் பிறருடைய செய்கைகளைப் பற்றி விசாரியாமலே நாம் செய்யவேண்டியவற்றைச் செய்யவேண்டும். நற்குணங்கள் பலவற்றுள்ளும் நாவடக்கம் மேலானது. நாம் நாவடக்க முடையவர்களா யிருந்தால் நமதுகுற்றம் வெளிப்படாமல் மற்றவர்களுடைய குற்றங்களை அறிவது எளிதாகும். நாவடக்கமிலான் சீர்மை பெறாது மகனெனும் பெயருடையானுமாகாது மக்களுட்பதடியாவனாதலின்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற் பயனிலாச் சொல்" என்றபடி, நாவடக்கம் வேண்டுமென்பது பெறப்பட்டது.

"தீயினாற் சுட்ட புண்ணுள்ளாறு மாறாதே, நாவினாற் சுட்ட வடு." என்ற ஆப்தர் மொழி ஆறும் புண்ணையும் மாறாதவடுவையுங் காட்டிற்றன்றோ. ஆகலின்,

"படிறும் பயனிலவும் பட்டி யுரையும் வசையும் புறனும் உரையாரே யென்றும் அசையாத வுள்ளத் தவர்." நாம் பெரியோர்களுடைய அநுஷ்டானத்தை அநுஷ்டிக்கையில் குற்ற முள்ளவற்றை நீக்கி குணமானவைகளையே கொள்ளவேண்டும். யாரும் சினத்தைப் பொருளென்று கொள்ளலாகாது.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம், கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்,கோபமே தாயையுங் கொல்லுந் தின்படை, கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ."

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினன், கோபத்தா னருடனுங் கோல மாற்றினன், கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன். கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே."

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு நிலத்தறைந்தான் கைபிழையாதற்று."

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்,றன்னையே கொல்லுஞ் சினம்" எனவுங் கூறியுள்ளார். நற்குணங் குடிகொண்டார்பலர். "ப்ரோடா" என்னும் வித்துவான் கோபமுள்ளவர்கள் தலைகீழாய் நிற்பவர்களைப் போலே இருக்கின்றார்களென்றும், அவர்களுக்குத் தங்களைப் போலவே எல்லாம் விபரீதமாய்த்தலை கீழாய்க்காணப்படு மென்றும் சொல்லியிருக்கிறார். தலை கீழும், கால் மேலுமாய் நிற்பவர்கட்கு தலை கீழாய்த்தோன்றும் வண்ணமே கோபமுள்ளவர்கட்கும் எல்லாம் மாறாகவே தோற்றும். கோபம் சிலகாலங்களில் மாத்திரம் நம்மிடம் வருதுண்டு; ஆனல். அடிக்கடி நாமே அதை வலியவரவழைத்துக் கொள்ளுகிறோம்.



"அறிவதறிந் தடங்கி அஞ்சுவதஞ்சி உறுவதுலகுவப்பச் செய்து பெறுவதினால் இன்புற்று வாழும் இயல்புடையார் என்றும், துன்புற்று வாழ்தல்அரிது" ஈண்டுகூறியபடி ஒருவன்கோபத்தைநீக்கி குணமுள்ளானதற்கன்றோ.

"உள்ளங் கவர்ந்தெழுந், தோங்கு சினங்காத்துக் கொள்ளுங் குணமே குணமென்க" எனும் பிழையில்.பெருமொழி, பவக்கடல்கடந்த சிவப்பிரகாசப் பெருந்தகையார் அமுதவாக்கினின்று மெழுந்ததாகும்.

ஏ. முத்துகுமாரஸ்வாமி ஆச்சாரி.
செந்தமிழ்மாணவன்.

106-வது பக்கத்தின் தொடர்ச்சி

## இந்தியசிற்பமும் அதன் முன்னேற்றமும்.

### 3. சிற்பத்தினுட் பொருள்.

சிற்பமென்னும் பதத்தால் குறிக்கப்படுவது யாதென்று சுருதி யுக்தி அநுபவத்தால் உய்த்துணருங்கால், அதனுட்பொருளை ஒருபதத்தால் விளக்கிக்காட்டுவது வெகு பிரயாசையாக முடிகிறது. அதனுட்பொருளைத்தெரிய அவாவினரும், அதனைத்தழுவி தங்கள் வசதித்தலமுதலாகிய கட்டிடங்களியாவையும் இணக்கமுற முடிக்கமுயல் வோரும் இத்தேசத்திலிக்கணத்திலுமில்லை யென்றால், இதனிலும் வியாகூலத்திற்கேதுவான விஷயம் பிறிதுயாதுளது? சிற்பமானது, உலகின்கண் அற்புத வித்தைகளெனக் கருதப்படுவனவற்றுள் ஒன்றெனத் தெரிந்து ஒப்புவாரும்கூட தற்காலத்து மிக்க துல்லபமாயிற்று. எல்லாமறிந்த சிலநூலாசிரியரும் அதன் பொருளைக் கூறுங்கால், ஏதுமறியார் போல், அதனைக்கட்டுந்தொழிலெனும் பழிப்புரையை எக்காரணம் பற்றியோ பகர்ந் தொழித்தனர். அம்மட்டு நில்லாது, அஃது முப்பத்திரண்டு பகுப்பினையுடைத்தென்றும், அதனுட்பிரிவுகளினும், பலவென்றும் மற்றும் சிலமயக்கச்சொற்களையும் பொருத்தமின்றி புகல்வாராயினர். அதனுட்பிரிவுகளும், கருத்தும், நோக்கமும் எத்துணையாகினுமாகுக. அப்பதத்தின் பொருளையும், கருத்தினையும் முன்னர் ஆய்ந்து, சிற்பத்தின்பிரிவினைகளைப் பின்னர்உணர்வதே முறையெனக்கொள்க.

இப்பதத்தின் பொருளையும், கருத்தையும், நோக்கத்தையும், ஒவ்வொருவரும் தத்தம் அறிவிற்கேற்ப ஒருவாறு தம்மனதில் பொருட்படுத்திவைத்திருப்பது உண்மையெனினும், ஓர் பிரதிமொழியால் அதன்பொருளை விளக்கக்கூடாமை பற்றி, அப்பதம் வெறும் சங்கேதப்பதமாகவும், ஓர் பயனிற் சொல்லாகவும்உலகவழக்கில் வருவது அதிசயமன்று. சிற்பம் வெறும் கட்டுந்தொழில்மட்டுமே யன்று. பிறிதொரு சேர்க்கையை அக்கட்டுந்தொழில் பெற்றாலன்றி அப்பெயரை அதற்கிட்டுஅழைப்பாரில்லை. அதனோடும்,அக்கட்டுந்தொழில் சிலபல விதிவாய்ப்பாட்டிற்கிணங்கி, முக்கியமாய் அழகு,பரிமாணம், உன்னதம் அலங்காரம், விசித்திரம், வேலைப்பாடு முதலிய வனப்புகளையும் உள்ளடக்கி, வேலைநியமங்களை அநுசரித்து அமைக்கப்பட்டாலன்றி அதனைச் சிற்பமென ஒப்புவதடாது. உள்மனை சதுரித்தல்,ஒதுக்குமுறை உணர்தல், அடுக்கு நிலையறிதலாகிய வன்மைகளும் சிற்பமெனும்பதத்தில்தொக்கிநிற்கும்.பூமிசோதனை, நீரோட்டமாய்தல், சாதனப்பரீட்சை,சல்லிய மெடுத்தலாகியசார்புத்தொழில்களும் அப்பதத்திடை குலவிநிற்கும். அத்தொழிலைக் கையாடக்கூடியவர்களின் இலட்சணங்களையும்,குணாதிசயங்களையும், அவர்கள் உபயோகிக்கும் ஆயுத,இயந்திர, சாதனங்களை யியற்றும் வகைகளையும் வேலைகளாரம்பிக்கும் நற்காலங்களையும்

குறிப்பிக்கும் தன்மையு முடைத்து. தளவாடங்களின் வலிமை, சக்தி, சாதனமுதலியவைகளை முன்னுணர்ந்து, குணமுள்ளவற்றைக்கைகொண்டு, குற்றமுள்ளவற்றைநீக்கும் வன்மையையும் அப்பதம் சூசிப்பிக்கும். இப்பதம் இன்னனைய பலபொருள்களை உள்ளடக்குமெனினும், கட்டிடசம்பந்தத்தில், மேற்கூறியவைகளை மட்டுமே பெரும்பான்மை குறிக்குமென்பர்.

சிற்பம்கேவலம் கட்டுந்தொழிலென மட்டும் கொண்டால், அவ்வன்மை நாகரீகம் பெற்றவர்களிடத்துமேயன்றி, வனவாசிகளிடத்தும், நாகரீகமென்பதிற்றென வறியாசருக்கு சலபட்சணிகளாய் மரவுரி உடுத்தியமன்பதைகளிடத்தும், பகுத்தறிவற்ற சிறுபிராணிகளான பட்சிகள், தேனீக்கள், குளவிகளிடத்தும் இவ்வன்மை சிறந்து காணப்படும். தொதுவர், குரும்பர்களால் புல்லால் வேய்ந்து விற்கூரை யிடப்பட்டிருக்கும் குடில்களையும், கழைகளால் தடுக்கப்பட்ட மறைவிடங்களையும், மண்டியிட்டுத்தவழ்ந்து செல்லத்தக்கவிதமாய் அமைத்துள்ள கற்குகைகளையும், பருமரங்களின் கொம்புகளிடையில் குடைகள் போன்று கூரையிட்டிருக்கும் மானிடக் கூண்டுகளையும், பூமியை ஆழத்தோண்டி அதனுள் உயிருடன் புதையுண்டிருக்கும் மனிதரின் சுரங்கங்களையும், சிற்பமென்றும், சிற்பத்தாலமைந்த தென்றும் ஒருபோது மொப்புக்கொள்கிறோமில்லை. நெடுமரங்களின் நுனியில் கும்பல் கும்பலாய் தொங்கிக்கொண்டிருக்கும் விசித்திரமான தூக்கணங்குருவிகளின் கூண்டுகளையும், மதுநிரம்பித்ததும்பும் தேனீக்களின் வேலைப்பாடான சிற்றறைக் கூண்டுகளையும், புழுக்களைப் பொதிந்து வைத்துச் சின்னாளில் தன்மயமாக்கும் பொன்னிறக் குளவியின் கூண்டுகளையும், மதிமயக்கந்தரும் மைனிகப்புற்றுகளையும், அவைகளின் வேலைப்பாட்டின் அருமையையும் கண்டு வியப்பவர் பலரேயாயினும், அவற்றைச் சிற்பமென்றும், சிற்பத்தாலாகிய தென்றும் புகல்வாரை இதுகாறும் கண்டிலம்.

பலசௌகரியங்களைப் பெற்று, விசாலமாகக்கட்டியுள்ள வீடுகளையும், நாம்சிற்பமென ஒப்புக்கொள்வதில்லை. அவ்வீடுகள் உள்மனை பெருக்கமும், பற்பலவசதிகளையும்பெற்று, விதிவாய்ப்பாட்டிற்கிணங்கி, சாஸ்வதத்தன்மையைசிறிதேனும்பெற்று, வெளித்தோற்றத்தின் அழகைமிகுதியாகப்பெற்றாலன்றி, அவ்வீடுகள்சிற்பத்தாலுற்பவித்ததாகக் கருதப்படுவதேயின்றாம். ஓர் கட்டிடத்தின் வெளித்தோற்றம், உலகின்கண்ணுள்ள பலசாதியரின் சிற்பமுறைகளையும், அலங்காரங்களையும், சித்திரிப்புக்களையும், சிற்பவிதிகளுக்கிணங்கியேனும், முரணாகவேனும் ஒன்றோடொன்று கலக்கப்பட்டு, ஒருக்கால் அழகைக்கொடுத்து ஆனந்தத்தை மூட்டிவிடின், அஃது சிற்பத்தின் கருத்திற்கிணங்கியதன்று. எனெனின், ஓர் சாதியரின் சிற்பம் அவர்கள்சாதி, சமய ஆசாரங்களுக் கிணங்கி, பொதுத் தோற்றம்பெற்று அவர்களுக்குரிமையான வெளியலங்காரங்களையும், சித்திரிப்புக்களையு முடைந்து, மற்றசாதியர் இக்கட்டிடங்களைபார்த்தமாத்திரத்தில் இஃதின்னசாதியரின் சிற்பமென்றும், இன்ன உபயோகத்திற்காக அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் பிறரை வினவாமலே தெரிந்துகொள்ளும் இயல்புடையனவாய் நிருமிக்கப்படல் வேண்டும். இன்றேல், ஓர் சாதியரின் பண்டைய நாகரீகங்களையும், வழக்கவொழுக்கங்களையும், சாத்திரப்பயிற்சிகளையும், ரசஞானத்தையும், கற்பனாலங்காரங்களையும் பார்த்தமாத்திரத்தில் அங்ஙனேயறிவிக்கக்கூடிய கன் மேலெழுதிய தேச சரித்திரங்கள் இக்கட்டிடங்களன்றி வேறுண்டோ?

நிற்க, மேலேகூறியவற்றால் சிற்பமும் அழகும் பிரிக்கப்படக்கூடியதன்றெனவும், முக்கியமாய் அழகின்றி சிற்பமொன்றில்லையெனவும் பெறப்பட்டது. ஆகையின், அழகெனும் பதம்யாதென்றாயுங்கால், அஃது கண்ணுக்குப்புலனாய் கவரும்பொருள்களுக்கும், கற்பனாசக்திக்கு ஆனந்தமூட்



டும் தன்மைக்கும், மானதலட்சணபேதங்களுக்கும், மனக்கண்ணிற்குப் புலப்படும் யுக்திகளின் காரியத்திற்கும்பொருந்துமென்ப. ஒவ்வோரமயத்தில், உருவம், நிறம், வடிவம், ஆகிருதி, புணர்நிலை, அடுக்குபேதமுதலியவைகளும் அழகிற்கு காரணமாய் நிற்கும். பரிமாணம், விசித்திரம், வேலைப்பாடுகளின் சம்பந்தத்தாலும் அழகு அமையும். பொதுவாய், மனதிற்கு இன்பந்தரும் பொருளியாவையும் அழகமைந்தனவெனமாந்தர் உரைப்பதுஇயற்கை. ஆகையின் அழகெனும் ஓர்வஸ்து உண்மையாகவே பொருள்களிடத்து அமைந்திலதெனவும், அழகெனக்கருதுவதெல்லாம் மனமென்றும், அம்மனதின்வலிமை கல்விஞானத்தாலும், கட்டுமுறைகளின் தேர்ச்சியாலும் கற்பனா வலிமையைப் பெருக்குவதாலும், பொருள்களை உய்த்து நோக்கும்தன்மையாலும் காலதேசப்பாகுபாடு, ரசஞானமுதலியவைகளை இகழாமல் கவனத்திருத்துவதாலும், அகங்காரக்கொடுங்கிழங்கை முற்றுமகற்றுவதாலும் விசாலித்து, வேரூன்றுகிறதென்பது அநுபவசித்தம். இவ்விதஞானத்தைப் பெரிதும்பெற்றாலன்றி உண்மையான சிற்பத்தினுணர்ச்சியைப் பெறுவதும், ஓர்சாதியர் அதனை நிலைபெறச்செய்தலும் எத்துணைகடினமென்பது நன்கு புலப்படும். அவ்விதஞானத்தையும், தொழில் வன்மையையும் மேன்மேலும் பெருகச் செய்யாது, உறக்கம்கொண்டு, தம்வினையைநொந்து, சிற்பத்தை இகழ்ந்து அதனுட்பொருளையும் மறந்துநிற்பதற்கோ பேரறிஞர்களான நம்முதாதையர் கூடகோபுரங்களையும், மாடமாளிகைகளையும் சமைத்து தங்களரிய சக்தியை நிதரிசனப்படுத்தினர்?

(தொடரும்)

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியர்,
சென்னை சிற்பவித்தியா
சங்கத்தின் அங்கத்தினர்.

## இதோபதேச நீதிமொழிகள்.

(பகுத்துண்ணல்.)

உலகெலா முணர்ந் தோதற் கரியவனாகிய ஸ்ரீ விசுவப் பிரமமூர்த்தியால் சிருஷ்டிக்கருளப்பட்ட ஜீவசிருஷ்டியுள் இம்மானிடப் பிறப்பெய்துதல் அரிதினும்மகா அரிதென நமது திரு ஔவைப்பிராட்டியவர்கள் செகத்தோர்க்கு அன்புபற்றிக்கூறிய தேவாமிர்த இனியவாக்கிய "அரிதரிதுமானிடராவதரிது" என்னும் அருண்மொழியுபதேச ஆத்மபோத ஒருரைக்குறிப்புரையினாலும் (இத்தேகம்) நீங்குமெனவெண்ணிலோ நெஞ்சந் துடித்தபருவேன்; என்று இம்மானிடதேகத்தில் உன்னத முயர்ந்த சிரேஷ்டபதவியைச் சுட்டிக்காட்டும் தாயுமானவரின் சூக்ஷ்மோபதேசச் சுருதிமொழியினாலும் நாம் இம் மனிதப் பிறப்பின் மேன்மையை உள்ளங்கைநெல்லிக்கனிபோல் உணர்ந்தறியலாகும். ஆதலால், இவ்விதமாகிய நுட்ப உணர்ச்சியும் பகுத்தறிவுமுடைய கிடைத்தற்கரிய நரஜென்மத்தைநாம்பெற்றும் "பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்ற சுலோகத்தின்படி பரோபகாரத்தின் பொருட்டு இச்சரீரம் உழைத்து வரவேண்டுமென்னும் ஆன்றோர்மொழியை அணுவளவும் மனதில் நினையாது தாமும் தம் குடும்பஸ்தர்களும் உண்டுடுத்துக் கண்டுகளித்துப் பெண்டுபிள்ளைகளுடன் உலகில் வாழ்ந்திருந்தாற் போதுமானது, பிறர் கெட்டாலென்ன, வாழ்ந்தாலென்ன, அதனால் நமக்கென்பயனென்று தற்சுகம் நினைந்து உற்சாகமாய் வாழ்ந்திருத்தல் உத்தமர்க்குற்ற உயர்ந்த வாழ்வாகாதென ஆதிமறையின் அருங்கருத்தாகிய நீதிநூல்களின் நெறிமுறைக்

கட்டளையாகும். இதுபற்றியன்றோ, தாயுமானார் "கல்லாருமிஇன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாது வேறொன்றறியேன்பராபரமே" என்றும், பழமொழி "நாடெங்கும்வாழக் கேடொன்று மில்லை" என்றும் ஒளவையார் கூறியிருப்பதோடு, "ஈதலறந் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்" என்றும் "ஆறிடுமேடும் மடுவும்போலாஞ் செல்வம் மாறிடும் ஏறிடும் மானிலத்தீர்—சோறிடும், தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக, உண்ணீர்மை வீறும் உயர்ந்து, என்றும், அதாவது:—செல்வம் ஆறிடுமேடுபோல் அழிந்தழிந்து உற்பத்தியாவதினால் "கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ்செய்க" என்னும்முது மொழிக்கிணங்க பொருளிருக்கும்போதே புகழ் தேடுதற்கெண்ணி அடியார்களை அரனுருவமாய்நினைத்து, ஏழைகட்கிரங்கி இனிய மொழிகூறி, அவர்கட்கு உண்ணீர் உண்ணீர் என்று உபசாரம்புரிந்து, தண்ணீருஞ் சோறும் தயையுடனளித்து புண்ணியஞ்செய்து பூமியில் வாழ்ந்திருங்கள். அப்படிச்செவ்வீராகில் நாளுக்குநாள் மெய்யறிவு (ஞானம்) முதிர்ந்து திருவருட்பிரகாசத்தை யடையலாமென்றுசுட்டிக்காட்டியும்

"ஐயமிடுமின் அறநெறியைக் கைப்பிடிமின், இவ்வளவேனும் அன்னம் இட்டுண்மின்—தெய்வம், ஒருவனேயென்று முணரவல்லீரேல், அருவினைகளைந் துமறும்" என்றும், அதாவது:—ஒரு பிடியன்னமேனும் பிரியமாய்க்கொடுத்து சடைமுடி யண்ணலைத்தான்றினந் துதித்துவாழவேண்டுமென்று,படிமீதுள்ளோர்க்குப்பக்ஷம் வைத்துரைத்து ஞாபகம்வருமபடி நவின்றிருக்கின்றார்கள். இதனால்ஜீவர்கள் அனுதினமுந்தர்மம் அன்புடன் செய்ய வேண்டுமென்றும் கடவுளடியைக் கனவிலுமறக்கக் கூடாதென்றும் கண்டிப்பாய்ச்செல்லும் ஊறுதியானவுபதேச மொழியெனவும் எண்ணப்பெறுகிறது.

ஆதலால்இவ்வருண்மொழியையுமறந்து பாஜீவனின் துன்பமுணராதநரஜென்மாக்களின் பக்திகடிப்பானது "பரிந்தோம்பிப்பற்றற்றேமென்பர் விருந்தோம்பி, வேள்வி தலைப்படாதார்" என்னும் நாயனார் அமுதவாக்கின்படி, பொருளைமிக விரும்பி அறஞ்செய்யாது, சேர்த்து முடிவிற்புகழின்றி வீணையிழந்தோமென்று மிகவுந்தவிப்பர் என்பதற்கிணங்க, பச்சைத்தண்ணீரை வேரிற்காணாத பசளைக்கொடி போல் வாடி துயரென்கிற கவிபாற்பீடிக்கப்பட்டு வறுமையென்னுமறலியின் வாதையிற்சிக்கி, லோபியென்னும்பெயரால் உலகத்தாரிகழ இருட்டெனுமனத்தில் என்று மணிந்திருந்து, புண்ணியமென்னும் அலங்காரமில்லாப்புருடனாகிப் பூமியில்வாழ்தலானது, ஆடையில்லாப் பெண்மணிபோலும், அலங்காரமில்லாத் தேர்போலும், நீரிடா நெற்றிபோலும், அன்பில்லா அறம்போலும், விநயமில்லா வித்தைபோலும், கூட்டுறவில்லாக் குடிவாழ்க்கைபோலும், ஒற்றுமையில்லா ஊர்பலம்போலும், மாலுமியில்லா மரக்கலம்போலும், இருபனமொவ்வா இல்லறம்போலும், கதிர், மதி யில்லாக்ககனத்தைப்போலும், புலவர்களில்லா சபையைப்போலும், வஞ்சகரியற்றும் மாதவம்போலும், இங்கிதமில்லாச் சங்கீதம்போலும், மந்திரியில்லா மகிபனைப்போலும், தொந்தரவடைந்து சிவனருள்பெறாது தவஜென்மமென்னாத அவஜென்மமாய்நரஜென்மமென்பது நரகஜென்மமாகி புகழொளியில்லா இகழிருள் சூழ்ந்து புவியில்வாழுமிவர்கள் இல்லறமென்ப திருள் என்றுநமக்குநவின்றிருக்கின்றார்கள்.

அன்றியும் "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல்நூலோர், தொகுத்தவற்று ளெல்லாந்தலை" என்றும் அதாவது, தனக்குக்கிடைத்தபொருளை ஜீவகாருண்யத்தின்பொருட்டு பலருக்கும் பகிர்ந்துகொடுத்துதானும் உண்ணுதலானது உயர்ந்தோரால் விதிக்கப்பட்ட உத்தம தர்மங்களிலெல்லாம் முதன்மையான உன்னத தர்மமென்றும், அவ்விதம் செய்யாது பரோபகாரமும் ஜீவகாருண்யமுமின்றித்தாமேயதனையுண்ணுதலானது ஒருவனிடத்திற்போய் தாம் ஒன்றுமில்லை என்று இரக்குந்துன்பத்திலும் அதிகமான துன்பமென்றும், இதனைவிட சாகுங்காலத்தில் ஐம்பொறி மயங்கி அறிவழிந்து அவயவங்களெல்லாம் அலமந்துபலவிதமான துன்பமடைவது இதனிலும் அது மிகவும் நல்லதென்று நமக்குப் பொருள் விளங்கும்படி "இரத்தலினின்னாது மன்றம் நிரம்பிய, தாமேதமியருணல்" என்றும்,

"சாதலினின்னாததில்லை இனிது அதூஉம் ஈதலியையாக்கடை" என்றும்,

நன்குவற்புறுத்தி நமக்கு இயம்பியிருக்கின்றனர். இதனால் வறியவர்க்கு இல்லை என்பதைவிட வேறுதுன்பம்உலகில்இல்லை என்பது வற்புறுத்திக் கூறப்பெற்றது. அன்றியும், பிறன் வாழ்வைக்கண்டு பொச்சாப்படைந்து "நினைக்கத்தனக்கென்றும்" நீதியையுமறந்து "அஹிம்சாபரமோதர்ம:" அதாவது, பாஜீவன்களுக்குத் துன்பநினையாதிருத்தல் எவ்வித தர்மத்திலும் உயர்ந்த தர்மமென்றும், இதுவே இறைவனுந்துதிக்கும் இன்புள, அறமென்றும் இதனுக்கொப்பு சொல்வதற்கு ஓரறமும் நிகரல்லவெனவும், இதுவே தன்னுயிர்போல் மன்னுயிரையும் நினைக்கும் ஜீவகாருண்ய தர்மமென்றும் இதுவே தவநெறியுடைய ஒப்பற்ற ஞானிகளின் உயரறமென்றும், இதுவே தன்னைத்தானறிவதற்குச் சாதகக் கருவியென்றும் இவ்வறம் நினைப்போர்க்கு எவ்வித சித்தியும் எளிதில் முடியுமென்றும், இவ்வறம் உள்ளபடியே அன்புமுதிர்ச்சியால் என்புருகிக்கசிந்து இறைவனருளைப் பெறவேண்டுமென்றஎண்ணத்துடன் சந்ததமும்இன்புடனியற்றிநோற்க வேண்டுமென்றும், இவ்வித உன்னத உயரறத்தை மாயாவேடந்தாங்கி வையகத்தியற்றுபவர்களின் வாழ்க்கைநிலையானது சேற்றிலூன்றிய கம்பம் போலும்ஆற்றிற்கிடந்து தூற்றும் பஞ்சின்றுகள்து போலும், மாற்றானுக்கஞ்சும் வறுங்குடிபோலும், சோற்றுவியற்றுத் துணியுமற்று என்பது போலும், வேற்றூரிலுமலைந்து விருதாவாகி காற்றாடி போலக் காற்றிலுழன்று கடையாணியில்லாத் தேரினைப் போலக் கவலையுறுவார்கள் என்றுங் கருத்துடன் மேலோருரைத்துள்ளார்.

இதுபற்றியன்றோ நாயனார்
"அன்பகத்தில்லா வுயிர் வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த்தற்று" என்றும்.

அதாவது பகுத்துண்டு வாழாதவன் வாழ்க்கை நிலையானது உலர்ந்த (வற்றிய) மரந்தளிர்த்துத் தழைவதுபோலும், என்றும் வற்புறுத்திக்கூறிவைத்திருக்கின்றார்

ஆதலால் தற்புகழ்பற்றி இப்புவியிற் செய்யப் பெறுங் கர்மங்களெல்லாம் தமிழில்) ஏழுக்கு முன்னும் ஒன்பதிற்குபின்னுமுளதாகிய எண்ணுள்ள எழுத்தைத் தலையிலேயுடைய இன்பிலாத் தர்மங்களென்றும் ஆன்றோர் கூறியுள்ளார்.

"கலையெலா முணர்ந்தாரேனும் கரிசறத்தெளிந்தாரேனும், மலையென உயர்ந்தாரேனு மனமயலகன்றாரேனும்,உலகெலாம்புகழப்பல்லோர்க் குதவியகையரேனும், இலகியவிரக்கமின்றேலெழுநரகடைவ ரன்றே" என்றும்,

திருமூலர்:—' என்பேவிறகாய் இறைச்சியறுத்திட்டு, பொன்போற்கனலிற் பொரியவறுப்பினும், அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி என்பொன்மணியை எய்தவொண்ணாதே" என்றும்,

"பரவப்படுவார் பரமனையேத்தார், இரவலர்க்கீதலை யாயினுமீயார், கரகத்தே நீராட்டிக்காவை வளர்க்கார், நரகத்தினிற்றிரோ நன்னெஞ்சினீரே" என்றும்,

"இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந் தருமஞ்செய்யாதவர் தம்பாலதாகும், உருமிடி நாகம் உரோணி கழலைத், தருமஞ்செய்வார்பக்கற் றுழகிலாவே" என்றும்,

"ஒழிந்த காலங்கள் ஊழியும் போயின, கழிந்த கற்பனை நாளுங்குறுகிப், பிழிந்தன போலத் தம் பேரிடராக்கை, அழிந்தன கண்டும் அறம் அறியாரே" என்றும்,

"அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார் அன்பேசிவமாவ தாருமறிகிலார், அன்பேசிவமாவ தாருமறிந்தபின் அன்பேசிவமாய் அமர்ந்திருந்தாரே"

"ஆவியை எத்தினுலென் ஆதித்தன்மயமானுலென், சேவைசெய் தின்புற்ருலென் திருக்குவாம் விழிபெற்ருலென்,ஓவியம் போதுற்ருலென் உத்தமோத் தமனுனுலென், சீவகாருணியமின்றேற் றீயரொன்றுரைக்லாமே" என்றும்,

"சீவகாருண்ய முள்ளோர் செய்வதே தபஞ்செபங்கள்,சீவகாருண்ய முள்ளோர் செய்வதே தியானந்தானஞ்'சீவகாருண்ய முள்ளோர்செய்வதே தியாகம் யாகம், சீவகாருண்ய மென்ருற் சிற்சுகமடையலாமே" என்றும்,

"கற்றவர்கடவுட்டானஞ் சேர்ந்தவர் களைகணில்லார், அற்றவர் அந்தணுளர்அன்றியு மவர்போல்வார்க்கு, உற்றநோரிடுக்கண்வந்தால் உதவுதற்குரித்தன்ருகிற், பெற்றயிவ் வுடம்பு தன்னுற் பெறும்பய னில்லை மன்னே" என்றும்

இன்னும் பற்பலவாறு அன்பிலாதவர்களின் அவலவாழ்க்கையைப் பற்றி எண்ணிக்கையில்லாது எடுத்துரைத்திருக்கின்ருர்கள். அன்றியும், நம்பட்டினத்தடிகளோ தமது அருமைத்திருவாக்கினுல்.

"வாதுக்குச் சண்டைக்குப் போவார்வருவர் வழக்குரைப்பர், தீதுக்குதவியுஞ் செய்திடுவார் தினந்தேடியென்றும்,மாதுக்கழித்து மயங்கிடுவார்விதிமாளுமட்டும், ஏதுக்கிவர்பிறந் தார் இறைவாகச்சி ஏகம்பனே" என்றும்,

"ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்பர் உற்றுப்பெற்ற, தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர்சாத்திரங்கள், ஆயார்பிறர்க்குபகாரஞ்செயார்தமை அண்டினர்க்கொன்றும், ஈயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சி ஏகம்பனே" என்றும்,

"ஈயாமனிதரை யேன்படைத்தாய்கச்சி ஏகம்பனே" என்றும் பற்பலவாறு ஈயாதவரைப்பற்றி எடுத்தெடுத்துக் கூறிஅவரெடுத்தஜென்மமும், அவரியற்றுங்குடிவாழ்க்கையும் இன்பிலாதென இயம்பி இருக்கின்ருர்கள். அன்றியும் நம் ஔவைப்பிராட்டியாரும் "ஐயமிட்டுண்" என்று பொது வசனமாய் எல்லோர்க்குங் கூறியிருப்பினும் மிகப் பொருளுடையோர் ஏழைகளைக்கவனியாதிருப்பாந்திருப்பரென்றெண்ணி அவர்கட்குத்தனியே வற்புறுத்தவேணுமென்ற குறிப்பால் "சையொத்திருந்தால் ஐயமிட்டுண்" என்று மிகவும் வற்புறுத்தி விளம்பியிருக்கின்ருர்கள். ஆதலால் இவ்வுலகிலுள்ள ஒவ்வொருமனிதர்களும் தத்தம் சக்திக்கேற்ப சவைகள், வித்தியாசாலைகள், தேவாலயங்கள், அன்னசத்திரங்கள், ஔஷதசாலைகள், முதலிய பொதுஜனோபகாரப்புண்ணிய விஷயத்திற்குப் பொருளுதவிபுரிந்து தாமெடுத்த மானிடஜன்ம மகிமைக்கேற்ப புருடார்த்தமென்னும் புகழ்ப் பொருளணிந்து இறைவனுகிய ஸ்ரீ விராட்விசுவப்பிரம மகாமந்திரமூர்த்தியின் திவ்யதிருவருட் கருணைக்குப் பாத்திராளாகிச் செழித்துத்தமது பூதஉடம்பழியினும் புகழுடம் பழியாது தமது குலம் என்றுந்தழைத்து இன்புற்று வாழவேண்டுமென இறைவனருளைஎன்றும் பிரார்த்திக்கின்றேன்.

V. வைத்திய நாதஸ்வாமி ஸ்தபதி,

ஆரியன் சோதிடசாலைத் தலைவர்

திருவாரூர்.



## விப்பிர விஸ்வப்பிராம்மண விசாரம்,

நம்மவர்கள் தங்களை விஸ்வப்பிராம்மணர்களென்றும், மற்றைப் பிராம்மணர்களை விப்பிரர்களென்றும் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எழுதிவருகிருர்கள். இவ்விதநாமதேயம் இவ்விருதிறத்தாருக்குள்ளும் தங்களுக்குண்டான ஜாதிபேதத்தைக்குறிப்பதற்காக தொன்று தொட்டு வழங்கிவந்ததாய்த் தோன்றவில்லை. இப்போதாவது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அர்த்தத்தைத்தாக்கத்ததாயுமில்லை. இந்தநாமதேயம் வழங்குவது திராவிடர்களாகிய நம்மவர்களுக்குள் மாத்திரமல்ல, ஆந்திரர்களாகிய நம்மவர்களுக்குள்ளும் வழங்கிவருகிறது. இந்தநாமதேயங்களின் அர்த்தத்தையும் உண்டானகாரணத்தையும் விசாரிக்குமிடத்து, விப்பிரன் என்னும் நாமமானது "విప్రో బ్రాహ్మణః" என்னும் அமரசிம்ம நிகண்டையநுசரித்து பிராம்மணன் என்ருகிறது. பிராமணன் என்னும் அர்த்தத்தைத்தாத்தக்க யாதொரு சொல்லானது நம்மவர்களுக்குச்சம்பந்தமில்லாவிட்டால், விஸ்வப்ராம்மணன் என்னும் சொல்லில் மாத்திரம் நம்மவர்களுக்கு என்னசம்பந்தமுண்டு விஸ்வப்பிராம்மணன்என்னும் சொல்லில் 'விஸ்வ' என்னும் சொல்நீங்க பிராம்மணன்என்னும் சொல்லானது விப்பிரன் என்னும் சொல்லின் அர்த்தத்தையேதருகின்றது. ஆனுல் அதில் "விஸ்வ" என்னும் சொல்ஒன்று அதிகமாயிருக்கிறது. அந்த சொல்லானது சமயத்துக்கேற்றபடி வெவ்வேறுஅர்த்தத்தைக் கொடுத்தாலும் நம்மவர்கள் செய்கிறஅர்த்தப்படி தங்கள் குலத்தலைவனுன விஸ்வகர்மாவின் சந்ததியாகிய பிராம்மணனு மாகையால் நம்மவர்களுக்கு பிராம்மணன் என்னும் சொல்லுக்கு முன், "விஸ்வ" என்னும் சொல்சேர்க்கப்பட் டிருப்பதாய் விளங்குகிறது. அப்படியானுல் மற்றைப்பிராம்மணர்களுக்கும் தங்கள் குலத்தலைவன் நாமதேய சம்பந்தமிருக்க வேண்டும். அப்படிபொன்றுங் காணப்படவில்லை. இல்லாதபோது நம்மவர்களுக்குமாத்திரம் ஏன்சம்பந்தப்பட்டிருக்க வேண்டும்? அன்றியும், பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்றும் நான்கு வருணங்களின் எந்த உட்பிரிவாருக்கும் இப்போது தங்கள் குலத்தின் தலைவனது நாமதேயசம்பந்தமில்லை. விஸ்வகுலம், விஸ்வகர்மகுலம், விஸ்வப்ரம்மகுலம், விஸ்வபிராம்மணகுலம் என்பனவெல்லாம் ஜாதியைக்குறிப்பன வாயிருக்கின்றன. இவ்வொவ்வொன்றிலும் விஸ்வசம்பந்தமிருக்கிறது. இவற்றில் விஸ்வகுலம் விஸ்வகர்மகுலம், இவ்விரண்டும் பிராம்மணுதி நான்குவருணங்களில் எதைச்சேர்ந்ததென்று சந்தேகிக்கத்தக்கன வாயிருக்கின்றன. விஸ்வப்பிரம்மகுலம் விஸ்வப்பிராம்மணகுலம் இவ்விரண்டும் பிராம்மணகுலத்தைக் குறிப்பிக்கின்றன. குலத்தின் மூலபுருஷனது நாமதேய சம்பந்தமுள்ளகுலம் இல்லையென்று முன்னமே சொல்லப்பட்டது. அதுமரபாகவுந் தோன்றவில்லை. மரபானுல் எந்தகுலத்திலாவது அப்படிப்பட்ட வழக்கமிருக்கவேண்டும். அப்படி எதிலுமில்லை. ஆகவே'விஸ்வ'என்னும்பதமானது குலத்தைக்குறிப்பதற்காக சேர்க்கப்பட்டதல்லவென்று தீர்மானிக்கஇடமுண்டு. ஆனுல் விஸ்வஎன்னும்பதமானது எதைக்குறிப்பிக்குமென்று ஆராயப்புகுந்தால்,பிராம்மணர்களில் சைவர், வைஷ்ணவர், ஸ்மார்த்தர், மாத்துவர் என்னும் பிரிவுகளிருக்கின்றன. இப்பிரிவுகளெல்லாம் குலத்தைக்குறிப்பவையல்ல, சமயத்தைக்குறிப்பனவாகும். இவற்றில் சைவமும், வைஷ்ணவமும் பிராம்மணர்களிலன்றி மற்றைக்குலங்களிலும் வழங்கிவருகின்றன. ஆகையால் 'விஸ்வ' என்னும் பதச்சேர்க்கையுள்ளவகுப்பாரும் விஸ்வகர்ம சமயத்தாரென்று நிருணயிப்பதற் கிடந்தருகின்றது. சைவ, வைஷ்ணவ சமயங்களில் பிராம்மணர்களும், மற்றைமுக்குலத்தாரும் இருப்

பதுபோல விஸ்வகர்ம சமயத்திலும் பிராம்மணர்களும்மற்றைமுக்குலத்தாரும் இருக்கலாம். சைவர்கள், சிவனது முகத்தில் பிராம்மணர்களும்,அவர்தோள், துடை, கால்களில் முறையே க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும்உண்டானார்களென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவினது முகத்தில் பிராம்மணர்களும்,அவர்தோள், துடை, கால்களில் முறையே க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களுண்டானார்களென்றும் சொல்லுகிறார்கள். அப்படியே விஸ்வகர்ம சமயத்தாராகிய நாமும் விஸ்வகர்மாவின் முகத்தில் விஸ்வப்பிராம்மணர்களும்,அவர் தோள், துடை, கால்களில் முறையே க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும் உண்டானார்களென்றுசொல்வதற்குஇடமுண்டு. இதுபுதிதாய்ச் சொல்வதல்ல, நம்மவர்களிடமுள்ள பழமையான நூல்களின் சம்மதமாகும்.

**அத்தியாபக லிங்காச்சாரி,**
கணியம்பாடி.

## இந்தப்பூமியை உருப்படுத்தினது பிரபஞ்ச சிற்பாச்சாரியாகிய விஸ்வகர்மா.

இந்தவுலகம் ஆதியில் ஜலமாக விருந்தது. இதில் சிருஷ்டிகர்த்தா வாயுவாகி அசைந்தாடிக்கொண்டிருந்தார். அவர் இந்தப்பூமியைப்பார்த்து வராகரூபமாகி அதையெடுத்துத் தாங்கிக்கொண்டிருந்தார். பிறகு பிரபஞ்சசிற்பாச்சாரியாகிய "விஸ்வகர்மாவாகி இந்தபூமியை உருப்படுத்தினார்,அது அபாதகயாகிவெளிப்படையான பிருதுவி யாயிற்று. அதனால் பூமிக்குப் பிருதுவியென்று பெயரிடப்பட்டது.

சிருஷ்டிகர்த்தா பூமியைக் குறித்து ஆழியசிந்தையாய்த் தியானித்துப் பார்த்து தேவர்களையும், வசுக்களையும், உருத்திரர்களையும், ஆதித்தர்களையும்சிருஷ்டித்தார் அதந்த்தேவர்கள் சிருஷ்டி கர்த்தாவை நோக்கி ஜீவகோடிகளை நாங்கள் என்னமாகச் சிருஷ்டிப்போமென்றார்; அதற்கவர் நான்ஆழ்ந்ததியானத்தால் உங்களைச் சிருஷ்டித்தது போல நீங்களும்அவ்விதமே பசுமூலமாக ஜீவகோடிகளைச் சிருஷ்டிக்கும்படியான வகை தேடுங்களென்றார். அவர் அவர்களுக்கு வேதாக்கினியைக்கொடுத்து இந்த வேதாக்கினியைக்கொண்டு தேவபத்தியை முடியுங்களென்றார், அதைக்கொண்டு அவர்கள் தபசுகளைச் செய்தார்கள். ஒருவருடத்தில்ஒருபசுவையுண்டாக்கினார்கள்; அந்தப்பசுவைக்காக்கும்படி வரிசைக்கிரமப்பிரகாரம், வசுக்களுக்கும், உருத்திரர்களுக்கும், ஆதித்தியருக்கும் அவர்கொடுத்தார். வசுக்களும், உருத்திரரும், ஆதித்தியரும் அந்தப்பசுவைக் காத்தார்கள். அதுவசுக்களுக்கு முந்நூற்று முப்பத்து மூன்று கன்றுகளையும், உருத்திரருக்கு அத்தனைகன்றுகளையும், ஆதித்தியருக்கு அத்தனைகன்றுகளையும் ஈன்றது. இவ்விதமாக அந்தப்பசு ஆயிரமாவதாயிற்று.

அவர்கள் சிருஷ்டிகர்த்தாவை நோக்கி தானத்துக்காக ஆயிரம்பசுக்களைத்தானஞ்செய்து ஒரு வேள்வியைச்செய்யத் தங்களுக்குந்திரவாகவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர் வசுக்களைப்பார்த்து நீங்கள் அக்கினி ஸ்தோமனைக்கொண்டு அந்தவேள்வியை முடிக்கவேண்டியதென்று அவர்கட்கு ஆக்கியாபித்தார். அவர்கள் இந்தஉலகத்தைவென்று அதை அந்த ஆசாரியருக்குக் கொடுத்து விட்டார்கள். அவர் உருத்திரரைநோக்கி ஊர்த்தயனைக்கொண்டு வேள்வியைமுடிக்கும்படி அவர்கட்கு ஆக்கியாபித்தார். அவர்கள்மத்தியலோகத்தைவென்று எக்கிய காணிக்கைக்காக கொடுத்து விட்டார்கள். அவர் ஆதித்தியரைநோக்கி அத்திராத்திரனைக்கொண்டு வேள்வியைமுடிக்கும்படி அவர்கட்கு ஆக்கியாபித்தார். அவர்கள் மற்றோருலோகத்தைவென்று ஆசாரியருக்குத் தானமாகக் கொடுத்து விட்டார்களென்றும், யாகம்நிறைவேற்றுகிற ஆசாரியருக்கு ஆயிரம்பசுக்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வெளிவந்திருக்கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

**V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.**
Ex. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

(128-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## சத்திய சம்வாதம்.

இன்னும் ஒரு புருஷன் சகல சாஸ்திர வித்பத்தியும்அதிசூக்ஷ்ம நுட்ப அறிவும் சமையோஜித குசலசல்லாப யுக்தியும் சதுர்வித வுபாயதற்பானாகவிருக்கினும் அரசன் அங்கீகரிக்காத வரையிலும் அவன் சொல்வது சட்டமுமாகாது, அவன் செய்வது நன்றியுமாகாது. மற்றோ, அவனுடைய புத்தி குசலத்தோடும் அரசன் சிப்பந்தியென்ற அபிமானம் அதாவது ராஜ அங்கத்தவன் யென்றமதிப்பு முளதாகில் அப்போது அவன் ஒரு சமையம் தானே சொல்லி நடத்தியதும் சட்டமாகவும் இருப்பதுஉலகப்பிரசித்தம். அதுபோலகடவுள் நாமரூபாதிதாரகையால் "அருவனாகிலும் அன்பர்க் குருவனாய் வருவன்" என்றபடி நாமரூப சகிதவடிவத்துடன் கலந்து சொல்வதுதான் வேதமென்று பெயர்.

ஆதவன்:—ஆம் கடவுள் பரிபூரணரென்று சுருதி கூறியது ஈண்டு தாம்கூறும் வசனம் பேதிக்கின்றதே.

பிரபோதன்:—கவனமாகக்கேள். அரசனுக்குட் பட்ட பிரஜைகள் போலவும் அரசன் அங்கத்தினர்போலவு மிருபகுதியுளது. இதனைக்கடவுள் சமானிய மாகியச்சர்வகதராக விளங்கினும் ஜீவர்களது இருதயகமல பந்தத்தினால் விசேஷமாகவிளங்கார். விளங்கினவர்கள் தான் ஞானிகளெனவும், மகாபுருஷர்களெனவும், அருள்வர்க்க மென்பதும் மரபாம். இதனை ஸ்ரீ தாயுமான ஸத்குருமூர்த்தி யமுதவாக்கால் "நிற்கு நன்னிலை நிற்கப் பெற்றாருள் வற்கமன்றிமனிதான்றேயையா துர்க்குணக்கடல் சோம்பன பாவியேற்கெக் குணங்கண்டென் பெயர் சொல்வதே" என்றுகூறியதும் ஸ்ரீ ஞானசம்பந்தாதிய மூர்த்திகள் வாக்குத்தமிழ்வேதமென நடைபெற்று வருவதும், வைணவ சிஷ்டர்களின்வாக்காகிய நாலாயிரப் பிரபந்தம் திராவிட வேதமென வழங்கப்பட்டுவருவதும், உபயவேதாந்தமென்றுநாளும்நடந்து வருவதும் இன்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்து வேதாரணிய க்ஷேத்திரம் வேதத்தினால் பூசிக்கப்பட்டு மூடியதாகவும், பின்பு இவர் பாடலைக்கேட்டுத்திறந்ததும், நாளதுவரை யாவரும் வெள்ளிடைமலைபோலறியக்கிடப்ப தொன்றும். இத்துணைக் கூறியவாற்றால் வேதம் அபௌருஷேய வாசகமென்றது தற்போதங் கெட்ட கண்டாநந்த மயமாகவிளங்கிய முத்தர் வாசகமாம். ஆகாய வாணியென்பது மிதற்கொப்பாம்.

"நாடாமுதனான்மறை நான்முகனாவிற்,
பாடாவிடைப்பாரதம் பகர்ந்தேன் — கூடாரை,
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேல்
மாறபின் வள்ளுவன் வாய தென்வாக்கு"

இதனை அசரீரி என்று ஓதிய திருவள்ளுவமாலை கவியாற்றெளிக.

ஆதவன்:—வேதம் அனாதி யென்றதின் அபிப்பிராயமும் தாங்களிசைக்க விரும்புகிறேன்.

பிரபோதன்:—சிவம் என்றும் நித்திய மாதலினாலும் "ஆபபிரம மென்றுளது, அன்றே யில்லாமாயையு முளது" என்றபடி அதனிடத்தபின்ன சொரூபமாக விருக்கும் இச்சாஞானக்கிரியாயாதி சக்திகளும் அனாதியாதலினாலும், அந்தசக்தியாகிய பாராதத்திலிருந்து வருவது பிறழ்தலின்றிய நித்தியசப்த மாகையாலும், அச்சத்திக்கு அழிவுபாடின்மையினாலும் அச்சத்தி யினின்று வந்தவேதமும் அனாதி யென்பதும் இச்சத்தி சிருட்டி ஆரம்பகாலத்திற் சீவர்களது கருமவசத்தினால் வெளிப்பட்டுப் பஞ்ச கிருத்திய காரணமாக இருப்பது போலவீற்றிலும் இச்சத்தினை வாசனை யென்னும் அதிசூக்ஷ்மரூபமாகத்தன்னகத்தடக்கிக்கொண்டு இருந்த இதுவேமறுகற்பத்தி (மறுசிருஷ்டி ஆரம்பத்தி) லும் முன் வெளிப்படுத்தியவாறு முறை பிறழ்தலின்றி யாவையும் வெளிப்படுத்துவதால் நித்தியசல கேவலம் பால அனாதி யென்பதும் இச்சத்திக்கும் ஆதாராதேய பாவலிவகாரத்துக்கு யேதுவாகச் சிவம் இருத்தலினால் ஈஸ்வரவாக்கிய மென்பதூஉமாம்.

ஆதவன்:—ஆயின் வேதம் ஒரு பாஷை யென்று சிலர் கூறக்கேட்டுளேன். அதின் விபரமும் அறியவிரும்புகிறேன்.

பிரபோதன்:—நீ கூறிய நெறியேற்கில் பலவேதமென்பதாகிவிடும். ஆதலால் ஒன்றை ஒன்று பாதிக்கமுயலும்போது பலஇடுக்கணடைய நேருமாதலால் எமதபிமதத்தினைக்கேள். கடவுள் எங்ஙனம் ஒன்றே, நித்தியமோ, அங்ஙனே வேதமும் ஒன்றேதான். காலதேசபாஷா வேறுபாட்டினால் பல்வேறு பாகுபாடுடையதாகக் காணப்படும். இது எங்ஙனமென்னில், ஆகாசாதிபஞ்சமகாபூதங்களும், சூரிய சந்திராதிகிரகங்களும், பிறவும் ஒரு தன்மையாக விருக்கவும், ஒவ்வொருமதத்தினரும் தமது கடவுள் இவ்விதம் படைத்ததென்று சிலவிகற்பம்சொல்லி உற்பத்திக்கிரமம் கூறியுள்ளார்கள். இதுபோலவே ஒவ்வொருமதத்தினரும் கூறுவர். இதனால் இம்மதவாதிகளைக் கேட்கவேண்டியதொன்றுண்டு. அதாவது, உம்முடையகடவுள் படைத்தபஞ்சபூதங்களுக்கு எல்லையினளவைக் கூறவேண்டுமென்று கேட்கில் இதுயாவுமென்பதன்றி வேறுசமாதானமின்றென்பர். இவ்விதமே பிறமதத்தினரும் கூறுவாராயின் ஒருபொருளையே அவரவர் வேறு வேறு சிறிதுபேதங்கற்பித்துக் கூறியதாக வேற்படும். முடிவில் ஒன்றென்று துணியப்பெறுமாறு வேதமும் சமஸ்கிருதவேதம், திராவிடவேதம், அரபுவேதம், கிரீக்வேதம், பாலிவேதம் (பாலிபாஷையி லியற்றியது) எனவரம்பின்றியாவும் வேதமாகி விடும். அதனால் புருஷார்த்த பாதகமேயன்றிச் சாதகமாகாது. ஆனதால் வேதம் என்பது ஞானசொரூபம் ஆம். அது, "சாவாது பிறவாது தனிமுதலாயிருந்தநான், ஆவாவிவ்வுலகுபடுமழிதுயர் தீர்ப்பதற்காக, மேவாது நின்றேயென் மாயையினால் மெய்யேபோ, லோவாது பிறந்திடுவேனுகந்தோறுயுகந்தோறும்" என்னும் கீதாவசனப்படிக்கிக் காலதேசபாஷை வேற்றுமைக்குத்தக்கவாறு அத்தினின்றும் வெளிப்பட்டுச் சீவர்களுக்கு இன்பசாதனமாக இருக்கின்றதென்பதுவே ஒருதலையாம்.

இன்னும் அரசன் பிரஜைகளைக்காத்து இன்பஞ்செய்வான் சட்டமேற் படுத்துவது பலபாஷைவடிவமும் அவன் அபிப்பிராயம் ஒன்றேஎன்பது போலுமாம்.

ஆதவன்:—அங்ஙனமாயின் அரசனுக்குரியது ஒருபாஷையாவது போலக்கடவுளுக்கும் ஒருபாஷைதானேயாகும். அப்படியானால் அது எதுவே அதனையுமறிய விரும்புகின்றேன்.

பிரபோதன்:—ஜீவர்கள் வர்க்கத்தில்பெரும் புண்ணியமுடையவன் அரசனல்லது கடவுளல்ல. அவனும்ஜீவனே. ஆனதால் ஒருபாஷை யுடையவனாகும். அதிலும் சிற்சில புருஷர்கள் பலபாஷைவல்லுனராகவும் காண்பதும் உண்மை. அதுபோலக் கடவுளும் ஒருபாஷையுடையவ ரன்று; ஏனெனின், கடவுளுக்குச் சர்வக்ஞரென்பதும் கூறப்பட்டுள்ளது. ஆனதுபற்றிக்கடவுள் சர்வபாஷையிலும் வல்லவனென்றுணர்க. இன்னும் கடவுளது ஞானம், அருள், சம்மதம், அபிப்பிராயம் ஒன்றென்பதும் பலமதபலபாஷையிலும் எழுந்தவேதாதிகலைகளும் ஒரு முடிபினையுடையதென்பது தோன்றபிரமகீதை "இதுவே முடிந்த நிலமெல்லா தர்க்கங்களுக்கும் காக்ஷியேமுதலாம், பிரமாணங்களுக்கும் மொழியும் வேதாந்தங்களுக்கும், ஐயன்சைவாகமங்கட்கும், அரியாகமங்கட்கும் எனது பொய்யின்றிய ஆகமத்துக்கும், புத்தாகமங்கட்கும், அருகன்செய்யுமாகமங்கட்கும், சித்தரியக்கர், கந்தருவர் உய்யும்பரிசு மற்றுள்ளோ ருரைத்தவாகமங்கட்கும் இதுவேமுடிந்த நிலம்" எனப் பூட்டுவிற் பொருள்கோடலாகக் கூறியுள்ளதும் காண்க. பூட்டுவிற் பொருளென்றது முதலுங்கடையுமொத்து முடிவதாம்.

ஆதவன்:—அங்ஙனமாயின், சிலர்வேதம் நான்கு எனவும், சிலர்மூன்று எனவும், சிலர்ஐந்து எனவும் கூறுமாறென்?

பிரபோதன்:—வேதமாவது ஒன்றே. அதனை யார் யார் எவ்விதமாக வுணர்ந்தனரோ அங்ஙனே வெளியிட்டிருக்கின்றனர். அங்ஙனம் சங்கியைக்குறிக்கில் எண்ணிறந்தவேதமென்பதாகும். இதனானே ஸ்ரீ வியாசபகவான் வேதமாகிய பருப்பதத்தினின்றும் நான்குமுஷ்டியெடுத்துப் பிரித்துவைத்ததாகவும் மெழுதப்பட்டுளது. கடவுளையெப்படிப்புருஷனது அறிவால் அறியவியலாதோ, அப்படியே வேதத்தினையும் அறியவியலாதென்றுணர்க. இதனானே நாரதர், ஜனத்குமாரரிடம் சென்றுவணங்கி நான்கு புருஷாயுஸாகவேதம் ஓதியும் முடியுமாறில்லையாதலின் தாங்கள் கிருபை செய்துபுகலவேண்டுமென்றுகேட்க அதற்கவர் வேதமறிவது முடிவுறாது. அதன் முடிபொருளையறிந்துஉபசாந்தமெய்துவாய் என்று விடைபகர்ந்ததாகவுஞ்சரிதமுளது. இதனால் வேதம் என்றும் மாறாதன்மைத்தும், அழியாதன்மைத்தும், ஞானமயமாகவும் முமுக்ஷு புருஷனாற் சற்குருவாயிலாகக் கேட்கப்படுவது என்பதும் முடிந்தபொருளாம். இதுகாறும்கூறிவந்ததிற் பலவையப்பாடுற்று வினவற்கு மனமெழுமாயினும் சாந்தமுடனின்பவடைவின் வேட்கையாலும், எம்பாலுள்ள பூஜிதபுத்தியாலும், சாரக்கிராகிய திருஷ்டி யுடையவனாகவே சொற்பேதங்களையொழித்துப்பொருள்ஒற்றுமை நயத்தினையுணர்ந்து மின்பவாழ்வினை யணுகல் முக்கியகடனாம்.

ஆதவன்:—சாரக்கிராகிய திருஷ்டியாவதெத்தன்மைத்து?

பிரபோதன்:—ஒருவன்வசனமாற்றாலும், செயல்வேறு பாட்டாலும் வெறுப்படையாது பயனையுணர்ந்து ஆனந்தமடைதலாம். அதாவது, பிதாபுத்திரன் படித்தலின்காரணமாக அடித்தல் வைதலாதியாற் சலிப்படையாது அறிவின்பொலிவினையறிந்து நன்றிகொள்வது ஒருவன் நோய் நீங்கிச்சுகமடையுமாறு வபனவிசர்ச்சனமாகுமாறுசெய்யுந் தந்திரமுணர்ந்து பகைகொள்ளாது முடிவில் சுகமடை தலைக்கண்டு மின்பமடைதல் போலுமென்று எமது வசனத்திலும் பிறர்யார் கூறுவதிலும் சாரங்கொண்டின்புறல் சான்றோர்க்கழகாம்.

தொடரும்.

**போதுநன்மையை விரும்பும் ஓர் சாது.**

## ஆகார நியமம்.

ஜிவ ராசிகள் தத்தமது தேக யாத்திரையை நிராடங்கமாக நடைபெறச் செய்வதற்கு இன்றியமையாதது ஆகாரம் அல்லது உணவுப்பொருளாம். இவ்வாகாரம் அந்தந்த ஜீவவர்க்கங்களின் தேகக்கூற்றுக்கேற்றவாறு பல்வகைத்தாகப் படைக்கப்பட்டிருக்கின்றது. மக்கள்வகுப்பை எடுத்துக்கொள்வோம்; மக்களுடைய தேகங்களு

க்குச் சாதாரணமாய் நேரக்கூடிய வியாதி மூன்று வகைப்படும். அவை வாதப்பகுதி, பித்தப்பகுதி, சிலேட்டுமப்பகுதி என்பனவாம். இப்பகுதிகள் மூன்றினுக்கும் ஆதாரமாய் நிற்பவை பூர்வகன்மமும், விதிவிலக்கையுபேக்ஷித்துத் தேடிக்கொள்ளும் வினையுமென்பர். பூர்வ கன்மத்தால் நேரக்கூடிய வியாதிகட்குப் பரிகாரம்சித்திப்பது அக்கன்மநிவாரணம் கைகூடியபோதேயாகலின் அதைவிடுத்து மற்றொருஹேதுவால் வரக்கூடியநோய்களின் விமோசனத்திற்கு ஆதாரமாகிய ஆகாரநியமத்தையே நாம்கவனித்தல் வேண்டும். முத்திறப்பயனையும் அதாவது இம்மை, மறுமை, வீடுபேறுகளைப் பெறுதற்குச் சாதனமானது இம்மனிததேகமொன்றே. அத்தகையசரீரத்தை, அதனாலாகவேண்டிய பிரயோசனத்தையடையு மட்டும், நன்னிலையில்வைத்துவருவது, அதுபெற்றுள்ளா ரொவ்வொருவருக்கும் தீர்ந்தகடனன்றோ? ஆகவே, அதன் சுகாதாரநிலைமைக்கு அத்தியாவசியமானவை ஆகாரநியமமும் தொழிற்றிறனுமென்பர் அறிவுடையோர். அதாவது ஒருவன் தேகப்பகுதிக்கு உணவும் செயலும் ஒத்த அளவில் நிற்குமாயின், அதுவே அவனுக்குச் சுகநிலையளிக்குமென்பர். சரீர சுபாவத்திற்கு உணவானது சுவையாலும், வீரியத்தாலும், அளவாலும் பொருந்துவதாகும்; செயல் அல்லது மனம், வாக்குகாயங்களால் நடைபெறும் தொழில்களானவை அந்த திரிகரணங்களும் வருந்தாவாறு நடைபெறுதலாம்.

“சகலமான பெயர்களுக்கும் பிரியமான ஆகாரம் மூவகைப்படும்”. அவை சத்துவாகாரம், ராஜஸாகாரம், தாமஸாகாரம் என்பவையே. “ஆயுள், உற்சாகம், பலம், ஆரோக்கியம், சுகம், பிரீதி ஆகியவற்றைவிருத்தி செய்கின்றனவாயும், ரசமுள்ளனவாயும், தைலம் (தேகத்தில் ரக்த மாம்ஸ ரூபமாகஸ்திரமாய்) உள்ளனவாயும், மனத்திற்கின்ப முள்ளனவாயும் உள்ள ஆகாரங்கள் சாத்துவிகர்களுக்குப் பிரியமானவை” என்றும்,

“அதிகக்கசப்பு, புளிப்பு, உப்பு, சூடு, காரம், பசியின்மை, தாகமுண்டுசெய்தல் ஆகியனவும், துக்கம், ரோகம், சோகம் என்பனவற்றைக் கொடுப்பனவுமாகிய ஆகாரங்கள் ராஜஸ சுபாவமானவருக் கிஷ்டமானவை” என்றும்,

“(பாகஞ்செய்து) ஒரு ஜாமநேரஞ்சென்றதாயும், சாரமற்றுப் போனதாயும், துர்வாசமுள்ளதாயும், (பாகஞ்செய்து) ஒரு ராத்திரி வைத்திருந்ததாயும், (குரு முதலியோரன்றிப்பிறர்) உண்டமிகுந்ததாயும், அசுத்தமானதாயுமிருக்கின்ற ஆகாரம் யாதோ, அது தாமசருக்குப் பிரியமானது” என்றும் சாக்ஷாத்கண்ணனெம் பெருமான் கீதையில் சாதித்துளன். தேசிகப்பிரபந்தம் பின்வருமாறு கூறுகின்றது.—

“ஆகாரத்து இருவகையால் நன்றும் தீதும் அருமறைகொண்டு எதிராசர் இவை மொழிந்தார், ஆகாதவழிவிலக்கி ஆக்குங் கண்ணன் அனைத்துலகம்வாழஇது சாற்றி வைத்தான், போகாது போக்குவிக்கும் முனிவர்சொன்ன பொய்யாத மொழிகளையும் பொருந்தக்கேண்மின், ஆகாதென்று இவைதவிர்ந்தாம்அதுவேகொண்ட * அசகரனும் ஆகம்காத்து அருள்பெற்றானே.”

* ஒருரிஷி. சிறந்ததருமத்தைப் பிரகலாதாழ்வானுக்குப் போதித்தவர்.

(தொடரும்)

ம. இராஜகோபால பிள்ளை.



## பத்திரிகை லட்சணம்.

கல்வித்திறமை சாந்தம், பொறை, அடக்கம், நடுநிலைமை முதலிய நற்குணங்கள் அமையப்பெற்ற வித்வான்களால், தேசாசாரம், மதாசாரம், மன்னர்நீதி, மன்னர்க்கறிவிக்கவேண்டிய மாந்தர்குறைகள், சுதேச பலதேச வர்த்தமானங்கள், மற்றும் பல ஆச்சரியகரமான சம்பவங்கள் முதலியவற்றை பலர்க்கும் பயன்படுமாறு வெளியிடுவது பத்திரிகையாம். அப்பத்திரிகை ஜனசமூகத்தின் க்ஷேமத்தைக்கருதியே எங்கும் பரவ அனுப்பப்படுகிறது. அதைக்கண்ணுறும் கனவான்கள் அப்பத்திரிகைகளின் நோக்கங்கள் தம் கருத்திற்கிணங்கியதாயிருப்பின் அவைகளை ஆதரிக்க முன்வருகிறார்கள். பிறகு அப்பத்திரிகைகள் விளக்கமுற்று நன்கு நடந்துவர பத்திராதிபர் எழுதுபவையன்றி சந்தாதார்களோ, மற்றுமுள்ள அபிமானிகளோ பொது நன்மையை முக்கிய நோக்கமாய்க் கொண்டு எழுதும் வியாசங்களையோ, பல் வேறுவிஷயங்களையோ பத்திரிகையில் பிரசுரிக்க அனுப்புகிறார்கள். அவைகளை அவ்வாசிரியர் பார்வையிட்டு பிரசுரிக்கத்தகுதியுடையதெனின் வெளியிடுவார். இன்றேல் தம் இஷ்டமின்மையை பத்திரிகை வாயிலாக எழுதி வரைந்தவர்க்கு குறிப்பாகத் தெரிவிப்பார். கிடைக்கும்வியாசங்கள் அனைத்தையும் வெளியிட வேண்டுமென்னும் கட்டாயமில்லை. குரோதமானவிஷயங்களையும் தூஷணை சம்பந்தமானவைகளையும் பிரசுரிப்பதால் பத்திரிகையின் ஆதிக்கத்துக்கு குறைவு நேரினும் நேரலாம். ஆனால் விஷபதானிகளின் அபிப்பிராயத்திற்கு தாம் உத்தரவாதி யல்லவென்றுசொல்லிக் கொள்ளின் ஒருவர் ஒரு விஷயத்தைக் குறித்தெழுதுங்கால் சிறிது தவறியிருப்பின் ஆங்கு ஒத்துக்கொள்ளற் பாலதாம். ஆகையால் எப்பத்திராதிபரும் தம்பத்திரிகை எங்கும்உலாவிச்செல்ல விரும்புவரேல் தம் பத்திரிகையில் வரும் பெருமையையும் சிறுமையையும் நன்கு கவனித்தல் முறையேயாம்.

நம் தமிழ்நாட்டில் நம் குலத்தவர்களால் சில பல பத்திரிகைகள் நடைபெறுவது நன்றன்று என்று பலர் நினைக்கலாம். அது சரியான அபிப்பிராய மல்லவென எனக்குத் தோன்றுகிறது இவ்விந்தியாவைவிட மிகச் சிறியதாகிய இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஜனத்தொகை மிக்க குறைவாயிருந்தாலும் தினசரிப்பத்திரிகைகள், வாரப்பத்திரிகைகள், மாதப்பத்திரிகைகள் பதின்மடங்கு மிகுதியாய் நடைபெறுகின்றன. நம்தேசத்தில் குறைவாயிருப்பதற்குக் காரணமென்னவென்று ஊன்றிபார்க்கு மிடத்து ஜனங்களில் பெரும்பாலார் கல்வியில்லாதவர்களா யிருப்பதும் அயல் தேசத்தாரது நாகரீக நடவடிக்கைகளை அறிந்துகொள்ளாம விருப்பது மெனவெளியாகிறது. அமெரிக்காகண்டத்து ஐக்கியமாகாணங்களில் தினசரி பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கு கணக்கில்லையாம். அங்கு கூலிவேலைசெய்து சம்பாதிப்பவர்கள் கூட தினப்பத்திரிகைகளை வாங்கி வாசிப்பார்களாம். இதனால் அங்குள்ள மிக ஏழை ஜனங்கள்கூட படித்திருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

தமிழ்வழங்கும் பாகத்தைக்கவனிக்கின் இங்கு பிரசுரமாகும் தினசரிப்பத்திரிகைகள் மிக அற்பமாகவும், வாரப்பத்திரிகைகள் சொற்பமாகவும், மாதப்பத்திரிகைகள் சிறிது அதிகமாகவும் இருக்கின்றன. மற்ற தேசத்தோடொப்பிட்டுப்பார்க்கின் அநேக தினசரிப்பத்திரிகைகளும், வாரப்பத்திரிகைகளும் நடத்தப்பட வேண்டும். அதிலும் விஶ்வகர்ம குலத்தவர்களால் இன்னும் பல பத்திரிகைகள் நடத்தப்பட்டால் நமது தேசமே க்ஷேமப்படுமென்பதற்கு ஐயமில்லை. இப்பொழுது நடைபெற்றுவரும் சில பத்திரிகைகளேனும் கிரம

மாகநடைபெற்றால் நமது குலத்தின் முன்னேற்றத்திற்கு அனுகூலமாகலாம். அவைகளின்புகழ் எங்கும் மணக்கும். நம்மவர்களில் கல்வி யறிவுள்ளவர்கள் அதிகமில்லாவிடினும் அவர்கட்குள் பத்திரிகைகளை நடத்த சிலர் முன்வந்ததற்கு நாம் களிப்புடன் நன்றிபாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

“விஸ்வகர்மகுலோபகாரி” என்ற நாமம் பூண்ட இப்பத்திரிகை சென்னையி லுதித்து நம் குலத்திற்கு மாத்திரமன்றி உலகுக்கே உபகாரார்த்தமாக வெளிவந்ததெனக்கொள்வதே உசிதமாகத்தோன்றுகிறது. இதுவரை வெளிவந்த சஞ்சிகைகளில் இகலோகசாதனங்களுக் கவசியமானவைகளும் பாரமார்த்திகசம்பந்தமானவைகளும் அடங்கியிருக்கின்றன. அதன் ஆசிரியர், அதிபர் ஆகிய இருவரின் ஊக்கத்தை இங்கெடுத்தெழுதின் விரியும். இப்பத்திரிகையினால்வரும் ஊதியம்பாடசாலைக்குபயோகப் படுத்துவதாய்த் தெரிகிறது.

இப்பாடசாலை முதலிய குலநலத்தை உத்தேசித்தே இப்பத்திரிகையின் வருட சந்தா ரூபா 3-ஆக ஏற்படுத்தி யிருப்பதாகத் தெரிகிறது.

இப்பத்திரிகை மாதம் இருமுறை பிரசுரிக்கப்பட்டால் அப்பாடசாலைக்கு வருமானம் அதிகரித்து அதன்வழியாய் கல்வி விருப்ப முடையோர்க்கு உதவிபுரியவுங் கூடும். ஆகையால் சந்தாநேயர்களும் மற்றுள்ள அபிமானிகளும் நன்நோக்கத்துடன் உழைத்துவருவார்களாக.

S. ஆனையப்பாச்சாரி.

---

## தெய்வமிகழேல்.

நம்மனோருள் பலர் மதாபிமானத்தின் மிகுப்பாட்டால் உமது தெய்வம் சிறியது எமது தெய்வம் பெரியது என்று பிறர் மனம் நோவப்பேசி மதச் சண்டையிட்டு வருவது உலகறிந்த விஷயமன்றோ? தெய்வம்பலவன்று; ஒன்றே; அதுபக்தர்களின் சங்கற்பத்திற்கேற்றவாறு பல்வகைத் திருவுருவங்கொண்டு அவர்களுக் கனுக்கிரகஞ் செய்கின்றதென்பதை உணர்ந்து எம் மதத்தையும் நிந்தியாதொழுகுகின்றவர் மிகச் சிலரேயாவர். அவர் தாம் தெய்வத்தின் அருளுக்குப் பாத்திராதற் குரியவராவர். தெய்வம் எவர்க்கும் பொதுவாயிருபது; எங்கும் வியாபகமாயிருப்பது; முற்றறிவுடையது; தவறுசெய்பவரைத் தவறாது தண்டிப்பதுஎன்று செவ்வையாக நல்லோர் வாயிலாக வுணர்ந்து பழிபாவங்களுக் கஞ்சித் தீவினைகளைச் செய்வதுபற்றிச் சொப்பனத்தும் நினையாதிருக்கும் பாக்கியம் எவர்க்குச் சித்தியாகின்றதோ அவர் தாம் எமதுதெய்வம்பெரியது, உமது தெய்வம் சிறியது என்று தெய்வ நிந்தனை செய்யாது வாழ்தற்குரியவராவர்.

தெய்வம் உலகத்தைப் படைப்பதுபற்றிப் பிரமாவென்றும், காப்பதுபற்றி விஷ்ணுவென்றும், அழிப்பதுபற்றி உருத்திரனென்றும் ஆன்றோர்களால் சொல்லப்படுகின்றது; அஃது உலகத்தில் பாவமதிகரித்துப் புண்ணியங் குறைகின்றபோது காலதேச நிமித்தங்கட்கேற்றவாறு அவதாரங்களை யெடுத்துவந்து துஷ்டநிக்கிரகமும் சிஷ்டபரிபாலனமுஞ் செய்கின்றது; இவ்வாறாய அவதாரங் கொள்ளுகின்றபோது அஃது இராமன் கிருஷ்ணனென்றற்றொடக்கத்துத் திருநாமங்களைப் பெறுகின்றது; தெய்வம் உண்மையில் ஒரு நாமமும் ஒரு ரூபமு மில்லாதிருந்தும், நம்மனோரை யனுக்கிரகித்தற் பொருட்டுப் பலவகையாய ரூபத்தையும் பலவகையாய நாமத்தையு மேற்றுக்கொண்டு, நாமரூபமுடையது போல விளங்கி வருகின்றது; இவ்வவதாரங்கள் காலதேச நிமித்தங்கட்கேற்றவாறு பலவேறு திறத்தனவாக நிகழுகின்றன வென்றுணர்ந்தவர் மதாபிமானத்தின்மிகுதிப்பாட்டால் தெய்வநிந்தனை செய்வது ஒருபோது மில்லையாம்.

மதாபிமான மிருக்கவேண்டிய தவசியமே; ஆனால் அதுகாரணமாகப் பிறர் வழிபடும் தெய்வத்தைப் பழிப்பது ஒருவாற்றானும் தகுதியுடையதன்றாம். தெய்வம் ஒன்றாகவே யிருத்தலின், மதவாதிகள் வழிபடும் தெய்வம் பலவாதல் கூடுமோ? தம்மதமீதுள்ள அபிமானங் காரணமாகப் பிறர் மதத்துத் தெய்வங்களைப் பழிப்பவர் உண்மையில் தாம் வழிபடும் தெய்வத்தையே பழிப்பவராவர் என்பதற்குத் தடையாதுளது? வைகுண்டத்திலோ கைலாயத்திலோ வேறெவ்விடத்திலோ உத்தரவுச் சீட்டுப் பெற்றுவந்தவர் போன்று நின்று வைஷ்ணவருள் சிலர் சைவரைப் பழிப்பதும், சைவருள்சிலர் வைஷ்ணவரைப் பழிப்பதும், கிறிஸ்தவர்களுள் சிலர் அவ்விருவரையும் பழிப்பதும், அவ்விருவரும் கிறிஸ்தவரைப் பழிப்பதும், ஏனைய மதவாதிகளுள் சிற்சிலர் இவ்வாறே செய்வதும், தெய்வத்தின் சொரூபத்தையும் அதனிலக்கணங்களையும் அறியாமையேயாம். தெய்வத்தின் சொரூபம் சச்சிதாநந்த வடிவமாம்; அதனிலக்கணம் எல்லாமறிதல் முதலியனவா மென்று சாஸ்திரங் கூறியவா றுணர்ந்து, உணர்ந்தவா றொழுகுவது நம்மனோருள் மிகவரிதாயிருக்கின்றது. தெய்வத்தை யிகழ்வது காரணமாக அளவற்ற தீமைகளுண்டாகின்றன வென்று நம்மனோ ருணர்வாராயின், தெய்வநிந்தனை செய்து பழிபாவங்களுக் காளாதல் ஒருவாற்றானு மில்லையாம்.

தமது தெய்வத்தை வழிபடுவது பிறரது தெய்வத்தைப் பழிப்பதனால் முற்றுப் பெறுவதாமோ? தெய்வநிந்தனை செய்பவர் மனம் எப்போதும் காற்றிலகப் பட்டுச் சுழலுஞ் சருகுபோலச் சுழலுவதாக விருத்தலின், அவர் தமது தெய்வத்தையுள்ளவாறு தியானிப்பது ஒருபோதுமில்லையாம். பிராணிவர்க்கங்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையால் நம்மனோர்க்குப் பயன்படுவதாக விருத்தலின், அவற்றுள் எதனையேனும் பழிப்பது கூடுமோ? பழிப்பவர் அறிவுடையவராவரோ? பிராணிவர்க்கங்களுள்ளேயே, எதனையும் பழிப்பது கூடாதாயின், எல்லாம் வல்ல தெய்வத்தைப் பழிப்பது தகுதியுடையதாமோ? தெய்வம் பக்தர் விரும்பியவாறு வடிவங்கொண்டு வந்து, அவர்களுக்கனுக்கிரகஞ் செய்கின்றது; எவர் வணங்கும் தெய்வமும் ஒன்றே என்றுணர்ந்து, தெய்வநிந்தனை செய்யாது வாழ்வதே ஒருவர்க்குச்சிறந்தவாழ்வாம். தெய்வம் உயிர்களுக்கு ஒவ்வொரு நிமிடத்திலுமுபகாரமே செய்கின்றது; அதனை மதாபிமானங் காரணமாக வேற்றுமைப்பட்டுப் பழிப்பது இம்மைக்கே யன்றி மறுமைக்கும் தீமையைப் பயப்பதாமென்றுணர்ந்து, எவர் மதத் தெய்வத்தையும் பழியாது தெய்வத்தின் கருணை யொன்றையே நோக்கி யொழுகுபவர் எவ்வாற்றானும் நன்மையையே பெறுவரென்பது திண்ணமாம்.

மன்னொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிக ளெல்லா மொருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ண லுமவ்வண்ண மாகிநின் றானே.

என்று திருமந்திரங் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

கோ. வடிவேலு செட்டியார்.

---

## பல குறிப்புகள்.

நமது விஸ்வகர்ம குலோபகாரி, அதிதீவிரபக்குவியாய், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர்ப் பருவங்களனைத்தையும் செவ்விதின் கடந்து, நம்குலத்தினர் மனதில் திருஊசலாடும் பருவத்தைப் பெற்றிலங்குவதை நேயர்களனைவரும் ஒப்புவார்கள்.

* * *

நம் பத்திரிகையின் நன்னோக்கத்தை வியந்து நாம்கேளாமலே தம் சந்தா தொகைகளை முன்பணமாக அனுப்பி உதவிய குலசீலர்கட்கும், சந்தாதாரர்களை முன்னிலும் அதிகமாகச் சேர்த்துக்கொடுத்த புண்ணியபுருடர்களுக்கும் வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

* * *

முன் சஞ்சிகையில் தெரிவித்தபடி பத்திரிகை, பாடசாலை முதலிய ஜாதீய முன்னேற்றங்கட்கு பொருளின்றி யமையாததால், அதனை நம் குலாபிமானிகள் கொடுத்துதவுவார்களெனமுற்றும் நம்புகிறோம். பத்திரிகைகளின் சந்தா பாக்கிகளை உடனுக்குடன் அனுப்பி ஆதரிக்கவும்வேண்டுகிறோம். வி.பி. மார்க்கமாக பத்திரிகையை அனுப்பி சந்தாவை வசூலிப்பதில் வீண் பண நஷ்டமும், மனக்கஷ்டமும், நேருவதால் அவ்வழியை அநுசரிக்க அஞ்சுகிறோம். இக்குறிப்பை நம் நேயர்கள் கருத்திலிருத்துவார்களாக.

* * *

ஜாதிப்பித்தம் தலைக்கேறி அன்னியர் தூஷணம், தற்புகழ்ச்சி முதலியபிராந்தி கொண்டு விளங்கும் நம்குலத்தினர்க்கு மேன்மேலும், அவ்விதபித்தை வளர்க்காவண்ணம், நம்குலோபகாரியில் பொது அறிவை தீட்டக்கூடியபல வியாசங்களையும், ஜாதீயபொது விஷயங்களையும் ஹிதவசனமாக எழுதிவருவதைநேயர்களறிவார்கள். ஆரம்பமுதல் முடிவுவரையில் ஜாதீயவிஷயங்களையும், அருவெறுப்பான தூஷணமொழிகளையும் பத்திரிகையில் பரப்புவதால் நம்குலத்தினர் காதுகள்மேன்மேலும் செவிடுபடுமேயன்றி, அவர்களை நல்லவழி படுத்தாதென்பது நம்தேற்றம்.

* * *

பொதுஞானக்கல்வியைஎத்துணைசீக்கிரத்தில் நம்மவர்கள் அடைகிறார்களோ அத்துணைசீக்கிரத்தில் குலதர்மங்களை உணரக்கூடிய நிலைமையைப் பெறுவார்கள். இதனால் நாளடைவில் குலத்தில் ஒற்றுமைப் பெருக்கமும், ஜாதீயமுன்னேற்றமும் பலவழியிலும் சித்திக்குமென்பது திண்ணம்.

* * *

பொதுஞானக்கல்வியைப் போதிக்கமுன்வருவோர், ஆன்றோர்பாடல்களை பன்முறைகூறாமலும், பல புத்தகங்களிலுள்ளவைகளைப் பெயர்த்தெழுதிகளிக்காமலும், தம்கருத்திலெழுகின்ற விஷயங்களை மட்டும்புஷ்டியுடனமைத்து, சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் கடனென மேலோர் புகன்றதை யாமும் விஷயதானிகட்கு விநயமாய் ஞாபகமூட்டுகிறோம்.

* * *

நம் குலோபகாரியில் வெளியிட்ட பல வியாசங்களை கௌரவம்வாய்ந்த பல பத்திரிகைகளில் பெயர்த்தெழுதி நம்பத்திரிகையையும், விஷயதானிகளையும் களிப்புறச்செய்கின்றார்கள். இதனையாம் இங்கு முக்கியமாய்க்குறிப்பிட்டகருத்தை நம் நேயர்களுணர்வார்களாக.

* * *

சென்னையில் கூடிய சீக்கிரத்தில் ஓர் பெருத்த பொருட்காட்சியொன்று நடத்தப்படுமென்று சொல்லப்படுகிறது. இதற்கு ஓர் அமெரிக்கா தனவான் ஐந்துலட்சம் ரூபாய் அளிக்க முன்வந்திருப்பதாகவும் அதனைப்பெற்று அப்பொருட் காட்சியை நிறைவேற்ற விஸ்தாரமான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் சமாச்சாரமெட்டுகிறது. நம் குலத்தவர்களின் கைத்தொழிலின் உன்னதத்தை உணர்த்த இது தக்க சமயமல்லவா? ஆகையால்இப்பொழுதே என்ன வேலையைச் செய்தனுப்பினால் பரிசுபெறலாமென்பதைத் தீரயோசித்து அவ்வேலைகளைச் சாவதானமாகச்செய்து முடித்து அப்பொருட் காட்சிக்கு அனுப்புவது நலம். இப்பொருட்காட்சி நடவாவிட்டாலும், பரிசுபெறக்கூடிய பொ



ருட்காட்சிகள் இன்னும் எத்தனையோவிருக்கின்றன. இதனைப்பற்றி விரிவாய் இனி பேசுவோம்.

* * *

நம் குலோற்பவர்கள் தங்கள் ஊர்களில் பிரதமக்கல்வியை போதிக்கும் பாடசாலைகளைமட்டுமேனும் இப்பொழுது ஆங்காங்கு ஸ்தாபிப்பது நலம். இராப்பள்ளிக்கூடங்கள் பகல்பள்ளிகூடங்களைப்போல் அவ்வளவுபலன்தரக்கூடியவைகளல்ல. நம்ஜாதியர்களுள் மற்றவிஷயங்களில் கட்சிகளிருந்தாலும் தங்கள் குழந்தைகளின் முகத்தைப் பார்த்தாகிலும் கட்சிபேதத்தை மறந்து அவர்கள் கல்வி விஷயத்தில் ஊக்கம் காட்டலாகாதா? குலாபிமானிகளே! இதனைசற்று சிந்தியுங்கள். நம்மை நாமே கெடுத்துக் கொள்வதற்கு பந்தயம் போடுவது தர்மமா?

* * *

நம்குலத்தை உத்தாரணம் செய்வதென்றால், மேலெழுந்த வாரியாக நுனிப்பில் மேயலாகாது. ஜாதி முன்னேற்றத்தைத் தடைசெய்கிறபடு வித்தொன்றிருக்கிறது. அதனைத் தேடிப்பிடித்து முற்றுங்களையமுயலவேண்டும். அவ்வித்து இன்னதென்றும், அதனை எப்படிகளைவதென்றும் விளக்கி எழுதப்படும், வியாசங்களைச் சீர்தூக்கி முதலிருவியாசங்களுக்கு ஓர் நன்கொடையளிக்கஎண்ணம்கொண்டிருக்கிறோம். இதனை விஷயதானிகள் தயைசெய்து குறித்துக்கொள்வார்களாக. வியாசங்கள் நாளது எப்பிரல்மீ 5உக்குள் அனுப்பப்படவேண்டும்.

* * *

நம்குலச்செல்வர்கள் காளியம்மனையும், காமாட்சியம்மையையும் தாம்வழிபடு கடவுளெனமதித்து இரண்டுதேவதைகளையும் ஒன்றுபடுத்திச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். காளியம்மன் சுத்ததேவதையல்லவே. இதுஎப்படி ஆரியதேவதையாயிற்று? ஸ்ரீகாமாட்சியம்மனுக்கும், காளிகாம்பாளுக்கும், சிற்பரீதியாக வித்தியாசமில்லையா? இதனைஉணர்ந்தோர் பத்திரிகை வாயிலாய் உணர்த்துவார்களாக.

* * *

நமது வேதாத்தியயன பாடசாலைச்சிறுவர்கள் இச்சென்னையில் நடைபெறும்நம்மவர் விவாகமஹோற்சவங்களில் கோரப்பட்டவர்களாய் மந்திரம், பஞ்சாதிமுதலியவைகள்கூறி தக்க பரிசுபெற்று வருவதைக்கேட்டு நம்குலநலப்பிரியர்கள் அகமகிழ்வார்களென நம்புகிறோம்.

* * *

இச்சென்னையில் நடைபெற்றுவரும் விவாகாதிசுப காரியங்களில், நம்பாடசாலைக்கு ஓர் பலதானம்கொடுக்கும் வழக்கத்தை மேற்கொண்டு விட்டார்கள். வெளியூர்வாசிகளான நம் குலாபிமானிகளும் தங்களூரில்இவ்வழக்கத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால்,நம்குலமுன்னேற்ற விஷயங்கள் சீக்கிரம்கைகூடுமல்லவா? "பொருளிலார்க்கிவ்வுலகமில்லை" என்பதை உணராதார்யாரே! இதனைவெளியூர் நண்பர்கள்கவனித்து வசூலிக்கும் மார்க்கத்தைத் தேடுவார்களாக.

* * *

நமது குலோற்பவர்களுடைய கைத்தொழில்களின் பூர்வ, தற்காலநிலைமைகளை விளக்கிக்காட்டி காலமறிந்துஎழுத ஆரம்பித்திருக்கிறோம். இதனை நேயர்கள் பன்முறையும்படித்து விஷயங்களைமுற்றும் உணர்ந்து அதன்படிநிற்பார்களென்று நம்புகிறோம்.

* * *

நமதுபாடசாலையில் பிரதிஆதிவாரம் பிற்பகல் 4-மணிக்குமேல் ஜாதீய உபந்நியாசங்களும், மற்றபொது உபந்நியாசங்களும், அருங்கலா விற்பனர்களைக் கொண்டு நடத்தப்பட்டுவருகிறதை நம்நேயர்கள் முன்னரே அறிவார்கள். உபந்நியாசங்களின் விபரங்களை இனிதொகுத்து எழுதுவோம்.

* * *

## விவசாயக் கொத்து.

வெள்ளரிப்பயிர்:—இரங்கூனுக்கு 7மைல்தூரத்திலுள்ள ஜீயோகான் என்னும் ஊரில் வெள்ளரி ஏராளமாகப் பயிரிடப்படுகின்றது. இக்காய்கள் நம்நாட்டில் உற்பத்தியாகிற கக்கரிக்காய்களுக்கும், வெள்ளரிக்காய்களுக்கும் மத்தியதரமாக யிருக்கின்றன. பார்வைக்கு வெகு அழகாயிருப்பதோடும் 4பவுன் முதல் 10பவுன் வரையில் இடை யுள்ளவைகளா யிருக்கின்றன. ஒரு காயின்விலை காலணாமுதல் ஒன்றரை அணா வரையிலிருக்கிறது. இவைகளைப் பயிரிடுவோர்பெரும்பான்மை பர்மியர்களே. இப்பயிர் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு அம்மாத முடிவில் அறுவடையாகிறது. ஜூலை மாதத்தில் இப்பூமிகளைக் கொத்தி நெற் பயிரிட ஆரம்பித்து விடுகிறார்கள். நமது நாட்டில் இவ்வளவு சீக்கிரத்தில் வெள்ளரிப் பயிர் பலன் தருகிறதா? இல்லையே ஏன்? பூமிவளம் என்று சொல்வது வீண். நாம் நமது பாட்டன்முதலியோர் கையாடி வந்த முறைகளையே நாம் எந்தத்தொழிலிலும் பின்பற்றிவருகிறோம். உலகம்மிகவிஸ்தாரமானதென்றும் ஆங்காங்கு நடக்தும் பயிர்த்தொழில்கள் இன்னின்ன விதமாக நடத்தப்பட்டு வருகிறதென்றும், ஆராய்ந்தறிந்து அவ்வழிகளைப் பின்பற்ற வேண்டுமென்கிற உணர்ச்சி நமக்கு உண்டாகிறதில்லை. ஆனதுபற்றியே நமது தொழில்கள் விர்த்தியாவதில்லை. வெள்ளரிப் பயிரிடும் தந்திரத்தை கீழேகுறிப்பிடுகிறோம். நமது நாட்டார் இவ்வழியில் கவனம் செலுத்தி தம் அநுபவத்தை வெளியிடுவார்களாக. முதலில் பூமியைக் கொத்தியாகிலும், உழுதாகிலும் நிரவி 3அடிக்கு ஒரு பாத்தியாக மண்ணை 1அடி உயரம்நெடுக முட்டாட வேண்டும். பின்பு இலை, தழை,செத்தை,குப்பை இவற்றைஅவைகளின் பேரில் போட்டுக் கொளுத்தி அடிமண் சூடுண்டாகும் வரையில் பார்த்து, பின்பு பாத்திகளில் நீர்பாய்ச்சி உடனே விதைகளைபாத்தியில் ஒருஅடிக்கு ஒன்றாக விதைக்கவேண்டும். பிறகு 4 அல்லது 5-அடி நீளமுள்ள மூங்கில் குச்சிகளை விதைக்கு சமீபத்தில் நட்டு, எதிரிலிருக்கும் பாத்தியிலிருக்கிற குச்சியின் தலைப்பை வளைத்து முக்கோணமாகக் கட்டி முக்கோணங்களின் தலைப்புகள் ஆட்டங்கொள்ளாதபடி குறுக்கே ஒரு குச்சியைக் கட்டவேண்டும். காலை மாலையில் இரண்டுதரம் நீர்பாய்ச்ச வேண்டும். ஒருவாரத்திற்குள் கொடிகள் பூக்க ஆரம்பித்து விடுகின்றன. 10-நாளில் காய்களைக்காணலாம். முக்கோணம் கட்டி கொடிகளை ஏற்றி விடுவதில் பெருத்த லாபமிருக்கிறது. கொடிகளை பூமியில் படரவிடுவதில் காய்கள் மிதியுண்டுபோவதோடும் சூரியவெளிச்சத்தை கொடிகளும் வேர்களும் அடைகிறதில்லை. இக்கோடையே வெள்ளரி பயிரிடப்படும் காலமாகையால் இம்முறையை அநுசரிப்பார்களென்று இம்மார்க்கத்தை வெளியிடலானோம்.

அன்னாசிபழம்:—இரங்கூனுக்கு 5மைல் தூரத்திலுள்ள கமாயுட் என்னும் ஊருக்குச் சமீபத்தில் அன்னாசிக்காடுகள் மிகுதியாக விருக்கின்றன. இப்பயிர்கள் பலாமுதலிய தோப்புகளில் பயிரிடப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு நீர்பாய்ச்சுவாரில்லை. காட்டுச்செடிகளாகவிருக்கின்றன. ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பழங்கள் சந்தைக்கு வந்து விடுகின்றன. பழம் காலணா முதல் ஒரு அணாவரையில் விலைபடுகின்றது. விற்பனை ஆனதுபோக மிகுந்த பழங்களை வாலையிலிட்டு காய்ச்சி திராவகமாக யிறக்கி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இத்திராவகத்தை நாம் குடிக்கும் பானங்கள் (லெம்நேட்) போல உபயோகப்படுத்திவருகிறார்கள். நமது நாட்டில் எவ்வளவோ புஞ்சை நிலங்களும் தென்னந்தோப்புகளுமிருக்கின்றன. இத்தோப்புகளின் அடிநிலங்கள் வெறும் காலி நிலங்களாகவேயிருக்கின்றன. இதில் தினே தினேநீர்பாச்சப்படுகிறது சகஜமாகையால் இத்தோப்புகளின் அடிநிலங்களில் இப்பயிரிடக்கூடாதா? இதனால் லாபம் கிட்டாதா? தோப்புடையோர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவார்களென்று நம்புகிறோம்.



## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின்கீழ், மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம், செய்பாகமென்ற முறைகளையும்கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும்.]

வெள்ளைச்செம்பு (German Silver) செய்யும்விதம் :—

உருக்குகையில் கீழேகுறிக்கும் அட்டவணைக்கிணங்க உலோகங்களை ஒன்றின்பின்னொன்றாகச் சேர்த்துருக்கி தெளியும்போது கட்டிவிட்டு பின்வேண்டியபடி உபயோகபடுத்திக்கொள்ளவும்.

| நம்பர். | இரும்புபாகம். | நிக்கில் பாகம். | செம்பு பாகம். | நாகம் பாகம். | வெள்ளீயம் பாகம். | உதாரா. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 24 | 55 | 16 | 3 | காண்டிகள் செய்ய. |
| 2 | ... | 2 | 5 | 3 | ... | மெல்லிய தகடு அடிக்கலாம் மிகு பளபளப்பாயும் வெள்ளிக்கு பதிலாக ஆபரணங்களுக்குபயோகபடுகிறது. |
| 3 | ... | 1 | 2 | 1 | ... | |
| 4 | ... | 2 | 6 | 2 | ... | |
| 5 | ... | 1 | 5 | 2 | ... | |
| 6 | 2½ | 31½ | 40½ | 25½ | ... | 1ந் தரம்சைஞ வெள்ளைச்செம்பக்கு நிகர். |
| 7 | ... | 26 | 50 | 24 ro 40 | ... | வெள்ளிக்கு நிகர். |
| 8 | ... | 6 | 15 | 70 | ... | |
| 9 | ... | 22¼ | 60 | 17¾ | ... | ஐரோப்பியர் நிக்கில்வெள்ளி. |
| 10 | ... | 19¼ | 66 | 13¾ | ... | பார்சியர் ,, |
| 11 | ... | 18 | 41 | 41 | ... | சற்று உடையும் |
| 12 | ... | 5 | 12 | 4 | ... | சுருள் தகடும்கம்பி ஆகும். |
| 13 | ... | 5 | 5 | ... | ... | நாகஞ் சேர்ந்ததைவிட உயர்வு |
| 14 | ... | 24 | 49 | 24 | 2½ | பாகம் அலுமினியம் சேர்க்கவும். |

செந்நிற பித்தளை (Gun metal) சேர்மானம்:—

8. அல்லது 9பாகம் செம்புடன் 1பாகம்வெள்ளீயஞ் சேர்த்துருக்கவும்.

***

மட்டவெண்கலம் (திரு) சேர்மானம்:—

91½பாகம்செம்பு, 5¼பாகம்நாகம், 1¼பாகம்காரீயம், 1¾பாகம்வெள்ளீயம் சேர்த்துருக்கவும். இதுவேலைக்குகொஞ்சம் நயமாயிருக்கும்.

***

வெள்ளீயத்தை கடினப்படுத்த:—

1பாகம்வெள்ளீயத்துடன் ½பாகம்நிமிளை (Antimony) சேர்த்துருக்கி வார்க்கவும். இதில்பளபளப்பு சுலபத்திலுண்டாகிறது. பதுமைகள்செய்யலாம்.

***

ஓர் கருநீல உலோக சேர்மானம்:—

3 செம்பும் 1பாகம்நிமிளையும் (Antimony) சேர்த்துருக்கவும், வேலைசெய்ய நயமாயக் காணப்படுகிறது.

***

மெடல்களடிப்பதற்கு (Bronze) சேர்மானம்:—

(1) 25பாகம் செம்பும் 2பாகம்நாகமுங்கூட்டவும்.

(2) 9பாகம்செம்பும் 1பாகம்வெள்ளீயங்கூட்டவும்.

(3) 89பாகம்செம்பு 3பாகம்நாகம், 8பாகம்வெள்ளீயம்கூட்டவும்.

(4) 19பாகம்செம்பும் 1பாகம்வெள்ளீயங்கூட்டவும்.

இவற்றை உருக்கிகட்டிவிட்டு, ஒருகனமாகஆலையில்தகடுபிடித்து,பில்லைபோட்டு, சுத்திசெய்து பின் அச்சுகளினிடையில் வைத்து மிஷினில்அடிக்கவேண்டும்.

***

வெள்ளை பித்தளை சேர்மானங்கள்:—

| ரெ. | செம்பு. | நிமிளை. | நாகம். | காரீயம். | வெள்ளீயம். | ஷரா. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 80¾ | 8½ | ... | ... | 11¾ | சைனக்காரர் முறை. |
| 2 | 7 | 11 | 82 | ... | ... | இவை வெள்ளைச் செம்பைவிட மழுங்காத பளபளப்பை அடையும். கில்ட்டு செய்யக்கூடிய சாமான்கள் செய்ய உபயோகப்படும். |
| 3 | ... | 6 | 17 | 17 | ... | |
| 4 | ... | 2 | ... | 3 | 3 | |
| 5 | 2 | 1 | ... | ... | 6 | |
| 6 | 3 | 7 | ... | ... | 90 | |
| 7 | 1 | 2 | ... | ... | 17 | |
| 8 | ... | 4 | ... | 21 | ... | |
| 9 | 1 | ... | 2 | ... | ... | |
| 10 | 1 | 2 | ... | 7 | ... | |
| 11 | 4 | 5 | 1 | 18 | 82 | |
| 12 | 2 | 5 | ... | 13 | ... | |
| 13 | 1 | 2 | ... | ... | 25 | 1 பாகம் பொன்நிமிளையும் கூட்டவும். |
| 14 | 32 | ... | ... | ... | 14 | 2 அரிதாரம் சேர்க்கவும். இப்புகையை சுவாசிக்கக்கூடாது |
| 15 | 6 | ... | ... | ... | 2 | 1 |
| 16 | 64½ | | | | 32 | 3½ |
| 17 | 59 | | | | 31 | 2 8 பாகம் பித்தளையும் கூட்டவும். |
| 18 | ... | ... | 1 | 2 | 2 | 32 பாகம் ,, |

அழகான சிறியசாமான்கள் வார்க்க வெண்கலம்:—

8வீசைசெம்பு 1½வீசைநாகம் கொஞ்சங்குறைய 1பலம்பொன்நிமிளை (Bismuth) இவற்றை ஒன்றின்பின் னொன்றாக சேர்த்துருக்கி, பழுக்ககாய்ச்சியகருக்களில் வார்க்கவும்.

***

வெள்ளிபோன்ற ஓர் உலோக சேர்மானம்:—

1. 64 பாகம் சுத்தசெம்பு, 3 பாகம் வெள்ளீயம். செம்பை யுருக்கிக்கொண்டு வெள்ளீயத்தை பின் கொடுத்து தெளிந்தவுடன் கட்டிவிடவும். இதில் வெள்ளியில் செய்யக்கூடிய யாவுஞ்செய்யலாம்.

2. 4பாகம்செம்பு, 8பாகம்நிமிளை, 1பாகம்பொன்நிமிளை, 100பாகம்வெள்ளீயம். இவற்றை ஒன்றின்பின் னொன்றாக சேர்த்துருக்கிக்கொள்ளவும்.

3. 10பாகம்செம்பு, 64பாகம்நிமிளை, 6 பாகம்நாகம், 20பாகம்வெள்ளீயம் சேர்த்துருக்கவும். இதுஎளிதிலுடையக்கூடியது பொத்தான்முதலியன செய்யலாம்.

4. 16பாகம் பித்தளைதகடு, 2பாகம்நாகம், 1பாகம்வெள்ளீயம். முறையேசேர்த்துருக்கவும்.

***

அலுமினிய வெள்ளிசெய்யும் விதம்:—

23பாகம்நிக்கில், 70பாகம்செம்பு. 7பாகம்அலுமினியம் சேர்த்துருக்கவும். இதில்செய்யப்படும் நகைகள், சாமான்கள்மிகுந்த பளபளப்பா யிருக்கும்.

***

டச்சுக்காரர் வெள்ளைதம்பாக்கு செய்யும் விதம்:—

3பாகம்சுத்தமானசெம்பு, 1பாகம்வெள்ளீயம்கூட்டியுருக்கவும். இதுவெகுநயமாயிருக்கும்.

***

தங்கஞ்சேராத தம்பாக்கு செய்யும்முறைகள்:—

(1) 16பாகம்சுத்தசெம்பு, 1பாகம்நாகம் 1பாகம்வெள்ளீயம். உருக்கவும். இதில்கில்ட்டு போடக்கூடிய சில்லரை பொன் ஆபரணங்கள்செய்யலாம்.

(2) 10பாகம்சுத்தசெம்பு, 1பாகம்நாகங் கூட்டி உருக்க, பவுன் தங்கத்தில் கூட்டிய தம்பாக்குபோலவிளங்கும். மோதிரங்கள், பொத்தான்கள், முதலியன செய்யலாம்.



(3) ஐரோப்பியர் தம்பாக்கு:—86¼பாகம்செம்பும், 13¾பாகம் நாகமும் சேர்த்துருக்கவும்.

(4) ஜர்மெனியர் தம்பாக்கு:-84பாகம் செம்பும், 15½பாகம் நாகமும் சேர்த்துருக்கவும்.

***

(5) டச்சுக்காரர் தங்கம்:—

| உலோகம். | 1 | 2 | 3 | ஷரா. |
|---|---|---|---|---|
| செம்பு | 19 | 5 | 11 | செம்பு உருகியபின் நாகத்தை சேர்க்கவும் |
| நாகம் | 6 | 1 | 2 | |

சிவந்த மஞ்சள்நிற பித்தளை சேர்மானங்கள்:—

| உலோகம். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| செம்பு | 83 | 89 | 7 | 1 | 2-3 | 3-4 | 6-8 |
| நாகம் | 10 | 10 | 3 | 12 | 1-1½ | — | \| |
| வெள்ளீயம் | 7 | 1 | 2 | 8 | — | \| | — |

இவை பொத்தான்கள், அச்சுகளி லடிக்கக்கூடிய மற்ற எல்லாச் சில்லரை சாமான்களும் செய்ய மிக்க உபயோகமாக விருக்கின்றன.

***

## சுகாதார விளக்கம்.

### எலுமிச்சம் பழத்தின் உபயோகம் :—

விஷசுரம், அம்மை, காலரா என்னும் வாந்திபேதிநடமாடும் காலத்தில் தண்ணீரிருக்கும் பாத்திரங்களில் சில எலுமிச்சம் பழங்களைப் போட்டுவைத்தால், பழங்கள் கொஞ்சகாலம் கெடாம லிருப்பதோடு, ஜலத்தில் கிருமிகள் சேராவண்ணம் சுத்தப்படுத்தப்படுகிறது. பந்து விளையாடும் சிறுவர்க்கும், பந்தயமோடும் பலிஷ்டருக்கும், இப்பழங்கள் தாக விடாயைத் தவிர்க்கிறது. பழத்தை இளஞ்சூட்டில் வெதுப்பி அறுத்துப் பிழிந்தால் அதிகரசம் கிடைக்கிறது. இதன் ரசத்தை அடிக்கடி உபயோகிப்பதனால், மாலுமிகளையும், சிப்பாய்களையும் சொறிகரப்பான் அணுகிறதில்லை. கடற் சுரத்தையும், வாந்தியையும் உடனே நிறுத்துகிறது. எலிமிச்சம் பழச்சாறும் சீனைகற்கண்டும் சேர்த்து சாப்பிட்டுவர இரத்தரோகம் தடைப்படுகிறது. கொஞ்சம் உப்பும் பழச்சாறும் சேர்த்து, துணிகளில் பிடித்திருக்கும் மைக்கறைகளுக்கு உபயோகித்தால் அம் மைக்கறைகளை துணிகளிலிருந்து நீக்குகின்றது. இளஞ்சூடான வெந்நீரில் கொஞ்சம் பழரசம் சேர்த்து சாப்பிட்டுவரதேகத்தில் வளர்ந்து வரும் அதிகப்படி கொழுப்பு, ஆச்சரியப்படக்கூடியபடி, கரைந்துவிடுகிறது. பழரசம் ஜீரணசக்திக்கு இன்றியமையாதது. ஆனதுபற்றி சாதாரணமான பானங்களாகவும், ஊறுகாய்களாகவும், மாத்திரை, சூரணம், லேகியம் முதலிய ஔஷதங்களுக்கு அநுபானமாகவும் தொன்றுதொட்டு கையாடப்பட்டு வருகிறது. அதிகதாபஜுரத்தால் நாக்கும், உதடும் வரண்டுபோகும் காலத்து கொஞ்சம் பழச்சாற்றில் கிளிசரைன் என்னும் வஸ்துவைச்சேர்த்து தடவிவர குணமாகும். இதையே ஒரு புட்டியில் அடைத்து தலையில் தடவிவர மூளை கொதிப்பு, வழுக்கை விழுதல், பித்த எரிச்சல் முதலியவைகளைக் கண்டிக்கிறது. தேமல், தழுப்பு, பரு முதலியவைகளில் இப்பழத்தை தேய்த்து சிறிது நேரம் கழித்து ஸ்நாநம் செய்ய அவைகளிருந்த விடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. சரீரத்தின் நிறமும் வெளுக்கும். காலராகண்டவர்களுக்கு உடனே கொஞ்சம் பழரச,

துடன் சிறிது மிளகுத்தூளையும், உப்பையும் சேர்த்துக் கொடுக்க, அது சமய சஞ்சீவியாகிறது. இப்பழத்தின் பேருதவியை விரிக்கிற் பெருகும்.

**வாழை மாவு :—**

நமது தேசத்தில் வாழைமரத்திற்குக் குறைவில்லை. அப்படியிருந்தும் அவைகளின் பலன்களை நாம் சரியானபடி அநுபவிக்கிறதில்லை நம் முன்னோர்கள் அதிலிருந்து எந்தெந்தபாகங்களை உபயோகப்படுத்திவந்தார்களோ அவைகளைத்தான் நாமும் நாளதுவரையில் உபயோகப்படுத்தி வருகிறோமேயன்றி புதிதாக நாம் அதிலிருந்து ஓர்உபயோகத்தை அடையமுயலுவதில்லை. வாழைக்காய்களை மேல் தோல் போக்கி உலரவைத்து, உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்து அந்த மாவை பதனமாக வைத்திருந்தால் அது மதுரமான ஓர் உணவுப்பதார்த்தமாகிறது. இம்மாவை, குழந்தைகளுக்கு நிராட்சேபமாய் கஞ்சியிட்டுக் கொடுக்கலாம். சாதாரண மாவுகளை உபயோகப்படுத்துகிற எந்த பட்சணங்களையும் இந்த மாவினால் செய்யலாம். சுகத்தைக்கொடுக்கும் காபி, டீ முதலிய பானங்களுக்கும் பதிலாக பாலுடன் கொஞ்ச மாவுகலந்து பானமாகச் செய்து சாப்பிட்டுவர இரத்த விர்த்தி உண்டாகிறது. வாழைத் தோட்டக்காரர்கள் இத்தொழிலை முக்கியமாய் கவனித்தால், குப்பையிலெறியும் கொட்டை வாழைக்காய்களாலும் லாபமிருப்பதை உணர்வார்கள்.

## ஆயுர்வேத சாரம்.

### குழந்தைகளுக்கு உண்டாகும் பக்ஷிதோஷங்களுக்கு குளிகை.

அதிமதுரம், மரமஞ்சள், முத்தக்காசு, அதிவிடையம், வசம்பு. கடுக்காய். தேவதாரம் இவைகளைச் சமனிடைகொண்டுவந்து இடித்துத் தூளாக்கி, பொடுதலைச் சார்விட்டரைத்து குன்றிமணிப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, முலைப்பால், அல்லது தேன் இவைகளில் குழந்தைகள் வயதுக்குத் தக்கவாறு 1–2–3 மாத்திரைகள் இழைத்துக் கொடுக்கவும் இது கைகண்டது.

***

### குழந்தை மாந்தங்களுக்கு மாத்திரை.

சுக்கு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், சீரகம், கொத்தமல்லி, ஆமை ஓடு, குராசானி ஓமம், இவைகளைச் சமனிடைகொண்டு சூரணஞ் செய்து நிலதுளசிச்சார், பொடுதலைச்சார், தூதுவேளைச்சார் இவைகளில் இரண்டிரண்டு ஜாமம் அரைத்து துவரைப்பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு குழந்தைகள் வயதுக்குத் தக்கபடி வெந்நீரில் மாத்திரை 1–2–3 கொடுக்கவும்.

***

### குழந்தை மாந்தம் 21-க்கும் குளிகை.

வெத்திலை மிளகு, ஆக இரண்டுதினுசையும் அம்மியில் வைத்தரைத்து ஜலம் விட்டுக்கரைத்து பூரம் அரைப்பலம் அதிலிட்டுக் கொதிக்கவைத் தெடுத்துக்கொண்டு அதனோடு லவங்கம், ஏலம், வசம்பு, சீரகம், மாசிக்காய், அதிவிடயம், இவைகள் வகைக்குப் பலம் கால்வாங்கி கல்வத்திலிட்டு மாசிபத்திரிச்சார்விட்டு ஒருஜாமமும், விஷ்ணுகிராந்திச் சார்விட்டு ஒருஜாமமும், அரைத்து கொத்தமல்லிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்திவைத்துக் குழந்தைகள் வயதுக்குத் தக்கபடி ஒருமாத்திரை இரண்டுமாத்திரை தேனிலாகிலும் மாந்த கியாழத்திலாகிலும் இழைத்துக் கொடுக்கவும்.

***

### மாந்தத்துக்குப் பச்சிலைச்சார்.

நொச்சியிலை, பொடுதலையிலை, நுணாயிலை, உத்தாமணியிலை இந்நான்கும் சரிபாகம்எடுத்துக்கொண்டுகசக்கிப்பிழிந்து ஒரு சங்கு பாலடை அளவு உள்ளுக்குக்கொடுக்க, மாந்தம் நீங்கும். குழந்தைகளின்தாய்கள் இச்சாபத்தியமா யிருக்கவேண்டும்.

***



### குழந்தைகளுக்கு சிறுநீர் இறங்காவிட்டால் பற்று.

எலிப்புழுக்கை, வெள்ளரிவித்துஇவ்விரண்டையும் ஜலம்விட்டரைத்து அடிவயிற்றில் பூச, சிறுநீர் இறங்கும்.

***

### குழந்தைகள் பிடித்து பாலுண்ணாதிருந்தால் மருந்து.

அதிமதுரத்தை முலைப்பால்விட் டரைத்து தாய் ஸ்தனத்தில் பூசி பால்கொடுக்க, பிடித்துண்ணும்.

***

### குழந்தைகள் வயிற்று நோய்க்கு மருந்து.

புன்னைவேர், சிறுதேக்கு. கோஷ்டம், இவைகளை ஜலம் விட்டரைத்து கொதிக்கவைத்து வயிற்றில் பூச, வயற்று நோய்தீரும்.

***

### வேறு.

பிள்ளைகளுக்கு அடிவயர்நொந்து மலங்கட்டு மாகில் அதிமதுரம், ரேவல்சின்னிப்பால், மணத்தக்காளி வற்றல், சரக்கொன்றைப்புளி இவைகளைவெந்நீர்விட்டரைத்து வயிற்றில் பூச, வயிர்விடும்.

***

### மற்றொரு விதம்.

ரோஜாமொக்கு, சூரத்துநிலாவிரை, சூரத்துக்கடுக்கா, சோம்பு, இந்துப்பு இவைகளைச்சமனாக சேர்த்து அரைப்படி ஜலம் விட்டு சுண்டக்காய்ச்சி ஒருசங்கு பாலடை கொடுக்க, வயர் உப்பிசம், மாந்தம், சுரம், இவைகள் தீரும்.

***

### பிள்ளைகள் வயிறு வீக்கத்துக்கு மருந்து.

அதிமதுரங் கொண்டுவந்து புளித்தகாடிவார்த் தரைத்து வயிற்றில் பூசத் தீரும்.

***

### பிள்ளைகள் குடித்தபால் வாந்தி யெடுத்தலுக்கும் கொட்டாவி விடுதலுக்கும் மருந்து.

வெள்ளுள்ளி, ஓமம், இவ்விரண்டையும் சமனிடை எடுத்து ஆழாக்கு ஜலம் விட்டு கால் ஆழாக்கு ஜலமாகச் சுண்டக்காய்ச்சி கொடுக்க, பால்வாந்தியும், கொட்டாவியும் தீரும்.

***

### குழந்தை பிறந்தவுடன் சீறிச்சீறி அழுதலுக்கும், விக்கல், பொருமலுக்கும் மருந்து.

சிறுதேக்கு, திப்பிலி இவைகளை சமனிடை யெடுத்து பொடிசெய்து ஆவின்நெய்யில்குழைத்து தாய் கொங்கையில்பூசி பாலுண்ணவைக்கவும் விக்கல், பொருமல்முதலியவைகள் நீங்கும்.

***

### வேறு.

திப்பிலியும், ரோகணியும் பொடித்து ஆவின் நெய்யில் குழைத்து மேற்சொல்லியதுபோல் செய்யவும். மேற்கண்டரோகம் தீரும்.

***

### 18-சூலைக்கும் 12-கிரந்திக்கும் எண்ணை.

சுக்கு, கிராம்பு, ஏலம், சிறுதிப்பிலி, ரசகர்ப்பூரம், மிளகு வகைக்கு ஒன்றேகால் விராகனிடையெடுத்து பொடிசெய்துகொண்டு, ஆமணக்கெண்ணை சேர்-1 தேங்காய்ப்பால் சேர்-1 செம்பருத்தியிலைச்சார் சேர்-1 ஆக இம்மூன்றும் ஒரு பாண்டத்தில் விட்டு மேற்படி தூள்களை அதில்போட்டுக் காய்ச்சி வடிகட்டி ஒருசங்கு பாலடைவீதமாக 5—7 நாள் கொடுக்க மேற்சொன்ன வியாதிகள் தீரும் இச்சாபத்தியம்.

(தொடரும்.)

ஆயுர்வேத பண்டிதர்
ப. மா. ஆறுமுகாச்சாரி,
சென்னை.

## நம் சகோதரர்களின் மாட்சி.

மாட்சிமை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் சுற்றுப் பிரயாணமாக மதுரைக்குச் சென்றிருந்த போது, அவ்வூர் சௌராஷ்டிரர்கள் ஒரு பொருட் காட்சியை ஏற்படுத்திக் காட்டினார்கள். அக்காட்சியில் வைக்கப்பட்டிருந்தவையாவும் நெசவு சம்சம்பந்தமானவும், சாயசம்பந்தமான பொருள்களாகவு மிருந்தன. உயர்ந்த பட்டுத் துணிகளும் விலையுயர்ந்த சரிகை வஸ்திரங்களும் பார்ப்போர் கண்களைப் பறித்தன. சௌராஷ்டிர வம்சத்தார்கள் மேல்திசையாரின் சாஸ்திர வழிகளை அப்பியசித்து அவ்வழியில் தங்கள் கைத்தொழிலைக்கையாடி வருகிறார்களென்பதை இக்காட்சியால் யாவரு முணர்ந்தார்கள்.

கவர்னர் அவர்கள் பொருட்காட்சி மண்டபத்திற்குச் சென்றபொழுது, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்று சுதேசம் திரும்பியிருக்கும் சௌராஷ்டிர கனவானாகிய ஸ்ரீ துளசிராம் அவர்களால் வரவேற்கப்பட்டும் காட்சியில் வைக்கப்பட்டிருந்த சாமான்களின் விபரங்களையும் தெரிவிக்கப்பட்டார். கவர்னரவர்கள் பரமசந்துஷ்டி யடைந்தவாராய் சௌராஷ்டிரர்களின் ஊக்கமும், கைத்தொழிலும் அதி உன்னதம் பெறவேண்டுமென்கிற தம் ஆசியைக் கூறினார். கலெக்டர் பங்களாவிற்கு போகும் வழியில் சௌராஷ்டிரசங்க மண்டபத்தில் சில நிமிஷம் தங்கினார்.

இதினின்றும் நம் குலோள்பவர்கள் ஓர் படிப்பினைக் கற்கலாகாதா? சென்னையில் பல பேட்டைகளுள், ஆயிரக்கணக்கான அற்புத வேலைக்காரர்க ளிருக்கிறார்களே யன்றி இவர்கள் தங்கள் கைத்தொழிலின் சிறப்பை ஓர் பொருட்காட்சியால் விளக்கிக் காட்டலாகாதா? எல்லா வற்றிற்கும் ஒற்றுமையல்லவோ வேண்டும். இது சென்னை வாசிகளிடம் சமீபகாலத்தில் அருமருந்தாகிவிட்டதே, வெளியூர் வாசிகளாவது இவ்விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களென்று நம்புகிறோம்.

## மகநீய மதிகள்.

அறியவேண்டியது - கடவுளை
அடக்கவேண்டியது - கோபத்தை
அகற்றவேண்டியது - அஞ்ஞானத்தை
அனுபவிக்கவேண்டியது - பேரின்பத்தை
அடையவேண்டியது - பெரியோர்நட்பை
அறுக்கவேண்டியது - அதிக ஆசையை
ஆதரிக்கவேண்டியது - குலஜனங்களை
ஆகவேண்டியது - ஒற்றுமை
இருக்கவேண்டியது - நிதானம்
ஈட்டவேண்டியது - பொருள்
உய்யவேண்டியது - கைத்தொழிலால்
உறுதிப்படவேண்டியது - மனம்
உண்ணாதிருக்கவேண்டியது மதுமாம்சம்
ஊட்டவேண்டியது - ஞானம்
எடுக்கவேண்டியது - நற்பெயர்
ஒழிக்கவேண்டியது - பொறாமை
ஓதவேண்டியது - வேதம்
கற்கவேண்டியது - கல்வி
கருதவேண்டியது - உபகாரம்
கழிக்கவேண்டியது - கர்வம்
காட்டவேண்டியது - நல்வழி
கூடவேண்டியது - குலஜனங்களுடன்
கேட்கவேண்டியது - பெரியோர் சொல்
சகிக்கவேண்டியது - துன்பம்
செய்யவேண்டியது - குலதருமம்
செய்யாதிருக்கவேண்டியது - கொலை
தெரியவேண்டியது - சாஸ்திரம்
நயவாதிருக்கவேண்டியது - பிறர்பொருள்
நடக்கவேண்டியது - தாய்தந்தைசொற்படி
போதிக்கவேண்டியது - பிள்ளைகளுக்குகல்
பேசவேண்டியது - மெய் [வி
போக்கவேண்டியது - பாபம்
பெறவேண்டியது - நல்லொழுக்கம்
மறவாதிருக்கவேண்டியது - செய்ந்நன்றி.



## ஸ்ரீ விஸ்வேசுரர் வணக்கம்.

அருவாகி நீயலகி லண்டபிண்ட சராசரங்க ளாமனைத்தும்
மருவாகின் றேநிறைந்து வயங்குநினை யாலயமா மாமனைக்கண்
உருவாகப் பலசமைத்து மொப்புயர்வில் குணங்குறிக ளுரைத்தற் கொண்ணு
திருவாகி யிலங்குநினைக் கலைமகிறயிற் சிறுபுகழாய்ச் செப்பி வைத்தே.

பேதமறு தனிப்பொருளாய் நீயிருப்பச் சமயமதப் பிரிவு காட்டும்
போதமிகு மறையெழுத எழுத்தாணி தந்துநினைப் போற்றி வாழ
ஏதமிலா வுயிர்களெலா மிருந்திடயாம் தானென்ன எடுப்பில் நிற்கும்
பாதகமு மேற்கொண்டு பலசுகவாழ்க் கையிற்றமைமேற் படுத்தி நின்றே.

அலகிலவா நின்னுயிர்க ளனைத்தினையும் வெவ்வேறு யமைத்த தற்குப்
பலகதைகா ரணங்கூறிப் பகையொடுநிந் தனில்மாறு பட்டுத் தம்மில்
கலசமதை விளைவித்துக் சாலமெலாம் நீயிருந்து களிக்கு மின்ப
உலகமதைத் துன்புலகா யோய்வின்றிப் பெருந்தொனியை யொலிக்கச் செய்தே.

தனித்திடுசர் வேசுரனுப் சகலமுநீ தந்தாளத் தரணி யின்கண்
செனித்தவுயிர் களைப்புரக்கத் தீயபல வினைகளுமெத் தினத்துஞ் செய்து
நனித்தகவி லதைப்புரந்து நானென்ற பொய்க்கொடியை நாட்டி யிந்த
அனித்தியமா மிப்பிரபஞ் சத்தையளித் தரசாள வடியேன் செய்த.

அற்பமனை தனைவிளையாட் டரங்காக்கி யமர்ந்தருளி யடிமையான் செய்
சற்பனையு மெய்யாக்கிக் களித்துநடிப் பதுவுபலாற் கடையே னெற்கு
நற்பயனுந் தந்தருளி "நானீ நீநான்" என்ன நடிக்கச் செய்யும்
சிற்பரவிச் சுவப்பெருமான் திருத்தாளைக் கருத்தாழச் சேவை செய்வாம்.

நினக்கான அருந்தொழிலைத் தாமியற்றி யெனைப்போல நீநா னென்ன
மனக்காத லாலெனக்கு வருபுகழைத் தாமேற்க மதிக்கு மின்னோர்
எனக்கான இனத்தாறென் றெடுத்திருக்கு மென்னன்பை யினிது கண்டு
சினக்காத படியிருந்து மெனக்குமகிழ் தருசிவத்தைச் சேர்ந்து வாழ்வாம்.

திருத்துவழி யாம்நான்கு பாயமதில் முன் மூன்றுஞ் செய்தோம் பின்பு
வருத்துவன வாந்தண்ட மதையுபயோ கிச்சவினி மதித்தோ மூன்றன்
கருத்துரையென் றெனைக்கேட்ப யானுன்போன் மூன்றியற்றிக் கானவாழ்வில்
இருத்துமெனு மென்னுலரக்கா யெனையீன்ற பெருமானை யிறைஞ்சி வாழ்வாம்.

இழிவென தாவிபுடல் பொருளதனை யினியதென விருக்கை கொண்டு
பழிபடரென் புன்னினைவைப் பாரதினை வாயாக்கிப் பகர வாயின்
வழிவருகு புன்சொலைநன் சொல்லாக்கிக் கையில்வரை வார்த்தை தன்னைச்
செழியமறை மொழியாக்கித் திருவருள்செய் யிறையோனைச் சேர்ந்து வாழ்வாம்.

குற்றமுள கம்மாளக் குலமிகவுங் கொடியதெனக் குழந்தாய் முன்பு
சொற்றனமே சொல்லுண்மை துலங்கியதா அவர்செய்யுந் துன்பந் தாக்கப்
பெற்றனையே பினுமவர்மேற் பெருங்கருணை யாயினும் பிள்ளை யெல்லாம்
மற்றுமறி யெனவெனக்காய் மனமுடையு மருள்வடிவை வணங்கி வாழ்வாம்.

அன்னவருக் குறுதுன்ப மதனையெலா மென்றனுக்கே யளிப்பா யென்ன
முன்னமடி யேனுரைத்த மொழிப்படியன் னோர்துன்ப முழுது மின்றி
இன்னவயிற் சிலகொடுத்து மேனையர்க்குக் காண்பித்து மெண்ணு நிற்கு
அன்னதையெற் கின்பாக்கி யாண்டருளும் மெய்ப்பொருளை யண்டி வாழ்வாம்.

வரகவி S. சுந்தராச்சாரி,
மார்க்கயன்கோட்டை.

112-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## ஆனந்தக்களிப்பு.

(8) அண்டத்தி லுள்ளதைப்போலே—யிந்த
பிண்டத்திலும் முளதென்றார்முன்னாலே
கண்டறிந்தோர் யோகநூலே—கொண்டு
கண்டறிவாய் குருவாலறிவாலே (ஸ்ரீ)

(9) அக்கினியிற் சூடும்மேலும்—மதிக்
காதினசீதளமும் நெய்யும் பாலும்
மிக்கமலர் மணம்போலும்—பரம்
மேவிநின்றாளருட் சத்தியெக்காலும் (ஸ்ரீ)

(10) பூததூலமே சுராட்டும்—ஜீவர்
பொருந்திய சூக்குமதேகம் சம்ராட்டும்
நாதகாரணம் விராட்டும்—அவ
ரானதி னருவுரு வேமறை நாட்டும் (ஸ்ரீ)

(11) அங்கன மருவுருவான—அந்த
அண்ணலகிலம் புதுக்கிடல்மாண
தங்குஞ் சுயரூபத்யான—த்தினால்
சத்திபோஜாத பஞ்சானனந்தோன (ஸ்ரீ)

(12) தோணுமைந்து முகத்தேசின்—கஞ்சத்
தோனரியரன் சதாசிவனுமகேசன்
பேணுமைந்தொழிலையும் பேசன்—முறை
பீடுறச்செய்வீரென்றார் விச்சுவேசன் (ஸ்ரீ)

(13) சிருட்டிதிதியுஞ்சம்மாரம்—செயல்
திரோபவானுக்ரகமேமறை சாரம்
அருட்டிதி வினைக்குப காரம்—ஆக
வமைத்தாரைம் பாற்சத்தி யைவர்க்குந்தாரம் (ஸ்ரீ)



(14) அன்னோர்பெயர் சாஸ்வதியே—கம
லாலயை பார்வதியார் முகமதியே
சொன்னார் மகேஸ்வரி தாதியே—பெறு
தாயைமனோன்மணி யென்றே தொல்பதியே (ஸ்ரீ)

(15) விச்சுவேசனுளப் பாங்கே—படி
வீறும்ப்ரம்மன் ஸ்ருஷ்டிஜீவர்க்கு மீங்கே
மெச்சுமாதரணை நீங்கே—லென்ன
விழியின்மின்னதனிற் செய்தாரைவ ராங்கே (ஸ்ரீ)

(16) ஐவர்மனுமயத் வஷ்டர்—சிற்பி
யாகும் விஸ்வக்ஞப்ரம்மாவே கனிஷ்டர்
மெய்மிகுவைந்தொழி லிஷ்டர்—வயம்
வ்ருக்ஷ செம்புங் கல் பொன்னுக்கும் விசிஷ்டர் (ஸ்ரீ)

(17) அங்கனமே வலக் கண்ணே—வரு
மைவர்க்குமேயிட வாக்ஷியிற் பெண்ணே
இங்கன் ஸ்ருஷ்டித்துணைக் கென்றே—ஸ்ருஷ்டித்
தேற்றச்செய்வீர்களென்றார் க்ருத்யமைந்தே (ஸ்ரீ)

(18) முன்வரு சுத்திகள்போலே—வம்ஸ
மோளிரும் பராசக்தி ஆதியும் மேலே
மின்வரு மிச்சையாம் வேலே—விழி
மிளிர்ஞான சத்திக்ரியவைம்பெண் பாலே (ஸ்ரீ)

(19) மனுப்ரம்மமும் பராசத்தி—முதல்
மருவுமைவருந்தந்தம் சத்தியுகத்தி
மனசீயமெனுஞ் சங்கற்பத்தி—னாலே
வருளினர் சானகராதிகள் வர்த்தி (ஸ்ரீ)

(20) அன்னோரபிதானஞ் சான—கச்ச
னுதனுபுவனச வெனுமோன
நன்னேக்கப் ரத்னசர் ஞான—வொளி
நாடுஞ்சுபர்ன ரென்றாகினர் மாண (ஸ்ரீ)

(21) வாகீசுவரியாள் மணாளர்—சிரம்
மார்புந்தொடை முறையேமலர்த்தாளில்
யாகாதிசெய்யந்த ணாளர்—தோன்றிட்
டாரந்தராஜர் வசியர்வேளாளர் (ஸ்ரீ)

(22) ரிக்குயஜுர் சாமகீதம்—புகழ்
மிக்கவதர்வணம்பிரணவ வேதம்
மெய்க்குமச் சாகைசொல் வீதம்—நடை
மேவிற்பெறலாம் விஶ்வேசர் பொற்பாதம் (ஸ்ரீ)

(23) இப்படியே மறைகூறும்—இதை
யேந்துசென்னார் நஞ்ஜெகத்குருமாரும்
அப்படியாகவெல் லோரும்—அந்த
ஆரணஞ்சூசிப்போ மேலருள் சாரும் (ஸ்ரீ)

(24) செப்பருந்தேவ விலாசன்—ஞானத்
தீவிரர்போற்றுஞ் சிவப்பிரகாசன்
சுப்பிரமணியநற் றூசன்—துதி
சொல்லச்சுகாம்பரந் தோயச்செய்யீசன் (ஸ்ரீ)

பொதுநலம்புரிவார்க்கடியன்
**கூந்தலூர்-சுப்ரஹ்மண்ய ஆச்சாரி,**
மங்கலம்பேட்டை.

---

## குல நலச் சுவடி.

**முகவுரை.**

கல்வியிற் புகும் நங்குலச்சிறுவர்கட்கு மனப்பாடம் செய்விப்பான் வேண்டி இக் குலநலச்சுவடி கூறலாயிற்று. ஆதலின் இதனை, பெற்றோர்களும் மற்றோர்களும் தங்கள் சிறுவர்கட்கு போதிப்பது நலம்.

**குல நலச் சுவடி (மூலம்.)**

**காப்பு.**

அண்ணல் விஶ் வேச னடியிணை போற்றி
பண்ணியற் சுவடி பகருது மியாமே.

**அவையடக்கம்.**

இன்சொ லிலையேனும் ஈர்மழலை சொற்போலென்
புன்சொலையுங் கொள்வீர் பொறுத்து.

**நூல்.**

**அகரவர்க்கம்.**

1. அறத்தினிற் சிறந்தது ... ... குலத்தினர்க் கீதல்.
2. ஆக்கத்திற் பெரிது ... ... குலவறி வுடமை.
3. இனத்தினர்க் கழகு ... ... குலத்தினைப் பேணல்.
4. ஈன ரென்போர் ... ... குலநூல் சோர்பவர்.
5. உடையோ ரென்போர் ... ... குலத்திற் குதவுவர்.
6. ஊக்க முடையோர் ... ... குலநலங் குன்றார்.
7. எட்டொரு வழியினும் ... ... குலத்திற் கிடரொழி.
8. ஏதிலா ரிடத்து ... ... குலவீரியந் தவிர்.
9. ஐம்புல னடக்கினும் ... ... குலப்பற் றறுது.
10. ஒற்றுமை யொன்றே ... ... குலத்தினர்க் கணிகலம்.
11. ஓவியம் விடுத்தல் ... ... குலத்தொழிற் கீனம்.
12. ஔதாரியக் குணம் ... ... குலத்திற் கிலக்கணம்.



**ககரவர்க்கம்.**

13. கல்வியு மோங்க ... ... குலமும் ஓங்கும்.
14. கால மூவிசை ... ... குலசீல யொழுகு.
15. கிரம மறிந்து ... ... குலதர்ம மியற்று.
16. கீழ் மேலாகும் ... ... குலவழி நின்றால்.
17. குதர்க்க மியற்றும் ... ... குலப்பத ரொழி.
18. கூட்டுணை யின்றேல் ... ... குல முய்யாது.
19. கெடுமதி யுற்றால் ... ... குலநடு நழுவும்.
20. கேளா மைந்தர் ... ... குலத்தின் செல்வர்.
21. கைக்கடன் மறுத்தல் ... ... குலத்திற்கிழுக்கு.
22. கொதுவைவைத் துண்ணல் ... ... குலத்திற் கின்னல்.
23. கோத்திர மறிந்து ... ... குலத்துப் பெண்ணெடு.
24. கௌடிகத் தன்மை ... ... குலத்திற் கடாது.

**சகரவர்க்கம்.**

25. சங்கம் வலுக்க ... ... குலபங்க மொழியும்.
26. சாஸ்வத மாக ... ... குலாஸ்பதந் தேடு.
27. சிரவண மின்றேல் ... ... குலவள மில்லை.
28. சிற்றம் விடுத்தால் ... ... குலேற்றம் வாய்க்கும்.
29. சுவேச்சை யடுத்தால் ... ... குலசங்க மழியும்.
30. சூது தவிர்த்தால் ... ... குலவாதுக ளில்லை.
31. செய்கட னற்றால் ... ... குலவளங் குன்றும்.
32. சேமம் புகுந்தால் ... ... குலசாம மோங்கும்.
33. சைவம் விடுத்தால் ... ... குலதவம் மாளும்.
34. சொல்வள மில்லார் ... ... குலத்தினுட் பதரே.
35. சோதிட வாதமும் ... ... குலத்திற் குரித்து.
36. சௌசன் னியமே ... ... குலக்கிளை கூட்டும்.

(தொடரும்)

**T. M. தெய்வசிகாமணி ஆச்சாரி.**

---

## கடிதங்கள்.

**வி. குலோபகாரி பத்திரிகாசிரியரவர்களுக்கு.**

ஐயா!

சென்ற ஐந்து மாதங்களாக தங்கள் பத்திரிகையை வாசித்துவருகிறேன். அதில் பல அருமையான விஷயங்கள் அடங்கி யிருக்கிறதென்றாலும், மது ஜாதிக்கு கல்விவேண்டுமென்கிற விஷயத்தை வற்புறுத்தி வெகுவாக எழுதியிருக்கிறது. கல்வி, ஆண் பெண்ணிருவருக்கும் அவசியமென்றும் அக்குறை தீராவிட்டா

ல் நமது குலம் இன்னும் தாழ்மையான நிலை
மையை அடைந்துவிடு மென்றும் சென்றமி
சஞ்சிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி
வேண்டா மென்கிற ஜாதிகூட ஒன்று உலகத்
திலிருக்கு மென்று நான் நம்பவில்லை. ஏதோ
நமது கவனக்குறைவாலும், தொழில் கர்வத்தா
லும் நமது குழந்தைகளை நன்றாக கல்விகற்க
விடுகிறதில்லையே ஒழிய, பள்ளிக்கூடச் சம்ப
ளம் கொடுப்பதற்கு கெதியில்லாமல் சும்மாயி
ருந்து விடுகிறோ மென்று நினைத்து விடக்கூ

டாது. பகல்வேளையிலும் இரவிலும் சாப்பாட்டிற்கு வாய்க்கு இதமான பதார்த்தச் செலவு மட்டும் அரைரூபாய்க்கு குறைகிறதில்லையே. இதுபோனால்போகட்டும் தீபாவளி, பொங்கல் வந்து விட்டால் ஒரு சாண் அகலம் சரிகைக்கரை வேஷ்டி, காஞ்சிபுரம் புடவை, ரவிக்கை பாவாடை, உப்பாடை அங்கவஸ்திரம், முதலியவைகளை கடன்பட்டாகிலும் வாங்க பால்மாறுகிறோமா? இல்லை. ஒரு சவரணி லாகிலும் ஒரு ஜதை காப்பு அடித்துபிறர் நம்மை மதிக்கும் படிக்கு போட்டுக் கொள்ளாமல் இருந்துவிடுகிறோமா? அதுவு மில்லை. சுருட்டு, பொடி வெத்திலைபாக்கு, பொட்லம் காபி இளப் முதலிய சில்லரைச் சிலவுகளுக்காவது பின்வாங்குகிறோமா? இல்லை. எல்லாம் விதரணை தெரியாத தோஷமேயன்றி நம்மிடத்தில் வஞ்சகமில்லை.

இது இப்படியிருக்க நமதுபிள்ளைகளை கவனித்தாலோ, உளி, கொட்டாபுளி, ஊதுகுழா, குறடுமுதலியதைக்கண்டால் எவ்வளவு சந்தோஷப்படுகிறார்களோ அதில்கால்வாசி கூடபடிப்புவிஷயத்தில் காட்டுகிறதில்லை. புஸ்தகங்களைப்பார்த்தால் விஷத்தைப் பார்த்தாப்போலிருக்கிறது. இந்தகுறைவு நமதுகுழந்தைகளிடத்தில்மட்டும்இருக்கிறதாகநினைக்கக்கூடாது. பெரியோர்களிடத்திலு மிருக்கிறது. தங்கள் பத்திரிகை எங்களூரில் இன்னொருவருக்குக் கூடவருகிறது. அவரை நேற்று பார்க்கப்போயிருந்தேன். அவருடைய பட்டரைக்கூடத்து சாமான்பெட்டியில் 3பத்திரிகை கவரைப்பிரிக்காமலேஸ்டாம்புஒட்டினபடியேயிருக்கது. இவைகளை ஏன்பிரிக்கவில்லை என்றுகேட்டேன்; கலியாணவேலைத் தொந்திரவு ஒழியவில்லையென்றார்! இப்பேர்ப்பட்ட புண்ணியவான்கள் இன்னும்எத்தனைபேர்யிருப்பார்களோ! இவர்களுக்கேபடிப்பில் இவ்வளவு அக்கரையிருந்தால் இவர்கள் பிள்ளைகளைப்பற்றிக் கேட்பானேன்? ஆகையால் தாங்கள் இனிபடிப்புவேண்டும், வேண்டும், என்று சொல்லிவருவதில் பிரயோஜனம் இல்லை. படிப்பைஎப்படி நமது குழந்தைகளுக்கு ஊட்டவேண்டுமென்கிற வழிகளைத் தெரிவித்தால் நன்மையாகவிருக்கும். கிராமவாசிகளாயிருப்பவர்கள் கூடபடிக்கும்படியான ஏற்பட்டைதாங்கள் எங்களுக்கு தெரிவிக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த பத்திரிகையை வாசிக்கிற நமது குலாபிமானிகளாவது தெரிவிக்கவேண்டுமென்று பிராத்திக்கின்றேன். வேணும் நமஸ்காரம்.

இராக்கம்பாளையம், முருகப்பாச்சாரி.

***

## விஸ்வபிரம்ம மஹாஜன சென்ட்ர சபையின் பாடசாலை.

1. திருச்சினாப்பள்ளி விஸ்வப் பிராம்மண மஹாஜன சென்ட்ரல் சபையில் 1914௵ பிப்ரவரீ 24௳ மீட்டிங்கில் பிரெஸிடெண்ட் கனம் R. சாமிஆச்சாரியாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மஹாஜனங்கள் சம்மதப்படி தீர்மானித்த விஷயங்கள்

2. 1914௵ மார்சுமீ 4௳யில், விஸ்வப்பிரம்ம மஹாஜன சென்டரல் சபையின் பாடசாலை யென்ற, நாமதேயத்துடன் நியமிக்கப்பட்டது.

3. சித்தூர்ஜில்லா, திருப்பத்தூரிலிருந்து இவடம் விஜயமாயிருக்கும், சமஸ்கிருதம், தெலுங்கு, தமிழ்முதலிய பாஷைகளில், மஹாபண்டிதரும், வாக்கிய பஞ்சாங்க கணிதவல்லவரும், போதகாச்சாரியாருமாகிய, பிரம்ஹஸ்ரீ அ. சென்னகிருஷ்ண ஆச்சாரியா ரவர்களை ஷெ பாடசாலைக்கு, உபாத்தியாயராக நியமனம் செய்யப்பட்டது.

4 பாடசாலை விர்த்தியாம் ஸமாக மஹாஜனங்களின் சம்மதப்படி ஒவ்வொரு சீந்தாதாரும், மாதம் 1க்கு அணா. 4-வீதம் உபகரித்து வருவதாக கையொப்பம் செய்தார்கள்.

5. இந்தப் பாடசாலை தர்ம விஷயமாய் கும்பகோணம், புதுப்பாளையத் தெருவிலிருக்கும் குலாபிமானம் வாய்ந்தகனம் T. K சுந்தர ஆச்சாரியாரவர்கள் பிரதமமாகஅனுப்பிய நன்கொடை ரூபாய் 5-ம் ஷெ சபையார்களால் அங்கீகரிக்கப்பட்டது.

6. திருக்காட்டுப் பள்ளியிலிருக்கும் சத்சங்க சபையின் காரியதரிசியும், சைவசித்தாந்த



சாஸ்திர உபந்நியாசகருமாகிய பிரம்ஹஸ்ரீ R. உலகநாத ஆச்சாரியா ரவர்களால் கல்வியானது உலகத்திலுள்ள மனிதர்களுக்கு முக்கிய பூஷணமென்றும், கல்வியானது ஆண், பெண், இருவருக்கும், அவஸ்யம்வேண்டியதென்றும், கல்வியே மக்களுக்கு தர்மார்த்த காமிய மோக்ஷமென்னும் புருஷார்த்தங்களைக் கொடுத்து ரக்ஷிக்கும் அருமைப் பொருள் என்றும், கல்வியே தாயத்தார் பகைவர் திருட ரென்றித்தொடக்கத்தாரால் அபகரிக்கக் கூடாததும் பிறருக்குக் கொடுக்கக்கொடுக்கக் குறையாமல், வளரக் கூடிய விசேஷப் பொருள் என்றும் எல்லா வுலகப் பொருளையும் மோக்ஷத்தையுந் தருவதான, கல்வியே ஞானக்கண் என்றும், கல்வியை இளமையில்கற்பது சுலபமென்றும், வித்தியாதர்மமே விசேஷதர்மமென்றும், சாங்கோ பாங்கமாக எடுத்து உபந்நியாசித்தார். அவ்விஷயத்தைக்கவனித்த மஹாஜனள் யாவரும், அங்கீகரித்து, ஆநந்தமடைந்தார்கள்.

T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரி,
ஷெ சபை காரியதரிசி

***

## நமது வேதாத்தியயனபாடசாலைக்கோர் உபகாரச்சம்பளங்கள்.

நெல்லை, நரசிங்கநல்லூர். சாதுசங்கமகாசபைஸ்தாபகரும், தலைவருமாகிய, ஸ்ரீமத் கருணாநந்தசுவாமியவர்கள் ஷெ பாடசாலையை பலகாலும் பார்வையிட்டதின்பயனாக, சுவாமிகள் தாம்மாதமொன்றுக்கு ரூ. 5 உபகாரச்சம்பளம் நம் பாடசாலைக்கு கொடுத்துதவுவதாக வாக்களித்திருக்கின்றனர். இம்மகானை இந்தியாவிலுள்ளோர்கள் மட்டுமேயன்றி வெளிதேசங்களிலுள்ளவர்களுமறிவர். இவர்கள்செய்துவரும் லோகோபகாரமான விஷயத்தை நமதுகாருண்யமிகுந்த ஜியார்ஜ்சக்ரவர்த்தியும் நன்கறிவார். ஆகவே இம்மகானுடைய கீர்த்தியைவிரிக்கிற் பெருகும். இச்சுவாமிகள் யாதொருசைம்மாறுங்கருதாது, உலகோர்க்கு ஞானநெறி யூட்டுவித்தற்பொருட்டு அன்னவர்க்கு சென்னைபுரிவாசிகளால் சென்னை பச்சையப்பன்மண்டபத்தில் சென்ற 8௳ சாயங்காலம் ஓர் வந்தனோபசாரப் பத்திரிகைவாசிக்கப்பட்டது. அப்பத்திரிகையை ஓர் அழகியவெள்ளிப் பெட்டியில்வைத்து. ஹைகோர்ட்ஜர்ட்ஜி கனம். T.V. சேஷகிரிஅய்யரவர்கள் ஸ்வாமிகளுக் களித்தனர்.

***

## மற்றொரு உபகாரச்சம்பளம்.

சென்றமாதச்சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தவேண்டுகோளுக் கிசைந்து, சுண்டாக்காப்பட்டியினின்றும் சென்னைக்கு விஜயம்செய்திருந்த பிரம்மஸ்ரீ ரா. சாமாச்சாரியாரவர்கள் நமது பாடசாலையை மார்ச்சுமாதம் 5௳ யன்று பார்வையிடும்படியான பாக்கியத்தைப்பெற்றோம். அக்கனவான், பாடசாலைஸ்தாபகராகிய பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியாரால் வரவேற்கப்பட்டு பாடசாலையின் பல வகுப்புகளையும் காண்பிக்கப்பட்டார். பாடசாலைச்சிறுவர்களின் பெருக்கத்தையும், ஊக்கத்தையும், உபாத்தியாயர்களின் வித்தியாசாமர்தியத்தையும் அக்கனவான் வியந்துபேசி, தாம் மாதம்ஒன்றுக்கு ரூ. 2 பாடசாலையின் முன்னேற்றத்தை உத்தேசித்து உபகரிப்பதாக வாக்களித்துச் சென்றனர். இதுவன்றோ உண்மையான குலாபிமானம்! இத்தகைய குலாபிமானச்செல்வர்களாலன்றோ நம் நன்முயற்சிகள் நடைபெறவேண்டும்.

இக்கொடையாளர்களுக்கு, நமதுபாடசாலைச்சிறுவர்களும், நாமும் மனப்பூர்த்தியானவந்தனம் செலுத்தக் கடமைப்படிருக்கிறோம்.

***

## சென்னை சமரச ஞான சங்கத்தின் 6-வது வருஷோத்ஸவம்.

சென்னை சமரச ஞான சங்கத்தின் 6-வது வருஷோத்ஸவமாக சென்ற 5-வருஷங்களாக நடத்தப்பட்டு வருவது போலவே, இவ்வருஷம் பிப்பரவரிமாதம் 6௳ சோமவாரம் காலை 9-மணிக்கு பரமநிஷ்டாபரராய், பேசரிய பெரிய மோனக்கடலினைக் கடைந்து, அமிர்தவாரியை வாய்மடுத்து, செயமிருந்த சித்தயோக நிலையெய்தி,

ஞானமே ஓர் உருக்கொடு விளங்கிய ஸ்ரீமத் தாயுமானசுவாமிகளின் 252-வது குருபூஜை மஹோத்ஸவத்தை சென்னை, வண்ணையம்பதி யோகாநந்தாஸ்ரமத்தில் வெகு பக்திசிரத்தையுடனும், விமரிசையுடனும் ஷை சங்கத்தார் கொண்டாடி பெருமகிழ் சிறந்தனர். குறித்த காலத்திற்கு முந்தியே தீபாராதனை வைபவத்தை தெரிசிக்க அடியார்கள் பலரும், அன்பர்கள் அனந்தமுமாகக் கூடியிருந்தனர். பகல் 11-மணிக்கு மஹேஸ்வரபூஜை நடாத்தி, ஆங்கு விஜயம் செய்த சாதுக்களை பக்தர் குழாம் சூழ்ந்திருக்கப் புகைப்படம் பிடிக்கப்பட்டது. மாலை 6½-மணிக்கு ஷை சங்கஸ்தாபகரும், சங்கத்தலைவருமான ஸ்ரீமத் ஷண்முகாநந்தகிரி ஸ்வாமிகள் குருப்பிரபாவத்தை விளக்கிக் காட்டிய ஓர் அரிய பிரசங்கத்தை கடன்மடை திறந்ததென்ன, மலைபோல் திரண்ட மேற்சோருடன் ஆங்கு விஜயம் செய்திருந்த பக்தகோடிகளின்உள்ளத்தி லழுந்தச் செய்தருளினர். பிறகுவந்துளோர்க்கு விபூதிப் பிரசாதம் வழங்கப்பெற்று கரகோஷத்துடன் காரியங்க ளினிது முடிவு பெற்றன.

இச்சங்கத்தின் நோக்கத்தையும், ஸ்ரீமத் தாயுமான மூர்த்தியை சற்குருநாதனாகக் கொண்டகருத்தையும் ஊகிக்கின், பொய் வேடமிருந்து, பவம் வளர்ந்து, ஞானம் காய்ந்து தீய்ந்து, வருமிக்காலத்து ஸ்தூல தேகத்துடன், சித்தி, முத்திகளை பரிபக்குவமறிந்து தம் சீடர்கள் கோரியவாறு இல்லையெனாது அங்ஙனே ஷை சுவாமிகளின் ஞானாசிரியர் அளித்தவாறு அளிப்பதற்கான ஓர் அருட்குருநாதனை அகிலத்தின்கண் அடைவது அசாத்தியமானது பற்றியும், இக்குருநாதன், சர்வ மத சம்மதம் பெற்ற தமது சுவானுபவத்தை தம் நூன்முகத்தால் அறிவுறுத்துவதுபற்றியும், இச்சங்கத்தார் இம்மஹானையே ஞானாசாரியராக வழிபடுகின்றார்போலும். ஆகையின் இந்நன்னோக்கம் கொண்ட இச்சங்கம் கூடிய சீக்கிரத்தில் சாஸ்வத நிலைபெற்று, தழைத்தோங்குவதற்கான முயற்சிகளை பொருட்செல்வமுற்ற அன்பர்கள் தம் கவனத்திருத்துவார்களாக.

ஓர் அன்பன்.

***

## சென்னையில் விஸ்வகர்ம மடஸ்தாபன பெருமுயற்சி.

1914ஹு மார்ச்சுமீ 8வ ஆதிவாரம் காலை 11-மணிக்கு சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை, பொன்னப்பசெட்டி வீதி 51-வது நெ. கிருகத்தில் ஷை மடஸ்தாபன விஷயங்களையோசிக்க ஓர்பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. ஆங்கு கலசஸ்தாபனாலங்காரங்களும் செய்யப்பட்டிருந்தது. நம் குலோற்பவர்கள் பலர் விஜயஞ்செய்திருந்தனர். இதற்கு முதன்மையாயிருந்த ஸ்ரீகணிதால-லோகநாத ஆச்சாரியாரவர்கள் தமது கையொப்பமாக ரூபா. 500- (ரொக்கம்) கொடுத்தனர். மற்ற குலாபிமானிகள் ஒவ்வொருவரும் ரூபா 100, 75, 50, 35, 25, 15, கையொப்பஞ்செய்து அப்பொழுதே கையிலிருந்த தொகையை சிலர் கொடுத்துவிட்டார்கள். கையொப்பத் தொகை மொத்தம் ரூ. 1470-க்கு அவ்விடத்தில் வசூலான தொகை 775, சீக்கிரம் குறித்த தொகை சேர்ந்துவிடுமென்ற நம்பிக்கை உண்டாகிறது. இம்மடாலயத்திற்கு உள்ளூர் வாசிகளான நமது குல சிரேஷ்டர்களும், வெளியூர்சுஜாதி கனவான்களும் பொருள் உதவிபுரிவார்களென்று நம்புகிறோம்.

# வர்த்தமானக் குறிப்புகள்.

### கவர்ன்மேண்டு தொழிற்கல்விஸ்காலர்ஷிப்

இந்த வருஷத்தில் இம்மாகாணத்திலிருந்து சிற்பத்தொழிலை அதாவது, கட்டட வேலைத்தொழிலை கற்க மேல்நாடு செல்லும் சிறுவனொருவனுக்கு ஒரு தொழிற்கல்வி ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுமென்று கெஜட்டில் விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஸ்காலர்ஷிப்பைப்பெற விரும்புவோர் இந்த மாகாண வித்தியாதிகாரிக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும். இஞ்சினீரிங்கு பரீட்சையில் தேரிய பட்டதாரியைத்தான் கவர்மெண்டார் பொறுக்கி யெடுப்பார்கள். வருஷத்தில் 150 பவுன் வீதம் இரண்டுவருஷங்களுக்கு ஸ்காலர்ஷிப் கெடுக்கப்படும். அவசியமானால் 3-வருஷங்களுக்குக் கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப் போதாதென்று தோன்றினால் சிறிதுதொகை அதிகமாயும் கொடுக்கப்படும். ஸ்காலர்ஷிப் பெற்று செல்லும்சிறுவர் அத்தொழில் கற்றுத்திரும்பியபின் சர்க்காருக்கு உழைக்க வேண்டுமென்ற கட்டாயமுமில்லை. கவர்ன்மெண்டார் அவனுக்குவேலைகொடுக்கவேண்டுமென்ற கட்டாயமுமில்லை. மற்றவிவரங்கள் கெஜட்டைப் பார்த்ததால் தெரியவரும்.

***

### வியாபாரத் தொழிற்பயிற்சி கிளாஸ்.

கள்ளிக்கோட்டை வியாபாரஸ்கூலில் ஸ்பெஷல் வியாபாரத்தொழிற்பயிற்சி கிளாஸ்ஒன்று 1914ம் வருஷம் ஜூலைமாதம் முதல்தேதி முதல் பத்துமாதங்களுக்கு டெம்பொரியாக மறுபடியும் ஸ்தாபிக்கப் படவேண்டுமென்று கல்வியிலாகா டைரெக்டர் செய்த சிபார்சை சென்னை கவர்ன்மெண்டார்ஒப்புகொண்டுவிட்டார்கள். அதற்காகமாதம் 60 ரூபாய் சம்பளத்தில் இன்னொருஅஸிஸ்டண்டை நியமிப்பதற்கும் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. வியாபாரத்தொழிலைக்கற்கவரும் B A. பட்டதாரிகளுக்கு அதற்குக்கீழ்தரபரீட்சைகளில் தேர்ந்தவர்களுக்கும் முறையேமாதம் ஒன்றுக்கு 20-ரூபாய்வீதம் ஸ்டைபெண்டு கொடுத்துவரவேண்டுமென்றுடைரெக்டர் சிபார்சுசெய்திருந்ததை ஒப்புக்கொள்ளாமல் அதற்குப்பதிலாக மாதம் ஒன்றுக்கு 15 ரூபாய் கொடுக்கும்படி சாங்ஷன் செய்திருக்கிறார்கள். நம்மவர்களில் போகக்கூடியவர்களிருக்கிறார்களா?

***

### கிராமாந்தரங்களில் கிணறுகள் வெட்டுதல்.

கிராமாந்தரங்களில் கிணறுகள் வெட்டப்படுவதற்காக ஏராளமான தொகை சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு கிணறுவெட்டப்படுவதற்கு முன்னர், பரீட்சார்த்தமாக குழிதோண்டிப்பார்த்தல் உசிதமாகும். குழிதோண்டிப்பார்பதற்கு லோக்கல் போர்டாரிடம் தகுந்த கருவிகளில்லை. அவ்வித வேலையை நடத்துமுறையை அறிந்தவர்களுமில்லை. ஆகையினால் கிராமாந்தரங்களில் கிணறுகள் வெட்டப்படும் பொழுதெல்லாம் ஸானிட்ரி இஞ்சினீர்களின் உதவியாவது, அல்லது குழிப்போடும் இலாக்காவின் உதவியாவது அவசியம் வேண்டியிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் வேலைகளைக் கவனியாது விட்டு விட்டு, கிராமாந்தரங்களுக்குப் போகச்சரிப்படாது இதுகண்டு கவர்ன்மெண்டார் ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட்போர்டாரும் 1000-ரூபாய் கிரயத்தில் குழிபோடும்யந்திரத்தை வாங்கும்படிச் சொல்லியிருக்கிறார்கள். கிராமாந்தரங்களின் ஜலசப்ளை விஷயமாய்தனியாக எடுத்து வைக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்துதான் இவைகள் வாங்கப்படவேண்டும். கிணறுகள் தோண்டப் படும்பொழுது குழிகள்போடுவதற்கு உபயோகப்படும் யந்திரத்தை எவ்விதம் உபயோகப்படுத்த வேண்டுமென்பதை டிஸ்ட்ரிக்ட் போர்ட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்ட ஓவர்சியர்களுக்கும் மற்றசிப்பந்திகளுக்கும் கற்றுக்கொடுப்பதற்கு ஒருவகுப்பை சென்னையில் ஸ்தாபிப்பதற்கு ஸானிட்ரி இஞ்சினியர் தகுந்த ஏற்பாடுசெய்யவேண்டும். ஒரு வருஷத்தில் இரண்டுமுறை அவ்வித கிளாஸ்வைத்து நடத்தவேண்டும். ஒவ்வொருமுறையிலும்இரண்டுவாரந்தான் கற்பிக்கப்படும் அந்தவகுப்புகள் நடத்தப்படும் காலம் எப்பொழுது என்பதையும், கற்றுக்கொள்ளுவதற்கு அனுப்பப்படும் சிப்பந்திகளின் தொகை எவ்வளவுஎன்பதையும் ஸானிடரி இஞ்சினியர் டிஸ்ட்ரிக்ட் போர்டாருடன் கலந்துதீர்மானித்துகொள்ளவேண்டுமென்று சென்னை கவர்ன்மெண்டார் உத்திரவிட்டிருக்கிறார்கள். இவ்வுத்தியோகத்திற்கு மாதச் சம்பளம் ரூ 35முதல் 50வரையிலுமிருக்கலாம். சிறிதுகருமாரத்தொழில்பயிற்சியுள்ளவும், கொஞ்சம் (பிரைமரி) வாசிப்புடைய நம்குலச்சிறுவர்களுக்கு இதுதக்கதொழிலாகும். வெளியூர்வா

சிகளான நம்மனேர்கள் இஷ்டப்பட்டால் கீழ்கண்ட விலாசத்திற்கு கூடியசீக்கிரத்தில் மனுச்செய்து கொள்ளலாம்.

விலாசம்.

கவர்ன்மெண்டு சானிட்ரி இஞ்சினீர்,
சேப்பாக்கம், சென்னை.

***

### ஓர் ஆச்சரியமான அடுப்பு.

நியூயார்க் நகரில் ஜான் கிலிபோர்ட் என்னும் இஞ்சினியர் ஓர் அடுப்பைத் தயாரித்திருக்கிருர். நிறையில் குறைந்ததும், வேறுபொருளின் உதவியை வேண்டாததுமான ஷெ அடுப்பு வெயிலின்உதவியால் எரிந்து உபயோகப்படுகிறது.

***

### அதிசய ரத்னங்கள்.

ஜெர்மன் சக்ரவர்த்தியால் தமது பெருமாட்டிக்கு பரிசளிக்கப்பட்ட ஓர் அதிசயமான ரத்தினக்கல், விளக்குவெளிச்சத்தில் பச்சைநிறமாகவும், சூரியவெளிச்சத்தில் தங்கநிறமாகவும் காணப்படுகிறதாம். ஸைபேரியாவில் அகப்பட்ட ஸாரீயென்னும் மற்றொருரத்தினக்கல் பகலிற் பச்சையாகவும், இரவில் பலவர்ணமுடையதாகவும் காணப்படுகிறதாம்.

### பேசுங் கடிகாரம்.

பெர்லினில் ஒருவர்பேசும் கடிகாரம் ஒன்று செய்திருக்கிருராம். அது கால்மணிநேரத்திற்கொருதரம் காலத்தைச் சொல்லுமாம்.

***

### கடிதங்களினருமை.

லண்டன் நகரிலுள்ள ராபர்ட்ஸபிரௌனிங் என்பவர் எலிஜபெத் என்னும் சிறுமிக்கு எழுதிய 571 கடிதங்கள் லண்டனில் 6550 பவுன்களுக்கு விலையாயின.

***

### வரதட்சணையால் நேர்ந்த ஒரு தற்கொலை.

கல்கத்தாவில் சந்திர முகர்ஜி என்பவரின் புத்திரி கடந்த மாதம் ஒரு அறைக்குள் கதவைத் தாளிட்டுக்கொண்டு தனக்குத்தானே நெருப்பு வைத்துக்கொண்டு இறந்துபோனாள். இவளுடைய தந்தை வீட்டை அடகுவைத்து 2000 ரூபா இப்பெண்ணுக்குவரதட்சணை கொடுப்பதற்காகக் கடன் வாங்கக் கருதியிருந்தாராம். தன்னால் தகப்பனார் கடன்காரராகப்படாதென்று நினைத்தே இப்பெண் தற்கொலை செய்துகொண்டாள் என்று சொல்லப்படுகிறது.

***

### ஓர் படுகொலை.

ஷாங்கேயில் கடந்த ஜனவரி மாசம் 23-ந்தேதி காலையில் ஒரு ஐஸ்வரியவதி யாகிய ஜெர்மென் லேடி தன் படுக்கையில் கழுத்தறுக்கப்பட்டும் கைகள் துண்டிக்கப்பட்டும் விரல்கள் மோதிரங்களைத் துரிதமாக கழட்டிக்கொள்ள வெட்டப்பட்டும் கோரமான ஸ்திதியில் காணப்பட்டாள். 4000 பவுன் களவுபோய்விட்டன. புருஷன் வியாதிப்பட்டு வைத்தியசாலையிலிருந்ததால் இவள் தனிவாசியாயிருந்தாள்.

***

### ஓர் பெரும்பாம்பு.

கடந்த ஜனவரி மாசம் 25-ந்தேதி இரவு ராங்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக் கருகில் ஒரு வர்த்தகன் வண்டியைநிறுத்தி அதற்கடியில படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். பொழுதுவிடிந்துபார்க்கையில் மனிதனைமாத்திரங்காணேம். போலீசாருக்கு அறிக்கை செய்ததில் அவர்கள் வந்து அவன் படுத்திருந்த இடத்திலிருந்து காட்டுக்குப்போகும் வழியாய்ப்பார்த்ததில் ஒரு பிரம்மாண்டமான பாம்பு படுத்திருக்கக்கண்டு அதைச் சுட்டுக்கொன்ருர்கள். இதன் நீளம் 21 அடி, அதின் வயிற்றைக் கிழித்துப் பார்த்ததில் காணாமற்போன வர்த்தகனுடைய சடலமிருக்கக்கண்டு பெரும் வியப்புற்றனர்.

***

### ஓர் மானி.

பம்பாயில் 22-வயதுள்ள மங்கே என்னும் ஹிந்து ஒரு பார்ஸி குடும்பத்தில் வேலையாயிருந்தவன் 25-ந்தேதி எஜமானுடைய வீட்டில் ஏதோ கையாடிக்கொண் டிருந்ததைக் கண்ட எஜமானி யவன் நடத்தையைப்பற்றி வெளியூருக்குப் போயிருக்கும் எஜமான் மறுநாள் வருவதா லவரிடஞ் சொல்வதாய் சொன்ன காரணத்தினல் தூக்குப் போட்டுக்கொண்டு தற்கொலை புரிந்தான்.

***

### அஜாக்கிரதையால் ஆபத்து.

பம்பாய் பாக்யோதியா தெருவில் சக்கிபாஞ யென்னும் 3-வயது பெண் நித்திரை செய்துகொண்டிருந்த இடத்துக்குசற்று தூரத்திலெரிந்த கிர்ஸனயில் விளக்கை யக்குழந்தையின் தாய் வைத்துவிட்டு வேறே யறைக்குள் போனுள் அதற்குள் அக்குழந்தை அந்த விளக்கின்மேல் பிரண்டெரிந்து கூக்குரலிட்டது. தாய் ஓடிவந்து வேண்டிய உபகாரமும் சிகிச்சையுஞ் செய்தும் பயன்படாமல் இறந்துபோய்விட்டது.

***

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ரஹ்மணே நம:

# விஸ்வகர்ம குலோபகாரி

OFFICE OF THE REGISTRAR OF ... 1914 MADRAS

மலர்-1. { ஆனந்த௵ சித்திரை௴ 1914௵ எப்ரல்௴ } இதழ்-7

## மெய்ஞ்ஞான தீபம்.

### வாழ்நாளின் பெருமை.

நமது வாழ்நாளையும் ஓடுகின்ற நதியையும் சமானமெனச் சொல்லலாம். இவ்விரண்டும் ஓய்வொழிவில்லாமல் தத்தம் சேருமிடம்நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றன. இப்படி இரண்டையும் பணத்தின் ஆசையைக்காட்டியேனும், அதிகாரத்தைச் செலுத்தியேனும், அல்லது, பிரார்த்தித்தேனும் சற்று நிற்கச்செய்யவாவது, மெல்ல நடந்துபோகச்செய்யவாவது, ஒருவராலும் கூடாதகாரியமாக விருக்கிறது. வாழ்நாளும், நதியும்தமது தினகதியைக் கடந்தால் பிறகு நமது திருஷ்டிக்குப் புலப்படுவதில்லை. இவ்விரண்டையும் ஓர் பெரியசமுத்திரம் விழுங்கிவிடுகிறது. வருந்தியழைத்தாலும் இவைகள் மீண்டும் வாரா. ஆனால் வாழ்நாளுக்கும் நதிக்கும் ஓர் வித்தியாசமுண்டு. நதிகள் வீணில் ஓடுவதில்லை. எங்கு நதிகள் மிகுந்திருக்கின்றதோ அங்கு செல்வம் செழித்திருக்கின்றது. அஃதுசெல்லும் வழிகளிலுள்ள மரம், செடி, புல், பூண்டு, பயிர்கள் தழைத்து, எல்லாப்பிராணிகளின் ஜீவனோபாயத்திற்கும் காரணமாகின்றது. ஆனால் மனிதரின் மேலான மனோவிர்த்திக்கு இன்றியமையாத வாழ்நாளை வீணாளாக்கினால், அஃதுசெல்லும் வழியிலுள்ள கல்வி, செல்வம், தர்மம், ஞானம் என்கின்ற அருமையான பயிர்களைக் கருக்கித், தீய்த்து ஒன்றுக்கும் உதவாத வெறும் பாழ்நிலமாக்கி விடுகின்றது.

* * *

### பொறாமையால் வரும்பொல்லாங்கு.

ஒருவருடைய நற்கீர்த்தி உலகத்திலோங்கவே, அன்னியர்பொறாமையும் அதனோடு ஓங்கிவளர்கின்றது. ஏதேனும் ஓர் அரிய காரியத்தை ஒருவர்செய்துமுடித்து விட்டாலோ, அக்காரியத்தைச் செய்துமுடிக்கவியலாத பலரும் அவரைக் காரணமின்றி பகைக்கிறார்கள். அவர்கள் உண்ணுஞ்சோற்றில் விழுந்திறந்து அவர்களுடைய வயிற்றுட்போய் அவ்வுணவை வெளிப்படுத்தும் ஈக்களைப்போலவும், விளக்கின் பிரகாசத்தை அழிக்க முயலும் விட்டில் பூச்சிகளைப் போலவும், மனிதர்களை துன்பமுறக் கடித்து பதைக்கச் செய்யும் சிற்றெறும்புகளைப்போலவும், தாம் யாதொரு பயனுமடையாது, தாம்கொண்ட அதர்ம சிந்தையின் காரணமாகவே உயிர் துறக்கின்றார்கள். பொறாமையின் பயன் இதுவே!

* * *

### இயமனின் ஏக்கம்.

ஓய்வு ஒழிவில்லாத உலக அறுவடைக் காரனாகிய கொடுங்காலன் தனதுகூரிய அரிவாள்கொண்டு முதிர்ந்தபயிர்களை அறுத்து போரடியில் குவிக்கும்போது, அதனூடே, இளங்கதிர்களும், அழகியமலர்களும், மலராதமொக்குகளும், பூம்பிஞ்சுகளும், அழிவுற்றதைக்கண்டு தானும் ஏங்குகிறான்.

* * *

## கைத்தொழிலே நம்மேம்பாட்டிற்கு முக்கியகாரணம்.

### 2. இரும்புத்தொழில்.

தென்னிந்தியாவில் நாம் கண்ணுறும் பல அருமையானவும், விசித்திரமுமான பழைய இரும்பு வேலைகளெல்லாம் இந்நாட்டில் உற்பத்தியானவஸ்துக்களைக் கொண்டேசெய்யப்பட்டு வந்தனவென்பதும், அன்னியதேசத்திலிருந்து தருவிக்கப்பட்ட பற்பலவித இரும்புகளைக்கொண்டு செய்யப்பட்டவைகளல்லவென்பதும் நாமறிந்தஉண்மையாகும். நான்குஅடி குறுக்களவுள்ள குண்டுவாய்களையுடைய பெரியபீரங்கிகள் முதல், கைமரம்தைக்கும் ஆணியீறாகஉள்ள எல்லாச்சாமான்களையும் இத்தேசத்தார் அன்னியர்உதவியின்றிச்செய்துவந்தனரென்பதற்குத் தகுந்த ஆதாரமுளது. ஆளித்தலைகளையுடைய வாகுவலயங்களையும், சிங்கமுகமுடைய புஜகீருதுகளையும்,சந்திர சூரியவடிவமுடைய பற்பல கேடயங்களையும்இன்னும்யுத்தத்திற்குவேண்டிய பற்பலவிசித்திரமான ஆயுதங்களையும், முற்காலத்தில் நம்மனோர்கள் சிருட்டித்திருக்கின்றனர். இவ்வித இரும்பு, எஃகுசாமான்களைப் பார்வையிடும் மேற்றிசையார்கள் நவீனஇயந்திர சகாயங்களின்றி இந்தியர் இவைகளைச்செய்துமுடித்த சாமர்த்தியத்தைப்பலகாலும்வியந்துபேசிக்கொண்டாடியிருக்கின்றனர். அதனோடும். இந்நாட்டில் மலிந்துகிடக்கும் பற்பலஉலோகக்கனிகளையும், அவைகளிலிருந்து அபரிமிதமாய்கிடைக்கும் உலோகங்களின் உயர்வையும்கண்டு வியப்படைகிற அன்னியநாட்டார் இன்றுமிருந்து வருகின்றார்கள். இப்புண்ணிய புருடர்களின் யந்திரஉதவியால்செய்யும் தொழின்முயற்சியால் நாம் க்ஷேமப்படுவதில்லை யென்பது உண்மையெனினும், அவர்கள் நம்மிடம்காட்டிவந்ததும், வருவதுமான தொழிலின் வியப்பே நாம் முன்னேற்ற மடையக்கூடிய வகைகளைத் தெளிவாய் நமக்கு அறிவிக்கக்கூடிய வழிகாட்டிகளாகவிருக்கின்றன. அவ்வயல் நாட்டார் நமது தேசத்தின்கண் உற்பத்தியாகும் உபயோகமுள்ள சரக்குகளினிடத்தோ, அல்லது குறியுள்ள ஓர் கைத்தொழிலினிடத்தோ, விசேஷ அருமைப்பாராட்டி நம்முன்னிலையிலேனும், அல்லது தமது தேசத்தார் முன்னிலையிலேனும் அன்புடன் பரிந்துபேசினால், நாம் அவர்களது உண்மையான இருதயஉணர்ச்சியை உள்ளபடியே கிரகித்து, அவ்வித சாக்குகளைமிகுதியாக உற்பத்திசெய்தும், அவ்வித தொழிற்களை மேன்மேலும் விர்த்திக்குக்கொண்டுவரும்மார்க்கங்களைத் தேடவேண்டுமேயன்றி, அவைகளை அசட்டைசெய்து, நமது நாட்டில் இயற்கையில் அகப்படும் பல தாதுப்பொருள்களையும், அவைகளைக் கைக்கொண்டு நடத்தும் கைத்தொழிலின் ஊக்கத்தையும், அதனால் கிடைக்கும் லாபத்தையும் இழந்துவிடலாகாது. ஏனெனில், நாம் சென்ற 70 அல்லது 80 வருடங்களுக்குள் இரும்புத்தொழிலை அசட்டை செய்ததின் பயனாக எத்தனையோகோடிக் கணக்கான திரவியநஷ்டத்தை அடைந்துவிட்டோம். நமது நாட்டில் ஏராளமாய் கிடைக்கும் இரும்பு மணற்சத்துக்களையும், கனிகளையும் மறந்தோம். அக்கனிகளிலிருந்து எடுக்கப்பட்ட பற்பலஇரும்புகளைக்கொண்டு நடாத்திவந்த இரும்புத்தொழிலையும் துறந்தோம். அன்னியநாட்டார் செய்தனுப்புஞ்சாமான்களைக்கண்டு பெரிதும்வியப்புற்று வாய் திறந்தோம். நமது முன்னோர்கள் நமக்காகப்பாடுபட்டுத்தேடி வைத்திருந்ததொழிற் கண்ணியத்தையுமிழந்து மனக்கிலேசத்திற்கும் ஆளானோம்.

நிற்க, தென்னிந்தியாவில் இரும்புஉற்பத்தியாகும் ஸ்தானங்களை ஆராய்ந்தால், சேலம்ஜில்லாவே எவ்வாற்றானும்முற்பட்டிருக்கின்றது. இங்கு உயர்ந்த இரும்பு மணற்சாரிகளும், கனிகளும்ஏராளமாயிருக்கின்றன. கோயமுத்தூர், தென்னாற்காடு, மதுரைமுதலிய ஜில்லாக்களிலும் பற்பல இரும்பு கனிகள் ஏராளமாயிருக்கின்றன. இவ் விரும்புகனிகளை நம் முன்னோர்கள் கண்டுபிடித்து, அவைகளை உருப்படுத்தும் வழிகளையும் முற்றுமுணர்ந்திருந்தார்களென்பதற்கு ஐயமில்லை. தம்மன்பட்டி, ஆத்தூர், ஏத்தாப்பூர், துவரங்குறிச்சிமுதலிய ஊர்களில் எண்ணிறந்தஉலைக்கூடங்கள்சென்ற 30 - வருடங்களுக்கு முன் இருந்ததாகவும், அவ்வுலைக்கூடங்களிலிருந்து அடியிரும்புகள் மட்டுமேயன்றி, முதற்றரமான எஃகுக்கட்டிகளையும், பாளங்களையும்செய்துவெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நவீனஇயந்திரங்களின் உதவியின்றியும், சுரிகுழற்றுருத்திகள், கனத்தஇரும்புச்சூளைகள் நிலக்கரிமுதலிய பலசாதனங்களின்றியும், இந்தியர்எவ்வாறு இவ்விரும்புமணல்களை உருக்கிப்பதப்படுத்தினார்களென்னும் சந்தேகம் பலருக்குப் உண்டாகலாம். ஆனால்மேற்றிசையாரின் தற்காலஸ்திதியைச் சற்றுமறந்து, பூர்வகாலஸ்திதியைமட்டும் கவனித்தால் அச்சந்தேகத்திற்கு சமாதானம் தானே அமையும். நவீன இயந்திரங்களியாவும் நாகரீகமுதிர்ச்சியால் அடையப்பெற்றனவேயன்றி வேறன்று. இவைகளைப் பெறுமுன்னர் அயல்நாட்டார் எவ்வழியால் தங்கள் குறைபாடுகளைத் தவிர்த்துவந்தனரோ, அவ்வழியே நம்நாட்டாரும் தம் குறைபாடுகளைத் தவிர்த்துவந்தனர். நவீன சுரிகுழற்றுருத்திகள் கண்டுபிடிக்கப்படுமுன்னர், நம் நாட்டுக் கொல்லர்களின் சாதாரண உலைக்கூடங்களில் முழு எருமைத்தோலால் செய்யப்பட்ட நான்கு, ஐந்து துருத்திகளைமாட்டி இவ் விரும்பு மணல்களை உருக்கிவந்தனர். அக்காலத்தில் சொற்பச்சிலவில் ஏராளமாய் அகப்பட்ட மரக்கரிகளை நிலக்கரிக்குப் பதிலாக உபயோகப்படுத்தினர். கனத்த இரும்புத்தகட்டினால் செய்த நவீன சூளைகளுக்குப் பதிலாக ஓர்வகைச் சேர்மான மண்ணினால் செய்யப்பட்ட பெரிய மூசைகளைக் கையாடினர். குறித்தமணி நேரத்தில், குறிப்பிட்ட சூட்டினால் இரும்புமணல்களை தற்போது உருக்கப்படுவதற்குப் பதிலாக இரவுபகலாக துருத்திகொண்டு கை மாறி மாறி ஊதிஉருக்கிக் கட்டிகளாகவும்,பாளங்களாகவும் செய்து வந்தனர். இவ்வித அடியிரும்புகளை உற்பத்தி செய்ததோடிராமல் எஃகுக்கட்டிகளையும், பாளங்களையும் அடித்து முடித்தனர். இப்பழைய எஃகுக்கட்டிகள் மேற்றிசையாரின் எஃகுக்களைவிட சிலாக்கிய முள்ளவைகளாகவும், கடினமுள்ளவைகளாகவு மிருப்பதைத் தொழில் வல்லோர்களனைவரும் ஒப்புவர். இவ்விதஉயர்ந்த எஃகுக்கட்டிகளை ரசாயனப்பொருள்களின் உதவியின்றி வெகுசுலபத்தில் முடித்து வந்ததாகவும் அறிகிறோம். அடியிரும்பை உருக்குவதுபோலவே இரும்பு மணல்களை மூசைகளிலிட்டு ஒரு வகைப் பூண்டின்மூலத்தைச் சிறுதுண்டுகளாகச்செய்து ஒவ்வொரு துண்டை அவைகளுள் வைத்து குகை வாய்களை மண்சில்லால்மூடி, பாண்டங்களைவனையும் குயவனுடைய திகிரிச் சக்கரம் போன்ற ஓர் மண்சக்கரத்தில் பல் துளைகளிட்டு, அத்துளைகளில் இக் குகைகளைமாட்டி முன் கூறிய வண்ணமே உருக்கி, அவ்விரும்பு உருக்குமுகத்தில் காக்கரட்டம் பூவின் நிறம் போன்ற சுவாலை அக்குகை வாயிலிருந்து எழும்போது, மூட்டங்களைப் பிரித்து, ஆற்றி குகைகளையுடைத்து அந்த எஃகுவட்டுக்களை வெளிப்படுத்தி, அவைகளை அடித்தும், நீட்டியும், “ஒற்றை வட்டுளி” என்றும், “இரட்டை வட்டுளி” என்றும் பிரசித்தப்படுத்தினர்.

இச்சுதேசிய தொழின்முயற்சிகளை, ஈஸ்டு இந்தியா கம்பெனி யாரால் அறிந்த மேனாட்டார் சுமார் கி. பி. 1820 வருடத்தில் பாங்கிப்பேட்டை யெனும் போர்ட்டுநோவாவில் இரும்பாலை யொன்றை ஸ்தாபித்து, முற்கூறிய இடங்களிலிருந்து இரும்புமணல்களை பரிசல்களிலேற்றி காவேரி

திவழியே கொண்ர்ந்து கொள்ளிடத்தில் மாறி ஏராளமாகப் பெற்று அத்தொழிலை நடத்திவந்தனர். அத்தொழிற் சாலையில் வண்டி அச்சுகளும், வண்டிப்பட்டடைகளும், பலதினுசு திரணைக்கம்பிகளும், சதுரக் கம்பிகளும், பல கனமுள்ள ஆலைத்தகடுகளும் செய்யப்பட்டு வந்தன. இவ்வாலை ஏற்படவே வெளியூரிலிருந்த வேலைக்காரர்கள் பலரும் இவ்வூரில் குடியேறினார்கள். அதுமுதல், கடின உழைப்பால் தாங்களே சேகரித்து உருக்கிவந்த இரும்புத் தொழிலைக் கைவிட்டனரென்று சொல்லலாம். அன்னியர்கொடுத்த சொற்ப கூலிக்கு உடன்பட்டு, “வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தவர்” போலவும், உள்ளங்கையில் பாயசத்தைஎறிந்து முழங்கையை நக்கி உருசிபார்த்தவர்” போலவுமானார்கள். பலவருடங்களாகப் பரங்கிப்பேட்டையில் நடைபெற்றுவந்த இவ்வாலையை கள்ளிக்கோட்டைக்குப் பக்கலிலுள்ள பேப்பூருக்கு மாற்றினார்கள். ஸ்தாபிக்கப்பட்ட சில வருடங்களுக்குள் இவ்வாலையும் மூடப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து பல இரும்பு சாமான்களும் போட்டியாக வரத்தலைப்பட்ட காரணமாகவே இவ்வாலை மூடப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்விதமாக இரண்டு ஆலைகளும் மூடப்படவே நம் நாட்டு இரும்புத்தொழில் வல்லார்கள், “அடுப்பு நெருப்பும் போய், வாய்த்தவிடும் இழந்தவன்” கதையை ஒத்து, தமது மூதாதையரின் தொழின்முறைகளையும் பறிகொடுத்து, அன்னியர்கொடுத்த சொற்பவேதனத்தையும் இழந்து, தற்காலம் உழுபடை அடித்தல், பாக்குவெட்டி செய்தல், வண்டிச்சக்கரங்களுக்கு இரும்புக்கட்டு மாட்டுதல், ஒடிந்தவண்டி பிருசுகளைத் திரட்டுதல், கடையாணி நீட்டுதல் முதலிய கீழ்த்தரமான அற்பவேலைகள் அகப்பட்டால், அரைகுறையாகச்செய்து, அரைவயிற்று சோறுமற்று, அல்லலுறும்படிநேர்ந்துவிட்ட தௌர்ப்பாக்கியத்தை என்னென்றியம்புவோம்! இவ்வெளிய தொழிலாளர்கள் தங்கள் தொழிலை, இனி எப்படி சுலபசாத்தியமாக அதன் பூர்வீக நிலைமைக்கேனும் கொண்டுவருவார்கள்? அயல் நாட்டாரால் இந்நாட்டில் ஏராளமாய் நிரப்பியிருக்கும் இரும்புச்சாமான்களுடன் எவ்விதம் போட்டிபோட்டு தம் கைச்சரக்குகளை விலைப்படுத்துவார்கள்? அடிக்கடி புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, சாமான்கள்செய்யும் முறையில் பற்பல மாறுபாடுகள் தினேதினே விர்த்தியாகு மிந்நாளில் எங்ஙனம் நம் நாட்டுக்கம்மியர் தம்வேலைகளை சுலபத்திலும் தீவிரத்திலும் இயற்றும் வகைகளை முற்றும் உணர்வார்கள்? இயந்திரங்களின்முன்பாக எவ்விதந் தங்கள்கைகளால் அவ்வேலைகளைச் செய்து லாபம் பெறுவார்கள்? இவ்வித கஷ்டங்களையெல்லாம் நம்நாட்டுச் சம்மியர் நன்குணர்ந்து, சீர்படுவதற்கான ஏதேனுமொரு சிறுமுயற்சியைக் கைக்கொள்வார்களானால், இந்தியாவில் ஒரு தொழிற் புரட்சி உண்மையாகவே ஆரம்பித்து விட்டதாகச்சொல்லலாம். இவ்வித தொழிற் புரட்சியால் அவர்கள் சீர்படுவதோடும், நம் குலமும் செழிப்படையும் என்பதற்கு ஐயமில்லை.

இவ்வித தொழிற் புரட்சிக்கு மூலதனம் இன்றியமையாததாக விருக்கிறது. இரும்புத்தொழிலை விர்த்திக்குக் கொண்டுவருவதற்கு சொற்ப மூலதனமேபோதுமானது. இம்மூலதனத்தை, பணமுடைய அன்னிய ஜாதியர்களைக் கூட்டுச்சேர்த்து, நாணயமாக நடந்துவருவதாக உறுதிசெய்துகொள்வதாலும், கவர்ன்மெண்டார் தற்காலம் ஐக்கிய சங்கங்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கு மூலதனம் கொடுத்துதவி வருவது போலவே, கைத்தொழிலாளிகளின்ஐக்கிய சங்கங்களுக்கு மூலதனம் கொடுத்துதவக் கேட்டுக் கொள்வதாலும், போதுமான வரையில் சேர்த்து வேலைகளை ஆரம்பிக்கலாம். இச் சென்னை ராஜதானியில் கைத்தொழில்களைப் பரவச்செய்வதற்காக ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தரை கவர்ன்மெண்

டார் நியமித்திருக்கிறார்கள். நம்மனோர் உண்மையான ஊக்கத்துடன் ஓர் கைத்தொழிலை நடத்த உறுதிகொண்டு அவ்வுத்தியோகஸ்தரை திருப்தி செய்யக்கூடுமானால், அவ்வித மூலதனத்தைப் பெறுவதற்கான மார்க்கத்தை நமக்கு அவர் போதிக்கக் கடமைப்பட்டிருப்பார். அதனோடும் அத்தொழில்களுக்கான இயந்திர சாதனங்களையும் காட்டுவார். இத்தகைய பிரயத்தனங்களில் தலையிடு முன்பாக, உள்ளூர், வெளியூர் வாசிகளான நம்மனோர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய தொழின்முறைகள் சில இருக்கின்றன. அதாவது, முதலில் இரும்பு கடைச்சல் பட்டரைகளில் பழகி சைதேர வேண்டும். துளையிடுகிற 'டிரில்', 'பஞ்ச்', என்னும் இயந்திரங்களைக் கையாடும் பழக்கத்தையும் பெறவேண்டும். இவைகளின் தேர்ச்சியாலன்றி இரும்புத் தொழிலை சுலபமாகவும், நேர்த்தியாகவும் செய்யமுடியாதென்பதை நம்மவர் நன்குணர்ந்து இவ்வேலைகள் நடக்கும்வெளியூர்களில் இரண்டொருமாதம் தங்கியேனும் கற்றுக்கொள்வதற்குத் துரிதங் காட்டவேண்டும்.

இவ்வாறு இவ்வேலைகளை முதலில் உணர்ந்தும், மூலதனத்தைப் பின்னர் அடைந்துவிடின், எத்தொழிலைஆரம்பித்தால் லாபம் கிட்டுமென்பதை நன்காலோசித்து அதனைப்பின்பற்றல்வேண்டும். இவ்விதமாக ஏற்படும் தொழிற்சாலைகளில் ஏதேனும்குறித்த ஓர்வேலையைச்செய்யவேண்டுமேயன்றி, பலவேலைகளையும் செய்து பரிதபிக்கலாகாது. அவ்வேலைகளில் சிலவற்றை நாம் கீழே குறிப்பிடுகிறோம். முதலில் பேனாக்கத்திகளைச்செய்ய ஆரம்பிக்கலாம். இத்தொழிலில் அதிகலாபமிருக்கிறது. இரண்டுவிரா கனிடை யிடையுள்ள இக்கத்தி அலகுகள் பன்னிரண்டு அணா முதல் ஒன்றரை ரூபாவிலையுள்ளவைகளாக விருக்கின்றன. க்ஷவரக் கத்திகளையும் பலஅளவில்செய்யலாம். இவ்விதகத்திகள் சேலத்திலும், திருவண்ணாமலைக்குச் சமீபத்திலுள்ள இரும்பேடென்னுமூரிலும், செங்கற்பட்டுக் கருகாமையிலுள்ள பெரும்பேறு என்னுமூரிலும் பெரும்படியாகச் செய்யப்பட்டபோதிலும், அவைகள் மேனாட்டுக்கத்திகளைவிட அதிக சடின துவைச்சலுள்ளவைகளாகவும், உறுதியுள்ளவைகளாகவு மிருப்பதை யாவரும் அறிவர். கதவுகளுக்கு பூட்டப்படும்கீல்கள், நாதாங்கிகள்முதலியவைகளைத் தரவாரியாகச்செய்து ஜப்பான்முதலிய வர்ணப்பூச்சுகள் பூசிவிற்கலாம். பெட்டிகளுக்கு கீல்களும், கைப்பிடிகளும் தினுசுவாரியாகச்செய்யப்படலாம். 'கிளிப்ஸ்' எனும்விற்களை செய்து முலாமிட்டுவிற்பனைசெய்யலாம். மரை ஆணிகள் பலவும் மரையுடன் பல்அளவில் செய்து கட்டுக்கட்டாக அனுப்பப்படலாம். 'டீ' இரும்புகளில் சுலபமான உழுப்படைகளும், கலப்பைகளும்செய்து லாபம்பெறலாம். மண்வெட்டிகள், முள்கள், கோடரிகள், அரிவாள்கள் முதலியவைகளை அச்சுகளிலடித்து நயமாகச்செய்து நமதுகடைகளில் பரப்பிவிடலாம். இன்னுமிவைபோன்ற எத்தனையோசுலபமான தொழில்களிருக்கின்றன. இவைகளனைத்திற்கும் வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகிற இரும்புகளையே உபயோகப்படுத்தலாம். அல்லது பார்சிபிரபுவாகிய டாட்டாதொழிற்சாலையிலிருந்துவெளிவரும் இரும்புக்கம்பி, தகடுமுதலியவைகளையும் உபயோகப்படுத்தலாம். ஆதலின் இத் தொழில்களையெல்லாம் கவனித்தால், இவைகளுக்கு அதிக இயந்திரசகாயமும், மூலதனமும் அவசியமில்லையென்பது நன்குபுலப்படும். இவ்வித வேலைகளைநடத்த புத்திநுட்பமுள்ள நம்மனோர்களுக்குச் செல்வமுற்றவர்கள் சிறுகச் சிறுகப்பணமுதவி, உற்சாகமும், ஊதியமும் உண்டாக்கினால் தேசமுழுதும் கனிந்து பரவக்கூடிய பெருந்தொழில்கள் நமது நாட்டில் ஏராளமாய் நடைபெறுமென்பதற்கும், பூதபௌதிகத்தால் பயிர்த்தொழிலுக்கு அடுத்துநேரும் குறைபாடுகளும் ஒருவாறு ஒழிந்து, அவற்றால் நமது தேசம பலவழியிலும் சிறப்படையும்என்பதற்கும் சந்தேகமேயில்லை.

**பத்திரிகாசிரியர்.**

## பெண்கல்வியும் பத்திரிகையின் பயனும்.

தமிழ்நாட்டைப்பார்க்கிலும் தெலுங்கு தேசத்திற் பெண்கல்வி ஒருவாறு உயர்ந்துள்ளதென்றும், அவற்றிற்கு அத்தேசத்திலுள்ள வித்தியாபிமானிகளே முக்கிய காரணரென்றுந் தெரியவருகிறது. அத்தேசத்தைப்போன்று தமிழ் நாட்டாரும் பொது நன்மையை நாடிப் பலவிடங்களிலும் பாடசாலைகளை ஸ்தாபித்தும், பெண்கள் அறிவிற்கு இன்றியமையாத முக்கிய விஷயங்களைப் பாடமாய் வைத்தும் அத்தியாவசியகமான நூற்களையெல்லாம் ஒருங்குதிரட்டிப் பாடசாலையில் புத்தகச்சாலை ஒன்றுவைத்தும் அவர்கள் அறிவு விசாலிக்கும்படியான பற்பல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் பரோபகாரமாய்ப் பிரசுரஞ்செய்தும், நாட்டின் நன்மைக்குப் பாடுபடல்வேண்டும். பாடசாலையின் வருஷோற்சவ காலங்களிலும், பண்டிகைமுதலிய மற்றச்சமயங்களிலும் வேடிக்கைகளும் வெகுமதிகளுஞ் செய்தும், தக்கபெண்களுக்குப் பரிசளித்தும், வித்தியாவேதனங்கொடுத்தும், கனப்படுத்தினால் அவர்கள் கல்வியைக் கற்கண்டினும் இனிதாய்க் கருதி வாளாவிராது உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் கற்பார்கள். தற்சமயம் தமிழ்நாட்டுப் பெண்கள் தெலுங்கு தேசப்பெண்களைப் போன்று பத்திரிகைகளை வெளியிடவும் சபைசேர்ந்து பிரசங்கமுதலிய பிறகாரியங்களைச்செய்யவும், முடியாமற்போயினும், தங்கள் இளமையிற் கற்ற கல்வியை மறவாமல்விர்த்திசெய்தும் தாங்கள் அறிந்ததை மற்றப் பெண்களுக்குப் போதித்தும், தங்கள் தங்கள் படிப்பை மேன்மேலும் விர்த்திசெய்தும், பத்திரிகைகளைப்படித்தும் பயனடையக்கூடும். பத்திரிகைகளாற் பல அரிய பெரிய விஷயங்களையும் வித்துவான்களெழுதும் வியாசங்களையும் பலதேச வர்த்தமானங்களையும். பலவேறு அதிசயங்களையும், நீதி, நியாயம், ஒற்றுமை, தேசாபிமானம், இராஜாங்க சுதந்தர முதலியவைகளையும், பெண்களறியத்தக்க பற்பல விஷயங்களையும், தெளிவாய்த் தெரிந்துகொள்ளலாம். ஆடவர்களுக்கு ஆங்கிலேயம்முதலிய பலபாஷா பயிற்சியாலும், பலசாதகங்களாலும் அவர்கள் அறிவு விசாலிக்க அநேக வழிகளுள. இத்தேசப்பெண்களின் நிலைமை அத்தன்மையதன்றே! அவர்களெப்போதும் அடுப்பங்கறையையே அடைகாத்து, அடிமைகளிலும் கேடாய், அஞ்ஞான விருளில் ஆழ்ந்துகிடக்கச் சம்பவித்துளதன்றே?, ஆடவர்கள் இப்படிப்பட்டப் பெண்களைக் கரையேற்றமுயலுவதே பெரும் புண்ணியமாகும். இச்சமயம் பெண்களுக்குக் கல்வி கற்பித்துச் சுயபாஷா பத்திரிகைகளை வாங்கிப்படிக்கச்செய்து, அவற்றால் பயனடையும்படி செய்வதற்கொப்பொன்றில்லை. பத்திரிகைகளே பெண்களுக்கும் பிறருக்கும் எண்ணிறந்த விஷயங்களை எடுத்துரைத்து அவ்வக்காலத்துக் கேற்றவாறு புத்திமதிகளைப் போதிக்கவல்ல போதனகுருவாகவிருக்க வல்லவையன்றோ? ஒரு தேசத்தார் சீர்கெட்டமைக்கு அந்நாட்டிற் பத்திரிகைகள் இல்லாமையும், மற்றதேசத்தார் சீர்திருத்தம் பெற்றமைக்கு அத்தேசத்தில் பல பத்திரிகைகள் பரவியிருப்பதுமே பிரத்தியக்ஷப் பிரமாணமாகவிருக்கின்றனவன்றோ? ஆயின்மையின், எத்தேசத்தில் ஆடவரும்பெண்டிரும் ஆவலாகப் பத்திரிகைகளைப் படிக்கின்றார்களோ, அத்தேசத்திலிருப்பவர்களே அதிசீக்கிரத்தில் நாகரிகமடைவார்களென ஆக்ஷேபமின்றி நம்பலாம். இத்தேசத்திற் பெண்கள் கல்வியில்லாமையினாலும், பத்திரிகைகளைப் படித்துத் திருந்தாததனாலும் பாடுபட்டுத் தேடியபணத்தைப் பலவிதமாய்ப் பாழாக்குகின்றார்கள். அவர்கள் படித்துத்திருந்தி நகைகள்செய்யும் மடமையை மட்டுப்படுத்துவார்களாயின், இத்தேசத்தின் பணம் பாதிக்குமேல் பாழாகாமற் காக்கப்பட்டு இத்தேசத்திற்கே பற்பல நன்மைக்குஏதுவாய் முடியுமே. பின்னும் அவர்கள் பொருட்டாகச்செய்யும் மற்றச் செலவுகளும் ஒன்றின்பின்னொன்றாய் ஒழிந்தால் இத்தேசத்தின் பணத்திற்பெரும்பாகம் தொழிற்சாலை முதலிய வற்றிற்கு மூலதனமாய் ஏற்படுமே. பெண்கள் பொருட்டு நகை முதலிய வற்றிற்காக நேரிடும் வீண்செலவுகளை நிறுத்த முயலுகிறவர்கள் முதலில் பத்திரிகைகளுக்கு அற்பத்தொகையை யனுப்பி அவற்றைப் பெண்கள் பெற்றுய்யும்படி செய்யலாகாதா? இன்றேல் பேதைப்பெண்கள் கெடுவதுமன்றி ஆடவர்களும் அவர்கள் வார்த்தைக்கிணங்கி உற்சவங்களிலும், ஊர்கோலங்களிலும், சுபதினங்களிலும், கல்யாணங்களிலும், மற்றக் காட்சிகளிலும் கண்டபடி காசைக்கரைத்துக் கடன்காரராவார்கள்.

“வேலியே பயிரை மேய்ந்ததைப் போலவும்” “பாண்டமே பாலைக் குடித்ததைப் போலவும்” பெண்கல்வியைப் போற்றிக் காக்கக்கடமைப்பட்டுள்ள கல்வியறிவுள்ள ஆடவர்களே பெண்கல்வியால் தீமைவிளையுமென்று திரஸ்கரித்துப் பேசியும், ஒருவாறுகற்றாற் போதுமென்று அஞ்சிஉரைத்தும், இருமனப்பட்டுப் பத்திரிகைகளில் வரைந்தும, சமயானுகுணமாகப் பத்திரிகாவாதமும், வாக்குவாதமும்செய்து வருவதால் வருவதொன்றில்லை. ஆண்பிள்ளைகள் எவ்வளவுதான் கல்வி கேள்விகளிலும் அறிவொழுக்கங்களிலும் பெண்களினும் அதிகரித்திருந்தாலும், கல்விவாசனை இல்லாத பெண்கள் சகவாச தோஷத்தால் அவர்கட்குள்ள புத்தியும் மழுங்குமென்பதிற் சந்தேகமில்லை. இந்நாட்டிற் பெண்கல்வி பரவுமாயின் நாட்டிற்கே மிக்க நன்மை உண்டாகும்.

K. அலர்மேலு மங்கையம்மை, சென்னை.

---

## விராட்டு என்பது ஆதிவஸ்து.

ஸ்ரீ வித்தியா ரண்ணியரால், விரயத்து உபநிஷதம், அல்லது வாஜஸனேயி பிராம்மண உபநிஷத்திலிருந்து முதலில் ஆராய்ந்தெடுத்தெழுதியது விரயத்து ஆரண்ணியகத்தின் மூன்றாவது வியாக்கியானத்தின் நாலாவது பிரிவு பிராம்மணத்தில் “விராட்டு” வை இதற்கடியில் வருவதுபோல் விவரித்துக் காட்டுகின்றது.

அதாவது, சரீரம்பிறப்பதற்கு முன்னதாய் ஆத்மா வேறுபாடுள்ளவடிவங்களாக இருந்தது. ஆத்துமா மனுஷ வடிவுகொண்டு உடனே தன்னைச்சுற்றிலும் பார்த்தான். அந்தஆதிவஸ்து தன்னைத்தவிர மற்றொன்றுங் காணவில்லை. அவன் முதலில் நானே நான் யென்று சொன்னான். ஆகையால் அவனுடைய பெயர் நான் என்பதாக இருந்தது. அதன்பின்பும் இப்போதுகூட ஒருமனுஷனை அழைக்கும்போது நான் தான் என்றுமுதலில் மறுமொழி சொல்லுகிறான். அதன் பின்பு அவனுக்குரிய மற்றொரு பெயரைச் சொல்லுகிறான்.

மேன்மையைத்தேடுகிறஇதுக்கெல்லாம் முன்பட்டவனாயிருக்கிற அவன் தன்னுடைய சொந்தமேன்மைக்குப் பாபகரமான தடங்கலாயிருக்கிறஎல்லாவற்றையும் தீயால் எரித்துவிட்டான். ஆகையால், இந்த உண்மையையறிந்த மனிதன் இதைச்செய்து தனக்கு முந்தியிருக்க வகைதேடுகிற அவனை வெல்லுகிறான்.

அவன் பயமுற்றான் அதனால்தான்மனிதன் தனியாயிருக்கும்போது பயப்படுகிறான். ஆனால் அவன் தன்னைவிடவேறொன்றுமில்லாததினால் நான்பயப்படவேண்டியதென்னவென்று ஆலோசித்தான். இவ்விதமாக அவனுடைய பயம் அவனைவிட்டுப்போய்விட்டது. பயமானது மற்றொருவ

னுக்காகையால் அவன் எதுக்காகப் பயப்படவேண்டும்.

அவன் ஆனந்தப்படவில்லை. ஆகையால் மனுஷன் தனித்திருக்கும்போது ஆனந்தப்படுகிறதில்லை. மற்றொருவர் இருக்கவேண்டுமென்று அவன் கோரினால் உடனே அவன் ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டிருக்கும்படியான அவ்விதமாய் விட்டான். தன்னிலிருந்தேதானே இரண்டாகும்படி இதைச்செய்தான். இவ்விதமாக ஒரு புருஷனும் ஒரு மனைவியுமானான். ஆகையால் இது அவ்விதமாகப் பிரிந்த சரீரமாகவிருந்தது. அது தன்னிற்றானே அபூரணமான பாதிசரீரமாக விருந்தது. யாஞ்ஞவற்கியர் அதைப் பாதி சரீரமென்றே சொல்லியிருக்கிறார். இந்த வெற்றிடம் ஸ்திரீயினால் பூரணமாக்கப்பட்டிருக்கிறது. அவன் அவளைச்சேர்ந்தான். அதனால்மனுடர் உற்பத்தியானார்கள்.

அவள் அவனிடத்திலிருந்து என்னையுண்டாக்கியிருக்க, முறையற்ற விதமாக அவன்என்னை எப்படிச்சேருவான். நான் இப்போது ஒரு மாறுவேஷங் கொள்வேனென்று அனுமானத்தோடு ஆலோசித்து அவள்ஒரு பசுவானாள். அவன்ஒரு இடபமாகி அவளைப்புணர்ந்தான். கன்றுகள் பிறந்தன. அவள் ஒரு கோளிகைக் குதிரையானாள். இவன் ஒருமாப்பிள்ளைக் குதிரையானான். அவள் ஒரு பெண் கழுதையானாள். இவன் ஒருஆண்கழுதையானான். இவ்விதமாக அவன் அவளைமறுபடியுஞ்சேர்ந்தான். ஒருகுளம்புள்ள சந்ததிகள் உண்டாயின. அவள் ஒரு பெண் வெள்ளாடானாள் இவன் ஒரு ஆண் வெள்ளாடானான். அவள் ஒரு பெண் செம்மறியாடனாள் இவன் ஒருஆண் செம்மறியாடாகி யவளைப் புணர்ந்தான். அதனால்செம்மறி ஆடுகளும், ஆடுகளும் உற்பத்தியாயின. இவ்விதமாக நுட்பமான ஜந்துக்களாகிய யாவற்றையும் ஜதைஜதையாகச் சிருஷ்டித்தான்.

இந்தவாக்கியத்தின் அநுபந்தம் அதிசயமுடையதாக இருக்கின்றது. ஆனால் அதை இவ்விடத்தில் குறித்துப் பேசினால் வெகுவாய் விரியும். விராட்டு தானாகிய வஸ்துவை ஆணாகவும் பெண்ணாகவும் பிரித்ததாகச் சொல்லப்படும். அபிப்பிராயம் ஒருபுராணத்திற் சொல்வதைவிட அநேக புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப்பிரகாரமே முதல்மனு அவனுடைய புத்திரியாகிய சதரூபாளுடன் முறைதப்பினவிவாகமும் சம்பந்தமுஞ் செய்ததாகச் சொல்லுகின்றது. உபநிஷத்தின் வியாக்கியானிகள் அந்தக்கதை இந்தஇடத்தில்குறிக்கவேண்டுமென்று அபிப்பிராயஞ் செய்கிறார்கள். ஆனால்மனுவைக் குறித்துச்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் விராட்டு அந்தப்படி பிறந்தவர்களின் சந்ததியென்றும் மனு அவருடைய சந்ததியென்றுங் காட்டுகிறதாக வெளிவந்திருக்கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

V. மௌனதுருத்திரமூர்த்திஆச்சாரியார்
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

## மாந்தைமாநகர்.

இந்து தேசச் சரித்திரமானது கற்பிதக் கலப்பன்றியில் உண்மையாகக் கூறப்படாமையால் சரித்திரசம்பந்தமான பலமுக்கிய விஷயங்களை நிரணயிக்கக் கூடாமையாகிறது. 'ஏதேனும் ஒரு விஷயத்தை உண்மையென்று நம்பி அவற்றை ஆராய்ச்சி செய்யப்புகுந்த எத்தனையோபழஞ்சரிதை வல்லோர்கள் இவ்வித ஆகாயக் கோட்டைகளி லபிமானம்வைத்து அவலம்பித்ததற்காக பின்பு வருந்தியிருக்கின்றனர். சில



சரிதைவாணர்கள் இவ்வித பண்டைய விஷயங்களை, பாஷை, ஆசாரம்,கர்ணபரம்பரையாக வழங்கிவரும் கதைகள் முதலியவற்றால் பலவித ஆராய்ச்சிசெய்து அவற்றின் உண்மைகளைச் சந்தேகவிபரீத மறநிலைநாட்டியு மிருக்கின்றனர். இவ்வாராய்ச்சி முறைகளை நன்குணராத சிலஜாதியார் தங்களுக் குரிய சரித்திரங்களின் உண்மையை முற்றுமுணராமலே, அவைகளை ஆதாரமாகக்கொண்டு சமயாநுகுணமாக வாதித்துவந்திருக்கின்றனர். இவ்வாறே பூர்வத்தில் நம் குலோற்பவர்களால் சிருட்டிக்கப்பட்டிருந்த மாந்தைமாநகரின் உண்மைநிலையை உணராமலே நம்மனோர்கள்நாளது வரையிலுமிருந்து வருவதாகத் தெரிகிறது. உணர்ந்திருந்தால், மாந்தைநகரைப்பற்றி 'சித்தூர்ஜில்லா தீர்ப்பு' எனும் நமதுவேதபுஸ்தகத்தில்வெகு சமத்காரமாகவும், சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கும் இச்சரிதையின் உண்மையை உலகப்பிரசித்தப்படுத்தியிருக்கக்கூடும். அந்நகர் தோன்றியழிந்தகாலங்களையும் நிருமிக்கப் பட்டிருந்த இடத்தையும், அந்நகராதிபதிகளின் பெயர்களையும், ஆயுள்காலங்களையும் செவ்வனே விளக்கியிருக்கவும் கூடும். அவ்வாறில்லாமையால், இம்மாந்தைநகரை 'மலடிமைந்தன்' கதையென இக்காலத்தில் பலரும் எண்ண இடமுண்டாயிற்று.

மாந்தைமாநகர் உண்மையிலிருந்ததெனை நம்புவதற்கு சில ஆதாரங்களிராமலில்லை. இவற்றில் முக்கியமானது குமணன் சரித்திரமேயாம். குமணன் என்பான் கொங்கநாட்டைச் சேர்ந்த ஓரூரின் சிற்றரசன். இவன் தண்டமிழ்ப் பிரியனாய், கம்மைபடைபுர்நாவலருக்குப் பொன்மாரிபொழிந்த வள்ளல். இவனது நாட்டை சூழ்ச்சியால் கவர்ந்த இவன் தம்பி இளங்குமணனென்பான் காடுபற்றியிருந்த தன்தமயன் தலையை தன்னிடம் கொண்டுவருபவர்க்கு கோடிசெம்பொன்னளிப்பதாக முரசறைவித்திருந்தனன். குமணன் நீதியோடு ஆண்டுவந்தவனாதலின் இப்பாதகச் செயலுக்கு உடன்படுவாரில்லாமற் போயிற்று. குமணன் அரசாட்சி புரிந்தகாலத்து தாம் பெற்றநன்றியை மறவாதபலரும் இவனைக் காட்டிடைக்கண்டு ஊண், உடையளித்து உதவிவந்தனர். இங்ஙனமிருக்க, வறுமையால் வருந்திய ஒப்பிலாமணிப் புலவர் எனும் புலவர் இவனை அணுகி தம்துயரை ஓர் அகவற்பாவால் உணர்த்த, அவ்வரசன் தன் தலையைக்கொய்து தன் தம்பிக்கு கொடுத்து பரிசுபெற்று சுகமே வாழ்ந்திருக்கச் சொல்லவும், அதற்கு அப்புலவர் இசையாது, இளங்குமணனின் வெம்பகையைத் தீர்க்கவேண்டி ஓர்உபாயத்தைமனதிலுன்னி, மாந்தை நகரடைந்து ஆங்கு வசித்த விஶ்வகர்ம வம்ஸாதிபதியை வணங்கி, குமணன் தலைபோன்ற ஓர் மாயத்தலையை சிருஷ்டித்து வாங்கி இளங்குமணன் பால் சென்றடைந்தனரென இச்சரித்திரம் கூறுகின்றது. இவ்வித சந்தர்ப்பத்தை ஒப்பிலாமணிப் புலவர் எனும் புலவர் "மாந்தையிலே வாழ மகுடத்தியாகியுனக் கேந்துதமும்போ விரண்டுளவே—வேந்தர், முடித்தமும்புன் காலிலே முத்தமிழோர்க்கியும், படித்தமும்புன் கையிலேபார்" எனும் பாடலால் விளக்கி யிருக்கின்றனர். இக்குமணன் இற்றைக்கு ஆயிரத்தெழுநூறு வருடங்களுக்கு முன்னிருந்தானெனச் சரித்திர வாயிலாக நிரணயிக்கப்பட்டிருக்கின்றது. இக்குமணனுக்குப் பிற்காலத்தில் தோன்றினவரும், இன்றைக்கு சுமார் 690-வருடங்களுக்குமுன் அவதரித்தவருமான பட்டினத்தடிகளும் இதனை அநுசரித்தே தம் திருப்பாடற்றிரட்டில் "ஒரு நான்கு ஜாதிக்கு மூவகைத் தேவர்க்கு மும்பர்கட்குந், திருநானுந் தீர்த்தமும் வேறுமுண் டோதிசை நான்முகனார், வரு நான் முன் தோன்றிய மாந்தைக் கம்மாளர் வகுப்பொழிய, குருநாதனை வேறில்லையிந்தக்குவலயத்தே" என்று பழையபிரதிகளில் காணப்படுமிப் பாடலால் மாந்தை நகரொன்று உண்மையிலிருந்த தென்றும், திருவிட மருதூர் மும்மணிக்கோவையில் "தெய்வக்கம்மியர்

கைம்முயன்று வருத்த ஓவல்நாற் செம்மையில் பூவியில்வீதி” எனும் ஆசிரியப்பாவினால் அவ்வூர்வீதிச்சிறப்பையும், அக்காலத்திருந்த கம்மியரின் தெய்வத்தன்மையும், சித்திவல்லபமும் தோன்றக் கூறியிருத்தலையுங்காண்க.

இந்நகரிருந்த இடத்தை சரியாகக்குறிப்பிடக்கூடவில்லை. மேற்கூறிய புலவர், பாடலில் ‘முத்தமிழோர்க்கியும் படித்தழும்பு’ என்பதால் இந்நகர் தமிழ் நாட்டின் எல்லையினுள் இருந்ததென்றும், அப்புலவர் அந்த மாபத்தலையை இரத்தம் சொட்டும் வண்ணமே இளங்குமணனிடம் சேர்த்தாரென்று கூறப்படுவதால் அம்மாந்தை நகர் இச்செந்தமிழ் நாட்டினுள் இருந்திருக்க வேண்டுமென்றும் யூகிக்க இடந்தருகின்றது. தமிழ் வழங்கிவந்த இடங்களை ஆராயுமிடத்து, “நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்” என்று சிலப்பதிகாரம், வேனிற்காதையில் சொல்லப்பட்டிருப்பதால் திருவேங்கடம், கன்னியாகுமரி இவைகள் வடக்கெல்லை, தெற்கெல்லையாகவும், குடகுமலையும், குணதிசைக் கடலும் மேற்கெல்லை, கிழக்கெல்லையாகவும் விளங்குவதே செந்தமிழ் நாடெனப்புலப்படுகிறது. இங்குகூறிய எல்லைகள் மூன்றாவது தமிழ்சங்கக் காலத்திலுள்ளவைகளாகும், இக்காலத்திருந்த தென்மதுரை, கபாடபுரம் முதலிய பல பட்டினங்களும், எழ்தெங்க நாடுமுதலிய நாற்பத்தொன்பது நாடுகளும் கடல்கொண்டனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. கபாடபுரமும், தென்மதுரையும் இற்றைக்கு 4010-வருடங்களுக்குமுன் அழிந்ததெனநிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பிலாமணிப் புலவர் இன்றைக்கு 1700 - வருடங்களுக்கு முன்னிருந்தவரென நிரணயிக்கப்பட்டவாற்றால், இம்மாந்தை நகர் கடலாலழிந்த நாடுகளில் ஒன்றல்லவென்றும், தென்மதுரை அழிந்த 2310-வருடங்களுக்குப் பின்னுமிருந்ததென்றும் பெறப்படுகிறது. அதனோடும், மாந்தைநகர் கடல்கொள்ளப்படாமையால் மூன்றாவதுசங்கக்காலத்தும் அதற்கு முன்னும் அந்நகர் இல்லையெனச் சந்தேகிப்பதற்கும், ஒருகால் உளதாயின் அந்நகர் உள் நாட்டினிடத்து அமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று யூகிக்கவும் இடந்தருகிறது. நிற்க, சிலோன், சுப்ரீம் கோர்ட், நியாயவாதிகளி லொருவராகிய மிஸ்டர். ரத்தினவீரர் அவர்களால் எழுதப்பட்டுள்ள “விஸ்வகர்மாவும் அவர் சந்ததியாரும்” எனும் (ஆங்கிலேய) புத்தகத்தில், இலங்கைத் தீவில், யாழ்ப்பாணமார்க்கத்திலுள்ள, அரிப்போ என்னுமிடத்திற்கு 13-மைல் வடக்கேயுள்ளதொரு சிற்றூரே மாந்தைமாநகரமாக முற்காலத்து விளங்கிற்றென்றும், அதில் விஸ்வகர்ம வம்சத்தார்சுமார் 2500-வருடங்களுக்குமுன் ஓர் காந்தக்கல் கோட்டையைக்கட்டி அரசுபுரிந்து வந்தனரென்றும், பின்பு பர்துலஹரி என்னு மரசனின் சூழ்ச்சியால் அக்கோட்டை அழிவுண்டதென்றும் மூரண்படக்கூறியிருப்பதையும் காணலாம்.

இத்தமிழ் நாட்டாரும் மாந்தைமாநகரின்சிறப்பை, பெரும்பாலும் முற்கூறியவாறேகூறியிருக்கின்றனர். அக்கோட்டைவாருவைக்கோலால் தீயிட்டு, பகைவரால் அழிக்கப்பட்ட காலத்து தெய்வீகத் தன்மையுடைய அந்நகர்வாசிகள் ஓர் நள்ளிரவில் தங்கள் தங்கள் ஆகாயவிமானங்களிலேறி வெளிதேசம் சென்றடைந்து சுகமே வாழ்ந்தனரென்று கூறப்பட்டிருக்கின்றது. இச்சரித்திரங்களில், மிகைப்படக்கூறப்பட்டுள்ளவைகளை நீக்கி மற்ற விஷயங்களை நோக்கின் மாந்தை நகர் ஒன்று உண்மையி லிருந்திருக்க வேண்டுமென்று திட்டமாய்சொல்லலாம். இப்பெயருடைய பல ஊர்களும் இப்பொழுது பிரமலில்லை. தஞ்சைஜில்லா, நன்னிலத்திற்குச் சமீபத்தில் மாந்தை யென்னும் சிற்றூர் ஒன்று இருந்து வருவதால் இப்பெயரும் நூதனமன்று.

ஆகையின் முக்கிய சரித்திர சம்பந்தமான இந்நகர் மிகவும் புராதனமானது பற்றியும், தென்னிந்தியாவில் வசிக்கும் 5, 59, 205, ஜனத்தொகையுள்ள விஸ்வகர்ம சந்ததியார்களின் முக்கியசரித்திரசம்பந்தமானதுபற்றியும் இதனை ஒவ்வொரு பழஞ்சரிதை ஆராய்ச்சிவல்லோர்களும், தொன்னூல் வல்லோர்களும் நன்கு கவனித்து தங்கள் ஆராய்ச்சிகளையும், அபிப்பிராயங்களையும் இப்பத்திரிகை வாயிலாக் வெளியிடுவார்களென்று நம்புகின்றனன்.

தி. மு. முக்கண்ணாச்சாரியார்,
வைஸ்பிரசிடெண்டு,

விஸ்வகர்மகுலோத்தாரண சபை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## இதோபதேச நீதிமொழிகள்.

### (அடங்காமை)

எனது அன்பின்மிக்க அரியசகோதரர்களே!

அடங்காமை, அகங்காரம், ஆணவம், தற்புகழ்ச்சி, செருக்கு, இறுமாப்பு, இவைகள் எல்லாம் ஒரு பொருட்குறித்த பெயராகும்.

இவ்வடங்காமை யென்னுங் குணமானது இம்மானிடவர்க்கத்துள் பெரும்பாலும் பரவி மிகுந்து வளர்ந்துகொண்டு தமது கற்றறிவு, குலமேன்மை, கருணை, பெரும்புகழ், செல்வம்கைம்மாறெண்ணுக்கொடை, ஒழுக்கம், அருந்தவம், உறுதி, சுற்றத்தார், சினேகிதர்களால் வரும்சுகம், நல்வீரம், சத்தியம், நற்குணம், அழகுமுதலாகிய ஷோடச விசேஷ நற்குணங்களையும் நிமைநேரத்தில் அழித்துவிடுகிறதென்றும்,

மேற்கூறிய (ஈரெண்) குணங்களையும் ஒருவனே தமது தவப்பெருமையால் எய்தியிருக்கினும், அவர்க்கு இயற்கையாலோ, அல்லது, சாவகாசத்தினாலோ இவ்வடங்காமையென்னும் இழிகுணமொன்றுமட்டும் பொருந்தியுளதேல் அவர்க்கு இகபர இன்ப நலங்கள் எல்லாம் இமைப்போதிலேயே எளிதில் (கருவியால்) தபிருடைந்த தண்ணீராவதுபோல் தத்தளித்துக்கெடுமென்றும் சான்றோர்வற்புறுத்தி அடியில்வரும்செய்யுளால் சகம் நலமடையச் சாற்றியிருக்கின்றார்கள்.

### மேற்கோள்.

“கற்றறிவுகுலமேன்மை கருணைபெரும்புகழ்ச்செல்வம் கைம்மாறெண்ணாது, உற்றதுவுங் கொடைசீர்மை ஒழுக்கம்அருந்தவம்நியமம் உறவின்கேண்மை, மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந் தூய்மைகுணம் வனப்புயாவும், பெற்றிடினும் அடக்கமிலாப் பெருமிதத்தால் இத்தனைக்கும் பிழையுண்டாமால்.” என்றும், விளக்கிக்காட்டி விவேகம் உரைத்திருக்கின்றார்கள். ஆயினும் இப்புலாலுடம்பையும் பொன்னும் பொருளையும் பொருளெனமதித்து இறுமாந்திருக்கும் மயக்க மதியுள்ளாக்கு நம் பட்டினத்தடிகள்.

“எரியெனக்கென்னும் புழுவோ எனக்கென்னும் இந்த மண்ணுஞ், சரியெனக்கென்னும் பருந்தோஎனக்கென்னுந் தான்புசிக்க, நரியெனக் கென்னும் புன்னாயெனக்கென்னும் நாறுடலைப், பிரியமுடன் வளர்த்தேன் இதனாலென்னபேறெனக்கே” என்றும்,

“விடக்கேபருந்தின் விருந்தேகமண்டலவீணனிட்ட, முடக்கே புழுவந்துறைவிடமேநல, முற்றுமிலாச், சடக்கே கருவிதளர்ந்துவிட்டாற்பெற்றதாயுந் தொடாத, தொடக்கே யுனைச்சுமந்தேன் நின்னினேதுசுகம் எனக்கே” என்றும்,

“தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநாள், நீயாரு நானாரென்ப்பகர்வார் அந்தநேரத்திலே,நோயாரும்வ

ந்துகொள்வரே கொண்டநோயும் ஒரு, பாயாருநீயுமல்லாற் பின்னேயேதுநட்பாம் உடலே" (என்றும்

இவ்வாக்கையைப்பற்றி அறுவறுத்து மிகவெறுத்துக் கூறியுள்ளார்கள். அதில் நம் ததீசி மகாரிஷியான முனிபுங்கவரும், "நாய்நமதென நரிநமதெனப்பிதா, தாய் நமதென நமன்றனதெனப்பிணி, பேய்நமதெனமனம் மதிக்கும்பெற்றிபோல் ஆய் நமதெனப்படும் யாக்கையாரதே" என்றும்,

"விடம்பயில் எயிற்றரவுரியும் வீறுழையும், குடம்பையுந்தானெனுங்கொள்கைத் தேகொலாம், நடம்பயில்கூத்துவர் நடிக்கும்ஐவர்வாழ், உடம்பையும்யானென உரைக்கற்பாலதோ" என்னும் மிகவும்இழித்துவற்புறுத்திக்கூறியுள்ளார்"

ஆதலால் இந்நிலையில்லாப் புலால்உடலையும், நீர்க்குமிழிவாழ்வையும் நிலையென நம்பி இறுமாந்திருந்து தமது அறிவழிந்து, ஆஸ்தியிழந்து, ஆண்மையொழிந்து, வீரங்குன்றி, வீண்வாதம்புரிந்து ஆணவமிகுந்து, ஆத்மசுகநலிந்து, மனமுள்ளுடைந்து, மனத்துயரிலாழ்ந்து, வாழ்வுகுலைந்து, வறுமைமிகுந்து, வையத்தோரிகழவசைப்பெயரெடுத்து, வெய்யவரென்று மேதினியோர்தூற்ற உய்யும்வகையின்றி, உணர்வதறியாது சிந்தைகலங்கித்திகைத்துத் தடுமாறி மித்திரனையுஞ் சத்துருவாக்கித் தற்புகழ்என்னும் சத்துருவினால் தரணியோரிகழத்தானும் உள்ளொடுங்கி இத்தகையதுன்பிற்கும் இடருக்கும்உள்ளாகி கொடியரெனப் பெயருற்றோர் இப்படியினிற்சொல்லிற் பலரெனப்பெறும்.

அன்றியும், இதற்கோர்சாக்ஷியாகநமது இதிகாசபுராண நூற்களிற் கூறப்பெற்ற இரணியன், இராவணன், சூரபத்மன், துரியோதனன், தக்ஷகன் தக்கன் முதலிய கொடுங்குணமேற்கொண்ட துஷ்ட நெறியுடையோர்களே தமது அடங்காமைஎன்னும் துற்குணத்தால் பற்பல இடையூறுகளையடைந்து மனங்கலங்கிவருந்தினர்கள் என்பது நமக்குஉள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்குகிறது. இது பற்றியன்றோ நமது முன்னோர்கள் கூறிய முதுமொழி நூற்களில்

"அகங்கரிப்புவரில் எவர்க்கும் அறங்கெடுக்கும் கற்றகல்வி அழிக்கும் உள்ளம், புகைந்தெழுப்புங் கனலைமிகப் புழுக்குவிக்கும்பிறரைநகை புகுத்துமார்க்கும், தகைந்துசுவர்க் கத்தினையுந்தடுக்கும் அகற்றுஞ்சிறிது தவஞ்செய்தாலுஞ், சுகந்தவிர்க்கும் மீளாதநரகினுய்க்கும் இதுநமக்குத் தூய்மையன்றே" என்றும்,

"தக்கன்யாகம் புரிந்ததலைநாளில் அகங்கரித்துத்தனக்குமேலாம், முக்கணனை யிகழ்ந்தமையான் முடிபோயும்அடுத்தவர்க்கு மூக்குப் போயும், மிக்கதடக் கைபோயும் மேனிகுழம் பிப்போயும் விழிபற்போயும் புக்கதிசைதெரியாமற் புறம்போயும் பட்டதுயர் புதுமையன்றே" என்றும்,

"ஆதலினால் இக்குணத்தை வேரோடும் புறத்தகற்றின் அதுவே தூய மாதவமும் பெருத்தனமும் வன்மையுந் திண்மையும் அறிவும் வாழ்வுந் தேசும், ஓதரிய சுவர்க்கமும்வேறு உறுபொருளும் என்றனர் அதொக்குமென்றே, காதலித்தார் சிலரவரைக் கண்டுசிலர் அவ்வியற்கைக் கைக்கொண்டாரால்" என்றும், கூறியிருத்தலோடு நமது தாயுமானவரும்; இத்தகைய நானெனும் ஆணவத்தோடு (ஜாதிப்) பேயும் சார்ந்துபிடித்தால்இன்னின்னகொடுங்குணங்களைச்செய்து சிந்தையைக்கலக்கித் தியப்பித்து நிந்தனைசெய்யுமென்று நிகழ்த்தியிருக்கின்றார்கள்.

அவைவருமாறு:—

"ஆங்காரமான குலவேடவெம்பேய் பாழ்த்த ஆணவத்தினும் வலிதுணுண், அறிவினைமயக்கிடும் நடுவறியவொட்டாது யாதொன்றுதொடினும் அதுவாய்த், தாங்காது மொழிபேசும் அரிகரப்பிரமாதி தம்மொடு சமானமென்னும், தடையற்ற தே

ரில்அஞ் சுருவாணி போலவே தன்னில் அசையாது நிற்கும், ஈங்காரெனக்குநிகர் என்னப் பிரதாபித்து இராவணாகாரமாகி, இதயவெளி யெங்கணும் தன்னரசு நாடு செய் திருக்கும் இதனோடெனேரமும், வாங்காவிலாவடிமை போராடமுடியுமோ மௌனோபதேசகுருவே, மந்திரகுருவே யோக தந்திரகுருவேமூலன் மரபில்வரு மௌனகுருவே" என்றும்

இப்பேய்பிடித்துப் பித்தம் தலைக்கேறிப் பிதற்றித்திரிந்தோர், சைவ வைஷ்ணவ சமயத்தோர்களிலும், இன்னும் பற்பல சமயத்தோர்களின் ஜாதிவகுப்புகளிலும், எண்ணிக்கை யில்லாதபேர்கள் இவ்விடரில் ஆழ்ந்து இறந்தார்க ளென்றும், இதனை இப்பொழுதும் நாம்நேரிலேயே சைவபேதத்திலும் வைஷ்ணவ பேதத்திலும் சண்டையிட்டுக் கொள்வதையும், ஜாதிபேதத்திற் சண்டையிட்டுத் தலைதடுமாறி நிலைகுலைந்து தத்தளித்துத்திரிந்து, அவன்ஜாதிபெரிது இவன்ஜாதிசிறிது, என்றும், என்மதம்பெரிது உன்மதம்சிறிது என்னும் வாதம்புரிந்து, வம்புகள்பேசி பகையினிற்சிறந்து, பரமனைமறந்து பந்திவர்க்கப்பகையை பண்பெனக்கொண்டு தமது நண்பினை இழந்து நலிந்து நிற்பதையும் நாம் கண்ணாக்ஷியாகக்கண்டு மிருக்கிறோம். இம்மட்டோ, இதனால் எத்தனையோ மண்டை யுடையுஞ் சண்டைகள், பண்டைக்காலப்பொக்கிழப்பண அழிவுகள் தெண்டங்களோடு அரசாங்கத் தெண்டனைகள், மான அழிவுகள், ஈனவார்த்தைகள், ஓயாக்கவலைகள், ஒழியாத்துயரங்கள், இவைகளெல்லாம் இதனால் ஏற்படுவதை நாம் இப்பொழுது தென்கலை, வடகலைச் சண்டைகளில் ஸ்ரீரங்கம், குடந்தை, நாச்சியார்கோவில், இராஜமன்னார்குடி, திருநாகை, திருச்சிறை முதலிய திவ்ய வைஷ்ணவ ஸ்தலங்களிலும் நாளும் இவைகள் நலியாது கலகம் நடந்துவருவதை கண்ணுற்பார்ப்பதோடுசிதம்பரமுதலிய திவ்ய சிவஸ்தலங்களிலும் இவ்வித மதக்கலகம் மாறுமல் நடந்துகொண்டு வருவதையும் நாம் நிதர்சனமாசப் பார்த்துவருகிறோம்.

ஆனதாலன்றே இக்கொடுஞ் செயற்கிரங்கி நம் தாயுமானாரும், (இதனோடு என்னேரமும்)வாங்காவிலா அடிமை போராடமுடியுமோ என்றும், நாம் இவ்வித வம்புகள் ஒழிந்து வர்ழவேண்டுமென்றும், வற்புறுத்திக்காட்டி இவ்விறுமாப்பினால் இன்பநலம் எல்லாங் கெடுமென்றும், இதனை நீக்குதலே இறைவனை யறிதற்குச் சாதன முறையென்றும் இயம்பியிருக்கின்றார்கள்.

(தொடரும்)

V. வைதியநாதஸ்வாமி ஸ்தபதி,
ஜோதிஷர், திருவாரூர்.

## பெற்றியை யோம்பும் வித்தியர்க்கோர்
## அத்தியாவஸ்ய விண்ணப்பம்.

1. ஸ்ரீவிராட் விஸ்வப்ராஹ்மக் திருவருட்சத்தியா னிர்மிதோத்தாரண சிந்துவாற்சூழும் விங்கையாருலகோர் முந்துமாருதவும் ஸ்ரீ விஸ்வ ப்ராஹ்மண சகோதரர்களியாவருக்கும் வந்தனஞ் செய்தறிவிக்கும் எந்தனதபிப்ராய விந்தநல் விண்ணப்பமாவது யாதெனில்" அதுவே நங்குலத்தோர் பூத பவிஷ்ய வர்த்தமானமென்னும் திரிகாலத்திலும் பூர்வ மெத்தகை ஸ்திதியி லிருந்தனர். இப்போதெந்த வந்தஸ்தி லிருக்கின்றனர். இனியெவ்வித நிலையிலிருக்கப் போகின்றனர் என்பதை சுருதி யுக்தி அனுபவங்களால் ஆராயுமிடத்து பூதகாலமென்னும் சென்ற காலத்தில் ஆரியா வர்த்தத்திலுள்ள மாந்தைப் பட்டணத்தில் வசித்த காலம்

களில் சர்வ சுகங்களோடே தழைத்து வாழ்ந்தனர்.

2. அவ்வண்ணம் வாழ்ந்து வரும் நாளில் கங்காளன், அல்லது கரிகாற் சோழனென்போன் ௸ மாந்தை விஸ்வகர்ம குலத்தோரைப் பிரித்து ஆரியா வர்த்தத்தின் தென்தேயங்களில் பாவச்செய்ய நினைத்து அதின்பொருட்டு தனக்குத்தெலுங்க நாட்டரசனாகிய சாளுவன் செய்த சூழ்ச்சியினாலும், ௸ யாசனுடைய கணிகையர் கூட்டவுதவியினாலும், ௸ மாந்தை நகரக்காந்தக்கற்கோட்டையை அழித்தபிறகு அதிலிருந்து சினம் சென்ற சிலர்போக மற்றையோர்கள் மாந்தை நகரத்தின் தென் பிரதேசங்களெங்கும் பரவிச் சென்ற 1020 வருஷங்களுக்கு முன்னிருந்த குலோத்துங்கச் சோழன் காலத்திலும் இக்குலோத்துங்கன் அபிமான புத்திரனை ஆதொண்டன் காலத்திலும் சுகமரியாதைகளோடு சுகித்து வாழ்ந்திருந்தனர். அதற்குப்பின் தொண்டைமான் சக்ரவர்த்தி சப்புவராயன் இவர்கள் காலத்திலும், இவர்க்குப்பின் மகம்மதிய அரசாக்ஷியின் சிற்றரசர்களாகிய பாளையக்காரர், ஜமீன் முதலானவர்களாலும், சென்ற 100 வருஷங்கட்கு முன்புவரையில் நம்மவர் பட்ட கஷ்டத்திற்களவேயில்லை. ஆனால் அக்கஷ்டமென்கிற அந்தகாரமானது ஆங்கில அரசென்னும் அரியஞான சூரியனால் கொஞ்சங் கொஞ்சமாய் அகன்று வருகின்றது.

3. அங்ஙனம்விளங்கும்அச்சூரியனுதித்திப்போதோர் மாளவே யெழுந்தொளிர்கின்றது. அங்ஙனமொளிரும் சூரியனுந்தன் தேஜஸை நம் முகத்தி லறைந்தும் நம்மிலனேகர் இன்னும் விழித்துக் கொள்ளாம லிருக்கிறோம். விடிந்தித்தனை வெளிச்சமாகியும் இன்னும் சோம்பலையே மேற்கொண்டு தூங்குவதும் கிரமப்படி நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றாமல் அஜாக்கிரதையா யிருப்பதுஞ் சரியன்று. இனியேனும் எதிர்கால முன்னேற்ற நிகழ்ச்சியானுபவத்தை எண்ணி இன்பமெய்தும் வழியை யிப்போதே யேற்படுத்தோடு நிலவுங் ககனம் சிறக்கும் காந்தி சூரியனைப்போல புவனம் புரக்கும் போத சூரியனான ஆங்கில அரசும் நீடூழி நிகழ வேணுமாய் நிர்மலதேவனைச் சதா நினைந்து தியானிப்போமாக. அங்ஙனமாய ஆங்கில அரசாட்சியின் நன்மையால் நிகழும் வர்த்தமானத்தில் நாம் கொஞ்சம் மேம்பாட்டை யடைந்துவருகிறோமென்பது நம்மனோரியாவருக்குந் தெரிந்த விஷயமல்லவா?

4. இனி நிகழப்போகும் பவிஷ்ய மென்கிறது எதிர்காலத்தின் நிலைமையைக் குறித்தெமக்கிருக்கும் அபிப்ராயத்தை யறிவிப்பதற்குமுன் சென்ற 5 வது பத்திரிகையின் 129-வது பக்கத்தில் வேலூர் ப்ரம்மஸ்ரீ அத்யாபகலிங்காச்சாரி யவர்களால் அறிவிக்கப்பட்ட "ஓர் விண்ணப்பம்" என்ற தலைப்பின் கீழ் கிருஷ்ண குண்டூர் மண்டல விஸ்வப் பிரஹ்மண மகாஜன 7-வது சபைக்கெழுதிய வுபன்னியாசத்தில் நமது வம்சத்தைக் குறித்து எழுதியதிலும் விஸ்வகர்ம குலோபகாரியில் 149-வது பக்கத்திலும் கூறியதாவது:— இஃது சைவ வைஷ்ணவசமயம் போல விஸ்வகர்ம சமயமும் வேதத்திற்குள் வீடானதாய் விளங்குகிறதென்றும், மயன் என்னும் ஒரு தானவன் அசுரர்களுக்கு சிற்பியாக விருந்ததாய் இதிகாச புராணங்களால் விளங்குகிறதென்றும், இவனுடைய வம்சமும் பல்கிப் பரவியிருப்பதாய் அபிதான கோச முதலியவைகளால் தெரிகிறதென்றும், அநுலோம பிரதிலோம சம்பந்தத்தினால்ஆஸாரியெனும் பெயரிய ஓர்வகை சூத்ரஜாதியாருண்டென்று ஸ்மிருதிகளால் தெரியவருகிறதென்றும், இரதகாராதி காரணவிசார நூலில் ஓரிடத்தில் நிடாதஸ்தபதியென்னும் ஒருவகை யிழிகுல சூத்ரசாதியாருண்டென்றும், மற்றோரிடத்தில் அகத்தச்சர், கருமார் புறத்தச்சர் கருமாரென்னும் பிரிவான இருவகை சாதியாருண்டென்றும், அவர்களும் ௸ நிடாதஸ்தபதிகளைப் போன்றவரென்றும் கூறியதோடு, பின்னும்,



5. ௸ விண்ணப்பத்தில் பத்தாவது பாராவில் கூறியதாவது:—6-முதல் 9-வது பாரா வரையில் கூறிய வகைகளால் இவ்விராச்சியத்திலுள்ள கருமார், தச்சர், கன்னார், சிற்பி, தட்டார் என்னும் தொழில் செய்பவர்களை விஸ்வகர்ம குலத்தாரென்று நிருணயிப்பதற்கு யிடமில்லையென்றும், விஸ்வகர்ம வம்சத்திற்கு உரிமை பூண்டவர்கள் மாத்திரம் தேவரிஷி சம்பந்தத்தினால் பிராமணர்களும், மயன் வம்சத்தார் மதுமாமிச முட்கொளுங் காரணத்தினால் P. துவிஜர்களவர்களை வர்ஜிக்கத் தக்கவர்களென்றும், அவர்களும் ஆஸாரியென்னும் இழிகுலத்தாரும் சூத்திரர்களாகிறார்களென்றும் கூறியதோடு ௸ விண்ணப்பத்தில் 11-வது பாராவில் இப்படி மேற்கூறிய பிரிவுகளை யனுசரிக்காமல் நம்மில் சில பிரமுகர்கள் கூடி தம்ஜாதியை விஸ்வப் பிராமணர்களென்றும், ஆச்சாரிகளென்றும் உரிமைப் பாராட்டித் துரைத்தனத்தாருக்கு விண்ணப்பங்கள் செய்தும், பிரசுரமுதலியவைகளில் வெளியிட்டும் வருவதினுண்டாகும் பயனை நண்பர்களே யறிவார்களென்றுங் கூறியிருக்கின்றார்.

6. இங்ஙனமாக மேற்கண்ட விஷயங்களை யெல்லாம் மிகுதியும் சாஸ்திர ஆராய்ச்சியினாலன்றி வெளியிற் கூறத்தக்கதன்றென்பதில் சந்தேகமில்லை; யென்றாலும், அங்ஙனம் சிரமத்தோடாராய்ந்து கூறிய இவ்விண்ணப்பத்தினிடத்து நம்மவர்கட்கு மிகவும் பிரதிகூலமான விஷயங்கள் சிலகாணப்படுகின்றன. அவையாதெனில், சைவ வைஷ்ணவ சமயம்போல் விஸ்வகர்மசமயமும் எனக்கூறும் பக்ஷத்தில் சைவசமயத்தார் திருநீறும், வைஷ்ணவ சமயத்தார் ஸ்த்ரீ சூர்ணம், அல்லது திருமண்ணும் அணிகின்றனர். அதுபோலநாம்பிரத்யேகமான விஸ்வகர்மசமயம் என்பதற்கான எந்த அடையாளங்களைத் தரித்து வருகிறோம். பின்னும் சிவமதஸ்தர் சிவபக்தி சிவார்ச்சனையும், விஷ்ணுமதஸ்தர் விஷ்ணுபக்தி விஷ்ணுவார்ச்சனையும் செய்துவருவதுபோல் நாம் விஸ்வகர்மபக்தி பூண்டும் விஸ்வகர்மார்ச்சனையைச் செய்தும் வருகின்றோமா? இல்லையே! பின்னை நாம் யென்னசெய்கிறோமென்றால், சிவச்சின்னங்களாகிற விபூதிருத்திராக்ஷங்களை யணிந்து சிவபக்தாராயும், விஷ்ணு சின்னங்களாகிற திருமண் துளபமாலை முதலிய வணிந்து விஷ்ணுபக்தாளாயும் அல்லவா நடந்துவருகிறோம்.

7. இங்கனமிருக்க, நம்மை விஸ்வகர்ம சமயத்தை அனுஷ்டிப்பவர்களென்று கூறுவது சரியன்று, ஆனால் ஓர் விஷயம் அது வேலூர்தீர்ப்பில் விளம்புகிறபடி நாம் ஆதிசங்கராச்சாரியர் காலத்திற்குமுன் யாவர்க்கும்பொது சமயமாகிய ஆதிவிராட் விஸ்வப்ரம்ம சமயத்தவராய் யிருந்தோமென்றும், அவர்க்குப் பிற்காலங்களில் யாவரையும் சமமாய்ப் பார்க்கும் ஸ்மார்த்த சமயம் அல்லது எல்லா சமயத்தினுமேலான ஆதிசைவ சமயமுடையவரா யிருக்கிறோமென்றுங் கூறியது பொருந்திருப்பதால் அதுவே ஸ்திரமாகும்.

(தொடரும்.)

கூந்தலூர் சுப்ரஹ்மண்ய ஆச்சாரி,
மங்கலம்பேட்டை.

(154ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

## ஆகார நியமம்.

இந்தப் பிரமாணத்தால் சித்தித்த, பொதுவகையாய் உட்கொள்ளத்தக்கவும் தகாதவுமான வைதிக அந்ந, சாக, பானாதி யுணவுகள் இன்னின்னவையென்று சுருக்கிப் பேசிப் பின்னர் நீண்ட பழக்கத்தாற் சிற்சில மாண்ட அறிவாளரும் கையாண்டுவரும் அவைதிக வுணவின் பாலாபலனைப்பேசுவாம்.

I. உட்கொள்ளத்தகாதவை.

1. தலைவாசல் வழியாக வராத அன்னம்.
2. வாயினின்றும் விழுந்த பருக்கை பட்ட அன்னம்.
3. சுவீகரித்த கவளத்தின் மிச்சமான அன்னம்.
4. குரூரதிருஷ்டிகள் திருஷ்டித்த அன்னம்.
5. அங்கஹீனர் நோக்கிய அன்னம்.
6. நாய்முதலியவை தீண்டிய அன்னம்.
7. மனிதர், பசுமுதலியவை ஆக்ரணித்த அன்னம்.
8. அன்பற்றவரிட்ட அன்னம்.
9. ஈ, புழு, மயிர், நூல், நகம் பட்ட அன்னம். (அசுசி)
10. துறவிகளளித்த அல்லது அவர்கள் பாத்திரத்திலிட்ட அன்னம்.
11. விருந்தினர்க்கிடாத அன்னம்.
12. பகவானுக்கு நிவேதியாத அன்னம்.
13. தத்காலத்துக்கு உதவாவென்று நிஷேதித்த அன்னம்.
14. நடு இரவிலிட்ட அன்னம்.
15. சந்தியா கால அன்னம்.
16. சுயகோஷ்டியல்லாதாருடன் இட்ட அன்னம்.
17. பிறர்கையால் பாகஞ்செய்யப்பட்ட அன்னம்.
18. சந்திரன், அக்கினி இவ்வெளிச்சத்திலிட்ட அன்னம்.
19. இரவில் தீபமின்றியிட்ட அன்னம்.
20. பாரியையுடன் ஏககாலத்திற் (சமபந்தியாய்) கூடியுண்ணுமன்னம்.
21. ஜன்மவிருத்தாதிகளைப் பார்த்துக்கொண்டே யுண்ணுமன்னம்.
22. புனః பாகஞ் செய்த அன்னம்
23. அஸ்திரீதம் (கஞ்சி சுற்றிக்கொண்ட அன்னம்.)
24. பிச்சளம் (அளிந்த அன்னம்.)
25. குவதிதம் (கருக்கரிசிபட்ட அன்னம்.)
26. சுஷ்மிதம் (சிறிது வெந்தும் வேகாததுமான அன்னம்.)
27. தக்தம் (காந்திப்போன அன்னம்.)
28. விருபம் (விறைத்துப்போன அன்னம்.)

29. அநர்த்துஜம் (பழைய அன்னம் அதாவது நிசத்தாலே சுத்தமாகாத அன்னம்.)

30. அத்தி-பேரார்க்கு (எருக்கு)-இறலி-வெண்கத்திரி-ஆல்-அரசு-நறுவிலி-புங்கு-ஆயில்-ஆரை-புத்திகொல்லி-குசும்பை-புன்முருங்கை-முருங்கை-வேளை-குறிஞ்சி-சுகம்-முளரி--உள்ளி-சிற்றவரை-கொம்மடி-கள்--பண்ணை-தொய்யால்--சீங்காடன் தேறல்-ஊவக்காய்-பனம்பழம்-மயிலடி-அமேத்தியஸ்த்திலுண்டானவை--கடம்பு-காளான்-சுரை-பீர்க்கு-சணம்-சிறுகீரை--செவ்வகத்தி--சிறுவசளை--பெருவசளை-அம்பணந்தாள் - கிளிஞ்சல்முதல்சுட்டசுண்ணம்பு--பொங்கிவரும்ஜலத்திலெழும் நுரை.

31. சொந்தக்காரர் அநுமதியின்றிக் கொள்பவை.
32. கடையில்வாங்கிய சாகாதிகளில் கழுவாதவை.
33. கசப்பு-துவர்ப்பு-காரம்-புளிப்பு மிகுந்தவை.
34. பக்ஷிக்கக்கூடாதவற்றுடன் பாகஞ்செய்தவை.
35. கடவுளர்க்கென்று வைத்தவை.
36. க்ஷுத்ரதேவதைகளுக்கிட்டவை.



37. பிராணன் முதலிய இந்திரியங்களுக்குதவாதவை.
38. நாமரூபங்களறியப் போகாதவை.
36. அருவருத்தவை.
40. பருவகாலத் துண்டாகாதவை.
41. பாகஞ்செய்த உப்பு.
42. முன்விளைந்த நிலத்தில் காம்பாலே முளைத்தவை.
43. யதிகள்கழித்தவை
44. சத்கிரியைகளுக் கானியானவை.
45. எச்சிலந்நத்திலிட்டநெய்.
46. ரசமற்றவை.

47. கழுதை-குதிரை-இரட்டைக்கன்றுள்ளபசு-ஒட்டை-சினைப்பசு-கன்றிழந்தபசு-வேறொருகன்றூட்டியபசு-க்ஷுத்ரதேவதைகளின்பேருள்ளபசு - செம்மறி - பிராமணர் விற்றபசு-இவற்றின்பால்.

48. உப்புகலந்தபால், மோர்கலந்தபால், மாதாஸ்தநத்தின்பால், திரிந்தபால், தாம்பிரபாத்திரத்தில் கொண்டபால், கெட்டபால்.

49. கங்காதீர்த்தம் தவிர இரண்டு நாட்பட்ட இதரதீர்த்தம், கால்கழுவி மிகுந்தஜலம், வண்டலானஜலம், காய்ச்சின இளநீர், சிறுகுழியிலுள்ளநீர், வழியிலுள்ளநீர், தண்ணீர்ப்பந்தல்நீர், தோஷசங்கையுள்ளநீர், வண்ணான் துறை நீர், எச்சில் நீர், சங்கயாத்திரத்தில் பருகும்நீர், தரையில் விழாத மழைநீர்.

50. வெற்றிலை கலவாத பாக்கு வெற்றிலையின் அடி, நுனி, நடு, ஈர்க்கு, சுற்றோரம், சுண்ணம்வைத்த வெற்றிலை; சோகத்திலுல் உட்கொள்ளும் வெற்றிலைப்பாக்கு, வெற்றிலை தின்னும்போது உட்கொள்ளும் நீர்;

51. விதையென்று வைத்தவை--, இவை நிஷித்தமென்று வேதாதிகலைகள் முறையிடுகின்றன. காரணம் முடிவில் விளக்கப்படும்-

52. ஜாதி.குணம்-ஆச்ரமம்-தேசம்-காலம்-,தருமம்--பால்ய--யௌவனாதிபருவம்--இவற்றால் உற்பவித்த ஒரு திரவியத்தின் நலம் தீங்கைப் பெரியோரிடம்கேட்டு உபயோகிக்கவும்.

53. விதவை-பிரமசாரி-சந்நியாசி இவர்கள் வெற்றிலைப்பாக்கை உபயோகித்தல்கூடாது.

II. உட்கொள்ளத்தக்கவை.

1. கருப்பஞ்சாறு-தயிர்-பால்-நெய்-பாக்கு-வெற்றிலை-மிளகு-தேன்.ஏலம் பனிநீர் முதலியவும், கூடாவென்று கழித்தவை யொழிந்த ஏனைய அன்ன சாகபாநாதி ஆகஜந்ய பதார்த்தங்களும், உபாதேயமாம்.

2. பதார்த்தங்களின்பேரும் பிறப்பும் தெரியாதார்க்கு அவை தெரியுமளவும் இப்பதார்த்தங்கள் உபாதேயம்.

3. பருவகாலங்களில் சமுத்திர ஜலமும்: பிரவாககாலங்களில் பிணங்களை யடித்தோடும் ஜலமும் புனிதம்.

4. நீரின்றித்தீயால் வெந்தனவும், தீயின்றிப்பழுத்தனவும், தீ-நீர் இவற்றால் வெந்துள்ள நெல் முதலியனவும், பழைய வடைமுதலிய அப்பவர்க்கங்களும் ஊசாதிருந்தால் உபாதேயம்.

5. திரட்டுப்பால், சாகடம், பஞ்சதாரை, நோய்க்குரிய அவுடதம், சுத்தஜலத்தில் வை

த்த அந்நம், கறி-மோர்-தயிர்-பால்- நெய்கலந்த அந்நம், கெடாத கோதுமைப் பலகாரம், இவை சாகாதிகள்போல பழையவேனும் உபாதேயம்.

6. தயிர்-பால்-நெய்-பழஞ்சாறு ஊசியவையும் புனிதம்.

7. ஆபத்காலத்தில் ஊசிய வற்றையும் நெய் தேனிட்டுண்ணலாம்.

8. பிதா-ஜேஷ்டபிராதா-இவர்கள்உச்சிஷ்டமும், பிராமணர் சோமபானம் பண்ணும் உச்சிஷ்டமும், ஸ்திரீகட்குக் கணவரெச்சிலும் (மயிர்-புழு முதலிய விழுந்த போதிலும்) புனிதம்.

9. தபஸ்வியில் கூவிளங்கனியும், ஆராதனகாலத்தில் முகவாச நார்த்தம் மாதுளங்கனியும் உபாதேயம்.

10. மரணகாலத்திலும், உபவாஸ காலத்திலும், அசௌக்கிய காலத்திலும் நிஷித்தமெல்லாம் கூடுமேல் உபாதேயமாம். இவ்வாறு சங்கரிஷி சொல்லுகின்றார்.

(தொடரும்.) ம. இராஜகோபால பிள்ளை.

---

(145-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## இந்தியசிற்பமும் அதன் முன்னேற்றமும்.

### 4. சிற்பநூல் விளக்கம்.

சிற்பநூலின் தொகையை விரிக்க முன்வந்த நூலாசிரியர் பலரும் ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்லாது மாறுபடக் கூறியுள்ளாராதலால், அதனை அநுபவத்தாலும், கேள்வியாலும் ஒருவாறு உரைக்க வியலுமேயன்றி, நூன்முகத்தால் அறிந்து நிச்சயிப்பது கூடாமையாகிறது. ஏனெனின், அவ்வித நூற்களில் பல முன்னர் இருந்தனவேயாயினும், அவைகளைத் தற்காலம் காணக்கிடைப்பதும் அருமையாகிறது. சிற்ப நூல்களனைத்தும், வடமொழியில் வரையப்பட்டிருப்பதுபற்றியும், அப்பாஷையை ஓர் வகுப்பினர் ஒழிய அந்நூற்களுக் குரியோரும், ஏனையோரும் பல நூற்றாண்டும் கைவிட்டமைபற்றியும், புத்தகங்களை வாசித்துணராது செவிவழிமட்டுமேஉணர்ந்தசிலபலசுலோகங்களைச்சாண் வயிற்றின் பொருட்டு வாயில்வந்தபடி பிதற்றித்திரிவது பற்றியும், அவற்றை உள்ளவாறு உணர்வதற்கில்லை. வடமொழியில் வல்லுனரான பண்டிதர்களும், அம்மொழியில் இயற்றப்பட்டிருக்கும் தர்க்கம், வியாகரணம் முதலிய நூற்களை ஐந்திரிபற உணர்ந்திருப்பினும் இச்சிற்ப நூற்களில் நிறப்பியுள்ள தொழிற்குரிய சங்கேதப் பதங்கள் அத்தொழில் வல்லார்க்கேயன்றி ஏனையோர்க்கு எளிதின் விளங்காமையால் அவைகள் அன்னோர்களாலும் கைவிடப் பட்டனவென்றே சொல்லலாம்.

இவ்வண்ணம் அந்நூற்கள் அவலப்பட்டிருக்குங்கால், அவற்றின் தொகையை விரிக்க முன்வந்தசிலர் அவைகள் முப்பத்திரண்டு பகுப்பினையுடைத்தென்றும், வேறுசிலர் அறுபத்துநான்கு பிரிவினையுடைத்தென்றும் கூறியுள்ளார். யாம் பரிசீலனை செய்த ஓர் வடமொழிசுலோகத்தால், முக்கிய சிற்பநூற்கள் முப்பத்திரெண்டெனவும், உபசிற்பநூற்கள் முப்பத்திரெண்டெனவும் ஆகசிற்ப நூற்களின் மொத்தத் தொகை அறுபத்து நான்கெனவும் கூறக்கண்டுளோம். இதற்கிணங்க பதினைந்தாவது நூற்றாண்டினிறுதியில், வைணவ மதத்தினுயர்வையும், சைவத்தினிழிவையும் நிரூபிக்கவும் நிமித்தமாய் எழுதப்பட்டுள்ள “இருசமய விளக்கம்” என்னுமோர் அறிய பிரபந்தத்திலும் மூற்கூறியவாறே முறையிடுகின்றது. அப்புத்தகத்தில் இருமதத்தினர்க்குரிய ஆலயங்கள் கட்டப்பட வேண்டிய இடங்களை வரையறுத்துக் கூறு



மோர் கவியை, வடமொழியில் வரைந்துள்ள ஓர் சிற்ப நூலினின்றும் ஆதாரமாகக்கூறி, பூவுலகைப்புரக்கும் கடவுளர்க்கு ஆலயங்கள் ஊரினுட்புறத்தென்றும், அழிக்கும் தொழில்பூண்ட ஆலகாலகண்டனுருக்கு ஆலயங்கள் ஊர்புறத்தேயென்றும் காட்டிவைணவத்திற்கு ஓர்தேற்றத்தையும் கற்பித்திருக்கின்றனர். மதப்போர்புரியும் இப்புத்தகத்துள் இருபத் தொன்பது சிற்பநூற்களை பெயருடன் கூறி, இன்னும் மற்றவைகள் எனவும் முடித்து விட்டமையால், பதினைந்தாவது நூற்றாண்டினிறுதியிலேயே, பல சிற்பநூற்கள் சிதையுண்டு மறைந்தனவென யூகிப்பதற் கிடந்தரும். அவ்வாறு சிதையுண்டழிந்த சிற்பநூற்கள் பலவேயாயினும், தற்காலத்து தஞ்சாவூர் அரண்மனைப் புத்தகாலயத்திலும், இன்னுமிதுபோன்ற இரண்டொரு புத்தகசாலையிலும் அருமையுடன் காப்பாற்றப்பட்டு வரும் ‘மானசாரம்’ ‘மயமதம்’ ‘காசிபம்’ ‘வேகநாசம்’ ‘பாஞ்சராத்ரம்’ ‘சகலாதிகாரம்’ ‘விஶ்வகர்மியம்’ ‘சரஸ்வதீயம்’ ‘சநத்குமாரம்’ முதலிய முக்கிய சிற்பநூல்களில் மேலே கூறப்பட்டுள்ள முதல் நான்குநூற்களை மட்டுமே இங்கு பரிசீலனை செய்து அவைகளின் முக்கிய அம்சங்களைக் கூறுவாம்.

முதலில் சொல்லியுள்ள ‘மானசாரம், என்னும் நூல், சிற்ப, விக்கிரக் வாகனாதிய சகல விஷயங்களையும் தன்னுள்ளடக்கிஇருப்பதால் இஃது மற்றெல்லா நூற்களிலும் முற்பட்டதென்போம். சிற்பாசாரிகள்வாத தர்க்கமிடுங்காலத்து ஆதாரமாகக் கூறுவதும் இந்நூலேயாம். இதனை இயற்றியவர் மானசார ரிஷியென்றும பலர் சொல்லிக் கொள்ளினும், அஃது சரியன்றெனச் சொல்ல அச்சொல் லிலக்கணத்திற்குரிய பொருளேயிடங்கொடுக்கும். அதுகொண்டு இந்நூல் மானசாரரிஷியால் செய்யப்பட்ட தென்றெனக் கூறிவிடின் பின்னர் இஃதுயாரால் இயற்றப்பட்டதோ யாமறியேம். இந்துக்கள் தங்கள் சரித்திர சம்பந்தமானவைகளை ஒழுங்காகப் பதிவுசெய்து வரவில்லையாதலால் இந்நூல்செய்யப்பட்ட காலத்தை நிரணயிக்கக்கூடாமையாகிறது. புத்தர், சமணர் முதலிய புறச்சமயத்தினரது ஆலயங்களின் லட்சணபேதங்களையும், அவைகளை நிர்மாணிக்கப்படவேண்டியஇடங்களையும், அவர்களின் விக்கிரகநிர்மாணங்களையும் விரிவாய் எடுத் துரைப்பதால், இந்நூல் கௌதம சாக்கிய புத்தராது ஜீவியகாலத்திற்குப் பின்னரே கூறப்பட்டதாகும். அவ்வாலயங்கள் ஊரின் எல்லைப்புறங்களிலேயே கட்டப்பட வேண்டுமென்று அந்நூலில் சொல்லப்பட்டிருப்பதை புத்தர்களும், சமணர்களும் மனமுவந்து பொறுமையுடன் அங்கீகரித்திருந்தமை பற்றி, அம்மதங்கள் சைவமதத்தால் முறியடிக்கப்பட்ட காலத்து இந்நூல் கூறப்பட்டதெனவும் சொல்லலாம். இந்நூலில் சொல்லப்பட்டுள்ள ஆலய, விக்கிரக, வாகனாதி லட்சணங்களனைத்தும் தென்னிந்தியாவிற்கு மட்டுமே பொருத்தமாய்க் காணப்படுவதாலும், வடஇந்திய ஆலயசிற்ப முறைகளுக்கு இணங்காமையினாலும் இந்நூல் இத்தென்னிந்தியாவிலேசெய்யப்பட்டுள்ளதெனக்கூறலாம்.

‘மானசாரம்’ ஐம்பத்தெட்டு அத்தியாயங்களுடைத்து. ஒவ்வோர் அத்தியாயங்களும் ஒவ்வோர்முக்கிய விஷயத்தைப்பற்றியே பேசும். முதலாவது அத்தியாயத்தில் சிற்பத்திற் குரிய முழக்கோல் முதலிய அளக்கும் கருவிகளின் லட்சணத்தையும், அவைகளைச் செய்யும் மார்க்கத்தையும், அவைகளை உபயோகப்படுத்தும்விதத்தையும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது அத்தியாயத்தில் சிற்பிகளின் இலட்சணத்தையும், அவர்கள் கற்கவேண்டிய நூற்களையும், தரிசிக்க வேண்டிய க்ஷேத்திரங்களையும் கூறி, விஶ்வகர்ம பிரஜாபதியின் முகத்தினின்று முற்பவித்த மநு, மய, துவஷ்டாதி ரிஷிகளின் சந்ததிகளைப்பற்றி விரிவாக முறையிடுகின்றது. சிற்பாசாரியின் குணாதிசயத்தைக் கூறுமி

டத்து. சிற்பாசாரியர் சகல சாஸ்திரபண்டிதராய், தமது தொழிலில்ஊக்கமுடையவராய், மாசற்ற குணமுடையவராய், பிறர் பகை கடிந்தவராய், முனிவுகொள்ளாராய் ஜீவகாருண்ய மிகுந்தவராய், கடவுளினிடத்து நீங்கா அன்புடையவராயிருக்க வேண்டுமென இந்நூல் உரைக்கும். இதனோடும், விஸ்வகர்மசந்ததியார் தாங்கள் கைக்கொள்ள வேண்டிய நியமங்களை செவ்விதி னுணர்த்தி அவற்றை இகழ்வோர் அச்சந்ததியி லுற்பவித்தவ ரன்றெனவும் அறையும். மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது அத்தியாயங்களில், நிலங்களின் பேதங்கள் விளக்கப்பட்டு, மண்களின் ராசிகளையும், செங்கல் சுடுவதற்கான மண்ணின் லட்சணத்தையும் கூறப்பட்டிருக்கின்றது. கரிசல்மண்ணுடைய பூமியைத் தவிர்த்து மற்றெல்லாப் பூமியினிடை கட்டிடங்கள் கட்டலாமென்றும் கழறுகின்றது.

(தொடரும்.)

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியர்,
சென்னை சிற்பவித்தியா சங்கத்தின்,
அங்கத்தினர்.

## தீவினையகற்று.

தெய்வத்திருவருள்வாய்ந்த ஸ்ரீ ஔவைப்பிராட்டியார் கூறிய திவ்யத் திருமொழியுள் "தீவினையகற்று" என்ற அமுதவாக்கை ஆராய்ந்துபார்க்கின், அதன்பொருளைபுணர்ந்து அறிந்தவாறெழுதுவது தமிழறிந்தமக்கள் மாத்திரமன்று. எத்தேயத்து எம்மதத்தினர்க்கு முரியதெனவும், அவர்கள் தமக்கு சம்மதமெனக்கொண்ட கொள்கையெனவுந் தெரிகிறது, எந்நீதிநூலினைப்பார்க்கினும் கொடியது கடியவேண்டும், நல்லது நல்கவேண்டுமெனவும் அன்பினால் ஆன்றோர் அருளிச் செய்திருப்பதைக்காணலாம். முதலில்வினையென்பதை விரித்து நோக்கின் தொழில், அல்லது கர்மம் என்றும், அதுநல்வினை தீவினையென இருபகுதியுடையதெனவும், நல்வினையாற் புண்ணியமும் தீவினையால் பாவமும் சித்திப்பதால் தீவினையை நீக்கவேண்டுமெனவும் இன்றெனின் அவற்றால்வரும் துன்பத்திற்களவில்லையெனவும் சாஸ்திரவாயிலாயும் உணர்ந்தார் உரையாலும் அறிந்தோனாம்.

காரணமிருந்தே காரியம்நிகழ்வது நியமமாகலின் முன்சனனங்களி லியற்றியவினைகள் காரணமாக இப்பவத்தில் இன்பதுன்பங்களை யனுபவித்துவருகிறோம். இதனையே பிராரப்தமென்றும், ஈஸ்வரனால் நமக்கு விதிக்கப்பட்டதெனவுங் கூறுகிறோம். சிலவேளைகளில் இதைமறந்தே நன்மைநேரிடுங்கால் நாம்தேடியடைந்ததெனப்புகழ்ந்துகூறியும் தீமைநேரிடின் தெய்வத்தின் மேற்பழி சாற்றியும்வருகிறோம். "தாந்தாமுன் செய்தவினை தாமேயனுபவிப்பர், பூந்தாமரையோன் பொறிவழியே" என்ற ஆன்றோர்கூற்றும் இங்குஅறிதற்பாலதாம்.

ஒருவன் செல்வவந்தனாகவோ, அறிவிற்சிறந்த பெரியோனாகவோ இருப்பதைப் பார்க்குங் காலத்தும், மற்றொருவன் வறுமையால் வருந்துவதையோ, குட்டநோய் முதலியவற்றால் துன்புறுவதையோ கண்ணுறுங்காலத்தும் இவர்கள் முன்செய்த வினைக்கீடாக பயனை அனுபவிக்கிறார்களென்பதற்கு இவையே நல்ல திருஷ்டாந்தமெனப் புத்தியுடன் புகல்கிறோம். ஆனால் அடுத்தக்ஷணத்திலேயே கண்கெட்ட காமவிடராய்த் திரிந்தும், இரப்போரை இரக்கமின்றி இறுத்தியும், நம்பி நட்டவரை நயவஞ்சகமாய்ப் பேதித்தும், உத்தமரை உயர்த்தாமல் உல்லங்கனம் செய்தும், அன்னியர் பொருளை அவரறியாது அபகரித்தும், ஜீவஹிம்சையை சிந்தனையின்றிச் செய்தும், இன்னும் இவைபோன்ற பஞ்சமா பாதகங்களை அஞ்சாமலியற்றியும், அறிவீனர்களாயலைகிறோம். இத்தீவினைகளைப்புரியும் தீயோராகிய நாமும், நாம் செய்வதை மறந்து பிறர் செய்வதையிகழ்ந்து புத்திபுகட்ட முன்வருகிறோம். அந்தோ! என்ன வதிசயம்! தனக்கொருவழியும் பிறர்க்கொரு நெறியுமா? கடுகைவிளைத்து கரும்பை விரும்புவதுபோல பிறரை வருத்தி சுயநலங்கருதி இன்பமடைய பேராசைகொள்ளுகிறோம். கடைசியில் அவை நமக்குத் தீங்காய் விளைவதை அறிவதில்லை. இத்தீவினை யானது நாம் எத்தனை சன்மமெடுத்தாலும் விடாதுதொடர்ந்து வருத்துமன்றோ? பசுக்கள் நிறைந்த மந்தையிலும் தாயைத் தேடிச் செல்லும் கன்றுபோலும், விடாது அடியைப்பற்றி வரும் நிழலைப் போலும், வினையானது தொடர்ந்து வரும் என்ற பெரியார் மொழியை யுள்ளடக்கிக் கூறிய "தானே புரிவினையாற் சாரு மிருபயனுந், தானே யனுபவித்தல் தப்பாது—தானூறு, கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே செய்தவினை, நாடிநிற்குமென்றார் நயந்து" என்ற செய்யுளே சான்றாகும்.

ஆனாற்சில கொலைபாதகர்களும், உலோபிகளும் திரவியசம்பன்னராயும், அதிகாரமுடையவராயு மிருக்கக் காண்கிறோமேயென்று பலர் புகலக் கேட்கிறோம். அவர்கள் சம்பத்து புண்ணிய வசத்ததும், அவர்கள் இப்பிறப்பில் புரியும் தீவினைகள் மிதமிஞ்சி இருக்குமாயின் இகத்தே அவற்றின் பயனை யனுபவிப்பார்களென்பதும் நிச்சயமே. மறுபிறப்பில் அவர் அடையும் துன்பத்தைக் கூறவும் வேண்டுமோ? இன்னும் இருவினையின்பயனை யாவரும் மாறிமாறி அனுபவிப்பரே யன்றி சுகத்தையாவது துக்கத்தையாவது தொடர்ச்சியாய் துய்த்தல் முடியாது. அதற்கு "இன்பநனி செய்நல் வினையினிறப்பி னிறப்ப வுடம்பினிடைத், துன்பமது செய்தீயவினை தோன்றுமத் தீவினை மாய்வின், முன்புசெய் நல்வினை வருமிம்முறையா லிரண்டுமாறிவரு, மென்பவுலகி லொண்பகலு மிரவு மாறி வருதல்போல்" என்று சிவப்பிரகாசசுவாமிக ளருளியதையுங் காண்க.

ஆகையால் ஔவை உரையை அனுசரித்து நடந்து பாவத்திற் காளாகாதிருக்க விரும்பின் தீவினை யகற்றற்குரிய சாதனங்களைத் தேடவேண்டும். அவையாவன, நல்விஷயமெனத் தெரிந்தவற்றையே செய்வதென அப்பியசித்தும் தீயவற்றை மனத்திலும் நினைக்கக்கூடாதென்ற வைராக்கியமுங் கொள்ளல்வேண்டும். மனதில் கெட்ட சங்கற்பமுண்டாகும்போது உடனே கவனித்து மேலெழாவண்ணம் தடுத்து அம்மனதை சத்விஷயங்களைக்கேட்டுச் சிந்திக்கச் செய்தும், வாயில் வீண்வார்த்தைகளைப்பேசி கொடியனாகாதபடி பெரியோர்கள் பெருமையைப் புகழ்ந்தும், அவர்களியற்றிய நூல்களையோதியுணர்ந்தும் பழகிவரவேண்டும். அநீதி யுடையோர்போல் மனம்வேறு, சொல்வேறு, தொழில்வேறாக யில்லாமல், திரிகரணங்களு மொருமித்து நல்லாற்றினின் றொழுகும் நல்லோரிணக்கம் வேண்டும். இந் நல்லோர்கள் தான் அனைத்தும் சுகசொரூபமென்றோர்ந்து எவ்வுயிரையும் தன்னுயிர்போற பார்க்கவும் எங்குமறிவான் இறைவனுளனென்பதையும், அவனை ஒளித்து நாமொன்று மியற்றலாகாதென்பதையும், அருமையாய்க் கிடைத்த மானிட தேகத்தை அவமாக்காது அரும்பெரும்பயனை யடையவேண்டுமென்பதையும், அடிக்கடி அன்புடன் அறிவுறுத்துவர்கள். இதுபற்றியன்றோ "நல்லோரைக் காண்பதுவும் நன்றே" யெனவும் தீயோர் கூட்டுறவு தீமைவிளைக்குமென்றே "தீயோரைக் காண்பதுவுந் தீதே" எனவும் பெரியோர் மொழிந்தனர். ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் "வையக மாந்தர் தேவாசுரர்" என இருதிறத்தரென்றும், அவர் பாவங்களிவையென்றும் பின் வருமாறு கூறுகின்றார். தெய்வ சம்பத்துள்ளவர் "அஞ்சுதலின்மையும், அறிவையாக்கலும், நெஞ்சினையடக்கலு நிலைகொடாமையும், வெஞ்சின

யின்மையும், மெய்ம்மைகூறலும், தஞ்செனவேள்வியுந் தவமுமாக்கலும்''

''மறையயில்தலுந் தனைமதித்திராமையும், குறளைகள்தவிர்தலுங் கொல்லைமாற்றலும், பிறர்பிழைபொறுத்தலும் பேரொழுக்கமும், அறன்வலித்தானமோ டருளையாக்கலும்''

''இருவகைத் தூய்மையு மிந்தியங்களை, ஒருவழிப்படுத்தலும் உள்ளிட்டன்னவை, செருவருஞ்சிலையினாய் தெய்வத்தன்மையோர், மருவியதொழிலென மதிக்கவேண்டுமே'' என்றார்.

ஆனால் அசுர சம்பத்துள்ளவரோ ''எண்ணியவுலகமு முலகிற்கீசனும், புண்ணியபாவமும் பொய்யென்றே கொள்வர், பெண்ணினோடாண்புணர் கின்றபெற்றியால், நண்ணியபாவையு மென்றுநாட்டுவார்'' இன்னும் இவைபோன்ற துர்க்கருமங்களை புரிவர். ஆகையால் முன்னையது கொள்ளற்பாலதெனவும் பின்னையது தள்ளற்பாலதெனவும் நன்கு விளங்கும். இதுவரை காலத்தை வீணே கழித்ததற்கிரங்கியும், வயோதிககாலத்து உடல் மெலிந்து, கால்தளர்ந்து, பார்வைகுன்றி பரதவிக்க நேரிடுமாதலால், நம்மாலொன்று மியலா தென்பதையுங் கவனித்து திடகாத்திரரா யிருக்கும்போதே பெரியார் மொழியை மனதிற்கொண்டும் அவ்வாறொழுக முயன்றும் வருவோமாக. சர்வவியாபகமா யிருக்கும் சர்வேஸ்வரனும் தண்ணளி புரிவாராக.

S. ஆனையப்பாச்சாரி.

(153-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## சக்கிய சம்வாதம்.

ஆவதன்:— தாம் சொல்லியவாறு (சாரக்கிராகிய திருஷ்டியினால்) அல்லாது சங்கித்து உண்மைப் பொருள் காண்பதேலாதோ.

பிரபோதன்:—நண்ப! சங்கிக்கப்புகின் ஒருவாற்றானும் எச்சாத்திரத்தும் எக்காலத்தும் நிவர்த்தியாவதின்று. இவ்வுரை எமக்கு மாத்திரமன்று. இதற்கு முன் பல்லூழிகாலமாக எத்தனையோ மகாபுருஷர்கள் தொன்றுதொட்டுத் தோன்றினவர்களுக்கும், இப்போதுள்ளவர்களுக்கும், இனித்தோன்றுபவர்களுக்கும் ஒப்ப முடிந்தமுடிபாம். அங்ஙனமில்தேல், ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தினை நாட்டுவான் பற்பலசுருதியுக்திகளை யெடுத்துக்கூறியும், ஏனைய சமயக் கொள்கைகளிற் றோஷமோதியும் வரைந்துள்ளன. உலகாயதம் நாஸ்திகமாதிய மதங்களின் கிரந்தங்களாற் றெளியக் கிடக்கின்றன. ஆகலின் ''இயம்புமுவமானமெலா மேகதேச மென்றறிவாய்'' என்றவாறு, கூறியவற்றிலுள்ள தூலபாகமாகிய உருவகத்தினை விடுத்து சாரமாத்திரமருந்தி இன்புறுவது தான் புருஷார்த்த சாதகமாகுமெனப் புகல்வர். இதனாலன்றோ இலக்கண நூலினும் ஆசிரியன் மட்டு கேட்கும் பொருளை மாணவன் அன்னப்புள் போலவும், பசுவைப் போலவும், தீவிரமாகவும், மந்தமாகவும் பூர்வபாகமாகிய வேற்றுமையைவிடுத்து, அல்லது உருவங்களையொழித்து உண்மையையேற்றுச் சுகமடைதல்கடனென வரைந்துளது.

ஆதவன்:—வேதத்தைப்பற்றிய தொடர்பைக் கேட்க விரும்புகிறேன்.

பிரபோதன்:—சத்குணசாந்தசீல! வேதத்தினைமறையெ (ரகசியமெ) னவும், எழு



தாமறை யெனவும், இயற்பா வெனவும், அதாவது ஒருவரால் ஒருகாலத்து ஒரு விசேஷத்திலாக்கப்பட்டதன்றென பொருளாகின்றது. இத்தகைய பரம உத்க்ருஷ்டமாகியவேதமே மானவஜாதியார் யாவரும் அரும்பெரும் நிதியெனப் போற்றத்தக்கதூஉம், ஓதியுணரத்தக்க தூஉம், காண்டவகையின் பொருளைக் காருண்ய சற்குரு கடாக்ஷித்தவாறொழுகி, என்று மழியாவின்பமயச் சகசானந்தம் பெறுவதே இன்றியமையாத கடமையென்பது வெள்ளிடைமலைபோல் பேதவாத மொழிந்த பல அறிஞரும் உணர்ந்த விஷயமாம்.

ஆதவன்:—தாம் கூறிவந்தவேதம் பிரமாணமென்பது தன்னாலே பிரமாணிகமா? அன்னியத்தினால் பிரமாணிகமா? (பிரமாணிகமென்பதுபிரமாணத்தன்மையைஉணர்த்துவது.)

பிரபோதன்:—வேதமானது அதுவொழிந்த சகலத்திற்கும் பிரமாணமும் தனக்கும் தானேபிரமாணமாவதுமாம். இதனை ஸ்வதப்பிரமாணிகம், பிரதப் பிரமாணிகம் என வடநூலார் கூறுவர்.

ஆதவன்:—அன்னியத்திற்கு பிரமாணமென்பது எனக்கும் சம்மதமே. தனக்கும் தானே பிரமாணிகமென்பது தன் உற்பத்திக்குதான் காரணமாவது போலும் ஒருவாற்றானு மொவ்வாததாம்.

பிரபோதன்:—உத்தம! சாவதான சித்தத்துடன் கேட்டி. சூரியனானவன் அன்னிய வஸ்துக்களை ஒளிர்வித்தும் தன்னைத் தன்னாலே விளக்கிக் கொள்வது மன்றி அறிவும் நேத்திரமும் அன்னியத்தினை விளக்கி தன்னையும் தானே விளக்கிக்கொள்வதே போல வேதமாதாவும் சர்வத்திற்கும் பிரமாணமும் தனக்கும் தானே பிரமாணமுமாகி விளங்குவனெனத் தெளிக.

ஆதவன்:—வேதம் பரமப்பிரமாண மெனவியம்பியது என் மனதில் ஆனந்தமாகிறது. ஆயினும் இவ்வேதத்தினை பெண்களும், சூத்திர்,சண்டாளராதியரும் கேட்கவும், ஓதவும், கூடாதெனக் கேட்டுளேனாதலின் அதனை நிவர்த்திக்க விரும்புகிறேன்.

பிரபோதன்:—அழியாவானந்த மடைவா னவாவி அதிவினைய சல்லாபம் புரியும் குசல! இந்திரிய பராக்கொழித்து ஒருமைப்பாடாய மனத்துடன் உணர்வாயாக. மானிட சரீரம் அதியுன்னதமான சிறப்புடைய தென்பது சகல மேதாவியருக்கு மொவ்வும். அங்ஙன மிருந்தும் காலதேச ஆசார வர்த்தமான குணகர்மத்தினால் சாதிகளின் பேதங்கள் வகுக்கப்பட்டது பொதுவகையா செயலாலன்றி சிறப்புவகையா (அறிவா) லன்றெனவுணர்க.

''தாமரை பொன்முத்துச் சவரங்கோரோசனைபால், பூமரு தேன்பட்டுப் புனுகு சவ்வா—தாமழன்மற், றெங்கே பிறந்தாலு மெள்ளாரோ நல்லோர்கள், எங்கேபிறந்தாலு மென்'' என்றசெய்யுளாலும்

''ஆக்குமறிவானலதுபிறப்பினால் -
மீக்கொளுயரிழிவு வேண்டற்க'' என்றதாலும் காண்க. அன்றியும் பிரதிமானவ சரீரமத்திபாகிய இருதயப் பிரதேசத்தில் ஜீவப் பிரயத்தனமின்றி அஜபாமந்திரோச்சாரண சகிதமாக உசுவாச நிசுவாசமுலவுவதும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் சடாதாரமும், நிராதாரமாகிய சகஸ்ராரமத்தியிலும் தேவாஸ்ரயபூதமாக விருந்து விளங்கி அதிர்ஷ்டத்துக் கீடாக சுகதுக்கத்தினைச் சேர்ப்பது 51 அஷரமென்பதும், இன்னும் ''மானிடதேக வடிவு சிவலிங்கம்'' என்று நம் மூதாதையாகிய திருமூல பகவான் தமதுண்மை வாக்கால் மானவ சரீரத்தினைச் சிவ சொரூப மென்றதும் சிவத்தினை யுணரும் தகுதியுடைமைபற்றி யன்றோ? ஆதலின் சிவத் (ஆனந்த சொரூபத்) தினை யுணர்தற்கு இன்றியமையாத சாதனம் வேதமாதலின் மானவஜாதியார் யாவருக்கும் சுதந்தரமாக ஓதியுணர்தற்பாலது வேதமாம். இதனை ''வே

தஞ்சொன்னபடியொழியவேறுஞ் சிலகலைகளினை,யோதுந்திறமறுவி மறையோதுஞ் சிவனிருகமலப், பாதந்தொழ நினைவிலர்கள் பாசண்டிக ளெனவறிக," எனவும் "மையறு வேதமார்க்க மறந்துபா சண்டமார்க்க, கையரால் மயக்கப்பட்டு கலியுகந் தன்னிலுள்ளோர், மெய்யுணர் வனந்தானந்த மேனியாஞ் சிவனைப்பூசை, செய்யவா தறியார்செய்வார் தம்மையுஞ் செய்யவொட்டார்" எனவும் சொரூபானந்த சித்தி கூறுவது இங்குணர்தற் பாலதாம்.

அன்றியும் சத்தம் நாதசத்திவடிவமாம். அஃது ஜீவேசுவா வேறுபாட்டால் பேதவுபாதி வயமாகச் சமஷ்டி வியஷ்டி யெனவுணரக்கிடக்கின்றது. இதுவே சுத்தாந்தக்கரணமெனவும் விக்ஞான சத்தியெனவும் கூறப்படும். இதன் காரியமாகிய பரா, பைசந்தி, மத்திமை, வைகரி, ஆகிய நான்கு வாக்குகளுடன் பஞ்சமி யென்பதாக ஓர் வாக்கும் சில அரிய நூலினும் ஆன்றோர் அனுபவத்தானும் காணப்படுகின்றது. சமஷ்டி வியஷ்டியாகிய உபாதியற்ற நிலையில் வெளிப்படுவது தான் அல்லது பேசுவதுதான் பஞ்சமியென யூகிக்க இடனாகின்றது. அன்றியுமிதனை சங்கீத நூலுணர்ச்சியிலும் அனுபவத்திலும், தெள்ளிதினுணரக் கிடக்கின்றது. இத்தகைய வாக்குகளும், பஞ்ச மகாபூத பௌதிகங்களும், இவற்றின்காரியவகைகளும், இவைகளுக்கு கர்த்தாவாக விருந்து நடத்தும் தேவதைகளும் இவைகள் யாவையும் நியதமாக. தத்தம் நிலையில் பிறழ்தலின்றியமைத்த நியந்தாவாகிய கடவுளும், இவர்க்கன்னிய மென்னும் வேறுபாடில்லாத சக்தியும், சர்வ சராசர வுயிர்கட்கு மின்றியமையாத துணையாமாறு சமஷ்டி நாத சத்தியின் காரியமாகிய வேதமும் பரம உத்தமமாகிய துணையென்பது பேரறிஞர் பலர்க்கும் அபிமதமே. (தொடரும்.)

பொதுநன்மையை விரும்பும்
ஓர் சாது.

## தென்னிந்திய சிலாசாஸனங்கள்.

ஒவ்வொருதேசத்தின் பூர்வீகநிலைமைகளையும், வழக்க ஒழுக்கங்களையும், அத்தேசச்சரித்திரங்கள் மூலமாக ஒழுங்காக அறியக்கூடாத காலத்து, ஆங்காங்குள்ள புராதன கட்டிடங்களினிடத்து காணப்படும் வெட்டெழுத்து சாஸனங்களாலும், பூமியில் புதையுண்டு கிடந்து வெட்டி எடுக்கப்படும் சிலை, தாம்பிரம் முதலியவைகளில் எழுதப்பட்டுள்ள சாஸனங்களாலும் ஒருவாறு ஒழுங்குப்படுத்தி அறிந்துகொள்வது உலகவழக்கம். இவ்வாறே ரோமபுரி, கிரீஸ், சைபிரஸ், கிரீட் முதலிய தேசங்கள் பலநூற்றாண்டாக புதையுண்டு கிடந்ததை, அப்பூமிகளிலிருந்து அகஸ்மாத்தாய் அகப்பட்ட இரண்டொரு வெட்டெழுத்துகளிலிருந்தும், விக்கிர முதலியவைகள் உடையுண்டு சிதறிக்கிடந்த சிறிய துண்டுகளிலிருந்தும் ஊகித்து, அங்ககர்களைத் தோண்டி வெளிப்படுத்தி ஆங்கு காணப்பட்ட வெட்டெழுத்துச் சரித்திரங்கள் முதலியவற்றால் அத்தேசங்களின் பூர்வீகச்சரித்திரங்களையும், நாகரீகங்களையும் வரன்முறையாக வெளிப்படுத்தலாயிற்று. இம்மார்க்கத்தைஇந்தியாவிலும் அநுசரிக்க எண்ணங்கொண்டு நமது காருண்ய கவர்ன்மெண்டார் இவ்வித பூர்வகட்டிட, சிலாசாஸன ஆராய்ச்சிக்கென்று ஓர் இலாகாவை ஏற்படுத்தி, பல உத்தியோகஸ்தர்களையும் நியமித்திருக்கின்றனர். இவ்விலாகா இரண்டு பிரிவுடைத்து. ஒன்று புராதன கோயில்கள், மாளிகைகள், கட்டிடங்கள், சரித்திர சம்பந்தமுடைய மண்டபங்கள் முதலியவைகளை கண்காணிப்பதற்கென்றும், புதையுண்டிருக்கும் இன்னும் இவை போன்ற பலகட்டிடங்களை கண்டு பிடிப்பதற்கென்றும் ஏற்பட்டிருக்கின்றது. மற்றொன்று, மேற்கண்டவிதமாய் கண்டுபிடிக்கப்பட்ட கட்டிடங்களிடத்தோ, அல்லது பூமியிலிருந்து தோண்டி யெடுக்கப்படும் சாஸனங்களிடத்தோ காணப்படும் விசேஷங்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவதற்கென்றும் ஏற்பட்டிருக்கின்றது.



இவ்விலாகாகளில் ஐரோப்பியர் மட்டுமேயன்றி இந்தியர்கள் பலரும் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இவ்விரு விலாகா தலைமை உத்தியோகஸ்தர்கள் தங்களால் கண்டுபிடிக்கப்பட்ட நூதன விஷயங்களையும், அவற்றால் ஆராய்ந்து அறிந்த சரித்திர விஷயங்களையும், பொது ஜனங்கள் தெரிந்து கொள்வதின் பொருட்டு வருடா வருடம் வெளிப்படுத்தி வருகிறார்கள். இத்தென்னிந்தியாவின் பண்டைய நாகரீகத்திற்கு ஆதாரபூதராகிய நம் குலோற்பவர்களின் பூர்வ ஆதிக்கத்தை விளக்கக்கூடிய சிலாசாஸனங்கள் இவ்வித ரிபோர்ட்டுகளில் காணப்படுகின்றனவா வென்றும், அவ்வித சந்தர்ப்பங்களை இவ் விலாகா தலைவர்கள் சரியாகப் பொருட் படுத்தியிருக்கிறார்களா வென்றும் நாம் அறிந்து கொள்வது அவசியமல்லவா?

'தென்னிந்திய சிலாசாஸனங்கள்' என மகுடம் சூட்டி டாக்டர், ஹுல்ஸ் என்னும் மேதாவியால் எழுதப்பட்டுள்ள ரிபோர்ட்டை முதலில் கவனிப்போம். இத்துரைமகன் இந்தியா சிலாசாஸன இலாகாவின் தலைமைஸ்தானம் வகித்திருந்தகாலத்தில், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, ஜெயங்கொண்ட சோழபுரம், திருவிடைமருதூர், காஞ்சிபுரம், திருவல்லம் முதலிய திவ்விய க்ஷேத்திரங்களின் கண்ணுள்ள புராதன இந்து வாலயங்களில் காணப்படும் வெட்டெழுத்துசாஸனங்களை பரிசீலனை செய்து, தமது அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இரண்டொரு சாஸனங்களைத்தவிர இவ்வெட்டெழுத்துகளனைத்தும் பண்டைய தமிழ் பாஷையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையின், பரிசீலனை செய்யப்பட்டுள்ள சிலாசாஸனங் களின்
தாத்பரியத்தைக் [illegible]
னும் சந்தேகம் நிக[illegible] இவ் வெ
டெழுத்துக்களை நேரில் பார்த்துப்படித்
சுலபத்தில் நமது சந்தேகங்களை நிவர்த்
செய்துகொள்ளவும் கூடும். அவ்விதரிபோ
டுகளில்கண்ட அபிப்பிராயத்தில் ஏதேனு
தவறுகள் காணப்படின் அவைகளை எடு
துக் காட்டுவதற்கு பொதுஜன சமுகத்
ற்கு சர்வசுதந்திரம் உண்டு. இவ்வித அ
ப்பிராயங்களை அந்த இலாகாதலைவர்க
புனராலோசனைக்குக் கொண்டுவந்து, ஒ
புக்கொள்ளப் படவேண்டியவைகளை ஒ
புக்கொண்டும், ஒப்புக்கொள்ளக் கூடா
வைகளை மறுத்துவருவதும் சகஜமாகயி
க்கிறது.

பிரஸ்தாப ரிபோர்டின் இரண்டாவ
வால்யூம் முழுவதும், தஞ்சாவூர், ரா
ராஜேஸ்வர ஆலயத்தின் கண்ணுள்ள சி
சாஸனங்களையும், ராஜ ஆக்ஞைகளையு
ஆராய்ந்த விருத்தாந்தமாக விருக்கின்றது
இவ்வாலயத்தை ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோ
லென்றும் சொல்லுவர். இவ்வாலயம் மு
லாவது ராஜ ராஜ சோழனால் கட்ட
பட்டதென்றும், அவனுக்குப் பின்வந்
இரண்டாவது ராஜ ராஜ சோழனாலும்
கொங்கோன்மைகொண்டச் சோழன் மு
லிய மன்னர்களாலும் இமையினும் பெ
தாகக் கண்காணிக்கப்பட்டு வந்ததாகவு
அறிகிறோம். இவ்வரசர்களால் அளவற்
ஆபரணங்களும், பூமானியங்களும், தி
வியங்களும் கொடுக்கப்பட் டிருக்கின்
றது. இதன் விபரங்களெல்லாம் மே
கண்ட புத்தகத்தில் தெளிவாக எழுதப்ப
ட்டிருக்கின்றது. மானியர், ஸ்தோத்திர
முதலிய விஷயங்களையும் அவைகளை யா
யார், இன்னின்ன விதமாய், இத்தனை கா
லம் அநுபவிக்க வேண்டுமென்கிற விபர
களையும் கண்டிருக்கிறது. இவைகளையெ
லாம் இங்கு விரிவாகப் பிரஸ்தாபிப்பதி
பயனில்லை யாதலால், நம்மைக்குறித்
பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கும் விஷயங்
ளைப்பற்றிமட்டுமே இனிப்பேசுவோம்.

தஞ்சை, ராஜராஜேஸ்வரர் ஆலயத்தின் தெற்கு சுவர்ப்புரத்தில், இரண்டாவது பத்தியில் கீழே குறிக்கப்பட்டிருக்கும் சாஸனம் காணப்படுகின்றது. இச்சாஸனம் முதலாவது ராஜராஜ சோழனுடைய ஆக்கியா மொழியாகும். ஊரின் எல்லைகளின் விபரங்களைக் கூறத்தொடங்கும். இச்சிலா சாஸனம் பலபக்கங்கள் கொண்டதாகவிருந்தபோதிலும் அதன் முக்கியமான அம்ஸத்தை மட்டும் இங்கு பெயர்த்தெழுதுகிறோம்.

1. திருமகள் போலப் பெருநிலச் செல்வியும், தனக்கெய் உரிமை பூண்டமைமநக், கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி, வெங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகை, பாடியும் நுளம்ப—

2. பாடியுங் குடமலை நாடுங் கொல்லமுங், கலிங்கமும் முரட்டெழில் சிங்களர் ஈழ, மண்டலமும் இரட்டபாடி எழரையிலக்கமும், முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந் திண்டிறல்வென்—

3. றித்தாண்டாற் கொண்ட தன்னெழில், வளருழிபுளெல்லா யாண்டுந் தொழுதக, விளங்கும் யாட்டெய் செழியரைத் தெசு, கொள் கொராஜ (கேஸரிவர்மரான ஸ்ரீ). ராஜராஜ (தேவர்க்கு) யாண்டு இருபத்தொ—

4. ன்பதாவதுவரை உடையார் ஸ்ரீ ராஜ ராஜ, (தேவர்) தஞ்சாவூர் எடுப்பித்த திருக்கற்றளி, ஸ்ரீ ராஜ (ராஜேஸ்வா) உடைய வா (மஸாவபிக்கு) வெண்டு நிவந்தங்களுக்குத் தெவதான, மாகச் சோழமண்டலத்தும் புறமண்டலங்”—

5. களிலும் உடையார் ஸ்ரீ ராஜ ராஜ (தேவர்), குடுத்த ஊர்களில் ஊர்நத்தமும் ஸ்ரீ கொயி, ல்களுங் குளங்களும் ஊடறுத்துப் பொன, வாய்க்கால்களும் பறைச் செரியுங் **கம்மா ணசெரியுந்** சுடுகாடும் உள்ளிட்டு இறை, இலி'நிலங்களும்—

ஐந்தாவது பாராவில் பெரிய எழுத்தில் காணப்படும் ‘கம்மாணசெரி’ என்றும் பதத்தை இந்நூலாசிரியர் ஆங்கிலேய பாஷையில் வெகு அழகாக தர்ஜிமா செய்திருக்கின்றனர். அப்பதம் ‘கம்மாளன்’ என்னும் பதந்திற்குப் பிரதிமொழி யென்றும், கருமார், தச்சர், தட்டார், கன்னார், கல்தச்சர் முதலிய உட்பிரிவுகளைக் குறிக்குமென்றும் முடிவாகக் கூறியிருக்கிறார். இவர் தமது சுய ஆராய்ச்சியால் மேற்கண்ட விதமாய்க் கூறினரென்றும் அல்லது தமது சிப்பந்திகளால் போதிக்கப்பட்டனரென்றும் தமது புத்தகத்தில் விளக்கிக் காட்டினரில்லை. ‘கம்மாண’ என்னும் பதமும் ‘கம்மாள’ என்னும் பதமும் ஒன்றெனக் கூறத்துணிந்த இவரது உலக ஞானத்தைக்கண்டு பெரிதும் வியப்புறுகின்றோம்.

(தொடரும்.)

குறிப்பு.—பிராக்கட்டில் உள்ளவை திரந்தாக்ஷரங்களில் வரையப்பட்டிருக்கின்றன.

---

(123-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## விஸ்வதபிரான்.

விஸ்வத லோஹிதாள் ஆத்மணி நகரம் சேர்ந்து சிறிதுகாலத்தில் சக்கரவர்த்தியார் யோஜித்து நமது புதல்வர்கள் சங்கரீஸ்வரன் தெரிசனார்த்தம் பெற்று இந்தசாம்ராஜ்பத்தை அடைந்தார்கள், இனி தென்னெல்லைக் கோபுரமடைந்து அருளாமிர்தத்தைப் பெற்றுவரவேண்டியதே போக்கியமென்று சிந்தாக்கிரந்தராகி அமைச்சர் முதலான அரசாங்கத்தினர்களுக்கும் பிரஜைகளுக்கும் தென்கோபுரப் பிராப்தியாகிறதைப்பற்றி விக்ஞாபித்தும், அவர்களுக்கேற்பட்ட வியோகதாபத்தை சாந்தப்படுத்திவிட்டும், தக்ஷா விஸ்வகர்மனால் ஈன்றருளப்பட்டிருந்த விமானத்தில் தமதுதேவியாரோடு விஸ்வதலோஹிதாள் சன்னத்தராய் ஆரோகணிக்க, விமானம் வானத்தில் புறப்பட்டது. அந்த தென் கோபுரம் எப்படியானதென்றால், அக்காலத்தில் பாரத பூமியின் தென் எல்லைப்பிரதேசத்தில் ஓர் மகத்தான கோபுரம் நின்றுள்ளது. அது மானுஷ்ய கணங்களால்சிருஷ்டிக்கப் பட்டதன்று. அக்கோபுரவாசலின் உள்சாமான்ய மனிதர்களாவது அசுரர்களாவது பிரவேசிக்க இயலாது. அங்கு பூதகணங்களின் காப்பு உள்ளதாம். அவ்விடமோ விஸ்வகர்மனுடைய திருவிளையாடல் ஸ்தலமென்றே சொல்லக்கூடும். அதனுட்பாகவிசேஷங்களைப்பற்றி பின்னால் அறியலாம்.



விமானத்தில் சென்ற சக்ரவர்த்தியாரின் வரவைப்பார்த்த தக்ஷா விஸ்வகர்மனவர் மனமகிழ்ந்து, இவ்வாலயத்தில் ருத்ரசிகரம்போல் விளங்காநின்ற மகுடம் யாதொருபுண்ணியபுருஷனால் தரிக்கப்பட்டு பூமிபாலனம் செய்வதற்குக் காலம் வாய்ந்ததுபோலும் என்று மகிழ்ச்சியாயிருக்க, விமானமானது கோபுரசிகரத்தின் மேல் வந்து சேர்ந்தது. அவ்வாறாக சக்ரவர்த்தி முதலானோர் அந்த விஸ்வகர்மனை தெரிசித்தும் தென்கைலாயமாய் பேரருள் சுரக்காநின்ற அவ்விடம் சன்னதி முகூர்த்தமான ஸ்வயம்புநாதனையும், அவனது அமிர்தகடத்தையும் தெரிசித்தனர். உத்தரக் கீழ்திசையிலோ, சக்ரதராதிகளுடைய மாளிகைகளும் பட்டணமும் பரந்திருப்பதைக் கண்டனர். அதன்உத்தரமேல் பாகத்திலேபோமாந்தைநகர்கலசம் பிரதிபலியாநின்றதைக் கண்டனர். தென் கீழ்பாகத்தில் அகண்டசமுத்திரத்தையும் அதன்கோஷாரவாரத்தையும் கண்டனர். அவர்களிருந்த நிலையானது பூவுலகம் விட்டு வானுலகத்தில் நின்றதுபோலாயிற்று. அவ்விதனிலையில் சிறிதுகாலமிருந்து, அவர்களின் பஞ்சபூதபுஜ்ப்பு ஆகுதியின் நிமித்தம் சிகரத்தினின்றும் கீழிறங்கி அக்கோபுர மத்தியிலுள்ள கணங்களையும் காப்புகளையும் கடந்து, அ தென் நெல்லைப் பிரதேசத்தில் மனோகர புஜிப்பும் ரஞ்சிதவாஸமும் ஏற்றார்கள். அ பால் சிலது நாளில் ராஜ்பபரிபாலனத்தை பற்றி சிந்தித்து கோபுரசிகரத்தை அடைந்து பார்த்தார்கள். அவ்விடத்தில் தக்ஷ சிருஷ்டிகர்மனவர் இவர்கள் கீழ்நோ கின உடனேயே விமானத்திலாரோகணத்து மறைந்து போயினர். அதனால் இவர்கள் தேவ தச்சனையும் விமானத்தையும் காணாமல், இத் தென்நெல்லைப் பிரதேசத்திலேயே இனிது வாசம்பெற்றிருக்க விஸ்வேஸ்வரன் பணிந்தனர்போலு மென்று ஆலோசித்து . அந்தப் பிரதேசத்திலேயே உஜ்ஜீவித்திருக்கலானார்கள். இப்படியிருக்க, விஸ்வதபிரானுக்கு பாலத்வம் சென்று வாலிபம் கிட்டுவதான வயது வளர்ந்து கொண்டுவரவும், கொடிய சஞ்சாரர்களான சக்ரதரேஸ்வரன் முதலான வர்களுக்கு அதர்ம கர்ம நடைகள் வளரலாயிற்று. அதாவது அவர்களுக்கு விநாஸவிதி சம்பிக்கலாயிற்றென்பதாம், அவர்களின் கர்ப காரணத்தினால் பூமியில் ஓர் கிளர்ச்சி ஏற்பட்டது. என்னவெனில், மார்க்க சங்காரண்ணிய மென்ற உத்தராரண்ணியத்தில் முனிவர்கள் கூடி யோசனை செய்தார்கள். அதாவது பிரபஞ்சத்தில் தேவபலம் உண்ணத்வமாயிருத்தல் வேண்டியதற்கு யாகக்கிருத்தியங்கள்நடத்தப்படவேண்டும். ஆதலால் விஸ்வபாலன யாகத்தைச் செய்யவேண்டு மென்றும், அதற்குத் தகுந்த ஸ்தான கைங்கரியங்கள் பெறவேண்டியதென்றும், பூபதிகளுடைய காப்புகள் அதற்குத் தேவையென்றும், ஆலோசித்து ஆத்மணி நகரத்தை நோக்கிப்புறப்பட்டு அந்நகரத்தில் விஜயமாகினர்கள்.

அப்பொழுது மந்திரிப்பிரதானிகள் பெரியோர்களை எதிர்கொண்டு உபசரித்து வரவேற்றி, அவர்கள் விஜயமானகாரணத்தையுணர்ந்து, விஸ்வதலோஹிதாள் ஆவிர்பாவமாயிருக்கிறதையும், சக்கரவர்த்தியார் தென் நெல்லைக்குச் சென்றிருப்பதையும்

அறிவித்தனர்கள். விஸ்வத லோஹிதாள் சக்கரவர்த்திப்புதல்வர்களாகஆவிர்பாவமாயிருக்கிற சமாசாரத்தைக் கேட்ட பெரியோர்கள் இனி நமது கோறிக்கைகள்நிறைவேறுமென்ற மனமகிழ்ச்சி யுடையவர்களாகி தென்நெல்லைக்குப் புறப்படும்படியாய் சித்தப்படுத்தினார்கள். அதன்பேரில் ரதகாரர்களால் நிர்மாணிக்கப்பட்டிருந்த சங்கரத்தில் முனிவர்களும், மந்திரிப்பிரதானிகளும், தேவசேனையும், மற்றும்அரசர்களும் மாறுவேடம்பூண்டு ரதாரூடர் களாகவும், சங்கரதமானதுஅதிவேகமாய்ச்செல்லவும், மத்தியில் துஷ்டர்களால் ஏற்பட்டதடைகளை மாயாவிக்கிருதிகளால் கழித்துமூன்றுபக்ஷத்தில் தென்நெல்லையைக் கிட்டினார்கள்.

அந்தப்பிரதேசத்திற்கு அதிர்ச்சியைக் கொடுப்பதான சப்தத்தைக்கேட்டு,ஏதோ புதுமையானது நம்முடையஸ்தானத்தைக் குறித்து வருகிறதாகும் என்று சக்கரவர்த்தியார் எதிர்பார்த்திருக்க, சங்கரதம்காக்ஷியானது அப்பொழுது ஜேத்ரர் எதிர்கொள்ள முனிவர்கள் முதலானோர் சந்துஷ்டி அடைந்தார்கள். பின் சக்கரவர்த்தியார் பிருகுமுனி முதலானவர்களைநோக்கி எனது நற்பலனாக இங்கு விஜயசன்னத்தர்களான அகநெறியைத் தழுவி யிரானின்ற பெரியோர்களே! உங்கள் வரவானது பாற்கடல் பொங்கி திவலையாடலானதுபோலும், அதில் அனந்தசயன புருஷனுக்கு உவமையாக விஸ்வதர் உதகரித்திருக்கின்றதுபோலும், ஆகிய புண்ணியப் பெருக்கமானது எனதுள்ளத்தைப் பூரிக்கின்றது. உங்களின் நோக்கத்தை அறியக்கடமையாகிறேனென மொழிந்தார்கள். என்னவென்றால், எங்கள் தவத்தினிற்கினிய கற்பகத்தருவாய்ச் சார்ந்த பூபதியே! திரிமூர்த்திகளுடைய சிருஷ்டிதிதி சம்ஹாரம் நிகழ்ந்துவருவதில் பல்லாயிரம் ஜீவபேதங்களும், தேவாசுராளும், உற்பன்ன திதித்வமாயிருப்பதில் தேவபலம் அதிகமானாலன்றோ ஜீவர்கள் நல்ல கெதி அடையவும், தர்மப் பிரகிருதிகள் தழைக்கவும் காரணமாகும். அவ்விதமில்லாத இப்போது நிலைமையால் பிரபஞ்ச தர்மங்கள் நசித்துப்போகஎதிர்பார்க்கின்றன. பூபதிகளுடைய சம்ரக்ஷணைக் கடமைகள் தவிழலாயின. இவ்வித நிலைமையினின்று நிவர்த்தியாய் விஸ்வத தர்மங்களைக் காக்கவேண்டியதே நமதுகடமையாகும். விஸ்வேஸ்வரனருளை முன்னிட்டு விஸ்வபாலன யாகத்தைச் செய்யக்கடவோம் என்று மொழிந்தார்கள்.

அப்படியே அம் மகாயாகத்திற்குச் சக்கரவர்த்தியாருடைய கைங்கர்யம் முன்னிற்கவும் யாகமண்டபங்கள், பூஜைவிதானங்கள், வேதிகைகள், பீடங்கள், ஆஸ்ரமங்கள், யூபஸ்தம்பங்கள், ஆநிந்தசாலைகள், நிர்மாணிக்கப்பட்டன. அத் தென்நெல்லையே பரிசுத்த பூமியாகத் தோன்றலானது. விஸ்வதரின் தேவ சைனியமானது புறப்பட்டு யாகத்திற்குவேண்டிய உபகரணங்களான பால், நெய்வர்க்கங்களையும், சமித்துகள் குவியல்குவியலாகவும், பரிமளத்திரவியங்கள் மதுக்கள் முதலியவைகளையும் கிருஷ்ணாசனங்கள், வியாக்ரசர்மங்கள், தர்ப்பைபாரங்கள் இவைகளைச் சேகரித்துக்கொண்டும், வாழை, மா, கமுகுமுதலான தருவர்க்கங்களையும், கனிவர்க்கங்களையும், வகித்துக்கொண்டும், வில்வபாரிஜாத குமுதபத்ம சம்பக துரோண புஷ்பாதிகளை சேகரித்துக்கொண்டும், வெற்றிலை தேங்காய் மஞ்சள் கஸ்தூரி வர்க்கங்களைச் சேகரித்துக்கொண்டும் வந்து சேரலானார்கள். பூஜாரம்பத்திற்கு முந்தியே விஸ்வதலோஹித பெருமான்களை முன்னிட்டு முனிவர்களெல்லாம் சந்திரீக தடாகத்தை அடைந்து நீராடி, அர்க்கிய பாத்யாதிகளை அனுஷ்டித்துத்திரும்புங்கால், விஸ்வதர்மனோக்கியமான தீரத்தின் வழிகளில் நடபாவையாகச் செல்ல, ஓர் ஆலாவட்ட விருக்ஷத்தினருகில் குகையொன்றிருக்க, அதனருகில் நெருப்பில் விளையாடுவதுபோல் நெருங்கினார். அப்பொழுது அதிலிருந்து ஓர் பெருத்த கேசரியானதுபுறப்பட்டது. அப்பொழுது ருத்ரதண்டத்தினால் அதைச்சுட்டி அபிமந்திரித்து பேதனம்செய்ய, அந்தகேசரியானது பசுபோல அவர் பாதத்தினடியில் வந்துநின்றது. உடனே அதன் பேரிலாரோகணித்துத் திரும்பவும் அதைத்தெரிசித்தோர்களான முனிவர்கள் தாமரைக் குமுதத்தை ஒட்டியுள்ள இதழ்கள்போல விஸ்வதரைச் சுற்றி பரி விருதமாய் வருகலானார்கள். இவ்வாறு அந்த கூட்டமானது யாகசாலையைக் கிட்டிற்று பூஜா விசேஷங்களைத் துடங்கினார்கள். விக்னேஸ்வர பூஜாதி கிருத்தியங்கள் நடத்தப்பட்டன. அக்னிப்பிரதிஷ்டையும் செய்யத் துடங்கினார்கள்.

இவ்வாறாக யாகமானது உன்னதத்வமாய் வளர்ந்து வர, யாதொரு விஸ்வப்ரம்மத்தின் தேஜோமயானந்தமே அங்கு ஒளிர் கொண்டது போலும், அதன் முகூர்த்த சிருஷ்டித்வமே அங்கு சிஷ்டர்களாய் உற்பவித்திரானின்றதும்போலும் அவர்களின்வேள்வி கிருத்தியங்களே பிரபஞ்சதர்மதிதித்வமாக உதகரித்ததுபோலும், வேள்வியின் ஆகுதியானவை நிர்மல மற்ற குணோதயங்களால் பாம ஜெனனங்கள் தளர்ச்சியை நிச்ரகித்து சாந்தவ குணகன்மங்களால் அருள் ஜென்மத்தைப் பெறுவதான சம்ஹாரத்வம் உத்தாரணமாகப் பட்டது போலும் உவமைகொண்டது. இவ்விதம் வேள்வி நடைபெருங்காலத்தில், துஷ்டர்கள்கூட்டம். வந்துவிட்டது. அப்பொழுது விஸ்வதர் வேள்வி பரிபாலனார்த்தமாய் புறப்பட்டு விட்டார். யாகஸ்தலத்தைச் சூழ்ந்தவர்களான துஷ்டர்கள் சிம்ஹாரூடாயும், ருத்ரதண்டசஸ்திர தாரியாயும் அவர்களுடைய மத்தியில் யிரானின்ற விஸ்வதமூர்த்தியைப்பார்த்து ஆஹா! இவனன்றோ! விஸ்வதலோஹிதன். இவனுடைய சிரஸைவாங்கி நமது மன்னனுக்கு முன் சேர்ப்பதும் வேள்வியை அழிப்பதுமே நமது காரியம், என்ற மூர்க்கங்கொண்டவர்களாய் கோலாகலசம்பிரமயுத்த கோரமானபோது, முனிவர்கள் முதலானோர் விஸ்வதலோஹிதர்களாகிய மகானுபாவர்களால் யாகம் நிறைவேறவேண்டும் மண்டலமானது நன்மையைப் புஜிக்க வேண்டும்என்ற வீக்ஷண்யத்தர்களாகவும் யாகாக்னியானது உன்னதத்வமாகி தூமாகாரமானது மேகவாசத்தோடு சம்பந்திக்கவும், அம்மகாக்னியின் மத்தியில் சூலமொன்று உற்பவக்காக்ஷியாயிருக்க, விஸ்வதமூர்த்தியானவர் துஷ்டர்களை சம்ஹாரம் செய்யவும் யாகத்தை இனிதாய் நிறைவேற்றினர்கள். (தொடரும்.)

**திருநெல்லை - சாலிவாடி புராதீனம்,**
**தர்மபதி.**

## நம் சகோதரர்களின் மாட்சி.

**மதுரை, சௌராஷ்டிர ஹைஸ்கூல்.**

மதுரை சௌராஷ்டிர ஹைஸ்கூலில் வாசிக்கும் சிறுவர்களுக்கு தற்காலம் விடுதிச்சாலைகளில்லாமையால் சௌராஷ்டிர சங்கத்தார் அவைகளைக்கட்டவேண்டிய முயற்சிகளை செய்துகொண்டுவருகின்றனர். அப்பாடசாலைக்கு அருகாமையில் மதுரை முன்சிபாலிடியாருக்குச் சொந்தமான ஒரு காலிநிலத்தை அச்சங்கத்தார் விலைக்குக் கேட்டுவருகிறார்கள். சமீபத்தில் நடந்த முன்சிபல் மீட்டிங்கில் இவ்விஷயம் யோசிக்கப்படும்போது ஓர் விவாதமேற்பட்டது: முன்சிபல் கவுன்சிலர், மிஸ்டர் துளசிராமவர்கள், அந்நகரில் வரிகொடுப்போராகிய சௌராஷ்டிரர்களின் ஜனசங்கை நூற்றுக்கு நாற்பத்தேழுபாகமென்றும், இச்சாதியரின் முன்னேற்றத்திற்கு அநுகுணமானவிஷயங்களில் முன்சிபாலிடியார் தங்களாலியன்ற ஒத்தாசைகள்புரிவது அவர்கள்கடமையென்றும் பலவாக வாதித்தபின்பேரில், முன்சிபாலிட்டியார் இவர்கருத்துக் கிசைந்துவிட்டார்கள். கூடியசீக்கிரம்

இவர்கள்பாடசாலைக்கு விடுதிச்சாலைகள் ஏற்பட்டுவிடலாம். இச்சாதியர்சமீபத்தில் குடந்தையில் ஓர்கான்பரன்ஸ கூடப்போவதாகவும், ஆங்கு சௌராஷ்டிரச்சிறுவர்களுக்கு கல்வியை போதிக்குமார்க்கங்களை மட்டுமே யோஜிக்கப்படுமென்றும் சொல்லப்படுகின்றது. சௌராஷ்டிரர்கள், கல்வி அபிவிர்த்தியில்காட்டும் ஊக்கம்மெச்சத்தக்கதே. இவர்களை நாம்பின்பற்றுவதெக்காலம்?

***

**சென்னை, மகம்மதிய அஞ்சுமான்.**

சென்னை, மகம்மதிய அஞ்சுமான் தொழிற் பாடசாலைக்கென்று மவுண்ட்ரோட்டில் ஓர் பெரியகட்டிடம் கட்டப்பட்டுவருகிறது. இக்கட்டிடத்திற்கு சர் ஆர்தர் லாலி துரையவர்கள் அஸ்திவாரக்கல் நாட்டினார். இக்கட்டிடம்கட்டி முடிந்தஉடன், மகம்மதியச்சிறுவர்களால் செய்யப்படும் கைத்தொழில்சம்பந்தமான சாமான்களை விளம்பரப்படுத்தும் ஓர் காட்சிசாலை அதனுள் ஏற்படுத்தப் படுமென்றறிகிறோம். இக்கட்டிடம் சுமார் 3-லட்சம் ரூபாய் திட்டத்தில் வெகுஅழகாக அமைக்கப்பட்டு வருகின்றது. கல்வியிலும், தொழிற்கல்வியிலும் மகம்மதியர்கள் காட்டிவரும் ஊக்கத்தையும், உத்சாகத்தையும் நம்குலத்தினரடைவது எக்காலம்?

***

**சென்னை,**
**விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடூட்.**

இப்பெயர்கொண்ட ஓர் சாசுவதமான கண்காட்சிச்சாலையொன்று சுமார் 5-லட்ச ரூபாய் செலவில்கட்டப்பட்டிருப்பதை நம்மவர் பலரும் அறிவார்கள். இக்கட்டிடம் சென்னை மியூசியத்திற்கு பக்கத்திலிருக்கிறது. காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் ஞாபகார்த்தமாகப் பலர்பொருளுதவியால் இக்கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்சென்னை ராஜதானியில் உற்பத்தியாகும் தொழிற்சம்பந்தமான பலபொருள்களையும் விலைகொடுத்து வாங்கி இக்காட்சிமண்டபத்தில் பகிரங்கப்படுத்திவருகின்றனர். வெள்ளிச்சாமான்கள், தந்தசாமான்கள், தாம்பிரசாமான்கள், பித்தளை சாமான்கள், பற்பல வஸ்திரங்கள் முதலியவைகளையும்இம் மண்டபத்தில்காணலாம். நல்ல வேலைக்காரர்கள் இருக்கும்ஊர்களைத்தெரிந்துஅவர்களுக்கு இச்சங்கத்தார் முன்பணமுதவிதங்களுக்கு வேண்டியசாமான்களைச் சேகரித்து வருகின்றார்கள். நம்மைத்தொழிலைப் பரவச்செய்ய, மற்றவர்களால் செய்யப்பட்டுவரும் நன்முயற்சிகளை நாம் நேரில்பார்த்து தெரிந்துகொள்வது அவசியமல்லவா?

***

## சுகாதார விளக்கம்.

**மனிதசரீரமும், அதன்சக்தியும்.**

வாயு சஞ்சாரமின்மையால் ஒரு பலத்த மனிதன் ஐந்து நிமிஷத்தில் இறந்துவிடக்கூடுமென்றும், தூக்கமின்மையால் பத்து தினத்தில் இறந்துவிடக்கூடுமென்றும், தாகத்திற்கு ஜலம் அருந்தாமையால் ஒரு வாரத்தில் இறந்து விடக்கூடுமென்றும், ஆகாரமின்மையால், காலதேச வித்தியாசத்திற் கேற்றவாறு மரணம் சம்பவிக்குமென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

***

**நமது சரீரத்தின்எடை.**

சரீரதிடனுள்ள மனிதர்களை திராசிலிட்டு எடையிட்டுப்பார்த்தால்கீழேகுறித்த அவரவர்கள் உயரத்திற்கு தகுந்த எடையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அப்படியில்லாமல் இரண்டொரு ராத்தலுக்குமேல் குறைந்தால் அவர்களை பலஹீனர்களென்றே சொல்லவேண்டும். அப்படி எடைபோட்டுப்பார்ப்பதென்றால்சாப்பிடாமுன்னரே பரீட்சித்தறிய வேண்டும்.

அட்டவணை.

| அடி. | அங்குலம். | இருக்கவேண்டிய குறைந்த எடை. |
|---|---|---|
| 5 | ... 0 | 116 ராத்தல். |
| 5 | ... 1 | 120 ,, |
| 5 | ... 2 | 126 ,, |
| 5 | ... 3 | 133 ,, |
| 5 | ... 4 | 135 ,, |
| 5 | ... 5 | 142 ,, |
| 5 | ... 6 | 145 ,, |
| 5 | ... 7 | 148 ,, |
| 5 | ... 8 | 155 ,, |
| 5 | ... 9 | 162 ,, |
| 5 | ...10 | 169 ,, |
| 5 | ...11 | 174 ,, |
| 6 | ... 0 | 180 ,, |

***

### திராட்சைப்பழத்தின் திவ்வியகுணம்.

ஆண் பெண்ணிரு பாலர்களுடைய சரீரத்தையும், முகங்களையும் மிருதுவாகவும் காந்தியுள்ளவைகளாகவும் செய்து கொள்வதற்கு பலிதமான சோப்புகளை இப்பொழுது உபயோகப்படுத்திவருகிறார்கள். இவ்வித சோப்புகளை மிதமிஞ்சி உபயோகப்படுத்துவதால் சரீரசுகத்திற்கு நாளடைவில் கெடுதியுண்டாகலாமென வைத்திய சாஸ்திர நிபுணர்களில் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். நமது தேகங்களையும், முகங்களையும் சுகம்கெடாமலே காந்திபெறச் செய்ய வேண்டுமானால், போஜனத்திற்குப்பின் பழவர்க்கங்களைச் சாப்பிட்டு வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். திராட்சைப்பழம், பேரிச்சம்பழம், சீமை இலந்தம்பழம், வாழைப்பழம் முதலியவைகளை சிலாக்கியமானவைகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. இவற்றுள் திராட்சைப் பழம் எல்லாவற்றிலும் முதன்மை பெற்றிருக்கின்றது. அது தேகத்தின் தசையை கொழுமைப்படுத்தும். ஜீரணசக்தியை உண்டுசெய்யும். தொண்டைப்புண்களுக்கும், இருமலுக்கும் இன்றியமையாதது. சுக விரோசனத்தைக் கொடுக்கும். இதன் கியாழம் இரப்பைகளைக் கெட்டிப்படுத்தும். பித்தம், வாந்தி, தலைசுற்றுதல், மயக்கம் முதலியவைகளைத் தவிர்க்கும். ஒரு பவுண்டு அல்லது ஒரு ராத்தல் எடையுள்ள திராட்சைப்பழத்தைக்கொஞ்சம் கொஞ்சமாக பல ஆகாரங்களுடனும், தனிமையாகவும் சாப்பிட்டால் அது 4-ராத்தல் பசும்பாலுக்கும், $1\frac{1}{2}$-ராத்தல் மாமிச ஆகாரத்திற்கும், 5-ராத்தல் மச்சத்திற்கும் $4\frac{1}{2}$-ராத்தல் உருளைக்கிழங்குக்கும் 10-ராத்தல் பச்சரிசி சாதத்திற்கும் சரியாக விருக்கின்றதாம். இக்காரணங்களினால் அமெரிக்கர்களைவிட, ஆங்கிலேயர்கள் இப்பழங்களை அதிகமாகச் சாப்பிட்டு வருகிறார்களாம். நம்மவர்கள், பித்த உபசாந்திக்காக இப்பழங்களை ஒவ்வோர் சமயத்தில் சாப்பிட்டு வருவதோடும் விசேட தினங்களில் செய்யப்படும் தின்பண்டம், பாயசம் முதலியவைகளில் சிறிது பழங்களை மட்டுமே சேர்த்துவருகிறார்கள். இனியேனும், இப்பழங்களை மிகுதியாக நமது உணவுப் பொருள்களில் சேர்த்து உண்டு திடகாத்திரமடைவது நலம்.

***

### இரத்தாசயத்தின் சக்தி.

சரீர ஆரோக்கியத்துடனும், குடி முதலியவைகளில் அடிபடாத ஒரு மனிதனுடைய ஆயுள் காலமாகிற ஓர் 70-வருடங்களில், அவனது இரத்தாசயத்திலிருந்து உற்பத்தியாகின்ற இரத்த ஓட்டத்தின் மொத்தகதி 4,292,000-மைல் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு தூரம் ஓய்வு ஒழிவில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் இருதயத்தை கவனமாக பாதுகாக்க வேண்டுவது அவசியம்.

## விவசாயக் கொத்து.

### மழையின் மகிமை.

மழைகாலத்தில் பூமியைக் கவனித்துப் பார்த்தால் அதில் முளைத்திருக்கும் பசும் புற்கள் முதலியன செழுமையாக விருக்கிறது. தண்ணீர்தெளிக்கும்பாத்திரம் அல்லது மண்குடம் முதலிய வைகளைக் கொண்டு பயிர் செய்யப்படும் புற்களோ, அல்லது வேறு எந்தபயிர்களோ அவ்வளவு செழுமையாகக் காணப்படுவதில்லை. இதன் காரணம் இன்னதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, மழைஜலம் அதிக உயரத்திலிருந்து கீழே இறங்கி வரும்போது ஆகாயத்தில் பரவியிருக்கிற கரிய மிலவாயு, வெடியுப்புவாயு முதலியவைகள் பயிர்களின் வளர்ச்சிக்கு ஆதாரமான மற்ற வாயுக்களுடன் சம்பந்தப்பட்டு வருவதேயாம். ஜலபாத்திரங்களால் தெளிக்கப்படுகிற ஜலத்துடன் இவ்வாயுக்கள் சம்பந்தப்படாதபடியால் பயிர்கள் அவ்வளவுசெழிப்படைகிறதில்லை. ஆகையால் ஜலபாத்திரங்களையேனும், ஹோஸ்என்கிற குழாய்களையேனும் உபயோகப்படுத்தும்போது கூடிய வரையில் கொஞ்சம் உயரமான கட்டிடங்களிலிருந்து தெளித்து வந்தால் அவ் வாயுக்கள் சம்பந்தத்தினால் புற்களும், பயிர்களும், புஷ்பச் செடிகளும் மிகவும் செழுமையாக வளரும்.

***

### மாமரங்களுக்கு உரம்.

மாமரங்களுக்கும், கோடை காலத்தில் பலந்தருகிற மற்ற எல்லா மரங்களுக்கும் கீழே குறிப்பிட்டிருக்கிற எரு இடுவதால் அதிக பலன் கொடுக்குமென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. நைட்டிரேட் சோடா. 275 கிராம்ஸ்; பொட்டாஷ் சல்பேட். 50 P. C., 125 கிராம்ஸ் பாஸ்பேட் ஆசிட், 16 P. C., 350 கிராம்ஸ்; 100 படி ஜலத்தில் மேற்படி வஸ்துக்களைக் கலந்து கொள்ள வேண்டியது. மரங்கள் பூர்க்க ஆரம்பிக்கு முன்பாக தின மொரு தடவை இந்த ஜலத்தை வேரில் ஊற்றி வரவேண்டியது.

***

### உலோக சத்துக்களால் செய்யப்பட்ட எரு.

குளோரை ஆக்சைடும், மாங்கனீஸ் சல்பேட் என்கிற. இரண்டு உப்புக்களையும் நெற்பயிர், கோதுமை, கரும்புமுதலிய வைகளுக்கு எரு விடலாம். ஒரு ஏகர் நிலத்திற்கு 50 முதல் 80 ராத்தல் உப்புக்கள் வேண்டியிருக்கும். படிக்கார எரு விடப்பட்ட சணல்கள் நல்லபலனைத் தருகின்றன. சோளப்பயிருக்கு மயில் துத்தம் எருவிட வேண்டும்.

***

### மின்சார சக்தியால் பயிர்களின் தீவிரவளர்ச்சி.

பயிரிடப்படும் பூமிகளுக்கு மேலே 12 அடி உயரத்தில் இரும்புக் கம்பிகளால் செய்யப்பட்ட வலைகளைப் பந்தலிட்டு எலக்டிரிக் கரெண்டுகளை அப்பந்தலில் வியாபிக்கச்செய்தால் பயிர்கள் சீக்கிரம் பலன் தருகிறதென்று ஜெர்மனியில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. மழை காலத்திலும், அதிக உஷ்ண காலத்திலும் இவ்வித மின்சார சக்தியை உபயோகப் படுத்தக் கூடாதாம். ஒரு நாளைக்கு ஒரு தடவைக்குமேலும் உபயோகப்படுத்தக்கூடாதாம். இந்த சக்தியை உபயோகப் படுத்துவதால், முட்டைகோஸ், காலிபிளவர், கத்தரிக்காய், பட்டாணி, வெண்டைக்காய் முதலியசெடிகள் அதிகபலன்தருகின்றனவாம். இவ்வித மின்சார சக்தியை உண்டுபண்ணக் கூடிய இயந்திரங்களுக்கு முதலில் கொஞ்சம் பொருள் செலவானாலும், அதனால் பிறகு லாபம் இருக்கிறது. ஆண்டுவர்ப்பு என்னு மிடத்தில் வேறு விதமாகவும் மின் சார சக்தியை உண்டுசெய்கிறார்கள். கம்பிவலைகளுக்குப் பதிலாக, மின்சாரத்தை ஆகாயத்திலிருந்து இழுக்கக் கூடிய கம்பிகளை, பயிரிடப்படும் பூமிகளில் நட்டுவைத்து அதன் வழியாக பயிரின் வேர்களின்வழியாக அச்சக்தியை ஏற்றி விடுகிறார்கள். இவ்வித நவீன முறைகளை நமது விவசாயிகளும், ஜமீன்தார்களும் கவனிக்கலவசியம்.



## ஆயுர்வேத சாரம்.

### தீபாக்கினி சஞ்சீவி லேகியம்.

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வகைக்கு பலம்-1, இவைகளை இளவறுப்பாக்கிச் சூரணித்து ஆவின் பால் படி 2' பனவெல்லம் பலம் 10, ஆகிய இவைகளைச் சேர்த்து பாகுசெய்து அப்பாகில்சூரணத்தைத்தூவி கிண்டிவரும்போது தேன் பலம் 10, நெய் பலம் 10. விட்டு மெழுகு பதமாகக் கிளறி பரணியில் அடைத்து கழற்சிக்காய் பிரமாணம் காலை மாலை இருவேளையும் 10, 5, 7 நாள் சாப்பிடவும் தீரும். நோய்கள்: வாய்வு, வாதம், பித்த வாய்வு, உஷ்ணங்கள், வயிர் உளைவு, குக்து, சர்வாங்கவலி, ஆசனக்கடுப்பு, எரிச்சல் பேதி, பொருமல், வாதக்கிராணி, அஸ்திசுரம், அஸ்த்திவெட்டை, வாந்தி முதலிய வியாதிகள்தீரும். இச்சாபத்தியம்.

***

### க்ஷயங்களுக்கு அமிர்தசஞ்சீவி லேக்கியம்.

கண்டங்கத்திரி சமூலம் உலர்த்தி ஒரு வீசை யெடுத்துக்கொண்டு, எட்டுபடி ஜலம் விட்டு ஒருபடிக்கு சுண்டக்காய்ச்சி யிறுத்துக்கொண்டு பனவெல்லம் பலம் 20 பசும்பால் படி 1 சேர்த்து பாகு செய்து சுக்கு, மிளகு, திப்பிலி தான்றிக்காய் மாசிக்காய், கடுக்காய், வாய்விளங்கம், ஓமம், குரோசாணி ஓமம், லவங்கப்பட்டை, சீரகம், மோடித்திப்பிலி, கோஷ்டம், தாளிச்சபத்திரி, அக்கிராகாரம், வகைக்கு பலம் 1 இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூரணித்து, அடி பாகிற்றூவி பசுவின்நெய் பலம் 10 தேன் பலம் 10வார்த்து மெழுகுபதமாய் கிளறி எடுத்துக்கொண்டு, கொட்டைப் பாக்களவு காலை மாலை 10, 20 நாள் சாப்பிடவும். இதனால் தீரும்வியாதிகள்:—கழல்வாதம், பக்கசூலை, கிருமி, நாக்குப்பூச்சி, கருப்ப வாய்வு, இருமல், சுவாசம், கபம், பித்தம், உஷ்ணம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

***

### திராட்சி சூரணம்.

கொடி முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அதிமதுரம், முட்காவேளை, நெற்பொரி கோரைக்கிழங்கு, ஏலம், கிராம்பு, கொத்தமல்லி, மிளகு, திப்பிலி, கூகைநீர், வெலிப்பருத்திவேர், சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கப்பத்திரி, வால்மிளகு இவைகள் வகைக்குப் பலமொன்றுகொண்டு இளவறுப்பாய் வறுத்துச்சூரணித்து, சமனிடை சர்க்கரையைச் சேர்த்து திரிகடிப் பிரமாணம் அந்திசந்தி நாற்பதுநாள் தேனிலாகிலும் நெய்யிலாகிலும் கொள்ளவும். இதனால் தீரும் வியாதிகளாவன:—அந்திரவாய்வு, பாண்டுரோகம், தாபச்சுரம் மயக்கம், தூக்கமின்மை, பித்தவாந்தி, அன்னத்துவேஷம், உஷ்ணரோகம், சிலேத்துமரோகம், அக்கினி மந்தம், கைகாலெரிவு முதலியவைதீரும். இச்சாபத்தியம். கைகண்டது. உஷ்ணதேகிக்கு நெய்யிலும் சிலேத்துமதேகிக்கு தேனிலும் கொடுக்க.

***

### அமிர்த சஞ்சீவி சூரணம்.

திரிகடுகு, திரிபலாதி, கோஷ்டம் அக்கிராகாரம், திப்பிலி மூலம், சீரகம், கொத்தமல்லி, வாய்விளங்கம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாபத்திரி, சடாமாஞ்சி, சோம்பு, வால்மிளகு, லவங்கப்பட்டை வகைக்கு பலம் ஒன்று, தாளிச்சபத்ரி, பலம் பத்து. இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து சீனிசக்கரை சமனிடைசேர்த்து திரிகடிப்பிரமாணம் ஒரு மண்டலங் கொள்ளவும். இதனால் தீரும் வியாதிகளாவன:—க்ஷயம், பீனி, அஸ்திசுரம், அஸ்திவெட்டை, நெஞ்சில் கபம், பித்த வெட்டை, பித்தபாண்டு, கிராணி வகைகள், அதிசாரங்கள், அன்னத்துவேஷம், விக்கல், கக்கல், கைகாலெரிவு காந்தல் முதலியவைதீரும். கைகண்டது. இச்சாபத்தியம். புளி, புகை, போகம் தள்ளவும்.

ஆயுர்வேத பண்டிதர்,
பா. மா. ஆறுமுகாச்சாரி.

## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின் கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும்கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக் கொண்டால் விடையளிக்கப்படும். இதனை அநுமதி பெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்]

### சுலபமாய் உருகும் பத்தவைப்பு சேர்மானங்கள்:—

இவை தண்ணீர் கொதிக்கும் சூட்டில் (212°F) உருகக்கூடியவை என்பதினாலேயே மெருகிட்ட சாமான்கள் ஒடிந்துவிட்டால் அவைகளை விளக்கில் (Blow Pipe) வைத்து ஊதுகுழாயால் ஊதி, மெருகு கெடாதபடி தீர்மானஞ் செய்யக் கூடும்.

| நெம்பர். | காரீயம். | காட்மியம். | பொன் நிமிளை | வெள்ளீயம் | Fahrenheit | ஷரா. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 1 | 4 | 1 | 150° | இந்த பொடிகள் செம்பு, பித்தளை இரும்பு முதலிய உலோகங்களில் பற்றும். உதவியாக ரோஜனம், நவச்சாரம், நாகத்தால் முறிக்கப் பட்ட முராட்டிக் ஆசிட் சேர்த்துக் கொள்க. |
| 2 | 8 | 3 | 15 | 4 | 158° | |
| 3 | 4 | 2 | 5 | 2 | 160° | |
| 4 | 8 | 10 | 8 | 3 | 167° | |
| 5 | 11 | 2 | 16 | 3 | 170° | |
| 6 | 2 | 2 | — | 4 | 187° | |
| 7 | 3 | — | 5 | 2 | 197° | |
| 8 | 5 | — | 8 | 3 | 202° | |
| 9 | — | 1 | 2 | 1 | 203° | |
| 10 | — | 1 | 3 | 2 | 203° | |
| 11 | — | 1 | 5 | 3 | 203° | |
| 12 | 6 | — | 8 | 3 | 208° | |
| 13 | 5 | — | 2 | 3 | 212° | |
| 14 | 20 | — | 9 | 14 | | அச்சாபீஸ் எழுத்துகள் பிளாக்குகள் வார்க்கலாம். |
| 15 | 50 | 22½ | — | 36 | | |

***

### பிளாட்டினம் வெள்ளி சேர்மானம்.

பிளாட்டினம் 1 பாகம், சுத்தவெள்ளி 2 பாகம் சேர்த்துருக்கிக் கொள்ளவும். இது மிகவும் உபயோகமான சேர்மானம்.

***

### மணிவார்க்கும் வெங்கல சேர்மானம்:—

மணிகள் எவ்வளவு பெரிதாயிருந்தாலும் தொனியை அதிகப்படுத்தாதென்றும், ஆனால் கெம்பீரமான தோற்றமும், ஆழ்ந்த சப்தமுடையவைகளாயிருக்குமென்றும், எவ்வளவுமணி சிறியதாயிருக்கின்றதோ அவ்வளவு கீச்சொலியுடையதாயிருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

| நெம்பர். | செம்பு. | நாகம். | காரீயம். | வெள்ளீயம் | ஷரா. |
|---|---|---|---|---|---|
| 1 | 21 | — | — | 4 | வாத்தியமணி. |
| 2 | 76 | 2 | — | 26 | சிறியமணிகள். |
| 3 | 2 | — | — | 3 | |
| 4 | 4 | — | — | 1 | வீட்டுமணி, சேமக்கலம், மலையாளமுரி, தகடு அடிக்கலாம். |
| 5 | 7 | — | — | 2 | |
| 6 | 17 | — | — | 3 | |
| 7 | 16 | 1 | — | 4 | விக்கிரகங்கள் நாகம் இரட்டின கடிசு ஆகும். |
| 8 | 20 | 4 | — | 1 | |
| 9 | 100 | — | — | 20-25 | கோவில் பெரிய மணிகள். |
| 10 | 19 | — | — | 6 | |
| 11 | 3 | — | — | 1 | |
| 12 | 74½ | — | ½ | 25 | கடிகாரமணிகள். |
| 13 | 71 | 2 | — | 26 | அரப்பொடி. |
| 14 | 20 | 3 | — | 8 | ,, ஜப்பானியர் மணி. |
| 15 | 20 | 2 | 4 | 6 | ,, |

முக்கியமாய் செம்பும் வெள்ளீயமும் பலபாகங்களாக சேர்த்துருக்கப்படும். ஆனால்வேண்டிய அளவுமணியின் தொனியை உண்டு செய்யவோ அல்லது விலை சரசமாகும்படிச் செய்யவோ, வேண்டுமானால் மற்றுஞ்சில உலோகங்களை, உதாரணமாக முக்கியமாய் நாகம், காரீயம், அரப்பொடியுடன் சில சமயங்களில் பொன் நிமிளை, வெள்ளி, சுருமா அல்லது நிமிளையையும் இவற்றோடு சேர்க்கப்படுகிறது. உருக்கும் போது குகையை பொடிக்கரியால் மூடி உருக்கவும்.



***

### அலுமினிய பித்தளை சேர்மானம்:—

1. 100 பாகம் பித்தளையில் (½முதல்1) முதல் 5 பாகம் அலுமினியம் சேர்த்து உருக்க பவுன் தங்கவர்ணமாகும்.

2. 100 பாகம் பித்தளையில் 5 முதல் 7 பாகம் அலுமினியம் சேர்த்துருக்க ரோஜாபுஷ்ப நிறமாகும்.

3. 10 பாகம் பித்தளையில் 1 பாகம் அலுமினியமும் சேர்த்துருக்க வெள்ளி போன்ற வெண்மை நிறமாகும்.

4. 9 பாகம் பித்தளையும் 1 பாகம் அலுமினியமும் சேர்த்துருக்கி புதிய உலோகம் அலுமினிய வெண்கல மெனப்படும்.

***

### தங்கம் போன்ற சேர்மானம்:—

1. 1 பாகம் செம்பும் 1 பாகம் காரீயமும் சேர்த்துருக்க மஞ்சள் நிறமாயிருக்கும். அரத்தால் ராவலாம். களிம்பு உண்டு.

2. 3பாகம் செம்பும் 1 பாகம் நாகமும் சேர்த்துருக்கவும்.

3. 94¾ பாகம் செம்பு, 2¾ பாகம் நாகம், ¾ பாகம் காரீயம், 1½ பாகம் இரும்புதூள். முறையே சேர்த்துருக்கிய கட்டியை நைட்ரிக் ஆசிட்டில் அவைத்து பின் கழுவி சுத்திசெய்து உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

4. 100 பாகம் செம்பு, 16 பாகம் மக்னீசியா (Mgo), ½ பாகம் நவச்சாரம், ⅛ பாகம் கல்சுண்ணாம்புத் தூள், 9 பாகம் டார்டார் (Tartar), 17 பாகம் வெள்ளீயம். செம்பு உருகிய உடனே மேற்படி பொடிகளைப் போட்டு குகையை மூடி ½ மணி உருக்கி ஆடையை ஒதுக்கிவிட்டு வெள்ளீயத்தைச்சேர்த்து கலந்து உருக்கியபின் கட்டிவிடவும். இதில் முக்கியமாய் கடிகார கேசுகளும், சங்கிலிகளும் செய்யலாம்.

5. 90¾ பாகம் செம்பு, 8¼ பாகம் நாகம், 1 பாகம் தங்கம் சேர்த்துருக்கிக் கொண்டால் மட்டசு வேலைக்கு மிக்க உபயோகப்படும்.

***

### நெருப்பில் வைத்து ஊதி யெடுக்கும் பத்தவைப்பு பொடிகள் சேர்மானம் :—

| * பத்தவைக்க வேண்டிய உலோகங்கள். | தங்கம். | இரும்பு. | வெள்ளி. | செம்பு. | பித்தளை | நாகம் | வெள்ளீயம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொன் | 1 | 1 | — | — | — | — | — |
| | 2 | 1 | — | — | — | — | — |
| வெள்ளி | — | — | 3 | 1 | — | — | — |
| | — | — | 2 | — | 1 | — | — |
| இரும்பு செம்பு | — | — | — | 57 | — | 43 | — |
| | — | — | — | 1 | — | 1 | — |
| பித்தளை | — | — | — | — | 12 | 6 | 1 |
| | — | — | — | ½ | 2 | 1 | — |
| | — | — | — | — | 3 | 1 | — |
| வெண்கலம் | — | — | — | 1 | 2 | — | 1½ |

* இவைகளை முதலில் ஒன்றோடொன்று பிடித்து நிற்பதற்காக காரம், பத்திமண், சுண்ணாம்பு முதலியவைகளால் ஒட்டி உலர்ந்தபின்னர் மேலே கூறிய பொடிகளைக் கூட்டி, தகடடித்து கத்தரிக் கோலால் சிறிய துண்டுகளாக வெட்டி, பொரித்த வெண்காரம், நவச்சாரம் முதலியவற்றோடு கலந்து மேலே வைத்து நெருப்பிலூதி யெடுக்கவும்.

***

## பல குறிப்புகள்.

நமது விஸ்வகர்ம குலோபகாரியின் அருமைப்பாட்டினைத் தங்கள் பத்திரிகைகளில் வியந்துபேசி, எமக்குஉற்சாகமூட்டுகிற பல பத்திரிகாசிரியர்களுக்கு எமது மனப் பூர்த்தியான வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

***

நமது பத்திரிகையின் விஷயதானிகள் மனமுவந்து, குறிப்பிட்ட காலத்தில் தங்கள் தங்கள் வியாசங்களை அனுப்பிவரும் ஊக்கத்திற்கு வந்தனம் செலுத்துகிறோம்.

***

நமது வேதாத்தியயன பாடசாலையின் அபிவிருத்தியையும், நமது பத்திரிகையின் நன்னிலைமையையும் கோரினவராய், ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார் இத்தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக கூடிய சீக்கிரத்தில் புறப்பட எண்ணங்கொண்டிருக்கின்றார்.

***

வெளியூர் வாசிகளாயுள்ள நமது குலாபிமானிகள், தங்களூர்களில் நவீன நாகரீகத்திற்கிணங்க சுஜாதிச்சபைகள் சேர்ந்திருந்தால் அச்சபைகளின் பெயர்களையும் உத்தியோகஸ்தர்களின் நாமதேயங்களையும் நமக்குத் தெரிவித்தால் அவ்விஷயங்களைப் பலரும் அறிந்து கொள்ளும் பொருட்டு நம்பத்திரிகை வாயிலாய் வெளியிடக் கூடும்.

***

வெளி ஜில்லாக்களில் நம் ஜாதிச்சிறுவர்களுக்கென பாடசாலைகள் ஏற்படுத்தியிருந்தாலும், இனிஏற்படுத்தஎண்ணங்கொண்டிருந்தாலும், அதன் விவரங்களை நேயர்கள் தயவுசெய்து தெரிவிக்கக் கோருகிறோம்.

***

வெளி ஜில்லாக்களில் நம்மனோர்களால் சமஸ்கிருத பாடசாலைகள் ஏதேனும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் அவ்விஷயத்தையும், அவைகளுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் மூலதனம் முதலிய விவரங்களையும் நமக்குத் தெரிவிப்பார்களாக.

***

பலவகை கைத்தொழிலிலும் கெட்டிக்காரர்களான நம்குலோற்பவர்களைச் சிபார்சுசெய்யும்படிக்கு உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் நமக்குப் பல கடிதங்கள் வந்துகொண்டிருப்பதால், நல்ல வேலைக்காரராயிருப்பவர்கள் தங்கள் வேலை, கூலி, வயது முதலிய விவரங்களை உடனே தெரிவித்துதங்கள்நாமதேயங்களைப் பதிவு செய்து கொள்வது நலம்,

***

கைத்தொழில் சம்பந்தமாக ஆயிரக்கணக்கானபுஸ்தகங்கள் இங்கிலீஷ் முதலிய அன்னிய பாஷைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைப் படித்துத்தெரிந்து கொள்வதற்கு நம்மனோர்க்குப் போதுமான சக்தி தற்கால மில்லாமையால், அவ்விஷயங்களை அநுபவமுடைய ஒரு நேயரைக் கொண்டு தெளிவாக "தொழிற் குறிப்புகள்" என்னும் தலைப்பின் கீழ் தமிழில் எழுதிவருகிறோம். இதனை நம் குலோற்பவர்கள் நன்கு கவனித்து தங்களுக்கு நிகழும் சந்தேகங்களை இனிமேலும் தெரிவிப்பார்களென்று நம்புகிறோம்.

***

நமது கைத்தொழில்களின் அபிவிர்த்தியைக் குறித்து, சென்ற மாதச் சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தபடி, இச்சஞ்சிகையில் நமது பிரதம தொழிலாகிய இரும்புவேலையைப்பற்றி எழுதியிருக்கிறோம். இதனை சிரமம் பாராட்டாது பன் முறை வாசித்துவரக் கோருகிறோம்.

***

கைத் தொழில்களின் நுட்பங்களை விளக்கிக்காட்டக் கூடிய நல்ல வியாசங்களை இப்பத்திரிகை எக்காலத்தும் அங்கீகரித்துப் பிரசுரஞ்செய்யக் கடமை பூண்டிருப்பதை விஷயதானிகள் உணர வேண்டுகிறோம்.

***

எவ்வூர்களிலும் நம் குலத்தினர் அமாவாசை தினத்தை தங்களுக்கு ஓய்வுநாளாகக் கொண்டு அன்று காலை முதல் மறுநாட் காலைவரையில் சீட்டு, தாயம், பதினெட்டாம் புள்ளி முதலிய சூதாட்டங்களில் புத்தியைச் செலுத்திவரக் காண்கிறோம். இவ்வித துர்ப்பழக்கத்திற்கு இடங்கொடாதபடி, அன்று நமது குல தேவதையான ஸ்ரீ காமாட்சியம்மைக்கு அபிஷேக ஆராதனைகள் செய்துவரின் அதன் வழியே நமது குலத்திற்குப் புண்ணியம் சித்திக்குமன்றோ? இச்சென்னை நகரில் இவ்வித பழக்கத்தை சென்ற அமாவாசை முதல் அநுஷ்டானத்திற்குகொண்டுவந்து விட்டார்கள். அன்று நமது வேதாத்தியயன பாடசாலை கமிட்டியாரின் உத்ஸவம்.

***

ஒவ்வோர் ஊரிலும் பிரதி அமாவாசை தினம் பிற்பகலில் நம்மவர்கள் மகாநாடு கூடி குலத்தின் அபிவிர்த்திக்கான விஷயங்களைப் பேசிப் பழகிவரவேண்டும். சபா கம்பமின்றிப் பேசும் பழக்கம் சொற்ப காலத்திலடையலாம். பேசும் பழக்கம் கிட்டவே குறித்த கால அளவைக் கடக்காமல் பேசப் பழகவேண்டும். இவ்வித முயற்சிகளால் நம்குலத்தில் உபந்நியாசர்கள் மலிவார்கள். உபந்நியாசர்கள் பெருகவே, கான்பரன்ஸ் முதலிய மஹா நாடுகள் கூடுவது கஷ்ட சாத்தியமாயிராது.

***

நம்குலோற் பவர்கள் சமபந்தி போஜனத்தில் இனிமேலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும். முகமறியாத பல ஆருஷேயர்கள் ஓர் பந்தியில் உட்கார்ந்து புசிப்பதை நாம்பார்த்ததில்லையா? சமபந்தி போஜனத்தால் பல நன்மைகள் சித்திக்குமென்று ஆழ்ந்து யோசித்தால் விளங்கும். இவ்விஷயத்தைப் பற்றி இனி விரிவாகப் பேசுவோம்.

***

குலத்திற்கேற்றவாறு உடைகளைத்தரிப்பது நமது கடமையாகிறது. நம்மவர்களில் கிராம வாசிகளாயுள்ள சிலர் முழங்காலுக்குமேல் உத்தரீய முடுத்திக் கொள்வதும், மேலாடைகளைக் களைந்து தெருவழியே செல்லுவதும் சகஜமாக யிருக்கிறது. இத்துர்வழக்கத்தை வேரோடு களைந்து விடுவதில் நம்மவர்கள் நாட்டம் வைக்கவேண்டும்.

***

நமது பத்திரிகை முன்னிலுமிப்போது அதிக பக்கங்கள் கொண்டு விளங்குவதோடும், பலருக்கும் உபயோகப்படக் கூடிய அரிய பெரிய விஷயங்களை உள்ளடக்கி யிருப்பதும் வாசகர்களுடைய கவனத்திற் படாமற் போகாது.

***

நமது குலாச்சார விஷயங்களை விளக்கக் கூடிய தமிழ் புஸ்தகங்களை அனுப்பும்படிக்குப் பலரும் எழுதி வருகிறார்கள். அம்மாதிரியான புஸ்தகம் விஸ்வபிரம்ஹ புராணமே யாகும். இது திருவையாறு ஸ்ரீ முத்துச்சுவாமி பாரதியவர்களால் செய்யுள் ரூபமாகச் செய்யப்பட்டுள்ளது. அதனையே வசன ரூபமாகச் செய்து நம்மவர்கள் அனுசரிக்க வேண்டிய குலாச்சாரங்களைத் தெளிவாக விளக்கி எழுதப்பட்டிருப்பதோடும், விலையைக் குறைத்து எட்டணாவிற்கு விற்கப்பட்டும் வருகிறது. புஸ்தகம் வேண்டியவர்கள் நமது ஆபீஸுக்கு எழுதிக்கொள்ளலாம்.

***

நமது பாடசாலையின் புஸ்தக சாலைக்கு இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருத புஸ்தகங்களைச் சேர்த்து வருகிறோம். குலாபிமானச் செல்வர்கள் தங்களால் கூடிய மட்டும் புஸ்தகங்களை நன்கொடையாகக் கொடுத்துதவுவார்களென்று நம்புகிறோம். அப்புண்ணிய வான்களின் திருநாமங்களை நமது பத்திரிகை வாயிலாய் வெளியிடுவோம்.

(171-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## குல நலச் சுவடி.

**தகரவர்க்கம்.**

| | | | |
|---|---|---|---|
| 37. | தண்டமிழ் ஓத | ... ... | குலமகட் கறிவி. |
| 38. | தானென நின்றால் | ... ... | குலந் தழையாது. |
| 39. | திரைகட லோடியும் | ... ... | குலத்தொழி லோர்க. |
| 40. | தீவழிச் செல்வம் | ... ... | குலத்திற் கிடரே. |
| 41. | துள்ளித் திரிவோர் | ... ... | குலத்திடைக் கயவர். |
| 42. | தூய ரென்போர் | ... ... | குலசீலத் தொழுகுவர். |
| 43. | தெய்வ தூஷணம் | ... ... | குலத்திற் கேளனம். |
| 44. | தேக விழுமுன் | ... ... | குலபாக மியற்று. |
| 45. | தைப் பூசத்து | ... ... | குலத்தை யுண்பி. |
| 46. | தொன்னூல் பற்றி | ... ... | குலத்தை ஏற்று. |
| 47. | தோதக மொழிந்து | ... ... | குலபாதகந் தேடேல். |
| 48. | தௌதிக மாய்தல் | ... ... | குலத்தோர் பணியே. |

**நகரவர்க்கம்.**

| | | | |
|---|---|---|---|
| 49. | நன்றி மறத்தல் | ... ... | குலத்திற் கோரரி. |
| 50. | நாணயங் கெட | ... ... | குலத்தொழி லழியும். |
| 51. | நிஷ்டை அழிந்தால் | ... ... | குலகஷ்ட மோங்கும். |
| 52. | நீள நினைந்தால் | ... ... | குலநலங் குன்றும். |
| 53. | நுண்ணியர் சங்கம் | ... ... | குலத்தினில் நாட்டு. |
| 54. | நூதநப் பணி | ... ... | குலத்தினி வியற்று. |
| 55. | நெட்டுயிர் விட்டு | ... ... | குலத்தினைக் கட்டு. |
| 56. | நேய மறந்து | ... ... | குலப்பழி பகரேல். |
| 57. | நையச் சொல்வோர் | ... ... | குலமுய்யச் சொல்வர். |
| 58. | நொந்துரைத்தல் | ... ... | குலபந்த மகலா. |
| 59. | நோன்பினிற் சிறந்தது | ... ... | குலமுன் னேற்றம். |
| 60. | நௌவு சுவ்வாக | ... ... | குலத்துடன் பழகு. |

(தொடரும்)

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரி.

---

## அருள் வாக்கிய அகவல்.

**காப்பு**

வேத மாநெறி சேரும் வினைகளும்
தாக போகம் விடாத தளர்ச்சியும்
சோக வாரியி னல்வருந் துன்பமும்
போக வானை முகத்தனைப் போற்றுவாம்.

**தோத்திரம்-அகவற்பா.**

பாரோடு வானும் படர்தரு காற்றும்-நீரோடு கனலும் நிலவிய வுடுக்களும்
இரவியும் மதியும் இயங்குபல் லுயிரும்-பறவைமற் றியாவும் படைத்தளித் தழிக்கும்
ஒருதனி முதலே! ஒப்பள வில்லாக்-கருணையங் கடலே! கனிந்தருள் ஞானச்
சோதியே! பரம சுகந்தரும் அரசே!-ஆதியே! யெங்கும் அமர்ந்தமெய்ப் பொருளே
இன்புறப் பணிவோர் இருதயாம் பரத்தினில்-அன்புறப் பாயுநல் லானந்த வெள்ளமே!
உற்பவ மற்றமா உன்னதப் பிரம்மமே!-அலைகடல் சூழ்ந்த அவனியில் மாயா
வலைதனிற் செறிந்த மடமையால் அடியேன் தோன்றிய வற்ப சுகந்தனை விரும்பி
ஊன்றிய சினம்பொய் உறுகொலை களவு-வஞ்சகம் பகைமை வளரழுக் காறு
நெஞ்சினி லோர நினைவுவே றொருவன்-மனையினை விழைதல் வழுப்புறங் கூறல்
இனையதீ வினைகளாம் இடறினில் மூழ்கி-நரகவே தனையில் நண்ணிடா வண்ணம்
தர்மவண் சிந்தையுஞ் சத்திய நிலைமையும்-பொறையும் தயையும் பொருந்துசெவ் வறிவும்
நிறையுங் கல்வியும் நிகரிலா வன்பும்-உரிமையாம் இவைகளை யுவப்பொடு தழுவி
தெரிபல கற்பித தேவரை வணங்கா-தொருவரா மும்மை யுள்ளத் தமைத்து
மிடைந்தொளிர் பதியெனும் மேலாம் பதவியை-அடைந்திடு மாறெமக் கருள் புரி வீரே.

ம. பிரபுலிங்க ஸ்வாமி
நாகப்பூர். C. P.

---

## கடிதங்கள்.

### "முதல் முதல் சீர்திருத்தம்"

நம்விஸ்வகர்மசமயத்தாரை ஆரம்பத்தில் சீர்திருத்துவதற்கு என்மனதிற்றோன்றிய சிலவிஷயங்களை இங்குளழுதுகிறேன். நண்பர்கள் இவற்றை உபேகைஷசெய்யாமல் ஊன்றியோசித்து இவற்றுக்கனுகுணமான தத்தமபிப்பிராயங்களை இப்பத்திரிகைவாயிலாய் வெளியிடுவார்களாக.

முந்திய பத்திரிகைகளில் வெளியிட்டபடி குலத்தில்தாரதம்மியம் இருப்பதினால் குலாசாரம் இங்கு எற்கற்பாலதன்று. சமயாசாரமே எற்கற்பாலதாம்.

அது:—

(1) சமயக்கடவுளை வழிபடுமுறைகளை யாராய்ந்து ஒழுங்குபடுத்தி அனுஷ்டிக்கச்செய்வது.

(2) சமயா சாரக்கிரியைகளை குறைவுபடாமல் சரிவர நடத்தச்செய்வது.

இவற்றில். (1) சமயக்கடவுளை வழிபடச்செய்தலாவது, இப்போதுள்ளபடி அங்கங்குள்ள ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானங்களில் நம்மவர்களே பூஜாசாரியர்களாக இருப்பதற்கு வேண்டிய ஆகமமந்திரமுறைகளை நம்சிறுவர்களுக்குக் கற்பித்து அவர்களால் நம்தேவாலயங்களில் பூஜாகைங்கர்யம் சரிவர நடந்தேறுமென்னும் திடமுண்டானதருவாயில் அவர்களை அமர்த்தி முன்னிருந்தகோயில்குருக்களைநீக்கிவிடுவது.

(2) நம்மவர்களால் புரோகிதம் செய்யப்படாத பிராந்தியங்களிலும் நம்மவர்களில் புரோகிதத்தொழிலை விருத்திசெய்து புரோகிதம் செய்விப்பது, இவ்விருவித காரியங்களுக்கும் வேண்டிய கல்வி பயில்வதற்காகத்தான் முதலில் பாடசாலைகளை எற்படுத்தவேண்டும். இப்பாடசாலைகள் சென்னையில் மாத்திரமிருந்தால் போதாது. இவ்விராஜதானியைச்சார்ந்த பழய நாடுகள் ஒவ்வொன்றிலும் இருக்கவேண்டும். அல்லது ஜில்லாவுக்கொன்றுவது இருக்கவேண்டும். அவ்வப்பிராந்தியத்துப் பாடசாலைகளை அவ்வவ்விடத்தாரே ஆதரிக்கவேண்டும். அவைகளில்படிக்கும் சிறுவர்களும் அவ்வவ்விடத்தாராகவே இருத்தல்வேண்டும். மேலும் எவ்வெவ்விடங்களில் நம்கோயில்களில் நம்மவர்களால் பூஜை நடத்தப்படவில்லையோ, எவ்வெவ்விடங்களில் நம்மவர்களால் புரோகிதம்செய்யப்படவில்லையோ அவ்வவ்விடத்துச் சிறுவர்களாகவே இருப்பதுசிறப்பு. ஆனால் அச்சிறுவர்க

ளின் குடும்பயோக்கியதை இப்படிப்பட்டதாயிருக்கவேண்டுமென்பதை நான்விவரித்தெழுதவேண்டுவதில்லை. உண்மையில் மற்றவர்கள் மறுக்கக்கூடாததா யிருத்தல்வேண்டும். அப்படிப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்களும் அவர்களைவெளியே அனுப்ப உடன்பட்டவர்களாயிருத்தல் வேண்டும், இப் பாடசாலைகளின் போதகாசிரியர்கள் திறமை யுடையவர்களாயிருத்தல் வேண்டும். புரோகிதக் கல்விக்கு ஒரு பாடசாலையும், பூஜாசாரிக் கல்விக்கு வேறு பாடசாலையும். வேண்டியதில்லை இவ்விரண்டிற்கும் ஒரே பாடசாலை போதுமானது. இவ்விரண்டையும் ஒவ்வொரு சிறுவனும் கற்றிருக்க வேண்டும். இப்பாடசாலைகளில் சேரும் சிறுவர்களின் வித்தியா யோக்கியதை சம்ஸ்கிருதமும், சுதேச பாஷையும் படிக்கவும் எழுதவும் தெரிந்திருக்கவேண்டும். எழுத்து கற்கும் சிறுவர்களாயிருக்கக் கூடாது அப்படியிருந்தால் வீண்காலம்போக்கும் பொருள் விரயமும்நேருவதுமன்றி சீக்கிரத்தில்காரியசித்தி கூடாது. அச்சிறுவர்களின்வயது 12-க்கு மேற்பட்டதாயிருக்கவேண்டும். அவர்கள் இப்பாடசாலைகளில் பயிலுங்காலம் மூன்று வருஷத்துக்குமேற்படக்கூடாது. அக்கால முடிவில்அவர்கள் பரீட்சிக்கப்படுவதன்மேல் காலியிடங்களுக்கு பர்த்திசெய்யப்பட வேண்டும். பாடசாலைகளையேற்படுத்தி ஆதரிப்பதற்குமூலதனம்கீழ்க்கண்டபடி யிருக்கவேண்டும். அவ்வப்பிராந்தியத்து கோயில்வரும்படிகளில் கோயில், செலவுபோக மீதியும் அவ்வப்பிராந்தியத்து மகாஜனங்களால் இதற்கென்று பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்படும் சுபாசுப வரும்படியும், அவ்வப்பிரதேசத்துச் சபை வரும்படியுமாம். இப்படிச் செய்வதனால் அப்பாரமான கஷ்டம் ஒன்றும் நேராது சுலபமாய் முடிவு பெறும். இதற்காக முதலில் செய்யவேண்டியவை ஒரு கண்காணிக்கும் சபை ஸ்தாபனமும், அந்த சபைமூலமாய் மேற்கூறிய காரியங்களை எளிதில் நடத்திவரலுமாம். அச்சபை இச்சென்னை ராச்சியத்துக்கு ஒன்றே போதுமானது. அதில் ஜில்லாவுக்கொரு மெம்பர்சேரவேண்டும்.

இவ்விதமான சபை நிர்மாண மானவுடனே மேற்கண்ட காரியங்களைச் செய்யத் தூண்டுவதற்காக கமிட்டிகளை யேற்படுத்தி அங்கங்கே அனுப்பவேண்டும். கண்காணிக்கும் சபை மெம்பர்கள் இருந்த இடத்திலிருந்தே எழுத்துமூலமாய்க் காரியம்நடத்தலாம். கமிட்டி மெம்பர்கள் தங்களுக்காக வகுக்கப்படுகிற ஜில்லா அல்லது பிரதேசத்துக்குப் போய் அங்கங்கே சபைகளை ஸ்தாபிக்கவும், கண்காணிக்கும் சபையின் அபிப்பிராயத்தை வெளியிடவும், ஸ்ரீகாமாக்ஷியம்மன் தேவஸ்தான நிலைமைகளைப் பரிசோதிக்கவும், புரோகிதர்களின் நிலைமைகளைப் பரிசோதிக்கவும் அங்கங்கே பாடசாலைகளை ஸ்தாபிக்கவும் மேற்கூறிய விதமாய்ப் போதகாசிரியர்களையும் மாணுக்கர்களையும் பரிசோதிக்கவும், தம்மால் செய்யப்படுகின்ற காரியங்களைக் குறித்து கண்காணிக்குஞ் சபைக்கறிவிக்கவும் வேண்டும். பிரதிஜில்லாவுக்கும் வகுக்கப்படுகிற இக்கமிட்டி மெம்பர்கள் அந்தந்த ஜில்லா வாசிகளாகவே இருப்பது நலம். கண்காணிக்கும் சபையின் பிரசிடெண்டும் காரியதரிசியும் காரியம் நடத்திவர மெம்பர்கள் அக்காரியத்துக்குத் தக்க யோசனை சொல்ல வேண்டும். இத்தியாதி காரியங்களுக்கும் முதல் முதல் நம் பத்திரிகையின் விஷயதான கர்த்தாக்கள் ஒருவர்க்கொருவர் இதற்கென்று பிரத்தியேகமாய்க் கடிதம் போக்குவரத்து செய்து தீர்மானித்துக்கொண்டு காரியத்தில் தலையிடவேண்டும். அப்படிச் செய்யாமல் பத்திரிகையில் வெளியிட்டு விட்டு அங்காந்திருத்தல் வீணும் ஆகையால் இதைக்கண்டவுடனே நம் விஸ்வகர்ம குலோபகாரியின் பத்திராதிபர் இப்பத்திரிகையின் விஷயதான கர்த்தாக்களின் பெயர் முழு விலாசங்களை அவர்கள் தங்களுக்குள் சுலபமாய்க் கடிதம் போக்குவரத்து செய்வதற்காக இப்பத்திரியில் விவரமாய் வெளியிடுவாராக.

அத்தியாபக லிங்காச்சாரி,

கணியம்பாடி.

* * *

### வி. க. து. பத்திராதிபருக்கு.

ஐயா, தங்கள் பத்திரிகையை விடாமல் படித்துவரும்முகத்தால் எனக்குஉண்டாயிருக்கும் சுஜாதி யபிமானத்தால் இக்கடிதம் எழுதத் துணிந்தேன். கொஞ்சகாலத்திற்கு முந்தி, தங்கள் பத்திரிகைக்குச் சொந்தமான அச்சியந்திர சாலையை பலப்படுத்தி, நூதன மிஷின்களை ஸ்தாபித்து பத்திரிகையைப் பரிமளிக்கச் செய்யவேண்டு மென்று* எழுதியிருந்தீர்கள். அதற்கு சுஜாதியர் பொருளுதவி புரிவது நல மென்றும் குறிப்பிட்டிருந்தீர்கள். இப்பேர்ப்பட்ட பண விஷயங்களை பலதடவைகளில் வெளிப்படையாக சொன்னால்தான் நம்மவர்கள் காதில் ஏறும். அவர்கள் ஜாடையில் தெரிந்துகொள்வார்களென்று தாங்கள் நினைக்கவேகூடாது. அப்படி சொல்வதிலும் அவர்கள் ஒவ்வொருவர்களிடமும் போய் சொல்ல வேண்டுமே ஒழிய இந்த விடத்தில் இருந்துகொண்டு சொல்லிக் கொள்வதில் பயனில்லை. ஆகையால் தாங்களாவது, தங்களுடைய ஏஜண்டுகளாவது பல ஊர்களுக்கும் வந்து தங்கள் பத்திரிகைக்குப் பல சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொள்வதோடும் அச்சாபீஸ்விஷயமாகக் கிடைக்கும் பொருள் சகாயத்தையும் பெறவேண்டும். சென்னையில் உள்ள நமது சுஜாதியர்களிடத்தில் இப்பொழுதுஒற்றுமையில்லை யென்றும், இதுவரையில் ஒன்றாய் நடைபெற்று வந்த சபையானது இரண்டு பட்டுப் போய் கலக ஆஸ்பதம் தேடிக்கொண்டிருப்பதாக இந்த ஊரில் பிரஸ்தாபமாக விருக்கிறது. தாங்கள் நேரில் புறப்பட்டு வந்தால் தான் இவ்விஷயத்தின் உண்மைகளை எடுத்துச் சொல்லக்கூடும். தாங்கள் நமது குல விஷயமாக எவ்வளவோ சிரமம் எடுத்து உழைத்து வருகிறீர்களென்று எங்களுக்குத் தெரியும், தெரிந்தும் என்ன செய்கிறது. உலைவாயை மூடினாலும், ஊர் வாயை மூடலாமா? கடித்த மூட்டுப் பூச்சியையும் கடிக்காத மூட்டுப் பூச்சியையும் உலகத்தார் விடுகிறார்களா? ஆகையால் தாங்கள் அவசியம் வெளியூர்களுக்கு பிரயாணமாக புறப்படவேண்டும். நான் தங்களுடன் ஒத்துழைக்க சர்வசித்தமாயிருக்கிறேன் வேணும் நமஸ்காரம்.

தங்கள் அன்பன்.

ஆ. சு. இலட்சுமணாச்சாரி, புதுக்குடி.

## ஓர் பரிதாப மரணம்.

நம் ஜாதீய முன்னேற்ற விஷயங்களில் தலையிட்டு உழைப்பவர்களுக்கு ஏதேனும் இடையூறுகள் நேருவது சகஜமாக விருக்கிறது. உதாரணமாக **விச்சுவகர்மன் பத்திரிகைக்கு நேர்ந்த** விபத்துக்களே சான்றாகும். இப்பத்திரிகை சில காலம், பல இடையூறுகளால் அரிஷ்டம் நேரிட்டு இப்பொழுது பிரசுரமாகி வருகிறது. அப்பத்திரிகாசிரியரின் மருகரான ஸ்ரீகார்த்திகேய ஆச்சாரியாரின் அகாலமரணத்தைக் கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். இக்கனவான் இப்பத்திரிகையின் அபிவிர்த்தியில் தளார ஊக்க முடையவராயிருந்து வந்தனரென அறிகிறோம். இப்பரிதாபகரமான சம்பவத்திற்கு நாம் அநுதாபப் படுகிறோம்.

ப-ர்

இப்புவியிற் கற்றோ ரெமக்கொப்பா ரில்லையெனத்
தப்புமொழி கூறித் தலையசைக்கும்— அற்பர்களின்
சொல்லும் பொருளுந் தலங்குநடை யும்பழிப்பும்
நல்லார்க்குண் டாமோ நவில்.

# வர்த்தமானக் குறிப்புகள்.

### கைத்தேழிற் படிப்பு.

இந்தியாவில் கடந்த ஐந்துவருடங்களுக்குள் கைத்தொழிற் பள்ளிக்கூடங்கள் 147லிருந்து 242-க்கு ஏறியிருக்கின்றன. சென்னைப்பட்டணத்திலும் வங்காளம், யூனைடெட் புராவின்ஸ் பஞ்சாப் ஆகிய இந்தமகாணங்களில் ஏதேஷ்டமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன 5 வருஷத்திற்கு முந்தி மாணாக்கர்கள் 6820 பேர்கள்தானிருந்தார்கள். இப்போது 12034 பேர்கள் இருக்கிறார்கள். 1897-லிருந்த மாணாக்கர்களை விட இப்போது 11 மடங்கு அதிகமாயிருக்கிறார்கள். 5 வருஷத்திற்குமுந்தி வருடம் ஒன்றுக்கு 5,91,095 ஆகவிருந்தது. இப்போது ரூ. 11,72,947 ஆகயிருக்கிறது கவர்ன்மெண்டார் 5 வருஷத்திற்குமுந்தி ரூ2,12, 504கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்போது ரூ 5, 52, 506 கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். கைத்தொழிலில் உயர்தரப் படிப்புக்கான பள்ளிக்கூடம் பெங்களூரி லிருக்கிறது. இதன்பெயர் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப்சயின்ஸ் என்று பெயர். பேர்போன பார்சிவர்த்தகராகிய மிஸ்டர் ஜெ என். டாடாவால் இது ஆதியில் ஸ்தாபிக்கப்பட்டது. அவர் இறந்துபோகும் வரையில் இந்தப் பள்ளிக்கூட ஏற்பாடு பூர்த்தியாகவில்லை வருஷத்திற்கு ரூபா 1,25,000 வருமானமுள்ள பூமியொன்றை நன்கொடை அளித்திருக்கிறார். கவர்ன்மெண்டார் வருஷத்திற்கு ரூ 87 ஆயிரம் கொடுத்து வருகிறார்கள். மைசூர் சமஸ்தான கவர்ன்மெண்டார், ஒரு பூமி விட்டிருப்பது மன்றி ஆரம்பச் செலவிற்காக 5 லக்ஷரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கின்றார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் ஆரம்பச்செலவிற்காக ரூபாய் 2½லக்ஷம் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். 1911-ம்வருஷம் ஜூலைமாதத்தில் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. 17 மாணாக்கர்கள் சேர்ந்தார்கள். எல்லா உயர்தர கைத்தொழில் படிப்பும் போதிக்கப்பட்டு வருவதுடன் பிரஞ்சுஜெர்மன் தேசபத்திரிகைகளை வாசித்து பயன்பெறும்படி அப்பாஷைகளும் போதிக்கப்பட்டு வருகின்றன.

***

### சென்னைக் கல்வி இலாகா.

சென்ற 1912-13ம் வருஷத்தில் நம் இராஜதானியில் வித்தியாபிவிருத்தி எவ்வாறிருந்ததெனச் சென்னைக் கவர்ன்மெண்டார் பரிசீலனை செய்து பார்த்ததில் பிரஸ்தாப வருஷத்தில் எல்லா மார்க்கங்களிலும் வித்தியாபிவிருத்தி அதிகமாயிருந்ததென்றும், வித்தியா இலாகா டைரக்டராயிருந்து நீண்ட ரஜாவின்மீது செல்லும் ஆனரபில் டாக்டர் போரனுடைய மேல் விசாரணையில எலிமெண்டரிபடிப்பு மிகவும் விருத்தியாயிருக்கிறதென்றும் அதற்காக மிஸ்டர் போரனையும் அவருக்குட்பட்ட டிபார்ட்மெண்ட் ஆபீசர்களையும் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்காக அவர்களைமெச்சுவதாகவும் மதராஸ் கவர்மெண்டார் விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள்.

***

### இந்தியா இலங்கைப் புகைரதவீதி.

சென்றமாதத்தில் இந்தியாவிற்கு மிலங்கைக்கு மிடையிலமைக்கப்பட்ட புகைரதவீதி திறக்கப்பட்டது. நமதுகவர்னர் அவர்களும் மற்ற பிரபுக்களும் அன்று காலை மன்னாரி லிருந்து புறப்பட்டு ஒன்பதரை மணியளவில் தனுஷ்கோடியை யடைந்தனர். ஆங்குஓர் சிறந்த வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அதில் இராமபிரானின் சம்பவங்களும் அனுமாரால், இராம ரணே யமைக்கப்பட்ட வாலாறுகளும் செவ்வனே வரையப்பட் டிருந்தன. இதன் வருவாய் கண்டு தனுஷ்கோடிக்கும் மன்னாருக்கு மிடையிலும்ஓர் சமயம் பாலமமைப்பார்களாம்.

***



### கரும்பு சாகுபடி.

1913-ம் வருஷம் டிசம்பர் மாதம் முடிவு வரையிலும் இந்த ராஜதானியில், 77730-ஏகரா விஸ்தீரணமுள்ள நிலத்தில் கரும்புப் பயிர் சாகுபடி செய்யப்பட்டது. கரும்பு வெல்லத்தின் விலை குறைந்துபோனதினால் ஜாஸ்தியான நிலத்தில் கரும்புபயிர் சாகுபடிசெய்யப்படவில்லை.

கோயமுத்தூர் ஜில்லாவில் கரும்புப்பயிர்செய்யப்படுவதற்கு அனுகூலமிருக்கவில்லை பல்லாரி, அனந்தபுரம், தென்கன்னடம் ஆகியஇம்மூன்று ஜில்லாக்களில் கரும்புப் பயிர் செய்யப்படுவதற்குவேண்டிய அனுகூலமிருந்தது. ராஜதானி முழுவதிலும் 150,000டன் நிறையுள்ள வெல்லம் செய்யப்பட்டதென்று மதிக்கப்படுகிறது.

***

### எலிப்போறியின் விலை.

ஐக்கிய மாகாணத்தின் மேல்பக்கத்தில் வசித்துக்கொண்டிருந்த பென்ஜமன் கார்ட்என்ற ஒரு சிறுபையன் ஒருநூதனமான எலிப்பிடிக்கும்பொறி ஒன்றைக் கண்டுபிடித்தான். அதன் மூலமாய் யுத்தக்கப்பல்களில் மனிதர்களுக்கு அதிக தொந்தரவைக் கொடுத்துக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான எலிகளை அதனால் சங்கரித்ததாகத்தெரிகிறது. இதற்காக அந்தப் பையனுக்கு மூன்று லட்சம் ரூபாய் அந்ததுரைத்தனத்தாரால் வெகுமதிகொடுக்கப்பட்டது. அச்சிறுவன் இன்னும் ஒரு உயர்தரப்பாடசாலையில் வாசித்துவருகிறான்.

***

### ஓர் நல்லவட்டி.

சீனாவில் ரயில்போட அந்த கவர்ன்மெண்டுக்கு 8-லக்ஷம் பவுன் கடன்வேண்டுமென்று லண்டனில் ஒரு சீன சபையார் பிரவித்தம் செய்திருக்கிறார்கள். 87½ பவுன் கொடுத்தால் 100பவுன் கொடுத்ததாக வைத்துக்கொள்ளப்படும். வட்டி 100-க்கு5. இங்குபணமிருக்கிறதா?

***

### ஓர் வீரசைவ பாரிஸ்டர்.

ஆக்ஸ்போர்ட் காலேஜில் பாரிஸ்டர் பரீட்சையில் தேரிய பி. ஏ. பட்டதாரியாகிய Mr. ஜார்டீருந் தாப்பா அவர்களை மைசூர் சமஸ்தானத்தில் ஸிவில் செர்வீஸ் ஆபீசராக எடுத்துக்கொள்ளப்பட்டதற்காக மஹாராஜா அவர்களுக்கும் திவான் அவர்களுக்கும் மேற்படியாரின் ஜாதியராகிய வீரசைவலிங்கதாரிகள் தங்கள் நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டனர்.

***

### சென்னையில் ஆகாயரத சஞ்சாரம்.

சென்னை முனிசிபல் ஸ்பெஷல் இஞ்சினீராகிய மிஸ்டர், மேட்லிதுரை சென்றமாதம் 9ௗ காலையில் தமது ஆகாயரதத்திலேறி சென்னையைச்சுற்றிவந்தார். அவருடன்கூட இரண்டொரு ஐரோப்பியர்களையும் அழைத்துச்சென்றார். அன்று காலை 6-மணிதுடங்கி 7½-மணி வரையில் 1100 அடிஉயரத்தில் பறந்துகொண்டிருந்தனர். ஏப்பிரல்மாதம் 2ௗ காலையிலும் சென்னையைச்சுற்றிவந்தார். அவர் ஏறிச்செல்லும் ஆகாயரதமானது 30,000 ரூபாய்செலவில்செய்யப்பட்டதாகத் தெறிகிறது. அதனை நடத்தும் சாமார்த்தியத்தை அந்த துரை மிகவும் அடைந்திருக்கிறாராம்

***

### சென்னை கவர்ன்மேட் ஆபீஸ்கள்.

சென்னை கவர்ன் மெண்டு பல இலாகா சிகரடேரிகளின் ஆபீஸ்கள் இந்தமாதம் 14ௗக்கு மேல் உதகமண்டலத்தில்திறக்கப்பட்டு அங்கு அடோபர் வரையில் தங்கியிருப்பார்கள். கவர்னர் அவர்களும் கோடைநாள்களை அங்குதான் கழிப்பார்.

***

### புதையுண்டிருந்த விக்கிரகங்கள்.

தஞ்சை ஜில்லாவைச்சேர்ந்த புங்கனூர்கிராமத்தில் சிலகுடியானவர்கள் தங்களுடைய பட்டாநிலத்தை வெட்டி உழும்பொழுது, தாம்பரத்தால்செய்யப்பட்ட நடராஜர் விக்கிரகம்

ஒன்று, சோமாஸ்கந்தர் ஒன்று, அம்மன் ஒன்று, பிரதோஷமூர்த்திகள், வள்ளி, தெய்வானை விக்கிரகங்களும் அகப்பட்டனவாம். இவ்விக்கிரகங்களுடைய மொத்தக்கிரயம் ரூ $91\frac{1}{2}$ என மதிப்பிடப்பட்டிருக்கிறது இவ்விக்கிரகங்கள் தஞ்சைஜில்லா கலெக்டர் வசமிருக்கின்றன.

***

### சில ரயில்வேயின் வருமானம்.

பிப்ரவரிமாதம் 7ம்தேதியோடு முடிவாகிற ஒரு வாரத்திற்குள், நைசாம் ஸ்டேட்ரயில்வே கம்பெனிக்கு ரூ 1,60,638ம், தென் இந்தியரயில்வே கம்பெனிக்கு ரூ 5,45,849ம், தஞ்சாவூர் டிஸ்டிரிகட்போர்ட் ரயில்வேயிக்கு ரூ19,643ம், ஷோரனூர்கொச்சின்ரயில்வேயிக்கு ரூ12,454ம் வருமானம் வந்ததாகத்தெரிகிறது.

***

### தீயின்றிச் சுருட்டுப்பற்றும்.

அமெரிக்கர் ஒருவர சுருட்டின் முனையைத் தேய்த்தால் தீப்பற்றும்படியான சுருட்டுகள் செய்யும்வகையைக் கண்டுபிடித்திருக்கிறார்.

***

### நரபலிக் கேத்தனம்.

பம்பாயில் வாத்வான் என்னும் சமஸ்தானத்தில் கோசா சாதியான் ஒருவன் 7-வயதுள்ள பையனை நரபலி கொடுக்கும்படி திருடிக்கொண்டுபோனதற்காக 18 மாசக் கடுஞ்சிறைத் தீர்ப்படைந்தான்.

***

### ருசியாவில் சுரங்கவிபத்து.

ஓர்லோவோ என்ற சுரங்கத்தில் ஓர் கூலியாள் சட்டத்துக்கு விரோதமாய்ச் சுருட்டுப் பற்றவைக்க லாந்தரைத்திறக்கவே உடனே பெரிய வெடியுண்டாகி 40 பேரிறந்தார்கள். இருவர்மாத்திரம் உயிர்தப்பினார்கள்.

***

### உணவின்றிப் பிழைத்திருத்தல்.

குதிரை தண்ணீரைமட்டும் குடித்துக்கொண்டு 25 நாள் ஜீவித்திருக்கும்; நாடி ஆறுமாதமிருக்கும்; விரியன்பாம்பு ஒன்றுமில்லாமலே புத்து மாதமிருக்கும்; ஒருபாம்பு இரையில்லாமல் இருபத்தொரு மாதம் அடைக்கப்பட்டிருந்ததுண்டாம்.

***

### ஜப்பானில் பூகம்பம்.

அக்கிட்டாவில் கடுமையான பூமியதிர்ச்சி உண்டாயிற்று. ஒரு மணி நேரத்தில் ஆறு முறை அதிர்ச்சிகள் உண்டாயின, சனங்கள் திகிலடைந்தார்கள். வீடுகள் இடிந்து விழுந்தன. றெயில் பாதைகளும் தந்திக்கம்பிகளும் அனேக விடங்களில் சேதப்பட்டன. ஓமாகிரி காரிவானோ என்ற விடத்தில் 11 பேர் செத்தார்கள். அசாமாவென்ற விடத்தில் ஓர் அக்கினி மலைகக்கிப் பிரமாதமான சேதம் உண்டாயிற்று.

***

### ஆனந்தவருஷ வாக்கிய பஞ்சாங்கம்.

மதுரை விஸ்வப்ராஹ்மண சபையோர்கள் தீர்மானித்த பிரகாரம் பஞ்சப்ரமாக்களை பஞ்சாங்கரூபமானபடியால் மற்றவர்களால் கெணிக்கும் பஞ்சாங்கத்தை நாம் அனுஷ்டிக்கத் தகாதென்றும் நமது வம்சத்தினர்களாற் கெணிக்க வேணுமென்ற கருத்திற்கிணங்க நாங்கள் வருஷந்தோறும் பஞ்சாங்கங்கள் பிரசுரிப்பதாகக் கருதி இப்போது ஆனந்த வருஷத்திற் கென்றேகெணிக்க பஞ்சாங்கம் 11 பாரத்தில் அரிய பெரிய சங்கதிகள் பலவும் இதில் விசேஷமாக விளக்கப்பெற்றுத் தயாரா யிருக்கிறபடியால் விஸ்வப்ராம்ஹண குலத்தில் அவதார புருஷர்களான அபிமானிகளுடைய குடும்பங்களொவ்வொன்றிலும் இப்பஞ்சாங்க மொவ்வொன்றிருக்க வேண்டியது அத்யாவசியகமென்றே வேண்டுகின்றோம். ஒரு பஞ்சாங்கம் வேண்டியவர்கள் இரண்டணா ஸ்டாம்பு அனுப்பவேண்டியது.

விஸ்வகுலோத்தாரண பிரஸ்,
நெ. 5/10 வேதகிரிமேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.



சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின்

# பகிரங்க விளம்பரம்.

சுஜாதி கனவான்களே!

1. இந்தசபை 1910ஹு அகடோபர்மீ 21உயில் முக்கிய சட்ட திட்டங்களுடன் ஸ்தாபிக்கப்பெற்றது. இதற்கு வைஸ்பிரசிடெண்டுகள் மூவர், காரியதரிசி ஒருவர், உதவி காரியதரிசி இருவர், பொக்கிஷதார் ஒருவர், கமிட்டி மெம்பர்கள் எழுவர், ஆக மொத்தம் 14 மெம்பர்களும் அப்பொழுது நியமிக்கப்பட்டனர். இவர்களுள் காரியதரிசியாகிய ஸ்ரீ P. கல்யாண சுந்தராச்சாரியரும், உதவி காரியதரிசிகளிலொருவராகிய ஸ்ரீ கா. திருவேங்கடாச்சாரியரும், கமிட்டிமெம்பர்களில் ஒருவராகிய ஸ்ரீ கு. பாலசுந்தராச்சாரியரும், இச்சபையினின்றும் அகாரணமாய் பிரிந்துவிட்டதுடன். 1913ஹு எப்ரல்மீ 7உயில், செய்துள்ள சபாபுதுமண்டபப் பிரவேசமும், 9உ நடந்துள்ள உத்தியோக நியமனம் முதலிய சகல நடவடிக்கைகளும் இந்த நிர்வாகசபையின் தீர்மானம் பெறாமலே அவர்கள் சுயேச்சையில் நிறைவேற்றினார்கள். இந்த நடவடிக்கைகளனைத்தும் சட்டவிரோதமென்றும், ஒழுங்கீனமென்றும் இங்குசொல்லவும் வேண்டுமோ.

2. மேற்கண்ட விதமாய்ப் பிரிந்தவர்களின் நடவடிக்கைகளைப்பற்றி ஆக்ஷேபித்து, வைஸ்பிரசிடெண்டுகளாகிய கோயமுத்தூர் ஸ்ரீ C R சுப்பராய ஆச்சாரியரும், ஸ்ரீ தி மு. முக்கண்ணாச்சாரியரும். உதவி காரியதரிசிகளிலொருவராகிய ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியரும், பல கடிதங்களும், ரிஜிஸ்டர் நோட்டீஸ்களும் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளுக்குப் பதிலாக அவர்கள் பொருத்தமில்லாத கடிதங்களை, தாமதமாக அனுப்பியிருக்கிறார்கள். இவ்விருதிறத்தாருடைய கடிதங்களை இனி நமது "விஸ்வகர்மகுலோபகாரி"யில் வெளியிடுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

3. பின்னர் சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம குலோத்தாரணசபையார்கள் 1918ஹு ஜூலைமீ 6உயிலும், ஜூலைமீ 20உயிலும், ஆகஸ்டுமீ 3உயிலும். கூட்டங்கள்கூடி, பலதீர்மானங்களைச்செய்து அவைகளை உடனுக்குடன் அக்கூட்டத்தாருக்கு அனுப்பி, அவைகளுக்குத்தகுந்த முகாந்திரம் சொல்லும்படிகேட்டிருந்தும் பதில் கிடைக்காமையால், ஆகஸ்டுமீ 17உ கூடிய இச்சபை மீட்டிங்கில், தீர்மானித்தபடி அக்கூட்டத்தாரால் புதிய நியமனம் பெற்றதாக நினைந்துள்ள எழுவரும், இச்சபையின்பேரால் எவ்வித நடவடிக்கைகளை நடத்தவும், தீர்மானங்களைச் செய்யவும், விளம்பரங்களை வெளியிடவுங் கூடாதென்றும், அவர்கள் போலிநியமனங்கள் ஒப்புக்கொள்ளப் படத்தக்கவையல்லவென்றும் இச்சபையாரால் ஆக்ஷேபித்து கண்டிக்கப்பட்ட தீர்மானங்களை அவர்கள் எழுவருக்கும் தனித்தனியே அனுப்பப்பட்டிருக்கிறது.

4. மேற்கண்ட ஒழுங்கீன நடவடிக்கைகளை ஆத்திரப்பட்டு பகிரங்கப்படுத்தினால், நம்சபையை கௌரவித்திருக்கும் நம் குலாபிமானிகளுக்கு அருவெறுப் புண்டாகு மென்றஞ்சி, அவைகளை வெளிப்படையாகக் காட்டாமல் இச்சபையார் இதுவரையில் அடைந்திருந்த சாந்தத்தை இவர்கள் தெரிந்து கொள்ளாமல் மேன்மேலும் இச்சபைபேரால் பல நடவடிக்கைகளையும் அக்கூட்டத்தார் நடத்திவருகிறார்கள். அக்கூட்டத்தின் காரியதரிசியால் வெளி

யிடப்பட்ட 31-3-14 தேதியுள்ளநோட்டீஸால் அவர்கள் நாளது எப்பிரல் மாதம் 5உயில் மறுவருஷத்திற்கு சபா உத்தியோகஸ்தர்களையும், கமிட்டி மெம்பர்களையும் நியமிக்கப் போவதாகவும், மற்றும் பல விஷயங்களை முடிவுசெய்யப் போவதாகவும் தெரியலானேம்.

5. அக்கூட்டத்தார் 1913ஆஎப்பிரல்மீ9உயில் செய்துள்ள உத்தியோக நியமனங்களை சட்டவிரோத மென்றும், ஒழுங்கீன மென்றும், இச்சபையார் ஆக்ஷேபித்திருக்க, அவர்கள் அவ் வுத்தியோகஸ்தர்களைக்கொண்டு மறுபடியும்புதுப்பிக்கப்பார்ப்பதுஎவ்வளவு ஆக்ஷேபனைக்கிடமென்பதைத்தாங்களேயறிவீர்கள். ஆகையின், இச்சபையார், அவர்கள் நேர்வழிப் படுவார்களென்று எதிர்பார்த்திருந்த காலவரை கடந்துவிட்டபடியால் அவர்களின் நடவடிக்கைகளை இனி இச்சபையார் கவனிப்பது அவசியமென்று தீர்மானிக்கலாயிற்று.

6. ஸ்ரீ P, கல்யாண சுந்தராச்சாரியர் இச்சபையின் காரியதரிசியாக விருந்தபோது, இந்த நிர்வாகசபை தீர்மானத்தின்பேரில், அவர்போலும், இச் சபையின் சாதாரண மெம்பர்களி லொருவராயிருந்த சோமங்கலம், கந்தசாமி ஆச்சாரியர் பேராலும் சுமார் ரூ 500 வரையில் பாங்கியில் வட்டிவிர்த்திக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதனேடும், காரியதரிசி ஒதாவில் சபை ரிசலூஷன் புத்தகம், கணக்கு புத்தகம் முதலிய ரிக்கார்டுகளும், ஸ்ரீ P. கல்யாணசுந்தராச்சாரியர் வசத்திலேயே யிருந்து வருகின்றது. மேற்கண்ட இச்சபையின் எல்லாவிதசொத்துக்களையும், சென்னை, சிந்தாத்திரிப்பேட்டை விஶ்வகர்ம குலோத்தாரண சபையின் கமிட்டியார்களுக்கு ஒப்புவிக்கவும், ஜவாப்பு சொல்லவும் அவர்கள் எக்காலத்திலும் கடமைபட்டிருக்கிறார்க ளென்பதை தெரிவிக்கலாயிற்று.

7. ஷெ சபை ஆரம்பமுதல் இதுவரையில் சிந்தாதிரிப்பேட்டையிலேயே நடைபெற்று வருவதோடும், ஷெ சபையாரால், வேதாத்தியயன பாடசாலையும், ஸமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் ஸ்கூலும், தற்காலம் வேதாத்தியயன பாடசாலையின் பெயரால் "விஶ்வகர்ம குலோபகாரி" யென்னும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையும் நடைபெற்று வருகின்றது. பிரதி ஆதிவாரந்தோறும் நமது குலசிரேஷ்டர்களைக்கொண்டும், இதர விற்பனர்களைக்கொண்டும், ஜாதி சம்பந்தமாகவும், பொதுவிஷயமாகவுமுள்ள பிரசங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

நமது குலாபிமானிகளும் மெம்பர்களும் இவ்வுண்மைகளை அறிந்துகொள்ளும்பொருட்டே இவ்விஷயங்களை 1914ஆ எப்ரல்மீ3உ கூடிய இச்சபையின் நிர்வாகசபையாரால் தீர்மானிக்கப்பட்டபடி இப்பகிரங்க விளம்பரம் பிரசுரிக்கலாயிற்று.

இப்படிக்கு,

ஆ. காரியதரிசி.—கொ. கன்னியப்பாச்சாரி.

வைஸ்பிரசிடெண்டு.—கி. மு. முக்கண்ணாச்சாரி.

பொக்கிஷதார்.—சி. கி. சுந்தராச்சாரி.

கமிட்டி மெம்பர்கள்.—பா. குருசாமி ஆச்சாரி.
,, அ. பஞ்சாக்ஷர ஆச்சாரி.
,, வீ. கந்தசாமி ஆச்சாரி.
,, ஸ்ரீ. இராமசாமி ஆச்சாரி.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை
விஶ்வகர்மகுலோத்தாரண சபை
1914ஆ ஏப்ரல்மீ 4உ
காப்பி 3000.

ஸ்ரீமத் விராட் விஶ்வப்ரஹ்மணே நம:

# விஶ்வகர்ம குலோபகாரி.

மலர்-1. { ஆனந்தஆ வைகாசிமீ
1914ஆ மேமீ } இதழ்-1

## மெய்ஞ்ஞான தீபம்.

### அறிஞரை அடைவதின் பயன்.

நாம் பல சிநேகிதர்களை அடைய விரும்புகிறோம். நமது சிநேகிதர்களின் தொகை எவ்வளவு விர்த்தியாகிறதோ அவ்வளவு பெருமையும், கீர்த்தியும் நமக்குக்கிட்டிவிடுவதாக நாம் எண்ணமிடுகிறோம். அவர்களுள் சிலர் செல்வவந்தர்களாயிருந்து விட்டாலோ நாமடையும் ஆநந்தத்திற் களவில்லை. இன்னும்பலஐசுவரியவான்களின் சிநேகத்தையு மடையவேண்டுமே யெனக் கவலை கொள்கிறோம். அந்த ஐசுவரியவான்களுடன் கூடியிருப்பதை மற்றவர்பார்ப்பதென்றென ஏங்குகிறோம். அவர் நட்பை அடைவதற்காக நம்கையிலுள்ளபொருளையும் தாராளமாகச் செலவிடுகிறோம். அவர்களின் ஐசுவரியப் பெருக்கமொன்றே நம் மனக்கண்ணுக்குப் புலப்படுகின்றது; அவர்களின் குணநிசயங்களோ புலப்படுவதில்லை. இவ்வளவுகஷ்டத்துடன் அச்செல்வவான்களின் நட்பையடைந்துவிடினும் அவர்கள் தம்மின் மெலிந்தோரின்நட்பை பகிரங்கமாக அங்கீகரிப்பதில்லை. அச்செல்வவான்களோ தொழுநோயுற்றவர்களாக எண்ணி அம்மெலியோரை அணுகவும் அச்சம் கொள்ளுகின்றனர். ஆகையால் நட்புவேண்டின், கல்வியும்ஞானமும் உள்ளவர்கள் நம்மிலும் எளியவர்களாயினும் அவர்களையடைந்து அவர்கள் சிநேகத்தை விலைகொடுத்தேனும்பெறுவதுநலம். அவர்கள் உறவு இகபர மிரண்டிற்கும் நன்மை பயக்கும்.

***

### மனச்சாட்சியின் மாண்பு.

மனச்சாட்சிஎன்னுமோர் அரூபவஸ்து ஒவ்வொருவருடைய மனதிலும் நின்று அவர்கள்புரியும் நன்மைதீமைகளை விளக்குகின்றது. அவ்வாறுசெய்யுமாறு அதனை ஒருவருங்கேட்டுக்கொள்வதில்லை. ஒருவன் ஒருநற்காரியம்புரிந்தால்அவர்களை அஃது உற்சாகப்படுத்துகிறது; தீக்காரியம் புரிந்தால் தாட்சண்யமின்றித்தண்டிக்கின்றது. அது தன் தண்டனைக்குப் பயந்து நடப்பவர்களை இறைவனருளுக்குப்பாத்திரராகச் செய்கின்றது.

***

### கற்றறிந்தடங்கல்.

கற்றறிந்தடங்கியவர்களைப் பாற்குடத்திற்கும், கற்றறிந்தடங்காதவரை கட்குடத்திற்கும் ஒப்பிட்டுக்கூறலாம். பாலுள்ள குடத்தைத் தீயிட்டுக்காய்ச்சினாலன்றி அதனுள்ளிருக்கும் பால் பொங்கி வெளிப்படாது; கள்ளுள்ள குடத்தையோ தீயிட்டுக் காய்ச்சவேண்டியதில்லை; அக்குடத்திலுள்ள கள்ளோ சொற்ப உஷ்ணத்தைப் பொறுக்காது பொங்கிவழிந்து அழிந்துவிடுகின்றது. இதனால் கற்றறிந்தடங்கா மூர்க்கருக்கும், கற்றறிந்தடங்கிய பெரியோர்க்குமுள்ள வேற்றுமை நன்குவிளங்கும்.

***

### சற்சனரும், துர்சனரும்.

வெள்ளிய வஸ்திரத்தில் பற்றிய அழுக்குச் சீக்கிரம் நம் கண்ணுக்குப் புலப்படுகின்றது. சாய வஸ்திரத்திலுள்ள அழுக்கோ அவ்வண்ணம் தெரிவதில்லை. அதுபோல, சற்சனரிடமிருக்கும் அணுப் பிரமாணமான குற்றமும் உடனே வெளிப்பட்டுவிடுகின்றது; துர்ச்சனரிடத்துள்ள குற்றமோ சிறிதும் தெரிவதில்லை.

## கைத்தொழிலே நம்மேம்பாட்டிற்கு முக்கியகாரணம்.

### 3. மரவேலை.

அன்னியர்களால் கைக்கொள்ளப்படாத நம் நாட்டுக் கைத்தொழில்களில் மரவேலையொன்றெனச் சொல்லலாம். இந்நாட்டில் காணப்படுகிறமரசாமான்களெல்லாம்இங்கு உற்பத்தியாகும் மரங்களைக் கொண்டும், இத்தேசத்து வேலைக்காரர்களைக் கொண்டும் செய்யப்பட்டுள்ளவைகளாகும். இந்தியாவில் விலையுயர்ந்தவும், பல வேலைகளுக்கும்நாணயமுமான தேக்கு, சந்தனம், பலா, செம்மரம், வெண்மரம், கருங்காலி, இரும்பகம், வேங்கை முதலிய பல மரங்கள் மிதமிஞ்சி உற்பத்தியாகின்றதோடும், வெளிநாடுகளுக்கும் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றன. ஆகையின், அன்னியதேசத்தி லுற்பத்தியாகும் மரங்களை நாம் எதிர்பார்க்க வேண்டுவதில்லை. அதனோடும், இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதியின்வேறுபாடுகளை அன்னியநாட்டு மரங்களைக்கொண்டு செய்யப்படும் சில்லரை சாமான்களோ, தட்டுமுட்டுகளோ தாங்க சக்தியற்றவைகளாகவிருக்கின்றன. ஐரோப்பாவில் அவர்கள் தொழின்முறைகளில் உபயோகப்படுத்திவரும் ஆஷ், மகாகினி, ஓக், பீச், பர், டீல் முதலிய மரங்கள் வேலைக்கு வெகு நாணயமுள்ளவைகளாகவும், அவற்றால் செய்யப்பட்ட சாமான்கள் பார்வைக்கு அழகாகவும், மனோவசீகரமுள்ளவைகளாகவும் இருந்தபோதிலும், அம்மரங்களும், அவ்வேலைப்பாடுற்ற சாமான்களும் ஐரோப்பா முதலிய குளிர் தேசங்களுக் குரியனவேயன்றி, நம்நாடொத்த உஷ்ணபிரதேசங்களுக் கடுத்தனவன்று.

ஆனதுபற்றியே அன்னிய தேசத்தினின்றும் ஏராளமாக இறக்குமதியாகிற இரும்பு, கண்ணாடி முதலிய பலசாமான்களைப் போல மரசாமான்கள் இந்நாட்டிற்கு அனுப்பப்படுவதில்லை. மேலே சொல்லிய காரணங்களல்லாமல், இதற்கு இன்னுமோர் முக்கியகாரணமும் உண்டு. இரும்புசாமான்களனைத்தும் நிலக்கரி மலிந்துகிடக்கும் தேசங்களில் பெரும்பான்மை இயந்திரங்களி னுதவியை கொண்டே செய்யப்படுகின்றன. மரசாமான்களோ வாள்கொண்டு அறுத்தல்முதலிய பெரும்படி வேலைகளைத் தவிர்த்து மற்ற மட்டசுத்தம், இணக்கம் முதலியவைகளனைத்தும் கையினால் செய்யப்படவேண்டிய நிமித்தம்பற்றியும், மேனாட்டுக் கைத்தொழிலாளிகளின் கூலிக் கட்டணங்கள் நம் நாட்டு வேலைக்காரர்களுக் கேற்பட்டிருக்கும் கூலிகளைவிட பதின்மடங்கு அதிகமாகயிருப்பதுபற்றியும், அக்கூலிக் கட்டணங்கள் நாளுக்கு நாள் ஆங்கு விர்த்தியாகிக்கொண்டு வருவது பற்றியும், அன்னியநாட்டு மரசாமான்கள் நமது தேசத்தில் அதிகமாகப் பரவாத பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். மரத்தொழிலையும் ஆரம்பமுதல் அந்தம்வரையில், இயந்திர சகாயங்களால் முடித்துவிடக்கூடியதாக விருந்தால் இந்நாட்டு மரவேலைகள் பல வருடங்களுக்கு முன்னரே மடிந்திருக்கும். பியானோமுதலிய வாத்தியப்பெட்டிகள், ஜப்பானிய தட்டுமுட்டு சாமான்களைத் தவிர, அன்னியர் போட்டியால் அவஸ்தைப்படாத இவ்வருமையான தொழிலை நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டுமன்றோ?

மாவேலை மூன்று பிரிவுகளை யுடையதாகும். அவைகளை பெரும்படி வேலையென்றும், சிற்றுளிவேலையென்றும், இணக்க வேலையென்றும் சொல்லுவர். பெரும்படி வேலையானது, மரங்களைச் செதுக்கி இழைத்தல், மூலமட்டத்திற்குப் பொருந்தப்பார்த்தல்,கட்டிட வேலைகளுக்குரிய கைமரம், விட்டம், வளை, மோசனம், அனந்திரம், போதியக் கட்டைகள், நிலைகள் கோர்த்தல் முதலியவைகளாகும். சிற்றுளி வேலையென்பது, மேற்சொல்லிய விதமாய் மட்டசுத்தம் செய்யப்பட்ட மரங்களினிடத்து செடி, கொடி, காய், கனி, இலை முதலிய தாவரப்பொருள்களையும், யானை, குதிரை, ஆளிமுதலிய விலங்கினங்களையும்,மனிதர் ஸ்திரீமுதலிய ரூபங்களையும், இன்னும் இவைபோன்ற பல சித்திர வேலைகளையும் சிறுகச்சிறுக பொறுமையுடன் செதுக்கி எடுத்தலாகும். கடைச்சல் வேலையும் சிற்றுளிவேலை யுள்ளடங்கும். இணக்கவேலை யென்பது, சிறுமரத்துண்டுகளை வஜ்ஜிரத்தாலும், நெம்புகளாலும் சேர்த்து உருப்படுத்துவதும், பெட்டிகள், கதவுகள், அலமாரிகள், நாற்காலிகள், மேஜைகள்,கட்டில்கள்முதலிய பல கிட்டுமான வேலைகளையுங் குறிக்கும்.

தென்னிந்தியாவில் பெரும்படி வேலைகளில் அதிக தேர்ச்சிபெற்றவர்கள் மலையாள தேசத்து தச்சர்களென்பதற்குச் சந்தேகமேயில்லை. அந்நாட்டில் நல்லமரங்கள் ஏராளமாக உற்பத்தியாகி சொற்ப விலைக்குக் கிடைப்பதுபற்றி அத்தொழில் அங்கு மிகவும் பிரபல முற்றிருக்கிறது. 50 அல்லது 60 அடி அகலமுள்ள பெரிய கூடங்களில் தூண்கள், உத்திரம் முதலியவைகளில்லாமலே ஏகாண்டமாக கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களை இப்பிராந்தியத்தில் மட்டுமே பார்க்கிறோம். இப்பொழுது நவீன நாகரீக முதிர்ச்சியால் நாமறிகிற 'டிரஸ்' என்னும் அனந்திரங்களின் உபயோகத்தையும், அவைகளை விஞ்ஞான சாஸ்திரரீதியாக இணக்கஞ்செய்யும் வழிகளையும் மலையாளத் தச்சர்கள் பலநூற்றுண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தார்களென்பதற்கு பல அத்தாட்சிகளுண்டு. கிட்டுமானப், (அதாவது ஜாயிண்டு) முதலியவைகளை இடமறிந்து உபயோகப்படுத்துவதில் நம்மனோர் மலையாளத் தச்சர்களினும் தாழ்ந்தவர்களே யாவர்.

சிற்றுளி வேலையில் நம் நாட்டார் ஒருவாறு கைதேர்ந்தவர்களென்றே சொல்லவேண்டும். சுபாவீகரூபங்களைச் சித்தரித்துக் காட்டுவதிலும் கற்பிதமான ரூபங்களையும், இலைகொடிகளையும் இவர்கள்வெகு அலங்காரமாகச் செய்யும் திறமைவாய்ந்தவர்களெனப் பலரும் மதிக்கிறார்கள். நம் நாட்டில் சிற்றுளி வேலை தோன்றிய பல நூற்றுண்டுகளுக்குப் பின்னரே அவ்வேலை இங்கிலாந்தில் தோன்றியதெனினும், ஆங்கு செய்யப்பட்டுள்ள பல விசித்திர வேலைகள் பார்ப்போர்கண்களைக் கவர்கின்றன. 'கிப்பன்ஸ்' என்னும் ஓர் நிபுணரின் கைவேலைகள் மட்டுமே ஆங்கிலேயரைச் சிற்றுளி வேலையில் சிறந்தோர்களென உலகம் கொண்டாடப் போதுமானவைகளாகும். இவருடைய வேலைகளில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய அம்சம் யாதெனின், இவர் செதுக்கியுள்ள பழங்களோ, மிருகங்களோ, இன்னும் மற்ற வஸ்துக்களோ சுயரூபம்பெற்றிருப்பதேயாம். நம் நாட்டு ஆலயங்களில் பல வாகனங்கள் நிர்மாணிக்கப்படவேண்டிய தவசியமிருந்தும் யானை, குதிரை, ரிஷபம் முதலிய வாகனங்களைச் சுபாவீகரூபத்துடன் அமைக்கக்கூடிய சந்தர்ப்பங்களை நம்மனோர் இழந்திருக்கிறார்கள். ராமநாதபுரத்தைச் சார்ந்த கோவிலூர் மடாலயத்திற்குச் சொந்தமான கொற்றவாளீஸ்வரர் ஆலயத்திலமைத்துள்ள வாகனங்கள் மட்டுமே, சுபாவீகரூபத்திற்குக் கொஞ்சமும்பேதப்படாமல் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாகனங்களைப்போலுள்ளவைகளை வேறு இடங்களில் பார்ப்பதருமை. ஆயினும், இவ்வித சுயரூபம்பெற்ற சிற்றுளி வேலைகள் இங்கிலாந்து முதலிய தேசங்களில் நம் தேசத்தினும் மலிந்து கிடப்பதால் அச்சக்தி நமக்கில்லையென பலரும் சந்தேகிக்கிறார்கள். 'ஓக்' எனும் ஓர்வகை கடினமரத்தில் சிற்றுளிவேலை செய்யப்பட்ட ஆன் என்னும் அரசியின் கட்டில் ஒன்று பல ஆயிரம் பவுன் விலைபெறக் கூடியதாக நிபுணர்கள் மதிக்கிறார்கள். 15-வது நூற்றுண்டில் 'டெவன்' என்னும் ஊரில் கட்டப்பட்டுள்ள ஓர் கிருஸ்தவ ஆலயத்தி

னுள்ளசிற்றுளிவேலைகள் உலகத்தைப் பிரமிக்க செய்யக்கூடியவைகளாக விருக்கின்றன. லண்டன் நகரிலுள்ள செயிண்ட்பால் காதிடரல் என்னும் கோயிலிலுள்ள அலமானகிரி வேலையும், பிஷப் அமரும் ஆசனத்தில் செய்யப்பட்டுள்ள வேலையும்மனதிற்கு குதூகலத்தையும், அச்சத்தையும் தருவனவாக விருக்கின்றன. முக்கியமாய் மேற்றிசையாரால் செய்யப்படும் சிற்றுளி வேலைகளெல்லாம் ஒளி சாஸ்திரத்தை அநுசரித்தே செய்யப்பட்டிருக்கின்றன. செதுக்கப்படும் வேலைகளில் எந்த பாகத்தில் எவ்வளவு வெளிச்சம் படவேண்டுமென்றும், எவ்வளவுபாகம் இருண்டு காட்டவேண்டுமென்றும் நன்குணர்ந்தே அவ்வேலைகள் செய்யப்படுகின்றன. சூரியவெளிச்சம் படாதவிடங்களில் வைக்கப்படும் வஸ்துக்களை அதிக நுட்பமான சித்தரிப்புக்களால் ஒருபோதும் அவர்கள் அலங்கரிக்க மாட்டார்கள். இவ்வித அருமையான சக்தியை நமது சிற்றுளி வேலைக்காரர்கள் சாஸ்திர வாயிலாய் உணர்ந்தவர்களன்று. நம்மனோர்களால் செய்யப்பட்டுள்ள வேலைகளில் இவ்வித குணங்கள் ஏகதேசமாகக் காணப்படின் அவைகள் அவர்கள் புத்திபூர்வமாக அமைக்கப்பட்டவைகளல்ல. இன்னும், மேற்றிசையார் செய்கின்ற சிற்றுளி வேலைகளில் வார்னீஷ் முதலிய மெருகெண்ணைகளை பூசுவதில்லை. மெருகெண்ணை பூசிய சிற்றுளிச் சித்தரிப்புகள் வெளிச்சங்களை விபரீதமாகப் பற்றி அவைகளைப் பிரதிபலிக்கச்செய்வதால் அவைகள் பார்ப்போர்மனதிற்கு அருவெறுப்பை விளைவிக்கின்றன. இவ்வுண்மையை நம்மவர் நன்குணர்ந்து இனிதம் சிற்றுளி வேலைகளில் ‘வார்னீஷ்’ மெருகிடாமல் மரஎண்ணை கொண்டும், அல்லது மஞ்சள் மெழுகு ‘டர்ப்பெண்டயின்’ என்னும் கர்ப்பூரத்தைலத்தையும் சேர்த்துக் காய்ச்சி மெருகிடலாம். அல்லது தேங்காய் எண்ணையை உபயோகிக்கலாம். இவ்வித எண்ணை மெருகுகள் மரங்களைக் கூடுமான வரையில் பாதுகாப்பதோடும், மேலேகூறிய ஒளி தோஷங்களையும் நிவர்த்திக்கின்றன. வார்னீஷால் சீர்குலைந்த அருமையான செதுக்குவேலைகளை, காரைக்குடி, கானாடுகாத்தான், தேவகோட்டை முதலிய நாட்டுக்கோட்டை நகரங்களிலிடத்தும், மெழுகாலும் எண்ணையாலும் மெருகிட்ட அழகிய சிற்றுளி வேலைகளை சென்னை விக்டோரியா இன்ஸ்டிடியூட்டிலும் பார்க்கலாம். பின்னுங்கூறப்பட்டுள்ள கண்காட்சிச் சாலையில் நூக்கமரத்தால் செய்யப்பட்டுள்ள பல சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. நவீன நாகரீகத்திற்கு இணக்கமாக நமது மரத்தொழிலை எவ்விதம் நடத்துவதென்று ஏங்கியிருக்கும் நம்மனோர்கள், இப்பொருட்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் நாற்காலி, சோபா, மேஜைமுதலிய பலசாமான்களையும் பார்வையிடுவ தவசியம்.

இணக்கவேலை இத்தன்மையதென முன்னரே கூறியிருக்கிறோம். இவ்வேலையைச் சரிவர நடத்தவேண்டின், பலவிதமான கிட்டுமானங்களையும் (ஜாயிண்டுகள்) செய்யத் தெரிந்துகொள்வ தவசியம். இவ்வித கிட்டுமானவேலையில் போதுமான ஞானமின்றி, பெட்டிகள், கதவுகள், கட்டில், மேஜை, நாற்காலி முதலிய சாமான்களை இணக்குவதியலாது. வஜ்ஜிரசம்பந்தத்தால் செய்யும் கிட்டுமானங்களும் நெற்றிமுட்டாக இணக்கி, ஆணி அறையும் கிட்டுமானமும் மிகவும் இகழத்தக்கவை. நம் நாட்டில் மரப்பெட்டி வேலைகள் வெகு மும்முரமாக நடத்தப்பட்டு வருகின்றதெனினும், அப்பெட்டிகள் பலவிதத்தில்குற்றமுள்ளவைகளேயாம். அவைகளின் இணக்கங்களையும், பொதுவான வேலைப்பாட்டையும் கண்ணுறும் அன்னிய நாட்டார் நகையாமலிரார்கள். அவ்வித குற்றமுள்ள வேலைகளை பித்தளைப் பட்டங்களாலும், பளபளப்பான கைப்பிடிகளாலும், மேற்பூச்சுகளாலும், மெருகெண்ணைகளாலும் ஒருவாறுமறைத்து விலைப்படுத்தி வருகின்றார்கள். ஜாதிக்காய்மரத்தை தேக்குமரம்போல்செய்வது தேக்குமரச் சாமான்களை நூக்கமரச் சாமான்களைப்போல் மேற்பூச்சுக்களால் தோற்றுவிப்பதும், நம்மிடத்துள்ள மற்றொரு பெருத்தகுறை. ஒருபொருளை மற்றொன்றாகத் தோற்றுவிப்பதும், அதன்உண்மை அழகைகெடுப்பதும் நல்லவேலைக்கழகல்லவென்பதையும்நாகரீகமுற்றோர் நகைப்பதற்கிடமென்பதையும் நம்மவர் நன்குணரவேண்டும். எல்லா மரங்களும் நிறைந்து மலிந்துகிடக்கும் இந்நாட்டில் இவ்வித போலி உற்பத்திகளைச்செய்து பொது ஜனங்களின் நம்பிக்கையையும், உற்சாகத்தையும்அடியோடுகெடுத்துவிடவேண்டிய ஆவசியகமேயில்லை.

இதுவரையில் பலவித மரவேலைகளின் விபரங்களை விரித்தோம், இனி நாம் புதிதாய் அத்தொழில்களில் கற்க வேண்டியவிஷயங்களைக்கவனிப்போம். நாம் முக்கியமாய் பலஜாதிமரங்களையும் பதப்படுத்தும் சுலபமான வழிகளைத்தெரிந்துகொள்ளவேண்டும். மரங்களை வெட்டி துண்டிட்டு, கிணறு, குட்டைகளில் சிலகாலம் ஊற வைத்துப் பின்பு அவைகளை எடுத்து வேலைகளுக்கு நாளது வரையில் உபயோகப்படுத்தி வருகிறோம். மேற்றிசையாரோ நாளுக்கு நாள் ஒவ்வோர் புதிய வழிகளைக் கண்டுபிடித்து அவைகளின் வழியாய் மரங்களைப் பதப்படுத்திவருகிறார்கள். நீராவியாலும், ரசாயனப் பொருள்களாலும் பதப்படுத்தும் முறைகள் நன்மை தருகின்றதாகச் சொல்லப்படுகின்றது. காய்ந்த ஆற்றுமணல்களில் சிறிது ஆழத்தில் புதைத்து வைத்துப் பதப்படுத்துவதும் ஒரு சிறந்த முறையென சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்புதிய வழிகளைக் கைக்கொள்வதால் குடிஜலங்கள் கெடாமல் காப்பாறறப் படுவதோடும், சிலஜாதி மரங்களை ஜலத்தில் ஊறவைப்பதினால் தைல சத்துக்களை இழந்து நஷ்டப்படும் கொடுமையும் ஒழியும். வேலை சம்பந்தத்தில் ‘பிராட்வொர்க்’ என்று சொல்லப்படும் பலசித்திர வேலையை மெஷீன்களின் உதவிகளைக்கொண்டு செய்யும் பழக்
கத்தைப் பெறவேண்டும். இவ்வித சிறி
மெஷீன்கள் 75-ரூ. முதல் 100-ரூ. வரை
யில் விலையுள்ளவைகளாக விருக்கின்றன
இவைகளின் உதவியால் கஷ்ட சாத்தி
மாகச் செய்யும் சிற்றுளிவேலைக்குப். ப
லாக பற்பல சித்திரவேலைகளை மெல்லி
பலகைகளில் துளைக்கலாம். படங்களுக்
டும் பலதினுசு சட்டங்கள், நிலைக்கண்
ணாடி முகப்புகள் முதலியவைகளை இவ
றின் உதவியைக்கொண்டு செய்து விற்பனை
யாக்கலாம். இவ்வேலையிலும், சிற்றுளிவே
லையிலும் பிரபலமடைய் வேண்டுமானா
சித்திர மெழுதும் பழக்கம் இன்றியமை
யாததாக விருக்கின்றது. சிற்றுளிவேலை
குரிய சித்திரங்களையும், தொளைவேலைக்கு
ரிய ‘ஸ்டென்சில்’என்னும் சித்திரங்களின்
பேதா பேதங்களைப் பகுத்துணரும் சக்தி
யைப் பெறவேண்டும். பெரும்படிவேலை
களிலும், சிற்றுளி வேலைகளில் காட்டப்ப
டவேண்டிய குழவு, திரணைகளை இண்
நாம் அர்த்தமுடனும், அழகாகவும் அமை
க்கப் பழகவேண்டும். ஓர் திரணையின் அடி
யிலிருந்தே உள் குழவை ஆரம்பித்து
இழைத்து விடுகிறோம். மேற்றிசையார்
அவ்விதம் ஒருபோதும் செய்யார்கள். குழ
வுகளுக்குப் பக்கத்தில் மட்டமும், மட்டத்
திற்குப் பக்கத்தில் திரணைக் கம்பிகளையும்
நல்லவேலை ஞானமுள்ளவர்கள் திரட்டுவா
ர்கள். ஆகையின் குழவுதிரணைகளில் போ
துமான ஞானத்தையடையவிரும்புவோர்,
அவைகளைக் காகிதத்திலேனும், மட்டியப்
பலகைகளிலேனும் மாதிரியாக வரைந்து
வைத்துக்கொள்ளல் வேண்டும். இக்குழவு
திரணைகளின் அழகை நம்மனோர் பகுத்த
றியும் சக்தி வாய்க்கும் காலம் எதுவோ
அதுவே நம் நாட்டு மரத்தொழில் சீர்படு
ங்காலமென நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இதுகாறும் கூறிய வற்றால் மரத்
தொழிலுக்கு நூதன இயந்திரங்களினு
தவி அவசிய மில்லை யென்றும், பெருத்த
மூலதனம் வேண்டுவதில்லையென்றும், அவ்
வேலைகளுக்கு வெளிநாட்டினின்றும் மா

ங்கள் தருவிக்கப் படவேண்டிய தனவசிய மென்றும் பெறப்படுகின்றனவன்றோ? ஆகையின், அன்னியர் போட்டியில்லாத இத்தொழிலால் சீர்பட இனி நாம் செய்யக்கூடிய சுலப சாத்தியமான தொழில்களை ஆராய்வோம். படங்களுக்கிடும் சட்டங்களை இலந்தை, தணு முதலிய மரங்களினால் செய்து, மக்குவைத்து, கிலீட்டிட்டு விற்பனை செய்யலாம். இவைகளைச் செய்வதற்கு 'உவிஞ்' என்னும் சுழற்றும் ஆலையும், சில கம்பிச்சட்டங்கங்களுமே தேவையாகும். இரங்கோன் முதலிய ஊர்களிலிருந்து வரும் வர்ணத்தட்டுகளைப் போல் செய்து லாபம் பெறலாம். தயிர்வைக்கும் மாவைகள், ஐந்தரைப் பெட்டிகள், தலைப்பாகை முளைகள், அப்பளக்குழவிகள், மணைப்பலகைகள் முதலியவைகளையும் பலநிற அரக்குப்பூச்சுகளிட்டு விற்கலாம். சிறுவர்களுக்கான பம்பரம், கிலுகிலுப்பை, சொப்புகள் முதலிய விளையாட்டுச் சாமான்களைச் செய்து அரக்குப் பூச்சாலும், ரசாயனப் பொருள்களினுதவியாலும் வர்ணம் தீட்டி விற்பனைசெய்து ஏராளமான லாபம் பெறலாம். ஜப்பானியர் செய்தனுப்பும் பெட்டிகள் போல் நாமும் செய்யலாம். 'சீடார்' என்னும் தேவதாரு மாத்தின் பலகைகளை அச்சமாக அறுத்துக்கொண்டு அவற்றால், பலவித நகைப்பெட்டிகளையும் செய்து அரக்குப் பூச்சிட்டு சந்தைகளில் பரப்பிவிடலாம். இன்னும் இவைபோன்ற லாபந் தரும் தொழில்களும் அவற்றைச் செய்யும் முறைகளும் எத்தனையோ இருக்கின்றன. அவைகளனைத்தையும் ஒருங்கே திரட்டி வெளியிடுவது கஷ்டமென அஞ்சி, மாவேலையின் அருமைப் பாட்டினையும், அவ்வேலையை புத்திநுட்பத்தால் பகுத்தறிந்து செய்யின் நம்மனோர் செல்வமும், சீரும் பெறுவார்களென்னும் உண்மையை இங்கு கூறிமுடிக்கிறோம்.

**பத்திரிகாசிரியர்.**

(189-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## இதோபதேச நீதிமொழிகள்.

அன்றியும்—நமது திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் ஸ்ரீ இராமலிங்கஸ்வாமிகளால்,

"அகங்காரமெனும்பொல்லா அடவாதிப்பயலே அடுக்கடுக்காய் எடுக்கின்றாய் அடுத்துமுடுக்கின்றாய், செகங்காணத் தலைகாலுந் தெரியாமல்அலைந்து திரிகின்றாய் நின் செபந்தான் சிறிதும் நடவாது, இகங்காண அடங்குகநீ அடங்காயேற்கணத்தே இருந்தவிடந்தெரியாதே எரிந்திடச்செய் திடுவேன், சுகங்காண என்றனைநீ அறியாயோநான்றான் சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே."—என்றும்

"மனமெனும் ஓர்பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய், இனமுறஎன்சொல்வழியே யிருத்தியெனிற் சுகமாய் இருந்திடுநீ என்சொல்வழி எற்றிலையானாலோ, தினையளவுன்னதிகாரஞ் செல்லவொட்டேன் உலகஞ் சிரிக்கவுனை அடக்கிடுவேன் றிருவருளாற்கணத்தே, நனவிலெனை அறியாயோ யாரென நின்றிருந்தாய் ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளைநானே."—என்றும்

"மயங்குபுத்தியெனும்உலக வழக்காளிப்பயலே வழிதுறையீதென்றறியாய் வகைசிறிதும் அறியாய், உயங்கிவிசாரித்திடவே ஓடுகின்றாய் உணரும் உளவறியாய் வீணுழைபிற்குழைப்பதில் என்பயனோ, வயங்குமனம் அடங்கியவா றடங்குகநீ இலையேல் மடித்திடுவேன் கணத்திலுனை வாய்மையிது கண்டாய், இயங்கவென்னை யறியாயோ ஆரெனவெண்ணினையோ எல்லாஞ்செய்வல்லவனுக் கினியபிள்ளைநானே."—என்றும்



திருவாய்மலர்ந்தருளி சமரச சன்மார்க்க நீதிமுறை ஒழுக்கத்தாலும் இடையறாது இறைவனை வணங்கி ஏத்தும்சிவத்தியானயோக நெறிமுறைகளினாலும், ஆணவம் மனம் புத்தியை தன்வசமாக்கி ஆளலாமென்றும் அன்புற்று அறைந்திருக்கின்றார்கள்.

அன்றியும்—நம்பட்டினத்தடிகளும்

"நாடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த, நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த, வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம், நீடோய் கழுக்குன்றில் யீசாவுயிர்த்துணை நின்பதமே."—என்று

இக்காய நிலைமையைப்பற்றி நிலையில்லாதெனவும் நீர்க்குமுழிபோலும் நிமிஷத்திலழியு மெனவும் நிகழ்த்தி யிருக்கின்றார்கள்:

நமது நாயனாரவர்களும்:—

"ஒருபோழ்து வாழ்வதறியார் கருதும்
கோடியுமல்லபல—வென்றும்
நில்லாதவற்றை நிலையெனஎன்றுணரும்
புல்லறிவாண்மைகடை"—என்றும்

புகன்றிருக்கின்றார்கள். இவ்வித நிச்சயமற்றவாழ்வை (எக்காலமும்) நிலையென நினைத்து சிலர் செல்வத்தினாலும், சிலர் கல்வியினாலும், சிலர் தேகவலிதினாலும், சிலர் அழகினாலும், சிலர் புகழினாலும், சிலர் யூகத்தினாலும், சிலர் தொழிற்கூர்மையினாலும், சிலர் பந்துமித்திரப்பெருங்கூட்டத்தினாலும், சிலர் மக்கட்பேற்றின் மகிழ்ச்சியினாலும், சிலர் யுத்தஜயத்தினாலும், சிலர் புத்திபலத்தினாலும், தனக்குமேல் சம்பத்து சாமர்த்ய வித்யாவிநய முடையவர்கள் இந்தரணியில் ஒருவரு மில்லையெனத் தற்செருக்குற்று

இறைவனை எண்ணாது, இனத்தாரைப் போற்றாது, அடியாரை அணுகாது, பெரியாரைப்பேணாது, ஆசாரம்அறியாது, ஆன்மாவைக்குறியாது, சன்மார்க்கம் சாராது, சமரசகுணம்வாராது, தனக்கு இறைவனால் அருளப்பெற்றவாயிருந்தும் வந்தவரிடம்பேசாது, செவியிருந்தும் சேர்ந்தவர் சொற்கேட்காது, மூக்கிருந்தும் நல்வாசனையறியாது, கண்ணிருந்தும் வந்தவரைக்கருதிப்பாராது, கருத்திருந்தும் நற்கருமமொன்றையுங்கருதாது, காலத்தைவீணேகழித்து கடைவழிக்குக் கட்டுச்சாதம் அதாவது (தர்மம்) அணுவேனுமில்லாது, கடுந்தூதரோடு நெடுந்தூரம்நடந்து பாபம்என்னும் பசியினால் வருந்தி தான் இறந்தும் இன்புறாது, இகத்திலும்புகழுறாது இறுமாப்பினாலழிந்து மனமிகவருந்தி (இகபரமிரண்டினிலும்—உயிரினுக்குபிரான) நம் இறைவனாகிய ஸ்ரீவிராட் விசுவப்பிரம்ம மகாமந்திர மூர்த்தியையும் ஓர் காலமும் நினையாமல் மறந்து வாழ்நாளை வீணாளாக வாதத்திற் கழித்து மயங்குகின்றார்களே என்ற அன்பின்முதிர்ச்சியால் நம்முன்னோர்களாகிய இன்னுயிர்த்துணைவர்களான பெரியோர்கள் நம்மீதிரக்கமுற்று அடியில்வரும்செய்யுட்களை நமக்கோர் அறிகுறியாகக் கூறியிருக்கின்றார்கள்.

அவைவருமாறு:—

"வளநிதி படைத்தோமென்றும் வடிவவில் உடையோமென்றும், அளவில்சேயுண்டோமென்றும் அனுபத்தமைந்தோமென்றும், இளமையிற் சிறந்தோமென்றும் எழில்நலம் உடையோமென்றும், உளமகிழ்வர்கள்சற்றும் உண்மைநூல் உணர்ச்சியில்லார்."—என்றும்

"சிறியரேமதிக்குமிந்தச் செல்வம்வந்துற்றஞான்றே, வறியபுன் செருக்குமூடிவாயுள்ளோர் மூகராவர், பறியணிசெவியுள்ளாரும் பயில்தருசெவிடராவர், குறிபெறுகண்ணுளாருங் குருடராய்முடிவரன்றே."—என்றும்

முறையேகூறி. இந்நிலையில்லாச் செல்வத்தை முற்றறிவுடையோர் ஓர் காலத்தும் மதித்திராரென்றும்சிற்றறிவுடையவர்களே

இதனிற் சிந்தைமயங்கி வந்தவர்க்கியாது மதித்திருப்பதோடும் (புதைத்தும்) வைப்பார்களென்றும் இவர்களின்நிந்தை நினைப்பைநிகழ்த்தி இருக்கின்றார்கள்.

ஆதலால் அடங்காமையேதனக்கு ஆஸ்தினனவும் அதுவேதனக்கு ஆத்மநண்பனெனவும் நிச்சயித்திருக்கும் (தமது) அவலநினைப்பை (அடியோடு) விட்டொழித்து சாந்தம் என்கிற சன்மார்க்க சிநேகிதனோடு சதாகாலமும் பழகிபொழுது சாதகம் செய்து சாதுக்களுடன் வாழவேண்டுமென்பது நமனை நீக்கின நம் முன்னோர்களாகிய நாவலர்களின் நற்கருத்தாகும்.

இவ்வன்பு பற்றியன்றோ:—

திருமூலர்

பெறுதற் கரிய யாக்கையைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி சேராப்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய பேறிழந் தாரே—என்றும்

நம் பட்டினத் தடிகளும்.

"மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமும் தன்வாயின் மட்டே, இனமான சுற்றமயானமட்டே வழிக் கேதுதுணை, தினையாமளவும் எள்ளளவாயினும் செய்ததவம், தனையாளவென்று பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே." என்றும் புகன்றபடி.

இறுமாப்பை விட்டு எள்ளளவேனும் இரவலர்க்கு உள்ளபோதே யுதவி புண்ணியவானென்று புகழ் பெற்று விளங்கிக் கள்ளமில்லாது கடவுளை வணங்கி நல்லவரென்றும் இந்நாட்டினில் வாழ்வீர்களென நம்புகிறேன். சுபம்.

**V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி,**
ஜோதிஷர், திருவாரூர்.

191-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## பெற்றியை யோப்பும் வித்தியர்க்கோர் அத்தியாவஸ்ய விண்ணப்பம்.

8. சாதியைக்குறித்த விஷயத்தில் நாம் தேவசிற்பியாகிய விஸ்வகர்மாவால் உற்பத்தியாகி பிரதிபலித்து வருகிறோமென்பதும் கிரமமாகலாம். அசுரசிற்பியாகிய மயனுடைய வம்சத்தார் இப்போது யிருப்பதாய்கூறயிடமில்லை. ஏனெனில், மயன்ராக்ஷதாம்சமுடையவனாதலாலும் உருவத்திலும் குணத்திலும் தானவரைப் போல வேறுபாட்டை யுடையவர்களா யிருக்கவேண்டு மென்றும், மயனுடைய வம்சமாகில் ராக்ஷதர்க்குறிய தாமதகுணமே ராக்ஷதசிற்பியாகிய மயனுக்கும் மயனுடைய சந்ததியார்க்கும் யிருக்கவேண்டுமென்றும், தேவசிற்பி சந்ததியார்க்கு ஸாத்வீக ராஜஸகுணங்கள் பிரவர்த்தித் திருக்கவேண்டுமென்றும், அங்ஙனமின்றி நாம் கண்டும் கேட்டும் வருகின்ற சுசீலமுடைய நம்மவர்களின் ஒருதாய்ப் பிள்ளைகள் அல்லது ஒருகுடும்பம் இவைகளின் ஒருவர் ஸாத்வீககுணமாயும், மற்றொருவர் தாமத குணமாயும் யிருக்கின்றாராகையாலும், அல்லது மேற்படி மயனால் பிறந்தவர்கள் மயனுடைய கோத்ர, சூத்ர, சாகை, பிரவரங்களை கூறிவருதல் வேண்டுமென்றும், அங்ஙனம் மயனுக்கு வேறேபிரத்யேகமான கோத்ர, சூத்ர, பிரவரங்களை கூறிவரும் நம் வகுப்பினைப் பார்த்ததும் கேட்டது மில்லையாகையாலும், இங்ஙனம் மேற்கண்டபாகுபாடுகளைப் பரிசோதிக்குமிடத்து அந்த மயசந்ததியாரென்போர் யிப்போதில்லையென்பதாய் நிச்சயமாகிறது.

9. பின்னும் மதுமாம்ஸ முண்பவர்கள் மயசந்ததியாரெனக் கூறுதல் மிகவும் அனுசிதம். அஃதேனெனில், மனுவாதி பஞ்சப்ரம்ம கோத்ர, சூத்ர, சாகாப்பிரவரங்களைக் கூறும் நம்மவர்களில் ஒரு குடும்பத்தில் ஒருவர்க்குச் சகோதரர் நால்வரிருப்பாராயின் அந்நால்வரில் ஒருவர் விடக்குண்பவரும், மற்றொருவர் மதுபானரும், மற்றொருவர் சோரவின்பக் கிழத்தியை யுடையவரும், மற்ற நாலாவதான் மாத்திரம் எல்லாவிஷயத்திலும் யோக்கியனாகவும் யிருக்கிறான். இங்ஙனமிருக்கும் இவர்களில் எவர்களை தேவசிற்பி வம்சத்தாரென்றும், அசுரசிற்பி வம்சத்தாரென்றுங் கூறுவது. அல்லது அப்படியில்லாமல் ஷை நால்வரும் பரிசுத்தராயிருப்பினும், அவர்களுடைய தாயாதிகளிற் சிலரும், வேட்டகத்தாரிற் சிலரும், ஊனுண்போராய் யிருக்கின்றனர். அங்ஙனம் சொந்தமாகிய பந்துக்களில் நிந்தித்தவரை இழிகுலத்தாரென் றொழிப்பது. இவைகளை யெல்லாம் ஆலோசியாமல் பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு பூலோகமெல்லாம் இருண்டுவிட்டதாய் எண்ணிக்கொண்டதைப்போல் சிற்சில பெருங்கிராமங்களில் வசிக்கும் பத்துப் பெயர் ஒரு சீராய் மதுமாம்ஸ முண்ணுதவராயிருப்பதைத் தங்கள் மனத்திலெண்ணி தாங்களே தேவரிஷி வம்சமென்றும், மஹாயோக்கிய ரென்றும், மற்றையோர்களெல்லாம் அசுரசிற்ப மயவம்சமுதலான இழிந்த வம்சமென்றுங் கூற முற்படுவது மிகவறிவின்மையும் பெருங் கெடுதியுமாம்.



10. பின்னும் நிடாதஸ்தபதிகளைக் குறித்துப்பேசுமிடத்து அவர்கள் இச்சென்னையின் மேற்பாகமாகிய மலையாளம், பாலக்காடு, மேலைச்சிதம்பரம் முதலிய விடங்களில் ஓர்வகைக் கம்மாளர் வசிப்பதாய்த் தெரியவருகிறது. ஆனால், அவர்களுக்குத் தீண்டாக் கம்மாளரெனப் பேர் வழங்குகிறது. ஆனாலவர்கள் உயர்ந்தோர் வசிக்கும் வீதிகளிலும் வீடுகளிலும் போதல் கூடாது. அங்ஙனம் ஷை வீதிகட்கும், வீடுகட்கும் போகவேண்டுமாயின், தங்களாயுதங்களிலேதேனுமொன்றைத் தங்கள் இடுப்பில் சொருகிக் கொண்டு அல்லது கையில் பிடித்துக் கொண்டு போவாராகில் வீடுகளிலும் தாராளமாய்ப் போகலாம். எதையும் தொட்டு வேலைசெய்யலாம். இங்ஙனமாம் இவர்களைத்தான் மேலைச் சிதம்பரவாசிகளாகிய கனுபர்த்தி பசவாசார்ய ஸ்வாமிகள் தாம் இரதகாராதி காரணத்தில் நிடாதரெனக்கூறியிருக்கலாம். ஆனால் இவர்கள் பிரத்யேகமாய் வசிப்பதால் இவர்களைக் குறித்து நாம் பேசவேண்டியதில்லை. இஃதிங்ஙனமாயின் ஆஸாரி யென்னும் பெயரிய ஓர்வகை சாதியாரில்லையோ வெனில், கிடையாது. இவ்வாஸாரி யென்பது தமிழ் மிகுதியாய்வழங்குந்தேசங்களில் நம்மவர்களை சாதாரணமாய் சப்தக்குறைவாய் ஆஸாரி ஆஸாரி யெனக்கூப்பிடும் வழக்கமேதவிர ஆஸாரியென்னும் பிரத்யேகமான சாதிகிடையாது. ஆசாரி யென்பவர்களை சென்னைக்கும் வடக்கு வடமேற்கு இந்த பாகங்களின் ஆந்திர சமஸ்கிருதபாஷைகள் வழங்கும்தேசங்களில் சாதாரணகுடித்தனகாரரும் ஆச்சாரியென்றே திருத்தமாய் அழைப்பதை நாம் பிரத்யக்ஷமாய்க் கண்டிருக்கிறோம். ஆகையால் இவ்விதங்களால் ஆஸாரியென்பதற்கோர் சாதியும் ஆச்சாரி யென்பதற்கோர் சாதியுங் கிடையாதாதலால் இரண்டும் ஒன்றேயென்க.

தொடரும்

**கூந்தலூர் சுப்ரஹ்மண்ய ஆச்சாரி,**
மங்கலம்பேட்டை.

## நித்யகர்மானுஷ்டானம்.

நித்யகர்மானுஷ்டானம் என்பது நாம் ஒவ்வொருதினமும் பிரதானமாய் அனுஷ்டிக்கவேண்டிய சில விதிகள். அல்லது கடமைகள். இவ்விதிகள் தேசத்திற்கும், காலத்திற்கும், மனிதகோடிகளின் பக்குவத்திற்கும் தக்கவாறு பெரியோர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதிகள் நம்மவருக்கு மாத்திரம் உண்டென்

பது தகாது. ஒவ்வொரு மதஸ்தருக்கும் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனியாகவே இருக்கின்றது. மேலும், அவரவர்கள் விருத்தி, நாகரீகம், மனோசக்தி இவைகளுக்கு தகுந்தவண்ணம் நித்யகர்ம விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனதுபற்றியே புத்தி தீக்ஷண்யமும், சாந்த விருத்தியுமுள்ள பிராமணனுக்கு மற்ற எல்லோரைக் காட்டிலும் இவ்விதிகள் அதிகமாயிருக்கின்றது.

நித்யகர்மானுஷ்டானங்களுள் முதன்மையானது ஒவ்வொருவரும் அதிககாலையில் படுக்கைவிட்டு எழுந்திருக்கும் பொழுது வாய், கண்களை செவ்வையாய்த் துடைத்துக்கொண்டு "சென்ற இரவு முழுதும் என்தேகத்தைக் காப்பாற்றிக் கொடுத்த விஸ்வேஸ்வரனே! இன்று பகல் முழுதும் நான் செய்யப்புகும் ஒவ்வொருகாரியமும் பகவத்பரமான மானதாகவே யிருக்க வேண்டும்" என்று தியானித்துக் கொள்ளவேண்டும். பிறகு எழுந்து வெளியே தனிமையான இடத்திற்குப் போய் மலஜலாதிகளைப் போக்கி விதிப்படி, சௌசம், தந்தசுத்தி முதலானவைகளை செய்து முடித்தபின் தேகசுத்திசெய்யவேண்டும். இதுதான் பிரதானமானது. தேகசுத்தி அதாவது ஸ்நானம் செய்ய அவரவர்கள் இஷ்டத்திற்கும், தேகசௌக்கியத்திற்கும் தக்கவிதம் குளிர்ந்த ஜலத்தையாவது அல்லது, வெந்நீரையாவது உபயோகித்துக் கொள்ளலாம். இவ்விதம் பிராதக்காலத்தில் ஸ்நானம் செய்து வரின் முதல் நாள் உண்டான உஷ்ணம் நீங்கி, கண்களில் பீளைசேர்தல், சோம்பல் ஆகியவிகாரங்கள் நீக்கப்பட்டு தேகம் சுத்தமடைகிறது. ஸ்தூலதேகம் சுத்தமானவுடனே சூக்ஷ்ம தேகமாகிய ஞானேந்திரியங்களும், மனதும், ஹிருதயமும் சுத்தத்தையடைந்து சாந்தியைப்பெறுகிறது. சாந்தியே ஆனந்தம்.

நாம் ஸ்நான காலங்களில் செய்யும் மந்திரங்களையும், சொல்லும் ஸ்லோகங்களையும் ஆலோசிக்குமிடத்து அதன் பிரயோஜனம் அனுஷ்டிக்கிறவர்கள் நாளடைவில் அறிவார்கள். ஆனால் மந்திரங்களின்பொருள் தெரியாதவர்களும் சொல்ல அசக்தர்களும்மானஸீகமாய் அதன் கருத்தைத் தியானிக்க அதன் பலன் கிடைக்குமென்பது நிச்சயம்.

அதாவது, ஸ்நானம் செய்யும் போது ஒருவருடனும் வீண்வார்த்தை பேசாமல், ஏகாக்ர சித்தமாய் ஸ்நானம் செய்வதிலேயே மனதை செலுத்தி "கங்கை, யமுனை, கோதவரி, காவேரி என்ற பல நதிகளுக்கு அதிஷ்டான தேவதைகள் இங்கே சாந்நித்யம் செய்யட்டும். நான் இதில் ஸ்நானம் செய்வதால் என் ஸ்தூல தேகத்தைப்பற்றிய வியாதிகள் நீங்கப் பெற்று, இச்சாத்வேஷங்கள்பிறக்கப்பட்ட சூக்ஷ்மதேகமும் சுத்தமடைந்து நான் எப்போதும் பகவத் கைங்கர்யமான பரோபகாரத்தையே செய்யும்படியான சித்தவிருத்தியை எனக்கு அனுக்கிரஹிக்கவேண்டும்" என்பதை தியானிக்கவேண்டும்.

இங்ஙனம், ஸ்நானம் செய்த பின்னர் மடிஉடுத்தி விபூதி முதலியவை தரித்துக் கொண்டு சந்தி, ஜெபம், முதலியவைகளை நிபதியருது இயற்றவேண்டும். இதற்கு நம்மவர்களால் பதிப்பிக்கப் பட்டிருக்கும் விஸ்வப்பிராஹ்மண ஆன்ஹிக தீபிகை, விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி, திரிகாலசந்தியா வந்தனம் இவைகளை வாங்கி வாசித்து தெரிந்து கொள்ள வேண்டும். அல்லது தெரிந்தவர்களிடத்தில் பாடம் கேட்டுக் கொள்வது இன்னும் விசேஷம். முக்கியமாய் நமது வம்ஸ உபாத்தியாயர்கள் ஒவ்வோர் ஊரிலும் நமது சிறுமாணுக்கர்களுக்கு கற்பிக்கப் பிரயத்தனப் படவேண்டும்.

மேற்செல்லிய ஸ்நானம், சந்தி, ஜெபம் முடித்த பிறகுதான் அவரவர்களுக்கு உரிய தொழிலைப் பார்க்கவேண்டும்.



"நான் கொல்லன். நெருப்பில் வேலை செய்பவன் காலையில் ஸ்நானம் செய்து உலைக்களத்திற்குப் போவானேன்?" என்ற எண்ணங்களையெல்லாம் அடியோடேதொலைக்கவேண்டும். ஸ்நானம் செய்தபின்னர் எந்த வேலையைச் செய்தாலும் மிக்க சுறுசுறுப்பாயும், புத்திநுட்பமாயும் செய்யக் கூடும். நாம் சம்பாதிப்பதெல்லாம் தேகத்தைக் காப்பாற்றும் பொருட்டல்லவா? அந்த தேகத்தை நாம் அலக்ஷியம் செய்யலாமா? சுவற்றைவைத்துக் கொண்டல்லவா சித்திரம் வரையவேண்டும்? "சாஸ்திராயசே சுகாயசே" சாஸ்திரங்களெல்லாம் நமது சுகத்தை உத்தேசித்தே செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் பிராதஸ்நானமே தேக ஆரோக்யத்திற்கு முதற்காரணமாயிருக்கிறது. மேலும் நாகரீகம் விருத்தியாகிறது. நாகரீகம் விருத்தியடைய பிறர் நம்மிடம் வைத்திருக்கும் அசூயை விலகுகிறது.

நாம் தாழ்ந்தவரென்று யாரைச் சொல்லுகிறோம்? சுத்தமற்றவர்களை யல்லவா? நாமும் பிறப்பில் உயர்குலத்தோரெனும் சுத்தமில்லாத பட்சத்தில் தாழ்ந்தவரே! ஆகையால் நித்ய கர்மானுஷ்டானங்கள் எல்லாம் நமது மனோ,வாக்கு, காயம் இம்மூன்றையும் சுத்தம் செய்து கொள்வதற்காக ஏற்பட்டிருக்கிறது. நம்மவரில் சிலர் நாம் செய்யும் தொழிலுக்கும் நித்யகர்மானுஷ்டானத்திற்கு எவ்விதம் பொருந்தும் என்று வீணே காலங்கழிக்கிறார்கள்.

நித்யகர்மானுஷ்டான விதிகள் எவ்வித பிரவிர்த்திக்கும் கெடுதலை விளைக்காது. நாம் எவ்வித தொழிலைச் செய்தாலும் அத்தொழில் சம்பந்தமாய் நம்மையறியாது வந்த பாவ புண்ணியங்களைப் போக்க பிராயசித்த ரூபமாக நித்ய கர்மங்களைச் செய்யவேண்டுமே யொழிய, இதைக் கற்று பிறருடன் வாக்குவாதம் செய்யவல்ல, அல்லது நம்மை பிராஹ்மண ரென்றும் மேல் குலத்தோரென்றும் சொல்லி அகங்காரத்தை உண்டுபண்ணுவதற்கல்ல.

ஒவ்வொருவரும் இந்நித்தியகர்ம விதிகளை அனுஷ்டிக்க வேண்டியது கடமை. இதில் உயர்ந்தவ ரென்றும் தாழ்ந்தவரென்றும் கிடையாது. நாம் தாழ்ந்தவரென்று சிலரை எண்ணுகிறோம். அவர்கள் அவரவர் நித்ய கடமையைச் செய்யும் போது "இவர்களுக்கும் இவ்விதிகள் உண்டா? இவர்கள் இதைச் செய்தால் பாவம்" என்று சில சமயங்களில் எண்ணுவது சுத்த பிசகு.

ஆகையால் இக்கடமைகளை ஒவ்வொருவரும் செய்யாத பட்சத்தில் துன்பமே விளையும். பாடசாலைகளில் ஆங்கிலம் வாசிக்கும் நம் குலச் சிறுவர்களையும் அவர்கள் படிப்பினின்றும் தடைப்படுத்தாது.

து. ப. வே. ஆச்சார்ய,
திருச்சினாப்பள்ளி.

## பிரபஞ்ச விர்த்தியும், ஆத்தும சக்தியும்.

இந்த பிரபஞ்சம் யதார்த்தமாக ஆதியில் ஆத்துமாவாக மாத்திர மிருந்தது. சராசரமாகிய யாதொன்றும் அதுவன்றி வேறில்லை. கடவுள் உலகங்களைச்சிருஷ்டிப்பேனென்று நினைத்தார். இவ்விதமாக அவர் பல வுலகங்களைச் சிருஷ்டித்தார். ஜலம், வெளிச்சம், சாவுக்குரிய ஜீவர்கள் ஜலங்கள் இவைகளைச் சிருஷ்டித்தார். ஜலமானது வானத்துக்குமேலும் இருக்கின்றது. அதற்கு வானம் ஆதாரமாக விருக்கின்றது. வாயு மண்டலத்தில் வெளிச்சம் அடங்கி இருக்கின்றது. பூமி அநித்திய முள்ளதா யிருக்கிறது. அடியிலிருக்கிற பிரதேசங்கள் ஜலங்களேயாம்.

இவைகள் யதார்த்தமாகவே யுலகங்களாக விருக்கின்றனவென்று உலகங்களின் திக்குப்பாலகரைச் சிருஷ்டிப்பே னென்றார். இந்த விதமாக ஜலங்களிலே யிருந்து வவித்துப் பிண்டமான ஒரு வஸ்துவை யுண்டாக்கினார். அவரதை நோக்கிப்பார்த்தார். அந்தப்படி யனுசந்தித்த வஸ்துவிலிருந்து ஒருமுட்டையைப்போல் வாய்திறந்தது. அந்த வாயிலிருந்து பேச்சுண்டாச்சு, அந்தப் பேச்சிலிருந்து அக்கினி யுண்டாச்சு, நாசிகள் பரவியதுகள், நாசிகளிலிருந்து மூச்சுப் புறப்பட்டது, மூச்சிலிருந்து வாயு பிறந்தது, கண்கள் திறந்தன, கண்களிலிருந்து கண்ணோக்கம் பிறந்தது, அந்தக் கண்ணோக்கத்திலிருந்து சூரியன் பிறந்தான். காதுகள் விரிந்தன. காதிலிருந்து கேட்டல் வந்தது, அதிலிருந்து இடமுள்ள மண்டலங்கள் பிறந்தன, சருமம் விரிந்தது, சருமத்திலிருந்து உரோமம் உண்டாச்சு, அதிலிருந்து பூண்டுகளும் விருட்சங்களும் வளர்ந்தன, மார்பு திறக்கப்பட்டது, மார்பிலிருந்து மனது பிறந்தது. மனதிலிருந்து சந்திரன் பிறந்தான். தொப்புள் வெடித்தது, தொப்புளிலிருந்து விழுங்குகை பிறந்தது, அதிலிருந்து மரணம் பிறந்தது. பிறப்பிக்கிற அவயவம் வெடித்தது. அதிலிருந்து உற்பீஜம் பிறந்தது, அதிலிருந்து அதின் மூலமாகிய ஜலங்கள் பிறந்தன.

இந்தத் தேவர்கள் இவ்வண்ணமாக உண்டாக்கப்பட்டு இந்த விரிந்த சாகரத்தில் விழுந்தார்கள். கடவுளிடத்திற்கு அவர்கள் பசி தாகத்தோடு வந்தார்கள். அவரை அவர்கள் இவ்வண்ணமாகக் கேட்டுக்கொண்டார்கள். எங்களுக்கு ஒரு சிறிய உருவத்தைக் கொடும், அதில் நாங்கள் அடங்கி ஆகாரம் புசிப்போம் என்றார்கள். அவர் அவர்களுக்கு ஒரு பசு ரூபத்தைத் தந்தார். அவர்கள் அது எங்களுக்குப் போதா தென்றார்கள். அவர் அவர்கட்கு ஒரு அசுவ ரூபத்தைக் காட்டினார். அவர்கள் அதுவும் தங்களுக்குப் போதாதென்றார்கள், அவர் அவர்கட்கு மனிதவடிவைக்காட்டினார். அவர்கள் நன்றாய்ச்செய்தீர் ஆ! ஆ! அதிசயமென்று கூவிச்சொன்னார்கள். ஆகையால் மனிதன் மாத்திரமே நல்ல வடிவமாகச் செய்யப்பட்டானென்று சொல்லுகிறது.

அவர் அவர்களை அவரவர்க்குரிய இடங்களிலிருக்கும்படி யுத்தரவுசெய்தார். அக்கினிபேச்சாய் வாயில் நுழைந்தது. வாயு மூச்சாகி நாசியில் நுழைந்தது. சூரியன் நோக்கமாகிக் கண்களில் நுழைந்தான். ஆகாயம் கேட்டவாகிச் செவியிடங் கொண்டது. பூண்டுகளும், விருட்சங்களும், உரோமங்களாய்ச் சருமங்களில் நுழைந்தன. சந்திரன் மனதாகி மார்பில் நுழைந்தான். மரணம் விழுங்கலாகி தொப்புளில் உருகிப்பாய்ந்தது. ஜலம் உற்பீஜமாகி உபஸ்தத்தில் நுழைந்தது.

பசியுந் தாகமும் அவரைஎங்களுடைய இடங்களை ஏற்படுத்தவேணுமென்று கேட்டுக்கொண்டதுகள். அவர் உங்களை இந்தத் தேவதைகளுக்குள் பாகித்து விடுகிறேன், அவர்களோடு உங்களைப்பங்காளிகளாக்குகிறேன் என்று விளம்பினார். ஆகையால் யாதொரு தேவதைக்கு நைவேத்தியஞ் செய்யும்போது பசியுந்தாகமும் அவர்களோடு பாகித்துக் கொள்ளுகின்றன.

உலகங்கள் இருக்கின்றன உலகங்களில் ஆளுகையு மிருக்கின்றன. அவர்களுக்காகப் புசிப்பை யுண்டுபண்ணவே னென்று அவர் ஆலோசித்தார். அவர் ஜலங்களை நோக்கிப் பார்த்தார். ஜலங்களிலிருந்து வடிவம்உண்டாச்சு,அவ்விதமாகப் பிறந்த வடிவம் ஆகாரமர்க விருக்கின்றது.

இந்தவிதமாக உண்டாக்கப்பட்ட அவ்வாகாரம் திரும்பிக்கொண்டு பறந்துபோகப் பார்த்தது. இந்த ஆதியான மனிதன் அதைப் பேச்சினால் பிடிக்க யத்தனப்பட்டான். ஆனாலதை அவனுடைய குரலோசையால் அடையமாட்டாதவனானான். குரலோசையால் அதை யடைந்திருப்பானாகில், பசியானது உணவின்பேரைச் சொல்வதினாலேயே தீர்ந்துபோகும். பின்பு தன்னுடைய மூச்சினால் அதைப் பிடிக்க யத்தினப்பட்டான். ஆனால் சுவாசத்தினால் ஆக்கிராணிக்க மாட்டாதவனாய்ப் போனான். அதை ஆக்கிராணிப்பினால் கிரகிப்பதாயிருந்தால் பசியானது உண்டியின்வாசனை பிடிப்பதால் திருப்தி யடைந்துவிடும். அதைப் பார்வையால் பிடிக்க யத்தினப்பட்டான். ஆனால் பார்வையினால் பிடிக்கமாட்டாதவனானான். பார்வையால்அதைப் பிடிப்பதா யிருந்தால் பசியானது உண்டியைப் பார்ப்பதினால் தீர்ந்துவிடும். அதைக்காதால் கேட்கிறதினால் பிடிக்க யத்தினப்பட்டான். காதுகொடுத்துக் கேட்பதினால் பிடிக்க மாட்டாதவனானான். செவிகொடுத்து அதைப்பிடிப்பதா யிருந்தால் பசியானது உண்டியை செவியால் கேட்பதினால் தீர்ந்துவிடும். அதையவன் தொக்கினால் பிடிக்கயத்தினப் பட்டான், ஆனால் அவனுடைய தொக்கினால் பிடிக்கமாட்டாதவனாய் விட்டான். தொடுகிறதினால் பிடிப்பதா யிருந்தால் பசியானது அன்னத்தைத் தொடுவதினால் தீர்ந்து விடும். அவனதை மனதினால் எட்ட விரும்பினான். ஆனாலதை நினைக்கிறதினால் பிடிக்கமாட்டாதவனானான். அவனதை நினைப்பினால் பிடிப்பதாயிருந்தால் பொசிப்பைத் தியானிப்பதினால் பசி தீர்ந்துவிடும். அவனதை யுபஸ்தத்தினால் பிடிக்கயத்தினப்பட்டான், ஆனால் அதனால் பிடிக்க மாட்டாதவனானான். இவ்விதமாக அதைப் பிடிக்கிறதாயிருந்தால் பசியானது உபஸ்தம் விரும்புதலினால் திருப்தியடைந்து விடும். கடைசியில், அதை விழுங்குதலினால் பிடிக்கயத்தினப் பட்டான். அப்படியே அதை விழுங்கினான். அதையுள்ளுக்கு வலித்த வாயுவானதுஉண்டியைப்பிடித்துக்கொண்டது. அந்தவாயு பிராணபந்தமாகஇருக்கின்றது.



சர்வாத்துமாவாகிய, அவர் இந்தச் சரீரம் என்னையல்லாமல் எப்படியிருக்குமென்றும்,எந்த இறுதியில் புகவேண்டுமென்றும் யோசித்தார். என்னையல்லாமல் வாக்குவசனித்தாலும், சுவாசம் ஆக்கிராணித்தாலும், நேத்திரம்பார்த்தாலும், செவிகேட்டாலும், தொக்கு உணர்ந்தாலும், மனது தியானித்தாலும், விழுங்கல் விழுங்கினாலும், உபஸ்தம் அதின் தொழிலைச் செய்தாலும், அப்போது நான்யாரென்று நினைத்தார்.

சீமன் என்னும் தலையோட்டின் பொருத்தத்தை நீக்கி இந்த வழியாய் அவர் உட்புகுந்தார். அந்த திறப்புவை திருதி என்னும் தலையோட்டின் பொருத்தம். "நந்தனம்" என்னும் முத்திக்குப்போகிற மார்க்கமாக இருக்கின்றது.

(இன்னும்வரும்)

V. மௌனதரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

(196-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## இந்திய சிற்பமும் அதன் முன்னேற்றமும்.

### 4. சிற்பநூல் விளக்கம்.

முக்கிய சிற்ப நூற்களி லொன்றாகிய மானசாரத்தின் ஆறாவது அத்தியாயத்தில் சூரிய கடிகாரம் செய்யும் மார்க்கத்தையும், கால அளவைத் தெரிந்து வரையறுக்கு மியல்பையும் கூறி திசையறி கருவியின் கூற்றையும் அதனை உண்டு செய்யும் வழிகளையும் நன்குணர்த்தும். ஏழாவது அத்தியாயத்தில் நாடு, நகர அலங்காரங்களையும் அவற்றிற்குரிய விதி விலக்குகளையும், நிருமிக்கும் காலங்களின் பேதா பேதங்களைப் பற்றிப்பேசும். கூட

கோபுரங்களையும், கோயில்களையும் அமைக்கும் நியமங்களையும் இலக்ஷண பேதங்களையும் அவ்வத்தியாயம் தெற்றென விளக்கும். ஓர்நிலை மாடவர்க்கத்தி லிருந்து பன்னிரண்டு அடுக்கு நிலை பேதங்களுடைய அரண்களையும், கோபுர விமானங்களின் வித்தியாசங்களையும் விளக்கிக்காட்டும். ஓர் கட்டிடம் கட்டப்படுங் காலத்தும், அஸ்திவாரம் நாட்டுங் காலத்தும், தலைவாயில் நிறுத்துங்காலத்தும், தலைவர்வர் குடிபுகுங் காலத்தும், கோயிலில் விழாக்களை தொடங்கும் காலத்தும் அவைகளுக்குரியோர் கைக்கொள்ள வேண்டிய முக்கிய வைதீக ஆசாரணைகளை அந்நூலின் 8 - வது அத்தியாயமியம்பும். மந்திர, தந்திர, அக்கினி, ஆகுதி முதலிய கிரியைகளின் பேதங்களையும், அவைகளைச் சமயமறிந்து அநுசரிக்கும் வழிகளையும் அவ்வத்தியாயமே வற்புறுத்தும். ஒன்பதாவது அத்தியாயத்தில், ஓர் நாட்டிலுள்ள பற்பல சாதியர்கள் வசிக்கவேண்டிய இடங்களை வரையறுத்து, அவைகளமைக்கப்படும் கிரமங்களையும் அறிவிக்கும். இன்னும் மற்றைய அத்தியாயங்களில் விக்கிரக, வாகனாதிய விஷயங்கள் வரன்முறையாக விளக்கப்பட் டிருப்பதோடும் அபிஷேக, ஆராதனைகளும் கூறப்பட்டு, விக்கிரகங்களுக்கு கண் திறத்தலாகிய அதிசூட்சும கிரியையை விளக்கலோடு முற்றுப் பெறுகிறது.

இரண்டாவது முக்கிய சிற்ப நூலாகக் கூறப்பட்டுள்ள 'மயமதம்' என்னும்கிரந்தமானது மயனால் ஆக்கிய நூலென மதிக்கப்படுகிறது. வானசாஸ்திரத்தின் தாய் நூலாகிய சூரியசித்தாந்தமெனும் நூலை இயற்றியவரும் இம்மயனெனச் சொல்லப்படுகிறது. அயோத்தியாவை ஆண்ட தசரதச் சக்ரவர்த்தியின் வேண்டுகோளுக் கிசைந்து பலிபீட மொன்றியற்றி உதவியவரும் இவரென வால்மீக ராமாயணத்தில் வரைந்துளது. பாண்டவர்களுக்கு இந்திரப் பிரஸ்தமெனும் ஓர் விசித்திர மண்டபம் நிர்மாணித்து கண்டோர் பிரமிக்கும் வண்ணம் இவர் அலங்கரித்துக் காட்டினரென்றும், காண்டீபம் என்னுமோர் வில்லையும், வாயுவேக முடைய ஓர் இரதத்தையும், பகைவரைக்கடிய ஓர் கதா யுதத்தையும் சிருட்டித்துதவியவர் இம்மயனே யெனவும் மகாபாரதத்தால் பெறப்படுகின்றது. இம்மயன் தெய்வத்தன்மை வாய்ந்தவராகையின், கிரேதாயுகமாகிய ஸ்ரீராமபிரான் காலத்தும் ஸ்ரீ கிருஷ்ணாவதார காலமாகிய துவாபரயுகத்தும் நீடித்திருந்தனரென்றும் பின்னர் நிமலனோடு ஒன்றினரென்றும் உரைப்பவர் உளர்.

மயமதத்திற்கும், மானசாரத்திற்கும் விஷயத் தொகுப்பிலும், அவற்றை விவரிக்கு முறையிலும் சிறிது பேதங்கள் காணப்படுகின்றன. மயமதத்தின் பிரதம அத்தியாயத்தில் வாஸ்துபுருட இலட்சணங்களைக் கூறி அன்னோரை வழிபடு மார்க்கத்தையும் வழுத்தும். வாஸ்து புருடன் நித்திரை விட்டெழும் தினங்களையும், நாழிகைகளையும் நவின்று, அப்புருடன் எழுந்து பல்விளக்க நாழிகை முக்காலெனவும், ஸ்நானம் செய்ய நாழிகை முக்காலெனவும், பூஜை முடிக்க நாழிகை முக்காலெனவும், போஜனமருந்த நாழிகை முக்காலெனவும், பின் தம்பலந்தின்ன மற்றோர் நாழிகை முக்காலெனவும், இவ்வைந்து முக்கிய சமயங்களுள், பின்னர் கூறியுள்ள இரண்டமயங்களே கிரகாரம்பம் செய்ய நன்றெனவும் நவிலும். பின்னர் பூமி பரிசோதனை, சல்லியமெடுத்தல், நீரோட்டமாய்தல் முதலிய விஷயங்கள் விளக்கப்பட்டு, மண்களின் பேதங்களும், அவைகளின் திண்மை நிலையையும் தெரிவிக்கின்றது. பின்னர் கிரகாச்சிர தர்மத்திற்குரிய ஓம, யாக குண்டங்களின் இலட்சண பேதங்களையும், அவைகளை நிருமித்துச்சித்தரிக்கும் வழிகளையும் அந்நூலில் கூறப்பட்டிருக்கின்றது. (தொடரும்)

**T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியர்,**
**சென்னை சிற்பவித்தியா சங்கத்தின்,**
**அங்கத்தினர்.**



## நம் கைத்தொழில் சீர்ப்படுவ தெப்படி?

கைத்தொழில் வெறும்கையின் உதவியைக்கொண்டு செய்யப்படுவதைக்காட்டிலும் யந்திரங்களின் சகாயத்தால் செய்வதே நன்று. ஏனெனில், கையினால் செய்யப்படும்சாமான்களைவிட யந்திரங்களினால் செய்யப்படும் சாமான்கள் மிக சுத்தமாயும், அழகாயும் இருப்பதோடு சீக்கிரத்திலும் விலை சாசமாகவும், முடித்துவிடக்கூடியதாகவு மிருக்கின்றன. அயல்நாட்டிலிருந்து அநேக லோகங்களாலும், மற்ற வஸ்துக்களாலும் செய்யப்பட்டு இங்கு அனுப்பப்படும் சாமான்கள் யெல்லாவற்றையும் யந்திரத்தினுதவியைக்கொண்டே செய்தனுப்பப்படுகின்றன. நாமோ நம் முன்னோர்களால் செய்யப்பட்டு வந்ததுபோலவே யந்திர சகாயமின்றி ஒருதினத்தில் ஆயிரக்கணக்காகச்செய்யக்கூடிய சாமான்களை நாளுக்கு ஒன்றாகச் செய்து அதில் வரும் சொல்ப வரும்படியைக் கொண்டு காலங்கழித்து வருகிறோம். அயல்நாட்டாரும் இப்படியே செய்து வந்திருப்பார்களானால் நாம் இப்போது காணும் லட்சக்கணக்கான வேலைகள் ஒருபோதும் முன்வந்திரா. அவர்கள் இவ்வளவு அபிவிருத்தி அடைந்ததற்குக்காரணம் அவர்களிடத்திலுள்ள விடாமுயற்சியே. நம்மிடத்திலும் அவ்வித முயற்சி இருக்குமாயின் நாமும் அவர்களைப்போலவே முன்வருவதற்குச் சந்தேகமில்லை. அம்முயற்சியோடும் ஒற்றுமையும் வேண்டும். மேல்நாட்டார் அவ்வித ஒற்றுமையின்றி ஒரு காரியத்தை செய்கிறார்களென்று சொல்லமுடியாது. அவர்கள் பலரும் ஒருமனதாய்க் கூடி ஒற்றுமையுடன் பாகஸ்தர்களாக சேர்ந்து கூட்டுக்கம்பெனிகளை ஸ்தாபித்து அதில் வரும் ஊதியத்தைச் சேர்ந்தவர்களெல்லோரும் பங்கிட்டு அனுபவிக்கிறார்கள். அயல் நாட்டிலிருந்து வரும் சாமான்களெல்லாம் நம் நாட்டிலேயே செய்யக்கூடியவைகளாக விருக்கின்றன. நாம் ஏன் செய்யவில்லை யென்று யோசிப்போமாகில், திரவியமில்லாமையும், யந்திரங்களில்லாமையும், அவைகளைச் செய்யும் முயற்சியும், அதற்கு வேண்டிய படிப்பு மில்லாமையுமே யாகும். இவைகளெல்லாம் தனித்திருந்தபோதிலும் ஒற்றுமையின்றி பயன்படமாட்டாது. யந்திரங்கள் சம்மந்தப்பட்ட பெரும் தொழிற்முயற்சிகளுக்கு ஒருவரே முதல்வைத்து செய்ய முடியாதாகையால் பலரும்சேரவேண்டுவது அவசியம். அப்படிச் சேருபவர்கள் பலரும் ஒற்றுமையுடனும் பொதுநலம் கோறி நாணயத்துடனும் உழைத்தல் உத்தமம். மேற்கண்ட விஷயங்களை எக்காலத்திலும் கவனித்துழைக்கிறோமோ அப்பொழுதே நாம் மேன்மை யடைந்துவிட்டோமென்று கருதலாம். மேல் நாட்டார் அநேக வருஷ காலமாய் பிரயத்தினப்பட்டு கீர்த்திபெற்ற மாதிரி நாமும் இனிமேல் ஆரம்பித்து முன்வருவோமா வென்று சந்தேகித்தால் ஜப்பானியர்களே சாட்சியாவார்கள். அச்சாதியார் ஐரோப்பியர்களுக்கு பிந்தியே அநேக வேலைகளை யந்திரங்களினால் செய்து ஐரோப்பியரோடு சமானமாக பிரகாசித்து வருகின்றனர். யந்திரங்களினால் செய்தாலன்றி எந்த சாமான்களையும் சரஸ விலைக்கு கொடுக்க முடியாது. ஆகையால் ஐரோப்பியருர், அமரிக்கர்களும் சொல்ப வேலைகளா யிருந்தபோதிலும் அதை அலட்சியம் செய்யாது யந்திரங்களினாலேயே செய்யப்பிரயத்தினப்படுகின்றனர். நாமோ அவைகளை அசட்டைசெய்கின்றோம். அதினாலேயே நமது வேலைகள் க்ஷீணத்தை அடைகின்றன. நமது குலமும் குன்றி வருகின்றது. இவைகளை யெல்லாம் உணர்ந்தவராய் பத்திராதிபரும் சென்ற இரண்டு மாதப் பத்திரிகைகளில் தம் கருத்தையும் அநுபவங்களையும் வெளியிட்டிருக்கின்றார்.

இவ்விஷயத்தில் அவர் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமத்திற்கு நாம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வருமையான அவரது கருத்துகளை பல தடவையும் படித்து தெரிந்துகொள்வது அவசியமாகிறது. இவ்விஷயத்தில் எப்பொழுது கவனிக்கிறோமோ அப்பொழுதே நம் குலமும் நாமும் கடைத்தேரும் சமயமாகும். இவ்வியாசங்களால் இனியாகிலும் நாம் கண்விழித்து கைத்தொழிலில் ஊக்கம் பாராட்ட விஸ்வேஸ்வரர் கருணைபுரிவாராக.

**என். கோவிந்தராஜு ஆச்சாரி,**
சென்னை.

---

205-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## விஸ்வதபிரான்.

தென்னெல்லைப் பிரதேசத்தில் விஸ்வபாலன யாகம் நடத்தப்பட்டு இனிது நிறைவேறி பூர்ணாகுதிசம்பிராப்தம் நிகழ்ந்த தருவாயில் நடந்த அற்புதமாவது—யாதொரு தென்னெல்லைக் கோபுர வாசலினின்றும் ஓர் காமதேனுவானது சலங்கைகள் ஒலிக்கவும் அருளான அமுதம் சுரக்கின்ற முகம் வீக்ஷண்யிக்கவும், சாமரம் உலாவுவதற்கு உவமையாக வாலாசலாடவும், மூவர்கள் சாற்றின மாலையைத் தாங்கியது போல் சித்ரமாலைகள் விளங்கவும் பெற்று யாகசாலையை நோக்கி வருகலானது. அவ்வாறு காக்ஷியார்த்தமான காரணமாவது—அத்தென்னெல்லைப் பிரதேசமானது மனிதசஞ்சாரமில்லாதது. அதிலிரானின்ற கோபுரமானது ஓர் மகத்தேவாலயத்தினுடைய முன்வாசலாகும். அக்கோபுர வாசலினுள் பிரவேசிக்குங்கால் புஷ்பவிதான ரஞ்சித மார்க்கங்களும், அதன் பின் அநேக விசாலமான மண்டபங்களும் வரிசையான கூடங்களும், அதன் பின் மாளிகை விதானங்களும், அதன் பின் காம்பீரமான த்வஜஸ்தம்பமும், அதன் பின் சித்திர விலாசங்களும், நந்திசன்னதியும், அதன் பின் பைரவவாசலும், அவ்வாசலிற்கு வாமபாகத்தில் உயர்வு பீடத்தில் ஓர் தங்கக் கிரீடமானது விளங்காநின்றுள்ளது. அந்த பைரவ வாசலினுள் அபமலக்காக்ஷிகரமாயுள்ளது.

அவ்வாலயத்தைச் சுற்றி மகா மனோகரமான வனங்கள் விளங்காநின்றது. அத்தேவாலயத்தில் மகாரூபவதியான ஓர் சிறுபிராயமுடைய தேவியானவள் கைங்கர்யம் செய்துகொண்டு வருவாள். அவள் சாத்மீக சம்பத்தைப் பற்றியும் அன்பு அருளாமிருதத்தில் வளர்ந்து வருகலானாள். இப்படியான அவ்வனிதைக்கு ஓர் சமயம் யோக நித்திரையில் பைரவமூர்த்தியானவர் காக்ஷியாக, அவள் தனக்கு விமோசனம் கிடைக்கவேண்டியதைப் பற்றிப் பிரார்த்திக்க அதற்கவர் இவ்வாலயத்திலுள்ள கிரீடம் மகத்பிரபவம் பெற்றுள்ள மண்டலேஸ்வரனால் தரிக்கப்படுவதாகும். அவரே உனது நாதனாவர். அந்த நாதனும் பூமியில் அவதரித்து ஒன்பது வருடமாகின்றதென அனுக்ரகித்து மறைந்தார். அத்தேவியும் பக்தி வைராக்கியத்துடன் கைங்கர்யம் செய்து வருகலானாள். இதன் காரணார்த்தமாய், யாகம் நிறைவேறவும் பைரவமூர்த்தி விஸ்வகர் திருக்கல்யாணம் பட்டாபிஷேகம் நிகழ்வதற்குத் திருவுள்ளங் கொண்டு அவ்வாறு காமதேனு அவதாரமாகி வருகலானது.

அப்பொழுது அதைப் பார்த்தவர்கள் நம்முடைய யாக பலனாகவே வருகிற அற்புதமாகும்; என மனமகிழ்ச்சியுடையவர்களாயிருக்க, யாக ஸ்தலத்தைக் கிட்டின அப்பசுவானது திரும்பச் சென்றது. அப்பொழுது சக்கரவர்த்தி தொடர்ந்து சென்றார். பசுவானது 'கோபுரவாசலுட் சென்று மண்டபங்களையும் கூடங்களையும் கடந்து சித்திரவிலாசமடைய முன் சொன்ன தேவியானவள் சன்னிதி தெரிசனஞ் செய்ய வருகலான போது பசுவைக் கண்டனள். அப்பொழுது ஆச்சரியமடைந்து என்ன காக்ஷியானோம்! ஒன்றும் வருவதற்கரிதான இவ்வாலயத்தில் மகா லக்ஷணம் பொருந்திய இப்பசுவானது எங்குற்றதோ! என்று வியப்புடன் அணுகப்போகும் சமயத்தில் பின்வருகிற சக்ரவர்த்தியையும் பார்த்தாள்! அகஸ்மாத்தாய் எண்ணியிராத தெரிசனமானதும் சித்தப் பிரமையுடன் அஞ்சலி செய்து நிற்கவும், சக்ரவர்த்தியும் ஆச்சரியமடைந்து யாவரும் காணக்கிடைக்காத இவ்வாலயத்தில் இவ்வனிதை இருக்கவேண்டிய காரணம் யாதோ? லக்ஷ்மீ சௌந்தரியமும் பாரதீவதனமும் உடையவளாயிருக்கிறாள்! தேவமகளிரோ! அல்லது இவ்வாலயத்தில் பகவானுடைய அனுக்ரகோற்பவமானவளோ! என்ற சித்தாக்கிரந்தராய், ஹே மங்கையரசே! நின்வரலாறு யாதோ? அறிய மனோகோசரங் கொண்டுள்ளது என, அப்பிராட்டியும் சொல்வதாவது—எனது அதி இளம்பிராயத்திலேயே பெற்றோர்களை அறிந்ததில்லை. இவ்விடத்திலேயே வாசம் பெற்றுள்ளேன் இவ்விடத்தைச் சூழ்ந்துள்ள வனங்களில் பசுங்கதிர் மணிகள், கனி, பால், மது முதலியவைகளை அருந்தி வசித்து வரலாகிறேன். பகவான் எனக்கருளியதாவது:—இச்சன்னிதியிலே விளங்காநின்ற கிரீடத்தைத்தரிக்கப்போகிற மண்டலபதியே எனது நாதனாகும். அந்தமண்டலாதிபதியும் ஜனித்து இப்பொழுது 17-வருடமிருக்கலாம், என்ற உத்திரவை சிரசில்வகித்து இவ்விடத்திலேயே பகவத் கைங்கரியம் செய்து கொண்டுவர, எனது நற்பலனாப் இப்பொழுது கிடைத்திருக்கிற சமுகம் எவ்விடமிருந்து என்ன காரணார்த்தமாய் வந்ததோ? என, மாதரசே மண்டலத்திற்குச் சக்ரவர்த்திகளாய் ஆத்மணி நகரத்தில் அரசு புரிந்த மன்வந்தர மகாராஜனுடைய பௌத்திரர்களும், எனது புதல்வர்களுமான விஸ்வதலோஹிதாள் சகிதமாய், இத்தென்னெல்லை ஆரண்ணியத்தில் ஓர் மகா யாகம் நடத்துங்கால் இத்தேவாலயத்தினின்று யாதொருதை வீக பசுவானது வந்து திரும்பவும், அதன் பின்னாகவே வரவும், விஸ்வதப்பிராட்டியாக விளங்காநின்ற விஸ்வநாயகமே! எதிருற்றாய். பசுவும் சன்னதி முகூர்த்தத்தில் மறைந்தது. உங்கள் திருக்கல்யாண வைபவம் நடக்க பகவதனுக்ரகம் உண்டானதாகத் தோன்றுகிறது. நின்மனோ சங்கல்பத்தைத் தெரிவிப்பாய் என, அப்பிராட்டியார் மனமகிழ்வுடையவளாய் பகவதனுக்கிரகப்படி நடப்பதில் சந்தோஷமே என்றாள். இவ்வாறு அந்தேவியினிடத்தில் விடை பெற்றுக் கொண்டு கனிவர்க்கங்களையும் பெற்று சக்கிரவர்த்தியார் முகவிலாசத்துடன் திரும்பி வரலானார்.

(தொடரும்.)

**சாலிவாடி புராதீனம்,**
தருமபதி.

---

## நன்றி.

நன்றி என்பதற்கு நன்மை அல்லது உபகாரகுணம் எனப் பொருள்படும். நல்லொழுக்கமுள்ள நன்மக்களே இச் சிறந்த குணத்தைக் கைக்கொண்டவராவர். ஏனையோரிருந்தும் பதடியாவர். ஆனால் நாம் தினமும் எத்துணையோ நன்மையானவைகளும், உபகாரமானவைகளும் செய்து வருகிறோமென நினைத்துக் களிப்புறுகிறோம். உண்மையாய் விசாரிக்கின் நாம் நினைத்தது தப்பென்பது தானே விளங்கும். ஏனெனில், நாம் ஒருவற்கு ஒன்று செய்யுங்கால் நமக்கு அவர் பதில் இயற்

றுவர் என்ற எண்ணமே மனதிற் கொள்ளுகிறோம். நேர்நேராக பதில் எதிர்பாராவிடினும் வேறெவ்வகையான இலாபமாவது கிடைக்குமென்பதாக ஓர் எண்ணம் உதிக்கிறது. இதைக் கவனிக்குமிடத்து கடன்கொடுத்து மீளவாங்குவது போலவாகிறதேயன்றி பிறர்க்குபகாரம் செய்ததாகாது. இதற்கு நன்றி என்ற நாமமே பொருந்தாது. ஆகையால், பிரதியுபகாரம் கருதாது செய்ததற்கே நன்றினனப்படும். “நன்றியொருவற்குச் செய்தக்காலந்நன்றி யென்றுதருங் கோலெனவெண்டா” என்ற மூதுரையும் காண்க.

நமக்கொருவர் முன்செய்த உதவிக்காகவென்னாதும் வேறெவ்வித காரணமின்றியும் செய்தநன்றிக்கு விண்ணுலகும் மண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும், ஒத்தலரிதெனின் அந்நன்றியின் பெருமை கூறவும் வேண்டுமோ! ஆனால் நம்மனுபவத்தில் நாம் செய்த நன்றியை பிறரறியச் செய்தும் அவர் பதில் புரியாவிடின், அவரைப் பலவாறு யிகழ்ந்தும், நமக்கு மோர் காலம் பிறருதவிதேட வருமென்பதை மறந்தும், நம்மைப்போல் அக்காலம் அவர் சொல்லின் நம் மனம் வருந்தும் என்பது இருந்தும் தற்புகழ்ச்சிகொண்டு வீண்பெருமைபாராட்டுகிறோம். இவ்விதம்அடைய நினைக்கும் பெருமையும், இப்பெருமை நிலைத்தற்கிடமென நினைக்கும் நாமரூபத்தோடு கூடிய வித்தேகமும் அழிந்துவிடுமென ஒருவற்குள்ளபடி தோன்றுமேல், தாம்செய்வது தவறுஎனவும், இவ்வுடலம் வீயா முன் பெறவேண்டிய பயனை அடையவேண்டுமெனவும், கழிந்தகாலத்திற் கிரங்கி பரதவித்து இனி விழித்தவண்ணமாயிருக்கவேண்டுமெனவும் உணர்ந்து விதித்தனகொண்டு, விலக்கியனவொழித்து, எப்பயனுங் கருதாது இயன்றவரை யனைவர்க்கும் தக்க வமயத்தில் தலைகொடுக்க முன்னிற்பர். இவ்வாறு செய்ததையும் தாம் செய்ததென்றெண்ணாது அவரவர் கர்மத்திற்கீடாக அனுபவிக்கும் பலன்களை நம் சம்பந்தமாய்ப் பெற்றால் நாம் செய்ததொன்றுமிலையென்றும், எதையும் ஈஸ்வரார்ப்பணமாய்ச் செய்தல் கருதியென்றுமறிந்து நடப்பர். இவர்புரிவனவெல்லாம் நிஷ்காமியமாய்ச் செய்தனவாகி சித்தசுத்தியும், சிவநேசச்செல்வமும் இவர்க்கு லபிக்கும். இவை முத்திநெறி யறியச் சிறந்த சாதனங்களாகையால் விடாது கைக்கொள்ளின் சித்திக்குமென்பது திண்ணம்.

இதுவரை நாம் பிறர்க்குச் செய்வதைப் பற்றி விசாரித்தோம். இனி நாம் பிறரிடம் பெறும் நன்றியை எவ்வாறு கொள்ளவேண்டுமென ஆராயின்,பெற்றது தினையளவேனும் பனையளவாய்க் கருதி அவர் எத்தீமை புரியினும் அவற்றை யெல்லாம் மறந்து, செய்த நன்றியை மறவாதிருத்தல் முக்கிய கடமை யெனத் தெரிகிறது. தானுண்ட நீரைத் தலையாலே சுமந்து தரும் தென்னையைப் போல நமக்கொருவர் செய்த நன்றி அற்பமாகவே யிருப்பினும், நாம்அவர்களுக்கு என்றும் நன்றிபாராட்டி சமயம் கிடைத்தபோது அவரியற்றியதற்கு பதின்மடங்கு அதிகம்திருப்பிச் செய்ய காத்திருக்கவும் வேண்டும். ஒருவேளை கைமாறாகச் செய்ய வியலாதாயின் மன மொழி மெய்களால் அவர்க்கு எத்தீங்கும் புரியாது நன்மையே கோருதல் வேண்டும். “நன்றிமறவேல்” என்ற ஔவையார்வாக்கும் “நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, அன்றே மறப்பது நன்று” என்ற அவர் சோதரர் மொழியும் கவனிக்கத்தக்கதாம். ஒருவர் செய்த நன்றியை மறந்து அவருக்குத் தீமையை இயற்றுவோமானால் அளவிற் பாவங்களுக்கு அடிமையாக நேரிடும். இதைமறவா திருத்தற்கே “எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை, செய்நன்றி கொன்றமகற்கு” என்று நாயனார் அறிவுறுத்தினர்.

ஆகையால் முடிவாக யோசிக்குமிடத்து நன்றியை பிரதிபிரயோஜனங் கருதாது சிவார்ப்பணமாய்ச் செய்யவேண்டு



மெனவும், ஒருவர்செய்த நன்றியை மறக்கக்கூடாதெனவும் நன்றி செய்தோர் தீமையையே மறக்கற்பாலதெனவும், பிரதியாக நன்றி செய்ய வியலாவிடினும் தீமையாவது புரியாமலிருக்க வேண்டு மெனவும், திரிகரணங்களாலும் அவர்க்கு நன்மை செய்ய விருப்பமுளதேல் அதுவே சாலச் சிறப்புடைத் தெனவும் பெறப்படுகிறது. மானிடதேக மெடுத்த நாம் மொவ்வொருவரும் இவற்றை அப்பியசிக்க வேண்டியவர்களாதலால் மனதிற்கொண்டு அவ்வாறு நடக்கவும் முயன்று வருவோமாக. கருணாகானாகிய கடவுளும் தண்ணளி புரிவாராக.

S. ஆனையப்பாச்சாரி.

---

200-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## சக்கிய சம்வாதம்.

---

ஆதவன்:—இங்ஙனம் தாம்கூறியவாறே யுக்திக்குப் பொருத்தமாயினும் சுருதியனுபவமுளதேல் அதனையுங் கேட்க அவாவுடையேன்.

பிரபோதன்:—அன்ப! ஈண்டுக்கூறும் விஷயத்தினை மிகு கவனத்துடனேற்பாயாக. சுருதி வடிவாகிய உபநிஷத்தில் கார்க்கி, மைத்திரேயி, யாதியவர்களை ஞானிகளாகவும், அவர்களின்பிரஹ்மவித்யா சம்வாதங்களும் காணப்படுகின்றன. அன்றியும் தென்னாட்டிற் றோன்றியவர்களில் ஔவைப்பிராட்டியாரும், காரைக்காலம்மையாரும், காக்கைபாடினியும், வைணவரத்தினமாகிய நாச்சியாரென்னும் சூடிக்கொடுத்தாளும், பிறரும் கூறிய வசனங்களும், அவர்களும் பிரமாணிக்கத் தக்கவகையா னிலவுவது கண்கூடாம். அன்றியும் நீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர், திருப்பாணாழ்வார், நந்தனார் முதலியவர்களும் ஞானிகளே. இதனாலன்றே சங்கராச்சாரிய சுவாமிகள் தாம்கூறிய விவேகசூடாமணியில் “மாசிலா மனுடத்தன்மை மன்னிய முமூட்சுத்தன்மை, தேசிகாசன் சேவை திறமையிம் மூன்றும்போதும்” என்று கூறியுள்ளார். இதனை வலியுறுத்துமாறு மனிடாபஞ்சகம், சோபானபஞ்சகம் ஆகிய இருநூலும் சாதி சமயப்பித்தினை யொழிக்குமாறு மனுஷ்யமாத்திரம் அதிகாரி யென்று கூறியுள்ளது. ஈண்டு அதிகாரி யென்றது ஞானாதிகாரியை யென்க.

ஆதவன்.—வேதத்தினைச் சராசரவுயிர் யாவற்றிற்கும் பொதுவென வுரைத்தீர். இதுகாறும் ஸ்திரீ புருஷர்கள் ஜாதிவேற்றுமையின்றி வேத முணரவும், ஞானத்தினை யடையவும் அதிகார முளதெனவே கூறியுள்ளீர். பிறவுயிர்களடைந்துள சரிதமுங் கேட்க விருப்பமுளேன்.

பிரபோதன்:—ஆஞ்சநேயர், கருடாழ்வார், காகவடிவாயுள்ள புஷண்டர், கிளிவடிவாகிய சுகப்பிரமம், குதிரைவடிவமைந்த அசுவத்தாமா, தும்புரு, கரடிவுருவமைந்த ஜாம்புவந்தரும், கொக்கின் வடிவாகிய குரண்டமகாரிஷியும், இடபவடிவாகிய நந்திகேஸ்வரரும், சர்ப்ப வடிவாகிய பதஞ்சலி பகவானும் பிறரும் ஞானிகளென்றே யுணரக் கிடக்கின்றன. இதனை வலியுறுத்துமாறு அமிர்தபிந்து உபநிஷத்து “மனஏவ மனிஷ்யாணாம், காரணம் பந்தமோக்ஷ:” என்று கூறும். இதன்பொருள் நினைப்பு அல்லது சிந்தனை அல்லது மனனவடிவாக வுள்ளது மனம், இதனையுடைய வுயிர்கள் மனுஷியாள். இதனைத் துணையாகப்பெற்று பந்தமோக்ஷமடைய யோக்கியயாக விருக்கிறது என்பதாம். இதனாலன்றோ பரமபதியாகிய சதாசிவத்தினருட்டிறத்தினைத் துதிக்கு முகத்தால் “பரமன

தருளுண்டாயிடிற் கேடம் பதங்கமானுடவரோ டசுரர்சுர ரனைவருக்கும் ஞானமுண்டவனே சுடர்மிகுஞானமிங்களிப்பன்" என்று சொரூபானந்தசித்தி கூறுகின்றது. இதனால் மனவுணர்ச்சியுடன் உத்தமகுணங்களைப் பெற்ற வுயிர்வர்க்கத்தாலனுட்டித்து மின்பமடையுஞ் சாதனமென்பது சித்தித்தது.

ஆதவன்:—சுவாமிக ளிதுகாறுங்கூறிய விஷயத்தினைத் தொகுத்துக்காட்ட விரும்பியுளேன்.

பிரபோதன்:—நன்று, நன்று புகன்றாய்; கூறுதும், கேள். வேதம் ஒன்றே யென்பதும் ஞானசொரூபமும் நித்தியமும், மென்றும் அழிவுபாடற்றதும் ஈஸ்வரவாசகமும் ஒரு பாஷையன் றென்பதும், நிரதிசயானந்த வடிவாகிய மோக்ஷாபேக்ஷையுடைய ஜீவர்களால் சகல சாஸ்திர விற்பன்னரும், அத்வைத சொரூப சாக்ஷாத்காரவனுபூதியின்புற்றவருமாகிய ஸ்ரீ சத்குருவாயிலாக சிசுருஷையா லுளங்குளிரச் செய்து கேட்டு மென்று மழியாவின்பமடைதற்கு இன்றியமையாத சாதன வடிவமென்பதும் லௌகீக வைதீக பாரமார்த்தீகமாகிய சகல செயலும் தொகுத்தும் வகுத்தும் விரித்துங்கூறும் அரும்பெரும் உலவாநிதி வடிவாக வுள்ளதும் யேனைய சகலகலைகளுக்கும் ஆதார பூதமாகவுள்ளதும் ஜாதிமதம் தேசம் மென்னும் பேதமின்று யாவருமே ஓதியுணர்தற்கு யோக்கியமுமாம்.

ஆதவன்:—வேதத்தினுக்கு பாஷைகாலங்களைக் குறித்தும் கேட்டுளே னாதலின் அதன் உண்மையினையும் அறியவிரும்புகிறேன்.

பிரபோதன்:—பாஷாவடிவாக வில்லாத காலத்து வேதமுணர்ந்திருந்த மகரிஷிகளால் கூறியதுவே ஸ்மிருதி யென்பதாகப் புலனாகின்றது. ஒரு புருஷன் ஒன்றினை யறிந்துளத்துவைத்திருந்து மீண்டுமொரு காலத்ததனை ஞாபகஞ்செய் (ஸ்மரித்) துக்கூறுவதுதான் ஸ்மிருதியாகலின் வேதம் பாஷாவடிவாக ஆதியிலில்லை யென்றும் ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்த நாலாயிரவருடத்துக்கு முன்னும் பின்னுமாகத் தான் எழுதியதாமென ஆங்கிலசரிதை யாராய்ச்சிவல்லுநர் வரைந்துள்ளாராதலானும், வைவஸ்வத மனுகாலத்தில்தான் இந்துமதத்திற்குரிய பலசீர்திருத்தமும் சாதிப்பிறிவும், ஆச்சிரமப் பிறிவும் பிறவும் பல இருடிகளைக் கொண்டு வகுத்ததாகவும் சரிதமுளதாதலானும், விக்கிரமாதித்தன் காலத்து நாகரலிபி கற்பித்ததாகக் கேட்கப்படுவதானும், வேதம் சுருதியென்றது சுருதம் செய்வது (கேட்கப்படுவது) என்பதானும், வேதம் அளவற்றனவாக விருத்தலை விபாகஞ்செய்தகாரணத்தினாலே வேதவியாசரென வாதராயணருக்குப் பிரதிநாமமுளதாதலானும், வேதம் காலத்தினால் வரையறுக்கப்படாததும் ஒருபாஷை வடிவாக வில்லாததுமாம். (தொடரும்.)

பொன்மையை விரும்பும்
ஓர் சாது.

---

202-வது பக்கத்தின் தொடர்ச்சி.

## தென்னிந்திய சிலாசாஸனங்கள்.

பொதுவாக சேரி என்னும் ஊர் என்பதற்குப்பிரதிமொழியாகும். ஓர்வகுப்பினர் வசிக்கும் இடம் அல்லது ஊர் என்பதை உணர்த்தற்கு அப்பதத்திற்குமுன் அந்த ஜாதியரின் பெயரை யிடுவது வழக்கு. ஆனால், தற்காலம் சேரி யென்னும் பதம் இழிந்த வருணத்தோர் வசிக்கும் இடங்களுக்குமட்டுமே பிரயோகிக்கப்பட்டு வருகிறதெனினும் முற்காலத்தில் 'பார்ப்பனச்சேரி' என்றும் இடைச்சேரி யென்றும்



இன்னுமநேக சேரிகள் வழங்கிவந்ததாகத் தொன்னூல்முகத்தா லறிகிறோம். ஆகையால் 'கம்மாணச்சேரி' எனும் பதம் கம்மாணர் வசிக்குமிடம் அல்லது ஊர் எனப் பொருள் தரும்.

நிற்க, 'கம்மாணர்' என்னும்பதம் கம்மாளர் என்னும் பதத்திற்குப் பிரதி மொழியன்றென முன்னமே மொழிந்துளோம். 'வெள்ளாண் கிரந்தமும் பார்ப்பான்தமிழும் விடவிழலே' என்று உலக வழக்கில் வரும் ஓர் பழமொழிக்கிணங்க 'பார்ப்பான்தமிழ்' எனப்படும் தமிழ்பாஷைக்குத் தாய்நூலாகிய சேந்தன்திவாகரம்,மக்கட்பெயர்த்தொகுதியில் "கம்மியர் யவனர்கொல்லர் தபதியர் அக்கசாலையர்-சிப்பியரதனொடு,வித்தகர் வித்தியர் புனைவரறிவரென் றத்தகு கம்மாளர் பெயரென வறைவர் எனவும், தபதியர் மரவினையர் கன்னுவர் கஞ்சக்காரர் கன்னார்எனவும், செங்கொல்லர் தட்டார் பொன்வினைசெய்வோர்எனவும், சூடாமணி நிகண்டு மக்கட்பெயர்த் தொகுதியில் "சிற்பரோ வியரேமோகர் சித்திரகாரர் நாமஞ், சிற்பியர் துவட்டாவோவர் தபதியர்சிறப்பின்மிக்க,அற்புதர்யவனர்கொல்ல ரக்கசாலையர் புனைந்தோர்,கற்பில்கம்மியரேகண்ணுள் வினைஞர்கண் ணாளர்நாமம்" என்றும், "கருமரே மனுவர்கொல்லர் காட்டியநாமாகும், மரவினை யாளர்மற்றை மயனொடுதபதிதச்சர் புரியும்பொன் செய்யுங்கொல்லர் பொன்வினைமாக்கட்டட்டார்உலைகெழுசொன்னகா ரக்கசாலையருமோதும்" எனவும், "தருமுறைதெரிந்தசிற்பா சாரியர்மண்ணீட்டாளர், பொருளினை யுருக்குந்தட்டார் பொன்செய்யும்புலவரென்ப, பெருகியபணி தட்டார்தம் பேர்கலந்தருநர்தாமே, வருமுறைமுத்தம்கோப்பார் மணிகுயிற்றுநரென்றுரே" எனமிக விரிவாகக் கூறப்பட்டுள்ளவற்றில் "கம்மாணர்" என்னும் பதம்காணப்படாமையாலும், அச்சொல் தற்காலம் உலகவழக்கில் மருவியாகிலும், திரிபடைந்தேனும் வாராமையாலும், குழூக்குறியாகவேனும், உபயோகிக்கப் படாமையாலும், அஃது கம்மாளரைக் குறிக்குமென்ற முடிபுரை அறியாமைமேலீட்டால் அறையப்பட்டதெனக் கொள்க. இன்னும் டாக்டர் எட்கார்ட் தர்ஸ்டன் என்பவரால் எழுதப்பட்டுள்ள 'தென்னிந்திய ஜாதிவரலாறு' என்னுமரிய கிரந்தத்திலும், கம்மாளர்க்கு 'கம்மாணர்' எனும் மற்றொரு நாமமுண்டெனக்கூறக் கண்டிலேம்.

நிற்க, அப்பதம் பின்னை யாரைக்குறிக்குமெனவினவில், அதனை ஒருவாறு ஊகத்தால் குறிக்கலாமேயன்றி உண்மையாய் உரைப்பதியலாது. 'பறைச்சேரியும் கம்மாணச்சேரியும், சுடுகாடும் உள்ளிட்டு' என அச்சிலாசாசனம் கூறுவதால், பறையர் போன்ற ஓரிழிந்த வருணத்தோர் வசிக்குமிடமெனவும்,சுடுகாட்டையொட்டிக் கூறியதால் நாம் கொண்ட இக்கருத்து தப்பிதமல்லவென்றும் பெறப்படுகின்றது. மேலே கூறிய தர்ஸ்டன் துரை யவர்கள் இயற்றியுள்ள நூலில் பறையருக்குச் சகோதரவர்க்கத்தைச் சார்ந்தவரும்,நன்காட்டுக்கு மீளாப்பயணமாகச் செல்லுவோர்களுக்கு இன்றியமையாத இன்னிசைக் கருவிகளையும், பறைகளையும் முழக்கிடும் 'கம்மலர்' என்றொரு ஜாதியும் இத் தென்னாட்டில் இன்னும் இருந்துவருவதாகக் கூறியிருப்பதாலும், இன்னு மிவைபோன்ற சப்தக் குறைவுடையவும், நீட்டல், குறுக்கல்முதலிய விகாரங்களை அடைந்து 'கம்மாணர்' எனச் சப்திக்கக்கூடிய பெயர்களையுடைய பல தாழ்ந்த வருணத்தவர்களின் பெயர்களை இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளவாற்றாலும், கம்மாளர் வசிக்குமிடங்களுக்கு 'அக்கசாலை' எனவும், 'ஆவேசனம்' எனவும், தனிப்பெயர்கள் சூடாமணிநிகண்டு, திவாகரம் முதலிய நூற்களில் கூறப்பட்டிருப்பதாலும், "அக்கசாலைபிள்ளையார் தெரு" என பற்பலஊர்களில் கம்மியர்வசிக்கும் தெருக்களுக்குப்பெயரிடப்பட்டு, தற்காலத்தும் அப்பதம்கையாளப்பட்டு வருவதாலும், சிலாசாஸனத்தில் 'கம்மாணச்சேரி' என்பது கம்மாளர் வசிக்குமிடங்களைக் குறிக்குமென டாக்டர் ஹுல்ஸ் எழுதியுள்ள "தென்னிந்தியசிலாசாஸனங்கள்" என்னும் புஸ்தகத்தில் முடிபுரை கூறியது எட்டுணையும்பொருத்தமாகா. (தொடரும்)

## நம் சகோதரர்களின் மாட்சி.

### கூடலூரில்

### ரெட்டிஜாதிச் சிறுவர்களுக்கு விடுதிச்சாலை.

கூடலூர், ஆனரபில் ராவ்பகதூர் சுப்பராயலு ரெட்டியாரவர்கள் ஆதரவின் கீழ் அவ்வூர் ரெட்டியார் சங்கம் மெச்சத்தக்கபடி நல்ல வேலை செய்துவருகின்றது. சமீபத்தில் ரூ 11,500ல் விசாலமான தோட்டத்தில் இருக்கப்பட்ட ஓர் பங்களாவை கல்விகற்கும் அந்த ஜாதிச் சிறுவர்களின் விடுதிச்சாலைக்கென அச்சங்கத்தார் வாங்கினார்கள். கூடலூரிலுள்ள இரண்டு ஹைஸ்கூல்களிலுள்ள சுமார் 40 ரெட்டிச் சிறுவர்கள் இக்கட்டிடத்தில் வசித்துவருகிறார்கள். இவர்கள், வாசிப்பு விஷயத்திலும், சரீர சௌக்கியத்திலும், அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இக்கட்டிடம் வாங்கிவிடப்படவே இன்னும் அதற்கு வேண்டிய மூலதனம் சேர்ப்பதற்கான பிரயத்தனங்கள் செய்து வருவதாகத் தெரிகிறது. திரவிய வந்தர்களான ரெட்டி ஜாதியார் நிறைந்திருக்கும் இவ்வூரில் குறித்ததற்குமேல் அதிக தொகை வசூலிக்கப்படக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோல் ஒவ்வோர் ஜாதிச் சிறுவர்கள் கஷ்டப்படாமல் கல்வி கற்கும்படியான காரியங்களை அந்தந்த ஜாதியார் செய்வதன்றோ சிறந்த தர்மமாகும்.

* * *

### பம்பாய் வர்த்தக சங்கத்தார்.

நாணய வரிசையில் கட்டுப்பட்டு நடக்கும் பம்பாய் கம்மியர்களில் சிலர் தூண்டுதலின் பேரில், ஷை நகரத்தின் வர்த்தக சங்கத்தார் பம்பாய் கவர்ன்மெண்டுக்கு ஓர் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதில் தொழில் நாணயமற்ற சிலர் வெள்ளி, பொன் வேலைகளில் கலப்பிடஞ்செய்து தொழிலுக்கே ஓர் அகௌரவத்தை விளைவித்து விடுவதால் இனி அவ்விதம் நடவா வண்ணம் ஒவ்வோர் சர்க்கார் தங்கசாலைகளில் ஒரு பரிசோதனை டிபார்டுமெண்டை ஏற்படுத்தி அங்கு வெளியில் செய்யப்படும் வெள்ளி, தங்கசாமான்களை பரீட்சை செய்து அவ்வித கலப்பிட மற்ற சாமான்களின் பேரில் சர்க்கார் முத்திரை யிட்டு வரவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இப்படி இடும் முத்திரைக்கு ஹால் மார்க்கு என்று பெயர். இம்முறை இங்கிலாந்தில் கட்டாய விதிக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆரம்பத்தில் இவ்விதியை இந்தியாவில் பரீட்சார்த்தமாக வைத்துப் பின்பு கட்டாயப் படுத்தப்பட வேண்டுமென்றும் அச்சங்கத்தார் கேட்டுக் கொள்கிறார்கள். இவ்வித ஏற்பாடு நம் ராஜதானியிலும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால் நம் குலத்தவர்களின் நாணயத்தை சந்தேகிக்க இடமிராது, இந்த ஜில்லாவில் ஏராளமான வெள்ளி சாமான்கள் அன்னியர் மூலதனத்தைக் கொண்டு செய்யப் படுவதோடும் அவர்கள் லாபம் அடையும் வண்ணம் நம்மவர் நல்ல வெள்ளியுடன் செம்பைக் கலந்திருக்கும் படியாக கட்டாயப் படுத்தப் பட்டு வருகிறார்கள். இந்த உண்மையை அறியாத பலரும் தொழிலாளர்களை நிந்திக்கிறார்கள். இந்த ஜில்லா வாசிகளாயுள்ள நம்மனோர்கள் ஒவ்வோர் ஊரிலும் கூட்டம் கூடி இந்நாட்டில் செய்யப்படும் பொன், வெள்ளி சாமான்களை பரீட்சித்து சர்க்கார் முத்திரை யிடும்படியான ஓர் இலாகாவை ஏற்படுத்தித் தரக் கேட்டுக் கொள்வது உசிதம். இவ்வித ராஜபாட்டையை அநுசரிப்பதால் நம் குலம் அன்னியரின் வீண் நிந்தனையின்றும் மீளுமன்றோ?

* * *



## சுகாதார விளக்கம்.

### ஈச்சங்கொட்டைகளி னுபயோகம்.

இந்நாட்டில் பேரீச்சை, நரி ஈச்சை முதலிய ஈச்சமரங்கள் இப்பொழுது காய்க்கும் காலமாகையால் அப்பழங்களுள்ளிருக்கும் கொட்டைகளின் உபயோகத்தை இங்கு எழுதுகிறோம். நன்றாய் முதிர்ந்த கொட்டைகளைக் காயவைத்து, கல்லுரலிலாவது, இரும்புரலிலாவது இடித்து மாவாக்கி, அந்த மாவில் ரொட்டி முதலிய தின்பண்டங்களைச் செய்து சாப்பிட தேகத்தின் இரத்த விர்த்தி யதிகப்படுமென்று சொலப்படுகிறது. காபூல், முதலிய தேசங்களில் இக்கொட்டை களிலிருந்து உற்பத்தியாகும் மாவினால் செய்த ரொட்டி முதலிய தின்பண்டங்களை கோதுமையால் செய்தவைகளை விட அதிக விலைக்கு விற்று லாபம் பெறுகிறார்கள். நம் தேசத்தில் இந்த மரங்கள் ஏராளமாயிருந்தும் அவைகளின் முழு உபயோகத்தை நாம் பெறுகிறதில்லை. ஆகையால் புதியதொழில்களில் ஊக்கமுடையவர்கள் இம்மாவுகளை உற்பத்தி செய்து உபயோகத்திற்குக் கொண்டுவரும் மார்க்கத்தைத் தேடுவார்களாக.

### துளசியின் ஜீரணசக்தி.

அஜீரணத்தால் அவஸ்தைப் படுவோர் காலையில் தந்த சுத்தி செய்தவுடன் 5-6 துளசி இலைகளை வாயிலிட்டு நன்றாய் மென்று கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தை உட்கொண்டால் அஜீரண நோய் 15 தினத்திற்குள் அகன்றுவிடும். நல்ல பசி உண்டாகும். துளசி இரண்டுவிதம். சிவ துளசி என்பது வெள்ளை நிறமுடையது. விஷ்ணு துளசியென்பது கருநிறமுடையது. விஷ்ணு துளசி இலை பெரிதாகவும் அதிக சார் உள்ளதாகவு மிருக்கும். ஆகையால் அதையே உட்கொள்வது நலம். இவ்வித சுலப மார்க்கங்கள் சுகாதாரத்திற் கேற்றவைகளல்லவா?

### பச்சை திராட்சையை காப்பாற்றும் விதம்.

பச்சை திராட்சைப்பழங்களை இக்கோடையின் வெப்பம் தணிப்பதற்காக நாம் விசேஷமாக உபயோகப்படுத்தி வருகிறோம். இப்பழங்கள் சில நாட்களில் அழுக ஆரம்பித்து விடுகின்றன. இவைகளை அழுகாமல் கொஞ்சகாலம் காப்பாற்றவேண்டுமானால், அவைகளை காற்றோட்டமான அலமாரிகளில் வைக்கவேண்டும். அப்படிவைப்பதற்குமுன் அந்த அலமாரி பலகையின்பேரில் ஒரு விரல் கனம் நீற்றுப்போனசுண்ணாம்பையேனும், சீமைச்சுண்ணாம்பு தூளையேனும் பரப்பி அதன் பேரில் ஒரு சல்லாத்துணியை விரித்து அதன்மேல் பழங்களைப் பரப்பவேண்டும். இந்த முறையைக் கையாடுவதால் அப்பழங்கள் சீக்கிரம் கெடுவதில்லையாம்.

## விவசாயக்கொத்து.

### வேர்க்கடலை என்னும் மணிலாக்கொட்டை.

நம் நாட்டில் வேர்க்கடலை விசேஷமாகப் பயிரிடப்பட்டு வருகிறது. அது நமது நாட்டில் தொன்று தொட்டு பயிரிடப்பட்டு வருகிறதென்றாலும் அந்தப் பயிர் வெளி நாட்டிலிருந்து இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டதென பலர் அபிப்பிராயப் படுகிறார்கள். சிலர் அது அமெரிக்கா தேசத்தில் முதலில் உற்பவித்ததென்றும், வேறுசிலர் அது ஆபிரிக்கா தேசத்துப் பயிர் என்றும் சொல்லுகிறார்கள். டாக்டர் டைமாக் என்பவர் அந்தப் பயிர் சீனா தேசத்து வழியாக இந்தியாவிற்கு எட்டியதென்றும் சொல்லுகிறார்.

அது எப்படி யிருந்தபோதிலும் அப்பயிர்த்தொழில் இந்தியாவில் முக்கியமாய் தென்னிந்தியாவிலும், பம்பாயிலும் ஏராளமாகப் பயிரிடப்பட்டு வெளிதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இந்த பயிர்த்தொழில் வெகு சுலபசாத்தியமானது. இந்த சாகுபடிக்கு மணல் பாங்கான பூமி அவசியம். கடின மண்ணுடைய பூமிகளிலிருந்து வேர்க்கடலையை வெளிப்படுத்துவது கஷ்டம். இப்படியிருக்க, சாம்பல், ஆட்டுப்புழுக்கை முதலிய எருக்களே மிகுந்த பலன் தரக்கூடியவை. இந்த பயிருக்கு நிலத்தை ஆழ உழுவதும், நன்றாய் பரம்படிப்பதும் அவசியம். ஜூன் மாதத்தில் பெய்கிற முதல் மழையுடனாவது, ஆகஸ்டு மாதத்திலாவது இப்பயிரிடலாம். இப்பயிருக்கு அதிக ஜலம் தேவையில்லை. விதைகளை 3 அல்லது 4 அங்குல ஆழத்திலிடவேண்டும். அதன்மேல் ஒரு அங்குல கனமுள்ள மண்ணால் பரப்பவேண்டும். செப்டம்பர் மாதத்திலேயே இக்கொடிகள் பூர்க்க ஆரம்பித்து விடுகின்றன. அந்த காலங்களில் ஓர்வகை செந்நிற எரும்புகள் ஏராளமாக இச்செடிகளினிடையில் காணப்படுகின்றன. இவ்வேர்க்கடலைப்பயிரானது 5, 6, மாதங்களில் பலன்தருகின்றன. ஒரு ஏக்கர் நிலத்திற்கு 20 அல்லது 30 படி விதையே போதுமானது. மாசூல் 35 மணங்கு கிடைக்கும். இப்பயிர்த் தொழில் செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி முதலிய ஜில்லாக்களில் விசேஷமாக விருக்கிறது.

இக்கொட்டைகள் இந்தியாவில் உணவு பொருளாயும், எண்ணெயிரக்கவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஐரோப்பியர் இக்கடலையைக்கொஞ்சம் உப்புசேர்த்துச்சாப்பிடுகிறார்கள். நம் ஜனங்கள் கொஞ்சம் வெல்லம்சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். இக்கொட்டைகளை அதிகமாகச் சாப்பிட்டால் வாந்தி, தலை கிறகிறுப்பு முதலியவைகளை உண்டுபண்ணிவிடும். ஒருபடி கடலையைச் சாப்பிட்டு அவ்வித உபத்திரவமில்லாமலிருக்கவேண்டுமானால் உடனே கொஞ்சம் மோர் சாப்பிடவேண்டியது.

வேர்க்கடலையின் தழைகள், ஆடுமாடுகளுக்கு நல்ல உணவாகிறது. இத்தழையைத் தின்னும் கறவைமாடுகள் அதிகமாகப் பால்கொடுக்கும். ஆடுகள் இத்தழைகளால் கொழுக்கின்றன. வேர்க்கடலை எண்ணை, சோப்புகள், மெழுகுவத்திகள் முதலியவைகள்செய்ய உபயோகப்படுத்தப்பட்டுவருகின்றது. இயந்திரங்கள்சிக்குப்படாமலும், தேய்வடையாமலுமிருக்கும்படி ஊற்றுவதற்காகவும் உபயோகப் படுத்தப்படுகிறது. எள் எண்ணையை கலப்பிடம் செய்வதற்கும் உபயோகப்படுகிறது. மருந்துகள் செய்யவும் உதவுகின்றது. மருந்துவெண்ணைகள், பிளாஸ்திரிகள் முதலியவைகள் செய்வதற்கு மிகுதியாக உபயோகிக்கப்படுகிறது. 41 ராத்தல் இடையுள்ள ஈயவெள்ளையை பிளாஸ்திரி செய்வதற்கு 90 ராத்தல் எண்ணைவேண்டியிருக்கிறதாம். ஆகையால் பார்சிலோனியா, மார்செலீஸ், ஜினோவா முதலிய இடங்களுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப்பயிர்த்தொழிலையும், எண்ணையால்செய்யுந்தொழிலையும், நமதுநாட்டில் விசேஷமாகச்செய்தால் ஏராளமான லாபம்கிடைக்குமென்று நம்புகிறோம்.

***

### அந்துகளை அழித்தல்.

தானியங்களில் அந்து உற்பத்தியாகி அவைகளை சேதப்படுத்துவதை எல்லோருமறிவார்கள். அவைகளைத் தொலைப்பதற்கு இரண்டுவழிகளுக்கு. ஒன்று தானியங்களைநன்றாய் ஈரம் போகக் காயவைத்தபின் சேர்கட்டுதல். மற்றொன்று அப்படிகாய்ந்த தானியங்களை சேர்கட்டும்போது இடையிடையே. கொஞ்சம். கஞ்சாங்கோரை இலைகளைப்போடுவதே. இப்படிக் கட்டப்படும் சேர்களில் அந்துகள் உற்பத்தியாவதில்லையென கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

***



## ஆயுர்வேத சாரம்.

### தலைவலிக்கு சாந்தி.

(1) கண்டங்கத்திரி இலைச்சாற்றில் அல்லது நியாழத்தில் எண்ணெய் கலந்து காய்ச்சிப் பூசிவரவும் (2) ஜாதிபத்திரியை உலர்ந்திநசியமிடவும். (3) தாளிச்சபத்திரியை காடியிலரைத்துப் பூசவும். (4) கொத்துமல்லி விதையை சந்தனத்தோடரைத்துப் பூசவும் (5) திருநீற்றுப் பச்சிலையை முகரவும். (6) கருஞ்சீரகத்தை வெந்நீரிலரைத்துப் பூசவும். (7) நொச்சியிலைச் சாற்றை பற்றுப்போடவும். (8) மிளைப்பாலுடன் குங்குமப் பூவைக்கலக்கி துணியில் நனைத்து நெற்றியில் போடவும். (9) ஓம உப்புடன் கொஞ்சம் கற்பூரத்தை உள்ளங்கையில் தேய்த்து அதிலிருந்து உண்டாகும் தைலத்தை நெற்றி, புருவங்களில் தேய்க்கவும்.

***

### காது வலிக்கு சாந்தி.

(1) துளசிஇலையை நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி காதில் விட்டு வரவும் (2) சாம்பிராணியை நல்லெண்ணெயில் காய்ச்சி காதில் விடவும் (3) பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, ஆகிய இவைகளை நல்லெண்ணெயில் சேர்த்து காய்ச்சி காதில் விடவும் (4) மிளகாய்ப் பழத்தில் கொஞ்சம் பட்டை சாராயத்தை அடைத்து வைத்திருந்து பின்பு காதில்விட்டு பஞ்சால்மூடவும். (5) சுடுசாம்பலை பொட்டணம் கட்டிக்கொண்டு காதில் ஒற்றவும்.

***

### கண்வலிக்கு சாந்தி.

கோழிமுட்டை வெள்ளைக் கருவில் படிகாரத்தைத் தூள் செய்து போட்டு கோழிஇறகைக் கொண்டு கடைந்து அதில் வரும் நுரையை கண் புருவத்தில் போட்டுவர குணமாகும்.

***

### மார்வலிக்குச் சாந்தி.

(1) திருநீற்றுப் பச்சிலைச் சாற்றில் சர்க்கரை சேர்த்து சாப்பிடத்தீரும் (2) பெருங்காஞ்சொறி விதையை வெள்ளாட்டுப்பாலில் காய்ச்சி குடிக்கவும். (3) முற்றின தேங்காயைத் திருகிய பூவுடன் கொஞ்சம் உப்பு சேர்த்து வறுத்து ஒற்றடம் கொடுக்கவும்.

***

### விலாவலிக்குச் சாந்தி.

கலைமான் கொம்பை ஜலத்தில் உரைத்து சுண்டக்காயளவுஉட்கொண்டு விலாவிலும் பற்றுப் போடத் தீரும்.

***

### இடுப்பு வலிக்கு சாந்தி.

ஜாதிபத்திரியை தேனில் அரைத்துப் பூசத்தீரும்.

***

### தேகவலிக்கு சாந்தி.

துத்திஇலையைக் கியாழம் செய்து சாப்பிடத்தீரும்.

***

### சூல் வலிக்கும், வயிற்றுவலிக்கும் சாந்தி.

மணித்தக்காளி இலைச்சாற்றை முறித்து சர்க்கரை சேர்த்து உட்கொள்ள குணமாகும்.

***

### பல்வலிக்கு சாந்தி.

(1) காட்டுக்கொட்டைப் பாலையிலையை கியாழமிட்டு அக்கியாழத்தை கொப்பளிக்கவும். (2) உப்பு, மாசக்காய், கடுக்காய் சமன் சேர்த்துப் பொடித்து பல்விளக்கிவரவும். சாம்பிராணி, உப்பு, இவைகளைப் புடமிட்டு பல்விளக்கவும்.

***

### உண்ணாக்கு வலிக்கு சாந்தி.

நாயுருவியை கியாழம் செய்து கொஞ்சம் நாழிகை தொண்டையில்வைத்திருந்து பின் கொப்பளித்து உமிழவும்.

***

ஆயுர்வேத பண்டிதர்.

## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின் கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையுங்கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

### பிழைதிருத்தம்.

நமது 7.வது சஞ்சிகை 211-பக்கத்தில் "நெருப்பில்வைத்து ஊதியெடுக்கும் பத்தவைப்பு பொடிகள் சேர்மானம்" என்னும் அட்டவணையில் தங்கம், இரும்பு, வெள்ளி முதலிய தலைப்பில் 'இரும்பு' என்பதற்கு பதிலாக 'எரம்' என்று திருத்திக் கொள்க. எரமென்பது நம்மவர்கள் கூட்டிக்கொள்ளும் பொன்பொடி மட்டம். இதில் பொன்னும், வெள்ளியும், செம்பும் வேலைக்கு தக்கபடி சேர்க்கப்பட்டிருக்கும்.

***

எஃகு சாமான்களை சமமாக காய்ச்சுதல் கடினமானதால் கீழேகண்டபடி காரீயத்தையும் வெள்ளீயத்தையுஞ்சேர்த்துஉருக்கிக்கொண்டு அந்த ஆயுதங்களை அந்த சேர்மானத்தில் குறிப்பிட்ட நிறமுண்டாகும் வரையில் வைத்திருந்து பின்எடுத்து துவைச்சல் போடவும்.

| சேர்மானப் காரீயம். | சேர்மானப் வெள்ளீயம் | சூட்டளவு F. | ஆயுதம். | துவைச்சல் நிறம். |
|---|---|---|---|---|
| 7 | 4 | 220° | ஈட்டிகள் | சற்றுவெளுத்தமஞ்சள். |
| 2 | 1 | 228° | நாவிதன் கத்தி | வைக்கோல் |
| 8½ | 4 | 232° | பேனகத்தி | பழுத்தவைக்கோல் |
| 7 | 2 | 254° | கத்தரிக் கோல் | சிவந்த மஞ்சள் |
| 19 | 4 | 265° | தச்சர் ஆயுதங்கள் | ஊதா |
| 12 | 1 | 288° | பட்டாகத்தி கடியாரவில் | பளபளப்பான நீலம் |
| 25 | 1 | 292° | ஜவ்வாள் தமர்கள் | ஆழ்ந்த நீலம் |
| கொதிக்கும் ஆளிவிரை எண்ணெய் | | 316° | ரம்பங்கள் | கருநீலம் |

### பித்தளை சேர்மானங்கள்.

| நெம்பர். | செம்பு. | நாகம். | காரீயம். | வெள்ளீயம். | உபயோகம். |
|---|---|---|---|---|---|
| 1 | 17 | 33 | — | — | வெள்ளை பித்தளை. |
| 2 | 5 | 3 | — | 10 | 32-பாகம் நிமிளையும், பொத்தான் செய்ய. |
| 3 | 15 | 70 | — | — | 6-பாகம் நிக்கில். |
| 4 | 71 | 24 | 3 | 2 | பிரஞ்சுக்காரர் உயர்ந்த பித்தளை. |
| 5 | 72¾ | 27 | ¼ | — | பளபளப்பான மஞ்சள் |
| 6 | 7 | 3 | — | — | பித்தளை தகடுகம்பி. (6–9) |
| 7 | 19 | 9 | — | — | |
| 8 | 67 | 33 | ½ | ½ | |
| 9 | 32 | 10 | — | 1½ | |
| 10 | 6 | 4 | — | — | தகடு பிடிக்கலாம், காய்ப்பில் வேலை செய்ய வேண்டும். |
| 11 | 82 | 5 | — | 13 | டிராயிங் ஆயுதங்கள். |
| 12 | 15 | — | 1 | 9 | புகைவண்டி விசில். |
| 13 | 81 | 2 | — | 17 | ,, ஆழ்ந்ததொனி |
| 14 | 18 | 7 | — | — | குண்டூசி, கம்பி |
| 15 | 82 | 15 | — | 3 | இல்டு போடப்படும் பித்தளை நகைகள் செய்ய. (15–19) |
| 16 | 64½ | 32½ | — | 2½ | |
| 17 | 53 | 47 | — | — | |
| 18 | 90½ | 8 | 1½ | — | |
| 19 | 94 | 6 | — | — | |
| 20 | 8 | 1 | — | — | டச்சுக்காரர் தங்கம். |

***

எஃகு சாமான்களை சிவக்கக்காய்ச்சி தண்ணீரில் சாதாரணமாய் துவைச்சல் போடுவது வழக்கம். விதைகளிலிருந்து எடுக்கும் எண்ணைகளில் முக்கியமாய் நல்லெண்ணையை உபயோகிப்பதுண்டு. காரீயத்தை உருக்கி அதில் துவைச்சல் போடுவதும் உண்டு. தமர், அல்லது துளைதிருகும் கருவிகளை எலிக்குஞ்சு நிறமாகக்காய்ச்சி பாதரசத்தில் (Mercury) துவைச்சல் போடப்படுகின்றன. வெட்டாயுதங்களைகாய்ச்சி ஓர் துண்டு இரும்பு தகட்டின்மேல் வைத்து பின் சமமாக கலந்துவைக்கப்பட்ட சல்பூரிக் ஆஸிட் தண்ணீரில் பதனமாய் நனைத்து துவைச்சல் போட அவைசக்கிமுக்கி கல்லைப்போல கடிசுஉடையன வாகின்றன.

***

### தங்கம் போன்ற சேர்மானம்.

| உலோகம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிளாட்டினம் | 4 | 7 | 16 | 2 | — | 32 | — | — | 4 |
| தங்கம் | — | — | — | — | 2 | — | — | — | — |
| செம்பு | 1 | 16 | 7 | 3 | 9 | 65½ | 83 | 88¾ | 2½ |
| வெள்ளி | 3 | — | — | 1 | 1 | 2½ | — | — | — |
| நாகம் | — | 1 | 1 | — | — | — | 10 | 10½ | 1 |
| காரீயம் | — | — | — | — | — | — | — | — | 1½ |
| வெள்ளீயம். | — | — | — | — | — | — | 7 | ¾ | 2 |

இதில் ஒவ்வொரு சேர்மானத்தையும் உருக்கும்போது வழக்கம்போல குகையை கரிப்பொடியால் மூடி உருகி தெளியும் போது வெண்காரம் போட்டு ஊதி கட்டிவிடவும். 2-வது முறை 16-காரட் தங்கத்திற்குச் சமானமாயும் கலப்பில்லாத நைட்டிரிக் ஆஸிட் கொதிக்கும்போது கரையக்கூடியதாயு மிருக்கிறது. 5-வது முறை 4-காரட் பொன்னிற்கு சமானம்; இதில் மட்டசுவேலைகள் செய்யலாம். 6-வது முறை 9-காரட் தங்கம்போலிருக்கும். 7-வதும் 8-வதும் சிவந்தமஞ்சள் நிறமாயிருப்பதனால் பொத்தான்கள் செய்யப்படுகிறது. 9-வது முறையில் கரிப்பொடியும், வெண்காரமு மில்லாமல் நவச்சாரமும் பொட்டுலுப்பும் போட்டுருக்க வேண்டும்.

***

### தங்க நகைகள் செய்து முடித்த பின் பளபளப்படையச் செய்ய:—

பொடிபோட்டுஊதி பத்தவைத்த நகைகளை முதலில் படிகாரத் தண்ணீரில் கொதிக்கவைத்து சுத்திசெய்த பின், 3-பாகம் பொட்டுலுப்பு, 1-பாகம் படிகாரம், 1-பாகம் உப்பும் சேர்த்து போதுமான தண்ணீரில் கரைத்து, நெருப்பில் வைத்து சுண்ட உப்பு சிவந்த மஞ்சள் நிறமாகுகையில் கொஞ்சம் தண்ணீர்விட்டு கரைத்து, சிசாவில் வைத்துக்கொண்டு அதில் அவற்றை நனைத்து வெதுப்பி சுத்தி செய்து பின் மெருகிடவும்.

***

## பலகுறிப்புகள்.

ஆனந்தவருடப்பிறப்பு மகோற்சவத்தை நம் சபையார்வெகு விமரிசையுடன் கொண்டாடினர். அன்று வேதாத்தியயனபாடசாலையும், சபாமண்டபமும் நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. குறித்தகாலத்திற்கு முந்தியே சுமார் 500 ஜனங்கள் சேர்ந்திருந்தனர். சபையின் வைஸ் பிரசிடெண்டு ஸ்ரீ தி. மு. முக்கண்ணாச்சாரியார் சபையோர்களுக்கும், அன்று மீட்டிங்குக்கு சபாநாயகராக விருக்க கருணையுடனிசைந்த மிஸ்டர். T. V. வெங்கடாசல அய்யர் அவர்களுக்கும், உபந்நியாசர்களாக குறிக்கப்பட்டிருந்த உத்தமர்களுக்கும் நல்வரவு கூறினர். முதல் பிரசங்கம். கோவிலூர் ஸ்ரீமத் ராமகிருஷ்ணசுவாமிகளால், பக்தி என்னும் விஷயம்விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இரண்டவது பிரசங்கம். 'மறுபிறப்புண்டா?' என்னும்விஷயம் சதாவதானம் ஸ்ரீ தெ. கிருஷ்ணசாமிப் பாவலரவர்களால் வெகு இனிமையாகப் பிரசங்கிக்கப்பட்டது. மூன்றுவது பிரசங்கம் 'ஒழுக்கம்'என்னும் அரியவிஷயம் மணியர்

ச்சி, ஒட்டாநத்தம், ஸ்ரீ ஜெகவீரராம பாண்டியரவர்களால் கல்லும் கரைந்துருகும் வண்ணம் பிரசங்கிக்கப்பட்டது. குறித்த காலவரைக்கு மேலும் பிரசங்கிக்கும்படி வெகு ஜனங்களாலும் கேட்டுக்கொள்ளப்பட்டபடியால் மேற்கூறியகனவான் தம் திரேகசிரமத்தைப் பெரிதும்பாராட்டாது பிரசங்காமிர்த தாரைபொழிந்தனர். இதற்குள்மணியோ 9-ஆகிவிட்டது. ஆகையால், அதற்குமேல் குறிப்பிட்டிருந்த மற்ற இரண்டு முக்கிய பிரசங்கங்களை மறுவாரத்திற்கு நிறுத்திவைக்கலாயிற்று. பின்பு, புதுவருடப்பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது. சபாநாயகர் பின்பு தமது பிரசங்கத்தை முடித்து, நம்சபையார்களின் ஊக்கத்தை வியந்து கொண்டாடி, நம் முயற்சிகள் மேன்மேலும் தழைத்தரவேண்டுமென்றும் தம் ஆசியைக்கூறியபின் கரகோஷ, மாலை மரியாதைகளுடன் அன்று காரியங்கள் இனிது முடிவுபெற்றன.

* * *

சென்றமாதச் சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தபடி, நமது சபை, வேதாத்தியயன பாடசாலை, பத்திரிகை முதலியவைகளின் அபிவிர்த்தியைக் கோரினவராய் ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார், இந்தமாதம் 5உ சுற்றுப்பிரயாணம்செய்யப் புறப்பட்டுவிட்டார். இப்பொழுது திருவாரூருக்குச் சென்று நமது குலாபிமானிகளைக் கண்டுகொண்டு அங்கிருந்து நாகப்பட்டணம் சென்றிருக்கின்றார்.

* * *

இந்த சஞ்சிகையில் நம்சபையின் சட்டதிட்டங்களை நம்மனோர் அறிந்துகொண்டு, குலோத்தாரண விஷயங்களில் நம்முடன் கூடி யுழைப்பார்களென்ற நம்பிக்கையுடன் பிரசுரித்திருக்கின்றோம்.

* * *

கடந்தமாதச் சஞ்சிகையில் இரும்புத் தொழிலைப்பற்றி விசாரித்தோம். இந்தசஞ்சிகையில் மரவேலை சம்பந்தமான பலவிஷயங்களையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அவ்வியாசத்தினிடையில் வரும் வார்னீஷ், மெருகெண்ணை, அரக்குவர்ணம் பூசுதலாகிய பல முக்கியதொழில்களின் விவரங்களை ‘தொழிற்குறிப்பு’ என்னும் பகுதியில் இனி எழுதப்படும். அவைகளை நம்மனோர் கவனிப்பதவசியம்.

* * *

சிற்பசாஸ்திரப் பிரவீணரும், ஜோதிடசாஸ்திர நிபுணரும், தமிழ்பாஷா வல்லுநருமான, நாகர்கோவில், ஸ்ரீ முத்தாச்சாரியாரவர்கள், நமதுசபையின் நன்மைக்காகக் கருதி நம்மனோர் கவனித்தொழுகவேண்டிய சில விதிகளையும், சில அரியபெரிய விஷயங்களையும் பிரசங்கரூபமாக எழுதியுள்ளார்கள். அவ்விஷயங்கள், இப்பத்திரிகையில் இனி வெளிவரும்.

* * *

வெளியூர் நண்பராயுள்ள நம்மனோர்கள், தங்கள் சந்தாதொகைகளை “விஸ்வகர்ம குலோபகாரி” என்னும் நம்பத்திரிகையல்லாத மற்றோர் பத்திரிகைக்கு முன்பணமாகச்செலுத்தியும் அப்பத்திரிகை அவர்களுக்கு காலந்தவறி கிடைப்பதாகவும், இரண்டொரு பத்திரிகை இதுகாறும் அவர்களுக்கு வந்துசேரவில்லையென்றும், நாம் எழுதும் கடிதங்களுக்குப் பதிலில்லையென்றும் குலாபிமானம் பூண்டவர்களின் செய்கை தக்கதல்லவென இடித்து இழிவுரைகூறியும், நம்மை அதைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும்படிக்கும், நம் பத்திரிகையில் அவர்கள் கடிதங்களைப் பிரசுரிக்கும்படிக்கும் வேண்டுகிறார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து விடுதல் எளிதெனினும் நடுவுநிலைமை மேற்கொண்ட நம் குலோபகாரியில் அவ்விஷயங்களை வெளியிடுதல் குலதர்மத்திற் கழகல்லவென எண்ணிவிடுத்தனம். இதனை நம் நண்பர்கள் அங்கீகரிப்பார்களாக.

* * *

நமது பாடசாலையின் புஸ்தகசாலைக்கு இரண்டொரு கனவான்கள் பல புஸ்தகங்களுதவியிருக்கிறார்கள். இதைப்போல் இன்னும் பல நன்கொடைபெற்றபின் அவர்கள் திருநாமங்களையும், நமது வந்தனத்தையும் வெளியிடுவோம்.



## புதுவருட வாழ்த்துக்கவிகள்.

**வித்வான் ஸ்ரீமத் ம. ராஜகோபால பிள்ளை அவர்களியற்றிய**
**விருத்தம்**

சென்னியப்பார் பரம்பொருளின் றிருவருளாற் றம்மரபுஞ் செகமு முய்வான்
உன்னியற்பா னுயர்விசுவ கன்மகுலோ பகாரியெனு மொருபெண்ணல்கி
மன்னியற்பா வாணர்முதன் மற்றெவரு மகிழ்ச்சியுற வைத்துவாழும்
கன்னியப்பா சாரிசுந்த ராசாரி யிவர்கணெடுங் காலம் வாழி

**வித்வான் ஸ்ரீமத் ஆ. மே. சென்னகேசவுலு நாயுடு அவர்களியற்றிய**
**விருத்தம்.**

சாலவொளிர் விஸ்வகர்ம குலோபகாரத்
தனிப்பெயர்பத் திரிகையுமா னேஜருஞ் சூழ்
வாலறிவ னாகியவா சிரியன்றானு
மவிவிடய தானிகளு மற்றுள் ளோருஞ்
சீலவனு கூலசந்தா தாரர்யாருஞ்
சிறந்தவிசு வேசரருட் செல்வந் துய்த்து
ஞாலமதி லோரூன மில்லாதென்று
நனிவாழ்க வாழ்கவளர் நாளுமாதோ.

சென்னை முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்
“வித்தியாபூஷணி” பத்திரிகாசிரியருமாகிய
**சதாவதானம் ஸ்ரீமத் தே. கிருஷ்ணசாமிப் பாவலரவர்க ளியற்றிய**
**விருத்தம்.**

நதிவளம் பெருகு தொண்டை நாட்டினின் ஞான வான்கள்
பதியுற வுள்ளா ரென்னும் பான்மையைப் பாரி னூட்டக்
கதிதரு விஸ்வ கர்ம குலவுப காரிப் பேரின்
மதிதொறுந் தவழ ணங்கு மாநிலத் தென்றும் வாழ்க.

**உபாத்தியாயர் ஸ்ரீமத் கோ. பா. தங்கவேலு பிள்ளை அவர்களியற்றிய**
**விருத்தம்.**

பாரந்தபுகழ் விஸ்வகர்ம குலோபகாரிப் பத்திரிகை பல்லாண்டு பாரில் வாழ்க
பொருந்துமதற் காசிரிய ராயதூய புலவனெங்கள் சுந்தரமால் பொலிந்து வாழ்க
தரந்தகுமா னேஜருநல் விடயதானத் தக்கோரு மிக்கோருந் தழைந்துவாழ்க
புரந்துவருஞ் சந்தாதா ரென்போர் யாரும் புண்ணியராய் நீடூழி வாழ்கமாதோ.

(214-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## குல நலச் சுவடி.

### பகரவர்க்கம்.

61. பத்திரிகை வாசனம் ... ... குல விமோசனம்.
62. பாடசாலை பல ... ... குலத்தினில் நாட்டு.
63. பிதிர்நாள் தனில் ... ... குலோத்தமரைக் கோரு.
64. பீதக மணிய ... ... குலமாதினை திருத்து.
65. புத்தகா லயம்பல ... ... குலத்திடை நிறுத்து.
66. பூவையர் பூத்தபின் ... ... குலமணம் நடத்து.
67. பெண்ணரசு வீடு ... ... குலவிடு காடு.
68. பேதனம் விடில் ... ... குலப்பழி பொங்கும்.
69. பைங்கொடி வளர்த்து ... ... குலப்பதர்க் கீயேல்.
70. பொதுமக ளிரை ... ... குலக்குடி யகற்று.
71. போட்டிக் காட்சியால் ... ... குலத்தொழில் மாட்சி.
72. பௌரோ கித்தியம் ... ... குலத்திலே கூட்டு.

### மகர வர்க்கம்.

73. மகதந்திர முறை ... ... குலத்தோர் கைம்முறை.
74. மாகாணக் கூட்டம் ... ... குலத்திற் கேற்றம்.
75. மிசிர வகுப்பினை ... ... குலத்துட் புகுத்தேல்.
76. மீசை முறுக்குதல் ... ... குலத்திற் கழகல.
77. முகமுன் னிலையில் ... ... குலப்பிரா திடுக.
78. மூட பக்தியால் ... ... குல நலி விளையும்.
79. மெழு குண்டைதந்தால் ... ... குலத்தவம் கைவரும்.
80. மேலாடை களைந்தால் ... ... குலப்பழி விளையும்.
81. மைனிக ஜெறுக்கு ... ... குலநிதி நையேல்.
82. மொழிக் கொடையாலே ... ... குலாபி விர்த்தி.
83. மோட்சம் வேண்டின் ... ... குலகை விடுக.
84. மௌனத்தி லுன்னி ... ... குலத்தினர் வாழ்க.

குல நலச் சுவடி முற்றிற்று.

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியர்.

---

# கடிதங்கள்.

---

### நமது பாடசாலை.

நமது வேதாத்தியயன பாடசாலைக்குத் தக்க உபாத்தியாயர்களை ஏற்படுத்தி பல வருஷங்களாகியும் நம்மவர்கள் இப்பாடசாலை விஷயத்தில் ஊக்கம் காட்டவில்லையெனத் தெரிகிறது. ஏனெனில் இதுவரையில் சுமார் 50 பிள்ளைகள் மட்டுமே நம் பாடசாலையில் வாசித்து வருகிறார்கள். அவர்களெல்லாம் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களா யிருப்பதால், இவர்கள் இப்பாடசாலையில் கற்பிக்கப்படக்கூடிய முழுப்படிப்பையு மடைய சக்தியற்றவர்களாக விருக்கிறார்கள். ஆகையால் சற்று வயதில் முதிர்ந்த பிள்ளைகளாயிருந்தால், வேதாத்தியயனம், பௌரோகிதம், முதலியவைகளைச் சொல்லிவைப்பதற்கு சாத்தியமாகலாம். இவ்வித படிப்பை அடைய வேண்டுமென்று ஆசைப்படுகிற பிள்ளைகள் உள்ளூரிலும், வெளியூரிலும் அநேகர் இருந்து வருகிறார்கள். ஆனால் அவர்கள் பெற்றோர்களும், அவர்கள் எஜமான்களும் காட்டும் பராமுகத்தால் இச்சிறுவர்களுடைய நல்ல எண்ணங்கள் பயன்படாமல் போகின்றன. பெற்றோர்களுக்கு தினந்தினம் தங்கள் சிறுவர்கள் மூலமாக நாலணா கிடைத்துவிட்டால் அதுவே போதுமென்றும், அவர்களை இனி படிக்கவைத்தால் விபரீதமென்றும் நினைத்து விடுகிறார்கள். எஜமானர்களோ, இச்சிறுவர்களுக்குக் கொடுத்துவரும் சொற்ப கூலியை பிரமாண்டமாக எண்ணி அவர்களிடம் இரவு 8-மணி அல்லது 9-மணிவரையில் வேலை வாங்கிவருகிறார்கள். இப்படிப்பட்ட பழக்கம் இப்பொழுது அவரவர்களுக்கு சொற்பபிரயோஜனத்தைத் தருகிறதென்றாலும் மொத்தமாகக் கவனித்தால், ஜாதிக்கே கல்வியில்லாத ஒரு பெருத்த குறையை உண்டு செய்கிறதல்லவா? வாசிப்பில் ஊக்கமுடைய சிறுவர்களை வேலையில் விட்டு அவர்களுழைப்பினால் தாங்கள் சௌக்கியமாக விருக்கலாமென நினைக்கும் பெற்றோர்கள் குலத்துரோகிகளென்ற பழிச்சொல்லுக்கு இடங்கொடுத்து விடுகிறார்கள். தந்தை, தன் மகனுக்குச் செய்யவேண்டிய முழு கடமைகளை முன்பு செலுத்தி யல்லவா பின்பு அவனால் தாம் சுகமடைய நினைக்கவேண்டும்? ஆகையால் பெற்றோர்கள் இவ்விஷயத்தில் ஊக்கத்தைச் செலுத்தவேண்டியது அத்தியாவசியகம். எஜமானர்களாயுள்ளவர்கள் தங்கள் பட்டறையில் வேலை செய்ய விடப்பட்டிருக்கும் சிறுவர்களை படிப்பின் நிமித்தம் தீபம் வைக்குமுன் அவரவர்கள் வீட்டிற்கு அனுப்பி விடவேண்டும். இல்லையேல் தங்கள் வீட்டிலேயே அவர்கள் இரவில் படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இவ்வித ஏற்பாடு செய்ய முடியாவிட்டால் ஜாதிநன்மையைக் கோரி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலைகளுக்கு அச்சிறுவர்களை அனுப்பிவைக்கவேண்டும். அப்படி செய்யாமல் தங்கள் வசம் ஒப்பு விக்கப்பட்டிருக்கிற பிள்ளைகளை நிரட்சர குட்சிகளாகச் செய்து வருவது தருமமல்லவென்று எண்ணுகிறோம்.

ஆகையால் இவ்விஷயத்தில் உள்ளூர் வெளியூர் வாசிகளாயுள்ள நம் குலோத்தமர்கள் இனி கவனம் செலுத்தி சமஸ்கிருத, வைதீகக்கல்விகளில் பிரியம் காட்டுகிற சிறுவர்களைத் தெரிந்தெடுத்து நமது பாடசாலைக்கு அனுப்ப முன்வருவார்களென நம்புகிறேன். தற்காலம் நம் பாடசாலைக்கு போஜன, வசதி முதலியவைகள் செய்ய போதுமான திரவிய பலமில்லாமையால் வெளியூரிலிருந்து வரும் சிறுவர்களுக்கு போஜன சௌகர்யத்திற் கேற்ற பொருள் ஒன்று மட்டுமே பெற்றோர்களைப் பொறுத்திருக்கும். பொதுவாக ஒரு ஜாதி முன்னுக்கு வரவேண்டின் படிப்பு அவசியம். அதிலும் சமஸ்கிருதம் இங்கிலீஷ் கல்விகளை இலவசமாகக் கற்பித்து வரும் நமது பாடசாலைக்கு நம்மனோர் தங்களால் இயன்றவளவு ஒத்தாசை புரியக் கடமைப்பட் டிருக்கிறார்களென்பதை பத்திரிகை மூலமாய் ஞாபகப்படுத்துகிறேன்.

கொ. கன்னியப்பாச்சாரியார்.
வேதாத்தியயனபாடசாலை ஸ்தாபகர்.
சென்னை.

* * *

### நாட்டுக்கோட்டையாரும், நம்மவரும்.

நாட்டுக்கோட்டை செட்டிப் பிரபுக்கள் நம் ஜாதியாரை வெகுவாக அபிமானித்து வருகிறார்கள். அவர்களால் எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் பிழைத்து வருகின்றன. இவர்கள் கோயில், குளங்களைக் கட்டி வருவதினால் மட்டும் நம்மவர்களுக்குப் பிழைப்பு உண்டாக்குவதாக நினைக்கக்கூடாது. இவர்கள் பலவித வெள்ளி விமானங்களும், ரதங்களும் செய்து வருகிறார்கள். காரைக்குடி, கானாடு காத்தான் முத

லிய நகரங்களில் இது வரையில் சுமார் 25 வெள்ளிரதங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் பல ரதங்களும் செய்யப்பட்டு வருகின்றன. ஓர் ரதம் 1 லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய்க்குள் தீர்மானமாகிறது. இந்த வேலைகளையும், உயர்ந்த கூலிகளையும் உத்தேசித்து வெளியூரிலிருந்து நம்மவர்கள் அநேகர் இவ்வூர்களில் குடியேறி யிருக்கிறார்கள். இவர்களெல்லாம் சுகஜீவனம் செய்துகொண்டிருப்பதோடும் வெகு ஆச்சார சீல முடையவர்களாகவு மிருந்து வருகிறார்கள். இவர்கள் காலை, மாலை ஊருணிக்குப் போய் ஸ்நானம்,சந்தியா வந்தனம், அநுஷ்டானம் முதலியவைகளைச் செய்தபிறகு தான் வேலைப்பட்டரைகளுக்கு வருவார்கள். மற்ற ஊர்களில் பல் தேய்க்காமல் பட்டரைக் கூடத்தில் உட்காருகிறமாதிரி இங்கு இருக்க முடியாது. அப்பேர்ப்பட்டவர்களிடம் செட்டிப்பிள்ளைகள் நெருங்கவே மாட்டார்கள். ஆகையால் இவ்வூர்களில் நம்மவர்கள், நீறிட்ட நெற்றியுடனும், பஞ்சகச்சத்துடனும், ருத்திராட்ச மாலையுடனும், பார்ப்போர்க்கு மனோகரமான தோற்றத்துடனும் காணப்படுகிறார்கள். கூடிய வரையில் நாணயமாகவும் நடந்து வருகிறார்கள். செட்டிப்பிள்ளைகளுடன் இவர்கள் நம்பிக்கையுடனும், மதிப்புடனும் நடந்து வருகிறார்கள். இப்புண்ணியவான்கள், நம்மவர்களில் படித்தவர்களைக் கண்டு விட்டால் அவர்களுக்கு சகலமும் உதவி உபகரிக்கிறார்கள்.

ஆகையால் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள், நமது குலத்திற்கு பேருபகாரிகளாக விருப்பதோடும், நமது குலம் சீர்திருத்தம் அடைவதற்கான சற்புத்தி புகட்டுகிறவர்களாகவு மிருக்கின்றார்கள். இவர்கள் குலம் தழைத்தோங்க இறைவனருள் புரிவாராக.

பெ. ரங்கசாமி ஆச்சாரி,
வெள்ளிவேலை,
தேவகோட்டை.

## வர்த்தமானக்குறிப்புகள்.

**ஓர் ஜாதியாரின்படிப்பை யார்கவனிப்பது?**

ஒரு ஜாதியரின் படிப்பை அவர்களே கவனித்து நடத்திவந்தால்தான் சரியானபடி நன்மைபெற முடியும் என்று அன்னிபீஸண்டு அம்மாள் தாம் இங்கிலாந்துக்கு போகுமுன்னதாகப் பம்பாயில் ஒரு பிரசங்கம்செய்தார்.

***

### பஞ்சாபில் பத்திரிகாபிவிர்த்தி.

பஞ்சாபில் தினசரிப் பத்திரிகைகள் விருத்தியாகிக்கொண்டு வருகின்றன. லாகூரில் தற்காலம் 8-தினசரிப்பத்திரிகைகள் பிரசுரமாவதில், 5-பத்திரிகைகள் ஹிந்துக்களாலும், 3-பத்திரிகைகள் மஹமதியர்களாலும் நடத்தப்படுகின்றன. இதுவரையில் வாரப்பிரசுரமாயிருந்த ஹிந்துஸ்தானி பத்திரிகை இப்பொழுது தினசரியாக மாறிவிட்டது. இந்த பத்திரிகையை நடத்தி வருபவர் சாரளதேவி சௌதாரணி என்ற பெண்பால். நம் நாட்டில் உள்ள பத்திரிகைகளோ உறக்கம்கொள்கின்றன.

***

### புத்தக உரிமைச்சட்டம்.

இந்தியா கவர்ன்மெண்டார் புத்தக உரிமைச் சட்டத்தைப்பற்றி கல்வி இலாகாவில் ஓர் அறிக்கைப்பத்திரம்பிறப்பித்திருக்கிறார்கள். 1847-ம் வருஷத்து புத்தக உரிமைச்சட்டம் 1911-ம் வருஷத்து 3-வது ஆக்டால் ரத்தாய்ப்போய் விட்டதாலும் புதிய ஆக்ட் பிப்ரவரிமாதம் 24ந்தேதி அமுலுக்கு வந்துவிட்ட படியாலும் புத்தக உரிமையைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் இனியில்லையென்று சொல்லப்படுகிறது.

***



### குருடர்களுக்கு உதவி.

இங்கிலாந்தில், குருடர்கள் வாசித்து விருத்தியடைவதற்காக ஒரு பெரிய வசதித்தலம் கட்டப்படவேண்டுமென்றும், அதைக்கட்டி முடிப்பதற்கும், அதில் குருடர்கள் வாசித்து முன்னுக்கு வருவதற்குவேண்டிய உபகரணங்களைச் சேகரித்து வைத்து நடத்துவதற்கு, 30, 000-பவுன் வேண்டுமென்றும் விளம்பரமிடப் பட்டிருக்கிறது. சென்றமாதம் ராஜ சக்கிரவர்த்தி தம்பதிகள் அந்த ஸ்கூல் கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை நாட்டினார்கள். குருடர்கள் கையால் ஸ்பரிசித்து எழுத்துகளை அறிந்துகொள்ளும்படியாய் எழுத்துக்கள் தடித்திருக்கவேண்டுமென்றும், அவ்வித எழுத்துக்களில் நூல்கள் இயற்ற பல்லாயிரம்பவுன் வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இருகண்ணிருந்த கல்வியில்லாத நம்மனோர்க்கு நாம் செய்வது என்னை?

***

### ஐரோப்பிய பத்திரிகாபி விருத்தி.

ஐரோப்பியர்களுக்குள் பத்திரிகை நடத்துவதே ஒரு பெரிய வர்த்தகமாய்விட்டது. மற்ற வியாபாரங்களுக்காக எப்படி லிமிடெட் கம்பெனிகள் ஏற்படுத்தப்பட்டு வியாபாரங்கள் நடக்கின்றனவோ, அப்படியே பத்திரிகைகளுக்கும் பெரிய லிமிடெட் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. இல்லஸ்டிரெட்டெட் லண்டன் நியூஸ் அன் ஸ்கெட்ச்கம்பனி லிமிடெட் என்னும் பிரசித்திபெற்ற கம்பெனியார் சென்ற 1913-ம் ஆண்டில் மட்டும் 40000-பவுன், அதாவது ஆறுலக்ஷம் ரூபாய் ஷை பத்திரிகையை நடத்தியதில் லாபம் அடைந்திருக்கிறார்கள். தமிழ்ப் பத்திரிகைகளைப்பற்றி நாம் சொல்லத் தேவையில்லை. பிழைத்திருப்பதே பெருத்த லாபமாக விருக்கிறது.

***

### ஓர் உதவி.

மதுரை அமரிக்கன் மிஷன் காலேஜுக்கு ரூ 49,100-சாங்கிஷனாயிருக்கிறது. ரசாயன சாஸ்திர பாடம் கற்பிக்கும்ஹால் கட்ட இந்த தொகை உபயோகபபடுத்தப்படும்.

***

### பெஜவாடாவில் ஆந்திர கான்பரன்ஸ்.

ஆந்திர கான்பரன்ஸ் இம்முறை பெஜவாடாவில் இரண்டாவது தடவை யாகக் கூடிற்று. ஆனரபில் என் சுப்பராவ் பந்துலு அக்கிராஸனம் வகித்தார். இவர் 40-வருடகாலமாகப் பொதுநலத்திற்குழைப்பவர். சென்னைச் சட்டசபையில் 6-வருஷம் மெம்பராயிருந்தார். இராஜப்பிரதிநிதி சட்டசபையில் மூன்று வருஷம் மெம்பராயிருந்து இவரது பிரரேபணையினால் பப்ளிக்சர்விஸ் கமிஷன் நியமிக்கப்பட்டது. கான்பரன்ஸ் முற்றிலும் தெலுங்கில் நடத்தப்பட்டது. பிரசிடெண்டும் தெலுங்கிலேயே பேசினார். தஞ்சாவூர் கான்பரன்ஸ் ஆங்கிலத்தில் நடைபெற, பெஜவாடாவில் கூடிய இக்கான்பரன்ஸ் தெலுங்கில் நடைபெற்றது குறிப்பிடற்பாலது. ஆந்திர—அதாவது தெலுங்கு ஜனங்கள் இச்சென்னை ராஜதானியில் 4-கோடிஜனங்கள் வசிக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் வடக்கேயுள்ள 12-ஜில்லாக்கள் இவ்வகுப்பினர் வாழும் இடமாயுள்ளன. மதுரைத் தமிழ் சங்கம்போன்று தெலுங்குக்கு ஒரு சங்கம் ஏற்பட்டுள்ளது. ஆந்திர ஸ்திரீ புருஷர்கள் தம்ஸமூக அபிவிர்த்தியில் உண்மையாக கவலை வைத்து உழைக்கின்றனர். கல்வி இருபாலரிடத்தும் விருத்தி பெற்றிருப்பதன்றி ஸ்திரீகளாலும் புருஷர்களாலும் பலபத்ரிகைகள்பிரசுரம் பெறுகின்றன. கான்பரன்ஸில் பலவிஷயங்கள் பேசப்பட்டன. நம்மவர் கான்பரன்ஸ் நடத்திப்பார்ப்ப தென்றோ!

***

## சென்னை, சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் சட்டதிட்டங்களின் சங்கிரகம்.

1910௵ அக்டோபர்மீ 21உ சுக்கிரவாரம் மாலை 6-மணிக்கு சென்னை, சிந்தாதிரிப்பேட்டை வேதகிரி மேஸ்திரி வீதி 5/10 கெ. உள்ள விஸ்வகர்ம குலோத்தாரண அச்சுக்கூட மண்டபத்தில் கூடிய விஸ்வகர்ம குலாபிமானச் செல்வர்கள் செய்த தீர்மானங்களில் ஒன்றாகிய சபையின் சட்டதிட்டங்களை, உள்ளூர் வெளியூர் வாசிகளாயுள்ள நம்மனோர் தெரிந்துகொண்டு நம்சபையை மேன்மேலும் ஆதரித்து வரவேண்டுமென்ற கருத்துடனும் சென்றமாதச் சஞ்சிகையில் பிரகடனம் செய்யப்பட்ட பகிரங்க விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த மூவர்களும், இச்சபையினின்றும் அகாரணமாய் பிரிந்து போய் தற்காலம் நடத்திவரும் ஒழுங்கீனங்களை இனி நிரூபிப்பதற்கும் பிரசித்தப் படுத்தலாயிற்று.

### சபையின் சட்டங்கள்.

1. (a) இன்று ஸ்தாபிக்கலான சபைக்கு "சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபை" என்னும் பெயரால்வழங்கத்தக்கது.

(c) இச்சபைக்கு பிரதிமாதம் 4-அணா கொடுக்கும் விஸ்வகர்ம குலோத்பவர்கள் யாவரும் அங்கத்தினர்களாகத் தக்கவர்கள்.

(d) 1910௵ டிசம்பர்மீ 31உ வரையில் இப்புத்தகத்தில் சம்மதகையொப்பம் செய்பவர்கள் இச்சபையின் அங்கத்தினர்களாம். ஷை தேதிக்குப் பின்பு மெம்பர்களாக விருப்பமுடையவர்கள் சபையின்காரியதரிசியார் மூலமாய் விண்ணப்பம்செய்து, கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்ட பின்புதான் அங்கத்தினர்களாக பாவிக்கத்தக்கது.

### சபையின் முக்கியநோக்கங்கள்.

2. (a) விஸ்வப்ரம்ஹ வம்சஸ்தர்களின் வித்யாபி விருத்தியைக் கவனித்து நடத்துவதும்;

(b) விஸ்வப்ரம்ஹ வம்சஸ்தர்களுக்கு சிறப்பாகிய ஆசாரதர்மங்களைப்பற்றிய புத்தகம், பத்திரிகை, வியாஸம் முதலியவைகளை அச்சிட்டு வெளிப்படுத்துவதும்;

(c) ஷை வம்ச சம்பந்தமான ப்ராசீன வேதாதி நூல்களை பல பாஷைகளிலும் சேகரித்து புத்தகசாலை ஏற்படுத்திப் பரிபாலிப்பதும்;

(e) ஷை ஜாதியின் பொது நன்மைக்கு வேண்டிய சாதனங்களை அப்போதைக்கப்போது கவனித்து நடத்துவதும் இச்சபையின் முக்கிய நோக்கங்களாம்.

### சபையின் உத்தியோகஸ்தர்கள்.

3. (a) இச்சபையின் காரியாதிகளை கிரமமாய் நிர்வகிப்பதற்காக பிரசிடெண்டு ஒருவர், வைஸ்பிரசிடெண்டுகள் மூவர், காரியதரிசி ஒருவர், உதவி காரியதரிசிகள் இருவர், பொக்கிஷதார் ஒருவர், மானேஜிங்கமிட்டி மெம்பர்கள் எழுவர், ஆக பதினைந்துபேர்கள் நிர்வாக சபையார்களாவர்.

(h) நிர்வாகசபை மீட்டிங்கிற்கு எழு கனவான்கள் ஆஜராய் இருந்து நடத்தும் சகல காரியங்களும் நிர்வாக சபை மெம்பர்கள் யாவருமிருந்து நடத்தியதாக எண்ணத்தக்கது.

(i) முக்கிய தீர்மானங்களைச் செய்து காரியம் நடத்துவதற்கு முன் நிர்வாக சபை மெம்பர்கள் யாவருக்கும் எழுத்து மூலமாய் விஷயாம்ஸங்களை மூன்று நாள்களுக்கு முன்பே தெரிவிக்கவேண்டியது.

4. இச்சபைக்கு பிரதி இங்கிலீஷ் ௵ ஜனவரி 1உ அபிஷியல் வருஷமாக இனிமேல் பாவிக்கவேண்டியது.

5. (c) 15 மெம்பர்கள் ஆஜராயிருந்தால் ஜனரல் மீடிங்கிற்கு கோரமாக பாவிக்கத்தக்கது.

(d) ஜனரல் மீட்டிங் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே நடக்கும் விஷயங்களின் விபரம் கண்டு நோட்டீஸ் யாவத் மெம்பர்களுக்கும் தெரிவிக்கவேண்டியது.

6. இச்சபைக்கு வேண்டிய இதர சட்டதிட்டங்களும் பைலாக்களும், நிர்வாக சபை மெம்பர்களால் தயார் செய்யப்பட்டு அடுத்துக்கூடும் ஜனரல் மீட்டிங்கிற்குள் அங்கீகாரத்திற்கு கொண்டுவர வேண்டியது.

உத்திரவுப்படி
ஆ. காரியதரிசி.
**கொ. கன்னியப்பாச்சாரி,**

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ரஹ்மணே நமஃ

# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்–1. { ஆனந்த௵ ஆனிமீ
1914௵ ஜூன்மீ } இதழ்–9.

THE REGISTRAR ... 1914 MADRAS.

## மெய்ஞ்ஞான தீபம்.

### காருண்யம்.

நம்மிடத்தில் பிறர் எப்படி நடக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அப்படியே நாமும் பிறரிடத்தில் நடத்தல்வேண்டும். தன்பொருளை மற்றொருவர் கவர எவனும் விரும்பானன்றோ? அப்படியே நாமும் பிறர்பொருளைக் கவராதிருத்தல் வேண்டும். தன்னை ஒருவன் வருத்தவாவது, பிராணஇம்சை செய்யவாவது பிரியப்படானன்றோ? ஆகவே நாமும் எவனையும் வருத்தாமலும், பிராணஇம்சை செய்யாமலும் இருக்கவேண்டும். ஏதாவது ஒருவிஷயத்தில் நாம் பிறரிடம் நடந்துகொள்ளவேண்டிய விதம் நமக்குச் சந்தேகமாயிருந்தால், அதுவிஷயத்தில் அவர் நம்மிடம் எப்படி நடந்துகொண்டால் நமக்குச் சந்தோஷமாய் இருக்குமென்று ஆலோசித்து, அந்தப்படி நடத்தல்வேண்டும். அப்பொழுது நம்நடை ஒருசிறிதும் பிசகாது. இந்தப்பிரமாணம் இலேசில் விளங்கத்தக்கது. எவரும் இலேசாய் அனுஷ்டிக்கத்தக்கது. இதனை அனுஷ்டிப்பவர் சன்மார்க்கராவர். யாவராலும் நேசிக்கப்படுவர். பாபம் அவரையணுகாது. உலகில்தீமையென்பது அவரைப் பற்றாது ஒழியும்.

⁂

### வெளித்தோற்றத்தின் மயக்கு.

ஒன்று நன்றென்பதும் பிறிதொன்றுதீதென்பதும் வெளித்தோற்றத்தால் நிச்சயித்தல்இயலா. தூண்டின்முள்ளின்கண் இரைபோல மனத்தை வசீகரித்துப் பின்கேட்டை விளைவிப்பனவும் பல உள. பலதீச்செயல்கள், முதலில் அறச்செயல்கள்போலத்தோன்றி, பின்னர் நம்மை மீளாப்பாவத்திற்கு ஆளாக்குவதும் உண்டு. ஆதலால் வெளித்தோற்றத்தில் மருண்டு மோசம் போகலாகாது. எவற்றையும் ஆராய்ந்துபார்த்தே பிறகுசெய்யவேண்டும். இதனாலன்றோ "ஆய்ந்தோய்ந்து பாராதவன் தான் சாகக்கடவன்" என்றார் மேலோர்.

⁂

### அறிவின் தன்மை.

அறிவு, இயற்கை யறிவு செயற்கையறிவென இருவகைத்து. இயற்கையறிவு, ஐயறிவு பகுத்தறிவு என இருவகைப்படும். செயற்கையறிவு, நூலறிவு தத்துவ அறிவு என இருதிறப்படும். இவற்றுள், ஐயறிவு, ஐம்பொறி வழியாகவரும் அறிவாம். பகுத்தறிவு மனவுணர்ச்சியாம். பகுத்தறிவு, சாதாரண பகுத்தறிவு விசேடப் பகுத்தறிவென இருகூறும். 'நெருப்புச் சுடும்' 'மாடு முட்டும்' ''தேள் கொட்டும்' முதலியவற்றை உணர்தல் சாதாரணப் பகுத்தறிவாம். செயத்தக்க தின்னது, செயத்தகாதின்னது, இன்னது செய்தாலின்னது விளையும், என்பவற்றை கல்வி கேள்விகளாலும், மனோசக்தியாலும், உய்த்து நோக்குவதாலும் உணர்தல் விசேடப் பகுத்தறிவாம். ஆகையால் விசேடப்பகுத்தறிவை ஒவ்வொருவரும் அடைய முயலல் வேண்டும். அடைந்திருப்பின் அதனை மேன்மேலும் விர்த்தி செய்து உத்தம வழியிற் செலுத்த வேண்டும். அங்ஙனமில்லையாயின் விலங்கினங்கட்கு மிழிந்தவராவர்.

# தொழில் ஒற்றுமையும், கூலிக் கட்டுப்பாடும்.

இங்கு தொழிலென்பது, இரும்பு, மரம், பித்தளை, கல், பொன் என்பனவற்றுலாகும் நமது ஐவகைத்தொழிலைக் குறிக்கும். இத்தொழில்கள் தற்காலம்வெகுசீர்கேடான நிலைமைக்கு வந்துவிட்டன. சற்றேறக்குறைய சென்றமுக்கால் நூற்றாண்டுக்குள் இத்தொழில்கள் அன்னியர் பலராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை யாவருமறிவர். இதற்குக் காரணம் நம்மவர்கள் இத்தொழில்களை கண்ணியமாக வெண்ணி நடத்திவராமையேயாம். தம் மூதாதையரைப் பின் பற்றித் தம் வகுப்பிற்குரிய தொழிலைக் கண்ணியமாகவும், கவனமாகவும் நடத்தும் வல்லபம் நம்மவர்க் கிருந்தால், மற்றொரு வகுப்பினர்க்குரிய வேலையை மலையாக எண்ணி அதனை ஆசிரயித்து அதைப்பின்பற்ற வேண்டிய ஆவசியகமே ஏற்பட்டிராது. சென்ற ஐம்பது வருடங்களுக்குள் எத்தனையோ குடும்பத்தார்கள் தாங்கள் பாரம்பரியமாக நடத்திவந்த தொழிலைத் தொலைத்துவிட்டு வேறு தொழிலைத் தொடங்கியிருக்கின்றனர். இம்மட்டுநில்லாது, தத்தம் மூதாதையர்கள் அநுஷ்டித்துவந்த கோத்திர சூத்திரங்களையும் தற்காலம் தாங்கள் கையாடி வரும் தொழில்களுக்குரிய கோத்திர சூத்திரங்களாக மாற்றியும் வருகின்றனர். இவர்கள் தங்கள் பூர்வீக கோத்திர சூத்திரங்கள் இழிவுடையதாகக் கருதி அவைகளை மாற்றினர்கள் போலும்! இவ்வித நகைப்பிற் கிடமான கோத்திர சூத்திர மாறுபாடுகள் ஒருபுறமிருக்க, தொழில் மாறுபாடுகளால் நம்மனோர்க்கு இரத்த சம்பந்தத்தாலாகிய இயற்கை உணர்ச்சிகளும் தினே தினே மாறுபாடடைந்து, தொழில் வல்லமையும் குன்றி, அநுபவஞானமும் அடியோடு அற்றுப் போகின்றது. உலகில் 'அற்புத வித்தைகள்' (Fine Arts) எனக்கருதப் படுவனவற்றுள் ஒன்றாகிய நமதுதொழிலை அப்பியசித்து நடாத்து பவர்களுக்கு இரத்த சுத்தமும், விந்துசாரமும் இன்றியமையாதனவென நாம் சாதாரணமாகச் சொல்லிக்கொள்வதற் கிணங்க, மேற்றிசை நிபுணர்களும் அவ்வாறே அபிப்பிராயப்படுவதோடு, தங்கள் அபிப்பிராயங்களைப் பல நியாயவாயிலாகவும், பரீட்சை வாயிலாகவும் நிரூபித்திருக்கின்றனர். ஆகையால், தற்காலம் நம்பூர்வத்தொழிலைக் கைவிட்டு மற்றொரு தொழிலைப் பின்பற்றிய வகுப்பினரின் தொழிற் பணிகள் இயற்கையமைப்பிற்கும், அழகிற்கும், தொழில் வல்லமைக்கும் முற்றிலும் முரண்பட்டுக் கேவலம் செயற்கைப் பாவனைவேலைகளாக நாளுக்கு நாள் விகாரமடைந்து வருவதை யார்தான் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்? உதாரணமாக மதுரைபுதுமண்டப சிற்பவேலைக்கும் அங்கு தற்காலத்தவர் செய்துள்ளகோயில் சிற்பவேலைக்கு முள்ள தாரதம்மியங்கள் கண்ணுளிகளின் கருத்திற்குப் புலப்படாமற்போகாது. அவ்வாறே கருமார், தச்சர், கன்னார் முதலியோர்களின் வேலைகளின் இயற்கையமைதியும், அழகும் வெகுவாகக்கெட்டுவிட்டதோடும், தங்கள் வேலைகளை கண்ணியமாக நடத்தி லாபம்பெறும் வழிகளை நன்குணராது தங்கள் புத்திரர்களைக் கடைசி தொழிலாகிய பொன் வேலையை அப்பியசிக்கச் செய்துவிட்டனர். இக்காரணத்தால் எவ்வூரிலும் தட்டார்களின் கூட்டம் மிதமிஞ்சக் காணலாயிற்று. இவ்வாறு ஒரு சார்பார் மலியவே போதுமான வேலைகள் கிடைப்பதும் துர்லபமாயிற்று. புதியவெள்ளம் பழயவெள்ளத்தை அடித்துச்சென்றதுபோல, புதியவேலையைநம்பி, பழயவேலையைக் கைவிட்டவர்களின் கதியாயிற்றெனச் சொல்லலாம்.

வேலைகளின் இயற்கை உணர்ச்சியும், நுட்பங்களும் மாறுபாடடைந்திருப்பினும் அவ்வரைகுறை வேலைகளும் நாணயமாகவும், கண்ணியமாகவும், திறமையுடனும் நடத்தப்படுகின்றனவாவெனின், அம்முக்கிய விஷயங்களிலும் நம்மவர் பழிப்புக்கு இடங்கொடுத்து வருகிறார்கள். வேலையகப்படாமல் துயரப்பட்டுக்கொண்டிருப்பவர் எவ்விதம் ஏழைமைநிலைமையைக் கடப்பர்? அவர்களது தொழில்நாணயமும் சிதையக் கேட்பானேன்? கல்வியின்மையால் தொழிலின் கண்ணியத்தையும், அதனை மற்ற தேசத்தார் எவ்விதம் மிகுதியாகப் பெறுகிறார்களென்னும் உலகஞானத்தையும் அடையக் கூடவில்லை. இவ்வித நிர்ப்பாக்கிய நிலைமையில் தங்கள் பணிகளுக்குச் சரியான வேதனம் இன்னதென நிர்ணயித்து எப்படி அதனை அன்னியர் கையினின்றும் கௌரவத்துடன் பெறக்கூடும்? மேற்கூறிய காரணங்களால் வேலைகளின் வேலைப்பாடும் அரைகுறையாய்த்தான் இருக்கும்; அதனாலடையும் கூலிக்கட்டணமும் ஒன்றிற்குப் பாதிதான் கிட்டும். இப்பரிதாப நிலைமையில், பேராசையின் தூண்டுதலாலும், செட்டும் சிறுமாய் குடும்பச் செலவைக் குறைத்து நடத்தும் விதத்தை அறியாது தம்மீது சுமத்திக்கொள்ளும் கடன் பாதையாலும், தமக்கு சொற்ப முதல் கொடுத்துதவிவரும் செட்டிமார்களின் சூழ்ச்சிகளுக் குடன்படுவதாலும், தம்வசம் ஒப்புவிக்கப்படும் நகைகளின் பரிசுத்தங்களை ஒருவாறு கெடுக்க முற்படுகிறார்கள். இவ்வித பாதகச் செயலால் உத்தமர்களாயுள்ள தொழில் வல்லோர்களுக்கும் பொதுவாக ஜாதிக்கும் அபவாதமும் அன்னியர் தூஷணமும் மலைபோல் வளர்ந்துகொண்டு வருகின்றன. தாரித்திரயமும் அன்னோரை விட்டு அகன்றபாடில்லை.

இச்சீர்கேடெல்லாம் போதாதென்றோ ஒருவேலைக்குப் பல போட்டிகள் ஏற்பட்டுவிடுவதோடும், அதனை அன்னியர் கையினின்று மடைவதற்குப் பலவித நியாய விரோதமான சூழ்ச்சிகளும் தாராளமாகக் கையாளப்பட்டு வருகின்றன. வேலையை முற்றுமுணர்ந்தவர், உணராதவர் என்னும் வித்தியாசத்தை, பொதுஜனங்கள் தங்கள் சுய அறிவைக்கொண்டு தெரிந்துகொள்ள அசக்தராயிருப்பதுபற்றி, ஓர் ஆலயமோ, வாகனாதிகளோ, அல்லது ஆபரணமுதலியவைகளோ செய்து முடிப்பதாக முதலில் ஒப்புக் கொண்டவர்களை மற்றொருவர் திடீரென உட்புகுந்து அவர்களுக்கு இதமுரைப்பார்போல நடித்து அவர்களின் தைரியத்தைப் பலவிதத்திலும் குன்றச் செய்தும், அஃதியலாதபோது அந்த வேலைக்கு எஜமானராயுள்ளவர்களைச் சாமதானதண்டபேதங்களால் தம்வயப்படுத்தி, முதலில் ஏற்பட்ட கட்டண விகிதங்களைக் குறைத்தும், பல தொழில் ரகசியங்களை வெளிப்படையாகச் சொல்லியும், கெடுக்காலங்களை சமயோஜிதமாகக் குறைத்துக் கூறியும், வேலை மானங்களின் சிறப்பை வாய்ப்பேச்சளவாய் ஆகாயமளாவ அடுக்கியும், அவர்களின் மனதைக் கரையச்செய்தும்அவ்வேலைகளை வஞ்சித்துப்பிடுங்கிக் கொள்ளுகிறார்கள். சில உத்தம எஜமானர்கள் நடுவு நிலைமையோடிருந்து அவ்வேலைகளை முதல் அவருக்கே கொடுப்பார்கள். அப்படி ஒப்புக்கொண்டவர்களுக்கு ஒரு சமயம் கூலிக்கட்டணம் கட்டிவரினும் வரும்; அல்லது நஷ்டம்நேரினும் நேரிடும். எப்படியாயினும் குறித்த கால அளவில் அவ்வேலையை முடிப்பதிலேயே இவர்கள் திருஷ்டியோடிருப்பர். இரண்டாவதாகக் கூறப்பட்ட மாயாவிகளோ வேலையைப் பெறும் வரையில் சுறுசுறுப்பும், பரபரப்பும் காட்டி, சின்னாள் வேலைசெய்வது போலவும் காட்டுவித்து, சமயம்வாய்த்த பொழுது கிடைத்தபொருளைக் கைப்பற்றிக்கொண்டு சொல்லாமலே அவ்வூரை விட்டகலுவர். வேலைக்குரியோர்கள் பாராட்டும் போலிச் சிக்கனத்தால் அவர்கள் தொடுத்த கருமங்கள் முற்றுப்பெறாமையோடும், பொருள்நஷ்டத்தையும், வீண் கால தாமதத்தையும் அடைந்து அல்லலுறுகிறார்கள். எஜமானராயுள்ளவர்களின்

அஞ்ஞானத்தாலும், சில சுஜாதிப்பதர்களின் அடாத செய்கையாலும் நமது ஜாதிக்கே பெருந்த அபவாதமும், அகௌரவமும் விளைந்துவிடுகின்றன. இவ்வினத் துரோகிகளை யார்தான் கடிந்து புறக்கணியா திருப்பர்?

மேலே அடுக்கடுக்காய் கூறப்பட்டுள்ள ஒற்றுமைக் கேடுகளை வேரோடுகளைவதே முதல் சீர்திருத்தமாகும். இவ்விஷயத்தில் ஆங்காங்குள்ள நம்மனோர்கள் விரைவில் கவனம்செலுத்தி சுஜாதித் தலைவர்களாலேனும், சபைகள் மூலமாவேனும், சில முக்கியஸ்தர்கள் சேர்ந்த தனிச்சபைகள் அல்லது பஞ்சாயத்துக்களைக் கொண்டேனும் தங்கள் வட்டங்களிலுள்ள நம்மனோர்களை வேலை சம்பந்தமான விஷயங்களில் மட்டுமாகிலும் ஒருமைப்படுத்தி, ஜாதியர்க்கிருந்து வரும் ஒற்றுமைக் கேடுகளையும், தொழில்விஷயங்களில் நேர்ந்துவருகிற போட்டிகளையும், அன்னிய ஜாதியர்க்கு வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொடுத்து விடுவதினாலடையும் ஆபத்துக்களையும், ஒருவர் தொடங்கிய வேலையை மற்றொருவர் பிடுங்கிச் செய்கிற மோசடிக் குற்றங்களையும், குறைந்த கூலிக் கட்டணங்களைப் பெற்று நடத்துவதால் தொழிலுக்கும், தொழிலாளிகளுக்கும் நேர்ந்திவரும் கௌரவ ஹானிகளையும், பிரசங்கங்கள் மூலமாகவும், பத்திரிகைமூலமாகவும்விளக்கிவைக்க முற்படவேண்டும். அப்படிச்செய்ய முன்வருவோர்கள், ஜாதியபிமானத்தையும், தொழிலபிமானத்தையும் மேற்கொள்ளவேண்டுமேயன்றி சமயாபிமானத்தாலும், மதாபிமானத்தாலும் பிளவுபட்டு நடக்கலாகாது. நமது வம்ஸத்தர்கள், சைவம், வைணவம், மாத்துவம் முதலிய சமயங்களைத் தழுவிவருவதோடும், அன்னிய மதமாகிய கிறிஸ்துவமதத்தையும் தழுவியவர்களாகவிருக்கிறார்கள். முன் சொல்லப்பட்டவர்கள் வேலையில் எவ்வளவு பிரபலமுற்றிருக்கிறார்களோ அவ்வளவு பின்னால் சொல்லப்பட்டவர்களும் தொழில் வல்லமையில் கீர்த்தியை அடைந்திருக்கிறார்கள். அதனோடும், அவர்கள் வழிபடுகடவுளின் வித்தியாசமொன்றன்றி மற்றெவ்வித விஷயங்களிலும் ஹிந்து கம்மியர்க்குடன்பாடுள்ளவர்களாயிருந்து வருகிறார்கள். ஆகையால், தொழில் கட்டுப்பாடு விஷயங்களிலும் கல்விமுதலிய பொது விஷயங்களிலும் அவர்களை ஒரு சிறிதும் புறக்கணிக்கலாகாது. அவ்விதம் புறக்கணிப்பதெனின் 'ஒற்றுமை'என்னும் பதத்திற்குப்பொருளில்லையென்றே சொல்லவேண்டும். மேற்றிசை நாகரீகம் பொலிவுற்று விளங்கும் தற்காலத்து கல்வி, ராஜாங்க காரியம்முதலிய பொதுவிஷயங்களில் பலஜாதியர்களும்,பலமதத்தினர்களும் ஒருங்குகூடி அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயம் ஒன்றில் மட்டும் அவர்களின்முழுகவனத்தைச் செலுத்தி ஒற்றுமையுடன் அக்காரியங்களை நிறைவேற்றிவருவதை நாம் கண்டிருந்தும் இன்னும் நாம் கண்மூடி நிற்பது அழகல்லவே. ஆகையினால் இவ்வித தொழில் ஒற்றுமையைத் தாமதமின்றி அடையும் மார்க்கங்களைத்தேடி முடிப்பது நம்மனோர்ஒவ்வொருவர் தோள்மேலும் ஏறிய பாரமாகும். முதலில் கிராமங்களிலும், பின் சிற்றூர்களிலும், அதற்குப்பின் பட்டணங்களிலும், தொழிலொற்றுமைச் சங்கங்கள் ஏற்படவேண்டும். இவ்வித சங்கங்கள் அமாவாசை தினமாகிய நம்மனோர் ஓய்வுநாளில் கூடி தாங்கள் அதற்கு முன்னர் தீர்மானித்த விஷயங்கள் சரிவர நடத்தப்பட்டு வருகின்றனவாவெனக் கவனித்து வரவேண்டும். இப்படி இச்சங்கங்கள் நடத்தப்பட்டு வந்தால் சில வருடங்களுக்குள் தொழில் ஒற்றுமையின் உன்னதத்தால் நமது தொழில்கள் பிரகாசித்து விளங்குமென்பதற்கையமேயில்லை.

இவ்விதசங்கங்கள் ஏற்படுவது தாமதப்படினும், சில முக்கியவேலைகளின் சீர்கேடுகளை மட்டும் ஒரு நிமிஷ அளவேனும் தாமதியாது கவனிக்கவேண்டும். உதாரணமாக நம்மவர் செய்யும் திருமங்கல்ய சூத்திரம் (தாலி) செய்வதே சென்னை கும்பகோணம் முதலிய ஊர்களிலுள்ள செட்டிக்கடைகளில் ஆயிரங்கணக்கான திருமங்கல்யங்கள் செய்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. திருமங்கல்யங்கள் எவ்வளவோ சாஸ்திர ரீதியாகவும், பய பக்தியுடனும் அப்போதைக் கப்போது செய்யப்படவேண்டியவைகளாக விருந்தும் இரும்பு ஆணிகளைப்போல் பல தரவாரியாகச் செய்து கடைகளில் பரப்பப்பட்டிருப்பதும், அவ்விதம் பரவச்செய்வதற்கு நம் குலநலச் செல்வர்கள் செய்துவரும் தகாதசெய்கைகள் எவ்வளவு இழிவுக்கு ஆஸ்பதமென்பதை நம்மனோர் இனியேனும் நன்குணர வேண்டும். திருமங்கல்யக் கூலிக்கட்டணங்களையும் ஒழுங்குபடுத்தவேண்டும். திருமங்கல்ய வேலைக்கு கேட்ட கூலியைச் சந்தோஷத்துடன் கொடுப்பதற்குப் பொது ஜனங்கள் காத்திருந்தும் அவ்வேலையின் கூலியைத் தாறுமாறுகக்குறைக்க வேண்டிய ஆவசியகமேயில்லை. இதைப் போன்ற சீர்குலைந்த வேலைகள் இன்னும் பல விருக்கின்றன. அவைகளனைத்தையும் இங்கு விவகரிப்பது அவசிய மெனினும் விஷயத்தின் விரிவஞ்சி இம்முறை இம்மட்டோடு நிறுத்தி, தொழிற் கூலி யொற்றுமையைச் சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரின் நம் ஜாதியருக்கும் தேசத்திற்கும் க்ஷேமம் உண்டாகுமென்றும், சொல்லுறுதி, நாணயம் முதலியவற்றால் மற்ற ஜாதியரின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றுத் தனவந்தர்களாக வாழலாமென்றும் உறுதியாகக்கூறி இதனை முடிக்கின்றோம்.

**பத்திரிகாசிரியர்.**



## நங்குல நேயர்களுக்கு விஞ்ஞாபனம்.

பாஞ்சாலவாஸியும் பாஞ்சாலருமான என் அருமை ஆரியநேயர்காள்!

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில்நடைபெறும் இச்சபைக்கு வரவேண்டுமென்ற ஆவல்மிகுதியாயிருப்பினும் சரீர அசௌகரியத்தினால் வாராமைக்கு மிகவும் வருந்தி சுருக்கமாக சில விஷயங்களை எழுதியனுப்பலானேன்.

**விஷயம்.**

சபை, பத்திரிகை, கல்வி, தொழில், ஒற்றுமை, கர்மானுஷ்டானம், ஆச்சார்ய விஷயம், சிற்பசாஸ்திர சங்கிரக முதலானவை.

**(1) சபை.**

சபையானது கற்பகத் தருவுக்குச் சமானமென்றும்,வேதங்களானவை அதின்சாகைகளாயிருக்கிறதென்றும், சாஸ்திரங்களானவை அதின் புஷ்பங்களாயிருக்கிறதென்றும், அச்சபையினிடத்திருக்கும் வித்வான்கள் அந்த புஷ்பத்தினிடமிருக்கும் ரஸம்பொருந்திய தேனைக் கிரகிக்கும் வண்டுகளைப்போல இருக்கிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்பிரகாரமிருக்கிற இச்சபையினிடத்து நம்மவர்களுக்குண்டாகும்நன்மைகளனேகமிருக்கின்றன. அதாவது, மஹாஜனங்கள் ஒன்று சேர்ந்து கூடுவதும், மேலும் அவர்களால் நம் ஜாதியை முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்து சிரேஷ்டமடையச் செய்விப்பதும், ஸ்வதேச அன்னியதேச வித்வத் சிரோமணிகளால் இச்சபையை யலங்கரித்து அவர்களால் அநேக நீதிகளையும், தர்மங்களையும், ஆசாரங்களையும் யாவர்களுக்கும் மனதிலூன்றும்படி புகட்டுவிப்பதும், கவர்ன்மெண்டாருடைய மதிப்பிற்கிடமாகும்.

சபையினாலன்றோ முற்காலத்திலும், இக்காலத்திலும் அரசர்கள் அரியபெரிய காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றனர். தவிரவும் அநேக ஜாதியர்கள் தங்

கள் தங்கள் சமுதாயத்திலிருந்தும் நிதிகள் சேர்த்து சபைகள் ஸ்தாபித்து அதிலிருந்தும் கல்விபயிலவும், வியாபாரம், தொழில் முதலியவைகளுக்காக கம்பெனி ஏற்படுத்தி அதின்மூலமாய் உயர்தர உத்தியோகம், கீர்த்தி, தனம், குலமேம்பாடு முதலிய அநேகம் நன்மைகள் அடைந்திருக்கின்றதை நாம் பார்த்தும் கேட்டு மிருக்கின்றோம்.

மேலும், தென்னிந்தியாவிற்குத்தலைநகரான இச்சென்னையில் ஸ்தாபித்திருக்கும் இந்த சபையைக் கைவிடாது நீடூழிகாலம் நடக்கும்படியாக வேண்டிய பிரயத்தனங்கள் செய்யவேண்டுவது நம் ஜனங்களின் மேலுள்ள பாரமா யிருக்கின்றன.

இச்சபையை ஸ்தாபித்து நம் குலச்சிறுவர்களுக் குபகாரமாக சமஸ்கிருதம் பயில்விக்கவும், வேதாத்தியயனம்,சொல்லிவைக்கவும், பொருளில்லாமையினால் மிகவும் வருந்தியும் இதுவரையில்கைசோரவிடாது குலாபிமானத்தால் நடத்திக் கொண்டுவரும் கனம். பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்ப ஆச்சார்ய ரவர்களுக்கு நாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கின்றோம்.

மேலும் இச்சபைக்குமூலதனமில்லாமல் சபையும் குலமும் மேன்மையடைய மாட்டா. அதாவது ஒவ்வொரு விஷயங்களினாலும் நம் ஜாதியாருக்கு நன்மைகளுண்டாக வேண்டுமென்று சொல்வதற் கெல்லாம் பொருள்தான் அத்தியாவசியகமாய் வேண்டியதா யிருக்கிறது. ஆதலால், இந்த மஹாஜன சபையிலிருந்து பிரதமகாரியமாக மூலதனம் சேர்ப்பதற்கான தீர்மானங்களை இப்போதுதானே செய்யவேண்டுமென மிகவும் வேண்டுகின்றேன்.

(2) **பத்திரிகை.**

சபைமுதலானவைகளிலிருந்து நம் குலசம்பந்தமான விஷயங்களையும், நீதிவசனங்களையும், தேச வர்த்தமானங்களையும், யாவத் ஜனங்களுக்கும் தெரிவிக்க முக்கிய கருவியாய் நிற்பது பத்திரிகை. இப்பத்திரிகையினால் அநேக விதமான நன்மைகளை நாம் அடைகிறோம். அதாவது அநேக வித்வத் ஜனங்களால் சுருதி ஸ்மிருதி இதிஹாச புராணமுதலியவைகளிலிருந்து ஸாரமான பிரமாணங்களைத் தெரிந்தெடுத்து ஒவ்வொரு விடங்களில்வைத்து உபந்நியசிப்பதையும், அவர்களால் எழுதியனுப்பப் படுவதையும் பத்திரிகை வாயிலாக நாம் கூடவேயிருந்து கேட்டது போலத் தெரிந்து கொள்கிறோம்.

மேலும் பத்திரிகை அறிவையும், ஆசாரத்தையும், தர்மார்த்த காமமோக்ஷங்களையும், கொடுக்கக்கூடியதாயு மிருக்கின்றது. தவிரவும், இவ்வுலகின் கண்ணே உலாவிவரும் விஸ்வகர்ம குலோபகாரியானது நம் குலத்திற்கு ஓர் மாதாவைப் போல நமக்குஅநேகவிதமாக அறிவையும், குலாசார தர்மங்களையும், சிற்பங்களின் சிரேஷ்டங்களையும், நம்பூர்வீக சரித்திரங்களையும் புகட்டுகின்றது. தவிரவும், தேச வர்த்தமானங்களைத் தெரிவிக்கவும், அனுசாரங்களை கண்டிக்கவும், நம் புத்திசாஞ்சல்லியத்தை ஓர் நிலைமையில் கொண்டு வரவும் செய்கின்றது.

இந்தப்பிரகாரம் பரோபகாரமா யிருக்கும் இப்பத்திரிகையை எழுதும் ஆசிரியருக்கும் ஊக்கம் கொடுத்து, என்றும் நடந்தேறச் செய்வதும், எவ்விடமும் பரவச் செய்வதும் சபையோரின் முக்கியகடமையாம்.

பத்திரிகையானது தமிழில்மாத்திரமிருந்தால் போதாது. அதாவது நம்மவர்கள் தெலுங்குதேசம், மஹாராஷ்ட்ரதேசம், கர்னாடகதேச முதலியவைகளி லிருக்கிறதினால் இச்சபையின் விஷயம் அவர்களுக்குத் தெரியும்பொருட்டு அந்தந்த தேச பாஷைகளிலும் முக்கியமாக இங்லீஷ் பாஷையிலும் பத்திரிகைகள் அச்சடித்து அனுப்பவேண்டும்.

அவ்விடப்பத்திரிகைகளை வரவழைத்து விஷயங்களை மொழிபெயர்த்து குலோபகா



ரியில்சேர்த்து தென்தேசத்தார்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இப்படி பத்திரிகையினாலடையும் பலன்கள் அளவில்லாதனவாயிருக்கின்றன. இதற்காக நாம் விசேஷித்தெழுதவேண்டிய தேதிருக்கிறது ?

(3) **கல்வி.**

மனுஷ்யருக்கு கல்வி யென்பது தர்மார்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்கக்கூடியதாகவும், காமக்குரோத லோபமோக மதமாத்ஸரியங்களைக் களையாநிற்பதாகவு மிருக்கிற பெருங்கருவியாம். இக்கருவியினாலன்றோ முற்காலத்தும் இக்காலத்தும் அநேகர் உயர்ந்த பதவிகளையும், குலமேம்பாட்டையும் யஸஸ்ஸையும், சத்துருவின்மையும் அடைந்திருக்கின்றனர். மேலும், யந்திரதந்திர சூழ்ச்சிகளைப் பயிற்றவும் அறிகின்றனர்.

‘வித்யாரூபம் குரூபாணாம்
அவித்தியாஜீவனம் சூன்யம்
அவித்யாபுருஷ: சோச்ய:
வித்யாஸர்வஸ்ய பூஷணம்
நீசாதப்யுத்தமாம் வித்யாம்’ என்றும்

கூறப்பட்டிருக்கிறது.

(தொடரும்.)

**ஜோஸியர்-முத்தாச்சாரியர்,**
**மீனாக்ஷிபுரம்.**

(231-வது பக்கத்தின் தொடர்ச்சி)

## பெற்றியை யோம்பும் வித்தியர்க்கோர் அத்தியாவசிய விண்ணப்பம்.

11. ஆகையா லிங்ஙனம் மேற்கண்ட நியாயங்களால் நம்மவர் எல்லோரும் விஸ்வகர்ம வம்சத்தாரே யாவர். அங்ஙனமாயின் மற்ற நிடாதர் அனுலோமராதிகளைப் பிரிக்கப்படாதோவென்னில், அந்த விகற்ப வேலையும் நமக்கு வேண்டியதில்லை. அஃதேதெனில்ஒவ்வொருவருணத்திலும் அல்லது குலத்திலும் சில உட்பிரிவுகளிருக்குமாயினும் உலகின்கண் அவரவர்களின் யோக்யதாபக்ஷத்திற்குத் தகுந்தமரியாதைகளை யறிந்து செய்வார்களென்பதிற் சந்தேகமே யில்லை. ஆதலால், வருணாஸ்ரம தர்மத்தை, அல்லது குலாசார சீர்திருத்த விதியைப் பொதுவாய்த் தெரிவித்தலே தகுதியாகுமென்பதை நன்காராய்ந்தாலோசியாமல் உயர்குல முடையோரே ஷெடி விசேடப்பட்டத்தை அனுசரிக்க வேண்டுமென்றும் வரைதல் முதலாய் வழங்கல் வேண்டுமென்றும் விகற்பித்துக் கூறும் இதுபோன்ற பிரதிகூலமான மொழிகளை நம் குலோத்தாரண சீர்திருத்த விஷயத்திற்கு முன்னின்றுழைக்கும் முதிர்ந்த குலாபிமானிகளின் மூக்கையரிந்து மொக்கைப் படுத்தும் முனைவாளாகும்.

12. ஆகையினால் நம்மனோர் யாவரும் குலோன்னதத்திற்குச் சீக்கிரம்முன்னுக்கு வரவில்லையென் றவசரப்பட்டுச் சபலசித்தங்கொண்டு முயற்சியை விடுதலும் சரியன்று. அதேதெனெனில், “இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக் குற்றமறைப்பா னுடம்பு” அதாவது, குடும்பத்தின் குற்றங்களைப் பரிகரிக்க முயலுவோன் உடம்பானது அக்குல சீர்திருத்தத்தின் பொருட்டு முயற்சிக்கும் முயற்சித் துன்பத்திற்கே பாத்திரமாகும் என்றார். எனவே த்ரேகசிரமத்தினாலாகிய முயற்சியினாலேதான் குலமானது குற்றமின்றிக் குணசீலத்தை யடையும் யெனத் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தபடியும் இன்னும் இதைக்குறித்துப் ப்ரஸ்நோத்தர ரத்னமாலையில்

ச:குலகமலதினேஶ: ?
ஸதிகுணவிபவேபியோநம்ர:

கஸ்யவஶம் ஜகதேதத்?
ப்ரியஹிதவசனஸ்ய தர்மநிரதஸ்ய.

பிரஸ்னம்—குலமாகிய தாமரைக்குச் சூரியன் யாவன்?

உத்தரம்— குணசம்பத்துக ளிருக்குங் காலத்தும் வணக்கமுடையவன்.

பிரஸ்னம்—எவனுக்கு இவ்வுலகம் வசமாகும்?

உத்தரம்—இனிய நன்மொழியுடையோனும் தர்ம தற்பரனுமாகிய புருடனுக்காம்.

என்றிங்ஙனங்கூறிய ஸ்ரீஜெகத்குருஸ்வாமிகளின் திருவாக்கின்படியும், பின்னும் இந்நூற்றாண்டில் வங்காள ராஜதானியின் பிரதான ஸ்தலமாகிய கல்கத்தாவில் அவதரித்து தேசமெங்குஞ்சென்று ஞானப்பிரசங்க நன்மாரி பொழிந்தவரான ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகள் சென்னையிற் செய்த இந்தியாவின் எதிர்காலநிலைமை என்னும் பிரசங்கத்திற் கூறியதாவது,

13. சாதிகளைக் குறித்த சச்சரவுகளே எனக்கு மிகவும் மனவருத்தத்தை யுண்டு பண்ணுகின்றன. இருதிறத்தாருக்கும் அது நிஷ்பலம்; உயர்குலத்தாருக்கே, அதிலும் ப்ராம்மணர்களுக்கே, முக்கியமாய் அது பயனற்றதாகும். ஏனெனில், தங்களுக்கே சிலமரியாதைகள் உரியவை, ஏனையோருக்கு இல்லையென்று சொல்லும்படியான சுதந்தரத்திற்குக் காலம்போய்விட்டது. உயர்குலம் தன்னை அடக்கம் செய்யும்பொருட்டு தானே குழிவெட்டிக்கொண்டால் மிக்க நலம். மேலும், அப்படிச் செய்வது அதனுடைய கடமையாகும்; என்றும், ஷை பிரசங்கத்தில் மற்றோரிடத்தில் கூறியதாவது—பிராமணரல்லாத மற்ற ஜாதியார்களைநோக்கி நான் சொல்வதாவது, நீங்கள் அவசரப்படக்கூடாது. பிராமணர்களோடு சண்டையிடக்கூடாது. ஞானமும் ஸம்ஸ்கிருதபடிப்பும் சம்பாதித்துக் கொள்ளவேண்டாம் என்று உங்களைத் தடுத்தவர்கள் யார்? அதைவிட்டு நீங்கள் வீடுகளிலேயும், பத்திரிகைகளிலேயும் போர் புரிவது துர்மார்க்கமும் பாபகரமுமாம். ஆகையால், இந்த தூஷணைகளை யெல்லாம் ஒழித்துவிட்டு பிராமணனுக்கிருக்கும் ஞானத்தைச் சம்பாதிப்பதில் உங்கள் சக்திகளையெல்லாம் செலுத்துவீர்களாயின், உங்கள் காரியம் சித்திக்கும். நீங்கள் ஏன் ஸம்ஸ்கிருத பண்டிதர்களாகக் கூடாது? எந்தக்ஷணம் ஸம்ஸ்கிருதம் கற்கின்றீர்களோ அந்தக்ஷணமே ப்ராஹ்மணருக்கு ஸமானமாய் விடுகிறீர்கள். இந்தியாவில் ஸம்ஸ்கிருத பாஷைக்குத்தான் அதிகாரம் என்ற இரகசியத்தை யறியுங்கள். அஃது உங்களுக்குவரின் உங்கள் பேரில் குற்றம் சொல்ல முடியாது. என்றும், பின்னும் ஷை உபந்நியாசத்திற் பின்னொரிடத்தில் பேசியதாவது.

14. நம்மவருள் ஒருவன் எழுந்து மேலான இடத்தை அடைய முயன்றால் அவனை நாமெல்லோரும் கீழே தள்ளிவைத்திருக்கப்பார்க்கின்றோம். அதுவே வெளிநாட்டார் வந்து நம்மை உதைத்தாலும், அது நமக்குப் பாந்தமாயிருக்கிறது. அது நமக்கு வழக்கமாய் போய்விட்டதல்லவா? அடிமைகள் பெரிய எஜமான்களாக வேண்டும். ஆகவே யிந்த மோகத்தைவிட்டுவிடுங்கள். இதுவே யினி உங்களுக்கு பீஜமந்திரமாய் இருக்கக் கடவது. இன்னும் 50 வருடம் வரையிலும் இந்த மஹாமாத்ரு மூர்த்தியையே போற்றக் கடவீர்கள். மற்றவீண் தேவதைகளெல்லாம் ஒதுங்கி யிருக்கட்டும். நமது சுஜன சுதேசஸ்வ ரூபமாயுள்ள இந்த கடவுள் தான் இப்பொழுது விழித்துக் கொண்டிருப்பது. எங்குந் தன்கைகளையும், எங்குந் தன் திருவடிகளையும், எங்குந் தன்செவிகளையும், உடையவரும் சர்வவியாபியும் விராட்சொரூபியுமாகிய இந்தக் கடவுளை விட்டுவிட்டு, அயலார்களின் வீண்தேவதைகளை வன்தொழப்போகின்றீர்கள்? எங்கும் நிறைந்தஇந்தக்கடவுளை நீங்கள் பூஜித்தால் பிறகு எல்லாத் தெய்வங்களையும் பூஜிக்கச்சக்தியுள்ளவராவீர்கள். அசைலமல் நகருவதற்கு சக்திவராததற்கு முன்னமே ஹனுமானைப்போல் கடலைக் கடக்கவேண்டு மென்கிறீர்கள். அது முடியவே முடியாது.



15. "ஒவ்வொருவனும் யோகியாய்ப் போய்விடவேண்டு மென்கிறான். தியானத்தில் அமர்ந்திருக்க வேண்டுமென்கிறான். இது சாயுமா? நாள்முழுவதும் உலக விவகாரங்களைச் செய்துகொண்டு கர்மகாண்டத்தில் அழுந்தியிருந்துவிட்டு சாயங்காலத்தில் மூச்சை மூன்றுதடவை யிழுத்தால் ஆகாயத்திலிருந்து ரிஷிகள் குதித்துவிடுவார்களா? இது என்ன கேலிவிளையாட்டா? இதைவிட வேறு ஆபாசமும் உண்டா? இவையெல்லாம் சிரிப்புக்கிடமாகும். சித்தசுத்தியும் தூய்மையான இருதயமும் முதன்முதலில் வேண்டியது. அதற்கு விராட் சொரூபத்தைப் பூஜிப்பதே உபாயமாகும். நம்மைச் சுற்றிலுமுள்ள மனிதர்களும் மற்ற ஜீவகோடிகளுமே அந்தவிராட் சொரூபம். ஆகவே அந்த சொரூபத்தைப் போற்றுங்கள். உங்களைச் சுற்றிலுமுள்ள இந்த மனிதர்களும் பிராணிகோடிகளுமே உங்களுக்குத் தெய்வம். அதிலும் நீங்கள் முதன்மையாகப் பூஜிக்கவேண்டிய தெய்வம் உங்கள் சொந்த சுதேசஸ்தர்களே யாவர். ஆகையால் ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமைப்படாமலும், ஒருவரோடொருவர் சண்டைசச்சரவு செய்யாமலும், உங்கள் சுதேசஸ்தராகிய தெய்வத்தைப் பூஜியுங்கள். அப்படிச் செய்யாமற் போன காரணத்தினால்தான் இப்போது நாம் கஷ்டப்படுகின்றோம். அப்படியிருந்தும் நாம் இன்னும் கண் விழித்துக்கொள்ளாம லிருக்கிறோம். ஆகையால் சீக்கிரமே கண்திறந்து பார்த்துப் பொறுமையோடும் இனி ஆகவேண்டிய நற்காரியங்களில் பிரவேசியுங்கள்" என்றிவ்வாறு கூறிய ஸ்ரீ விவேகாநந்த மகானவர்களின் விசிதவாக்கானுமறிக.

16. இங்ஙனம் மேற்கூறிய நியாயங்களால் நிரணயித் தொழுகவேண்டிய நெறியின் முடிவுரையாவது.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

அதாவது பெருமையும், சற்புள்ள மாதரைப்போல (தான் பிறரை நிந்தியாமலும், நடவடிக்கையில் தன்னை ஒருவர் நிந்திக்க யிடந்தராமலும்) ஜாக்கிரதையாகத் தன்னைக் காத்துக்கொண்டவனுக்குண்டு என்ற திருவள்ளுவ நாயனார் அவர்களின் செவ்விய வாக்கானும், இன்னும் பிரசிநோத்தர ரத்னமாலையில்,

கோஹி பகவத்ப்ரிய: ஸ்யாத்
யோந்யம்நோத் வேஜயே தனுத்விக்ன:
அதாவது—

பிரஸ்னம்—பகவானுக்குப் பிரியமானவன் யாவன்?

உத்தரம்—பிறருக்குப் பயப்படாமலும், பிறர் தன்னைக் கண்டு பயப்படாதிருக்கும்படியாகவும் நடந்து கொள்ளுகிறவனே யெனக் கூறிய ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகளின் திவ்விய வாக்கானும், மற்றும் உன்னதமகான்க ளருணூற் கொவ்விய வாக்கானு முணர்க. இங்ஙனம் மேற்கண்ட மகான்களுடைய மஹத் வாக்கியத்தையே மறையாகக்கொண்ட வெனதபிப்ராயம்யாதெனில்:- இனி யிதுபோன்ற சர்வ சமயச் சச்சரவுகளைத் தவிர்த்து ஒவ்வொருவரும் தத்தம் புதல்வர்க்கும் ஸமஸ்கிருத பாஷையைச் சாற்றுவிப்பதோடு நமது வித்வான்களைக் கொண்டு நங்குலத்தினர்க் கவசியமான வேதோக்த நித்யகர்மானுஷ்டான விதிகளையும், விவாக விதிகளையும், அபரக்கிரியைகளையும், கும்பாபிஷேக விதிகளையும், மனை, ஆலய சிற்பசாஸ்திரங்களையும், விக்ரகநிர்மாண ரூபத்யானங்களையும், மற்றும் நவீன தொழிற் குறிப்புகளையும், நம் பத்திரிகை மூலமாகவும், புத்தகமூலமாகவும், வெளியிடுவதோடு தங்கள் தங்கள் புத்ரமித்ர களத்ராதிகளையும், பொய், கொலை, கள், களவு காமம் என்னும் பஞ்சமாபாதகங்களிற் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்து நல்வழிக் காட்டுவதில் மிகுந்த ஞாபகம்

வைத்து அங்ஙனம் நடந்து வருவோமாயின் அதுவே நாம்விரும்பிய அத்யோன்னத வந்தஸ்தை யடைவிக்கு மென்பதில் அணுவளவுஞ் சந்தேக மில்லை. ஆதலால் வேதனையை விர்த்தி செய்யும் சாதிச்சண்டையைத் தவிர்த்து சாதன மார்க்க நன்னீதி யோடொழுங நித்யானந்த முறவும் ஆதியோடந்தரகிதமான ஸ்ரீ அறவாழியந்தணன் திருவருள் புரிவாராக.

கூந்தலூர் - சுப்ரஹ்மண்ய ஆச்சாரி,
மங்கலம்பேட்டை.

## நமது சுற்றுப்பிரயாணம்.

சென்னை, விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலையைப் பற்றியும், விஸ்வகர்ம வித்தியாசாலையைப் பற்றியும், மற்ற நம் குல தர்மவிஷயத்தைப் பற்றியும், திருவாரூர், எட்டுக்குடி, நாகப்பட்டணம், நாகூர், திருமலைராயன் பட்டணம், காரைக்கால், மாயவரம் முதலிய இடங்களிற் சென்று நம் சுஜாதி கனவான்களைக் கண்டுகளித்து நமது "விஸ்வகர்ம குலோபகாரி" என்னும் மாதாந்தப் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களைச் சேர்த்துவருகின்றோம். இதில் நம் குலோபகாரவிஷயமாக ஆதரிக்க முன்வந்தவர்கள் அநேகரிருந்தாலும், சிலரை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். திருவாரூரில் பிரம்மஸ்ரீ வைத்திநாத சுவாமி ஸ்தபதியார், நாகப்பட்டணத்தில் காயாரோகண உபாத்தியாயர், பொ. தண்டபாணி பத்தர், தெ. விஸ்வலிங்க பத்தர், காரைக்காலில் சாமிநாத உபாத்தியாயர், சி. சொக்கலிங்க பத்தர், ரயிட்டர் நாராயணசாமி ஆச்சாரியார், மாயவரத்தில் சபாபதி உபாத்தியாயர், சு. பக்கிரிபத்தர்முதலிய குலாபிமானிகள் தத்தம் அலுவல்களை கவனியாது நம் குலோபகார விஷயமாய் என்னுடன் கூடி உழைத்த சிரமத்திற்கும், குலாபிமானத்திற்கும் எம்முடைய மனப்பூர்வகமான வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம். நிற்க,

நம் குலாபிமானிகள் சென்னையில் தங்குவதற்கும், சுயம்பாகம் செய்துகொள்வதற்கும், எமது சொந்த இடத்தில் கொஞ்சம் தானமாகக் கொடுப்பதாகவும், அந்த இடத்தில் கட்டிடங் கட்டுவிக்கப் பொருளுதவி செய்யக் குலாபிமானிகள் முன்வந்தால் நலமென்றும் யாம் நோட்டீசில் தெரிவித்தபடி இப்பொழுது நாகப்பட்டணம் வெளிப்பாளையத்திலுள்ள பிரம்மஸ்ரீ அ. சோமசுந்தர பத்தர் அவர்கள் தம்மாலியன்ற வரையில் பொருளுதவி புரிந்து, அவர் பெயரால் கட்டிடங்கட்டி வைப்பதாகவும் ஒப்புக்கொண்டு சென்னைக்கு வந்து நேரே பார்ப்பதாகவும் வாக்களித்துள்ளார். அன்றியும், அவ்வூரிலேயே அ. சாமிநாத பத்தரென்பவரும், அந்த தர்மத்திற்குத் தம்மால் கூடிய வரையில் சகாயஞ்செய்வதாக வாக்களித் திருக்கின்றனர். இது தவிற, நமது வேதாத்தியயன பாடசாலையில் வாசிக்கப்பட்ட நம் குலச்சிறுவர்களுக்கு போஜன கஷ்டமிருப்பதால், அக்கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டு சில குலாபிமானிகள் தங்கள் சக்தியானுசாரம் பொருள் உதவுவதாகவும், அவர்கள் சிநேகிதர்களிடம் இதுவிஷயமாய்ச் சொல்லி சகாயம் செய்விப்பதாகவும் வாக்களித்துள்ளார்கள். இவர்களுக்கெல்லாம் எமது மனப்பூர்வகமான வந்தனஞ் செலுத்துகிறோம். இதுபோல் நாம் செல்லுமிடங்களிலுள்ள குலாபிமானிகள் குலோபகாரத்தைக் கருதி உழைப்பெடுத்துக்கொண்டு புண்ணியமும் புகழும் பெறுவார்களென்று நம்புகிறோம்.

***

### நமது பத்திரிகை.

நாம் சென்ற பல ஊர்களிலுமுள்ள சுஜாதிகனவான்களும், மற்றவர்களும் நமது பத்திரிகை ஒழுங்காகவும், காலதாமத மன்னி

யில் வெளிப்படுவதை வியந்துபேசியும், அப்பத்திரிகையில் தோன்றும் விஷயங்களின் அருமைப் பாட்டினையும் எம்மிடம் புகழ்ந்து பேசி எமக்கு உற்சாகமுண்டு பண்ணியதற்காக வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பத்திரிகையின் சந்தாதொகை ரூ. 3 ஆக வைத்திருப்பதைக் குறைத்து ரூ. 2 ஆக ஏற்படுத்துவது நலமென நமக்கு முன்னர் எழுதிய சில நண்பகளுக்கு நாம் தெரிவித்தபடி பத்திரிகையின் சந்தாவினால் சேரும்தொகையில் பத்திரிகையின் செலவுகள்போக எஞ்சிய தொகையை பாடசாலை முதலிய குலோத்தாரண விஷயங்களில் செலவிடப் படுவதால், அப்பத்திரிகைக்கு ஏற்படுத்தியிருக்கும் வருடசந்தா ரூ. மூன்று, அவ்விஷயங்களுக்குப் போதுமான தல்லவென்றும் இனி சந்தா தொகையை ரூ. இரண்டாகக்குறைப்பது உஜிதமல்லவென்றும் அபிப்பிராயப் படுகிறார்கள். இதுவன்றோ குலாபிமானப் பெருந் தகைமையாகும்.

* * *

**அன்னதானம்.**

நமது சுற்றுப்பிரயாணத்திலும், மற்ற சமயங்களிலும் பார்வையிட நேர்ந்த நம்மவர் அன்னதானத்தைப்பற்றி சொல்லவேண்டிய தவசியமாகிறது. திருச்செங்காட்டங்குடி, எட்டுக்குடி, மைலம், பழனி, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருத்தணிகை, திருப்போரூர் முதலிய ஸ்தல உற்சவகாலங்களில், நம்மவர்களில் செல்வவந்தர்களும், பிரார்த்தனைக் காரர்களும் ஆங்காங்கு இயன்றவரையில் அன்னதானம் செய்கிறார்கள். அவ்வித அன்னங்கள் அதிதி, பரதேசி, சோகி, சங்கமர்களுக்குமட்டுமே பயன்படச்செய்வது உத்தமமன்று. மேற்சொல்லிய உற்சவங்களில் நமது சுஜாதியர்கள் தங்கி உண்ண இடங் கிடைக்காமல் பசி தாகத்தால் சோர்ந்து தவிக்கிறார்கள். இவ்வுண்மையை யாவரும் அறிந்திருப்பார்கள். அப்படி தவிப்பவர்களை எதிர்சென்றழைத்து முகமனோடும் உபசரித்து உணவளிப்பது எவ்வளவு சிறந்த தர்மமாகும். தன்னினந் தழுவிவாழுங் காகங்களைப் பார்த்திருந்தும் நம்மனோர்கள் இவ்விஷயத்தில் குலாபிமானங் காட்டாதது என்ன துர்ப்பாக்கியம்! நிற்க, பெரிய ஊர்களிலும், நகரங்களிலும், நம்மனோர்கள் அநேக சுபாசுபகாலங்களிலும், வருஷப்பிரவேசம், மாதப்பிரவேச காலங்களிலும், கிர்த்திகை, அமாவாசை காலங்களிலும், சித்திரா பௌர்ணமிகளிலும், சிரார்த்தாதி புண்ணியகாலங்களிலும், தங்கள் தங்கள் கிருகங்களில் தங்கள் சக்திக்கேற்ப அன்னமிடுகிறார்கள். அப்படி இடப்படுகின்ற அன்னம், தத்தம் பந்துவர்க்கங்களுக்கும், பணக்காரர்களுக்கும், கண்ணியர்களுக்கும் சுஜாதியர்களுக்குமட்டுமே உபசரிப்போடு அளிக்கப் படுகின்றதேயன்றி, ஜாதியர்களில் வறியவர்களுக்கும், ஏழைச் சிறுவர்களுக்கும் பெரும்பாலும் இடப்படுகிறதாய் காணக்கிடைக்கவில்லை. அந்தோ பரிதாபம்! பரிதாபம்!! "கதிர் பெறும் சென்னல்வாடக் கார்குலங்கண்டு சென்று, கொதிதிரைக் கடலிற்பெய்யுங் கொள்கைபோல்" நம்மவர் இயற்றும் இத் தர்மம் ஆகிறதேயன்றி வேறில்லை.

இனியாவது ஆங்காங்குள்ள சுஜாதி தனவந்தர்களும், குலாபிமானிகளும், மேற்கூறிய காலங்களில் சுஜாதிவறியவர்களையும், சிறுவர்களையும் முன்பு உபசரித்து உணவளிப்பதோடும், ஆங்காங்கு நம்குலத்திற்கென்றே நம் சிறுவர்களுக்குப் பாடசாலைகளையும், வித்தியாசாலைகளையும் ஸ்தாபிக்க ஒரு பொதுநிதி அமைத்து அச் சிறுவர்களை போஷித்து வருவதோடும், மற்ற சுபாசுபகாரியகாலங்களிலும் முதன்மையாய் அவர்களுக்கு அன்னமளித்து வரவேண்டுமென்பது எமது பிரார்த்தனை. மேற்கூறியபாடசாலை ஸ்தாபிக்க இயலாத இடங்களிலுள்ள சுஜாதி கனவான்கள் நடாத்தும் எல்லாவித விசேடகாலங்களிலும், சென்னை சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம குலோத்தாரண சபைக்கும் வேதா

த்தியயன பாடசாலைச் சிறுவர்களுக்கும், வித்தியாசாலைச் சிறுவர்களுக்கும், அன்னமளிக்கும்படியான திரவிய சகாயத்தைத் தங்கள் தங்களால் கூடுமானவரையில் அன்போடு கொடுத் துதவிவந்தால் இன்னும் பல சிறுவர்களை நமதுபாடசாலைக்கு அனுப்பப்படுவார்களென்றும், உள்ளூர் வெளியூர் ஏழைச்சிறுவர்கள் இது காரணமாய் முன்னுக்கு வருவார்களென்றும் நம்புகின்றோம்.

**கோ. கன்னியப்பாச்சாரி,**
வேதாத்தியயன பாடசாலை ஸ்தாபகர்.

# இதோபதேச நீதிமொழிகள்.

## கொல்லாமையும் புலாலுண்ணாமையும்.

எனது அன்பின்மிக்க அரிய சகோதரர்களே! இக்கொல்லாமை என்னும் உன்னத நல்லறத்தைப்பற்றி நமதுபெரியோர்களால் எத்தனையோ நூல்களில் எடுத்து வற்புறுத்தி நமது நலங்குறித்துஇனியமொழி இயம்பி இருக்கின்றார்கள். இவ்வித அரும்பெருந் தர்மத்தை அகத்தி லுன்னாது நாக்குருசியைத் தானே நலமெனக்கருதி மோக்கவழி இழக்கும் மூடமதியாற் செய்யும் கொல்லுதல் என்னுங் கொடுஞ்செயலால் வரப்பெற்ற கொடும் பவங்களெல்லாம் மற்றெவ்வித கர்மத்தினாலும் செய்கையினாலும்வரும் பாபத்தைவிட இஃது அதிக அருங் கொடும்பவமென்றும், இதற்கு மேற்பட்ட கொடும்பவங்கள் வேறில்லை என்றும், வேதநூற்களில் மிகவெடுத்து விளம்பி இருக்கின்றது. இவ்வித கொடும்பவமான கொடுஞ் செய்கையை ஒரு சிறிதேனும் மனத்திலுன்னாது கொல்லாமை என்னும் அரும் பெருந் தர்மம் ஒன்றையும் ஒருவன் அகத்தி லுன்னி வைராக்கிய விரதமாய்க் காப்பாற்றி வருவானாகில் அவன் மற்றெவ்வித உயர்ந்ததர்மமும் செய்யவேண்டியதில்லை யென்றும், இஃதொன்றினாலேயே அவனுக்கு மற்றெவ்வித தர்மங்களால் வரும் புண்ணிய பலன்கள் எல்லாம் சித்திக்கு மென்றும் அவ்வளவு உண்மையாயும் நிச்சயமாயுங்கருதி கண்டிப்பாய் உரைத்திருக்கின்றார்கள்.

இதனைப்பற்றி நமது நாயனார்:—
'அறவினையாதெனிற் கொல்லாமைகோறல்
பிறவினை எல்லாந் தரும்' என்றும்

அதாவது:—ஒருமனிதன் செய்யும் தர்மங்களிலெல்லாம் முக்கிய தர்மம் எதுவென்றால் கொல்லாமையேயாம். அதாவது:—பிறவுயிரைத் தன்னுயிர்போல்நினைத்து அதற்குறும் துன்பிற்கிரங்கி அன்புற்றுக் காத்தலேயாம். இதனை அடியோடே மறந்து (கோறல்) கொல்லுதலே விரதமாக மனத்திலுன்னி சிறிதேனும் இரக்கமில் நெஞ்சினோர்க்குத் தீவினையால் வரும் எவ்வித பாவங்களும் இதனை மழைக்காலத்தின் இருள்வந்து சூழ்வதுபோல் மகாவிரைவில் எல்லா இடரும் வந்து சூழ்ந்து துயர்க்கடலில் ஆழ்த்தி இடர்படுத்துமென்றும், இவர்கள் வறுமையும் பெருவியாதி முதலிய சகிக்கொணாக்கொடுநோய்களும் உறுவார்களென்றும், இவ்வித துன்புறுவோர் முற்பிறப்பிலும் இரக்கமின்றிக் கொன்றருந்தின இன்பிலார் என்றும், இப்பிறப்பில் அவர்களை இதனால் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் நாம் உணர்ந்தறியலாமென்றும், நிலைக்கண்ணாடியில் முகங் காட்டுவதுபோல் நமக்கு நிதரிசனமாக நிலைநிறுத்தி நிச்சயமாக நிகழ்த்தியிருக்கின்றார்கள். இவ்வித கொலை வினைஞரைப்பற்றி இவர்களைப் புலைவினைஞர், புலைத்தொழிலாளர் என்று நன்னெறி யுடையோர் மனம் நடுக்குற்று நினைப்பார்களென்றும் நன்னீதி நூல்களில் நாட்டியிருப்பதோடு நமது நாயனாரவர்களும் நவின்றிருக்கின்றார்கள்.

இதற்கோர் உதாரணமாக:—

சாஸ்திர முணர்ந்தோரைச் சாஸ்திரி என்பதுபோலும், வைத்திய முணர்ந்தோரை வைத்தியர் என்பதுபோலும், புலால் உண்ணுதலால் நாம் பஞ்சமர்களை இப்பொழுதும் காரணப்பெயர்கொண்டு. புலைஞர் என்று இழித்துக்கூறியும், அப்புலாலருந்தாத நம் இந்துக்களிற்சிலரை சைவர்என்று மிகஉயர்த்தி உரைத்தும் வருகிறோம். அன்றியும் பிராமணர்களில் குருக்கள் மார்களை இப்பொழுதும் ஆதிசைவர்என்றும் அழைத்தும் வருகிறோம் அல்லவா?

ஆதலால் இந்நிதரிசனமான சாக்ஷிகளால் கொல்லுதலும் புலாலுண்ணுபவர்களும் ஆகிய இவர்கள் இம்மையிலேயே தாழ்வடைந்து இடருற்று வருந்துவார்களென்பது மிகவும் நன்றாய் விளங்குகிறது. இப்புலாலுண்ணுதலையும் கொலைத் தொழிலையும் முற்றிலும் விட்டொழித்த சைவர்களோ நாம்பார்க்கும்படி எத்தேசத்திலும் சைவர் என்னும் புகழ்ப்பெயருடன் உயர்வடைந்து நன் மரியாதையும் பெற்று எல்லோராலும் புகழ்ந்து பேசும்படி இருத்தலோடு நாம் புலையரைத் தொடாதே தூரநில்; என்று சொல்வது போல, மாமிசம் அருந்துபவர்களைக் கண்டால் சைவர்கள் தொடாதே தொடாதே என்று மனங்கலங்கி வற்புறுத்திச் சொல்லி வருகிறார்கள். ஆதலால் இதனாலாகிலும் தாம் மாமிசம் அருந்தினதினால் வந்த பழியான இழிவைத் தம் மதியில் வைக்கலாகாதா அந்தோ! இவ்வரும்பெரும் பிறப்பு எய்தியும் அருள்வழி கருதாது இருள்வழி நடந்து இடருற்று இறைவனருளை எய்தாமலா இருக்கவேண்டும். இக் கொலைஞர்களுக்கும் புலாலுண்பவர்களுக்கும் அருள் அணுவேனும் அகத்திலுறாதென நமது நாயனார் அறைந்திருக்கின்றார்கள்.

அவைவருமாறு:—

''பொருளாட்சி போற்றாதார்க்கில்லை அருளாட்சி ஆங்கில்லை ஊன்தின்பவர்க்கு'' என்றும், ''தன்னூன்பெருக்கற்குத் தான் பிறிதூனுண்பான் எங்ஙனம் ஆளும் அருள்'' என்றும், நமது திரு ஒளவையார் ''புலையுங்கொலையுங்களவுந் தவிர்'' என்றும், நமது கல்லாடர்:— ''பலவுடம் பழிக்கும் பழியூன் உணவினர் தவமெனத் தேய்ந்தது துடியெனும் நுசுப்பே'' என்றும், அத்ராவது—புலாலுண்ணுவதின் பொருட்டுப் பல உடம்புகளை அழிக்கும் பழியஞ்சாப் பாதகர்களாகிய இப்பாபிகள் செய்யும் எவ்விதமான அறம் தர்மங்களெல்லாம் ஒரு நுண்ணிய ஸ்திரீயின் இடை எவ்விதம் குறுகி இருக்கிறதோ அவ்விதமே அவர்கள் செய்யும் புண்ணிய பலன்களும் குறுகிப் பலன் கொடாது ஒழியுமென்றும், அவ்வளவு கண்டிப்பாய் உதாரணங் காட்டி உறுதி மொழி கூறி உரைத்திருக்கின்றார்கள். அன்றியும், நமது தாயுமானாரோ ''கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும் அக் குணமொன்றும் ஒன்றிலேன்பால்'' என்றும், அக்கொல்லாமையின் உன்னத உயர்வைப் பற்றி குன்றின்மே லிட்ட கோடிஞான விளக்கு போல் கூறியிருக்கின்றார்கள்.

நமது திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் திவ்ய நாமம் படைத்த நமது இராமலிங்க சுவாமிகளோ, அவர்களுரைத்த திருவருட்பாவில்.

''உயிர்க்கொலையும் புலைப் பொசிப்பும் உடையவர்களெல்லாம் உறவினத்தாரல்லர் அவர் புறவினத்தார் அவர்க்குப்பசிப்புறும் ஓர் பசி தவிர்த்தல் மாத்திரமே புரிகபரிந்து மற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே, நபப்புருசன் மார்க்கம் அவர் அடையளவு மிதுதான் நம்மானை என்றெனக்கு நவின்ற அருளிறையே, என்றும், மற்றொரு முதுமொழிப் புலவரோ ''புலையர்தன் மனையிலுண்பான் புலையனுமாறு போல, கொலைஞர்தம் மனையிலுண்பான் கொலைஞனு யாவன்றானே'' என்றும், கூறியிருக்கின்றார்கள்.

ஆதலால் ஒரு மனிதன் தன் மனதை எந்தவழியில் செலுத்துகிறானோ அதன்படி

யே நற்பலனையும், துர்ப்பலனையும் அடைகிறானென்றும், ‘‘மனஸ்யேவமனுஷ்யாணாம் காரணம்பந்தமோக்ஷயோ:’’ என்றும், பெரியோருரைத்துள்ளார்.

அன்றியும் நமதுநாயனாரவர்கள் ‘‘பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் தத்தங் கருமமே கட்டளைக்கல்’’ என்றும், நமது அதிவீரராம பாண்டியன் ‘‘பெருமையும் சிறுமையும்தான் தரப்படுமே’’ என்றும், அதாவது பெருமையை ஏற்படுத்திக்கொள்வதற்கும் சிறுமையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தத்தம் செய்கையே காரணமென்றும் விளம்பியிருப்பதோடு நம்நாயனார் ‘‘ஒழுக்கத்தில் எய்துவர்மேன்மை இழுக்கத்தில் எய்துவர்எய்தாப்பழி’’ என்றும், ‘‘ஈன்றாள் பசிகாண் பானாயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும்வினை’’ என்றும், ‘‘துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும்வினை’’ என்றும், ‘‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில்வேற்றுமையால்’’ என்றும், ‘‘ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றும்’’ நீதிநூல் விளம்பியபடி நடந்து நன்மை பெறுவீர்களாக.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி,
ஜோதிஷர், திருவாரூர்.

(235–வது பக்கத்தின் தொடர்ச்சி)

## பிரபஞ்சவித்தியும் ஆத்துமசக்தியும்.

இந்த ஆன்மாவில் இளைப்பாறுகிற ஸ்தானங்கள் மூன்றிருக்கின்றன. நித்திரையின் விதங்கள் பலவாயிருக்கின்றன. வலதுகண்ணாகிய இது நித்திரையின் ஸ்தானமாக இருக்கிறது. கண்டம் அனுபவத்தின் ஸ்தானமாக விருக்கிறது. இருதயம் ஆனந்த மண்டலமாக இருக்கின்றது.

இவ்வண்ணமாகச் சைதன்னியமுள்ள அசரீரியாகப் பிறந்து அவர் பூதியங்களைத் தெரிந்தெடுத்து நானன்றி யாதொன்றும் இவ்விடத்தி லிருக்கிறதென உறுதிப்படுத்தமாட்டேன். அவர் நினைக்கிற இந்த ஒருவனை ஆராய்ந்து விரிந்த பிரபஞ்சத்தையும், சிந்தித்து, நானதைப் பார்த்தேனென்றார், ஆகையால் அவர் இதை மாத்திரம் அல்லது சாட்சியெனப் பெயரிடப்படுகிறார். யதார்த்தமாகச் ‘‘சாட்சி’’ என்பதுதான் அவரது நாமமாக விருக்கின்றது. சாட்சியா யிருக்கிற அவரை ஆழ்ந்த அருத்தமுள்ள பேராகிய ‘‘இந்திரன்’’ என்றழைக்கிறார்கள். ஏனெனில் தேவர்கள் சாதாரணமாய் தங்கள் பேர் மறைவாயிருப்பதில் ஆனந்திக்கிறார்கள். தேவர்கள் மந்திரங்களில் ஆனந்திக்கிறார்கள்.

இந்த ஆத்துமா மனிதனின் மூலகாரணமாக, அல்லது கருவாக, அல்லது விந்துவாக இருக்கின்றது. அந்த விந்து சரீரத்தின் எல்லா அவயவங்களிலுமிருந்து இழுத்த சத்தாக இருக்கின்றது. இவ்விதமாக மனிதன் தனக்குள் தன்னைப் போஷிக்கிறான். ஆனால் அதையவன் ஸ்திரீக்குள் பிரயோகிக்கும்போது அந்தக்கருவை யவன் ஜனிப்பிக்கிறான். அதுவே அதன் முதல்பிறப்பாக இருக்கின்றது.

அது பெண்மகளோடு அபேதமாகி, அவள் சொந்த சரீரத்தைப்போல் ஆகிவிடுகின்றது. இது அவளை யழித்துவிடாது. அவள் அவனைத் தனக்குள் இவ்விதமாக ஏற்றுக்கொண்டு போஷிக்கிறாள். அவனை போஷிக்கும்போது அவனால் அவள் போஷிக்கப்படவேண்டும். பெண்மகள் அந்தக் கருவைப் போஷிக்கிறாள். ஆனால், அவன் அதற்கு முன்னமே அக்குழந்தையைப் போஷித்தான். அது பிறந்து பின்பும் அதை யின்னம் போஷிக்கிறான். குழந்தை பிறப்பதற்கு முன்னும் பின்னும் அவன் போஷிக்கிறபடியால், அவன் தன்னையே போஷிக்கிறான். சந்ததி நிலைபெற்றுவாவேண்டிய நிமித்தம் இவர்களும் இவ்விதமாக நிலைபெறச் செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டதே அவனுடைய இரண்டாவது பிறப்பாக இருக்கிறது.

இந்த இரண்டாவதுபிறப்பான அவனே சமயாசார வைதிக கருமங்கள் செய்வதற்காக அவனுடைய பிரதி காரியஸ்தனாகிறான். மற்றொருவனாகிய தானே அதனுடைய கடமைகளை நிறைவேற்றி ஆயுள்நாளை முடித்து இறந்துபோகிறான். இந்த பிறப்பை விட்டகன்று மற்றொரு வடிவாக மறுபடியும் பிறக்கிறான். அது அவனுடைய மூன்றாவது பிறப்பாக இருக்கின்றது.

இது பரிசுத்த மகாத்துமாவினால் கூறப்பட்டது. கருப்பாசயத்தில் இந்தக் கடவுளுடைய தொடர்ச்சியுள்ள பிறப்புகளையெல்லாம் நான் அறிந்திருக்கிறேன். நூறு சரீரங்கள் இருப்புச் சங்கிலிகளைப்போல் என்னை அமர்த்துகின்றன. ஆகிலும் நான் ஒரு ராஜாளியைப்போல் வேகமாக எழும்புகிறேன். இவ்விதமாகக் கருப்பாசயத்தில் அமைதலாயிருந்த ‘வாமதேவர்’ சொன்னார். இந்த நிருவிகற்பக் காட்சியை யடைந்து அவன் அந்தச் சரீரபந்தத்தி லிருந்து நீங்கி யெழும்பி சுவர்க்கலோகத்திற் கேறிப்போய்எல்லாக்கோறிக்கையையும் அடைந்து அவன் சிரஞ்சீவியாய் விட்டான்.

நான் அவனைத்தொழலாமென்றால், ஆன்மாவென்பதென்னை ஆன்மாவென்பதெது. ஒரு மனிதன் எதினால்பார்க்கிறானோ, எதினால் கேட்கிறானோ, எதினால்வாசனை அறிகிறானோ, எதினால் வசனிக்கிறானோ, எதினால் இனிப்புள்ள அல்லது இனிப்பற்ற உருசியைப் பிரித்தறிகிறானோ அது இருதயமா, அல்லது அறிவா, அல்லது மனதா, அல்லது உணர்வா, அல்லது மனோகத்துவமா, அல்லது பகுத்தறிவா, அல்லது கிரகநிலையா, அல்லது புலப்பாடா, அல்லது ஞாபகமா, அல்லது கவனிப்பா, அல்லது மன்றாடுகையா, அல்லது தீவிரமா, அல்லது வருத்தமா, அல்லது அவதானமா, அல்லது இணக்கமா, அல்லது துணிவா, அல்லது பிராணிகளின் செய்கையா, அல்லது விருப்பமா, அல்லது இச்சையா.

இவைகளெல்லாம் அறிவின் பரியாய நாமங்களாக இருக்கின்றன. ஆனால், அறிவின் அந்தரிந்தரியம் அடங்கிய இந்த ஆத்துமா பிரம்மாவாக இருக்கின்றது. அவரே இந்திரன். அவரே சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதி. இந்ததேவர்களெல்லாம் அவராகவே இருக்கின்றார்கள். இந்தப்பிரிதிவி, வாயு, பரமாணு, சலிலத்திவம், உதகம், சுடர் ஆகிய மூலபஞ்ச பூதங்களும் அவராகவே இருக்கின்றன. இவைகளும், இவைகள் கலந்த சூக்குமப் பொருள்களும், மற்றவஸ்துக்களும், மற்றவிதைகளும், முட்டைகளிலிருந்து உற்பத்தியாயும், அல்லது கருப்பாசயத்தில் பிறந்தும், அல்லது வேர்வையிலுதித்தும், அல்லது சாகங்களிலிருந்து துளிர்த்தும், அசுவங்கள் அல்லது பசுக்கள், அல்லதி மனிதர், அல்லது யானைகளுமாகவுண்டாகி, எல்லாச் சீவபிராணிகளாக இருப்பவைகள், நடப்பவைகள், அல்லது பறப்பவைகள், பூண்டுகள், விருட்சங்கள், ஆகிய யாவத்து அசரங்களும், அவைகளெல்லாம் அறிவின் நோக்கமாக இருக்கின்றன. அறிவின்பேரில் எல்லாவஸ்துக்களும் ஆதேயமாயிருக்கின்றன. உலகம் அறிவின் நோக்கமாக இருக்கின்றது. அதற்காதாரம் அறிவேயாம். அறிவேபெரியவஸ்துவாகிய பிரம்மாவாக இருக்கின்றது.

இந்த இயற்கையறிவாகிய ஆத்துமாவினால்தான், அந்தயோகி யிந்த உலகத்திலிருந்து சுவர்க்கத்துக்கேறி எல்லாக் கோரிக்கையும் அடைந்து சாவில்லாதவனானான்.

என்னுடைய பேச்சு அறிவின் மீது ஆதாரப் பட்டிருக்கலாம். என்னுடைய மனது எனது சனிப்பினிடத்தில் கவனமாயிருக்கலாம், ஓ! சுயம் விளக்கமாகிய அறிவே எனக்கு விளக்கமாயிருக்கக் கடவாய். எனக்காக ஓ பேச்சே! ஓ மனதே! இந்த வேதத்தை யணுகுவாயாக. நான்

கேள்விப்பட்டிருக்கிறது மறந்துபோகாதிருக்கக்கடவது. இரவும் பகலும் நான் அவதானித்திருப்பதை யுற்றுப்பார்த்துக் கொண்டிருப்பேனாக. உண்மையை நினைப்பேனாக, சத்தியத்தைப் பேசுவேனாக. அது என்னைக் காப்பாற்றக்கடவது. கற்பிப்போனைக் காப்பாற்றக்கடவது. அது என்னைத் தற்காக்கக்கடவது. அதைக்கற்பிப்போன் தற்காக்கக்கடவது. கற்பிப்போனை அது தற்காக்கக்கடவது. என்று இருக்குவேதத்தின் மன்றொருபாகமாக விருக்கின்ற ஐத்திரேய ஆரண்ணியகத்தில் கடைசியில் சொல்லப்பட்ட நான்கு அத்தியயனங்களுடைய "ஐத்திரேய" உபநிஷத்தில் சொல்லியிருப்பதாக வெளிவந்திருக்கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

**V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,**
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

---

(242-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## சக்கிய சம்வாதம்.

ஆதவன்:—பாஷை யென்பதின் அர்த்தம் ஒருவனுளக்கருத்தினை யொருவனுணருஞ் சாதனமென்பதாகையால் வேதம் பாஷாவடிவல்லாததெனக் கூறுவது எவ்விதம் பொருந்துமாறுளதோ அதனைக் கேட்க விருப்புளேன்.

பிரபோதன்:—பாஷை சத்த வடிவாகவும், அக்ஷரசகிதமாகவும் இருபகுதியாகவுள்ளன. இதனை மனுஷியபாஷை, மிருகபாஷை, பக்ஷிபாஷை, நயனபாஷை என்பனவாகப் பலதிறப்படும். அதாவது பக்ஷி, மிருகம், கிருமிகீடம், ஊமன் ஆதியவர் தங்களுக்கு அனுகூலப் பிரதிகூல விஷயத்தினைப் பிறர்பால் தன் கருத்தினை யெவ்விதமுணர்த்தி யின்பமடைவதோ அது தான். ஆயினும் சுருதி அங்ஙனமன்று. ஜீவர்களின் கருமத்திற்கீடாகச் சுகதுக்கத்தினைச் சேர்ப்பிக்கும் சர்வ சக்திமானாகிய கடவுளின் உண்மை யனுபவம் எவனுளத்திற் பதிந்துளதோ அத்தகையோரால் சாதாரண மனிதர்கள் உற்சாகத்திலும், உறக்கத்திலும் தாம் கண்டு கேட்டறியாத சில வசனங்களைக் கூறுவதுபோல காலதேசவர்த்தமானத்திற்கீடாகக் கூறுவதாம். அதுவே நாளடைவில் ஒரு பாஷையில் அதனைச் சேர்த்துப் படித்தும் பழகி வரச் சிரகாலமாகின் அப்பாஷையிலேயே வேதம் வந்தது எனவும், அது வேதத்திற்குரிய பாஷையானதால் தேவபாஷை யெனவும் கௌரவித்துக் கூறுவது உலக வியல்பாகவுளது. இது "காவிறையே கூவிறையே" என்ற சொற்றொடரினை அறிவினனாகிய விறகுதலையன் கூறவும், அதிமேதாவியாக விளங்கிய கம்பநாட்டடிகள் அதனை யாப்புக்குப் பொருத்தஞ்செய்து உறைவகுத்து அவனைமேன்மையுறச்செய்த சரிதம் போலவாம்.

ஆதவன்:—சுவாமிகள் என்பாலத்யந்த கிருபையுடன் வெளியிட்ட அரிய விஷயத்தினைக் கேட்டு என் மனம் பேருவகையடைகின்றது. ஆயினும் வேதசம்பந்தமான பாஷைமாத்திர மிவ்விதமா? மற்றேனைய பாஷைகளு மிப்படியா?

பிரபோதன்:—அன்ப! நன்கு கூர்ந்து கவனிப்பாயாக. சர்வபாஷையும் அங்ஙனமே. அதில் தமிழ்ப் பாஷையும் எழுத்தில்லாது பேசியகாலமெனவும், எழுத்துக் கற்பித்ததாகவும், இலக்கணம் இலக்கியம் கற்பித்ததாகவும், சரிதைவாணர் கூறுவர். அங்ஙனே வேதத்து அங்கமாகிய சட்சாஸ்திரத்தில் ஒன்றாகிய வியாகரணம் பலவிருப்பினும் பாணினியின் வியாகரண மாத்திரமே வேதாங்கமாக அங்கீகரிக்கப்பட்டுளது. அதன் காரணம் விசுவாமித்திரன் என்ற வாக்கியத்திலிருபதத்தினும் விஸ்வ (ஜகத்குரு) அமித்திரனென வுரைகூறவும், பாணினி யங்ஙனம் கூறாது ஜகத்திற்கு மித்திரன் என உரைகூறி இலக்கணம் கற்பிக்கவும், அதனால் மனமகிழ்ந்து இதுவே வேதத்துக்கு அங்கமாகக் கடவதெனக் கூறினராம். அதுமுதல் வேதாங்கமாகப் பாணினி வியாகரணமாகிய தென்றால், அதற்குமுன் இன்றென ஏற்படுவதால் எப்போது வியாகரணமாகிய அங்கமில்லாத காலத்தினை ஒப்புக்கொள்வோமோ அங்ஙனமே எழுத்து இல்லாத காலமும், எழுத்து கற்பித்த காலமும், இலக்கணம் கற்பித்த காலமுமாமென ஒப்பித்தான் தீரவேண்டும். இதனை விளக்குதும்.

தமிழ்மொழி நிலவும் தென்னாட்டில் மெய்கண்ட தேவாதிய பலரும் ஞானநூல்கூறி யதுகள் தனித்தனியாக இருக்கவும், அதிமேதாவியரும், ஈஸ்வரானுக்கிரகதற்பரரும், இருமொழியும் நன்குணர்ந்தவராகிய ஸ்ரீமத் சிவஞானயோகிகள் அந்நூற்களை ஒன்றுசேர்த்து வகுத்துப் * பதினான்கெனக் கணக்கிட்டு விளங்குமாறு செய்தது பிரமாணிகமும் அங்கீகாரமுமாமோ, அங்ஙனே வேதமும் அங்கமாதிகளும் காலதேச பாஷையின் பிறழ்ச்சிகளைக் கவனியாது பிரமாணிக மெனவே பல வித்வான்களும் அங்கீகரித்து வருகின்றனர்.

ஆதவன்:—அங்ஙன மாயின் அங்கமாவது யாது?

பிரபோதன்:—சந்தசு, கற்பம், வியாகரணம், நிருத்தம், சிட்சை, சோதிடம் என ஆறும். அவற்றில் சந்தசானது வேதத்தின் ஸ்வரத்தின் அளவை மாத்திரையின் நீட்டல் குறுக்கலாலுண்டாம். உதாத்த மனுதாத்த மாதிய பேதங்களைக் கூறும் நூலாம். கற்பம், கர்மம் செய்யும் விதிகளும் பலனும் அதிகாரியினிலக்கணம் சாமக்கிரிகைகளும் செய்யுங் கிரமமாதிய வற்றையுங் கூறுவதாம். வியாகரணம், எழுத்து உற்பத்தியும், சந்திகளும், வேற்றுமைகளும், பதங்களும், பாக்களின் விதியும் அழகும் கூறும் நூலாம். நிருத்தம், வேதத்திலுள்ள கடின பதங்களுக்குச் சங்கேதமாக அர்த்த நிர்ணயம் செய்துள்ள நூலாம். சிட்சை பதார்த்தங்களை நிர்ணயிப்பதாம். இதனை நிகண்டெனவுங் கூறுவர். சோதிடம், காலங்களின் அனுகூலப் பிரதிகூலங்களை நிர்ணயஞ் செய்யுங் கருவியாம். இவ்வாறு நூலாகிய அங்கம் பிற்காலத்தவர்களாகிய பல இருடிகளா லியற்றியும் வேதத்திற்கு அங்கமாகவும் பிரமாணமாகவுமான தெவ்வழியோ அவ்வழியே வேதமும் ஏனைய கலைகளும் பிரமாணமாக மதித்தொழுகலே அறிவுடையார்கடனும்.

ஆதவன்:—இதுகாறுங் கூறிய அரிய வசனமிருதத்தினைச் செவிமடுத்தின்புற்றேனாயினும் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதுபோலத் தாங்கள் என்மீது கிருபாநோக்கமும் பிரசன்ன முகத்துடன் புரோத்ஸாக பூதராகச் சொல்லவல்ல பாக்கிய முடைமையை நினைக்க என்மனம் பரம சுகமய மாகின்றது.

பிரபோதன்:—சக்கியபோக்கிய சாத்மீக விவேகியாகிய நீகேட்கவேண்டியவற்றைச் சாவதானத்துடன் கேள்.

ஆதவன்:—இரட்டைப் புலவர் விஷயமாகச் சொல்லியவற்றின் விரிவை அறிய விருப்புளேன்.

பிரபோதன்:—நண்ப! அவர் ஜன்மாந்திர புண்ணிய விசேஷத்தினால் உத்தம ஞானிகளாகவும், தெய்வச் செந்தமிழ்ப் பாஷா வலிவுடையனவாகவும், அருட்கவிகளாகவும், செங்குந்தர் மரபில் மல்வளமிக்க தொண்டைநாட்டிற் செனித்து தலைவருநாளில் காஞ்சியுலா வென்னும் ஒரு அரிய பிரபந்தத்தினைச் செய்துகொண்டு

---

* உந்தி களிறோ டுயர்போதஞ் சித்தியார் பிந்திருபா வுண்மைப் பிரகாசம்—வந்தவருட் பண்புவிஞபோற்றிகொடிபாசமிலாநெஞ்சுவிடு உண்மைநெறி சங்கற்ப முற்று.

அரங்கேற்றுவான்சென்று அங்குள்ள அரசன் தலைமையிற் பல வித்வான்கள் புடைசூழவிருக்கு மவைக்கண் முதற்செய்யுளாகிய காப்பி னுட்பொருளை விரித்துரைக்குமளவில் ஆயிரக்கால் மண்டபத்துக் கருகிலுள்ள விகடசக்கர விநாயகர் என்றுகூறிய வளவில் அருகிலிருந்த வித்வான்கள் ஆயிரக்கால் மண்டபமும், அருகில் விநாயகராலயமு மில்லாததினால் இது என்ன விபரீதமாக விருக்கின்றதென, அதற்கு அவர்கள் யாமுமறியேம். அவளும் பொய் புகலாள் என்று விடைகூறி நிறுத்திப் பல தேசாடனஞ் செய்து வரும் நாளில் ஆலயத்தினுள் மண்மேடு இருப்பதை யெடுக்க வாரம்பித்தவரசனுக்கு அதனுள் ஆயிரக்கால் மண்டபமும், விகட சக்ர விநாயகாலயமும் கண்டு களிப்பெருவகைக் கடலுளாழ்ந்து அவ்விருவரையும் அழைப்பித்து அரங்கேற்றுதல் செய்து அப்போது அந்தப் பிரபந்தத்திற்குத் 'தெய்வீகவுலா' எனத் திருநாமஞ் சூட்டப்பெற்று நாளும் வழங்கி வருகின்றது. பின் நல்காத்தூர்ப் புராணஞ்செய்து அரங்கேற்றுங்கால் ஒரு கவியில் நதிக்குத் தென்பாலிருக்கு மாலயத்தினை வடபா லிருப்பதாகக் கூறியவற்றினைச் செவியேற்ற பலரும்சங்கிக்க வதற்கும் முன்கூறியவாறே விடைபுகன்றுவதிய அன்றிரவில் மேகதாரையினால் வெள்ளர்வந்து பழமையாகிய நதி தடைப்பட்டுத் தென்பால் நதி யேற்பட்டு விடவே பலரும் வியந்து மிகுந்த பயபக்தியுடன் புராணபடன முடியுமாறு செய்து மகிழ்வடைந்தது பிரசித்தியாக வுளது.

(தொடரும்.)

பொது நன்மையை விரும்பும்

**ஓர் சாது.**

(236-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## இந்திய சிற்பமும் அதன் முன்னேற்றமும்.

### 4. சிற்பநூல் விளக்கம்.

முக்கிய சிற்பநூற்களில் மூன்றுவதாகக் கூறப்பட்டுள்ள 'காசிபம்' என்னும் நூலை இயற்றியவர் காசிபரிஷி யென்றும், அவர் சப்தப்பிரஜாபதிகளில் பிரதமஸ்தானத்தை வகித்தவரென்றும், உலகம் கீழ்மேலதாகப் பெரும் பிரளயம் வந்துற்றகாலை தம் தவவலிமையால் உயிர்தப்பி அரனாணையால் பின்பூவுலகில் மாக்களைப்புதுப்பித்தனரெனவும் சொல்லப்படுகின்றது. முன்னர் கூறியுள்ள அதி சிற்பநூற்களாகிய 'மானசாரம்,' 'மயமதம்' ஆகிய இருநூற்களிலும் 'காசிபம்' என்னும் இந்நூல் மிகத்தெள்ளிய நடையில் எழுதப்பட்டிருப்பதோடும், ஆலய, விக்கிரக நிர்மாண பேதங்களைப் போதுமான வரையில் விரிவாகவும் இதனுள் விளக்கப்பட் டிருக்கின்றது. அப்புத்தகத்தின் துவக்கத்தினின்று அந்தம் வரையிலுமுள்ள விஷயங்கள்யாவும் நாடக ரூபமாகவும், சம்வாதரூபமாகவும் எழுதப்பட்டுள்ளனர். காசிபத்திலுள்ள சிற்பவிஷயங்களின் உண்மைகளையும், இரகசியங்களையும், சாட்சாத் சிவபிரான் உரைக்க தீரம் எழுதி உலகிற் குணர்த்தினரென அந்நூலாசிரியர் தம் நூன்முகத்தில் கூறியுளார். அந்நூலில் பல விடங்களிலும் "துவிஜோத்தமர்" என அந்நூலாசிரியரை முன்னிலைப் படுத்திக் கூறியுள்ள வற்றால் அந்நூல் சிவபெருமான் கருணையோடளித்தனரென நம்புவதற்கும் இடந்தரும்.

இந்நூலால் விஷயத் தொகுப்பிலும், அவைகளை விளக்கு முறையிலும் மானசாரத்திற்கு ஓர் சிறிதும் தாழ்ந்த தன்று. ஆயினும், விஷயங்களின் வரிசைக்கிரமங்கள் மட்டும் சிறிது முறைபிறழ்ந்து காணப்படுகின்றதெனினும், சாராம்ஸங்களில் சமநிலை பெற்றுப் பிரகாசிக்கின்றது. இந்நூலின் பிரதம அத்தியாயத்திலேயே நிலங்களின் பேதாபேதங்கள் விளக்கப்பட்டு, வாஸ்து புருஷரின் இலட்சணங்களையும், அன்னோரை வழிபடு மார்க்கங்களையும் உரைத்து பின் சூரிய கடிகாரம், திசையறிகருவி முதலிய இயந்திரங்களை இயற்றும் வகைகள் யிற்றெனக் கூறியபின் அஸ்திவாரக்கல் நாட்டுங்கால் அநுசரிக்கும் விதிவிலக்குகளையும் வழிபாடுகளையும் செவ்வனே வழுத்தும். பின்னர், கற்றூண்களின் பேதாபேதங்களையும், அவற்றைச் சீர் தூக்கி சித்தரிக்கு முறைகளையும், அவைகளை இடமறிந்து நாட்டுமியல்பையும், அவற்றின் பரிமாண பாகுபாடுகளையும் புகலும். இறுதியில், ஆலய, விக்கிரக பேதாபேதங்களையும், இலட்சணங்களையும் சந்தேக விபரீதமறச் சாற்றும்.

நான்காவது முக்கிய சிற்பநூலெனக்கருதப்படும் 'வேகநாசம்' என்னும் கிரந்தத்தை ஓர் வைணவசமயாச்சாரியர் இயற்றினரென இயம்புவர். இந்நூல் பாவினங்களைப் போன்று தளை, மோனை முதலிய இலட்சணங்களைப் பெற்ற ஓர் வகை வசன நடையில் எழுதப்பட்டு, வைணவத்திற்கு ஆங்காங்கு தேற்றத்தையும் கற்பித்த வண்ணமாகவே வரையப்பட்டுள்ளது. இந்நூல் சிற்பமுறைகளைச் செப்பும் திறமையைக் காட்டிலும், மந்திர, தந்திர, சுவர்ன புஷ்பாதி விஷயங்களையும், பிராம்மணோத்தமர்களையும், பசுக்களையும் பூஜிப்பதாலாகிய புண்ணியபலன்களையும் எல்லையின்றிக் கூறுவதில் இணையற்றிருக்கின்றதென சந்தேகமின்றிச் சாற்றலாம். இந்நூலாசிரியர்தம் நூலின் பிற்பாகத்தில் அடிக்கடி காசிபத்தைமேற் கோளாகக்கையாண்டிருப்பதால் இந்நூல் காசிபத்திற்குப் பிற்பட்டதென்பதற்கையமே யில்லை. இந்நூலின் முதல் அத்தியாயத்தில் பாரத பூமியின் பெரும் வனப்பினை வர்ணித்தெழுதிப் பின், அப்புண்ணிய பூமியின்கண் எண்ணரிய சற்கருமம் இயற்ற நன்றென்றும் நவிலும். வேதங்களிலுரைத்த வேள்விகளியற்றி மழைக் கடவுளை உத்ஸாகப்படுத்தும் மார்க்கங்களையும், அக்கிரிகைகளின் மர்மங்களையும் விரிவஞ்சாது விவகரிக்கும். ஆகையின் ஈண்டு கூறியவற்றால் சிற்பமுறையை செவ்விதினுணர்வதற்கு இந்நூல் சிலாக்கிய மன்றெனச் செப்புவது பொருந்தும்.

ஐந்தாவது அதி நூலாகிய சகலாதிகாரம் அகஸ்திய முனிவரால் அருளியதாகும். இந்நூல் காத்திரத்திலும், அத்தியாயப் பெருக்கத்திலும் மானசாரத்திற்கு முற்பட்டிருக்கிறது. இந்நூலிலுள்ள விஷயங்கள் யாவும் மானசாரத்தைத் தழுவிக் கூறப்பட்டுள்ளமையால் மானசாரத்திற்குப் பின்னரே ஆக்கிய நூலாகும். இந்நூல், சாலிவாகன சகாப்தம் மூன்றுமாண்டினிறுதியில் செய்யப்பட்டதென்றும், சைவசமயக் குரவர்களான நால்வர்களின் முத்திகாலத்திற்குப் பிற்பட்டதெனக் கூறுவாருமுளர்.

(தொடரும்.)

**T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியர்,**
சென்னை சிற்பவித்தியா சங்கத்தின்,
அங்கத்தினர்.



## பக்தி.

ஒவ்வொருவருக்கும் சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்த ப்ராத்திபாய மோக்ஷத்தையடையவேண்டு மென்னும் இச்சையுளதென்பதற் கெவ்வகையானு மையமேயின்றாம். அங்ஙனமிருக்க ஷெ மோக்ஷத்தை யடைதற் கின்றியமையாச் சாதனங்களை யடையாது விஷயங்களை முன்னிட்டுண்டாஞ் சுகத்தைப் பற்றுவதா லச்சுகம் மாறிப்போகின்றதென்பதை கவனியாததாற்றான் மேற்கூறிய மாறு மோக்ஷம் கிடைப்பதின்றாம். மாறு நிலைமையாய இம்மோக்ஷத்தையடைதற்கு தக்கசாதனங்களையுள்ளவா றுணர்ந்து அப்பியாசஞ் செய்யின் சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப்

பிராப்தியாகிய மோக்ஷம் எத்தன்மையோருக்கும் கிடைக்குமென்பதொருதலையாம்.

முக்கியமாக மனவொருமைச் சித்தியாவிடின் எச்சாதனமுங் கைகூடாதாதலால், ஒவ்வொருவருக்கும் மனவொருமை யவசியமாமென்பது "விரிந்த நெஞ்சங் கருவியாம் விடயமுணர விரியாமல், ஒருங்கு நெஞ்சங் கருவியாம் தன்னை யுணர" என்று துறைமங்கலம் சிவப்ரகாச சுவாமிகள் கூறுவதை யுற்றுநோக்கின் செவ்வனே புலனாம்.

அங்ஙனமாய மனவொருமை, ஈஸ்வர பக்தியாலெளிதிற் கைகூடுமென்பது அறிஞர் கூற்றாம். ஆதலால் பக்தியை யடைதலே பரமமுக்கியமாம்.

பக்தி என்பது, கடவுளிடத்து பூசிக்கத்தக்க புத்தியோடுண்டாம் அன்பு எனவும், பகவதாகார விருத்தி எனவும் பெரியோர் பணித்துள்ளனர். இதனைக்கடவுளிடத்துச் செலுத்தல்பக்திஎனவும், குருவினிடத்துச் செலுத்தல் விஸ்வாசமெனவும், சிநேகனிடத்துச்செலுத்தல் நட்பு எனவும், மனையாளிடத்துச்செலுத்தல் ஆசை எனவும், புத்திராதியோரிடத்துச் செலுத்தல் விருப்பம் அல்லது பிரியமெனவுங் கூறுவர். இது நிற்க.

மேற்கூறிய பக்தி பலவகைப்படும். அவை மனத்தால் செய்யும் பக்தி, வாக்கால் செய்யும் பக்தி, காயத்தால் செய்யும்பக்தி, இலௌகீக பக்தி, வைதீக பக்தி, ஆதிஆத்மீக பக்தி எனப் பலவகையாம்.

அவற்றுள்:—

(1) மனத்தால் செய்யும் பக்தியாவது–தியானம் தாரணைகளோடு கூடிய வேதங்களின் ஸ்மரணங்களினால் கடவுளுக்குப் பிரீதியை யுண்டுபண்ணுவதாம். (2) வாக்கால் செய்யும் பக்தியாவது–இரவும் பகலும்வேதமந்திரங்களையுச்சரிப்பதனாலும், ஆரண்யகமெனும் வேதபாகத்தினுடைய ஜபத்தினாலும் உண்டாகின்றதாம். (3) காயத்தினாற் செய்யும் பக்தியாவது–விரதம், உபவாசம், நியமம் என்னும் இவைகளும், இந்திரிய நிக்ரகமுமாம். (4) இலௌகீக பக்தியாவது–அர்க்கிய பாத்திய முதலிய உபசாரங்களாலும், ஆடல்பாடல் வாத்திய கோஷமென்னும் இவைகளாலும், நைவேத்திய வஸ்துக்களாலும் கடவுளை உபசரிப்பதாம். (5) வைதீக பக்தியாவது–இருக்காதி வேதங்களின் மந்திர ஜபங்களாலும் (வேத) சம்ஹிதாத்தியயன முதலியவைகளாலும் ஹவிசை ஹோமஞ் செய்கிற கிரியைகளினாலுஞ் செய்வதாம். (6) ஆதியாத்மீக பக்தியாவது-பிரதமதத்துவம் பிரகிருதிதத்துவம் ஜீவதத்துவம் முதலியவைகளின் சொரூப விசாரமும், யோகத்தினால் சிவ விஷ்ணுக்களின் சொரூபத்தியானமுமாம்.

இங்ஙனமாய பக்தி செய்யும்போது விலக்கத்தக்கவைகளாவன:—(1) சத்புருஷர்களது நிந்தை. (2) அசத் புருஷர்களிடத்து ஈசுவர நாமத்தின் மகிமையைச் சொல்லுதல். (3) சிவ விஷ்ணுக்க (அதனுடலட்சிக்கப்பட்ட கணேசன், சூரியன், தேவி என்பவர்க)ளிடத்துப் பேதபுத்தி (அஃதாவது சிவனுக்கு வேறாக விஷ்ணு முதலியவர்களை யறிதல்). (4) வேதவாக்கியங்களில் விசுவாசமின்மை. (5) சாஸ்திர வசனங்களில் சிரத்தையின்மை. (6) குருவாக்கியங்களில் சிரத்தை யின்மை. (7) ஈசுவர நாம மகாத்மியத்தில் அர்த்தவாதப்பிரமம் (அதாவது யக்யத்தின் கம்பம் சூரியனும் என்பதுபோன்று ஸ்துதியை யறிவிப்பதாமென்னும் மயக்கம்). (8) ஈசுவரநாமம் சகல பாவத்தையும் கெடுப்பதாமென்னும் புத்தியால் நிஷித்தகர்மங்களை யாசரித்தல். (9) மகத்தான புண்ணியத்தை யுண்டாக்குவது ஈசுவர நாமமென்னும் புத்தியால் விகிதகர்மங்களை விடுதல். (10) அன்னிய தர்மங்களுடன் ஈசுவரநாமம் சமானமாமென்றறிதலென்னு மிப்பத்தும் ஈசுவர நாமத்தின் அபராதங்களாகையால் இவற்றைவிட்டுப் பிராதக்காலம், மத்தியானகாலம், சாயுங்காலம், மத்யாத்திரிகாலமென்னும் நான்கு காலங்களிலும் ஈசுவர நாமத்தை இலட்சம் அளவாகவேனும், அதனினுமதிகமாகவேனும் உச்சரித்து அதனிடத்து சித்தவிருத்தியை நிறுத்தல்வேண்டும். இவ்வாறு செய்யுமிடத்துத்தான் பக்தி உறுதிப்படும். இவ்வாறனுஷ்டிக்குமிடத்து மலமு (பாவமு)ம் விட்சேபமு (மனம் ஒருமுகப்படாமையு)ம் விரைந்து கெடும்.



இப்பக்தியானது பக்தி என்றும் பிரபக்தி என்றும் இருவகைத்தாம். பக்தி என்பது பெரும்பான்மையாகக்காமியமாகவும், நிஷ்காமியமாகவும் இருக்கும். பிரபக்தி என்பது நிஷ்காமியமாகவே யிருக்கும். பக்தியாவது சாஸ்திரங்களிற் கூறியவாறு ஈசுவரனைப் பஜித்தலாம். பிரபத்தியாவது சகல தருமங்களையும் விட்டு ஈசுவரனையே புகலிடமாக வடைந்து தனக்கெனச் சுதந்தரமென்பதின்றிப் பஜித்தலாம். இன்னுமிப்பக்தி பலவிதமாகவு மிருக்கும்.

ஈசுவரபக்திசெய்யுமிடத்து அது பாகிய பக்தி, அநந்யபக்தி, ஏகாந்த பக்தி என்று மூன்றுவிதமாம். எவ்வகைத்தாய பக்தியும் இம்மூன்றனுள் ஒவ்வொன்றன் கண்ணேயே அந்தர்க்கதமா யிருக்கும்.

மேற்கூறிய மூன்று பக்திகளுள் (1) பாகிய பக்தி நவவிதமா யிருக்கும். அவை (1) சிரவணம் (2) கீர்த்தனம் (3) ஸ்மரணம் (4) பாதசேவனம் (5) அர்ச்சனம் (6) வந்தனம் (7) தாசபாவம் (8) சகாபாவம் (9) ஆத்மநிவேதனம் என்பனவாம்.

இவற்றுள்:— (1) சிரவண மென்பது–கடவுளின் அனந்தகல்யாண குணங்களைக் கேட்டுச்சந்தோஷித்தலாம். (2) கீர்த்தனமென்பது–சுரஸாயித்யாதிகளோடுகடவுள் குணநுபூதிகளைப் பாடுதலாம். (3) ஸ்மரணம் என்பது–பகவானுடைய அநந்த திருநாமங்களைச் சதா ஜபித்தலாம். (4) பாதசேவனமென்பது–பகவானுடைய திருவடிக்கமலங்களைச் சேவித்தலாம். (5) அர்ச்சனமென்பது – கடவுளுடைய திருவடிகளிற் பத்திர புஷ்பாதிகளாற் பூசித்தலாம். (6) வந்தனமென்பது–பகவானைச்சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தலாம். (7) தாசபாவமென்பது–சதா தாசபூதனா யிருத்தலாம். (8) சகாபாவமென்பது – கடவுளிடத்துச் சிநேகம்பாராட்டியிருத்தலாம். (9) ஆத்மநிவேதனமென்பது - தேகாதி யாவற்றையும் கடவுளுக்குச் சமர்ப்பித்தலாம். ஆகிய ஒன்பதும் பாகிய பக்தியாம்.

(2) அநந்திய பக்தியாவது–மிருக பட்சியாதி சகல சராசரங்களையும் கடவுள் சொரூபமாக வெண்ணி நமஸ்காரஞ் செய்வதுடன் பகவந்நாம சங்கீர்த்தனங்களைச் சேவிப்பதுமாம். (3) ஏகாந்த பக்தியாவது–சகல பூதங்களினு மிருக்கிற கடவுளை அபேதமாக வறிந்து பஜித்தலாம்.

இன்னு மிப்பக்தியைப் பற்றி அநேகவிதமாகக் கூறியிருப்பினும் "உடல்குழையவென்பெலா நெக்குருக விழிநீர்களூற்றென வெதும்பியூற்ற, ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே யோருறவு முன்னியுன்னிப், படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப் பாடியா டிக்குதித்துப், பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை பரப்பியார்த் தார்த்தெழுந்து, மடலவிழு மலரனைய கைவிரித்துக்கூப்பி வானேயவானிலின்ப, மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி வாழியென வாழ்த்தி யேத்துங், கடன்மடை திறந்தனைய வன்பரன்புக்கெளியை கன்னெஞ் சனுக்கெளியையோ, கருதரியசிற்சபையி லானந்த நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே" என்று ஸ்ரீ தாயுமானார் கூறியுள்ள திருப்பாசுரத்தை யுற்றுநோக்கி கிரமந் தவராது மெய்யன்போடு செய்யும் பக்தியே உத்தமமாம். "கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக் கருத்தொன்றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழு, மெய்யொன்றுசாரச் செவியொன்றுகேட்க விரும்புமியான், செய்கின்ற பூசையெவ்வாறுகொள்வாய்வினை தீர்த்தவனே" என்று பட்டினத்தடிகள் கூறியபடி திரிகரண சுத்தியின்றி செய்யும் பக்தி பிரயோசனமின்றிக் கெடுவதாம். இவ்வாறு செய்த

லொழிந்து மேற்கூறிய வண்ணம் மெய்யன்போடு பக்திசெய்து மனவொருமையை யடைந்தவர்க்கே எல்லாம்வல்ல இறைவன் “அருவனாயினு மன்பர்க் குருவாய்வருவ” னென்று பெரியார் பணித்தவாறு குருமூர்த்தமாக வெழுந்தருளிவந் தனுக்கிரகஞ் செய்வார். அவ்வனுக்கிரக விசேஷத்தால் சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தியாய மோக்ஷத்தை யடைதலே பரமப்பிரயோசனமாதலால் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இதுவேமுக்கியமாம்.

குழந்தைவேலாச்சாரி,
நரசிங்கபுரம்.

(239-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## விஸ்வதபிரான்.

யாகசாலையில் எதிர்பார்த்திருந்த அனைவர்களும் அவருடைய நிலைமையைப்பார்த்து விசேஷமுளதாயின் தெரிவிக்கவேண்டுமெனப்பகர்ந்தார்கள். மகரிஷிகளோ விஸ்வதர் மண மகோற்சவம் நடக்கப் போகிறதென அறிந்து கொண்டார்கள். சக்கிரவர்த்தியார் யாகபலனானது கிடைத்ததாகும், விஸ்வதர் திருக்கல்யாண பட்டாபிஷேக வைபவம் நடத்தப்பட வேண்டியதென்று சொல்ல, மகிழ்வு கூர்ந்து ஆலோசனைசெய்தார்கள். இவ் வைபவத்திற்குஆத்மணி நகரம் போல் மாட கூடங்கள் விளங்கப்பெறுவதான நிலையுடையதோ இத்தென்னெல்லைப் பிரதேசம் என்றாலோசிப்பார் சிலர்கள்; விஸ்வதருக் குவமையான பிராட்டியார் எவ்விடம் ஆவிர்பாவமாயிருக்கிறதோ என்று சங்கிப்பார் சிலர்கள்; பூமியின் நானாதிக்கு களிலுமுள்ள பிரஜைகள் வந்து சேரவேண்டியதும், அநேக சிருஷ்டிகர்மங்களைப் பெறவேண்டிய ஹேதுவிருப்பதினால் மாங்லைதயாளர்களும் வந்து சேரவேண்டியதே என்றும், விசேஷமாய் யோசிக்குங்கால், விஸ்வதர் திருமணம் கிரீட தாரணம் நடத்தப் பெறுவதற்குக் காலம் லபித்தும் இத் தென்னெல்லையே அதற்கேற்ற ஸ்தானமாயும் பகவத் வீக்ஷண்யமு மிருப்பதால் இவ்விட முள்ள ஆன்மகோடிகள் அதற்குக்கைங்கர்ய தாரர்களாயிருக்க அம்மகோற்சவத்தை நடத்த முற்படுவோமாக என, சக்கிரவர்த்தியார் தெரிவிக்க, அப்படியே யாவரும் பூபதியை முன்னிட்டு தேவாலயத்தில் மகாமண்டபங்களிலும் அங்கு சூழ்ந்துள்ள வனங்களிலும் பிரவேச மானார்கள்.

நிர்ணயிக்க வேண்டிய சித்திராலங்கார ஸ்தானங்கள் அங்குதானே விளங்காநின்றுள்ளது. பைரவக்காப்பு முதல் யாகஸ்தலம் வரையில் அலங்கரிக்கத் தொடங்கி, திருக்கல்யாண மகோற்சவம் ஆரம்பிக்கலானார்கள். இவ்வாறான போது, தென்னெல்லையில் யாகம் உத்கிருஷ்டமாய் நடைபெறுகிறது என்றதைக் கேள்வியுற்ற சக்ரதரேஸ்வரன் தனது புதல்வர்களுக்கு விஸ்வதலோஹிதாளை சிரச்சேதம் செய்து வரும்படியாய் ஆக்ஞாபித்த வுடன், அவனுடைய புதல்வர்களி லெண்மர்கள் படையுடன் திரண்டு தென்னெல்லையில் யுத்தசன்னத்தர்களாக ஆனார்கள். அப்பொழுது சத்துருக்களின் கோரங்களை சகிக்காது ரிஷி முதலானோர் விஸ்வதரைப் பஜித்த வளவில் லோஹிதரால் சத்துருக்களி லனேகர் சங்கரிக்கப் பட்டும் அடாது நின்றதால் விஸ்வதர்யுத்த சம்ரம்பத்தில் உத்தாரணராய் ருத்ர தண்ட அஸ்திர சஸ்திரத்தினால் சம்ஹாரஞ் செய்ததின் பேரில் மலர் மங்கள ஸ்நானமானார்.

உடன் திருக்கல்யாண மகோற்சவமாக, கோபுர சிகரத்தில் கொடிகளானது பறக்க



வும், அதன் தோற்றத்தினால் தென்னெல்லையில் விஸ்வத பிரான் எழுந்தருளி யிருக்கிறாரென்றறிவிக்கிறது போலிரா னின்றும், இனிய வனங்களில் ரூபவிசேஷமாயுள்ள தேவபசுக்கள் மான்கள் சஞ்சாரம் விஸ்வதப் பிரபவத்தைச் சுரந்தருளுவது போலிரா னின்றும், தழைத்துள்ளப் பசுந்தளிர்களின் மத்தியில் விகஸிதமான புஷ்பங்கள் விஸ்வதர் வைபவத்தைத் தரிசிக்கிற கண்கள்போ லிரானின்றும், நீலங்களாயும், கருநீலங்களாயும், ஓவண்ணிறங்களாயும், பசுமைகளாயு முள்ள பறவைகளின் சப்தங்கள் வனங்களை தொனிப்பித் திரானின்றும், மதுரமாயும் முனிவர்கள் புசிக்கத் தகுந்தவை களாயுமுள்ள கனிவர்க்கங்களோடுங் கூடின சில விருக்ஷங்கள் அவைகளிடத்தி லிருக்கப்பட்ட மதுரமானவைகளை பெரியோர்களுக்கு உபசரித்து வணங்கிக் கொடுப்பதுபோல் பூமியோடு உபவாசித்துக் கொண்டுள்ளவைகளா யிரானின்றும், தபோதனர்கள் இனிதாய் அருந்தும் படி பாலைக்குடிக்கிறதுகளாயுமுள்ள சில விருக்ஷஜாதிகள் வெண்மையான இலைகளின் பரவலால் வெண்சக்ர வட்டங்கள் போட்டது போலிரா னின்றும், பூமிக்கு சமீபமாய் வளைந்துள்ள கிளைகளின் மீது மயில்கள் தோகைகளை விரித்தாடுவது ஆலவட்டம் போட்டதுபோ லிரானின்றும், இப்படியான விநோதங்களோடுங் கூடின வனங்கள் சூழ்ந்திரானின்றிருக்கவும், அங்குபரிவாரங்கள் மனோல்லாசமாய் வாசித்திருக்கவும், திரியங்கவிதானங் களோடும் பரிவிருத மாளிகைகளோடும் கூடி மத்திய உயர்வுஸ்தானமாய், சமீபக்காக்ஷியாளர்களுக்கும் சூழ்ந்துள்ள வனத்தினின்று திருஷ்டிப் போர்களுக்குங் காக்ஷீகரமாயுங் கூடி விளங்காநின்ற கல்யாண மண்டபத்தில் சமஸ்தமான பேர்களும் கூடியிருக்க, வாத்திய கோஷங்கள் த்வனிக்க, அரசர்கள் அரசிகள் ஸ்வர்ண ரஜித பட்டு பீதாம்பரகனிவருக்க புஷ்பகந்தஹாரங்களை வகித்துக் கொண்டு சித்ரவிலாசத்தில் விஸ்வதப் பிராட்டியாராகிய அஷ்டலக்ஷ்மி களுக்கும் முத்தேவிகளுக்கும் சான்ஹித்யமாய் விளங்காநின்ற கோமளா தேவியை எதிர்கொண்டு அழைத்து கல்யாண மண்டபத்தில் எழுந்தருளச் செய்தார்கள்.

இப்படியாக யாதொரு மண்டபத்தில் நவரத்ன கஜித சித்திரபீடத்தில் விஸ்வத பிரானும், கோமளாதேவியாரும் வீற்றிருக்கவும், திருக்கோலமாகி யாகாதிகிருத்யங்கள் நடைபெற்றும், அஷ்டாதச வாத்தியங்கள் முழங்கவும், மங்களநாதங்கள் த்வனிக்கவும், ஆலார்த்தி உபசாரங்கள் நடக்கவும், சுபகாலத்தில் விஸ்வதபிரானுக்கும் கோமளாதேவியாருக்கும் திருக்கல்யாண மஹோற்சவம் நடந்தேறிற்று. இப்படியாக பட்டாபிஷேகதினமும் பிராப்தியாக, ஊர்த்வஸ்தானத்தில் நவரத்ந கஜிதப் பிரகாச விலாசத்தில் மாணிக்க மரகதாதிகளினால் சோபிதமாயுள்ளசிம்மாசனத்தில்விஸ்வதர் பிராட்டியாரோடு எழுந்தருளியிருக்க, பரிசூழ பவளத் தூண்களால் சந்திரஹாரம் போன்ற மண்டபப்பிரகாரத்தில் தேவர்களும் முனிவர்களும் காக்ஷியாக, ஆலவட்டங்கள் சத்ர சாமராதிடக்கையங்கள் விஸ்ரம்பமாக, யானை பரிகள் கருத்மங்கள் சேவிதமாய் நிற்க, விண்மணியான கதிரவன் சிகாமணியாய் உச்சமாக, வாத்தியகோஷங்கள் கீதநாதங்கள் மறைகள் முழக்கப்பட, மேருவை வகித்துவந்தாற்போல சர்வமங்கள சுபவாசத்தில் விஸ்வதர்க்கிரீட தாரண பட்டாபிஷேக மஹோற்சவம் நடந்தேறிற்று. சுபம்.

சாலிவாடி புராதீனம்,
தர்மபதி.

(243-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## தென்னிந்திய சிலாசாஸனங்கள்.

தஞ்சை ராஜராஜேஸ்வர ஆலயத்தின் வடக்கு மதில் வெளிப்புறத்தில் மானியம் முதலிய விஷயங்களை ராஜ ராஜச் சோழ வர்மாவின் ஆக்ஞையால் வெட்டப்பட்டிருக்கிறது. இவ்வித மானியங்கள் விஸ்வ கர்ம வம்ஸத்தினர்க்கும் கொடுக்கப்பட்டிருப்பதோடும். அவர்களின் சந்ததியார்களும் அனுபவிக்க உரிமையுண்டெனவும் சொல்லப்பட்டிருக்கிறது. அச் சாஸனங்கள் இதனடியிற்காண்க.

௫௱. (க)ன்னன் ஒருவருக்கு இடைக்கரை (காரியா)ன க்ஷத்திரிய ஸிகாமணி(ப்) பெருங் (க)ன்னனுக்குப் பங்கு ஒன்றும்;

௫௱௨. தச்சாகா(ர்த்தயம் ஒ)ன்றுக்குப் ப(ங்)கு (ஒ)ன்(றரை)ர(யு)ம் ஆள் இரண்டுக்குப் ப(ங்கு) ஒ(ன்றரை)ரயும் ஆக வீரசோழன் குஞ்சரமல்லனு(ன) ராஜ ராஜப் பெருந்தச்சனுக்குப் பங்கு மூன்றும்;

௫௱௩. தச்சு ஒன்றுக்குக் கு(ண)வன் மதுராந்த(கனு)ன நித்தவினோதப்பெ(ரு)ந் தச்சனுக்குப் ப(ங்)கு முக்காலும்;

௫௱௪. மேற்படி ஒன்றுக்கு இலத்திசடையனுன (கண்)டாதித்தப் பெருந்தச்சனுக்குப் பங்கு முக்காலும்;

௫௱௫. பா(ண)ன் உத்தமன் சூ(ற்)றிய(ான) அ(ரி)குல கேஸரி (ச்சாக்)கை(க)க்குப் பங்கு ஒன்றரையும்;

௫௱௬. மேற்படி ஐயாறன் அறிஞ்சிக்குப் பங்கு (ஒ)ன்றரையும்;

௫௱௭. மேற்படி அ(ப்)ராயிதன் (வ)டவாயிலான பல்ல(வன்) சாக்கைக்குப்பங்கு ஒன்றரையும்;

௫௱௮. மேற்படி வ(டுவூர)றிஞ்சிக்கு(ப்) பங்கு ஒன்றரையும்;

௫௱௯. க(ண்)கா(ணி)த் தட்டாண்மை செய்ய ஓராளி(ட்டுப்பணி)செ(ய்)வித்துக் கொள்ளப்பெறுவ(ராக) உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் சிறுதனத்துக் கண்காணித்தட்டான் கூத்தன்கணவதியான [க்ஷத்ரி]யசிகாமணிப் பெருந்தட்டானுக்குப் பங்கு ஒன்று; என்றும் இன்னு பல மானியாதிகள் விடப்பட்டிருக்கின்றன. இச்சிலாசாஸனத்தில் கூறப்பட்டிருக்கிற 'பங்கு' என்பது ஒரு வேலி நிலமாகும். இந்த சிலா சாஸனத்தில் குறிப்பிடக்கூடிய விஷயங்கள் பல விருக்கின்றன. அவற்றைப்பற்றி மறுமுறை பேசுவோம்.

## நம் சகோதரர்களின் மாட்சி.

### எல்லூரில் ஏழாவது ஆரிய வைசிய கான்பரன்ஸ்.

இவ்வருடம் மேயீ 20உ யன்று எல்லூரில் கூடிய ஆரிய வைசிய கான்பரன்ஸில் ஸ்ரீ சல்லா குருசாமி செட்டியார் B. A., B. L., அக்கிராசனம் வகித்தார். அவருடைய பிரசங்கத்தில் சிலமுக்கிய விஷயங்களைப்பற்றிப் பேசி அக்குறைகளை சீக்கிரம் நிவர்த்திக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினுர். தம் குலத்தில் படித்தவர்கள் அதிகமின்மையால், ஆசார சீர்திருத்தங்கள் தம் குலத்தவர்கள் மற்றவர்களுக்குப் பின்னடைந் திருப்பதாகச் சொன்னுர். உயர்தரக் கல்வி வியாபித்திருக்கும் இக்காலத்து தமது வம்ஸத்தினர் நூதன வியாபாரவிஷயங்களையும், அவற்றின் மர்மங்களையும் முற்றுமுணர வேண்டுவ தவசிய மென்றும் கூறினுர். நமது ராஜதானியின் வர்த்தகத் தொழிற்படிப்புக்கான கல்விச்சாலைகள் ஏற்படும் வரையில், தம் ஜாதிச் சிறுவர்களை பம்பாய் தேவர் காலேஜுக்கு அனுப்ப வேண்டு மென்றும் வற்புறுத்தினுர். வைசியகுலப் பெண்களுக்கும் கல்வி கற்பிக்கப்படாவிட்டால் தமது குலம் சீக்கிரம் அபிவிர்த்தி யடையாதென்றும், பெண்கல்வி விஷயத்தில் வைசியகுல திலகர்கள் ஊக்கமும், உழைப்பும் காட்டுவ தவசிய மென்று சொல்லியதோடும், சங்கீதம், பாகசாஸ்திரம் முதலியவைகளை அப்பியசிக்கும்படியான வசதிகள் பொதுவில் ஏற்பட வேண்டு மென்றும் சொன்னுர். வைசிய குலத்தார், தங்கள் சிறுவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய அயல் நாட்டிச்குப் போய் வருவதால் ஜாதி பிரஷ்டரல்லவென்றும் தீர்மானித்து விட்டபடியால், வெளி நாட்டில் தம் குலச் சிறுவர்களில் அநேகர் கல்வியபின்று வரும் பாக்கியத்தைபெற்றிருப்பதாகச் சந்தோஷித்தார். இவரது அமுத வசனங்கள் நமக்கும் பொருந்துமன்றோ?

### சித்தாந்தத்தில், அந்திர கைத்தொழில் விவசாயப பொருட் காட்சி.

கிருஷ்ணு ஜில்லா, நிடதவோல் ரயில் வேமார்க்கத்திலுள்ள சித்தாந்தத்தில் இம் மாதம் 2ம்தேதிமுதல் ஓர் பொருட்காட்சி நடைபெறும். அப்பொருட் காட்சிக்கு ராஜதானியின் பலபாகங்களி லிருந்தும் காட்சிப் பொருள்கள் அனுப்பி விக்கலாம். உன்னதமான வேலைகளுக்கும், உபயோகமான நூதன சாமான்களுக்கும், மெடல், வெகுமானம், யோக்கியதாபத்திரங்க ளளிக்கப்படும். ஐரோப்பிய சாமான்களுக்கு வெகுமதி யில்லை. கண்காட்சிக்கு சாமான்களை அனுப்புவோர் அந்தப் பொருட் காட்சியின் காரியதரிசிக்கு விபரங்களை முன்னதாகத் தெரிவித்து அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் மனுவில் பொருள்களின் விபரங்களையும், காட்சி ஸ்தலத்தில் தங்கள் காட்சிப் பொருள்கள் வைக்கவேண்டிய இடங்களின் விஸ்தீரணங்களையும் குறிப்பிட்டு எழுதவேண்டும். கைத்தொழில்களுக்குரிய நம் வம்ஸத்தினர்களுக்கு இவ்வித நூதன உணர்ச்சிகள் உண்டாவ தெக்காலமோ அறியோம்.

## விஞ்ஞான சாஸ்திர விசாரம்.

இச் சராசரத்தின் கண்ணுள்ள எல்லா வஸ்துக்களையும் திடபதார்த்தம், திரவ பதார்த்தம், வாயுபதார்த்தம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இரும்பு, கல், மரம் முதலியவைகளைப் போல் கடினமாகவும், இடத்தை யடைக்கக் கூடியவற்றை திடபதார்த்தமென்றும், ஜலம், பால் முதலியவற்றைப்போல் ஈரத்தைக் கொடுத்துப் பரவுமியோடு மியல்புடையனவற்றை திரவ பதார்த்தமென்றும், நமக்குப் பிராணுதாரமாயுள்ள சுவாசிக்கும் பிராணவாயுவைப் போன்ற காற்று ரூபமாயுள்ளவைகளை வாயுபதார்த்தமென்றும் சொல்லப்படும். ஒரு சமயம் ஒரேபதார்த்தம் மேற்கூறிய மூவகை நிலைமைகளிலும் காணப்படும். திரவ பதார்த்தமானஜலமானது, 'ஐஸ்' என்னும் பனிக்கட்டியாக மாறியபொழுது திடபதார்த்தமாகவும், நீராவியாக பரிணமித்தபொழுது வாயு பதார்த்தமாகவும் மாறுதலையடைகின்றது. அதைப் போலவே திடபதார்த்தமாகிய பனிக்கட்டியானது, உஷ்ணசம்பந்தத்தால் திரவபதார்த்தமாகிய ஜலமாகவும், வாயு பதார்த்தமாகிய ஆவியாகவும் மாறுதலையடைந்துவிடக்கூடும். ஆகையின் பனிக்கட்டி, ஜலம், நீராவியாகிய இம்மூன்றும் ஒரே பதார்த்த மென்றும், பனிக்கட்டியிலுள்ள உஷ்ணத்தைப் பார்க்கிலும், ஜலத்தில் சிறிது வெப்பம் அதிகரித்திருக்கிற தென்றும், ஜலத்திலுள்ள வெப்பத்தை விட நீராவியின் உஷ்ணம், அதிக மென்

றும், இவ்வுண்மையினலேயே அவைகள் ரூபபேதமடைந்து காணப் படுகின்றன வென்றும் பெறப்படுகின்றது. வேண்டிய அளவு வெப்பம் மட்டும் இருந்தால், தண்ணீருக்கு நேரிடும் மாறுதல்களே உலகிலுள்ள மற்றெத்தகைய பொருள்களுக்கும் நேரிடும். கடினபதார்த்தமான இரும்பு, பொன்முதலிய உலோகங்களை நெருப்பிலிட்டால் இளகிக்கொண்டேவந்து கடைசியில் உருகித் தண்ணீரைப்போல் பரவியோடும். இந்தத் திரவரூபமான உலோகங்களை இன்னும் அதிகஉஷ்ணமுள்ள நெருப்பிலிட்டால் நீராவியைப்போல் வாயுவாக மாறிவிடும். வேண்டுமானவரைக்கும் காய்ச்சுவது கூடுமானல், திரவரூபமாக மாறுதலும் பிறகு வாயுரூபமாகத் திரியாததுமான பொருள் இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை. இப்பூமியானது மிகக்கெட்டியாகவும், திடபதார்த்தமாகவும் தோன்றுகிற தல்லவா? ஆயினும் இப்பொழுது கெட்டியாகக் காணப்படும் பூமி, வெகுகாலத்திற்குமுன்னர் திரவரூபமாகவும், அதற்கும் வெகு காலத்திற்கு முன்னர் வாயுக்களின் அணுக்கள் நிறைந்த ஒரு பெரியகோளமாகவும் இருந்தது. இப்பொழுதும், பூமியின் உட்பகுதி திடபதார்த்தமன்று. ஏனெனின், அதன் உட்புறத்தில் திரவ பதார்த்தங்களும், வாயு பதார்த்தங்களும் நிறைந்திருக்கின்றன.

பூமியை ஓர் தேங்காய்க்கு ஒப்பிட்டுக் கூறலாம். தேங்காயின் ஓட்டைப்போல் பூமியின் வெளிப்புறம் திடமாகவும், தேங்காயின் ஜலத்தைப்போல் பூமியினுட்புறம் திரவபதார்த்தமாகவும், தேங்காய்க்கும், இளநீர்க்கு மிடையேயுள்ள வாயுவைப்போல், இப்பூமியி னிடையிலும் காணப்படும். பூமியின் மேற்புறமாகிய கடினபாகத்தைத்தோண்டிக்கொண்டு ஆழமாகச்சென்றால் தரை மிருதுவாகிக் கடைசியில் ஜலந்தோன்றும். இன்னும் ஆழமாகச்சென்றால் வெப்பம்பொருந்திய வாயுவையும், அதற்கப்புறம் நெருப்புரூபமாக எரிந்துகொண்டிருக்கும் வாயுவையும் காணலாம். இவ்விதமாக எரிந்துகொண்டிருக்கும் வாயுக்கள் ஒவ்வோர் சமயம் கடின பதார்த்தமாகிய பூமியின் மேற்புறத்திலும் மீறி வெளிப்படுவதுண்டு. அப்படி வெளிப்படு மிடங்களை எரிமலைகளென்று சொல்லப்படும். அவ்வித எரிமலைகளின் துவாரங்களிலிருந்து பூமியி னுட்புறத்திலுள்ள அநேக வஸ்துக்கள் உருகி வெளிப்படுவதுடன் வாயுவின் திரள்களும் வெளிகிளம்புகின்றன. பல வருடங்களுக்கு முன்னிருந்த எரிமலைகள் இப்பொழுது ஓய்ந்துவிட்டபடியாலும், புதிய எரிமலைகள் ஏற்படாமையாலும், பூமி சிறிதுசிறிதாய்க் குளிர்ந்துகொண்டே வருகின்றதென நிச்சயமாய் நம்பலாம். இன்னும் பல்லாயிர வருடங்களுள் பூமியின் முழுபாகமும் குளிர்ந்து திடத்தன்மையை அடையும் என்பதில் யாதொரு ஐயப்பாடு மில்லை.

(தொடரும்.)

## சுகாதார விளக்கம்.

### நிலவில் நித்திரை புரிதல்.

நிலா வெளிச்சத்தில் நித்திரை புரிவது சுகாதாரத்திற்கு ஏற்றதல்லவென்று லான்சட் பத்திரிகை கூறுகிறது. அப்படி கொஞ்சகாலம் நித்திரை புரிவோருக்கு மூளை சம்பந்தமான வியாதிகளும், முக்கியமாய் சிரசைப்பற்றிய பலவியாதிகளும் உண்டாகின்றனவாம். ஆகையால், இக்கோடைகாலத்தில் நிலாவெளிச்சத்தில் உறங்கும் பழக்கமுடையோருக்கு இது ஒரு எச்சரிக்கையாகும்.

### செம்மண்ணீர்.

கோடை காலத்தில், ஜலத்தில் செம்மண்ணைக் கரைத்துவைத்து 24-மணிநேரத்



திற்குப பின் வடிகட்டித் தெளிந்த பிறகு அந்தஜலத்தில் ஸ்நானம் செய்து வந்தால், வியர்வைக் கட்டிகள் முதலியன உற்பத்தியாவதில்லை யென்றும், தேகம் குளிர்ச்சியாக யிருக்குமென்றும் சொல்லப்படுகிறது. இரவில் நல்ல நித்திரை யுண்டாகுமாம். இம்முறையை உஷ்ணப் பிரதேசங்களிலுள்ளவர்கள் கையாடுவது நலமென ஓர் அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறபடியால் நம்மனோர் இதை கவனிக்கத்தக்கது.

### மெழுகும் வாதரோகமும்.

எல்லா வாதரோகங்களை மெழுகு ஸ்நானத்தால் சொஸ்தப்படுத்திவிடக் கூடுமென்று, பாரிஸ் டாக்டர் ஒருவர் உறுதிமொழி கூறுகிறார். மெழுகை 140 டிகிரி சூட்டளவில் உருகவைத்து நோயுள்ள இடங்களில் தடவி வைத்திருப்பதால் வாதரோகங்களைக் கண்டிக்கின்றதாம். இந்த சூடான மெழுகை தடவுவதில் கொப்பளங்களும், எரிச்சலும் உண்டாவதில்லையாம். இவ்வித மெழுகுப் பூச்சால் 110 டிகிரி உஷ்ணம் இருபத்துநான்கு மணி நேரம் வரையில் தேகத்திலிருந்துகொண்டிருக்குமாம். இதனாலன்றோ நம் முன்னோர்கள் வாதரோகத்திற்கு மெழுகுத் தைலத்தை கண்டுபிடித் திருக்கின்றனர். ஆதலால், இதை தற்காலத்தில் வாதநோயுள்ளவர்கள் உபயோகித்தல் நலமென வெண்ணுகிறோம்.

### நித்திரை பங்க நீக்கம்.

வெளி சப்தம் கேட்காதபடிக்கு படுக்கைவீட்டின் கதவுகளைமூடிக்கொண்டு ஜன்னல்களைத் திறந்துவைத்துத் தூங்கவேண்டும். கடின போஜனத்தை இரவில் நீக்கவேண்டும். கூடுமானல் படுக்கைக்குப் போகுமுன் கொஞ்சம் அதிக சூடான பால் சாப்பிடுவது நன்று. தூக்கமில்லாதவர்கள் குளிர்ந்த பானங்களை உபயோகிக்காம லிருக்கவேண்டும்.

## ஆயுர்வேதசாரம்.

### அவிழ்தமுறை.

### பித்தத்திற்குக் கியாழம்.

தனியாபடி கால், எலுமிச்சம் இலை பலம்-10 அகத்திக்கீரை கைபிடி-2 இந்த மூன்றும் கொண்டுவந்து இலை இரண்டையும் உரலிலிட்டு இடித்து தனியாவுடன் கலந்து ஒரு மண்பாத்திரத்திலிட்டு அதில் ஜலம் 3 படிவிட்டு அடுப்பேற்றி அரைபடிக்குச் சுண்டக்காய்ச்சி இரக்கிவைத்துக் கொண்டு அதை ஆறுபாகமாக்கி காலை மாலை மூன்று நாள் சாப்பிடவும். பித்தம், வாந்தி, மயக்க முதலியவுந் தீரும். பத்தியமே யில்லை.

### அஜீரணத்திற்கு குழம்பு.

வெள்ளைக் காக்கணம்வேர், மிளகு, ஆக இரண்டையும் வெந்நீர்விட் டரைத்து தேனில் மத்தித்து உண்டு வந்தால் அஜீரணம் வெகு சீக்கிரம் நீங்கும்.

### வயிற்று நோயுக்கும், வயிற்று கிருமிகட்கும் கியாழம்.

பிரண்டை பலம் ஒன்றேகால், புரசை வித்து பலம் ஒன்றேகால், வேப்பம் ஈர்க்கு பலம் ஒன்றேகால் இவைகளைக் கொண்டுவந்து யிடித்து அரைபடி ஜலம் விட்டு அரைக்கால் படி ஜலமாகச் சுண்டக் காய்ச்சி, பசும்பால் படி அரைக்கால், சீனகற்கண்டு பலம் கால், சித்தாமணக் கெண்ணை ஒரு உச்சிக்கரண்டி யளவிட்டுச் சாப்பிடவும். 4 5 விசை பேதியாவதுடன் வயிற்றுப்பூச்சியும் வெளிப்படும் வயிற்றுநோயுந் தீரும்.

### பெரும்பாடு தீர.

முக்காவேளையின் வேர்ப்பட்டை கொணர்ந்து வெந்நீர்விட்டு அரைத்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்துக் கொண்டு

பச்சரிசி கழுநீரில் கலக்கிச் சாப்பிடவும். இவ்விதம் மூன்றுநாள்சாப்பிட பெரும்பாடு தீரும்.

**பிள்ளை பெற்றவர்களுக்கு வயிற்றில் தங்கிய அழுக்கு நீங்க மருந்து.**

சுக்கு பலம் 2 மிளகு பலம் 2 வெள்ளை வெங்காயம் பலம் 2 சித்திரமூலம் பலம் 2 இவைகளையெல்லாம் உரலிலிட்டு இடித்து கியாழ மிட்டுச் சாப்பிட்டுவர அழுக்கு நீங்கி சொஸ்தமாகும்.

**கண்டமாலைக்கு மேற்பூசுந் தைலம்.**

நற்கிரந்தி, துருசு, தாரம், உள்ளி, கெந்தி, துத்தம், முதார்சிங்கு, வெம்பாடம்பட்டை, சூதம், குங்கிலியம், முதார்சிங்கு இவைகள் வகைக்கு ஒரு விராகனிடை எடுத்து வேப்பெண்ணை விட்டு அரைத்து கோழியிறகி ஞல் தடவிக்கொண்டு வரவும். கண்டமாலை பறந்துபோம். அன்றியும் எவ்வித சிரங்கு கரப்பானுக்கும் தடவலாம்.

**ஸ்நானத்திற்குத் தைலம்.**

பொன்னாங்கண்ணி, சிந்தில்தண்டு, பூநாகம், கோஷ்டம், எலுமிச்சம்பழம், சிறுகீரை, மருதாம், செங்கழுநீர்ப்பூ, முத்தக்காசு, செண்பகப்பூ, ஏலம், தும்பைப்பூ, இவைகள் வகைக்குப் பலம் ஒன்று சேகரித்து உரலிலிட்டு இடித்து வெள்ளை மிளகு இரண்டரைபலம் சூரணித்து 10 பலம் நல்லெண்ணையில் போட்டு காய்ச்சி சீசாவில் விட்டு கார்க்கடைத்து, குப்பைமேட்டில் 40 நாள் புதைத்துவைத் தெடுத்து நான்குநாள், அல்லது இரண்டு நாள்வட்ட முழுகிவரில் சாலேசுரம், கண்ணெரிச்சல் மண்டையிடி ஒற்றைத் தலைநோய் புறங்கழுத்து நோய் முதலியவும் தீரும்.

**பிள்ளைகளுக்கு தேகைச்சூட்டுக்கும் தேகபுஷ்டிக்கும்.**

ஒரு மண்பாத்திரத்தில் 5-பலம் சித்தாமணக் கெண்ணை யிட்டு அதில் பேயன் வாழைப்பழத்தை 3, 4 கொணர்ந்து வில்லை வில்லையாக நறுக்கிப்போட்டு அதனோடு பனங்கற்கண்டு பலம் இரண்டரையிட்டு மேல் சீலை மூடி சூரிய புடத்தில் வைத்து காலையிலும் மாலையிலும் 2 வில்லை உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியமில்லை.

**ஆயுர்வேத பண்டிதர்.**

## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின் கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும்கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக் கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

**அலுமினியம்.**

அலுமினியம் என்பது ஓர் இலேசான வெண்மை உலோகம். இது 1809ல் சர் ஹம்பிரி டேவி (Sir Humphry Davy) என்பவரால் படிக்காரத்தினின்றும் அலுமியம்(பின்னர் அலுமினியம்)என்னும் ஓர் உலோகத்தை பிரித்தெடுக்கலாமென்று திர்மானமாய்ச் சொன்னர். 1827ல் ஜர்மெனியில் ரசாயன சாஸ்திரி ஓலர் (Wohler) என்பவர் முதல்முதல் அலுமினியத்தைப் பிரித்துக் காட்டினர். 1854 முதல் 1890ம் ஆண்டுவரையில் தெவில் (Deville) என்னும் ஓர் பிரஞ்சுக்காரர் அலுமினியம் குலோரைடி லிருந்து பிரித்தெடுக்கும் கஷ்டசாத்தியமானவழிகளைக் கண்டுபிடித்தார் அப்போது ஒருஅவுன்ஸ்அலுமினியம் 12 அணுவிலைபாக விருந்தது. அது கெமிக்கல் வழியாக உற்பத்தி செய்யப்பட்டவரையில் விசித்திரமானவும் அழகான வஸ்துவாகவும் விளங்கிற்று. ஆனல் 1887ல் ஹெரால்ட் (Heroult) என்பவர் ஐரோப்பாவிலும் ஹால் (Hall)என்பவர் அமெரிக்



காவிலும் மின்சாரசக்தியால், அலுமினியத்தைப் பிரித்தெடுக்கும் முறையைக்கண்டுபிடித்து பேட்டெண்டு செய்தார்கள். இதுவரையில் மிக்கபிரயாசையுடன் பிரிக்கப்பட்ட அலுமினியம் இம்முறையில் வெகுசுலபமாய் வெளிப்படுவதற் கிடமாயிற்று மின்சாரசக்தியை உற்பத்தி செய்து இயந்திரங்களை ஓட்டுவதற்கு மலைவீழருவிகளினின்றும் கிடைக்கக் கூடிய சக்தியை அமெரிக்காவில் யுனைட்டெட் ஸ்டேட்ஸ், கானடாவிலும், சுவிட்ஜர் லாண்டிலும், நார்வேயிலும், ஜர்மெனியிலும், பிரான்சில் வார் (Var) என்னுமிடத்திலும், ஐயர்லாண்டில் லார்ன் (Larne) என்னுமிடத்திலும், ஸ்காட்லாண்டில் பாயர்ஸ் (Foyers) என்னுமிடத்திலும்,பொதுவாய் இங்கிலாந்திலேயும் உபயோகப் படுத்தி அலுமினியத்தைப் பிரித்தெடுக்கலாயினர்.

அலுமினியம் களிமண்ணிலும், சில குன்றுகளிலும். மிகுதியும் காணப்படுகின்றது. பக்சைட் (Bauxite) என்றும் ஓர் விதகளிமண்ணில் 100-க்கு 55 முதல் 65 பாகம் வரையில் சுத்தமான அலுமினு(Alumina) இருப்பதால் இதிலிருந்து அதிகமான அலுமினியம் கிடைக்கிறது. உலகத்திலுற்பத்தியாகும் அலுமினியமானது செம்பு, வெள்ளீய மிரண்டிக்கும் 100-க்கு 2 பாகத்திற்கு குறைவாகவே காணப்படுகிறது.

1905-07ல் செம்பிற்கு அதிக கிராக்கி ஏர்பட்டபடியாலும், அலுமினியம் வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்யப் போதுமானகால மில்லாமையாலும் அலுமினியத்தின் விலை உயர்ந்ததென சொல்லப்படுகிறது.

அதன் குணாதிசயங்களைப்பற்றி பேசுவோம். காகித அட்டையைப்போல இலேசானதும், வெள்ளியைப் போல் நல்ல பளபளப் புடையதும், உலையில் காய்ச்சியும், காய்ச்சாமலும் அடிக்கக்கூடியதும், வேண்டியபடி சுலபமாய் வளைக்கக் கூடியதும், உருக்கி வார்க்கக் கூடியதும், முத்திரை எழுத்துக்கள் படியும்படி அச்சு அடிக்கக் கூடியதும், மற்றும் பலதொழில்களுக்கு உபயோகப்படக் கூடியது அலுமினியம். அதனை மெருகிடும்போதே அதில் மெல்லிய பளபளப்பான ஆடைபடர்ந்து ஒளி மழுங்காமலிருப்பதனுல் பித்தளையைப்போல மெருகிட்ட பின் அரக்குவார்னிஷ் பூசவேண்டுவ தில்லை. காற்றில் வைத்திருந்தால் கருமையுண்டாகிற தில்லை. தண்ணீரில் நீண்டகாலம் ஊறினுலும் கெடுவதில்லை. நமது சமையல் பாத்திரங்கள் உறுதியாயும் சுத்தமாயும்,களிம்பு முதலியன யுண்டாகாமலிருப்பது பற்றியும், இலேசும் அதி சீக்கிரத்தில் சூடு ஏறக்கூடியதும் பற்றியும், துலக்குவதில் சுலபம் பற்றியும் அலுமினியப் பாண்டங்கள் கையாளப்பட்டு வருகின்றன. மெருகிட்ட சாமான்களில் சோடாமாவு படுமாயின் அவற்றின் பளபளப்பு கெட்டுவிடும். சமுத்திர ஜலத்தில் அலுமினியம் கெடாமலிருக்கும்காரணத்தாலும், இலேசா யிருப்பதாலும், தோணிகள், படகுகள் முதலியன செய்வதற்கும், அமெரிக்காவில் சமுத்திரத்தில் தந்தி கம்பிகளாகவும் உபயோகப் படுத்தப் படுகின்றது. இன்னும் அநேகவிதமான மிஷின்களில் செம்பு பித்தளையால் செய்யப்பட்டு வந்தபாகங்களுக்குப் பதிலாக இலேசாயும் சுலபமாய்ச் சுழலவேண்டிய பாகங்களை அலுமினியத்தால் செய்யப்படுவதால் அம்மிஷின்களைக் குறைந்த சக்தியால் ஓட்டப்படுகின்றன. உதாரணமாக விஞ்ஞான ஆராய்ச்சிக்கு வேண்டிய கருவிகள், திராவகம் வடித்தெடுக்கும் பாண்டங்கள், பல இடங்களில் மாற்றிவைக்கக் கூடிய பார்மா பிரஸ், மின்சார சக்தியால் ஓட்டப்படும் விசிறிகள், மோட்டார் வண்டியின் மேல் கூண்டு முதலிய பாகங்கள், நெசவு மிஷின்களில் சில பாகங்கள், ஆகாய புகை ரதத்தில் சிலமுக்கிய பாகங்களையும் செய்யலாம்.

தொடரும்.

## பலகுறிப்புகள்.

நமது சபை, பத்திரிகை, பாடசாலைமுதலியவற்றின் அபிவிர்த்தியைக் கோரினவராய் தென்னிந்தியாவில் தற்காலம் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியரின் அபிப்பிராயங்களையும், வெளியூர் அநுபவங்களையும், இச் சஞ்சிகையில் வெளியிடப்பட் டிருக்கிறது. இப்பொழுது அவர் தஞ்சையிலிருக்கின்றனர்.

***

சுஜாதித் தொழில் ஒற்றுமையைப் பற்றியும், கூலிக் கட்டுப்பாட்டைப் பற்றியும் எழுதும்படிக்கு உள்ளூர் வெளியூர் நண்பர்கள் பலதடவையும் கேட்டுக்கொண்டதற்கிணங்க இச்சஞ்சிகையில் மற்ற விஷயங்களை நிறுத்தி அவ்விஷயத்தைப் பற்றி முந்தி எழுதலாயிற்று. இவ்வியாசத்தை நம்மனோர் நன்கு கவனிப்பார்களாக.

***

இவ்வருடம் நடந்த சென்னை சர்வ கலா சங்கத்தின் B. A. (பி. ஏ.) பரீட்சையில் பாக்கியாயிருந்த தத்துவசாஸ்திர பரீட்சையில் சென்னை ஸ்ரீ கிருஷ்ணசுவாமிப் பத்தர் அவர்கள் தேறியிருப்பதை சந்தோஷமாகத் தெரிவிக்கிறோம். இவர் போஸ்டல் அக்கவுண்டெண்டுஜெனரல் ஆபீஸில் ஆடிட்டர் உத்தியோகத்திலமர்ந்திருக்கின்றனர். நமது குலத்தில் பி. ஏ. பரீட்சை கொடுத்தவர்களில் இவர் பத்தாவது கனவான். நமது சபையின் முக்கிய அபிமானி. இவருக்கு நமதுசபையாரால் ஓர் தோட்ட விருந்தளிப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

***

“ஆச்சாரி” பட்டத்திற்கு பெருத்த ஆபத்து தற்காலம் வந்திருக்க, நம்மனோர்களில் படித்தவர்களாயுள்ள சகோதரர்களிற் சிலர், “பத்தர்” என்றும், “பத்துடு” என்றும், “ஆச்சார்ய” என்றும் “ஆச்சாரி” என்றும் பலமாதிரியானபட்டப்பெயர்களை வைத்துக்கொண் டிருக்கிறார்களெனக் கேட்டு விசனிக்கிறோம்.

***

நம்மவர்களில் படித்தவர்களாயுள்ளவர்களாலேயே ஆச்சாரிப் பட்டத்திற்கு ஆபத்து விளைந்ததாக ஓர்வதந்தி உலாவுகிறது. ஆச்சாரிப்பட்டத்தை ‘ஆஸாரி’ என மாற்றலாமாவென சென்னை, கவர்ன்மெண்டாரின் ஆலோசனையிலிருந்தகாலத்திலேயே நம்மவர்களில் படித்தவர்களில் சிலர் கூடி (ஒரு டெபுடேஷன்) ஆலோசனை சங்கத்தார்களுடன் உரையாடியிருந்தால் இவ்வளவு அநர்த்தங்கள் விளைந்திராதென்றும் “தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் வழிகளை இப்பொழுது கையாடவேண்டியிராதென்றும், அவ்விதம் செய்வதற்கு சர்க்கார் உத்தியோகத்திலமர்ந்திருக்கும் சிலர், அஞ்சி அடங்கிவிட்டதாகவும், சிலர் தம்மை நமது ஆபீஸில் ‘ஆஸாரி’ என்றழைத்தால் பட்டப்பெயரை நீக்கி, வெறும் பெயரை மட்டும் வைத்துக்கொள்வது கடினமாகாதென்றும் சொல்லி, “முள்ளால்கீறி எடுப்பதை விட்டு கோடாலி கொண்டு பிளந்த” கதையை ஒத்து அவர்களே இப்பொழுது கூக்குரல்போடுகிறார்களென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இது உண்மையானால் குலோத்தாரணம் எப்படி சீக்கிரத்தில் சித்திக்கும்.

***

ஜூன்மாதம் 7ந்தேதி ஞாயிற்றுக்கிழமையோடு நமது சபையில் 79 பிரசங்கங்கள் நிறைவேறியிருக்கின்றன. பொருட்சகாயமிருந்தால் இப்பிரசங்கங்களைப் புத்தகரூபமாகச் செய்து யாவருக்கும் பயன்படச் செய்யக்கூடும். இவ்விஷயத்தில் நம் குலாபிமானிகள் கவனம் செலுத்துவார்களாக.

***



நமது பத்திரிகையின் சந்தாதாரர்களும் சபையின் மெம்பர்களும் குலாபிமானச் செல்வர்களுமானகும்பகோணம் பிரம்மஸ்ரீ த. கு. சுந்தராச்சாரியாரவர்கள் நம் சபை பண்டுக்காக ரூபா 10-ம், பேட்டை மு. ஆறுமுகாச்சாரியாரவர்கள் ரூபா 5-ம் நன்கொடையளித்தற்காக நாம் மனப்பூர்வகமான வந்தனஞ்செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இக்குலாபிமானிகளைப்போல் பலரும் உதவிசெய்ய முன்வருவரேல் குலோத்தாரண காரியங்கள் அதிசீக்கிரம் கைகூடுமென்பதிற் சந்தேகமேயில்லை.

***

வெளியூர்வாசிகளாயுள்ள நமது சுஜாதி கனவான்கள் குலாபிமான மேலீட்டால், நமது பத்திரிகைக்கு ஏஜண்டுகளாக விருக்க இசைந்ததற்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இங்கு முக்கியமாய் குறிப்பிடக் கூடியவர்கள், நாகை-ஸ்ரீ T. விஸ்வலிங்காச்சாரியார், குடந்தை T. K. பஞ்சனதீஸ்வர ஆச்சாரியா ரிருவருமே யாவர்.

***

நமது, புஸ்தகசாலைக்குப் பல அருமையான கிரந்தங்கள் நம் குலாபிமானிகளால் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளின் விபரங்களை மறுமுறை தெரிவிப்போம். இவைபோன்ற பழய கிரந்தங்கள் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் அனுப்புவார்களென்று வேண்டுகின்றோம்.

***

நமது விஸ்வகர்மகுலோத்தாரண சபையில்

## உபந்நியாசங்கள்.

76-வது பிரசங்கம் 1914ஹு மேமீ 17உ மாலை 3-மணிக்குமேல் உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ பா.கோ. தங்கவேற்பிள்ளையவர்களால் ராமாயணக் கீர்த்தனை பாடியருளிய அருணாஜலக் கவிராய ரவர்களாலியற்றிப்பட்ட சீகாழித் தலபுராணத்துள் புறவமான வத்தியாயத்தைப் பிரசங்கஞ் செய்தனர். அப் பிரசங்கமானது ஆனந்தமாயும், சொன்னயம் பொருணய முடையதாயும், அந்நூலாசிரியர் கருத்தை யொட்டியதாயும் பக்தி ரசத்தைக்கொடுத்து பரமானந்தத்தை யுண்டுபண்ணுவதாயும் இருந்ததுமன்றி பலநூற்களிலுமிருந்து மேற்கோள்களெடுத்துக் காட்டியும் நம்மனோரை மகிழச்செய்தனர். பிரசங்க முடிவில் போர்டாபீஸ் கிளார்க்குபிரம்மஸ்ரீ கா. கந்தசாமி ஆச்சாரியா ரவர்கள் இப்பிரசங்கியாரின் கல்வித்திறமையை யெடுத்துப் புகழ்ந்துபேசியபின் மாலை மரியாதைகள் நடத்தப்பட்டன.

***

77-வது பிரசங்கம் 1914ஹு மேமீ 24உ ஆதிவாரம் மாலை 4-மணிக்கு பிரம்மஸ்ரீ கும்பகோணம் ஸ்ரீநிவாஸ தீக்ஷதரவர்கள் ருக்மணி பரிணயத்தை சமஸ்கிருத சுலோகங்களைக் கொண்டு அதிமேன்மையான கற்பனாலங்காரங்களோடு யாவரும் மெச்சும்படி உபந்நியாசம் செய்தருளினர். அப்பிரசங்கமானது பக்திரசத்தை யூட்டுவதாயும், நீதிபோதனையுடையதாயும், கன்மனமும் கரைந்துருகக்கூடியதாயு மிருந்தபடியால் ஷை தீக்ஷதரவர்களின் வித்தியா சாமார்த்தியத்தை வந்த ஜனங்கள் யாவரும்புகழ்ந்து கொண்டாடியபின் புட்ப ஆர முதலிய மரியாதைகள் நடத்தப்பட்டன.

***

78-வது பிரசங்கம் 1914ஹு மேமீ 31உஆதிவாரம்மாலை4-மணிக்கு ம.ா.ா.ஸ்ரீ புரஸை அப்பன்செட்டியா ரவர்கள் மாணாக்கருள் ஒருவராகிய பிரம்மஸ்ரீ பரசுராம ஆச்சாரியா ரவர்களால் பரஞ்சோதிமுனி

வர் அருளிச்செய்த திருவிளையாடற் புராணத்தில் விருத்தகுமார பாலரான படலத்தைச் சொன்னயம், பொருணயம் விளங்குமாறுபிரசங்கித்தனர். பிரசங்கத்தில் சைவநெறியின் உண்மையையும், வைணவத்தில் பொய்யன்பூண்டொழுகும் மாந்தர் இயற்கைக் குணத்தையும் தெற்றெனத் தெளிவித்தனர். சபையோர்பெருமகிழ்ச்சியடைந்தவராய் கண்ணிமையாவண்ணம்பிரசங்கியாரின் முகம்நோக்கி அவர் வாய்வழிவந்த பக்திரச மாகிய தேவாமிருதத்தை செவிவழியே பருகினார்கள். பிரசங்கமுடிவில் பிரசங்கியார் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு வந்தனோபசாரம் அளிக்கப்பட்டது.

* * *

79-வது பிரசங்கம் 1914௵ ஜூன்மீ 7உ ஆதிவாரம் மாலை 3-மணிக்குமேல், சென்னை போர்டாபீஸ்கிளர்க்கு பிரம்மஸ்ரீ காஞ்சீபுரம், கந்தசாமிஆச்சாரியா ரவர்கள் திருவிளையாடற்புராணத்துள் பழியஞ்சின படலத்தை பாமரர்முதல் பண்டிதா வரையில் எளிதிலுணரும்படி பல மேற்கோள்களை எடுத்துக்காட்டி பக்திரசம் பொருந்தப்பிரசங்கித்தனர். வந்துளோர் பிரசங்கத்தின் அருமைப் பாட்டை வியந்து கூறியபின் மாலைமரியாதைகள் நடத்தப்பட்டன.

* * *

## விஸ்வேஸ்வரபகவான் ஸ்தோத்திரக் கீர்த்தனை.

இராகம் - உசேனி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

விஸ்வேஸ்வரனே - நான்
வேண்டினேனுந்தனை யாண்டருளெந்தனை.

அநுபல்லவி.

கஸ்யபாதி நவப்பிரமருந்துதி
காரணவிராட் புருடனேபித்ததி. (விஸ்வே)

சரணங்கள்.

(1) ஆதிபரையாலே இந்த அண்டசராசர மெல்லாம்படைத்திட்ட
ஜோதிஸ்வரூப வகண்டாசாக்ஷாத்கார சுந்தரனேக்ருபைதந்தருள்விஸ்தார.

(2) எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி யேழைநெஞ்சம் புண்ணாச்சுதே
பண்ணார்ந்தவேத வேதாந்தவிநோதனே பக்திசெய்தன்பர் பரவியபாதனே.

(3) சகலகலையும்புகழ் தத்துவதேக விராட்விஸ்வப்ரம்ஹமமே
புகலரிய பரிபூர ணாத்மக்யான போதந்தமியேற்கருள் மெய்ஞ்ஞான. (விஸ்)

(4) வஞ்சமிகுந்த பிரபஞ்ச வலைதனில் வாடியுழல்வேனோ
சஞ்சலமனைத்துந் தவிர்த்தாளவந்த சத்யபராபர சச்சிதானந்த. (விஸ்)

(5) எனதுகுறைகள் தனை என்னென்னவென்று எடுத்துநான் சொல்லுவேன்
மனமுவந்தன்பரைக் கடைக்கண்பார்த்திந்த
வையத்தில்முன்னின்று காக்கும்ப்ரம்மானந்த. (விஸ்)

(6) சித்திபலதுந் தரும் ஸ்ரீமந் விராட்டு விஸ்வப்ரம்ஹதேவனே
பத்தியுடன் மௌனகுரு ருத்ரமூர்த்தி பைந்தமிழாற் கவிபாடவருள் சீர்த்தி.



## விச்சித்திர விடுகதை வினா.

திருமருவு பிரணவ சொரூபசாக் ஷாத்கார தேசிகன் பெயரி லொன்று
திகழ்பொன்னி நாமமொன் றேந்திரப் பெயரொன்று திரியக்ஷ ரங்கொண்ட பேர்
பருவமுட னிப்பொரு ளறிந்துமா தவர்கணிறை படியின்முறை யாக வெழுதிப்
பார்க்கக் குறுக்கினிலும் முன்சொன்னபடிபொருள் பயிற்றுமெண் டிசைகடோறும்
பெருமைமிகு செந்தமிழ்க் கவிவாண ரித்தகைய பெயர்தனை மகிழ்ந்து தேர்ந்து
பிரபல மிகுங்கன்னி யப்பவிற் பன்னவேள் பிரியமுட னேயு வந்து
தருகின்ற சுபவிஸ்வ கர்மகுல வுபகாரி தன்னில்விடை தானளிக்கத்
தண்பழனி வே. மௌன குருருத்ர மூர்த்தியாச் சாரிநிதம் வேண்டி னனரோ.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

## கடிதங்கள்.

வி. கு. ப. அவர்களுக்கு வேதோக்த நமஸ்காரம். உபயக்ஷேமம்.

சென்னை ஸ்ரீ காளிகாம்பா ளென்னும் காமாக்ஷியம்மன் ஆலயத்தில் சென்ற இரண்டு அமாவாசைக்குமுன்னே சென்னை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலைப் பிள்ளைகள் சென்று வேதாத்தியயனஞ் செய்ததாகவும், அப்போது அக்கோயில் அர்ச்சகராகிய விப்பிர குருக்கள் அதைத் தடுக்க முன்வந்து நின்று இவ்வாலயத்தில் இதுபரியந்தம் உங்கள் ஜாதியார்கள் வேதாத்தியயனம் செய்ததேகிடையாது; இப்பொழுது இவ்வாலயத்தில் நீங்கள் வேதாத்தியயனஞ் செய்வது வழக்க விரோதமாயிருக்கிறது; ஆகையால் இவ்விஷயங்களுக்கு நான் சம்மதப்பட்டு இவ்வாலயத்தில் பூஜைசெய்தால் எங்கள்ஜாதியார் தங்கள் குலத்தினின்றும் என்னை நீக்கி விடுவார்களே என்று கூச்சலிட்டதாகவும் அப்பொழுது அங்கு வந்திருந்த தேவஸ்தான பிரஸிடெண்டு பிரம்மஸ்ரீ சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரியரும், காரியதரிசியாகிய காயிரம்பேடு பிரம்மஸ்ரீ திருவேங்கடாச்சாரியர் முதலியவர்களும் அக்குருக்களைநோக்கி ஐயா! கூச்சலிடாதேயுங்கள் இப்பொழுது ஆரம்பித்த வேதபாராயணம் பூர்த்தியாகட்டும்; பிறகு இதுவிஷயத்தைப்பற்றிப் பேசலாம் என்று வேதாத்தியயனத்தைப் பூர்த்தி செய்துகொண்டு வந்து விட்டதாகவும் எனது மைத்துனர் சுப்பராயாச்சாரியரால் தெரியவந்தது.

இவைகளைக் கேட்ட மாத்திரத்தில் எனக்கு ஆச்சர்யமும் அடங்காத சினமும் உண்டாயிற்று. ஏனென்றால் நமது ஆலயங்களில் நம் ஜாதி குருக்களை வைத்துப் பூஜைசெய்வோமானால் விப்பிரர் நமது வேதாத்தியயனத்தைத் தடுப்பார்களா? அதுவுமன்றி அவர்கள் கோயில்பூஜை செய்ய, நாம் வேதபாராயணம் செய்தால் அவர்களை சாதியினின்றும் நீக்கி விடுவார்கள் என்றால் நாம் அவரது ஜாதிக்குக்கீழ்ப்பட்டஜாதியென்றல்லவோ ஏற்படுகிறது, அப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டு அவர்களிடத்தில் பிரசாத முதலியதும் வாங்கி உண்ணுவது நலமாகுமா? இதற்குத்தானா நம்முடைய ஆலயமென்றும், நமது குலதெய்வ

மென்றும், நம்மவர்களே காரியதரிசி யென்றும், நம்மவர்களே பிரஸிடெண்டென்றும், நம்மவர்களே தர்மகர்த்த ரென்றும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது? இப்படிப்பட்ட அசங்கதமான காரியங்களுக்கு இடங்கொடுத்துக் கொண்டு ஜாதி யபிமானமில்லாது இருப்பதைவிட தங்கள் தங்கள் வீட்டுக்காரியங்களை பார்க்கலா மல்லவா? விப்பிரர்களைவிட்டால் நம் ஜாதியில் கோயில்பூஜை செய்யும் பௌரோகிதர்க ளில்லையா? அவர்களைக்கொண்டு கோயில்பூஜைகளை நடத்தலாகாதா? பாதுகாக்க ஆளிருந்தால் நம்மவர்களில் பூஜைசெய்வோர் அனந்தம்பேர் வரமாட்டார்களா? அவர்களைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டால் நமதுகாரியங்களெல்லாம் கைகூடி வாராதா? இதைவிட்டு ஏன் இவ்விதநிந்தைக்கு ஆளாகவேண்டும். அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! இனி இதுவிஷயத்திலொவ்வொருவரும் சிரத்தை யெடுத்துக்கொண்டு ஒவ்வோரூரிலுமுள்ள நமதுகுலதேவதையாகிய காமாக்ஷியம்மன் ஆலயத்தில் விப்பிரர்கள் பூஜை செய்வதை நீக்கி விஸ்வப்பிராம்மணர்களை வைத்துப் பூஜா காரியங்கள் நடத்துவதற்கு இனி காலதாமத மின்றி முயற்சிசெய்ய வேண்டுகிறேன்.

**இராக்கம்பாளையம்-முருகப்பாச்சாரி,**
பொன்வேலை.

* * *

**இராமேஸ்வரமும் விஸ்வப்பிராமமடாலயமும்.**

**ஓர் முக்கிய வேண்டுகோள்!**

இதனைக் கண்ணுறும் விஸ்வகுலாபிமானம் பூண்டு மெய்யன்பு நிறைந்த ஐயன்மீர்!

இப்பாரதகண்டத்தில் காசி முதல் கன்னியா குமரிவரையிலுள்ள சமஸ்ததேசஸ்தவர்களுக்கும் இந்த இராமேஸ்வர க்ஷேத்திரமானது ஓர் முக்கிய யாத்திரை ஸ்தலமாக இருப்பதால் எக்காலத்திலும் நித்திய உத்ஸவம்போல் தினந்தினமும் யாத்திரை ஜனங்கள் (திரள் திரளாய்க்கூடி) வந்துகொண்டிருக்கிறார்கள். அதில் நமது விஸ்வப்பிரம்ம வம்சஸ்த்தர்களும் எத்தனையோபெயர்கள் பல ஊர்களிலிருந்தும் யாத்திரைக்காகக் கூட்டங் கூட்டமாய் வருகிறார்கள். அப்படிக்கிருக்க இந்த இராமேஸ்வர க்ஷேத்திரத்திலிருக்கும் நமது விஸ்வப்பிராமமடாலயமானது மனையின் அகல நீளம் அகண்டமாக இருந்தும் கட்டிடமோ ஒரு சிறு கொட்டகையாகஇருக்கிறது. அதனால் யாத்திரைஜனங்களுக்குத்தங்கியிருப்பதற்கும் சமயல் செய்து கொள்வதற்கும் சயனித்துக் கொள்வதற்கும் மிகுந்த அசௌகரியமாகஇருக்கிறது. ஆனதால் இவ்விதமகாபுண்ணிய பூமியாகிய இம்மகாக்ஷேத்திரத்திலுள்ள இம்மடாலய மானது என்றும் நிலைபெறும்படி நமது வம்சத்திலுள்ள கல்வி, செல்வம், குலாபிமானம்நிறைந்த கனவான்கள் இதனை முற்றிலும் கவனித்துப் பொதுஜனோபகாரமான இப்பெரும் புண்ணியத்திற் சிரத்தை எடுத்து ஷை மடாலயத்தை கருங்கல்திருப்பணியாகச் செய்து முடிப்பித்து இக் கைங்கர்யத்தின் விசேடபலனை கைக்கொண்டு ஸ்ரீவிராட் விஸ்வப்பிரம மூர்த்தியின் கிருபானுகூலத்தைபெற்று, புத்திரமித்திர களத்திர பாரம்பரியராய் இப்புவியில் வாழ்ந்து வருவீர்களென பன்முறையும் பிரார்த்திக்கின்றனன். அன்றியும்,

நாளது ஆனந்தஹு வைகாசிமீ அமாவாசைக்குத் தமது குடும்பத்தோடு என்னுடன் யாத்திரை செய்த சென்னை பிரம்மஸ்ரீ சோமங்கலம் - கந்தசாமி ஆச்சாரியார் இம்மடாலயத்தில் தங்குவதற்கு இடமின்றி கஷ்டத்தோடு வசித்து யாத்திரை செய்து வந்ததே இதற்கு ஒரு பெரும் சாக்ஷியாகஇருக்கிறது. ஆனதால் இனியேனும் இப்பெரும் புண்ணிய விஷயத்தில் நமதுவிஸ்வப்பிரம்மமகா ஜனங்கள் மிகவும் கவனித்து ஷை மடாலயத்தை விரைவில் கட்டி முடிப்பித்துபொதுஜனோபகாரம் புரிவார்களென மிகவும்நம்புகிறேன்.

**V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷர்,**
ஆரியன் சோதிடசாலைத் தலைவர்,
திருவாரூர்.



**விக்ஞாபனம்.**

ஸ்ரீமத் மனு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ என்னும் பஞ்சபிரம்ம சந்ததியார்கள் அனைவர்களுக்கும் தஞ்சாவூர் தாலுக்கா குருங்குளம் மேல்பாதி தோளுகிரிபட்டி கிராமத்திலிருக்கும் ஆறுமுக ஆச்சாரியார் குமாரர் அருணாஜல ஆச்சாரி தெரிவித்துக்கொள்ளும் விஞ்ஞாபனம்:—விரோதிகிருது ஹு தைமீ 20உ எனது குமாரன் பஞ்சனத ஆச்சாரிக்கு விவாஹமுகூர்த்தம் நடத்தி ஊர்கோலம் வரும்சமயத்தில் ஷை கிராமத்தில் வசிக்கும் உடையார் ஜாதியார்கள் 150 தலைகட்டுக்காரர்கள், எதிர்த்து ஊர்கோலம் எங்கள் வீதிவழி வரக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். ஷை ஹு மாசிமீ 1உ ஷை உடையார்கள் பேரில் டிப்டி மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் நான் பிராதுகொடுத்து இக்கலகத்துக்கு முதன்மையாகிய முத்துச்சாமி உடையார் மகன் கருப்புடையாருக்கு ரூ. 30ம், ராமுஉடையார் மகன் நல்லதம்பி உடையாருக்கு ரூ. 20ம், கூத்தப்பஉடையார் மகன் குழந்தை உடையாருக்கு ரூ. 20ம், ராமுஉடையார் மகன் ரங்கப்ப உடையாருக்கு ரூ. 20ம், அபராதம் விதிக்கப்பட்டும் ஷை பிரதிவாதிகள் ஜில்லா கலெக்டர்துரை அவர்களிடம் அப்பீல்செய்தும் கோர்ட்டாரவர்கள் அசமேல உறுதியென்று ஷையார்கள் அப்பீலை தள்ளிவிட்டார்கள். டிப்டி கலெக்டர் அவர்களால் பரிதாபிஹு ஆனிமீ 26உ ஊர்கோலத்திற்கு உத்திரவு பிறந்து போலீஸ் பந்தோபஸ்துடன் ஊர்கோலத்தை முடித்திருக்க, இனி ஊர்கோலத்தை நிறுத்தவேணுமென்ற கெட்டஎண்ணத்துடன் ஷை கிராமத்தில் வசிக்கும் சின்னப்ப உடையார் 1, மருதை உடையார் 2, நாச்சியப்ப உடையார் 3, வெங்கிடாஜல உடையார் 4, இவர்களால் வண்ணான்' பரியாரி, தச்சன், கொல்லன், தட்டான், அம்பலக்காரன், கூத்தாடி, பள்ளன், பறையன் இவர்களெல்லாம் ஏவல் தொழில் செய்யக்கூடியவர்க ளாகையால் இவர்கள் எங்கள்வீதிவழியாக ஊர்கோலம் சென்றது போக இனிமேலாகிலும் ஆச்சாரிகள்ஊர்கோலம் வராதிருக்கும்படியாகபரிதாபிஹு ஆனிமீ 24உ தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் முன்சீப்கோர்ட்டாரவர்களிடம் வியாச்சியம் கொடுபட்டு ஈரங்கி ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறேன். ஷை கிராமத்தில் நான் ஒருவீட்டுக்காரனாக யிருந்தும் இந்த கேசுகளுக்கு ரூ. 1200 வரையிலும் நான் ஒருவனே செலவு செய்திருக்கிறேன். இப்போதுள்ள சிவில் வியாச்சியத்திற்கு விஸ்வப்பிரம்ம வம்ஸ குலாபிமானிகள் பொருளுதவி செய்து ஷை கேஸை முடிவுபெறச் செய்யவேணுமாய் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேளூரும் காமாக்ஷி அம்மன் துணை
**அருணஜல ஆச்சாரி.**

---

ஷை வியாஜ்ஜியத்தின் முடிவு தெரியவில்லை. ப-ர்.

* * *

சகோதரர்களே!

நான்சென்றவாரம் குடந்தையில் ஓர் விவாக மஹோற்சவத்திற்குப்போயிருக்குங்கால்சென்னை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலை ஸ்தாபகரும், சிறந்தகுலாபிமானியுமான பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியா ரவர்கள் நம் குலத்தவர்களின் முன்னேற்றத்திற்கு முக்கிய சாதனமாயுள்ள விஷயங்களைப் போதிக்கும் 'விஸ்வகர்மகுலோபகாரிப்பத்திரிகை'யை அபிமானிகள் யாவரும் பெற்று வாசித்து சீர்திருந்தவேண்டுமென்ற நோக்கத்துடன் பல வூர்களுக்கும் சென்றிருந்தவர் அங்கு விஜயஞ் செய்திருக்குங்கால் நேரிற் சம்பாஷித்து வந்தேன். அவர் தற்காலம் தேகசௌக்கியக்குறையுடையவராயிருந்தும் அதனைச் சிறிதும் பாராது விடாமுயற்சியுடன் நம் குலத்தவர்களைக் கண்டு பேசிவருவதில் அநேக கனவான்கள் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து தங்களுக்கு இனிப் பத்திரிகையை வி. பி. யில் அனுப்பவேண்டுமெனக் கேட்டுக்கொண்டதாய்த் தெரிகிறது. சொல்வதெளிதும் செய்வதரிதுமா யிருக்குமாதலால், அங்ஙனமின்றி தாம் சொல்லியவாறே பத்திரிகை வருவதைப் பெற்றுக்கொண்டு சந்தாவையும் தாமதமன்னியில் செலுத்தி பத்திரிகையை ஆதரித்து சிரமம் எடுத்துக்கொண்டவர்க்கும் திருப்தி உண்டாக்குவீர்களென நம்புகிறேன். S. A.

# முக்கிய விளம்பரம்.

நமது சபையினின்றும் வெளியான பகிரங்க விளம்பரத்தில் தெரிவித்திருந்தபடி, நம் சபையினின்றும் ஒதுங்கிவிட்ட ஸ்ரீ P. கல்யாண சுந்தராச்சாரியர் முதலிய மூவர்களின் படுமுயற்சியால் நம் சபையின் பெயரால் வெளியிடப்பட்டிருக்கும் 'முதல்ரிபோர்ட்' என்னும் புத்தகம் ஒன்று நமது பார்வைக்குக் கிடைத்தது. அவ்வித ரிபோர்டு அவர்கள் தயாரிக்கவாவது, பிரசுரிக்கவாவது உரிமையுள்ளவர்களல்லர். அதனோடும் அப்புத்தகத்தில் அடங்கிய விஷயங்கள் உண்மைக்கு விரோதமாகவும், ஒருதலைச் சார்பாகவும், விவேகமொழிந்த பாமரர்களைச் சுலபமாக மயக்கக் கூடியவைகளாகவும் காணப்படுகின்றன. இதனைக்கண்ணுற்ற நம்சபையார் அம்மூவரின் மிதமிஞ்சிய மயக்க உணர்ச்சிக்கும், சூழ்ச்சிக்கும் விசனிக்கலாயினர். இனி அப்புத்தகத்தின் ஆபாசங்களை விளக்கும் ஓர்மறுப்பும், ரிபோர்டும் நம் சபையாரால் எழுதப்படும். அப்பொழுது நம் சபைமெம்பர்களும், குலாபிமானிகளும் உண்மையை உணர்ந்து நனிமகிழ்வார்களென்பது திண்ணம்.

கொ. கன்னியப்பாச்சாரி.
ஆ. காரியதரிசி.
சென்னை, விஶ்வகர்ம குலோத்தாரண சபை, சிந்தாதிரிப்பேட்டை.

# வர்த்தமானக் குறிப்புகள்.

## தொழிற்படிப்புக்கு கவர்ன்மெண்டார் உபகாரச் சம்பளம்.

இந்தியா கவர்ன்மெண்டார் ஐரோப்பாவில் தொழிற்கல்வி கற்பவர்க்கென் உபகாரச் சம்பளம் 10 பாகமாக இவ்வருடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நெசவுத்தொழிலுக்கு ஒன்றும், சிற்பவித்தைக்கு ஒன்றும், மாந்திரீகக் கல்விக்கொன்றும், மின்சாரவித்தைக்கொன்றும், சுகாதார கல்விக்கொன்றும், இன்னும் இவைபோன்ற ஐந்துமுக்கியத்தொழில்களுக்கும் ஏற்படுத்தி, மாணவர்களையும் தெரிந்து எடுத்திருக்கிறார்கள்.

## பஞ்சாபில் தொழிற்படிப்பு.

பஞ்சாப் லெப்டினெண்டு கவர்னர், விக்டோரியா டைமண்டு ஜூபிலி டெக்னிகல் இன்ஸ்டிடேட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 300 உபகாரமாகக்கொடுக்க உத்திரவிட்டிருக்கிறார். இதற்குமுன் அப்பாடசாலைக்கு ரூபா 150 கொடுபட்டுவந்தது.

## மைசூரில் பிரதமக்கல்வி.

மைசூர் ராஜ்யத்தில் பிரதமக்கல்வியின் விருத்தியைக் கோரி அந்த கவர்ன்மெண்டார் ஒரு லட்சம்ரூபாய் உதவியிருக்கிறார்கள். இதைக்கொண்டு 158 புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதோடும் பழய பள்ளிக்கூடங்களையும் ஆதரிக்கப்படுமாம்.

## எலிமெண்டரி பாடசாலை கட்டிடங்களுக்கு சர்க்கார் உபகாரம்.

எலிமெண்டரி பாடசாலைக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ஜில்லா போர்டுகளுக்கும், முனிசிபாலிடிகளுக்குமாக சென்னை கவர்ன்மெண்டார் 2, 76, 500 ரூபாய் உபகரித்திருக்கிறார்கள்.



## பௌத்தமத ஸ்தம்பங்கள்.

சுமார் 2000 வருடங்களுக்குமுன் ராம்பூர்வாவில் அசோகனால் நாட்டப்பட்டிருந்த இரண்டு பெரிய ஸ்தம்பங்கள் பூமியில் புதையுண்டிருந்ததைக் கண்டுபிடித்தார்கள். அந்த ஸ்தம்பங்களை வெளிப்படுத்துவது வெகு கடினமாயிற்றாம். இயந்திர, தந்திரமிகுந்த இக்காலத்திலேயே இந்தஸ்தம்பங்களை பூமியிலிருந்துவெளிப்படுத்துவது கஷ்டமானால் இந்த ஸ்தம்பங்களை 2000 வருஷங்களுக்குமுன் இயந்திர உதவியின்றி நிலைநாட்டின சிற்பிகளின் பெருமை என்னென்று சொல்லலாம்.

## வைதீகர்க்கு இன்றியமையாத ஓர் சட்டம்.

பரோடாசமஸ்தானம் லௌகீககாரியங்களில் முற்பட்டிருப்பதைப்போலவே வைதீக விஷயங்களிலும் உன்னதம் அடையும் நோக்கங்கொண்டு வைதீக காரியங்களைச்செய்து வைக்கும் புரோகிதர்களுக்கு ஒரு சர்க்கார் பரீட்சை ஏற்படுத்தவும் அதில் தேறியவர்கள்மட்டுமே வைதீகக்காரியங்களை நடத்துவதற்கு லாயக்குள்ளவர்களாவார்களென்ற ஓர் சட்டத்தை ஏற்படுத்தப் போகிறார்கள். நமது பாடசாலையில் வைதீகக்கல்வியை அப்பியசிக்கும் சிறுவர்களுக்கு ஓர் பரீட்சையும் யோக்கிதாபத்திரமளிக்கவேண்டிய அவசியத்தையும் கவனித்து வருகிறோம்.

## காலத்திற்கேற்ற கஷ்டங்கள்.

பொன்மாரி, மண்மாரி, கல்மாரி, நெருப்புமாரி முதலியவைகளைபற்றி பலகதைகளில் படித்திருக்கிறோம். நேரில்பார்த்தவர்களில்லை. ஆனால் மலையாளத்தார் கல்மாரியைப்பார்த்த பாக்கியத்தை யடைந்திருக்கிறார்கள். இந்த மாத ஆரம்பத்தில் அங்கு ஆகாயத்தில் இடிபோன்ற ஒரு பேரிரைச்சல் கேட்டதாம். அதன்பிறகு திருச்சூர், அங்காடி, திட்டூர், பொன்னாணி முதலிய ஊர்களில் திடீரென கற்கள் ஆகாயத்திலிருந்து மழைபோல் பொழிந்தனவாம். அந்த கற்களில் சில துண்டுகள் சேகரிப்பட்டிருப்பதை சென்னை மியூசியத்திற்கு அனுப்பப்படும்.

## நீரிழிவு விசாரணைச்சங்கம்.

நீரிழிவுரோகத்தைப்பற்றி பரிசீலனைசெய்வதற்கும் அதைத்தடுப்பதற்குமான மார்க்கங்களைப் பரியாலோசனை செய்வதாக சென்னை கவர்ன்மெண்டார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விஷயத்தைபற்றி எப்பொழுதுகவனிக்கப் போகிறார்களென்றும் இன்னின்னவரை அங்கத்தினராக ஏற்படுத்தப்போகிறார்களென்றும் இன்னும் வெளிப்படவில்லை.

## முத்துவியாபார முடக்கம்.

பாரீஸ் நகரத்தில் முத்துவியாபாரம் திடீரென முடக்கப்பட்டு விட்டதென்றும், அனேக முத்துவியாபாரிகளும், பாங்கிகளும் அதுகாரணமாய் பெருத்த நஷ்டமடைந்து விடக்கூடுமென்றும், பம்பாய் வியாபாரிகள் முத்துக்களை அனுப்புவதை முற்றும் நிறுத்தியிருக்கிறார்களென்றும் தெரியவருகிறது.

## விசாகபட்டணம் ஜில்லா கான்பரன்ஸ்.

இந்த கான்பரன்சு மேமாதம் 15 தேதி கூடிற்று. அதற்கு சபாநாயகராய் வீற்றிருந்த மி. பி. வெங்கடபதி ராஜு அவர்கள் இந்தியர்களின் வறுமை, கல்வி, முதலியவைகளைப் பற்றி சாங்கோபாங்கமாய்ப் பேசினார்.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்.

இவ்வருடம் மதுரைத்தமிழ் சங்கத்தின் வருஷாந்தரக்கூட்டம் ராமநாதபுரத்தில், சிலோன் அட்வகேட் ஜெனரலாகிய ஆனரபிள் மிஸ்டர் பி ராமநாதன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. ராமநாதபுரம் தமிழுக்குத் தாயகம் அன்றோ?

## தீவிர ஆகாயகமனம்.

ஆகாய கமனத்தில் இப்போது அதிக தேர்ச்சியுண்டாயிருக்கிறது. அமெரிக்கா தேசவாசியான ஒரு ஆகாய கமனி இந்தமாதத்தில் நியுபவுண்ட்லாண்டிருந்து ஐர்லாண்டு வரையில் அத்லாந்திக் சமுத்திரத்தின்மேல் 1600 மயில் தூரம் ஒரேபகல் 12 - மணி நேரத்துக்குள் பறந்துபோகத் தீர்மானித்திருக்கிறான். ஒரு மணிக்கு 134 மைல் வீதமாய்ப் பறந்துபோவது லேசான காரியமா?

### பம்பாயில் ஓர் பெரிய தீவிபத்து.

சென்றமீ 26௳ பம்பாய் கொலாபா பருத்திக் கிடங்கில் தீப்பற்றிக்கொண்டது. அக்கிடங்கில் 15,500 பருத்திமூட்டைகள் இருந்தன. தீயணைக்கும்யந்திரம் வந்தும் அதனால்பிரயோசனமேற்படவில்லை. அவ்வளவு மூட்டைகளும் சாம்பலாய்ப்போயின இதனால் ரூபா 15,70,000 நஷ்டம் நேர்ந்தது. என்றாலும் எல்லாமூட்டைகளும் இன்ஷூயூர் செய்யப்பட்டவைகள்.

### குண்டு உத்திரவு

கோயம்பத்தூரில் வைஸ்ராயவர்களுடைய ஜென்மதின கொண்டாட்டத்திற்காக வசூல் செய்த பணத்தில் மீதியாய் நிற்கும் ரூபா 347-4-10 தோடு இன்னுங்கொஞ்சந்தொகைவசூல்செய்து முனிஸிபாலிட்டியார் சகாயத்தின் பேரில் தினந்தோறும் இரவு 8-மணிக்குக் குண்டுபோடும்படியுத்திரவாய்விட்டதாம். ஒரு தடவை குண்டுபோடுவதற்கு நேரிடும்13-அணாதினச்செலவை முனிஸிபாலிட்டியார் ஏற்றுக்கொள்வார்களாம்.

### வங்காளம்

பர்டோலா என்றவூரில் Dr பிஷ்ணு சரன்ராய்என்பவரின்குமாரத்தியான 15-வயதுடைய தீபபுராபதேவிஎன்னு மாதுக்கு கொஞ்சநாளைக்குமுன் கலியாணத்திற்கு ஒழுங்குசெய்துவிட்டு நிறுத்திவிடப்பட்டதாம். பிறகு இன்னொருவனுக்கு தன்னை கொடுக்க ஏற்பாடு செய்யவே தனக்கு வெறுப்பாயும் தனக்கு ஈடானவனல்லவென்றும், படிப்பாவது பணமாவது இரண்டுமில்லாதவனுமாக காணப்பட்டதால் வெறுப்பு கொண்டு தன்மேல் கிரோஸின் எண்ணையை ஊற்றிக் கொளுத்திக் கொண்டாளாம் அந்தஅறையின் மேற்கூறை புகைகிளம்ப வீட்டிலுள்ளவர்கள் பயந்து கூச்சல்போட்டு திறக்க சில கோணி மூட்டைகளின் நடுவில் மேற்படி மாது தீயினால் வெந்து செத்துகிடந்தாள் எனச் சொல்லப்படுகிறது.

### தற்கொலை.

சென்றமாதம் வங்காளத்தைச்சேர்ந்த பௌனிப்பூரை அடுத்த கான்ஸாரிபாராவில் 15-வயதுள்ள பிராமணப் பெண்ணொருத்தி மண்ணெண்ணையை தேகத்தில் ஊற்றி நெருப்பு வைத்து தற்கொலை செய்து கொண்டாள்.

காரணம் கலியாணப் பணச்சங்கடமே.

### யந்திரத்தில் பொற்பொடி யகப்பட்டது.

காலிபோர்னியா தேசத்தைச் சார்ந்த வல்லேஜா ஜங்ஷன் என்னும் நகரத்திலுள்ள பொன் மணலரிக்கும் யந்திரசாலை ஒன்றிலுள்ள புகைக்கூண்டைச் சுத்தம் செய்தபோது அப்புகைக்கூண்டில் 1400 பவுண்டு பெறுமான பொற்றூள் ஒட்டிக்கொண்டிருந்ததாம்.

### தந்தியின் சார்ஜ்.

நாளது மாதம் 1-ந்தேதியி லிருந்து இந்தியாவுக்கும் இங்கிலாண்டுக்கும் தந்திசெலவு மிகவுங்குறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது சாதாரண தந்திசார்ஜு வார்த்தை யொன்றுக்கு 8-அணாவாக இருந்தது 4-அணாவாகவும், 12-அணாவாக இருந்தது 10-அணாவுமாகி யிருக்கிறது. இதோடு வாரக்கடைசியில் சனிக்கிழமையிலிருந்து திங்கட்கிழமை வரையில் வேலையதிகமில்லாத நாள்களாகையால் 70-வார்த்தைக்குக் குறையாத கடிதம் போன்ற தந்திகளையின்னுங் குறைவான சார்ஜில் எடுத்துக்கொள்ளப்படுமாம்.

### தீவிபத்து.

பாவாநகருக்கு 72-மைல் தூரத்திலிருக்கும் ராம்பூரில் இரண்டடுக்கு மெத்தை பற்றிக்கொண்டதால் 2-குழந்தைகளிறந்தனவாம். வேறிரண்டுபேர் அதிகமாய் வெந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனதில் உயிர் நீத்தனர். என்று சொல்லப்படுகிறது.

***

---

ஃ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்ரஹ்மணே நமஃ

# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்–1. { ஆனந்தஹு ஆடிமீ 1914ஹு ஜூலைமீ } இதழ்–10.

OCT 1914.

## மெய்ஞ்ஞான தீபம்.

### தர்மத்தினியல்பு.

ஒருவன் பிறர் செய்து வருகின்ற தர்மத்தை உல்லங்கனஞ்செய்தல் வேண்டுமென்றுவது, தன்பெயர் எங்கும் பிரக்யாதி யடையவேண்டுமென்னுந் துராசைகொண்டாவது, நூதனமாகச் செய்யப்புகுந்த தர்மம் அவனுக்குப் பலனைத் தராதாம். புராதனமாயுள்ள தர்மங்களைப் பரிபாலித்தலும், அஃதிபலாதவிடத்து அவ்விதத் தர்மங்களுக்கு மன வாக்குக் காயங்களால் இடையூறு செய்யாதிருத்தலுமே ஒருவர்க்கு நூதனதர்மங்களியற்றிப்பெறுவதிலும் பதின் மடங்கு அதிக பலன் தருமென்பது ஆன்றோர் துணிபு. ஆகையால், விவேகிகள் தர்மா தர்மங்களைப் பகுத்தறிந்து நிற்றல்வேண்டும்.

***

### முயற்சியின் வலிமை.

ஒருவன் செய்யப்புகுந்த காரியம் நற்காரியமாய் இருத்தல் வேண்டும்; அதனைச் செய்து முடிக்கும் மார்க்கமும் நன் மார்க்கமாயிருத்தல்வேண்டும். அக்காரியம் அவனுக்கு சித்தியாவதற்குள் இடையூறுகள் பல நேரிடலாம். முடிவில் அக்காரியம் சித்தியானாலும் ஆகலாம்; சித்தியாகாமற் போனாலும் போகலாம். அல்லது ஒன்று நினைக்க அது மற்றொன்றாக முடியினும்முடியலாம் என்றாலும், "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றும், "முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்றும் ஆன்றோர் பணித்த வாக்கியத்தைக் கடைப்பிடித்து மனத்திட்பத்தைக் கைவிடாமல் எடுத்த காரியத்தைத்தொடுத்து முயலல்வேண்டும்.

***

### செருக்கினால் வருமிடுக்கண்.

தினகரன் ஒரு பிற்பகலில் தன் முன்னின்ற எல்லாப் பொருள்களையும் விளக்கி, மாலைப்பொழுதில் தன் ஸ்தானத்தை வகித்து உலகிருளைப் போக்க வல்லாருளரோவெனக்கூற, ஒரு குடிசையின் மாடத்தில் தயாராக வைக்கப்பட்டிருந்த ஓர் அகல் விளக்கானது சூரியனை வணங்கி, தான் அந்தஸ்தானத்தை வகிக்க வருவேனெனப் புகன்றகதையைப்போல, உலகின்கண்சிலர் தாமே வலியோரென்றும், வளநிதி படைத்தோரென்றும், கல்வியின்கரையைக் கண்டோரென்றும், எல்லாவற்றையும்சாதிக்கு மாற்றலுடையோமென்றும், வீணில் செருக்குற்று பங்கமடைந்து முடிவில் உயிர் துறக்கின்றனர். அந்தோ! இஃதென்ன பரிதாபம்!!

***

### விவேகிகளின் லட்சணம்.

விவேகிகளாயினோர், சாஸ்திரங்களை ஐயந்திரிபற உணர்ந்து, சற்குருவை யடுத்து, சிரவண, மனன, அநுஷ்டான முதலியவற்றைச் செய்து, நடுவுநிலையில் வசித்து, நானென்பது நசித்து, தேகாபிமானத்தைக் கழித்து, நினைப்பும், மறப்பும் இறந்து, உலக வியவகாரங்கள் குறைந்து, பிரம்மாநந்தம் நிறைந்து நிற்பர். அன்னோர்கட்கே சர்வதுக்க நிவிர்த்தியும், பரமாநந்த பிராப்தியும் வாய்க்கும்.

***

## கைத்தொழிலே நம் மேம்பாட்டிற்கு முக்கியகாரணம்.

### 4. உலோகத்தொழில்.

உலோகத்தொழிலென்பது பொதுவாக பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் முதலிய ஐந்து முக்கிய உலோகங்களாலாகும் தொழில்களையும், உப உலோகங்களாகிய பித்தளை, வெண்கலம், திரா, நாகம் முதலியவற்றாலாகும் பணிகளையும் குறிக்கு நிற்கும். இவைகளுள் முன்னர்கூறப்பட்ட ஐந்து உலோகங்கள் ‘பஞ்ச லோகங்கள்’ என்ற தனிப்பெயரை யடைந்து உபலோகங்கள் நான்குடன் சேர்ந்து நவலோகங்களென வழங்கப்பெற்று வருகின்றன. இவ்வொன்பது உலோகங்களுள் பொன், இரும்பு ஆகிய இரண்டு உலோகங்கள் நமதுவம்ஸத்துள் இரண்டொரு சார்பார்களின் தனித் தொழில்களாக பூர்வத்திலேயே ஏற்பட்டுவிட்டமையால், அவை யொழிந்த மற்றைய ஏழு உலோகங்களாலாகும் நம்நாட்டுக் கைத்தொழில்களைப்பற்றி மட்டுமே இங்கு கவனிப்போம். இந்நாட்டுக் கைத்தொழில் சம்பந்தத்தில் உபயோகிக்கப்பட்டு வரும் உலோகங்களனைத்தும் வெளிநாட்டினின்றும் நம் நாட்டிற்கு விசேஷமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றனவேயன்றி உள்நாட்டிலே பெறப்படுகின்றனவைகளல்ல. ஏனெனின், அவ்வித உலோகசத்துக்களில் சிற்சில நம் நாட்டில் உற்பத்தியாகின்றனவெனினும், அச்சத்துக்கள் நம்நாட்டுத்தொழில்களுக்கு வேண்டிய அளவு உற்பத்தியாகாமையாலும், அவைகளை சேகரிப்பதற்குச் சாதனமான கடினஉழைப்பும், இயந்திரசகாயமுமின்மையாலும், இன்னும் நம்மால் நிர்வகிக்கக்கூடாத பல்வகை கஷ்டங்களாலும், இத்தொழில்களுக்கான உலோகங்களை அன்னிய தேசங்களினின்றும் அடைந்து நம் குலப்பணிகளை வெகு சுலபமாக நடத்தி வருகிறோம். ஏதேனும் ஓர்காரணம் பற்றி இவ்வுலோகங்களின் வரவு ஒழிந்தாலும், தாமதம் அல்லது தடைப்பட்டாலும் நம் நாட்டுத்தொழில்கள் ஒருவாறு உறக்கங்கொள்ளக்கூடும். ஆயினும், அவ்வித அசந்தர்ப்பங்கள் சமீபத்தில் நேருமென நினைப்பதற்கில்லை. ஏனெனின், அவ்வித உலோகங்களின் வரவு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. உதாரணமாக 1900 வருடத்திலிருந்து 1903-வது வருட இறுதிவரையில் 3722 டன் நிறையுள்ள செம்பும், பித்தளையும் இச்சென்னை ராஜதானியில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. 1908 வருடமுதல் 1911 வருடத்தோடு முடிவாகிற மூன்று வருடங்களிலே 1,0264 டன் செம்பும், பித்தளையும் இறக்குமதியாகி யிருக்கின்றன. 1900 வருடத்திலிருந்து 1903 வருடம் வரையில் 225 டன் நிறையுள்ள வெள்ளியக் கட்டிகளும், 1808-1911 வருடங்களில் 522 டன் எடையுள்ள வெள்ளியக் கட்டிகளும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டு பலவகைத் தொழில்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்ற வருடத்தில் மட்டுமே 37,93,200 ரூபாய் மதிப்புள்ள செம்பு, பித்தளைத் தகடுகளும், கம்பிகளும், கட்டிகளும் இவ்விராஜதானியில் பெறப்பட்டிருக்கின்றமையாலும், உலோகத் தொழிலைப் பின்பற்றி யிருப்பவர்களின் ஜனத்தொகை 19,578 லிருந்து 20,857 ஆக விர்த்தியாகி யிருப்பதாலும் நம் நாட்டு உலோகத் தொழில்கள் இரும்பு, மரம் முதலிய தொழில்களைப்போல் காலதேச வேறுபாட்டினால் மாறுபாடடையாதிருப்பது நன்கு புலப்படும். ஆகையால், உள்ளதே போதுமென்று திருப்தியடைந்து உறக்கங்கொள்ளாமல் இத்தொழில்களை நவீன நாகரீக முறைகளை அநுசரித்து மேன்மேலும் விர்த்திக்குக் கொண்டு வரும் மார்க்கங்களை நாம் ஆராய்ந்து அதன்படி நிற்றல் வேண்டுமன்றோ?

உலோகத்தொழில் மூன்று முக்கிய பிரிவுகளை யுடையதாகும். அவற்றை ‘வாட்டுவேலை,’ ‘வார்ப்புவேலை,’ கொட்டுவேலை’ யென்றும் சொல்லுவர். வாட்டுவேலை யென்பது, பலவித உலோகத் தகடுகளை மட்டசுத்தப் படுத்திப் பின்னர் அவைகளை நெருப்பி னுதவியைக்கொண்டு அடித்து பல உருவங்களையுடைய பாத்திரங்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் செய்வதாகும். வார்ப்புவேலையானது, வெள்ளி, செம்பு, பித்தளை, வெண்கலம், திரா, ஈயம், நாகம் முதலிய உலோகங்களை உருக்கி கருக்களில் வார்த்து பாத்திரங்கள், விளக்குகள், விக்கிரகங்கள், மணிகள் விளையாட்டுப் பிரதிமைகள் முதலியவைகளைச் செய்யும் தொழிலாகும். கொட்டுவேலை யென்பது, வெண்கலம், முறி முதலிய சேர்மான உலோகங்களைப் பக்குவமாக அடித்து உண்கலம், தாலம், கிண்ணம், வட்டில்கள் முதலியவைகளைச் செய்வதாகும். பல உலோகத் தகடுகளின் வெளிப்புறத்தில் கிளம்பி யெழுந்த சித்திரங்களைக் காட்டும் ‘நகாசுத்தொழில்’ முதலில் சொல்லப்பட்டுள்ள வாட்டு வேலையுடன் அந்யோந்யப்பட்டிருக்கிறது. அவ்வாறே கடைச்சல் வேலையும், வாட்டுவேலையுடனும், வார்ப்புவேலையுடனும் ஐக்கியப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டு வேலைகளுள் முன்னர் கூறப்பட்ட நகாசு வேலையானது, பொன் வேலையின் ஒருமுக்கிய பிரிவாக விருந்தபோதிலும் உலோகத் தொழில் சம்பந்தத்தில் தனித்ததொரு தொழிலெனக் கூறுவதற்கில்லை.

தென்னிந்தியாவில் பல ஊர்களிலும் இத் தொழில்கள் சாதாரணமாக நடைபெற்று வருகின்றனவெனினும், ஒவ்வோர் தொழிலும் ஒவ்வோர் ஊர்களில் அதிகமாக நடத்தப்பட்டு அவ்வூர்களுக்கு விசேஷ பிரக்யாதியை விளைவித்திருக்கின்றது. உதாரணமாக, வாட்டுவேலையின் வேலைப்பாட்டிற்கும், தொழிலின் உன்னதத்திற்கும் கும்பகோணம் பிரதம ஸ்தானத்தை வகித்திருக்கின்றது. வார்ப்புவேலையில் மதுரையும், பால்க்காடும், நாச்சியார் கோயிலும் கீர்த்தி பெற்றிருக்கின்றன. கொட்டுவேலையில் அறுப்பர்பாளையம், நிலக்கோட்டை முதலிய ஊர்களின் பெயர் நீடித்து வழங்குகின்றன. நகாசுத் தொழிலின் நயத்திற்கு தஞ்சாவூரும் மதிமயக்கம் தரும் வேலைப்பாட்டிற்கு காரைக்குடியும் கவுரவம் பெற்றிருக்கின்றன. மற்றொரு சார்புத் தொழிலாகிய கடைச்சல் வேலையின் அருமைப்பாட்டிற்கு பாலக்காடு முதல்ஸ்தானத்தையும், கும்பகோணம் இரண்டாவது ஸ்தானத்தையும், காஞ்சிபுரம் அதற்கடுத்த ஸ்தானத்தையும் வகித்துவிளங்குகின்றன. இவ்வூர்களையும், இவ்வூர்களில் செய்யப்படும் வேலைகளையும் நாமேபுகழ்ந்துகொண்டாடுகிறோமேயன்றி அவை அன்னிய நாட்டாரால் புகழ்ந்து கொண்டாடப் பட்டவைகளல்ல. ஏனெனின், உலோகத் தொழிலாகிய சாமான்கள் அயல்நாட்டுக்கு விசேஷமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதில்லை. இந்நாட்டுப் பாத்திரம் முதலியவைகள் அவர்களின் நாகரீகங்களுக்கும் வழக்க ஒழுக்கங்களுக்கும் பொருத்தமுள்ளவைகளல்ல. பித்தளை, ஈயம் முதலியவைகளால் செய்யப்பட்டுள்ள பாத்திரங்களினிடத்துள்ள களிம்புக்காகவும், விஷசத்துக்களுக்காகவும் அவைகள் அவர்களால் இகழப்படுகின்றன. ஐரோப்பிய மாதிரிகளுக்கிணங்கிய கொஞ்சம் வெள்ளி சாமான்களும், பல உலோகங்கள் பதித்த (Inlaid) தாம்பாளங்கள், பொம்மைச் சாமான்கள், யானை, குதிரை, ஓணான், பாம்பு, பல்லி முதலிய வார்ப்பிட விளையாட்டுச் சாமான்களைத்தவிர வேறு சாமான்கள் வெளிநாட்டிற்கு இந்நாட்டிலிருந்து அனுப்பப்படுகிறதில்லை. ஆகவே, இங்கு உற்பத்தி செய்யப்படுகிற சாமான்களனைத்தும் உள் நாட்டிலேயே விசேஷமாக விற்கப்படுகின்றனவென்றும், இத்தொழில்கள் தினேதினே விர்த்தியாகிக்கொண்டு வருகின்றனவென்றும் பெறப்படுகின்றன.

வெகு காலமாக கையாளப்பட்டுவந்த மட்பாத்திரங்களின் உற்பத்தி குறைந்து, மிக்க எளியவர்களும் தற்காலம் அவைகளை இகழ்ந்து உலோகப் பாத்திரங்களைக் கையாடி வருவதினால் பொதுஜனங்களின் சுபிட்ச நிலைமையையும், நாகரீக முதிர்ச்சியையும் ஒருவாறு ஊகித்தறியலாம்.

நிற்க, சில உலோகத் தொழிலில் நம் நாட்டார் மிகவும் கை தேர்ந்தவர்களென்றே சொல்லவேண்டும். ஆரம்ப முதல் அந்தம் வரையிலும், அதாவது தகடடித்தல் முதல் மெருகிட்டுதீர்மானஞ் செய்கிற வரையில், ஒரு வேலையை ஒருவரே செய்துமுடிக்கும் சாமார்த்தியத்தை அன்னிய நாட்டார் மிகவும் வியந்து கொண்டாடி, அத்தகைய தொழில் வல்லாருக்கு இங்கு ஏற்பட்டிருக்கும் கூலிக் கட்டணங்களையும், படாடோபமின்மையையும் பார்த்து ஆச்சரிய முறுகிறார்கள். இவைகளினால்மட்டுமே நமது குலப்பணிகளினிடத்திலுள்ள குற்றங்களும், குறைபாடுகளும் நமது கண்ணிற்குப் புலப்படாமற்போகா. ஆகையினால், நவீன முறைகளை அநுசரித்து நமது தொழிலின் குறைபாடுகளைத் தவிர்த்து அவைகளைப் பல வழியிலும் செழிப்புறச்செய்ய முயலவேண்டும். நவலோகங்கள் நமது வேலைகளுக்கு மிக்க உரியவைகளாயிருந்தபோதிலும், அன்னியநாட்டாரால் கையாடப்படும் மற்ற உலோகங்களையும் நாம் நன்குணர்ந்து, அவைகளில் நம் நாட்டுத் தொழில்களுக் கேற்றனவற்றைத் தெரிந்தெடுத்து உபயோகிப்ப தவசியமாகும். மேற்றிசையாரால் சுமார் 64 உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. செயற்கை உலோகங்களோ இன்னும் அனந்தமிருக்கின்றன. இவ்வித நூதன உலோகங்களை நாம் கையாடுவதினால் நஷ்டம் நேருமென அஞ்சுவதற்கு இடமில்லை. உதாரணமாக, 1898 வருட ஆரம்பத்தில் சென்னை பொம்மைகாலேஜ் (School of Arts) கட்டிடத்தில் வெகுஉபாயமாக ஆரம்பித்த அலுமினியத் தொழிலானது இரண்டொரு வருடங்களுள் மிகவும் பிரபலமும் உலகப்பிரசித்தியு மடைந்து, 1903 வருடத்தினிறுதியில் ‘இண்டியன் அலுமினியம் கம்பெனி’ என்னும் வர்த்தக சங்கத்தாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. அந்த கம்பெனிக்கு தற்காலம் சுமார் 6. 80,000 ரூபாய் முதல் ஏற்பட்டிருக்கிறது. தொழின் முறையிலும், வர்த்தகத்திலும், நூதன இயந்திரங்களினுதவியிலும் இத்தொழிற்சாலை இந்தியாவில் முதன்மை பெற்றிருக்கிறது. 1911 வருடத்தில் மட்டும்இங்கு இறக்குமதியான அலுமினியம் 590 டன் என்றும் அதன் பொருமானம் ரூபாய் ஒன்பதே கால் லட்சம் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அலுமினியத்திற்கு நம்மவர் சில தோஷங்கள் கற்பித்தாலும், அந்த உலோகம் செம்பு, பித்தளை முதலியவைகளை விட சில விஷயங்களில் சிலாக்கியம் பெற்றிருப்பதால் அத்தொழிலிலும் நாம் கவனம் செலுத்தி அதனைப் பின்பற்றுவது அவசியமேயாம். அதனோடும், அன்னிய நாட்டாரின் பற்றவைப்புப் பொடிகளையும், அவைகளை வைத்தூதுமுறைகளின் பேதாபேதங்களையும் பகுத்தறிவதிலும் நம்மவர் பரபரப்பும் கவனமும் காட்டவேண்டும்.

வாட்டு வேலையைச் சுலபமாகவும், லாபமுடனும் செய்யவேண்டுமானால் முக்கியமாய் தகட்டு ஆலைகளைக் கையாடவேண்டும். இவ்வித ஆலைகளை வெளிநாட்டினின்று வரவழைக்கத் தேவையில்லை. சென்னையிலேயே இவ்வித ஆலைகள் செய்யப்பட்டு சொற்ப விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. தகடுகளை வெட்டவும், துளைக்கவும் அயல் நாட்டார் உபயோகிக்கும் ‘பஞ்ச்’ என்னும் இயந்திரத்தின் உதவியைப் பெறவேண்டும். தகடுகளைச் சமனாகக் காய்ச்சுவதற்கு அநுகுணமாக தோல் துருத்திகளை துலைத்துவிட்டு சுரிகுழல் துருத்திகளை உபயோகிக்கவேண்டும். இன்னும் வாட்டு வேலைக்குபயோகமான மேற்றிசையாரின் சுத்திகள், கரவைகள், பணைகள் முதலியவைகளைப் பகுத்தறியவேண்டும். நம் நாட்டுக்



கம்மியர் வார்ப்பு வேலையை மிகவும் கீழ்த்தரமாகவே இன்னும் செய்துவருகிறார்கள். இவ்வேலையில் நாம் மற்றெல்லா நாட்டாரை விடத் தாழ்ந்து நிற்கிறோம். வார்ப்பிடக்கருக்களை அடிக்கடி உடைத்து அழித்துவருவதையும், வார்ப்பிக்கப்பட்ட சாமான்கள் அநாவசியமாகக் கனமாயிருத்தலையும் கண்டு அவர்கள் மிகவும் இகழ்கிறார்கள். சேர்மானமணலில் சுலபமாக எந்த வஸ்துக்களையும் வார்ப்பதைவிட்டு பாரக் கணக்கான மெழுகைத்திரட்டிக் கொண்டு பிறகு அவைகளின்மேல் அரைத்த மண்ணைக்கொண்டு கருக்கட்டி வார்க்கும் அதிக கடினஉழைப்பைக் கண்டும் புன்னகை புரிகிறார்கள். கோயில்களில் நாட்டியிருக்கும் கண்டாமணிகளை நம்நாட்டுக் கம்மியர் நாணயமாகவும், அலங்காரமாகவும் வார்க்கத் தெரிந்திருந்த போதிலும், ஒரு மணியைக் கருக்கட்டி வார்ப்பதற்கு சுமார் 2-3 மாத காலம் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி தாமதமாகச்செய்வதிலும், அவ்வேலையை ஆரம்பிப்பதற்கும், கருக்களை நன்றாயுலரவைப்பதற்கும், கோடை காலத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். மேற்றிசை வார்ப்பிட முறையைக் கையாடுபவர்களுக்கு வெயிற்காலம், மழை காலமென்ற வித்தியாசமின்றி, நாள் ஒன்றுக்கு நாற்பது மணிகளை, பெட்டியிட்டு வார்க்கும் சக்தி ஏற்பட்டிருக்கிறது. இனாமல் தட்டுகளும், அலுமினியத் தட்டுகளும், தாலங்களும் இந்நாட்டில் மலியவே, கொட்டுவேலை தற்காலம் குன்றி வருகின்றதெனச் சொல்லலாம். இரண்டொரு ராத்தல் எடையில் செய்யக்கூடிய உண்கலம், வட்டில், தாலம் முதலியவைகளை அதிக கூலிக்காசைப்பட்டு பத்து முதல் இருபது ராத்தல் கனமுள்ளவைகளாகச்செய்து விற்பனை செய்யப்பட்டு வருவதை யார்தான் வாங்கி உபயோகிக்கமுன்வருவர்? இதன்உண்மையை நன்குணர்ந்து பாலக்காட்டுக் கம்மியர் தங்கள் உண்கலங்களையும், மற்ற வார்ப்பிடச் சாமான்களையும் வெகு மெல்லியதாகச் செய்து விற்று லாபம் பெறுவது நம்மனோர்க்கு ஓர் தகுந்த படிப்பினையாகும். யானை, குதிரை, தேர் முதலிய சிறுவர்க்கான விளையாட்டுச் சாமான்களும் இங்கு நன்றாய்ச் செய்யப்படுகிறதில்லை. நம்மவர் குதிரையை நினைந்து ஓர் பிரதிமை செய்தால் அது முடிவில் உலகில் இல்லாத ஓர் நாற்கால் பிராணியின் ரூபத்தை யடைந்து விடுகிறது ஓர் அதிசயமன்று. நம்மனோர்க்கு, சித்திர மெழுதும் பழக்கம் இல்லாமையே இவ்வித ஆபாசங்களுக்கு முக்கிய காரணமாகின்றது. இந்த ஸ்திதியில் நமக்கு எங்ஙனம் உருவச் சிலைகளை (Statues) வார்க்கும் சக்தி ஏற்படுமோ அறிகிலேம். உருவச்சிலைகள் ஒருவரின் ஞாபகார்த்தமாக நாட்டப்படுவதால் அவைகள் சுயரூபம் பெற்றிருப்பதும், விலை சரசமாகத்திர எடைகுறைந்திருப்பதும் அவசியமாகிறது. நம் நாட்டுக் கம்மியருக்கு இவ்விரண்டு சக்திகளுமில்லை. தென்னிந்தியாவில் ஆங்காங்கு சிற்சில உருவச் சிலைகள் பூர்வத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள் குடந்தை, சக்கிரபாணி சுவாமி சன்னிதானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் தஞ்சாவூர், சிவாஜி மகாராஜாவின் உருவச்சிலையே குறிப்பிடற்பாலது. இச்சிலை பித்தளையால் செய்யப்பட்டு மேலே கீறல் வேலை செய்யப்பட்டிருக்கிறது. சிலையின் உயரம் ஆறரையடியும், சுமார் இரண்டே முக்கால் அல்லது மூன்று டன் நிறையுள்ளதாக இருக்கிறது. சென்னை முதலிய ராஜதானி நகரங்களில் நாட்டப்பட்டிருக்கும், விக்டோரியா மகாராணியார், எட்வர்ட் சக்ரவர்த்தியார், மன்றோ, நீல்முதலிய மேதாவியரின் உருவச்சிலைகளின் அருமைப்பாடுகளைபார்த்து ஆனந்திக்க கண்களுக்கு சிவாஜி மகாராஜாவின் சிலை மிக்க அருவெறுப்பையும், உள் நகைப்பையும் உண்டு செய்யுமென்பதற் கையமேயில்லை. உலோகத்தொழிலை பிரபலமாகச்செய்ய வேண்டின் இயந்திரங்களினுதவி மிகுதியாக வேண்டும். இவ்வேலைகளுக் குரிய இயந்திரங்களை ஒருவர்ஏகதேசத்தில் வாங்குவ

தியலாது. ஆகையின் கூட்டுச் சேர்ந்து பெருத்த மூலதனத்தை ஒவ்வொரு பெரிய வர்த்தக ஸ்தானங்களிலும் சேகரித்து அங்கு வியாபாரமாகிற சாக்குகளை உற்பத்தி செய்து விற்பனையாக்குவது நன்று. ஜர்மனி முதலிய தேசங்களிலிருந்து இங்கு ஏராளமாக ஏற்றுமதியாகும் பித்தளை டம்ளர்களைச் செய்யும் இயந்திரங்களையுடைய தொழிற் சாலைகளை ஸ்தாபிப்பதற்கு ஆரம்பத்தில் சுமார் ரூ. 4000 போதுமானதாயிருந்தது. இவ்வித தொழிற் சாலைகள் இரண்டொன்று இந்நாட்டில் சமீபத்தில் ஏற்பட்டிருந்த போதிலும் அவர்கள் பொது ஜனங்களின் தேவைகளுக்குரிய பாத்திரங்களைச் செய்யப் போதுமான தொழில் ஞான மற்றவர்களாயிருப்பதாகத் தெரிகின்றது. தொழிற் சாலைகளை ஸ்தாபிக்குமுன் ஜனங்களின் சௌகர்யத்திற்கு வேண்டியவைகளை நன்குணர வேண்டும். அத்தொழில் வல்லோர்களை அன்னிய ஊர்களினின்றேனும் வரவழைக்க வேண்டும். ஷோலாப்பூரில் செய்யப்படும் சில வாட்டு வேலைப்பாத்திரங்கள் மனதிற்கு இன்பத்தைத் தருகின்றன. அவர்களின் டிப்பன் டம்ளர் (Tiffin Carrier) கள் அச்சமான பித்தளைத் தகட்டில் செய்யப்பட்டு, மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை போன்ற உபயோகமான வஸ்துக்களை செய்யக்கூடிய சாமர்த்தியம் நம் நாட்டினர்க்கும் இல்லாமற் போகவில்லை. அவ்வித பாத்திரங்களைச்செய்து, வெளிப்புறத்தில் ‘நிக்கல்’ பூச்சும், உட்புறத்தில் ஈயப்பூச்சும் பூசிவிற்றால் அவற்றை வாங்காதார் யாரே! உலோக வேலையில் அதிக ஞான மற்றவர்களுக்கு குண்டூசித் தொழில் குறை வற்ற செல்வத்தைக்கொடுக்காதா? இத்தொழிற்குவேண்டும் மூலதனம் ஓர் ஆயிரம்ரூபாயேயாகும். இன்னுமிவை போன்ற நமது கவனத்திற்குரிய சிறிய தொழில்கள் பல விருக்கின்றன. வெளி நாட்டிற்கு அனுப்பப்படும் வார்ப்பிட விளையாட்டுச் சாமான்களின் வேலைப் பாடுகளை நாம் இன்னும் விர்த்தி செய்ய வேண்டும். ஜெயப்பூர் முதலிய ஊர்களினின்றும் இங்கு அனுப்பப்படும் விளையாட்டுச் சாமான்கள் வெகு விசித்திரமாக விருக்கின்றன. இவ்வித சாமான்களில் ‘இனாமல்’ என்கிற வர்ணப்பூச்சு பூசியிருப்பதைப் பார்க்கலாம். இவ்வித பூச்சுகளினால் உண்டாகும் அழகையும் அப்பூச்சுகளிடும் வழிகளையும் நம்மவர் அறிந்தவர்களல்ல. இப்பூச்சுகளிடும் வழிகளை நன்குணர்ந்த ஓர் கனவான் இச்சென்னையி லிருக்கின்றனர். உண்மையில் அத்தொழிலை அப்பியசித்து, தொழில் முறைகளில் உபயோகப்படுத்தக் கூடிய சிலர்க்கு அத்தொழிலின் ரகசியங்களைக் காட்ட அக்கனவான் முன்வரவுங்கூடும். நகாசு வேலை செய்வதற்குப் பதிலாக வெட்டுப்போகரைக்கொண்டு தீர்ந்த பாத்திரங்கள் மீது கீற்றுவேலை செய்து வருவது நம்மவர் வேலைகளில் ஓர் பெருத்த குறை. இக்குறையைத் தவிர்க்க ‘என்கிரேவிங்’ என்று சொல்லப்பட்ட பிடிப்போகரை வேலையை ஒவ்வொருவரும் அப்பியசிக்க வேண்டும். கடைச்சல் வேலையை நன்றாய்ச் செய்வதற்கு ‘லேத்’ என்னும் கடைச்சல் பட்டரைகளினுதவி அவசியமேயில்லை. கைப்பட்டரைகளை சக்கரத்தினாலும், 10 பட்டரைகளுக்கு அதிகப்படுவனவற்றை சொற்ப குதிரைகளினோட்டமுடைய ஆயில் இஞ்சின்களைக் கொண்டும் வேலைகளைச் சுலபமாக நடத்துவது நன்று. இன்னும் இந்த உலோகத் தொழிலைக் கண்ணியமாக நடத்தும் எண்ணிறந்த வழிகளிருக்கின்றன. அவைகளில் முக்கியமானவைகளை மட்டும் கூடிய வரையில் மேலே சுருக்கிச் சொல்லியும் விஷயம் விரிந்து விட்டமையால் அவற்றை இம்மட்டோடு நிறுத்தினோம். மேற்காட்டிய விஷயங்களையெல்லாம் நம்மனோர் நன்குணர்ந்து, ஒற்றுமையைநாடி, உலோகத்தொழிலைச் சீர்படுத்தின், அன்னோர்க்கு, செல்வமும், சிறப்பும் வாய்க்குமென்பது திண்ணம்.

**பத்திரிகாசிரியர்.**



## குலாபிமானம் வேண்டும் என்ற அவாவிற்கு கல்வியே சிறப்புடைத்து.

அறிவிற் சிறந்த அன்பர்காள்! மனிதப் பிறப்பினுள் எந்நாளும் அமைந்து கிடக்குந் தீக்குணங்களில் அகங்காரம், மமகாரம் எனுந் துர்க்குணங்களே இயற்கையில் ஒவ்வொரு செய்கைகளிடத்து முற்படக்கிளர்ந்து எவ்வெவ் விஷயங்களினும், உள்ளுறைப் பொருளாய்க் கலந்து பற்பல தீமைகளை அளித்து வருபவைகளாய் நமதனுபவத்தில் நாடோறும் நாங் கண்டுணர்ந் திடழிவது கண்கூடன்றோ? இவ்வனுபவம், கடல் புடைசூழ்ந்த உலகினில் மிகப்பெருக்கம் அளாவிய ஜீவகோடிகளின் இயல்பென்றே சாற்றற் பாலது. இத்தோற்றம் இரண்டினில், அகங்காரம் வாளாகவும் அதனை உட்கொள்ளும் உறையாக மமகாரத்தையும் உபமானப்படுத்தலாகும். அகங்காரத்தின் பொருள் நான் என்பது. மமகாரம் எனதென்பதாம்.

அகங்காரத் தீக்குணம், மனுடப்பிறப்பினைக்கெடுக்கும் இயல்பையுடையதென நாம் பலவாறு ஆராய்ந்திருப்பினும் அது நம்மைவிட்டு மறக்குஞ் சக்தியுடையது. எழுவகைப்பிறப்பு நால்வகைத் தோற்றங்களாலாகிய, எண்பத்துநான்கு லக்ஷ யோனிபேதங்களில் மனிதஜென்மமே விசேடமுணர்வுற்றதென இதனை வாசிக்கும் நண்பர் எவரும் அறிவர். நுண்மதிப் பேற்றினை அடைந்த இவரன்றோ, அத்தீக்குணங்கள் தன்னைவந் தடைந்தது எவ்வணம் எனவும், அதனை நீக்குவான் முயலும் பான்மை யாங்ஙனம் எனவும் ஆராயுங் கடப்பாடுடையாவர்.

இனி அகங்காரத் தோற்றம் இனையதெனவும், அதனால் விளையுந் தீப்பயன் விளைவையும் ஆராய்ந்து அதனை நீக்கும் நல்லவழியையும், இங்கு என் சின்மதிக் கெட்டியவண்ணம் மிகச் சுருக்கிச் சொல்லுவாம். அகங்காரச் செயல் என்பது என்னை எனில், இஃது மனதால் சங்கற்பநிகழ்ந்த மாத்திரந்தானே உண்டாகுங் கடபடாதி விடயங்களைப் புத்தி தத்துவத்தால், ஆலோசிக்கப்பட்டுச் சித்தம் அதன்கண் பிடிவாதஞ் செய்து அதன் பின்னர் அவ்விடயங்களை எனதெனத் துராபிமானஞ்செய்து நிற்பது. அஃதெங்ஙனமெனில், சராசர வஸ்துகளனைத்தினுஞ் சருவ சுவாதந்திரியம்பெற்றுள்ள அநாதிமுத்த சித்துருவாகிய கடவுள் ஒருவரே. எப்பொருட்கும் இறைவன் எனும் உண்மை நிலையினைக் கவனியாது, தேகேந்திரியாதிகளை நான் என்றும், கடபடாதிகளை எனதென்றுந், துரபிமானஞ் செய்த காரணத்தால், தனக்குச்சமானம் எவருமில்லை எனச்செருக்குற்று நிற்கையால் மும்மதப் பெருக்காற் றன்னை மறந்திருக்கின்ற ஒரு மதயானைக் கொப்பெனச் சொல்லல்வேண்டும்.

இவ்வந்தக்கரண, அகங்காரத்துக்காரணமாக இனியோரகங்காரமுளது. அஃது மூல அகங்காரமென்னப்படும். முற்கூறிப் போந்த அவ்வகங்காரத்தின் காரியமாகவும் பிறிதோரகங்கார முண்டு. அதுவே அவிவேகத்திற்கு ஆதாரவு பெற்றுள்ளதெனச் சாத்திரத்துணிபு. இவ்விதம் பகுதிப் பாடுடைய அகங்காரத் திறையங்களனைத்தும், துரபிமானத்தையே மேற்கொண்டு நிற்பனவாம். அபிமானம் என்பது, தான் அல்லாதவற்றைத் தானாகப் பாவனைகொண்டு நிற்பதென்றுணர்க.

அகங்காரத்திற்கு மூலவகங்காரங்காரணமாகிய தெவ்விதமெனில், ஜடரூபமான அவித்தையினிடத்து, ஆன்மப் பிரதிபலின மாத்திரத்தால், அஃது சிதாபாசத்துவம் பெற்று நிற்பதாம். ஆனால் சித்ரூப ஜீவான்மாவைப்போற் பாவனை கொண்ட தன்மையானே காரணமாயிற்றென் றறிக.

இச்சிதா பாசத்துவம் நானென்றெழுந்த போதே, இச்சாரூபத்தினால் பொன் போற் பிரகாசியா நின்ற மனமானது யாதொரு தொழிலையேனும், பொருளையேனுஞ்சங்கற்பித்த போதே அஃது மனமெனப் பெயராயிற்றென்பர். திருஷ்டாந்தமாக, யாதாமொரு பொன்னானது, கடகமென்றும், மகுடமென்றுங், குண்டலமென்றுங், கிரியா பேதத்தால் பெயர் வேறுபடுவது போன்று, களங்கமற்ற அம்மனமுஞ் சங்கற்பித்த விடயத்தை நினைவின் கண், உருவகப்படுத்தல், வரையறுத்தல் அபிமானித்தல் ஆகிய கிரியா பேதத்தால், புத்தி, சித்தம், அகங்காரம் என வேறு வேறு பெயர்கள் பெற்றுள்ளன. இஃது வேதாந்த சாத்திர நுட்பங்களாம். ஆகவே முன்னர் செப்பிவந்த ஜீவான்ம சுபாவமான அறிவானது தனது நிலையில் நிலையாது எக்காலத்தும் விடயவெண்ணங்களால், என்று மனமெனப் பெயர்பெற்றுளதோ அன்றே அகங்காரங் கனியாய்ஆவதற்கோர் மரம் எனக் கூறுதியல்பிற்று.

யாங்ஙனம் எனில் இங்ஙனம், மனதால் எண்ணப்பட்ட பற்பல விஷயங்களையும் உத்தேசித்துள்ள விசாரணையின் நிமித்தம், அவ்வறிவானது புத்தி எனப் பெயர் பெற்றதுவே மலராகியும், பின்னர் அவ்வறிவு பிரிய விடயத்தினிடத்து நிலையுற்ற போது சித்தம் என நாமமும் அடைந்து அஃது காயாகியும், எனக்கெனக்கென ஆசை நிலையிற் பிரியாப்பிரிய விடயங்களின் யாவற்றினிடத்தும் நான் நான் என்பதோராபிமானங்கொண் டகங்காரப் பெயர் பெற்றதுவே, கனியுமாயிற்றென் றுணரற்பாற்று. ஈண்டு நான், அல்லது தான் எனப்படுவது, உயர்திணை யாண்பாற்றன்மையொருமைப் பெயரேயன்றி வேறுமோவெனில், ஐம்பால் மூவிடத்தும் உபயோகப்படுத்தும் பான்மையில், இன்றளவுஞ் ஜீவகோடிகளிடத்தும் அகங்காரக் குணத்தை நாம் உள்ளங்கை நெல்லிக்கனியாய்க் கண்டறியலாமன்றோ? இதனை முன்னர் தொடக்கத்தில் கூறிவிடுத்தாம். ஆதலால் இஃதொரு சித்தப்பிரமையேயன்றி வேறென்னை. நான் பிராமணன். நான் பண்டிதன், நான் சீமான், நான் தகப்பன் எனவும், எனது வீடு, எனதுமாடு, எனது பொருள், எனது மகன் எனவும் இவ்வாறே அகங்கார மமகாரப் பிராந்தியால். நாளுளுஞ் க்ஷேனை, க்ஷேனை நானெனக்கூறித் தாபிமானத்தால் துயருற்றுழலுஞ் ஜீவவியற்கையின் தீநெறிகள் என்று விட்டகலுமோ அறியேம், இதனாலன்றோ, பொறாமை, குரோதம். மற்சரம், பொய்கூறல், ஒற்றுமைக்கேடு, முதலிய தீக்குணங்கள் மனிதர்பால் வியாபிக்கின்றன. அந்தோ பரிதாபம்! பரிதாபம்!!

ஆன்றமைந்த சான்றுடையீர்; நாமிது காறுஞ் செப்பிவந்த விஷயங்கள் அகங்கார மமகார சமனுபிப் பிராயமாதலால், நமது விஷயத்தலைப்பின்கண் எடுத்துக்கொண்ட கொள்கைக்கு சிறிது வேறுதல்பற்றி, நிவிர் மற்றொன்று விரித்தல் என்ற இலக்கணக் குற்றம் என எண்ணற்க. அதற்குப் போதிய நியாயங்காட்டுதும். மாந்தர் இயற்கையிற் பெற்றுள்ள வெற்றபிமானம் குல வொழுக்கத்தில் வந்து விடலாகாதெனவும், வருமேல் அகங்காரம்பற்றி அஃது வந்ததாகும் என்றே, அதனை முதன் முதன் நீக்குவான் விரும்பி, சுருங்கச்சொல்லல் என்ற அணிபடச் சிறிது விளக்கினும். அகங்கார வெண்ணங்களால் ஏற்படும் அபிமானங்கள் அனந்தமுள. அதனை இதுபோது விரிக்கில் மிகப் பெருகுமென வஞ்சிவிடுத்து, லௌகீக விருத்தியில் மானுடர் கொண்டொழுகும் அபிமானத் தோற்றங்கள் எவை யென விசாரிக்கில், கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, ஒழுக்கங்களால் வரும் அபிமானமே மனிதத் தருமகட்டுப்பாட்டிற் சிறப்புடைத்து.

“தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, யம்மா பெரிதென் றகமகிழ்க— தம்மினுங், கற்றாரை நோக்கிக் கருத்தழிக மற்றெல்லா, மெற்றே யிவர்க்குநா மென்று.



இம் முதுமொழியால் தம்மிற்றாழ்ந்தோரைக் கண்ணுற்று, அவரினுந் தமது பாக்கியம் மேலென நினைந்து உண்மகிழ்வடைக. அவற்றில் தம்மினுங் கற்றுள்ளாரைப்பார்த்து அவரினும், நாங்கற்றுக் கொண்ட தெவ்வாறென மனப்பொறாமை பெறுகவென்றார் மேலோர். இதனானே, லௌகீகக் கல்வியிற் றேறுந் தேர்ச்சியாற் பெறப்படும் இறுமாப்பு, கல்வி வளர்ச்சிக்கு காரணமாயிற்றென்க. பின்னர் கல்வி, கேள்வி, ஆராய்ச்சி யென்ற முப்பகுப்பினுள், முதற்கூற்றினில் கல்வியைப் பெற விரும்புவார். இரண்டாவதாகிய கேள்வியையும் மூன்றாவதாகிய ஆராய்ச்சியையும் அடைவாகப்பெறுதல் வேண்டும் என நினைத்தொழுகல்வேண்டும். கல்வி கேள்வி ஆராய்ச்சியிற் பயின்று நுண்ணிய ஆலோசனைகளில் கையாடிவரா நின்ற நல்லோர் மேற்சொன்ன நெறிகளால் அடைய வேண்டும் பலப் பிராப்தியாதோ, அஃது பூரணமாகவில்லை என உற்றுணரா திருப்பாருமுளரோ? என நினைக்கின்றேம். இவற்றில் கல்வி கேள்வி ஆராய்ச்சிகளால் அடையத்தகும் பயன் எதுவென நினைப்புழி, எழுவகைப் பிறப்புகளால் வியாபித்துள்ள அளவற்ற ஜீவராசிகளின் பேதங்களினுஞ் சிலாகனீயம் பெற்ற மனித வாழ்க்கையில் மற்றையப் பிராணிகளைப் போன்று ஆகாரம், நித்திரை, புணர்ச்சி ஆகிய இவ்வற்றால் வாணாளை வீணாகச் செலுத்தி சரீராந்தியத்தை அடைகின்றோமே என முதல் உற்றுணரல் வேண்டும்.

பின்னர் நாஞ் கற்றுநமுகமாய்க் கற்றறிந்த ஞானவாராய்ச்சியினிடத்து நமக்காகச் சொல்லைப்பட்டிருக்கின்ற முக்கிய பயன்யாதென மனதிற் கொள்ளாகிரார். இவ்வண்ணங் கற்றுத் தேர்ந்த நூற்களினாலேயும். ஞானனுபவப் பெரியோர்பாற் கொண்ட கேள்விகளினாலேயும், நமக்காக வேண்டற் பாலதாகிய, அவசிய பயன்கள் இனையதெனச் செவ்விதாய் அறியப்பட்டிருக்கவும், அவைகள் மறைபட்டிருப்பதிற் கேதுவாகும் (பிரதிபந்தங்கள்) தடைகள், எவைகள் என மனத்தாலோர்ந்து சிந்தனை செய்வார் எனத் திண்ணமாய் நம்புகின்றேம். இவ்வாறெப்பொழுதுந் தன்செயல் இன்னதெனச் சற்றுண் முகமாய் உணராதிருப்பரேல், அன்னவர் உலகியலில் மிகச் சோம்பேறிகளாய்ப் பராமுகங் கொண்ட பண்புடையோர் எனச் சாற்ற வையமுமுளதோ. இப்பராமுகம் பெற்றோர் தம் தான்மாவின் நற்கதிக்கு விரோதம் புரிந் தரிவரேயாம். (தொடரும்.)

ஜி. சுவாமிநாதன் ஆச்சாரி.
கோட்டாறு,

(263-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## நங்குலநேயர்களுக்கு விஞ்ஞாபனம்:

அதாவது வித்தையில்லாதவனுடைய ரூபமும், ஜீவநமும், தொழிலும், புருஷத்தன்மையும், பூஷணமும், பிரயோஜன மற்றவைகளென்றும், நீசனிடத் திருந்தாயினும் உத்தமமான வித்தையை கிரகிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

கல்வியினாலடையும் பலன்கள் அநேகமிருக்கின்றனவென மஹாஜனங்களுக்கு நான் அதிகம் எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஆனாலும் இச்சபையினிடத்திருந்தும் நம் சிறுவர்கள் அடையவேண்டும் கல்விகளின் விஷயங்கள் சிறிது கூறவேண்டியதிருக்கின்றன. அதாவது நம்மவர்களில் தனவந்தர்களும், உயர்தர உத்[illegible]யோகமுடையவர்களும் அதிகமில்லாப் பெருங் குறைவுபற்றியே நாம் சபை மூலமாக எக்காரியங்களும் நடத்தப்படவேண்டுமென வற்புறுத்திச் சொல்கின்றோம். அதாவது இச்சபையிலிருந்தும் இப்பொ

பூது நம் குலச்சிறுவர்களுக்கு சமஸ்கிருதம் கற்பித்தபிறகு வேதாத்தியயனம் சொல்லி வைப்பதோடுகூட இதிலிருந்தும் ஏழைகளாகவும். புத்திசாலிகளாகவுமிருக்கிற மாணாக்கர்களைத் தெரிந்தெடுத்து இக்காலத்து மேம்பாட்டிற்கு அரிய தொழிலைக் கறபிக்கிறதற்கும், உத்தமமானவித்தையாகவும் இராஜபாஷையாகவுமிருக்கிற ஆங்கிலத்தைக் கற்பிக்கும்படிச் செய்து வைத்து அதிலிருந்தும், பி.ஏ., முதலான பரீக்ஷைகளைக் கொடுக்கும் படியாகச் செய்யவேண்டும். இந்தப்பிரகாரம் பரீக்ஷைகள் கொடுத்தவரில் சிலரை பர்மா, சைனா, ஜப்பான், அமெரிக்கா முதலிய இடங்களுக்கனுப்பி அரியபெரிய தொழில்களைப்பயின்று வரும்படியாகவும் செய்யவேண்டும்.

இந்தபிரகாரம் சபையிலிருந்து சிறுவர்களுக் குபகாரம் செய்வதால் பிற்காலத்தில் வேதாத்தியயனம் செய்தவர்களால் நம் ஜாதியாரை நித்திய நைமித்திக முதலான கர்மானுஷ்டானங்களில் தவறுது சாஸ்திரோக்தமாகச்செய்துகொண்டுவரச் செய்வதற்கும், அனுசாரங்களைக் கண்டித்து ஆசார சீர்திருத்தங்களைச் செய்வதற்கும், ஆங்காங்கு வேதாத்தியயனம் சொல்லிவைத்து பரவச் செய்கிறதற்கும் உபயோகமாகும்.

ஆங்கிலம் படித்து பரீக்ஷைகள்கொடுத்து ஆங்காங்கு உத்தியோகம் பெற்றவர்களால் ஜாதி மேம்பாட்டிற்கும், தன புஷ்டியடைவதற்கும் சில டிபார்ட்மெண்டில் சிலர் துவேஷத்தால் நம் ஜாதியாரைக் குறைகூறி வருவதை நிவிர்த்திப்பதற்கும் உபயோகமாகும்.

அரிய தொழிலைக் கற்றவர்கள் அந்தந்த தொழிலைப் பரவச் செய்வதால் அனேகம் ஜனங்களுக்கு ஜீவனம் கழிப்பதற் கிடமாகவும், அரியபெரிய தொழில்களைச்செய்வதினுல் அரசர்களும் பிரபுக்களும் பூஜிதப்படுத்துவதற்கும், கீர்த்திக்கும்பொருள் சம்பாதிப்பதற்கு மிடமாகும்,

"வித்யாநாம் நரஸ்யரூபமதிகம் ப்ரச்சந்ந குப்தம்தநம், வித்யா போகரீயஸ் ஸுககரீவித்யா குரூணும் குரு, வித்யா பந்துவிதேச கமனே வித்யா பராதேவதா வித்யாராஜஸு பூஜிதா நஹிதனம் வித்யா விஹீந : பசு :

மனுஷ்யர்களுக் குவித்தையானது அதிரூபமாகவும், புதையல்தனமாவும், பலவிதமான போகம், யஜஸ்ஸு, சுக முதலியவைகளைக் கொடுக்கக்கூடியதாகவும், குருவுக்குக் குருவாகவும், அன்னியதேச யாத்திரையில் பந்துவாகவும், சிரேஷ்டத்தெய்வமாகவும், அரசர்களால் பூஜிக்கப் படுகிறதாகவும் இருக்கிறது. இந்த வித்தைக்கு மிஞ்சின தனம் வேறொன்றுமில்லை. வித்தையில்லாதவன் பசுவுக்குச் சமானமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

எந்தப்பிரகாரம் மேன்மை, யஜஸ்ஸு, தனம் முதலியவைகளை இக்காலத்திலடையவேண்டுமானல் ராஜபாஷையாகிற ஆங்கில கல்வியையன்றி மற்றெவ்வித வித்தைகளிளுலும் ஆகாதென எனக்குத் தோன்றுகிறது. இவ்விஷயத்தில் சபையோர்கள் முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென அபேக்ஷிக்கின்றேன்.

## 4, தொழில்கள்.

இப்போது நாம் வைத்துக் கொண்டிருக்கும் தொழிலை பல ஜாதிகளும் செய்கிறதினுல் இக்காலத்தில் இத்தொழிலினுல் மகத்துவ மடைவதற் கில்லாமலும், தன புஷ்டி யடைய மார்க்கமில்லாமலும், நம்மவர்களின் நாணயக் கேடுகளால் பிறர் பழிக்கும்படியாகவு மிருக்கிறது.

தொழிலையே பிரதானமாக வைத்துக்கொண்டிருந்த பலஜாதிகளும் அத்தொழிலினுல் மேன்மை கிடையாதென மதித்தே ஆங்கிலம்கற்று உத்தியோகம், வியாபாரம், கிருஷி முதலிய பல தொழில்களிலமர்ந்து மேன்மையடைந்து வருகிறுர்கள். அச்சாதியாருக் கேற்பட்ட தொழிலின்னவையென்று அறியப்படாமலும் இச்சமயம் சொல்வதற் கிடமில்லாமலு மிருக்கின்றன. அதாவது அவர்களுக்கேற்பட்ட தொழிலை முற்றிலும் கைவிட்டுவிட்டனர். அதுபோலவே நாம் இப்போது வைத்துக்கொண்டிருக்கும் தொழிலை பெரிதென்றெண்ணுமல் ராஜ பாஷையைக் கற்று வர்த்தகம், கிருஷி, உத்தியோகம், அல்லது பலவிதமான வேறு தொழில்களிலோ போவதற்கு வேண்டும் முயற்சிகள்செய்ய வேண்டுவது மஹாஜனங்களின் முக்கிய தர்மமாயிருக்கிறது. அந்தப்படி செய்வதால் புகழும், குல மேன்மையும், தன புஷ்டியும் அடையலாமென உறுதியாகக் கூறுகின்றேன். இவ்விஷயத்திலும் சபையோர்கள் மிகவும் ஆலோசிக்கவேண்டுமெனக் கெட்டுக்கொள்கின்றேன்.

## 5. ஒற்றுமை.

சபை, பத்திரிகை, கல்வி, தொழில் முதலியவைகளுக்கெல்லாம் பிரதானமாய் நிற்பது ஒற்றுமை. இவ்வொற்றுமை யில்லாவிடில் ஷை விஷயங்களொன்றும் நடவா. ஒற்றுமையோடு கூட மஹாஜன ஐக்கிய பத்தியமும் வேண்டும். அந்தப்படியிருந்தால் மாத்திரம்தான் பொது நிதி சேர்க்கவும், அதனுல் பயனடையவும் எளிதிலாகும். இந்தப் பிரகாரம் ஐக்கிய பத்தியமென்பது நம் ஜனங்களில் காண்பது மிகவும் அரிதாயிருக்கின்றன. பெரும்பாலும் நம்மவர்கள் எவ்விடங்களிலும் மாத்ஸர்யத்தையே யுடையவர்களாக விருக்கிறார்கள். ஆனுலிந்த மாத்ஸர்ய பாவமானது நம் ஜனங்களிலொன்றுக்கொன்று இருக்குமேதவிர பிறர்ஜாதியாரிடங்களில்போனுல் தங்கள் கௌரவங்களை விட்டு கீழ்ப்படிந்து நடக்கிறவர்களின் செய்கையைநாம் சொல்லவும் வேண்டுமோ.

இவ்வித் ஒற்றுமையானது தலை நகராயும் நம்ஜன சமூஹமாயு மிருக்கிறது. இச்சென்னையிலும் குறைவுற்றிருப்பதைக் கண்டு என் மனசானது மிகவும் வருத்தமடைகின்றது. அதாவது ஒரே சபையாகவும் வேதாத்தியயன முதலான பாடசாலைகளுடனும் நடந்து கொண்டு வந்ததை சமீபகாலத்தில் வேறு படுத்திநடந்து கொண்டு வருகிறதானது ஒற்றுமையின்மையால் சிதைந்திருக்கலாமென்று அறிகிறேன்.

ஆனுல் ஒவ்வொரு இடங்களிலும் நம்மவர்களுக்காக இன்னமும் அனேகம் சபைகளேற்பட்டு பத்திரிகைகள் வெவ்வேருக பிரசுரித்து வந்தபோதிலும் நம்குலச்சிறுவர்கள் வித்தியாவிஷயத்தின் பொருட்டு ஏதாவது ஓர் சபை பிரதானமாயிருத்தல் வேண்டும்.

இவ்விஷயத்தை சபையோர்கள்ஆலோசித்து நம்மஹாஜனங்கள் ஒற்றுமையுடன் கூடி உழைப்பதற்கான வழியைத்தேடவேண்டுமென வேண்டுகின்றேன்.

ஐக்கியமத்யத்தை யடையவும், சாஸ்திரோக்தமான விதிகளைக்கண்டறிந்து அதின்வழியே பொழுகவும், அனேக வித்வத்ஜனங்களின் தெரிசனத்திற்கும், வித்யாசாலைக ளேற்படுத்தவுமாக இப்போது குலாபிமானத்தினுல் ஸ்ரீ குடந்தைமாநகரில் கூடவேண்டுமென்கிற கான்பிரசுக்கு வெகு சிரமஞ்செய்துகொண்டு வரும் ஷை யூர் பிரம்மஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயரவர்கள்முதலான மஹாஜனங்களின் கோரிக்கையின்படியேஷைகான்பிரன்ஸ்நடத்த வேண்டியதற்கான சகாயம் செய்யவேண்டிய முயற்சியும் கஷ்டமும் அதிகமிருக்கின்றது.

ஆனுல் கான்பிரன்ஸானது முதலில் ஆயிரக்கணக்கான ஜனத்தொகை கூடுவதிலும் அதற்காக அனேகதிரவியம் செலவிடுவதிலும் பிரயோசனமில்லை. ஆங்காங்குள்ள தேசங்களிலும், கிராமங்களிலுமிருக்கிற வித்வத்ஜனங்களைத் தெரிந்தெடுத்து வித்வத்ஜன கான்பிரன்ஸ் என்று ஓர் கூட்டம் முதலில் செய்து அவர்களின் அபிப்பிராயத்தின்மேல் மஹாஜன கான்பிரஸ் கூட்டவேண்டும். அதாவது,

“ பஹூநாமப்ய ஸாராணும் ஸமவாயொஹிதுர்ஜய: த்ருணைராவேஷ்ட்யதே ரஜ்ஜு: ஏநநாகோபிபத்யதே ”

நிஸ்ஸாரமாயுள்ளதும், பெருக்களாயிருந்தால் அவைகளை ஜயிக்கமுடியாது. அது எதுபோலென்றால், கேவலமாயுள்ள திருணங்களானது (புல்வானது) ஒன்று சேர்ந்தால் மதம் பொழிந்த யானையையும் பந்திக்கலாம் (கட்டிவிடலாம்) என்றதுபோல ஒற்றுமைதான் முக்கிய நன்மையை பயக்கு மென்பதே என்னுடைய அபிப்பிராயம்.

### (6) கர்மானுஷ்டானம்.

கர்மானுஷ்டானமானது கர்மவர்கள் அபிவிர்த்தியில் சொல்வதற்கும், தாங்கள் செய்கிற சந்தியாவந்தனத்திற்கும், சுபாசுப கர்மங்கள் நடத்துவதற்கும், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று அனேக வித்தியாசங்களாகவும், சாஸ்திர பிரமாணமற்றதாகவும், செய்துகொண்டு வருகிறார்கள். இவைகளை சீர்திருத்தம் செய்து அவரவர்கள் அபிவாதைக்கு ஒற்றுமையானபடி சுபாசுப கர்மங்கங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படி செய்வது குருஸ்தானங்களுடையவும், சபையாருடையவும் முக்கிய கடமையாக விருக்கின்றன.

இவ் வித்தியாசங்களை சங்கிரஹமாக கூறுவதற்காகவே சாகா சூத்திர விஷயமென்ற தலைப்பெயரிட்டு இச்சபை விஶ்வகர்ம குலோபகாரியில் எழுதி காட்டியிருக்கின்றேன். அந்த பத்திரிகையைச் சபையோர்கள் முழுமனதுடன் பார்த்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இப்போதே மஹாஜனங்கள் செய்யவேண்டும்.

சாஸ்திரோக்தமான கர்மானுஷ்டானங்கள் இன்னபடிதான் நமக்கு செய்யவேண்டுமென விதித்திருக்கிறதென்று தெரியும் பக்ஷத்தில் ஒவ்வொருவரும் அதன்படியே சந்தியா வந்தனாதிகளையும், சுபாசுப கர்மங்களையும், செய்வார்களானால் சிறிது காலத்தில் நம்வமிசத்தவர்கள் யாவரும் அவரவர்கள் சூத்திரத்துக்குத் தக்கபடி சுபாசுப கர்மங்கள் அனுஷ்டிப்பதற் கிடமாகும்.

எவன் சாஸ்திரோக்தமான விதியை விட்டு தன்னிஷ்டப்படி நடக்கிறானோ அவனுக்கு புருஷார்த்த சித்தியும், சுகமும், பரலோகப் பிராப்தியுமில்லை யென கூறப்பட்டிருக்கிறது வசனம்.

“யஸ்ஸாஸ்திர விதிமுத்ஸ்ருஜ்யவர்த்ததேகாமகாரத, நஸ்ஸித்திமவாப்நோதி நஸுகம்நபராங்கதிம்.”

சுருதிஸ்மிருதிகளில் சொல்லப்படும் தர்மங்களுக்கு விருத்தமான அனுஷ்டானங்களைச் செய்யக்கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

வசனம். “ சுருதிஸ்மிருத்தியாதி காதர்மாதத் விருத்தம் நசாசரேத்.”

இந்தப்பிரகாரம் சாஸ்திரோக்தமான கர்மானுஷ்டான பலத்தினாலே சகலவிதமானபுருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. ஆதலால் குலதர்மமான கர்மங்களை விடலாகாது குலத்தர்மத்தை விட்டுவிட்டால் குலக்ஷய முதலிய அனேக தோஷங்கள் லபிக்கின்றன.

**பாகவத வசனம்.**

குலக்ஷயேப்ரணஶ்யந்தி குல தர்மாஸ்ஸநாதன, தர்மேநஷ்டேகுலம் கிருத்ஸ்ந மதர்மோஹிபவத்யுத, அதர்மாபி பாவாத் கிருஷ்ணபிரதுஷ்யந்தி குலஸ்திரிய: ஸ்திரிஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணசங்கர: சங்கரோ நகாயை வகுலக் நாநாம் குலஸ்யச, பதந்திபிதரோஹ்யேஷாம் லுப்தபிண்டோதகக்ரியா: தொஷைரேதை: குலக்னாநாம் வர்ண சங்கரகாரகை, உத்ஸாத்யந்தேஜாதிதர்மா: குலதர்மாச்சஶாஶ்வதா: உத்ஸந்ந குலதர்மாணும் மனுஷ்யாணும் ஜநார்த்தன நரகே நியதம் வாஸோபவதீத்யநுஶ்ருஶ்ரும:

(தொடரும்.)

**ஜோஸ்யர்-முத்தாச்சாரியார்,**
மீனாக்ஷிபுரம்.



## இந்திரனுக்குச் சமமாகப் பட்டாபிஷேகம் பெற்றுக்கொண்டவர்களும் யாகத்தில் ஆசாரியர்களுக்குத் தானங்கொடுத்தவர்களுமான அரசர்கள்.

தேவர்கள் தங்களுக்கு இராஜாவாக ஏற்படுத்திக்கொண்ட இந்திரனுக்குச் செய்த பட்டாபிஷேகத்திற்குச் சமமாக கவஷன் புத்திரனாகிய துருவுக்கும், பரிக்ஷித்துபுத்திரனாகிய ஜனமேஜயனுக்கும் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டது. ஆகையால் பரிக்ஷித்து புத்திரனாகிய ஜனமேஜயன் சர்வ திக்கிலும், பூமியை முழுதும் ஆண்டு எங்கும் பிரதட்சணம் வந்து அஸ்வமேதயாகம் நிறைவேற்றினான்.

அவன் தன்னில் பூரணத்தை யடைந்திருந்ததினால், சில யாகத்தை ஒருகுருவானவர் நடப்பித்துக்கொண் டிருக்கும்போது அவரைப்பார்த்து இந்த பயபக்தியோடு செய்கிற கருமத்திற்கு என்னை வரவழையும், ஓ மகத்துவமுள்ளவரே! இதை முடிக்கும் உமக்குப் பதினாயிரம் யானையும் பதினாயிரம் பெண் சிறைகளையும் தருவேனென்றான்.

அந்த விஷயத்தைக்குறித்து இந்த வாக்கியங்கள் எங்கும் ஓதப்படுகின்றன. இவைகள் ஒரு நியமமான வேள்வியில் அதம்மியனுக்குப் பிரியமே தனுடைய புத்திரர் உதவி செய்ததற்காக அத்திரியினுடைய இந்தப் புத்திரன் அவர்கட்கு நித்தியம் மத்தியான காலத்தில் ஒவ்வொருவனுக்கும் நூறுகோடி பசுக்களில் இரண்டாயிரம் பசுக்கள் தானமாகக் கொடுத்ததைக் குறித்தவைகளாக விருக்கின்றன.

விரோசனன் புத்திரனாகிய அங்கன், தன்னுடைய ஆசாரியன் ஒரு யாகஞ் செய்துகொண் டிருக்கையில் உபயோகப்படும்படியான எண்பதினாயிரம் வெள்ளைக் குதிரைகள் தானங்கொடுத்தான்.

அத்திரிபுத்திரன் பல தேசங்களிலிருந்து கொண்டுவந்த செல்வர்களுடைய புத்திரிகளாகிய கண்டசாங்களால் அலங்கரிக்கப்பட்ட பதினாயிரம் ஸ்திரீகளைத் தானங் கொடுத்தான்.

அவச்சத்துருக்கத்தில் பதினாயிரம் யானைகளைத் தானமாகக் கொடுத்துக்கொண் டிருக்கையில் மகிமை பெற்ற அத்திரி புத்திரன் அலண்டுபோய் அந்தத் தானத்தை முடிக்கும்படித் தூதர்களை யனுப்பினான்.

உனக்கு நூறு தருகிறேன்; உனக்கு நூறு தருகிறேன் என்று இந்தச் சுகிர்த புருஷன் ஆயிரமாயிரமாகத் தானங்கள் செய்துகொண் டிருக்கையில் அலண்டு ஆயாசமடைந்து ஆசோயடைய வேண்டியவனானான்.

அந்த விஷயத்திலும் இந்த வசனங்கள் எங்கும் ஓதப்படுகின்றன. பாதன் சுவர்ணாபரணங்களால் அலங்காரஞ் செய்யப்பட்ட வெண்மைதங்கிய தந்தங்களையுடைய நூறுகோடியே யெழுபது லட்சங் கறுத்த யானைகளைத் தானஞ் செய்தான். இவையெல்லாம் ருஷி வாக்கியங்களிலடங்கிய பொருளாம்.

சசிகூனத்தில் துச்சந்தன் புத்திரனாகிய பாதனுக்காகச் செய்யப்பட்ட யாகத்தில் ஆயிரம் பிராமணர்கள் நூறுகோடி பசுக்களை யவரவர்களுக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொண்டார்கள். என்று இருக்குவேதம் 8-வது புத்தகம் 34-வது அத்தியாயத்திற் சொல்லியிருப்பதாக வெளிவந்திருக்கின்ற வேத சனங்கள் முறையிடுகின்றன.

* * *

### யாஞ்ஞவற்கியருக்கும் அவருடைய மனைவியாகிய மயித்திரேயிக்கும் நடந்த சம்பாஷணை.

யாஞ்ஞவற்கியர்:—உலக வாழ்க்கையினின்று துறவு கொள்ளப்போகிற தனது எண்ணத்தை முதலாவது மனைவியாகிய

மயித்திரேயிக்குத் தெரிவித்து அவளுடைய சம்மதியைக்கேட்டு தனதாஸ்திகளை அவளுக்கும், அவருடைய இரண்டாவது மனைவியாகிய காத்தியாயனிக்கும் பகிர்ந்து கொடுப்பேனென்றார். அதற்கவள் தனங்கள்நிறைந்த இந்தப் பூமண்டல முழுமையும் என்னுடையதாயிருந்தாலும் சாவில்லாதவளாவேனோ வென்றாள். அதற்கு யாஞ்ஞவற்கியர், நீ சாவில்லாதவளாக மாட்டாய், தனங்கள் ஜீவனத்துக்கு மாத்திர முதவத்தக்கதேயாம். ஆனால், சாவில்லாமை செல்வத்தினால் அடையத்தக்கதல்லவென்றார். மயித்திரேயி அவரைப் பார்த்து எதன்மூலமாய் மரணமில்லாமை எனக்குண்டாகாதோ அதனால் எனக்குப் பிரயோசனமில்லை யென்று எதன் மூலமாய் முத்தியடையலாமோ அதைக்குறித்து நீர் அடைந்திருக்கிற ஞானத்தை யெனக்குபதேசஞ் செய்வீரென்று சொல்லித் தன் கணவனை வணங்கிக் கேட்டாள். யாஞ்ஞவர்க்கியர் என்பிரியமே! எனதன்புடையவளே! ஒரு நல்ல சந்தோஷகரமான அபிப்பிராயத்தை எனக்கு வெளிப்படுத்தினாய் வந்திட்க்காரு, அந்த கோட்பாட்டை உனக்குபதேசஞ் செய்வேன், அதை நீ யுணரக்கடவாயென்று அறவினால் நித்தியத்தை யடையலாமென்கிற கியானத்தை விளக்கினார். ஆகையால் உலகப் பற்றுக்கள் ஆத்துமாவுக்குச் சம்பந்தமுடையனவாக விருக்கின்றன. எல்லா வஸ்துவும் ஆத்துமாவாகையால், எல்லாப் பொருள்களையும் இதுவென்றே யோசிக்கப்படவேண்டும். எல்லாப் பொதுவான நினைப்பும், முக்கியநினைப்பும் கடைசியில் ஒன்றாய் நிருணயிக்கத்தக்கனவாக இருக்கின்றன. அந்த ஒன்றிலிருந்து எல்லாமுண்டாகி அதில்தானே எல்லாம் ஒடுங்குகின்றன. இதுவே பரமாத்துமாவென்று நிச்சயிக்கப்படுகின்றது, இந்தஞானத்தினாலேதான் முத்தியடைய வேண்டுமென்று. யஜுர்வேதம் விரயத்து ஆரண்ணியகத்தின் நான்காவது அத்தியாயத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற மூன்று பிரசங்கங்களில் ஒன்றெனவெளிவந்திருக்கிற வேதவசனங்கள் முறையிடுகின்றன.

V மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியர்,
Ex முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

## குற்றங்கடிந்தால் நற்கதியாகும்.

பெரும் பான்மையாக நம்மனோர் யாவரும் பிறரது குற்றங்காண்டலில் இந்திரன் போலவும் தமது குற்றங் காண்டலில் திருதராட்டிரன் போலவும் இருத்தல் வெளிப்படையாம். குற்றமில்லாத மனிதரொருவருமிலர்; பிறரிடத்தில் குற்றங்கள் பல விருத்தல் போல நம்மிடத்திலும் குற்றங்கள் பல வுண்டு; நாம் குற்றங்களில்லாதிருத்தல் ஒருபோது முடியாது; புத்திபூர்வகமாகவோ அபுத்திபூர்வகமாகவோ குற்றங்கள் பல நம்மிடத்துச் சம்பவித்துவிடுகின்றன வென்று கருதுகின்றவர் தாம் பிறர் குற்றங் காண்டல் போலத் தமது குற்றத்தையுங்கண்டு குற்றத்தினின்றும் நீங்க முயலுவர். இந்திரன் ஆயிரங்கண்ணுடையவனா யிருத்தல் போல நாமும் பிறர் குற்றங்காண்டலில் அளவிறந்த கண்களை யுடையவரா யிருக்கின்றோம். அஃதாவது பல வழியாலும் பிறரது குற்றங்களை யறிகின்றோம்; அறிந்து சும்மா விருக்கின்றோமென்றாலோ அஃதில்லை; பலரிடத்தும் அக்குற்றங்களைக் கூறி அவரைப் பழிக்க முயல்கின்றோம். நம்முடைய குற்றங்களையோ வென்றால் பல வழியிலும் மறைக்க முயல்கின்றோம். திருதராட்டிரன் குருடனாயிருந்தாற்போல நாமும் நம்முடைய குற்றங்களைக் காண்பதிற் குருடரா யிருக்கின்றோம்; குருடராக விருக்கின்றமையாற்றான் தீய வழியினின்றும் விலகி நல்வழியிலொழுகுவதற்குத்தகுதியுடையவராகாதிருக்கின்றோம். "யா அருலகத்தோர்சொல்லில்லார்" என்று நாலடியார் கூறியவாறு பழியொழி யில்லாதவரொருவருமில ரென்று கருதிப் பிறரிடத்திலுள்ள குற்றங்களைக் காணாது குணங்களைக் கண்டு அக்குணங்கள் தம்மிடத் துண்டாக வேண்டுமென் றெண்ணி நல்லோர் கூறியவாறு நடப்பவர்களே மெய்ம்மை கூறல் முதலிய நற்குணங்களைப் பெறுவர்.



தேகாகாரமுள்ள பரியந்தம் எக்குற்றமும் நீங்குவதே யின்றாமாகலின், தேகாகாரமற்றுச் சிதாநந்த மாத்திரமா யிருக்கும் நிலை வாய்த்த போதுதான் ஒரு குற்றமும் நிகழாது. உலக நோக்கமுள்ள போதுதான் இது வேண்டும், அது வேண்டாம் என்று விருப்பு வெறுப்பு வடிவ சங்கற்ப முண்டாகின்றது; அச்சங்கற்பத்தின் வாயிலாகக் குற்றங்கள் பல நம்மிடத்து வருகின்றன; சங்கற்பமற்ற நிலையை விழித்திருக்கும் நிலையிலேயே யொருவன் பெறுவானாயின், அவன் குற்றமான செயல்களைச் செய்வதேயின்றாம்; குற்றமான செயல்களைச் செய்யாதபோது, அவனைப் பழிப்பா ரொருவருமிலராவர். அவனைப் பழிப்பாரு முண்டெனின், அவர் தம்மையே பழித்துக்கொள்பவராவர்.

சாக்கிரத்தில் சங்கற்பமற்றிருக்கும் நிலை நீர் விகற்பசமாதி யெனப்படும். அச்சமாதி நிலையில் அறிவொன்றே யிருப்பதன்றிப் பிறிதொன்று மிருப்பதில்லையாம் அந்நிலையில் அறிவாகவே யிருப்பவனை, அறியாமையின்வசமா யல்லலுற்றுத் தாம் அறிவு வடிவமென் றறியாதுழல்பவர் பழிப்பது அறிவாகிய தம்மையேபழிப்பதாம். தேகாகார மற்றவர்க்கன்றி யேனையோர்க்குக் குற்றமகல்வதில்லை யென்பது காமன் யோகனுக்கு முன்னர்த் தனதாற்றலின் மேன்மையைக் கூறுமிடத்து "ஒத்தேறுருவமிலாப் பிரமமொன்று மேயொழியவுருவமுள்ளா, ரெத்தேவ ராயினுமோர் பூங்கணையாற் றம்போத மெல்லாநீங்கி, மத்தேறி யுடைதயிர்போன் மனஞ்சுழன்று செயன் மறந்து மடவா ராசைப், பித்தேறி யிதமுறைத்தப் பேதையர்க்கும் பேதையராய் பின்செல் வரால்" என்று (பிரபோத சந்திரோதயம்) கூறுவதனாலும் செவ்விதின் விளங்கும். "அறிபொருளை விட்டகன்று லழியுஞ்சித்த மந்தநிலைவியாபார மனைத்து மில்லாச், செறிநனவிற் சுழுத்தியாம்" என்பதனை நன்குணர்ந்து நனவிற் சுழுத்தியைப்பெற்று ஞானிகளாயவரே பழிப்பற்ற பான்மையின ராவர்.

விஷயங்களிற் றாவித் தாவியோடும் மனத்தை யசங்கற்பத்தினால் ஒழிக்க முயலவேண்டும். அசங்கற்பத்தினால் சங்கற்பத்தை யொழித்தாற்றான் நனவிற் சுழுத்தியையடைதல் கூடும். ஏன் நாம் எடுத்த காரியத்தை முடிக்காது விட்டோம்; விட்டதனாலன்றோ இப்போது இவ்வளவு கஷ்டத்திற் கிடமாயது; இனி யிக்காரியத்தைச் செய்வோமாயின் இவ்வளவுசெல்வமுண்டாகும், அச்செல்வத்தைக் கொண்டு கணக்கில்லாத போகத்தையனுபவிப்போம் என்றற் றொடக்கத்தனவாகச் சங்கற்பஞ் செய்து வருபவர்க்கு மேற்கூறிய சமாதி நிலை சித்திப்பதில்லையாம். சங்கற்ப முண்டாகும்போதே அதனைப் பரவவிடா தடக்குபவர்க்கே அதுசித்தியாம். நடக்கும்பருவம் வாய்ந்த சிறு குழந்தை யோரிடத்தும் நிலையா யிராமைபோன்று மனமும் ஓரிடத்தும் நிலையாயிருப்பதன்றாம். அந்நிலையில்லாத மனத்தைக் கூரிய புத்தியினாலே யடக்க முயலவேண்டும். மனம் அடக்க அடக்க அடங்காது விஷயவிச்சையால் பரவியோடுமாயின் அதனைப் போனவழியே விட்டுப் பிறகடக்கவேண்டும்; சிறிது சிறிதாக அவ்வாறடக்கி வருவோமாயின், அது முடிவில் நமதுவசமாக அடங்கிவிடும்; அடங்கிய விடத்துச் சிதாநந்தமாக விருக்கு நிலை சித்தியாம். இது "மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற வேண்டுகோளாற் றன் முயல்வால் வினோ

தந்தன்னும், பகர்மனமாஞ் சிறு மகவை நிறுத்தல் வேண்டும்" என்று ஞானவாசிட்டங் கூறுவதாலு மினிதுவிளங்கும்.

காமக்குரோதமுள்ள பரியந்தம் சங்கற்பநாச முண்டாகாமையின், காமத்தையும் குரோதத்தையும் முன்னமொழிக்க முயலுதல்வேண்டும். காமக்குரோதத்தை யொழிக்க முயலாது சங்கற்பத்தை யொழிக்க முயலுதல் கொழுந்துவிட் டெரியும் நெருப்பை விறகிட்டும் நெய்விட்டும் அவிக்கமுயலுதல்போல்வதாம். "எவனுடைய மனப்புற்றி விராகமுனி வெனும்பணிகளியக்கமில்லை, யவனெனுங்கற் பகத்தருவா லுணுகாத தொன்றுண்டோ" என்று ஞானவாசிட்டங் கூறுதலால், காமக்குரோதமற்ற விடத்தேதான் சங்கற்ப மொழியுமென்பது நன்கு விளங்கும். காமமெ மென்பது ஆசை, குரோதமென்பது கோபம்.

ஆசையானது பலவகைப்படும். அப்பலவகைப்பட்ட வாசைகளையும் விவேகத்தால் கெடுத்தல் வேண்டும். ஆசை மிகுந்தோறும் துன்பமே மிகுதலால், துன்பத்தை யொழிக்க முயல்வோர் ஆசையை யொழிக்க முயலல் வேண்டும். ஆசைப்பட்ட பொருளுக்குத் தடை நேரிட்டபோது கோபமுண்டாகின்றது; கோபத்தினால் கொடிய செயல்களைப்புரிதல் சம்பவிக்கின்றது; அதனால் ஓயாத கலக்கமுண்டாகின்றது; அதனால் செய் காரிய மிது, தவிர் காரியமிது என்று விளங்காமற் போகின்றது. இத்தகைய கேட்டிற் கேதுவாகிய வாயைசை யொழித்தால் குரோதந் தானே யொழியும். ஆசை யுண்டாகும் போதே அதனை யொழிப்பதற்கேது, ஆசைப்படும் பொருளொவ் வொன்றும் துன்பத்தையே தருவதன்றி யின்பத்தை வாஸ்தவத்திற் றருவதில்லை யென்னும் விசாரத்தினு லதனை யடக்குவதேயாம்; அவ்விசாரமின்றி யடக்குவது திருடனைக் கட்டிவைப்பது போலவாம்.

எதிர்காலத்தில் அடையத்தக்க பொருளின்மீதுள்ள விருப்பம் ஆசையாம்; அடைந்த பொருள் மேலும்மேலும் விருத்தியாகவேண்டுமென்னும் விருப்பம் திருஷ்ணையாம்; அடைந்த பொருளை யனுபவிக்க வேண்டுமென்னும் விருப்பம் காமமாம்; நிகழ்காலத்தி லடையத் தக்க பொருளின் மீதுள்ள விருப்பம் வாஞ்ஞையாம்; கிடைத்த பொருளைச் சிலவுசெய்யாதிருக்க வேண்டுமென்னும் விருப்பம் கிருபணத் தன்மையாம்; வேறு புருஷர்களால் நிகழ்காலத்தி லடையப்படாத பொருளை யடையவேண்டுமென்னும் விருப்பம்தீனத் தன்மையாம். இங்ஙன மொரேயிச்சையின் பேதமாயுள்ள பல வகைப்பட்ட வாசைகளையும் விசார முகத்தால் உண்டாகும் போதே யொழித்தால் மனம் சஞ்சல பாவத்தினின்றும் நீங்கிச் சிவாகாரமாகும்; இச்சிவாகாரசித்தமுடையவர் உலகநோக்கின்றி யிருத்தலின் அவரே குற்றமற்றவராவர். நாமும் இந்நிலையைப் பெறுவோமாயின், குற்றமற்ற நன்னிலையைப் பெறுவோம்.

**கோ. வடிவேலு செட்டியார்.**

## வெகுளாமை.

வெகுளி என்பது மனிதர் விலக்கற் குரிய முக்குற்றங்களி லொன்றும். ஏனைய காமம், மயக்கம் என்பவைகளே வெகுளிக்குக் காரணமாகும். வெளிப்படையாய் பேசுபவர்களையே வெகுளியென சாதாரண வழக்கில் சொல்லுகிறார்களெனினும் வெகுளி என்ற வார்த்தைக்குச் சரியான பொருள் சினம் அல்லது கோபம் எனவாகும். ஆகையால் வெகுளாமை யென்பதற்கு கோபியாதிருத்தல் அல்லது சினமில்லாதிருத்தல் எனப் பொருளாகிறது.

வெகுளி, வெகுளாமை என்ற இரண்டினையும் அலைகடல் சூழ்ந்த அவனியிலுள்ள பல மதத்தினரும்ஆராய்ந்து குற்ற



முளதாகிய கோபத்தைத் தள்ளி, குணமானதாகிய சினமின்மையைக் கைக்கொள்ளவேண்டு மெனவும், அக் குணத்தைப் பெறுவதால் என்றுமழியா பரமசாந்தநிலையை யெய்தி இன்புற்றிருக்கலா மெனவும் பல்வேறு நீதிமொழிக ளுரைக்குங்காலும் எடுத்தோதி யிருக்கின்றனர். அவற்றை அவ்வாறு அறிந்து நடப்பவர் மிகச் சிலரே. மற்றோ கற்று பிறர்க் கெடுத்துரைத்து தாமவ்வா றொழுகாதவரே பலராவர்.

சாதாரணமாய் நோயாளிகளும், வயோதிகர்களும் வீண்செருக் குற்றோர்களுமே தமக்கு சிறிது அசௌகரிய மேற்படினும் உடனே கோபங்கொள்வர். ஆனால் திடகாத்திரரா யிருப்பவர்கள் கூட நல்வழியி லொழுகுவதாய்நடித்து அற்பவிஷயத்தில் அடங்காக்கோபங்கொண்டு மீசைதுடிக்க, விழிசிவக்க, முகங்கடுக்க, பல்லைநெரித்து, எரிமலை அக்கினிக்குழம்பையுங் கற்களையும் கக்குவதுபோல் வாயில் வந்ததெல்லாம் புகன்று கைகால்களால் அகப்பட்டதை எடுத்தெறிந்து அட்டகாசம் செய்வது பலரும் அறிந்ததே. இச்செய்கையை சரியென எவரேனும் புகல்வரோ? இவ்வித கோபமுடையோர்கள் தாம் கெட்டு பாவத்திற் காளாவது மாத்திரமன்றி உள்ள பொருள்களையும் நாசப்படுத்தி பிறர்க்கும் தீங்கிழைக்கின்றனர். கோபந் தணிந்த பின்னுவது தாம் செய்தது தவறென மனதிற்குப் படுமன்றோ. அது முதற்கொண்டாவது திருத்திக்கொள்ளக் கூடாதா. அந்தோ! மறு சமயம் வாய்க்கிலோ முன்னிலும் பதின்மடங் கதிகமாய் முனிந்து குதிக்கிறார்களே. என்ன அறியாமை! இவர்களுக்கு கடவுள் இச்சமயத்தில் நல்லறிவு அளிக்கக்கூடாதா. நேயர்களில் யாரேனும் இக் குணமுடையவரேனும் இவ்விஷயம் அவர்கள் மீதுண்டாகிய இரக்கத்தால் நம்மனைவருக்கும் ஈஸ்வரன் சாந்த குணமுண்டாக அருள வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் எழுதியதாய்க் கருதட்டும்.

எண்ணரியபிறவிதனிற் சிறந்ததாய மானிடப் பிறவி பெற்றும் அதனாலடையும் பயனைப் பெற முயலாது அவமே காலங் கழிக்கின்றோம். நம்மை நெடுநாட்களாய்த் தொடர்ந்து பவப்பிணிக் காதாரமாக நிற்கும் வினைகளில் தீவினையே பொல்லாதென நன்குணர்ந்துளோம். அதை அடிக்கடி மறந்து அப்போதைக் கப்போது வேண்டிய அற்ப சுகத்தில் ஆசை வைப்பதினாலன்றோ கோபமெனுங் கொடியர் வசப்பட்டுக் கூத்தாடித் திரிகிறோம். இக்கோபத்தால் விளையும் பாவங்களெல்லாம் திரண்டு இனி மிக இழிந்த பிறப்பைக் கொடுக்கப் போகிற தென்பதை நாமறியாமலுழன்று வருகிறோம். சாகரர்களை கபில மாமுனிவர் சாம்பராக்கியது போல் நம் முன்னும் ஒரு மகான் பிரத்தியக்ஷமாகி நீ செய்யும் துர்க்கிருத்தியங்களுக்கு இவ்விதமாவாய் எனக்கூறினும் நமக்கு கெடுதல் நேரிடினன்றி நம்பமாட்டாத அத்துணை துர்க்குண முடையவர்களா யிருந்து வருகிறோம்.

மிக்க கோபங்கொண்டு துடிதுடித்தவர்களில் எத்தனைபெயர் கீர்த்தி பெற்றனர், எத்தனைபெயர் நிலைத்து நின்றனர், எத்தனை குடும்பங்கள் வளப்பத்துடனிருக்கின்றன? எல்லாம் அழலிற்பட்ட பொருள்போல அழியுமன்றோ? ராஜரிஷி யெனப் பெயர் பெற்ற விசுவாமித்திரர் தன் முனிவால் பல சமயங்களில் பங்கப்பட்டதே நமக்கு தக்க சான்றாகும். தவசிரேஷ்டர்களே தவமிழப்பரெனின் நம் கோபத்தால் நாமிழப்பதற்குச் சிறிது புண்ணிய பலனுமில்லாதிருக்க அத்தீங்கின் பயனை மறுசன்மத்தி லனுபவிப்போ மென்பதிற் றடையுமுண்டோ?

ஆகையால் கோபம் வரின் அறிவின் விளக்கம் குன்ற யாரிடத்தும் அன்பில்லாதொழிய நன்மையைநாடாது அல்லும் பகலும் பல அல்லலுக் குட்படுவோமென்பது பெறப்படுகின்றது. இத்துணை கொடுமையைச் செய்யுங் கோபத்தை நீக்க உபாயந்

தேடுவதவசியமாகும். ஆனால் கோபத்தை அடக்க வேண்டுமெனச் சொல்லலாமே யொழிய அவ்வாறிருக்க ஆகாதென பலர் அபிப்பிராயப்படலாம். அது தவறே. மனிதன் அரியசாதனங்களைப் பெற்று மோக்ஷமடையவேண்டு மென்பதிருக்க இவ்வெகுளியைப் போக்க வழி தேடுவதியலாதெனக் கூறலாமோ? முடியாதென்பது மூடர் மொழியெனச் சொல்வதுமுண்டு. நாம் சும்மாயிருக்க பிறர் தூண்டுதலால் நமக்குக் கோபம் வருகின்றதெனின், அதிற் கவனிக்க வேண்டிய சில விஷயங்களுள. நம்மை ஒருவர் இழிந்துக்கூறின், அவ்விழிவு நம்மிடத்துளதாயின் நாம் அவரைக் கோபித்தல் அநீதியன்றோ. அவ்விழிவு நம்பாலிலதாயின் அவர்பொய் புகன்றதற்குத் தண்டிக்கத்தெய்வமுளது, நமக்கென்ன வென பொறுத்துக்கொள்ளுதல் நன்றாம். வைதவரை நாம் திருப்பித் திட்டின் நம்மைக்கடித்த நாயை நாம் திருப்பிக் கடித்ததை யொக்குமன்றோ? ஒன்று முரையாது அடங்கியிருத்தலே நற்பழக்கமாகும்.

நமக்கு கோபம் வரும்போதெல்லாம் அதனை வளரவிடாது முன் ஜாக்கிரதையாய் தடுத்தல் கடனென்பதை "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் காத்துக், கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந், தடுத்த லரிதோ தடங்கரை தான் பேர்த்து, விடுத்தலரிதோ விளம்பு" என்ற செய்யுளாலும் "ஆறுவது சினம்" என்ற சிறு வாக்கியத்தாலும் ஆன்றோர் அறிவுறுத்தினர்.

நம்மினும் வலியோரிடத்து நம்கோபஞ் செல்லாதென அவரிடம் அடங்கியிருத்தல் கர்மத்துள் சேர்ந்ததாகாது. நம் கோபஞ்செல்லக்கூடிய தாழ்ந்தோரிடத்து கோபியாதிருத்தலே சிறந்த தர்மமென்பதை "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான், அல்லிடத்துக் காக்கிலென் காவாக்காலென்" என்று நாயனார் கூறியுள்ளார், ஆனால் நம்மோடொத்தவரிடம் கோபிக்கலாமெனிலோ நமக்குத் தக்க சிக்ஷை செய்து வைப்பாராகையினாலே எவரிடத்தும் கோபிக்கலாகாதென்பதை.

"பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல் (மலை) கல்லிய கோலொப்பான், புரிவன புரியப்பட்டுப் புலம்புவனொத்தார்க் காய்ந்தான், எரி நரகதனில்வீழ்வ னிழிந்தவர்க் காய்ந்தானென்றால், ஒருவர்தம் மிடத்துஞ் சீற்ற முறாமையே நன்றுமாதோ"

என்ற செய்யுளால் நல்லோர்நவின்றனர். ஆகையால் தயை, அன்பு, அடக்கம் முதலிய நற்குணங்களமைந்தவர்கட் குண்டாகும் முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கோபங் கொன்றுவிடுவதால் அச்சினத்தை முற்றிலும்விட முனிவகற்றிய நல்லோரிடம் பழகி, ஆன்றோர் மொழிகளை அகத்திற்கொண்டு, வெகுளாமையென்ற சிறந்த குணத்தை பூஷணமாய்ப் பூண்டு, தீமை புரிவோர்க்கும் நன்மை புரிவதே நம் கடனெனச்செய்து, சாதன சம்பத்துகளைப் பெற்று சதானந்தப் பெருவாழ்வையடைய முயன்று வருவோமாக. அம்முயற்சி இடையூறின்றி இனிது நிறைவேறப் பொன்னம்பலவனைப்போற்றுதும்.

S ஆனையப்பாச்சாரி.

(274-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## சக்கிய சம்வாதம்.

ஆதவன்:—கருணை வடிவாகிய தேவரீர் கூறியவாறு வேதம் முதனூலெனவும் மானிடவர்க்கத்தவர்க்கின்றியமையாத ஞானசாதனமும், ஆதியந்த மற்றதும், நித்தியமும் ஒரு பாஷா வடிவல்லாதது மென வகுத்த வண்ண மென்மனதிற் பசு மரத்தாணி போற் பதிந்தது. ஆயினும் பிறகு அங்க நூற்களென ஆறு பிரிவாகக்கூறிய அதன் விபரமும்கேட்க வவாவுகின்றேன்.



பிரபோதன்:—சந்தசு, கற்பம், வியாகரணம், நிருத்தம். சிக்ஷை, ஜோதிஷம் என்ற ஆறும் பல இருடிகளாற் செய்யப்பட்டும் பல பேதங்களோடு கூடியதும் விஸ்தாரமான சுலோக சங்கைகளையுடையதுமாம். இதன் விபரம் முன்னர் கூறப்பட்டுளது.

ஆதவன்:—இவைகளைச் சாஸ்திரமெனவுங் கூறக்கேட்டுளேனாதலின் அப்பெயர் வந்த காரணத்தினையும் அறியவிரும்புகிறேன்.

பிரபோதன்:—வேதமாகிய புருடனுக்குப் பாதாதி மத்தகவுருப்பாக வியம்பியது இவ்வாறு நூற்களாய கருவியன்றிப் பொருள் கோடலியலாதென்பதாக விருத்தலின் அங்கமின்றியவழி அங்கியாகிய வடிவம் மேன்மை யுறாதாதலினாலும் அங்கமெனப் பெயர் பெற்றது. அன்றியும் வேதத்தில் பற்பல விஷயங்களைப் பின்னம் பின்னமாகக் கோர்வைபடாது குறிப்பாகவும் கூறியவைகளை ஒழுங்குபடக் கோர்வையாக்கி யிசைத்தலின் சாஸ்திரமெனப் பெயராம். அநேக மணிகளைக் கோர்வைபடச் செய்வது சூத்திரமாதல் போலச் சாஸ்திரமுமாம்.

ஆதவன்:—ஆயின் முதனூலாகிய வேதமும் அங்கமாகிய ஆறு சாஸ்திரங்களும் மனிதன் அறிந்தாற் போதுமே.

பிரபோதன்:—மனிதன் அறியவேண்டியது வித்தை பதினான்கெனவும் பதினெட்டெனவுமாகவுளது.

ஆதவன்:—அவையாவை?

பிரபோதன்:—நான்கு வேதமும் அங்கசாஸ்திரம் ஆறும் நியாய வைசேடிகமென விருபகுதியாய் தருக்க சாஸ்திரம் ஒன்றும் பூர்வ உத்தரமென்னும் மீமாம்ஸ சாஸ்திரமும், பத்தொன்பது ஸ்மிருதிகளும், பதினெண் புராணங்களும் ஆகப் பதினாலும் அர்த்தவேதம் காந்தருவவேதம், தனுர்வேதம், ஆயுர்வேத மெனக் கூறும் உபவேதம் நான்கினைச் சேர்க்கப் பதினெட்டாதலின் இப்பதினெட்டினையும் பிரதி மனிதரும் ஓதி யுணர்ந்தனுட்டித் தின்பமடையச் சாதனமாம். இதனை "வேதமொரு நான் காறங்க நந்நியாய மீமாம்சை யொடு மிருதி புராண மீரேழாயோதலுறும் வித்தைகளாம்" என்னும் சூடாமணி யாற்றெளிக.

ஆதவன்:—கலைஞானம் அறுபத்து நான்கெனக் கேட்டுளேன். அதனை யார் அனுட்டிப்பது? இப்போதுகூறியதுதானா வேறா? இதற்குள் அடக்கமா, அதன்விபரமும் அறிய விரும்புகிறேன்.

பிரபோதன்:—இந்தப் பதினெண் பகுதியாய நூற்களினுள் அடங்கியும் சில வேறாகவும் இருக்கினும் புருஷார்த்தத்தினைப்பெற வவாவுடையார்க்கு இன்றியமையாதது இவையாம், ஆயினும் இதன் வழியனுட்டித்துப் பயனுறுங்காலவை யாவும் விளங்கிவிடும். அதாவது அதன் (ஏனைய நூற்களின்) பயனும் விளங்கிவிடும். ஆனதுபற்றி வித்தை பதினெட்டெனக் கூறுவது. அங்ஙனமாயினும் கலை அறுபத்து நான்கினையும் தெரிந்திருத்தல் முக்கியமாதலின் ஈண்டுக்கூறுதும் கேள்.

அதாவது:—அக்கரவிலக்கணம், லிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதி சாஸ்திரம், ஜோதிடசாத்திரம், தருமசாஸ்திரம், யோகசாஸ்திரம். மந்திரசாஸ்திரம், சகுணசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், உருவசாஸ்திரம். மதனசாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அஸ்திரப் பரீக்ஷை, கனப்பரீக்ஷை, இரதப்பரீக்ஷை, கஜப்பரீக்ஷை, அஸ்வப்பரீக்ஷை, இரத்தினப்பரீக்ஷை, பூமிப்பரீக்ஷை, சங்கிராமவிலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடணம். வித்துவேடணம், மோகனம் வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்திகவாதம்,

தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், ஆகாயகமனம், பராகாயப்பிரவேசம், அதிரிசியம், இந்திரஜாலம், மயேந்திரஜாலம், அக்கினித் தம்பம், ஜலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித் தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம், என அறுபத்திநான்குமாம்; இன்னும் பலவேறு திறத்தனவாக காணப்பெறினும் இக்காலத்தில் வித்தையின் சாம்பிரதாயமும் நூலும் மிகவும் குறைந்தும் மாறுபட்டும் கிடக்கின்றன; ஆயினும் முற்கூறிய பதினெண் வித்தை கைவரில் இவையாவும் கைவருமென்பது திண்ணம்.

ஆதவன்:—கலை அறுபத்தி நான்கெனப்புகன்றீர். ஸ்ரீ மாணிக்க வாசகப் பெருமான் "கல்வி யென்னும் பல்கடல்" எனச் சங்கையைக் குறிக்காது கூறவும் இவ்வாறே ஸ்ரீமத் சங்கராச்சாரிய ஸ்வாமிகளும் விஸ்வநாதரிடம் வரங்கேட்டபோது "அசேஷ சாஸ்திர பாண்டித்தியம்" எனக்கேட்டுளார். இதனால் சங்கையைபொருந்து மாறுணர வேட்கைப்பாடுளேன்.

பிரபோதன்:—ஜீவ பேதங்களை யெங்ஙனங் கணிக்க வியலாதோ அங்ஙனே சாஸ்திரங்களும் கணிக்கவியலா. ஆயினும் ஒருவாறு சங்கிரகித்துக் கூறியது தான் முன்னர்க் கூறியதெனத் துணிக.

ஆதவன்;—தற்கால நாகரிகம் போலச் சாஸ்திரங்களைத் தானே படித்தாவது ஒரு நூலினுட் சில விஷயத்தினைப் பிரசங்கிக்கும் போதாவது கேட்டுப் பொருள் கொள்ள வியலுமோ?

பிரபோதன்:—இயலா.

ஆதவன்:—மற்றெங்ஙனமென அதனையடிகளிசைக்க வாஞ்சையுளேன்.

பிரபோதன்:—"அஷ்டாதச வித்தைக்குஞ் சூடாமணியே கருத்தா" வென்பதால் ஒருவன் ஒரு நூலை எழுதுவானாயின் அந்நூலை நோக்குவோனுக்கு இயற்றியவன் மனதுடன் சம்பந்தமிருந்தாலல்லது அதன் பொருள் விளங்கா. இதனாலன்றோ, ஸ்ரீமத்தாயுமான சுவாமிகள் சுருதியே நீ ஒருவரைப் போலவருக்கு முண்மையா முன்னுரையன்றோ, வுன் முடிவையுரை நீயென்பேன்" எனக்கூறியதால் இந்திரிய வயத்தே பலதலைப்பட்டுழலா தொருமைப்பாடாய சித்தத்தினல்லாசிரியன் விளக்கிய நெறியே நூற்களையாய்ந்துண்மைப் பொருள் விளங்கும். அதாவது தவத்துடன் கூடிய மனத்தால் ஆப்பவர்க்கு வெளியாம். மற்றும் குருத்தர்களாக வகண்ட வறிவினைப் பெற்ற முத்தர் வாசகமாகச் சகலகலைகளு மங்கிகாரமாதலின் அவ்விதமானம் பெற்ற காலத்தில்தான் உண்மை வெளிப்படும். இஃதன்றி வேறெவ்வித வுபாயத்தினலாயினும் உண்மைகாண்டலரிது. இதனாலன்றோ "ஓதிடாதுணர்தல் கலைமலை முதலிற்றற பேதந் தெறவுரைத்தலாதி யாங்குறிகள் சிவனுடையருளுக் குறிகுறியாவன்" எனப் பிரமகீதை கூறுவதுடன் "வேதாந்த சித்தாந்தமரபு சமரசமாகவே பூரணமாயுணரவுபாயமது தந்ததும் நின்னருள்" எனத்தாயுமான சத்குருமூர்த்தியுஞ் சாற்றியுள்ளார்.

ஆதவன்:—ஒரே கருத்தாவால், அதாவது, ஒரே தன்மைத்தாய இயற்கை விளக்கமமைந்த நிர்மல அகண்ட மனத்தினாற் சகல நூலும் வெளிவந்தன வெனின் பலதன்மையின்றி ஒரேமுடிவினையன்றோ வுடையதாயிருத்தல் வேண்டும். அங்ஙனமுளதே லதனுண்மையும் அறிவானவாபிக் குடையேன்.

பொது நன்மையை விரும்பும்

ஓர் சாது.

---

(275-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

# இந்தியசிற்பமும் அதன் முன்னேற்றமும்.

## 5. சிற்பிகளின் கை அற்புதம்.

சிற்பநூல் விளக்கம் என்ற முந்திய அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள முக்கிய சிற்ப நூற்களின் கருத்துக்களைச் செவ்வனே யுணர்ந்து பற்பல மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் நிர்மாணிப்பது நம் சிற்பிகளின்கடைமையேயாம். அவ்வாறே நூற்களை முற்றுமுணர்ந்து, தொழில் ஞானத்தையும், கைப்பழக்கத்தையும். கட்டு முறைகளின் தேர்ச்சியையும் ஒருங்கேயடைந்து. பற்பல அற்புத ஆலயங்களையும், விக்கிரக வாகனுதிகளையும், கோட்டைக் கொத்தளங்களையும் இன்னும் எண்ணிறந்த பல சூட்சும பிரதிஷ்டைகளையும் இந்நாட்டில் நிலை நாட்டின நம் மூதாதையர்களின் கை அற்புதத்தையும், வேலைத் திறமையையும், கற்பனலங்கார சாமர்த்தியங்களையும், மேன்மையான மனோதர்மத்தையும் புகழ்ந்து கொண்டாடி, அவைகளுக்கோர் தேற்றத்தைக் கற்பிக்குமாறு அப்பணிகள் கேவலம் பிறந்திறந்துழலும் மாக்களால் நிருமிக்கப்பட்டவைக ளன்றெனவும், தெய்வீக சித்திபெற்ற சிற்பிகளாலேயோ வானுலக வாசிகளாலேயோ, அவர்களன்றி பூத பிசாசங்களாலேயோ ஓர் பகலிலோ, அல்லது பல இரவுகளிலோ இயற்றப்பட்டவைகளென நம்மவரில் சிலர் அறியாமையாலும், அன்பின் மிகுதியாலும், சிற்பவிதி வாய்ப்பாட்டிற்கும், இலட்சணத்திற்கும் உண்மையாகவே இணங்கி, கட்டு முறைகளின் தேர்ச்சியை மிகுதியாகப் பெற்று கட்டப்படும் கட்டிடங்களும், இடமறிந்து உபயோகிக்கும் சித்திராலங்காரங்களும், மேற் கூறியவாறு வியப்பைத்தருமென்பதற்கோர் ஐயப்பாடுமில்லை. முன்னர் ஒரு முறை கூறியபடி சிற்ப விதிகளுக்கு முற்று மிணங்கிய ஆலயங்கள் வட இந்தியாவில் காணக்கிடைப்பதருமை. தென்னிந்தியாவில் மட்டுமே இவ்வித அழகிய ஆலயங்கள் மலியப்பெற்று, முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவைகள் சுமார் முப்பதிருக்கலாம். அவ்வித ஆலயங்களை, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், சிதம்பரம், ராமேஸ்வரம், மதுரை, திருநெல்வேலி கும்பகோணம், காஞ்சிபுரம், வேலூர், பேரையூர் முதலிய ஸ்தலங்களில்காணலாம். இவ்வாலயங்களனைத்தும் ஒரே சிற்பமுறையை அநுசரித்துக் கட்டப்பட்டவைகளல்ல. பற்பல சிற்ப முறைகளையும், சித்திராலங்காரங்களையும் தாராளமாக இவைகளினிடத்து உபயோகிக்கப்பட்டும், கட்டிடங்களின் சில பாகங்கள் சமயானுகுணமாக நீட்டப்பட்டும், குறைக்கப்பட்டும் கட்டப்பட்டிருக்கின்றன. சிற்சில பாகங்கள் பின்புத்தியால் ஆலோசித்துக் கட்டப்பட்டவைகளாகவும் தோன்றும். இவ்வித குறைபாடுகளுக்குக் காரணம் யாதெனின், இவ்வாலயங்கள் கட்டப்படவேண்டிய விதங்களைப் பலகாலும் யோசித்து முன்னதாகத் தீட்டிய சித்திரங்களினுதவியைநம்மனோர் கைக்கொள்ளாமையே யாகும். தஞ்சை ராஜ ராஜேஸ்வா ஆலயமொன்றே ஒரு பிரம்மாண்டமான சித்திரப் படத்தினுதவி கொண்டு கட்டப்பட்டிருக்கின்றது. அச்சித்திரப் படம் அவ்வாலயம் கட்டி முடிந்த பின்னர் வெகு காலம் காப்பாற்றப்பட்டிருந்த தெனச் சொல்வர்.

தஞ்சை ராஜ ராஜேஸ்வார் கோயில் இரண்டு முற்றங்களுடையது. முதல் முற்றம் சற்றேறக்குறைய 250 அடி சதுரமிருக்கும். இதறகடுத்த முற்றமானது 500 அடி நிகளமும், 250 அடி அகலமும் கொண்டு விளங்கும். இவ்விரண்டு முற்றங்களையு முள்ளடக்கிய இவ்வாலயத்தைச் சுற்றிலும் 1777வது வருஷத்தில் பிரஞ்சுக்காரர்களால்கோட்டைகளும், அகழிகளும்

உண்டாக்கப்பட்டு, முதல் முற்றத்திலும் பக்கலிலுள்ள தோட்டங்களிலும் குண்டு வெடி மருந்து சாமான்களையும், யுத்த ஆயுதங்களையும் சிறிதுகாலம் வைக்கப்பட்டிருந்ததென யாமறிகிறோம்.

இரண்டாவது முற்றத்தின் முற்புறத்தில் ஒரு பெரிய மண்டபமும், அதனுள் ஒரு கம்பீரமான நந்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இந்நந்தி ஒரே கல்லில் அடிக்கப்பட்டுள்ளது. இந்நந்தி, மோவாய்க்கட்டையினின்றும் வால் வரை **16** - அடி நிகளமும், குருக்களவு 10½ அடியும் கொண்டதெனினும், அந்நந்தியின் வேலைப்பாடு அவ்வாலயத்தின் மற்றைய பாகங்களைப்போல் அவ்வளவு கொண்டாடத்தக்கதன்று. அதனோடும் அந்நந்தியின் ஆகிருதியும், வேலையின் குறைபாடும் அவ்வாலயத்தின் மற்ற பாகங்கட்கு சிறிதும் பொருத்தமின்றிக் காணப்படுகின்றது. பின்னர் சொல்லிய காரணத்தால் இந்நந்தி, அவ்வாலயம் கட்டி முடிந்த காலத்திற்குப் பின்னரே பிரதிஷ்டைசெய்யப்பட்டதென ஆங்கிலேய நிபுணர்கள் கருதும்வாறு நாமும் நினைக்க இடந்தரும். வெறும் ஆகிருதிக்கு இந்நந்தியையும், வேலையின் உன்னதத்திற்கும், ஒடிமான விசேஷத்திற்கும் பட்டீஸ்வரத்திலுள்ள நந்தியுமே முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவைகளாகும். பின்னர் கூறிய நந்தியானது, அழகே ஓர் உருக்கொண்டதென, சுபாவீகரூபம் பெற்றும், முக்காரமிட்டெழும் அவசரத்தை யடையப் பெற்றும் இருப்பதோடும், இதனைச்செய்து முடித்த சிற்பியின் தொழில் ஞானத்தைத் தெள்ளிதின் விளக்குவதில் இணையற்றிருக்கின்றது. தஞ்சை ஆலயத்திலுள்ள இடபம் முதிர்ந்த கருங்கல்லினால் செய்யப்பட்டதன்று. அஃது எண்ணை மேற் பூச்சினால் ஒருவாறு கருத்த நிறத்தையும், பளபளப்பையும் அடைந்திருக்கிறதே யன்றி முதிர்ந்த கற்களி லடிக்கப்படுகின்றவேலைகளுக்குரிய லட்சணங்களும், குணங்களும் அதற்கில்லை. பட்டீஸ்வரத்தின்கண்ணுள்ள நந்தியோவெனின், முதிர்ந்த கருங்கல்லில் செய்யப்பட்டிருப்பதோடும், அந்த கல்லை சிற்பியின் நோக்கத்திற்கும் கற்பனைக்கும் இணங்கத் தேர்ந்தெடுத்த சாமர்த்தியத்தையும் தெரிவிக்கிறது. மூக்கின் துவாரத்திலிருந்து ஒழுகும் சளியை நக்கிக்கொண்டிருக்கும் பாவனை பெற்ற இந்நந்தியின் மற்றெல்லாப் பாகம் கருப்பு நிறமாகவும், இரு துவாரங்களினின்று மொழுகும் சளியின் தாரையை நன்குணர்த்துவதற்கு அக்கல்லில் அந்த பாகத்திலுள்ள வெளுத்த ரேகையை தம் கருத்திற்கும், கற்பனைக்கும் பொருத்தமாகச் செய்துகொண்ட சிற்பாசாரியரின் பெருமையைக்கண்டு வியப்படையாதார் யாரே!

நந்தி மண்டபத்தைக் கடந்தப்புறம் சென்றால் அங்கு ராஜராஜேஸ்வர ஆலயத்தின் முக்கிய விமானம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவ்விமானத்தின் அடிவாரம் 82 அடி சதுரமும் பிரமாந்திரம் **52** அடி சதுரமுங்கொண்டு பூமி மட்டத்திற்கு மேல் 190 அடி உயர்ந்து விளங்குகிறது. பிரமாந்திரக்கல் **54** அடி சதுரமுள்ள ஒரே கருங்கல் ஆகும். எனவே, அவ்விமானம் ஓர் கூர்நுனிக் கோபுரமென்பது சொல்லாமலே அமையும். சுற்றிலுமுள்ள மற்றெல்லா கோபுரங்களினும் இவ்விமானம் உயர்ந்து நிற்பதால் இஃது மிகவும் கம்பீரமான தோற்றம் வாய்ந்துளது. இக்கோபுர வேலையின் விசேடமொன்று இங்கு குறிப்பிடற்பாலது. இவ்வாலயம் சிவாலயமாயிருந்தபோதிலும், ஆங்கு வைணவமதத்திற்குரிய சில பிரதிமைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாலயம் கட்டப்பட்டகாலத்து இவ்விருமதத்தினர்க்குள்ளிருந்த நேசயின்மையைக்காட்ட இங்ஙனம் அமைத்தனர்போலும்!

இவ்விமானத்தின் வடபுறத்தின் சுப்பிரமணியர் ஆலயமொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. பிரதான ஆலய வேலைகளினும், இவ்வாலயமே வேலைப்பாட்டில் மிகவும் சிறந்தது. இங்கு நாட்டப்பட்டிருக்கும் பிரதிமைகளனைத்தும் மிகவும் பிரகாசம் பொருந்தியவைகளாகவும், அழகமைந்தவைகளாகவும் இருக்கின்றன. சாளரங்களில் துளைத்திருக்கும் பல சித்திரவேலைகளில் பற்பல மாதிரியாகப் பிணைத்துக் காட்டியிருப்பதைக் காணலாம். சுப்பிரமணியஸ்வாமியின் சிலையும், அவ ராரோகணித்திருக்கும் மயிலும், மயில்வாயினின்றும் தொங்கிக்கொண்டிருக்கும் கட்செவியும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு, வேலையின் அருமைப்பாட்டில் மிக விசேஷித்திருந்தபோதிலும் எட்டுக்குடி விக்கிரகத்திற்கு இரண்டாவதாகவே கருதப்படுகின்றது. எட்டுக்குடி விக்கிரகம், இன்னுமதிக நாணயமான வேலையையும், முக வசீகரத்தையும் பெற்றது. (தொடரும்.)

**T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார்,**
சென்னை சிற்பவித்தியா சங்கத்தின்
அங்கத்தினர்.

---

## நம் சகோதரர்களின்மாட்சி.

### ஓர் வித்தியா சாலைக்கு நன்கொடை.

பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்நகிரி ஜில்லாவைச் சேர்ந்த மால்வான் என்னும் ஊர்வாசியாகிய அனந்த சிவாஜி தேசாயி என்னும் கனவான் அவ்வூரில் ஒரு ஹைஸ்கூல் வைத்து நடத்துவதற்காக ரூபாய் **75,000** பம்பாய் கவர்ண்மெண்டாரிடம் கொடுத்திருக்கிறார். தருமங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது வித்தியா தருமமன்றோ? அவர் அத்தொகையி லிருந்து அந்தப் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவர்களில் தக்கவர்க்கு உபகாரச்சம்பளங்கள் கொடுக்கும்படியாகவும் ஏற்பாடுசெய்திருக்கிறார். நம்மவர்களே! நம்குலச்சிறார்களுக்கு கல்வி விஷயத்தில் உபகாரச்சம்பளங்கொடுக்கக் காருண்யம் கொள்ளலாகாதா.

***

### பெண்களுக்கு தங்கமெடல் பரிசு.

விசாகப்பட்டணத்தில் இந்தியப் பெண்களுக்கென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் குவீன் மேரி ஹைஸ்கூல் சிறுமிகளில் தக்க கல்வித்திறமையுடைய ஒருசிறுமிக்கு தங்க மெடல் ஒன்று வருடந்தோறும் பரிசளிக்க மிஸ்டர். பி. ராமமூர்த்தி செட்டியார் ரூ. 1000 மூலதனம் ஏற்படுத்தியிருக்கிறார். அத்தொகையினால் வரும் வட்டியைக்கொண்டு அந்த மெடல் செய்யப்பட்டு அதற்கு "லார்டு பெண்ட் லாண்டு மெடல்" என்று பெயரிடப்படுமாம். இக்கொடையாளி சின்ன வால்டேர் எஸ்டேட்டின் சொந்தக்காரர். பெண் கல்வியில் ஊக்கமுள்ளவர். இவரைப்போன்ற ஒருவர் நம்மவரில் நம் குலப்பெண்களுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்தில் உதவிபுரிய வருவதெப்பொழுதென்று எதிர்பார்க்கின்றோம்.

***

### ஹிந்து யூனிவர்ஸிட்டி நிதி.

ஹிந்து யூனிவர்ஸிட்டி நிதி சம்பந்தமாக தர்பங்கா மகாராஜா இதுவரையில் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமம் போதாதென்று இந்தமாதம் ராஜபுதனம்முதலிய இடங்களுக்கு சுற்றுப்பிரயாணமாகச் செல்லுகின்றார். ஹிந்து யூனிவர் ஸிட்டிக்கு வேண்டிய நிதிமுழுதும் சேரவில்லை யாதலால் அதனை பூர்த்திசெய்யும்பொருட்டே இச்சுற்றுப்பிரயாணத்தை வைத்துக்கொண்டனர். வித்தியாவிஷயத்தில் மகாராஜாகள் காட்டும் உழைப்பை நம்மவர்களே பாருங்கள்!

***

### இங்கிலாந்தில் ஓர் இந்தியமாணவரின்கீர்த்தி

கேம்பிரிட்ஜ் யூனிவர்ஸிட்டி என்ற ஓர் பேர்போன வித்தியாலயத்தில் பயின்று

வந்த மிஸ்டர். பூபதிமோகன் சென் என்ற ஓர் இந்தியர் சமீபத்தில் அங்கு நடந்த கணித சாஸ்திர பரீட்சையில் முதன்மையாகத் தேறியிருக்கிறார். கணிதசாஸ்திர ஆராய்ச்சிக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் 'ஸிமித்ஸ் வெகுமானம்' பெற்ற இந்தியர் இவர் ஒருவரே. நம்மவர் அன்னிய நாடுகடுகளுக்குச் சென்று இவ்வித பதவிகளடைவதெக்காலம்.

***

## மைசூர் சமஸ்தானத்தில் கல்வி.

ஹைதராபாத் சமஸ்தானம் வித்தியா விஷயத்தில் 10,19;138 ரூபாய் செலவிடுகின்றது. மைசூர் சமஸ்தானமோ 20,01,303 ரூபாய் செலவழிக்கின்றது. திருவாங்கூர் சமஸ்தானம் சென்ற வருடம் 12;84,450 ரூபாய் செலவிட்டிருக்கின்றது. மைசூரில்தொழிற்படிப்பு ஸ்கூல்கள் 23 இருக்கின்றன. மெக்கானிகல் இஞ்சினீரிங் என்கிற யாந்திரீக சாஸ்திரக்கல்வியைப் போதிக்கும் ஸ்கூல் ஒன்று பெங்களூரிலிருக்கிறது. வியாபாரத்திற்கும், தொழிலுக்கும் வேண்டிய படிப்புகள் கற்பிக்க பல ஸ்கூல்களும் இருக்கின்றன. பொதுஜனங்களின் ஒத்தாசையால் சுமார் 85 ஸ்கூல்கள் மைசூர் சமஸ்தானத்தில் கட்டப்பட்டனவாம். அவ்வூராரும் நம்மைப்போன்றவர்கள்தானே. நாம் ஏன் இக்காரியத்தை நடத்த முன்வரலாகாது.

***

## கோயம்புத்தூர் டிஸ்டிரிக்ட் கான்பரஸ்.

ஜூன்மீ 20, 21உகளில் கோயம்புத்தூரில் அந்தஜில்லா முதல் கான்பரன்ஸ் ராவ் பகதூர் கேசவப்பிள்ளை அவர்கள் அக்ராசனத்தின்கீழ் நடைபெற்றது. அப்பொழுது சென்னை முதலிய பல ஊர்களிலிருந்து பெரிய கல்விமான்கள் வரவழைக்கப்பட்டிருந்ததை சிலர் அங்கீகரிக்கவில்லை. ஸ்தலவாசிகளுக்கு மட்டுமே தங்கள் குறைகளை கவனித்து சீர் திருந்தவேண்டுமென்றும், அதற்கு அந்தஜில்லாவாசிகளே உரிமையுள்ளவர்களென்றும் அவர்கள் வாதித்தார்கள். ஓர்ஜில்லாவாசிகளிடம் போதுமான சாமார்த்தியமும் நிர்வாக சக்தியும் இருந்தால் அன்னிய ஜில்லாவின் ஒத்தாசை ஏன்?

***

## திண்டுக்கல் தமிழ்ச்சங்கம்.

இச்சங்கத்தின் வருடோத்ஸவம் ஜூன் மீ 22உ ஸ்ரீமான் நல்லசாமிப்பிள்ளையவர்களின் அக்ராசனத்தின்கீழ் நடைபெற்றது. ஆங்கு வித்வசிரோன்மணிகளால் பல பிரசங்கங்கள் நடந்தேறியது. நம்மவர்களுக்குள் எத்தனை பொதுசங்கங்களிருக்கின்றன? அவைகள் எவ்வளவு வரையில் ஒழுங்காகவும், நடுவு நிலைமையோடும் நடத்தப்பட்டு வருகின்றன? நம்மவர்களே! இவ்விஷங்களைச் சிறிது ஆராயுங்கள்.

***

# நம்மவர்களின் விழிப்பு.

"நம் சகோதரர்களின் மாட்சி" என்ற பகுதியில் நாம் எழுதி வருவதின் முகத்தாலும், சுயேச்சையாகவும் நம்மனோர்க்குண்டாயிருக்கும் கிளர்ச்சியை கீழ் வருவனவற்றால் காண்க.

### குடந்தையில் சுஜாதிச் சிறுவர்களுக்கு ஓர் பாடசாலை.

கும்பகோணம் பேட்டை கடைத்தெருவிலுள்ள பஜனைமடத்தின்கண் அவ்வூர் விஸ்வப்பிரம்ம சமாஜத்தார்களால் நாளது ஆனந்தவருஷ ஆனிமீ 1உயில் சுஜாதி சிறுவர்களுக்கு பாடசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலத்தில் கர்னக்கொல்லைத்தெரு விஸ்வப்பிரம்ம குலாபிமானி சபையின் சிகர்டெரி பிரம்மஸ்ரீ சொக்கலிங்க பத்தர் அவர்களும் டிரஷரர் பிரம்மஸ்ரீ கோவிந்தபத்தர் அவர்களும் மற்றுமுள்ள கனவான்களும் ஆஜராயிருந்தார்கள். தங்



கள் சபையுடன்கலந்தேபாடசாலையையும், மற்ற யாவத் நடவடிக்கைகளையும்கவனிக்கும்படி தீர்மானம் செய்தால்தான் நலமாயிருக்குமென்று பிரரேபித்ததின் பேரில் அதனை அங்கீகரிப்பதாக சபையார்கள் ஒரேமனதான தீர்மானத்துடன் ஒப்புக்கொண்டார்கள். அதன்பின்னர் பாடசாலைக்கென்றே நமது இனத்தவர்களுக்குப் பொதுவாயுள்ள ஆத்தாங்கரைத் தெரு பழயமனையைபாடசாலையாகக்கட்டிவருகிறார்கள். இதில் அக்கரைகொண்டவர்களில் ஸ்ரீ சாமிநாதஆச்சாரியார் 1, வீ.அருணாசல பத்தர் 2. சா. ஸ்ரீநிவாஸ பத்தர் 3, த. கு. சு. பஞ்சனதீஸ்வர ஆச்சாரியார் 4, கொ. கோவிந்த பத்தர் 5, குப்புசாமிப் பத்தர் 6, சி. சாமிநாத பத்தர் 7, சாமுப் பத்தர் 8, சேவுப்பத்தர் 9, ம. கோவிந்த பத்தர் 10, மருதப்பத்தர் 11, மு. சுப்பராய பத்தர் 12, முத்தையாப்பத்தர் 13, இராமலிங்க பத்தர் 14, வேலாயுத பத்தர் 15, மாயாண்டிப்பத்தர் 16, ஏகாம்பரப் பத்தர் 17, இவர்களும் மற்றுமுள்ள முக்கியஸ்தர்களும் மெம்பர்களாய்ச் சேர்க்கப்படுவார்கள். கூடியசீக்கிரம்இவ்விதமுயற்சி ஈடேறும்படியாய் விஸ்வேஸ்வரனைப்பிரார்த்திப்போமாக.

T. K. பஞ்சநதயீஸ்வர ஆச்சாரியார்.

### 2. குலாசார சீர்திருத்தம்.

குலாபிமானியும் இந்நகரில் சந்தாதாரருமாகிய பிரம்மஸ்ரீ த, கு. சுந்தராச்சாரியகர் அவர்கள் தமது கிருகததில் சென்ற மாசிமாஸத்தில் தமது மைந்தர்களுக்கு உபநயனம் நடத்திவைத்தார். ததநந்தரம் பேட்டை பாத்திரக்கடை பிரம்மஸ்ரீ சேஷாசலம் ஆச்சாரியார் அவர்கள் தமது ஜாகையில் மைந்தர்களுக்கு சென்ற மாஸத்தில் உபநயன சடங்கை விமரிசையாகவே நடத்தினார். இதுபோலவே நமது இனத்தவர்கள் ஒவ்வொருவர்களும் நடத்த முன்வருவார்களென்று நம்புகிறோம். இதற்குமுன் அநேகம்பேர்கள் நடத்தியிருந்தாலும் எமது பார்வைக்கெட்டின சமாசாரங்களில் இது இரண்டாவதாகும்,

***

பேட்டை பிரம்மஸ்ரீ அய்யாக்கண்ணுப் பத்தர் அவர்கள் பல ஆண்டுகளாக கைத்தொழிலை புதுவழியில் அபிவிருத்திசெய்யக்கருதி மிஷின்மூலமாக செய்ய எத்தனப்பட்டு தற்போது அதனால் அதிகலாபமும் உண்டாகிறதென்பதை அறிந்து தான் ஏகதேசத்தில் அதிக மூலதனம் வைத்து நடத்துவது சாத்தியமாகாதென்ற கருத்திற்கிணங்கி டைரக்டர்களாகவும், ஷேர் ஹோல்டர்களாகவும் சேர்த்து ஓர் ரிஜிஸ்டர் கம்பெனியாய் ஏற்பாடு செய்வதற்கான பிரயத்தனங்கள் செய்துகொண்டு வருகிறார், இச்சமயம் நமது இனத்து மிராசுதார்களும், தனவந்தர்களும் முன்வந்து தக்க உதவிபுரிந்து ஷை காரியத்தைப் பூர்த்திசெய்தால் வம்ஸக்ஷேமாபிவிருத்திகள் தழைத் தோங்குவதற்குத் தடையில்லை.

T. K. சதாநந்தன்.

### 3. ஓர் மடாதிபதி

### இளவரசு சுவாமிகளின் விஜயம்.

திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலுக்கா சாற்றூன்குளம்என்று வழங்கும் விஸ்நாத க்ஷேத்திரத்தின்கண் விளங்கும் நந்திபுராதன பிரமாம்பிகை மடாதீனம் ஸ்ரீமத் பரப்பிரஹ்ம ஹம்ஸ கலிநிவர்த்தி விம்ஹாச்சார்யசுவாமிகள் ஜேஷ்ட புதல்வர் இளவரசு ஸ்ரீமத் பிரஹ்மஹம்ஸ நித்யாநந்த திருவர்ன குமாரசுவாமிகள் சேமபுதூர்க்கு விஜயமானார்கள் ஷை இளவரசு சுவாமிகட்கு சுமார் 19–வயதிருக்கலாம். ஸமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் ஞானமடைந்தவர், ஆங்கில பாஷையிலும் தேர்ச்சியுற்று விளங்குகின்றனர். ஷை சுவாமிகளால் சீர்திருத்த விஷயங்களைப் பற்றிப் போதிக்கப் பெற்றோம். அதாவது வைதீககர்மானுஷ்டான இலக்கணம், கைத்தொழி விலக்கணம், ஒற்றுமையினிலக்கணம், அறிவிலக்கணம், முயற்சியிலக்கணம், கல்வியிலக்கணம் என் பலவகளின்முக்யாம்ஸங்களைத் தக்கசான்றுகளுடன் நம் மஹாஜனங்களின் அஞ்ஞான மாய்கை யோடும்படி பராவசமாக

உபந்யஸித்தனர். ஷை இளவரசு சுவாமிகளின் தந்தையர் அவர்களை ஈன்ற அன்னையாராகியுங், குலமாதாவாகியும் விளங்கிய பார்வதியம்பிகை என்பார் பன்னெடுநாட்குமுன்னர் இத் தெக்கண பாகத்தில் விஜயமாகி யுலாவிய மாட்சிமையை குலசிரேஷ்டர் பலர் அறிவர். ஷை அம்பிகையார் பௌத்திரரென்பது கவனித்தற்பாலன. இங்ஙனம் கிராமாந்திரங்களின் றலைநகரமாகிய எட்டயபுரத்தில் நங்குல சீர்திருத்த விஷயமாய் ஒரு சபை ஸ்தாபனஞ் செய்வதாக ஷை இளவரசுசுவாமிகள் வாக்களித்திருக்கிறார்கள். இங்ஙனம் நங்குல குருஸ்தானிக புருஷர்கள் சீர்திருத்தவிஷயமாய் பட்டணங்களிலும், கிராமாந்திரங்களிலும்விஜயஞ்செய்து சீர்திருத்துவார்களாகில் நம்மரபினர்கள் அதிசீக்கிரத்தில் உன்னதநிலைமை யுறுவார்களென்பது வெள்ளிடை மலையாம்.

ஆ. பலவேசமாச்சாரி,
செம்பம்புதூர்.

## விவசாயக் கொத்து.

### போட்டாஷ்.

பயிர் வளருகிறதற்கு நைட்ரோஜன் பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ், சுண்ணாம்பு, ஆகிய இந்த இந்திரிய வஸ்துக்கள் அவசியம். களிமண்நிலங்களில் அநேகமாய்பொட்டாஷ் நிறைந்திருக்கும். மணல்பாங்கான நிலங்களில் பொட்டாஷ் குறைவாயிருக்கும்.

### வெங்காயம்.

இப்பயிர், நிலம் எவ்வளவுக்கெவ்வளவு நெகிழ்ந்திருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நன்றாய் வளர்கிறது. நிலம் மிகவும் இறுகும் பக்ஷத்தில் வெங்காயம் சிறுத்துவிடுவதுமல்லாமல், நீர் வடியாததால் உண்டாகும் நோய்க்கும் இடமாகிறது. ஆனால் பட்டம் பட்டமாகச் செய்து, அதில் நட்டால் பயிர் மிக நன்றாய் வளருகிறது.

### சருகு செத்தை எருவாவது.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் திருமயம் தாலூக்காவில் அரிம்மளம், கீழாநிலை, புதுப்பட்டி என்னும்கிராமங்களில், சாலையோரங்களிலுள்ள மரங்களின் சருகுசெத்தைகளைத் திரட்டி, நிலத்துக்கு எருவாக உபயோகப் படுத்துகிறார்களாம். அந்த ஊர்களில் நிலத்தின் மண் கடினமாயிருப்பதாலும் இப்படி சருகு செத்தைகளின் எருவை உபயோகிக்கிறார்கள். அதே மண் பாடுள்ள மற்ற இடங்களிலும் இப்படி அனுஷ்டிக்கலாம்.

### சமுத்திரக்கரை யோரங்களிலுள்ள நஞ்சை சாகுபடி.

சாதாரணமாக சமுத்திரக்கரையோரங்களிலுள்ள நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கில்லை என்று தள்ளிவிடப்படுகின்றன. ஏனெனில் சமுத்திரஜலம் ஏறி உப்பு அளராயிருக்குமென்பது அநேகரது துணிபு. ஆயினும் தஞ்சாவூர் ஜில்லாவில்கரைக்கால் பிரையாறு போன்ற இடங்களில் இந்நிலங்கள் ஸாகுபடி செய்யப்பட்டு நல்ல முதல்தர நஞ்சை நிலத்தைப்போல் விளைகின்றன. இந்த நிலங்களுக்கு உழவு முதலியவை மற்ற நிலங்களைப்போலவே யாயினும் அதற்கு அடிக்கடி நல்ல தண்ணீர் பாய்ச்சி ஏற்கனவே இருக்கும் ஜலத்தை வடிகட்டியிருக்கவேண்டும், ஒரு ஸமயம் சமுத்திர ஜலம் உள்ளே பிரவேசித்து நஞ்சையில் சென்றாலும் குற்றமில்லை. உடனே செய்யவேண்டியதென்னவென்றால், நல்ல தண்ணீர்விட்டு உப்பு ஸாரத்தை இரண்டு மூன்று தடவையாகஎடுத்துவிடவேண்டும். அப்படி எடுக்காவிட்டால் பயிர் அப்படியே ஒருவாரத்துக்குள் காய்ந்துபோகும் ஆகைபால், இந்நிலங்களுக்கு வேண்டியது நல்ல தண்ணீர் மேல்வாயில்



வித்தமாயிருக்கவேண்டும். இவைகளில் விளையும் தானியங்கள், நெல், பயறு முதலியவை. அதிக ருசிகரமானவை. விளைவும் குறைவில்லை.

### கற்பூரமர ஸாகுபடி.

பர்மாவில் கற்பூரப் பயிர்செய்வது மிகுந்தலாபம் தரும் தொழில் என்று தெரிகிறது. சின்லம்காபா என்னும் ஊரில் கற்பூரச் செடி நன்றாய் வளர்கிறதென்று பரிக்ஷித்து அறிந்திருக்கிறார்கள். சீனாவிலிருந்து வரும் "ஙாமி" கற்பூரத்தை இறக்கும் செடியாகிய 'புளுமியா' என்னும் பர்மாவில் சுலபமாக விருத்தியாகிற படியால் சீக்கிரத்தில் பர்மாவில் ஜனங்கள் கற்பூரச் செடி விருத்தி செய்வதில் முயன்று வருவார்கள். ரப்பர், கெரோஸின் எண்ணெய், முதலியன போல கற்பூரமும் பர்மாவிலிருந்து சீக்கிரத்தில் ஏராளமாக வெளி நாடுகளுக்கு ஏற்றப்படும்.

### ஜலமிறைக்கும் யந்திரம்.

சென்னை ப்ராட்வேயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸெல்ப் கார்டிங் ஸோப் பாக்டரியின் போர்மன் ஒரு ஜல மிறைக்கும் யந்திரத்தை, நூதனமாய் கண்டுபிடிக்கிறாரென்றும், அதற்கு பேடண்டு கொடுக்கக் கல்கத்தா பேடண்டாபீஸுக்கு அவர் மனுச்செய்துகொண்டிருக்கிறாரென்றும் அறிகிறோம்.

P. L.

## சுகாதார விளக்கம்.

### எச்சில் துப்பும் துர்ப்பழக்கம்.

அநேகர் அகாரணமாகவே எச்சில் உமிழ்ந்து வருவதை நாம் காண்கிறோம். அவர்கள் தாமே அவ்வழக்கத்தை வலிய வருவித்துக்கொள்கிறார்கள். ஏதாவது உருசியுள்ள பதார்த்தங்களைக் காணும்போது உமிழ் நீர் உண்டாவது இயற்கை. அப்பொழுது அந்நீரைத் துப்பிவிடுகிறோம். அசூயையான வஸ்துக்களைப்பார்த்தாலும் அப்பொழுதும் உமிழ் நீர் சுரக்கின்றது. அப்பொழுதும் அவ்வுமிழ் நீரை துப்பிவிடுகிறோம். இவ்விரண்டு சமயங்களல்லாமல் நிஷ்காரணமாய் துப்பிக்கொண்டிருப்பது சுகாதாரத்திற்கு முரணான வழக்கம். அதனால்விளையும், கொடுமைகள் அனந்தம்.

முதலில் உமிழ் நீரின் உபயோகம் என்னவென்று ஆராய்வோம். எச்சில் துப்புவதென்றால் உமிழ் நீரை வீணாக வெளிப்படுத்துவதாம். வீணாக வெளிப்படுத்தாத உமிழ் நீர் நாம் உண்ணும் பொழுது அதிகமாகப்பெருகி உணவுடன் கலந்து அது சுலபமாக உட்செல்லும்படி அதைப் பக்குவப் படுத்துகிறது. உட்கொள்ளும் ஆகாரங்களைச் சுலபமாக ஜீரணிக்கச் செய்கின்றது. உமிழ் நீர் சுரந்து கொண்டிருப்பதனால் வாய் வரண்டு போகாமலும், நாக்கு குழறி பேசாமலும் இருக்க ஹேதுவாகிறது. ஆகவே அடிக்கடி துப்புவதினால் உமிழ் நீர் சிறிது சிறிதாக வெளிப்பட்டு வீணில் அழிந்து மேற்கூறிய முக்கிய வேலைகளைச் செய்வதற்குப் போதுமான அளவிற்கு குறைந்து விடுகின்றது. அதனால் அஜீரணமுண்டாகிறது. அடிக்கடி துப்பும் வழக்கத்தை ஓர் ஆங்கிலேய நிபுணர் பின்வருமாறு உபமானப் படுத்தியிருக்கிறார். அது ஒருவர் கையிலுள்ள பொருளை துர்வழியில் செலவிட்டுப் பின்னர் பசியால் வருந்துவது போலாகும் என்கிறார்.

சுருட்டு, சிகரெட், பீடி முதலியவைகளைப் பிடிப்பவர்கள் அடிக்கடி துப்புவதை நாம் காண்கிறோம். அந்த விஷயமொன்றிலிருந்தே சுருட்டுப் பிடிப்பது கெட்ட அப்பியாசமென்று தெரிந்துகொள்ளலாம். புகையிலை போட்டு வாயிலடக்கிக் கொள்வதும் துர்பழக்கமேயாம். புகையிலை, உமிழ் நீரை யுண்டாக்கும் நம் சரீர

உறுப்புகளை கடின வேலைக்குட்படுத்தி உமிழ் நீரை அதிகமாக வெளிப்படும்படிச்செய்து பின் அவ்வுறுப்பு தனக்கு கிரமமாக ஏற்பட்டுள்ள வேலையையும் செய்யச் சக்தியற்றதாகச்செய்கிறது. பற்களையும், உதடுகளையும் பாழாக்குகிறது. புகையிலையை உபயோகிப்பதனால் உண்டாகும் தீங்குகள் அதனால் ஏகதேசத்தி லுண்டாகும் நன்மைகளைக் காட்டிலும் அதிகமானதுபற்றி அப்பழக்கத்தைமேற் கொள்ளாதிருப்பது நன்று.

துப்புவது ஆசாரக் குறைவாக விருப்பதோடும் மிகவும் அபாயகரமானது. தெருக்கள், திண்ணைகள், கூடங்கள் முதலிய இடங்களில் எச்சில் உமிழ்ந்திருந்தால் அவைகளைப் பார்ப்பதற்கு எவ்வளவு அருவெறுப்பாகத் தோன்றுகிறது. அன்றியும் நம்வாயில் கண்ணுக்குப் புலப்படாத இலட்சக் கணக்கான நுண்ணிய கிருமிகள் இருக்கின்றன. உமிழும்போது அவைகள் வெளிப்பட்டு அநேகவிதமான தொத்து வியாதிகளைப் பாவச்செய்கின்றன. முக்கியமாக, க்ஷயரோகிகள், குஷ்டரோகிகள் முதலானவர் எச்சிலின்மீது அதிககவனம் செலுத்தவேண்டும். அவர்கள் எச்சிலை மிதிப்பதிலும், அதினின்றும் எழும் வாயுவை உட்கொள்ளாதிருப்பதிலும் அதிக கவனம் காட்டவேண்டும். இதனாலன்றோ இப்பொழுது சர்க்கார் கட்டிடங்களில்எச்சில் துப்பக்கூடாதென்று கண்டிப்பான விளம்பரம் போடப்பட்டிருக்கின்றது.

முத்தமிடும் வழக்கமும் மிகக் கொடியதே. அவ்வழக்கத்தினால் பெரியோர்க்கும். குழந்தைகளுக்கும் 'எச்சில் தழும்பு' என்னும் படர்வியாதி உண்டாகிறதென்பது யாவருமறிந்த உண்மை. குழந்தைகள் தேகம் மிருதுவானதுபற்றி அவைகள் தழும்புகளாக மாறி பின்பு ஆறிவிடுகின்றன. ஆகையால் முத்தமிடுதல் சுகாதாரத்திற்குப் பெருத்த தீங்கை விளைவிக்கிறதென்று மேற்றிசையார் கண்டுகொண்டு அப்பழக்கத்தை விட்டொழித்து வருகின்றனர்.

இவைகளினாலன்றோ நமது ஆன்றோர்கள் எச்சில் அடிக்கடி துப்புதல் கூடாதென்று சாஸ்திரங்களில் எழுதிவைத்தனர்! அவர்கள் எச்சிலினால் எழும் தீங்குகளை விவரித்துச் சொல்வதைவிட்டு அப்பழக்கத்தை மதவிஷயத்திலும், ஆசார ஒழுக்கங்களிலும் சம்பந்தப்படுத்தி எச்சில் உமிழ்வது மிலேச்சர் செய்கை என்று முடித்துவிட்டனர். ஆகையால் சுகாதாரத்திற்கு இன்றியமையாத இவ்விஷயத்தைக் கவனித்து வருவோமானால் கொடியவியாதிகள் நம்மை யணுகாதென்பது திண்ணம்.

## ஆயுர்வேத சாரம்.

### அவிழ்தமுறை.

#### காதிரைச்சலுக்கு தைலம்.

எருக்கன்யிலைசார் 2½பலம், எள்ளெண்ணை 2½ பலம் இவ்விரண்டையும்ஒன்றுபடுத்தி அடுப்பிலிட்டு உள்ளி விராகனிடை2½ கோஷ்டம் விராகனிடை 2½ வசம்பு விராகனிடை 2½ திப்பிலி விராகனிடை 2½ சுக்கு விராகனிடை 2½ இந்துப்பு விராகனிடை 2¾ கோரைக்கிழங்குவிராகனிடை 2½, இவையெல்லா மிடித்துப் போட்டு காய்ச்சி வைத்துக்கொண்டு 2 துளி விட்டால் காதிரைச்சல் நீங்கும்.

#### நீர் அடைப்புக்கு கியாழம்.

பசரையிலை பிடி 1 கத்திரியிலை பிடி 1 சதைத்து கியாழமிட்டு யிரக்கும்போது நெருப்பிலிட்டு ஊதிய வெங்காரப் பொடி ஒரு துட்டிடைபோட்டு யிரக்கி சாப்பிடவும் நீரகட்டு உடனே நீங்கும்.

#### பித்தசுரக் கியாழம்.

பாவட்டை பலம் 1 சித்தாமுட்டி பலம் 1 ஓமம் பலம்1 வேலிப்பருத்திவேர் பலம் 1 மிளகு பலம் 1 இவைகளை யெல்லாம்



சேர்த்திடித்து கால்படி ஜலம்விட்டு வீசம்படியாக சுண்டக்காய்ச்சி யிறக்கிக்கொண்டு காலை மாலை சாப்பிட்டுவரவும்.

#### கெற்பச்சூடுதணிய கியாழம்.

வெள்ளைவெங்காயம் பலம் 5, செம்பருத்தியிலை பலம் 5, வில்வயிலை பலம் 5, விளாயிலை பலம் 5, அத்தியிலை பலம் 5, கீழாநெல்லியிலை பலம் 5, வெந்தயம்பலம்5, இந்த ஏழுதினுசுகளை ஒன்றாய்ச்சேர்த்து உரலில்போட்டிடித்து ஒரு மண்பாத்திரத்தை அடுப்பின்பேரில் வைத்து யிடித்த சரக்கை அதிலிட்டு 2படி ஜலம்விட்டெரித்து 1 படி சுண்டும்படி யிறக்கி காலை மாலை காலாழாக்கு சாப்பிடவும். பத்தியமில்லை.

#### வாதசுரம் தீர கியாழம்.

அரத்தை பலம் ¼; சதகுப்பி பலம் ¼, சுக்குபலம் ¼, இம் மூன்றும் இடித்து மண்பாத்திரத்திலிட்டு கால்படிஜலம்விட்டு வீசம்படியாகச் சுண்டக்காய்ச்சி யிறக்கும்போது நொச்சியிலை ஒருபிடி கொண்டுவந்து வதக்கி யிடித்து சாறுபிழிந்து அக்கியாழத்தில் விட்டிறக்கி காலை மாலை ஆறுவேளை சாப்பிடவும். வாதசுரம்நீங்கும். கத்திரிப்பிஞ்சு அவரைப்பிஞ்சு முருங்கைப் பிஞ்சு இவைகள் பத்தியத்திற்குச் சேர்க்கவும்.

#### நீர்கடுப்புக்கு மருந்து.

கோரைக்கிழங்கு, ஆவாரம்விதை, தேத்தான்விதை, புளியங்கொட்டைத் தோல் இவையெல்லாம இளநீர்விட்டரைத்து ராத்திரியில் பனியில்வைத்து காலையிலெடுத்துசாப்பிடவும். இப்படி 3நாள்கொள்ளவும் நீர்க்கடுப்பு நீங்கும்.

#### கைகாலில் பித்தவெடிகண்டால் மருந்து.

மருதம் யிலையை ஒருபிடி கொண்டுவந்து பசும்பால்விட்டரைத்து பின்னக்காயளவெடுத்து கால்படி பசும்பாலில் கரைத்து போசனஞ் செய்தபிறகு சாப்பிட சுவஸ்தமாகும்.

#### முழங்கால் வாதத்திற்கு கட்டடம்.

விழிதியிலை, எள்ளுப்புண்ணாக்கு ஆவாரையிலை இவைகளை சமன்கொண்டு கொஞ்சம் வெள்ளுள்ளி கலந்துயிடித்து விளக்கெண்ணையில் வதக்கிக் கட்டவும். இப்படி 3 நாள்பகலில் ஒருகட்டு இரவில் ஒருகட்டு கட்டவும் மேற்சொல்லிய வியாதிநீங்கும்.

#### சளிகோழைக்கு பிரண்டைரசம்.

பிரண்டையை கொண்டுவந்து கும்பி சாம்பலில் வதக்கி சாறுபிழிந்து துட்டிடைசாறு உள்ளங்கையில்வார்த்து ஒருசிட்டிக்கை வெள்ளைசர்க்கரை அதில்போட்டு சாப்பிடவும். இப்படி இருவேளையும் 3 நாளுண்ண கோழை சளி முதலியவை வெளிப்படும்.

#### பிள்ளைகள் வாய்வு உப்பிசம் மலக்கட்டு இவைகட்கு பூபதிமாத்திரை.

இரசம் விராகனிடை 1, சுக்கு விராகனிடை 1, வெண்காரம் விராகனிடை 1, கெந்தகம் விராகனிடை 1, நேர்வாளம் விராகனிடை 4, இவைகளை சுத்திசெய்து குளிர்ந்தநீர்விட்டரைத்து பாசிப்பருப்பளவாய் மாத்திரைசெய்து ஒரு மாத்திரையெடுத்து வெந்நீரிலிழைத்து கொடுக்க வயிறுமாந்தம், பொருமல் வாதம் இவைகள் நீங்கும் பத்தியமில்லை.

#### பிள்ளைகள் கணச்சூடுதணிய எண்ணை.

சித்தாமணக்கெண்ணை அரைபடி, வல்லாரைச்சாறு கால்படி, வெந்தயம் அரைக்கால்படி, இவைகளை ஆவின்பாலிலரைத்து கலக்கி பதமாய்க்காய்ச்சி வடித்து சர்க்கரைகலந்து சிறுகாண்டிவீதம் கொடுக்கவும் கணச்சூடு தணியும்.

#### நாக்கிலும் உதட்டிலும் உண்டாகும் புண்களுக்கு குளிர்ச்சி எண்ணை.

பசும்பால் அரைபடி, சித்தாமணக்கெண்ணை அரைபடி, இரண்டுங்கலந்து அடுப்பிலேற்றி வெந்தயம, வெங்காயம், மயிர் மாணிக்க மூலிகை வகைக்கு 4-பலம் அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு காலையில் சிறுகாண்டிவீதம் சாப்பிட்டுவர புண்கள் ஆறும்.

P. M. ஆயுர்வேத பண்டிதர்.

## சில நூதன தொழிற்றுறைகள்.

### சென்னைக் கைத்தொழில் டிபார்ட்மெண்டு.

சென்னையில் கைத்தொழில் டிபார்ட்மெண்டு ஒன்று கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த டிபார்ட்மெண்டுக்கு ஓர் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் நியமனம் பெற்றிருக்கிறார். அவர் செய்யவேண்டிய வேலைகளாவன:—

1. சென்னை ராஜதானியில் இப்பொழுது நடந்துவரும் கைத்தொழில்களை அபிவிர்த்தி செய்வதும், நூதன கைத்தொழில்களை ஏற்படுத்தவேண்டிய ஆராய்ச்சிகள் தாமே செய்யவும், மற்றவர்களைக்கொண்டு செய்விக்கும்படி ஏற்படுத்தல்;

2. தாம் செய்த ஆராய்ச்சிகளின் பலாபலன்களை சென்னை ராஜதானியிலுள்ள கைத்தொழிலாளர்க்கு தெரிவித்து, ஷை தொழில்களை ஆசித்தவர்களை ஐக்கியமாகச் சேர்த்து அவர்களுடன் பழகுதல்;

3. கைத்தொழில் பாடசாலைச் சிறுவர்களைக் கண்காணித்தல்;

4. கவர்ன்மெண்டார் கைத்தொழில்கள் சம்பந்தமாகச் செய்யவேண்டிய ஏற்பாடுகளுக்கு யோசனை சொல்லுதல்.

***

### பருத்திக்கோட்டை எண்ணை ஆலை.

மைசூர் சமஸ்தானத்திலுள்ள தேவனகிரி என்னும் ஊரில் பருத்திக்கொட்டை எண்ணை ஆலையொன்று மேற்படி கவர்ன்மெண்டார் ஸ்தாபிக்கப்போகிறார்கள். அங்கு உற்பத்தியாகும் எண்ணையை வெளிநாடுகளுக்கு விசேஷமாக அனுப்புவார்கள்.

***

### தென்னிந்தியாவில் தீப்பெட்டி சாலை.

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தென்மலை என்னும் ஊரில் தீப்பெட்டி செய்யும் சாலை ஒன்று ஏற்படுகின்றது. அக்கட்டிடத்திற்கு அந்த சமஸ்தான திவான் சமீபத்தில் அஸ்திவாரக்கல் நாட்டினார். இத்தொழிற்சாலைக்கு அந்த சமஸ்தானத்தினுடைய சகாயம் பலவிதத்திலுமிருக்கும்.

***

### காகிதம் செய்யும் தொழிற்சாலை.

கள்ளிக்கோட்டைக்குப் பக்கலிலுள்ள பெர்ஓக் (Feroke) என்னும் இடத்தில் மரத்திலிருந்து காகிதம்செய்யும் தொழிற்சாலை ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

***

### பௌண்டன் பேனுக்கள்.

மசியைத் தொடாமலே எழுதும் பேனுக்களை உற்பத்தி செய்து விலைப்படுத்துவதற்கு கும்பகோணத்தில் கூடிய சீக்கிரத்தில் ஒரு தொழிற்சாலை ஏறபடும். இதன் விபரம் பிறகு தெரிவிக்கப்படும்.

***

### கான்கீரீட் இரும்புப் பெட்டிகள்.

இரும்பு பெட்டிகளுக்குப் பதிலாக (Ra-in-forced Concrete) கான்கிரீட்டின் உதவியைக்கொண்டு ஒரு நூதன இரும்புப் பெட்டி செய்வதற்கான ஏற்பாடுகள் சென்னையில் செய்யப்பட்டு வருகின்றன.

***

### இங்கி பாட்டில்கள்.

நான்கு வகை இங்கிகளை, அதாவது எழுதும் மசிகளையுடையவும் ஓரோதிவாரமுடைய மைக்கூடுகளைக் கண்டுபிடித்திருக்கும் சுஜாதியார் ஒருவர் அதனை ஓர் தொழிற்சாலையாக ஸ்தாபித்து நடத்துவதற்கான மூலதனத்தை பல பங்குகளாகச் சேர்த்துக்கொள்ள தயாராயிருக்கிறார்.

***



### பச்சைக் கற்பூரத் தொழிற்சாலை.

உயர்ந்த பச்சைக் கற்பூரம் சேர்மான வழியில் செய்கிற ஓர் தொழிற்சாலை சென்னையில் சீக்கிரத்தில் ஏற்படுமெனத் தெரிகிறது.

***

### பலாக்கோட்டை மாவு.

முத்தின பலாக்கொட்டைகளை அரைத்து மாவாக்கி உணவுப் பொருளாகச் செய்வதற்கான ஓர் சாலையைத் சென்னையில் ஏற்படுத்த ஒரு நாட்டுக்கோட்டை செட்டியார் எண்ணங்கொண்டிருக்கிறார்.

---

## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின் கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையும்கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

(285-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

துப்பாக்கிமருந்து பெட்டிகள், தண்ணீர் புட்டிகள், தொட்டிகள், தட்டுகள், சமையல்பாத்திரங்கள், சுற்றுப் பிரயாணத்திற்குவேண்டு மநேக சாமான்களும் அலுமினியத்தால் செய்யப்பட்டு வருகின்றன. வெள்ளைக்கல் நகைகளில் வைக்கப்படும் வெள்ளித் தகட்டிற்கு பதிலாக அலுமினியத் தகட்டில் மெருகேற்றி யனுப்படுகிறது. அந்த தகடு வெள்ளித்தகட்டைவிட விலை சரசமாயும், நல்ல பளபளப்பாயுமிருப்பதால் கடைகளில் வெள்ளித்தகட்டின் வியாபாரம் குறையலாம்.

***

ஒரு டன் (2240-பவுன்) இரும்பு அல்லது எஃகு உலையில் உருகும்போது 2 முதல் 5 பவுன் அலுமினியத்தை வார்க்குமுன் சேர்த்துருக்கிவிடின், அது சுலபமாயும், நன்றாயும் கருக்களில் பாய்வதோடு பொரை முதலிய குறைகளேற்படுகிறதில்லை.

***

### அலுமினிய சாமான்களைச் சுத்திசெய்தல்.

(1) 3 அவுன்ஸ் காஸ்டிக் பொட்டாஷ் அல்லது சோடாவை 24 அவுன்ஸ் தண்ணீரில் கலந்து பிறகு அதில் $1\frac{1}{4}$ நிமிஷம் ஷை சாமான்களை நனைத்து பின் நன்றாய் அலம்பி, மறுபடியும், வகைக்கு 3பாகம் சல்பூரிக் ஆசிட்டும், நைட்ரிக் ஆசிட்டும் வேண்டிய அளவு தண்ணீரும் கலந்து அதில் நினைத்தெடுத்து பிறகு காடித்தண்ணீரில் அலம்பி உடனே நல்ல தண்ணீரில் சுத்திசெய்து உலர்ந்த ரம்பத்தூளில் காயவைத்து மெருகிடவும்.

2. 60 கிராம் வெண்காரத்தை 21 அவுன்ஸ் தண்ணீரில் கரைத்து சிலதுளி நவாச்சார திராவகத்தை (Ammonia) விடவும். இதில் நனைத்து அலம்பிச் சுத்திசெய்யவும்.

3. மெருகிட்ட சாமான்களை சோப் தண்ணீரில் அலம்பி சுத்தி செய்யவேண்டும்.

அல்மினிய சேர்மானங்கள் இலேசானவை யென்றும், கனமானவை யென்றும் இருவகைப்படும். முன்னதில் 100-க்கு 90 முதல் 95 பாகம் அலுமினியமும், மற்றது வேறு உலோகமுமிருக்கும். பின்னதில் 100-க்கு 1 முதல் ஏறக்குறைய 10 பாகம் அலுமினியமும், மற்றது வேறு உலோகமுமிருக்கும். இதற்கு அலுமினியப் பித்தளை யென்று பெயர்.

***

### தங்கத்தைச் சுத்திசெய்ய.

முதலில் கொஞ்சம் நவாச்சார திராவகம் (Ammonia) கலந்த வெந்நீரில்,

சோப்பு கொண்டு மிருதுவான புருஷால் (Brush) தேய்த்து அலம்பவும்; பின் 10 பாகம் தண்ணீரில் உப்பும் படிகாரமும் வகைக்கு 1 பாகமும், பொட்டிலுப்பு 2 பாகமும் சேர்த்து கரைத்துக்கொண்டு அதில் 2-நிமிஷம் நனைக்க நல்ல நிறமுண்டாகும்போது எடுத்து சுத்திசெய்து ஈரமில்லாத ரம்பத்தூளில் உலர்த்தவும்.

***

**கல் இழைத்த நகைகளை அழுக்கு எடுக்க.**

பொட்டிலுப்பை ஓர் சிறிய சட்டியில் போட்டு சுட்டு பின், சுண்ணாம்பு சேர்த்து தண்ணீரில் கரைத்து, அதில் ஒடி நகைகளை கொஞ்சநேரம் ஊறவைத்து பிரஷால் அடித்து சுத்தி செய்யவும். (சுட்ட பொட்டிலுப்புக்குப் பதிலாக அகல மத்தாப்பு எரிந்தபின் நிற்கும் உப்பையும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்).

***

**பொன்நிமிளைப் பித்தளை (Bismuth Brorze)**

16 பாகம் வெள்ளீயத்தில் 1 முதல் 3 பாகம் பொன் நிமிளை சேர்த்து உருக்கவும். இதனால் செய்யப்படும் ஈய சாமான்கள் கொஞ்சம் நிறமாயிருக்கும்.

***

**பியூட்டர் (Pewter) சேர்மானம்.**

9 பாகம் வெள்ளீயமும் 2 பாகம் காரீயமும் சேர்த்திருக்கப்படுவதுதான் நமக்கு சாதாரணமாய் கிடைக்கிறது. உயர்ந்த சேர்மானத்தில் 5 பாகம் வெள்ளீயம் 1 பாகம் காரீயமும்தான் கூட்டப்படும். தகடு வார்ப்பதற்கோ கீழ்வரும் அட்டவணையின்படி சேர்த்திருக்கி அச்சுகளில் வார்க்கவும்.

| உலோகம். | | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| செம்பு | ... | 4 | 2 | 2 |
| நிமிளை | ... | 8 | 8 | 7 |
| பொன்நிமிளை | ... | 1 | 2 | 2 |
| வெள்ளீயம் | ... | 100 | 100 | 90 |

***

**அலுமினிய பத்தவைப்புப் பொடிகள்.**

| உலோகம். | 1 | 2 | 3 | 4 | ஷரா |
|---|---|---|---|---|---|
| அலுமினியம் | 8 | 12 | 15 | 20 | அலுமினியம் உருகியபின் நாகம் சேர்க்கவும் கொழுப்பு போட தெளியும். |
| நாகம் | 92 | 88 | 85 | 80 | |

இதனைப்பற்றி விரிவாய் மறு சஞ்சிகையில் பேசுவோம்.

***

**வினா—விடை.**

மு. நல்லப்ப ஆசாரி சேலம்

வினா. வி. கு. ரி பத்திரிகை 119—வது பக்கத்தில் சொல்லிய சைனாக்காரர் வெள்ளைச்செம்பு,

1. என்னவேலைக்குதவும் ?

2. வெள்ளியுடன் மட்டம் சேர்க்கலாமா ?

விடை:—

1. வெள்ளியைப்போல் எல்லா வேலைகளுக்கும் உதவும்.

2. மட்டம் சேர்க்கலாம், அநுபோகம் வேண்டும். கொடிக்கள்ளி பழுப்பில் புடமிட்டதைச் சேர்ப்பது நன்று.

***

T. S. பஞ்சநதீஸ்வர ஆச்சாரி, குடந்தை.

வினா:—(1) அலுமினியம் எங்கு அகப்படும்?

விடை:—பிரிடிஷ் அலுமினியமே பாத்திரங்களுக் குதவும். ஜர்மன், அமெரிக்கன் தகடுகள் இலக்டிரிக் சாமான்கள் செய்வதற்கும். சென்னை, பெஸ்ட் அண்டு கம்பெனியிலும், சென்னை, இண்டியன் அலுமினியம் கம்பெனியிலும் அகப்படும். பின்னால் சொல்லிய கம்பெனியே, பிரிடிஷ் அலுமினியம் கம்பெனியாரின், ஏஜண்டுகள்.

***



## பல குறிப்புகள்.

நமது பாடசாலை, சபை, பத்திரிகைமுதலிய குலோபகார விஷயங்களைமுன்னிட்டு ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியாரவர்கள் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருவதைமுன்னரே தெரிவித்திருக்கிறோம். அவர் தூத்துக்குடி, மணியாச்சி, திருநெல்வேலி, மீனாக்ஷிபுரம். மதுரை, பழநி, இராமேஸ்வரம் முதலிய பல இடங்களுக்குச்சென்று சுஜாதிச்செல்வர்களைத் தரிசித்து அவர்களின் முழு ஆதரவையும், அபிமானத்தையும் அடைந்துகொண்டும் வருகின்றனர் என்பதை நாம் சந்தோஷமாகத் தெரிவிக்கிறோம். இதுவரையில் சேர்ந்த கையொப்பங்கள் பல நூறேயாகும். இன்னும்சந்தாதாரர் ஆயிரக்கணக்காகச் சேர்ந்தாலன்றோ குலோத்தாரண விஷயங்கள் கைகூடும்? ஆகையால் ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார் இன்னும் இரண்டொரு மாதம் சுற்றுப்பிரயாணம் செய்துவருவரென்று அறிகிறோம்.

***

நமது வேதாத்தியயன பாடசாலையின் கிளைப்பாடசாலைகள் இச்சென்னையின் பல பாகங்களிலும் நாட்டவேண்டுமென்று பலரும் விரும்பியபடி கிளைப்பாடசாலையொன்று சென்னை பெத்துநாய்க்கன் பேட்டையில் முதலில் ஸ்தாபிக்கும்படியான ஏற்பாடுகள் நடந்தேறிவிட்டன. இம்மாத முடிவிற்குள் அப்பாடசாலை திறக்கப்படும். இன்னும் பல பாடசாலைகள் ஸ்தாபிக்க வேண்டிய ஆவசியகமிருந்தும் திரவியசகாயமின்மையால் யோசிக்கவேண்டியிருக்கிறது. இவ்விஷயத்தை நம்மனோர் கவனத்திருத்துவார்களாக.

***

ஜாதீய பொதுவிஷயங்களை இனிது நிறைவேற்றுவதற்கு அநுகுணமாக சுலப வழியை அநுசரித்த ஒரு பொதுநிதி ஏற்படுத்துவது அவசியமாயிருப்பதால், சிறு கிராமங்கள் முதற்கொண்டு பட்டணங்களில் வசிக்கும் நம்மனோர்கள், தலைக்கட்டு ஒன்றுக்கு மாதமாதம் ஒருதம்பிடி (ஒரு பை)வீதம் வருடம் ஒன்றுக்கு ஒரு அணா அனுப்பி உதவிசெய்வார்களாயின் இரண்டொருவருடத்திலேயே பெருத்த மூலதனம் ஏற்பட்டுவிடுமென்று நம்புகிறோம். ஆகையால் இவ்வித வசூலை சங்கராந்தி பண்டிகை தினத்தை முன்னிட்டுச்செய்து நமக்கு அனுப்பிவைக்க குலாபிமானச் செல்வர்கள் முன்வருவார்களாக.

***

இச்சஞ்சிகையில் உலோகத் தொழிலைப் பற்றியும், நூதன தொழிற்சாலைகளைப்பற்றியும், எழுதியிருக்கிறோம். இவைகளை நன்கு கவனித்து, நம்மனோர் ஏதேனும் நூதன இயந்திரம் முதலியவைகளைக்கண்டுபிடித்திருந்தால் அந்த விபரங்களை நமக்கெழுதியனுப்பினால் அவ்வகளை நம் பத்திரிகை மூலமாகப் பகிரங்கப்படுத்தத் தடையிராது.

***

குடந்தை, மாயவரம், நாகப்பட்டணம் முதலிய பல ஊர்களிலுள்ள சப்கோர்ட்டுகளின் நாஜராயிருந்த ஸ்ரீ கந்தசுவாமி ஆச்சாரியாரவர்களை, தஞ்சை டிஸ்டிரிக்ட் கோர்ட் சிரஸ்தாதார் பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பதை மிககுதூஹலத்துடன் தெரிவிக்கிறோம். இவரது உத்தியோக சாமர்த்தியமும், நடுவுநிலைமையும் பலாலும் மெச்சப்பெற்றிருக்கின்றன. இக்கனவான் மேன்மேலும் தழைத்தோங்க ஸ்ரீவிஸ்வேஸன் கருணைபாலிப்பாராக.

***

## விஸ்வப்ரம்ஹ ஸ்துதி.

**கீர்த்தனை.**

இராகம் - செஞ்சுருட்டி - தாளம்-ஆதி.

பல்லவி.

வேதவிஸ்வ கர்மஜக நாதனைத் துதி செய்குவாம்.

அநுபல்லவி.

மாதவ ஜனகாதியர் ஜோதி விஷயமாய்க் கண்ட. (வேதவி)

சரணங்கள்.

ஆபந்தனில் வாயுவாக அசைந்தாடிப் பின்வாக
ரூபமாகிப் பூமிதன்னை நோக்கியன்பொடு தாங்கிய (வேதவி)

பகர மிகுந்தபிர பஞ்சசில்பாச் சாரியாக
ஜகதலந் தன்னையுருத் தான்படுத்திய வை போக (வேதவி)

பூமிக்கு ப்ருதிவியென்று புகழுடன் பெயரிட்ட
சாமியாஞ் சதுர்விம்சதி தத்துவா தீதவிராட்டு (வேதவி)

திருத்தமுடனே மௌன குருருத்திர மூர்த்தியின்
கருத்தினில் விளங்கிய கர்த்தனைங் கிருபாலய (வேதவி)

**V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.**
Ex. முனிசிபல் கௌன்சிலர்,
பழனி ஸ்தலம்.

## வாழ்த்துக் கவிகள்.

உலகினி லிலங்கும் பல்வகைப் பிறப்பி லுயர்ந்துள மானிட ரவர்தாம்
நலமதை யடையும் வழியின தென்று நாட்டுறை விடயங்களனைவையும்
பலம் பெறத் தருபத் திரிகையி தெனவிப் பாருள நம்மனோர் பரவுங்
கலனெனும் விசுவ கர்மகு லோப காரிநீ நெடிதுநாள் வாழி.

காண்பதற் கினிய வாசக மமைக்குங் கருத்தினிற் சிறந்தவ ராகி
மாண்பதி னொளிருஞ் சுந்தராச் சாரி வாய்ந்தநல் லறிவினை மதிக்கச்
சேண்பெறு முலகி லெவர்களு மிலையச் செம்மலின் செய்திறங் கண்டு
நாண் கொளும்புலவர் எவர்களு மஞ்ச நன்குறு விடயங்க ளேந்தி.

நாட்டுறு மிந்தச் சஞ்சிகை யதனை நலம்பெறு மச்சினி லேற்றி
வேட்டவ ரெவர்க்கு மன்பொடு மீந்து விளங்கிடுங் குலவபி மான
சேட்டராங் கன்னி யப்பமா லவர்தம் ஜீவநாண் மிகமிக வோங்கி
வாட்டமிங் குறாது வாழ்ந்திட விறையை வணங்குதுங் கனிவொடு மாதோ.

**உ. சாமிநாத ஆச்சாரி.**



## கடிதங்கள்.

நமது விஸ்வகர்ம குலோபகாரிப் பத்திரிகாதிபரும் குலாபிமானியுமாகிய பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார் அவர்கள் திருவாரூர், நாகை, மாயவரம், கும்பகோணம், தஞ்சை, திருச்சி, சிவகாசி முதலான இடங்களில் தமது சஞ்சிகையை அபிவிருத்தி செய்யக் கருதி தன் திரேக அசௌகரியத்தைக் கூட பாராட்டாமல் பாடுபட்டுக்கொண்டிருக்க, இராமேஸ்வர யாத்திரையாய்ச் சென்று புண்ணியத்தை அடைய விரும்பின பிரம்மஸ்ரீ, சோமங்கலம் கந்தஸாமி ஆச்சாரியார் அவர்களும் அரக்கோணம் பிரம்மஸ்ரீ தி. குருசாமி ஆச்சாரியாரவர்களும் திருச்சி. மதுரை, கும்பகோணம் முதலான இடங்களுக்கு வந்து தாங்கள் ஏதோ ஊர்களை பார்வையிட்டு ஸ்வாமி தரிசனார்த்தம் வந்தோம் என்று கேட்டவர்களுக்குச் சொல்லிவிட்டு நம்மினத்தவர்களை கண்ட மாத்திரத்தில் நமது சஞ்சிகைக்கு ரூ. 2 தான் சந்தாதாரர்களாகச் சேருங்கள் என்று வற்புறுத்தி தங்கள் காரியத்தை வந்தமட்டிலும் பார்த்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் கடைசியாக திருச்சியிலிருந்து பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார் அவர்களால் வெளியிடப்பட்ட முக்கிய விளம்பரத்தைப் பார்வையிட்டதுமுதல் சிலர்கள் உண்மையை யறிந்து விழித்துக்கொண்டு பாபத்துக்கு ஆளாகக் கூடாதென்று சும்மா யிருந்துவிட்டார்கள். சாவதானமாயிருந்தால் உண்மை எளிதில் அறிந்து கொள்ளலாம். மற்றும் யாவும் அடுத்த சஞ்சிகையில் சவிஸ்தாரமாய் தெரிவிக்கப்படும். P. A.

***

விஸ்வப் பிரம்ம மஹா ஜனங்களுக்கு செய்துக்கொள்ளும் விண்ணப்பம்.

இப்பவும் சென்னை விஸ்வகர்மன் பத்திரிகைக்காக சந்தா சேர்க்கும் பொருட்டும், இராமேஸ்வர யாத்திரை செய்யும்பொருட்டும் வந்த ஸ்ரீ சோமங்கலம் கந்தஸாமி ஆச்சாரியார் அவர்களும் அரக்கோணம் தி. குருசாமி ஆச்சாரியார் அவர்களும் கும்பகோணத்திற்கு வந்தபொழுது நேரில்பார்த்தவரையிலும் சம்பாஷணைசெய்தவரையிலும் குலசீலராயும் மேன்மை வாய்ந்தவராயும் காணப்பட்டபடியால், ஏன் சபை இரண்டாயிராமல் ஒன்றாகவே யிருந்தால் நலமென்று தெரிவிக்க அவ்வித கருத்துக்கிணங்கி பிர்ம்மஸ்ரீ பி. கலியாண சுந்தராச்சாரியாருக்குச் சொல்லிப் பார்ப்போம். கேழ்க்காத விஷயத்தில் தாமும் இனி பொதுவாயிருந்து விடுவதாகச் சொல்லிப் போனதற்கு நாம் வந்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இதைக் கண்ணுறும் ஒவ்வொரு குலாபிமானிகளும் இவர்கள் ஏகோபித்து நடப்பதற்கான முயற்சிகள் செய்தால் நம்மவர்களின் பழிச்சொல் நீங்கும்.

**பஞ்சநத ஈஸ்வராச்சாரி.**
குடந்தை.

## ஸ்ரீ காமாக்ஷியம்மன் லக்ஷதீப மஹோற்சவம்.

திந்திரிபுரி யென்னும் திண்டிவனத்தின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கும் ஆதிகாமகோடி பீடாமகேஸ்வரியும், ஸ்ரீமத் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாகிய ஸ்ரீ காமாக்ஷி அம்மனுக்கு நாளது ஆனந்த௵ ஆடிமீ 11௳ ஆதிவாரம் காலையில் அதி உன்னதமாக நடந்தேறும் சோடச அபிஷேகஆராதனைக்கும், இரவு லக்ஷதீப தரிசனத்திற்கும், நிறைமணி சேவைக்கும், ரிஷபவாகன சேவைக்கும், பக்திமான்களனைவரும் விஜயஞ்செய்து ஷை அம்மனை தரிசித்து புண்ணியத்தைப்பகிர்ந்துகொள்வீர்களாக.

இங்ஙனம்

**அம்பிகைதாஸ ஸ்வாமிகள்.**
**ஷை தேவஸ்தான மெம்பர்கள்.**
**ஷை ஏஜண்டுகள்.**

## சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையினின்றும்
சட்டவிரோதமாய்ப் பிரிந்துபோன
ஸ்ரீ பி. கல்யாணசுந்தராச்சாரியர் முதலிய சிலர்
ஷை சபையின்பெயரால் நடத்திவரும் ஒழுங்கீனங்களைக்கண்ட
ஷை சபை வைஸ்பிரசிடெண்டுகளில் ஒருவராகிய
தி. மு. முக்கண்ணாச்சாரியர் ஷை கூட்டத்தார்களுக்கு எழுதிய

# கண்டன நோட்டீஸின் நகல்.

359, திருவொற்றியூர் ஐரோடு,
வண்ணாரப்பேட்டை,
30—6—1913.

நெ. 3.
பி. க.

1. சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையில் 21-10-1910ல் காரியதரிசியாய் நியமனம் பெற்றுள்ள பிரம்மஸ்ரீ பி. கல்யாண சுந்தராச்சாரியரவர்களுக்கு, ஷை சபையில் ஷை தேதியில் 2-வது வைஸ் பிரசிடெண்டாக நியமனம் பெற்றுள்ள அடியிற் கையொப்பமிட்டிருக்கும் தி. மு. முக்கண்ணாச்சாரியர் எழுதுங் கண்டன நோட்டீஸ் லெட்டர்.

2. 7–4–13லும், 9-4-13–லும் ஷை சபையின் பேரால் தாங்கள் நடத்தியிருக்கிற காரியங்களையும், கூட்டத்தையும், நடவடிக்கைகளையும் சபையின் சட்ட விரோத ஒழுங்கீனமென்று கண்டித்து ஆக்ஷேபிக்கிறதாவது:—

3. நான் வெளியூர் போய்த் திரும்பி வந்ததும் சபை 23–வது எண்ணுள்ள பிரசுரம் 3-6-13 காலை எனக்குக் கிடைத்தது. அதில் 7-4-13 ல் புதுமண்டபப் பிரவேசமென்பதையும், 9-4-13ல் மெம்பர்களின் பொதுக்கூட்டமென்பதையும் தொடர்ந்து படிக்கவே எனக்கும் சில நண்பர்களுக்கும் ஆச்சரியத்தை உண்டுசெய்தது.

4. பின்னர் யான் 7-6-13 மாலை சிலரோடும் சபைக்கு வந்து, தங்களோடு நேரில் ஷை சம்பவங்களுக்கு விபரங் கேட்டபோது, தாங்கள் சொல்லிய பதில்களைக் குறிப்பெடுத்துக்கொண்டு திரும்பியது ஞாபகத்திலிருக்கலாமே.

5. நண்பரே! தங்களது காரியதரிசி உத்தியோகத்தின் அதிகார வரம்பை முன்னமே உணர்ந்திருக்கவேண்டும். தங்கள் சித்தம் போனபடி யெதேச்சையில் நடத்திய நடவடிக்கைகள் எவ்வளவு அனர்த்தங்களை விளைவித்திருக்கிறதென்பதை எடுத்துக்காட்ட முன்வந்தேன்.

6. 7-4-13 ல் தாங்கள் நடத்திய சபா பிரவேச உற்சவத்திற்கு நான் முதலிய வைஸ் பிரசிடெண்டுகளுக்கும், மற்ற கமிட்டி மெம்பர்களுக்கும், முன்னடியே கிரமமாக தெரிவித்து அநுமதி பெறாமல் நிறைவேற்றியது உலக வழக்குக்கும், சபை ஆச்சாரணைக்கும் பொருந்தவில்லை. எதுவோ எங்களை வெள்ளங்கொண்டுவிட்டதாகவும் அந்த வெள்ளத்தில் தாங்களொருவர்தான் எஞ்சி நின்றதாகவுங் கருதினீர்கள் போலும்!

7. புது இடத்தையும், அதன் வாடகையையும், அதன்கென்று ஏற்பட்ட கமிட்டியார் எழுதும் ரிப்போர்ட்டை வைத்து, தாங்கள் ஒரு நிர்வாக சபை கூட்டி, அதில் சபா பிரவேசம் இந்த தேதியில் செய்விக்க வேண்டுமென்பதையும், வாடகையையும், அன்றைய செலவையும் நிர்வாக சபையின் தீர்மானம் பெறாமல், தாங்கள் தாமே நடத்தி முடித்தது ஒழுங்கீனமல்லவா?



8. ஒரு சமயம் 10-11-12 ல் தீர்மானத்தை சுட்டுவீரேல், அந்த தீர்மானத்தில் நீங்கள் எடுத்துக்கொண்ட சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அதில் சபையை டவுன் மத்திய ஸ்தானத்தில் அமைப்பதற்கு இடம் பார்க்கவேண்டியதென்று ஒரு கமிட்டி ஏற்பட்டதாய் எனக்கு ஞாபகம். நான் அன்றையக் கூட்டத்தின் அக்ராசனமும், ஷை கமிட்டியிலும் ஒரு மெம்பர் ஸ்தானம் வகித்திருக்கிறேன். இதனால் 7-4-13 ல் நடத்திய நடவடிக்கைகள் சட்ட விரோதமென்றும், ஒழுங்கீனமென்றும் கண்டித்து இதன் வாயிலாக தங்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

9. ஷை சபை 23-ம் பிரசுரத்தில், 9-4-13 ல் மெம்பர்களின் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறது. அன்றைய மீட்டிங்கு நோட்டீஸில்;

(a) சபை உத்தியோகஸ்தர்களின் நியமனம்.
(b) கணக்கு பரிசோதனைக்கு ஆடிட்டர்கள் நியமனம்.
(c) சட்ட நிரூபணஞ்செய்ய ஓர் கமிட்டி நியமனம்.
(d) அவசியமான வேறு விஷயங்களும், நடத்துவதாக காணப்பெற்றேன். இவற்றுள் ஜெனரல் மீட்டிங்கையும், அதில் யோசிக்கவேண்டிய அரிய பெரிய விஷயங்களைப்பற்றியும் முன்னடியே நிர்வாக சபை கூட்டி, அதில் பாஸாகாமலல்லது தாங்கள் பொதுக்கூட்டங் கூட்ட ஞாயமில்லை. இவ்விஷயமாய், 7-6-13 மாலை நான் தங்களை சபையில் கேட்ட பிரஸ்னைக்கு, தாங்கள் 7-4-13 ல் சபா பிரவேசத்திற்கு வந்திருந்த மெம்பர்களில் சிலர் வாய்மொழியாக, இனி தாமதமின்றி ஜெனரல் மீட்டிங்கு கூட்டவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டபடி, 9-4-13 ல் மீட்டிங்கு நடத்தினேனென்று பதிலளித்தது ஞாபகமிருக்கலாமே.

10. அந்த சிலரில் பழைய கமிட்டி மெம்பர்களில் ஸ்ரீகா. திருவேங்கட ஆச்சாரியர், ஸ்ரீ பாலசுந்தராச்சாரியர் இருவரையுந் தவிர, மற்றக் கமிட்டி மெம்பர்களங்கில்லை. சபையின் முன்னேற்றத்திற்கு நெடுநாள் பாடுபட்டு வந்த 14 கமிட்டி மெம்பர்களை வஞ்சித்து, சந்தாதாரர் சிலரின் அநுசரணையில் நடத்தினதை மற்ற எல்லா மெம்பர்களும், இதர சபையார்களும் உணர்ந்தால் அவர்களின் மனம் கொந்தளிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

11. அல்லாமலும், கமிட்டி மெம்பர்களாயிருந்தாலும், நிர்வாக சபை தீர்மானமின்றி, தனிமையில் சொல்லும் வாய்மொழிகள் சிறிதும் பயன்படாதென்றால், சந்தாதாரர்களின் வாய்மொழியைப்பற்றி எடுத்துக் கூறவும் வேண்டுமோ.

12. ஷை நோட்டீஸில் கண்ட 3 விஷயங்களை நிரணயித்தல் நிர்வாக சபையார் கடமையேயன்றி, தங்களது கடமையாகமாட்டாது. நிர்வாக சபையார் தீர்மானங்களை அப்போதைக்கப்போது நிறைவேற்றி முடிப்பதுதான் தங்கள் கடமை என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

13. மேலும் சபை உத்தியோகஸ்தர்கள் நியமனத்திற்கு இப்போது அவசரமிருந்ததாகத் தெரியவில்லை. சட்டத்தில் உத்தியோக காலவரை இருந்தாலுமில்லாவிட்டாலும், முழுவருஷம் பூர்த்தியாகிறதற்கு முந்தி புதிய நியமனஞ்செய்ய அவசியமில்லை. சபை முதல் நியமனங்கள் 21-10-1910 ல் பெற்றது. இப்பொழுதோ வருஷகாலம் 21 10-1913 ல் பூர்த்தியாகிறது. இதற்குமேல் புது நியமனங்கள் செய்ய வேண்டியிருக்க, இந்த மத்தியகாலத்தில் நியமனஞ் செய்யப்புகுந்தது அசம்பாவிதமும் ஒழுங்கீனமென்று யார்தான் சொல்லமாட்டார்கள். ஆகையால் இது தங்கள் கபடநாடகமென்றே மதிக்க யிடந்தருகின்றது. (தொடரும்.)

தி. மு. முக்கண்ணாச்சாரியர்,
வைஸ் பிரசிடெண்டு, விஸ்வகர்ம குலோத்தாரணசபை சென்னை.

# வர்த்தமானக் குறிப்புகள்.

## மைசூரில் கல்வி.

மைசூர் கவர்ன்மெண்டு, வித்தியா இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஷாமராவ், அந்த சமஸ்தானத்து வித்யா இலாகா ரிப்போர்டு ஒன்று தயார்செய்து அனுப்ப அதைப்பார்த்து கவர்ன்மெண்டார் அவரைப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். 1912-13ம் வருஷத்தில் மைசூர் கவர்ன்மெண்டாரால் வித்தியா இலாகாவின் பொருட்டு 20 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வித்யா இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனராலுக்கு உதவியாக டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர்களுக்கு உதவியாக 2 ஸர்க்கில இன்ஸ்பெக்டர்களும், 9 இன்ஸ்பெக்டர்களும், 14 டிப்டி இன்ஸ்பெக்டர்களும் வேலை பார்த்து வருகிறார்கள், 14 டிப்டி இன்ஸ்பெக்டர்களில் இருவர் மகமதிய ஸ்கூல்களையும், ஸமஸ்கிருத ஸ்கூல்களையும் பார்த்து வருகிறார்கள். மைசூர் சமஸ்தானம் ஹைதராபாத்தைவிடச் சிறியதாயினும், வித்யாபிவிருத்தி விஷயத்தில் ஹைதராபாத்தைவிட இரண்டுமடங்கு அதிகமாய்ப் பணத்தைச் செலவு செய்துவருகிறது

***

## கட்டிட கிராண்டுகள்.

மங்களூர் கணபதி ஸெக்கெண்டெரி ஸ்கூலின் கட்டிடத்தை விஸ்தரிப்பதற்கு 2325 ரூபாயும், காவேரி பாக்கம் அமெரிக்கன் ஆற்காடு மிஷன் ஹிந்து பெண்பாடசாலையின் கட்டிடத்தை விஸ்தரிப்பதற்கு 3880 ரூபாயும் வாணியம்பாடி மதராஸா இஸ்லாமியா ஸ்கூலுக்கு ஹோட்டல் ஒன்று கட்டுவதற்கு 3866 ரூபாயும் அம்பாசமுத்திரம் ஹிந்து ஹைஸ்கூல் ஒன்று கட்டுவதற்கு 38625 ரூபாயும் அம்பாசமுத்திரம் ஹிந்து ஹைஸ்கூல் சாஸ்திர ஆராய்ச்சிக் கட்டிடத்திற்கு 7555 ரூபாயும் சென்னை கவர்ன்மெண்டார் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். சென்னை கிறிஸ்டியன் காலேஜைச் சேர்ந்த ரசாயன சாஸ்திரப் படிப்பு இலாகாவுக்குத் தனியாக ஒரு கட்டிடம் வாங்குவதற்கு கவர்ன்மெண்டார் 11,212 ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்.

***

## தொழில் ஸ்கூல்கள்.

சென்னை ராஜதானியில் 39 தொழிற்படிப்பு ஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்பார்வையை, தொழில்களின் டைரெக்டரே பார்த்து வரவேணுமாயும் ஏப்ரல்மாதம் 15-ந்தேதி முதல் அவருடைய வசத்திலேயே ஒப்புவிக்கும்படியாயும் சென்னைக் கவர்ன்மெண்டார் உத்திரவு செய்கிறார்கள்.

***

## படத்துடன் பத்ரிகை.

மைசூர் சமஸ்தானத்தில் குழந்தைகள் படிப்பதற்காக ஒரு கன்னட பத்திரிகை படங்களுடன் பிரசுரித்துவரவேண்டுமென்று ஏற்பாடாயிருக்கிறது.

***

## எழுதும் மை.

நியூகிரநேட் என்னும் தேசத்தில் ஒருமரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய சாற்றை வேறொன்றும் கலவாது எழுதுகோலிற் தொட்டெழுதினால் அது ஆரம்பத்தில் சிவப்பாகவும், பின் சுத்தக் கறுப்பாகவும் மாறிவிடுகின்றதாம்.

***

## விலையுயர்ந்த சுங்கான் ஒன்று.

பர்ஷியா தேசத்தார் விசேஷ நாட்களில் புகைகுடிக்கும் சுங்கானது விலை 240 000 ரூபாயாம். அது வைரத்தாலும் முத்தாலும் இழைக்கப்பட்டிருக்கின்றதாம்.

***



## மனிதனைச் சுமந்து செல்லும் பட்சி.

ஜப்பான் தேசத்து உள் நாட்டிலிருந்து ஜப்பானியன் ஒருவன் ஒரு பட்சியின் மேலேறிச் சவாரி செய்துகொண்டு ஆகாயவழியாய் ஸைபீரியாவுக்குச் சென்றானாம். மேற்படி பட்சி நூதனமானதாகவும், ரூபத்தில் பருந்தைப்போலவும், நீக்குருவியிலும் பெரிய ரூபமுடையதாகவுமிருக்கிறதாம்.

***

## மதுபான விலக்கு.

மதுபானஞ் செய்பவன் நாடோறும் ஆறு சீமை இலந்தைப் பழத்தைச் சாப்பிட்டு வந்தால் குடிப்பழக்கம் நின்று விடுமாம்.

***

## ஜலமேல் நடத்தல்.

ஜர்மனி தேசத்திலே யுள்ள ஓர் சாஸ்திரி நூதனமான பாதரக்ஷைகளையுண்டாக்கி இருக்கின்றனர். இப்பாதரட்சைகளை காலில் மாட்டிக்கொண்டு ஆழமான நீர்மேல் நடக்கலாமாம். இப்பதரட்சைகளின் உதவியைக்கொண்டு மணிக்கு ஒரு மைல் வீதம் நடக்கலாமெனச் சொல்லப்படுகிறது,

***

## மீன் சண்டை.

சிங்கப்பூரிலுள்ள தோட்டங்களுள், ஒரு வகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன, அம்மீன்களுள், ஒரு மீனுக்கு நேராக மற்றொரு மீனைவிட்டால் அவை போர் வீரர்களைப்போல சண்டை செய்கின்றன. சண்டை செய்யும்போது அவற்றின் நிறம் பலவாறாகக் காணப்படுகிறது. சண்டைக் காட்சி மிக விநோதமாக விருக்குமாம்.

***

## சென்னை இந்தியன் பாங்க்.

சென்ற ஜூன் மாதம் 30-ந் தேதியுடன் முடிவான அரை வருஷத்தில் சென்னை இந்தியன் பாங்கின் மொத்த வரும்படி ரூ 1,38,509-7-8 என்று அறிகிறோம். பணத்தை டிபாஸிட் செய்து வைத்திருக்கிறவர்களுக்கு அந்த அரை வருஷத்து வட்டிக்காகவும், சிப்பந்திச் செலவுக்காகவும், மற்றச் செலவுகளுக்காகவும் ரூ 76.550-9-5 ஒதுக்கிவிட்டு, பாக்கி நிகர் லாபம் அந்த அரை வருஷத்திற்கு ரூ 62,047-14-3 சென்ற வருஷக் கடைசியில் பாக்கியிருந்த ரூ 19, 285-15-4 யும் சேர்த்து கையிருப்புள்ள லாபம் ரூ 81,333-13-7. இந்தத் தொகை விநியோகமாக வேண்டியது. நம்மவர் பாங்கி எப்பொழுது சித்திக்கும்?

***

## ஓர் ஜோசியம்.

சென்னையில் உண்டாகக்கூடிய பஞ்சம் — பருவ சாஸ்திரத்தில் அனுபோகமுடைய ஒரு சாஸ்திரியார் இந்தியன் டெயிலி டெலிக்ராப் என்னும் பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகிறார்.

“ஐக்ய மாகாணங்களில் தற்பொழுது நடண்டாயிருக்கும் பஞ்சம் கழிந்தபிறகு அங்கு நெடுங்காலத்திற்கு மறுபடியும் பஞ்சமுண்டாகாமலிருக்கும். (1915-ம் வருஷம்) தென்னிந்தியாவில்கொடியபஞ்சமுண்டாகும். பம்பாயிலும் தோன்றக்கூடும், இந்தப் பஞ்சம் 1729-வது 1897-வது வருஷங்களில் தென்னிந்தியாவில் உண்டான பஞ்சங்கள் எவ்வளவுகொடியதாயிருந்தனவோ அவ்வளவு கொடுமையாகவேயிருக்கும் 1729—1897-வது ஆண்டுகளில் தென்னிந்தியாவிற் காலநிலை எப்படி இருந்ததோ அப்படியே 1915 ம் ஆண்டிலும் இருக்கும் இதனாலேயே மேற்சொன்ன பஞ்சம் சென்னை ராஜதானியில் நிச்சயமாய் உண்டாகும்.

***

## நீருண்ணாத மிருகங்கள்.

ஹவாயியன் தீவென ஒரு தீவு இருக்கின்றது. அதில் வசிக்கும் ஆடு மாடு குதிரை முதலியன எப்போதும் தண்ணீர் குடிப்பதில்லையாம். அங்கு மலைச்சார்புகளிலுள்ள ஒருவகைப் புல்லே அவற்றிற்குஆகாரமாம். அப்புல் அவற்றிக்கு நீரும் ஆகாரமுமாக உபயோகப்படுகின்றதாம்.

***

## சதாநந்த பக்தர் சரித்திரம்.

கேளீர் சாதுக்களே! மகததேசத்தைச் சார்ந்த கௌரீபுரத்தில் நித்யவாசம்பெற்று அகிலலோகநாயகியாகிய அம்பிகையின் திருவருளால் சாயுஜ்யநிலையை யடைந்த சாமளசர்மாவின் திவ்விய சரித்திரத்தைச் சொல்லியருளினேம். இனி, முத்தியை யளிக்கவல்லசத்தபுரியெனும் உத்தமமான காசியம்பதியில் சத்தியசீலராய் வாழ்ந்துவந்து அந்த காசிதேசத்து ராஜனுனவன் வழிபட்டுய்யும்பொருட்டு, அவனுக்குச் சிவலிங்கத்தைப் பிரதிதினமும் உண்டுபண்ணிக்கொடுத்து, அவனை வாழ்வித்த சதாநந்த பக்தரின் சரித்திரத்தைச் சொல்லுகிறோம் ஒருமுகப்பட்டு கேட்பீர்களாக வென்று நாபாசிமுனிவர் சொல்லத் தொடங்கினர்.

தீர்த்தவளம், க்ஷேத்ரவளம், மூர்த்திவளம் என்னும் மூன்றுவளங்களும் தழைக்கப்பெற்று மோக்ஷ சாம்ப்ராஜ்யத்தையளிக்கவல்ல வாரணாசி என்னும் காசிமா க்ஷேத்திரத்தில் விசுவப்பிரமகுலத்தில் அவதரித்து, பிரத்னஸரிஷியின் கோத்திரத்தை வளர்ப்பவரும், பூர்வதவப்பேற்றால் மெய்ஞ்ஞானம் நிரம்பப்பெற்று, கற்கவேண்டிய வேதாகம கலைகள் முற்றுங்கற்று ஐயம், அறியாமை, விபரீதம் என்னும் முக்குற்றங்களும் நீங்கத் தேர்ந்தவரும், சாக்ஷாத் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களில் நிலைத்த உள்ளத்தை யுடையவரும், சதாநந்த பக்தர் என்னும் திருநாமம் பூண்டவருமான சிற்பாச்சாரிய ரொருவர் இருந்தார். அவர், எத்தன்மையான வேலையிலிருந்தாலும் எப்படிப்பட்ட கஷ்டங்களை அநுபவிக்க நேர்ந்தாலும், மனத்தளர்ச்சி ஒரு சிறிதும் இல்லாமல் எக்காலத்தும், முதற்பெருங் கடவுளாய் ஜோதிரூபமாய் விளங்கும் ஐம்முகப் பெருமானைத் தமது இருதயகமலத்திற்கொண்டு சிந்தித்து வந்தமையாலும், இவரது அன்பின் விசேஷத்தைக்கண்டு சிவபெருமான், இவருடைய திருவுள்ளத்தைத் தமக்குகந்த திருக்கோயிலாகக் கொண்டு, ஆங்கெழுந்தருளிச் சதா ஜொலித்துக்கொண்டிருந்தமையாலும், எந்தக்காலத்திலும் அவரது முகம், அகக்குறிப்பை வெளியிடுவதுபோல, ஆநந்தநிலையை வெளிப்படுத்தி வந்தமையாலும், அவர்க்குச் சதாநந்தர் என்றும் காரணப்பெயரே இடுகுறியாய் வழங்கப்பட்டு வந்தது. அவர், உலகவியாபாரத்தில் மனத்துறவு பூண்டிருந்தாராயினும், "ஒருகுலத்திற் பிறந்த ஆண்மகனொருவன், தான்பிறந்து தன்குலம்கெட்டது என்னும் பழிச்சொல் வாராவகை, அதனபிவிர்த்திக்கேதுவான நலங்களனைத்தையுஞ் செய்து அதனைத்தாங்கவல்லனுகாதுபோவானாயின் அவன் ஆண்மகனுய்ப் பிறந்தும் அபலனுகின்றான்" என்னும் முதுரை வாக்கியத்தைத்தழுவி கிருகாச்சிரமத்தை மேற்கொண்டு அதற்குரித்தாகிய கன்னிகையொருத்தியைத் தமது மாபிலேயே தமக்குத் தன்மபத்தினியாக விதிப்படி மணக்கலானர். இவ்வுத்தமி தன்னைப் பார்ப்பவர் 'இவள் கருணையில் பார்வதியோ! அறிவில் சரஸ்வதியோ! அழகில்மஹாலட்சுமியோ!" என்று கொண்டாடும்படி, வருவாய்க்குத்

உ

ஸ்ரீமத் விராட்விஸ்வப் பிரஹ்மணே நமஃ

# விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-1. ஆனந்தஹு ஆவணிமீ 1914ஹு ஆகஸ்டுமீ இதழ்-11.

## மெய்ஞ்ஞான தீபம்.

### நூற்களின் நுணுக்கம்.

சில நூல்களை உருசிபார்க்க வேண்டுமென்றும், மற்றுஞ் சில நூல்களை விழுங்க வேண்டுமென்றும், இன்னும் சில நூல்களை நன்றாய் மென்றுதின்று ஜீரணிக்கச்செய்ய வேண்டுமென்றும் ஆன்றோர்புகன்றுளார். இதனால், சில நூல்களின் சிற்சில பகுதிகளை நமதுகவனத்திற் குரியனவென்றும், சில நூல்களை முற்றிலும் கற்றுணரவேண்டுமென்றும், இன்னும் சிலமுக்கிய நூல்களைப் பன்முறையும் படித்து மநநம் செய்ய வேண்டுமென்றும் பெறப்படுவனவாம்.

### நல்லோரிணக்கம்.

ஒருவரிடத்துள்ள நற்குண நற்செய்கைகள் அவையுள்ளவாரது மனக்கண்களுக்கு மட்டுமே புலப்படுகின்றன. அக்குணங்களைப் பகுத்துணர்ந்து, பின்பற்றுபவர்களும், புகழ்பவர்களும் சிலரே யாவர். அவரிடத்துள்ள தீக்குணங்களைமாத்திரம் தேடிப்பிடிப்பவர்களும், வாய்ப்பறை சாற்றுபவர்களும், சாற்றுவிப்பவர்களும், அத்தீக்குணங்களைத் தம்மை யறியாமலே அடைந்துவிடுகின்றனர். முத்துக்குளிப்போன் முத்துச்சிப்பிகளையே ஆய்ந்தெடுப்பன்; கிளிஞ்சல்களை விரும்பான். நற்குணங்களை ஆய்பவருக்கு நற்குணங்களே கிட்டும். தீக்குணங்களைத் தேடுகின்றவர்கட்குத் தீக்குணங்களே கிடைக்கும். இதனுற்றான் தீக்குணம் தொத்து வியாதி போல்வதெனக் கூறப்படுகின்றது. நற்குணங்கள் நிறைந்தவரது (நல்லோரது) இணக்கமோ இகபரசுகங்களைத் தருவனவாம்.

### நாவடக்கம்.

மனோவாக்கு காயங்களால் ஒருவர் மற்றொருவர்க்கு இடர்செய்வது கூடாது. இவற்றுள் மனத்தால்புரியும் இடரும் காயத்தால்புரியும் இடரும் அவ்விருவரையுமே பாதிப்பதாம். வாக்கினுல் புரியும் இடரோ அவற்றிலும்கொடியதாம். அதுமௌனத்தினாலேனும், இரட்டுறமொழிதலாலேனும், உண்மையை ஒளித்துப்பொய்ம்மையை விரித்தலாலும் புரியும் இடராம். வாக்கினுல்புரியும் இடர் அவ்விருவரையும் பாதிப்பதோடு நில்லாது காண்போர் கேட்போராகிய ஒவ்வொருவருள்ளத்தையும் வாட்டாநிற்கும். இதனுற்றான் "யாகாவாராயினும் நாகாக்க" என்று நாவடக்கத்தை நாயனர் வற்புறுத்தினர்.

### குணங்கண்டிரங்கல்.

விரிந்த அறிவுடையவர் தம்முடைய குணகுணங்களை மனச்சாட்சியினுதவியால் பகுத்துணர்ந்து, அவற்றுள் தமது நற்குணங்களைவிடத் தம்மினும்பெரியார் எத்துணை அதிகம்பெற்றிருக்கிறாரென்பதை யறிந்து பெருமூச்செறிந்து, நமது நற்குணங்கள் அன்னவர் நற்குணங்கட்கு ஒப்பாகாவே, யென்று கருத்தழிந்து நிற்பர். இழிகுணமுடையாரோ, நம்முடைய குணங்களே மிகச் சிறந்தனவெனக் கருதி, இறுமாப்பெய்தி, பிறர்க்கு அறிவுறுத்தப்புகுவார். இவ்விருவரையும்முறையே பாரம்நிறைந்த தராசுத்தட்டுக்கும், அதுகுறைந்த தராசுத்தட்டுக்கும் ஒப்பாகக் கூறலாம்.

# கைத்தொழிலே நம்மேம்பாட்டிற்கு முக்கியகாரணம்.

## 5. பொன்வேலை.

பொன், தங்கங்களை முக்கியசாதனமாகக் கொண்டுசெய்யப்படுந் தொழில்கள் பொன்வேலையெனப்படும். அந்த வேலையானது உலோகத்தொழில்களில் ஒன்றாகக் கருதப்பட்டபோதிலும் அது பூர்வத்திலேயே நம்மவரில் ஒருவகுப்பாரின் தனித்தொழிலாக ஏற்பட்டிருப்பதை முன்னரே கூறியுள்ளோம். அதனோடு அவ்வேலையைக் கையாடுபவர்களின் நிலைமையைப் பற்றியும், அத்தொழிலின் பிரிவினைகள் பலவாக விரிந்திருப்பதைப் பற்றியும், அப்பணிகளில் நமது கவனத்திற்குரிய பல விஷயங்கள் மலிந்துகிடப்பதைப்பற்றியும், சற்றுகவனிப்போம் 1901-வருடத்திய சென்ஸஸ் என்னும் ஜனக்கணிதையின்படி இவ்விராஜதானியில் பொன்வேலை செய்பவர்களின் தொகை 99,991 எனவும், அதில் 3730 நபர்கள் பெண்பாலரெனவும் கணக்கிடப்பட்டிருந்தன. 1911-ஞூத்திய ஜனக்கணிதையில் பொன்வேலை செய்பவர்களின் தொகை 1,15,566ஆக விர்த்தியாகியிருக்கிறதென வறிகிறோம். இத்தொகையில் 6886ஸ்திரீகள்பொன்வேலையைக்கையாடிவருவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. எனவே, சென்ற 10-வருடங்களுக்குள் பொன் வேலை செய்பவர்களின் சங்கியை நூற்றுக்குப் பதினாறு விழுக்காடு விர்த்திபெற்றிருக்கிறதென்றும், இன்னும் சில வருடங்களில் அதிகவிர்த்திக் கிடமுண்டென்றும், பெறப்படுகின்றது. இவ்விதபெருக்கத்திற்கு பொன்வேலையின் கவர்ச்சியும் ஊதியமும் ஒருபுறமிருக்க, நம்மனோர்கள் தங்கட்குரிய மற்றபூர்வீக வேலைகளை நாளடைவில்தொலைத்துவிட்டு தங்கள் சிறுவர்களை பொன்வேலையையே அப்பியசிக்கச்செய்துவரும் தீர்ப்பழக்கமும் ஒரு முக்கியகாரணமாகும். இஃதெங்கனமாகினும் மாகுக. காலதேசத்திற் கேற்றவாறு இணக்கிக்கொள்கிற இந்த லாபகரமானவும் லோகோபகாரமானவுமான இப்பொன் வேலைகளிலுள்ள குற்றங்களைக்கடிந்து, நவீனநாகரீக முறைகளைத் தேர்ந்து அத்தொழிலை நடாத்தும் நாணயத்தால் பொது ஜனாதரவைப் பெற்று மேன்மேலும் விர்த்திக்குக் கொண்டுவரும் வழிகளை ஆராய்ந்து அவ்வழி நிற்றல் ஆவசியகமன்றோ? ஆகையின் அத்தொழில்களின் பல பிரிவினைகளையும், அவற்றின் பூர்வ, மத்திய, தற்கால ஸ்திதிகளையும் இனி நன்குகவனிப்பாம்.

பொன்வேலை ஒன்பது பிரிவினைகளையுடையதாம். அவைகளை 'மட்டசுத்தவேலை' 'குந்தனவேலை' 'கட்டிடவேலை' 'நகாசுவேலை' 'மின்னக்காசுவேலை' 'பிடிப்போகரைவேலை' 'கசைவேலை' 'வர்ணத்தகட்டுவேலை' 'முலாம்வேலை' எனப் பிரிக்கப்படும். இவற்றுள் மட்டசுத்தவேலையென்பது பொன், தங்கம், வெள்ளியாகிய உலோகங்களை உருக்கி, கட்டிவிட்டுப்பின் அடித்து கடகம், கங்கணம், காப்பு, ஒட்டியாணம், தண்டை, சிலம்புமுதலிய ஆபரணங்களைச் செய்து முடித்தலாகும். குந்தனவேலை, பொன், தங்க முதலியவற்றில் 'கூண்டுகள்' அல்லது 'ஒட்டமிச்சுகள்' செய்து அவற்றுள் நானாவித இரத்தினங்களைச் சித்திராலங்காரமாய் அமைத்து, இடையே வெகு மெல்லிய தங்கத் தகடுகளைச் சலாகுகளி னுதவியால் அழுத்தி அக்கற்களுக்குப் பிடிப்பையும், உறுதியையும் உண்டு செய்வதாகும். கட்டிடவேலையும் இரத்தினங்களா லமைந்ததெனினும் அக்கற்கள் குந்தனவேலையி லுபயோகிக்கும் அச்சத்தங்கத்தி னுதவியின்றியே கெட்டியான தங்கத்தைத்துளைத்து பதிப்பிக்கப்படுகின்றன. நகாசுத் தொழிலென்பது பொன், தங்கம் முதலிய தகடுகளின் வெளிப்புறத்தில் மேலெழும் சித்திரங்களை அமைத்து,



குண்டலம், ஜடையலங்காரம், ஜடைபில்லை முதலிய ஆபரணங்களைச் செய்யும் பணியாகும். மின்னக்காச்சுவேலை யாதெனின், குந்தனவேலைக்காகும் ஒம்முச்சுகளில் வைத்திழைக்கப்படும் இரத்தினங்களுக்குப் பதிலாக கூட்டுச் சேர்மான வழியில் பற்பலநிற பீங்கான் தூள்களை ஒம்முச்சுகளின் கூண்டுகளிலிட்டு அத்தூள்கள் உருகி கற்கள் ரூபமாகும் வரையில் நெருப்பில் வைத்து ஊதி வெகு பக்குவமாய் எடுத்து ஆபரணங்களாக்குவதேயாம். பிடிப்போகரைவேலையென சொல்லப்படும் 'எங்கிரேவிங்' வேலை நவீனத்தொழிலென அறியாமையால் கருதப்பட்டாலும், அத்தொழில்நம்நாட்டில் பூர்வந்தொடங்கி கையாளப்பட்டு வந்ததென்பதற்குஆதாரமுளது. மதாணிப்பதக்கம், மகரிமுதலிய இரத்தினாபரணங்களுக்கு எத்தொழிலால் 'பின் அந்தம்' நமது முன்னோர்கள் செதுக்கிவந்தார்களோ அத்தொழிலையே இங்கு பிடிப்போகரை வேலையெனக் கொள்ளல்வேண்டும். கசைவேலை யெனப்படுவது தற்காலம் நம் கண்முன் நசித்துவரும் வேலைகளில் ஒன்றாகும். பொன், வெள்ளி முதலாயதைக் கொண்டு மெல்லிய கம்பியிழுத்து அவற்றைச் சிலந்தியின் கூண்டுகள் போல நெருங்கப் பிணைத்து ஜடைபில்லை, திருகுப்பூ, தாழம்பூ முதலிய ஆபரணங்களைக் கஷ்டமின்றிச் செய்வதே கசைவேலை யெனப்படும். குந்தனவேலைகளி லமைக்கப்படும் இரத்தினங்களின் வர்ணங்களை அதிகரிக்கச் செய்வதற்கு பூர்ப்பையும், ஜொலிப்பையும் உண்டு செய்வதற்கென மெல்லிய வெள்ளித்தகடுகளிலும், பொன் தகடுகளிலும் பற்பல வர்ணங்களைத் தோய்ப்புமுறையில் உண்டுசெய்வது வர்ணத்தகட்டு வேலையெனப்படும். குந்தனவேலைக்கு இன்றியமையாத தங்கரேக்குத் தகடுகளை அடிக்கும் தொழிலும் மேற்குறித்த வேலையிலடங்கும். முலாம்வேலையென்பது உலோகத்தை மேற்பூச்சுகளால் மற்றொரு உலோகமாக பேதித்துக் காட்டுவது. எனவே, இத்தொழில் பொன்வேலையில் விசேஷமாகச் சம்பந்தப்பட் டிருக்கிறதெனச் சொல்வதற் கிடமில்லை.

நம்நாட்டில் பல ஊர்களிலும் மேற்கூறிய தொழில்கள் சிற்சில நடைபெறுகின்றன. சில பிரதான நகரங்களில் இத்தொழில்கள் யாவும் ஒருங்கே செய்யப்பட்டு வருகின்றன. ஆகையின் யாதேனும் ஒரு வேலையின் பிரக்கியாதியை ஓர் ஊராருக்கே உரிமைப் படுத்துவது பொருந்தாதெனினும், தொழில் சாமர்த்தியம் வாய்ந்துள்ள நம்மனோர் வசிக்குமிடங்களைக் குறிப்பிடுவது இங்கு அவசியமாகலாம். பொற்பணிக்கு மட்டசுத்தவேலையே மூலாதாரத்தொழிலாயிருப்பதால் அத்தொழிலை எவ்வூர்க் கம்மியருமே நன்குணர்ந் திருப்பர். குந்தனவேலையின் மர்மங்களையும், தொழின்முறையின் தந்திரங்களையும், நாகை, திருச்சிக்கம்மியர் பலநூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தனர். கட்டிடவேலைக்குத் தாயகம் இச்சென்னைநகரன்றி மற்றொன்றில்லை. நகாசு வேலைக்கு பல ஊர்களைச் சுட்டிக் கூறுவது எளிதெனினும், தஞ்சாவூரையும், காரைக்குடியையும் முற்படக் கூறி கௌரவப்படுத்த வேண்டியதாயிருக்கின்றது. மின்னக்காச்சுவேலை வட இந்தியாவிலிருந்து இங்குதோன்றியபோதிலும் அத்தொழிலைநமதுவம்ஸத்தினரல்லாத மற்றவர்களும் நடாத்தி வந்தனரென யாமறிகிறோம். 'எங்கிரேவிங்' என்னும் பிடிப்போகரை வேலைக்குச் சென்னையும், புதுவையும், திருச்சியும், குறிப்பிடற்பாலன. கசைவேலைக்கு திருச்சினாப்பள்ளி திறமை வாய்ந்துளது. வர்ணத்தகடு, தங்கத்தகடு முதலியவைகளை உற்பத்தி செய்வதில் தஞ்சையும், சென்னையும், திருச்சியும் பிரபலமுற் றிருக்கின்றன. இவ்வூர்களில் உற்பத்தியாகும் பொன், வெள்ளி சாமான்கள் அந்நியநாட்டிற்கு அனுப்பப்படுவதால் அந்நாட்டார்களின் நன் மதிப்பையும் விசேஷமாக இந்நாட்டுக் கம்மியர் அடைந்திருக்கின்றனர். பிரபலமான தேவஸ்தானங்களின் பொக்கிஷத்தில் அடு

க்கடுக்காய் வைக்கப்பட்டிருக்கும் பூர்வகாலத் திருவாபரணங்களைப் பார்வையிடும் ஐரோப்பிய தேசாந்திரிகள் அவைகளைக் கண்ணிமையா வண்ணம் கவனித்து, வேலைகளின் நுட்பத்தையும், கற்பனை சாமர்த்தியங்களையும் வியந்து பேசிவருவதோடும் புகைப்படம், சித்திரம் முதலியவைகளினுதவியால் அவைகளை தங்கள் சுதேசப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தியும்,விஸ்தரித்தெழுதியும், நம்மனோர்களின் சாமர்த்தியங்களை தம் நாட்டார் அறிந்துகொள்ளும் வண்ணம் பலவழியிலும் பிரசித்தப்படுத்தியும், படுத்திக்கொண்டும் வருகின்றனர். இதனோடும், லண்டன் நகரத்து சவுத் கென்சிங்டன் மியூசியம் என்று சொல்லப்படுகிற உலகப்பிரசித்தி பெற்ற கண்காட்சி ஸ்தானத்தில் இந்தியர்களின் ஆபரணங்களைக்காட்டும் தனித்ததோர் இடமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறே நாகரீகம் வாய்ந்த மற்ற ஐரோப்பியகண்காட்சி ஸ்தலங்களிலும் நமது ஆபரணங்களை அணி வகுத்திருக்கும் இடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாபரணங்களைக் கண்ணுறும் அன்னியர் நம் நாட்டுக்கம்மியரின் கடினஉழைப்பையும், தொழிற்சம்பந்தத்தில் காட்டும் பொறுமையையும், கற்பனை சமார்த்தியங்களையும், முக்கியமாய், யாளி, கண்டபேரண்டம் முதலிய கற்பித மிருகங்களை இடமறிந்து உபயோகித்திருப்பதையும் பன்முறை வியந்து கொண்டாடுகின்றனர். வேறுசில மேற்றிசையார்,பரீட்சார்த்தமாக நம் நாட்டுக் கம்மியர்களிடம் காட்டும் கடினமான ஐரோப்பிய நகைகளை ஐரோப்பிய தொழிலாளிகளைக் காட்டிலும், சீக்கிரமாகவும், சுலபமாகவும் செய்யக்கூடிய சக்திவாய்ந்தவர்களென மெச்சியும், யோக்கியதாபத்திரம் அளித்து மிருக்கின்றனர். இவ்வித நன் மதிப்பு நமது பூர்வகால வேலைகளைக் கண்ணுறுவதால் வளர்ந்ததேயன்றி நவீன மாதிரிகளை அனுசரித்த அற்பநகைகளைச் செய்யும் வேலைப்பாட்டிற்கும் தொழில் பிரபல்யத்திற்கு மன்று. ஆயினும் மேலே குறிப்பிடப்பட்ட பூர்வகால ஆபரண வேலைகள் தற்காலம் நசித்து விட்டனவென்றே சொல்லவேண்டும். கிரீடம், மேகலாபரணம், கடகம்,கங்கணம், கேயூரம், புஜகிருதுகள், சிலம்புகள், சதங்கை, கிண்கிணிமுதலிய ஆபரணங்களைப் பூர்வகால வேலைகளைப்போல் தற்காலம் செய்யக்கூடிய கம்மியர் நூற்றுக்கொருவர் உளரென்பதுஉபசாரவார்த்தையாகவே முடியும். மத்தியகால ஆபரணங்களான நத்து, புலாக்கு, சந்திரமுருகு, பஞ்சகலசவாளி, மாட்டல், கிள்ளட்டிகை, சிங்கமுகத்தோடா, கட்டாரிவளையல், கம்பிசருள் கொலுசு, பாடகம் முதலியவைகள் பொது ஜனங்களாலும், நம்மனோர் போதனையாலும் இகழப்பட்டமையால் அவ்வேலைகளும் தற்காலம் நம்மனோர் அரைகுறையாகவே செய்யும் சக்திவாய்ந்தவர்களாக யிருக்கிறார்கள். நவீன மாதிரிகளை அனுசரித்த நாகரபில்லை, கொள்ளுக்காய் அட்டிகை, சவரன் மாலைகள், அவல்வளையல்கள், ஒட்டியாணம் முதலிய வேலைகளே இப்பொழுது மும்முரமாக நடந்து வருகின்றன. பழயமாதிரி நகைகளைச் செய்யும் வழிதெரியாது அவைகளைப் பழித்துப் பேசுவதும், கிராக்கிகளின் மனோ உற்சாகத்தைமழுப்பிவிடுவதும் நம்மனோர் தற்காலம் கையாடும் தந்திரங்களாகும். இவையன்றி பூர்வ வேலைகள் நசித்ததற்கு சில முக்கிய காரணங்களும் உண்டு. இந்தியநாகரீகத்துடன் ஐரோப்பிய நாகரீகம் முரண்படத் தாக்குவதும், இந்நாட்டில் தெய்வபக்தியும், ஈஸ்வரவழிபாடும் குன்றிவருவதும், பெண்கல்வியும், ஆசாரசிருத்தம் ஆங்காங்கு அனுஷ்டானத்திற்கு வந்துகொண்டிருப்பதுமே ஆபரணத்தொழில்கள் நசிப்பதற்கு முக்கிய காரணங்களாக விருக்கின்றன. மேற்கூறிய காரணங்களால் பொன்வேலைக்கு அரிஷ்டம் நேர்ந்துவிடக் கூடுமென நினைப்பதற் கில்லை. ஏனெனில் பொன்னுள்ள வரையில் ஆபரணங்கள் செய்யப்பட்டு அக்கால நாகரீகத்திற் கேற்றவாறு அணியப்படுமென்பதற் கோரையப்பாடு மில்லை.

நிற்க, நம் நாட்டுக்கம்மியர் பொற்பணியில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்களென்பதற்குச் சந்தேகமில்லை. அன்னியநாட்டுக் கம்மியருக்கு குந்தனவேலையென்பதே தெரியாது. அவ்வேலையில் தென்னாட்டு நம்மனோர்களுடன் போட்டிபோட எவரும் முன்வரார். கட்டிடவேலையிலும் நம்மனோர் கைதேர்ந்தவர்களாதலால் அவர்களைக்கொண்டே சென்னை, பெங்களூர்முதலிய ஊர்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஐரோப்பிய நகை ஷாப்புகளில் அவ்வேலைகள் அருமையாகச் செய்யப்பட்டு வருகின்றன. நகாசுத்தொழிலில் நம்மனோர் சாமர்த்தியம் காட்டிவந்தாலும், அவர்களின் கைவேலை மேற்றிசையார்களின் வேலைகளுடன் ஒத்திட்டுப்பார்ப்பது கூடாமையாகிறது. நகாசுத்தொழிலால் பெரியகட்டிட வேலைகளையோ,பல்வகைரூபங்களையோகண்ணுக்குத் தோன்றும்விதமாய் தகடுகளில் நகாசு இடுவதில் நம்மனோர் மிகவும் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். நகாசுத்தொழில் செய்வோர் இனி இச்சக்தியை, சித்திரம் எழுதும் பழக்கத்தின் மிகுதியால் பெறுவது அத்தியாவசியகம்.குங்கலியம், செங்கல்மா முதலிய கூட்டுச் சேர்மானத்தால் ஆகும் அரக்குகளுக்குப் பதிலாக, மேற்றிசையாரைப்போன்று, ஆஸ்பால்ட் என்னும் தார்க்கட்டிகளை அரக்குப் பலகைகளாகச்செய்துகொள்வது உண்மையான சிக்கனமாகலாம். தேவாலயங்களுக்கு வேண்டிய ஆபரணங்களுக்கு மின்னக்காச்சுவேலை மிகவும் பயன்தரும். பெரிய பதக்கங்கள் மகரிகள் முதலியவைகளை இரத்தினங்களின் உதவியின்றிய செய்துவிடலாம். போலிசிகப்புக்கற்கள் இந்நாட்டில் தற்காலம் மலியவே இவ்வேலை இங்கு தலையெடுக்குமென்று எண்ணுவது வீண். பிடிப்போகரை வேலையை விர்த்திக்குக் கொண்டுவருவது நம்மனோர்களின் கடமையேயாம். இத்தொழிற்கு முக்கியமாய் வேண்டும் ஆயுதங்களின் பேதாபேதங்களைநன்குணர்ந்து கையாடும்விதங்களைக் கற்றுணரவேண்டும். கசைவேலையாலாகிய ஆபரணங்கள் மனதிற்கு இன்பந்தருவதால் அவ்வேலையை நசிக்கவிடாமற் செய்வதும் நம்மனோர்களின் முக்கிய கடமைகளில் ஒன்று. இரத்தினங்கள் உள்ளவரையில் வர்ணத்தகடுகளின் ஆவசியகம் குறையாதாகையால் அத்தகடுகளைச் சுலபவழியில் செய்துகொள்ளும் மார்க்கங்களைத் தெரிந்துகொள்ளல் வேண்டும். இத்தகடுகள் தற்காலம்கொடுக்காபுளி, பலாசாயன உப்புக்களைக்கொதிக்கவைத்து நனைத்தெடுப்பதே தொன்றுதொட்டு கையாளப்பட்டுவரும் முறையாகும். இனி நவீன முறைகள் உளவாயின் அவைகளைப் பின்பற்றுவதவசியம். கூர்நுனிக் கோபுரம் போன்ற கரியடுப்பில் நரிவால் மயிர்களைச் சிட்டிகை சிட்டிகையாய்ப் போட்டு அதினின்று எழும் புகையில் மெருகிட்ட தங்கத்தகடுகளைக் காட்டி வேண்டியவர்ணம் உண்டாகும் வரையில் பிடித்திருப்பது ஓர் சிறந்த முறையெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இம்முறையை நம்மனோர் ஆராய்ச்சிசெய்து தம் அநுபவத்தை வெளியிடுவது நன்று. முலாம்வேலைகள் முற்காலத்தில் முக்கியமாய்வெண்ணெய்ப்பூச்சுகளால் செயயப்பட்டுவந்தன. தற்காலத்திலோ ரசாயனமுறைகளாலும், மின்சாரசக்தியின் உதவியாலும்,செய்யப்படுகின்றன. இவைகளன்றி, பொடிவகைகளாலும் முலாம் பூசப்படுகின்றது. இவ்வழிகளையெல்லாம் வேண்டிய அளவு தெரிந்திருப்பது நன்மைபயக்குமாதலால் அவைகளை இகழாமல் தெரிந்துகொள்வதுடன் தங்க, வெள்ளி சன்னங்களை 'ஆசிட்' களினுதவியால் சேதமின்றி பிரித்தெடுக்கும் வழிகளைக் காலதாமதமின்றி நம்மனோர் தெரிந்துகொள்வதவசியம். பொடிகளின் கூட்டுமுறைகளையும், விளக்கில் பற்றவைக்கும்வழிகளையும் கற்றுத் தேரவேண்டும். தகட்டாலைகளின் உதவியைப் பெரிதும்பெறவேண்டும். சிறிய லேத் என்னும் கடைச்சல் பட்டரைகளை உபயோகித்து அவைகளினுதவியால் 'சுத்து', மறுசுத்து முதலியவைகளைச் செய்யும் மார்க்கத்தையும், கைகெடியாரங்களுடைய பின்புறத்தில் தாமரைப்

பூப்போல் கிறல் (முல்லங்கி) பிடிக்கும் வேலை செய்யப் பழகவேண்டும். இவ்வித கடைச்சல்பட்டரைகளின் விலை ரூ.300க்கு அதிகப்படாது. இத்தகைய பழைய பட்டரைகள் சமீபத்தில் ரூ. 75-க்கு ஏலத்தில் விட்டப்பட்டதை யாமறிவோம்.

பொன்வேலையைப் பிரபலமாகச் செய்யவேண்டின் இயந்திரங்களி னுதவியும், பெருத்த மூலதனமும்.நாணயவரிசையின் பெருக்கமும் வேண்டும். ஆகையின் இப்பணியை கூட்டுச்சேர்ந்தாலன்றி ஒருவரே ஏகதேசமாகச் செய்வது கூடாது. கூட்டுச்சேரலா மென்றாலோ, நம்மனோர்களின் திரவிய ஹீனமும், கல்விக்குறைவும், சுயநலப்பிரியமும் நம் இக சத்துருக்களாயிருந்து வருகின்றன. இவ்வித பிரதிபந்தங்களினின்றும் நம்மனோர் விடுபடுங்காலமே பொன்வேலை சீர்ப்படுங்காலமெனவும்,கூட்டுக் கம்பெனிகள் ஸ்தாபனமாகுங் காலமே நற்காலமெனவும் திட்டமாய்ச் சொல்லுவோம். அக்காலத்தை எதிர்பார்த்து ஏங்கி வாடாமல் நம்மனோர் தங்களால்ஏகதேசத்தில் செய்யக்கூடிய சில தொழில்களையேனும் சீர்ப்படுத்தி, சகாயமான சிறிய இயந்திரங்களி னுதவியால் தொழில்களைச் செவ்வனே செய்து செல்வமுறும் வழிகளைத் தேடல்வேண்டும். வெளிநாட்டிலிருந்துவரும் பொத்தான்கள், ஊசிகள், கிளிப்ஸ் என்னும் விற்கள் முதலிய ஒவ்வோர் சிறியதொழில்களைச்செய்வதிலும் பெருத்தலாபமுண்டாகலாம். சிலந்திகளின் நூற்களினும் மெல்லியகம்பிகளை யிழுப்பதற்கு மேற்றிசையரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் வைரக்கம்பிச் சட்டங்களை உபயோகித்து லாபம்பெறலாம். பொடிகளின் உதவியின்றி மேற்றிசையார் செய்தனுப்பும் மாதிரி கெடியார சங்கிலிகளையும், சரடுகளையும், கொலுசுகளையும் செய்யப்பழகி அவைகளைப் பழக்கத்திற்குக் கொண்டுவருவ தவசியம். பொதுஜனங்கள் தற்காலம் பொடிகள் சம்பந்தத்தாலாகும் நகைகளை வெறுத்து வருகிறார்கள். மங்களூர் மாதிரி கைவளையல்களையும், அவல் வளையல்களையுஞ் செய்யத் தெரிந்துகொள்வதால் அதிக கூலிக்கட்டணம் பெறக்கூடும். பூணு கொலுசுகளைப் பிணைக்கத் தெரிந்துகொள்வதாலும், அவுரங்கபாத் தோடாவைச் செய்யத் தெரிந்துகொள்வதாலும் விசேஷமான லாபங்கிட்டும். மலையாளதேசத்து அச்சக்கூர் வேலையை அப்பியசிப்பதால் குறைந்த இடையில் பற்பல ஆபரணங்களைச்செய்து பொது ஜனங்களைப் பிரியப்படுத்தலாம். கைமோதிரங்களை அச்சுகளில் வைத்து அடித்து, பின்பு வளைத்து பற்றவைப்பதை விட்டு மண்ணின் உதவிகொண்டு பெட்டியிட்டு வார்ப்பதால் விசேஷ லாபம் உண்டாகலாம். பொன் வேலையை லாபகரமாக நடத்தவேண்டுமானால்முக்கியமாய் நாணயவரிசைகள்வேண்டும். நாணயவரிசையைப்பின்பற்றிவிட்டால்,தொழிலை மிகவும் உன்னதமாக நடத்தும் விதம் தானேயமையும். அவ்வழிகள் சிலவற்றை மேலே இயன்ற அளவு சுருக்கிச் சொல்லியிருக்கிறோம். அவைகளை நம்மனோர் நன்குணர்ந்து, நாணயத்தைத் தேடி, பொதுஜனங்களின் நன்மதிப்பைப் பெற்றால், நம்நாட்டுப் பணிகள் சீர்ப்படுவதோடும், நம்மனோர்க்கு செல்வம் மிகும். மற்றும் பொதுஜனங்களின் ஐசுவரியம் சிதறுண்டு போகாமல் அவர்களின் குடும்ப க்ஷேமத்திற்கும், பாதுகாப்பிற்கும் இன்றியமையாதசாதனமாகுமென்பது திண்ணம்.

பத்திரிகாசிரியர்.



(306-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## நங்குலநேயர்களுக்கு விஞ்ஞாபனம்.

சாஸ்திரோக்தமான கர்மங்களைச் செய்யாவிட்டால் குலம் நாசமடையும்; குலம் நாசமடைந்தால் அநாதிகளான குலதர்மங்கள் நாசமடைகின்றன; குலதர்மம் நாசமடைந்தால் சகலத்தையும் அனாசாரம் வியாபிக்கும்; அனாசாரத்தால் ஸ்திரீகள் கெடுகிறார்கள்; ஸ்திரீகள் கெட்டால் அதிலிருந்தும் ஜாதி ப்ருஷ்டரான சங்கரஜாதிகளுண்டாகும்; இந்த சங்கரங்களால் ஒன்றுசேருகிறதற் கிடமில்லாமல் குலத்தைக்கெடுக்கிறதற்கும் குலமானதுநரகத்தையடைவதற்குமிடமாகும், இவர்களுடைய பிதுர்க்கள் பிண்டோதககிரியைகளை இழந்துபூமியில்விழுகிறார்கள். ஜாதிசேர்க்கைக்குக்காரணமாகியகுலத்தைக்கெடுத்தவர்களுடைய தோஷங்களாலே அநாதியான குலதர்மங்களும் நாசமடையும். நாசமடைந்த குலதர்மங்களையுடைய மனிதர் நாசத்தை யடைவார்கள்; என்றும் சொல்லப்பட் டிருக்கிறது. இதனால் முக்கியமான குலதர்மத்தைக் கைவிடலாகாதென்பதேயாம் இது நிற்க.

மேலும் ஆரியமதகோட் பாட்டிற்கும், சுருதிஸ்மிருதி முதலியவைகளுக்கும் விரோதமாக நம்மவர்களில் சிலர் செய்யப்படும் கன்னசமஸ்காரமானது கவர்ன்மெண்டாராலும் நிந்திக்கப்படத் தக்கதாயிருக்கிறது. அதாவது இரண்டு வயசுக்குள்பட்ட குழந்தை இறந்துபோகுமானால் கன்னசமஸ்கார மென்று அக்குழந்தையை பூமியைத் தோண்டி அதில் மந்திரமில்லாமல் புதைக்கவேண்டு மென்றும், இரண்டு வயசுக்கு மேற்பட்டு மூன்றுவயசுக்குள்ளாக இறந்த குழந்தையை மூன்று காயத்திரியினால் தகனமும், மூன்றுவயசுக்கு மேற்பட்டு இறந்த குழந்தையை தகனசமஸ்கார மென்று அக்கினியினா லெரித்து சாம்பலாக்கி அஸ்திசஞ்சயனமும், ஐந்துவயசான குழந்தை இறந்தா லதற்கு தகனமும் சஞ்சயனமும் சிராத்தமும் செய்யவேண்டு மென்று கூறியிருக்கின்றன. வசனம்.

ஊநத்விவர் ஷாந்நிக நேச்ச பூமௌ<br>
மந்தரை ஸ்திரீ பிர்வ்யாஹ்ற ருதிர்பிபரோதம்<br>
ஊர்த்வம் த்ரிவர் ஷாத்தஹ நோதகாந்து<br>
சிராத்தாதி கம்பஞ்ச மதப்பரஸ் தாத்.

இந்தப்பிரகாரம் இரண்டு வயசுக்கு மேற்பட்ட குழந்தை இறந்து போனால் அக்குழைந்தையை அக்கினி சமஸ்காரந் தான் செய்யவேண்டு மென்று சுருதிஸ்மிருதி புராணாதிகளில் விதித்திருக்கும் போது இவ்விதிகளுக்கு மாறுபாடாகசிலர் அவர்கள் குடும்பங்களி லிறந்த யாவர்களையும் பூமியில் புதைக்கிறார்கள். இதினால் முன் கூறப்பட்டிருக்கும் தோஷங்களுக்குப் பாத்தியப்படுகிறார்க ளென்பதை நான் சொல்லவேண்டிய தில்லை.

மேலும் கன்னசமஸ்காரமானது ஆரிய மதககோட்பாட்டிற்கு விரோதமா யிருக்கிறதென்று சொல்லப்படும் கவர்ன்மெண்டாருடைய வாக்கியத்தை நாம் பார்த்து கவனம் செலுத்தியாவது நடக்கவேண்டாமா?

ஷை விஷயத்திற்காக நாம் கன்னசமஸ்காரம் கூடாதென்றும், தகனமென்ற அக்கினிசமஸ்காரமே செய்யவேண்டு மென்றும், அனேக சுருதிஸ்மிருதி புராணங்களிலிருந்தும் வசனங்களைத் தெரிந்தெடுத்து கன்னசமஸ்கார கண்டனமென வோர்வியாசமெழுதி பிர்மஸ்ரீ நண்பர் கொ. கன்னியப்ப ஆச்சார்ய ரவர்களுக்கு அனுப்புவதாய் வாக்களித்திருக்கின்றேன் அதை சீக்கிரம் அனுப்பப்படும்.

இன்னமு மனேக அனுஷ்டானங்கள் ஸ்மிருதிகளுக்கு விரோதமாக நம்மவர்களால் ஆசரிக்கப்பட்டு நடபடிக்கைகளிலுமிருக்கின்றன. இவைகளெல்லாவற்றையும்

சாஸ்திரோக்தமாகச் செய்து கொண்டுவரும்படி திருத்தம் செய்வது சபையோரின் முக்கிய கடமையும் பாரமுமாகவே யிருக்கிறது.

சாஸ்திர விரோதமாக ஒருவன் செய்தாலும் அதுவெகு ஜனங்களையும் பீடிக்கின்றன. வசனம்.

"ஏக:பாபாநிகுருதேபலம்புங்தேமஹாஜநா:" இந்தப்பிரகாரம் ஒருவன் செய்யும் தோஷம் பலர்களுக்கும், கெடுதலையும் ஜாதிஹீனத்தையும் செய்வதால் இவ்விஷயத்தால் சீர்திருத்தம் செய்யவேண்டியது சபையைப் பொறுத்ததாகவே யிருக்கிறது

### 7. ஆச்சார்ய விஷயம்:

நம்மவர்களுக்கு பூர்வகால முதல் வழங்கிக் கொண்டு வருவதாயும், சுருதிஸ்மிருதி இதிஹாச சிற்பாகம புராணப் பிரகாரம் சித்திக்கப்பட்டதாயும், பட்டப்பெயராயும், ஜாதிப்பெயராயும், அதாவது யோகரூடிப் பெயராயும், சொல்லப்பட்டிருக்கிற ஆச்சார்ய வென்பதை ஆஸாரியென்று எழுதும்படி செய்திருக்கிறார்களென்பதையறிந்த நம்மவர்களில் விசனப்படாதார் யாரிருக்கிறார்கள்.

இவ்விஷயத்திற்காக நாம் அனேக சுருதிஸ்மிருதி இதிஹாச புராணவசனங்களையும் சிலா தர்ம பிரபத்திர சாஸனங்களையும் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகளின் சம்மதி பத்திரங்களும், அனேகதேச வித்வத் ஜனங்களின் சம்மதி பத்திரங்களும், அரசர்களால் வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட பெயர்களையும், தேசசரித்திரங்களையும், மற்று மனேக நியாயங்களையும் எழுதி சென்னையில் விளங்கும் நமது பத்திராசிரியரவர்களுக்கு அனுப்பி அப்பத்திரிகையில் போடும்படியாக சொல்லியிருக்கிறோம். அதில் சிலபாகம் ஷை பத்திரிகையில் போட்டுமிருக்கிறார்கள் ஷை பத்திரிகையும் இன்னமும் பத்திரிகையில் போடவேண்டும். சாஸ்திரபிரமாண முதலியவைகளையும் சபையில் வருத்திப்பார்த்து அதில் கூறப்படும் ஞாயங்களும் சபையோரின் கருத்தும் ஒன்றுசேர்ந்து கவர்ன்மெண்டாரிடம் வக்கீல்முகாந்திரம் பேசி இக்காரியத்தை நிவிர்த்திப்பது சென்னை வாசிகளின் முக்கிய 'தர்மமும் பாரமும் கடமையுமாக விருக்கின்றது. அதாவது இவ்விஷயம் சென்னையில்தான் முடிவுபெறவேண்டிய திருக்கிறதினாலும், இதற்காக அன்னிய தேசவாசிகள் அவ்விடம்வர பிரயாசைப்படுமானதினாலும், இதை சென்னைவாசிகளை வஹித்து நிவிர்த்திக்க வேண்டும்.

.. மேலும் இவ்விஷயத்தில் குலாபிமானப் பெருக்கால் ரொம்பவும் சிரமம்வஹித்துக் கொண்ட திருச்சிசபை காரியதரிசி பிரம்ம ஸ்ரீ வ. முத்துகிருஷ்ண ஆச்சார்யரவர்களுக்கு நாம் மிகவும் நன்றிபாராட்டற்பாலதும் தவிரவும் அவர்களைப் பின்பற்றி ஊக்கம் கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

நம் முன்னோர்களால் பூண்டு ஆண்டுவந்த ஆச்சார்ய வென்னும் பட்டத்தை இக்காலத்தில் நாமிழந்தோமானால் நம் பின்னோர்கள் நம்மை என்னசொல்லமாட்டார்கள். ஆனதா லிவ்விஷயத்தில் சபையார்களான மஹாஜனங்கள் ரொம்பவும் கவனம் செலுத்தி இதை முதற்காரியமாக வெண்ணி ஆச்சார்ய வென்னும் பட்டத்தை நிலைநிறுத்த வேண்டுமென மிகவும் வேண்டுகிறேன்.

### 8 சிற்பசாஸ்திர சங்காகம்.

சிற்பசாஸ்திரமானது நம்மவர்களுக்காகவும், லோகோபகாரமாகவும், பிரபஞ்சம் உஜ்ஜீவிக்கும்படியாகவும், விஸ்வகர்மாவின் வதனத்திலிருந்து உற்பவித்த சுருதிகளேயாம். (தொடரும்)

ஜோஸ்யர்-முத்தாச்சாரியார்,
மீனாக்ஷிபுரம்.

(303-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## குலாபிமானம் வேண்டும் என்ற அவாவிற்கு கல்வியே சிறப்புடைத்து.

ஆன்மாவின் இலக்கணம் அறிய வேண்டுவோர் நல்லாசிரியன் அருளால் பலசாத்திர வாராய்ச்சிகளை முறையேபெற்று, பக்குவவிசேடம் வாய்ந்ததின்பின்னர் வேதாந்த விசாரத்தில் மனதைச் செலுத்தி அம்மெய்க்குரவன்பால் சாதன சதுட்டயப் பெரும்பயனை சோபானக் கிரமரீதியில் அடைந்து, அதனாலாகிய வுபதேசார்த்தங்களை மனதினுட்கொண்டு வேதாந்த சாத்திர வுண்மைத் தெளிவினாலாகும், வத்திக்கிராகியஞ்செய்து பின் பரமாத்மாவே தானென, நிரதிசயானந்தப் பெருவாழ்வுத் தன்மையில் இரண்டறக் கலந்து அறிவாம் பேறுகி விதேக பக்குவத்துக்குரிய துரியாதீத மேனிலையைப் பெறுவர்.

இதுகிடக்க, தன்னால் ஆஞ்செயல் மனிதஜென்மத்திற்கு ஆன்மவிலக்கணம் அறிந்ததன் அனுபவம் எய்தப்பெறுவார் பூர்வஜென்ம விசேடப் பிறப்புடையார் அடையற்பாலதாகுங் கதியாம். ஆதலால் உலகியலில் நாமுயன்றுழைக்கு முதற்கடமைக்குரிய கல்வியின் பெருமையின் பயனை ஈண்டு கூறுவான் வந்தனம். கல்வியாற் பெறப்படும் பயனுடை வுடம்பழியினும், அஃதெஞ்ஞான்றும் அழியாது புகழுடம்பு பெற்றன்றே நிலவும்.

நத்தம்போற்கேடு முளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க் கல்லா லரிது.—என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார். பிரகிருதி சம்பந்தமாகிய இப் பிரபஞ்சவாழ்வினில் மாயையின் விநோதத்தில் அளவளாவி அவமாய் இம்மானவர்சரீரத்தைப் போக்கிவிடல் மனிததருமத்தின் செயற்கையேயோ. சராசரத் தோற்றங்களால் எவ்விடத்தும் வியாபித்திராநின்ற சருவ ஜீவான்மகோடிகளும், எம் மதத்தினரும் உய்தற்பொருட்டே தினந்தினம் எழுந்து, கடலாடையைப் புடையிற் கொண்டுள்ள பூமியைச்சுற்றிவருஞ் சூரியன், உலகப்புறவிருளை நீக்கிவரும் உண்மைநிலை நமதுகட்புலனாலறியும் அனுபவக்காட்சி யன்றோ? இவ்வுண்மை அனுபவத்தை அறிவாளர் பெருஞ் சான்றெனப் பெற்றே, மாந்தர் அகத் தஞ்ஞானவிருளை யோட்டுதற்குரிய சுடர் கல்வியினாகிய வுள்ளீடென்பர்.

"கற்பக்கழிமட மஃகுமடமஃகப், புற்கந்தீர்ந்திவ்வுலகிற் கோளுணருங்கோளுணர்ந்தாற், றத்துவமாய நெறிபடருமந்நெறி, யிப்பாலுலகத் திசைநிறீஇயப்பா லுயர்ந்தவுலகம் புகும்." நான்மணிக்கடிகை.

இனி, ப்புருடார்த்தம் என்றால் மானிடஜென்மத்திற் பிறந்தோர் அவற்றை எவ்வாற்றானும் அவசியம் அடைந்து அதனாலெய்தும் புண்ணியப் பயனை நவையறத் துய்ப்பான் ஏற்படும் நற்பொருள்களாம். அவை அறம், பொருள், இன்பம், வீடு, என நான்காம். இதனை யடையுந் துணிபு பற்றியன்றோ, நூற்பயன் என்றார் இலக்கண நூலார். இந்நான்கு விவரணைகளைக்குறித்து வித்தரிக்கும் அத்தாட்சிகளின் சாராம்ஸங்கள் நிறைந்துள்ளன. மோட்ச சாத்திரமெனவும் ஞான சாத்திரமெனவும் பெயர்பெறும். ஞானசாத்திரங்களில் மிகச் சிறப்புடைத்தாய் ஆன்றோரால் ஆரணம் என உச்சிமேற்கொள்ளும் பகவத்கீதை முதலிய பற்பல கலைகள் மனுகுல தரும இரகசியங்களை உரைக்கு மியல்புடையன. அதனை எடுத்துரைக்கில், கடலின்கரையைக் காண்பதுபோலாம்.

அன்றிதமிழ்ப்புலமையிற் சிறந்தஎனது பிதா, நீ. கணபதி ஆச்சாரி அவர்கள் இயற்றிய பன்னூற்களில், பெருங்காப்பிய விலக்கண வமைப்புகள் நிரம்பிய "சாணக்கிய சூத்திரம் என்ற பெரிதா நாறகண், கதாபுருஷராகிய சாணக்கியமுனிவர் சந்திரகுப்த இளவேந்தற்குச் செங்கோன்மையிற் றிக

ழும் இராச்சியபார வியற்றரும் சாத்திர போதனை செய்யுங் காரணப் பெயராய, அறங்கூறுபடலத்தில், கூறிவரும் பலவித நியாயங்களில் கற்றார் பெருமையைப் பல செய்யுட்களால் விரித்துரைத்தனர். அவற்றில் ஒரு கவி.

இங்கு எடுத்துக் காட்டாகக் காட்டுவாம், "கற்றவருக் கிணையாகவும் நன்னெறி கண்காணு, மற்றவருக் கிணையாகவு மியாவைகுப் பேமாற, கொற்றவகேண் மதிகொண்கற் பிழையாக் குலமாதும், உற்றனர் கற்பழிவஞ்சனியுந்தா னுலகத்தே"

இதன் கருத்துரை அரச! நான்கூறு நற்புத்தியைக் கேட்பாயாக. கற்றவர் பெருமைக் கொப்பாகத் தன்னை மணந்து கொண்ட மணவாளற்கு கற்புநெறியிற்றவறுத மனைவியானவள் அன்னவனைத் தெய்வமெனப் பேணுதல் முதலிய நலமுற்றொழுகு முயர்கடப்பாடும், கல்லாதவர்க் கிணையென, கற்புநெறி சிறிதுமில்லா வஞ்சக நெஞ்சுடை மனையாள் தனது மணமகனை அடைந்து நடக்குந் தீயொழுக்கமுமாம் உலகில் என்றார்.

ஆகவே, கல்வி பல திறப்பாடுடையனவாயிருப்பினும், தற்கால மேல்நாட்டு நாகரீகமேன்மை கொண்ட ஆங்கிலேயக்கல்விப் பயிற்சியைக் கொள்ளுதல் சாலவுந்தகுதிவுடைத்தேதன எனத்துளத்தெழுங் கிளர்ச்சிக்கு, இதனை வாசிக்கும் நண்பர் சிறிது செவி சாய்ப்பாரென வரைவாம். "அறிவிற்சிறந்த விஸ்வவிப்பிர குலாபிமானச்செல்வர்காள்! சிறப்புவாய்ந்துள வுயர்தொழிற் புகழ் கொண்டு வாழும் நமது குலத்தவர்கள் கல்வி கேள்வி ஆராய்ச்சி வாயிலாக ஒழுக்கத்திற் பயிலுதலன்றே குன்றின் மேலிட்ட தீபமெனத் திகழும். இனிச் செய்வதென்னை. பரிதாபம், பரிதாபம்! தொழில் ஒன்றினையே எம்மேன்மையும் அடையற்பாலதென இறுமாப்புக் கொண்டெழும் இவர் மனோமகிழ்விற்குச் சொல்லுவதென்னை? பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வருணத்தாருள் முதற்குலமாய்க் காரணப் பெயர் பெற்றுள்ள நம் விசுவப்பிரம ஜாதியார்க்குத் தொன்று தொட்டே ஐந்தொழிற் சிரேட்டங்கள் அமைந்து கிடைப்பினும், அதனினும் பிரகாசிக்குங் கல்வி கேள்வி முதலிய பொருட்களை அடைதலன்றே பேரணிகள் எனச் சாற்றற்பாற்று?

இதனைச் சிந்தியாது, ஏனையஜாதியார் கல்வியின்மையால் நம்மை இகழ்ந்துரைக்க ஒழுக்கங் குன்றி, நித்தியானுட்டான ஈசுவரவணக்கமாதி நற்கருமங்களை வேதநீதியிற் செய்யாது வாளா விருப்பது நல்லொழுக்கத்திற் கிழுக்கமன்றே? ஆகவே, இக்காலத்து மற்றைய ஜாதியார் மேனாட்டுப்பாஷைக் கல்வியைக்கற்று உலக நாகரீகபுமான்களாக நவீன நடையிற்றினமும் மேன்மையோடு, பெருங் கீர்த்தியும் கல்லூதியமும்பெற்று வாழுதல் நாங்கண்கூடாகக் கண்டிருந்தும், நம்மனோர் பஞ்சப்பிரமத் தொழிற்களே நித்தியபோகானுபவங்கள் எனப் பெரிதும் பேணி, உண்டுடுத்துச் சுகித்து வருகின்றோம். இச்செயல்கள் நம் வாணாளிற் செயத்தகும் நன்மைச்சுகமாம் பாலினை, உலகவின்ப நயப்பில்லாத் தீமைப் பாலைவனத்திற் கவிழ்க்கும் பான்மையேயாம்.

தாயினுமினிய காருண்யநிறைந்த ஆங்கிலத் துரைத்தனத்தார் தமது செங்கோலாட்சியில் இந்தியா தேசவாசிகளாகிய சகல ஜாதியார்களும், தாரதம்மியமின்றிப் பல பாஷாக் கல்விகளைக் கற்றுவருவான், பல்லுதவிகளை வெகுவாய்ச் செய்துவருவதோடு, தமது அரசாட்சிக்குரிய ஆங்கிலப் படிப்பிற்கு எவ்வாற்றானும் செய்துவரும் அனுகுணங்கள் பலவுள. அப்படிப்பினை யாவர்மாட்டும், எங்கும் பரவிப் பெருக்கபடைதற்பொருட்டு பல நாடு, நகரம், குக்கிராமம் முதலிய பல விடங்கடோறும் அநேக கல்லூரிகளை நிருமித்திருக்கின்றார்கள். இவ்வண மிருக்கவே, இமோத்கிரி



முதல் கன்னியாகுமரிவரை ஐந்தாறு இலக்ஷக்கணக்கில், நம் பஞ்சப்பிரம ஜாதியார் வசிக்குந் தொகைப்பாடுடையவரா யிருந்தும், ஆங்காங்கே நிறுவிய கலாசாலைகளில் ஆயிரத்தில் ஒருவரேனும் படித்து, ஆங்கில வுயர்படிப்புப்பட்டதாரி ஆயினருளரோ எனும் ஐயப்பாடின்னுந் தீர்ந்தபாடில்லை. இவைநிற்க, அத்தொகையில் இந்நாளில் படிக்கும் நங்குலச் சிறுவரேனும் உண்டோ என எவர்க்கும் ஆசங்கைபெறும். இல்லெனவே தடையின்றித் தெரிவாம். இங்ஙனமேல் இக்காலத்தி லினியேனும் ஆங்கிலப் பெரும்படிப்பில் தேற்றமுடையராவர் என்பது முயற்கொம்பேயாம்.

ஆங்கில லௌகிகப்படிப்பு மேனாட்டு அரசாட்சிக்குரிய கல்வியாயும், அப்பாஷாவிற்பன்னர்களால் பலபாஷா நுட்பவிதாண சாத்திரங்களின் மர்மங்களை, "பழையன கழித்தலும் புதியனபுகுத்தலும் வழுவல காலவகையினானே, "எனும் இலக்கணத் திருட்டாந்தத்துக் கிணங்க பற் பல சாத்திரங்களை காலத்திற்கேற்ப உண்டுபண்ணி வருகின்றனர். 'இருக்காதி வேதங்களைத் தமக்கே மறைபொருளாய் மற்றைய ஜாதியார் கேட்கவும் படிக்கவுமியாத பிராமணரும் வெட்கமடைந்து வியப்புற, பஞ்சமரும் படித்துய்ய பரிபாஷைப்படுத்தி விடுத்தனர். அவ்விதம் வெளிப்போந்த புத்தகங்களில் அதனுட்பவிஷயங்களை யாவரும் வெள்ளிடை மலையெனக் கண்டறியலாம். இனும் இந்து தருமசாத்திரங்களை வெளிப்படுத்திய தொகைகள் அளவிடப்படாவே. மேலும் அளவிறந்த நீதி நூற்களையும் கதைகளையும் புதுவதாக புனைவதற்குரியவர்பால் பொருளுதவி ஊக்கங்காட்டுகின்றனர். அன்றிப் பூகோள, ககோள சாத்திரங்களும், உள நூல், உயிர் நூல், ஜடதத்துவ நூல் முதலிய பன்னூற்களும் இயற்றியுள்ளார். வடசொல், தென்மொழி, இந்தி முதலிய பாஷைகளில் முக்கியமாய் வழங்கிவரும் வேதாந்தசாத்திர இயல்புகளும் ஆங்கிலத்தில் வந்துவிட்டன. இவைகளால் ஆங்கிலக் கல்வியின் பெருமையைக் காட்டுமன்றே? அன்பர்காள்! இனிச்சிந்நாட்களில் இந்தியாதேசத்தில் ஆங்கிலங்கல்லாதவர்கதி, அமிழ்தினு மினியதமிழ் மொழியை, முன்னரேகற்று அதன்பயனறியாத கயவர்கதியினுமிழிவே யென்றுணர்க. இவ்விடத்துத் தேனினுமினிய தென்மொழியின் தோற்றத்தின் விரிவினைச் செவ்வனே யானிங்கு கூறவேண்டுங்கடமைகொண்டுள்ளேனெனினும், எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு இஃது வேறு பெருக்கமாமே எனநினைந்து அமைந்தனம். ஆகவே, ஆங்கிலங்கல்லாதவர் இக்காலத்து அறிவுடை மனிதரெனக் கூறற்பாலதோ.

இவற்றில் நமது சீர்மை வாய்ந்த சிற்ப சாஸ்திரங்கள் முதலிய வன்மைகளால் நம் முன்னோர்கள் சிதம்பரம் முதலிய திருக்கோயில்களில் செய்து வைத்தருளிய நடேசமூர்த்தி முதலிய பல விக்கிரகங்கள் உலகந் தொழக்கூடிய நிலைமையில் தகைமை பெற்றிருக்கின்றன. இன்னும், அவ்வித சாத்திரவன்மையால் விக்கிரகங்களைச்செய்யும் சிற்பர்களும் அச்சிற்ப முட்பட்ட பஞ்சப்பிரமத்தொழில் விசேடங்கள் நம்மவர்பால் இருப்பினும், ஆங்கிலேயர் கைத்தொழிற் மாட்சியினை ஒருவாய் கொண்டு புகழுதல் சாலுமோ. பல இரந்திர, சூத்திர, விசித்திரங்களானும், மின்சார சக்திகளானும், அளவற்ற விநோதக்காட்சி யுடைத்தாய் கண்டோர் காமுறும் வண்ணம் எண்ணு இலக்கமொடு கைத்தொழில் மேன்மைகளைச் செய்து காட்டிவருகின்றனர். இந்துசிற்ப கைத்தொழிற் சாத்திரங்களைக் கற்றுள்ள ஒரு பிதாவானவன் தனது அருமைப் புதல்வனுக்கும், அச்சாத்திரங்களின் மர்மங்களைக் கற்றுக்கொடுக்காமல் அதனைமறைத்துவிட்டு, எவருக்கும் பயனின்றி இறந்து விடுகின்றனன். இவ்வுண்மைச் செய்திகளை இதனைக்கண்ணுறுங் கனவான்கள் கவனிப்பாராக. இவ்வழக்கம் போலல்லாது, தனது படிப்பையும், தொழில்சூட்சுமங்களையும் ஆங்கிலேயர் தனது

பின்னோர்கட்கு உபயோகப்படும்படி உபகரித்து விடுகின்றனர். இஃது ஒற்றுமையோடுழைக்கும் பரோபகாரச்செயல்என்ப. இவ்வளவு நாசரிகங்களும் அவரது கல்வியால் அடையப்படும் நலமெனச் செப்புதற்கு குற்றமுளதோ? இந்நிலையில் முன்வந்துள்ள ஆன்றோர் கைத்தொழிற்களின் முன்னர் நமது கைத்தொழிற்களின் விசேடங்களை நினைக்குமிடத்து, சூரியன்முன் மின்மினிக்கொப்பாம். இவ்வண்ணமாதற்கு நமக்காங்கிலக் கல்வியில்லாக் குறைவேயாம்.

(தொடரும்)

**ஜி. சுவாமிநாதன் ஆச்சாரி.**

---

## இதோபதேச நீதிமொழிகள்.

---

### போய்யும், புறங்கூறுதலும்.

எனது அன்பின்மிக்க அரிய சகோதரர்களே!

ஒருவன் எவ்வித உத்தம தர்மங்களைச் செய்யினும் பொய்கூறல், புறங்கூறல் என்னும் படுபழிக் குடன்படுவானாகில் அது அவன்செய்யும் நல்லறமனைத்தையும் கெடுத்து நற்கெதியும், நற்புகழும், நல்லறமும், நல்வாழ்வும், நன்னெறியும், நல்லருளும், நல்லறிவும், நல்லொழுக்கமும் கொடாது உயர்பத மனைத்தையும் உணர்வையுமழித்து அவனை எவ்வழியினும் ஈடேறவிடாது தீவினையிலழுத்தி நிரயகுக் குள்ளாக்குமெனவும்.

ஒருவன் பஞ்சமகா பாதகமுதலிய எவ்வித பழி தொழிலைச் செய்வானாயினும் பொய் புகலாமை, புறங்கூறாமை என்ற தவவிரதத்தைமட்டும் கைக்கொண்டு நடந்துவருவானாயின் அவ்விரதமே அவனுக்கு நற்பதமும், நல்வாழ்வும், நல்லறமும், நற்புகழும், நற்கீர்த்தியும், நல்லொழுக்கமும், நல்லறமும் கொடுத்து நம் விசுவேசநாயகனருளில் நடத்தி நாளும் நன்மைபெறச்செய்து நலமளிக்குமெனவும் ஆன்றோர் புகன்றிருப்பதோடு நம் நாயனாரவர்களும்—

பொய்யாமையன்ன புகழில்லைஎய்யாமை
எல்லா அறமும் தரும்.—என்றும்

பொய்யாமை பொய்யாமை யாயின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று.—என்றும்

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.—என்றும்

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச் சொல்.—என்றும் நமக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உணர்த்தி யிருக்கின்றார்கள்.

அன்றியும், புறங்கூறிப் புலாலுடல்வளர்த்து குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டவன்போல புகழ் சம்பாதிப்பான்போல இழிவும் பழிபவங்களையும் இகத்திற் சம்பாதித்து அதனைப் புகழெனக்கொண்டு உள்ளம்பூரித்துஉலகிற்றிரிவதைவிட தம் வாழ்நாளின் உயிர் இறப்பதே நலமாகுமெனவும் நாயனாரவர்கள் நவின்றிருக்கின்றார்கள்.

அவை வருமாறு:—

புறங்கூறிப்பொய்த்துயிர்வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.—என்றும்

உலகநீதி.—இறந்தாலும்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.— என்றும் கூறியுள்ளார்கள்.

அன்றியும் நம் தாயுமானார்—

பொய்வார்த்தை சொல்லிலோ திருவ



ருட்கயலுமாய்ப் புன்மையேன் ஆவனந்தோ.—என்றும்

பொய்வளரு நெஞ்சினர்கள் காணாதகாக்ஷியே பொய்யிலாமெய்யாறிவிற், போதபரிபூரண வகண்டிதாகாரமாய்ப் போக்குவர வற்றபொருளே—என்றும்

பொய்யுடல் நிமித்தம் புசிப்புக் கலைந்திடல் புசித்தபின் கண்ணுறங்கல், கைதவமலாமலிது செய்தவமதல்லவே கண்கெட்டபேர்க்கும்வெளியாய்க், கண்டதிதுவிண்டிதைக் கண்டித்து நின்றவெக் காலமோயதையறிகிலேன்—என்றும்

சொல்லான்முழக்கிலோ சுகமில்லைமௌனியாய்ச் சும்மாவிருக்கவருளாய்-என்றும்

பற்பலதரமும் நற்போதங்கூறி யதார்த்தவ்ழிநின்று இன்பம் பெறவேண்டுமென்று சொல்லியிருப்பதை எட்டுணையும் நினையாது அதர்மம் செய்தலையே ஆஸ்தி எனக்கொண்டு பெரும்பவங்களைச் செய்து பேதைகளாகிப் பெரியோர்களை நிந்தித்தும் தேவாலயம், மடாலயம், அறநீர்ச்சாலை, வித்தியாசாலை, வேதாத்தியயனசாலை நந்தவனம் முதலிய உத்தமதர்மங்களை யழித்தும் அவைகள் நிலைபெறாது அதற்கிடையூறு புரிந்தும், காமக் குரோத லோப மதமென்னும் கடுங்கடலிற் குதித்து நிலைகலங்கி நிச்சயம்குலைந்துநிமலனை மறந்து நெறிகெட்டுத்தவிப்போர் உலகிற் பலரேயாகும்.

அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! என் சொல்வது!

பெறுதற்கரிய யாக்கையைப்பெற்றும்
பெறுதற்கரிய பிரானடிசேராப்
பெறுதற்கரிய பிறவிகளெல்லாம்'
பெறுதற்கரிய பேறிழந்தாரே.

என்ற திருமந்திர வாக்கின்படி "கற்றதுங்கேட்டதும் போக்கிலேபோகவிட்டுப் பொய்யுலகனாயினேன்" என்ற தாயுமானாரின் சற்குருநெறியை சதாகாலமுஞ் சிந்தித்து மெய்யறிவோடு நற்கருமத்திற்கண்ணுற்று நல்லொழுக்கத்திலொழுகி தீவினையகற்றித் திருவருள்பெற்று அன்பினால் மூர்ச்சித்த அன்பருக் கங்ஙனே அமிர்த சஞ்சீவிபோல் வந்து ஆனந்தமழைபொழிவை "உள்ளன்பிலாத வெனையார்க்காக அடிமைகொண்டாய்" என்பதை நினைந்து உள்ளன்பினோடும் உண்மைநெறியோடும் உலகிலுழைத்து எந்தநாள் கருணைக்குரித்தாகும் நாள் எனவும் என்னிதயம் எனை வாட்டுதே என்பதையும் "வீணிலே யலையாமன் மலையிலக்காக நீர் வெளிப்படத்தோற்றல் வேண்டும்" என்பதையும் உள்ளத்தில் நினைந்து உண்மை என்பதைத் திண்மையாகவும் புறங்கூறாமையைப் புகழெனவுங்கொண்டு எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாது வேறொன்றறியேன் பராரமே என்றபடி ஒற்றுமை மனத்தோடு உலகினில் வாழ்ந்து உம் பாருளைப்பெற்று உயர்ந்து வாழ்வீர்களெனப் பன்முறையும் கோருகின்றனன்.

**V. வைத்திநாதஸ்வாமி ஸ்பதி,**
**ஜோதிஷ**
**ஆரியன்சோதிடசாலைத் தலைவர்,**
**திருவாரூர்.**

---

## வேதாத்தியயன பாடசாலை.

---

விசுவப்பிரம்ம வம்ஸஸ்தராகிய நமக்கு ஆத்மார்த்தமான ஐசுவரியத்தை யளிக்கவல்ல வேதாத்தியயனம் ஆவசியகம் என்பது, அறிவாளரான நம்மவர் பலரும் ஒப்பியுள்ள விஷயமேயாம். இவ்வத்தியயனம் குறைவற நடைபெறுவதற்குப் பாடசாலைகள் வேண்டும் வேண்டாமென்னும் விஷயங்களிலொன்றை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு முன் இதில் ருசியை உண்டாக்கத்தக்க கல்வியின் லக்ஷணத்தை ஒருவாறு

சுருக்கிப் பேசுவது நமக்குப் பிரதம கடமையாகும். ஆகவே, குலோத்தாரணத்தில் நோக்குடைய செல்வர்களே! அடியில் வரும் விஷயங்களை, நியாய பீடத்திலிருந்து, நடுவுநிலைமையைத் தழுவி, சீர்தூக்கிப்பார்த்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை வெளியிடுமாறு விரும்புகிறோம்.

மானிடர்களுக்கு சிறந்த சாசுவதமாகிய செல்வம் கல்வியே என்பது ஆன்றோர் துணிபு. தாயாதிகள், சோரர், அரசர்முதலியோரால் அபகரிக்கப்படுதற் குரியதாயும், இன்பந் தருவதுபோற் காட்டி இரவும் பகலும் மானஸீகமான பெருங்கவலையையே விளைக்கக்கூடியதாயும், கொடுப்பக் குறைவுபடுவதாயும் உள்ளபொருட் செல்வம்போலன்றி, ஒருவராலும் அபகரிக்கப் படாததாயும், மனத்தளர்வு நேர்ந்த காலத்திலும் மனோற்சாகத்தை உண்டுபண்ணுவதாயும், கொடுக்கக் கொடுக்கப் பெருகிநிற்பதாயும், சென்றவிடமெல்லாம் சிறப்பைத்தருவதாயும், ஏழுபிறப்பினும் உடனின்றுதவுவதாயும் உள்ளது கல்வியேயாம். இதனை நாம் அநுபவசகிதமாகக் கண்டுவருகிறோம். இத்தகைய கல்வியான எண்ணையும் எழுத்தையும் முறைமையாகக் கற்றுணர்ந்தவரையே கண்ணுடையவர் என்று சாஸ்திரங்கள் உத்கோஷிக்கின்றன. இயற்கை அறிவைவிருத்தி செய்வதில் இதற்கிணையு முண்டோ? இதை உள்ளபடி நேசித்தவர்க்கு இது அந்தரங்கத்தில் இன்பத்தையும், பேசுவதில் அலங்காரத்தையும், காரிய நிர்வாகத்தில் சாமர்த்தியத்தையும் பெரும்பான்மையும் கொடுக்கவல்லது. “கல்வியின் பெருமை கடலினும் பெரிது” என்பது பழமொழியன்றோ?

இத்துணைச் சிறப்புவாய்ந்த கல்வியை இன்னபடி கற்கவேண்டுமென்றும், கற்குங்காலத்தில் மாணாக்கன் இன்னின்ன லக்ஷணங்களை அநுஷ்டித்துவரல் வேண்டுமென்றும், ஆசிரியன் இன்ன தன்மையோடு கூடியவனாயிருத்தல் வேண்டுமென்றும், அப்போதுதான் கல்வி உரியபலனைத் தருமென்றும், பெரியோர்கள் விதித்துள்ள விதியனைத்தும் ஈண்டுவிரிக்கப்புகின் வியாசம் பெருகுமென்று விடுத்து, கல்வியின் அருமைப் பாட்டை உத்தேசித்து ஏற்பட்டுள்ள லட்சணங்களை ஒருவாறு வெளியிடவே இதனைச்சூசிப்பிக்கலாயிற்று. இவ்வேற்பாட்டைக்கருதியே தொன்றுதொட்டுப் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு வந்தனபோலும். பாடசாலைகளின் உதவியின்றி எவரும் தத்தம் குடும்பத்தின் தாய் தந்தையராலேயே கல்வியில் மேதாவியராயினரென்று சொல்வதற்கு ஆதாரங்கள் பெரிதும் காண்கிலோம்.

கல்வியின் பொருட்டுப் பாடசாலைகள் பலபலவாய் ஏற்பட்டிருந்தும் அனேகர் கல்வியை அநுசரித்து வந்திருக்கின்றனரென்பதற்கு அவரவர்கள் குடும்பங்களே சாக்ஷிபகரும். பெரும்பான்மையையொட்டிப் பார்க்குமிடத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் காற்பங்கினரே சாதாரணமாய் எழுதப்படிக்கப்பழகியிருத்தற்கூடும். திருத்தமாய் எழுதவும், எழுதியதைப் பழுதறப்படிக்கவும், படிக்கவேண்டுவன முழுதும் பிழையின்றிக் கற்கவும், கற்றதனாலடையத்தக்க நற்பயனைக் காணவும், கண்டவண்ணம் நிறகவும் பழகியுள்ளவரின் சங்கியை அற்பமேயாம். அங்ஙனமிருந்தும், பிராணன் போகுந் தருணத்திலும் நோயாளிகட்குப் பிழைத்தற்குரிய மருந்தைப் பிரயோகித்து வருவதுபோல் நமது இயற்கையறிவின் அபிவிர்த்தியை முன்னிட்டு நம்முடைய நாட்டின் மேதாவியரும், திரைத்தனத்தாரும் பாடசாலைகளை ஆங்காங்கு விர்த்தியாக்கிவரப் பின்னடையாதிருக்கின்றனர். இப்படியாக, நமதுகுலத்தில் அற்பகல்வியைப் பெற்றுள்ள சிலர் குலாபிமானியரென்றும் குலோத்தாரணரென்றும் வாய்கூசாது பேசி, நங்குலச்சிறுவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடசாலைகள் அநுவசியமென்றும், ஓரிடத்தில் ஒரு பாடசாலையை ஸ்தாபித்தமாத்திரத்தில் வேறிடத்துள்ளவர்க்கு அது



பயன்படுவதெப்படியென்றும், அத்தகைய பாடசாலையை ஆதரிக்க அன்னோர் முன்வரமாட்டார்களென்றும், பாடசாலையிற் போதித்துவர யோக்கியதையுள்ள உபாத்தியாயர் இல்லையென்றும், நம்மவர் யாவரும் தொழிலாளராயிருப்பதால் பாடசாலைக்குப் போகவர அநுகூலமானகாலம் பெற்றிலரென்றும், வைதிக லௌகிக கல்விகளில் லௌகிகார்த்தமாய் வேண்டிய எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளும் கல்வியே போதுமென்றும், வைதிகமான கல்வி அநுவசியமென்றும், பிரமவமிசத்தரான நமக்கு இவ்வைதிகம் உடன்பிறந்திருப்பதால் அவ்வைதிகக் கிரியைகட்கோர் பாடசாலை நியமிப்பது வீண்பிரயத்தனமென்றும், இன்னோரன்ன விஷயங்களைப் பன்னிப்பன்னிப் பேசி நம்மவரை உற்சாகக்குறைவிற்காளாக்கிவருகின்றனர். குலாபிமானிகளே! இதை நீவிர் கவனியுங்கள்.

கல்விவளம் முதலிய பூர்வநிலைமை குன்றியுள்ள நங்குலத்தவரை முன்னேற்றத்திற்குக் கொண்டுவருவதெப்படி? சகல திருத்தங்களும் ஏககாலத்திலேயேசெய்து முடிக்க, உதாரசீலர்களாய் முன்வரும் சிலரால் சாத்தியமா? சிறிதுசிறிதாக ஒவ்வொருவளத்தையுஞ் செய்துகாட்டி, அபிமானத்தைவேரூன்றச்செய்து, நடத்திக்காட்டியவாறு நமது குலத்தினர்வாழும் நாடெங்கும் நடைபெறச் செய்வதன்றோ புண்ணியவான்களுக்கழகு? முன் விவரித்துக் காட்டியபடி நமது குலத்திலோ படிப்பாளர் மட்டுபட்டிருப்பதால் அவர்கள் எங்ஙனம் தங்கள் சிறுவர்களைத்தாங்களே முன்னுக்குக் கொண்டுவருதல்கூடும்? அவ்வண்ணம் கொண்டுவருஞ் சக்தி யிருந்திருப்பின் நாம் ஏன் பத்திரிகைகளை ஏற்படுத்த வேண்டும்? பத்திரிகையிற் போதரும் விஷயங்களை அவரவர்களே தெரிந்துகொண்டு தங்கள் பிள்ளைகட்கும் போதித்து வரலாமே? நாம் பத்திரிகையில் காட்டிவரும் விஷயம் போன்றவை இதற்குமுன் என்றும் சம்பவியாதவையோ? சாதாரணமாய் எழுதப் படிக்கமட்டுங் கற்றுள்ளவர்க்கு பத்திரிகையில் ருசிபிறப்பதுண்டோ? சாதாரண படிப்பாளர் அறிந்துகொள்ளும் வழக்கச் சொற்களாலேயே பத்திரிகை எழுதப்பட்டு வருகின்றதோ? அறிவாளர்களே! சற்று நிதானித்துப் பாருங்கள்.

லௌகிக வித்தையைமாத்திரம் நாம் நம் சிறுவர்களுக்குக் கற்பித்து விட்டால் அவர்களுக்கு வைதிக வித்தை தானேவருமா? பின்னதன்றோ சிரேஷ்டம்! அதை அநுதரிப்பவர் அறிஞராவரோ? குலோத்தாரணம் செய்ய முற்பட்டுவந்து பத்திரிகைகளை ஏற்படுத்தியுள்ள நாம், கல்விவாசனையற்ற முதியரைக் கேள்வியில்நுழைத்தும், சிறுவரைக் கல்வி கேள்வி என்னும் இரண்டிலும் நுழைத்தும் முன்னிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கினன்றோ நமது எண்ணம் ஒருவாறு சித்திபெறும். “கேள்வி முயல்” “கற்றலிற்கேட்டலே நன்று” என்றும், “கல்லாவொருவன் குலநலம்பேசுதல் நெல்லினுட்பிறந்த பதராகும்மே” என்றும், கல்வியினும் கேள்வியினும் கைவரத்தக்க அநுகூலத்தை மிக்கோர் பலபடி சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். ஆகையால் “வேதாத்தியயன பாடசாலை” ஆங்காங்கு நியமிப்பது அத்தியாவசியமேயாம். சிறப்புப்பற்றி நம் பாடசாலைக்கு “வேதாத்தியயன பாடசாலை” என்னும் பெயர் கொடுத்துள்ளபோதிலும் பொதுவகையான கல்வியும் ஷை பாடசாலையில் கற்பித்தே வருகின்றோம். இப்பாடசாலையாலன்றி நமது சிறுவர்களை முன்னுக்குக்கொண்டுவருதல் அசாத்தியமாம். நீதிமயமாயும் பக்திமயமாயுமுள்ள பிரசங்கவாயிலாகவன்றி நம்மவர்களை முன்னுக்குகொண்டுவருதல் அசாத்தியமாம். பத்திரிகையில் நமது குலதர்மத்தையும், குலப்பெருமையையும், முன்னோர்களின் அற்புதச்செயல்களையும் இன்னும் இவைபோன்ற குலவிஷயங்களையுமே பெரிதும் எழுதிவரல்வேண்டும். இவ்வாறு செய்யாவிடின் பத்திரிகையால் நமது குலம் முன்னேற்றமுறுவதெப்படி?

பாடசாலையில்லாது பாலர்களைத் திருத்தப்பார்ப்பது அச்சில்லாமலே தேரோட்ட முயலுவதை யொக்கும். பிரதமத்தில் ஓரிடத்தில்தான் ஒரு பாடசாலை ஏற்படுத்த முடியும். அதனைக் கண்ணுறுங் குலாபிமானிகள் தத்தம் வாசஸ்தலங்களிலும் ஒவ்வொன்று ஏற்படுத்திக் குலச்சிறுவர்களை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டும். சிறுவர்களாலேயே நமது குலத்தின் அரிய பெரிய தருமங்களும் மகத்துவமும் நிலைபெறவேண்டி யிருப்பதினால் அவர்களுக்கு நல்லறிவையும் ஒழுக்கத்தையும் காட்டிவர நாம் ஒவ்வொருவரும் முற்படவேண்டும். அப்போதுதான் நமது குலம் உன்னதநிலையில் நிலைக்கும். இதற்காதாரம் வைதீகப் படிப்பேயாதலின் அதனைக் கற்பித்துவரப் பாடசாலைகள் ஆங்காங்கு ஏற்படுத்துதல் நாம் கொண்ட இன்றியமையாக்கடனும்.

வேதாத்தியயனபாடசாலையாகவே பலவிடத்தும் ஸ்தாபித்து அதில் லௌகிக வைதிக விஷயங்களனைத்தையும் சிறிது சிறிதாக நமது சிறுவர்களுக்கு போதித்துவந்தாலொழிய நமது குலம் முன்னிலைமைக்குவராது என்பது இதுகாறும் பேசிபேசிவந்த விஷயங்களால் நன்கு புலனும். "இப்படிசெய்வதால் சிறுவர்களுக்கு அத்யயனபாகம் சரிவர அமைவது கூடுமோ; அவர்கள் சப்தங்களின் உச்சரிப்பைப் திருத்தமாக உச்சரிக்க அசக்தர்களாயிருப்பதால் அவர்களுக்குக் கற்பிக்கும் இவ்வரியவிஷயமும் பிழையெய்தி அதனால் பிள்ளைகளுக்கும் க்ஷேமக்குறைவு நேரிடுமே" என்னும் ஐயம் சிலர்க்குண்டாகலாம். இதை அடியாகக்கொண்டு நாம் ஆராயப்புகுந்தால் எச்சப்தமும், மனிதப்பிறப்புற்ற நம்மால் தொடக்கத்தில் அபசுரமாகவே உச்சரிக்கப்பட்டு வருவது அனுபவமாதலின், சப்தமயமான பிரபஞ்சத்தில், நாம் ஒவ்வொருவரும் அகரத்தத்திற் கேதுவாயும், ஆகியும், ஆகவும் நின்றுள்ளோமென்பது கண்கூடன்று? இது தெரிந்த நாம் நமதுபூர்வநிலையை (சிறுபிராயத்தை) யுணராமற்போவது என்னே? சப்த உச்சரிப்பு தவறுவது இளமைப்பருவத்தில் சகஜமாய் யாவருக்கும் நேரிடக்கூடியதே. படிப்பற்ற வயதின் முதிர்ந்தவரும் ஒன்றைக் கற்கப் புகும்போது உச்சரிப்பிற் றடுமாறுவது இயல்பே. இதுகொண்டுநாம் என்றும் ஊமை யராய்ப்போதல் நன்றோ?

வேதாத்தியயன சப்தத்திற்கு மாத்திரம் உச்சரிப்பிற் றவறுவதால் பிழைக்காளாகின்றோம் என்பதுசிலாக்கியமான அபிப்பிராயமாகுமா? எல்லாச் சப்தங்களுக்கும் வேதம் ஆதாரமா யிருக்கின்றமையின் சப்த சாஸ்திர நிபுணர்களின்முன் இப்பேச்சு பயன்படுவதெங்ஙனம்? நாம் பாடசாலையில் அர்த்த க்யானமின்றியும் உச்சரிப்பி னொழுங்கின்றியும் கற்றுவந்த பலநூல்கள் பிற்காலத்தில் நம்மால் பிழையறப் படிக்கவும் பயன்தெரியவும் கைகூடியுள்ளதும் அநுபவமே. ஏதோ ஒன்றை மனத்திட்கொண்டு வேதாத்தியயன பாடசாலை கூடாதென்று மறுக்கவரும் அறிஞர்களுக்கு அவர்கள் மனமே நியாயத்தை எடுத்துக்காட்டி அறிவுறுத்து மென்பதிலையமேயின்று. ஆகையால் அவர்களுக்கு நாம் நியாயங்களை எடுத்துக் காட்டுவது நிஷ்பிரயோஜனமாம். உண்மை யுறக்கங்கொண்டவரை எழுப்பலாம்; பொய்யுறக்கமுள்ளவரை எழுப்புதல் கூடுமா?

சென்னை, சிதம்பரம், காஞ்சி, திருவையாறு, காசி, திருவாங்கூர் இவை முதலிய இடங்களில் வேதசம்பந்தமான பாடசாலைகள் ஏற்படுத்தியுள்ளதும் வீணேபோலும்! சிறுவர்களைவிட படிப்பின் தன்மையுணர்ந்தவர்களுக்காக இப்பாடசாலைகளை ஸ்தாபித்தவர்களும் அதற்கு உதவிபுரிவோர்களும் அறிவுள்ளவர்களோ அறிவில்லாதவர்களோ இதைவாசிப்போரே கண்டுகொண்மின். வீட்டிலேயே வாசித்துக் கொள்வதாயிருந்தால் இத்தகைய வேத பாடசாலைகளை நாட்டுக்கோட்டை செட்டிமார்களும் இன்னும் பலஇடங்களில் ஸ்தாபிக்க முயற்சிசெய்வரோ?



1913ஞ - திற்கு முந்தி விஸ்வகர்ம குலோத்தாரண சபைப்பிரசுரங்களில் இவ்வேதாத்தியயன பாடசாலையின் அபிவிர்த்தி விஷயமாகப் பலவறிஞர் பற்பல நியாயங்காட்டி உபந்நியசித்துவந்தவிஷயத்தையும், விஸ்வகர்ம குலோத்தாரணசபையின் அபிவிர்த்தி சம்பந்தமாக அப்போதைய காரியதரிசி பிரம்மஸ்ரீ பி. கல்யாணசுந்தராச்சாரியார் எழுதிவந்த வியாசங்களையும் வாசித்துவந்தவர்களுக்கு நன்குபுலப்படும். மேற்கூறிய காரியதரிசியாரே ஷை பாடசாலை சம்பந்தமாய்த் தீபாவளித் தண்டல் முதலியவையும் தண்டியும் வந்தனரே அவரைப்போன்ற அறிவாளிகள் என்னதான் பொறாமை என்னும் கொடும்பிணிவாய் வீழ்ந்திருந்தபோதிலும் தமது அபிப்பிராயத்தை மறுத்துப் பேசத்துணிவரா? துணியின் அன்னவரை எனைய அறிவாளர் எவ்வகுப்பிற் சேர்ப்பர். ஷை பாடசாலை விஷயமாய் தீபாவளித் தண்டல் தண்டிய உண்டி திறப்பு காலத்தில் திருச்சி விஸ்வப்பிராம்மண சென்ட்ரல் சபை காரியதரிசியாகிய டி. எ. முத்துகிருஷ்ணமாச்சாரியர் முதலியவர்கள் ஷை பாடசாலை அத்தியாவசியமெனும் விஷயமாக உபந்நியாசஞ்செய்துள்ளதையும் ஷை பிரசுரங்களில் காணலாம். அவர்களெல்லாம் அறிவாளிகளல்லவா? அறிவுள்ளோரே கவனியுங்கள்.

அன்பர்களே! நமது குலம் முன்னிலைமைக்கு வரவேண்டுமென்னும் எண்ணம் உங்களுக்கு மெய்யாக இருக்கும்பட்சத்திலும், நமது குலச்சிறுவர்கள் வேதாத்தியயனத்தில் நாளடைவில் தேர்ச்சியுற்று, நம்மால் பரிபாலிக்கப்பட்டுவரும் ஆலயங்களுக்கும் மற்றைய கிருகசம்பந்தமான புண்ணிய கிரியைகளுக்கும் பயன்படவேண்டுமென்னும் எண்ணம்உள்ளபட்சத்தில் ஏற்படுத்தியுள்ள வேதாத்தியயன பாடசாலைகளை விருத்திசெய்வதிலும் அவையில்லாத இடங்களில் அவைகளை ஸ்தாபிப்பதிலும், தக்க பண்டிதர்களை அப்பாடசாலைகளுக்கு உபாத்தியாராக நியமிப்பதிலும் பேரூக்கங்கொண்டு உழைத்து வருவீர்களென்று நம்புகிறோம்.

**கோ. கன்னியப்பாச்சாரி.**

## உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்.

என்னும் பழமொழிக் கேற்க நான் சில பழய ஆதாரங்களால் நம்மவர்களிலிருக்கும் பிரிவினைகளை வெளியிட்டேன். அப்பிரிவினைகளை ஒன்றுபடுத்துவ தசாத்தியம். எத்துணை முயற்சியும்பயன்படாது. ஆனால் இப்பகுதியாரை யெல்லாம் ஒரே சமயத்தா ராக்குவது சுலபம். எப்படியெனில் அவரவர்கள் இருந்தபடியே இருந்து எல்லாரும் ஒரே சமயாசாரக் கொள்கைகளை யனுஷ்டிக்கச்செய்வது சுலபமாய்க் கூடும். அப்படிச் செய்வதனால் நம்மவர்களுக்குள் ஆரம்பத்திலேயே சமயவிஷயத்தில் ஒற்றுமை வாய்க்கும் காலக்கிரமத்தில் அவ்வொற்றுமை நடித்து சிலநண்பர்கள் கருதுகிறபடி நடை யுடை பாவனைமுதலிய எல்லா விஷயங்களும் ஒரே தன்மையாய்விடும். இதை யனுசரித்தே நம்மவர்களுக்குள் முதல் முதல் சமயப்பற்றுண்டாக்கக்கருதி எழுதியதாகும். இச்சமயம் இப்போது புதிதா யுண்டாக்கப்படுவதல்ல. நம்பழய நூல்களின் துணிபே. அன்றேல் வேதங்களில் விஸ்வகர்மாவை பகவானாகத் துதிக்கப்பட்டிராது. விஸ்வகர்மாகம புராணங்களும் பழமையா யேற்பட்டிராது. இது நிற்க:

மங்கலம்பேட்டை பிரம்மஸ்ரீ கூந்தலூர் சுப்பராஹ்மண்ய ஆச்சாரியார் அவர்கள் நம் விஸ்வகர்ம குலோபகாரி 7-ம் சஞ்சிகை முதல் 9-ம் சஞ்சிகை வரையில் மூன்று சஞ்சிகைகளில் தொடர்ச்சியாய் "பெற்றியை யோர்பும் வித்தியர்க்கோர் அத்தியாவஸ்ய விண்ணப்பம்" என்னும் தலைப்பின்கீழ் நம்குலத்தோர் பூதபவிஷ்ய

வர்த்தமான மென்னும் திரி காலத்திலும் எத்தகை ஸ்திதியிலிருந்தனர்; என்றாரம்பித்து முதல் மூன்று பாராக்களில் பூத வர்த்தமான ஸ்திதிகளை விளக்கி, 4-ம் பாராவில் இனி நிகழப்போகும் பவிஷ்யத் காலத்தின் நிலைமையை அறிவிப்பதற்கு முன் நான் எழுதிய விஷயங்களை யாரம்பித்து, 5-ம் பாராவில் முடித்து, 6-ம் பாராவில் சைவவைணவ சமயத்தாரின் புண்டர பேதங்களைக்காட்டி அதுபோல நாம் பிரத்தியேகமான விஶ்வகர்ம சமயம் என்பதற்கான எந்த அடையாளங்களைத் தரித்து வருகிறோம் என்றார். இவர் நாம் தரிக்கும் அடையாளங்களைக்கொண்டு சமயம் நிருணயித்தது விரலுக்கு ஆழி என்பது போய் ஆழிக்கு விரல் என்றதுபோலாம். நாம் விஶ்வ கர்ம பக்திபூண்டு விஶ்வகர்மார்ச்சனை செய்துவாராதது நமது குறையே. இல்லையென்றுசொல்வது முன் சொன்னதைப்போன்றதே. நம்மவர்கள் விஷ்ணுசின்னங்களாகிற திருமண், துளபமாலை முதலிய வணிந்து விஷ்ணு பக்தர்களாய் நடந்து வருவதில்லை. நடந்துவருவதாய்ச் சொல்வது மிகவும் புதுமையானதே.

7-ம் பாராவில் வேலூர் தீர்ப்பையனுசரித்து நாம் ஆதியில் விராட் விஶ்வப் பிரம்ம சமயத்தாராயிருந்ததையும், பிறகு ஸ்மார்த்த சைவ சமயத்தாராயிருப்பதையும் ஸ்திரமாகும் என்றார். இவர் இம்மூன்றில் எதை ஸ்திரமென்றாரோ தெரியவில்லை. அந்த ஸ்திரம் நான் கூறிய விஶ்வகர்ம சமயத்துக்கும் பொருந்தி யிருக்க முந்திய கூற்று பயனின்றாம்.

8-ம் பாராவில் நாம் தேவ சிற்பியாகிய விஶ்வகர்மாவால் உற்பத்தியாகி பிரதிபலித்து வருகிறோமென்பது கிரமம் என்றார். நம்மவர்களின் உற்பத்தியைக்கூறும் நம் பழைய நூல்களில் நம்மவர்கள் விராட் விஶ்வகர்மாவின் முகத்தில் உற்பவமானதாய்ச் சொல்லி யிருக்கிறதே யொழிய தேவ சிற்பியாகிய விஶ்வகர்மாவால் உற்பவமானதாய்ச் சொல்லவில்லை. இதுவே நான் கூறும் சமயத்தை நிச்சயிப்பதற்கு முக்கிய ஆதாரம். ஸ்ரீவிராட் விஸ்வகர்மாவின் முகத்திற் பிறந்தவர்கள் விஸ்வகர்ம குலஸ்தர் என்றால் அவர் தோள் துடை பாதங்களிற் பிறந்தவர்கள் என்ன குலத்தாரோ தெரியவில்லை. அசுர சிற்பியாகிய மயன் வமிசத்தாரிப்போதில்லையென்றார். அவர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை. முற்றிலும் அழிந்தார்களென்றால், ஆதாரமில்லை. இலங்கையிலுள்ள வெளி நாட்டார் நீங்க மற்ற சுதேசிகள் யாரோ கிழக்கிந்திய தீவுகளிலுள்ள சுதேசிகள் நரமாமிச பக்ஷணிகளல்லவா? அவர்களிற் சிலர் இங்கு வந்து கலந்திருக்கக் கூடாதா?

9-ம் பாராவில் மதுமாம்ஸ முண்பவர்களை மயன் சந்ததியாரெனக்கூறுதல் அனுசிதம் என்றார். அவர்கள் எல்லாரும் பாரம்பரியமாய் அப்படிப்பட்டவர்களா யிருப்பார்களானால் அப்படி கூறுவது உசிதமேயாம். அவர்கள் முற்காலத்தில் அப்படியில்லாமல் இப்போது வரவர அப்படியானாலும் அவர்களில் ஒருபாலார் அப்படியில்லாமல்ஒருபாலார் அப்படியிருந்தாலும் அப்படி கூறுவது அனுசிதமே. ஆனால் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் திருந்திவிடுவார்கள். தங்கள் தற்கால ஸ்திதியை பத்திரிகைகளில் வெளியிட்டுக்கொள்ளவுமாட்டார்கள். இவர் இருந்த விடத்திலிருந்தே தம்மைச் சூழ்ந்தவர்களைப்போல் இத்தேச முழுதும் இருப்பார்களென்றே எண்ணியவர் இப்பிரதேசத்தின் பல்வேறிடங்களில் பல்லாயிரங்குடும்பங்கள் பாரம்பரியமாய் வைதிகாசாரங் கைவிடாதிருப்பதை இவர் நேரில் வந்து கண்டும், கேட்டும் அறிவது நலம். இவ்விஷயம் வேண்டும்போது விரிக்கக் கருதி இங்கே சுருக்கப் பட்டது.

10-ம் பாராவில் நிடாத ஸ்தபதிகள் தீண்டாக்கம்மாளரென்னும் மலையாளத்து கம்மாளரா யிருக்கலாமென்றார். அப்படியிருந்தால் இருக்கட்டும். ஆஸாரி யென்பது பட்டப்பெயராயல்லாமல் ஓரிழிகுலத்தின் பெயரா யிருப்பதை மனு ஸ்மிருதியால் நிரூபிக்கமாட்டுவேன். ஆனால்ஆசாரி யென்பது உயர்வாகிய நம் குலத்தின் பட்டப்பெயராம்.



11-ம் பாராவில் தாம் முந்திய பாராக்களில் கூறிய நியாயங்களால் நம்மவர் எல்லோரும் விஶ்வகர்ம்ம வமிசத்தாரேயாவர் என்றார். நம்மையே நான் வேறுகுலத்தாரென்று சொல்லவில்லை. வேறு குலத்தாரைத்தான் வேறுகுலத்தாரென்று சொல்ல வருகின்றேன். இரதகாராதிகரண விசாரத்திற் கூறும் நிடாத ஸ்தபதி அல்லது, புறத்தச்சர் கருமாராகிய தீண்டாக்கம்மாளராவது இப்போதித்தேசத்திலில்லாமலில்லை. அவர்கள் நம்மில் பிரத்தியேகர்; இழி குலத்தார்; என்பதை மட்டும் நான் விளக்குகின்றேன். விளக்காவிட்டால் புராதன ஸ்மிருதிகள், நிகண்டுகள், சிலாசாஸனங்கள் முதலியவற்றில் சொல்லப்பட்டிருக்கும் இழிவு நம்மைப்பற்றும். அதை விளக்கினால் அவ்விழிவு நம்மை கிஞ்சித்தும் பற்றாது. மேற்கூறிய வகையாரையே பற்றிநிற்கும். அவ்வகையார் பூர்வம் இத்தேசத்தில் பாவி யிருந்தவர்கள். இதுவும் சமயம் வாய்க்கும்போது விரிக்கக் கருதி இங்கே சுருக்கப்பட்டது.

12-ம் பாரா முதல் 16-ம் பாரா வரையில் இவர் தம் முறையானும் பிறநூலானும் குலத்தை சீர்திருத்தும் நியாயங்களையும் விடாமுயற்சியையும் நன்குவிளக்கியிருக்கின்றனர். இவர்கூற்றுக்கு நான் இதுகாறும் விகற்பித்துக் கூறுவதின் முடிவாவது:—பாரம்பரியமாய் நம்மில் பிராம்மணீகத்துக்குரிய பல கூட்டத்தார் உண்டென்பதும், அதற்கு வேறாகிய இழிகுலத்தாரும் அப்படியே உண்டென்பதும், எல்லாரும் விஶ்வகர்ம சமயத்தார் என்பதுமே. பாரம்பரியமாய் நம்மில் பிராம்மணீகத்துக் குரியா ரில்லாவிட்டால் இப்போதும் நம்மில் வேதாதி நூல்களோதுதலும், வைதிகாசாரக் கிரிகைகள் செய்துகொள்ளுதலும் இராது. நமக்கு வேறாகிய இழிகுலத்தா ரில்லையென்றால், மற்றவர்களாலும் மேற்கூறிய நூல்களிலும், சாஸனங்களிலும் சொல்லப்பட்டவர்கள் நாமாவோம். அபபடியானால் நாம் இப்போது பிராம்மணீக உரிமை பாராட்ட ஞாயமில்லை. அவ்வகையாருக்கோ பிராம்மணீக உரிமையில்லை. நாம் அவர்களைப் பிரிக்காமல் நம்மில் சேர்த்துக்கொண்டாலும் நம் பிராம்மணீகம் செல்லாது பிறர் பரிகாசத்திற் கிடமாகும். நம் முயற்சி யொன்றும் பயன்படாது அவலமாகும். எல்லாரும் விஶ்வகர்ம சமயத்தா ரல்லவென்றால் நம் பழைய நூல்களின் அபிப்பிராயம் முரணும். எல்லாரும் இலேசில் ஒன்றுபட்டிணங்கார்கள். இப்போதுள்ளபடி பலபிரிவினைகளுக்குள்ளாவதுமன்றி பல விபரீதங்களுக்கிடனாகும்.

ஆகையால் முதல்முதல் குலம் என்று பிரவேசிப்பதினும் சமயம் என்று பிரவேசிப்பது நலம். சுபம்.

**அத்தியாபக லிங்காச்சாரி,**
கணியம்பாடி.

## மனிதர்களுக்கு அவசியமானது எது ?

மனிதர்களுக்கு அவசிய மானது சர்வதுக்க நீக்கமும் நீங்காத வானந்த வாப்தியுமா மென்பதை யொப்பாதார் யாவருமிலர். அங்ஙனமாயினும் "மானங்குலங் கல்வி வண்மை யறிவுடைமை, தானந்தவ முயர்ச்சி தாளாண்மை,தேனின், கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்பறந்து போம்." என ஔவைப்

பிராட்டியார் கூறியவாறு மனிதர்களுக்கு அன்னமே அவசியமாமெனப் பெறப்படுதலால் மேற்கூறிய சர்வதுக்கநிவிர்த்தியும் பரமானந்த வாப்தியுமாய மோக்ஷமெங்ஙன மவசியமாமெனின் அதைப்பற்றிச் சற்றாராய்வாம். ஒருவனுக்குப் பசிவந்தபோது அவன் அன்னத்தை வயிறாரவுண்டபின் அப் பசிநோய்தணிந்து சுகமடைகின்றான். பின்னர் சற்றுநேரத்திற்கெல்லாம் வயிறு தளர்ந்து சிறிது சிறிதாகப் பசியதிகரிக்க வதிகரிக்க மேற்கூறிய சுகம் மாறி துக்கமயமாகிவிடுகின்றான். ஆதலின் முற்கூறிய பரமானந்த சுகம் வாய்த்தற்கு அன்னம் நேர்காரண மன்றென்பது பெறப்பட்டவாறு காண்க. இதனாலன்றோ அவ்வையாரே "இடும்பைகூர் என்வயிறே வுன்னோடு வாழ்தலரிது" என்றார்.

இதுநிற்க, (பணமிருந்தாற் பத்தெட்டு வகையுஞ் செய்யு)மென்னும் பழமொழிக்கிணங்கவும் "கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்" என்னும் ஔவை வாக்கியத்திற் கிணங்கவும் ஒருவனுக்கு விசேடமாகத் திரவியமிருக்கின் அதுவே ஷை பரமசுகத்திற்கு நேர்காரணமாமெனின் அஃதும் பொருத்தமுடையதன்றாம். எங்ஙனமெனின், பொருளைச் சம்பாதித்தலி லுண்டாகுந் துன்பமோ அளவிடக் கூடியதன்று. திரவியஞ் சம்பாதித்த ஒவ்வொருவரும் நான் இத்திரவியங்களைச் சம்பாதிக்க எவ்வளவு பாடுபட்டேன் என்று கூறுவதே யிதற்குச் சான்றாமென்க. அதனோடு திரவியத்தை வைத்துப் பாதுகாக்கும்போது திருடராதியோர்கள் செய்கின்ற தொந்தரவினாலும், வட்டி முதலியவற்றால் திரவியப்பெருக் குண்டாகவில்லையே என்னு மேக்கத்தாலு முண்டாகுந் துன்பத்திற்கு மளவின்றாம். பின்னும் அத்திரவியத்தைச் செலவிடும்போதும் பெருந் துன்பமென்பதும் சொல்லாமலே விளங்கும். இதுவன்றி யொருவரிடத்துத் திரவியத்தை யெல்லாம் கொடுத்துவிடினும் அடிவயிற்றில் ஆறுநெருப்பிட்டதுபோல் அளவிலாத் துன்பமேயாகும். இவற்றையெல்லா முற்றுநோக்கியன்றோ பெரியார் "இன்னறரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே, பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—யன்ன, தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா, லிழத்தலுந் துன்பமேயாம்" எனக் கூறியிருக்கின்றனர்.

இவ்வாற்றால் திரவியமும் நிலைத்த சுகத்திற்குச் சாதனமன்றாமென்பது விளங்கற்பாற்றாம். இவையாவுமின்றி உலகத்தில் பெரும்பாலும் இச்சிக்கின்ற வனிதையர் விஷயபோகமே ஷை சர்வதுக்க நிவிர்த்தியும் பரமானந்த பிராப்தியுமாய் மோக்ஷத்திற்குச் சாதனமென்பேமாயின், விசாரித்துப்பார்க்கு மிடத்து அஃது மன்றாகப் போய்விடுகின்றது. எங்ஙனமெனின், ஒரு புருடன் ஒரு ஸ்திரீயை விரும்புவது சுகத்தை முன்னிட்டன்றோ? அங்ஙனமே ஒரு ஸ்திரி ஒரு புருடனை விரும்புவதும் சுகத்தைமுன்னிட்டன்றோ? ஆகவே இருவரிடத்து மிருப்பது சுகத்தையன்றி வேறியாது. சுகமேயல்லவா, துக்கத்தைக்கொடுத்துவிட்டு சுகத்தை வாங்கினாலல்லவோ இலாபம். சுகத்தைக் கொடுத்துவிட்டு சுகத்தை வாங்குவதால் இலாபமென்ன? இதுஎப்படி இருக்கிறதென்றால் ஒருவன் கடைவீதிக்குச்சென்று ஆங்குள்ள ஒரு கடையில் தன் கரத்திருந்த ஓர் பைசாவைக் கொடுத்து அக்கடைக்காரனிடத்து வேறோர் பைசாவை வாங்கிக்கொண்டு மிகுந்த சந்தோஷத்துடன் திரும்பி வந்ததற் கிணக்கபாகவன்றோ விருக்கின்றது. இன்னும் விருங்கிற் பெருகுமாதலின் விஷயமாத்திரம் இதைப்பற்றிக் கூறி இதைவிடுத்து மேற்கூறவேண்டிய விஷயத்திற்பிரவேசிப்பாம். அஃதென்னெனின், உடல் உயிருக்கு வேறு உயிருக்கு உடல் வேறென்பது "அறிகின்ற பொருளென்று மறிவானின் வேறே யானிவ் வூனை நானென்ன லாமோ செறிகின்ற புள்ளல்லவே கூடிவ் வகையே செடமானவுடனில் வேறென்றுதெளியே" என வான்றோர் கூறியுள்ள வாக்கியங்களைச் சற்று நிதானித்து யோசிக்குமிடத்து விளங்காமற் போகாது. உடல் உயிராகிய இவ்விரண்டனுள், உடல் சுகத்தைத் தருவதென்றாலோ உயிர்நீங்கியவுடல் சுகத்தைத் தராதொழிகின்றது யாவருமறிந்த விஷயமே; அல்லது உயிர்தருவதென்றாலோ உடல் நீங்கிய வுயிர் சுகத்தையளித்ததெனக் கூறுவாரொருவரு மிலர். ஆகவே இடைவிடாச்சுகத்திற்கு வனிதையர் போகமும் நேர்சாதன மன்றாமெனப் பெறப்பட்டமைகாண்க. பிறகெதுதான் மனிதர்களுக் கவசியமானதெனின், மேற் கூறிய சகலதுக்கங்களின் ஒழிவும், நீங்காவானந்த வடைவுமாய் மோக்ஷத்தை சாதனவாயிலாக வடைதலேயாம்.

இங்ஙனங் கூறியவற்றால் ஷை மோக்ஷத்தை யடைவதற்கு நேர்சாதனமாயும் பரம்பரா சாதனமாயு முள்ளது தான் யாதோவென்று விசாரித்துணர்ந் தனுஷ்டிப்பது அவசியமாமெனப்பெறப்படுதலால், அதைப்பற்றிச் சாஸ்திரானு சாரமாயும் யுக்திக்கிணக்கமாகவும் சிறிதாராய்வாம்.

தொடரும்.

**தழுந்தை வேலு ஆச்சாரி,**
நரசிங்க புரம்.

## பிறர்மனை நயவாமை.

பிறர்மனை நயவாமை யென்பது தன் மனைவியல்லாத மற்றபெண்டிர் கணவருடையவரேனும், இழந்தவரேனும் அவர்களை காமமயக்கத்தால் விரும்பாதிருத்தலாம். இக்கொடிய ஆசையை ஒவ்வொருவரும் ஒழிக்கவேண்டுமெனவும், இதனால் பலரும் அளவில் பாவத்திற்கும் கஷ்டத்திற்கு மாளாவதினின்றும் தடுக்கவேண்டுமெனவுங் கொண்ட கருணையால் நமது முன்னோர்கள் பல நல்லுரைகளை நவின்றிருக்கின்றனர். அவற்றை வாசித்தும் பொருளறிந்தும் பிறர்கூற அடிக்கடி செவியேற்றும் அவற்றை முற்றிலும் மறந்தே கொடியோர் சங்கத்தில் குதூகலத்துடன் கூடிக் களிக்கின்றோம். இவ்வித கூட்டுறவாலுண்டாகிய மயக்கத்தால், நம் பெண்டிரிடத்தனுபவிக்குஞ்சுகம் சிற்றின்பமென்பதையும், அது அற்ப நேரந்தான் ஆனந்தத்திற் காதாரமாயிருந்து பிறகு துக்கமாகத் தோற்றுவதால் அநித்தியமென்பதையும் அறியாதிருக்கின்றோம். இப்புல்லறிவின் முதிர்ச்சியாலே பிறஸ்திரீகள் நடந்து செல்லுங்கால் கண் இமையாது வெட்கமின்றி உற்று நோக்குவதாலும், அவர்களை அடைய விரும்புவதாலும், பொருள் கொடுப்பதினாலோ வேறு காரணத்தினாலோ அவர்களைச் சேருவதினாலும், என்ன சுகங் கிடைக்கப்போகிறது. யோசித்துப் பார்க்கின் தானே விளங்கும். அவர்களது துர்ச்செய்கையை அன்னியர் அறிந்துவிடுவரோ என்ற பீதி அவர்கள் மனதில் இடைவிடாது குடிகொண்டிருக்க நிற்பயமான உற்சாகம் அவர்களுக் கெப்படி உண்டாகும்.

ஆனால் சிலரோ மானமென்பதை கைவிட்டு தனக்குக் கீர்த்தியுண்டாயதுபோற் கருதி,

"திருவினு நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறவிய
வாயினவேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்"

என்றபடி தன் மனைவி அகத்தில் வருந்த அயல் மனையே சுவர்க்கமெனக் கொண்டு பொருள் முழுதும் செலவழித்து பூரித்துலாவுகின்றனர். "காமத்தில் மனதானைக் கொள்ளும் பெண்டொடு கலவிசெய்" என்ற பெரியார் சொல்லை இகழ்ந்த பாவ

திற்காளாவது மாத்திரமன்றி இவர்கள் பலபேர் முன்பாக தனக்கெனக்கொண்ட இல்லாளை தள்ளிவிட்ட பாவத்தை யடைவரன்றோ? தன் தங்கை, தன் புத்திரி இவர்கள் கணவர் இவ்வாறு ஒழுங்கின்றி நடக்கின் தனக்குச் சம்மதமாமோ ?. இது மிகவும் கவனிக்கத்தக்கதே.

பொதுமகளிரன்றி பிறர் மனையாளை விரும்பும் பேதையருட் சிலர் கணவனுக்குத் தெரியாமல் தூரதேயங்களுக்கு திரவியம் ஆபரணங்களுடன் அப்பெண்களை அழைத்து ஓடிவிடுகின்றனர். தன்னில்லாளை பிற னிவ்வாறழைத்துச்செல்ல தான் இஷ்டப்படுவரோ ? அக்கால் தன் மனம் பதைப்பதுபோல் அம்மாதரை மணந்தார் மனமும் பதைக்காதோ? இத்தகையோர்க்கு அரசனால் வரும் தண்டனை மாத்திரமன்று, நாசகாலமே கிட்டியதென்பதை,

“நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங்காலத்திற்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல்-ஒண்
{டொடி
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலம் அயல், மாதர்மேல் வைப்பார் மனம்.”

என்ற செய்யுளால் ஔவை அறிவுறுத்தினர்.

இத்தீயோர்களை பகை பாவம் அச்சம் பழியென்ற நான்கும் விடாதுபற்ற அறம், புகழ், கேண்மை, பெருமை யென்ற நான்கும் சிறிதும் அடையாது விலகும். இவர்கள் நரகிலடையுந் துன்பங்கள் புராணங்களில் விரித்துக் கூறப்பட்டிருப்பினும் இவ்வுலகிலடையு மிழிவுகள் எடுத்துரைக்கற்பாற்றன்று.

“சீலங்குலம்அடியாள் தீண்டிற்கெடுங்கணிகை
ஆலிங்கனம் தன நாசமாகும்—நூலிழந்த
வல்லிதழுவக் குறையும் வாழ்நாள் பிறர்தாரம்
புல்லினர்க்கெல் லாநலமும் போம்”

என்ற நீதி வெண்பாவும் நினைவிலிருத்தற்குரியது.

ஒருவன் தன் மனையாளையே தாயாகவும், சகோதரியாகவும் கருதவேண்டிய சமயமுண்டெனின், பிற பெண்டிர்க்கு இவன் சகோதரனாக விருக்கவேண்டுமென்பதற்கு ஐயமென். பரதார சகோதரனெனப்படுவோனே பேராண்மை யுடையனெனச் சொல்லப்படுகிறது. இவ்வாண்மை யுடையோர்க்கே பெரும்புகழ் உண்டாகும் இவர்களிடத்தே சகல நற்குணங்களும்பொருந்தும். இவர்கள்வாக்கை பகைவரும் அங்கீகரிப்பர். இவ்வாண்மையில்லாதவர்களின் சொல்லை தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள்கூட எதிரில் அடங்கினவர்போல் நடித்தாலும் புறத்தில்தூஷிப்பர்.

ஆகையால் நாம் எக்குணமுடையோராயிருப்பினும் இனிதிருந்தும் நெறியைக் கைப்பற்ற விரும்பின், மாதர் கூட்டத்திற் செல்லாதும், பொது மகளிர் சங்கீதத்திற்கு அங்காந்து திரியாதும், வேடிக்கை நாடகங்களுக்குப் போகாதும், புருஷார்த்தத்தை பெறக் கருதி யுழைக்கும் புண்ணியர்கள் நட்பையே நாடி, நல்லறிவு நல்லொழுக்கங்களைப் புகட்டும் நூற்களை ஆராய்ந்து, தருமவழியிற் பொருளீட்டி, பாதாரப் பிரியனாயிராது பரதார சகோதரனாயிருந்து காலங் கழிக்கவேண்டும். இவ்வாறு பழக பரமேசனது கருணையை முன்னிட்டு முயலுவோமாக,

S. ஆனையப்பாச்சாரி.

---

## தம்மக்களைப் பேணல்.

இந்தியாவில் புருஷர்கள் ஸ்திரீகளை வேதவிதிப்படி மணந்து பல குழந்தைகளைப் பெற்றெடுப்பது மோக்ஷசாதனமாமெனக்கருதப்படுகிறது. அடையும்மக்கள், நன்மக்களாய் வாய்க்கின் சுபகரமே. அவ்வாறின்றி அடைந்தமக்களை நல்வழியில். அடக்கி நடத்தவேண்டுமே யென்ற கவலை எல்லா இந்தியப் பெற்றோர்களுக்குள்ளும் காண்பது அருமை.

இக்கவலைக் குறைவால் விளையுங் கேடு அம்மக்கட்கும், அவர்களை யீன்றெடுத்த தாய் தந்தையர்க்கு மட்டுமல்ல; அவர்கள் குடும்பம் குலம், தேசம் இவைகளுக்கும் பெருங் கேடுகளை நாளாவட்டத்திற் கொடுப்பதாகும்.

ஆகையால் தம்மக்களைச் சரியான வழியில் வளர்த்துப் பாதுகாக்கும் பெற்றோர்கள் தங்களுக்கும் தம்மக்களுக்குமன்றி, தம் குடும்பம், தம் குலம், தம் தேசம் முதலியனவற்றிற்கு பெரு நன்மையைச் செய்தவர்களாவார்கள்.

குழந்தைகளைப் பேருக்காவது பெற்றெடுக்க வேண்டுமென்றும், அதனாலேயே சகல இகபர சாதனங்களு முண்டாய்விடுமென்றும் நினைப்பது சரியல்ல.

முத்துச் சிப்பிகளில் ஜனிக்கும் முத்துகளெல்லாம் மதிக்கத்தக்க முத்தாய்விடமாட்டா. ஆனால் அவைகளில் “சுண்டு முத்து” என்று சொல்லும் முத்தே மதிப்பிற் கடங்காத முத்தாகவும், கொண்டவனைக் குபேரனாக்கும் செல்வமாகவும், சக்காவர்த்திகள் அல்லது கோடீசுவரர்களின் சிரசிலும் மார்பிலும் நின்றிலங்கும் பாக்கியத்தைப் பெறும் ஆபரணமாகவும் கொள்ளப்படும்.

அதுபோல, ஒருவனுக்குப் பிறக்கும் குழந்தைகளெல்லாம் குழந்தைகளாய் விடமாட்டார்கள். அவர்களில் பெற்றோர்களிடம் பயபக்தி விசுவாசமும், நற்குணநற்செய்கையும், புத்திசாலித்தனமுமுள்ளவனாய், கல்வியில் பயின்று ஜீவனோபாயங்களை அல்லது குடும்ப நிர்வாகங்களைத் தெரிந்து அவைகளைக் கைக்கொண்டிருக்கும் சிறுவனே சர்வ சிலாக்கியமானவன். அவனைத்தான் பெற்றோர் ‘தம்மகன்’ எனநாவாரச் சொல்லிக்கொள்ளவும் அவனைத்தான் கணக்கிலெடுத்துப்பேசவுஞ் செய்யலாம்.

மற்றையகுழந்தைகளோ, சில முத்துச் சிப்பிகளில் ஒன்றுமில்லாமலும் இருந்தாலும், விலை பெறாத பொடி முத்தாகவும் இருப்பதுபோல பதர்களுக்குச் சமானமுமே யாவார்கள். அவர்களைப் பெற்றோராயினும் உலகத்தாராயினும், கணக்கில் எடுத்துக்கொள்வதிற் பிரயோஜனமேயில்லை.

தேசத்திற்கு நிகழும் நன்மைகளெல்லாம், சற்புத்திரர்களின்செய்கை விடா முயற்சி, இவைகளின் பலனேயாகுமென்றும், தேசத்தில் விளையும் கேடுகளெல்லாம், துற்புத்திரர்களின் அறிவீனத்தாலும், அடாத செய்கைகளாலும் விளைவதாகுமென்றும் நாமறிகிறோம்.

ஒருவன் தன் குடும்பத்திற்கோ, அல்லது தான் பிறந்த தேசத்திற்கோ நன்மை செய்யவோ, நன்மை செய்தவனாகவோ கருதப்பட வேண்டுமென்று பிரியப்படுவானாகில், அவன் தன் மக்களை இளமையிலேயே சரியானபடி வளர்த்து பாதுகாத்தும், நற்பழக்க வழக்கங்களிற்பழக்கியும், அவைகளினின்றுஞ் சிறிதுந் தவறுவாறு கண்காணித்தும் வரவேண்டும். அவ்விதம் வளர்க்கப்பட்ட மக்கள்தான் நன்மக்களாவார்கள். அவர்கள் தாம் பெற்றோர்களுக்கு இகபர சாதனத்தைத அளிக்கும் புத்திரர்கள். அவர்கள் தாம் தம் தேசத்தை முன்னேற்ற மடைவிப்பவர்கள்.

மேலும் கடவுள் மனிதருக்குக் குழந்தைகளை வீணே கொடுப்பதில்லையென்றும், கடவுள் பெற்றோர்களைப் பார்த்து ‘இந்த குழந்தையைப் பெற்று எனக்காகும்படி வளர்த்துப் பாதுகாப்பாயாக’ என்று ஆணையிட்டளிப்பதாகவும் மெய்ஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இக்காரணம்பற்றியே, “மரத்தை வைத்தவன் ஜலத்தை விடுவான்” என்றும், “என்னைப் படைத்தவன் எனக்குப் படியளப்பான்” என்றும் பழமொழிகள் வழங்கி வருகின்றன.

ஆகையால் ஒவ்வொரு பெற்றோர்களும் தங்கள் மக்களை “குலத்தைக் கெடுக்கும்

"கோடரிக் காம்பு" போல் வளர்த்துவிடாமல், தங்களுக்கும் உலகத்துக்கும் முக்கியமாய் கடவுளுக்கும் ஏற்ற சற்புத்திரர்களா யிருக்க வளர்ப்பது அவசியமாகிறது.

இனி வளர்த்தல், பயிற்றல், பாதுகாத்தலென்னும் விஷயங்களை யெடுத்துச் சொல்வோம்.

சிறு குழந்தைகளா யிருக்கும்போது தம்மக்கள் துஷ்டத்தனமாய் அல்லது மந்தமாய் இருப்பதைப்பற்றி யாரேனும் குறை கூறினால், அப்பொழுது சில பெற்றோர்கள் அப்படிச் சொன்னவரைக் கோபித்துக் கொள்வதும், அல்லது வயது வந்தால் எல்லாம் சரியாய்ப் போமென்று சமாதானம் சொல்வதும், இயற்கையாகவிருக்கிறது. அப்படிச் சொல்வது புத்திசாலித்தனமா? அல்ல. ஒரு வகையான மூட அன்பின் அறிகுறியாகும்.

சிலர், தம்மக்களை நேரிலேயே, அளவுக்கு மிஞ்சிய செல்வங் கொடுத்தும், அவர்களை முகத்துக்கு முகமாக வைத்து, "இவன் பிறந்த பிற்பாடுதான் நான் க்ஷேமமடைந்தேன், சொத்து வாங்கினேன், அது அநுகூலமாயிற்று, இது கைக்கு வந்தது" என்றும் பலவாறு புகழ்ந்தும், "உன் தமையன் இளமையில் உன்னைப்போல்தான் துஷ்டனாயிருந்தான், நான்கூட சிறு பிள்ளையா யிருக்கும்போது மந்தமாயிருந்தேன். இப்பொழுது நாங்களெல்லாம் முன்னுக்கு வரவில்லையா, அதுபோல நீயும் வயது வந்தால் சரியாய்விடுவாய். எப்படியாவது கடவுள் உனக்குப் பூரண ஆயுளையும் சரீர ஆரோக்கியத்தையும் தரவேண்டியதே எங்கள் பிரார்த்தனை" யென்று பலவாறு குளறி வழிவதும் வழக்கம். இம் மூடத்தனத்தைவிட மக்களைக் கெடுக்கும் கொடிய பழக்கம் வேறெதுவுமில்லை. ஆகையால் இது அறவே ஒழியவேண்டும்.

"மக்களை மனதிற் காதலிப்பதே மதியுடைமையாகு" மென்று பெரியோர் கூறுவர்.

ஆகையால் குழந்தைகள் புவியிற் பிறந்த நிமிஷம் முதலே, அவர்களைத் தக்கபடி பயிற்றும் பாரமும், பெற்றோர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன வென்பதை இங்கு வற்புறுத்துகிறோம்.

(தொடரும்.)

T. R. சதானந்தன்.

---

(314-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## சக்கிய சம்வாதம்.

பிரபோதன்:—அன்ப! உலகில் பல்வேறு வகைத்தாய நூற்களாக விருப்பினும் முடிபு ஒன்றேயாமெனத் தெளிக.

ஆதவன்:—அங்ஙனமாயின் நூற்களெத்தனை பகுதியுடைத்து?

பிரபோதன்:—ஞானசாத்திரமெனவும், சமைய சாத்திரமெனவும், இதிகாச சாத்திரமெனவும், இங்கித சாத்திரமெனவும், நான்கு பிரிவிற்குள்ளாகவே பல சாத்திரங்களு மடங்கும்.

ஆதவன்:—இச்சாத்திரங்களின் விபரமும் கருத்தும் அறிவான் வேட்கை யதிகமடைந்துளேன்.

பிரபோதன்:—பிரம சூத்திரம், தசோபநிஷத்து முதலிய நூற்கள் ஷண்மதங்களுக்கும் பொது நூலாகலின் பிரமம் என்னும் பெயரால் நிர்க்குண வஸ்துவை யோதியும் அதனை யடையு மதிகாரி கீழ்க்கீட்டுறைகளிற் பயின்று உத்தம குணங்களைப் பெற்றுள்ளவனாக இருக்க வேண்டுமெனவும், திரிபதார்த்த நிர்ணயமும் பந்த



முத்தியின் சொரூபமும், அப் பிரபந்த அபரோக்ஷ சாக்ஷாத்கார ஞானத்தின் சொரூபமும், அதனை யனுக்கிரகிக்கும் ஆசானிலக்கணமும், அதனை யடையும் சாதனங்களும், அதற்கு விக்கினமாய பிரதிபந்தத்தின் சொரூபமும், அதனை நிவர்த்திக்கு முபாயமும், ஜீவன் முத்தியும், அதன் சாதனமும், அதனையடையச் சாதனமும், அதன் பிரதிபந்தமும், அததனைத் தவிர்க்குமுபாயமும், அதன் பிரயோஜனமும், விதேக முத்தியும் அதன் சொரூபமும் கூறியுள்ளதாம்.

சமய சாத்திரங்களோ, சட்சமய கடவுளாகிய சிவ, விஷ்ணு, சக்தி, குமார, கணநாத பைரவமாகிய ஆறு மூர்த்திகளும் காரியப்பாட்டால் ஆறு வடிவங்களாகக் காணப்படுவதன்றி ஒன்றே இப்படி நடித்தலாகுமெனச் சகள நிஷ்களத்துக்கு மபேதங் கற்பித்துக் கூறுவதாகும். அந்நூற்களோ வேதம், உபநிஷத்து, ஆகமம் முதலியதுமாம். இதில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களும் அதன் சொரூபமும் அதனை வியற்று மதிகாரியும், அனுக்கிரகம் செய்யும் குருவும், செய்யும் தந்திர மந்திரக் கிரியா பேதங்களும் அதற்கு விக்கினங்களும், நிவர்த்திக்கு முபாயங்களும் பிரயோஜனமாகிய சாலோக, சாமீப, சாரூப சாயுச்சிய பதங்களும் (சொரூப முத்தியினை யிதற்குள் அடக்கிக் கூறும்) திரிபதார்த்த நிர்ணயமும், பதமுத்தி, பரமுத்தி, ஜீவன் முத்தி யென்னும் முத்தி யிலக்கணமும், பந்தத்தின் சொரூபமும், பிறப்பு இருப்பு, இறப்பு என்னும் முத்திற வவத்தையின் சொரூபமும், பக்தி யென்னும் உபாசனைக் கிரமத்தினியல்பும், அதன் சாதனப் பிரதிபந்த நிவர்த்தி யுபாயப் பிரயோஜனமும், அணிமாதி யஷ்டசித்திகளும், மணிமந்திர ஔஷத பூர்வகமாக வியற்றும் கிரியா பேதமும் கூறும்.

இதிகாச நூற்களோ, மேற்கூறிய சமயக் கடவுளரியற்றிய திருவிளையாடலும் அவதார விசேடமும் பல பிரபல சக்தியுடைய மன்னர், பக்தர் முதலிய சரிதத்தினையும், ஞானமாகிய இருநெறி தத்துவக் குறிப்பினைச் சிலேடை முகத்தானுணர்த்தி பக்தி யோக மார்க்கமாக ஞானத்தினை யடைந்து மோக்ஷத்தினை யடையு மார்க்கமும், அண்ட பிண்ட விலக்கணமும், திரிபதார்த்த வர்ணனையும், குருபரம்பரையும், அரச பரம்பரையும் பிறவுங் கூறுவதாம். இது பதினெண் புராணங்களும், இராமாயண பாரதமாகிய இதிகாச நூற்களாகும்.

இங்கித நூலினை வடநூலார் அலங்கார நூலெனக் கூறுவர். மேலே கூறிய மூன்று பகுதியிற் கூறிய அபிப்பிராயங்களைச் சிலேடை முகத்தால் தலைவன் தலைவியும், பாங்கன் பாங்கியும், நற்றாய் செவிலியும், பாணன் விறலியாதிய தூதிக் கூட்டமும், களவியல் கற்பிய லென்னும் இருமார்க்கமாக நிகழும், கூட லூடல் பிரிதல் அலர் காவலாதியச்சமும், மடலும் இவை நிகழ்தற் கேதுவாய குறிஞ்சி முல்லை நெய்தல் மருதம், பாலையாகிய ஐந்திணை யிலக்கணமும் அதிலுள்ள கருப்பொருளின் சொரூபமும், இன்ப நுகர்ச்சியும், பரத்தையின் குணமும் பிறவும் கூறப்பட்டுள்ளன. தமிழில் இறையனாரகப் பொருளும், நாற்கவிராஜ நம்பியகப்பொருளும் பிறவுமாம். இதற்கிலக்கியமாக வுள்ளது திருச்சிற்றம்பலக் கோவை, தஞ்சைவாணன் கோவை கல்லாடம் முதலியனவாம்.

ஆதவன்:—சுவாமிக ளிதுகாறும் எளியேன்மீது கிருபை கூர்ந்து கூறிவந்த அரிய விஷயத்தினைக்கேட் டின்புற்றே னாயினும் சில வையமுளது. அதாவது மேலே கூறிய தத்துவ நூலும், சமய நூலும், இதிகாச நூலும் ஒரு அபிப்பிராயமுடையதென விசைத்தது மிகவும் நன்றே. நான்காவதாகிய இங்கித நூல் ஆண் பெண்களாகிய தலைவன் தலைவியின் கூட்டுறவானுள வாகின்ற சிற்றின்பத்தினைக் கூறவும், அதனைப் பேரின்பத்துடன் ஒற்றுமை

படக் கூறியது விந்தையிலும் அதிவிந்தையாகவே தோன்றுகிறது.

பிரபோதன்:—அன்பிற் சிறந்த நண்ப! அதிவினைய சாவதான சித்தத்துடன் கேட்டி. அரிசி யென்றினைப் பீயம் எனவும், சாவல் எனவும், அரியெனவும், ரைஸ் எனவும் பல பாஷைகளிற் கூறுவதுபோலவும் ஒரு மாணுக்கனுக்கு ஒரு விஷயத்தினை அறிவுறுத்தும் மேதாவியாகிய போதகர், தான் கூறியது போதமாகாவிடின் நீண்ட விஷயத்தினைச் சங்கிரகித்தும் இலகு பாஷையிலும் கூறிக்கூறி யறிவுறுத்துவதுபோல சர்வ கல்யாணகுண பூர்ண வஸ்து, தந்திர முகந்தால் இவ்விதங் கூறியதன்றி கல்லவன் கல்வி யனுபவிக்கும் சிற்றின்பமாகிய காமவின்பத்தினை யன்று. மற்றோ, பேரின்பமேயா மெனத் தெளிவது போறிஞர் பலர்க்கு மொப்ப முடிந்த முடிபாம். இவ்வித கருத்தில்லாவிடில் அத்தகைய நூலினை வேதாகம மாதிகலையெனப் புகழ்ந்து கூறியதன்றி திருச்சிற்றம்பலத்தி லேந்தொழிற்றுண்டவ மியற்றும் சாம்பமூர்த்தி யெழுதியதாகவும் பிரமாண மிருத்தலால் நாமதன் பொருள் தெரியாது தியங்குவது நமது கடமையன்றே கொள்ளற்பாலது. இதனாலன்றோ,

“ஆரணங்கா ணென்பர்
 அந்தண ராகமத்தின்
காரணங்கா ணென்பர்
 காமுகர் காமநன் னூலதென்பர்
யோரணங் கா ணென்பர்
 யெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக்
 கோவையைச் செப்பிடினே”

எனத் திருச்சிற்றம்பலக் கோவை முகத்திற் கூறிய பாவாலும், “தன்னை நீ புகழ்ந்துரைக்க பழுதில் செய்யுள் (கோவை) யெழுதினனதனால், புகழ்ச்சி விருப்பன்போலும்” எனச் சிவப்பிரகாச சுவாமிகள் செய்தருளிய நால்வர் நான்மணி மாலையாலும் தெளிவது கடனாம்.

(தொடரும்.)

பொது நன்மையை விரும்பும்
ஓர் சாது.

## வைதிகக்கல்வி.

சென்னை விஸ்வகர்மன் பத்திரிகை 9-வது சஞ்சிகை 75-வது பக்கத்தில் பத்திரிகாசிரியர் வைதிகக் கல்வியென்று தலைச் சாத்திட்ட ஓர் வியாசத்தை இதோபதேசமாக வரைந்துள்ளனர். அதிற் செறிந்துள்ள அபிப்பிராயங்கள் நமது மனதின் கண் மிகுந்த வியப்பை எழுப்பத்தக்கதாயிருக்கின்றன. அவர் கல்வியை ஒருவிதமாக பாகுபாடு செய்து வசனிக்கின்றார். அவர் வியாசத்தை நம் முழுமனதைச் செலுத்தி வாசிக்குங்கால் அப்பாகுபாடு ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வியென இருவகைத்தாகப் புலப்படும். ஆரம்பக்கல்வியே நம்மவரில் சிலருக் கில்லாதிருத்தலைப் பற்றி சிறிது அசூயை கொள்ளுகிறார். அதை யொழுங்குவாசனை யில்லாத முதியவர்களும் காலதாமதமின்றி கற்கவேண்டுமென்று வற்புறுத்தி பிறகு ஆரம்பக் கல்விக்கு மேலாகிய கல்வியைப்பற்றி சில அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார். அவரது அபிப்பிராயத் துவக்கத்தில் ஆரம்பக் கல்விக்கு மேலாகிய கல்வியை வைதிகக் கல்வி, லௌகீகக்கல்வி யென்று இருகூறாகச் செய்கிறார். அதன்பின்னர் ஆரம்பக் கல்விக்கு மேலாகியகல்வி வைதிகத்தைச் சார்ந்திருக்க வேண்டுமா அல்லது லௌகீகத்தைச் சார்ந்திருக்கவேண்டுமா என்கிற கேள்விக்கு காலதேச வர்த்தமானத்தைக்



கொண்டும், சில பெரியோர் அபிப்பிராயத்தைக்கொண்டும் சித்தாந்தப் படுத்தநினைக்கிறார். பின்னர், ஆரம்பக் கல்வியைப் போல் வைதிகக்கல்வி, பௌருஷேயமாகிய நமக்கு அத்தியாவசியமாயிருக்கிறதென்பதை நமது நண்பர்கள் கவனித்துப்பார்க்க விரும்புகிறார். நம்மில் சிலருக்கு ஆரம்பக் கல்வியில்லாததினால் அது முதலில் அவசியமாகிறது. ஆரம்பக்கல்வி பூரணமாயிருக்குமேல் அதற்குமேலாகியகல்விக்கு (லௌகீகமாயினும் சரி, வைதிகமாயினும் சரி) அவசிய மேற்படுமன்றோ; ஆரம்பக் கல்வியே அத்தியாவசியகமாயிருக்கும்போது ஆரம்பக்கல்வியைக் கைக்கொண்டவர் மேலே கற்கவேண்டிய உயர்தரக்கல்வியை வெறுப்பரோ? ஆரம்பக்கல்வி ஒருமடங்கு அவசியமாகிறபோது, அதற்கு மேலாகிய கல்விக்குப் பதின்மடங்குஅவசியம்தானே யேற்படுமன்றோ? ஆகையால் உயர்தரக் கல்வியில் ஒன்றாகிய லௌகீகக்கல்வி சில காலதேசவர்த்தமான போக்கிற்கு அநுசரணையாக எப்படி அவசியமாகிறதோ, அப்படியே வைதிகக்கல்வியும் சிற்சில காலதேச வர்த்தமான போக்கிற்கு அநுகுணமாகவே அவசியமாகிறது. அன்னியர்கள், நாகரீகம், நாணயம், உத்தியோக அந்தஸ்து இவைகளில் மேம்பட்டிருப்பதைப் பார்த்து எங்கும் நமக்கு எப்படி ஆங்கிலமூலமாய் கற்கவேண்டிய லௌகீகக்கல்வி அவசியமாகிறதோ அவ்வாறே அன்னியர்கள் ஆசாரம், வியவகாரம், நல்லொழுக்கம், ஈஸ்வரபக்தி இவைகளில் விர்த்தியைக் காட்டுவதைப் பார்த்து நமது தாழ்ந்தநிலைமையினின்று உயர்வையடையும்பொருட்டு வைதிகக்கல்வி அவசியமாகிறது. கர்ப்பப் பிராம்மணராகிய நமக்கு அது அவசியமில்லையென்று சொல்வதற்கு நம்மிடத்தில் ஆசாரம் வியவகாரம், நல்லொழுக்கம், இவைகளின் விருத்தியும், மனோபாவமும் மிகக் குறைவாக யிருக்கின்றதே. இவைகளோன் உடன்பிறந்திருக்கலாகாதோ? விஸ்வகர்மன் பத்திரிகாசிரியர் நித்தியகர்மானுஷ்டானம் நங்குலச் சிறார்களுக்கு அவர்கள் வீட்டிலேயே சொல்லிக் கொடுக்கப்படுகின்றனவென வாய்கூசாமல் சொல்லுகிறார். உபநயனமானதும் சந்தியவந்தன மந்திரங்களும், கிரிகைகளும் அவர்கள் வீட்டிலேயே தெரிந்துகொள்ளப்படுகின்றன என எப்படியோ துணிந்து கூறிவிட்டார். நம்மரபினர் குடும்பத்திலுள்ள பெரியோர்கள், சிறியோர்களை யோர் கூட்டத்தில் வரவழைத்து அவர்களை சந்தியாவந்தன மந்திரங்களை நம்செவிக்குப் புலப்படும்படிச் சொல்லச்சொன்னால் அவர்களில் எத்தனைபேர் ஒழுங்குடன் அம்மந்திரங்களைப் பிழையறச் சொல்லுவார்கள் ? சந்தியாவந்தன மந்திரங்களுக்கே மோசமாயிருக்கும்போது அங்கந்நியாசமும், கரந்நியாசமும், சப்தப் பொலிவும் அவர்களிடத்தில் எவ்விதம் காண்டலோ? நித்தியகர்மானுஷ்டான மந்திர ஒழுக்கத்துக்கு விலக்கான அக்குடும்பங்களில் பிரமசரிய முதலிய நான்கு வருணாச்சிரம நிலையின் இலக்கணத்தை யுணர்ந்து ஒழுக குடும்பப் பழக்கமே போதியதாகுமா ? போதியதன்றெனின் வைதிகக்கல்வி அவசியமாகு மல்லவா ? அவசியமாயின் வைதிக பாடசாலைகள் இன்றியமையாததல்லவா? ஆசாரம், நல்லொழுக்கம், மந்திரபடனம், மநநம், தியானமில்லாதகுடும்ப அங்கத்தினர் எங்ஙனம் அக்குடும்பச் சிறுவர்களுக்கு வைதிக போதகாசிரியராயிருக்கத் தகுதியாவரோ? அக்குடும்பம் எங்ஙனம் கலாநிலயமாகுமோ? ஆசார சீர்திருத்தம் எவ்விதம் சிந்திக்குமோ? நம்மவர்களின் குடும்ப ஒழுங்கீனங்கள்குன்றி எங்ஙனம் வைதீகபழக்கங்கள் அவர்களில்லத்து தலைகாட்டுமோ? வைதிகக் கல்விகற்கும் ஆருஷேயருடைய தொகையே தற்காலம் சுருங்கிக்கொண்டு வருகிறதென்பதனால் வைதிகக்கல்வியை துவக்கி இருக்கும் நம்மவர் தொகையும் இப்பொழுதே குறைந்துவிட வேண்டுமென்பது நல்ல அபிப்பிராயமாகுமா? ஆருஷேய பிராம்மணாள் வைதிகக் கல்வியிலும், வைதிகப் பழக்கத்திலும் கெடுநாளாய்த் தோய்ந்தவர்கள்.

அவர்களுடன் நம்மை ஒத்திட்டுப் பார்ப்பது மௌடீகம். அவர்களுக்கு வைதிகக் கல்வியும், பாடசாலையும் தற்கால அவசியமில்லாதிருக்கலாம். வைதிகப் பழக்கத்தை வெறும் வாய்ப்பறை சாற்றும் நம்மவர்க்கு வைதிகக் கல்வியும், வைதிக பாடசாலையும் அவசியமேயாகும்.

நாம் இப்போது 'குலோத்தாரணம்' 'குலோத்தாரணம்' என்று வாய்ப்பேச்சளவாகவேனும் உற்சாகம் காட்டுவது எதற்காகவோ? ஒருஜாதியார் தாங்கள் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதாக நன்குணர்ந்து தானே உன்னத நிலைமையை அடையும்படி குலோத்தாரணப் பிரயத்தினங்களில் தலையிட்டுக் கொண்டு உழைப்பார்கள்? நம் குலோத்தாரண பிரயத்தினங்களுக்கு நம் தாழ்ந்த நிலைமை காரணமென்பது கண்கூடன்றோ? தாழ்வு எவ்வெவ் விஷயங்களில் எனில், லௌகிகத்திலும், வைதிகத்திலும் என்றே விசிதமாகும். நம்மவர்கள் நாகரீகம், நாணயம், உத்தியோக அந்தஸ்து, கைத்தொழிலேற்றம் இவைகளில் மேம்பாட்டை அடையவேண்டுமென்கிற எண்ணமிருப்பதினாலேயும், காலதேசத்திற் கேற்றபடி லௌகிகக்கல்வி அவசியமாகும். அதற்குவேண்டிய லௌகிக பாடசாலைகள் எண்ணிறந்தவைகளிருக்கின்றன. நம்மவர்களுக்கு ஆசாரம், ஒழுக்கம், பக்தி இவைகள் மிகக் குறைந்திருப்பதினாலேயும், இவ்விஷயங்களில் அபிவிர்த்தியை ஏனையர்போல் அடைய எண்ணமிருப்பதினாலேயும் முக்கியமாய் அன்னிய ஜாதியாரின் அருவருப்பை மாற்றுவதற்காகவும் வைதிகக் கல்வி நமக்கு அவசியமாகிறது. வைதிகக்கல்வி அவசியமாகிறபோது வைதிக பாடசாலைகளும் இன்றியமையாதனவாகின்றன. இவ்விரண்டு கல்வியும் எவ்வளவு அபிவிர்த்தி யடைகின்றனவோ அவ்வளவுக்குக் குலோத்தாரண பிரயத்தினங்கள் பூரணத்தை யடையும். ஆகையினால் லௌகிக பாடசாலைகளின் பயனைப் பெறுவதற்கும் இதுவே சமயம். வைதிக பாடசாலைகள் நமக்கென்று ஏற்படுத்துவதற்கும் சமயம் இதுவே. இனி ஓர் சிறிதும் காலம் தாழ்க்கலாகாது.

நிற்க, நமது வைதிக பாடசாலைகள் குலோத்தாரண பிரயத்தினங்களில் எவ்வளவு உதவியிருக்கின்றன வென்பதை சற்று ஆராய்வோம். எப்பொழுதும் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராயும்போது நமது புத்தியையும், மனோபாவத்தையும் விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும். நன்மையையும், தீமையையும் அறிவென்னும் துலையில் பட்சபாதமின்மை, நடுநிலை என்கிற தட்டுகளிலிட்டு சமத்துவத்தையோ, உயர்வையோ அல்லது தாழ்வையோ கண்டு, பின் நமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவேண்டும். நமது பட்சத்தையும், விருப்பத்தையும் ஒருவித அபிப்பிராயத்தில் செலுத்திவிடின் அதற்குமாறாகிய அபிப்பிராயம் பலனுள்ளதாகக் காணப்படாதல்லவா? தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்றால் கால்கள் நான்கு என்பது நமது மனதிற்குத் தோன்றுதல்லவா? ஒரு தலையான அபிப்பிராயம் உள்ளவர்க்கு உண்மை எக்காலத்திலும் விளங்குமா? மஞ்சள்காமாலை நோயுள்ளோர்க்கு எவையும் மஞ்சளாய்த் தோன்றுமல்லவா? பச்சைக் கண்ணாடி வழியே பார்ப்பவர்க்கு எல்லா வஸ்துக்களும் பச்சை நிறமாகக் காணுமல்லவா? அதுபோல வைதீகக்கல்வியில் பழக்கமும், அநுதாபமும், கண்ணோக்கமு மில்லாதவர்க்கு அக்கல்வியும், அக்கல்விக்குரிய பாடசாலையும் விபரீதமாகத்தான் தோன்றும்.

மேலே கூறியவற்றால் வேதாத்தியயன பாடசாலைகள் நமது நன்மைகளுக்காகவே தோன்றியவையென விளங்கும். அவற்றாலடையும் லாபமும், பலனும் அனந்தமிருக்க விஸ்வகர்மன்பத்திரிகாசிரியர் அவைகளின் பலன்கள் தமக்கு விளங்கவில்லை என்கிறார். இவருக்கு அவைகள் விளங்காதது ஓர் ஆச்சரியமா? அந்தோ பரிதாபம்! பரிதாபம்!! சந்தியாவந்தன கிரியைகளும்



மந்திரங்களுமே அப்பாடசாலையில் கற்பிக்கப் படுகின்றன வென்கிறார். தம் தனயர் உபநயனத்தை உத்தேசித்த விஸ்வகர்ம குலத்தவர் எவரும் அன்னோரை அப்பாடசாலைகளுக்கு அனுப்பமாட்டார் என்கிறார். அவ்விடங்களில்கற்கப்படுவது ஒன்றுமில்லை யென்று சாதிக்கப் பார்க்கிறார். சந்தியாவந்தனஞ் செய்யும் முறைமைக்கும், காலத்திற்கும் சௌகர்யக்குறைவு நேரிடுமென்கிறார். மாணவச் சிறுவர்கள் பாடசாலைகளில் கற்றதை ஏளனஞ்செய்து துன்பத்தை விளைவிப்பார் என்கிறார். வேதாத்தியயன பாடசாலைகளில் கற்கவேண்டிய பாடங்களில் சந்தியாவந்தன மந்திரங்களும், கிரியைகளும் ஒரு சிறுபகுதியேயாகும். புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், பூசூக்தம், விக்னேஸ்வர பூஜாவிதிகள் ருக்வேத யஜுர்வேதாதிகளின் அத்தியயனம்ஆகிய இவைகள் வேதாத்தியயன பாடசாலைக் கல்வியின் பெரும்பாகமாகும். உதாத்த அநுதாத்த முதலிய ஸ்வரங்களுக் கிணங்க வேதபாராயணம்செய்தல் வேதாத்தியயன பழக்க மில்லாமல் இயலாது. இவைகளை முறைமையாக வித்தியாகுரு மூலமாகவே கற்கவேண்டும். இவைகளெல்லாம் வீட்டிலேயே கற்க இயலாது. ஏனெனில், நம்மவரின் குடும்பத் தலைவர்க்கு வேதபாடசாலையில்கற்கும் பாடங்களின் பழக்கம் சூன்யமாக விருக்கிறது. நாம் எவ்வளவுதான் பிரம்மகுல மென்று பெருமை பாராட்டி, புஜம்தட்டிய போதிலும் நம்மிடத்தில் பிராம்மண ஒழுக்கங்களும், சாஸ்திர பழக்கங்களும் எத்துணை இருக்கிறதென்று பார்த்தால் நம் மனதிற்கேனும் உண்மை விளங்கு மல்லவா? குருட்டுக் கண்ணனை செந்தாமரைக் கண்ணனென்றுசொன்னால் உண்மைக்கு விரோதமல்லவா?

ஒற்றுமை நாணயம், உண்மை, சீர்திருத்தம், அடையவேண்டியன்றோ நாம் குலோத்தாரண பிரயத்தினங்களில் ஈடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறோம். வேதாத்தியயன பாடசாலையில் கற்கும் பாடங்களை ஏளனமாய்ச் சொல்லி மாணவர்கள் துன்பத்தை விளைவிப்பார் என்றால், ஒருவேளை நமது மரபினர்க்கு வேதாத்தியயன பழக்க மிருந்து தமது சிறுவர்களுக்கு வீட்டிலேயே சந்தியாவந்தனாதிகளைக் கற்றுக்கொடுப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அப்போதுங்கூட அம்மாணவர்கள் அம்மந்திரங்களை ஏளனப்படுத்தி துன்பம் விளைவிக்கார்களா? மாணவர்கள் மந்திரங்களை ஏளனமாய்வெளியிட்டு இடுக்கண் விளைவிப்பார்கள் என்னும் காரணத்தைக் கொண்டு பாடசாலைகள் நடந்தேறி வருவதை நிராகரித்தல் பொதுஜன அங்கீகாரத்தை அடையக்கூடிய விஷய மாகுமா? வேதாத்தியயன பாடசாலைக்குச் சிறுவர்களை அனுப்புவதினால் சந்தியாவந்தனாதி கிரியைகளை காலந்தவறாமல் முறைப்படிச் செய்ய வீட்டில் சௌகரியமிராது என்று அவர்கூறும் ஞாயம் விளங்கவில்லை. ஆருஷேய பிராமணர்கள் எவ்வளவோ வேதாத்தியயன பழக்கமுள்ளவர்கள். அவர்கள் சிறுவர்களுக்கு வீட்டிலேயே கற்பிக்க சக்தியுள்ளவர்கள். அங்ஙனமிருந்தும் அவர்கள் தங்கள் சிறுவர்களை பாடசாலைகளுக்கு அனுப்பவில்லையா? அச்சிறுவர்கள் காலந்தவறாமல் சந்தியாவந்தன கிரியைகளை சௌகரியமாய் நடத்தவில்லையா? வேதாத்தியயனச் சிறுவர்கள் எப்போது நித்திரைக்குப் போகவேண்டும்; எப்போது துயிலெழவேண்டும்; எப்போது எங்கு ஜலமலங் கழிக்கவேண்டும்; எப்போது தந்ததாவள்ளியம் செய்து ஸ்நான கட்டத்திற்குச் செல்ல வேண்டும்; எப்போது சந்தியாவந்தனாதிகிரியைகளை முடிக்கவேண்டும் என்பனவற்றின் விதிகளை அறிந்தவர்கள் இக்காரியங்களெல்லாம் உஷகாலந்தொடங்கி சூரியோதயத்திற்குள் நடந்தேறவேண்டும் என்று அறியார்களா? அங்ஙனமாயின் வேதாத்தியயன பாடசாலைக் கல்வி சந்தியாகாலத்தை தவறச் செய்யும் என்பதற்கு காரணமென்னே? இஃதேபோல் மாத்தியாஹன காலமும், சாயம்சந்தியா காலமும் சௌகரியக்குறைவின்றி நடந்தேறும் என்பதற்கு சந்தேகம் இலவலேசமுமில்லை. நாட்டுக்கோட்டையார் காஞ்சீபுரத்திலும், சிதம்பரத்திலும் முறையே ஏகா

ம்பரநாதர் ஆலயத்திலும், நடராஜர் ஆலயத்திலும் வஸ்திரபுக்த சரீரசௌக்யத்திற்கு வேண்டிய வெண்ணெய் காப்பு கூலவாகிருத்தியங்களுக்கும் பணச்செலவிட்டு உபாத்தியாயரை சம்பளத்திற்கு ஏற்படுத்தி எவ்வளவோ விமரிசையாய் வேதாத்தியயன பாடசாலைகளை நடத்துகிறார்கள். அச்சிறுவர்களுக்கு சந்தியா காலம் தவறும்படியான ஸௌகரியக் குறைவு நேர்கிறதோ? உபாத்தியாயரே பிள்ளைகள் ஸ்நானம் சந்தியாவந்தனம் ஜபதபங்கள் முதலிய வற்றை காலந்தவறாமல் செய்வதை மேல்விசாரணை செய்கிறார். இதுவேயன்றி ஒவ்வொரு ஆலயத்திலும் சாஸ்திரிகள் சிறுவர்களுக்கு வேதாத்தியயனம் செய்விக்கிறார்கள். அச்சிறுவர்களுக்கெல்லாம் சந்தியாகாலக் குறைவு நேர்கிறதோ? ஆகையால் வேதாத்தியயன பாடசாலையில் வைதிக காரியங்களுக்கு சௌகரியக்குறைவே ஏற்படாது. இப்பாடசாலைகளில் பாஷை கற்பிக்கப்படுவதில்லை என்றால் பாஷைதெரிந்தவர்களே இப்பாடசாலைக்கு மாணவர்கள் ஆகவேண்டுமென்பது விஸ்வகர்மன் பத்திராசிரியர் கல்வியை ஆரம்பக் கல்வியென்றும் அதற்குமேலாகிய கல்வியென்று பாகுபாடு செய்து மேலாகிய கல்வியில் லௌகிகம், வைதிகம் என்பது இரண்டுக்கல்விகளைக் கிடக்கவைத்ததினாலேயே பெறப்படும். ஆகையால் பாஷாஞானம் சிறிதேனும் உடையவர்களே வேதாத்தியயன பாடசாலைமாணவர்களாக யோக்யதையுடையவர்களாவர். இனி வேதாத்தியயன பாடசாலைகளைப்பற்றி பொதுவாகவும் குறிப்பாகவும் விஸ்வகர்மன் பத்திராசிரியர் எடுத்துக் கூறும் ஒருதலைச் சார்பான அபிப்பிராயங்களுக்கு மாறாக சிந்தாதிரிப்பேட்டை வேதகிரி மேஸ்திரி தெரு 5/10 எண்ணுள்ள கிருகத்தில் 1910 வருஷத்தில் ஸ்தாபிக்கப் பட்டு நடந்துவரும் வேதாத்தியயனபாடசாலையைப் பற்றி யாங்கண்கூடாகக் கண்டவற்றை காவாது விளம்பப்புகின், வேதாத்தியயனபாடசாலையின் அவசியமும், ஒழுங்கும் போதனா முறைமையும், இலக்கணமும் நிறைந்து விளங்குவதுடன் அப்பாடசாலையினால் உண்டாகும் நன்மை நம்மனோர்களின் கௌரவத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன என்பது தெற்றெனப் புலப்படும். இப்பாடசாலையின் மாணவர்களெல்லாம் ஆரம்பக் கல்வியை யுடையவர்கள். அவர்களில் சிலருக்கு ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கீர்வாணம், நாகரம் முதலிய லிபிகள் தெரியும். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு இவற்றில் நான்காவது வகுப்பின் கல்வித்தேர்ச்சியைக் கடந்தவர்கள். கீர்வாண நாகர லிபிகளில் வைதிக பக்திமார்க்க நூல்களை வாசிக்கும் யோக்யதையையுடையவர்கள். சிலர் சப்தமஞ்சரியில் வல்லவர். முதலில் இப்பாடசாலை பிரம்மஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரியால் நடத்தப்பட்டது. அவரது வேதாத்தியயன விற்பத்தியை சென்னையிலுள்ள ஆருஷேயரும் அறிவர். ஆகையால் மாணவர்களையும், உபாத்தியாயரையும் தேர்ந்தெடுத்திருப்பதில் ஓர் குறைபாடும் சொல்லுவதற்கிடமில்லை. இவர் போதனா விசேஷத்தால் சிந்தாதிரிப்பேட்டைச் சிறுவர்கள் நித்திய கர்மானுஷ்டான மந்திரம், பூஜாவிதிகள், ஸ்ரீசூக்தம், புருஷசூக்தம், பூசூக்தம், மந்த்ர புஷ்பம் இவைகளெல்லாம் கற்றுணர்ந்திருக்கின்றனர். அவர்களில் சிலர் புண்யாஹவாசனம் விவாக, கர்ப்பாதான, பும்ஸவன, முகூர்த்த விதிகளுங்கற்று விஸ்வகர்மாக்களுடைய கிருகங்களில் மேற்கூறிய வைதிக காரியங்களையெல்லாம் நடத்தி வருகின்றனர். அவர்கள் முகூர்த்த காலங்களில் கூட்டமாய்ச் சென்று ஆசீர்வாதமாக ஆசீர்வாதபனைகளையும், ஜடைகளையும் சப்தபேதமின்றி உச்சரித்தலை நோக்கும் போது வேதமே உருவெடுத்து நாதமெழுப்பியதுபோல் காணப்படுகிறது.

இப்பாடசாலை தோன்றிமறைந்துவிடாமல் பல வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இப்போது கும்பகோணம் சங்கராச்சாரிசுவாமிகள் மடத்திலிருந்து வேதாத்தியயனத்தில் நிபுணரான பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரவர்கள் உபாத்தியாயராக விளங்கி வேதாத்தியயன பாடசாலையை இமையினும் பெரிதாகக் கண்காணித்து வருகின்றனர். இவர் போதனாசாதுர்யத்தால் மாணவர்கள் அத்தியயனத்தில் ஸ்வரநுட்பங்களை கிரகித்துக்கொண்டுவருகிறார்கள். யாம் ஒருகாலத்தில் காலையில் சூரியோதயத்திற்கு முன்னர் அப்பாடசாலைக்கு போகவேண்டியிருந்தது. அப்போது தீக்ஷிதரவர்களும் பாடசாலைச்சிறுவர்களும் ஸ்நானஞ்செய்து பஸ்மோத்துளி தாலங்கிருத சுசிலராய் அத்தியயனஞ் செய்துகொண்டிருந்த சந்தர்ப்பம் புராண இதிஹாசங்களிலும் காளிதாச நாடகங்களிலும் கண்ணுவ முனிவர் முதலியோர் சிஷ்யர்கூட்டம் புடைசூழ வேதகாவ்ய புராண விசாரணையும், தர்க்க வியாகரண மீமாம்ச ஆராய்ச்சியையும் செய்துகொண்டிருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற வருணனை திடீரென எம்மனதிற்கு வந்தது. இக்காலம்போக மற்றைய காலங்களில் காலை மாலை பாஷாபோதனைப் பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. இப்பாஷாப் பாடசாலை கிரந்தமாய் குறித்தகால நிபந்தனைகளோடு பிரம்மஸ்ரீ சந்தவேலூர் கோவிந்தாச்சாரியார் அவர்களால் ஆங்கிலப் பாடசாலைகளுக்குரிய இலட்சணங்களுடன் நடத்தப்பட்டு வருகின்றது. ஸ்ரீ கோவிந்தாச்சாரியரை போதனாவல்லபமுடைய ஓர் உபாத்தியாயரென யாம் நெடுநாளாய் அறிவோம். அவர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கீர்வாணம், (கிரந்த நாகரலிபியில்) ஆகிய இவற்றில் போதனா சக்தியையுடையவர். இவருடன் ஓர் நார்மல் டிரேய்னிங் உபாத்தியாயரை அமர்த்தி கவர்ன்மெண்டு ஆதரணையைப் பெற்று வரும் கிராண்டு பாடசாலையாக்கவேண்டுமென்பது இப்பாடசாலைத் தலைவர் பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியரவர்களின் கருத்து. அக்கருத்தினை ஸ்ரீவிஸ்வேஸ்வரர் கருணைகூர்ந்து பூர்த்திசெய்விப்பாராக. விஸ்வகர்மன் பத்திராசிரியர் சொல்வதற்கு மாறாக இப்பாடசாலையில் வேதாத்தியயனமும், பாஷாபோதனையும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய பாடசாலைகளை சென்னையில் ஆங்காங்குள்ள பல பேட்டைகளிலும் ஸ்தாபிக்கவேண்டுமென்பது பிரம்மஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார் பெருந்தகை எண்ணம். அவ்வெண்ணங்களை எல்லாம் கைவல்யமாகும்படி விஸ்வேஸ்வரர் நம்மனோர் மனதில்களிலின்று திரவிய சகாயம் செய்யுமாறு அருள்வாராக. விஸ்வகர்மன் பத்திராசிரியர் வேதாத்தியயன பாடசாலைகளையும் அனாவசியகமென்று ஒழித்துவிட்டு லௌகிக விர்த்தியைநாடி எவ்வளவோ சாமர்த்தியமாய் ஜன சமூகத்தின் மனதை வேதாத்தியயன பாடசாலை அபிமானத்தினின்று திருப்பவேண்டுமென்ற பிரயத்தினமும், அவரது கற்பனையான கூற்றுகளும் மிக வியக்கத்தக்கதே. வைதிகத்திற்கும் வேதபாடசாலைகளுக்கும் எத்தனை பேர்தான் விரோத அபிப்பிராயமுள்ளவராய் இருந்தபோதிலும், வேதாத்தியயன பாடசாலைக்கு எத்தனை விருத்தங்கள்தான் இருந்தாலும், பல தோஷங்களைக் கற்பித்தாலும் வைதிகமென்பது இத்தேயத்தில் தொன்றுதொட்டுள்ளதாதலால், வைதிகப்பழக்கத்தினர் தொகை குறைந்து இலௌகிக அபிமானஸ்தர் பெருகிவந்தாலும் வைதிகமென்பது இத்தேயத்தில் எக்காலத்தும் தலைகாட்டிக்கொண்டுதான் இருக்கும். வைதிகபாடசாலைகளும் அவசியமாகத்தான் இருக்கும், இலௌகீக பழக்கத்தினர் தொகை அதிகமாக வைதிகப் பழக்கத்தினர்தொகையும் அதனுடன் பெருகிக்கொண்டேவரும். லௌகிகப் பெருந்தொகையார் வைதிகத்தை எவ்வளவு வெறுத்தாலும் வைதிகப் பழக்கத்தினர்களின் அவஸ்யத்தை உணர்ந்து அவர்களை ஆதரித்தே வருவர். இஃது ஒழியவே வொழியாது. ஆகையால் வைதிகபாடசாலை சிறிதேனும் அவசியமாகத்தான் இருக்கும். ஆகையால் வைதிகக்கல்விக்கும் வேதாத்தியயன பாடசாலைகளுக்கும் விரோதிகளாயிருப்பதில் பிறர் அவமதிப்பும் அருவெருப்புமே சித்திக்கும்.

கா. கந்தசுவாமி ஆச்சாரியார்,
ரிவினியூபோர்டாபீஸ் கிளார்க்.

## நம் சகோதரர்களின் மாட்சி.

### விவசாய ஆராய்ச்சிக்கு ஓர் உபகாரச் சம்பளம்.

பஞ்சாப் கவர்ன்மெண்டார் விவசாய விஷயங்களைத் தேர்ந்து ஆராய்ச்சி செய்ய முன்வரும் ஒரு இந்திய மாணவருக்கு மாதம் 60 ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அந்த மாணவர் பஞ்சாப் மாகாணத்து விவசாயக் காலேஜில் படித்துத் தேறியவராய் இருக்கவேண்டும். ஆனால் அவர் பஞ்சாப் வாசியாக யிருக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை,

### சென்னையில் ஸ்திரீகளுக்கு ஒரு காலேஜ்

சென்னை கவர்ன்மெண்டார் சென்னையில் ஸ்திரீகள் காலேஜ் ஒன்று ஸ்தாபிக்க உத்தரவு செய்திருக்கிறார்கள். அந்த காலேஜில் இண்டர்மீடியட் பரீட்சைக்கு வேண்டிய பாடல்கள் கற்பிக்கப்படுமாம். இந்தகாலேஜியில் அதிக மாணவர்கள் சேரக்கூடியதாக விருந்தால் பி. எ. படிப்பையும் அங்கு ஏற்படுத்தக்கூடுமாம். இந்த காலேஜுக்கு சில ஐரோப்பிய ஸ்திரீ போதகர்கள் தெரிந்தெடுத் தனுப்பப்படும் வரையில் இந்திய வித்தியா இலாக்காவிலுள்ள ஸ்திரீ உத்தியோகஸ்தர்கள் போதகாசிரியர்களாக அமர்த்தப்படுவார்களாம். இக்காலேஜியில் நங்குலப் பெண் சிறுவர்களை வாசிக்க விடுவதில் நம்மவர்கள் ஊக்கம்காட்டுவதெப்பொழுதோ.

### ஜப்பானில் பெண் கல்வி.

ஜப்பானிலுள்ள பெண் பாடசாலைகளில் இதுவரையில் குடும்ப சம்பந்தமான படிப்புகள் மட்டும் கற்பிக்கப்பட்டு வந்தன. இப்பொழுது பெண்களுக்கு மற்றெல்லாவித படிப்புகளும் போதிக்கப்படுகின்றன. அங்கேயிருக்கிற 200 ஹைஸ்கூல்களில் ஒரு லட்சம் பெண்கள் வாசித்துவருகின்றனர். இதுவன்றி தொழிற் படிப்பை அப்பியசிக்கிறவர்களும், சங்கீதம், தையல் வேலை முதலியவைகளைக் கற்றுக்கொள்கிறவர்களும் அனந்தம்பேர் இருக்கிறார்கள். சுமார் 10 வருடங்களுக்கு முன் ஜப்பானில் பெண்களுக்கென தனித்த ஒரு சர்வ கலாசங்கம் ஏற்படுத்தப்பட்டது. அச்சங்கத்திற் குட்பட்ட ஸ்திரீ மாணவர்கள் சுமார் 1200பேர் இருக்கிறார்களாம். ஸ்திரிகள் நம் நாட்டில் முன்னேற்றம் பெற்றாலன்றி நாகரீகம் சித்திக்காது.

### வெள்ளையூர்ச் சைவ சித்தாந்த சபை.

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கிளைச்சபையாக ஸ்தாபிக்கப்பட்ட இச்சபையின் வருஷோத்ஸவம் ஸ்ரீ குமாரசாமிப் பிள்ளை F. T. S. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் விமரிசையாக நடைபெற்றது. விபூதி, ஆட்டம், கல்வி, ஆலயம், சுத்த ஆகாரம் என்னு முரியவிஷயங்கள் பல வித்வான்களால் பிரசங்கிக்கப் பட்டன.

### பரோடா சமஸ்தானம்.

பரோடாவில் நடந்தேறின ஐக்கிய முயற்சி கான்பான்ஸில் சமஸ்தானத்திற்குள் புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து ஸ்தாபிப்பவர்களுக்கு சொற்ப வட்டிக்கு கடன் கொடுத்துதவும்படிக்கு 15 லட்சம் ரூபாய் நெய்க்குவார் மகாராஜா உத்திரவு செய்திருக்கிறார்.

### பரோடாவின் உபகாரச் சம்பளம்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய அன்னிய தேசங்களுக்குச் சென்று கைத்தொழிற் படிப்பை யடைய விரும்பும் பீ.ஏ பரீட்சையில் தேறிய மூவர்களுக்கு வருடம் ஒன்றிற்கு 4000 ரூபாய் வீதமாக ரூ. 12,000 உபகாரச் சம்பளம் கொடுத்து உதவுவதாக பரோடா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்களாம்.



## சுகாதார விளக்கம்.

### அரிசியின் சத்து.

அரிசியின்மேற்புறத்தில் ஜீரணசக்திக்கு அநுகுணமான (வைட்டமைன்) என்று சொல்லப்பட்ட ஓர் மெல்லிய கவசம் ஒன்றிருக்கிறது. அதை, நம்மவர்களில் பெரும்பாலார் அதிகமாகக் குத்தித் தீட்டுவதால் அப்பொருள் அரிசியினின்றும் பிரிந்துவிடுகின்றது. இப்படி அதிகமாகக் குத்தித் தீட்டப்பட்ட அரிசியை சமைத்து உண்பவர்களுக்கு ‘பெரி பெரி’ யென்னும் ஒருவித நோய் உண்டாகிறதாம். சாதம் வெண்மையாயிருக்கவேண்டுமானால் அவ்வரிசியின் கவசம் நீங்காவண்ணம் பக்குவமாகக் குத்திக்தீட்டி ஜலத்தில் பன்முறை கழுவியெடுத்துச் சமைத்து உபயோகித்து வருவதே நன்று. சாதம் வெந்தவுடன் கஞ்சியை வடித்துவிடுவதால் சாதத்தினால் உண்டாகும் சத்துக்களை நாம் இழந்து வருகிறோம். ஆதலின் இனி அரிசியை அதிகமாகக் குத்தித்தீட்டி சுகாதாரத்திற்கு ஆபத்தை உண்டு செய்து கொள்ளலாகாது.

***

### பப்பளிப் பழம்.

பப்பளிப்பழத்திற்கு ஜீரணசக்தி அதிகமுண்டு. ஐரோப்பியர்கள் வெகுகாலமாக ‘பெப்சின்’ என்னும் ஜீரணசக்திக்கான மருந்தை இந்த பழங்களிலிருந்து செய்து வருகிறார்கள். ‘பெப்சின்’ என்னும் வஸ்துவானது விசேஷமாக அசைபோடும் மிருகங்களின் இரைப்பையிலிருந்து முன்பு எடுக்கப்பட்டுவந்தது. அதற்குள்ள குணங்களெல்லாம் பப்பளிப்பழத்திலிருந்து எடுக்கும் பெப்சினுக்கும் இருக்கின்றன. ஆனால் இப்பழங்களை கர்ப்ப ஸ்திரீகள் அதிகமாகச் சாப்பிடக்கூடாது. ருதுமதியண்டயும் பக்குவமுடைய பெண்களும் அப்பழங்களைச் சாப்பிடக் கூடாது. பப்பளிப்பாலை கொஞ்சம்தேனுடன் கலந்துகொதிக்கின்ற ஜலத்துடன் சேர்த்து ஆறியபின் அருந்தினால் வயிற்றிலுண்டாகும் கிருமிகளைப் போக்கும். ஷெ மருந்தைக் குடிக்க இரண்டுமணி நேரத்திற்குப் பிறகு ஊற்றின ஆமணக் கெண்ணையை கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாற்றுடன் கலந்துசாப்பிட்டால் மலச்சிக்கல் ஒழிந்து இரத்தசுத்தி யுண்டாகி தேகாரோக்ய முண்டாகு மென்று சொல்லப்படுகிறது. ஆதலால் சுகாதாரத்திற்கு இதுவும் ஒரு வழியாகும்.

***

### பற்களைப் பாதுகாத்தல்.

குழைந்தைகளுக்கு கடினமான பதார்த்தங்களைக் கொடுத்து பலவந்தப் படுத்தி சாப்பிடச்செப்வது தப்பென்றும், அதனால் பற்களுக்குக்கெடுதி நேருகிறதென்றும், குழந்தைகள் நன்றாயசைந்து தூங்குவதினால் பற்கள் உறுதிப்படுகின்றன வென்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் குழந்தைகளாயினும் பெரியோராயினும் கடினமான வஸ்துக்களைத் தின்று பற்களுக்கு ஹானி உண்டுசெய்யாமல் வாழ்வதே சுகாதாரத்திற்கு அழகாகும். பல்வலியுள்ளவர்களும் ஆட்டமுடையவர்களும் அரையாழாக்கு உப்பைக்கொண்டுவந்து ஒரு அகலில் அவ்வுப்பில்பாதி இட்டு அதன் நடுவே சோங்கொட்டை ஒன்றுவைத்து அதன் மேல்பாதி உப்புமூடி அதன்மேல் ஒரு ஓடு மூடி சீலை செய்து 20-எருவில் புடமிட்டு அவ்வுப்பை எடுத்து காலையில் பல் விளக்கியவுடன் ஆலம்விழுதில் உடனே பல்விளக்கவும். இப்படிச்செய்வதனால் பல்லும் விழுகிறதில்லை. பல்லாட்டமும் உண்டாகிறதில்லை. பல்வலியும் வருகிறதில்லை. ஆகையால் சுகாதாரத்திற்கு இதுவும்ஒருவழியாகும்.

***

### பாலைச் சாப்பிடு முறை.

பசு, வெள்ளாடு இவைகளின் பாலுடன் எட்டில் ஒருபங்கு ஜலமும், எருமை, செம்மறியாடு முதலியவைகளின் பாலுடன் சரிபங்கு ஜலமும் விட்டுக்காய்ச்ச வேண்டும். பால்க்காச்சும் போது பால்வாங்கும் பாத்திரத்திலேயே பால்காய்ச்சவேண்டும் காய்ந்தபிறகுஆறவைத்தே சாப்பிடவேண்டும். சுடுகையோடு அருந்தினால் அஜீரண சம்பந்தமானது வியாதிஉண்டாகுமென்று வைத்திய சாஸ்திரங்கள் கூறப்படுவதால் இது விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பது சுகாதாரத்திற்கு ஒரு வழியாகும்.

***

## விவசாயக் கொத்து.

### நெல் சாகுபடியும், ஒற்றை அலகு நடவும்.

பூமியை உழுது நெல் சாகுபடி செய்வது இந்தியாவில் பூர்வீகமாய் ஏற்பட்டுள்ள தொழில்களில் ஒன்று. இவ்விவசாயமுறையில், சென்னை ராஜதானியில் சில நூதனமுறைகள் சர்க்காரால் சிபார்சுசெய்யப்படுகின்றன. அவற்றுள் ஒற்றை அலகு நடுதல் ஒன்றாகும். கொத்துக்கொத்தாய் நாற்றைப்பிடுங்கி நடுவதைவிட்டு 3 அல்லது 4-அங்குலத்திற்கு ஒரு நாற்றாக நடுவதே ஒற்றை அலகுஎனப் பெயர்பெறும். இப்படி நடுவதால்மாசூல்அதிகமாகக்கிடைக்கிறதாம். ஏக்ராஒன்றுக்கு ரூ. 3முதல் 6வரையில் லாபம் இருப்பதாகச் சொல்கிறார்கள். சென்னை விவசாய இலாக்கா டைரக்டர் சென்னை ராஜதானியில் ஒற்றை அலகு நாற்று நட்டுப் பயிர் செய்வதைப்பற்றி கீழ்க்குறித்த ரிபோர்ட் எழுதி பகிரங்கப் படுத்தி யிருக்கிறார்.

"இந்த இராஜதானியின் தென்பாகத்தில் ஒற்றை அலகு நாற்று நட்டுப் பயிர் செய்வது.குடியானவர்களுடையமனதைக் கவர்ந்திருக்கிறது. இந்த சாகுபடி முறையைப் பரீட்சித்த அநேகர்அவர்களுடைய அபிப்பிராயங்களை எழுதி யனுப்பும்படி வேண்டப்பட்டிருந்தனர். அவர்கள் ஒற்றை அலகுநடுவதால் (1) விதைகள் அதிகமாக விதைக்க வேண்டிய தில்லையென்றும், (2) வயல் வேலைகளின் கஷ்டமும், அதிக கூலிஜனங்களை ஏற்படுத்துவதும் அவசியமில்லையென்றும், (3) மாசூல் அதிகமாகக் கிடைக்கிற தென்றும் ஒப்புக்கொள்கிறார்கள். கூலிக்குறைவினால் மிகுதிப்படும் லாபம் நீங்கலாக, ஒருஏக்ரா நஞ்சைநிலத்திற்கு பட்டணம்படி-175 ஆதாயப்படுகிறதென்று தென் ஆற்காட்டிலிருந்து ஒருவரும், 99படி தேறுகிறதென்று தஞ்சாவூரிலிருந்து ஒருவரும், $78\frac{1}{2}$ படி மிகுதிப்படுகிறதென்று, திருநெல்வேலியிலிருந்து ஒருவரும், 75 முதல் 80 படி ஆதாயமிருக்கிறதென்று, திருநெல்வேலியிலிருந்துமற்றொருவரும் அறிவித்திருக்கிறார்கள். இவ்விதமாக இன்னும் பல ரிபோர்டுகள் வந்திருந்தாலும் ஒரு ஏக்ராவுக்கு சராசரி 77 படி ஆதாயப்படுகிறதென்று நிச்சயமாய்ச்சொல்லக்கூடும். கூலிவிஷயத்தில் ஒரு ஏக்ராவிற்கு ரூ. 2 மீதப்படுகிறது. பிரஸ்தாப வருடத்தில் தென் ஆற்காட்டில் போரடிக்களத்திலேயே ஒரு ரூபாய்க்கு 11 படி வீதமும், கோதாவரியில் ரூ. 5க்கு 160 ராத்தல் வீதமும் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப்பிரகாரம் கணக்குப் பார்த்து ஆள்கூலிமூலயாக ஆதாயப்படுகிறதைத்தவிர்த்து, ஒரு ஏக்ராவுக்கு ரூ. 7 லாபம் கிடைக்கிறது. ஒவ்வொரு வருடமும் இங்கு 60 லட்சம் ஏக்ரா நஞ்சை சாகுபடி செய்யப்படுகிறது. ராஜதானி முழுவதும் ஒற்றை அலகு சாகுபடி செய்யப்பட்டால் 350 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கும். கூலிமூலமாய் கிடைக்கும் ஆதாயம் 50 லட்சரூபாய் வேறே யிருக்கிறது. எவ்வளவு குறைத்துப்பார்த்தபோதிலும் மேற்படி லாபத்தொகையில் பாதியேனுங் கிட்டாமற்போகாது. ஆதலால் இந்த சாகுபடியை அநுசரித்துப் பயிர்



செய்யவேண்டுமென்று அடிக்கடிதூண்ட போதுமான நியாயமிருக்கிறது. இந்த முறையும் தற்காலம் பரவிக்கொண்டிருக்கிறது. இன்னும் விசேஷமாகப் பரவச் செய்வதற்கும், சாகுபடிசெய்து ஜனங்களுக்குப் பிரத்தியட்சத்தில் காண்பித்து போதிப்பவர்கள் தான் இனிவேண்டும்.

ஆகையால் மேற்கூறிய ஒற்றை அலகை விர்த்தி செய்வது லாபகரமென நாமும் நினைக்கின்றோம்.

### வாழைக்கு எரு.

வாழை மரங்களுக்கு இடப்படும் எருக்களில் பொட்டாஷ் அதிகமாக இருக்கவேண்டும், ஒவ்வொரு மரத்திற்கும் 4 ராத்தல் கெட்டிப்பட்ட ரத்தம், 2 ராத்தல்ஸல்பேட் ஆப் பொட்டாஷ், $2\frac{1}{2}$ ராத்தல் சூபர் பாஸ்பேட் முதலியவை ஒன்றாய்க்கலந்து சிறிதுநாள் வைத்திருந்து பின் எருவிட்டால் விசேஷ லாபம் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது.

## சில நூதன தொழிற்றுறைகள்.

### ஒரு சர்க்கரைக் கம்பேனி.

சிலோனில் ஒரு சர்க்கரை ஆலை ஸ்தாபிக்கப்படப் போகிறது. இந்த ஆலையில் பனஞ் சாற்றை உபயோகிப்பார்களாம், தென்னிந்தியாவிலும், சிலோனிலும் பனை மரங்கள் ஏராளமாய் இருக்கின்றன. தற்காலம் ஏற்பட்டிருக்கும் சில சம்பவங்களால் சர்க்கரையின் வரவு குறையுங்காலத்து இத்தொழிற்சாலை ஸ்தாபிப்பதால் இக் கம்பெனியாருக்கு அதிக லாபம் கிடைக்கலாம்.

### மதுரையில் சாயந்தோய்க்குந்தொழிற்சாலை

மதுரை டெக்னிகல் இன்ஸ்டிடூட்டைச் சார்ந்து ஓர் சாயந்தோய்க்கும் தொழிற்சாலை ஸ்தாபிக்க சென்னை கவர்ன்மெண்டார் உத்திரவிட்டிருக்கிறார்கள். இச்சாலைக்குத்தலைவராக டாக்டர், மார்ஸ்டன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ராசாயனமுறைகளை அநுசரித்து சாயம்போடும் வகைகளை கண்டுபிடிப்பதும்; அவைகளை அவ்வூர் சௌராஷ்டிரர்களுக்குப் போதிப்பதும் அவர்கடமையாகும்.

### தோல் பதனிடுந் தொழில்.

சென்னை வண்ணாரப்பேட்டைக்குச்சமீபத்தில் ஒருதோல் பதனிடும் கிடங்கும், அம்முறைகளைப் போதிக்கும் பாடசாலையொன்றும், ஸ்தாபிக்க சென்னைகவர்ன்மெண்டார் எண்ணங்கொண்டு இப்பொழுது அங்கு ஒருபுதிய கட்டிடம் சுமார் 30,000 ரூபாய் செலவில் கட்டி வருகிறார்கள். இப்பாடசாலைக்கு மிஸ்டர் சத்திரி என்னும் ஒரு நிபுணர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### சில நூதன தறிகள்.

இந்தூரில் ஸ்தாபிக்கப்படப்போகிற ஒரு நெசவு சாலைக்காக 600தறிகள் தயார்செய்யும்படி இங்கிலாந்திலிருக்கும் மெஸ்ஸர்ஸ்; வில்லியம் டிக்சன் கம்பெனியார்கள் உத்திரவு பெற்றிருக்கிறார்கள்.

### மட்பாண்ட சாலை.

குவாலியர் சமஸ்தானத்தில் மட்பாண்டங்களை வெகு அழகாகவும், உறுதியாகவும் செய்வதற்கான ஒரு உன்னத தொழிற்சாலை ஏற்பாடாகி வருகின்றது. அதற்குவேண்டிய சகல யந்திரங்களும், ஐரோப்பாவிலிருந்துதருவிக்கப்படுவதாகவும், ஸிந்தியா மகாராஜா அவர்கள் இவ்விஷயத்தில் மிகுந்த ஊக்கம் காட்டுவதாகவும் சொல்லப்படுகிறது.

***

## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின் கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களேயும், அவற்றின் கைபாகம் செய்பாகமென்ற முறைகளையுங்கூறப்படும். இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

(326-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

**மரம், செடி, இலே, பூ, காய், முதலிய வேலேகள் செய்ய பொன் சேர்மானங்கள்:-**

| நிறம். | அரப்பொடி. | பொன். | செம்பு. | வெள்ளி. | காட்மியம். |
|---|---|---|---|---|---|
| வெள்ளை. ... | — | — | — | 100 | — |
| மஞ்சள். ... | — | 100 | — | — | — |
| சிவந்த மஞ்சள் | — | 90 | 10 | — | — |
| | — | 53 | 22 | 25 | — |
| பச்சை. ... | — | 3 | — | 1 | — |
| | — | 75 | — | $16\frac{1}{2}$ | $8\frac{1}{2}$ |
| | — | $74\frac{1}{2}$ | $9\frac{3}{4}$ | $11\frac{1}{2}$ | $4\frac{1}{4}$ |
| | — | 75 | — | $12\frac{1}{2}$ | $12\frac{1}{2}$ |
| சிகப்பு ... | — | 3 | 1 | — | — |
| ஆழ்ந்த சிகப்பு | — | 1 | 1 | — | — |
| | — | 1 | 3 | — | — |
| ஜப்பானியர்நீலம். | — | 1-10 | 99-10 | — | — |
| நீலம் | 1 | 3 | — | — | — |
| | $33\frac{1}{4}$ | $66\frac{3}{4}$ | — | — | — |

இவைகளை முறையே சேர்த்து சீமை குகைகளில் உருக்கும்போது ரோஜனம், கொழுப்பு இவைகளைப்போட்டு தெளியும் போது பென்சைன் (Benzine) அல்லது தார் (Coal-tar) தடவிய இரும்பு அச்சுகளில் கட்டிவிட்டு வைத்துக்கொள்ளவும்.

உலேயின் நெருப்பில் வைத்து ஊதியெடுத்தல், ஊது குழையின் (Blow pipe) உதவியால் விளக்கில் ஊதியெடுத்தல், பற்றுகோலால் பொடியைவைத்து பற்றவைத்தல் என பற்றவைப்பு மூவகைப்படும்.

நெ. 1 முதல் 5-ம், 8-ம் பொடி வகைகளையும் அலுமினியத்தால் செய்யப்பட்ட பற்றுகோலால் தீர்ந்தசாமான்களின் மேல் வைத்து பற்றவைக்க உதவும். 7-ம் 11-ம் விளக்கில் ஊதி பற்றவைப்புக் குதவும். 6, 9, 10-ம் நெருப்பில் வைத்து பற்றவைத்த பின்னரே வேலே செய்து முடிக்கவேண்டிய பொடிகள். காரீயம்சேர்ந்த 9, 10-ம் அவ்வளவு திருப்திகரமாய்ப் பாய்வதில்லையென சொல்லப்படுகிறது.

* * *

**பிராந்சுக்காரர் அலுமினிய பற்றவைப்புப் பொடிகள்:**

| நெ. | செம்பு. | வெள்ளி | அலுமினியம். | காரீயம் | பொன்னிமினா | நாகம் | வெள்ளீயம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | — | 12 | — | — | 80 | — |
| 2 | 6 | — | 9 | — | — | 85 | — |
| 3 | 5 | — | 7 | — | — | 88 | — |
| 4 | 4 | — | 6 | — | — | 90 | — |
| 5 | 2 | — | 4 | — | — | 94 | — |
| 6 | — | — | 10 | — | — | — | 45 |
| 7 | 1 | 1 | 2 | — | — | 3 | 6 |
| 8 | — | — | — | — | 5 | — | 95 |
| | — | — | — | — | 3 | — | 97 |
| | — | — | — | — | 1 | — | 99 |
| 9 | — | — | 6 | 4 | — | 1 | 5 |
| 10 | — | — | 4 | 5 | — | 1 | 6 |
| 11 | — | — | — | — | — | 3 | 6 |

* * *

சேர்க்கப்பட வேண்டிய இரு அலுமினிய பாகத்தையும்கரகரப்பாய் சுத்தப்படுத்திய பின்னரே பற்றவைக்கும் முறையாய் வேலேசெய்ய வேண்டும். பற்றவைத்த பின் தண்ணீரில் நனேக்காமல் தானே ஆறும்படி விடவேண்டும் அப்போதுதான் பற்றவைப்பு கெட்டியாய் பிடித்துக் கொள்ளும்.

* * *

**பொடிகளை சாமான்களில் ஒட்டிக்கொள்ள செய்யும் பசையின் சேர்க்கை:—**

(1) 1-பாகம் ரோஜனம், 1-பாகம் கொழுப்பு, $\frac{1}{2}$-பாகம் விங்குலோரைடும் சேர்த்து கொதிக்கும்வெந்நீரில் உருக்கி வைத்துக்கொள்ளவும்.



(2) 3-பாகம் கருவம் பிசின், 1-பாகம் கற்பூரத்தைலம், கொஞ்சம் எலிமிச்சம்பழரசம் சேர்த்து கலந்துவைத்துக் கொள்ளவும். இதில் பற்றுகோலேயும் நனேத்து பொடியைக் கரைத்து பற்றவைக்க வேண்டும்.

* * *

**பிரான்ஸ் தேசத்தில் பேட்டெண்டு செய்யப்பட்ட ஓர் அலுமினிய பற்றவைப்புப் பொடி:—**

முதலில் 10-பாகம் காரீயம், 16-பாகம் பொன்னிமினே, 6-பாகம் வெள்ளீயம் சேர்த்துருக்கி வைத்துக் கொள்ளவும். இது 100° C சூட்டில் உருகும்.

(1) 10-பாகம் அலுமினியம், 600-பாகம் நாகம் 20-பாகம் மேலே சொல்லிய சேர்மானம் சேர்த்துருக்கி கட்டிவிட்டு வைத்துக் கொள்ளவும்.

(2) 50-பாகம் அலுமினியம் 160-பாகம் நாகம், 160-பாகம் வெள்ளீயம், 320-பாகம் மேற்கூறிய சேர்மானம் சேர்த்துருக்கம் மெதுவாயும், சீக்கிரமாகப்பட்ட பொடி மெதுவாயும், சீக்கிரமாகரைந்துருகக் கூடியதாகக் காணப்படுகிறது.

* * *

அமெரிக்காவில் பேட்டெண்டு செய்யப்பட்டிருக்கும் ஓர் புதிய அலுமினிய பற்றவைப்புப் பொடியின் சேர்மானத்தில் 100-க்கு 10-8-பாகம் அலுமினியம், 2-75 பாகம் மாக்னீசியம், 1-35-பாகம் காட்மியம், 85-1-பாகம் வெள்ளீயம் சேர்த்துருக்கப்பட்டிருக்கிறது. உருக்கும்போதும் பற்றவைக்கும் போதும் வெண்காரத்தை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

* * *

**அலுமினிய சம்பந்தத்தா லுண்டாதும் உலோகங்களும் அவற்றின் உபயோகமும்:—**

| நிக்கில். | பொன் | செம்பு | வெள்ளி. | அலுமினியம் | நிறம் குணம் |
|---|---|---|---|---|---|
| 23 | | 70 | | 7 | அலுமினியவெள்ளி |
| 12 | | 33 | | 5 | 10 காரட் பொன் |
| 33 | | 55 | | 12 | பழுப்பு பொன்நிறம் |
| $21\frac{1}{4}$ | | $72\frac{1}{2}$ | | $6\frac{1}{4}$ | சிவந்த ,, |
| | 10 | 9 | | 1 | 14 காரட் பொன், கருக்கும் |
| | 10 | | | 1 | நீலபழுப்பு, கடிசு |
| | 20 | | | 3 | வெள்ளை, நயம் |
| | | | 4-8 | 100 | கடிசு, மெடலடிக்க |
| 2 | | 1 | | 96 | சாவிகள் செய்ய |

| உலோகம் | 1 | 2 | 3 | ஷரா |
|---|---|---|---|---|
| மாங்கனீஸ் | | | 5-15 | 1-ம் 2-ம் இலேசும் |
| நிக்கில் | 1 | | | பளபளப்பும் |
| செம்பு | 1 | | | கடினமானவை |
| மாக்னீயம் | 2 | 1-10 | | 3 வெண்மைகுறைவு என்றாலும் இரு |
| அலுமினி | 96 | 80 | 70-85 | ம்பைபோல கடின |
| நாகம் | | 1-20 | | மானது. |
| காட்மியம் | | | 2-10 | |

## பல குறிப்புகள்.

நமது பாடசாலே, சபை, பத்திரிகை முதலிய குலோபகார விஷயங்களின் அபிவிர்த்தியைக்கோரினவராய்ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியர் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வருவதாக முன்சஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அவர் சிவகாசி, மணியாச்சி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி, மீனுக்ஷிபுரம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம் முதலிய பல இடங்களுக்குச் சென்றிருந்து இந்தமாதம் 5-ந் தேதியன்று சென்னேக்கு சுகமே திரும்பினர். அவர் சென்றிருந்த இடங்களிலுள்ள சுஜாதிச் செல்வர்கள் காட்டிய அபிமானத்தையும், ஆதரவையும், உபசரணேகளேயுங் கேட்டு, பெரிதும் சந்தோஷிக்கிறோம்.

* * *

நமது பத்திராதிபர் ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியரவர்கள் சுற்றுப்பிரயாணத்திலிருந்தமையாலும், அவரிடம் கடிதப்போக்கினால் புதிய சந்தாதாரர்களின் பேதங்களை திட்டமாய் அறிந்துகொள்ளக்கூடாமையினாலும், சென்றமாதப் பத்திரிகைகளை அனுப்புவதில் சில தவறுதல் நேர்ந்துவிட்டதைக் குறித்து விசனிக்கிறோம். சந்தாதாரர்களின் சரியான லிஸ்டும், அவர்களைச்சேர்ந்த மற்ற விபரங்களும் இப்பொழுது ஏற்பட்டு விட்டமையால் இனி அவ்வித இடையூறுகள் நேராதென்பது திண்ணம். நமது சந்தாதாரர்களுக்கு எந்தெந்த நெம்பர்பத்திரிகை சேரவில்லையோ அந்தந்த நெம்பரைக் குறிப்பிட்டு எழுதினால் பத்திரிகை அனுப்பப்படும்.

***

ஸ்ரீ. கொ. கன்னியப்பாச்சாரியர் சுற்றுப் பிரயாணத்தில் கண்ட விஷயங்களையும், வெளியூர் அநுபவங்களையும், ஆங்காங்கு தாம் கண்ணுற்ற சுஜாதியரின் நிலைமைகளையும், மிகவிரிவாக சிரமம் பாராட்டாது குறிப்பெடுத்து வந்திருக்கின்றனர். அவ்விஷயங்களை இனி நம் பத்திரிகையில் "நமது சுற்றுப் பிரயாணம்" என்னும் தலைப்பின்கீழ் மிக விரிவாக எழுதுவோம். ஆங்காங்கு நமது குலாபிமானிகள் இவருக்கு கைம்மாறு கருதாது செய்தநன்மைக்கு நாம் வந்தனமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

***

நமது வேதாத்தியயன பாடசாலையின் கிளைப்பாடசாலை யொன்று சென்னையில் ஸ்தாபிக்கப்படுமென்று முன் சஞ்சிகையில் கூறியபடி சென்றமாதம் 27உ சோமவாரம் காலை 9-மணிக்கு பெத்துநாய்க்கன்பேட்டை பெரியவீதி ஸ்ரீ வாசுதேவாச்சாரியார் கிருஹத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ, பா. சுப்பிரமண்ய சாஸ்திரியாரும், பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்களும், விநாயகபூஜை முதலியவைகளை நடாத்திப் பின் அங்குவந்திருந்த சுமார் நம் குலச்சிறுவர்கள் 15 பேர்களுக்கு பாடங்களை ஆரம்பித்தனர். அப்போது சுஜாதிப் பிரமுகர்கள் அநேகர் வந்திருந்தனர். இன்னும் சில கிளைப் பாடசாலைகள் திருவல்லிக்கேணியிலும், முத்தியாலுபேட்டையிலும் நாளது ஆகஸ்டுமாத முடிவுக்குள் ஏற்படுத்தப்படும். இவ்வித பிரயத்தினங்களில் நம் குலாபிமானச் செல்வர்கள் கூடிஉழைக்க முன்வருவார்களாக.

***

இவ்வருடம் ஆவணியவிட்ட புண்ணியதினத்தில் நமது அத்தியயன பாடசாலையில், நம்குலச்சிறுவர்களுக்குஉபநயனமும் பெரியோர்களுக்கு உபாகர்மமும் செய்துவைக்கப்பட்டது. அன்று பாடசாலை மண்டபாலங்காரமும், பிரகஸ்பதி ஆசிரமத்தை வகித்து காரியங்களை இனிது நடாத்திய ஸ்ரீ. சுப்ரமண்ய சாஸ்திரியாரவர்கள், ஸ்ரீ. ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் முதலிய வேதவித்துகளின் மந்திரபடன சப்தமும், அத்தியயனச்சிறுவர்களின் ஆரவாரங்களும்மனதிற்கு மிக்க குதூஹலத்தை விளைவித்தன.

***

இச் சஞ்சிகையில் பொன்வேலையைப் பற்றியும், அவ்வேலை சம்பந்தமான பல நுண்மைகளையும் விளக்கிக்காட்டியிருக்கிறோம். பற்றவைப்புப் பொடி சேர்மானங்களையும். தங்கத்தைப் பிரித்தல், முலாம் முதலிய தொழின்முறைகளை இனி வெளிவரும் சஞ்சிகையில் 'தொழிற்குறிப்புகள், என்னும் அங்கத்தில் எழுதுவோம். ஆகையால் பத்திரிகைகளைப்பெற குலாபிமானிகள் முற்படவேண்டும் சமயம் இதுவே.

***

விவாஹம், உத்திரகிரியை முதலியசுபாசுபகர்மங்களின் வரன்முறைகளைக் கிரமமாகவும், வேதசம்மதமாகவும் இனிபத்திரிகையினோர் பாகத்தில் தெரிவித்து வரவேண்டுமென்று நமது நண்பர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இனி அவற்றை சாங்கோபாங்கமாக எழுதி வெளிப்படுத்துவதற்கான முயற்சிகள்செய்யப்பட்டுவருகின்றன, கிரியைகளின் மந்திர தந்திரங்களில் ஆங்காங்கு பலபேதங்கள் காணப்படுகின்றமையால், அவைகளின் பேதங்களையகற்றி உண்மையானவைகளை பத்திரிகை வாயிலாகஉணர்த்துவதற்குச் சிறிது காலதாமதமாகுமென அஞ்சுகிறோம்.

***

நமது சபையின் நன்னோக்கங் கருதியவராய் சில சுஜாதிச்செல்வர்கள் நம் சபையை கவர்ன்மெண்டு சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் செய்துவிட்டால் சபைக்கு இன்னும் திக ஆதிக்கம் ஏற்படுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்களது நல்லஎண்ணத்திற்கு வந்தனம் செய்யக்கடமைப்பட்டிருந்தாலும் அவர்களபிப்பிராயம் அவ்வளவு சிறந்ததன்றெனக் காட்டுதல் இங்குஅவசியமாகிறது. வித்தியா விஷயமான சங்கங்களையும், சாஸ்திர சம்பந்தமான சங்கங்களையும் ரிஜிஸ்டர் செய்வதற்கான ஆக்ட் "1860௵த்து 21-வது ஆக்ட்" ஒன்று ஏற்பட்டுள்ளது. அந்த ஆக்டின்படி ஒரு சங்கத்தை ரிஜிஸ்டர் செய்து விட்டால், அப்பெயர்கொண்ட சங்கம் பல இருப்பதற்கும், ஏற்படுவதற்கும் அந்தஆக்ட் இடங்கொடுக்கும். ஆனால் அந்த ஆக்டினால் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சங்கங்களுக்கு ஒருலாபம் மட்டும் உண்டு. அதாவது. யாதொருமெம்பர்களாயினும் சரி, சந்தாதாரர்களாயினும் சரி, தமது சந்தாதொகையை அவ்விதமாக ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கத்திற்குசெலுத்தத் தவக்கப்பட்டாலும், இரண்டொரு மாதம் பாக்கிவைத்துக்கொண்டாலும், அவர்கள்மேல் கிரமமாக வியாஜ்ஜியம் கொண்டுபோய், அவர்கள் சொத்தை ஜப்தி முதலியவற்றால் வசூல் செய்யலாம். இந்த விஷயத்தைக் குலாபிமானம்பூண்டவர்கள் நன்மையெனக்கருதி ரிஜிஸ்டர் செலவுக்காக ரூ. 50 பொதுபணத்திலிருந்து விரயம் செய்யலாமா? நேயர்களே யோசியுங்கள்! நமது சபை மெம்பர்களிடத்தும், பத்திரிகை சந்தாதாரர்களாகிய குலாபிமானிகளின் பெருந் தகைமையிலும், நாணயவரிசையிலும், நமக்கு முழுநம்பிக்கை யிருப்பதால் நம் சபையை தற்போது ரிஜிஸ்டர் செய்து அதற்கோர் படாடோபத்தைக் கற்பிதம் செய்வதற்கு நம் சபையாருக்கு மனமில்லை. இதனை நம் குலநலச் செல்வர்கள் நன்குணர்ந்து நம் சபையார்கருத்தை அங்கீகரிப்பார்களாக.

***

நமது விஶ்வகுலோத்தாரண அச்சியந்திரசாலையில், புத்தகங்கள், நோட்டீஸ்கள் பில் பாரங்கள், கேட்லாக் முதலியவைகள் வெகு நாணயமாகச் செய்யப்பட்டு வருகின்றன. உள்ளூர் வெளியூர் குலாபிமானிகளுக்கு ஆவசியகம் நேரும்போது அவ்வித வேலைகளை அனுப்பிவைத்தால் குலாபிமானத்தைமுன்னிட்டு குறைந்த கட்டணத்திற்கு ஏற்றுக்கொள்ளலாகும். இதனை நம்நேயர்கள் கவனத்திருத்துவார்களாக.

***

கும்பகோணம் விஶ்வப்பிர்ம்ம மஹாஜனசபை (லிமிடெட்) யை முன்போல ஒழுங்காய் நடத்திவரவேண்டுமென்று கர்ணக்கொல்லைத் தெரு ஸ்ரீ சொக்கலிங்கப் பத்தரவர்களும், ஸ்ரீ ஏ. சு. கஞ்சமலைப் பத்தரவர்களும், ஸ்ரீ ஆ. கோவிந்த பத்தரவர்களும், புதுக்கோட்டை ஸ்ரீ அண்ணாமலைப் பத்தரவர்களும், இரண்டாமுறை மேற்படி சபையின் காரியதரிசியாகிய ஸ்ரீ திருச்சிற்றம்பலப் பத்தரவர்களிடம் சென்று தமதபிப்பிராயங்களை வற்புறுத்திக்கூற, தாம் கூடிய சீக்கிரத்தில் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்களித்திருப்பதை நம் நிருபநேயரால் தெரிந்து சந்தோஷிக்கிறோம்.

***

கும்பகோணம் பேட்டை ஆத்தங்கரைத் தெருவில் விஶ்வப்பிரம்ம சமாஜத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைக்கு ஓர் கட்டிடம் ஜாதியருக்குப் பொதுவான

இடத்தில் கட்டப்பட்டுவருவதை முன்னர் தெரிவித் திருந்தோம். அக்கட்டிடம் முடிவுபெறுவதற்குள் சிலர் பிளவுபட்டு அப்பெரும் புண்ணியத்திற்கு இடையூறு செய்வார்களோ என்ற பீதியைக் கொள்ள வேண்டிவருகிறது. பாடசாலையைக் கட்டி முடித்து விட்டு தங்கள் அபிப்பிராய பேதங்களைப் பின் தீர்த்துக்கொள்வதே பெருந்தகைமையாகும். இதனைக் குடந்தை வாசிகள் நன்குணரவேண்டும்.

***

சென்னை சூளையில் வசிக்கும் ஸ்ரீமத் அ. மு. ஸ்வாமிநாதாச்சாரி என்னும் மாணிக்க சுவாமிகளவர்கள் ஷை இடத்தில் நம்குலச்சிறுவர்களுக்குநாளது ஆவணிமீ த்தில் வேதாத்தியயன பாடசாலை யொன்றேற்படுத்துவதாக முயற்சிகள் செய்து வருகின்றனர். நமது குலாபிமானிகள் அவரோடுகூடி யுழைப்பார்களென நம்புகிறோம்.

***

## ஆயுர்வேத சாரம்.

### அவிழ்தமுறை.

### பெரியோர்களுக்கு மலக்கட்டு நீங்கசூரணம்.

கருவேப்பிலையும், வல்லாரியிலையும் சமமாயெடுத்து உலர்த்தி வஸ்திரகாயஞ்செய்து தேனில்குழைத்து இரவில் போஜனஞ்செய்தபிறகு சாப்பிட்டுவரவும். காலையில் மலம் தாராளமா யுதையும். நாளுக்குநாள் வாய்வு நீங்கும்.

### பீனிசத்தைலம்.

கெஞ்சா யிலைச்சாறு அரைபடி, நல்லெண்ணெ அரைபடி இவை இரண்டும் ஒன்றாய்க்கலந்து அதனோடு மிளகு ஒன்றரை பலம்அரைத்துப்போட்டு காய்ச்சிவடித்து முழுகிவர சகல பீனிசமுந் தீரும்.

### குழந்தைகட்கு பேதி மருந்து.

ஈருள்ளி, இண்டங்கொழுந்து, கடுக்காய்த்தோல் இவைகளை சிதைத்து ஆமணக்கெண்ணெயிலிட்டு காய்ச்சி சிறுகுழந்தைகட்கு ஒரு சங்குபாலடை கொடுக்க நன்றாய் பேதியாகும். கிருமிகள்விழும்.

### சாம்பல்,மண்தின்கிற குழந்தைகட்கு மருந்து.

கீழாநெல்லிவேர் விராகனிடை 2, கடுக்காய்த்தோல் விராகனிடை 2, மிளகு விராகனிடை 3 இவைகளை அரைத்து புளித்த மோரில் கலக்கி அரைக்காலாழாக்கு அல்லது ஒருசங்கு பாலடைஅளவு உள்ளுக்கு மூன்றுநாள் கொடுக்கவும். குழந்தைகள் மண்முதலானவை தின்னாது.

### இருமல் உப்பிசந்திர மருந்து.

சுக்கு, மிளகு, நெல்லிக்காய், கடுக்காய், சிறுதேக்கு, சடாமாஞ்சி, திப்பிலி, கடுகு, தான்றிக்காய், இந்துப்பு, கண்டத்திப்பிலி, இவைகளை வகைக்கு பலம் கால் கொண்டு வந்திடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு இஞ்சி சுரசத்திலாவது, தேனிலாவது திரிகடிப் பிரமாணம் குழைத்து சாப்பிடவும். இப்படி அந்திசந்தி இரண்டுவேளையாக 15நாள் சாப்பிடவும். இருமல் உப்பிசந் தீரும்.

P. M. ஆயுர்வேத பண்டிதர்.

## கடிதங்கள்.

### சென்னை வேதாத்தியயனபாடசாலையின் ஒரு மாணாக்கர்.

நாளது ஆனந்தவருஷம் ஆடிமீ 13உ எனதுபிதா அவர்களுக்கு சிராத்தம் நேர்ந்தபோது ஒருநாள்முன்னதாகவே ஷை பாடசாலைக்கெழுதி தகனக்கிரியா சிராத்தப் பழக்கமுள்ள ஒரு மாணாக்ககரை அனுப்பும்படி கேட்டிருந்தேன். சிரஞ்சீவி இரத்தினச்சாரி என்னும்மாணாக்கர் அனுப்பப்பட்டார். அவருக்கு வயது 18, அல்லது 19 இருக்கலாம். இவர்கையுடன் கொண்டு வந்த நோட்டு புத்தகத்தில் ஷை சிராத்த விஷயங்கள் விபரமாக எழுதப்பட்டிருந்தன. அந்த பாடங்களை இப்போதைய அத்தியயன உபாத்தியாயரான பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரவர்களிடம் பாடம் கேட்டு வருவதாகத் தெரிய சந்தோஷித்தேன்.

தகன சிராத்த காரியம் செய்வது இது தான் முதல் தடவை யென்று சொல்லிவிட்டுஅக்கிரியை செய்யஆரம்பித்தார். செய்வது அன்ன சிராத்தமாதலால் அதன் சாம்பிரதாயம், பழக்கத்தில் வரவேண்டிய விஷயம். பௌரோகித சிறுவருக்குமந்திர தாரூட்டிய மிருந்தமையால் அதனோடும், தடைப்படுகிற கிரியாவிஷயங்களுக்கு எனது அநுபோக பழக்கத்தினால் சரிவர நிறைவேற்றலாயிற்று. அவரது வயதளவுக்கு செய்து முடித்த காரியங்கள் மிகப்பெரிதென்றே அசமகிழ்ந்தேன். சில்லரையும், தக்ஷணையும் திருப்திகரமே. இவர் (ORR) ஷாப்பில், நகாசுவேலைக் காரரில் ஒருவர். இவருக்கு வேலைப்பழக்கமும், வைதீகப் பழக்கமு மிருப்பதால் பெரிய சம்பன்னரென விவேகிகள் மதிப்பார்கள்.

சிராத்த முடிவில், சென்னை சிந்தாதிரிப்பேட்டை வேதாத்தியயனப் பாடசாலை ஸ்தாபகரை நினைக்கும்படி நேர்ந்தது. ஷை பாடசாலையால் அப்புண்ணியபுருஷர் பூதவுடம்போடும், புகழுடம்பையும், புண்ணியவுடம்பையும் இம்மையிலேயே பெற்று விளங்குவது மிகவும் சிலாகிக்கத் தக்கதே. ஷை பாடசாலையின் பிரயோசனத்தையும், நம் சிறுவர்களின் வைதீக முன்னேற்றத்தையும் பொது நோக்கமுடைய விவேகிகளால் நன்கு மதிக்கப்படும். எனது குடும்ப பௌரோகிதராகிய பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளில்லாத சமயத்தில், ஷை பாடசாலைபௌரோகிதச் சிறுவரால் பிதிர்சிராத்த பலனை அன்றையதினம் பெற்ற பெரும்பாக்கியத்தைத் தெரிவிக்கலானேன்.

தி. மு. முக்கண்ணாச்சாரி,
வைஸ்பிரசிடெண்டு.

விஸ்வகர்ம குலோத்தாரண சபை சென்னை.

## ஓர் மறுப்பு.

“விஶ்வகர்ம குலோபகாரி” யென்னும் மலர்-1 இதழ் 10-ல் 329-வது பக்கத்தில் “கடிதங்கள்” என்ற தலைப்பின்கீழ் குடந்தை ஸ்ரீ பஞ்சநத ஈஸ்வராச்சாரியார் என்பவர் சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபை விஷயமாய் எழுதியுள்ள கடிதத்தைக் குறித்து நமது குலஜனங்களுக்கு யான் தெரிவித்துக்கொள்வது யாதெனில்,

அக்கனவான் எழுதியபிரகாரம் யான் யாத்திரை விஷயமாக இராமேஸ்வரம் போய்த் திரும்புகையில் குடந்தைக்கு வந்து ஷை கனவானைச் சந்தித்தபோது என் சபை இரண்டாயிராமல் ஒன்றாகவேயிருந்தால் நலமென்று தெரிவிக்க அவ்விதகருத்துக்கிணங்கி பிரம்ஹஸ்ரீ பி. கல்யாண சுந்தராச்சாரியாருக்குச் சொல்லிப்பார்ப்போம் கேட்காதவிஷயத்தில் யானும் இனி பொதுவாயிருந்துவிடுவதாக நான் அவருக்குத் தெரிவித்ததாக எழுதியது கற்பனை.

இவ்விதமாக நான் அவரிடத்திலாயினும், மற்றெவரிடத்திலாயினுஞ் சொல்லவேயில்லை.

சபையின் நடவடிக்கைகளில் தங்களுக்கு விளங்காத விஷயங்களேதேனு மிருக்குமானால், நேரே கடிதமெழுதித்தெரிந்து கொள்ளலாமென்றும், ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியாருக்கு மாறாக சபையார் இதுவரையிலும் யாதொன்றும் எழுதவாவது செய்யவாவது முற்படவில்லை யென்றும், ஆதிமுதல் அவருக்கு அநுசரணையாகவே நடந்துவந் திருக்கிறார்களென்றும் தெளிவித்தேன்.

சபை இரண்டாகவில்லை யென்பதும் ஒன்றேயா யிருக்கிறதென்பதும் எவரே காணமாட்டார்.

சோ. கந்தசாமி ஆச்சாரி,
சபைத் தலைவர்.

இம்மறுப்பை நமது நிருபநேயர்கவனித்து தக்க விடையளிப்பாரென நம்புகிறோம்.

ப—ர்.

## ஒரு மஹோபந்நியாசம்.

1914ஹு 'ஆகஸ்டுமீ' 23உக்குச்சரியான தமிழ் ஆவணிமீ 7உ ஆதிவாரம் பகல் 2-மணிக்குமேல் சென்னையில் விஸ்வப்பிரஹ்ம வம்சத்தைப்பற்றியும், வேதாத்தியயன பாடசாலையைப் பற்றியும், வைதிகக் கல்வியைப் பற்றியும், சிற்பத்தொழிலைப்பற்றியும், ஒற்றுமையைப்பற்றியும், ஒரு மஹோபந்நியாசம் நடைபெறும். அக்காலத்தில் நமது விஸ்வகன்ம சந்ததியார் யாவரும் தவறாமல் விஜயஞ் செய்து அடி. உபந்நியாசத்தைக் கேட்டு ஆனந்திக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

### உபந்நியாசகர்கள்.

1. சம்ஸ்கிருத பண்டிதர் பிரஹ்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரியார் அவர்கள்
2. கும்பகோணம் உபாத்தியாயர் பிரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் அவர்கள்
3. ஆரியமத பிரவசனர் ஸ்ரீமான் கண்ணபிரான் முதலியாரவர்கள்
4. வேதாந்ததர்க்க போதகாசிரியர் ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
5. சைவசித்தாந்த சபை காரியதரிசி ஸ்ரீமத் குப்புசாமி முதலியாரவர்கள்
6. வித்வான் ஸ்ரீமத் ம. இராஜகோபாலபிள்ளை அவர்கள்
7. வித்வான் ஸ்ரீமத் ஆ.மே. சென்னகேசவுலு நாயுடு அவர்கள்
8. வித்வான் ஸ்ரீமத் தி. மு. முக்கண்ணாச்சாரியாரவர்கள்.
9. வித்வான் ஸ்ரீமத் கோவிந்தராஜு முதலியாரவர்கள்.

உபந்நியசிக்கும் இடம் கைகோடீஸில் வெளிவரும்.

கோ. கன்னியப்பாச்சாரி.

## குருபூஜை வைபவம்.

1914ஹு ஜூலைமீ 28உ மங்களவாரத்தன்று புத்தூருக்கடுத்த நாராயண வனத்தில், சென்னை ஸ்ரீமத் சுரக்காய் சுவாமிகள் கைங்கர்ய சமாஜத்தாரால் சுவாமிகளது 12-வது மகாகுருபூஜை மிக விமரிசையாய் அபிஷேக ஆராதனை முதலிய வைபவங்களுடன் நடந்தேறின. அடுத்த இரண்டு தினங்களும் சுமார் 4000த்திற்கு மேற்பட்ட ஏழைஜனங்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. இம்மகானது சித்திமுத்தி வல்லபத்தின்பெருமை இமா சேதுபரியந்தமுள்ள மானவ வர்க்கத்தினருள் அறியாதவர் சிலரே யாவர். தூல சரீரத்தோடு விளங்கியகாலத்து நடந்த அற்புதங்களுக்கு நிகராகவே இப்போதும் இன்றுவரையும் "வேண்டுவார் வேண்டியது யீவான்கண்டாய்" என்றபடி யார் யார் எவ்விதம் கோருகின்றனரோ அவ்விதமே நடந்து வருகின்றன: "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்திறந்தாரை எண்ணிக்கொண் டற்று" என்ற குறளுக் கிலக்காகவே நடத்தலால் அன்பர்களனைவரும் கண்டு கேட்டு இன்புறுமாறு எல்லாம்வல்ல ஈசன் தண்ணளிபுரிவாராக.

ஓர் சாது.

* * *

"போஸ்டு கார்டு ஆல்பம்"
20 அழகிய சித்திரக்கார்டுகளுடன் 1—0—0
"மாஜிக் சேவிங்பாங்"
40-2 அணுக்கள் போட்டவுடன் தானே திறந்துகொள்ளும் 0—8—0
வி. பி. சார்ஜ் வேறு.
விலாசம்:— A. R. S. MUDALIAR, Anamalai Coimbatore, Dt.

### சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையினின்றும்
### சட்டவிரோதமாய்ப் பிரிந்துபோன
### ஸ்ரீ பி. கல்யாணசுந்தராச்சாரியர் முதலிய சிலர்
### ஷெ சபையின் பெயரால் நடத்திவரும் ஒழுங்கீனங்களைக்கண்ட
### ஷெ சபை வைஸ்பிரசிடெண்டுகளில் ஒருவராகிய
### தி..மு. முக்கண்ணாச்சாரியர் ஷெ கூட்டத்தார்களுக்கு எழுதிய
# கண்டன நோட்டீஸின் நகல்.

நே. 3.
பி. க.

(331-வது பக்கத்தின் தொடர்ச்சி)

14. 9-4-13 மீட்டிங்கு நோட்டீஸை கவனித்ததில், சபாப்பிரவேசமாகியமறுதினம் 8-4-13ல் அச்சிடப்பட்டிருக்கிறது. ஷெ நோட்டீஸ் சென்னை மெம்பர்களுக்கு போஸ்டுசெய்த நேரத்திற் கும், 9உ சபைகூடும் நேரத்திற்கு மிடையில் சற்றேறக்குறைய 24-மணிநேரந்தான் இருந்திருக் கிறது. 7-6-13ல் என் பிரசனைகளுக்கு, சபை பொதுக்கூட்டங்கூட்ட எல்லாமெம்பர்களுக்கும் (உள்ளூர் வெளியூர்) இந்த அவகாசம் போதுமானதா வென்றதற்கு, தாங்கள் வெளியூர் மெம்பர் களுக்குத் தெரிவிக்கவில்லை யென்றும், உள்ளூருக்கு 24-மணிநேரம் போதுமென்றும், வெளி யூருக்கு அனுப்பவேண்டியதில்லையா வென்றதற்கு, தாங்கள் வழக்கமில்லையென்றும், அவர்கள் சந்தாதாரர்கள்மட்டுந்தானோ வென்றதற்கு, தாங்கள் இல்லை. முன்நடந்த ஜெனரல் மீட்டிங்கு களுக்கும் நோட்டீஸ் அனுப்பப்படவில்லை யென்றும், இது இலக்ஷன் மீட்டிங்கு அல்லவா வென்றதற்கு, இருந்தாலென்ன ஜெனரல் மீட்டிங்குதானே யென்றும் சொல்லிய பதில்கள் தங்கள் ஞாபகத்தி லிருக்கலாமே.

15. நண்பரே! சபை பொதுக்கூட்டத்திற்கு ஒருதின மவகாசம் போதுமென்றால் எந்த சட்டப்படி போதுமென்றீர். தங்கள் சித்தமே சட்டமாய்க்கொண்டால் தங்களோடுபழகிய உயர் தரக் கல்விமான்களும், இதரசபைகளின் காரியதரிசிகளும்நகைத்து, பரிகசிப்பார்களே! அல்லா மலும், நிர்வாகசபை மீட்டிங்கிற்கே குறைந்தது 3 தினங்க ளவகாசம்வேண்டுமென்பது தாங்க ளறியீர்களா. இப்படியிருக்க ஜெனரல் மீட்டிங்கிற்கு உள்ளூர் வெளியூர் யாவத் மெம்பர்களு க்கும் ஒருவாரத்திற்கு முன்பே தெரிவிக்கவேண்டாமா? மேலும், சபாப் பிரவேச நோட்டீஸை 22-ம் பிரசுரத்தோடு 3-4-13லேயே துரிதப்பட்டு வெளியூர்களுக்கு 4-நாள் முந்தியே அனுப்பி யிருக்கிற தாங்கள் 9-4-13ல் பொதுக்கூட்டத்திற்கு ஏன் அனுப்பவில்லையோ காரணந் தெரிய வில்லை,

16. 9-4-13 ஜெனரல் மீட்டிங்கு நோட்டீஸை வழக்கம்போல் விஸ்வகுலோத்தாரண அச்சு யந்திரசாலையில் பதிப்பிக்காமல் சுயேச்சையாய், வேறு அச்சாபீஸில்அச்சிட்டிருக்கிறநோட்டீஸ் ஒன்றே தங்கள் எண்ணத்தை விளக்குவதோடும், சபையின் கல்வாழ்வுக்குநேராக நடத்திக்காட்டு கிறவிதம் தங்கள் உள்ளத்திற்கே இனிது விளங்கும்.

17. நமது நிர்வாக சபை மெம்பர்களுக்கும், மற்ற மெம்பர்களுக்கும் பொது நோக்க முடைய குலாபிமானிகளுக்குந் தெரியவொட்டாமல் உள்வயணநோக்கத்தின்படி பகிரங்கத்தில் செய்துமுடித்த நடவடிக்கைகள் முழுதும் சட்டவிரோதமென்றும், ஒழுங்கீனமென்றும் கண் டிக்கின்றனன்.

18. 7-6-13ல் சபை மெம்பர்களைப்பற்றிய என் பிரசனைக்கு, உள்ளூர் வெளியூர் மெம்பர் […] களை கமிட்டி மீட்டிங்கியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா வென்றதற்கு, இல்லையென்றீர்; அப் ளிகேஷன் செய்துக்கொள்ளும்படி சட்டமிருக்கிறதே யென்றதற்கு, முதலிலிருந்து வழக்கமி ல்லையென பதிலளித்தது தங்களுக்கு ஞாபகத்திலிருக்கலாமே.

19. தாங்கள் சபை சட்டப்படி மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் அநுஷ்டானமில்லை யென்றால், சட்டத்தின் பிரயோஜன மென்னவாகும். முதலிலிருந்து அப்ளிகேஷனு மில்லை யென்றால், சபையின் முதற்பிரசுரம் 5-வது பக்கத்தில் சபையின் நடவடிக்கைகளில் ஒவ்வொரு மெம்பருக்கும் சர்வாதிகாரமும் கொடுக்கக் கூடியபடி, சட்டங்கள் நிரூபணஞ் செய்யப்பட்டிருக் கின்றன. * * குலத்தினர் ஒவ்வொருவரும் இதனோடு அச்சிடப்பட்டிருக்கும் மநு வை எழுதியனுப்புவதோடு" என்று அச்சிடப்பட்டிருக்கிறது. தாங்கள் சபை சட்டத்தையும், விண்ணப்பத்தையும் மேலேகண்டபடி, விகித ரூபமாய் ஒப்புக்கொண்டு வெளியிட்டிருந்தும், எனக்கு இப்பொழுது மறுப்பதை நோக்கும்போது, சபாகாரியங்களை ஆண்டு நடாத்தும் தங்கள் மனோநிலைமை, ஒருவித பிடிப்புமில்லாமல் தத்தளித்துக்கொண் டிருக்கிறபடியால், தாங்கள் சொல்லிய மறுமொழிகள் ஆச்சரியமாகமாட்டாது. " தங்கள் சபைக்கு என்னையும் ஓர் மெம்பராய்ச் சேர்த்துக்கொள்வீர்களென்று விரும்புகின்றேன். தற்காலம் ஏற்பட்டிருக்கின் றனவும், இனி ஏற்படக்கூடியவையுமாகிய சட்டங்களுக்கு இணங்கிநடக்கச் சித்தமாயிருக்கி றேன்" என்று முதல் மநுபாரமச்சிட் டிருக்கிறீர்கள்.

20 நண்பரே! சபை மெம்பர்களை கமிட்டி மீட்டிங்கியில் அங்கீகரிக்கிற வழக்கமில்லை யென்றீர்கள். சட்டத்தில் கமிட்டியார் அங்கீகரிக்க வேண்டியதென சொல்லியிருப்பதற்கு விரோதமாக,ரூலை கைவிட்டதற்குக் காரணஞ்சொல்லுவீர்களா? இல்லையேல், கம்மாளர்களுக்கு ஒரு சட்டம் வேண்டியதில்லை யென்று தங்களால் மறுக்கப்பட்டுவிட்டதோ! மறுக்கப்பட்ட தெனின், 1910ஆ அக்டோபரில் வெளியான சபைமுதல்பிரசுரம் 5-வதுபக்கத்தில் சொல்லிய படி "சபையின் நடவடிக்கைகளில் ஒவ்வொரு மெம்பருக்கும் சர்வாதிகாரமும் கொடுக்கக்கூடிய படி சட்டங்கள் நிரூபணஞ்செய்யப்பட்டிருப்பதாக" கெம்பீரமாய் சட்டத்தைஆதரித்துப் பேசிய தெப்படி? இதன் பூர்வாபர விரோதவாக்கியத்திற்கு என்ன ஞாயம் கூறுவீர்கள்?

21. அன்றியும், முதல் பிரசுரத்தின் மநுபாரத்திற்கிணங்க, இரண்டாவது விண்ணப்பப் பாரங்கள் 21-6-11ல் ஏராளமாய் அச்சிட்டு தாங்கள் முதலில் வெளியாக்கினது நிதரிசனம். பின் னர் 3-வது மநுபாரம் ஒன்று சட்டதிட்ட நிர்பந்தமில்லாமல் வெளியாக்கினதும்தங்களுக்கு விய க்தமே. இரண்டு பேதங்களையும் முன்னொரு சமயம் நான் நேரில் வினவியபோது, 1, 2, மநு தாரர்கள் சபையின் ஜெனரல் மெம்பர்களென்றும், 3-வது மநுதாரர்கள் பிரசுரத்தின் சந்தா தாரர்களென்றும் சொல்லத்தெரிந்தேன். இவைகளைக் கேட்டவண்ணம் மனதிற்கு அமைதியா னாலும், இருதரத்தாரின் சந்தாத்தொகை ஒருவருக்கொருவர்கூடியும், குறைந்து மிருக்கவேண்டு மென்று அபிப்பிராயப்பட்டேன். இதைப்பற்றி மற்றொருசமயம் ஸ்ரீ C. R. சுப்பராய ஆச்சாரி யரவர்களை நேரில் சந்தித்து உசாவினதில், சட்டத்தில் சந்தாவிதி வித்தியாச மிருக்கவேண்டிய தவசியந்தான்; அந்த சமயம் தோன்றவில்லை யென்றார். இரண்டு விண்ணப்பங்களாலும் சபை சட்டதிட்ட வுடன்பாட்டில் சேர்ந்தவர்கள் சர்வாதிகார சுதந்தரமுள்ள ஜெனரல் மெம்பர்களென் றும், சபை சட்டதிட்ட வுடன்பாடில்லாமல் 3-வது விண்ணப்பத்தின்பேரில் சேர்ந்தவர்கள் பிர சுர சந்தாதாரர்களென்றும் நன்கு விளங்குகின்றது. ஆனால் அதைப்பற்றி இப்போது விவகரிக் கக் கூடவில்லை.

22 7-6.13 பிரசனைக்கு, 9-4-13ல் ஜனரல் மீட்டிங்கிற்கு ஆஜரான மெம்பர்க ளெத்தனை யென்றதற்கு, தாங்கள், கோரத்திற்குமேல் 4-5 அதிகமிருக்கலாமென்றது தங்களுக்கு ஞாபக மிருக்கலாமே. கோரம் 15-என்பது என் ஞாபகம். எப்படி யிருந்தாலுஞ்சரி. ஆகவே அந்த சபை யில் 19-20க்கு மேற்பட்ட மெம்பர்கள் வரவில்லை யென்பது வெளியாகிறது. இவர்களுள் சபைமெம்பர்க ளித்தனை, சந்தாதாரர்க ளித்தனை என்பதும் விளங்கவில்லை. அவர்களுள் மெம் பர்களுக்கே ஓட் கொடுத்தல் முதலிய சுதந்தரங்களுண்டு. சந்தாதாரர்களுக்கோ பிரசுரசம்பந்தந் தவிரயாதொரு பாத்தியமு மில்லையென நினைக்கிறேன். சபைக்கு சென்றமாதவரையில் உள்ளூர் வெளியூர் மெம்பர்கள் 362 என திட்டமாய்த் தெரிகிறது. இதில் சென்னை 78 - இந்த பெருந் தொகை மெம்பர்களுள் கிரமமாக சபை பாத்தியமும், ஓட் முதலிய பாத்தியமும் பெற்றவர்கள் உள்ளூர் வெளியூர்களிலும், சுமார் 100-க்கு அதிகமான மெம்பர்க ளிருக்கலாமென நினைக்கி றேன். வெளியூராருக்கு வழக்கமில்லை யென்பதாக வஞ்சித்தும் உள்ளூரில் சிலர்களையும் விட்டு விட்டும், மற்றவர்களை 9-4-13ல் மீட்டிங்கிற்கு அழைத்ததும் எவ்வளவு நீதியோ தெரியவில்லை.



23. மேலும் பிரசுர வியாபாரந்தவிர, கிரமமான விண்ணப்பத்தின்பேரில் மெம்பர்களான வர்களிடம் வருட சந்தா ரூ. 3 வசூலிப்பதினால், அவர்கள் குடும்பதின் பிரதிபலனு மின்னதெ ன்பது விளங்கவில்லை. பிரசுரந்தான் என்பீரேல், பிரசுரம் சபை மெம்பர்களானோர்க்கு இலவச மாய் கொடுக்கப்படுகிறதல்லவா? அப்படி பிரசுர மிலவசமென்றால் சபையில் பெற்றுக்கொள்ளு கிற ஷெடி தொகைக்கு வேறு பிரதிபலனை வெளியில்வந்து சொல்லமுடியுமா? ஒன்றுந் தோன்ற வில்லையென்றால், அப்படிப்பட்டவர்கள் சபையின் சகல லாபலோபங்களையும், ஓட் முதலிய சுதந்தரங்களையும் பெறுவதே சரியான பிரதிபலனென்பதை அறிய விரும்புகிறேன். ஆகையால் அத்தகைய குலாபிமானிகளும், கற்றுணர்ந்த மேதாவிகளுமாகிய மெம்பர்களைக் கைவிட்டு மூலை யில் ஒதுக்கிவைத்தும், வைஸ்பிரசிடெண்டுகளையும் கமிட்டிமெம்பர்களையும் புறக்கணித்ததும் சட்டவிரோதமென்றும் ஒழுங்கீனமென்றும் ஆக்ஷேபிக்கிறேன்.

24. நண்பரே! மேற்கண்ட உத்தமமெம்பர்களை வேண்டுமென்றோ, தெரியாமலோ கை விட்டு, சட்டத்தில் வரையறுத்துள்ள மெம்பர்களும், அல்லாதவர்களும் பிசரிக்கிடக்கிற சொற்ப மெம்பர்களைக்கொண்டு, சபைக்கு அவசியமில்லாத அகாலத்தில் உத்தியோக நியமனஞ்செய்யப் புகுந்தது ,"குட்டையைக்கலக்கி பருந்திற்கு இரையிட்டதுபோ லாயிற்று. இதனால் தாங்கள் ஆய்ந்த யோசனையில்லாது செய்தது போலிநியமனங்களாகும். ஆகவே, ஜாதியார் சமூகத்திலும் ஞாயஸ்தலத்திலும் அவை செல்லுபடியுள்ளதாகுமா வென்பதை சிந்திக்கக் கோருகிறேன்.

25. மேலும் கண்ணியஸ்தர்களும், மானஸ்தர்களுமான கனவான்களை போலிநியமன வழியாக அம்பலத்திற்குக் கொண்டுவந்ததோடும் சபையையும், அதன்பெருமையையும், அதனால் விளைந்த பல நன்மைகளையும், ஜாதியார்கள் புஜந்தட்டிவந்த கௌரவங்களையு மிழக்கும்படி தாங் கள் திரிசங்கு சொர்கங் கற்பித்துவிட்டீர்க ளல்லவா. அல்லாமலும், தாங்கள் சபைபிசுரத்தால் ஜாதியாருக்கு நன்மைசெய்ய முன்வந்தும் இப்போது கொஞ்சமும் ஞாயமில்லாத இதில்கண்ட ஒழுங்கீனங்களைச் செய்தும் ஜாதியாருக்குக் கசப்பை ஏற்றிவிட்டீர்கள்.

26 நண்பரே! இனிச் சொல்லவேண்டியது அதிகமில்லை. இரண்டொரு விஷயங்களோடு முடிக்கின்றேன். அதவாது சபை வரவு செலவு கணக்குகளை சரிபார்க்கச்செய்த ஆடிட்டர் நிய மனத்தில் ஒரு ஆச்சரியங்காண் கிறதாவது: சபை 10வது பிரசுரத்தில் முதல் வருஷ ரிப்போர்ட் டாக, சபாரம்பம் முதல் 13 மாதத்திய சகல வரவு செலவுகளையுந் திரட்டி தாங்கள் வெளியிட் டிருப்பது தெரியுமே. ஆகவே 1912 முதல் சபாபிரவேசம் வரையிலுள்ள கணக்கு ஆடிட் என் றால் பொருந்தும் அப்படிக்கில்லாமல் சபாரம்பமுதலென்றது பொருந்தவில்லை.

27 இதனோடும் சட்ட நிர்மாணத்திற்குஎன்று ஒருவரைநியமனஞ்செய்ததாய்த்தெரிகிறது. இதனால் என்னவிளங்குகிறதென்றால், சபை இதுவரையிலும் யாதொரு சட்ட திட்டங்களில் லாமல் மாஜுங்காணியாக நடந்துவந்ததுபோலவும், இனிதாம் புதிதாயுண்டுசெய்வது போலவுங் காண்கிறது ஏற்கனவேயிருக்கிற சட்டத்தைக் கூட்டியும் குறைத்தும், புதிக்கியும், விளக்கியும் கொள்ளுவதற்கென்றால் முரணுசாது. அப்படிக்கில்லாது, நவீனகற்பிதம்போல் காட்டியதுசிறி தும் பயன்டாது. ஆகவே, மேற்கண்டநியமனங்களை நான்எந்துக்கொண்டதாய்பொருள் கொள் ளாது கபடமாக குறுக்குவழியில் நுழைந்து செய்துள்ள நடவடிக்கைகளை ஆக்ஷேபிக்கிறதாக பொருள் கொள்ளவேண்டும்.

28 ஆகையால், இதுகிடைத்த 5 தினதிற்குள் சமாதானஞ்சொல்லக்கூடிய சரியான ஞா யமிருந்தால், எனக்கு விபரமானபதிலளிப்பதோடும், சட்டத்துக்கும், ஞாயதிற்கும் ஒவ்வாதது மான புதுநியமனங்களை பற்றற ரத்துசெய்ய வேண்டிய மார்க்கத்தைத் தேடவும் கோருகின் றேன். அப்படி ரத்துசெய்யப்படாமல் போலிதுலக்ஷணமதித்து, மேல்மேலும் சபைகூட்டங் களையும் ,நடவடிக்கைகளையும் நடத்தி பலதீர்மானங்களைச்செய்யத் துணிவீரேல், சபைக்கு அத னாலுண்டாகிற சகல கெடுதி நஷ்டங்களுக்கு தாங்களும் தற்போது புது நியமனம் பெற்றவர்க ளும் ஜவாப்புதாரிக ளாகவேண்டுமென்பதை வற்புறுத்தி இதன்மூலமாய் அறிவிக்கின்றேன்.

19 நிற்க, நமதுசபையில் 21-10-10 முதல் உத்தியோக பதவியிலிருந்துவருகிற காரிய நிர்வாக சபையை இதுகிடைத்த 7 தினத்திற்குள் தாங்கள் மேல்குறித்த என் லெட்டரின் விஷயமாய் கூட்டிவைக்கும்படி இதன்மூலமாய் கோருகின்றேன். அப்படி 7 தினத்திற்குள்

நிர்வாகசபையை தாங்கள் கூட்டாமல் காலதாமதஞ் செய்தால் அடியிற் கையொப்பமிட்டிருக்கிற யானும் மற்றும்சிலரும் ஷை நிர்வாக சபையை கிரமமாகக்கூட்டி, ஷை விஷயங்களுக்குத் தீர்மானம் பெற்றதையும், இந்த லெட்டரையும் அச்சிட்டு சபை எல்லா மெம்பர்களுக்கு மனுப்பி, மேல்காரியங்களை முறையே நடத்தப்படுமென்பதை தாங்கள் முதலிய யாவரும் அறியவேண்டுமாய் கோரப்படுகிறது.

இதில் என்னையறியாத தப்பித வாக்கியங்களிருந்தால் க்ஷமியுங்கள்.

வண்ணாரப்பேட்டை,
*30th June, 1913.*

இப்படிக்கு, தங்களன்புள்ள
தி. மு. முக்கண்ணாச்சாரி.
2-வது வைஸ்பிரசிடெண்டு விஸ்வகர்மகுலோத்தாரண சபை சென்னை,

உத்தரவுப்படி—கோ. கன்னியப்பாச்சாரி, ஆ. காரியதரிசி
செ. வி. கு. சபை சென்னை.

## வர்த்தமானக்குறிப்புகள்.

### ஒரு சிறுவனது பெருஞ்சம்பாதனை.

பிரான்சு தேசத்திலுள்ள ஓர் உயர்தரப்படக்காட்சிக் கம்பெனியில் வேலை செய்துவந்த தேபாஸ் எனனும் 7வயதுள்ள ஒருசிறுவன் ஒரு வருஷத்தில் 4000 பவுண்டு சம்பாதிக்கானும்.

***

### படிக்கத்தெரிந்த நாய்.

ஜர்மனி தேசத்தில் படிக்கவும் எழுதவும் எழுத்துக் கூட்டவுந் தெரிந்த நாயொன்றிருக்கிறதாம். நாய்களும் இக்காலத்துப் படிக்கத் தலைப்பட்டிருக்கின்றனவாயின், படிக்கத் தெரியாத மனிதப் பிராணிகளைப்பற்றி யென்ன சொல்லலாம்.

***

### புதிய டில்லிப்பட்டண நிர்மாணம்.

புது டில்லிப் பட்டணம் கட்டுவதற்கு 9-கோடியே 75-லக்ஷம் ரூபாய் பிடிக்குமென்று இந்தியா கவர்ன்மெண்டார் போட்டிருந்த எஸ்டிமேட்டுகளை இந்தியாமந்திரி எற்றுக்கொண்டுவிட்டார். கைதேர்ந்த சிற்பிகள் அனேகர்க்கு இங்கு பலவேலைகளுண்டு.

*

### மின்சாரத்தால்சுத்தஞ் செய்யும் பால்.

இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் நகர முனிசிபாலிடியார் சிசுக்களுக்கும் குழந்தைகளுக்கும் சுத்தமான பால் கிடைக்கும்படி மின் சார வுதவியைக் கொண்டு பாலைச் சுத்தஞ் செய்து கொடுத்து வருகின்றனர். இங்கும் அவ்வாறு செய்யப்படுமாயின், மிகவும் நலமுண்டாவதாம்.

***

### போலீஸ் அதிகாரிகளுக்கு இங்கிலண்டில் பயிற்ச்சி.

பெஹாரா போலீஸ் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஆர் கே முகர்ஜியானவர் லண்டனிலுள்ள ஸ்காட் லண்ட்யார்ட் என்னும் போலீஸ் ஸ்டேஷனில் துப்பறியும் தொழிலில் பயிற்சியடைவதற்காக ஸர்க்கார் செலவில் இங்கலண்டுக்குப் போகிறார். கல்கத்தா போலீஸிலிருந்தும் ஒரு உத்யோகஸ்தர் ஸ்காட்லண்ட் யார்ட் போலீஸ் ஸ்டேஷனில் பயிற்சியடைவதற்காக அனுப்பப்படுவாரென்று தெரிகிறது.

***

### சித்திக்குள்ளர் கூட்டம்.

இப்பொழுது இங்கிலாந்து தேசத்துள்ள லண்டன் மாநகரில்' ருஷ்யா, ஜர்மனி, பிரான்சு, ஹங்கரி, ஆஸ்டிரியா, இத்தாலியா என்னும் பல தேசங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ஆணும், பெண்ணுமாக வுள்ள 100 சித்திரக்குள்ளர்கள்வந்து, பலவகையாக வாத்தியங்கள் வாசித்தும்; சர்க்கஸ் செய்தும் வருகின்றனர்.. இவர்களுக்குத் தலைவனான சித்திரக்குள்ளன் 2 அடி 8அங்குலஉயரமுடையவனும்; இவனுக்கிப்போது வயது-30 இவன் நன்றாகப்படித்துப் பெருங்கீர்த்தி பெற்றவனும். இவன்பிரமசாரி. இவன் பிரான்சு தேசத்தில் ஒருத்தி தன்னை விவாகஞ் செய்துக் கொள்ளக் காத்திருக்கிறாளென்று கூறுகின்றானும்; இவன் ஜர்மனிதேசத்திற்பிறந்தவன்; பெயர் எர்ன்ஸ். அவர்களுக்குள் ஒருத்தி 2 அடி 6 அங்குலம் உயரமுள்ளவளாயிருக்கிறாள், இவள் கட்டழகியாம்.

***

ஸ்ரீமத் விராட் விஸ்வப் பிரஹ்மணே நம:.

# விஸ்வகர்ம குலோபகாரி.

[Stamp:] OF THE REGISTRAR OF BOOKS ... 30 OCT 1914 ... MADRAS

மலர்–1. { ஆனந்தஸு புரட்டாசிமீ 1914ஸு செப்டம்பர்மீ } இதழ்–12.

## மெய்ஞ்ஞான தீபம்.

### வீணர்களின் வீம்பு.

சிலர் நிஷ்பிரயோஜனமானகாரியங்களில் வலிய தலையிட்டுக்கொண்டு வீண்வாதம் புரிய முயல்கின்றனர். அவ்வாதம் அவர்கள் ஆயுள்காலத்தில் முடிவடையினும் அடையும், முடியாது போயினும்போகும். ஆனாலவர்கள் இந்நிலைமையில், வாலிழந்த வஞ்சகநரி வாலுடைய நரிகளுக்கு வால்களின் நிஷ்பிரயோஜனத்தை எடுத்தோதிய கதையைப் போலத் தம்முடன் தமமையொத்த பல வீணர்களைச் சேர்க்க முயல்கின்றனர். இவர் தாம் செய்யும் காரியம் 'நாய்வாய் எலும்பு' போல்வதென் றுணர்வாராயின் வீண் வாதங்களில் தங்காலத்தைச் செலுத்தி அவமதிப்புக் காளாகார்கள்.

***

### நட்பாராய்தல்.

உண்மையான நட்பினர் தம் நேயர்கட்கு இடர் வந்துற்றகாலை, கையானது வாய் வேண்டாமலே வலிய ஆகாரத்தை எடுத்தூட்டுவதுபோலவும், இடையிலுள்ள உடை நழுவுமிடத்து கைகள் விரைவில் அவ்வுடையைத் தாங்குவது போலவும், வலியசென்று அவர்கள் இடுக்கண்களைக் களைவர். அதமர்களோ தம்நேயர்களுக்கு ஆபத்துக்காலத்தில், நீர்வற்றிய குளத்தினின்றும் நீங்கும் நீர்ப்பறவைகள் போலவும், விலைமாதரின் மனம்போலவும் நிலைபிரிந்து நிற்பர். நன்றிமறவாமையும், நட்பாராய்தலும், பகுத்தறிவு மற்ற இவர்கட்கு அறிவுறுத்துமாறன்றோ "கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை யுள்ளினும் முள்ளஞ்சுடும்" என நாயனார் கூறினார். இவ்வதமர்களைக் காண்பதும், அவர்கள் கூறுவதைக் கேட்பதும், அவர்களோடிணங்கி யிருப்பதும் தீமையே பயக்கும்.

***

### செய்ந்நன்றி மறவாமை.

ஒருவர் தமக்குப் பிறர்செய்த உபகாரத்தை மறவாது அவ்வுபகாரத்தைச் சிந்தித்து நிற்றலே செய்க்நன்றி மறவாமையெனப்படும். அவர் இங்ஙனம் சிந்தித்திருப்பதைவிட்டுப் பிறர் தமக்குக் கைம்மாறு கருதாதுசெய்த உபகாரத்தைக் நினைந்திராது அதனைத் தம் வினைவசத்தால் அன்னோர் வழியே பெற்றதாகக்கருதிப் போலிஞானம் பேசிவருகின்றனர். அன்னோர்களை அவமதித்தலையும், புறக்கணித்தலையும் அறியாமை மிகுதியால் சிலர் கைக்கொள்கின்றனர். எல்லாம் தம்விதிவழியே வருவதெனின், தம் பெற்றோரையும், குருவையும் மதிப்பதென்கொலோ? சர்வதயாநிதியாகிய ஈசுவரன் பற்பல வடிவங்களாக நின்று பிரபஞ்சத்தைக் காத்தளிக்கின்றனர் என்னும் உண்மையை உணர்ந்து, எவர் காரணமாக தமக்குச் சில பல உபகாரங்கள் எற்படுகின்றனவோ அவர்களைக் கடவுளின் கிருபையைத் தம்மினும் மிகுதியாகப் பெற்றிருப்பவரெனக்கருதி அன்புடன் துதித்து நிற்றலே செய்க்நன்றி மறவாமையாகும். இவ்வுண்மையை அறிவுறுத்துமாறன்றோ பொய்யாமொழிப் புலவர் "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் முய்வில்லை செய்க்நன்றி கொன்ற மகற்கு" எனக் கூறினர்.

***

## சிற்பம் இனி சீர்படும் மார்க்கம்.

பாரதநாட்டின் பழம்புகழனைத்தும் நம் முன்னோரின் சிற்பவன்மையாலும், அக்காலத்திய அரசர்களின் அபிமானத்தாலும், பக்திமேலீட்டினாலும் நிலைநாட்டப்பெற்றன. அவைகளின்வழியே நம் நாட்டாரின் சீரும், சிறப்பும், நாகரீகமுதிர்ச்சியும், சரித்திர வரன் முறைகளும் அன்னியர்கள் பலராலும்அறிந்துகொண்டாடப்படுகின்றன. சிற்ப சாஸ்திரங்களாலாகிய ஆலயங்களும், ஆங்கு அமைத்துள்ள பிரதிமை நிர்மாணமுதலிய மற்றைய அற்புதங்களும் இந்நாட்டில் நிலை பெறுதிருப்பின், நம்மைநாகரீகமற்ற வனவாசிகளென வாய்கூசாமல் பலரும் இகழ்ச்சிக்குட் படுத்தியிருப்பர். நமது பண்டைய ஆலயப் பணிகளின் இணக்கமும், கைவேலைகளின் திறனும், விளக்கமும் மிகுந்த சாசுவதத் தன்மையை அடைந்து நிற்றலால் நம்நாட்டின் பெருமையும், நம் முன்னோர்களின் கீர்த்தியும் பலகாலும்நீடித்திருக்கத் தடையின்றும். என்றாலும், சிற்பத்தாலாகிய நிர்மாணங்களும், அக் கைங்கர்யங்களை நிர்வகிக்கும் கர்த்தாக்களின் தொகையும், தம் மூதாதைகள் செய்து வந்ததுபோல் மகத்தான சிற்பசாஸ்திர ஆராய்ச்சியும், உண்மையான சிற்பத்தைப் பகுத்தறியும் சக்தியும், அவைகளின் தாரதம்மியங்களைச் சீர்தூக்கும் உணர்ச்சியும் பெற்றுள்ள பொது ஜனங்களின் தொகையும் நம்நாட்டில் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றன.

இவ்விதகுறைபாடுமகம்மதியர் தென்னிந்தியாவில் படையெடுத்தகாலத்தே தோன்றியதெனினும், அவுரங்கசீப் காலத்தும், திப்புசுல்தான் காலத்திற்குப்பின்னும் ஆலயப் பிரதிஷ்டைகளும், விக்கிரஹ நிர்மாணங்களும், நம்நாட்டில் அற்றேபோயிற்றெனலாம். ஆலய முதலிய நிர்மாணங்கள் அற்றுப் போகவே அரசர்களால் அபிமானிக்கப்பட்டு பிரக்யாதியுடன் வாழ்ந்திருந்த பரம்பரைச் சிற்ப வம்சங்கள் நசித்துவிட்டன. சிற்பத் தொழிலால் பயன்பெறாத அவர்களின் சந்ததியார்கள், சுகஜீவனத்தைக் கருதி தம் மூதாதையர்களின் தொழிலைத் தொலைத்துவிட்டு, கற்ற சாஸ்திரங்களையும் போக்கிலே போகவிட்டு சிற்பசாஸ்திரக் குப்பைகளை அற்பமாக மதித்து பரண்மேலெறிந்து பாழும் எலிக்கும், கறையானுக்கும் இரை கொடுத்து, தம் வம்சத்தினர்க்குரிய மற்றைய நான்கு தொழில்களிலும், முக்கியமாய் பொன் வேலையில் பிரவேசிக்கலாயினர். அதனோடும், புறமதங்களும், அம்மதக் கொள்கைகளை விரிக்கும் இலவசப் புத்தகங்களும் கணக்கின்றி நம்நாட்டில் பரவவே, இந்து மதத்தின் உயர்வும், சாஸ்திரங்களின் அருமையும், தேவாலயங்களின் உரிமையும், பொது ஜனங்களின் கவனத்தினின்றும் மெல்ல நழுவலாயின. நம் நாட்டார் அன்னியநாகரீகத்தை ஆசித்து அவலம்பிக்கவே பண்டைய நாகரீகத்தின் பலனையும் இழந்து, நவீன நாகரீகத்தைக் கைக்கொண்டு நகைப்பிற் கிடமாகவே நடித்து திரிசங்கு சுவர்க்கவாசிகளானார்கள்.

சிற்ப சாஸ்திரங்களுக்கு உரிமையாளரான நம்மனோர்கள், சிற்பசாஸ்திரங்கள், எழுதப்பட்டிருக்கும் சமஸ்கிருத பாஷையையும், வைதிகப் பழக்கத்தையும், அக்கல்வியையும் துறந்து, சிற்ப நூற்களின் நாமதேயங்களையுங் கூட மறந்து காலங்கழிக்கலாயினர். சமஸ்கிருதபாஷாஞானம் சிதையவே, அத்துடன்சிற்பசாஸ்திரஞானமும், மற்றசமய நூல்களின் தேர்ச்சியும், வைதிகஒழுக்கமும், வேத மந்திர பாராயணமும், பிரம தேஜஸும், செல்வமும் நாளுக்குநாள் குறைந்தொழிந்துவிட்டன.

இவ்வித பரிதாபகரமான நிலைமையிலும் சிற்சிலர் தம்மைசிற்பிகளென்றும், சிற்ப சாஸ்திரங்களையறிந்த ஸ்தபதிகளென்றும் சொல்லி அபிநயிக்கின்றனர். சிற்பசாஸ்திரங்களோ கேவலம் கட்டிடத்தொழில்களைப் பற்றிமட்டும் கூறுவதன்று. உளிகொண்டு கல்லையும், மரத்தையும் வெட்டி அடிப்பதென அறைவது மன்று. சிற்பசாஸ்திரங்களானவை இந்தியர்களின் மேலான மனோதர்மங்களையும், பூதபௌஷியங்களை அனுசரித்த விஷயங்களையும், இன்னும்பல்வேறுபட்ட அரியவிஷயங்களையும் அறிவுறுத்துவனவாகும். இவ்விஷயங்களையெல்லாம், ஐயந் திரிபறக் கற்று, விஷயங்களின் நுட்பங்களை உணர்ந்து, கைப்பழக்கத்தையும் ஒருங்கேபெற்று அவைகளைஉதாரணபூர்வகமாக நிதரிசனப்படுத்தக்கூடிய சிற்பிகள்எத்தனைபேர் இங்கு உளரோ யாமறியேம். சிற்பசாஸ்திரங்களுக்குத் தாமே அதிகாரிகளென்றும், அன்னியஜாதியர் அவற்றைக் கையாட உரிமையற்றவர்களென்றும்வாய்ப்பறைசாற்றி வயிறுவளர்க்கும் போலிச் சிற்பிகள் இன்னுமிருந்துவருகின்றனர். இவர்களால் நம்சிற்பத்திற்கு வசைமொழியும், குலத்தவர்க்குநிந்தனையும் ஏறபடுகின்றனவேயன்றி சிற்பம்செழித்தோங்க ஹேதுவாகவில்லை. சிற்பநூல்களின் விதி வாய்ப்பாட்டின் இரகஸியார்த்தங்களையுணராது,சில சுலோகங்களைச் செவி வழியேதெரிந்து, வாய்வழியே அபசுரமாய் பிதற்றித் திரிபவர்களால் நம்குலத்தினர்க்கு எங்ஙனம் பெருமைசித்திக்கும் ?

நம்மனோர்க்கு சிற்பசாஸ்திரங்களின் தேர்ச்சியும், சமஸ்கிருதபாஷா ஞானமும் இங்ஙனமிருக்க, சிற்பத்தொழில் ஞானமாவது, கைப்பழக்கமாவது அவர்களுக்கு இருக்கின்றனவாவென்பதையுஞ் சற்று ஆராய்வோம். சாஸ்திரோக்தமாகச் செய்ய வேண்டிய தொழிலை சமஸ்கிருதக் கல்வியின்றியும்,சாஸ்திரஞானமின்றியும் வெறுங்கைப்பழக்கத்தால் செய்துமுடித்தல்சாத்தியமாகுமா? அன்றியும், சிற்பசாஸ்திரங்களைப்போதிக்கும் கலாசாலைகள் இந்நாட்டில் நிலைநாட்டப் படாமையால் நவீன சிற்ப முறைகளும், கட்டப்படும்கட்டிடங்களும் சிற்பவிதி வாய்ப்பாட்டிற்குப் பொருத்த மற்றவைகளாகவே காணப்படுகின்றன. பக்த சிகாமணிகளாய், வருவாயுட் கால்வழங்கி வாழ்பவர்களாய், சைவசமய வழிபாடன்றி மற்றொன்றைப்பெரிதும்நினையாதவர்களாய், ஒற்றுமையில்மானினத்திலும் சிறந்தவர்களாய், குபேரனிலும் அதிக சம்பத்துடையவர்களாய், ஆலயஜீர்ணோத்தாரண கைங்கர்யங்களில் அத்தியந்த அன்புடையவர்களாயிருந்து வரும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களின் தற்கால முயற்சிகளே நமக்கு சான்றுபகரும். இப்பெருந்தகையாளர் எத்தனையோ புராதன ஆலயங்களைப் புதுப்பித்திருக்கின்றனர், எத்தனையோ நூதன ஆலயங்களை சிற்பிகளையும், சிற்பத்தொழிலைக் கையாடிவரும் அன்னிய ஜாதியரையுங்கொண்டு நிருமித்திருக்கின்றனர். இவ்வாலயப் பணிகளெல்லாம் பழிப்புக்கிடமான கீழ்தரவேலைகளாக இருக்கின்றனவேயன்றி புராதன வேலைகளின் அழகும்,நயமும், ஒடிமான விசேஷங்களும், மூர்த்திகாமும் அமையப்பெற்றவைகளாயில்லை. புராதன வேலைகளின் உன்னதத்தையும், நவீன வேலைகளின் நாணயக் குறைவையும் தொழில்ஞானமிற்றென வறியாச் சிறுகுழந்தைகளும் கண்டுகொள்வார்களென்றால், புராதன ஆலய வேலைப்பாடுகளைக் கண்ணுறவென்றே தேசாந்திரிகளாய் இங்குவரும் ஐரோப்பிய சிற்பிகளுக்கும், சிற்பசாஸ்திர நிபுணர்களுக்கும், தேசசரித்திர ஆராய்ச்சி வல்லோர்க்கும், பழஞ்சரிதைவாணர்க்கும், இந்தியர்களிடத்தும், நமது தற்கால சிற்பிகளிடத்தும் எங்ஙனம் மதிப்பு ஏற்படும்? ஆகவே மதுரை, திருவானைக்கா, சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களைக் கண்ணுற்ற அவர்கள் ஆங்கு தற்காலம் செய்யப்பட்டுள்ள நவீன சிற்பவேலைகளைப்பெரிதும்இகழ்ந்து பத்திரிகைவா

யிலாகவும், புத்தகவாயிலாகவும் பிரகடனஞ் செய்திருக்கின்றனர். இந்தியாவின் அரசாட்சி ஸ்தானமாயிருந்த கல்கத்தாநகரை மாற்றி டில்லிப்பட்டணத்திற்குக் கொண்டுபோகப்பட்டபோது ஆங்கு கட்டப்படும் கட்டிடங்களும், ராஜப்பிரதிநிதியின் மாளிகைகளும் இந்தியசிற்ப ரீதியை அநுசரித்தே கட்டப்படுவது முறையென்றும், இந்திய சிற்பமுறையில் பல அமைதியும், சௌகர்யமும், தேச சரித்திர இணக்கமும் அவற்றால் அமையுமென்றும், அக்கட்டிட முறைகளைத் தெரிந்த சிற்பிகள் இந்தியாவில் கிடைப்பதருமையாகாதெனவும், மிஸ்டர் ஹாவல், கிங், சிஸாலம் முதலிய இந்தியசிற்ப அபிமானிகள் பல வருடங்களாக இங்கிலாந்தில் பெருத்த கூக்குரலிட்டார்கள். பார்லிமெண்டு சபையிலும் இது விஷயமாய் பல பிரசினைகளும், பெருத்த தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டபோது, மெம்பர்களின் கருத்துக்கிணங்க இந்தியசிற்பிகளைத் தேடிப்பிடித்து, இந்தியசிற்பமுறைகளைப்புதியடில்லி நகரில் நிலைநாட்டப்படுமென்று இந்திய மந்திரி அவர்களுக்கு சமாதானம் கூறநேர்ந்தது. இந்தியமந்திரி அளித்தவாக்கின்படியே இந்திய சிற்பிகளை இந்தியகவர்ன்மெண்டார் வழியாகத் தேடிப்பார்த்தும் உண்மையான சிற்பிகள் அகப்படாமையால் மனம் நெகிழ்ந்து, புதிய டில்லி நகரை பழய கிரீக் மாதிரிகளுக்கிணங்க கட்டுவதென தீர்மானித்து அக்கட்டிடவேலைகள் நடைபெற்று வருவதையும், நமது சிற்பிகளிழந்துவிட்ட மகத்தான சமயத்தையும், லாபத்தையும் என்னென்று இயம்புவோம். கவர்ன்மெண்டார் நோக்கத்திற்கேற்ற சிற்பிகள் கிடைக்கவில்லையென்றால் நாட்டுக்கோட்டை செட்டியார்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றக்கூடிய சிற்பிகளாயினும் கிடைத்து அவர்கள் எடுத்துக்கொண்ட கைங்கர்யங்கள் இனிது நிறைவேறுகிறதாகவும் தெரியவில்லை. கல்லை உளிகொண்டு கொத்தவும், மூலைமட்டத்திற்குஇணக்கமாகஅடிக்கவும் தெரிந்தவர்களே உண்மையான சிற்பிகளெனவும், ஸ்தபதிகளெனவும் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. அங்ஙனம் அரைகுறைவேலை செய்யத் தெரிந்தவர்கள்கூட நமது குலத்தில் அதிகம் கிடைக்காமையால், வேலைக் காரர்களின் தொகையைப் பெருக்கவும், வேலைகளைத் தீவிரமாக நடத்தவும், சிற்பவேலைக்குரியரல்லாத மற்றைய ஜாதியர்களையும் சேர்த்துக்கொள்ளலாயிற்று உண்மை. இங்ஙனமிருக்க நாட்டுக்கோட்டையார்களின் மீது குறைகூறுவதெங்ஙனம்?

பண்டைய சிற்பங்களை நன்குணர்ந்து ஆலய ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்புகுந்திருக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களில் சிலசாரார் வாஸ்துசாஸ்திரத்திற்கு அதிகாரிகளல்லாதவர்களைக்கொண்டு நிர்மாணஞ் செய்தால், அந்தகர்த்தா முதலானவர்களின்குலங்கள் நாசத்தையடையுமென்ற மகரிஷிகளின் வாக்கியத்தின் உண்மையை உணர்ந்தவர்களாய், நமது சிற்பிகளின் பெருமையை உள்ளவாறு ஒப்புகொண்டுஅவர்களை திரவியலோபமின்றி தேடிப்பிடிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆகையின் இவ்வித அரியசந்தர்ப்பத்தையும்நாம் இழந்துவிடுவது அழகன்று. சிற்பப்பயிற்சிக்கான கலாசாலைகள் இத்தென்னிந்தியாவில் ஏற்படுவதற்கு இதுவே சமயமாகும். அதற்காதரவாக சமஸ்கிருதப் படிப்பை அடைவதற்கும் வைதிக ஆசாரணைகளை உரிமையாகக் கொள்வதற்கும் இதுவே சமயம்.

இதுகாறும் கூறியவற்றால் சிற்பாசாரியர்களுக்கு சமஸ்கிருதபாஷா ஞானமும், வேதாத்தியயனப் பழக்கமும், பிரதமத்திலேயே அத்தியாவசியகமாக இருக்கின்றமை பெறப்படுகின்றனவன்றோ? இவ்வித கல்வியும், ஆங்கிலேயக் கல்வியும், ஒழுங்காக நம் வேதாத்தியயன பாடசாலையின்கண் நடைபெற்று வருகின்றன வென்பதை நம் குலாபிமானிகள் யாவரும் நன்குணர்ந்திருக்கின்றார்கள். இனி அதற்கு மேலாகிய சிற்பக் கல்வியை நம் சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்கும் வரன்முறையாக போதிக்கவேண்டி ஓர் கலாசாலை ஏற்படுத்துவது அத்தியாவசியகமாகிறது. அவ்வித கலாசாலைகளெத்தனை, எவ்வெவ்விடங்களில் ஸ்தாபித்தால் நமது குலோற்பவர்களுக்கு நன்மை பயக்குமென்பதைப்பற்றியும், இன்னும் அதைச்சார்ந்த மற்ற விஷயங்களைப் பற்றியும் பலசுஜாதிக்கனவான்களிடமிருந்து பற்பல அபிப்பிராயங்களைப் பெற்றிருக்கிறோம். அவைகள் ஒவ்வொன்றையும் தனித் தனியே வெளியிடுவது அவசியமாகக் காணப்படாமையால் அவைகளை சங்கிரகமாக இங்கு சொல்லுவோம். இவ்வித பாடசாலைகள் தென் பிராந்தியத்தில் ஒன்றும், சென்னையில் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டால் மிக்க நன்மை பயக்குமென்றும், ஒரு பாடசாலை சிதம்பரத்திலாயினும், மதுரையிலாயினும்ஸ்தாபிக்கப்பட்டால், சிற்பப்பணிக்குவேண்டிய சாதனங்களும். ஸ்நானம், ஜெபம், தரிசன வைபவங்கள் ஆங்கு மிகுதியாகப் பெருவதோடும், நாட்டுக்கோட்டை செட்டிமார்களின் ஆதரவை மிகுதியாக அடையக்கூடுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். சிதம்பரம், மதுரையைவிட சமீபத்திலிருப்பதால் இக் கலாசாலை அங்கு ஸ்தாபிக்கப்படின் நமது சபையாரின் கண்காணிப்பு அதிகமாகவும் தொடர்ச்சியாகவும் இருக்கக்கூடும். மேலும் அவ்வூர் முக்கியக்ஷேத்திரமாகயிருப்பதோடும் மத்திய ஸ்தானமாகவும் இருக்கிறது. அங்கு ஏற்படுத்தப்படும் சிற்பகலாசாலையில் கரசாதனங்களையொட்டியவேலைகளும், சாஸ்திர அப்பியாசமும் மநந முதலியவைகள் மட்டுமே போதிக்கப் படவேண்டுமென்றும், மானசாரம், காசிபம், விஸ்வகர்மியம், மயமதம் ஆகிய இந்நான்கு முக்கிய சிற்ப சாஸ்திரங்கள் மட்டுமே போதிக்கப் படவேண்டு மென்றும், மற்றைய உபசிற்பநூற்களையும் அதிசிற்பநூல்களையும் கலந்து போதிப்பதால் பல இடையூறுகள் நேருமென்றும் நமது குலாபிமானிகள் கருதுகிறார்கள். ஆகையால் அக்கலாசாலையில் மேற்குறித்தசாஸ்திரங்களே போதிக்கப்படும். இன்னும் பல சாஸ்திரங்களைப்படித்து சிற்பசாஸ்திர ஞானத்தைப் பெரிதும் அடையவிரும்புகிறவர்களுக்கு மேற்கூறிய சாஸ்திர ஞானமே வழிகாட்டும். சிதம்பரம், அல்லது மதுரையில் ஏற்படும் சிற்பகலாசாலையில் போதிக்கப்படுவன மேற்கூறியவைகளேயாகும். இவற்றிற்கு மேற்பட்டபடிப்பாகிய, வைதிகக்காரியங்களையும், கும்பாபிஷேகமுதலியகிரியைகளையும், வேதாத்தியயன பழக்கங்களையும், மற்றைய முக்கியசிற்பநூல் ஆராய்ச்சிகளைசெய்வதற்கும் அப்பாடசாலைச்சிறுவர்கள் சென்னையில் ஸ்தாபிக்கப்படும் முக்கிய சிற்பு கலாசாலைக்கு வரவழைக்கப்படுவார்கள். சென்னை கலாசாலையில், உருவச்சித்திரம் தத்சொரூபமாக எழுதும் பழக்கமும், ஆங்கிலேயமுறைகளை அநுசரித்த 'இஞ்சினீரிங்' விஷயங்களும் பிளான்முதலிய சித்திரப்படங்களை நவீனவேலைக்கிணங்க தமிழிலேயே போதிக்கப்படுவார்கள். கட்டிட வேலைக்குரிய சாதனங்களாகிய கல், செங்கல், மரம், சுண்ணாம்பு முதலியவைகளின் வலிமைகளைப்பற்றியும், அவைகளை இடமறிந்து உபயோகிக்கும் வழிகளையும், காற்றோட்டம்,ஜலதாரை முதலிய சுகாதார விஷயங்களையும் போதிக்கப்படுவார்கள். இவைகளுடன் சென்னை மியூஸியம் என்னும் கண்காட்சி ஸ்தானத்திலுள்ள பண்டைய சிற்பவேலைகளைக் கவனிப்பதற்கும், முக்கியவேலைகளைப் பார்த்து மண்ணிலாவது மெழுகிலாவது சிலையிலாவது செய்யும் பழக்கத்தையும் பெற்றுவருவர். இவ்விரு பாடசாலைப் படிப்புகளையும் மூன்று வருடங்களில் நம் சிறுவர்கள் சுலபமாக அடையக்கூடும். சென்னைசிற்பகலாசாலைப் படிப்புமுடிந்த க்ஷணத்திலேயே நம் சிறுவர்கள் சாஸ்திரோக்தமான சிற்பிகளாகிறார்கள்.

இவ்வித கலாசாலைக்குத் தக்க மாணவர்களைத் தேர்ந்து எடுப்பதும், துவக்கத்தில்

அவர்களின் தொகை குறைந்திருப்பதும் நன்று. முதலில் பத்துபேர்களுக்கு அப்பியாசம் செய்துவைப்பதே சுடினசாத்தியமாகலாம். படிப்பு இலவசமாக போதிக்கப் படுவதோடும் போஜனம், வசதி முதலிய சௌகர்யங்களும் அவர்களுக்கு இலவசமாக அமைக்கப்படவேண்டும். இத்தியாதி சௌகர்யங்களை இவ்விரு கலாசாலைகளும் அடைவதற்கு குறைந்தது மாதமொன்றுக்கு ரூபாய் 300 பிடிக்கும். இந்த சொற்பத் தொகையை நம் சுஜாதியரில் 60 பேர் மாதம் ஒன்றுக்கு ரூபா 5 வீதம் கொடுத்துதவி வருவார்களானல் அன்னியஜாதியரின் உதவியை நாடாமலே இவ்வரும்பெரும் காரியத்தை நிறைவேற்றிவிடலாம். நம் சபையின் ஆதரணையில் சென்றமீ 23உயில் நடந்த மகோபந்நியாசமுடிவில் இக்கலாசாலைவிஷயம் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட பொழுது, ஆங்கு விஜயஞ் செய்திருந்த சுஜாதி கனவான்களில் மூவர் தாம் மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கொடுத் துபகரிப்பதாக வாக்களித்துள்ளனர். இன்னும் மற்ற ஐம்பத்தேழு குலாபிமானிகளை விரைவில் பெறக்கூடுமென நாம் நிச்சயமாக நம்புகிறோம். அச்சபைக்கு விஜயஞ் செய்திருந்த ஸ்ரீ N. C. கண்ணபிரான் முதலியாரவர்களும், ஸ்ரீ கோ. வடிவேலுசெட்டியாரவர்களும் இக்கலாசாலை ஸ்தாபிக்கும்விஷயத்தில் தங்களாலியன்ற உதவிகளைச்செய்வோம் என வலிந்து வாக்களித்ததற்காக நாம் அவர்களுக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நம் குலநலச் செல்வர்கள் இம் முக்கியவிஷயத்தில் தங்கள் முழுகவனத்தைச் செலுத்தி இவற்றைப்பற்றி தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவதுடன் தங்களாலியன்ற பொருளுதவியும், மனோ, வாக்கு, காயங்களாலாகிய சகாயங்களும் செய்ய முன் வருவார்களென நம்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

(342-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## நங்குல நேயர்களுக்கு விஞ்ஞாபனம்.

சிற்பசாஸ்திர மென்பது நிகண்டில் விக்ஞான மென்று சொல்லப்பட்டிருக்கிறது. விக்ஞான மென்றால் விசேஷ ஞானம். அதாவது புத்தியை பலானகாரியங்களில் செலுத்தி அதன்வழியாய் ஆலோசித்து ஆலோசித்துச் செய்வதே சிற்பம்.

இந்த சிற்பசாஸ்திரப் பிரகாரமே நம் முன்னோர்கள் சகலவிதமான யந்திரதந்திர சூழ்ச்சிகளும், அகிள், மதில், பட்டணம், ஆலயம், கோபுரம், ரதம், வாகனம், விம்பம் முதலியவைகளும் நிர்மித்திருக்கிறார்களென அநேக ஆதாரங்களிருக்கின்றன.

பிற்பட்டகாலங்களில் நம்மவர்கள் கல்வியின்மையாலும், சாஸ்திரநம்பிக்கை யற்றதாலும், விசேஷக்ஞான மில்லாமையினாலும், அரிய தொழில்களை பயிலாது கைவிட்டமையினாலும், சிறபசாஸ்திரங்களின் பேரிலுள்ள பக்திக்குறைவினாலும், சிற்பசாஸ்திரங்களை அன்னியரிடங்களில் கொடுத்தும், சூக்ஷிக்காமல்சிதலரித்தும், சத்ருக்களாலும், மகம்மதிய அரசர்களாலும், ஜலத்திலும், அக்கினியிலும் போட்டு நசிப்பிக்கப்பட்டும் போயினமையால் இக்காலம் காணுகிறதற்கு அரியனவாகிவிட்டது.

மேலும் ஒவ்வொரு சிற்பமும் அளவில்லாத கிரந்த சங்கியைகளோடு கூடின வென்பதாகவும் காணப்படுகிறது. சிற்பசாஸ்திரத்தில் யந்திர தந்திர சூழ்ச்சிகளிருக்கிறதோ வென்றும் சந்தேகிக்கிறதற்காக சில புராணங்களில் சொல்லப்படும் யந்திர தந்திர சூழ்ச்சிகள் சிற்பசாஸ்திரப் பிர



காரமே செய்திருக்கிறதென்று சொல்லப்படும் வசனங்களைக் கோர்வைசெய்து ஓர் வியாசமெழுத உத்தேசிக்கின்றேன்.

### சிற்பத்தைப்பற்றி சபையில் ஆலோசிக்க வேண்டிய முக்கியவிஷயமாவன.

ஆங்காங்கு நம்மவர்களிடம் இப்போது காணப்படும் ஒவ்வொரு சிற்பங்களையும் பார்த்து எவ்வளவு சிரமமும், பொருள் சிலவும் செய்தாவது எழுதி இச்சபையிலிருக்கும்படியாக செய்யவேண்டும். மேலும் திருவிதாங்கூர், மைசூர், காசி, காலேஜ் தஞ்சாவூர், அடயார் முதலான சாஸ்வதிமாலிலும் அநேக சிற்பங்களிருக்கின்றன. அவைகளுக்கும் ஒரு பிரதி பண்ணிவைக்க வேண்டும்.

சிற்பசாஸ்திர மானது வடதேசங்களிலும் தென்தேசத்திலுமாக 200-க்கு மேலுண்டென்பதாகத் தெரிகிறது

இந்தப்பிரகாரமிருக்கிற சிற்பங்களொவ்வொன்றிலும் பிரத்தியேகமாக நம் குலதர்மங்களும், ஆசாரங்கள் முதலான அனுஷ்டானங்களும், பிரதிஷ்டா விதிகளும் சொல்லப்படுவனவாகவே யிருக்கும்.

சிற்ப சாஸ்திரத்தின் மகிமைகளையும், உற்பத்திகளையும், சிற்ப அதிகாரியையும் சிற்பகாமத்தைப் பற்றியும் ஓர் வியாசம் சென்னை விசுவகர்மன் பத்திரிகையிலெழுதியிருக்கின்றேன். அதில் சிற்பங்களின் சிரேஷ்டம் நன்குவிளங்கும்.

சகல சுருதிஸ்மிருதி புராணங்களும் அச்சில் வந்துவிட்டன. நம்குலத்திற்காதாரமாகவும், நம்மவர்கள் கையிலிருக்கப்பட்டதாகவுமிருக்கிற சிற்பத்தை வேறு யாவர் அச்சிலிடுவார்கள். சிற்பங்களை அச்சில் வருத்தாததாலே நம் ஜாதிக்கு பெருங்குறைவாகவிருக்கின்றன. ஆதலால் போனதுபோக இக்காலத்தில் கிடைக்கும் சிற்பங்களையாவது சேகரப்படுத்தி இவ் விஸ்வகர்ம வேதாத்தியாயன பாடசாலையிலேயிரியாக வைத்தும் ஒவ்வொன்றாக அச்சில்பதிப்பிக்கவும் செய்யவேண்டுவது முக்கிய காரியமாயிருக்கிறது.

ஆதலால் சிற்பசாஸ்திரத்தையும், மற்றும் நம் குலசம்பந்தமான நூல்களையு சங்கிரஹித்து வைப்பதில் கவனம் செலுத்த வேணுமாய் சபையோர்களை மிகவும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலே காட்டியிருக்கும் ஒவ்வொரு விஷயத்திற்கும் தீர்மானங்களும், அதற்கு வேண்டிய பிரயத்தனங்களும் செய்து உடன் பதிலளிக்க வேண்டுமென இம்மட்டோடு வியாசத்தை நிறுத்தி இந்த மஹாஜன சபையை பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளும் தங்கள் நண்பன்.

ஜோஸ்யர் முத்தாச்சாரியார்,
மீனாக்ஷிபுரம், நாகர்கோவில்.

(358-வது பக்கத்தின் தொடர்சி.)

## தம்மக்களைப் பேணல்.

முற்காலத்தைவிடத் தற்காலம் குழந்தைகளை யடக்கி நடத்துவதும், குற்றங்குறைகளைத் திருத்துவதும் மிகக்கடினம். முற்காலம் நய பயத்தினாலும் குழந்தைகள் பயந்து இருந்துவதுண்டு.

அம்முறை இக்காலத்தில் 'அனுஷ்டிக்கத்தக்கதல்ல. ஏனெனில் காரண காரியங்களையும், குற்றங்குறைகளையும்எடுத்துக்காட்டி அதனாலுள்ள பாதக சாதகங்களையும், லாப நஷ்டங்களையும் எடுத்து விளக்கிப் போதனையாலும் சிறிது நய பயத்தாலும், இக்காலத்தியகுழந்தைகளைத் திருத்தி நடத்தலாமேயொழிய மற்றப்படி முற்காலமுறைகள் தற்கால நாகரீகத்திற்குப் பயன்

படமாட்டா. அநுஷ்டிக்கவும் முடியாது. அநுஷ்டித்தால் குழந்தைகள் கெடுமே யன்றி திருந்த மாட்டார்கள்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் ஆணாயிருந்தாலும்சரி, பெண்ணாயிருந்தாலும்சரி, அற்பமென்று நினையாதேயுங்கள்.

உலகம் வரவர அறிவுள்ளதாக விசாலித்துவருகிறது. இதனால் நம்தகப்பனார் செய்வதையும், அவர்காலத்துப் புதுமைகளையும் கண்டு பாட்டனார் ஆச்சரியப் படலானார். நம் தகப்பன் தாய்களோ நம்காலத்து நடவடிக்கைகளையும், புதுமைகளையும் நம்மிடத்தேகாணும் நாகரீகங்களையும் கண்டு ஆச்சரியப்படலானார்கள். அப்படியே நாமும், நம் மக்களிடங்காணும் புத்தி சாதுர்யமான செய்கைகள், கேள்விகள், நடையுடைபாவனை, நாகரீகங்களைக்கண்டு ஆச்சரியப் பட்டுக்கொண் டிருக்கிறோம். இவ்விதமே நம்மக்களும் அவர்கள் குழந்தைகள் காலத்தும் புதுமைகளைக் கண்டு ஆச்சரியப் படுகிறவர்களா இருருக்கிறார்கள். இப்படியே உலகம் நாளுக்குநாள் விவேகத்திலும், புதுமையான நாகரீகத்திலும் முதிர்ந்து வருகிறது.

ஆகையால் இக்காலத்தில் பெற்றோர்கள், தம்மக்களிடத்தில்காணும் குற்றங்குறைகளையெடுத்து விளக்கித்திருத்தி நடத்தலேதகுந்த முறையாகும். அவர்கள்மனதிற்கு நாம் சொல்வது சரியென்று படும்படி எடுத்துக் காட்டவேண்டும். அப்படி எடுத்துக்காட்டிவிட்டால் அதாவது பூர்ணைப்பருவத்திலேயே பெற்றோர்கள் அம்முறையைச்சரியானபடி கையாடிவிட்டால் குழந்தைகள் நல்லமாதிரியாகவே வளர்ந்து பயின்று தேர்ந்து "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றபடி பிற்காலத்திலும் மரணபரியந்தம் சிலாக்கியமான நிலைமைகளிலேயே நின்று, தங்களுக்கும் தங்கள் பெற்றோர்களுக்கும் தங்கள்குடும்பம், குலம், தேசம் இவைகளுக்கும் நல்ல புகழைபுண்டு பண்ணுபவர்களா யிருப்பார்கள்.

முற்காலத்தில், பெற்றோர்களிடம், மக்கள் எவ்விஷயத்தைப் பற்றியும் கேட்க அஞ்சுவார்கள். ஒருகால் கேட்டாலும் அதெல்லாம் இப்பொழுது ஏன்கேட்கிறாய் அதற்கெல்லாம் காலமிருக்கிறது, என்று பெற்றோர்கள் அதட்டிவிடுவதுண்டு. அல்லது ஒன்றுக்கொன்றைத் தெரிந்தோ, தெரியாமலோ சொல்லிவிடுவதுண்டு. அப்படிச் சொல்வதையே சரியென்று மக்களும் நம்பி நடப்பதுண்டு.

இக்காலத்தில் அந்த ஜெபங்களொன்றும் நடவாது. நம்மக்கள் சில சமயம் கேட்கும் கேள்விக்கு நாம் சொல்லக்கூடத் தெரியாமல் விழிக்கும் காலமாய்விட்டது. ஆகையால் தம்மக்கள் தெரிந்தோ, தெரியாமலோ அல்லதுசந்தேகப்பட்டோ கேட்கும் கேள்விளைப் பெற்றோர்கள் நன்றாய்க்காதில் வாங்கி ஆராய்ந்து தெரிந்ததாயிருந்தால் தெளிவாய் எடுத்துச் சொல்ல வேண்டும். தெரியாததாயிருந்தாலும், தெரிந்துகொண்டுவிளக்கவேண்டும். இதுதான் இக்காலத்திற்கு ஏற்றமுறை.

இதன்றியில் ஒன்றுக்கொன்று சொன்னால் பெற்றோர்களிடம், மக்களுக்குச் சில விஷயங்களில் விரோதமுண்டாகும். ஆகையால் எச்சரிக்கையாய்க் குழந்தைகளை நடத்தவேண்டும். இதுநிற்க சுருங்கச் சொல்ல வேண்டுமானால் "குழந்தைகள் எவ்விதம் உங்களுக்கும் பிறருக்கும் நடக்க வேண்டுமென்று நீங்கள் பிரியப்படுகிறீர்களோ, அவ்விதமெல்லாம் நீங்கள் உங்கள்பெற்றோர்களுக்கும் பிறர்களுக்கும் முன்மாதிரியாகநடந்து காட்டுகிறவர்களாயிருக்கவேண்டும்" என்பதே பொதுவிதி. இனி சொல்லப்போகிற வைகளிலெல்லாம் இதுவேமுதன்மையானதும், அவைகளுக்கெல்லாம் அஸ்திவாரமானது மாகும். கவனியுங்கள்.

பெற்றோர்கள் அரோகதிட சாத்திரர்களாய் நோயின்றி யிருந்தாலொழிய மக்கள் நோயின்றி வாழ்தலரிது. ஆகையால் பெற்றோர்கள் தங்கள் சரீரத்தை துர்நீர் முதலியவைகளுக் கிடமன்னியில் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

மக்கள் அறிவுள்ளவர்களாயும் ஒழுக்கவழக்க முள்ளவர்களாயு மிருக்க வேண்டுமானால் பெற்றோர்கள் (அதாவது தாயும் தகப்பனும்) கல்வி யறிவுடன் தம்பெற்றோர்களுக்கடங்கி அவர்கள் கையிலிருந்து பழகித் தேர்ந்தவர்களா யிருக்க [illegible]

பிரஸ்தாபவிஷயம் [illegible] றையே யாயினும் [illegible] ரோர்கள் கவனித்து [illegible] மேற்கூறிய மூன்று அம்ஸங்களுமாகும். நிற்க குழந்தைகளைப் பேணும் முறைகளைப்பற்றி யெழுத வேண்டியவைகளனந்தமிருந்தாலும், அவற்றுள் முக்கியமான சிலவற்றை யிங்கு விளக்கினோம்.

T. R சதானந்தன்.

REGISTRAR 31 OCT 19[illegible] MADRAS

## சிற்பத்தொழிலின் அற்புதக்காட்சி.

மஹாபலிபுரம் என்னும் ஊரானது சென்னைக்குத் தெற்கே 32 மைல் தூரத்தில் செங்கற்பட்டு ஜில்லா கோவளம், சதுரங்கப்பட்டணம் இவைகளுக்கு மத்தியில் கடற்கரையி லிருக்கிறது. நமது தென்னிந்தியாவில் நாணயத்திற்கும் ஆச்சரியத்திற்கும் பெயர்பெற்ற சிற்பவேலைகள் எவ்விடமிருக்கின்றன வென்றால் மஹாபலிபுரத்தில்தான். இந்த காரணத்திற்காகவே அநேக வெள்ளைக்காரர்கள் ஒவ்வொரு விடுமுறைதோறும் மஹாபலிபுரம் பார்த்துவருவது வழக்கம். அன்றியும் மஹாபலிபுரத்தைப் பற்றியும் அவ்விடத்து சிற்பத்தைப்பற்றியும் அநேக புஸ்தகங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. சிலர் தான் மஹாபலிபுரத்தைப் பார்த்திருப்பார்கள்.

முதன்முதல் மஹாபலிபுரமென்ற பெயரைப் பற்றிச் சற்று விசாரிப்போம். இந்த ஊரில், மகாபலிச் சக்கிரவர்த்தியாண்டதாகவும் அதன் நிமித்தம் இந்த ஊருக்கு "மஹாபலிபுரம்" என்று பெயர் வந்ததாகவும் சிலர் சொல்லுவார்கள். மகாபலிச் சக்கிரவர்த்தி கதை எல்லாருக்குந் தெரிந்த விஷயமாகையால் அதை நாமிங்கெடுத்துக்கூறுவ தனாவசியகம். ஆனாலிந்த ஊரிலிருக்கும் சாஸனங்களில் ஒன்றாவது மகாபலிச்சக்கிரவர்த்தியைப்பற்றிச் சொல்லாததினால் மகாபலிபுரமென்றிந்த ஊருக்கு வந்த பெயரானது காரணமின்றி ஜனங்களால் சப்தானுசாரியாய் கொடுக்கப்பட்டதாக ஊகிக்கவேண்டி யிருக்கிறது. "மஹாபலிபுரம்" எந்த சப்தத்தை யனுசரித்துவந்தது? ஆனாலிந்த ஊரின் சரியான பெயரென்ன? என்று கேள்விகள் பிறக்காலம். சாசனத்தாலும் சரித்திரத்தாலு மிந்த ஊரின்பெயர் "மாமல்லபுரம்" என்று ஏற்படுகிறது. மல்லான் என்பது பல்லவம்சத்து அரசர்களின்பட்டப்பெயர். இவர்கள் சோழ அரசர்களுக்கு முந்தித் தொண்டமண்டலத்தி லாண்டுவந்தார்கள். மா-என்றால் பெருமை பொருந்திய என்பது எல்லாருக்குந் தெரிந்த அருத்தம். பெருமை தங்கிய மல்லவர்களுடைய பட்டணமென்பது இதன் பொருளாகும். இந்தச் சிறுஊர் பழையகாலத்தி லிருந்தபடியா லிதற்கு 'மாமல்லபுரம்' என்று பேருண்டாயிற்று. மாமல்லபுரமென்ற சப்தங்களுக்குப் பிற்காலத்தி லதிலடங்கிய சரித்திரந் தெரியாமற்போகவே அங்கிருந்த ஜனங்களுக்கு அருத்தம் விளங்கவில்லை. அந்த சப்தங்களை ஒருவாறு மாற்றி மகாபலிபுரம் என்று மாற்றிவிட்டார்கள். இந்த இரண்டு பெயர்களுடனும் இன்னுமொருபெயர் இந்தஊருக்கு உண்டு. அதாவது (Seven Pagodas) 7 கோவில்கள். இந்தப் பெயர் பார்க்கும் பொழுதே இங்கிலீஷ்காரர்களிட மிருந்து உண்டானதாகத்

தெரிகிறது 100, 150 வருஷங்களுக்கு முன் இந்த ஊருக்குச் சமீபத்தில் கப்பல்கள் போகும்போது மாலுமிகள் கரையோரம் ஏழுகோவில்கள் தங்களுக்குத் தோற்றினபடியால் இந்த இடத்திற்கு ஏழுகோவில்கள் என்று பெயரிட்டார்கள். இதை ஒரு நிக்ஷயமாய் வைத்துக்கொண்டு முதன்முதல் இவ்விடத்தில் ஏழுகோவில்கள் இருந்ததாகவும் அவைகளில் 6 சமுத்திரத்தில் மூழ்கிப்போயின வென்றும் இப்போது ஒன்றுதான் கரையோரமிருக்கின்றதென்றும் ஜனங்கள் செல்லுகிறார்கள். இது சுத்தப்பிசகு. ஏனெனில் இப்போது மாலுமிகள் மாமல்லபுரம் சமுத்திரத்தின் வழியாகப் போகும்போது கரையோரமிருக்கிற இந்த ஒரு கோவிலைக்கூடக் கண்டுபிடிப்பது முடியாதகாரியம். ஏனெனில் அது வெகு தாழ்ந்திருக்கிறது. ஆனால் உயர்ந்த குன்றுகளையும் அக்குன்றின் சிகரங்களையும் தூர இருந்து பார்க்கலாம். அவைகள் 7-உருவங்களாகக் காணப்படுகிறபடியால் இந்த ஊருக்கு "ஏழுகோவில்கள்" என்று அவர்கள் பெயரிட்டுவிட்டார்கள். குன்றின் சிகரத்தில் எப்போதும் இந்துக்கள் கோவில்கள் கட்டியிருக்கிறார்களென்பது அவர்களின்பிப்பிராயம். அப்படி அவர்களிட்ட பெயர் நாளதுவரையில் வழங்கியும் வருகிறது. ஆகையால் இந்த ஊருக்கு மூன்று முக்கியப் பெயர்களுண்டு;—மகாபலிபுரம், மாமல்லபுரம், ஏழுகோவில்கள். இவற்றுள் மாமல்லபுரமென்பதுதான் சரியான பெயர்.

இந்தப் பெயருக்குத் தகுந்தபடி இது முற்காலத்தில் ஒரு பெரிய பல்லவபட்டணமா யிருந்தது. தற்காலத்தில் பல்லவர்களுடைய விசித்திரமான சிற்பவேலைகளைப் பார்க்கவேணு மென்றால் மாமல்லபுரம் போனால்தான் தெரியும். இந்த பட்டணமானது (இப்பொழுது சிறுகிராமம்) சமுத்திரக் கரையி லிருக்கிறது. பட்டணமிருந்து "பாப்பான்சாவடி" யிற்போய்ப் படகேறினால் ஒருராத்திரியிற் போகலாம். அல்லது சாயங்காரம் தென்னிந்தியா ரெயிலேறிச் செங்கற்பட்டி லிறங்கித் திருக்கழுக்குன்றம் மார்க்கமாய் ஒரு ராத்திரியில் மாமல்லபுரம் போய்ச் சேரலாம். தூரத்திலிருந்து பார்க்கும்போது குப்பல் குப்பலாய்ச் சில கற்கள் கண்ணுக்குத் தென்படும். இந்த இடத்திலும் ஆச்சரியமிருக்கிறதா என்று ஜனங்கள் சந்தேகிக்கக் கூடும். குன்றுகளைக் கடந்து ஊருக்குள் வந்து, அவைகளின்முன் னின்றுவிட்டால் நேத்திரங்களுக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அநேக விசித்திர வேலைகள் நாலுபக்கங்களிலும் கண்ணைக் கவரும்போது இது என்ன அற்புதக்காக்ஷி கதைகளில் வர்ணிக்கப்பட்டிருக்கிற இந்திரலோகக் காக்ஷியா இது என்னவென்று சந்தேகிக்கும்படி தோன்றும். இவ்விடத்திய சிற்பவேலைகளின் அற்புதமென்னவென்றால், அநேகமாய் எல்லாம் ஒரே கல்லிற் குடைந்தெடுத்த வேலை. இவ்வேலையை ஆங்கிலேய சிற்பசாத்திரிகள் "ஒரு கல்லிற் செதுக்கப்பட்ட குகைகள் என்பார்கள். இதுதான் இங்கு வெகு விசேஷம். மாமல்லபுரத்தைத் தவிர வேறு ஒரு இடத்திலும் தென்னிந்தியாவில் ஒரே கல்லிற் செதுக்கப்பட்ட குகைகளும் கட்டடங்களும் கிடைக்கவே கிடையா. பம்பாய்க்குச் சமீபத்தில் (எலியாண்டா) என்னும் குகைகளும், தக்கண தேசத்தில் (எல்லோரா) என்னுமிடங்களும் மாமல்லபுரத்தைப் போல் ஒரு கல்லிற் செதுக்கப்பட்ட குகைகளை யுடையவைகள். ஆகையால்தான் இந்த ஊருக்கு இவ்வளவு மகிமைவந்தது. ஒவ்வொரு வேலையும் சிற்ப சாஸ்திரத்தை அனுசரித்து ஒருவித பழுதுமில்லாமல் கடைசற் பிடித்தாற்போற் றோன்றும்.

முதல்முதலில் மாமல்புரத்தில் நமது கண்ணுக்குத் தென்படுவது 90 அடி நீளமும் 30 அடி உயரமுமான ஒரு பெரும் பாறை. இதற்குப் பெயர் "அர்ச்சுனன் தபசு" என்று சொல்வார்கள். நாம் இதை முதலில் வரைவோம். இது அதிவிசித்திர



மான வேலை, இது ஒரு பாறையென்று முன்னமே சொன்னோம். இதில் 150, 200 உருவங்கள் மனுஷன், மிருகம், பக்ஷி இவை இந்த லோகத்தில் எத்தனை வகைகளுண்டோ அத்தனையும் தன் தன் வடிவத்தில் மேலெடுத்துக் காட்டிக் கொத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் அழகின் அவதாரமாகத் தென்படுமே யல்லாது அற்ப ஸ்வற்பமாகக் காணாது. நல்லது இத்தனை உருவங்களை மேலெடுத்துக் காட்டிக் கொத்திய சிற்பசாஸ்திரிகள் எவ்வளவு கைதேர்ந்த வேலைக்காரர்களாக இருக்க வேணும். ஒரே கல்லில் 150-200 பிம்பங்கள் வேலை செய்யப்பட் டிருக்கின்றன. ஒரு பிம்பம் ஊனப்பட்டால் எல்லாம் போயிற்றே அப்படி வராது என்கிற தைரியம் இவர்களுக்கிருக்க எத்தனை கைப்பழக்கமும் தேற்சியு மிவர்களடைந்திருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் பார்த்தால் உயிர் ஒன்றொழிய அதேபாவனையா யிருக்குமே யல்லாது வேறு வித்தியாசம் கொஞ்சங்கூட இராது. இந்த வேலைக்கு "அர்ச்சுனன் தபசு" என்று பெயர் வந்ததற்குக் காரணமென்னவென்றால், இந்த சித்திரத்தின் சற்றேறக்குறைய நடு மையத்தில் ஒருவன் ஆனந்தத்தால் கூத்தாட நாம் காண்போம்; அவன் தான் அர்ச்சுனன். சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் வாங்க இவன் காட்டிற்கு வந்தான். இவன் தவத்தி லுட்காரும்போது அந்த காட்டிலிருந்த எலி, புலி, காக்கை, கௌதாரி, யானை, காடி, பூனை, பாம்பு, முதலான எல்லாவஸ்துக்களும் இவனுடன் தவத்திற்கு வந்துட்கார்ந்தனவாம். அங்கிருக்கும் பிம்பங்களின் அருத்தமிதுவே? இவன் தவம் பலித்து ஈசுவரன்கையில் சூலாயுதமேந்தினவரா யிவன்கண்ணுக்குப் பிரசந்நராகவே இவன் ஆனந்தக் களிப்பால் தாண்டவமாடினான். அருச்சுனனுக்குப் பக்கத்தில் சூலபாணியாகிய ஈஸ்வரனை இந்த சித்திரவேலையில் நாம் காணலாம். இந்த தபசியாகிய அருச்சுனன் அநேகநாளாய்ப் பட்டினிகிடந்து தோலொட்டி, எலும்பு தோன்றி யிருப்பதையும் அப்படியே நாம் காணலாம். அதல்லவோ சிற்பம். இந்த அற்புத சிற்பத்தைப் பாராக் கண்கள் வீண்கண்கள்.

இதற்குச் சமீபத்தில் "கிருஷ்ண மண்டபம்" என்றொரு மண்டபமிருக்கிறது. இதுவும் ஒரேகல்லிற் கொத்தி யிருக்கப்பட்ட வேலை. இதில் 100 பதுமைகள் மாடும் மனிதனுமாகக் கொத்தப்பட் டிருக்கின்றன. வெகு விசித்திர வேலை. கிருஷ்ணபகவானுடைய கோகுலவாசம் இதில் பொளியப்பட் டிருக்கிறது. புள்ளாங்குழலூதிக்கொண்டு கண்ணன்நிற்க, அவனைச் சுற்றி 50 மாடுகள் மதத்துடன் நிற்பதையும், சிலர் மாடுகறப்பதையும், இடைச்சி தயிர்க்கூடையைத் தலையிற் சுமந்துபோவதையும், குழந்தைகள் இடுப்பிலுந், தோளிலும் தொத்திக்கொண் டிருப்பதையும், சில கிழங்கள் தடியை யூன்றி நடப்பதையும், சில சிறுபெண்கள் உல்லாசமாய்ச் சிரித்துக்கொண்டு போவதையும், பிள்ளைகள் விளையாடுவதையும், கன்றுக்குட்டிகள் துள்ளுவதையும், மடியி லூட்டுவதையும், இந்த கிருஷ்ண மண்டபத்தில் காணலாம்.

(தொடரும்.)

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்.
Ex. முனிசிபல் கௌன்சிலர்
பழனிஸ்தலம்.

## வைதிகக்கல்வி இன்றியமையாதது.

சில நண்பர்கள் இக் கல்வியை உபேக்ஷை செய்வதாய்த் தெரிய வருவதனால் இக்கல்வியின் அத்தியாவசியகத்தைப்பற்றி இங்கு விவரிக்கலாயிற்று.

இக்காலத்தில் சாதுர்வருணத்தார்களுக்குரிய ஒழுக்கங்களும், விருத்திகளும் நவீ

ண நாகரீகத்துக்குத் தக்கபடி மாறிக்கொண்டு வருகின்றன. இன்னவருணத்தான் இன்னதன்மையாக விருந்து இன்ன தொழிலைத்தான் செய்யவேண்டு மென்னும் நிபந்தனை யில்லை. தனக்கிஷ்டமான தன்மையாயிருந்து வருவாய் மிகுந்த எத்தொழிலையுஞ் செய்து ஜீவிக்கலாம். இவ்விஷயத்தில் தன்னினத்தார் தன்னைப் பழிப்பதற்கிடந் தரக்கூடாது. இதனால் ஒருவகுப்பார் மற்றொரு வகுப்பாருக்கு உயர்ந்தாவது, தாழ்ந்தாவது இருக்கவேண்டு மென்னும் நிர்ணயமும், வகுப்புக்கு வகுப்புபேதம் காட்டி நிற்கவேண்டு மென்னும் நிர்ணயமும், இல்லையென்பதாயிற்று. காலக்கிரமத்தில் எல்லாம் ஒரே தன்மையாய் மாறிவிடுமென்பது சில புத்திமான்களின் அபிப்பிராயம். ஆனாலும் சமயாசாரக் கிரியைகள் அப்படி மாறுவதில்லை. அவை ஸ்தாபனமான காலந்தொடங்கி எப்போதும் ஒரேபடித்தா யிருப்பதாகும். இக்கிரியை நித்திய கிரியை, நைமித்திய கிரியை என இருவகை. நித்தியகிரியை என்பது நாளும் இயற்றும் பாவங்களுக்காக மன்னிப்பும், புண்ணியங்களுக்காக உதவியும் புரியக்கோரி சந்தியாகாலங்களில் கடவுள் வணக்கம் செய்வது நைமித்திய கிரியையென்பது. விசேஷகாலங்களில் மேல் கண்டவற்றைக்கோரி விசேஷகிரியைகளை குரு அல்லது புரோகிதரைக் கொண்டு செய்துகொள்வது. முந்திய நித்தியகிரியை நாம் ஒவ்வொருவரும் நாளும் செய்து வருவது. அது இளமையிலேயே உபநயன காலத்தில் கற்றுக்கொள்ளப் படுவது. அதைக்கற்றுக்கொள்ள அல்லது கற்பிக்க பாடசாலை வேண்டுவதில்லை. அதை சந்தியா காலங்களில் நாம் செய்து அதில் சிரத்தையுள்ளவர்களுக்கு நினைப்பூட்டுவதே போதும். பிந்திய நைமித்திய கிரியை குருவாலும், புரோகிதராலும் செய்துவைக்கப் படுவது. அதைக் கற்க பாடசாலை வேண்டும். அது குரு, புரோகிதர்களின் சந்ததியாராலும், அவர்களின் பந்துக்களாலும் கற்றுக்கொள்ளப்படுவது. நமது சமயாசாரத்துக்குரிய நூல்களை யாராய்ந்து அதின்படி கிரியைகளை நடத்தி வைப்பதற்காக குருக்களையும், புரோகிதர்களையும் விருத்தி செய்யும்நிமித்தியமாய் வைதிகபாடசாலை ஸ்தாபிப்பது நமது புண்ணியமும் கடமையுமா யிருக்கிறது. இத்தகைய சமயாசாரத்துக்குரிய நூல்களைக் கற்பதே வைதிகக் கல்வியாம். இக்கல்வி உபேக்ஷை செய்யற்பாலதன்று. உபேக்ஷித்தால் பாவ மன்னிப்பும், புண்ணியப் பெருக்கமும் சித்தியாது. இது எம்மதத்தார்க்கும் சம்மதம். மானிடப் பிறப்புக்கு பாவுணர்ச்சி யுண்மையின் வைதிகக்கல்வி இன்றியமையாததாகும். இன்றேல் பயனின்று. (நமது சொந்த சமயத்துக்குரிய நூல்களை ஆராய்ந்து அதைக்கற்க அல்லது கற்பிக்க முயலாது, பொதுவானதும், அன்னியர்க்குரியதுமான கல்விகற்க, அல்லது கற்பிக்கமுயல்வது இடையூறுக் கிடமாகிறது. நம்மவர்கள் இத்தனை வருஷங்களாக சபைகூடி நம் சமயத்துக்குரிய பழமையான பிரதான நூல்களாகிய விஶ்வகர்மாகம புராணங்களைச் சேகரித்து அச்சிட்டு வெளியிட்டாரில்லை. அவற்றைச் சேகரித்து அச்சிட்டு வெளியிடுவதே பெரும்புண்ணியம். பிறகு அதைக்கற்க அல்லது கற்பிக்க வைதிகபாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.)

**அத்தியாபக லிங்காச்சாரி,**
**கணியம்பாடி.**

(355-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## மனிதர்களுக்கு அவசியமானது எது ?

எங்ஙமெனின் நம்முடைய அந்தக்கரணத்(மனத்)தி லியாதானுமோர் நற்காரியங்களை யூன்றி யுன்னும்போது நமக்கு வேறோர் துற்காரியவிஷயமாக யாதொன்றையும் ஸ்மிருதி செய்யக்கூடாதென்னுமெண்ண மிருந்தாலும் மனத்தின்கண் அசுத்த வாசனா சம்பந்தமான எண்ணவெழுச்சிகள் கணக்கின்றி யுண்டாவதாலங்ஙன முண்டாவதற்குக் காரணமேதேனு மவசியமாக விருந்தே தீரவேண்டுமெனப்பெறப்படுகின்றதன்றோ? அங்ஙனமாய காரணமெதுவோ வதனையே வேதாந்த சாஸ்திரங்களுள் மலமென் (சென்மாந்தரங்களுட் செய்தபாவமென்) று கூறப்படுகின்றது.

இஃதன்றி இன்னுமொரு தோஷமு மந்தக்கரணத்தின்கணுள்ளது. அஃதாவது மனதை யாதானுமோர் மூர்த்தியைத்தியானித்தலிலோ அல்லது, வேறொரு விஷயத்திலோ நிலைத்திருக்கச்செய்தா லங்ஙனம் நில்லாது அலைகட லுளகப்பட்டதிரும்பையொத்து (மனம்) ஒருமைப்பட்டு நில்லாதொழிகின்றது. அங்ஙனமொருமைப்படாத் தன்மையையே மேற்கூறிய வேதாந்த நூறகள் விக்ஷேபமெனக்கூறுகின்றது.

இஃதுமன்றி முன்னர்க்கூறியவாறு உடற்கு வேறாய ஆத்மா அல்லது நான் உடற்குவேறாக எவ்விதமாகஇருக்கின்றேனென யோசித்துப் பார்த்தும் விளங்காமைக்குக் காரணமொன்று; அக்காரணத்தையேஷெ நூற்களுள் ஆவரணமெ (மறைப்பெ)னக் கூறப்படுகின்றது. இங்ஙனங்கூறிய மலவிக்ஷேப ஆவரணமென்னும் மூன்றுமே மேற்கூறிய சர்வதுக்கவொழிவுக்கும், நீங்காதவானந்த வடைவுக்கும் தடையாகவுள்ளவைகளெனச் சற்றுநிதானித்து யோசித்துணர்பவர்கட்கு விளங்காமற்போகாது.

ஆகவே, மேற்கூறிய மூன்றுதடைகளுமொழிந்தாலன்றி முன்னர்க்கூறிய மனிதர்களுக்கு அவசியமான சர்வ துக்கநிவிர்த்தி பரமானந்தப்பிராப்தி யென்னும் மோக்ஷம் எவ்விதத்தினுங் கிட்டுவதேயின்றாம். ஆதலால் ஷெ தடைகளின் நீக்கத்திற்குக் காரணங் (சாதனங்)களெவ்வெவைகளெனவிசாரித்துணர்ந் தனுட்டிப்ப தவசியமாமெனப் பெறப்படுதலா லதைப்பற்றியுஞ் சிறிதாராய்வாம்.

எங்ஙனமெனின் முதலிற்கூறிய மலமென்னுந் தோஷம் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர ரென்னும் நான்கு வருணத்தவர்களுந்தங்கள் தங்கள் வருணங்கட்கியைந்தவாறு சாஸ்திரானுசாரமாக விதித்துள்ள கர்மங்களை நியமந் தவறுவாறு நிஷ்காமமாக வனுட் (பலாபேக்ஷையின்றி யனுட்) டிக்கச் சிறிது சிறிதாக நீங்கும். மேற்கூறிய மலம் நீங்குவதற்கு இதுவே முக்கியசாதனமாம். இதனைக் காமியமாக வனுட் (பலனை விரும்பியனுட்)டிக்கினிது விரும்பிய பலத்திற் கேதுவாகுமே யன்றி அந்தக்கரணத்தி (மனதி) லுள்ள அசுத்த வாசனையை யொழிந்தற்குக் காரணமாகாது.

இரண்டாவதாகக் கூறிய விக்ஷேபமென்னுந் தோஷம் அவரவர்கள் தங்கள்தங்கள் மனதிற் கன்பான யாதானுமோர் மூர்த்தத்தைத் திரிகரண சுத்தியுடன் மிகுந்த அன்போடு இடைவிடாது தியானிக்கின் நிவிர்த்தியாம். இதனை ஒருவரொரு காரியத்திற் சித்தத்தைச் செலுத்தி ஆழ்ந்து கவனித்துக்கொண் டிருக்கும்போது மற்றொருவ ரவாருகில்வந்து வேறொரு காரியத்தைமுன்னிட் டேதேனுங்கூறுமிடத்து அது அவர் செவியிலேறாது தாங்குறித்த விஷயத்திலேயே மனமொன்றிநின்றோரேகவனமாக விருத்தன்முதலியவைகளானே யுணரற் பாற்றும். இதனாலன்றோ பெரியார் "ஞாபகம்வேறாங் லெதிர்நண்ணும் பொருள்காணு" ரெனக் கூறியிருக்கின்றனர். ஆதலின் மேற்கூறியஈஸ்வரோபாசனையே விக்ஷேபதோஷ நிவிர்த்திக்கு நேர்காரண (சாதன) மாம்.

மூன்றாவதாகக் கூறிய ஆவரணமென்னும் (தன தெதார்த்த சொரூபத்தின்) மறைப்போ நிஷ்காம கர்மத்தினால் மலமெனுந் தோஷமும், ஈஸ்வரோபாசனையினால் விக்ஷேபமென்னுந் தோஷமும், நிவர்த்தி

யாகி ஷெடி ஆவரண மாத்திரமுடைத்தாய் சாதன சதுஷ்டய சம்பத்தி வாய்ந்து உத்தம குருவை யுகந்து சேர்ந்துச் சிரவண மனன நிதித்தியாசன வாயிலாகத் தத்துவம் பதார்த்த சோதனஞ்செய்து பிரஹ்மாத்ம ஐய்க்கிய ஞான மெய்திய விடத்து நிவிர்த்தியாவதாம். சாதன சதுட்டயமென்ப தியாதெனின் (1) நித்தியாநித்திய வஸ்து விவேகம். (2) இகமுத்திரார்த்த பலபோக விராகம். (3) சமாதி சட்க சம்பத்தி. (4) முமூட்சுத்துவ மென்னும் நான்குமாம். (தொடரும்.)

**குழந்தைவேலாச்சாரியார்,**
நரசிங்கபுரம்.

---

## வைதிகக் கல்வி.

---

வைதிகம் இன்னதென்றும், நமது குலாச்சார தர்மம் இன்னதென்றும் அறியாமல் கண்முன் நின்றதை அகப்படு மிடங்களில் பல ஜாதியருடனும் கலந்து புசித்து களிக்கும் ஆச்சார ஹீனர்களிட மிருந்து வைதிகக் கல்வியின் பெருமையும், அதன் ஆவசிகமும் வெளிப்படுமா? தம் சுவாநுபவத்தில் இல்லாத விஷயத்தை ஒருவர் மற்றொருவருக்கு விளங்கச்செய்தல் சாத்தியமாகுமா? வைதிகம் தெரியாதவர்களையும், அவர்கள் குடும்பங்களில் வைதிகப்பழக்க மற்றவர்களையும், வைதிகர்களெனப் பாவித்து அவர்களைக் கொண்டு வியாசங்களையோ, பிரசங்கங்களையோ சிருஷ்டித்தால் அவைகளை வாசிக்கும் குலசீலர்களும், கேட்கும் அபிமானிகளும் அப்பொழுதே அவர்களுடைய சுவாநுபவ மின்னதென யூகித்துக் கொள்ளமாட்டார்களா? இப்படியிருக்க, வைதிகக்கல்வி யென்னும் நெக்குவிடாப் பாறையில் அறியாமை, அழுக்காறு என்கிற தங்கள் தலைகளை இவர்கள் மோதிக்கொள்வ தென்னே?

சமஸ்கிருதபாஷையானது உலகிலுள்ள மற்றெல்லா பாஷைகளுக்கும் தாய்பாஷையாக மதிக்கப்பட் டிருக்கிறது. இங்கிலீஷ் பாஷையும் இதினின்றும் பிரிந்ததே. சமஸ்கிருதபாஷை தோன்றி சுமார் 5000-வருடங்களாகிறது. ஆங்கிலேய பாஷை தோன்றி சுமார் 2000-வருடங்களாகிறது. இவ்விருபாஷையில் எது முதியதோ? இங்கிலீஷ்பாஷை காலவியல்பிற்குத்தக்கவாறு மாறுதல்களையும், திரிபுமுதலிய பல ஆபாசங்களையும் அடைந்து கொண்டே வருகிறது. சமஸ்கிருதபாஷையோ அவ்விதமாறுதல்களை அடையாமல் ஒரேநிலையில் பிரகாசித்து நிற்கின்றது. ஆங்கிலேயர், அமெரிக்கர், ஜர்மனியர்களாகிய அன்னியர்களுங்கூட சமஸ்கிருத பாஷையின் பல விசேஷங்களை நன்குணர்ந்து அவர்கள் ராஜ்ஜியங்களில் ஏற்பட்டுள்ள யூனிவர்ஸிட்டி என்னும் சர்வகலாசாலைகளில் பாடமாகவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சமஸ்கிருத கல்வி கைவந்த ஐரோப்பியர்களும், மதுமாமிச உணவு நீக்கி ஆசாரா முடையவர்களாய், யோகம், தியானம் முதலிய இந்திய ஆசாரங்களை மேற்கொண்டிருத்தலை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோ மல்லவா? மாக்ஸ்முல்லர், கர்னல் ஆல்காட், மேடம், பிளாவட்ஸ்கி, அன்னிபிசெண்டு அம்மாள் முதலிய ஐரோப்பியர்களுக்கு இந்து மதத்தின் அபிமானத்தையும், ஆசார ஒழுக்கத்தையும், உண்டு செய்தது சமஸ்கிருதகல்வியல்லவா? சமஸ்கிருத கல்வியாலும், வைதிக ஆசாரணையாலும் இவர்கள் லௌகிகப்படிப்பிற்கும் ஆசாரத்திற்கும் பங்கம் நேர்ததாகத் தெரிகிறதோ? ஆகையால் லௌகிகக் கல்வியும், வைதிகக் கல்வியும் ஒன்றோடொன்று தாக்காமல் அப்பியசிப்பது சுலபமென்று மேற்குறித்த உதாரணங்களால் பெறப்படுகின்றதை நம்மனோர் நன்குணர வேண்டுகிறேன்.



வைதிகக் கல்வியை வெறுத்துவிட்டு லௌகிகக் கல்வியாகச் சொல்லப்படுகிற ஆங்கிலக் கல்வியை கற்றுவிட்டமாத்திரத்திலேயே பூர்வந்தொடங்கி நமக்கு ஜீவனாதாரமாயுள்ள சிருஷ்டித் தொழிலைக் கைவிடுவது குலதர்மமாகுமா? ஆங்கிலம் கற்ற நம் குலோற்பவர்கள் யாவருக்குமே சர்க்கார் உத்தியோக முதலிய பல பதவிகள் கிடைக்குமென்கிற நிச்சயமுண்டோ? ஆங்கிலம் கற்றவர்கள் கைத்தொழிலைப் பின்பற்றுவது கௌரவத் தாழ்வாகுமா? ஆங்கிலபாஷை ஒன்றினால் மட்டுமே நமக்கு சகலநன்மைகளும்உண்டெனச்சாற்றுவது அறிஞர் வாய்ச்சொல்லாகுமா? அரசாங்கபாஷையைக் கௌரவிக்க வேண்டுமென்றால், மகாரஷ்டிரம், இந்தி, உர்டு முதலிய பூர்வ ராஜபாஷைகளை நம்மனோர் மறந்தது என்னே? ஆங்கிலம் கற்றவர்கள் தான் சபைமுதலியகாரியங்களை நிர்வகிக்க சக்தியுள்ளவர்க ளாவர் என்றால், நமது பத்திரிகையின் பல சஞ்சிகைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற ஆங்கிலம் கற்றுத்தேர்ந்த பட்டதாரிகளினுடைய ஒற்றுமைக் கேடும், சட்ட விரோதமான நடவடிக்கைகளும் ஞாயமாகுமா? ஞாயமென்று ஒப்புவார்களுளராயின் அவர்கள் தாய்க்கொலை சால்புடையதெனச் சாற்றுவாரல்லவா? ஆங்கிலம் கற்றவர்கள் ஒழுங்கீனயாகவும், மனச்சாட்சிக்கு விரோதமாகவும் தான் நடப்பார்களென்றால், அம்மம்ம! அக்கல்வியும், அக்கல்வியால் வரும் லாபமும் நமக்கு வேண்டாம். நமது தாய் பாஷையாகியசமஸ்கிருதமும், சுதேசபாஷையாகிய தமிழ், தெலுங்குமுதலிய பாஷைகளும், நமது கைத்தொழிலும், நம்மவர்களுக்கு போதுமென்று திருப்தி யடைய வேண்டிவரும்.

**முருகப்பாச்சாரி,**
ராக்கம்பாளையம்.

***

வைதிகக்கல்வி வேண்டிய விப்பிரசிரோண்மணிகள்கூட அத்தியயன பாடசாலைகளுக்கு தம் குழந்தைகளை அனுப்பியும் தாம் ஏகதேசத்தில் தமதுமைந்தர்களுக்குக் கற்பித்துக்கொடுக்கஅவகாஸமின்மையாலோ வேறு எவ்வித காரணத்தாலோ நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களா லேற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலைக்கு அனுப்பிக்கொண்டுவருகிறார்கள். நமது வருணத்தார்களை பிரமவம்ஸமென்று வாதாடி தீர்ப்பு வாங்கின தெல்லாம் வடமொழியே தவிர திராவிட ஆங்கில பாஷைகளல்ல. மேலும் வேத சுருதிஸ்மிருதி இதிகாஸ புராணங்களெல்லாம் நமக்குள்ள ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறது கிரந்தலிபிதான். அப்படிக்கிருக்க சிலர் இருமனப்பட்டு வைதிகக் கல்வியைப்பற்றி நிராகரித்து எழுதுகிறார்கள். இவர்களுக்கு ‘ஆச்சாரிய’ பட்டம் மாத்திரம் அவசியம் வேண்டுமென்று வற்புறுத்தும் நியாயமென்னவோ! வைதிகக் கல்வி வேண்டாமென்று சிலர் பத்திரிகையில் வெளியிடுவது போதாமல் பிரத்தியேகமாக ஓர் அச்சுக்கார்டு இயற்றி ஊர் ஊராய் சந்தாதாரர்களுக்கு அனுப்பி சம்மதம் கேட்டதில் குடந்தையில் ஓரிருவர் அது நியாயமல்லாத விஷயமென்று உடனே லெட்டர்மூலமாய்தெரியப்படுத்தியிருக்கிறார்கள். வைதிகக்கல்வி வேண்டுமா வேண்டாமா, என்கிற ஆக்ஷேபணை நம் மோடியிராமல் இதராள், சஞ்சிகை மூலமாய் பார்வையிட்டு நகைப்பதற்கு இடம் கொடுத்துக் கொண்டு வருகிறதற்காகத் தான் நம்முடைய சபைகளும் சபைகள் மூலமாய் சஞ்சிகைகளும் ஏற்பட்டனவோ அறிகிலோம். இதற்கு மறுப்பு போர்டாபீஸ் கிளர்க்கு ஸ்ரீ கந்தசாமி ஆச்சாரியாரவர்கள் சென்ற சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறார். அதுவே போதுமானது. சந்தாதாரர்களும், விஷயதான கர்த்தாக்களும் அதனைப் பார்வையிட் டிருக்கலாம். மஹாஜனங்களே! நன்றாய் யோசித்துப்பாருங்கள். எந்தகக்ஷியானாலும்சரி, சஞ்சிகைகள் எதுவாயிருந்தாலும் சரி, யாவும் நம்மினத்தவர்களுடையதே: அப்படிக்கிருக்க ஒருதலைபக்கமாக யிருந்து எழுதி சிதைவிற்கும், ஆக்ஷேபணைக்கும் அதிகமாய்

இடங்கொடாமல் பாதுகாக்கவேண்டியது
நம்மினத்துப் பண்டிதர்களும் குலாபிமா
னிகளின் கடமையாகும். இம் முக்கிய
விஷயத்தைக் கவனியாமல் எது எப்படி
யானுலும் சரி யென்று அவர்கள் விட்டு
விடுவார்களானுல் அது பின்னுல், நமக்கே
பல தோஷங்களை உண்டுபண்ணுமென்று
தைரியமாய் தெரிவிக்கிறேன்.

T. S. பஞ்சநதீஸ்வராச்சாரி.

(360-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## சக்கிய சம்வாதம்,

ஆதவன்:—அன்பார்ந்த வடிகளிசைத்த
வசனத்திற் களிபேருவகை யடைந்தே
னுயினும் முன்னுரைத்த சாத்திர வகையி
னுட் பிந்திய இங்கித நூலினைச் செவ்வித
னுணர அவாவுகின்றேன்.

பிரபோதன்:—உழுவல (பேர)ன் புடை
யுத்தமகேண்மோ! கடாவிய திண்மையே,
அதனைப் போக்குவான் அதிகாரிகளின்
பேதத்தினைக் கூறுதும். முதலாவது, சுரு
தி, பிரமசூத்திரம், தசோபநிஷத்து என்
னும் ஞானசாத்திரமாகிய தத்துவ நூலி
னைப் பழகுவான் முற்பட்ட அதிகாரி,
போகநெறியிற் பழகி, அதாவது இப்போ
தாவது, முன் ஜென்மத்திலாவது பழகி
அதன் பயனுகிய சித்தசுத்தியுடன் யேகா
க்கிரத்தன்மை தத்துவபரோக்ஷ விசாரம்
முதலியவற்றுடன் மண், மனை, மைந்தன்
என்னும் மூவேடணையின் சொரூபமுண
ர்ந்து, அதில் பற்றொழிந்த விரக்தனும்,
இகலோக பரலோக சுகத்தினை சமமெனக்
கருதி வெறுத்த வுளத்தனும், சத்குரு
வின்பா லத்யந்த பரமவுத்கிருஷ்ட விசுவா
சமுள்ளவனுமாகிய இவனை யானுந் தண்
ணளியுடைத் தேசிகோத்தமன் சர்வசாத்
திர வுணர்ச்சியும் அனுபவ(திடாபரோக்ஷ)
ஞானமும் பெற்றவனுல் பக்குவனுளக்
குறிப்பினை யுணர்ந்து சர்வமும் சின்மாத்
திரமாக வுள்ளது அது நீயெனப் போ
திக்க அதன்வழியே யனுட்டித்து நற்பே
றெய்தலாகும். இரண்டாவது, சமயசாத்
திரத் துறையிற் பழகுவான் சித்தசுத்தி
யோடு பிரபஞ்ச சுகத்தினை வெறுத்தும்
ஈசுவர பக்தியும், சத்கரும வாஞ்சையும்,
சத்துக்கள் கூட்டமும், சாத்திர வாராய்ச்
சியும் பெற்று மனோ சலனத்துடன் யோ
கவாயிலாகச் சுவானுபவமும், சாத்திரப்
பழக்கமும், அணிமாதிசித்தி வல்லபமும்
பெற்ற சத்குரு ராஜனிடம் அதிவினய
மாகிய பேரன்புடைபணுகி மாணக்கனுக்
குப் பாவனுயோகம், மந்திரயோகம், ஹட
யோகம், பஞ்சவித முத்திரை, இயமாதி
சாதகம், மணிமந்திர வவுஷத துணையி
னைக்கொண்டு நன்னெறியிற் பழகச்செய்து
மனத் தூய்மையுடன் சித்தநிரோதமும்
பெற்றதின் வாயிலாகத் தத்துவ வுண்மை
யினையுணர்ந் தின்புறச்செய்தலாம். மூன்
றாவது, இதிகாச சாத்திரமானது சத்குரு
வினிடம் பிரபஞ்ச சுகமும், தேகசுகமும்
வெறுத்தவனை பதிகதுறையிற் பழகிய
முதிர்ச்சியால் மூர்த்தியின் அருமைச்செ
யல்கள் தன்பானிகழ்வது கண்டு உளந்தடு
மாறி அவன் பாடலையே கேட்டும் பாடி
யும் அவன் வடிவம் வருவமைந்த ஆலய
வழிபாடு வழிபடுதற்குச் சகாயமாகத்
தேகமனோசுத்தி செய்யும் தீர்த்தாடனம்
மூர்த்திப் பிரதாபத்தினைப் பேசிப் பழகி
வரு மன்பர்பா லத்தியந்த விசுவாசத்து
டன் வதிவதும், மூர்த்திவேடந்தரித்தவடி
களாய தவவேடத்தினரைக்கண்டு வந்த
னைவழிபாடாற்றிடுதலும், காணும் பிரப
ஞ்சமனைத்தும் தம திஷ்டதெய்வ வடிவ
மூர்த்தியின் சொரூபமாகக் கண்டு வருத
லால் மனத்தூய்மையும் சலனவொழிவும்
பெற்றுப் பேரன்புருவாக விளங்குபவனு
க்கு உண்மையுணருமாறு போதித்தலாம்.
இங்கித நூலிற் பழகுவோன் உலகதேக
சுகத்தினை விரும்பியவனும் திரிபதார்த்



தத்திற்சிறிது விசார முடைய வனுமாம்.
இவனுக்கு இந்நூல்வழியே யுண்மையுண
ர்த்துமாசிரியன் மிக்கவலிய கல்வி கேள்வி
போதனைக் குசலமுடையவரும், உண்மை
யன்புடையவரும், உண்மை யுணர்வுடை
யவரும் அவனுக்குவேறு எவ்விதம் போ
திக்காது அவன் கருத்தின்வழியே பெண்
ணினியல்பு, ஆடவனியல்பு, இருவரும்
கூடும்முறை, இடையீடுகள், அவற்றைநீக்
குமுபாயங்கள் பெறுமின்பம் முதலிய
வைகளை விஸ்தாரகமாகப் போதித்து அவ
ற்றில் உள்ள மனதைமுறியச்செய்து தான்
கருதிய நெறியிற் பகழச்செய் தின்புறச்
செய்தலொன்று. அந்நூலிற் கூறியவாறு
சாதி, வயது, கல்வி, குணம், அன்பு என்
பன சமமாகப்பெற்ற வனிதை யெங்குளா
ளெனத்துருவிக் களவியலிற் கலந்தின்புற்
றும் தடையுற்றவனைத் தந்திரவலியால் நீக்
கிக் கற்பியலா லணைந்தின்புறுங்கால் யோக
மார்க்கத்தினைப் பழகுமாறு, அதாவது
அநுகூலமாகிய முத்திரையின் பழக்கத்தி
னுலிருவரும் மணிமந்திர வவுஷத சகாய
த்தால் நற்பேறு பெருமாறு திருத்தியின்
புறச் செய்தலொன்றும், அந்நூலிற் கூறும்
தலைவன் தலைவியாதிய பலவற்றையும் விப
ரமாக நன்குறப்போதித்து அவன் மனத்
தெளிவாதியைக் கண்டு ஜீவேஸ்வரர்களை
த்தலைவன் தலைவியாகவும் சாக்கிர சொற்
பன சுழுத்தி துரியம் துரியாதீதம் மென்
னும் பஞ்சதினைக்கட்கூடலூடல் பிரிதலா
கிய விவகாரங் கற்பனுலங்கார வடிவாகவு
ருவகித்துக்கூறியது என, மனத்தினைச்
தெளியச்செய்து என்று மழியா சகசான
ந்த இன்பந் திளைக்குமாறு போதிப்பது
தான் முன்னோராகிய நூலாசிரியர் பலர்
க்கு மபிமதமாம். இதனுலன்றே (யாவும்
பார்த்துக்கோவைபார்) எனப் பழமொழி
நம் செந்தமிழ்த் தெய்வத் திருநாட்டில்
நிலவுகின்றது. இந்நெறியினை ஸ்ரீமத் சுந்
தரமூர்த்திசுவாமிகள் திருவாரூர் தேவார
த்தில்.

"முன்னமவனுடைய நாமங்கேட்டாள்
மூர்த்தியவனிருக்கும் வண்ணங்கேட்டாள்
பின்னுமவனுடைய வாரூர்கேட்டாள்
பெயர்த்துமவனுக்கே பிச்சியானுள்
அன்னையையுமத்தனையு மன்றேநீத்தாள்
அகன்றுளகவிடத் தாசாரத்தைத்
தன்னைமறந்தாள் தன்னுமங்கெட்டாள்
தலைப்பட்டாணங்கை தலைவன்றுனே"

என்ற திருப் பாடலினுல் விளக்கி யுள்
ளார். இதனை ஸ்ரீமத் தாயுமான சுவாமிக
ளும் "காதலுறு மணியிழையார் யென
வாடுற்றேன் கருத்தறிந்து புறப்பதுன்
மேற் கடன்முக்காலும்" என்றுங் கூறியுள்
ளார். நாலாயிரப் பிரபந்தத்தில் சூடிக்
கொடுத்தாளென்னும் நாச்சியார் அரவ
ணைத்துயிலு மரங்கனையேநாயகனுக வணை
வலெனப்புகன்று மடற்றுறையுங் கூறிவந்
து ஆலயத்துட் சென்று மீளாத்தன்மை
யெய்தியது அறிவுடைய பல அறிஞர்
மனத்தினையும் நாளும் பேதிப்பதாக வுள
தன்றே!

அன்றியும் சர்வசெயலும் காருண்ய
மிகுதிப்பாட்டால் சர்வேஸ்வரன் இயற்றி,
கின்றுரென்பதை 'இமையளவும் உபகார
மல்லா லொன்றை யியக்கா நிர்க்குணக்
கடலாயிருந்த வொன்றே' எனத் தாயுமா
ன மூர்த்தி கூறுவதா லினிது விளங்கும்.
இங்கித நூற்கு இங்ஙனம் பொருள்கொ
ள்ளாது தலைவன்தலைவி கூடுஞ் சுகமெனப்
பொருள்கொண்டது நும் மடமையினுற்
றேன்றிய வெற்றுரையேயெனத் தெளிக.
இன்னும் இந்நூற் கிலக்கணமாகிய இறை
யனுரகப் பொருளென்னும் நூலின் றுவக்
கத்திலேயே அன்பு எனக் கூறப்படுகிறது.
அதன் நோக்கத்தினை யூகிக்கில் அன்பின
னுகிய ஒரு புருடன் இந்நூலை யோதவும்
அநுட்டிக்கவும் தகாதென தோற்றுகின்ற
து. அன்பு, காருண்யமில்வழி யுண்டாகா
காருண்யமும், திரிபதார்த்த விசாரமும்
நல்லன வேட்டலும் அல்லன வீட்டலு
மில்வழி யுண்டாகா.

இதனுல் அதிகாரியாய புருடன் ஒரு
கால் கருமவசத்தினுல் பிரவிர்த்தி மா

க்கத்தில் செல்வானுகின் அவளைத் திருத்து முகத்தால் இந்நூ லெழுந்ததென வறிக. இது திருமந்திரமுதலிய நூலினுட் சூனிய சம்பாஷணை யென்ற குறிப்புப் பொருளுணர்த்திவ தெவ்விதமோ அவ்விதமே நாயகன் நாயகியென வருவகிந்திக் கூறியதன்றிப சிற்றின்ப நுகர்ச்சியின் பொருட்டன்றெனத் தெளிக. இதனாலன்றேகோவைகளில் புணர்ச்சியின் மகிழ்தல் என்ற துறைகள்யாவும் பேரின்பக் குறிப்பாலோதுகின்றன. அவையாவன—

(தொடரும்.)

பொதுநன்மையை விரும்பும்
ஓர் சாது.

## நமது சுற்றுப்பிரயாணம்.

### செய்ந்நன்றி.

நமது விஶ்வகர்ம குலோத்தாரணசபையின் நன்னோக்கம் கருதியும், விஶ்வகர்ம குலோபகாரி என்னும் நமது உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களைச் சேர்க்கும் பொருட்டும், வெளியூர் சுஜாதிக் கனவான்களுடன் பரஸ்பரம் அபிப்பிராயங்களைக் கலக்கவும், அவர்களுடைய ஆசார வியவகாரங்களை நேரில் கண்டுகளிக்கும் எண்ணத்துடனும், நாம் சென்னையினின்று 5—5—14ம் தேதியில்பிரயாணப்பட்டு திருவாரூர், எட்டுக்குடி, நாகப்பட்டணம், நாகூர், திருமலைராயன்பட்டணம், காரைக்கரல், மாயூரம், கொறநாடு, திருமாகாளம், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, ஸ்ரீரங்கம், திருவானைக்கா, மதுரை, சாத்தூர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், கல்லிடைக்குரிச்சி, அம்பாசமுத்திரம், பாபநாசம், திருநெல்வேலி, நாகர்கோயில், வடச்சேரி, கிருஷ்ணன்கோயில், மீனாக்ஷிபுரம், கோட்டார், திருவனந்தபுரம், கொல்லம், திண்டுக்கல் முதலிய பல இடங்களுக்குச் சென்றிருந்து, 5—8—14ந்தேதி யன்று சென்னைக்கு அவசரமாக திரும்ப நேர்ந்தது. நாம் சென்றிருந்த பல இடங்களிலும் நமது சுஜாதிச் செல்வர்களின் சுபிட்சநிலைமையை நேத்திரானந்தமாக இச் சுற்றுப் பிரயாணத்தில் கண்டுகளிக்கும் பெரும்பாக்கியத்தையும், அவர்களுடன் அளவளாவி ஆங்காங்குள்ள நம்மனோர்களின் ஆசாரம், லௌகிகம், சுஜாதிக் கட்டுப்பாடு, கல்வி முதலிய பலவிஷயங்களையும் தெரிந்துகொண்ட அரிய பாக்கியத்தையும் பெற்றோம். அதனோடும், யாம் சென்ற இடங்களிலெல்லாம், எம்மை அன்புடன் வரவேற்று உபசரித்து, பல்வழியிலும் ஆதரித்தனுப்பிய நம் சுஜாதி கனவான்கள் எமக்கு செய்த அரியபெரிய உபகாரத்திற்கு நாம் மிகுந்த நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒவ்வோர் ஊர்களிலும் சில சுஜாதிக் கனவான்கள் எம்மைக் கண்டவுடன் தங்கள் வேலைமுதலிய லௌகிக் காரியங்களை நிறுத்திவிட்டு குலாபிமானத்தை முன்னிட்டு நம்முடன் இணைபிரியாதிருந்து ஆங்குள்ள மற்றைய சுஜாதிப்பிரமுகர்களை தரிசனஞ்செய்வித்து அவர்கள் முழு ஆதரவையும், உபசரணையையும் அநுபவிக்கும் பாக்கியத்தை எமக்கு அளித்தனர். அன்றியும், சில ஊர்களில் உள்ள சுஜாதியர் நாம் அவ்வூர்களுக்கு வந்திருப்பதாகக்கேள்விப்பட்டு நாம் தங்கியிருந்த ஜாகைக்கு மிகவும் கருணையுடன் வந்து பல விஷயங்களைப் பற்றியும் சிலநேரம் உரையாடியிருந்து பின்பு எம்மை தங்கள் தங்கள் கிருகத்திற்கு அழைத்துச்சென்று விருந்தோம்பி பல உபசாரணை புரிந்தனர். சில சுஜாதி சபையார்களும், ஐந்து ஜாதி நாட்டாண்மைக் காரர்களும், சுஜாதித் தலைவர்களும், நம்மை அவர்கள் மகாநாடுகளில் வரவேற்று, வரவேற்புப் பத்திரங்களும், முகமன் பத்திரங்களும் அளித்து நம் சபையையும், நம் குலோபகாரியென்னும் அரிய தமிழ்மாதினையும் மிக்க கௌரவப்



படுத்தினர். இன்னும் நாம் சென்றிருந்த ஊர்களிலுள்ள நம் குலாபிமானிகள் யாவரும் நமது வேதாத்தியயனபாடசாலையின் விவரங்களைப் பரிந்து விசாரித்தனர். தங்கள் சிறுவர்களை இப்பாடசாலைக்கு அனுப்புவதென்றென அவர்களில் ஆதுரப்பட்டவர்கள் அனந்தம். இப் பாடசாலையைச் சார்ந்து வெளியூர் மாணவர்களுக்கென விடுதிச் சாலைகள் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை காலதாமதமின்றி நாம் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியவர்களும், அதற்கான பொருளுதவி தங்களா லியன்றவளவு செய்வதாக வாக்களித்து எமக்கு உற்சாக மூட்டியவர்களும் அனந்தம். சென்னையில் தென் மாராட்டா ரயில்வேஸ்டேஷனுக்கும், எழும்பூர்ஸ்டேஷனுக்கும் மத்திய ஸ்தானமான ஓர்வசதியான இடத்தில் சுஜாதியார் சென்னைக்கு வந்தால் தங்குவதற்கென ஒருசத்திரமும், ஸ்நானகட்டமும் அமைக்கும்படியான முயற்சியை வகிக்கும்படியாக சில சுஜாதிக் கனவான்கள் ஆக்ஞாபித்தார்கள். அவர்கள் ஆக்ஞைப்படியே மேற்குறித்த விஷயமாக பல விளம்பரங்கள் அச்சியற்றி சுஜாதியர்க்கு ஆங்காங்கு சமர்ப்பிக்கலாயிற்று.

நாகை, குடந்தை, மதுரை, காரைக்கால், திருவனந்தபுரம் முதலிய ஊர்களிலுள்ள சில பிரமுகர்கள் தாங்கள் கூடிய சீக்கிரம் சென்னைக்கு வருவதாகவும், யாம் அச்சத்திரத்திற்கென தானமாகக் கொடுக்கநிச்சயித்திருக்கும் பூமியை பார்வையிட்டபின் கட்டிடம் கட்டுவதற்கான சிலவை தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு இவ்வரிய திருப்பணியை நிறைவேற்றி வைப்பதாகவும் கையொப்பம் செய்து எம்மைக் களிக்கச் செய்தனர். இன்னும் பல சுஜாதிப் பெருந்தகையாளர் நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்களைச் சேர்க்கும்பொருட்டு சிரமம் பாராட்டாது பல பக்கத்து கிராமங்களுக்கு பாதசாரிகளாக தனிமையில் சென்று பல கையொப்பங்களை வாங்கிவந்த ஊக்கத்தையும், குலாபிமானத்தையும் என்னென்றியம்புவோம். நம் பத்திரிகைக்கு பல விடங்களில் ஏஜண்டுகளாக விருந்து நமக்கு அப்போதைக்கப்போது வேண்டிய ஒத்தாசை புரிவதாக வாக்களித்தவர்களை மறப்பதெளிதோ. பல முக்கிய விஷயங்களைப்பற்றி வியாசங்கள் எழுதி நம் குலோபகாரியை அலங்கரிப்பதாக வலிந்துரைத்த கல்விமான்களின் காருண்யத்தை இங்கு விரித்தால் பெருகுமென்று இம்மட்டு விடுத்தோம். நமது சபையும், பாடசாலையும், பத்திரிகையும் பலகாலும் நீடித்து, தழைத்தோங்க வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் தங்கள் தங்கள் பரிபாலனத்தி லிருந்துவரும் நமது குலதேவதைகளாகிய ஸ்ரீகாளிகாம்பாளனுங் காமாக்ஷியம்மன் முதலிய ஆலயங்களில் வெகு விமரிசையாக அபிஷேக ஆராதனைக ளியற்றி சில குலோத்தமர்கள் எமக்குப் பிரசாதமுதலியவைக ளளித்து ஆசீர்வதித்து அனுப்பிய அவர்களின் உள்ளக்கனிவும், அபிமானமும் எம்மனதில் வேறூன்றி நிற்கின்றன. இக்குலாபிமானப் பெருந்தகையாளர்க்கெல்லாம் எமது மனப்பூர்வகமான வந்தனத்தையும், நன்றி யறிதலையும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே தெரிவிக்க கடமைப்பட்டிருந்தும் போதிய அவகாசமின்மையாலும், பல ஊர்களுக்குச் சென்று வந்த சிரமம் இன்னும் மாறாமையாலும், சரீரஉபாதையாலும் கூடாமையாயிற்று. ஆகையால் எம்மை இம் முதல் சுற்றுப்பிரயாணத்தில் கௌரவித்த பலருக்கும் நமது பத்திரிகை மூலமாக வந்தனம் சேர்ப்பிக்கிறோம். அதனை தயைசெய்து அங்கீகரிப்பார்களாக. கூடிய சீக்கிரத்தில் மற்றொரு சுற்றுப்பிரயாணம் செய்வதாக தீர்மானித்திருக்கிறோம். அவ்விபரங்களையும், புறப்படுங் காத்தையும் நமது குலோபகாரியில் முன்னதாக வெளியிடுவோம்.

**கோ. கன்னியப்ப ஆச்சாரி,**
விஶ்வகர்ம குலோத்தாரண சபையின்,
ஆ. காரியதரிசி,
வேதாத்தியயன பாடசாலை ஸ்தாபகர்,
சென்னை.

## சுகாதார விளக்கம்.

### குடிநீர்.

நாம் குடிப்பதற்கும் நமது ஆகாரங்களைச் சமைப்பதற்கும் உபயோகிக்கும் நீர் பரிசுத்தமா யில்லாதகாரணத்தால் அஜீர்ணம், மலபந்தம், வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, விஷசுரம், நரம்புச்சிலந்தி, சொறிசிரங்கு முதலிய பலவித நோய்கள் உண்டாகின்றன. ஆகையால் நாம் உட்கொள்ளும் நீர் சுத்தஜலமாகவும், சுத்தமான பாத்திரங்களில் வைக்கப்பட்டு மிருக்கவேண்டும். (1)சுத்தஜலம், பளிங்குபோல்தெளிவாயிருக்கும். உள்ளங்கையில் அள்ளிப்பார்த்தால் அதற்கோர் நிறமிராது. பால்போல் வெண்மையா யிருப்பதும், சிவப்பு நிறமாக யிருப்பதும் சுத்தஜலமன்று. (2)நல்ல ஜலத்திற்கு ஒரு சுவையுமில்லை. (3) நல்ல ஜலத்திற்கு ஒருவித மணமுமில்லை. (4) குடிக்கும் நீர் நல்லகாற்று உலாவும் இடங்களிலிருந்து எடுக்கப்பட வேண்டும். (5) சூரிய வெளிச்சமும், வெப்பமும் பெறாத ஜலம் சுத்தமன்று. எப்பொழுதும் ஜலத்தைப் பருகவேண்டுமானால் கொதிக்கவைத்து அதிலுள்ள நுண்ணிய கிருமிகளைப் போக்கிப் பின் ஆறவைத்து உபயோகிக்க வேண்டும். மஞ்சள், பனங்குருத்து முதலியவைகளைப் போட்டுக் காய்ச்சி உட்கொள்வதால் மலேஜுரம் பிடிப்பதில்லை, படிகாரம், மாம்பருப்பு, கசப்பு வாதங்கொட்டை முதலிய வஸ்துக்களைப் போட்டுக் காய்ச்சுவதாலும் குடிநீர் சுத்தப்படும். ஆதலால் சுகாதாரத்திற்கு அதி முக்கியமான குடிநீரில் நாம் கவனம் வைக்க வேண்டுவது அத்யாவசியகம்.

***

### போஜனத்திற்குப் பின் நீராடல்.

வயிறு நிறைய உண்டபின்பு ஸ்நானம் செய்வது சுகாதாரத்திற்குஏற்றதன்றென வைத்தியசாஸ்திர நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். 'போஜனத்திற்குப் பின் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால், அது சரீரத்தின் ஜீவசக்திகளின்உஷ்ணத்தைப்போக்கி மீண்டும் உடம்பின் மேல்பாகத்திலுள்ள சூட்டை மெல்லமெல்ல சுபாவநிலைமைக்கு கொண்டுவருமாம். வெந்நீரில் ஸ்நானம் செய்தால் சரீரத்திலுள்ள இரத்தவோட்டத்தின் பெரும்பாகம் சரீரத்தின்மேற்பாகத்தில்வியாபிக்கின்றதாம். ஆதலால் இவ்விருவித சம்பவங்களால் வயிற்றிலுள்ள ஆகாரத்தை ஜீரணிக்க போதுமான உஷ்ணம் வயிற்றிலில்லையென் றேற்படுகின்றது. அதுகாரணமாக நாம் உட்கொள்ளும் ஆகாரம் நன்றாய் ஜீர்ணமாகாது. ஆகாரம் அஜீர்ணப்படவே பல நோய்கள் பீடிக்கின்றன. ஆகையால் போஜனத்திற்குப் பிறகு ஸ்நானம் செய்வதை தவிர்ப்பது நன்று.

## விவசாயக் கொத்து.

### தென்னை மரத்திற்கு எரு.

தென்னை மரத்தைச் சுற்றிலுமுள்ள மேல் வேர்களைக் களைந்து, அம்மரத்தினடியைச்சுற்றி இரண்டடி ஆழத்திற்குத் தோண்டி மண்களை எடுத்துவிட்டு அதில் சப்பாத்து என்னும் நாகதாளியைக் கொணர்ந்து அக்குழி நிறம்ப இட்டு மேலே மண்மூடி ஜலம் பாய்ச்சிவரின் அம்மரங்கள் அதிகசெழிப்புடன் வளர்வதன்றியும் காய்களும் ஓயாமல் விசேஷமாகக் காய்த்துப் பலன் தருகின்றன. ஆதலால் இத்தோட்டம் வைத்து பயிரிடுவோர்கள் மேலே கூறப்பட்டுள்ள எருவை கையாடிவரின் அதிக லாபமுண்டாகுமென்று நம்புகிறோம்.

***



### உவர் நிலத்திற்கு எரு.

நம் தேயத்தில் சிலர் அறியாமையினால் உவர்நிலத்தில் பயிரிடாமல் பரதவிக்கின்றனர். ஆதலின் உவர் நிலத்திற்கு ஒருவாரம் அல்லது ஐந்துநாள்வரை தண்ணீர்க்கட்டி சேடையாக்கி அதில் வேப்பம் பிண்ணாக்கை எருவாக இட்டு அந்நிலத்தில் நெல் விதைத்துப் பயிர் செய்யின் அதிக செழிப்பாகவும், சாதாரணமாக விளையும் விளைவிற்கு ஒருபாகம் அதிகம் விளைந்து பலன் தருகிறதென்றும் நமது நேயர்களிற் சிலர் அநுபவமாய் கூறுகின்றனர். ஆதலால் இனி மேற்கூறிய வேப்பம்பிண்ணாக்கு எருவை உவர் நிலத்திற்கு எருவிட்டு நெற்பயிர்செய்யின் அதிக லாபகர முண்டாகுமென்று நினைக்கிறோம்.

***

### நெற்பயிர்களுக்கு எரு.

நிலத்தில் நாற்று நடுவதற்குமுன் சப்பாத்து என்னும் நாகதாளிகளைக் கொணர்ந்து, அவற்றில் பொதிந்துகிடக்கும் முள்களைக் களைந்து அவற்றை [illegible] கொண்டு நறுக்கி (பொடிபடுத்தி) [illegible] நிலத்திற்கு ஒருபாரம் போட்டு மிதித்து நான்குநாள் சென்றபிறகு நெல் நாற்று நட்டால் பயிர்கள் செழிப்புடன்வளர்கின்றன. கதிர்களும் திடமா யிருக்கின்றன. அன்றியும் ஒருவருடத்திற்கு இடும் மேற்படி எருவே மூன்று வருடத்திற்குப்பலன் தருகின்றது. ஆதலால் நெற்பயிர்செய்யும் நம் நேயர்கள் இதனைக் கவனித்து வருவார்களாயின் அதிக லாபகாமுண்டாகும்.

***

### கிச்சிலிமரத்திற்கும், எலுமிச்சை மரத்திற்கும் எரு.

கிச்சிலிமரம், எலுமிச்சைமரம், நாரத்தம்மரம், கொடிமுந்திரி ஆகிய இவைகளுக்கு ஆட்டுத்தோல்எருவிட்டால் மரம் செழித்தோங்கி காய்கள் அதிகமாகக் காய்க்கின்றன. ஷை மரங்களுக்கு மாட்டுச் சாணி எருவும் போடலாம்.

## ஆயுர் வேதசாரம்.

### அவிழ்த முறை.

#### ஜன்னி தோஷத்திற்கு கண்டாவிழ்தம்.

தங்கம், வெள்ளி, முத்து, பவழம், உருத்திராக்ஷம், வில்வ ஓடு, விளாம்ஓடு, அதிமதுரம், அக்கிராகாரம், கோஷ்டம், ஏலம் திப்பிலி இவைகளைக் கொணர்ந்து முலைப்பாலிலிழைத்து எடுத்து வைத்துக்கொண்டு மயிலிறகையும், பூநாகத்தையும் சுட்டு சாம்பலாக்கி அதனோடு சேர்த்து தேன்விட்டு மத்தித்து நாவில்தடவினால் நாவரட்சி ஜன்னி தோஷம் முதலியன நீங்கும்.

***

### விக்கலுக்கு மருந்து.

மயிலிறகு, புலித்தோல், தருப்பைப்புல் இம்மூன்றையும் சுட்டு சாம்பலாக்கிக் கொண்டு தாமரைக் கொட்டைப் பருப்பை வஸ்திரகாயம் செய்து அவைகளுடன் கலந்து தேன் விட்டுக் குழைத்து அரைக்கால் ரூபா யெடை உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று வேளை கொடுக்க விக்கல்தீரும்.

***

### விரைவாதம் தீரக்கியாழம்.

புனல் முருங்கை வித்து, கெச்சக்காய் பருப்பு, கொத்தான்யிலை, சுக்கு இவைகளை வகைக்குப் பலம் முக்கால் கொணர்ந்து இடித்து சட்டியில் போட்டு ஒழக்கு ஜலம் விட்டு ஆழாக்கு ஜலத்திற்கு சுண்டக்காய்ச்சி வடித்துக் கொண்டு, அக்கியாழத்தில் சந்தன அத்தர் 8—துளி விட்டு காலை மாலை 6—வேளை சாப்பிடவும். இதனால் தீரும்வியாதி, விரைவீக்கம், விரை நோய், குடல் வாதம் முதலியன.

***

### பித்தத்தைச் சேர்ந்த வியாதிகளுக்கு லேகியம்.

புளிப்பு மாதளம்பழரசம், புளிப்பு நாரத்தம்பழரசம், எலுமிச்சம்பழரசம், இஞ்சிரசம் இவை வகைக்குப் படி அரைக்கால், பசும்பால் படி அரை, இவைகளைக்கலந்து அதில் பத்துபலம் சீனியை இட்டு கரைத்து ஓர் மண்பாத்திரத்தி விட்டு அடுப்பேற்றிக் கிளரிக்கொண்டு வரும்போது, சன்னராஷ்டகம், வெள்ளை மிளகு, ஏலம், சீரகம், பரங்கி சக்கை, சுக்கு, இவைகளை வகைக்குப் பலம் ஒன்று இடித்து வஸ்திரகாயஞ் செய்து அதிலிட்டு கிளறும் போது லேகியமாகும். அதையெடுத்து வைத்துக்கொண்டு காலை,மாலை கெச்சக்காய் அளவு அரை மண்டலம் சாப்பிட பித்தம், வாந்தி மயக்கம், பித்தவாய்வு, மார் நோய், வயர் உப்பிசம், உஷ்ணபேதி முதலியவை தீரும். பத்தியமே யில்லை.

***

### சகல வாய்வுகளுக்கு நெய்.

வெள்ளை பில்லாஞ்சி என்னும் செடியின் வேர் ஐந்து பலம் கொணர்ந்து பதினைந்து பலம் பசும் நெய்யிலிட்டு நுரையடங்கக் காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் அரைப்பலம் நெய் காலை, மாலை சாப்பிட சகலவாய்வுகளும்நீங்கும். இச்சாபத்தியம்.

***

### இரத்த பித்தந்தீரக்குடி நீர்.

ஆடா தோடையிலை ஒருபிடி, பச்சை திராக்ஷைப்பழம் ஒருபிடி, இவ்விரண்டையும் கசக்கிப்போட்டு, கால்படி ஜலம் விட்டு அரைக்கால்படி சுண்டக்காய்ச்சி இறக்கும்போது, திப்பிலித்தூளை அதில் ஒரு துட்டிடை இட்டுசாப்பிடவும். மேற்கூறிய வியாதி சாந்தியாகும்.

***

### வயிற்றுநோய்க்கு மருந்து.

முற்றினதேங்காயையுடைத்துத் திருகி அதனோடு முருங்கைப் புஷ்பம் சேர்த்து கலந்து ஒரு மண்பாத்திரத்தில் வஸ்திரம் ஏடு கட்டி அதன் மீது கொஞ்சம் புஷ்பமிட்டு, அதன் நடுவில் பெருங்காயத்தை ஒரு சீலையில் முடிந்து வைத்து, அதன் பேரில் ஷை புஷ்பத்தை மூடிபுட்டவியல் செய்து எடுத்துக்கொண்டு புஷ்பங்களைப்பிழிந்து, அந்த ரசத்தில் அப்பெருங்காயத்தில் அரிசி யெடை சேர்த்து மூன்று வேளை உள்ளுக்குக்கொடுக்க, எவ்வித வயிற்று நோய்களும் நீங்கும். இச்சாபத்தியம்.

***

### உப்பு செந்தூரம்.

செருப்படை கொணர்ந்து சார்பிழிந்து அதில் ஐந்து பலம் சோற்றுப்பு இட்டு நாலுசாமம் அரைத்துப் பில்லை தட்டிக்காயவைத்து பதினைந்து எருவில் புடம்போட்டால் செந்தூரமாகும். அச் செந்தூரத்தை யெடுத்து வைத்துக்கொண்டு கோதுமை அரிசிப் பிரமாணம் தேனிலிழைத்து உள்ளுக்கு கொடுத்தால் வாந்திபேதி, சூலை, வயிற்றுநோய், சீதளம், ஜன்னி முதலியவை தீரும். இச்சா பத்தியம்.

P. M. ஆயுர்வேத பண்டிதர்.

## தொழிற் குறிப்புகள்.

[இந்த தலைப்பின் கீழ் மநு, மய, துவஷ்ட, சில்பி, விஶ்வக்ஞ வகுப்பினர் தொழிற்குரிய அரியவிஷயங்களையும், அவற்றின் கைபாகம், செய்பாகமென்ற முறைகளையும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றுள் நிகழும் சந்தேகங்களைச் சுருக்கமாக தங்கள் பெயர், விலாசமுடன் பத்திரிகைக்கு எழுதிக்கொண்டால் விடையளிக்கப்படும். இவற்றை அநுமதிபெற்றே மற்றவர் பிரசுரிக்கவேண்டும்.]

(371-வது பக்கத்தின் தொடர்ச்சி.)



### பற்றவைக்கவேண்டிய சாமான்களுக்கு பொடிகள்.

| சாமான்கள் (உலோகம்). | பொடிகள் சேர்மானம். | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பொன் | வெள்ளி. | செம்பு. | பித்தளை. | வெள்ளீயம் | காரீயம். | நாகம். | நிமிளை. |
| பிளாட்டினம் | 1 | ... | ... | ... | ... | ... | ... | ... |
| பொன் | 6 | 1 | 2 | ... | ... | ... | ... | ... |
| சுத்தவெள்ளி | ... | 2 | ... | 1 | ... | ... | ... | ... |
| மட்டவெள்ளி | ... | 4 | 1 | ... | ... | ... | ... | ... |
| செம்பு, இரும்பு | ... | ... | 1–2 | ... | ... | ... | 1 | ... |
| பித்தளை | ... | ... | 1 | ... | ... | ... | 1 | ... |
| அலுமினியம் | ... | 2 | ... | ... | 2 | 2 | 1 | ... |
| ஜர்மன் வெள் * | ... | 1 | ... | 1 | ... | ... | 1 | ... |
| பித்தளை, செம்பு இரும்பு, நாகம், நிக்கில் † | ... | ... | ... | ... | 1 | 2 | ... | ... |
| நாகம், ஷைபூசிய இரும்புதகடு ‡ | ... | ... | ... | ... | 1 | 1 | ... | ... |
| வெள்ளீயம் | ... | ... | ... | ... | 1=2 | 2-1 | ... | ... |
| காரீயம் | ... | ... | ... | ... | 1 | 2 | ... | ... |
| பியூட்டர் | ... | ... | ... | ... | 3–2 | 4–1 | ... | 2–1 |

* நாகம் கலந்த முராடிக் ஆசிட்டை பூசி, பின் பொடியைவைத்து பற்றவைக்கவும்.

† வெள்ளிப் பொடிகளும் கூடும்.

‡ 1/3 பாகம் முராடிக் ஆசிட்டும் 2/3 மழைஜலம் கலந்து பூசவும்.

வெள்ளீயம், காரீயம், பியூட்டர் சாமான்களுக்கு ரோஜனமும் லிங்குலோரைடும், மற்றவைகளுக்கு வெண்காரமும் பற்றவைப்புக்குச் சேர்த்துக் கொள்ளவும்.

***

பாதரசத்தை சுத்திசெய்ய:— ஓர் ஆழ்ந்தபீங்கானில்அசுத்த ரசத்தைவிட்டு அதன்மேல் தண்ணீர்கலந்த சல்பூரிக் ஆசிட்டைவிட்டு, பின் ஓர் செப்புக்கட்டியை நன்றாய் நனையும்படி விடவும். சிறிதுநேரஞ் சென்றபின் ரசத்தை வடிகட்டி சீசாவில்அல்லது தேங்காய் குடுக்கையில் விட்டுவாயை தேன் மெழுக்கினால் மூடிவைத்துக்கொள்ளவும்.

***

தங்கத்திற்பட்ட ரசத்தைப் போக்க:— பாதரசம் மற்ற உலோலங்களோடு கூட்டுறவு படுதல் வெகு சுலபம், புதிதாய் உண்டாகிய (Amalgam) இரச பூரத்தைத்தனிதனி உலோகங்களாக பிரித்தெடுத்தல் கஷ்டசாத்தியம்; ஆகவேதங்கத்தின்மேல் பற்றிய ரசத்தை பிரித்தெடுத்தல் கூடாமை எனினும், நெருப்பில் 38° C சூட்டளவில் வெதுப்பியெடுத்தால் போக்கிவிடுதற்குகூடும். ஆனால் ஜாக்கிரதையாய் செய்யாவிடில் தங்கம் உருகிவிடும்.

***

### பலவிதநிறங்களை உலோகங்களுக்கு ஏற்றுதல்:—

(1) முதலில் 4 அவுன்ஸ் ஹைப்போசல்பைட் ஆப்சோடாவை 18-அவுன்ஸ் தண்ணீரில் கரைத்துக்கொண்டு பின் அதனோடு அதே அளவு தண்ணீரில் 1 அவுன்ஸ் லெட் அஸிடேட்டைக்கரைத்துசேர்க்கவும். சாமான்களை இதில்போட்டு சிறுதீமூட்டி எரிக்கவும். இரும்பு நீல எஃகு நிறமாயும், நாகம் வெண்கல நிறமாயும், செம்பும் பித்தளையும் மஞ்சளாயும், சிவப்பாயும், மிகுதி சிவப்பாயும், ஆழ்ந்த நீலமாயும், நீலமாயும், வெளுத்த நீலமாயும், இறுதியில் ரோஜாப்பு நிறமாயும், வெண்மையாயும் முறையே மாறுகின்றன. இது வெள்ளீயத்தின் மேலும் காரீயத்தின்மேலும் பயன்படாது.

***

(2) முன்கூறிய சேர்மானத்தில் லெட் அஸிடேட்டுக்குப்பதிலாக மயில் துத்தத்தைகரைத்த தண்ணீரைச் சேர்த்து முன்போல் சாமான்களைப்போட்டு எரிக்க, செம்பும்,பித்தளையும் முதலில் அழகான ரோ

ஜாதிறமாயும், பின் பச்சையாயும், கடைசியில் ஊதாநிறமாயும் மாறுபாடு அடைகின்றன. இது நாகத்தின்மேல் பயன்படாது.

***

(3) 12 அவன்ஸ் தண்ணீரில் 5 கிராகனிடை மயில்துத்தமும், 2½ கிராகனிடை கிரீம் ஆப் டார்டாரும் கலந்து சுடவைத்து, பின் அதில் பித்தளைச் சாமான்களை நனைத்து எடுக்க,முதலில்ரோஜாநிறமாயும், ஊதாவும், நீலமுமாக மாறுகின்றன.

***

(4) தண்ணீர், நைட்டிரிக்ஆசிட், சல்பூரிக் ஆசிட் இம்மூன்றையும் சமமாக முறையே ஒன்றின் பின் னொன்றாகச் சேர்த்து, சூடுதணிந்தபின் பித்தளைச் சாமான்களை நனைத்தெடுக்க தங்கம்போல் பளபளப்பாகின்றன.

***

(5) அல்லது 3 பாகம் தண்ணீர், 2பாகம் நைட்டிரிக்ஆசிட், 4பாகம், சல்பூரிக் ஆசிட்டையும் முன் சொல்லிய முறையாய் சேர்த்துக்கொள்ளவும். இதுவும் அவ்விதமே பித்தளைக்குப்பளபளப்பை யுண்டுசெய்கின்றது. ஆனால் நனைத்தெடுத்தல் வீட்டிற்கு வெளியே செய்யவேண்டும். இதன் புகையை சுவாசிக்கக்கூடாது.

***

(6) பித்தளை தங்கம்போல்பிரகாசிக்க:- 4-வது 5-வது முறையின்படி சுத்திசெய்த பித்தளைச் சாமான்களை 1 பாகம் காஸ்டிக் பொட்டாஷை 10 பாகம் தண்ணீரில்கரைத்து அதில் நனைத்தெடுத்து அலம்பவும். இது தங்கமுலாம் பூசியதுபோல் விளங்கும்.

***

## பல குறிப்புகள்.

இம்மாதம் வெளியாகும் நமது குலோபகாரி மகவுக்கு ஓராண்டுபூர்த்தியாகிறது. இதுவரையில் பன்னிரண்டு சஞ்சிகைகள் கொஞ்சமும் காலதாமதமின்றி கடவுளருளால் வெளிவந்தன. இனி புதியவருட சஞ்சிகைகளும் அவ்வாறே இனிது நிறைவேற இறைவனருளுவாராக. நமது குலோபகாரியின் ஆண்டு நிறைவு மகோற்சவம்அடுத்த அக்டோபர் மாதம் நடைபெறும். அதனை அநுசரித்துப் பல உபந்நியாசங்களும், சங்கீத முதலிய பல வைபவங்களும் நடைபெறும். அவ்வைபவங்களுக்கு உள்ளூர் வெளியூர் நண்பர்க ளனைவருக்கும் முன்னதாகவே அழைப்புப் பத்திரம் அனுப்பப்படும்.

***

அக்டோபர் மாதம் வெளிவரும் சஞ்சிகை உருவத்தில் பழய சஞ்சிகைகளை ஒத்திருந்தாலும், அச்சிடுங் காகிதத்தின் காணயத்தை உயர்த்தி, கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிட எண்ணங்கொண்டிருக்கிறோம். ஆகையால் நம்நேயர்கள் இம்மாதமோடு முடிவாகிற பன்னிரு சஞ்சிகைகளை ஒன்றாகச் சேர்த்து பயிண்டு செய்து கொள்ளலாம். அல்லது விஷயங்களைத் தொடர்ச்சியாகப் பிரித்தெடுத்து புஸ்தகரூபமாகவும் செய்து கொள்ளலாம். பன்னிரண்டு சஞ்சிகைகளையும் சேர்த்து பயிண்டு செய்த புஸ்தகங்கள் நமது அச்சியந்திரசாலையில் விற்பனைக்குத் தயாராக வைக்கப்படும். அப்புத்தகத்தின் விலை ரூ. 3-4-0, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

***

இந்தியா கவர்ன்மெண்டார் 1905-ம் வருடம் ஜூன் மாதம் 20உயில் செய்த 423-431 வது தீர்மானங்களுக் கிணங்க, பல ராஜதானியிலுள்ள கவர்ன்மெண்டு



சித்திரகலா சாலைத் தலைமை யதிகாரிகள் கூடிய கான்பரன்ஸில் பேசி முடித்தபடி சென்னை துரைத்தனத்தார் 1913 வருடத்தில் "தென்னிந்திய பித்தளை, செம்புத் தொழில் திருஷ்டாந்தங்கள்" (Illustrations of Metal Work In Brass & Copper) என மகுடம் சூட்டிய ஒரு பெரிய பதுமைப் புத்தகம் அச்சியற்றி, உலோகத் தொழில் விர்த்தியை நாடி யிருக்கும் நம்மனோர்களுக்கு இலவச மாகவே கொடுத்துவருகின்றனர். இப்புத்தகத்தில் உலோகத் தொழிலினாலாகிய பல விக்கிரகங்கள், சொம்பு, விளக்கு, தவலை, தாம்பாளம் முதலியவைகளின் உருவச் சித்திரங்கள் கண்களைக் கவரும் வண்ணம் சித்திரிக்கப்பட் டிருக்கின்றன. இந்துக்கள் புராதனமாய் வழங்கி வந்த அதிசிலாக்கியமான வேலைப் பாடுள்ளவஸ்துக்களை மட்டுமே இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ. M. வேலாயுதாச்சாரியார் இப்புத்தகத்தின் சிறந்த கர்த்தாக்களில் ஒருவர். இப்புத்தகத்தை நம்மனோர் ஒவ்வொருவரும் பார்வையிடுவதவசியம். வேண்டியவர்கள், தங்கள். பெயர், விலாசம், தொழில்முதலியவைகளை விவரமாகக் காட்டி, சென்னை, பொம்மை காலேஜ் (School of Arts) சூபரின்டெண்டு துரையவர்களுக்கு எழுதிக் கொள்ளலாம்.

***

சென்னை பொம்மை காலேஜ்என வழங்கும் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸின் அசிஸ்டெண்டு சூபரின்டெண்டு என்னும் உயர்ந்த பதவியில் இருந்து வரும் பிரம்மஸ்ரீ M. வேலாயுதாச்சாரியார் அவர்களை பலரும் அறிந்திருப்பார்கள். அக்கனவான், சித்திரவித்தையில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கின்றனரோ அவ்வளவு நம்மனோர் செய்துவரும் கைத்தொழில்கள் ஒவ்வொன்றிலும் பூர்ண ஞானமுடையவர். மண், மெழுகு, தாம்பிர முதலிய சிலைகளைச் செய்வதிலும், பலவர்ணங்களைக்கொண்டு உருவச் சித்திரம் தத்சொரூபமாக எழுதுவதிலும் இணையற்றவர். சிற்ப சாஸ்திரங்களின் நுட்பங்களையும், அவற்றின் இரகசியங்களையும், ஆராய்ச்சி செய்வதில் மிக்க ஊக்க முடையவர். இக்கனவான், நமதுசபை, அத்தியயன பாடசாலை, பத்திரிகை முதலியவைகளின் பேரபிமானி. நாம் இப்பொழுது ஸ்தாபிக்க எண்ணங்கொண்டிருக்கும் சிற்பகலாசாலைக்கு இக்குலாபிமானச் செல்வர் ஓர் பெருந்துணையாக இருந்து வருவர்.

***

நமது பூர்வீக உன்னத நிலைமை இன்னதென எடுத்துரைக்கும் 'சேலந்தீர்ப்பு' என்னும் அரிய புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு நமது அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு விற்பனைக்குத் தயாராக யிருக்கிறது. புஸ்தகம் அமைப்பிலும் உருவத்திலும், முதற் பதிப்பிலும் சிறந்து விளங்குகின்றது. இதன் விலை ஆறே அணா.

***

இச் சஞ்சிகையில் சிற்ப கலாசாலை உற்பவத்தைப்பற்றி எழுதியிருக்கிறோம். இம்முக்கிய விஷயத்தில் நமது குலோற்பவர்கள் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தி, நாம் கொண்ட எண்ணத்தைப் பூர்த்தி செய்விப்பார்களென நம்புகிறோம்.

***

நமது சபையின்கண் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரசங்கங்கள் நடைபெற்று வருகின்றன வென்பதை நம் நேயர்களறிவார்கள். அவைகளின் சாராம்சங்களைத் திரட்டி அப்போதைக்கப்போது வெளியிட நினைந்தும் அவ்வெண்ணம் இதுகாறும் பல அசந்தர்ப்பங்களால் பூர்த்தியாகாமலே போயிற்று. சென்ற ஆகஸ்டுமீ 23உ நடைபெற்ற மகோபந்நியாசத்தின் சாராம்சங்களையும், அரும்பெரும் கருத்துகளையும் நம்மனோர் ஒவ்வொருவரும் படித்துத் தெரிந்துகொள்வது அத்தியாவசியமாகத் தோன்றினமையால், அன்று நடைபெற்ற பல உபந்நியாசங்களை ஒருவாறு

சங்கிரகித்து ஸ்ரீ. கா. கந்தசாமி யாச்சாரியாரவர்கள் இச்சஞ்சிகையில் எழுதியிருக்கிறார் அவற்றைக் கண்ணுறும்குலச் செல்வர்களுக்கு பல உண்மைகள்வெளியாகும்.

***

புதுக்கோட்டை விஶ்வப் பிரம்ம மகாஜன சபையின் காரியதரிசியும், திருச்சி சென்ட்ரல் சபை வைஸ்பிரஸிடெண்டுகளிலொருவருமாகிய பிரம்மஸ்ரீ A. அண்ணாமலை ஆச்சாரியாரவர்களை புதுக்கோட்டை சமஸ்தானம், சீப்கோர்ட் ஜூரிகளில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதை குடந்தை விஶ்வகுலாபிமான சபை காரியதரிசியாகிய ஸ்ரீ தே. மா. சொக்கலிங்க ஆச்சாரியாரவர்களால் தெரிந்து பெரிதும் சந்தோஷிக்கிறோம்.

***

குடந்தை விஶ்வப்பிரம்ம மஹாஜன சபை (லிமிடெட்) யினின்றும் பிரிவுபட்டிருந்த ஓர்பாகம்மீளவும் ஒன்றுபட்டு விட்டதும், இதுகாறும் தனித்திருந்த பிரம்மஸ்ரீ த. கு. சுந்தராச்சாரியாரவர்கள் ஷை சபையுடன் கூடி உழைக்க முன்வந்திருப்பதும் நல்ல அறிகுறியாக விருக்கின்றன. இச்சபையார் தற்போது காலியாக விருக்கும் அக்கிராசனாதிபதி முதலிய ஸ்தானங்களை இலக்ஷன் மூலமாக விரைவில் பூர்த்தி செய்வார்களென்று நம்புகிறோம்.

***

விஶ்வப் பிரம புராண வசனம் விலைக்கு வேண்டுமென்று சிலர் அடிக்கடி நமது புஸ்தகசாலைக்குக் கடிதமெழுதி வருகின்றனர். அப்புத்தகம் இரண்டுபதிப்பும் செலவாய் விட்டன. மூன்றும் பதிப்பு இப்போது அச்சாகி வருகின்றது. முடிந்தவுடன் வேண்டி வோர்களுக்கு அனுப்பப்படும்.

---

## கடிதங்கள்.

**உண்மையை மறைப்பவர்க்கு மறுப்பு.**

குலாபி விருத்தியைக் கோரி சில சத்புருஷாள் ஆங்காங்கு சபைகளையும், சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். இந்நோக்கத்துடன் சென்னையில் சில வருஷங்களுக்கு முன் விஶ்வகர்மகுலோத்தாரண சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அவ்வழியே சுஜாதிக் குழந்தைகளுக்கு, வேதாப்பியாசமும், மாணவர்களுக்கு குலதர்மானுஷ்டானைப தேசங்களும் நடந்துவருகின்றன. இதை பத்திரிகை மூலமாய் அறிந்த வெளியூர் விஸ்வகுலோத்தமர் யாவரும் இவ்வனுஷ்டானங்களைப் பின் பற்றி நடந்து வருகிறார்கள். இச்சபையின் இரண்டொரு உத்தியோகஸ்தர்கள் கபடமாக பேதப்பட்டு வேறோர் சபையை நிர்மித்திருப்பதாக விஶ்வகர்ம குலோபகாரியில் தோன்றிய பகிரங்க விளம்பரத்தினாலும் 8–வது சஞ்சிகையில் சென்னை சபையின் ரூல்ஸ்களினாலும், 9–வது சஞ்சிகையில் முக்கிய விளம்பரத்தாலும், 10–11–வது சஞ்சிகையோடு பூர்த்தியாகிறகண்டன நோட்டீஸினாலும் தெரியவருகிறது. ஒன்று இரண்டானால் இரண்டு பலவாகும் மல்லவா ? முதல் சபையினின்றும் பிரிந்துபோன கூட்டத்தார்களின் தலைவரெனச் சொல்லப்படும். பிர்ம்மஸ்ரீ, சோமங்கலம் கந்தஸாமி ஆச்சாரியார் இராமேஸ்வர யாத்திரைக்குப் புறப்பட்டு திரும்புங்காலில், திருக்குடந்தைககனது கிரகத்திற்கு விஜயம் செய்தபோது, சபை ஒன்றாகவே யிருக்கவேணு மென்றதைப் பற்றி நான் வற்புறுத்திச் சொன்னபோது, என்னால் தடையில்லை. காரியதரிசி பிர்ம்மஸ்ரீ, பி. கலியாண சுந்தராச்சாரியாரவர்களிடத்தில் சொல்லுகிறேன் இணக்கப்படாவிட்டால் தாம் பொதுவர யிருந்து வருவதாக தெரிவித்தார். அப்போது ஆக்கோணம், பிரம்மஸ்ரீ, தி. குருசாமி ஆச்சாரியார் அவர்களும் சமீபத்தி லிருந்தனர். இதுவே உண்மை. அவரைக்கேட்டால் உண்மைவிளங்காமற்போகாது. எங்களிருவர்



கள் முன்னிலையிலும் பலகலைகளைக் கற்ற பிர்ம்மஸ்ரீ, கந்தஸாமி ஆச்சாரியாரவர்கள் தம்வாயினால் தெரிவித்ததை, தான் அப்படிச் சொல்லவில்லையென்றும், நான் சொல்வது கற்பனை என்றும் சென்ற 11–வது சஞ்சிகையில் பிரசுரப்படுத்தி யிருப்பது எனக்கு அத்தியந்த ஆச்சாரியத்தையும், துக்கத்தையும் விளைவிக்கிறது. லோகவியவகாரங்களில் சகஜமாகவும், சத்தியமாகவும் பேசும்வார்த்தைகளைக்கூட ரிஜிஸ்டர் செய்யாதவரையில். நம்பப்படமாட்டாதென்ற சட்டம் பிறந்து அதற்காக பிரத்தியேகமான ரிஜிஸ்டராபீஸ் ஏற்படாத குற்றமேயன்றி என்னுடைய தன்று. இவர் தமது கடிதத்தில் சபை ஒன்றே என்கிறார் பூர்வ சபையார் நவீன கூட்டத்தாரின் ஒழுங்கீனங்களைக் கண்டித்து அவர்கள் மூவருக்கும் தனித்தனியே விடுத்த ஆக்ஷேபனை நோட்டீஸை இவரும் பெற்றுக் கொண்டவர் தானே. நெஞ்சார இவர் சபை ஒன்றே எனத்துணிந்து சொன்னதேனோ ? இதுவும் கற்றோர்களாகிய சென்னை வாசிகளிற் சிலர் திருவிளையாடலெனமதித்துச் சொனனதை அபாண்டமாக இல்லையெனமறுக்கும் உத்தமரின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புகிறேன்.

**T. S. பஞ்சநதீஸ்வராச்சாரி.**

***

## மற்றொரு மறுப்பு.

சென்னை விஶ்வகர்ம குலோத்தாரண சபையிலிருந்து சட்டவிரோதமாகப்பிரிந்து போன பிரம்மஸ்ரீ, பி. கல்யாணசுந்தராச்சாரியார் முதலிய மூவர்களுடைய ஒழுங்கீனத்தைபபற்றி பிரம்மஸ்ரீ, சோமங்கலம் கந்தஸாமி ஆசாரியாரிடம் நான் நேரே தெரிவித்தபோது ஷையார் சத்தியமாக என்னிடம் தெரிவித்ததாவது:—“என் பேரில் வருத்தப் படவேண்டாம். எத்தனை சபை ஏற்பட்டாலும் அத்தனை சபைக்கும் சந்தாகாரனாகயிருந்து சந்தாகொடுத்து வருகிறேன். என்னைக் கண்டிக்க வேண்டாம். நான் தாட்சண்ணியத்திற்குடன்பட்டுவிட்டேன்” என்று எம்மிடம் தெரிவித்ததைக் கூட இக்கனவான் மறுப்பராகில் உலகில் சத்தியம் தலைகாட்டா தென்பது திண்ணம்

**கோ. கன்னியப்ப ஆச்சாரி.**

***

**விஶ்வகர்ம்மாவின் பூர்வ ஆலயம்,**

எல்லோராவென்னும் இவ்வூரில் விஶ்வகர்மாவின் ஆலயங்கள் ஐந்துண்டு. அவைகளெல்லாம் மலையைத்துளைத்து எடுத்த குகைகள். கடைசிகுகையில் விஸ்வகர்மாவின் விக்கிரகம் ஒன்றிருக்கிறது. வருடந்தோறும் பம்பாய் சமஸ்தானத்திலுள்ள எல்லா பாஞ்சால பிராம்மணர்களும் கார்த்திகை மாதம் பௌர்ணமியில் சுமார் 4000பேர்கள் இக்குகையில் கூடுகிறார்கள். சுமார் ரூ. 500வரையில் வசூல்செய்து நம் சுஜாதிகான்பரன்ஸ்கூடி ஜாதி ஆசார விஷயங்களைப்பற்றி பேசுகிறார்கள் அப்போது விஶ்வகர்மமூர்த்திக்கு மூன்றுநாள் அபிஷேக ஆராதனைகள் நடத்துகிறார்கள். இதுவரையில் திராவிடதேசத்தார் இங்கு வந்ததில்லை. சென்றமீ, தென்தேசத்தி லிருந்து கும்பகோணம் ஸ்ரீ கல்யாணசுந்திராச்சாரி இங்கு வந்திருந்து மீட்டிங் ஒன்று நடத்திவிட்டு அவுரங்கபாத்து, நாகப்பூர் முதலிய இடங்களுக்குப் பிரயாணமானார். இவ்வூரில் வேதாதிகாரத்தைப்பற்றி எனக்கும் கங்காபிராமணருக்கும் விவாதம்சேர்ந்தது, அதில் சர்க்கார்மூலமாக எனக்கு வேதாதி கிரியைகளைச் செய்ய உத்திரவு கிடைத்திருக்கிறது. இனி உங்கள் தேசத்திலிருந்து இங்குயாத்திரையாக வருபவர்கள் என்னிடம் வந்தால் அவர்களுக்காக வேண்டியவைகளைச் செய்யசித்தமாயிருக்கிறேன். நான் பூர்வசிற்ப சாஸ்திரிவம்சத்தைச்சேர்ந்தவன். என்னிடத்தில் பல அருமையான சிற்பசாஸ் திரங்க ளிருக்கின்றன. சிலசாஸ்திரங்களை புனா பாலசாஸ்திரியாருக்குக் கொடுத்திருக்கிறேன். இன்னும் நமது குலத்திற்குரிய நூல்கள் என்னிடமிருப்பதைக் கேட்கப்பட்டவருக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்.

**பாவுறவு ரூஞோஜிமயாச்சாரி (நாசிக்)**

## விளம்பரங்கள்.

**அஷ்டேந்திர ஸ்தாபன பிரகடனம்.**

கல்வி, அறிவு, ஒழுக்கம், ஈஸ்வரபக்தி முதலியவைகளாற் சிறப்புற்றோங்கும் கனதனவான்களுக்குச்செய்யும் விக்ஞாபனம்.

நீர்வளம் நிலவளம் முதலிய பல்வளங்களால் சிறப்புற்றிலகும் இரங்கோன் மங்கோமரி வீதியில திருக்கோயில்கொண்டெழுந்தருளிய ஸ்ரீகாமாக்ஷியம்மை ஆலயத்தில், பூலோக கைலாயம் என்னும் சிதம்பர மடாலய ஸ்ரீ கமலமூர்த்தி சுவாமிகள் திருவாக்கின்படி அஷ்டசித்தி என்னும் அணிமா, மஹிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாம்யம், ஈசத்துவம், வசித்துவம் இவைகளைத் தரத்தக்க மகிமையுடைய அஷ்ட எந்திரங்களுடன் தேவி எந்திரமு மமைத்து ஆனந்த வருஷ ஆவணி மீ 19உக்குச்சரியான 1914வருஷ செப்டம்பர்மீ 4உ சுக்ரவாரம் சந்திரோஹணத்தன்று தொடங்கி 45-நாள் வரையில் வேதவிதிப்படி அஷ்டதிக்குகளில் பூஜாராதன நைவேத்தியங்களும், ஹோம ஜெபாதிகளும் நடத்தி ஐப்பசிமீ 2உ ஆதிவாரம் பகல் 12-மணிக்குள் சோடஷோபசாரத்துடன் ஷெ அம்மன்பின் ஸ்தாபிக்கப்படும்.

இதற்கு 11 - வயதுடைய என்புத்திரனும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளிடம் உபதேசம்பெற்றவனும், ஸ்ரீ திரிபுரசுந்தரியுடன் அஷ்டசக்தி யுபாசனை செய்தவனுமான சி. ஷண்முகசுந்தர வடிவேல் என்பவனுந் துணையிருப்பன்.

இதன்றி இந்த 45-நாளைக்குள் தனவான்கள் தத்தம மனோபீஷ்டம் நிறைவேற்றிக்கொள்வதற்கு அரைக்கால்ரூபா எடை தங்கமும், நாமநக்ஷத்திரமும் கொடுப்பார்களாகில் ரக்ஷை தரப்படும்.

அன்புடையோர் இப்பெரிய விஷயத்திற்குத் தங்களாலியன்றவரையில் பொருளுதவியோடு பூஜாகாலங்களில் வந்திருந்து பூர்த்திசெய்யக் கோருகிறேன்.

இங்ஙனம்,
இராமநாதபுரம் ஜில்லா மானாமதுரை தாலுகா,
வெள்ளிக்குரிச்சி,
**ஜோதிஷம். பொ. சோமசுந்தராச்சாரி.**

**நாசிக் க்ஷேத்திரம், ஸ்ரீ பஞ்சவடி தீரத்தில் விஸ்வ பிராம்மண தரும சத்திரம்.**

பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த நாசிக் ஜில்லா, பஞ்சவடி தீரத்தில் சகல ஜாதியருக்கும் அன்னசத்திரங்களும், தர்மசாலைகளும் நிறைந்திருக்க, நமது வம்ஸத்தினர் தங்குவதற்கு சுஜாதி தர்ம சத்திரம் இல்லாதது ஓர் பெருத்த குறையாகவிருக்கிறது. அக்குறையை நிவர்த்திப்பதற்காக பூர்வீக சிற்பாசாரியர்களின் பரம்பரையில் உதித்தவரும், பாஞ்சாலப் பிராம்மணருக்கு குலகுருவும், வைதீக ஆச்சார சீலருமான, பிரம்மஸ்ரீ, வேதமூர்த்தி, பாவுருவுருஜோஜி மயாச்சாரிய சுவாமிகள் மிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றனர். சுமார் ரூபாய் 2000-வரையில் தேவை. இப்புண்ணியசீலர் வெளியூர்களுக்குவந்து பொருள் சேகரிப்பது கூடாமையாயிருப்பதால் இதனைக்கண்ணுறும் குலாபிமானிகள் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி புரிவது நலம்.

**கோலார்-சுப்பிரமணிய ஆச்சாரி,**
(கண்டுகளித்தோன்)
பணம் அனுப்ப விலாசம்.
வேதமூர்த்தி, பாவுருவுருஜோஜி மயாச்சாரி,
கணேஷ்பேட், நாசிக். (சிட்டி)

சந்தாதாரர்களுக்கு

## முக்கிய அறிவிப்பு.

நமது பத்திரிகைக்குச் சேரவேண்டிய சந்தா தொகையைக் கைபெப்பக்காரர்கள் அட்டி செய்யாமல் இந்த செப்டம்பர்மீ 30உக்குள் அனுப்பிவிடல் வேண்டும். இப்பத்திரிகை ஆரம்பமுதல் இன்றுவரையில் மாதம் பன்னிரண்டானபடியால் வருடகணக்குப் பூர்த்திசெய்யவேண்டும். இதுவிஷயத்தில் எமக்குச் சிரமம் வையாமல் சந்தாபாக்கியை அனுப்புவீர்களென்று நம்புகிறோம். அடுத்தமாதம் ஆரம்பமாகும் புதிய வருட சஞ்சிகைக்கு முன்பணம் அனுப்பாதவர்களுக்கு நமது சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பப்படும்.

**கொ. க. ஆச்சாரி.**
"விஸ்வகர்மகுலோபகாரி" புரொப்ரயிட்டர்.



# மஹோபந்நியாஸ சாரசங்கிரகம்.

1914வருஷ ஆகஸ்டுமீ 23உ ஆதிவாரம் மாலை 4 - மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிலட்சுமி நாடக சாலையில் ஷெ சிந்தாதிரிப்பேட்டை விஸ்வகர்ம வேதாத்தியயன பாடசாலைஆதரவின்கீழ் ஓர் மஹோபந்நியாசம் நடந்தேறிற்று.

அன்று துவக்கத்தில் கோமளீஸ்வரன்பேட்டை பிரம்மஸ்ரீ M. நடேசாச்சாரியர் தெய்வவணக்கமாய தேவாரபடனம்செய்தனர். அதன்பிறகு ஸ்ரீ, சி. கி. சுந்தராச்சாரியார் அவர்கள் ஷெ நடேசாச்சாரியாரவர்களை சபாநாயகராக பிரேரேபனைசெய்ய அவரது பிரேரேபனையை சபையார் ஆமோதித்து ஏகோபித்த அங்கிகாரத்தை கரகோஷத்தினால் காட்டினார்கள். அவ்விதம் ஷெ ஆச்சாரியாரவர்கள் அக்கிராசனம் வகித்து அவர் அக்ராசனத்தின் கீழ்.

**பிரம்மஸ்ரீ-ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரவர்கள்செய்த உபந்நியாசத்தின் சங்கிரகம்,**

**அத்தியயன பாடசாலைகளின் அவசியம்.**

உலகத்தோற்றத்தில் ஓம் என்கிற பிரணவம் நாதஸ்வரூபமாயிருந்தது. பிறகு சகளீகரித்து ஐந்துமுக அயவிராட் ஸ்வரூபமாயிற்று. அந்த விராட் ஸ்வரூபம் பரம ஹம்சபரிவ்ராஜகத்துவம். அவ்வைந்து முகங்களிலிருந்து ஐந்து வேதங்கள் தோன்றின. அவை ருக், யஜுர், சாமம், அதர்வணம், பிரணவம் என்பன. இவ்வைந்து வேதத்தையும் பரிபாலிப்பதற்கு ஐந்து மனுக்கள் தோன்றினார்கள். அவர்கள் மனு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ எனப்பெயரியவர். அவர்கள் லோகத்திற்குகாரண கர்த்தர்கள். பஞ்ச கிருத்தியம் செய்யத்தகுந்தவர்கள். அவர்களுக்குத்தான் வேதாதிகாரம். அவர்களின்று உலகம் தோன்றியபடியால் அவர்கள் சந்ததியார் எல்லாரும் வேதத்தை ஓதத்தகுந்தவர்கள். வேதம் ஓதுவதால்தான் பிராமணனாவன். வேதம் ஓதாதவன் பிராமணனாக மாட்டான். ஜாதியினால் மட்டுமே பிராமணனாதல் கடினம். வேதம் ஓதாமல் பிராமணன் பிள்ளை பிராமணனாயிருத்தல் இயலாது. இஃது "வேதபாடந் துவிப்ராணாம்" என்கிற வாக்கியத்தினால் சித்தாந்தப் படுத்தத்தக்கது. விராட் ஸ்வரூபம் முதலில் சூக்ஷ்ம பூதமாயிருந்தது. பிறகு ஸ்தூல பூதமாயிற்று. பூதம் ஸ்தூல சூக்ஷ்ம காரணமாயிருக்கிறது. பிரம மானது சத்தாகவும், சித்தாகவும், இருந்தது. சத்தும், சித்தும் ஆகாசத்தில் நிறைந்திருக்கிறது. இவ்வாகாசத்திற்கு ஓரிடமில்லை. இவ்வாகாசத்தில் வாயு உண்டாயிற்று. அவ்வாயுவில் அக்னி உண்டாயிற்று. அக்னியில் ஜலம் உண்டாயிற்று. ஜலத்தில் பிருதிவி உண்டாயிற்று. பிருதிவியில் புல், பூண்டு, மரம் முதலிய ஔஷதிகள் உண்டாயின. அவைகளை பக்ஷிப்பதற்கு விலங்குகள், பறவைகள், மனுஷ்யர்கள் தோன்றினார்கள். மானிடராகிய ஆன்மாக்கள் கிருத திரேதாயுக, துவாபர யுகங்களில் பிரமத்தை நேராக கண்டானந்தத்தி லழுந்தியிருந்தனர். கலியுகத்தில் "அகம் பிரம்மம்" "நாஸ்தாஸ் பிரம்மம்" என்று சொல்ல முடியாது. கலியுகத்தில் ஆன்மாக்கள் சம்சாரம் என்கிற சர்ப்பத்தினால் தீண்டப்பட்டு அக்ஞானிகளாயிருக்கிறார்கள். அதற்கு பரிகாரம் என்னவென்றால் பரம சிவனிடத்தில் பக்தி செய்வது தான்.

" சம்சார சர்ப்பதஷ்டானாம்
ஜந்தூனாம் அவிவேகினாம்,
சந்த்ர சேகர பாதாப்ஜம்
ஸ்மரணம் பரமௌஷதம்."

தேவபஜனை ஆன்மரக்ஷணார்த்தத்திற்கு இன்றியமையாதது. வேதம் ஓதல், இதிகாசபுராணபடனம், சிரவணம் இவைகளெல்லாம் தேவபஜனைக்கு உரியன. அன்புடன் ஒவ்வொருவரும் வேதம் அத்தியயனம் செய்யவேண்டும். வேதாந்தங்களாகிய தர்க்கம், வியாகரணம், மீமாம்சம் ஆகியவற்றை வாசிப்பது வேதத்தை

நன்குணர்தற் பொருட்டேயாம். ஆகையால் பாஷா கல்வியும் வைதிகக் கல்விக்காகவே கற்கிறோம். கல்வியின் பயன், ஈஸ்வரனுடைய குணாதிவைபவங்களை உணர்ந்து, அவனது சரணங்களில் பக்திசெய்து, ஆன்ம ரக்ஷகமாகிய மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவதே. அப்படிப்பட்ட வைதிகக் கல்வியை போஜன் முதலிய ராஜாக்கள் பண்டிதர்களுக்கு பரிசு கொடுத்து விருத்தி செய்து கொண்டிருந்தனர். இப்போது ஆத்மார்த்தமாகிய வைதிககல்வியானது அவ்வளவு ஆதரிக்கப்படவில்லை. ஆகையினால் வைதிக பாடசாலைகளை ஸ்தாபித்து பரிபாலிக்கவேண்டுவது ஆவஸ்யகம்.

## கரகோஷம்.

## வேதாந்த தர்க்க போதகாசிரியராகிய ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் செய்த உபந்நியாசத்தின் சங்கிரகம்.

## ஒற்றுமை.

சுகமடைவதற்கு முக்கியமான காரணம் ஒற்றுமை. 'எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்' என்பது ஓர் சத்தியவாசகம். ஐரோப்பா கண்டத்தில் ஐந்து பேரரசர்கள். அவர்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்வதற்கு முன்னர் சுகமாயிருந்தனர். இப்போது ஒற்றுமையின்றி சண்டை செய்கின்றனர். அதனால் விலைவாசி அதிகமாகிறது. கஷ்டத்தையும், நஷ்டத்தையும் உண்டு பண்ணுகிறது. ஒற்றுமைக்கு நமது கைவிரல்களே தக்க உவமானமாக இருக்கின்றன. அவைகள் ஒன்று சேர்ந்தால் தான் வேலை நடக்கும். முரண்பட்டிருந்தால் ஒரு காரியமும் நடவாது ஓர் காலத்தில் விரல்கள் பிணங்கிக்கொண்டன தமக்குள் யார் பெரியவர் என்பதுதான் விவாதகாரணம். சுவாமியை அஞ்சலிக்கும்போது சுண்டு விரல் முதலிலிருத்தலால் நான் தான் பெரியவன் என்றது. அதற்கடுத்த விரல் நான் மோதிரத்தை அணிந்து கொள்கிறேன்; சுபாசுபங்களில் பவித்திரத்தை அணிகிறேன்; கலியாண பெண்ணுக்கு அக்ஷதை இடுகிறேன்; ஆகையால் நான் தான் பெரியவன் என்றது. தர்ச்சனி விரல் நான் தர்ச்சனியை அணிகிறேன். அவன், இவன், உவன் என்று சுட்டிக்காட்டுகிறேன். ஆகையால் நான் தான் பெரியவன் என்றது. கட்டைவிரலாகிய அங்குஷ்ட விரல் என் உதவியின்றி ஒரு காரியமும் இயலாது; ஆகையால் நான் தான் பெரியவன் என்றது. மத்திய விரல் எல்லாரைக்காட்டிலும் நான் தான் உயர்ந்து நீண்டு இருக்கிறேன்; ஆகையால் நான் தான் பெரியவன் என்றது. இவ்விவாதத்தால் ஒரு காரியமும் நடவாமற்போயிற்று. ஆகையால் ஒற்றுமை, ஐக்கியம் இருந்தால் தான் எடுத்தகாரியங்கள் சித்தியாகி சுகமும் உண்டாகும்.

விஸ்வகர்மர்களே! நீங்கள் விவேகிகள். உங்களுக்கு வேதாதிகாரமிருக்கிறது. ஓர் காலத்தில் மகோன்னத நிலையை அடைந்திருந்தீர்கள். இப்போது கல்வி யின்மையால் தாழ்ந்த நிலைமையை அடைந்திருக்கிறீர்கள். உயர்வை அடையும் பொருட்டு நீங்கள் குலோத்தாரண பிரயத்தனங்களில் உழைக்கிறீர்கள். உங்கள் காரியம் மெச்சத்தகுந்ததே. ஆனால் உங்களில் இருகட்சியா யிருக்கிறீர்கள். அபிப்பிராயத்தில் இரண்டு பட்டிருக்கிறீர்கள். வைதிகம் வேண்டுமா, லௌகியம் வேண்டுமா என்கிற விஷயத்தில் இருமன பட்டிருக்கிறீர்கள். இவ்விஷயத்தில் நீங்கள் முரண்பட்ட இரட்டை எருதுகள் பூட்டிய வண்டியை ஒத்திருக்கிறீர்கள். ஒரு மாடு வைதிகத்தை வெறுத்து மண்டியிட்டுச் சண்டி தொள்கிறது. மற்றொன்று வைதிகக் கடலை நீந்த எண்ணங் கொள்கிறது.

இந்த ஸ்திதியில் குலோத்தாரணவண்டியின் கதி என்னவாகும்? அபிப்பிராய மாறுபாட்டால் பிரயத்தன மாறுபாடுகள் நிகழ்ந்தால் நீங்கள் உங்கள் குலத்தாரை உள்ள நிலைமைக்கு கொண்டுசெல்ல அசக்தராவீர்கள். ஆகையால் ஒருமைப்பட்ட அபிப்பிராயத்தினை யுடையவர்களாய் லௌகிகக் கல்வியையும், வைதிகக் கல்வியையும் ஒன்று சேர விருத்தி செய்து வந்தால் இகபரசாதனங்கள் கைவல்யமாகி உன்னத நிலையை நிச்சயமாய் அடைவீர்கள்.



## மற்றொரு உதாரணம்.

பூர்வத்தில் சக்தியும், சிவமும் தனித்திருந்தன. பிருங்கி ரிஷியானவர் சிவத்தை மாத்திரம் வலம் வந்து வழிபாடுசெய்தனர். சக்தியை பர்வதராஜ குமாரிதானே என்று அசட்டைசெய்து இறுமாந்திருந்தனர். சக்தியை வணங்காத தோஷத்தால் சக்திமயமாகிய தசைகள் அந்த ரிஷியின் தேகத்திலிருந்து நீங்கின. அவர் சிவ அம்ஸமான அஸ்திமயமானார். அதனால் அவருக்கு பிருங்கிமகாரிஷிஎன்று பெயர் வந்தது. பார்வதி தன்குறை நீங்க தபம்செய்து காஞ்சீ க்ஷேத்திரத்தில் பரமசிவனது வாமபாகமடைந்ததினால் பிருங்கி ரிஷியானவர் சிவத்தையும், சக்தியையும் வலம்வந்து வழிபட தலைப்பட்டார். அப்போது பார்வதி தேவி மனங்களித்தனள். சக்திகளிக்கவே சிவமும் களித்தது. சிவமும் சக்தியும் தனித்தனியா யிருந்தபோது அத்தகையசந்தோஷமுண்டாகவில்லை. ஆகையால் ஒற்றுமை எப்பொழுதும் சுகத்தைக் கொடுத்து ஆனந்தம் விளைவிக்கும்.

## மற்றொரு உதாரணம்.

அயோத்தியாவில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றில் திடீரென வெள்ளம் பெருகியது. குரங்குகள் அக்கரைக்கு தங்கள் குட்டிகளுடன் செல்லவேண்டியிருந்தன. அதற்காக ஒரு கரையில் ஆகாயத்தை அளாவிநின்ற ஓர் மரக்கிளையில் ஓர் குரங்கு முதலில் தொங்கிற்று. மற்றொரு குரங்கு அதன் காலைப்பிடித்துக்கொண்டு தொங்கிற்று. அப்படியே மற்ற குரங்குகள் ஒன்றின் காலை ஒன்று பற்றித் தொங்கின. அம்மாதிரியாகவே அக்கரையிலிருந்த மரத்திலும் ஒரு குரங்கு கூட்டம் தொங்கிநின்றன. இவ்விரண்டு குரங்குமாலைகளும் ஊசலாடி கடைசியாகத் தொங்கிய குரங்குகள் இரண்டும் ஒன்றை ஒன்று பற்றிக்கொண்டன: ஆகவே அஃது குரங்குகள் தோரணம் போலானது. அதன் வழியேகுரங்கு குட்டிகளெல்லாம் அக்கரை சேர்ந்தன. குரங்குகளிடத்தில் ஒற்றுமை யிருந்தபடியால் குட்டிகளை அக்கரை சேர்க்கும் எண்ணம் பலிதமாயிற்று. அதுபோலவே விஶ்வ கர்மாக்களாகிய நீங்கள் ஒற்றுமைப் பட்டிருந்தால் உங்கள் குலத்தவரை வைதிகத்திலும், லௌகிகத்திலும் உன்னத நிலைமையை அடையச்செய்வீர்கள். ஒற்றுமையில்லாவிட்டால் உங்கள் குலோத்தாரண பிரயத்தனங்களுக்குப் பல இடையூறுகள் உண்டாகும். சாபல்யமான புத்தியை யுடைய குரங்குகளிடத்தில் கூட ஒற்றுமை காணப்பட்டது. ஸ்திரபுத்தியை யுடையமாந்தர்களிடத்தில் ஒற்றுமை உண்டாவது அரியதோர் காரிய மல்ல. ஒற்றுமையின் உன்னதத்தை விளக்கற் பொருட்டே தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் 15-அதிகாரம் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

## இன்னொரு உதாரணம்.

மான்கள் எப்போதும் கூட்டமாய்த் தான் செல்லும். அவைகள் தனித்துச் செல்லா. ஒன்றோடொன்று சண்டைசெய்யா. ஒற்றுமையால் மான்கூட்டங்கள் விருத்தியாகின்றன. அவைகள் நசிப்பதில்லை. அகாரணமாககர்வித்து புலி, சிங்கம் தங்கள் பலத்தினால் தனித்தனியாய் ஒற்றுமையின்றித் திரிவதால் அவைகளின் தொகை விருத்தியாகாமல் சீக்கிரத்தில் நசித்து விடுகின்றன. ஆகையால் கல்வி பலங்கொண்ட ஒரு வகுப்பாராயினும் ஒற்றுமையை நாடாவிடில் நசிப்பது நிச்சயம். ஆகையால் விருத்தியை நாடுகிறவர்கள் எவரும் ஒற்றுமையை முதலில் நாடவேண்டும். இராஜன் பிரஜைகளிடத்தில் ஒற்றுமையா யில்லா விட்டால் பரிபாலனம் செவ்வனே நடவாது.

## ஒற்றுமைக்கு மற்றுமோருபமானம்.

யானைகளுக் குள்ளே ஒற்றுமை என்பதை நன்றாய்க் காணலாம். ஒரு பெரியயானை கையில் தடியைக்கொண்டு தட்டிக்கொண்டேபோகும். அதன்பின் வலியுள்ள யானைகள் கூட்டமாய்ச் செல்லும். குட்டிகள் அதன்பின் செல்லும். கிழயானைகள் கடைசியில் வரும். முன்சென்ற யானை படுகுழியுள்ள இடத்தைக் கண்டு நின்று விடும்,. உடனே பின்வரும் யானைக்கூட்டம் முழுவதும் அசைவற்று நின்றுவிடும். ஒற்றுமையால் படுகுழியில் விழுவ

தினின்றும் அந்த யானைகள் தப்புகின்றன. ஆகையால் ஒற்றுமையால் ஓர் கூட்டத்தார் தங்களுக்குநேரிடும்கெடுதிகளிலிருந்து தப்பலாம்.

### இன்னுமோர் உதாரணம்.

ஒரு ஊரில் ஓர் தெருவில் ஒரு வீட்டில் தீப்பிடித்தால் மற்றவர்கள் அவ்வீட்டுக் காரனுக்கு விரோதமாயிருப்பினும் தீப்பரவாதபடி தணிக்கப்பார்ப்பர். அப்படி செய்வதால் அவ்வீட்டுக்காரருக்கு உதவி புரிவதோடும் தங்கள் வீடுகளையும் காத்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால் பகைமைப் பாராட்டாமல் ஒற்றுமையாய் ஒருவர்க்கொருவர் உதவி புரிந்தால் அதனால்பலன் உண்டாகும். ஓர் இனத்தார் இரண்டுபட்டிருந்தால் மத்தியஸ்தர்களாய் சிலர் ஏற்பட்டு அவர்களை சமாதானப்படுத்த முயலல் வேண்டும். நெல்லிக்காய் மூட்டையைப்போல் இருக்கலாகாது. பாண்டவர்கள் காட்டில் அக்ஞாதவாசம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த காட்டிலுள்ள நீர் ஓடையில் தெய்வ லோகத்திலிருந்து சித்திராங்கதன்என்பவன் அப்ஸர ஸ்ரீகளோடு ஜலக்கிரீடை புரிந்திருந்தனன். திரியோதனன் உத்திரவன்னியில் விளையாடுவதை கண்டு முனிந்து உசாவினான். சித்திராங்கதனுக்கும் திரியோதனனுக்கும் பெரிய யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் தோல்வியடைந்த துரியோதனனை சித்திராங்கதன் தேர்க்காலில் கட்டி வேகமாய் ஓட்டிக்கொண்டிருந்தான். இதனை கண்ணுற்ற தர்மபுத்திரர் திரியோதனன் விஷயத்தில் இரக்கங் கொண்டவராய் அர்ச்சுனனை அழைத்து அவனை தேர்காலினின்றும் மீட்டு வரும்படி உத்திரவு செய்தார். வீமன் வெகுண்டான். வெகுண்ட தம்பிக்கு சமாதானமாக தர்மபுத்திரர் திரியோதனனும் ஒரு சகோதரன் தானே. பிறரிடத்தில் அகப்படவிடலாமா? நம்மை நாமே கவனிக்கும்போது நாம் 5 பேர் சகோதரர்கள். துரியோதனாதியர் 100பேர்கள். அன்னியர் நம்மை கவனிக்கும்போது நம்மை 105 சகோதரர்களாகவே மதிப்பார்கள் இப்போது உதவி புரியாவிட்டால் பாண்டவர்கையா லாகாதவர்கள் என்பார்கள். ஆகையால் பிறருக்கு இடம் கொடுக்கக்கூடாது; என்று தர்மபுத்திரர் ஹிதோபதேசம் செய்தார். ஒற்றுமை என்பது ஜாதிமதாசாரங்களுக்குப் புறம்பானதல்ல. சண்டாளர்களில் ஜாதி சண்டாளன் கர்ம சண்டாளன் என்று இருவகையுண்டு. அவரவர் வர்ணாஸ்ரம தர்மத்தை நடத்தி ஒற்றுமைப் பட்டு வாழ்ந்தால் பரமேஸ்வரனுடைய கருணை இலேசாக அமையும். ஒழுக்கமுடையாரை மற்ற ஜாதியார் நேசிப்பார்கள். ஒழுக்கீனமுள்ளவர்களை யாவரும் வெறுப்பார்கள். எழு தலைமுறைவைதிக ஒழுக்கத்தை கைப்பற்றியவர் பிராமணர் ஆவர் என்பது சுருதி வாக்கியம். எழு தலைமுறை அனாசாரத்தில் உழல்பவர் சண்டாளர்கள் ஆவர். ஆகையால் வைதிகத்தை கைவிடலாகாது. ஒழுக்கத்தால் தான் குலம், கோத்ரம் உண்டாகிறது. விஸ்வாமித்ரர் ஒழுக்கத்தால் தான் பிராமணரானார், இப்படியே எனைய ரிஷிகளும் ஆனார்கள். இதனால்தான் நதி மூலம் ரிஷி மூலம் விசாரிக்கக் கூடாதென்பர். பூர்வத்தில் ஸ்நான ஜபதபம் செய்தவர் பிரம வர்க்கமானார்கள். திடகாத்ரராய் போர் செய்தவர் நாட்டைக்கைப்பற்றி அரசர் ஆனார்கள். திரவியத்தில் அபேக்ஷை வைத்தவர்களாய் வர்த்தகம் செய்தவர் வைசியரானார்கள். மற்றவர்கள் சூத்திரர் ஆனார்கள். அவர்கள் ஆடுமாடு மேய்த்தார்கள். விவசாயத் தொழிலை மேற்கொண்டார்கள். சிருஷ்டியில் வித்தியாசம் ஒன்றுமில்லை. எல்லாரும் பிரமனுடைய புத்திரர்கள் தான். ஒருவருக்கொருவர் உபயோகமுள்ளவர்களாய் பல ஒழுக்கத்தை மேற்கொண்டார்கள். வேலைப்பாகு பாட்டின் காரணமாகவும் உதவிபாகு பாட்டின் காரணமாகவும் ஜாதிகள்வர்ணாஸ்ரமங்கள் உண்டாயினவேதவிர வேறல்ல. ஆகையால் அவரவர்கள் வர்ணாஸ்ரம தர்மத்தை சரிவரச் செய்தால் விறகுகட்டு பலமாயிருத்தல்போல ஜனக்கட்டு பணக்கட்டு உள்ளவர்களாயும் செல்வாக் குள்ளவர்களாயும் இருக்கலாம். ஒற்றுமை இருந்தால் பணம் தானாய்வரும். செல்வாக்குவரும் உயர்ந்த நிலைமை உண்டாகும். ஆடவர் ஒழுக்கவகை மூன்று;

(1) இகலோகம் :— குடும்ப நல்வாழ்வுக்கு வேண்டிய செயல்களில் ஊக்கமுடையதாய ஒழுக்கம். இஃது லௌகிகம்.

(2) பரலோகம் :— ஆன்மார்த்தத்திற்குரிய ஒழுக்கங்கள். ஸ்தான ஜபதபங்கள் வேதம் ஓதல், புராண இதிகாச படனம் அல்லது சிரவணம்செய்தல், வேதாகமங்களாகிய தர்க்க வியாகரண மீமாம்சாதி நூல்களை ஆராய்தல், தெய்வ வழி பாடு, தர்மகைங்கரியம் செய்தல் தேவபஜனை செய்தல் முதலியவை வைதிகம்.

(3) மோக்ஷம் :—சிரவணம் செய்ததையோ அல்லது படனம் செய்த ஆன்மார்த்தவிஷயங்களையோமனனம்செய்தல், தியானம் செய்தல் சமாதி அல்லது நிஷ்டையிலிருத்தல். இஃதே மோக்ஷசாதன மெனப்படும்.

தாமே கடவுள் ஆகவேண்டும் என்று ஒழுகும் மார்க்கம் அத்வைதம். கடவுளைப்போல் ஆகவேண்டு மென்று ஒழுகும் மார்க்கம் துவைதம். மோக்ஷம் என்பது ஐக்கிய சொரூபம், துக்கமின்மை. சுகானந்தம். அதனை அடையத்தான் சாதனங்கள் ஏற்பட்டுள்ளன. ஒற்றுமை சித்திக்குக் காரணம். வேற்றுமை சித்திக்கு விரோதி. இந்துக்கள் எல்லாம்சகோதரர்கள்என்பது பொது ஐக்கிய பாவம் சிறப்பு ஐக்கியம் அந்தந்த ஜாதியின் மேன்மைக்குரியது. பொது ஐக்கியம் தேசத்தின் மேன்மைக்குரியது ஐக்கியமுடையவர்கள் முழுத் தேங்காய்க்குச் சமானமானவர்கள். ஐக்கிய மில்லாதவர்கள் உடையுண்ட தேங்காய்க்கு சமானமானவர்கள். விஸ்வகர்மாக்களே! நீங்கள் என்ன படிப்பில் குறைந்தவர்களா? உங்களில் ஆங்கிலத்தில் தேர்ந்தவர்க ளில்லையா? அவர்களிடத்தும் ஒழுங்கீனமும் ஒற்றுமை குறைவும் இருப்பதென்றால் உங்கள் ஜாதிக்கு குறைவல்லவா? நீங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு கான்பரன்ஸ் நடத்தலாமே. ஒற்றுமையின்றி நடத்தும் கான்பரன்ஸ் சூரத்தில் நடந்த காங்கிரஸ்போல் முடியும். ஐக்கியத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டிய சாதனங்களெல்லாம் இருக்கின்றன. நீங்கள் வேறுபட்டு இருப்பது எதற்கோ? ஆகையால் குலோத்தாரண பிரயத்தனங்களில் வேறுபாடாய. அபிப்பிராயத்தையுடையராயிருத்தலை ஒழிந்து ஐக்கியமுள்ளவர்களாய் லௌகீகத்திலும் வைதீகத்திலும் உயர்ந்த பதவியை அடையுமாறு எல்லாம் வல்ல கடவுளை பிரார்த்திக்கிறேன்.

நீண்ட கரகோஷம்.

### பிறகு என். ஸி. கன்னாபிரான் முதலியார் அவர்கள் உபந்நியாசத்தின் சங்கிரகம்,

### வைதீகம். (1)

மானிடராய்ப் பிறந்தவர்கள் நான்கு புருஷார்த்தத்தை அடையவேண்டியது. அவை தர்மம், அர்த்தம் காமியம், மோக்ஷம் என்பன. தர்மம் லௌகீக தர்மம் வைதீக தர்மம் என இருவகைத்து. காமியம் என்பது விருப்பம் இச்சை. தர்மமும் இச்சையும் நிறைவேற அர்த்தம் வேண்டும். இவை மூன்றும் சித்தியானபோது மோக்ஷம் சித்தியானதாகும். சுத்தமான ஆத்மா அசுத்தமான இச்சையைக் கொள்ளாது. ஆன்ம ரக்ஷகத்திற்குரிய இச்சைதான் மேலாக ஆன்றோரால் மதிக்கப்படும். அவ்விச்சை அரிதாகிய இப்பிறவியிலேயே நிறைவேற்றப்படுதற்குரிய தாகலின் எனைய லௌகீக சாதனங்களை அடையவேண்டும். காமியமும் ஆன்மார்த்த காமியத்திற்கு அநுகூலமாயிருக்கத் தகுந்தது. லௌகீகத்திற்கும் வைதீகத்திற்கும் ஒரு விரோதமுமில்லை. வைதீகத்தை அடைதற்பொருட்டே லௌகீக உயர்வும் சாதனங்களும் வேண்டும். கள் வெறி கொண்டவன்போல் லௌகீகந்தான் வேண்டும், வைதீகம் வேண்டற்பாலதன்று; முக்கியமல்ல; அனுவசியகம்; என்று வாதமிடுவதில் பயன் ஒன்றுமில்லை. யுக்தி பக்தி சிரத்தை மனிதர்களுக்கு முக்கியமானவை. அவை வைதீகத்தையும் லௌகீகத்தையும் சார்ந்துள்ளன சோம்பலுள்ளவர்கள் எதையும் நிராகரிப்பார்கள். மானிடராய்ப் பிறந்தவர்கள் லௌகீகர்களாகவும், வைதீகர்களாகவும் இருக்கவேண்டும். எப்படி லௌகீக தர்மங்களை சரிவரச் செய்யா தொழியின் கவர்ன்மெண்டார்

சட்டத்துக்கு விரோதிகளாய் தண்டனைக்கு உள்ளாகிறோமோ அப்படியே வைதிக தர்மங்களை சரிவர செய்யாதொழியின் கடவுள் ஆக்ஞைக்கு விரோதிகளாய் அவர் தண்டனைக்கு உள்ளாகவேண்டும். இராஜதண்டனை சுவல்ப காலத்திற்குரியது. அஃது மாமிச உடலுக்குரியது. தேவதண்டனை ஆன்மாவைப்பற்றியதாகலின் நீடித்த கால அளவைக் குரியது. ரக்ஷகரது விரோதம் இராஜ விரோதத்தைக் காட்டிலும் கொடியது. வைதிகம் பிரமாத விஷயமல்ல. சாதகத்திற் குரியதே! பூர்வத்தில் நான்கு ஜாதிகள் உண்டானதும்,பழக்கத்தினாலும்,செயலினாலுமே. ஒருவனுக்கு நான்கு குமாரர்கள் இருந்தால், (1) ஒருவன் நிஷ்டையிலிருந்து பிராமணனானான்; (2) ஒருவன் வில்வித்தை, வாள்வித்தை, அஸ்வரூடம், கஜாரூடம், ரதாரூடம்கற்றுக்ஷத்திரியனானான்; (3)மற்றொருவன் ஊதியத்தைக்கருதி பண்டமாற்றல்செய்துவைஸ்யனானான். இதுதான் சதுர்வருண வரலாறு. வேதம் சிலர்தான் படிக்க வேண்டுமென்பது விதிக்கப்படவில்லை. உலகசிருஷ்டியில்வடதிருவம்தென்திருவம் உண்டாக்கப்பட்டது. வடதிருவத்திலிருந்து 'ஓம்' என்கிற சத்தம்உச்சரிக்கப்பட்டது. வடக்கிலுள்ளோர்கேட்டு அச்சப்தத்தை பிரித்தார்கள். 'ஓம்' என்பது ஒ × உ × ம் என்று ஆயிற்று. அதுவே மந்திரமாயிற்று அதாவது ருக். பிறகுயாகம் செய்தார்கள். அம்மந்திரத்திற்கு அப்போது யஜுர்யென்று பெயர்வந்தது. பிறகு அம்மந்திரங்களை விசாரணைசெய்தார்கள். பிறகு கானம்செய்தார்கள். அப்போது அம்மந்திரம் சாமம் என்று கூறப்பட்டது 'ஓம்தத்சத்' அது இது என்கிற வாக்கியம் உண்டாயிற்று.

மந்திரபாகம் அதற்வணமாகும். ஆக 'ஓம்' என்கிற பிரணவமானது ருக் யஜுர் சாம அதர்வண என்று நான்கு வேதங்களாயிற்று இது வேதரகசியம். உண்மை உரைக்கின்வேதம் மூன்றுதான். வேதாத்தியயனம் மூன்றுபாகமாகும் (1) சுவர உச்சாரணம் (2) சுவரபேதம் (3) அர்த்தம். சிலர் வேதத்தை அத்தியயனம் செய்தார்கள்.சிலர்கேட்டார்கள். பின்சொல்லப்பட்டவர்கள் விரும்பினால் அப்யசிக்கலாம். ஒருவர் அத்தியயனம்செய்யலாம் ஒருவர் அத்தியயனம் செய்யலாகாது என்று சொல்வதற்குக் கூடாது.எல்லாரும் அப்பியசிக்கலாம். இப்போது இங்கிலாந்து ஜர்மனி தேசங்களில் வேத அத்தியயனம் செய்து பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். தொழில் மார்க்கத்தினாலேயே கோவைசியர், பூவைசியர், கம்மாளர், ஸ்தபதி,ஸ்தாபகன் என்று பெயர் வழங்குகிறது. சில்பமறிந்தவன் ஸ்தபதி, பிரதிஷ்டை செய்கிறவன் ஸ்தாபகன், இவர்கள் சில்பத்தைஅத்தியயனம் செய்தே தீரவேண்டும் சில்பமும்வேதாங்கமே. அத்தியயனம் சரீர ஆரோக்கியத்தை உண்டாக்கும்; புத்தியைவிசாலமாக்கும்.கவனசக்தியை விருத்திசெய்யும். மற்ற பாஷையைக் கற்கத் துணைநிற்கும். மற்ற பாஷைகளை எளிதில் கற்க ஹேதுவாகும். இன்னும் அநந்தமான குணங்கள் வேதாத்தியயனத்திலிருந்து விளையாநிற்கும்.

இப்போது உங்களுக்கு வைதிகமும் வேதாத்தியயனமும் இன்றியமையாததுஎன்று ஒருவாறு விளக்குவேன்.

(1) உலோக விக்ரகவார்ப்பு சிலாவிக்ரக நிர்மாணம். சிற்பசாஸ்திரமூலமாகஉலோகத்தின் குணதிசயங்களைப்பற்றியும், சிலைகளின் குணதிசயங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். துவக்கும் காலநிர்ணயத்திற்கு வேண்டிய ஜோதிஷம் தெரியவேண்டும். விக்கிரக பிரமாணத்திற்கு தேவாங்குல கணக்குகள் தெரியவேண்டும் இவைகளெல்லாம் வேதாம்சமும் தேவாம்சமுமான சிற்பசாஸ்திரத்தில்கிடைக்கின்றன. அந்தந்த காலத்தில் உச்சரிக்க வேண்டிய மந்திரங்கள் செய்யவேண்டிய கிரியைகள் ஆகிய இவையெல்லாம் வைதிகத்தைச் சாரும். உலோகவிக்கிரக வார்ப்போ அல்லது சிலா விக்கிரக நிர்மாணமோ முடிவுபெற்ற பிறகு செய்யவேண்டிய அபிஷேககரிக்கோலம். பிரதிஷ்டாஸ்தாபனம் இவைகளுக்குவேண்டிய மந்திரங்கள் கிரியைகள் ஆகிய இவையனைத்தும் வைதீகத்தைச் சார்ந்தது. ஆலய நிர்மாணம், மனை ஆயாதிகணித்தல் இவைகளில் எவ்வளவோ கணக்குகள் அளவுகள் உள. இவையெல்லாம் சிற்பசாஸ்திரத்தில் கிடைக்கின்றன

வீட்டுச்சடங்குகளில் எவ்வளவோ மந்தரபடனம் வேண்டியிருக்கிறது. நீங்கள் தரித்துக் கொள்ளும் பூணூல் இராட்டினத்தில் திரிக்கப்படாமல் ஸ்நானஞ்செய்து நித்யகர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலம் அறிந்து பஞ்சை தேர்ந்தெடுத்து வேதமந்திரத்தை உச்சரித்துக்கொண்டே நூற்கவேண்டும். புக்தமெடுத்துக் கொள்வதற்கு முன்னமே நூற்கவேண்டும். புக்தத்திற்கு பிற்பாடு தாம்பூலம் தரித்துக்கொண்டும் அல்லது தந்ததாவள்யத்திற்கு முந்தியும் இராக்காலத்திலும் நூற்கலாகாது இப்படியிருப்பதுதான் வைதீகம் மாஞ்செஸ்டர் நூலைப்பூணூலாகக்கரிப்பது தான் லௌகீகம். இப்போது உள்ள வைதிக நிலையே போதும். இனி லௌகிக உயர்வுதான் வேண்டும். அதனால் பயனுண்டாகாது என்று வாய்பறை அடித்துக்கொண்டு நான் பிரமகுலத்தினன் 'ஆச்சாரி' பட்டத்திற்குறியவன் ஐயோ! எங்கள் பட்டத்தை பிறர்பிடிங்கிக்கொண்டார்களே என்று வீணே அடிக்கடிக்கிச் சொல்லிக்கொள்வதில் பிரயோஜனமில்லை. இந்துக்கள் வாழ்க்கையே வைதிக வாழ்க்கை. விஶ்வகர்மாக்களாகிய உங்களால் ஏனைய ஜாதியர்களுக்கு செய்து கொடுக்கப்படும் மாங்கலியம் செய்வதில் எவ்வளவு வைதிகமந்திர உச்சாரணம் செய்யவேண்டும். எவ்வளவு தேவதா ஸ்தோத்திரம் செய்யவேண்டும். முதலில் ஆரம்பகாலத்திலேயே விக்னேஸ்வரபூஜை செய்தல்லவா பொன்னை உருக்கவேண்டும். தம்பதிகளின் க்ஷேமத்தைக் கோரி எவ்வளவு தேவதாப் பிரார்த்தனை செய்யவேண்டும். ஆகையால் விஶ்வகுலத்தவரே! நீங்கள் வைதிகத்தை அனுசரிக்க வேண்டும். வேதாத்தியயனம்செய்யவேண்டும். உங்களால் இஃது ஏகதேசத்தில் இயலாவிட்டால் பொதுவில் வேத பாடசாலைகளை ஸ்தாபித்து உங்கள் சிறுவர்களுக்காவது இனி வேதாத்தியயனத்தை கற்பியுங்கள். வைதிக ஒழுக்கங்களை காட்டிக்கொடுங்கள். சிற்பசாஸ்திரத்தைச்செய்யுங்கள். இக்காலத்தில் அந்தந்த ஜாதியர்கள் தங்கள் உயர்வைநாடி கான்பரன்ஸ் நடத்துவதுபோல் நீங்களும் நடத்துங்கள். மேன்மையை அடையுங்கள். இவைகளெல்லாம் உங்களால் ஆகக்கூடியதே. நீங்கள் தாரித்திரியர்களல்ல. அறிவீனர்களல்ல. உங்களுக்கு எல்லாசாதனமும் சௌகரியமும் இருந்தும் வீண் விதண்டா வாதத்தில் காலங் கழிக்கிறீர்கள். வைதிகத்தினால் கடவுள் அருள்சுரக்க லௌகிகத்தில் உயரவை அடைவீர்கள் "அவனன்றியோரணுவுமசையாது" ஈஸ்வரன் கிருபையில்லாமல் உங்களுக்கு லௌகிக உயரியநிலைமை உண்டாகமாட்டாது. ஆகையால் வைதிகம்முக்கியமானதே.இதற்குமாறாக பேசுவதும்எழுதுவதும் அறிவீனம்.

இப்பிரசங்கமுடிவில் கரகோஷமும் மிகவும் சரி என்கிற சப்தமும் ஜனசமுகத்தினின்றும் எழுந்தது. அடுத்த உபந்நியாசகர் ஸ்ரீ சென்னகேசவுலு நாயுடு அவர்கள் தம்திரேக அசௌக்கியத்தால் உபந்நியாசிக்ககூடாமையைவெளியிட்டபோது சபையோர் அவரது அமுர்தவாக்கை கேட்பதற்கில்லாமற் போயிற்றே என்று விசனித்தார்கள்.

## ஸ்ரீமத் வித்வான் இராஜகோபால் பிள்ளை அவர்கள் செய்த உபந்நியாசத்தின் சங்கிரகம்.

குல ஜீர்ணோத் தாரணத்திற்கு வைதிகம் அவசியம் வேண்டும் எவ்விதப் பிரயத்தினத்திற்கும் ஏகோபித்த அபிப்பிராயமும், ஐக்கியமும் மின்றேல் அப்பிரயத்தினம் நிஷ்பிரயோசனமாம். இவை எல்லாவற்றிற்கும்கல்வியே ஆதாரம். அக்கல்வி உலகநூல் அறிவுநூல் என இருவகைத்தாம்' லௌகிகம்உலகியலைப்பற்றியது. வைதிகம் ஆத்மார்த்தத்தைப் பற்றியது. மாணிடர்க்கு வைதிகம், லௌகிகமாகிய இரண்டும் இன்றியமையாதன. ஆத்மார்த்தத்தை நோக்க லௌகிகத்தினும்வைதிகமே விசேஷம். நமது சரீரத்தில் அவயவங்கள் தெய்வ வழிபாட்டிற்கென்றே படைக்கப்பட்டுள்ளவே யன்றிவீண்

அலங்காரத்திற்கன்று. சாணம் கோயில் சூழவும், காம் வணங்கவும், காவாழ்த்தவும், செவிகடவுள் புகழைக்கேட்கவும், இவ்விதம் அமைக்கப்பெற்றிருக்கின்றன வென சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால் வைதிகமே முக்கியமானது. வேதாத்தியயனம் செய்தல் இன்றியமையாதது. அது பற்றியே பாடசாலைகள் வேண்டற்பாலன. உங்களுடன் குலோத்தாரண பிரயத்தினம் செய்வதில் முதன்மையில் கூடியிருந்து வைதிகம் வேண்டும் என்றவர் இப்போது வைதிகமும் அக்கல்வியும் அருவசியம் என்பது ஆச்சரியம். வேதாத்தியயனத்தின் பலன் அநந்தம். பக்தி, கடவுள் அருள், அடக்கம் உலகத்தை வசியப்படுத்தல் இன்சொல் முதலிய வெல்லாநலங்களும் இவ்வேதாத்தியயனத்தானே அடையக் கூடும். அன்றியும் எல்லாரையும் சகோதர ஸ்தானமாகப் பாவிக்கச்செய்யும். ஸ்ரீராமபிரான் வைதிகத்தை மேற்கொண்டதனால் விபீஷணாழ்வாரையும், குகனையும், சுக்ரீவனையும் சகோதரராக பாவித்தார் வைதிகம் புரோபகாரச் செயல்களை செய்யத்தூண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் வைதிகத்தைக் கைப்பற்ற வேண்டும். வேதாத்தியயனத்தை அனுஷ்டிக்க வேண்டும் வேதபாடசாலைகளைப் பல இடத்தும் அவசியம் ஏற்படுத்தவேண்டும் காகோவதம்.

### பிறகு ஸ்ரீ கோவிந்தராஜுலு முதலியார் செய்த உபந்நியாசத்தின் சங்கிரகம்.

### சிற்பம்.

மானிடப் பிறவி அரிது. பறவைகள், மிருகங்கள் இவைகளுக்கு உணர்ச்சி மாத்திரம் உண்டு. மானிடரும் ஏனைய செந்துக்களும் புக்தம், புணர்ச்சி, உறக்கம் இவைகளில் ஒத்து இருக்கிறார்கள். அவைகளுக்கு வேண்டிய சாதனங்களைத் தேடிக் கொள்ளுகிறார்கள். பறவைகள் கூடுகட்டி கொள்ளுகின்றன. அவைகளைக் கட்டுவதில் புத்தியை பிரயோகிக்கிறதில்லை. விலங்குகள் குகையும் பறவைகளின் கூடுகளும் காலாகாலமாய்ஒரேமாதிரியாயிருக்கின்றன மானிடர் கைத்தொழிலோ காலதேச வர்த்தமானத்திற்கு தக்கபடி மாறிக்கொண்டே இருக்கின்றன. கட்டிடவேலையில் அத்தகையதொழில் மாறு பாட்டை எழுத்துமூலமாகபதித்திருப்பனவே சிற்பமாகும். முற்காலத்தில் மனப்பாடத்திற்குத்தகுதியாக சிற்பசாஸ்திரங்கள் ஸ்லோகபூர்வமாய் சொல்லப் பட்டிருக்கின்றன. அக்காலத்தில் அச்சில்லை ஆகையால் மனப்பாடம்செய்யத் தகுந்தவிதமாக தொழில் அனுபவங்களையும் நுட்பங்களையும் ஸ்லோகமாகவும் பாட்டாகவும் செய்தார்கள் பிறர் அறியக்கூடாதென்று அப்படிச்செய்ததல்ல. ‘தொட்டுக்காட்டாதவித்தை சுட்டுப்போட்டாலும் தெரியாது. தொழிற்குறிப்பாகிய சிற்பங்களை எவ்வளவு தான்கற்றாலும், சிற்பியருடன் பழகாமல் ஒன்றும் விளங்காது. தொழிலுக்கு கல்வி அவசியம். கல்வி அறிவை கூர்மை யாக்கும். கற்றவர்கள் கல்லாதவர்களைக் காட்டிலும் தொழிலை யுக்தியோசனையாய் நூதனமாகவும், சிறப்பாகவும் செய்வர். எல்லாப் பிரயத்தினங்களுக்கும் தொழில் ஆதாரமாகும். தொழில் இழிவுடையதல்ல! மகாமேன்மையுடையது தொழிலால் தான் ஆங்கிலர், இடாலியர், ஜர்மானியர், ஐப்பானியர் ஏற்றத்தை அடைந்தார்கள். இத்தேசத்தில் சிற்பியர்கள் தொழிலால்தான் அழியாப்புகழை ஆலய நிர்மாணங்களில் விளக்கியிருக்கின்றனர். சிற்பியர்கள்தான் உலகத்திற்கு உண்மையான உபகாரத்தைச் செய்தவர்கள்; செய்யத்தகுந்தவர்கள். ஜீவனமார்க்கமும், பக்தி மார்க்கமும் அவர்களாலே உண்டாகிறது. அவர்கள் வைதிகத்திற்கும், லௌகிகத்திற்கும் உரியவர்கள் ஆகையால் சிற்பாசாரியர்கள் வைதிகமார்க்கத்தையும், லௌகிக மார்க்கத்தையும் அநுஷ்டித்தற்குரியர் சிற்பம் வேதத்தின் ஓர் பகுதி தெய்வத்தன்மையுடையது. ஆகையால் சிற்பியர் வேதாத்தியயனம் செயல்வேண்டும். அவர்களுக்கு வேதபாடசாலைகள் இன்றியமையாதன * * * * * *

என்று அவைகளின் அத்தியாவசியகத்தைப் பற்றி விஸ்தாரமாய்எடுத்துரைத்தனர், (காகோவதம்) சபாநாயகர் தமது உபந்நியாசத்தை சுருக்கிமுடித்தனர். இதற்குள்மணியோ இரவு 9-ஆயிற்று. பிறகு சபையின் காரியதரிசி ஸ்ரீ கொ. கன்னியப்பாச்சாரியார் சபாநாயகருக்கும் உபந்நியாசகர்களுக்கும் சபை கட்டிடத்தலைவற்கும்வந்தனம் அளித்தனர், அதனுடன் மகோபந்நியாச வைபவம் பூர்த்திபெற்றது.

கா. கந்தசாமி ஆச்சாரி.
ரிவினியூ போர்டாபீஸ் கிளார்க்கு.

உ

கணபதி துணை.
குமாரகுருவே நமஃ

# அத்திரி அனுசூயா

## நாடகம்.

**முதல் அங்கம்.** **முதற் காட்சி.**

இடம்:—பூலோகம் அத்திரிமுனிவர் ஆஸ்ரமம். காலம்—காலை.

**நடர்:—அத்திரிமுனிவர் அனுசூயாதேவி.**

அத்திரிமுனிவர்.—அனுசூயா! தவத்திற்கேற்ற பாத்திரங்களைச் சுத்திசெய்தனையா? மாயிலை, தர்ப்பை, சமித்து கொண்டுவந்தார்களா? கந்தம், புஷ்பம், பலம், தாம்பூலம் வாசனைத்திரவியங்கள் முதலியவற்றைச் சேகரித்தாயா? பால், தயிர், கோமயம், கோமூத்ரம் தயாராகியிருக்கின்றனவா? ஸ்நானம் செய்து தயாராயிருக்கின்றனையா?

அனுசூயா.—சுவாமி! சாமான்களெல்லாம் தயாராயிருக்கின்றன. உஷகாலத்திலேயே எழுந்திருந்து பாத்திரங்களையெல்லாம் சுத்திசெய்து ஸ்நானம் செய்து அனுஷ்டானங்களையெல்லாம் முடித்துக்கொண்டேன். தினகால பர்த்தாவின் பாதபூஜைக்கு சுவாமியின் வரவை எதிர்பார்த்துநின்றேன்.

அத்திரிமுனிவர்—சரி. நானும் நதிக்குப்போய் ஸ்நானம் செய்து அனுஷ்டானங்களை செய்துக்கொண்டு வந்துவிட்டேன். பாதபூஜையை செய்துக்கொள். ஈதோ ஆசனத்தில் உட்கார்ந்தேன்.

அனுசூயா—(மந்திரங்கள் சொல்லி பாதபூஜைசெய்து அச்சலத்தைப்ரோக்ஷணம் செய்துக்கொள்ளல். மிகுந்தபாதோதகத்தை ஓர் பாத்திரத்தில் வைத்தல். சோடசோபசாரம்செய்தல். நமஸ்கரித்தல்.)

அத்திரிமுனிவர்.—தீர்க்கசுமங்கலீபவா. தனதான்ய சமர்த்தி அஸ்து. பதிவிரதா சித்தவிர்த்தி அஸ்து.

அனுசூயா—சுவாமி! நாம் இனி புத்ரகாமதபம் செய்யத்தொடங்குவோம்.

அத்திரிமுனிவர்—(விக்நேஸ்வர பூஜைசெய்து, கலசங்கள் நிறுத்தி, தேவதைகளை ஆவாஹனம் செய்தல் ஹோமகுண்டத்தில் அக்கினிவளர்த்தல்.)

அனுசூயா—ஹோமாக்னியில் இரண்டுகையினுலேயும் யாகத்துக்கு நெய்வார்த்தல்.

அத்திரிமுனிவர்—பெண்மணீ! நில்! நில்! அக்னிஹோத்ரம் பூர்த்தியாய்விட்டது. தேவதாபிரார்த்தனை செய்யவேண்டும்.

அனுசூயா—தேவரீர் ஆக்ஞைப்படியே.

அத்திரிமுனிவர்—பெண்மணீ! ஈதோபார். ஆகாயத்தில் நம் தபத்திற்கு இரங்கி ஹரி ஹரபிரம்மாக்கள் ப்ரத்யக்ஷமாயிருக்கிறார்கள். இதுதான்சமயம் அவிர்ப்பாகம் கொடுத்துநமது விண்ணப்பத்தை தெரிவித்துக்கொள்வதற்கு.

அனுசூயா—ஆம்! ஆம்! இதுதான் சமயம்.

அத்திரிமுனிவர்— (அவிர்ப்பாகம்கொடுத்து)

**விருத்தம்.**

கங்கையைத் தலையில்வைத்த கடவுளே போற்றிபோற்றி
சங்குடன் சக்கரத்தைத் தாங்குசத் புருடாபோற்றி
அங்கையில் வேதந்தாங்கு மண்ணலே போற்றிபோற்றி
எங்கள்சிந் தாகுலந்தீர்த் தெமையினி ரக்ஷிப்பீரே.

சிவன்—உங்கள் தவத்தை அங்கீகரித்தேன். என்னவரம்வேண்டும்.

விஷ்ணு—உங்கள் தவத்தை மெச்சினேன். என்னவரம்வேண்டும்.

பிரம்மா—உங்கள் தவத்தை ஏற்றேன். என்னவரம்வேண்டும்.

அத்திரிமுனிவர்
அனுசூயா } (அஞ்சலியஸ்தராய்)

**விருத்தம்.**

புத்திரப் பேறில்லாமற் புன்மைசேர் புலையரானோம்
புத்தெனும் நரகினின்று மீட்கவோர் புத்ரன்வேண்டும்
வித்தக விமலர்போற்றும் விமலமூர்த் திகளேயெங்கள்
சித்தமா ரபீஷ்டந்தன்னைச் சிறக்கவே பூர்த்திசெய்வீர்.

**விருத்தம்.**

சிவன்— அத்திரி ரிஷியேநிற்கோ ரகமசிழ் மகவாநிற்போம்
விஷ்ணு— பத்திசேர் ரிஷியேநிற்கோர் பண்பமை மகவாநிற்போம்
பிரம்மா— வித்தக முனியேநிற்கோர் விரும்பிய மகவாநிற்போம்
மூவரும் ஒருங்கு சேர்ந்து. } சத்தியம் பிசகோமீது சத்தியம் சத்ய மாமே.

(இஃது இயம்பி அந்தர்த்தானமாதல்)

அத்திரிமுனிவர்—(மும்மூர்த்திகளின் அன்பை வியந்து துதித்தல்)

சங்கரா! சம்போ! கங்காதரா! சந்திரசேகரா!

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ அன்புடையமாமனும் மாமியும்நீ
ஒப்புடையமாதரும் ஒண்பொருளும் நீஉயர்குலமும் சுற்றமும் ஒருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ துணையாய் என்னெஞ்சம் துரப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீயே."



**ஸ்லோகம்.**

"ஹேகோபாலக! ஹேக்ருபாஜலநிதே! ஹேஸிந்துகன்யாபதே!
ஏகம்சாந்தக! ஹேகஜேந்த்ரகருணா! பாரீணஹேமாதவா!
ஹேராமானுஜ! ஹேஜகத்ரயகுரோ! ஹேபுண்டரீகாக்ஷமாம்
பாஹீஜனனுத பாலயபரம் ஜானுமிநத்வாம்விநா."

**விருத்தம்.**

சதுர்முகத் தேவேபோற்றி சரஸ்வதி மணாளாபோற்றி
பதுமவாச னத்தாய்ப்போற்றி படைத்தருள் பரமாபோற்றி
விதியினை விதிப்பாய்போற்றி விமலனே போற்றிநாயேன்
கதியினுக் கன்புகூர்ந்த கருணையங் கடலேபோற்றி.

முதல் அங்கம்.
முதற்காட்சி முற்றிற்று.

---

**முதல் அங்கம். இரண்டாம் காட்சி.**

இடம்:—அமராவதி. காலம்—பகல்.

**நடர்:—இந்திராணி - பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி.**

{ இந்தராணி, பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி இவர்களுக்கு ஆலயம் நிர்மாணஞ்செய்து பதிவிரதா பூஜைசெய்தல். துதித்தல். }

**விருத்தம்.**

இந்திராணி. பார்வதியை துதித்தல் } கற்பினுக்கரசே கந்தரங்கருத்த சுந்தரமௌலியோன் றனக்கு
நற்றுணையாகு நங்கையேநின்னை நாடொறும் வழுத்தினனீங்கு
கற்பகாடவிவாழ் கணவனும்யானும் கருத்தொரு மித்தினிதாக
நற்பதிபமா வதியினையாண்டு நலம்பெற யருளிதி யம்மா!

அம்பிகே! குணவதிஎன் றியம்புமாறு வாழ அருள் புரிவாயாக.

**விருத்தம்.**

இலக்ஷ்மியைத் துதித்தல். } பாற்கடலுதித்து பல்வளமளிக்கும் பார்த்திபன் சாதிமங்காய்!
நாற்றிசைபோற்றும் நான்முகனீன்ற நாரணன் மார்புறைநங்காய்!
நூற்றிகழிடையாய் நுவல்தருவட்ட சித்திகளனைத்தையும் நல்காய்!
ஏற்றுயர்கொடியோ னுகந்தருள்தங்காய்! எழிலுருமிலக்குமி யன்னாய்!

ஜகன்மாத்ருகே! கற்புவாய்ந்த செல்வத்தோடு வாழ்வதற்கருளிதி.

**விருத்தம்.**

சரஸ்வதியைத் துதித்தல். } நாரணனீன்ற நான்முகன்வாயில் நடமிடும் நாதநற்றேவீ!
ஆரணமறைந்தோ னன்பினுக்குரிய வமுதமே யமுதவாரிதியே!
பாரநற்கலைக ளனைத்தையும்விரித்த பாரதீ! பாற்புகை யொத்த
வாரணியாடை யுடுத்தினிதிலங்கும் வெண்மரை மலருறையன்னாய்!

சகலயந்த்ராத்மிகே! சகலதந்ராத்மிகே! ஞானமும்கற்பும் நயந்தருளிதி.

(நாரதர்ப்ரவேசம்—ஒதுங்கிநின்று உற்றுநோக்கல்.)

பார்வதி.—கற்புள்ளபடியால் இந்திராணி நம்மிடத்தில் யாசிக்கிறாள்.

இலக்ஷ்மி.—ஆம். ஆம். மதனி நம்மிடத்தில் அந்தயோக்யதை இருக்கிறது.

சரஸ்வதி.—அதற்கென்ன தடை? மலரில் வண்டினம் ஏன் குடிகொண்டிருக்கின்றன? தேன்பொருந்தியிருத்தலினாலன்றோ? பொருளுள்ளயிடத்தை எவரே நாடாதவர்?

நாரதர்—(ஜனாங்கமாய்) நாம் த்ரிலோகசஞ்சாரி. நமக்குத்தெரியாதவிஷயங்கள் மூன்று லோகத்திலேயும் கிடையாது. எங்கேயாவது விந்தையான விஷயங் காணப்படின் அவ்விடத்தில் நாம் இருந்தேதீரவேண்டும். ஹரிஹரபிரம்மாதிகளாயிருந்தாலும் அவர்களையும் ஒவ்வோர்காலத்தில் முரணானவிஷயங்களில் தலையிட்டுக்கொண்டு தவிக்கும்படிச் செய்வோம். நம்மைப்போல் சமாசாரங்களை பிரசுரப்படுத்துவதில் சமாசாரப் பத்திரிகையும், மின்சாரதந்தியும் பின்வாங்கும். நமது விரதம் ஒவ்வோர் தினத்திலேயும் ஓர் கலகத்திற்கு ஆதிகாரணமாயிருத்தல். இன்றைக்கு ஒன்றும்விஷயம் அகப்படயில்லையேயென்று துக்காக்கிராந்தனானேன். நம் அதிர்ஷ்ட காலம்போல் இருக்கிறது. இங்கு ஓர் விஷயம் அகப்பட்டது. இவ்விஷயம் இங்கு நேராவிடில் நமக்கு கலகஞ்செய்ய ஆஸ்பதமிராது. அப்போது நமது தலை வெடித்தல்லவோபோய்விடும் நல்லகாலம். சபாஷ்; இவர்கள் கற்புடையம் என்று அகந்தையுற்றிருக்கின்றனர். இவர்கள் அகந்தையையடக்க ஓர் தந்திரம் செய்யவேண்டும். நாரதன் எடுத்தகாரியம் ஒன்றும் பழுதுபோகக்கூடாது. எக்காரியத்தையும் சூசனையாக செய்யவேண்டும். காரியங்களை புத்திசாதுர்யமாகவும் சூசனையாகவும் செய்யத்தகுந்தவர்களைப் பார்க்கிறேன். ஞாபகத்திற்கு வரயில்லை. ஆ! ஆ! சரி! சரி! விஸ்வகர்மாதான் மந்த்ர தந்த்ராங்கள் நிரம்பக்கற்றவர். அவரிடம் இப்போதே போவேன்.

முதல் அங்கம்.

இரண்டாம் காட்சி முற்றிற்று.

---

**முதல் அங்கம்.**

**மூன்றாம் காட்சி.**

இடம்:—தெய்வலோகம் விஸ்வகர்மாவின் யந்திரசாலை. காலம்—பகல்.

**நடர்:—விஸ்வகர்மா. நாரதர்.**

**விஸ்வகர்மா**—சிஷர்காள் இன்று உஷகாலந்தொடங்கி பிரதிதினம் செய்யும்நியமனப்படி நித்யகர்மானுஷ்டானங்களை செய்துமுடித்தோம். தேவயக்ஞம் வைஸ்ய தேவம் முதலிய வைதிககர்மங்களும் செய்து முடித்தோம். நமது குலதேவதை காளிகாதேவி என்னும் காமாக்ஷியின் வரப்ரசாதத்தையும் பெற்றோம்.

**கா. கந்தச்சுவாமி ஆசாரியர்,**
போர்ட் ஆபீஸ் கிளர்க்கு.

(தொடரும்.)



(4-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

பொழுதாய்விட்டது. காலசக்ரம் அதிவிரைவாய்செல்லுகிறது. லோகசம்ரக்ஷணார்த்தத்தின்பொருட்டு பஞ்சகிருத்யங்களை செய்வது நமது நியமனம். ஆகையின் நாம் அவரவர்களுக்கு வேண்டும்பொருள்களை சிருஷ்டித்துக்கொடுப்பது நமது கடமையாகும். தேவாசுரப்போர் நடப்பதாயிருப்பதினால் இந்திரன் வச்சிராயுதத்தை சீர்படுத்திக்கொடுக்க அனுப்பியிருக்கிறான். பூலோகத்திலிருந்து நேபாளதேசத்தரசன் நமக்கு திருமுகம் வினயமாய் வரைந்து தனக்கு ஓர் வாயுயந்திரக்கப்பலை நிர்மாணம் செய்துகொடுக்கும்படி விக்ஞாபனம் செய்துக்கொண்டிருக்கிறான். இன்னும் தனது ஆயுதசாலைக்கு வேண்டிய அஸ்திர சஸ்திரங்களை தயாரித்துக் கொடுக்கும்படி வேண்டிக்கொண் டிருக்கிறான். இன்னும் அநேகம் வேலைகள் இருக்கின்றன. நீவிர் நுங்களுக்கு நாம் உபதேசித்துள்ள மந்த்ர தந்த்ரங்களைக்கொண்டு மேற்சொல்லிய காரியங்களையெல்லாம் முடிக்கவேண்டும். போங்கள் முயன்று சிருஷ்டித் தொழிலைச் செய்யுங்கள்.

சிஷர்—தேவரீர் ஆக்ஞைப்படியே.

நாரதர்—(ஜனாங்கமாய்:—நாம் விஶ்வகர்மாவைப் பார்த்து நெடுநாள் ஆயிற்று. ஈதோ பிரம்மதேஜசுடன் ஐந்து முகங்களோடும் கூடி பரமசிவன்போல் வியாக்ராசனத்தில் உட்கார்ந்துகொண் டிருக்கிறாரே அவர் விஸ்வகர்மாவாகத்தான் இருக்கவேண்டும். அவரைக்கிட்டுவோம்.)
சுவாமி நமஸ்காரம்.

விஶ்வகர்மா—(பஞ்சகிர்த்திய யோகநித்ரையிலிருந்து எழுந்து) யார் அங்கு?

நாரதர்—(ஜனாங்கமாய்:—இந்த கிழவனுக்கு என்ன அட்டகாசம் பார்த்தையா? அதிக ஜம்பக்காரன்) சுவாமி! நான்தான் நாரதன்.

விஶ்வகர்மா—நாரதரா! என்ன! நாரதரே! என்ன விசேஷம்? நீர் த்ரிலோக சஞ்சாரியாயிற்றே. ஸ்வர்க்கமத்ய பாதாள லோகங்களில் என்னவிசேஷம்?

நாரதர்—என்னவிசேஷம்! ஒன்றுமில்லை. தங்கள் தரிசனத்திற்காகத்தான் வந்தேன்.

விஶ்வகர்மா.—அப்படியா? காரியார்த்தமாய்த்தான் வந்திருப்பீர். நாரதர் ஓர் இடத்திற்கு செல்வதானால் காரியமில்லாமல் செல்வாரா? நீர்மாத்திரமா எவராயிருந்தாலும் நம்மிடத்திற்கு வரும்போது ஓர் காரியார்த்தத்தை முன்னிட்டுத்தான் வருவர். காரியமில்லாமல் நம்மிடத்தில் வரமாட்டார்கள். காரியம்உள்ளபோது தான் நம்மை ஸ்மரிப்பார்கள். காரியமில்லாதபோது நம்மை ஸ்மரிக்கவேமாட்டார்கள். நாரதரும் அப்படித்தான். இயற்கைக்கு மாறுபாடு இல்லவேயில்லை.

நாரதர்.—என்னகாரியம்! விசேஷமொன்றுமில்லை. இந்திரபட்டணத்தில் இந்திராணியானவள் பார்வதி இலக்ஷ்மி சரஸ்வதி இவர்களுக்கு ஆலயங்கள் நிர்மாணம் செய்வித்து பதிவிரதா சுமங்கலீ பூஜை செய்துக்கொண்டிருக்கிறாள்.

விஶ்வகர்மா.—ஆம். அதுஎனக்குத்தெரியும். நான்தான் ஆலயங்கள்நிர்மாணம் செய்து கொடுத்தேன். அதைப்பற்றி என்ன விசேஷம்?

**நாரதர்**—(ஜனாந்தமாய்:—இந்தக்கிழவன் வார்த்தைகளைப் பார்த்தையா? மகாஜம்பக்காரன் டம்பம்,படாடோபம் அதிகம். நமக்கு இப்போ ஒருகாரியம் ஆகவேண்டுமே! அதைப்பார்ப்போம்.)

நீர்தான் நிர்மாணம் செய்ததாக எனக்கும் கேள்வி. கோயிலைப்பற்றி ஒன்றும் விசேஷமில்லை. அது கண்ணைக் கவரத்தக்கதாகத்தான் இருக்கிறது.

**விஸ்வகர்மா**.— பின். எதைப்பற்றி விசேஷம்?

**நாரதர்**—(ஜனாந்தமாய்:—இந்தகிழவனுக்கு வயது ஆய்விட்டது தாமசகுணம் அதிகமாயிருக்கிறது. நாற்பதுக்குமேல் நாய்க்குணந்தானே)
சுவாமி! நிதானமாய்க் கேழ்க்கவேண்டும்.

**விஸ்வகர்மா**.—நிதானமாய்த்தான்! சொல்லும். சொல்லும். அநேக காரியம் இருக்கின்றன.

**நாரதர்**—(ஜனாந்தமாய்:—தொழில் செய்வோர்க்கெல்லாம் அவசரம் அதிகம். நமக்கு இவரைவிட்டாலும் வேறேகதியில்லை. நமக்குகாரியம் ஆகவேண்டுமே? கிழவனிடத்தில் அகப்பட்டுக்கொண்டோம். மெதுவாய்த்தான் காரியத்தை முடித்துக்கொண்டுபோக வேண்டும்)
இதோ சொல்லுகிறேன்.

**விஸ்வகர்மா**—இதோசொல்லுகிறேன் என்பது ஒருதடவையா? சொல்லுமே சீக்கிரம். எனக்கு வேலையில்லையா?

**நாரதர்**—(ஜனாந்தமாய்:—என்ன அவசரம்! என்ன அவசரம்!)
இந்திராணி (பதிவிரதா பூஜை செய்வதினால்)

**விஸ்வகர்மா**.—செய்வதினால் என்ன? சொல்லுமே. நீட்டுகிறீரே! சீக்கிரம் சொல்லும்.

**நாரதர்**—(ஜனாந்தமாய்:—கிழவன் யமகண்டபேர்வழி) பார்வதியும், இலக்ஷ்மியும், சரஸ்வதியும்,தாங்களே பதிவிரதைகள் என்று அகந்தைகொண்டிருக்கிறார்கள்.

**விஸ்வகர்மா**.— என்னை அதற்கு என்ன செய்யச் சொல்லுகிறீர்? அகந்தையடையட்டுமே. உமக்கு என்ன போயிற்று? எனக்கு என்னபோயிற்று?

**நாரதர்**.— அகந்தையை அடக்க நீர் ஓர் உபாயம் தேடவேண்டும்.

**விஸ்வகர்மா**.— வந்தீரே வழிபாய். பார்த்தீரா? நீர் வந்தால் ஒரு காரியமாய்த்தான் வருவீர்.

**நாரதர்**.—ஆம் சுவாமி! இதுதான் காரியம் தங்களுடையபராக்ரமம் சொல்லி முடியாது. நினைத்தபடி பொருள்களையெல்லாம் சிருஷ்டிசெய்து தேவர்களுக்கும், இராக்ஷதர்களுக்கும், மனிதர்களுக்கும் கொடுத்து உபகாரம் செய்யத்தகுந்த மகானுபாவர். தேவாலயம், தேவபிம்பங்கள், மண்டபங்கள், ஸ்தூபிகள், சித்ரசாலைகள், நாட்டியசாலைகள், ஆயுதசாலைகள் இவைகளை நிர்மாணஞ் செய்யும்



யோக்யதை யுடையவர். மகேஸ்வரனுக்கு சூலாயுதத்தையும், இந்திரனுக்கு வஜ்ராயுதத்தையும், மகாவிஷ்ணுக்கு சக்ராயுதத்தையும், கதாயுதத்தையும், குமாரக்கடவுளுக்கு வேலாயுதத்தையும், நிர்மாணஞ்செய்து கொடுத்து அரக்கர்களை சிக்ஷித்தவர். இப்போழுது என் சுவல்ப காரியத்திற்கு ஓர் உபாயம் தேடவேண்டும்.

**விஸ்வகர்மா**—- என்ன! நாரதரே! என்னை சந்தியில் இழுத்துவிடுவீர்போலிருக்கிறதே! பார்வதி! இலக்ஷ்மி! சரஸ்வதி! பதிவிரதா ரத்னங்கள் ஆயிற்றே. நமது உபாயம் அவர்களிடத்தில் என்னபயன்பெறும்? எனக்கு என்னவோதைரியமில்லை. நெருப்பில் ஈ மொய்க்குமோ?

**நாரதர்**—சுவாமி! அப்படி என்னைகைசோரவிடக்கூடாது. உங்களுக்கே தைரியமில்லாவிட்டால் வேறு எவர்க்கு தைரியமிருக்கும்?

**விஸ்வகர்மா**—ஆம் தைரியமில்லை. ஆகிலும் உமக்கு ஏன் மனவருத்தம்? (சற்று நிஷ்டையிலிருந்து) இதோ இரும்புக்கடலை நிர்மாணம்செய்தேன். இது சாதாரண கடலைப்போல் நெருப்பினால் பொரிக்கப்படாதது. பதிவிரதைகள் கைபட்டால் பொரிந்துபோய்விடும். அதிகமாய் உமக்கு ஒன்றும் சொல்லசாத்தியப்படாது. சமயத்திற்கு உசிதமாய் சாதுர்யமாய் புத்தியை உபயோகித்து காரியங்களை முடித்துகொள்ளும் ஏனென்றால் கட்டிக்கொடுத்த மூட்டையும் சொல்லிக்கொடுத்த சொல்லும், பயன்படாது.

**நாரதர்**—-சுவாமி! போதும். போதும். மற்றதெல்லாம் நான்சரிப்படுத்திக்கொள்வேன். நமஸ்காரம் போய்வருகிறேன்.

**விஸ்வகர்மா**—- நாரதரே! ஆசீர்வாதம் போய்வாரும். காரியசித்தி அஸ்து.

**நாரதர்**—-(ஜனாந்தமாய்:—இந்தப்பழையபெருச்சாளியிடத்தில் ஒருகாரியமாகிறதானால் என்னகஷ்டம்! என்னகஷ்டம்! அப்பா! முடிந்தது. நமது காரியம் ஜயந்தான். நாரதன் பிரவேசித்த காரியம் எதுதான் ஜயமாகாது.

முதல் அங்கம்
மூன்றாம் காட்சி முற்றிற்று.

---

**முதல் அங்கம்.** **நான்காம் காட்சி.**

இடம்:—இந்திரபட்டணம். காலம்—பகல்.

**நடர்:—நாரதர். பார்வதி. இலக்ஷ்மி. சரஸ்வதி.**

(ஆலயத்திருத்தல்.)

**நாரதர்**—-சங்கரி! சாம்பவி! அம்பிகா! பார்வதி! பரதேவதா! பராசக்தி! பராசக்தி!

**பார்வதி**— என்னநாரதா! என்ன விசேஷம்? நீ வரும்போதெல்லாம் மகாயாழ்மீட்டி சந்தோஷமாய் கானம் செய்துக்கொண்டுவருவாயே! என்ன இப்போது களைத்து ஈனஸ்வரத்துடன் பேசுகிறாயே?

**நாரதர்**— வயிற்றில் பசி அதிகரித்தால் கானம் எப்படிசெய்வது? கானமெல்லாம் பறந்துபோய்விடாதா காற்றில் பஞ்சுபடுபாடாய்?

**பார்வதி.**— என் பசி அதிகரித்தது? புசிக்கயில்லையா?

**நாரதர்.**— நேற்றைபதினம் ஏகாதசி உபவாசம். பாரணைசெய்வதற்கு ஐவேஜு ஒன்றுமில்லை த்ரிலோகமும், திரிந்தேன். யாரும் பாரணைக்கு அன்னம் கொடுக்கவில்லை. கடைசியாக விஸ்வகர்மாவினிடம் போனேன். அவரிடம் என்குறையைச் சொல்லியிரந்தேன். அவர் என்னசெய்வார் பாபம். அவரிடத்தில் உள்ளது உலோகங்கள்தான். அவரால் ஒன்றும் வஞ்சனையில்லை. அவர்செய்கை எனக்கு என்னவோ பயித்தியக்காரத் தன்மையாயிருக்கிறது. அவர் எனக்கு இரும்புக் கடலையை சிருஷ்டித்துக்கொடுத்தார். அதினால் என்பசிதீரும் என்று சிறிதும் நான் எண்ணவில்லை. இரும்பினால் பசிதீர்வது அசாத்தியம். ஆகிலும் என்பசியின்கொடுமையினால், பார்ப்போம் பிரயத்தனஞ் செய்தால் என்ன கெட்டுப் போகப்போகிறது என்று யோசித்து வாங்கிக்கொண்டேன். அக்கடலை அக்னியினால் பொரிக்கப்படமாட்டாதாம். பதிவிரதைகள் ஹஸ்தஸ்பரிசத்தால் பொரியுமாம். இக்கடலையை எடுத்துக்கொண்டு போகாதயிடமில்லை. இதை பொரிக்கத்தகுந்தவர்களை எங்கும் கண்டிலேன். ஆகையால் இவ்விடத்திற்கு விரைந்து வந்தேன். பசியோ அதிகமாயிருக்கிறது. விரைந்துவந்ததால் ப்ரக்ஞைதவறி சிறிது களைத்திருக்கிறேன். இதைப்பொரித்துக்கொடுத்தால் என்னைக்காப்பாற்றியதாகும்.

(கடலையை நீட்டிக்கொடுக்க பார்வதி வாங்கி ஸ்பரிசித்தல்.)

**பார்வதி.**—என்ன! நாரதா!

**நாரதர்.**—அப்பா! என்ன! பொரிந்தால் கொடுங்கள்.

**பார்வதி.**—நாரதா! என்ன பொரியவில்லையே!

**நாரதர்.**— அம்மா! அப்படியா! என்னசெய்வேன்! பசியா அகோரமாயிருக்கிறதே. என்னுடைய தௌர்பாக்யமே தௌர்பாக்யம். நீங்கள் என்ன செய்வீர்கள். உங்களால் வஞ்சனையில்லை. அதைப் பொரிக்குந்தன்மை உங்களுக்கு இல்லை போலிருக்கிறது. அது நான்செய்த பாபம். உங்கள்மேல் தோஷமில்லை. கடலையைக் கொடுங்கள்.

(பார்வதி கொடுக்க வாங்கல்)

பக்கத்தில் என் பாட்டியம்மாளுக்காவது காட்டுகிறேன்.

(இலக்ஷ்மியை நணுகி கடலைகொடுத்து) பாட்டியம்மா! நீங்களாவது இதைப் பொரித்துக் கொடுங்கள். எனக்கு பேசசக்தியில்லை. சவிஸ்தாரம் தெரியுமே. பாருங்கள் உங்களாலான உபகாரம். நிற்கப்போகலை. பசியிளைப்பு அதிகமாயிருக்கிறது. சற்று உட்காருகிறேன்.

**இலக்ஷ்மி.**—(ஸ்பரிசித்துப்பார்த்து) அப்பா! நாரதா!



**நாரதர்.**—பாட்டீ! கடலையைப் பொரித்தாய்விட்டதா?

**இலக்ஷ்மி.**—அப்பா! நாரதா! பொரியவில்லையடா.

**நாரதர்.**—பொரியவில்லையா. சரி, என் அதிர்ஷ்டந்தான். அதற்கு நீங்கள் என்னசெய்வீர்கள்? அதைப்பொரிக்கும் சக்தி உங்களுக்கு இருந்தால்தானே. இல்லைபோலிருக்கிறது. சரி கொடுங்கள். என் அம்மாவிடம் கொடுத்துப்பார்க்கிறேன்.

(இலக்ஷ்மி.—கடலையைக்கொடுக்க எழுந்து வாங்கிக்கொள்ளல்)

(சரஸ்வதியை நணுகி)

அம்மா!—ஏகாதசி வ்ரதம் நேற்று. பாரணைசெய்யவில்லை. பசி அகோரமாயிருக்கிறது. கண்கள் சோர்ந்து போகின்றன. நாறு அடைத்துக் கொண்டிருக்கிறது. பேசவோ திடமில்லை. இந்த கடலையின் சவிஸ்தாரந்தான் சொன்னேனே. உங்களுக்கு தெரியாதிருந்தால் சுருக்கமாய்சொல்லுகிறேன். இந்தகடலைவிஸ்வகர்மாவால்கொடுக்கப்பட்டது. பதிவிரதைகள் கைப்பட்டால்பொரியுமாம். பிள்ளையின்பசி தாய்க்குத்தான் தெரியும். அதை பொரித்துக் கொடுத்தால் பசியின் கொடுமை நீங்கும். பிறகு எல்லாவிசாரணையும், செய்யலாம்.

(கடலையைக் கொடுத்தல்.)

**சரஸ்வதி.**—(வாங்கி தடவிப்பார்த்தல்.) நாரதா! என்ன! கடலை பொரியவில்லையே.

**நாரதர்.**—பொரியவில்லையா? ஐயோ! என்ன செய்வேன். பசி அகோரமாயிருக்கிறதே இன்னும் எங்கேபோவேன்! என்கொடுமையா இது உங்களால்கூட பொரிக்கக்கூட வில்லையா? நான் மகாபாபி! மகாபாபி! என்ன அம்மா நீங்களாவது பொரித்துக் கொடுப்பீர் என்றல்லவோபார்த்தேன் உங்களிடத்தில்கூடவா பதிவிரதா தர்மம் குறைந்திருக்கிறது!

**சரஸ்வதி.**—என்னடா நாரதா! துஷ்டப்பயலே! கற்றவித்தையைப் பெற்றதாயிடத்திலேயே காட்டுகிறாய்.

(இலக்ஷ்மியைப் பார்த்து)

மாமி பார்த்தீர்களா? இந்ததுஷ்டப்பயல் வார்த்தையை.

**இலக்ஷ்மி.**— ஆமாம் சரஸ்வதி அவன் துஷ்டனாய்விட்டான். என்னைக்கூட அப்படித்தான் நினைத்துப் பேசினான்.

**பார்வதி.**—மகனீ! அந்தபயலை தூரத்திவிடுங்கள். துஷ்டவார்த்தைகளைப் பேசுகிறான். அவன் வரவரக் கெட்டுப்போய்விட்டான்.

**நாரதர்.**— யதார்த்தவாதி பகுஜனத்வேஷி. உள்ளதைச்சொன்னால் கொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளம். என்னவோ பதிவிரதைகளாயிற்றே என்று கொடுத்துப்பார்த்தேன். என் பாப விசேஷத்தால் உங்களால் கடலை பொரியப்படவில்லை பூலோகத்தில் யாரையாவது பிடித்து கடலையைப் பொரித்து பாரணை செய்கிறேன்.

இதுவரைக்கும் ஏகாதசி விரத பாரணை தடைப்பட்டதில்லை. இப்போது என் பாபம் தடைப்படுத்துகிறது. சரி. என்னசெய்வது. ஊழ்வினையின் வலிமையைத் தடுப்போர்யாவரே உளர்.

முதல் அங்கம்

நான்காம் காக்ஷி முற்றிற்று.

---

**முதல் அங்கம்.** **ஐந்தாம் காட்சி.**

இடம்:—பூலோகம். அத்திரிமுனிவர் ஆஸ்ரமம் காலம்—காலை

**நடர்:—அனுசூயா. நாரதர்.**

அனுசூயா—(தனிமொழி.) நித்யகர்மானுஷ்டானங்கள் ஜபதபங்கள் எல்லாம் ஆயிற்று இனிநாம் தினந்தோறும் இயற்றும் பர்த்தாபாதபூஜை ஆகவேண்டும். நமது சுவாமியார் நதிஸ்நானத்திற்குப் போனவர் இதுகாறும்வரவில்லையே. என்னகாரணமோ தாமசத்திற்கு? அவர் வருவதற்கு சிறிதுகாலமாகும்போலிருக்கிறதே! தேவதார்ச்சனைக்குவேண்டிய சாமான்களையெல்லாம் ஒழுங்காய் வைப்போம். இன்றைக்கு, என்ன! சிஷ்யர்களுக்கு ஞானோபதேசம் செய்யவேண்டும் என்று சொன்னாரே. இப்போதுதான் அவ்விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. அதினால்தான் நமது பிராணநாதர் இன்னும் வந்தாரில்லை.

நாரதர்—அனுசூயா! அனுசூயா! அனுசூயா.

அனுசூயா—என்னசுவாமி! இவ்வளவுதூரம். என்னவிசேஷம். தேவரீர் திருவடியை மாசுநீங்க ஜலங்கொண்டு அலம்புகிறேன். ஆசனத்தில் உட்காருங்கள், உங்கள் திருவடி நோகும்படி எங்கள் குடிசைக்கு வந்த சிரமம்நீங்க பானம் செய்கிறீர்களா! விசிறிகொண்டு சிறிதுவிசுறுகிறேன் (விசிறி அசைத்தல்) என்னவிசேஷம் தேவரீர் த்ரிலோக சஞ்சாரியாயிற்றே.

நாரதர்—என்ன விசேஷம்! ஒன்றும் விசேஷமில்லை. ஏகாதசி உபவாசமிருந்தேன். பாரணைசெய்ய மூன்றுநாளாய் ஐவேஜு இல்லை. போகாதயிடமில்லை. பாரணைக்கு அன்னம் கிடைக்கவில்லை. கடைசியாக விஸ்வகர்மாவினிடம் சென்று என் குறையைச் சொல்லி இருந்தேன். அவர் இந்த இரும்புக்கடலையை கொடுத்து "இதுகற்புடைய மங்கையர் கரங்களின் ஸ்பரிசத்தால் பொரியும் பசியாற்றிக் கொள்" என்றார். பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி இவர்கள் கையில் கொடுத்து பதப்படுத்தி கொடுக்கும்படி கேட்டேன். அவர்களால் முடியாமல் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். உன்னுடைய பிரதாபத்தைக் கேட்டு உன்னிடத்தில் வந்தேன். இக்கடலையை பதப்படுத்திக் கொடுத்தால் எனக்கு பசிதீரும் உனக்கும் க்ஷேமம் உண்டாகும்.

அனுசூயா—என்னசுவாமி! பரீக்ஷைசெய்கிறீர்களா என்ன! பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி இவர்களால் ஆகாதது என்னால் ஆகப்போகிறது. ஆகிலும் பார்ப்போம்



கொடுங்கள் (வாங்கல்) (தன்கணவரை தியானித்து ஸ்பரிசித்து பொரித்தது நாரதர்கையில் கொடுத்தல்) ஆகா! ஜெயித்தேன். அவமானமில்லாமல் போயிற்று.

நாரதர்—சபாஷ்! நீ தான்பதிவிரதை! பார்வதி, இலக்ஷ்மி சரஸ்வதிக்கும் மேலானவள் நீ தான். என்பசியை ஆற்றிக்கொள்வேன். அம்மா உனக்கு சீக்கிரம் புத்திரபாக்கியம் உண்டாகும்.

அனுசூயா—தேவரீர் கடாக்ஷம். நமஸ்கரிக்கிறேன்.

நாரதர்—தீர்க்க சுமங்கலீபவ. தனதான்ய சமர்த்தி அஸ்து, சந்தான விர்த்தி அஸ்து, நான்போய்வருகிறேன். (ஜனாந்தமாய்) எடுத்தகாரியம் முடிந்தது. பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய இவர்கள் தங்களைக்காட்டிலும் கற்பில் உயர்ந்தவர்கள் இல்லையென்று கொண்டிருக்கும் இறுமாப்புக்கு ஓர் பங்கம் நேரிட்டது. அதுதான் எனக்குவேண்டியது. ஜயமடைந்தேன். இச்ஜெயத்திற்கு தகுந்ததந்திரத்தை செய்து காத்தருளியவிஸ்வகர்மபஞ்சானனதேவப்பிராமண பரமபுருஷனை நமஸ்கரிக்கிறேன். அவர்தந்திரம் பலிப்பதற்கு காரணபூதமாயிருந்த அனுசூயா தேவியின் கற்பினைப் புகழ்கிறேன். இப்போதே இந்திரலோகம்போய் பொரிக்கப்பட்ட கடலையைக் காட்டி அவர்கள் கற்பின் இருமாப்புக்கு பங்கம் வந்ததை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றெனத் தெளிவிப்பேன்.

முதல் அங்கம்

ஐந்தாம் காட்சி முற்றிற்று.

---

**இரண்டாது அங்கம்.** **முதல் காட்சி.**

இடம்:— இந்திரப்பட்டணம். காலம்—மாலை.

**நடர்:—பார்வதி. இலக்ஷிமீ. சரஸ்வதி. நாரதர்.**

(ஆலயத்திலிருத்தல்.)

நாரதர்—சங்கரி! சாம்பவி!

பார்வதி—என்னடா! துஷ்டா! மறுபடியும் எங்கேயடா வந்தாய்?

நாரதர்—முன்னே ஏகாதசிவிரதம் இருந்தேனே

பார்வதி—இருந்தாய் அதற்கென்ன இப்போது?

நாரதர்—பாரணைக்கு வழியில்லாமல், விஸ்வகர்மா கொடுத்த இரும்புக்கடலையை பொரித்துக்கொடுக்கச் சொன்னேனே,

பார்வதி—சொன்னாய் அதற்கென்ன இப்போது? என்னடா கதைபடிக்கிறாய். என்னவோ ஓதுகிறாயே வேதத்தை. என்னடா! சொல். சொல்.

நாரதர்—அது என் துர்ப்பாக்யத்தால் உங்களால் முடியவில்லையே

பார்வதி—முடியவில்லை. அதற்கு என் புராணம் வாசிக்கப்போகிறாய்.

நாரதர்—எனது பாட்டை, அம்மா இவர்களாலும் முடியவில்லையே

பார்வதி—சரி! முடியவில்லை. நீ என்ன சொல்லப்போகிறாய்.

நாரதர்—அதெல்லாம் உங்களுக்குத் தெரியுமே.

பார்வதி—தெரியும். தெரிந்ததற்கு இப்போது என்னவந்தது.

நாரதர்—பிறகு

பார்வதி—பிறகு என்ன! பிறகு என்று நீட்டுகிறாயே என்னடா அது.

நாரதர்—பசியோடிருந்து பூலோகத்தில் அத்திரி முனிவர் ஆஸ்ரமம் சென்றேன்.

பார்வதி—சென்றாய் என்ன நடந்தது?

நாரதர்—அநுசூயா அம்மா மகாபதிவிரதை,

பார்வதி—பதிவிரதையா? மற்றவர்களெல்லாம்? என்னடா! உன் துஷ்டத்தனத்தை கலைச்சபையில் காட்டுகிறாய். இன்னும் என்ன! இவ்வளவுதானா? ஏதாவது பாக்கி கதை இருக்கிறதோ?

நாரதர்—அவர்கள் கைப்பட்ட மந்திரத்தில் இரும்புக்கடலை பொரிந்து போய்விட்டது பசியை ஆற்றிக்கொண்டேன்.

பார்வதி—ஆற்றிக்கொண்டாயோ பசியை போ போ. மறுபடியும் என்னடா பேச்சு இருக்கிறது சாப்பாட்டிராமா. வீண்பேச்சு வீண்கலகம் பண்ணிக்கொண்டு திரிகிறாய் கோயில் எருதைப்போல.

நாரதர்—அம்மா. நீங்கள் கொஞ்சம் சாப்பிடுங்கள். (பக்கத்தில் சென்று) பாட்டி அம்மா நீங்கள் கொஞ்சம் சாப்பிடுங்கள். அநுசூயா தேவி பொரித்தாள் பதிவிரதா சிரோரத்தினம். (சற்று சென்று) அம்மா நீங்கள் கொஞ்சம் சாப்பிடுங்கள் பூலோகத்தில் கற்பிற்கு அரசியான அநுசூயா தேவி பொரித்துக் கொடுத்தாள். நாரீரத்னம் நாரீரத்னம்! போய்வருகிறேன் அன்னைமீர். தங்களுக்கு இந்த தெரிவிப்பதற்காகத்தான் வந்தேன். போய்வருகிறேன். சென்றபின்பு.

பார்வதி—அந்த துஷ்டன் நம்மை அவமானப்படுத்தினான் பார்த்தீர்களா?

இலக்ஷ்மி—ஆம். ஆம். பரம துஷ்டன்

சரஸ்வதி—அவன் சுபாவம் அது. 'அவன் துஷ்டத்தனத்தினாலே அல்லவா எங்கும் நாயைப்போல் அலைகிறான். நல்லபிள்ளையாயிருந்தால் வீட்டோடே இரானோ துஷ்டன். கலகக்காரன். குண்டுணி. உண்ட வீட்டிலேயே இரண்டகம் செய்வான், கற்றவித்தையை பெற்றதாயிடத்திலேயே காட்டுவான். பரமசண்டாளன், இதனால்தான் அவன் தந்தைக்குக்கூட அவன்மேல் வெறுப்பு.

பார்வதி—(இலக்ஷ்மியைப் பார்த்து) மதனீ! எங்கள் அண்ணா வந்ததும் இந்த சமாசாரத்தை தெரிவித்து. அநுசூயாவின் கற்பழிக்கவேண்டும்.

இலக்ஷ்மி—ஆகா சொல்லுகிறேன் சரியாய் தலைமுதல் கால்வரையில் முடிபோட்டு விடுகிறேன். மதனீ! நீயும் அண்ணா சங்கரர் வந்ததும் இதேமாதிரி சொல்லிவைக்க

கா. கந்தசுவாமி ஆச்சாரியர்,
போர்டாபீஸ் கிளார்க்கு

(தொடரும்)



வேண்டும். அடீ சரஸ்வதி! என்பிள்ளை பிரமன் வந்ததும் உன் பிள்ளை துஷ்டத்தனத்தை தெரிவி. அநுசூயாவின் மானத்திற்கு ஓர் பங்கம் நேரிட்டால்தான் நாம் கீர்த்தியோடுவாழலாம். இல்லாவிட்டால் சூரியனுக்கெதிரில் வைத்த விளக்கேயாகும்.

சரஸ்வதி—ஆ! ஹா! வந்ததும் தெரிவிக்கிறேன். அநுசூயாவின் கற்பிக்குவிருத்தம் நேர்ந்தால்தான் நமக்குண்டாயிருந்த கற்பின் உயர்வு நிலைநிற்கும். சரி! சரி! தெரிவிக்கிறேன்.

இரண்டாம் அங்கம்

முதல் காட்சி முற்றிற்று.

---

**இரண்டாம் அங்கம். இரண்டாங் காட்சி.**

இடம்:—கைலாசம். சயனக்கிரகம். காலம்—நள்ளிருள்.

**நடர்:—சிவன். பார்வதி.**

சிவன்—பார்வதீ! பார்வதீ!

பார்வதி—உம் ம் ம்

சிவன்—பார்வதீ! பார்வதீ! என்ன நித்திரை செய்கின்றனையோ?

பார்வதி—என் அப்படி அடிக்கடி கூப்பிட்டுக்கொள்ளுகிறீர்கள்?

சிவன்—என்னடீ! பார்வதி! இன்றைக்கு ஒருவாறு இருக்கின்றனையே?

பார்வதி—உங்களுக்கு என்னவேலை. எதையாவது ஒன்றை சொல்லிக்கொண்டு வருவீர்கள்.

சிவன்—என்னடீ! பிராணநாயகி! என்ன சலித்துக்கொள்ளுகிறாயே? என்மீது, என்ன! குற்றம் உளதோ? உன்மனோ இஷ்டத்திற்கு ஏதாவது விருத்தமாயிருந்தேனோ?

பார்வதி—உங்களுக்கு என்ன இந்தமாதிரி பிரயோசனமில்லாத வார்த்தைகளைச் சொல்லி பெண்ணின் மனதை கலைத்து தீராத்துஷ்டியடைகிறதிலேயே திருஷ்டி. ஊரில் என்ன நடந்தால் என்ன! அதை நீங்கள் என்னவோ காதில் போட்டுக் கொள்ளப்போகிறதில்லை.

சிவன்—என்ன பார்வதீ! என்ன நீ ஏதோவென்று அசம்பந்தமாய் ஓர் விஷயத்தை எடுத்துச் சொல்லுகிறாயே! அது என்ன? அது என்ன? சொல்.

பார்வதி—சொன்னால் மாத்திரம் என்ன! நீங்கள் என்னசெய்துவிடப்போகிறீர்கள்? உங்களுக்கென்னவோ ஒன்றும் அக்கறையில்லை.

சிவன்—பார்வதீ! என்னடீ! பார்வதி! ஆ! என்பச்சைப்பசுங்கொடியே! உன்மேல் எனக்கு என்ன பிரீதியில்லையா? அடீ! மாதே! மரகதமே. கண்மணியே! மணியாடுபாவாய்! என்னுடன் பிணக்கு என்ன?

பார்வதி—இப்படியெல்லாம் அன்புவார்த்தையைக் கோர்த்தால் பிரீதி உண்டானதற்கு அடையாளமோ? இது மெய்யான வார்த்தையானால், உண்மையான பிரீதிஇருக்கும்பக்ஷத்தில் தலையில் ஓர் பெண்ணைவைத்துக்கொண்டு ஆடுவீரா? உமக்கு ஒரு ஆட்டம் ஒன்று. ஆடும் இடம் கூட, பலேசொகுசு; நிஷத்தமான நாய் நரிகள் குரைத்து ஊளையிடும் ஸ்மசானந்தான். உங்கள் ரூபமோ தேயுரூபந்தான். உங்கள் ஆபரணம்பாம்பு; எலும்பு, பன்றிக்கொம்பு. ஆடையோ யானைத்தோல், புலித்தோல். வாசனை பூச்சு ஏதாவது உண்டா? சாம்பல் பூச்சுதான். இந்தவாழ்வுக்குத்தான் உங்களை மாலையிட்டது. எங்கள் அண்ணாவுக்கிருக்கிற அழகு, செல்வம் சாமர்த்தியம் இவற்றில் ஆயிரத்தில் ஒருபங்கு உமக்கு இருக்கிறதா? உமக்கு என்ன பூதகணங்களோடு சாம்பலைப் பூசிக்கொண்டு ஆடுகிறதுதான் வேலை. சாமர்த்தியமா? என்ன! உண்டு. அவ்வளவுதான் நான்கொடுத்து வைத்தது.

சிவன்—அது என்ன! பார்வதீ! அப்படிச்சொல்லுகிறாயே? உங்களண்ணாவை திருப்பாற்கடலில் விஷம்வந்தபோது யார் காப்பாற்றினது உங்களண்ணா சாமர்த்தியந்தான் அவரை காப்பாற்றியதோ?

பார்வதி—நீர் பத்மாசுரனுக்கு முன் பின் யோசியாமல் வரம் கொடுத்துவிட்டு ஓடினீரே! அப்போது உம்மையார் காப்பாற்றினது?

சிவன்—உங்கள் அண்ணா இரணியனைக் கொன்று வெறிகொண்டு டல்லை இளித்துச்சேர்ண்டு திரிந்தாரே! அப்போது அவரை யார் காப்பாற்றினது. “

பார்வதி—வாழ்ந்த வாழுக்கு அதை எடுத்து சொல்லுகிறீரோ? போதும். போதும். எல்லாம் உமக்காகத்தான். நீர்அவனுக்கு கண்டபடி கேட்டவரத்தையெல்லாம் யோசனையில்லாமல் கொடுத்ததினால்தானே எங்கள் அண்ணாவுக்கு வெறிநேர்ந்தது. ஏன் விருதாவாய் வார்த்தையை வளர்த்துகிறீர்? உமக்குஎன்னவோ யோசனை கிடையாது, சுவாதீனபுத்தி கிடையாது அல்பசந்தோஷம். சற்று சற்றில் உமக்கு புத்தி மாறிவிடுகிறது.

சிவன்—அது என்னபார்வதீ! அப்படி சொல்லுகிறாயே?

பார்வதி—அப்படிசொல்லாமல் எப்படிசொல்ல? இருப்பதைத்தானே சொல்லவேண்டும்.

சிவன்—எப்போது எனக்கு புத்தி மாறிப்போய்விட்டது?

பார்வதி—சொல்லவேண்டுமோ? இராவணன் அன்றுவெள்ளியங்கிரியை அசைத்தானே!

சிவன்—அசைத்தான்.

பார்வதி—என்ன! அசைத்தான்! அசைத்தான் என்கிறீரே. அவனை நீர்என்னசெய்தீர்?

சிவன்—என்ன! என்செய்தேன் என்கிறாயே? அவன் இருபதுதோள்களும் பத்துத்தலைகளும் நெறியும்படி என்பாதவிரலால் அழுத்திவிட்டேனே!

பார்வதி— அழுத்தினீரே! அந்தபகை கடைசிவரையில் இருந்ததா? நான் ஒரு பெண்பக்கத்தில் இருந்தேனென்று பாராமல் என் மனங்கலங்கும்படி அசைத்தானே!



பரமதுஷ்டன்! அவனைசற்று நேரத்திற்கெல்லாம் பகையெல்லாம்போய் ரக்ஷித்தீரே! உமக்கு என்னவோ! நமதுபத்னியின்மனங் கலங்கப்பண்ணினானே! அவனை ரக்ஷிக்கிறதா என்று சிறிதேனும் யோசனையில்லையே?

சிவன்—அவன் சாமகானம் படினானே!

பார்வதி— சாமகானம் பாடினானே! அதில் நீர் மகிழ்ந்துபோய்விட்டீரோ? அதுதான் நீர் அல்பசந்தோஷி. மானாபிமானம் கிடையாது. உம்மோடு என்னசெய்கிறது. போகட்டும் அப்போதுயார் கலகஞ்செய்ததென்று உமக்குத்தெரியுமா?

சிவன்— ஏன் என் ஞானதிருஷ்டியினால் பார்த்தபோது, நாரதன் எனக்கு பிரியமான சாமகானத்தைப் பாடும்படி இராவணனுக்கு அவ்வழி போகும்போது பட்டும் படாததுமாய் ஓர் வார்த்தைசொன்னான். அதை உறுதியாகப் பிடித்துக்கொண்டு சாமகானம் பாடினான் இராவணன். நான் இரங்கினேன்.

பார்வதி—அவன் பாடினான். நான் இரங்கினேன் என்று சொல்லுகிறீரே! என் மனங் கலங்கிப்போனதை யோசித்தீரா? உமக்கு என்னவோ நீடித்த உறவும் கிடையாது. பகையும் கிடையாது. அல்ப சந்தோஷம். முன்னறியாமை அதிகம். இப்போது என்னை மானபங்கம் செய்தானே அந்த கலகக்காரன்!

சிவன்—எந்த கலகக்காரன்?

பார்வதி—உமக்கு ஆயிரந்தடவை சொல்லவேண்டும். அவன்தான் வீணையைத் தூக்கிக்கொண்டு திரிகிறானே, மூன்றுலோகமும் என்ன கலகம் செய்யலாமென்று இன்னும் தெரியவில்லையோ? அவன்தான் நாரதன்.

சிவன்—என்ன அவனுக்கு? என்ன செய்தான்?

பார்வதி—அவன் செய்ததைச் சொன்னால் நீங்கள் என்ன செய்துவிடுவீர்கள்? உமக்குத்தான் நீடித்த பகை யிராதே! புத்தி சிறிது நேரத்திற்கெல்லாம் மாறிப்போகுமே!

சிவன்—அது என்ன! அப்படிச் சொல்லுகிறாயே? நீ நடந்ததைச் சொல். நீ செய்யச் சொல்லுகிறதை செய்கிறேன்.

பார்வதி—இந்திராணி ஆலயத்தில் நான் இருக்கும்போது அவன்வந்தான். ஏகாதசி விரதம் பாரணைக்கு அன்னம் எங்கும் கிடைக்கவில்லை என்றான். விஸ்வகர்மா இரும்புக்கடலையை கொடுத்ததாகக் காட்டினான். அக்னியால் பொரிக்கப்படமாட்டாது. பதிவிரதையின் அஸ்தஸ்பரிசத்தால் பொரியுமென்று சொல்லி என்னை பொரிக்கச்சொன்னான். பசியுள்ளவன்போல் நடித்தான். வயிற்றுப்பிள்ளை கீழே நழுவி விழுந்துவிடும்போல் துடித்தான். நான் ஸ்பரிசித்துப் பார்த்தேன். கடலைபொரியவில்லை. அதை நான் சொன்னேன், எனக்குஅதைப் பொரிக்கப்போதிய பதிவிரதா தர்மம் இல்லையென்று சொல்லிக்கடலையை வாங்கிக்கொண்டான். பூலோகத்தில் போய் அத்திரிமுனிவர் பத்னி அனுசூயாவி

னிடம் அக்கடலையை பதப்படுத்தினதாக திரும்பவும்வந்து எனக்குச் சொல்லி அனுசூயாவை கற்பிற்கரசி என்று சிரசில் தூக்கிவைத்துக்கொண்டு பேசினான்.

**சிவன்**—பேசினான். பேசிப்போகிறான். அதினால் என்ன!

**பார்வதி**—இராவெல்லாம் இராமாயணம் கேட்டுவிட்டு விடிந்ததும் இராமனுக்கு சீதை என்னவேண்டும் என்று சொல்லுகிறீரே? அதினால் எனக்கு ஒன்றுமில்லையா? உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.

**சிவன்**—உனக்கென்ன சொல்லேன்.

**பார்வதி**—என்கற்பின் உயர்வுக்கு பங்கம் நேரிடவில்லையோ?

**சிவன்**—சரி! என்னசெய்யச் சொல்லுகிறாயோ அதைச்செய்கிறது.

**பார்வதி**—நான் கற்பில் உயர்ந்தவளாயிருக்க உமக்கு அக்கறையிருந்தால் அவள் மானத்திற்கு பங்கம் உண்டாக்க வேண்டாமோ? லோகத்தில் நடக்கவேண்டிய மாதிரி உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை.

**சிவன்**—சரி! இப்போதே புறப்படுகிறேன்.

**பார்வதி**—எப்படிசெய்வீர்களோ? எனக்கு ஒன்றும் தெரியாது. காரியத்தை முடித்து விட்டுதான் திரும்ப வேண்டும்.

இரண்டாம் அங்கம்
இரண்டாம் காட்சி முற்றிற்று.

---

**இரண்டாம் அங்கம். மூன்றாங் காட்சி.**

இடம்:—வைகுண்டம். விஷ்ணு சயனக்கிரகம் காலம்—நள்ளிருள்

**நடர்:—விஷ்ணு. இலக்ஷ்மி.**

**விஷ்ணு**—இலக்ஷ்மீ!

**இலக்ஷ்மி**—என்ன! சுவாமி! எங்குபோயிருந்தீர்கள்? எங்கேயோ போய் விடுகிறீர்கள். வீட்டில் என்ன நடந்தாலும் நீர் கேட்கிறதில்லை. நானோ பெண்பிள்ளை. என்னால் என்ன ஆகப்போகிறது? நீங்களோ என்னை அநாதையாய்விட்டு விடுகிறீர்கள்.

**விஷ்ணு**—என்ன இலக்ஷ்மீ! அப்படிச் சொல்லுகிறாயே? உன்னை எப்போதும் மார்பிலேயே வைத்துக்கொண்டிருக்கிறேனே!

**இலக்ஷ்மி**—அதற்கு என்ன அடையாளம்? வாய்வார்த்தைதானே? நாரதன் என் மானத்திற்கு குறைவு நேரிடச் செய்தானே!

**விஷ்ணு**—அப்படியா? சரி. அதின் சவிஸ்தாரத்தைச் சொல்லேன். என்னசெய்ய வேண்டுமோ அதைச்செய்து முடிக்கிறேன்.

**இலக்ஷ்மி**—அதுதான் எனக்கு வேண்டியது. சொல்லட்டுமா?

**விஷ்ணு**—ஆ! ஹா! தடையென்ன இருக்கிறது?

(தொடரும்)

கா. கந்தசுவாமி ஆச்சாரியர்,
போர்டாபீஸ் கிளர்க்கு.



**இலக்ஷ்மி**—நாரதன் பசிக்கு அன்னம்கிடைக்கவில்லையென்று, விஸ்வகர்மா கொடுத்ததாம், இரும்புக்கடலையைக் கொண்டுவந்தான். அதை பதப்படுத்திக் கொடுக்கச்சொன்னான். அது அக்கினியால் பொரிக்கப்படாதது என்று சொன்னான். பதிவிரதைகள் கைபட்டால் பொரியும் என்றான். அது என் கை ஸ்பரிசத்தால் பொரிக்கப்பட வில்லை. என்னை பதப்படுத்தும் சக்தியின்மைக்கு ஏளனமாய்ப் பேசினான். பூலோகத்தில் அனுசூயாவினிடம் பொரித்துக் கொண்டுவந்து சிறிது கொடுத்து அவள் கற்பைப்புகழ்ந்து பேசினான்.

**விஷ்ணு**—ஆ! ஹா? இவ்வளவுதூரம் செய்தானா அவன்! சரி! அவனை அதப்படுத்தட்டுமா?

**இலக்ஷ்மி**—உங்களுக்கு சுளுக்கிற்கு சிட்டிக்கை போடுகிறவிடம் தெரியவில்லையே! அவனை அதப்படுத்தினால் என்ன பிரயோசனம்? அவளை அவமானத்திற்குள்ளாக்கினால்தானே எனக்கு ஸ்ரேயசு உண்டாகும்.

**விஷ்ணு**—சரி அப்படியே செய்கிறேன். நான் போகிறகாரிய மெல்லாம் இதுவரையில் ஜயந்தானே. இதையும் முடித்து விடுகிறேன். எனக்கென்ன இதெல்லாம் க்ஷண நேரத்திற் கெல்லாம் செய்து விடுவேன். இப்போதே புறப்படுகிறேன்.

இரண்டாம் அங்கம்
மூன்றாம் காட்சி முற்றிற்று.

---

**இரண்டாம் அங்கம். நான்காங் காட்சி.**

இடம்:—சத்தியலோகம். பிரமன் சயனக்கிரகம் காலம்—நள்ளிருள்

**நடர்:—பிரமன். சரஸ்வதி.**

**பிரமன்**—சரஸ்வதி! சாரதா! பாரதி!

**சரஸ்வதி**—எனக்கு இன்றைக்கு ஒன்றும் சரிப்படவில்லை.

**பிரமன்**—என்ன மனதில் சங்கடம்?

**சரஸ்வதி**—என்னவோ? என்னவென்று சொல்வது?

**பிரமன்**—அதைவாய் விட்டுச் சொன்னால்தானே பரிகாரம் செய்ய.

**சரஸ்வதி**—பரிகாரம் செய்கிறதா! உடலில் சங்கடமானால் பரிகாரம் செய்யலாம். மனதில் சங்கடமானால் என்ன செய்வது?
நமது குமாரன் இருக்கிறானே நாரதன் அவன்தான் என்உயிர்க்குவதை. வேறென்ன இருக்கிறது? எந்தவேளையில் பிறந்தானோ? சும்மாயிருக்கமாட்டேனென்கிறான். எப்போது பார்த்தாலும் கலகம்செய்கிறான். நல்லவர்கள் பெரியோர்கள் மனதை யெல்லாம் நோகும்படிச் செய்கிறான். அவ்வளவிலே விட்டானா? கற்றவித்தையை பெற்ற தாயிடத்திலேயேயல்லவா காட்டுகிறான்.

பிரமன்—ஏதாவது துஷ்டவார்த்தை சொன்னானா.

சரஸ்வதி—ஆம். ஆம். நான் இந்திராணி கோயிலில் இருக்கும்போது வந்தான்ஏகாதசி விரதம் பாரணை செய்ய வில்லை என்றான். அன்னம் அகப்படவில்லையாம்.

பிரமன்—அவன் அறுதலையாய்த்திரிகிறான். வீட்டிலடங்கி யிருந்தால் அன்னத்திற்கு என்னகுறைவு? அகப்படாதா? அவனை அறியாத வயதிலேயே அடக்காமல் போய்விட்டேன். அவன் இப்போது கோயில் எருதைப்போல் மதோன்மத்தனாய்த்திரிகிறான்.

சரஸ்வதி—நான் சொல்வதைக் கேளுங்கள். மத்தியில் மத்தியில் பேசுகிறீர்களே.

பிரமன்—சொல்லித்தொலை. பிறந்தான் படுபாவி.

சரஸ்வதி—விஸ்வகர்மா இரும்புக்கடலை கொடுத்தாராம். அது அக்னியால் பதப்படுத்துவதற்கு ஆகாதாம். பதிவிரதை கை பட்டால் பதமாகுமாம். அதை என்கையில்கொடுத்து பொரிக்கச் சொன்னான். அது என்னால் பொரிக்க சாத்தியமில்லாதிருந்தது. அதற்காக, அம்மா! நீ பதிவிரதை அல்லைபோலிருக்கிறதேஎன்றான்.

பிரமன்—அப்படியா சொன்னான்? சண்டாளன்.

சரஸ்வதி—அதனோடு விட்டானா? பூலோகத்தில்போய் அனுசூயாவினிடம் பொரித்துக் கொண்டேன் என்று திரும்பிவந்து காட்டி அவள் பதிவிரதா தர்மத்தை மெச்சிப் பேசினான். அதினால் எனக்கு மானபங்கமாயிருக்கிறது.

பிரமன்—அவனை என்ன செய்யலாம்.

சரஸ்வதி—அவனை என்ன செய்கிறது அவன் கெட்டவன் நல்லவனாகப் போகிறானா? அதுஒன்று மில்லை. அனுசூயாவை மானபங்கப்படுத்தினாலல்லவோ என் மனக்குறை தீரும்.

பிரமன்—அப்படியா! சரி! அப்படியே செய்கிறேன். இப்போதே புறப்படுகிறேன்

இரண்டாம் அங்கம்
நான்காம் காட்சி முற்றிற்று.

---

**இரண்டாம் அங்கம்.** **ஐந்தாங்காட்சி.**

இடம்:—பூலோகம் அத்திரிமுனிவர் ஆஸ்ரமம் போகும் வழி காலம்—காலை

**நடர்:—சிவன். விஷ்ணு. பிரமன்.**

சிவன்—என்ன விஷ்ணுவே! எவ்விடம் க்ஷணம் போகிறீர்?

விஷ்ணு—நீர் எங்கு போகிறீர்

சிவன்—நீர் எங்கு போகிறீர் என்றால் நீர் எங்குபோகிறீ என்கிறீரே! எங்குபோகிறீர் சொல்லுமே.

விஷ்ணு—நீர் எங்குபோகிறீர் அதைச் சொல்லுமே.



சிவன்—என்னங்கணம் பரிகாசம்? நீர்சொல்லுமே. எப்போது பரிகாசம் செய்யவேண்டும் எப்போது செய்யப் போகாது என்பதே உம்மிடத்தில் இல்லை.

விஷ்ணு—உம்மிடத்தில் தான் இல்லை, நீர் சொல்லுமே.

சிவன்—நீர் சொல்லுமே.

விஷ்ணு—நீர் சொல்லுமே.

சிவன்—சரியாய்ப்போய் விட்டது. நீர் சொன்னால் என்னபோய்விடும்?

விஷ்ணு—நீர் சொன்னால் என்னபோய் விடும்?

சிவன்—சரியாய்ப் போச்சு. சொல்லுமென்றால்.

விஷ்ணு—சரியாய்ப் போச்சு சொல்லுமென்றால்.

சிவன்—இந்த வாக்குவாதத்திலேயே பொழுது போய்விடும். சரி. நான் அத்திரிமுனிவர் ஆஸ்ரமம்போகிறேன்.

விஷ்ணு—சரி நானும் அத்திரிமுனிவர் ஆஸ்ரமம்தான் போகிறேன்.

சிவன்—என்ன காரியமாய்?

விஷ்ணு—நீர் என்னகாரியமாய்

சிவன்—நீர் எப்போதும் குசோத்தியக்கார ஆசாமி.

விஷ்ணு—என்னகாரியமாய் என்றால் இது ஓர் குசோத்யமா?

நீசெய்தால்மாத்திரம் செய்யலாம் நான்செய்யக்கூடாதா? உமக்கு ஒரு பேச்சு. எனக்கு ஒரு பேச்சா. மாமியார் உடைத்தால் மண்பானை. மருமகள் உடைத்தால் பொன்பானையா? வெகு நாயங்கணம் உம்முடையது.

சிவன்—மனுஷ்யாள் கேட்டால் கேட்டவரையில் சொல்லவேண்டும். அப்போது தானா நியாயம் அநியாயம் யோசிக்கிறது? உமக்கு அவசரம் அக்கறை இல்லை.

விஷ்ணு—நிரம்பவும் சலித்துக் கொள்வீர். நான் தான் சொல்லுகிறேனே. நான் அனுசூயாவின் மானபங்கத்திற்காக போகிறேன். நாரதன் என்னவோ கலகம் செய்தானாம். அனு சூயாவை கற்புக்கரசி என்று புகழ்ந்தானாம். அதில் உமது தங்கைக்கு அவமானமா யிருக்கிறதாம். அனுசூயாவுக்கு பங்கம்நேர்ந்தால் தனக்குஸ்ரேயஸு வந்துவிடுமாம். என்னவோ சொன்னாள். என்ன பெண்கள்! வார்த்தையை தடுத்தால் நம்மை மறுநாளைக்கு சேர்க்கமாட்டார்கள். என்ன செய்கிறது. அதற்காக அவர் சொன்னதை யெல்லாம் செய்யவேண்டி யிருக்கிறது.

சிவன்—ஆமாங்கணம். அப்படித்தான் என்தலை யெழுத்தும். பெண்முறுக்கு தீர்ப்பதிலேயே பொழுதுபோய் விடுகிறது. அந்த காரியமாய்த்தான் நானும்போகிறேன். பார்வதியும் அந்த வேலைதான் இட்டாள். என்னசெய்கிறது; யார்அங்கே. பிரமாவே! நீர் எங்கேபோகிறீர்? என்னங்கணம் மாப்பிள்ளை? க்ஷேமமாயிருக்கிறீரே.

பிரமா——பிரமா ஷோக்கு என்னவந்தது. எனக்கு சிருஷ்டித் தொழிலே சரியாயிருக்கிறது. அதனோடு ஆத்துக்காரி ஏதாவது வேலைவைத்துவிடுகிறாள்.

சிவன்——என்னவேலை?

பிரமா——என்னவேலை! என் பிள்ளை நாரதன் இருக்கிறானே துஷ்டன். சும்மாண்ணு இருக்கமாட்டேன் என்கிறான் வீட்டில் தங்குகிறதில்லை. ஊரெல்லாம் நாயாட்டம் திரிகிறான். கலகம் செய்கிறான். அம்மாளை பதிவிரதை அல்ல என்றானாம். அனுசூயாவை பதிவிரதை என்றானாம் அதற்கு நம்மை பிடித்துக் கொண்டு அனுசூயாவை மானபங்கம் செய்யச் சொல்லுகிறாள். இல்லாமற்போனால்வீட்டில் நுழையக் கூடாதாம். பெண்ராச்சிய மல்லவோ பெரிதாய் போய்விட்டது!

சிவன்——நானும் அந்தகாரிய மாய்த்தான் போகிறேன். உங்கள்மாமி. என்ன! லேசானவளா? உங்கள் அண்ணா விஷ்ணுவும் அந்தகாரியமாய்த்தான் போகிறார்.

பிரமன்——ஆனால்போவோம் வாருங்கள்.

இண்டாம் அங்கம்
ஐந்தாம் காட்சி முற்றிற்று.

---

**மூன்றாம் அங்கம்.** **ஆறாங் காட்சி.**

இடம்:——அத்திரிமுனிவர் ஆஸ்ரமத்திற்கு சமீபம் காலம்——காலை

**நடர்:——சிவன். விஷ்ணு. பிரமன்.**

சிவன்——ஏங்காணும் ஓய்மைத்துனரே! என்ன நெடுக நடக்கிறீரே? இரும்! இரும்! இதுதான் சமயம். நமது நிஜரூபத்தை மாற்ற வேண்டும்.

விஷ்ணு——ஆம் இதுதான் சமயம். சரி. மாற்றிக்கொள்வோம் நமது ரூபத்தை. இதோ தோன்றுகிறதே ஓர் மண்டபம் அதில் நம்ரூபத்தைமாற்றி பிராமண வேடம் போட்டுக் கொள்வோம். ஆனால் எனக்கு ஓர் சந்தேகம். நமது ஆடைகளையெல்லாம் எங்கேவைக்கிறது?

சிவன்——ஏன் இவ்விடத்திலேயே வைத்துவிடலாம்

விஷ்ணு——ஏங்காணும்! ஓய்! நன்றாய் சொன்னீரே. ஆமாம் உமக்கு ஒன்றும் பயமில்லை. மடியில் கனமிருந்தால்தானே வழியில் பயம்.

சிவன்——ஓய்! ஓய் ஏங்காணம் அப்படிச் சொல்லுகிறீர்

விஷ்ணு——என்ன ஓய்! ஓய்! காய்! காய்! என்கிறீரே. உண்டானதைத்தான் சொன்னேன். உமக்கு என்ன இருக்கிறது. “ஆண்டி அடித்தாலும் கந்தைபரந்ததாம்” என்று இருக்கிறீர்.

சிவன்——அது என்ன! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

விஷ்ணு——உனக்குவிளங்குமா. உனக்கு எப்போதும் முதலில் விளங்காது. பின்புதான் விளங்கும். முன்யோசனை யிருந்தால்தானே?



## திரிலோக பக்தர் சரித்திரம்.

கேளுங்கள் சாதுக்களே! முன்னே டில்லிப்பட்டணத்தில் நிவாஸமாயிருந்து அம்பிகையின் திருவருட்பேற்றை யடைந்து அதனால் முத்திபெற்ற இராமசுனாரின் சரித்திரத்தைச் சொன்னோம். இனி ஜோத்பூருக்கடுத்த வாகோலி யென்னும் கிராமத்தில் வசித்து ஸ்ரீ ஹரியின் சரணாரவிந்தத்தை யடைந்த திரிலோகர் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்குவாமென்று நாபாசி முனிவர் கூறுகின்றார்.

நீர்வளம், நிலவளம் பொருந்திய ஜோத்பூருக்கு அடுத்த வாகோலி யென்னும் கிராமத்தில் விஸ்வகர்ம குலத்திற்பிறந்தவரும், வேதாதிகாசங்களின் பொருளையுணர்ந்தவரும், ஸ்ரீமந் நாராயணனிடத்தில் அல்லும் பகலும் இடையறாத பக்தியுடையவரும், சாதுக்களிடத்தில் அன்புபூண்டு அவர்களுக்கு அறுசுவை யோடுங்கூடிய அமுதளிப்பவரும், காமக்குரோதாதிகளைக் களைந்தவரும், பொற்பணித்தொழிலில் மிக்க வல்லமையுடையவரும், சுசீலமாகிய ஆசார அநுஷ்டானங்களைக் கொண்டவரும், பிறர் பொருளையிச்சியாது தன் கஷ்டார்ஜ்ஜிதமான பொருளையே கனமாகவெண்ணிக் காலங் கழிப்பவரும், அருந்ததிக்குச் சமானமான கற்பினையுடைய லக்ஷ்மீபாய் என்னும் மனைவியோடு இல்லறதருமத்தை நடாத்துபவருமான திரிலோக ரென்னும் ஹரிபக்த ரொருவரிருந்தார். அவரது திறமையைக் கேள்விப்பட்ட அவ்வூரரசன், தம்வீட்டில் விவாஹமொன்று நெருங்கியபடியால், அதற்கு ஆபரணங்களைச் செய்யும் பொருட்டு திரிலோகரை யழைத்து வரும்படி சேவகர்களை அனுப்பினான். அவர்கள் அரசன்சொற்படியே திரிலோகரிடம்வந்து சுவாமி! நமதரசர் தங்களையழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கிறார்; ஆகையால் சீக்கிரம்விஜயஞ்செய்தருளவேண்டும்;என்றுபிரார்த்திக்க, திரிலோகர் அவ்வார்த்தையைக்கேட்டவுடனே சேவகருடனே அரண்மனைக்குச் சென்றார். அரசன் திரிலோகரைப்பார்த்து, ஐயா! திரிலோகரே! நீவிர் பொற்பணித்தொழிலில்மிகுந்த நிபுணரென்றும், சத்தியசீல ரென்றும், உத்தமகுணமுடையவ ரென்றும், கெடுத்தப்பாது வேலைசெய்துகொடுக்கக்கூடியவரென்றும், கேள்வியுற்றேன்; ஆதலால் என் வீட்டு விவாஹத்திற்கு முக்கியமான நகை ஒன்று வேண்டியதா யிருக்கிறது. அதனை அதிக வேலைத்திறமாக மூன்று நாளில் செய்து முடித்துக்கொடுக்க வேண்டுமென்று அரசன் சொல்ல, அதைகேட்ட திரிலோகர், தங்களிஷ்டப்படியே மூன்றுநாளில் அதி உன்னதமாக முடித்துக்கொடுப்பதற்கு யாதொருதடையுமில்லை; யென்று கூறவும், அரசன் மந்திரியையழைத்து சொர்ணத்தைக் கொண்டுவரும்படி கட்டளையிட, அவ்வாறேமந்திரியானவன்கஜானாவிற்குச் சென்று சொர்ணத்தை எடுத்துவந்து அரசனிடம் கொடுக்க, அரசன் அச்சொர்ணத்தைப்பெற்று அவ்வாபரணத்திற்கு வேண்டியவளவு திரிலோகரிடம் கொடுத்து, சீக்கிரத்தில் ஆபரணவேலையை முடித்துக் கொடுக்கும்படி ஆக்கியாபித்தார்.

திரிலோகர் அப்பொன்னை யெடுத்துக் கொண்டு தன்வீட்டிற்கு வந்தார். உடனே சிலபாகவதர்கள் தன்வீட்டிற்கு வரவே, வெகு ஆநந்தத்துடன் அவர்களுக்கு வந்தனைவழிபாடுசெய்து ஆசனமிட்டு அவரவர்களை அவ்வாசனத்திலமரச்செய்து லக்ஷ்மீபாய் என்னும் தனதுமனைவியையழைத்துச் சீக்கிரம்பாகவதர்களுக்குச் சமையல்

செய்வாயென, அவ்வம்மை யாரும் அதிக சந்தோஷத்துடன் அறுவகைச் சுவைகளோடு கூடிய அன்னமுதலியவற்றைச் சமைத்துவைத்து தனது பர்த்தாவாகிய திரிலோகரையழைத்து, சமையலாய்விட்டது, பாகவதர்களை ஸ்நானஞ்செய்து வர அனுப்புங்கள்; என்று சொல்லிய அளவில் திரிலோகர் பாகவதர்களை ஸ்நான கட்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவரவர்களின் வேஷ்டி முதலிவைகளை மாசுநீங்கும்படி துவைத்து வெய்யலில் காயவைத்து மடிப்பதற்குள் பாகவதர்கள் ஸ்நானம் செய்துவிட்டு வந்தார்கள். உடனே அவரவர்களின் வேஷ்டியைக்கொடுக்க, அவர்கள் அன்போடுவாங்கி யுடுத்திக்கொண்டவுடன் யாவரையும் ஒருங்கு சேர வழைத்து தன்னில்ல மடைந்து, பாகவதர்களை போஜனத்திற்கெழுந்தருளச்செய்து அவர்கள் பாதங்களை தீர்த்தத்தினால் விளக்கி அத்தீர்த்தத்தை தன் சிரசின்மேற் புரோக்ஷித்துக் கொண்டு, அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைக்கூறி அவர்க ளிஷ்டப்படியே அறுவகைச் சுவைகளோடு அமுதுசெய்விக்க, அவர்களும் அதிக சந்தோஷமாய் அமுதருந்தி ஸ்ரீ ஹரியின் திருநாமங்களையும், அவர் கல்யாண குணங்களையும்புகழ்ந்துகொண்டு அவர்வீட்டிலேயே இரண்டுநாளிருந்தார்கள்.

திரிலோகர் இந்த பாகவத கோஷ்டியிலிருந்துகொண்டு அரசன்தனது ஆபரணத்திற்காகக் கொடுத்த சொர்ணத்தை கொண்டுவந்து பெட்டியில் வைத்ததையும், மூன்று நாள் கெடுவையும் முற்றும் மறந்து போயினர்.

இப்படியிருக்க மூன்றுநாளாகியும் அரசனது கல்யாணத்துக்கு ஆபரணஞ்செய்து வாராமையினால் அரசன்சேவகரை அனுப்பி திரிலோகரை நகையுடன் யழைத்து வரும்படிகட்டளையிட்டார். அவர்கள் அவரிடம் வந்து இராஜன் நகையுடனும்மை யழைத்துவரச்சொன்னாரென்று சொல்ல, திரிலோகர் திகிலடைந்து சேவகர்களோடு அரசனிடஞ்சென்று தெண்டனிட்டு நாளையதினம் தேவரீர் நகையை கொண்டுவந்து கொடுக்கிறேன், இன்னும் கொஞ்சம் வேலையிருக்கிறது, அதுஇன்றோடு பூர்த்தியாகிவிடும்; என்று சொல்ல, அதற்கரசன் திரிலோகரை நோக்கி, நீர் இப்பொழுது சொன்ன வாக்கைத் தவறினால் சிக்ஷைக்குட் படுவீர் என்ன, திரிலோகரதனைக் கேட்டுக்கொண்டு வீட்டிற்குவந்து சிந்தை கலங்கினவராகி அந்தநகையை ஒருநாளில் செய்யமுடியாதே, என்னசெய்வேன்,ஒன்றுந்தோன்றவில்லையே, நாளை நாம் ஊரிலிருந்தால் மரணம் நிச்சயமாமென்று துணிந்து அன்றிரவே ஸ்ரீ ஹரியைச் சிந்தையிலிருத்திக்கொண்டு ஆரண்யத்திற் கோடிப் போனார்.

உதயமானவுடன் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணன் திரிலோகருடைய ரூபத்தை வகித்து அந்தநகையை முடித்துவைத்துக் கொண்டு வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தார்.

இங்ஙனமிருக்க. இராஜனுக்கு நான்கு நாள்வரையும் நகைதீர்ந்து வாராமையால் சேவகர்களை அனுப்பி திரிலோகரை அழைத்துவரும்படி உத்திரவளிக்க, அவ்வுத்திரவைப்பெற்ற சேவகர்கள் ஓடிவந்து திரிலோகரைக்கண்டு அரசர் உம்மை அழைத்துவரும்படி ஆக்ஞாபித்திருக்கிறார். ஆதலால் தாங்கள் உடனே தடையின்றி புரப்பட்டு வரவேண்டியது என்று சொல்லவும், இவ்வார்த்தையைக்கேட்டு திரிலோகர் உருவந்தாங்கிய ஸ்ரீமந் நாராயணனே அவ்வாபரணத்தைக் கையிலேந்திகொண்டு அரசனிடஞ்சென்று அதனைக்கொடுக்க, அவனதிபானந்தமடைந்து இவ்வுலகில் இவ்வண்ணமான நகையைக் கண்டதில்லையென்று மகிழ்வுற்று வேண்டிய தனத்தை திரிலோகருக்குக் கொடுத்தனுப்பினான். அப்பொருளைக் கொண்டுவந்து வீட்டில் கற்பின் மணியாய் விளங்கும் இலட்சுமிபாய் கையில்கொடுத்து சாதுக்களனேகர் இன்று வருவார்கள்; அவர்களுக்குகாக சமையல்,



செய்து போஜனமளித்து உற்சவங்கொண்டாடவேண்டுமென்று சொல்ல, அவ்வம்மையாரும் அவ்வார்த்தையைச் சிரசாவகித்து அவர்சொல்லியபடி பலவிதகச் சாயவகைகள் சமைத்துவைத்தார். ஸ்ரீஹரி பகவத்பக்தரான பாகவதர்களும் அங்கு வந்தார்கள். திரிலோகருடைய உருவந்தாங்கிய பெருமான், வந்த வைஷ்ணவ பாகவதருக்கு பூஜாவிதிகளை யெல்லாம் புரிந்து பந்தியாகஉட்காரும்படிச்செய்து இலைகளைவட்டித்து மதுரமான வடை பாயசங்களோடு போஜனமளித்து அனைவரும் பக்ஷித்தபின் பெருமானும் பக்ஷித்து வீட்டாருக்குச்சொல்லாமலே இளைத்த திருமேனியுடைய ஒரு சாதுவேடந்தாங்கி பிரசாதத்தைக் கொஞ்சமெடுத்துக் கொண்டு திரிலோகரிருக்கு மாரண்யஞ் சென்று அந்த பக்தரைக் கண்டு ஐயா! நான் வழிதப்பித் திப்பிரமையடைந்திருக்கின்றேன்; நீர்வழியைக்காட்டவேண்டுமென்றார். திரிலோகர் அந்த சாதுவைப்பார்த்து தாங்களெவ்விடத்திலிருந்து வந்தீரென்று கேட்கப் பெருமான், யான் ஜோத்பூருக்கு அடுத்த வாகோலி என்னும் பதியில் வசிக்கும் திரிலோகர் வீட்டினின்றும் வந்தேன் என்று பின்னும் கூறுவர்.

அந்தபக்தர் இன்றுவிசேஷமான வடை, பாயசம், சித்திரான்ன போஜன முதலியவைகள் சமைத்து எமக்களித்தார், என்னுடன் இன்னும் அநேக பக்தர்கள் திருப்திகரமாக போஜனம் செய்தார்கள். மதுரமான கனிவர்க்கங்கள் கொண்டுவந்து பரிமாறினார். நான் அவைகளைச் சுவைத்துச்சுவைத்து ஆனந்தத்தோடு அதிகமாய் உண்டதினாலும், கிழத்தனமானதினாலும் தேஹாயாச முண்டாகி ஓர் மரத்தின்நிழலில் படுத்து சற்றுநித்திரைபுரியலாமென நினைந்துகொண்டே ஏதோ ஒருகவனமாய் வழிதப்பி இவ்வாரண்ய மடைந்து இங்கு தங்களைக்கண்டேன்; என்று கூறவும்; இவ்வதிசயத்தைக்கேட்ட திரிலோகர், ஐயா சாதுவே! அந்தபக்தர் எனக்குத் தெரியும் அவர் ஊரிலில்லையே. அவர் வீட்டில் தாங்கள் போஜனஞ் செய்ததாகச் சொல்லுவது பொய்யே; என்று சொல்லியவளவில் சாதுவானவர் கூறுவார்.

யான் ஒருபொழுதும் பொய் சொல்லேன்; உண்மையை அறியவேண்டுமானால் இதோ அவ்விடத்திலிருந்து கொஞ்சம்பிரசாதங் கொண்டுவந்திருக்கின்றேன்பாரும், இதுதேவாமிர்த்தை யொக்கும். நீரும் பசிப்பிணியால் களைத்திருப்பவர் போல் காணுகிறது. இவ்வன்னத்தைப் பசியாற உண்டு இதன் மதுரத்தைத் தெரிவிப்பாய், என்று சொல்லிக்கொண்டே வஸ்திரத்திலிருந்த அன்னத்தை அவிழ்த்து எடுத்துக் காண்பிக்கவும், கமகமவென்று பரிமளம்வீசியதைக்கண்ட திரிலோகர் அதிசயமடைந்து நிற்கும்போது, ஏனையா! யோசிக்கின்றீர் இதனைப் பக்ஷணைசெய்யுமென்று தன்கரத்தால் எடுத்துகிருபாநோக்கத்தோடு கொடுக்க அதை திரிலோகர் மஹாபிரசாதமென்று பெற்று அருந்தி ஆனந்தமும் ஆச்சரியமு மடைந்து சாதுவைநோக்கி, ஐயா! அந்த கிருகஸ்தன் வீட்டில் இன்று என்னவிசேடம்; எந்தகாரணத்தினால் பக்தர்களுக்குப் போஜனமளித்தார்; என்றுவினவ பெருமான் கூறுகின்றார்.

ஐயா! இவ்வூரை யாண்டுவருகின்ற அரசனானவன் ஒரு ஆபரணம் செய்து கொடுக்கும்படி அந்தபக்தரிடத்தில் சொர்ணத்தைக்கொடுத்தான். அதன்படியே அவ்வாபரணத்தை அதிஉன்னதமாகவும், வேலைப்பாடாகவும்செய்துகொடுத்தார். அதற்கரசன் சந்தோஷித்து ஏராளமான தனத்தை அவருக்குக் கொடுத்தான். அதைக்கொண்டு அடியாராகிய பாகவதர்களுக்கு அன்னமளித்து உற்சவங்கொண்டாடினார்; என்று சொல்லவும் அதைக்கேட்ட திரிலோகர், சாதுவேடம்பூண்ட பெருமானை அழைத்துக்கொண்டு தன்கிருஹமடைந்து உள்ளே இருவரும் செல்லும்பொழுதே சாதுவாகிய பெருமான் மறைந்தருளினார். உடனே திரிலோகர் சாதுவைத் தேடிப் பார்த்தும் அகப்படாமல் வருத்தமுடைய

வராய், திரிலோகர், தன்மனையாளை நோக்கி நடந்தசங்கதி என்னவென்று கேட்க, அதற்கு மனையாள், இவ்விடத்தில் அதிசயமொன்றுங் கண்டிலேன். தங்களுக்குத்தெரியாதவிஷய மொன்றுமில்லையே! அரசனிடத்தில் நகைசெய்துகொண்டுபோய்க் கொடுத்து அவ்வரசனால் கொடுக்கப்பட்ட ஏராளமான திரவியத்தைக் கொண்டுவந்து அடியாள் கையில் கொடுத்து, இன்று சாதுக்களுக்கு அமுதளித்துஉற்சவங்கொண்டாட வேண்டு மென்று சொல்லியபடியே அடியாள் சமையல் செய்துவைக்க, தாங்கள் அவர்களுக்கு அன்புடன் பரிமாறினீர்களே, அதைவிட வேறு நடந்த விஷயம் ஒன்றுமில்லையே; என்று சொல்லவும் திரிலோகர் ஆச்சர்யமடைந்து ஆ! ஹா! இவைகளெல்லாம் எம்பெருமானின் திருக்கூத்தேயன்றி வேறில்லை. அரசனுக்கு நாம் ஆபரணம் செய்துகொடுக்கவு மில்லையே, அரசன் திரவியமும் கொடுக்கப்பெறவு மில்லையே, சாதுக்களுக்கு அன்னமெங்ஙன மளித்தோம் அறுசுவையுடன் எவர்க்குப் பரிமாறினோம். அரசன் இட்டகெடுத்தப்பிப்போய் ஆருயிர்க்கு ஆபத்தென்று ஆரண்யத்திற் கோடினோமே, அதுசமயம் என் ஆபத்தை யறிந்து அரசனுக்கு அரும்பணிசெய்து கொடுத்து அடியேனை மீட்டுவைத்த அச்சுதனைக்காணேனே, ஆரண்யத்தில் அன்னங்கொண்டுவந்தளித்த அப்பெருமானை இனி யெப்பொழுது காணப்போகிறேன் அந்தோ! பாபியாகிவிட்டேனே, ஏ நாராயணா! மாதவா! கோவிந்தா! க்ஷீரசாகரவாசா! கருடாரோஹணா! பரந்தாமா! பக்தவத்ஸலா! பாபவிமோசனா! பண்டரிபுரநாதா! பரமேஸா! பத்மநாபாவென்று பலவாராக தோத்திரம் செய்து ஆனந்தக் கூத்தாடி அரும்புகழ்பாடி தன் ஆற்றாமையை விசேஷமாகச் சொல்லிக்கொண்டு ஸ்ரீ ஹரியை நினைந்து ஐம்புலனடக்கி அருந்தவசிரேஷ்டராய் நிற்குமளவில், ஸ்ரீமந்நாராயணர் இவர் அன்புக்கும் பக்திக்கும் மனமகிழ்ந்து லட்மிசமேதராய் கருடாரோகணித்து வந்து இவ்வடியார்க்குத் தெரிசனங்கொடுத்து எனதன்பனே! நீ என்மீதும், எனதடியவர்களாகிய பாகவதர்கள்மீதும் வைத்த அன்பின் மிகுதியாலும், அப்பாகவதர்களுக்கு அறுசுவையன்னங் கொடுத்துவந்த விசேஷத்தாலும் புண்ணியம் மேலிட்டிருப்பதினாலும் உன் விஷயத்தில் எமக்குக் கருணையுண்டாகி இத் திருவிளையாடல்களைச் செய்தோம். இனியுனக்கு யாதொருகுறைவுமில்லை. முன்னே நீ ஆரண்யத்தி லிருக்கும்போது உன்மனையாளிடம்யாம் ஏராளமான திரவியங்கொடுத்துள்ளோம். அதைக்கொண்டு இன்னும் எமது பாகவதராகிய சாதுஜனங்களுக்கு விசேஷமாக அமுது செய்வித்து அதனால் வரும் புண்ணியத்தை அனுபவித்து சிலகாலம் சுகமாய்வாழ்ந்து எமது திருவடிநீழலை அடையக்கடவீர் என்று அந்தர்த்தானமாயினர்.

பிறகு தன் மனைவியுடன் தானும் ஒரே மனதுடையவராய் வரப்பட்ட சாதுக்களுக்கு அமுதளித்துக் கொண்டு ஹரிபரந்தாமனை அல்லும்பகலும் மறவாதமனதுடையவராய் சிலகாலம் வாழ்ந்திருந்து பரமபத மடைந்தனர்.

சுபம். சுபம். சுபம்.

சிவன்—எப்போது ஐயா! எனக்கு முன்யோசனையில்லை.

விஷ்ணு—சரி! அதையெல்லாம் இப்போது சொல்லவேணுமா? பத்மாசூரனுக்கு வரம் கொடுத்தீரே அப்போது யோசனை யிருந்ததா? முன்னே விளங்கிற்றா? பிறகு அல்லவோ விளங்கிற்று. இது ஒன்றுதானா? எத்தனையோ தடவை ஸ்தோத்ர பிரியராய் அல்பசந்தோஷியாய் அசந்தர்ப்பமான வரங்களைக்கொடுத்து ஆபாச மான நிலைமைக்கு வந்தீர். அப்போது எல்லாம் நான் அல்லவோ மோகினியாக வும் இன்னும் பலவிதமாய் ரூபமெடுத்து அந்த ஆபாச நிலைமையிலிருந்து உம் மை விடுதலை செய்தேன். நான் சமயோசிதமாயும் சாமர்த்தியமாயும் காரியங் களை நடத்தாவிட்டால் உம்முடையது அதோகதிதான்.

சிவன்—ஏன் காணம் நீர்தான் என்னை ரக்ஷித்து விட்டீரோ? நீர் இரணியன் இரத்தத் தைசாப்பிட்டு வெறிகொண்டு திரிந்தீரே உம்மையார் காப்பாற்றியது? இராவ ணனைக் கொன்ற பழி இராமேச்சுரத்தில் என்னை பூசித்ததினாலல்லவோ தீர்ந் தது. நீர் பகைவர்மீது கிருகிருவென்று சுற்றிவிடுகிறீரே சக்ராயுதம், அதை உமக்குயார் கொடுத்தது? திருப்பாற் கடலில் விஷத்தால் ஒழிவீர்போலிருந் தீரே? அப்போது நீர் என்னைகாப்பாற்றினீரோ? நன்றாய் சொன்னீரய்யா "வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று" நன்றாயிருக்கிறது.

விஷ்ணு—அதெல்லாம் போகட்டும். இப்போது நடக்கவேண்டியதைப் பாரும். இது பந்தோபஸ்தான இடந்தானா?

சிவன்—பந்தோபஸ்துக்கு என்னகுறைச்சல்?

விஷ்ணு—பந்தோபஸ்துக்கு குறைச்சலேயில்லை. உம்முடையசொத்தை யார் அபேக்ஷி க்கப்போகிறார்கள்?

சிவன்—யாரும் அபேக்ஷிக்கமாட்டார்களோ?

விஷ்ணு—ஒருவரும் அபேக்ஷிக்கமாட்டார்கள். உம்மிடத்தில் என்ன இருக்கிறது? கை யிலேயும் அரையிலேயும் மார்பிலேயும் விரல்களிலேயும் கழுத்திலேயும் தோள் களிலேயும் முடியிலேயும் பாம்புகளிருக்கிறது. யானைத்தோல் புலித்தோல் இருக்கிறது. கையில் மண்டையோடு அக்னிகுண்டம் (மழுவாயுதம்). கழுத்தில் எலும்புமாலை. மார்பில் ஆமையோடு பன்றிக்கொம்பு. இவற்றையார் எடுத்துக் கொண்டுபோவார்கள்?

சிவன்—இதையெல்லாம் சொல்லுகிறீரே உமக்கு வெட்கமில்லையா? ஆமையோடு பன் றிக்கொம்பு இவை யெல்லாம் நீர் எடுத்த கூர்மாவதாரம் வராகாவதாரம் முத லியவற்றில் உம்மை நாம் ரக்ஷித்ததின் அடையாளமாகவல்லவோ தரித்துக் கொண்டிருக்கிறோம். போகட்டும். உம்மிடத்தில் என்னஇருக்கிறது எல்லாரும் அபேக்ஷிக்கும்படியானது? கையில் வைத்துக்கொண்டிருக்கிறீரே நத்தை ஓடு (சங்கு) அதையார் இச்சிப்பார்கள்?

விஷ்ணு—என்னிடத்தில் சர்வாபரணங்கள் என்ன! பீதாம்பரங்கள் என்ன! உமக்கு என்னயிருக்கிறது? கோழிஇறகு, சாம்பல்பை, இலந்தைக்கொட்டை மாலை இவ்வளவு தான்.

சிவன்—உமக்கு ஆபரணம் பீதாம்பரம் எப்போது வந்தது நடுவாந்திர வாழ்வுதானே? என் தங்கை இலக்குமியை மணந்தபிறகுதானே உமக்குஎல்லாசெல்வமும்? என்னுடைய செல்வந்தானே ஓய்! உம்மிடத்துள்ளது?

விஷ்ணு—உம்முடைய தங்கையால் வந்துவிட்டதோ! அவள் குணநிசயத்தில் மேலானவள் ஆயிற்றே! முதலில் அவள்வீட்டில் தங்கினுலல்லவோ? ஓயாத சுற்றுக்காலியாயிற்றே! உத்தமஸ்திரீகள் திரிவார்களோ இப்படி?
என்தங்கை பார்வதி உமதுவீட்டிலேயே யில்லையா? என்தங்கையையும் உமது தங்கையும் ஒத்திட்டுப்பாரும்.

சிவன்—ஓய்! அதிகமாய் ஒன்றும்பேசாதேயும் உமக்கும்நமக்கும் பிரமாதம் நடக்கும்.

பிரமா—மாமா! மாமா! அண்ணு! அண்ணு! நாம்வந்த காரியத்தை விட்டுவிட்டு என்ன பரிகாசத்திற்கு தொடங்கிவாய்ச்சண்டையாகி கைச்சண்டைக்கு வருவீர்கள் போலிருக்கிறது? இப்போது நடக்கவேண்டியதைப் பாருங்கள்.

விஷ்ணு—பிரமா! அடே! அப்பா! இவ்விடத்தில் யாராவது நமது ஆபரணங்களையும் பீதாம்பரங்களையும் எடுத்துக்கொண்டுபோய்விட்டால் என்னசெய்கிறது?

சிவன்—இவ்விடத்திலேயே வைக்கலாம். வையும். யாரும்யெடுத்துக்கொண்டு போகமாட்டார்கள். உமக்கு ஏன் அப்படி விகல்பமானபுத்தி? நீர் கோபிகாஸ்திரீகளின் வஸ்திரங்களை திருடிக்கொண்டுபோய்விட்டீரே, அதினுலேயா? சரிதான். தான் திருடி அயல்நம்பாள் என்றபடி யிருக்கிறதே! வந்தவேலை நிறைவேறும் வழியைப்பாரும்.

விஷ்ணு—சரி. சீக்கிரமாய் வேறுருக்கொள்வோம்.

மூன்றும் அங்கம்
முதல் காட்சி முற்றிற்று.

மூன்றும் அங்கம்.

இரண்டாம் காட்சி.

இடம்:—அத்திரிமுனிவர் ஆஸ்ரமம். காலம்—காலை

நடர்:—சிவன். விஷ்ணு. பிரமன். (பிராமணுள்.) அனுசூயா.

முதல் பிராமணன்:—அனுசூயா! அனுசூயா!

அனுசூயா—யார் அங்கு? (கதவைத்திறந்து) வாருங்கோ! வாருங்கோ! முனிஸ்ரேஷ்டர்களே வாருங்கோ!

முதல் பிராமணன்:—அத்திரிமுனிவர் இருக்கிறுரா?



அனுசூயா—நதி ஸ்நானத்திற்கு போயிருக்கிறுர். ஜபதபங்கள் முடித்துக் கொண்டு திரும்பும் சமயம். நின்றபடியே பேசுகிறீர்களே. ஆசனத்தில் உட்காருங்கள்.

இரண்டாவது பிராமணன்—உட்கார்ந்தால் எங்களுக்கு நாழியாய்விடும். எங்களுக்கு பசியாகயிருக்கிறது. பிக்ஷைக்குவந்தோம். முனிவர் வீட்டில் இல்லையே. இன்னும் எங்கேயாவது போகிறோம்.

அனுசூயா—சுவாமிகாள்! நீங்கள் இவ்விடத்திலேயே புசிக்கலாம். முனிவர் சீக்கிரம் வந்து விடுவார். அடியேன் அவருக்கு பாதபூஜைசெய்ததும், நீங்கள் முனிவரோடு அருந்தலாம். பிக்ஷை என்னவோ தயாராயிருக்கிறது.

இரண்டாவது பிராமணர்—அவர்வந்து பாதபூஜையாக நேரமாகும். நாங்கள் வேறு இடம்தான் செல்லவேண்டும் பிக்ஷைக்கு.

அனுசூயா—வேண்டாம். வேண்டாம். இவ்விடத்திலேயே அருந்துங்கள். முனிவர் வந்தால் நான் சொல்லிக்கொள்கிறேன். உம்மைப்போன்ற முனிபுங்கவர்க்கு முன்னதாய் உண்டி அருந்துவித்தால், அவர் ஒன்றும் சொல்லார். பதிவிரதாதர்மத்திற்கும் விரோதமாகாது.

மூன்றுவது பிராமணர்—சரி! ஆனுல் இங்குதான்பிக்ஷை எடுத்துக்கொள்வோம். இவ்வளவுதூரம் இந்த அம்மாள்சொல்லுகிறுளே. அனுசூயா! எங்களுக்கு பிக்ஷை எப்படி கொடுக்கவேண்டும் தெரியுமா?

அனுசூயா—நீங்கள் சொல்வது விசித்ரமாயிருக்கிறது; பிக்ஷைகொடுக்க ஸ்ரீகளுக்குத் தெரியாதா? அப்படித்தான் பிக்ஷை அளிக்கிறது.

முதல் பிராமணர்—அப்படியல்லவே பிக்ஷை எடுத்துக்கொள்கிறவர் இஷ்டப்படிபிக்ஷை கொடுத்தால்தானே கொடுத்தோர்க்கும் பலன்? கொண்டோர்க்கும் திருப்தி? அஃது உனக்குத் தெரியாதா?

அனுசூயா—அஃதுதெரியும். நீங்கள் எவ்வாறு பிக்ஷைகொடுத்தால் புசிப்பீர்கள்? அதைச்சொல்லுங்கள்.

இரண்டாவது பிராமணர்—எங்களுக்கு ஒருவிதமாய் பிக்ஷைகொடுத்தால் புசிப்போம். அப்படி நீ கொடுக்கமாட்டுவாயோ?

அனுசூயா—ஒருவிதம் என்றுல் எவ்விதம்? அதைச்சொல்லாமலே பேசுகிறீர்களே. அதை தெரிவித்தாலல்லவோ பிற்பாடு முடியும் முடியாதென்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். நீங்கள் முதலே வெளியிடவில்லையே!

முதல் பிராமணர்—ஆனுல் வெளியிடலாமா?

அனுசூயா—என்ன! வெளியிடலாமா என்கிறீர்களே? உங்களுக்கு பிக்ஷை வேண்டாமோ?

மூன்றுவது பிராமணர்—பிக்ஷைவேண்டும்.

**அனுசூயா**—பின் என்ன! சொல்லுங்கள்.

**முதல் பிராமணர்**—சொல்லலாமோ இல்லையோ?

**அனுசூயா**—மறுபடியும் சந்தேகமா? சொல்லலாம். சொல்லலாம். தாராளமாய்ச்சொல்லுங்கள்.

**இரண்டாவது பிராமணர்**—நாங்கள் ஒரு வருஷத்திற்கு ஒருமுறைதான் பிக்ஷை எடுத்துக்கொள்கிறது.

**அனுசூயா**—பிக்ஷை எவ்வாறு கொடுக்கவேண்டும் என்றால், நாங்கள் வருடத்திற்கு ஒருமுறை பிக்ஷை எடுத்துக் கொள்கிறது என்கிறீர்களே! வருடத்திற்கு இரண்டுமுறைதான் எடுத்துக் கொள்ளுங்களேன். அதினால் இப்போதுஎன்ன ஆகவேண்டியது. உங்களுக்கு பிக்ஷைஎவ்வாறு கொடுத்தால் ப்ரீதி? அதைச்சொல்லுங்கள்.

**மூன்றாவது பிராமணர்**—அதைத்தான் சொல்லப் போகிறோம். அதற்குள் தாமசப்படுகிறாயே.

**அனுசூயா**—தாமசம் ஒன்றும் இல்லை. சுவாமிகளே! எவ்விதம் என்பதைச்சொன்னால், என்னால் இசையும் பக்ஷத்தில் சீக்கிரம் செய்யலாம். நீங்கள் அதிகமாய் குக்ஷி பாதையால் வருந்துவதாய் தெரிவித்தீர்களே! அதற்காகத்தான். வேறென்ன!

**முதல் பிராமணர்**—ஆனால் சொல்லலாமோ?

**அனுசூயா**—ஆஹா! சொல்லலாம். சொல்லலாம்.

**இரண்டாவது பிராமணர்**—நீ என்ன நினைப்பாயோ?

**அனுசூயா**—நான் என்னநினைத்தால் உங்களுக்கென்ன? நீங்கள் உங்கள் இஷ்டத்தை தெரிவியுங்கள்.

**மூன்றாவது பிராமணர்**—நாங்கள் பிக்ஷைஎடுத்துக்கொள்கிறதானால் பிக்ஷைகொடுக்கிறவர்கள் நிர்வாணமாய் அளித்தல்வேண்டும். இதற்குசம்மதப்பட்டு பிக்ஷைகொடுக்கிறபக்ஷத்தில்புசிப்போம். இல்லாவிடில் வேறுயிடந்தான் செல்லவேண்டும்.

**அனுசூயா**—(ஐனங்கமாய்) இஃதென்ன கஷ்டகாலம். அதிதிகளுக்கு பிட்சை கொடுக்கலா மென்று நினைத்தால் இப்படியும் ஓர் கஷ்டம் நேரிடவேண்டுமா? நல்லவர்களுக்குத்தானே கஷ்டம் நேரிடுகிறது. ஸ்ரேயஸான காரியங்களுக்குத்தானே வ்ருத்தங்கள் உண்டாகிறது. தர்மிஷ்டர்களுக்குத்தானே வியாகுலம் சம்பவிக்கிறது. கடின சித்தமுள்ளவர்களுக்கு இத்தகைய கஷ்டங்கள் துயரங்கள் இடையூறுகள் உண்டாகவே மாட்டாது. இஃது உலகஇயற்கை. ஆகினும் இப்படிப்பட்ட கஷ்டமா வரவேண்டும்? நினைத்தற்கும் கஷ்டமாயிருக்கிறதே! சரி. பார்ப்போம். இதற்கென் செய்வது? கற்புவழிநிற்கும் மாதர்களைத்தான்

**கா. கந்தசுவாமி ஆச்சாரியர்.**
போர்டாபீஸ் கிளர்க்கு.

(தொடரும்)



## சிவாஜி பக்தர் சரித்திரம்.

கேளுங்கள் சாதுக்களே! முன்னே நீர்வளம் நிலவளம் பொருந்திய ஜோத்பூருக்கு அடுத்த வாகோலி யென்னும் கிராமத்தில் திருவவதாரம் செய்து ஸ்ரீ ஹரியின் சரணாரவிந்தங்களை யடைந்த திரிலோகபக்தரின் சரித்திரத்தைச் சொன்னோம். இனி தேஹூ வென்னும் கிராமத்தில் வாழ்ந்து ஸ்ரீமந்நாராயணனது பரமபதத்தை யடைந்த சிவாஜி பக்தரின் சரித்திரத்தைச் சொல்லத்தொடங்குவா மென்று நாபாசி முனிவர் கூறுகின்றார்.

கேளுங்கள் சாதுக்களே!

சகல வளங்களும் நிறைந்த தேஹூ வென்னும் கிராமத்தில் வைசிய குலத்தில் திருவவதாரஞ் செய்த துகாராமரென்னும் பக்தர் ஒருவரிருந்தார். அவர் ஸ்ரீ ஹரி நாமசங்கீர்த்தனஞ் செய்து ஸ்ரீமந் நாராயணனுடைய திருவருளைப்பெற்று அதனால் அநேக மகத்துவங்களைச் செய்து வந்தனர். இப்படி யிருக்குங் காலத்தில் அவ்வூரில் விஸ்வகர்ம குலத்திற் பிறந்த சிவாஜி யென்னும் பெயரையுடைய ஸ்வர்ணாச்சாரிய ரொருவரிருந்தார். அவர் உலகத்தாருக்குப் பொன்னாலாகிய ஆபரணங்களைச் செய்துகொடுத்து வாழ்ந்து வருவார். அப்படி யிருக்க, அவ்வூரிலுள்ளவர்கள் துகாராமருடைய பெருமைகளையும் பக்தியையும் அந்த ஆச்சாரியரிடம் வந்து கூறினால், அவர்களையும் துகாராமரையும் நிந்தித்து ஈனமாகப் பேசி வருவார். இங்ஙனமிருக்க, ஆளந்தியில் ஒரு அந்தணன் அதிக கடன்காரனாகி துகாராமரிடம் வந்து அவரை தரிசித்து எனக்குற்ற கடன்பாதையைத் தீர்த்தருள வேண்டுமென விண்ணப்பித்துக்கொள்ள, துகாராமர் அவ்வந்தணனை நோக்கி, ஓ பிராம்மண சீலரே! இவ்வூராரிடஞ் சென்று யான் அனுப்பிவைத்ததாகச் சொல்லி தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்று கேட்பாயாகில் யாவரும் இல்லையென்னாது கொடுத்தருளுவர்; அதைப் பெற்று உன் கடனைத் தீர்த்துக் கொள்வாய் என்று கூறவும், அவ்வந்தணன் துகாராமர் வார்த்தையைச் சிரசாவகித்து அவ்வூரிலுள்ளவர்களிடம் தண்டலுக்கேக, அவ்வூரிலுள்ளார் தங்களுக்குத் தோன்றின மாத்திரம் திரவியத்தைக் கொடுத்தார்கள். சிவாஜி யென்னும் அவ்வாச் சாரியரையும் அவ்வந்தணன் பணங்கேட்க, அவ்வாச்சாரி காட்டுத்தீப் போற் கடுகடுத்து இரண்டு துட்டைக் கொடுத்தார். அதைக் கொண்டுவந்த அவ்வந்தணன் துகாராமரிடம் அத்துட்டைக் கொடுக்க, அவர் அதை வாங்கி தேங்காய் ஓட்டாங்கச்சிறாற் றேய்க்க, அத்துட்டுகள் பொன்னாய்விட்டன, அவர் அப்பொற்காசை அப்பிராம்மணனுக்குக் கொடுக்க, அவன் அது போதாதென்றான். பிறகு துகாராமர் தாம்பிர பாத்திரங்களைக் கொண்டுவரும்படிச் செய்து அவற்றை யெல்லாம் பொன்னாக்கிப் பிராம்மணனுக்குக் கொடுக்க, அவன் அதைப்பெற்று வணங்கி ஆளந்திக்குச் சென்றான். பிறகு துகாராமர் அந்த தேங்காய் ஓட்டாங் கச்சிலையைக் கிணற்றில் போட்டு விட்டனர். அவ்விடத்திலுள்ள ஜனங்கள் இவ்வதிசயத்தைப் பார்த்து ஆச்சரியமடைந்து அந்த சிவாஜி ஆச்சாரிக்குத் தெரிவித்தார்கள். அந்த சிவாஜி ஆச்சாரி துகாராமரிடம் பொன்வித்தையிருக்கிறதென்றும், அதனை அவரிடமிருந்து அறிந்து கொண்டால் குடும்ப சவாக்ஷணை சரிவர நடந்தேறுமென்று மெண்ணிப் பக்தனைப்போல நடித்து, தினந்தோறும் துகாராமரிடம் வந்து ஸ்ரீ ஹரிகதைகளைச் செம்மையாகக் கேட்டுக்கொண் டிருப்பார். ஒரு வருஷம் இப்படி இருந்துகொண்டு வர, சற்

சங்கத்தால் சர்வேஸ்வரனுடைய கிருபை யுண்டாகி அவர் துர்க்குணங்கள் மாறின. அவர் ஒரு மனிதனிடம் சில எருதுகளை இரவலாக வாங்கி சில சரக்கு பிடித்துவா பம்பாயிக்கு அனுப்பினார். அவ்வெருதுகளை ஆட்கள் கொண்டுபோய் வேண்டிய சரக்குகள் பிடித்துவந்தன. பிறகு அவ்வெருதுகளைச் சொந்தக்காரனிடம் அனுப்ப, அவை தன்னுடையவை யல்ல வென்றும் சிவாஜிதான் அவ்வெருதுக்குடையவரென்றும்சொன்னான். இதைக்கேட்ட சிவாஜியார் ஆச்சரியப்பட்டுத் துகாராமரிடம் வந்து சங்கதியைச் சொல்லி இவ்விஷயத்திற் கென்னசெய்வதென்று கேட்க, அவர் அந்த சிவாஜியாரை நோக்கிச் சர்வேஸ்வரன் அவற்றை உனக்குக் கொடுத்தாராதலால், அவற்றால்வரும் திரவியத்தை நல்விஷயத்தி லுபயோகப்படுத்து மென்றார். அன்றுமுதல்பக்தர்களுக்கு அன்னதானங்களைச் செய்து வந்தார். சிறிது நாளில் சிவாஜி விரக்தசித்தராகி வீட்டைவிட்டுத் துகாராமரை விட்டுப் பிரியாமலிருந்தனர். இதைக் கண்டு அவர் மனைவி துகாராமரிடங் குரோதமுடையவளாகி தன் பர்த்தாவைப் பயித்தியக்காரனுக்கி விட்டாரென்று பல தாஞ்சொல்லி துகாராமரைக் கஷ்டத்திற் குட்படுத்த வெண்ணினவளாய் ஒரு பெரிய சால் நிறையத் தண்ணீரைக் கொதிக்கக் காயவைத்துக் கொண்டு துகாராமரிடஞ் சென்று, சுவாமி! இன்று அடியாள் உமக்காக கொஞ்சம் பலகார பக்ஷணங்கள் செய்து வைத்திருக்கின்றேன், அதை உண்டு போவீர்கள் வாருமென்ன, உடனே துகாராமர் தெரிந்துகொண்டு உன்னிஷ்டப்படிச்செய்வாய் என்று எழுந்தருளவும், அம்மாது அவரை யழைத்துவந்து ஸ்நானஞ் செய்வீர்களென்ன, அவர் ஸ்நானத்திற் கெழுந்தருள, அங்குஅதிஉஷ்ணமாய் கொதித்துக்கொண் டிருக்கும் வெந்நீரைக்கண்ட துகாராமர்ஸ்ரீஹரிநாமத்தைச் சொல்லவே, ஜலம் சீதளமாயிற்று. பின்பு அவர் ஸ்நானஞ் செய்து திரும்பி உடனே தன் இருப்பிடம் சென்றார். உடனே அப்பெண்ணுக்குப் பெருவியாதி (குஷ்ட) நோய்வந்துவிட்டது. அவள் அந்தவியாதியினல் பீடிக்கப்பட்டு ஒருநாள் பர்த்தாவைப் பார்த்துத் தன் தேகஅசௌக்யத்தைச் சொன்னாள். அவர் அவளுடம்பைப் பார்த்து இது குஷ்டமாயிற்றே; இதனை ராமேபண்டி தனுக்குத் தெரிவிக்கலாமென்றுபோய் மனைவியின் இவ்வியாதியைத் தெரிவிக்க, அவன் சிவாஜியாரை நோக்கி இதற்கு மருந்தொன்றும் கிடையாது, துகாராமர் ஸ்நானஞ் செய்யும்போது அவ்விடத்திலிருக்கும் மிருத்திகையை (மண்ணை) யெடுத்து உடம்பின்மேல் தேய்த்துப் பூசினல் வியாதி நீங்கி உடம்பு சௌஸ்தப்படும் என்ன, அதைக் கேட்ட சிவாஜி தன் மனைவிக்குச் சொல்லவே அவ்விதமே மிருத்திகையை தன் தேகத்தில் பூசவும், நோய்நீங்கி சுகமடைந்தது இப்பெண்பால் துகாராமரிடம் சென்றுவணங்கித் தான் முன்செய்த குற்றங்களை க்ஷமித்தருள வேண்டுமென்று கேட்க, துகாராமர் அவ்விதமே க்ஷமித்தருளி சிவாஜியாருக்கும் அவர் மனைவியாருக்கும் ஸ்ரீ ஹரிநாம மந்திரத்தை உபதேசித்து உமக்குப் பரந்தாமன் பிரத்யக்ஷமாகி அருள் தருவரென் றுரைத்தனர். அதுமுதல் சிவாஜியாரும் அவர் பத்தினியும் ஹரிநாம சங்கீர்த்தனஞ் செய்துகொண்டு தங்கள் வீடு முதலாய சொத்துக்க ளெல்லாம் விலைக்குமாறி, அதனல் கிடைக்கப்பெற்ற திரவியத்தைக் கைக்கொண்டு யாத்திரைவாசிகளாய் கயா, பிரயாகை, கங்கோத்திரி, காசி, சப்தபுரி, மார்வாடி குஜராத்தி முதலான க்ஷேத்திரங்களிற் சென்று ஆங்காங்குள்ள பெருமானைத் தெரிசித்து வணங்கிக்கொண்டு காண்காபுர மென்னும க்ஷேத்திரத்தை யடைந்து, அவ்விடம் அமரஜ வென்னும் நதிக்கரையில் ஸ்நானஞ் செய்து வேற்றூருக்குச் செல்லும் மார்க்கத்தில், சாக்ஷாத் எம்பெருமான் இவர்கள் பக்தியை வியந்தவராய் மாணிடச் சட்டை சாத்தி ஓர் அந்தணனுருக்கொண்டு வந்து சிவாஜி பக்தரை நோக்கி அப்பா ! நான்



ஒரு சாளக்கிராமம் கொணர்ந்திருக்கின்றேன். இதனைப் பூசித்து வருவதற்கு என்னால் சாத்தியப்படவில்லை. ஏனெனில்; நானே பரம ஏழை, இதற்கு வேண்டிய அபிஷேக ஆராதனை நைவேத்தியங்கள் செய்துவர திரவிய மில்லாமையினல் இதனைப் பூஜிக்கத்தக்கப்புண்ணிய புருடர்களிடங் கொடுத்துவிடலாமென வெண்ணியிதனை யெடுத்துக் கொண்டு வந்தேன்; உர்மைக் கண்டபோதே இதற்குப் பாத்திரவானீயே யாகுமென்று உன்னி உம்மிடங் கொடுக்க எண்ணியிருக்கின்றேன்; உமது அபிப்பிராயத்தைக் கூறுவீர் என்று கேட்க, அவ்வார்த்தையைக் கேட்ட சிவாஜியார் தங்கள் இஷ்டப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேனென்று சொல்லவும், அப்பிராம்மணர், சாளக்கிராமத்தின் மகிமைக ளெல்லாங் கூறி அவருக்குக் கொடுத்தருளினர். சிவாஜியார் அன்போடு வணங்கி அச் சாளக்கிராமத்தை பெற்றுக் கொண்டு இவ்வுபகாரத்தைச்செய்த தேவரீருக்குயாங்கள் என்ன கைம்மாறுசெய்யப் போகிறோமென்று செல்லித் தீர்க்கதெண்டனிட்டு அப்பிராமணரிடம் உத்திரவு பெற்று நடந்து ஆரண்ய மார்க்கமாய்ப் போகும் வழியில் சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணன், ஓர் புலி உருவந்தாங்கிக்கொண்டு ஆரவாரத்தோடு சிவாஜியின் மேல் பாய்வது போல் வர, அப்புலியைக் கண்ட சிவாஜி மிகவும் பயந்து ஸ்ரீஹரியின் திருமந்திரத்தை உச்சரித்தும் அப்புலியகலாமல் அச்சிவாஜியை வழிமறித்து நின்றது. சிவாஜியார் ஸ்ரீபரந்தாமனை நினைத்து ஸ்ரீ தேவதேவா! ஜீவாத்வ பரிபூரண க்ஷீரசாகரவாசா ஆதிமத்தியாந்தரகிதா ! அநாதரக்ஷகா ! ஆபத்பாந்தவா ! அப்போருக நாபா! அடியேம் என் செய்வேம். இப்புலிக்கு இன்று இரையாகுவோம் போலிருக்கிறதே என்று வருந்தி, கரத்திலிருந்த சாளக் கிராமத்தை ஸ்ரீ ஹரி நாமத்தை உச்சரித்து அப்புலியின் மீதெய்வே, அப்புலி ஓடிவிட்டது. அது ஓடிவிடவே அந்த சாளக்கிராமம் விழுந்த விடத்தினின்றும் ஓர் சப்தம் உண்டாயிற்று உடனே இதென்ன சப்திக்கின்றதே என வெண்ணிக் கொண்டே கீழே விழுந்த சாளக் கிராமத்தை எடுத்துக்கொண்டு திரும்பும்போது, மறுபடியும் முன்னிலும் அதிக சப்தமுண்டாயிற்று. ஈதென்ன சப்தமென்று திரும்பிப் பார்க்கையில் அவ்விடத்தில் புதையலொன்று வெளிப்பட்டது. அதைக்கண்ட சிவாஜி இது எம்பெருமானலளிக்கப்பட்டதே யன்றி வேறன்று, இத்திரவியத்தை நாம் முன்னமே வெறுத்து விட்டோம். இது நமக்கு வேண்டியதில்லை. இதைக் கொண்டுபோய் ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்கே உபயோகப்படுத்துவதே நலம்; என்று கருதி அத்திரவியத்தை எடுத்துக்கொண்டு வரும் வழியில் சாக்ஷாத் எம்பெருமான், ஓர் கிழப்பிராம்மண உருவந்தாங்கி வந்து ஐயா! நீங்கள் எங்கு போகின்றீர்கள் என்று வினவ, அதைக் கேட்ட சிவாஜியார், நாங்கள் க்ஷேத்திரயாத்திரை செய்துகொண்டு பகவானை பஜித்து வருகிறோமென்று சொல்ல, அதற்கு பிராம்மணர் கூறுகின்றார்.

ஐயா பக்தரே! அப்பகவானுடைய திரு நாமங்களையும், அவனது சங்கீர்த்தனங்களையும் கேட்க ஆவலுற்றிருக்கின்றேன். ஆனபடியால் நாம்வசிக்கும் ஊர் இதோ அருகாமையிலிருக்கிறது, எமது வீட்டிற்கு வந்து போஜனஞ் செய்தருளி சாக்ஷாத் பெருமானின் திருநாம சங்கீர்த் தனஞ் செய்தருளி பொழுது விடிந்தவுடன் நீங்கள் யாத்திரைப் போகலாமென்று வருந்தி கேட்கவும், அவ்வார்த்தையைக் கேட்ட சிவாஜியாரும் அவர் மனைவியும் அப்பிராம்மண சிரேஷ்டரின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வெண்ணி அவருடன் செல்லும்போது, பொழுது அஸ்தமித்து இருள் வந்து மூடிற்று. அக்கிழப் பிராம்மணர் இவர்களுக்குத் தைரியஞ் சொல்லி அழைத்துக் கொண்டு போகும் வழியிலேயே ஓர்

அலங்கார மாளிகை யொன்றுண்டுசெய்து இதுதான் எம்முடைய வீடென்று காட்டி அவ்வீட்டில் இவ்விருவர்களை யழைத்துக்கொண்டுபோய், ஐயா! நீங்கள் பஜனை செய்து கொண்டிருங்கள், நான் இங்கு உங்கள் பாடலை கேட்டுக்கொண்டு ஆனந்தமாயிருக்கிறேன்; என்று சொல்லி உட்கார்ந்தார். சிவாஜியும், அவர் பத்தினியும் அவ்வீட்டில் ஒரு புறமிருந்து தம் பூரை சுதிசேர்த்து ஸ்ரீமந் நாராயணனைப் பாடிக்கொண்டே வரும்போது, அப்பிராம்மண சிரேஷ்ட ராகிய சுவாமி, இவர்களிருவருக்கும் பாலும் பழமும் கொணர்ந்து உபசரித்து உண்ணும்படிச் செய்து போஜனத்திற் கெழுந்தருள வேண்டுமென, இவ்விருவர்களும், இந்த பாலும் பழமுமே பசியாறி விட்டன. எமக்குப் போஜனம் வேண்டியதில்லை யெனப்புகல, அதைக் கேட்ட பிராம்மணராகிய பகவான், சிவாஜிக்கும் அவர் மனைவியாருக்கும் படுக்கைக்குப் பாய் தலையணை கொண்டு வந்து கொடுத்து உபசாரஞ் செய்யவே, இவர்கள் அப்பாயில் படுத்து நித்திரையிலிருக்கும்போது, எம்பெருமான் இவ்வீடு காடாக வேண்டுமென்று நினைத்தனர். அவ்விதமே காடாய்விட்டது. இவர்களிருவரும் உஷாகாலத்தில் நித்திரையினின்று மெழுந்து விழித்துப் பார்க்கும்போது தாமிருந்தவீடு காடாய் இருக்கக் கண்டு, இதென்ன ஆச்சர்யமாயிருக்கின்றதே, நாம் இரவு இங்கு பஜனைசெய்து கொண்டிருந்தோமே அப்பொழுதும்வீடாயிருந்ததே, படுக்கும்போதும் வீடாயிருக்க நித்திரை திரையிலிருக்கும் போது காடாய் விட்டதோ அல்லது, நம்மை யழைத்து வந்த பிராம்மணக் கிழவன் ஜெகஜால வித்தைக்காரனோ, அவனையும் இவ்விடத்தில் காணோமே, இதென்ன விந்தையாருக்கிறதே! நம்கையிலிருந்த சாளக்கிராமத்தையும் காணோமே; என்று தேடிப் பார்க்கும்போது, தனக்கெதிரே அச்சாளக்கிராமம் தோன்றிற்று. அதனை ஆவலோடு போய் எடுக்கும் போது பூமியில் வேறான்றி விட்டதைக் கண்டு இது எம்பெருமான் திருவிளையாட்டே யன்றி மற்றவரால் நடந்தவை யல்லவென்று நினைத்து, அந்தோ! எம்பெருமானைக் கண்டும் விட்டு விட்டேனே, பாபியினும் பாபியானேமே; என்று பலவாறு கண்ணீரும் கம்பலையுமாக அழுது ஆனந்தக் கூத்தாடி அகமகிழ்வுடன் பாடி, ஹரியை தோத்திரஞ் செய்து நிற்கும்போது, சாக்ஷாத் எம்பெருமான் சிவாஜியாருக்கும் இவர் மனைவியாருக்கும் ப்ரத்தியக்ஷமாகித் தெரிசனங்கொடுத்து உமது பக்தியின்றிறம் உலகத்தாரறிய வேண்டி இத்திருவிளையாடல்களைச் செய்தோம்.

முன்னே உமக்கு நாம்கொடுத்தருளிய புதையல் திரவியத்தைக்கொண்டு இச்சாளக் கிராமத்திற்கு ஓர் ஆலயங்கட்டுவித்து அபிஷேக ஆராதனை செய்து சிலகாலம் பஜனை புரிந்து வாழ்ந்து முடிவில் கௌடபங்காள தேசத்தில் காஞ்சன பூமிக்கு யாத்திரையாக நீங்கள்வர நேரிடும்: அப்போது உமது பெருமை யெங்கும் பிரகாசிக்கும் படிச்செய்து நாம்ஆட்கொண்டருளுவோம்; என்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

அவ்வாறே சிவாஜி பக்தர் அச்சாளக் கிராமத்திற்கு ஓர் ஆலயங்கட்டுவித்து பூஜா நைவேத்திய முதலிவையும்செய்து சிலகாலம் வாழ்ந்திருந்து முடிவில் கௌடபங்காள தேசத்து காஞ்சன பூமிக்கு யாத்திரைசெய்யும் போது அங்குள்ள விஷ்ணு ஆலயத்துட்டங்கி ஹரிநாம சங்கீர்த்தனம்பாடி நிற்குஞ் சமயம் சாக்ஷாத் எம்பெருமான் பரமபதத்தினின்றுவிமானமொன்று அனுப்பி சிவாஜி பத்தரையும், அவர் மனைவியையும் பரமபதத்திற் கெழுந்தருளப் பண்ணி தமது பதவியில் நித்தியசூரிகளாய் இருந்து வாழும்படி அருள் புரிந்தார் சுபம்.



## பொன்மணி பக்தர் சரித்திரம்.

முன்னே பல வளங்களையுமுடைய தேஹூவென்னுங்கிராமத்தில் திருவவதாரஞ் செய்து ஸ்ரீ ஹரிநாம சங்கீர்த்தனையின் விசேஷத்தால் ஸ்ரீமந் நாராயணனுடைய உபயதிருவடி நீழலடைந்த சிவாஜிபக்தர் சரித்திரத்தைச் சொன்னோம்; இனிசோழ மண்டலத்திலுள்ள தஞ்சைமாநகரில் வாழ்ந்து வந்தவரும், பக்தியாலும், தபோவலிமையாலும் சாக்ஷாத் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று ஒளிப் பிழம்பாகதம் திருமேனிகரைய நின்ற பொன்மணிபக்தர் சரித்திரத்தைக் கூறத் தொடங்குவாம்; இதனை உள்ளன்போடுகேட்பீராகவென்று நாபாசிமுனிவர் கூறுகின்றார்.

சோழவள நாட்டிற்குத் திலதம்போன்று விளங்காநின்ற தஞ்சைமா நகரத்தை ஆண்டுவந்த ஸ்ரீ ராஜ ராஜச் சோழவர்மாவானவர் தமது யாக்கையும், வாழ்க்கையும் நிலையாமையைக்குறித்து ஓர்நாள் எண்ணமிட்டுக்கொண்டுநித்திரைபுரியுங்காலத்தில் உமாதேவியை ஓர்பாகம்வைத்த சாக்ஷாத் சிவபெருமான் அவ்வரசன் சொப்பனத்தில் தோன்றி ஹே அரசே! 'எமக்கொரு ஆலயங்கட்டி வைப்பாயாக' என்று சொல்லிமறைந் தருளினார். அரசன் உடனே விழித்தெழுந்து சிவபெருமானைத் தியானித்து பொழுது விடிந்ததும் தன் மந்திரியிடம் தாம் கண்டசொப்பனத்தைச் சொல்லி, ஆலயத்தை அதிசீக்கிரத்தில் முடிக்கவேண்டுமென்றும், அதற்குத்தகுந்த சிற்பாசாரியைத் தெரிந்தெடுக்க வேண்டு மென்றும் ஆக்யாபித்தான். உடனே மந்திரி சென்று தகுந்தசிற்பாச்சாரியரைத்தெரிந்தெடுத்து அச்சிற்பாச்சாரியரை முத்துச்சிவிகையில் ஏற்றி, அரசன்முன்பாகக் கொண்டுவிட அரசன் அச்சிற்பாச்சாரியரை நமஸ்கரித்து, ஆசனத்திருத்தி தாம் கண்ட சொப்பனத்தைச் சொல்லி, உலகில்யாவரும் பார்த்தறியாத ஓர் ஆலயத்தை சாக்ஷாத் சிவபெருமானுக்கு இயற்றித்தாரு மென்று கெஞ்சிக் கேட்க, கெஞ்சிநிற்கும் அரசனை சிற்பாச்சாரியர் பார்த்து, அங்ஙனமே செய்வோம்; இது விஷயத்தில் உமக்குக்கவலை வேண்டா மெனத் தேற்றி அரசன் கையினின்றும் தாம்பூலம் பெற்றுச் சென்றனர். பின்பு நல்ல சுபமுகூர்த்தம் பார்த்து ஆலய வேலையை வெகுசீக்கிரமாகமுடித்து வரும்போது, விமானத்தின் பிரமரந்திரத்தை மூடுவதற்கு ஐம்பத்து நான்கடி சதுரமுள்ள ஓர் கருங்கல்லை எங்கு தேடிப்பார்த்தும் அகப்படாமையினால்-நாளை உயிர்துறப்பதே நலமென்று எண்ணியிருந்த சிற்பாச்சாரியின் சொப்பனத்தில் சிவபெருமான் தோன்றி, அன்ப! நின்கவலை யொழி; இவ்வாலய வேலை செய்யும் கூலி ஜனங்களின் தாகசாந்திக்காக நீர் மோர் தருமஞ் செய்கின்ற இடைப் பெண்ணைக் கண்டு, நீ ஏன் இந்த தருமஞ் செய்கிறாய் என்று வினவினால் உட்கவலை அது காரணமாக நீங்கும் என்று சொல்லி மறைந்தருளினார்.

பொழுது விடிந்ததும், சிற்பாச்சாரியர் அந்த இடைப்பெண்ணைப்பார்த்து நீயேன் அரசன் உத்திரவன்றியில் இந்த தருமம் செய்கின்றாய் எனக்கேட்க, அதற்கவள் ஹே! ஆச்சார்ய! சிவபுண்ணியம்பெறுவதற்கு அரசனாணையும் வேண்டுமோ; என் வீட்டை இடித்துக்கட்டியபொழுது ஒரு பெரியகருங்கல் அகப்பட்டது; அதைப் பத்திரமாக மூடிவைத்திருக்கிறேன்; அந்தகல்லை இந்தவாலயத் திருப்பணியில் நீர் உபயோகப்படுத்தினால் அதுவே சிறந்த த[illegible]மாக எண்ணுவேன் என்று பலவிதமாகச் சொல்லவும், அவள் வேண்டுகோளுக்கிரங்கி சிற்பாச்சாரி அவள்வீடுசென்று அந்தகருங்கல்லை முழக்கோல்கொண்டு அளந்துபார்க்க, அக்கல்சரியாக ஐம்பத்து நான்கடி

சதுரமாகவிருக்கக்கண்டு, அது சிவபெருமான் திருவருளின் செயலென்று சந்தோஷித்து, அக்கல்லைதாம் ஒப்புக்கொள்வதாகச்சொல்லிப்போய், அந்தசம்பவத்தை அரசனுக்குஅறிவித்தால் அன்னியர்பொருளை அரசன் ஏற்றுக்கொள்ள மாட்டார்; அதனால் தாம் இடை பெண்ணுக்குச் செய்தவாக்குஅவலமாகும் என்றஞ்சி அரசனுக்குத் தெரிவிக்காமலே அந்த கல்லைக் கொண்டு மூடி அக்கோயில் திருப்பணியை முடித்துவிட்டார். பிறகு கும்பாபிஷேகம் முதலியவைகளை விமரிசையாக நடத்தி பூஜை, நைவேத்திய முதலியவைகள் வெகுசிறப்பாக நடந்துவரவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, ஆலயத்திற்கு வேண்டிய மானியங்களையும் தாராளமாகவிட்டு சிவபக்தி புரிந்துவந்தான்.

இப்படியிருக்கும்போது, அரசன் ஒரு நாள் நாம் பக்தி சிரத்தையுடன் கட்டிய கோயிலில் சிவபெருமான் வசிக்கிறாரோவென்று சந்தேகித்து கண்வளர்கையில் சிவபெருமான் கனவில்தோன்றி, அரசே! "யாம், நீர்கட்டிய மறைவிலும், இடைச்சி நிழலிலும், பொன்மணிக் தட்டார் இருதயத்திலும் வசித்துவருகிறோம்." என்று சொல்லிமறைந்தார். சிவபெருமான்சாதித்தருளிய கனவிற்குபொருள் தோன்றாதவராய் தம்மந்திரியைவினவ, மந்திரிசிற்பாச்சாரியை அழைத்து ராஜசமுகத்தில் விட, அவரால் இடை[illegible]பெண் கொடுத்துதவிய ஸ்தூபியின் கல்லின் விபரத்தைத் தெரிந்துகொண்டு, பின்பு பொன்மணித் தட்டார் யார்என்று அறிந்துகொள்ள முடியாமல் ஊர்முழுதும் பறைபறைவித்து, வெளியூர்களுக்கு தூதுவர்களையும் போக்கினான். பொன்மணித்தட்டார், தஞ்சை நகரத்தின் தெற்குவீதியில் வசித்துவருகிறார் என்றும், அவர் மாற்றுக்குறைந்த பொன்னைவாங்கி அதைக்கொண்டு மணிகளைச்செய்து தமது அருள்விசேஷத்தால் அம்மணிகளை பத்தரைமாற்றுத் தங்கமாக மாற்றிவிற்று அதனால் கிடைக்கும் சொற்பலாபத்தைக்கொண்டு காலங்கழித்து வருகிறார் என்றும் காசுக்கடைச் செட்டிகளால் அறிந்த மந்திரி அரசனுக்குத்தெரிவிக்க, அரசன் அவரைதம்மிடம் அழைத்துவரும்படி யனுப்பினான். வந்தமந்திரி, மணிகளைச்செய்து கொண்டிருக்கும் விர்த்தாப்பியரைப்பார்த்து, ஐயா! தங்களை அரசர் அழைத்து வரச்சொன்னார் என்று சொல்லலும், அதற்கு பொன்மணித்தட்டார் அரசன் யாது காரணத்தாலழைத்து வரும்படி சொன்னார்; அரசனுக்குஎன்னால் ஆகவேண்டியவேலை என்ன விருக்கிறது; நான் பொன்மணித் தொழிலன்றி வேறு தொழில் செய்கிறவனல்லேன்; ஒருவர் உடைமையைக் கைநீட்டி வாங்குகிறவனுமல்லேன்; அரசர்க்கான ஆபரணங்களையியற்று மாற்றலுடையவனுமல்லேன்; நான் கட்டியிருக்கும் இவ்வஸ்திரந்தவிர ராஜ சமுகத்திற்கு ஏற்ற உடுப்பையும் உடையேனல்லேன்; அரண்மனைதூரம் நடப்பதற்குப் தேகத்தில் வலிமையும் இல்லேனென்றுசொல்லி தம்பணியிலேயே கவனமாயிருந்தார். இவர்பாமசாதுவெனத்தெரிந்துகொண்ட மதியூகியானமந்திரி அவரடிதொழுது ஐயனே! நான் அறியாமல் உம்மை அரண்மனைக்கழைத்த குற்றத்தைப்பொருத்தருளும்; தம்மை அரசரே இங்குவந்து தரிசிப்பார் என்றுசொல்லி விடைபெற்றுச்சென்று இவ் விர்த்தாந்தங்களை அரசனுக்கறிவிக்க, அதை அறிந்த அரசன் திடுக்கிட்டு, சிங்காசனத்தினின்றும் எழுந்து பாதசாரியாக வீதிவழியே புறப்பட, யானைகளும், குதிரைகளும், சிவிகைகளும், குடைகளும், சாமரங்களும் பின்னேதொடர்ந்துவர, பொன்மணித்தட்டார் வீட்டுக்குவெளியே அவைகளையெல்லாம் நிறுத்திவிட்டுதாம்மாத்திரம்உள்ளேசென்று மணி வேலையைச்செய்துகொண்டிருந்த பொன்மணித்தட்டார் பாதங்களில் வீழ்ந்துஸ்மரணையற்றுக்கிடந்தனர். அவ்விதமாக அடியற்றபனைபோல் வீழ்ந்துகிடக்கும் அரசனையெடுத்து மார்புறத்தழுவி உபசரித்து வந்தகாரியம் யாதென்றுவினவ, அரசன், ஹே பக்தசிகாமணியே! நான் இவ்வூர்அரசன், பொருள்மிகுதியாலும், சிறிது பக்தியாலும், தங்களைப்போன்ற மகான்களின் கிருபாவிசேடத்தாலும் இவ்வூரில் ஓர் அருமையான ஆலயத்தைக்கட்டி முடித்திருப்பது தேவரீர் திருவுளமறியுமே; அந்த ஆலயகைங்கர்யத்தை அரனார் திருவுளம் பற்றினாரோவென நினைந்து நித்திரைபுரியும்போது அவர் நான்கட்டியமறைவிலும், இடைச்சிநிழலிலும், தங்கள் இருதயத்திலும் வாசமாயிருப்பதாகச் சொப்பனம்சாதித்தார்; முன்சொல்லிய இரண்டு இடங்களிலுமுள்ள ஈசனை தெரிசித்துவருகிறேன்; தங்கள் இருதயகமல வாசியாகிய எம்பெருமானை தரிசிக்கவேண்டி தங்களை அடைந்தேன் என்று அரசன் இயம்ப, அதனை பொன்மணி பக்தர்கேட்டு, நீர் கட்டியிருக்கும் கோயிலின் வடபாரிசத்தில்ஸ்தூபிக்குநேரே ஒரு குளம்வெட்டுவித்து, அதற்கு மத்தியில் ஒரு சமாதிஒன்றைநிருமிக்கச் செய்து இன்றைக்கு எட்டாம் நாள் நம்மைவந்து காண்பீராகில் என் இருதயத்தில் வாசமாயிருக்கும் ஈசனை நான் காட்டுவேன் என்று சொல்லிப் பின் தன் வேலையிலேயே கவனமாயிருந்தார். அரசன் அப்பக்தரின் அநுமதி பெற்றுச் சென்று எட்டு தினத்தில் அழகிய குளம் ஒன்று வெட்டி, அதற்குமத்தியில் ஓர் சமாதியையும் செய்து முடித்து, அந்த சங்கதியை பொன்மணி பக்தருக்குச் சொல்லி அவரை சர்வ சைனியங்களும் புடைசூழ, வேத கோஷ்டம் முழங்க, பக்தரை, யானை மீது ஏற்றி ஊர்வலம் செய்வித்து தாம் செய்து வைத்திருக்கும் சமாதியைக் காட்டி வாய்பொத்திநின்றான். பொன்மணி பக்தரும் அரசனது பக்திக்கு மகிழ்ந்து, இந்ததீர்த்தத்தில் தவளை, பூச்சி முதலியவைகள் சேராதென்றும், இந்த ஜலத்தை அருந்துபவர்களின் பவநோய் அகலுமென்றும் சொல்லி ஜலத்திற்கு மத்தியிலுள்ள சமாதியைப் பார்க்கவேண்டுமென்றார். அரசன் தயாராக்வைத்திருக்கும் ஓர் தெப்பத்தைக் கொண்டுவர ஆக்யாபிக்க, பக்தர் அதைத் தடுத்து நீரின்மேல் யாவரும் ஆச்சரியப்படும்படி நடந்து சென்று, சாமாதியின் பேரில் பத்மாசனமிட்டு உட்கார்ந்து, அரசனைப் பார்த்து, நீவிர் கட்டிய இந்த சமாதி வெகு அழகாகவிருக்கிறது; இந்தப் புண்ணியம் உமக்கு சித்திக்கு மென்று ஆசீர்வதித்து, தம் இருதய கமலவாசியாகிய ஈசனை உன்கண்முன் யாவரும் காணக்காட்டுவேன் என்று சொல்லி கண்மூடி தியானித்திருந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் இருதயம் திறந்து அதினின்றும் ஓர் ஜோதி தோன்றி வரவா வளர்ந்து ஆகாயத்தை முட்டி நின்றது. அந்த ஒளிப்பிழம்பில் பொன்மணி பக்தரின் ஸ்தூலதேகத்துடன் கலந்தருளினார் அந்த புதுமையைப் பார்த்து நின்ற அரசனும் ஜனங்களும் மெய்மறந்து, பரவச முற்று, கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்க, சிவநாமாவளி முதலிய தோத்திரங்களைச் சொல்லி, திருஞான சம்பந்தர் திருமணப்பந்தலில் எழுந்த ஜோதி எல்லோரையும் தடுத்தாட்கொண்டவாறு இம்மகாஜோதி அங்கிருந்த யாவரையும் தடுத்தாட் கொள்ளுமென்று சந்தோஷமாய் நிற்கையில், அந்த ஜோதியினின்றும் ஓர் அசரீரி அரசனை விளித்து ஹே! அரசே, நின்பக்திக்காக மகிழ்ந்தோம்; நினக்கும் சின்னாளில் இப்பெரும்பேறு வாய்க்கும் என மொழிந்து ஜோதியும் மறைந்தது. அரசனும் வெகு காலம் இப் பொன்மணி பக்தரடிகளைத் தொழுதிருந்து பின்புவிதேகமுத்தியடைந்தார். இந்த சமாதியையும், சிவகங்கை தீர்த்தத்தையும், அதற்கு நித்திய பூஜை நைவேத்தியம் நடந்துவருவதையும் தஞ்சை நகரில் இப்பொழுதும் காணலாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## சென்னை

# விஸ்வகர்ம புத்தகசாலை.

| | | | |
|---|---|---|---|
| பெருந்திரட்டுக் குறுந்திரட்டுடன் ... ... | 3 | 0 | 0 |
| ஸ்ரீமத் மாம்பழக் கவிச்சிங்க நாவலரவர்கள் இயற்றியருளிய பிரபந்தத்திரட்டு ... | 2 | 0 | 0 |
| மெய்ஞ்ஞானபோதம் லோகோபகாரி பிரசுரம் ... | 0 | 12 | 0 |
| தர்க்கபரிபாஷை குறிப்புரையுடன் ... ... | 1 | 0 | 0 |
| நாநாஜீவவாதக்கட்டளை குறிப்புரையுடன் ... ... | 0 | 4 | 0 |
| விஸ்வப்பிரம புராண வசனம் ... ... | 0 | 8 | 0 |
| விஸ்வகுரு சதகம் உரையுடன் ... ... | 0 | 6 | 0 |
| இராமசுனுர் என்னும் இராமானந்த சர்மாவின் சரித்திரம் | 0 | 6 | 0 |
| சேலந் தீர்ப்பு ... ... | 0 | 6 | 0 |
| விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி ... ... | 0 | 2 | 0 |
| வேலூர் தீர்ப்பு ... ... | 0 | 2 | 0 |
| பந்தர் அபிஷேகத் தீர்ப்பு ... ... | 0 | 1 | 0 |
| குலசங்கரமாலை ... ... | 0 | 1 | 0 |
| நித்தியகருமச் சுருக்கம் ... ... | 0 | 1 | 0 |
| சென்சஸாபாஸ தர்ப்பண முக்கியக்கவனிப்பு ... | 0 | 1 | 0 |
| கிரந்தாக்ஷர பிரதம பாலசிக்ஷை ... ... | 0 | 0 | 6 |
| தேவி கட்கமாலை தமிழ் தெலுங்கு சேர்ந்தது ஒரே புஸ்தகம் | 0 | 2 | 0 |
| இரதகாராதிகரணவிசாரம் (தெலுங்கு பதிப்பு) ... | 0 | 8 | 0 |
| விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி (தெலுங்கு பதிப்பு) | 0 | 6 | 0 |
| சித்தூர்த் தீர்ப்பு ... ... | 0 | 6 | 0 |
| கிரந்தாக்ஷரத்தில் திரிகால சந்தியாவந்தனம் ... | 0 | 0 | 6 |
| மாந்தை நகராதிபதி சதகம் உரை ... ... | 0 | 6 | 0 |
| விஸ்வகர்மாந்வய பூஷணம் ... ... | 0 | 2 | 0 |
| பரசமயகோளரியார் பிள்ளைத் தமிழ் ... | 0 | 4 | 0 |
| கலைவாணி சதகம் ... | 0 | 2 | 0 |
| நாகராக்ஷர பாலசிக்ஷை பெரிய எழுத்து ... ... | 0 | 9 | 0 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் படம் ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் யந்திரம் ... ... | 0 | 4 | 0 |
| விஸ்வேஸ்வரர் படம்போட்ட போஸ்ட் கார்ட்டு 100க்கு | 0 | 4 | 0 |
| புஷ்ப பந்தம் ... ... | 0 | 4 | 0 |
| மதுரைத் தமிழ்ப் பஞ்சாங்கம் ... ... | 0 | 1 | 6 |

**முக்கிய கவனிப்பு**—நான்கணு விலைக்குக் குறைவுபடும் புஸ்தகம் வேண்டுவோர்கள் புஸ்தகக்கிரயமும் புக்போஸ்டுக்கு அரை அணவும் சேர்த்து ஸ்டாம்பு வாங்கி அனுப்பினுல் உடனே புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும் விலாசம் விபரமாகஎழுதவேண்டும்.

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
5/10, வேதகிரிமேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

14-3-14.




ஆடவர்கள் தீவழிப்படுத்தப் பார்ப்பார்கள். இத்தகைய சோதனைகளை மேற்கொண்டு கற்பினை கைடைபிடித்தலே மாதர்களுக்குப் புகழைத்தரும். நமக்கு என்னவோ இப்பொழுது நற்காலக்குறைவுபோல் தோன்றுகிறது. நற்காலமில்லாதபோதுதான் பதிவிரதா சிரோமணிகளுக்கு பதிவிரதா பங்கத்திற்குரிய பரிசோதனைகள் உண்டாகும். அக்காலம்நீங்கினஎல்லாம் சரியாப்ப்போய்விடும். இப்படிப்பட்ட காலங்களில்தான் மனஉறுதியை நிலைநிறுத்தவேண்டும். அம்மாதிரி செய்யாமையினுலன்றோ சில கற்புள்ளஸ்திரீகள் இப்படிப்பட்ட சோதனைகளில் கற்புவழியகன்று இழிவையடைகிறுர்கள்? நமக்கு உண்டாகிய பரிசோதனையைப்போல் எவர்க்கும் உண்டாயிராது. இப்பரிசோதனை தர்மத்தைப்பற்றியல்லவோ நிற்கிறது! இதில்இருவிதகஷ்டம் இருக்கிறது. பிக்ஷைகொடாமல் சோதனையினின்று நீங்கில் அதர்மத்திற்கு உள்ளாகவேண்டிவரும். தர்மத்தைப் பார்த்தால் மானபங்கமாயிருக்கிறது. சிசுஹத்தி பிரமஹத்தியாய் அல்லவோ சம்பவித்திருக்கிறது. (சற்று யோசித்து) முன் நாரதர் இரும்புக் கடலையைக் கொடுத்து பரிசோதித்தாரே அப்போதும் இப்படித்தான் எந்தவிதத்திலேயும் சிசுஹத்தி பிரமஹத்தியாருந்தது. (நிதானித்து) சரி. சரி. இப்போதுதான் ஞாபகத்திற்குவருகிறது. அப்போது நமது பர்த்தாவின் நாமத்தைஸ்மரித்து பாதபூஜையின் பாதோதகத்தினுலல்லவோ அச்சோதனையினின்று விடுதலையானேம். இப்போதும் அப்படித்தான் செய்யவேண்டும். மானபங்க பரிசோதனைக்கு பர்த்தாவினிடத்துள்ள முதிர்ந்தபக்திதான்மாற்று. சரி! இனி என்யோசனை? அத்தகையபக்தியைக் கொண்டே இப்போதும் கஷ்டத்திலிருந்து விடுவிக்கப்படலாம். (தனது பர்த்தாவைஸ்மரித்து தினகால பர்த்தாவின் பாதபூஜையில் மிகுந்த பாதோதகத்தை முதலில் கற்பிற்குரக்ஷையாக தன்சிரசின்மேல் ப்ரோக்ஷித்துக்கொண்டு பின்பு பிராமணர்கள்மேல் ப்ரோக்ஷித்தல்)

பிராமணர்கள்—(குழந்தைகளாகி க்வா க்வா என்று அழுல்).

அநுசூயா—(அதிதிகளாய் வந்த பிராமணர்களின் மனோபீஷ்டமாகிய நக்ன பிக்ஷையைகொடுக்க உத்தேசித்து கவாடபந்தனம் செய்து ஆடையைக்களைந்து நிர்மாணமாய் தனஸ்தன்யத்தைக்காட்ட குழந்தைகள் பாலுண்டல். பிறகு தொட்டிலிட்டு அதிக சந்தோஷத்தோடு அக்குழந்தைகளை துயிலவைத்தல்.)

பாடல்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
நீராரோ நானாரோ ஆராரோ ஆராரோ

மாணிக்கக்கால் நாட்டி வஜ்ரவடம் பூட்டி
ஆணிப்பொன் தொட்டிலிட்டேன் அருமருந்தீர் கண்வளரீர். (ஆராரோ)

அத்தைமடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும் மணியன்னீர் கண்வளரீர். (ஆராரோ)

*7

அத்திரிமுனிவர்—என்ன இன்று நம் கிரகத்தில் குழந்தைகளின் அழுகுரல் கேழ்க்கிறதே! அஃதுடன் தாலாட்டு பாடலும் கேழ்க்கிறதே! அஃது நமது அனுசூயாவின் குரல்தான். நமக்கு பெருமகிழ்ச்சிக்கு ஹேதுவாயிருக்கிறது. சரி. அனுசூயா! அயலாத்து குழந்தைகளா என்ன.?

அனுசூயா—இல்லை சுவாமி! நீங்கள் நதிக்கு சென்றிருந்தீர்களே, அப்போது யாரோ மூன்று பிராமணர்கள் பிக்ஷைகேட்டார்கள்.

அத்திரிமுனிவர்—பிக்ஷை கொடுத்தாயோ? இல்லையோ?

அனுசூயா—என்ன சுவாமி! அப்படிக் கேட்கிறீர்களே? நான் அதிதிக்கு பிக்ஷைகொடுக்கிறதில்லையோ?

அத்திரிமுனிவர்—கொடுக்கிறதில்லை என்று சொல்லவில்லையே. நான் வரவில்லை என்று கொடாதிருந்தால் பாபம் சம்பவிக்குமே என்று தான் கேட்டேன். சரி! அது போகட்டும். பிறகு?

அனுசூயா—அவர்கள் என்னவோ நக்னபிக்ஷை கேட்டார்கள்.

அத்திரிமுனிவர்—அப்படியே நீ கொடுத்தாயோ? பதிவிரதைகள் அப்மாதிரி செய்யலாமோ? பாபமாச்சே!

அனுசூயர்—சொல்வதற்குள் அவசரப்படுகிறீர்களே.

அத்திரிமுனிவர்—இல்லை. சொல்.

அனுசூயா—என்னடா சிசுஹத்தி பிரம்மஹத்தியாயிருக்கிறதே என்று யோசித்தேன்

அத்திரிமுனிவர்—யோசித்தாய்! சரி எங்கே யோசிக்காது காரியம் செய்தாயோ என்று பார்த்தேன்.

அனுசூயா—இல்லை இல்லை யோசித்தேன்! யோசித்து உங்களைஸ்மரித்து பாதபூஜையில் மிகுந்த பாதோதகத்தை என்மீது ப்ரோக்ஷணம் செய்து கொண்டு அப்பிராமணர்கள்மேல் ப்ரோக்ஷித்தேன். அவர்கள் உடனே குழந்தைகளாய் விட்டார்கள். கவாடத்தை சிறிது சாத்தி அக்குழந்தைகளுக்கு நக்னபிக்ஷைபாகிய பால் கொடுத்தேன். அப்பிராமணர்களுடைய மனோரதத்தை பூர்த்திசெய்தேன். பிறகு குழந்தைகளை துயிலச் செய்வதற்கு தொட்டிலிட்டு தாலாட்டினேன்.

அத்திரிமுனிவர்—அதிகசந்தோஷம். ஒரு குழந்தையில்லாத கிரகத்தில் மூன்று குழந்தைகள் உண்டாயிற்றே! பரமசந்தோஷம்! பகவத் கிருபையே க்ருபை!

அனுசூயா—குழந்தைகள் மறுபடியும் விழித்துக் கொண்டு க்வா க்வா வென்றுகத்துகின்றனவோ! அவற்றை துயிலச் செய்யவேண்டும்.

அத்திரிமுனிவர்—சரி. அப்படியேசெய். நானும் உன்னுடன் துயிலச்செய்கிறேன்.

---



அத்திரிமுனிவர்
அனுசூயா } (இருவரும் தொட்டிலை அசைத்து பாடல்.)

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
நீர்யாரோ யாம்யாரோ ஆராரோ ஆராரோ

எங்கள் தவப்பயனே எங்களிடம் உற்றீர்கள்
திங்கள் புரைமுகத்து திருமகவீர் கண்வளரீர்.

அத்திரிமுனிவர்—அனுசூயா! இக்குழந்தையைப்பார்த்தாயா? இதற்கு என்ன மழு, மான், சடை, கங்கை, பாலசந்திரன், சர்ப்பாபரணங்கள் தோன்றுகின்றனவே!

அனுசூயா—நான் பார்க்கயில்லையே! இருங்கோ! இருங்கோ! (பார்த்தல்) ஆம் சுவாமி. ஆம்! ஆம்! இந்த குழந்தைக்கு பார்த்தீர்களா? சங்கு சக்ரம் கதை தோன்றுகின்றனவே! ஆ! ஆ! மார்பில் கௌஸ்துவாபரணம் தோன்றுகிறதே! ஆ! ஆ! என்ன அழகு! என்ன அழகு ஆனந்தமா யிருக்கிறதே! திவ்யமங்கள விக்ரஹ ஸ்வரூபம்!

அத்திரிமுனிவர்—விலகு. விலகு. நான்பார்க்கிறேன். ஆஹா என்ன ஆனந்தம்! என்ன ஆனந்தம்! திருவேங்கடமுடையான்! திருவேங்கடமுடையான்! க்ஷீராப்திசயனன்! என்ன மூர்த்தி! என்ன மூர்த்தி! அனுசூயா! இந்த குழந்தையைப் பார்த்தையா? கையில் ஜபமாலை, வேதபுஸ்தம் ஆ! ஆ! என்ன விநோதம்! என்ன விநோதம்!

அனுசூயா—எதோ! எதோ! நான்பார்க்கிறேன். ஆம் சுமாமி நமது பாக்கியமே பாக்யம். நாம் ஸ்ரேஷ்டரானோம். தன்யரானோம். உத்கிருஷ்டரானோம். நாம் புத்ரகாம தபம் செய்தபலன் கைகூடியது. ஹரி ஹர பிரம்மாக்கள் நமக்கு வரம் கொடுத்தமாதிரியாகவே வந்து சேர்ந்து விட்டாரார்கள். பிராமணவேடந்தாங்கி வந்தார்கள் நம்மை இரக்ஷித்து கிருதார்த்தராக்கும் பொருட்டு. இஃதை யான் அறியாமல் பிராமணர்களுடன் கிறிதுகோபவார்த்தைகள் ஆடினேனே. யான் மகாபாபி! மகாபாபி! ஹே! லோகபாலனே! ஹே! பிதாம்பரதரா! ஹே! பத்மாசனா! என்குற்றத்தை போக்கவேண்டும்.

அத்திரிமுனிவர்—மறுபடியும்பார்த்தாயா? குழந்தைகளாக தோன்றுகின்றனவே!

அனுசூயா—ஆம் சுவாமி! இது என்ன விந்தையாயிருக்கிறது. ஹரிஹர பிரம்மாக்கள் சின்னங்கள் காணோமே!

அத்திரிமுனிவர்—அனுசூயா! தொட்டிலைப் பிடித்தாட்டு. குழந்தைகளை ஜாக்ரதையாய்ப்பார். அழுகின்றனவே! துயிலச் செய்வோம்.

அத்திரிமுனிவர்
அனுசூயா } ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
நீர்யாரோ யாம்யாரோ ஆராரோ ஆராரோ

அரனேயோ மாலேயோ அலர்மேவும் பிரமாவோ
பாமேவுங் கதியளித்தீர் பார்தனிலே, கண்வளரீர். (ஆராரோ)

நாரதர்—(ஜனாங்கமாய்) சபாஷ்! நாம் நினைத்தப்பிரகாரம் நடந்தது. நாம்போட்டமுடியை இன்னொருவர் அவிழ்ப்பதற்கு ஆகுமோ? நாமேதான் அவிழ்க்கவேண்டும். இப்போதே சுவர்க்கலோகம் போவேன்.

மூன்றும் அங்கம்
இரண்டாம் காட்சி முற்றிற்று.

---

**மூன்றும் அங்கம்.** **மூன்றும் காட்சி.**

இடம்:—சுவர்க்கலோகம். காலம்—பகல்

**நடர்:—நாரதர். (ஒதுங்கிநிற்றல்). பார்வதி. இலக்ஷுமி. சரஸ்வதி (ஆலயத்திருத்தல்).**

பார்வதி—யார் அங்கு? நாரதனா? அந்தோ! அந்தோ! நாரதன்!

இலக்ஷ்மி—ஆம்! ஆம்! நாரதன்! எங்கடாவந்தாய் துஷ்டப்பயலே? வேலையில்லையாடா? கோயில் எருதைப்போல் திரிகிறாயே.

சரஸ்வதி—மறுபடியும் என்னவிபரீதத்திற்கு வந்தாய்? நன்றாய் லபித்தாய் எனக்கும்புதல்வனாய்! என்னடா! எதற்கோ இப்படித்திரிவாய்?

நாரதன்—(ஜனாங்கமாய்: நம்மைக்கண்டால் அஸ்தியில் சுரந்தான்.) என்ன அன்னைமீர் இப்படி என்மேல் எரிந்து விழலாமோ? நான் அப்படி என்னதீங்கு செய்தேன் உங்களுக்கு?

பார்வதி—உனக்கு வாய்கூடவா? நீ கலகக்காரபையல் ஆயிற்றே!

நாரதர்—என்ன! அன்னைமீர் அப்படி சொல்லுகிறீர்கள். நான் என்ன செய்தேன்? துவாதசி பாரணைக்கு கடலையை பொரித்துக்கொடு என்று கேட்டதா குற்றம்? பசிக்கு யார்தான் ஆதரவு தேடிக்கொள்ள மாட்டார்கள்?

இலக்ஷ்மி—ஆதரவு தேடிக்கொண்டதில் ஒரு குற்றமும் இல்லை. உனக்கு வாய்வார்த்தையல்லவோ அதிகமாயிருக்கிறது. உன்னைகேட்கிறவர்கள் ஒருவருமில்லையே!

நாரதர்—நான் என்ன சொன்னேன்? கடலையை பொரிக்கும் சக்தி உங்களுக்கில்லை போலிருக்கிறது என்றேன். இதுகூடவா குற்றம்? யாதார்த்தவாதி பகுஜனத்வேஷி என்பது சரியாய்த்தான் இருக்கிறது.

சரஸ்வதி—சொல்லத்தகுந்த வார்த்தையைசொல்லலாம். சொல்லத்தகாத வார்த்தையை சொல்லலாமா?

நாரதர்—நான் தகாதவார்த்தையையா சொன்னேன்? கிருஷ்ணா! கிருஷ்ணா!

இலக்ஷ்மி—எங்களுக் கெல்லாம் அபவாதத்தை உண்டாக்கி விட்டுஎன்னடா, தாதாவை கூப்பிடுகிறாயே? உன் சமாசாரத்தை யெல்லாம் தாதாவுக்குச் சொல்லி அவர்

**கா. கந்தசுவாமி ஆச்சாரியர்,**
போர்டாபீஸ் கிளர்க்கு.

(தொடரும்)



## சாமள சர்மா சரித்திரம்.

---

சாதுக்களே !

"முன்னே சோழநாட்டுக்குத் திலதம் போன்று விளங்கானின்ற தஞ்சைமா நகரத்தில் வாழ்ந்து சிவஜோதியில் மறைந்தருளிய பொன்மணிபக்தர் சரித்திரத்தைச்சொன்னோம். இனி மகததேசத்துக் கடுத்த கௌரீபுரத்தில்வாழ்ந்து அம்பிகையின் அருளால் சாயுஜ்யபதவி யடைந்த சாமளசர்மாவின் சரித்திரத்தைச்சொல்லுகிறோம். கேட்பீர்களாக"வென்று நாபாசி முனிவர் கூறுகின்றார்.

பலவளங்களும் நிறைந்துள்ள மகததேசத்திற்கடுத்த கௌரீபுரமென்னும் ஊரில் பஞ்சப்ரம்ம சந்ததியிற்பிறந்த சோமயாஜி கிருஷ்ண சர்மாவென்னும் ஒருபுண்ணியசீலரிருந்தார். அவருக்குப்புத்திர சந்தானமின்றி அவ்வூரிற் றிருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீசாமளாதேவியை உபாசனைசெய்துவந்ததினால் அத்தேவியின் அநுக்ரஹத்தால் ஒரு ஆண்குழந்தைபிறந்தது. அக்குழந்தைக்குச் சாதகனமுடித்து, சாமளசர்மாவென்னும் நாமகரணம் சூட்டி, அன்னப்பிராசனம், சவுளம், உபநயனமுதலிய கிரியைகள் செய்வித்து, வளர்த்து வருங்காலத்தில், அப்புத்திரன் ஒருநாள் தன்தந்தையாகிய கிருஷ்ணசர்மாவைநோக்கி'ஐயா! எனது தந்தையே! யான் சாமளாதேவியைஉபாசனைசெய்ய எண்ணங்கொண்டிருக்கிறேன்; ஆகையால் அத்தேவியின் மந்திரத்தை எனக்குபதேசித்தருளவேண்டு'மென்று பணிந்துகேட்கவும், தந்தையானவர் அப்புத்திரனுக்கு அவ்விதமே உபதேசம்செய்விக்க எண்ணங்கொண்டவராய் நல்லசுபமுகூர்த்தம் நியமித்து தனது புத்திரனையழைத்து தேவியின்பீஜாட்சரத்தை உபதேசித்தருளினர். அன்றுமுதல் அப்புத்திரனாகிய சாமளசர்மாவானவர் அவ்வூரிலுள்ள சாமளாதேவியின் ஆலயத்தில் ஜனகோஷ்டம் இல்லாதகாலமாகிய அர்த்தஜாம இரவிற்சென்று மூலஸ்தானத்தில் ஒருபுறம் உட்கார்ந்து ஜெபஞ்செய்துகொண்டு அம்பிகையை நமஸ்கரித்துவிட்டு தம்வீட்டிற்குவருவது வழக்கம் இவ்விதம் நடந்துவருங்காலத்தில் ஒருநாள் அவ்வூரதிகாரியாயுள்ள ஒருவன் தனதிஷ்டசித்தியின்பொருட்டு சாமளாதேவிக்குப் பிரார்த்தனை செய்துகொண்டுபோய் அக்காரியம் தேவியின்அருளால் முடிவுபெறவே பொன்னினால் ஒருபதக்கம் ஒன்று செய்து அம்பிகைக்குச்சமர்ப்பித்துவிட்டு வீடுபோய்சேர்ந்து தம்மனைவியுடன் பேசிக்கொண் டிருக்கும்போது, அம்மனைவியானவள் அப்புருடனைநோக்கி, "நீர் இன்று அம்பிகைக்குச் சமர்ப்பித்த பொற்பதக்கத்தை கோயில்குருக்கள் கழற்றிவைத்தனரோ, அல்லது தேவியின்மீதே அணியப்பட்டிருக்கிறதோ, அதுதெரிந்து வந்தீரா? மேலும் நமதூரில் திருடர்களின் உபத்திரவம் அதிகரித்திருக்கிறபடியால் ஜாக்கிரதையாயல்லவோ இருக்கவேண்டு"மென்று சொல்ல, அதைக்கேட்ட அவ் வதிகாரியானவன் "வாஸ்தவம்தான். இதோ யான் சென்று பார்த்துவருகிறேன்" என்று அவ்வாலயத்துட் சென்று மூலஸ்தானத்தை யடையவே வழக்கம்போல வந்து ஜெபஞ்செய்துகொண்டிருக்கும் சாமளசர்மாவைக்

கண்டு "ஓஹோ! இவன் திருடவந்தவன்போலிருக்கிறது. தேவியின் மீதிருக்கும் ஆபரணங்களைக் களவாட வந்தவனேயன்றி வேறில்லை. இவன் உண்மையில் ஜெபஞ்செய்ய வந்தவனாயிருந்தால் மூலஸ்தானத்தில்என்னவேலையிருக்கிறது? அதுவுமன்றி அர்த்த ஜாமராத்திரியில் ஏன்வரவேண்டும்" என்று நினைந்து அச்சாமளசர்மாவை பிடித்துக் கொண்டுவந்து, "அடா பயலே! இந்த அர்த்தஜாம ராத்திரியில் இவ்வாலயத்தில் உனக்கு என்னவேலையிருக்கிறது? நீகோயில் சொத்துக்களைக் களவாடவா வந்தனை? உன்னை இப்பொழுது விடுகிறதில்லை" என்று அடிமேல் அடியடித்து வாயில்வந்தவை யெல்லாம் வைது கட்டிப் பிடித்துக்கொண்டுபோய் கைக்கும் காலுக்கும் விலங்கிட்டு, தன் வீட்டின் பின்புறத்தில் ஓர் அறையில் விட்டு கதவைத்தாளிட்டுக் கொண்டுபோய் "நாளையதினம்விசாரணைதலத்திற்கனுப்பலா"மென்று எண்ணிக்கொண்டு படுக்கையறையிற்போய் நித்திரையிலிருந்து விட்டான். இப்படியிருக்க, அச்சாமள சர்மாவானவர் தேவியை நினைத்து "ஹேசாம்பவி! ஜகத்ரக்ஷகி! பாலாத்ரிபுரே! காமாக்ஷீ! கல்யாணீ! கருணாகரீ" என்று பலவாறு ஸ்துதி செய்து நிற்கையில், தேவியானவள் இச்சாமள சர்மாவின் பக்தியை வெளிப்படுத்தும் நிமித்தம் அவ்வதிகாரியைப்போல் உருக்கொண்டு வந்து தாளிட்ட கதவைத்திறந்து, அவ்வதிகாரியால் முன்னிடப்பட்ட கால்விலங்கு கைவிலங்குகளைக் கழற்றி சாமளசர்மாவை தனது கிருஹத்திற்குப் போம்படி செய்துவிட்டு, உடனே அவ்விலங்கைக் கொண்டுவந்து அவ்வதிகாரி நித்திரை செய்யும்போது அவன் கால்களுக்கும் கைகளுக்கும் அவ்விலங்கைப் பூட்டிவிட்டுப் போயினள். அப்படியிருக்க அவ்வதிகாரி பொழுது விடிந்தவுடன் நித்திரைவிட்டெழுந்து பார்க்கையில் தன் கால்களிலும் கைகளிலும் விலங்கிட்டிருப்பதைக் கண்டு, "ஈதென்னஆச்சர்யமாயிருக்கிறதே! ஈதென்ன கொடுமையோ! அறியோம்" என்று நினைத்து தன் மனைவியை அழைத்து தனக்குவந்தகதியைக்காண்பிக்க, அவளும் விசனப்பட்டு "இது நேற்றிரவு ஆலயத்திலிருந்து பிடித்து வந்த திருடனுக்கு இடப்பட்ட விலங்கல்லவோ? அவைகள் திரும்பவும் உனது கைகளிலும் கால்களிலும் வருதற்குக்காரணம் என்ன தெரியவில்லையே! அத்திருடனை வெளியேகொண்டு வந்தால் எல்லாவிஷயமுந்தெரியவரும்" என்று சொல்லிக் கொண்டே அவ்வதிகாரியின் மனைவி கதவைத் திறந்துபார்க்குமளவில், உள்ளிருந்த சாமளசர்மாவைக் காணாது தியங்கி, ஓஹோ! அவன் மந்திரவாதியோ! என்னவோ தெரியவில்லை. தாளிட்டகதவைத் திறக்கவுமில்லை. நாம் தானேபோய்திறந்தோம். அவன் எவ்வித தந்திரத்தினாலோ, வெளி தாண்டி விட்டான்" என்று பலவாறு எண்ணி தன் நாயகனுக்கு அவன் வெளி தாண்டிய சங்கதியைத் தெரிவித்து, உடனே அவ்வூரிலிருக்கும் கருமாராச்சாரியரொருவரைக் கொண்டுவந்து அவ்விலங்கைக் கழற்றும்படிச் சொல்ல, அக்கருமாராச்சாரி, அவ்விலங்குகளுக்குத் தகுந்த ஆயுதங்களைக் கொணர்ந்து கழற்றியும் சற்றேனும் அசையாதிருக்கக் கண்டு, "ஐயா! இதுஎப்படிப்பட்ட ஆயுதங்களைக்கொண்டு உடைத்துப்பார்த்தும் ஆயுதங்கள் பொடிபடுகின்றனவேயன்றி விலங்குஒடியவில்லை. ஆகையால், இது என்னாலாகாத காரியம். மற்றவராலாகப் போகிறதில்லை. முடியாத காரியத்திற்கு முயற்சி செய்வதாற் பயனில்லை" என்று சொல்லிவிட்டுப் போயினர்.



இப்படியிருக்க இவ்விஷயம் அவ்வூரார்களறிந்து கூட்டம் கூட்டமாய் கூடி வந்து பார்த்து, இவ்வதிகாரி "என்னதீங்குசெய்தனனோ? தெரியவில்லை. அதனால்தான் இவனுக்கு அழியாவிலங்கை யாரோபூட்டிவிட்டார்கள். மேலும் இவனோ கொடிய துஷ்டன். இவன்யாவரையும் பகைசெய்து கொள்ளுகிறவழக்கம். ஆதலால் இவ்விஷயத்தை நமதுதேசத்தரசனிடம் தெரிவித்துவிடவேண்டியது" என்றுநினைத்தவர்களாய் சிலர் அவ்வூராசனுக்குத் தெரிவிக்க, அரசன் சேவகர்களை யழைத்து அவ்வதிகாரியை உடனே கொண்டுவரும்படிச் சொல்லவும், சேவகர்கள் அவ்வதிகாரியிடஞ்சென்று "அரசன் உம்மை அழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கின்றார். உடனே வரவேண்டு" மென்னலும், அவ்வதிகாரி அதிக நாணத்துடன் எழுந்து அச்சேவகர்களுடன் சென்று அரசன் சமுகத்தில் வந்து நிற்கவும், அரசன் அவ்வதிகாரியின் விர்த்தாந்தங்களைக் கேட்க, அதற்கு அவ்வதிகாரி "ஐயா! நான் ஒருகுற்றமும்செய்ததில்லை. நான் சாமளா தேவிக்குப் பொற்பதக்கமொன்று செய்தளித்தேன். ஊரில் திருடர்களின் தொந்தரவு அதிகமாயிருப்பதால் அதைக் களவாடினார்களோ? என்னமோ?" வென்ற சந்தேகங்கொண்டு அர்த்தசாம ராத்திரியில் ஆலயத்துட்சென்று பார்க்குமளவில், ஒருசிறியபிள்ளை அவ்வாலய மூலஸ்தானத்தில் ஜெபஞ் செய்பவன்போல் உட்கார்ந்திருந்தான். அவன் திருடவந்தவனென்றெண்ணி அவனைப்பிடித்துக் கொண்டுவந்து கால்விலங்கு கைவிலங்கு பூட்டி, "ஒரு அறையில் அடைத்துக் கதவைத் தாளிட்டு வந்து, பொழுது விடிந்தவுடன் தங்களிடம் விசாரணைக்குக் கொண்டுவரலாமென்று படுத்து நித்திரைசெய்துவிட்டேன். பொழுதுவிடிந்து விழித்துப்பார்க்குமளவில் அவனுக்கிட்ட விலங்குகள் எனக்கிடப்பட்டிருக்கிறது. இதை கழற்றவும் முடியவில்லை. இவ்வித அவஸ்தையிலிருக்கும்போது, சேவகர்கள் தாங்கள் அழைத்துவரச் சொன்னதாகவந் தழைத்தார்கள். இதுதான் தெரியவரும்" என்று சொல்லவும், அரசன் இவ்விசாரணையை நாளையதினம் விசாரிக்கலாமென எண்ணி சேவகர்களை அழைத்து சாமளாதேவியின் ஆலயத்தில் யார் அர்த்தசாமத்தில் ஜெபஞ்செய்கின்றார்களோ அவர்களைப் பிடித்துக்கொண்டு வரவேண்டியதென்று கட்டளையிட்டான். உடனே சேவகர்கள் அவ்வாலயத்தில் அன்றிரவு அர்த்தஜாமத்தில் போய் பார்க்கும்போது அப்பக்தசிகாமணியாகிய சாமளசர்மா ஜெபஞ்செய்துகொண்டிருக்க, அவரை சேவகர்கள்பார்த்து பிடித்துவைத்திருந்து மறுநாள் அரசன்சமுகத்தில்விட, அரசன் அவ்வதிகாரியையும் அழைப்பித்து விசாரணைசெய்து வருங்காலத்தில் ஒரு அசரீரி உண்டாகி "அரசனே! இச்சிறுபிள்ளை எனதுபக்தசிகாமணியென்றறியாமலும், திருட்டுசொத்துக்கள் கையிலிருக்கக்காணாமலும், அவனையடித்து விலங்கிட்டு ஓர் அறையில்விட்டு பூட்டிட்டதினால் எனதுபக்தசிகாமணி என்னைத்தோத்திரஞ்செயயவும், நான் உடனே இவ்வதிகாரியைப்போல்வந்து தாளிட்டகதவைத் திறந்து எனது பக்தனை வெளியேற்றிவிட்டு அவ்விலங்குகளை இவ்வதிகாரிக்கிட்டுப் போயினன். எனதுகைபட்டவிலங்கையார் கழற்றினாலும் உடைத்தாலும் கஷ்டமேயன்றி பொடிபடாது. ஆகையால் அவ்விலங்கைக் கழற்றியெறியவேண்டுமானால் எனதுபக்தனாகிய சாமளசர்மாவின்

கரம் அவ்விலங்குகளின்மீது பட்டால்தான் பொடிபடுமே யன்றி மற்றெவ்விதத்திலும் உடைபடாது" என்று கூறவே, அரசனும் அச்சபையி லுள்ளவர்களும் அவ்வசரீரி வாக்கை யறிந்து ஆச்சர்யமடைந்தவர்களாகி அரசன் அவ்வதிகாரியின் விலங்கைக் கழற்றவேண்டுமென்று கெஞ்சிக் கேட்கவும், சாமளசர்மா வெனும் பக்தர் தேவியின் பீஜாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு அவ்விலங்கின்மீது கரத்தைவைத்தனர். உடனே அவ்விலங்குகள் ஆயிரந் துண்டாகப் பொடிபட்டுவிட்டது. இதைக் கண்ட அரசனும், வந்திருந்த ஜனங்களும், ஆச்சர்யமடைந்துதேவியைத்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள்மலர்மாரிபொழிந்தார்கள். அரசனவன் சாமளசர்மாவின் பக்திக்குவியந்து அவரைப்பணிந்து தோத்திரஞ்செய்து அவருக்கென்று அவ்வூரில் ஓர் மடங்கட்டுவித்து அப்பக்தர் செய்து கொள்ளவேண்டிய பூஜைகளுக்கும், போஜனமுதலியவைகளுக்கும் ஏராளமான திரவியத்தைக் கொடுத்து பிரதிதினமும் அப்பக்தரை வணங்கி நமஸ்கரித்து வருவானாயினன். அவ்வதிகாரியும் இப்பக்தரின் பெருமையைப் புகழ்ந்து பணிந்து வருவானாயினன். இப்படி நடந்துவருங் காலத்தில் அவ்வூரில் ஒரு குயவனுக்குப் புத்திரசந்தான மில்லாது அநேகநாள் தவஞ்செய்து ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் கண்கள் தெரியாமையினால் ஏழு வயது வரையிலும் எவ்வித சிகிச்சை புரிந்தும் பயன்படாமையினால் பிறவிக் குருடென்று தீர்மானித்து கடைசியாக சாமளசர்மாவினிடம் கொண்டுவந்து "சுவாமி? இக்குழந்தைக்கு தேவரீருடைய கிருபையால் தான் நேத்ரம் தெரியவேண்டுமே யன்றி, மற்றவரால் முடியா"தென்று சொல்லவும், அதற்குப்பக்தர், "நான்கடவுளா? என்னால் கண்கொடுக்க முடியுமா? என்னாலாகாத காரியத்தைச்செய்யும்படிச்சொன்னால்எவ்விதம் நடக்கும்?" என்று சொல்லவும், அதைக்கேட்ட அக்குயவன் "தேவரீர் கிருபை வைத்தால் எவ்விதமும் நடக்கும்; தாங்கள்தான் எங்களது குறையை நீக்கி கடாட்சித்தருளல் வேண்டும்" என்று சொல்லவும், "இக்குழந்தையை சாமளாதேவியின் ஆலயத்துக்கு அழைத்து கொண்டு வாரும் என்று சொல்ல, அவ்விதமே அக்குழந்தையை அழைத்துக்கொண்டுபோக, உடனே அச்சாமளா தேவியின்மீது பத்துப் பாடல்களைப் பாடியதும் அக்குழந்தைக்குக் கண்கள்திறந்துவிட்டன. இதைக் கண்ட அக்குயவன் ஆனந்த பரவசனாய் அவரையே குருவாகக்கொண்டு வணங்கி அப்புத்திரனையும் அவர் பாதத்தில் விழும்படிச்செய்து பிறகு அவரிடம் விடைபெற்று வீடுபோய்ச்சேர்ந்தனன். இவ்வதிசயத்தைக் கண்டோர் யாவரும் இப்பக்தர் விஷயத்தில் பயபக்தி விஸ்வாசத்துடனிருந்து தங்களுக்கு வேண்டிய நன்மார்க்கங்களை இவர் மூலமாய் அனுபவித்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இப்பக்தசிகாமணி சில காலம் தேவியைப்பூஜித்து வணங்கி சாயுஜ்யபதவியை அடைந்தார்.

சுபம். சுபம். சுபம்.

---



தான் போய் இருக்கிறாரே நீ மேன்மையாக பேசுகிறாயே அவளிடத்திற்கு.

சரஸ்வதி—ஆம் அப்பா! நானும் உங்கள் அப்பாவை அவளிடத்திற்குத்தான் அனுப்பி இருக்கிறேன்.

பார்வதி—நானும் கைலாசபதியை அவளிடத்திற்குத்தான் அனுப்பி யிருக்கிறேன்.

நாரதன்—எவளிடத்திற்கு?

பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி—அவள்தான். அனுசூயா.

நாரதன்—என்னகாரியமாய்?

பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி—அவள் பதிவிரதாதர்மத்தை அளவிடுவதற்குத்தான்.

நாரதன்—எவ்வளவுராதும் அளவிட்டு ஆயிற்று. உங்களுக்கு சங்கதி தெரியபடுத்தினார்களா?

பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி—தெரியப்படுத்த வேண்டுமோ? எல்லாம் இதுவரையிலுமே அளவிட்டு ஆயிருக்கலாம்.

நாரதர்—பயப்படவேண்டாம். அன்னைமீர்! உங்கள்சாமர்த்தியம் எனக்கும் உண்டு. போனார்களே அவர்கள்படும்பாடு உங்களுக்குத் தெரியுமா? அனுசூயாவை என்னவோ செய்வதற்கு போயிருக்கிறார்கள் எங்கள்புருஷர்கள் என்று ஜம்பம் அடித்துக்கொள்ளுகிறீர்களே!

பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி—என்னடாபாடு? (தங்களுக்குள்) என்னவோதெரிய வில்லை.

நாரதர்—அதை உங்களுக்கு தெரிவிப்பதற்குத்தானே உங்களிடம் வந்தேன். உங்களுக்கு உபகாரம் செய்ய வந்தவன்மேல் இப்படி எரிந்து விழுகிறீர்களே! எனக்கு என்னவந்தது? நான் போகிறேன்.

பார்வதி—நாரதா! நாரதா! அடாபோகாதேயடா! வா. வா. என்ன? சொல் சமாசாரம்.

நாரதர்—நீங்கள் தான் என்மீது கோபிக்கிறீர்களே!

இலக்ஷ்மி—நாரதா! அப்படி அல்லடா. பெரியவர்கள் சொன்னால் அதற்கெல்லாம் கோபித்துக் கொள்கிறதா?

நாரதர்—என்ன பாட்டி சமயத்திற்குத் தகுந்த வார்த்தைகள்?

சரஸ்வதி—என்னடா கிராக்கி செய்கிறாய்?

நாரதர்—நான் என்னம்மா கிராக்கி செய்கிறேன். சமாசாரம் சொல்ல வந்தால் ஆளுக்கு ஓர் பேச்சு பேசுகிறீர்களே!

பார்வதி—அப்பா! நாரதா! என்ன சமாசாரம்? நடந்ததைச் சொல்.

நாரதர்—எனக்கு தெரிந்ததைத்தான் சொல்வேன். நான் பாராதவிஷயத்தை சொல்ல மாட்டேன்.

இலக்ஷ்மி—பார்த்ததைத்தான் சொல். அப்பா!

நாரதர்—அத்திரி ரிஷி ஆஸ்ரமம் போனேன். அவர்கள் ஸ்ரீ புருஷாள் இருவருமாய் மூன்று குழந்தைகளை தொட்டிலிலிட்டு தாலாட்டிக் கொண்டிருந்தார்கள். இடையிடையே என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தார்கள். சிலவார்த்தைகள் கேட்டது. மழு, மான், சங்கு, சக்ரம், வேதபுஸ்தகம் இப்படிப்பட்ட வார்த்தைகள் மாத்திரம் எனக்குப்பட்டது. குழந்தைகள் க்வா க்வா வென்று கத்துகின்றன. அந்த சந்தடியில் ஒன்றும் கேட்கவில்லை. அதை உங்களுக்கு தெரிவிக்க விரைந்து வந்தேன்.

இலக்ஷ்மி—மதனி! என்ன! இவன் சொல்கிறதைப் பார்த்தால், அந்த மாயவித்தைக் காரி நமது புருஷரை குழந்தைகளாக்கி விட்டாளோ?

பார்வதி—அப்படித்தான் இருக்கிறது. இவன் சொல்கிறதைப் பார்த்தால்.

சரஸ்வதி—என்னடா! இது சொல்வதற்கா இத்தனை நிதானமாய்ச் சொன்னாய்? என்னடா உனக்குவந்தது இப்படிசெய்வதில்?

பார்வதி—சரஸ்வதி! அவனுடன் ஒன்றும் பேசாதே. நாரதா! போனது போகிறது. இப்போது என்ன செய்கிறது?

நாரதர்—எனக்கு என்ன தெரியும்? நீங்கள் என்ன செய்வீர்களோ? என்னவோ?

இலக்ஷ்மி—நாரதா! உன்னை யோசனைகேட்டால் அதற்கு தகுந்தது சொல்லக்கூடாதா? புத்தி சாலியானதினால்தான் கேட்கிறோம்.

நாரதர்—சற்று முன்னே இந்த வார்த்தையைக் காணோமே. உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் பேசினீர்களே! மலையில் விளைந்தாலும் உரலில் வந்துதானே மசிய வேண்டும். அது தெரியாமல் போயிற்றே உங்களுக்கு.

சரஸ்வதி—இப்போது தெரிந்தது. செய்யவேண்டியதைச் சொல்.

நாரதர்—நீங்கள் எல்லோரும் அத்திரிமுனிவர் ஆஸ்ரமம் சென்று அநுசூயாவினிடத்தில் பர்த்தாபிக்ஷை கேட்கவேண்டியது தான்.

பார்வதி—நாங்கள் தாழ்ந்தா போகவேண்டும்?

நாரதர்—தாழ்ந்துபோகாத பக்ஷத்தில் வீட்டில் இருங்கள். உங்கள் புருஷர்கள் அங்கே குழந்தைகளா யிருக்கிறார்கள். அதில் எனக்கு ஒன்று மில்லை.



இலக்ஷ்மி—சரி! போகவேண்டியதா யிருந்தால் போகத்தானே வேண்டும்.

நாரதர்—அதற்கு என்ன செய்கிறது? உங்கள் புருஷர்களை நானா அநுசூயாவினிடத்தில் நக்னபிக்ஷை கேட்கச்சொன்னேன்?

சரஸ்வதி—போகிறோம். நீயும் கூடவருகிறாயோ?

நாரதர்—நான் என்னத்திற்கு வரவேண்டும்?

பார்வதி—அப்பா! நாரதா! நீயும் வா. நாங்கள் ஸ்திரீகள். நீ என்றால் ஆண்பிள்ளை. சமயோசிதமாய்ப் பேசுவாய். அதற்குத்தான்.

நாரதர்—அப்படியானால் வருகிறேன். வாருங்கள் போகலாம்.

மூன்றும் அங்கம்
மூன்றும் காட்சி முற்றிற்று.

---

**மூன்றும் அங்கம்.** **நான்காம் காட்சி.**

இடம்: பூலோகம் அத்திரிமுனிவர் ஆஸ்ரமம் காலம் மாலை

**நடர்:—அத்திரிமுனிவர், அநுசூயா, பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி, நாரதர்.**

நாரதர்—அத்திரிரிஷிகளே! நமஸ்காரம்? அநுசூயா! என்ன க்ஷேமந்தானே.

அநுசூயா—தங்கள் ஆசீர்வாதம் இருக்கும்போது க்ஷேமத்திற்கு குறைவு என்ன?

நாரதர்—என்ன தொட்டிலில் குழந்தைகளா என்ன?

அநுசூயா—ஆம். சுவாமி! நீங்கள் ஆசீர்வாதம் செய்தீர்களே. அதின் மகிமைதான்.

நாரதர்—புத்ரோத்சவம் ஆயிற்றா? மிகுந்த சந்தோஷம். போகட்டும். பகவான் க்ருபை. என்ன மூன்று குழந்தைகள் இருக்கின்றனவே?

அநுசூயா—ஆம். சுவாமி! மூன்றுகுழந்தைகள்தான். அவைகள் என்கர்ப்பத்தில் உண்டாகவில்லை.

நாரதர்—பின் எவ்விதம் உற்பவித்தனர்.

அநுசூயா—மூன்று பிராமணர்கள் இன்று காலை வந்தனர். என்னை பிக்ஷைகேட்டனர். நான் பிக்ஷைகொடுக்க ஒத்துக்கொண்டேன். அவர்கள் தங்களுக்கு நக்ன பிக்ஷை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

நாரதன்—பிறகு என்ன நடந்தது?

அநுசூயா—பதிவிரதா தர்மத்தை எப்படி காப்பாற்றப் போகிறோம் என்று கவலை உண்டாயிற்று. மனம்கலங்கி போய்விட்டேன்.

நாரதர்—கலங்கிப்போய், அவர்கள் கேட்டபடி நக்னபிக்ஷை கொடுத்தாயோ?

அநுசூயா—இல்லை. கடைசிவரையில் சொல்லுகிறேன். கேளுங்கள்.

நாரதர்—சரி கேட்கிறேன். சொல்.

அனுசூயா—பிரதிதினம் செய்யும் பர்த்தாவின் பாதபூஜையில் மிகுந்தபாதோதகத்தை எடுத்து என்மீது ப்ரோக்ஷித்துக் கொண்டேன். பிறகு அந்த பிராமணர்மேல் ப்ரோக்ஷித்தேன். எங்கள் ஆத்துக்காரரை மனதில் நன்றாய் நினைத்துகொண்டேன்.

நாரதர்—பிறகு என்ன நடந்தது?

அனுசூயா—பிராம்மணர் குழந்தைகளாய் விட்டார்கள். அவர்களுக்கு நக்னமாய் பால் கொடுத்தேன். அவர்மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்தேன். பிறகு குழந்தைகளை தொட்டிலிலிட்டு தாலாட்டினேன். அதற்குள்ளாக முனிஸ்ரேஷ்டரும் ஆற்றில் ஸ்நானம்செய்துவிட்டு வந்தார். சந்தோஷத்தையடைந்தார். இருவருமாய் தாலாட்டினோம்.

நாரதர்—அப்போதுநான் இங்கு வந்திருந்தேன். குழந்தைகள் ஓயாமல் அழுதுக்கொண்டிருந்தன. நீங்கள் அந்த வேலையிலிருக்கும்போது உங்களுக்கு தொந்தரை கொடுக்கக்கூடாதென்று போய்விட்டேன்.

அனுசூயா—சுவாமி! அப்படி எங்ககள்மீது பாராமுகமாய்ப் போகலாமா? உங்கள் ஆசீர்வாதத்தினால் தானே பிராமணர்கள் குழந்தைகளானார்கள் நானும் பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றிக் கொண்டேன். நாங்கள் இப்போது அனுபவிக்கிற புத்திரப் பேற்றின் சந்தோஷமெல்லாம் உங்களால் கிடைத்ததாயிற்றே? எங்கள்மீது கிருபாநோக்கமில்லாமல் போகலாமா?

நாரதர்—போனால் என்ன? அதினால் உங்கள் மீதுள்ளப்ரீதி குறைந்தா போய்விடும்? அது இருக்கட்டும். நீங்கள் தாலாட்டியபோது சங்கு, மழு, வேதபுஸ்தகம், இப்படிப்பட்ட வார்த்தைகள் காதில் விழுந்ததே! அது என்ன?

அனுசூயா—சுவாமி! என்னவோ தெரிய வில்லை. ஒரு தடவை பார்த்தால் குழந்தைகளாய்த் தோன்றின. மற்றொருதடவைப் பார்த்தால் ஒரு குழந்தைக்கு சிவ சின்னங்களெல்லாம் தோன்றின. இரண்டாவது குழந்தைக்கு விஷ்ணு முத்திரைகளெல்லாம் விளங்கின. மூன்றாவது குழந்தைக்கு பிரம அடையாளங்களெல்லாம் ப்ரகாசித்தன. அவர்கள் ஹரி ஹர பிரமாக்களோ? என்னவோ? தெரியவில்லை.

நாரதர்—இல்லை. இந்திரபட்டணத்திற்கு போனேன். அவ்விடத்தில் பார்வதி, இலக்ஷ்மி, சரஸ்வதி என்கிற பராசக்திகள் சிவனையும் விஷ்ணுவையும் பிரமாவையும் உன்னிடம் அனுப்பியதாகச் சொன்னார்கள். அதிகநேரமாய் வரயில்லையென்று அவர்களும் இங்கு வந்திருக்கிறார்கள்.

அனுசூயா—என்ன அபசாரம்! என்ன அபசாரம்! அவர்கள் வெளியில் நிற்கிறார்களோ என்ன? இப்போதே வெளியேசென்று வந்தனோபசாரம் செய்து அவர்

கா. கந்தசுவாமி ஆச்சாரியர்,
போர்டாபீஸ் கிளர்க்கு.

(தொடரும்.)

தக்கவாறு எவரெவரை எவ்வெவ்விதம் உபசரிக்கவேண்டுமோ அவரவரை அவ்வவ்விதம் உபசரித்து, நாயகன் சிவபூஜை செய்யும்போது அவரைக் குருவாகப் பாவித்துத் தான் சிஷ்யையாயிருந்து வேண்டுவன செய்தும், அவர் விஷயேச்சை கொண்டபோது அவரை மதனாகப்பாவித்துத் தான்இரதியாயிருந்து மகிழ்ச்சியைக் கொடுத்தும், மற்ற காலங்களில் அவரைத் தெய்வமாகப் பாவித்து, அவருண்டுசெய்த சேடத்தைத் தேவாமிர்தமாகவும், அவர் வாய்ச்சொற்களை உபதேசமாகவும் கொண்டும், புண்யதீர்த்தமாடுதல், விரத மனுஷ்டித்தல், கடவுளை வழிபடுதல் முதலியவெல்லாம் அவர் திருப் பாததரிசனமென்று நம்பி நின்றும் இல்வாழ்க்கையின் தருமத்தைக் குறைவற நடத்துவாளாயினள். சதாநந்தரும் அவர் மனைவியாரும் பூண்ட இவ் வில்வாழ்க்கைக்குச் சிறந்த அணிகலனாகப் புத்திரப்பேறும் உண்டாயிற்று.

அக்குழந்தைக்கு விஸ்வநாதன் என்னும் நாமகரணஞ் சூட்டி மனைவி மக்களுடன் தமது மரபின் தொழிலாகிய கல்வேலையைக் கொண்டு தம்மிடம் வருபவர்க்கு இதோபதேசம்புரிந்து, மெய்யறிவை யூட்டி இசையுடன் வாழ்ந்து வந்தனர். இப்படியிருக்க, அக்காசியம்பதியை மனுநீதி தவறாது ஆண்டுவந்த இராஜனானவன், ஒருநாள் தனது மந்திரியை அழைத்து ஏகாந்தமான இடத்தில் வைத்துக்கொண்டு, "மந்திரீ! நான் இதுவரையில் அநுபவித்த உலகாநந்தம் போதும்; இனியேனும் ஆத்மாநந்தத்தை யடையும் மார்க்கத்தைத் தேடவேண்டுமாகையால், அதற்கநுகுணமானவற்றை யளித்து என்னை அவ்வழியில் நிறுத்தவல்ல மகாபுருஷனொருவனைக் கண்டுபிடித்து அவன் திருவடிகளில் என்னைச் சேர்ப்பித்தல் வேண்டும்" என்று சொல்ல, அதற்கு மந்திரி, தன் கரங்களைக்கூப்பி, ஏமண்டலேஸ்வரா! தங்களுக்கிஷ்டம் அவ்வாறிருக்கும் பட்சத்தில், நானப்படியே செய்கிறேன்; இதற்காக நாம் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டிய ஆவசியகமில்லவேயில்லை. நமது நாட்டிலேயே விஸ்வகர்ம குலதிலகரான சதாநந்தர் என்னும் பெரியோரொருவர் இருக்கின்றனர்; சிவபக்தியில் மேம்பட்டவர்; ஜீவகாருண்ய மிகுந்தவர்; சத்திய வாசகர்; தருமம் வழாதவர், அவரை ஆஸ்ரயிப்பதே தகுதியாகும் என்றனன். இதைக் கேட்ட அரசன் உடனே அவரை அடுத்து அவரது திருவடியில் சாஷ்டாங்கமாக விழ, சதாநந்தர் அவ்வரசனை ஆசீர்வதித்து அவனது பரிபக்குவத்தைக்கண்டு அவனுக்குப் பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தனர். அதுமுதல் காசிவேந்தன் சதாநந்தரைக் குருவாகப் பெற்று, வேதாகம விதிப்படி அர்ச்சனை செய்துவரப் பிரதிதினமும் ஒரு சிவலிங்கத்தைச் செய்து தருமாறு அவரைப் பிரார்த்தித்தான். இறைவனது விண்ணப்பத்திற் கிசைந்த சதாநந்தர் அவன்விரும்பியவண்ணம் தினமொரு சிவலிங்க மூர்த்தத்தை தமதுகரங்களிலேயே செய்துதர, அரசன் அதை அதிக பிரீதியுடனும், பயபக்தியுடனும் பெற்றுச்சென்று சிரத்தையாகப் பூசித்து வரலானான்.

இவ்வண்ணம் நடந்துவருநாளில் ஒருநாள் மன்னவன் சிவலிங்கநிமித்தம் தனது குருவைத் தேடிவந்து அவரதிருக்கன்று நாடிநிற்க, அவர் அன்றைய தினம் பல வேலைகள் நிமித்தம் சிவலிங்கத்தைச் செ

ய்துகொடுக்க முடியாமையால், அரசனை நோக்கி மன்னவா! நீ இன்றைய தினம் எனது குழந்தையாகிய விஸ்வநாதனை அழைத்துக்கொண்டுபோய் சிவலிங்கமாக பாவனைசெய்து பூஜையை நிறைவேற்றிக் கொள்வாயென, அவ் வார்த்தையைக் கேட்ட அரசன், அவ்விஸ்வநாதனென்னுங் குழந்தையை அழைத்துக்கொண்டுபோய் வேதமுறைப்படி அபிஷேகம்புரிந்து தக்க தோராசனத்திலிருத்தி அர்ச்சனை செய்து வாயாரத் துதித்து அடியேனை ஆட்கொள்ளவந்த பரசிவ வஸ்துவேஎன்று அழைத்தான். அப்போது சாக்ஷாத் பரமசிவ மூர்த்தியான எம்பெருமான் அப்புத்திரனையே லிங்காகாரமாகும்படி சங்கல்பிக்க, அந்தப் புதல்வன் அவ்வாறே ஜோதிமயமான சிவலிங்கமாயினன். அவ்வதிசயத்தைக்கண்ட அரசனும் மற்றுமுள்ள பரிசனங்களும் பிரஜைகளும் ஆச்சரியப்பட்டு இது மாதொருகூற்றுடைய நாதனது திருக்கூத்தே யன்றி வேறன்றென்று அச்சிவலிங்கத்தைப் பலவாறு நெஞ்சுருக, உடல் புளகிக்க, கண்கள் தாரைதாரையாய் ஆனந்தபாஷ்பம் பொழிய, ஆனந்தக்கூத்தாடிக் கொண்டு தோத்திரஞ் செய்தனன். அத்தருணத்தில் "ஏ அரசனே! நீ யன்போடும் நமக்கு அந்தரங்க பத்தரான சதாநந்தரை ஆஸ்ரயித்து அவரது புத்திரனைக் கொண்டுவந்து நாமாகவே பாவனைசெய்து வழிபட்டமையால் அப்புத்திர ரத்தினத்தை விஸ்வேச லிங்கமாக்கினோம் என்றும், உனது பக்தியே பக்தி யென்றும் யாவரும் அறியும்பொருட்டு இவ்வித சூழ்ச்சியைச் சங்கல்பித்தோம். ஆனபடியால் இன்றுமுதல் இக்காசியம்பதியில் விஸ்வலிங்கமாக எழுந்தருளிய எம்மை வழிபட்டுவரவேண்டும். அவ்வாறு வழிபடுபவர்களுக்கு இஷ்டசித்தியை யளித்தருளுவோம்; நீயும் சதாநந்தரும் சிலகாலம் இங்கிருந்து நம்மை மேற்கூறியவண்ணம் அர்ச்சித்துவந்து நமது திருவடி நீழலை அடையக்கடவீர்கள்' என்றோர் அசரீரி யுண்டாயிற்று. இதைச் செவியேற்ற அரசன் ஆனந்தசாகரத்தி லழுந்தினவனாய் யோகநிஷ்டையி லிருக்கும்போது ரிஷபாரூடராய்த் தரிசனங் கொடுக்க, இவ்வதிசயத்தைக் கேள்வியுற்ற சதாநந்த பக்தர் அங்குசென்று ஆனந்தப்பெருங்கடலில்மூழ்கி தேவதேவா! ஜீவாத்மபரிபூரணா! கைலாசவாசா! கங்காதரா! சந்திரசேகரா! சாம்பவி மனோகரா! காசிநாதா! அடியேன் செய்த புண்யமே புண்யம். அடியேனுடைய பாக்கியமே பாக்கியம். தேவரீரின் திருவிளையாட்டினாற்புத்திரனை சிவலிங்க வடிவமாக ஆக்கிய பெருமானேயென்று துதிசெய்து பதிகங்களைப்பாடிமெய்மறந்துநிற்கும்போது எம்பெருமான் சதாநந்தரின் பக்திக்கு மகிழ்ந்து விடைமீ தெழுந்தருளி வந்து காக்ஷிகொடுத்து எனதன்பனே உனது பக்திக்கு யாம் மகிழ்ந்தோம். இன்றுமுதல் இக்காசியிற் சிவலிங்கவடிவாய் யுள்ள எம்மைப் பூஜித்து சிலகாலங் கழித்து எமது திருவடி நீழலை யடையக்கடவாய் என்று சொல்லி மறைந்தருளினர். அதுமுதல் காசிராஜனும் சதாநந்தரும் பூஜித்து முத்திபெற்றனர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

இச்சரித்திரம் பற்பல விதமாகக் கூறப்படுவதால் மகராஷ்டிர பாஷையில் எமக்குக் கிடைத்த ஏட்டுப்பிரதியின்படி மொழிபெயர்க்கப்பட்டது.



கள் ஆசீர்வாதத்தைப் பெறுவேன். அவர்கள் அப்படிநிற்கலாமோ? பாபமாயிற்றே.

நாரதர்—அனுசூயா! சற்றுநில். அவசரப்படாதே. நீ முன் எனக்கு இரும்புக் கடலை பொரித்துக் கொடுத்தாயே ஞாபக மிருக்கிறதா?

அனுசூயா—ஞாபகமில்லாமல் என்ன அப்போதுதான் நீர்அடியாளை ஆசீர்வதித்தீரே அதினால் அல்லவோ வந்தது இப்புத்திரபாக்கியம்?

நாரதர்—சரி. அதற்குமுன் அந்தக்கடலையை அவர்களுக்குக்காட்டி பொரிக்கச் சொன்னேன். அவர்களால் முடியவில்லை.

அனுசூயா—அதினால் என்ன இப்போது?

நாரதர்—நீ அதைப் பொரித்துக் கொடுத்ததனால் அவர்கள் தங்களுக்கு அவமானம் நேரிட்டதாக எண்ணிக்கொண்டார்கள். ஆகையாற்றான் தங்கள் புருஷர்களை உன்னிடத்திற்கு அனுப்பிவைத்தார்கள். தெரிகிறதா உனக்கு?

அனுசூயா—எதற்கு? எனக்கு தாழ்வை உண்டாக்கி அதினால் அவர்கள் உயர்வை அடைவதற்காகவா?

நாரதர்—ஆம். ஆம். சூக்ஷமமாய் விஷயங்களை தெரிந்துகொள்கிறாய் புத்திசாலி இப்போது தங்கள் புருஷர்களை அழைத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கிறார்கள். நீதான் அவர்களை குழந்தையாக செய்தனையே! இப்போது என்ன யோசனை இதற்கு? அவர்களை உள்ளே அழைக்கட்டுமோ?

அனுசூயா—அழையுங்கள். பார்ப்போம்.

நாரதர்—(வெளியே போய் பார்வதி இலக்ஷ்மி சரஸ்வதி இவர்களை அழைத்தல்).

அனுசூயா—ஜகன்மாதா! ஜகத் ரக்ஷகி! ஹேசங்கர மனோரஞ்சனி! ஹேவிஷ்ணுப்ரயே! ஹேவீணாபுஸ்தக பாணீ! வாருங்கள். வாருங்கள். எங்கள் பாக்யமேபாக்யம். உட்காருங்கள். புஷ்பம் பலம் தாம்பூலம் சந்தனம் குங்குமம் மஞ்சள் இவைகளெல்லாம் தருகிறேன். பெற்றுக் கொள்ளுங்கள். நாங்கள் சந்தோஷமாயிருத்தலை நோக்கி மகிழுங்கள். எல்லாம் உங்கள் ஆசீர்வாதந்தான்.

பார்வதி—அனுசூயா! எல்லாம் சரிதான். எங்கள்மீது என்ன இவ்வளவுகிருபை வைத்துவிட்டாயே?

அனுசூயா—சிவ! சிவ! என்ன அப்படிச்சொன்னீர்களே! நீங்கள் தேவதைகள். நானோ நர ஸ்திரீ. நான் எம்மாத்திரம் உங்களுக்கு? உங்களால். அஷ்டமாசித்திகளும் தேஜோன்மய சுயம்பரகாசமும் அஷ்ட ஐஸ்வரியங்களும் சர்வகலா ஞானப்ரகாசமும் எல்லோருக்கும் உண்டாகின்றனவே! நான் உங்கள்மீது கிருபைவைக்கிறதாவது! எடுத்துவிடுகிறதாவது! நல்ல அழகு.

இலக்ஷ்மி—அழகில்லாமல் என்ன! இப்போது உன் தயவு வேண்டியிருந்து தானே இவ்விடம் வந்தோம்?

அனுசூயா—நீங்கள் வந்தது நான் செய்த புண்ணியத்தின்பலன். நீங்கள் வந்தது நீங்கள் எங்கள்மீது வைத்த அன்பைத் தெரியப்படுத்தும்.

சரஸ்வதி—அனுசூயா! வார்த்தைகளை எப்படி வேண்டுமென்றாலும் உபயோகிக்கலாம். அது உபயோகிக்கிறவர்களுடைய சாமர்த்தியத்தையடுத்து. உண்மைக்கும் வார்த்தைக்கும் வெகுதூரம். ஆகையால் நாங்கள் வந்தது என்னவோ உன்தயவை நாடிதான்.

அனுசூயா—அப்படி நீங்கள் சொல்லத்தகாது நீங்கள் பராசக்திகள். உங்கள் கடாக்ஷமில்லாமல் ஒன்றும்நடவாது. உங்கள் அருள் நோக்கத்தால்தான் உங்களுடைய பரமபுருஷர்கள் எங்கள் கிரகத்திற்கு பிராம்மண ரூபத்தில் வந்தார்கள்.

பார்வதி—அதற்காகத்தான் அவர்களை குழந்தையாக செய்தனையோ?

அனுசூயா—நான் என்ன செய்தேன்? என்னால் என்ன செய்யக் கூடும்?

இலக்ஷ்மி—உன்னால் கூடியபடியால் தான் குழந்தைகளாகச் செய்தனை. உனக்குள்ள மகிமை எங்களுக்கு இருக்கிறதா?

அனுசூயா—எனக்கு என்ன மகிமை இருந்தாலும் அவையெல்லாம் உங்களால் உண்டானவையே! நீங்கள் பதிவிரதா தர்மத்தை முதலில் அனுஷ்டித்துக்காட்டியதினால் உண்டானவிளைவுதான். அத்தர்மத்தின் இதோபதேசத்தை உங்கள்பால் நான் பெற்றேன். அவ்வுபதேசத்தை அனுஷ்டானத்திற்கு கொண்டுவந்ததினால் எனக்கு என்ன மகிமை நீங்கள் சொல்லுகிறபடி உண்டாயிருந்த போதிலும் அவையெல்லாம் உங்கள் அனுக்ரகத்தையே சாரும். உங்களுடைய பரமபுருஷர்கள் பிராம்மணவடிவம் கொண்டு நக்னபிக்ஷை என்பால் அபேக்ஷித்தனர். அதை ஒருவாறு நான் பூர்த்திசெய்ய வேண்டாமா? அக்காரியம் தர்மத்தை சார்ந்தன்று?

சரஸ்வதி—தர்மத்தைச் சார்ந்ததுதான். அதற்காக பஞ்சகிர்த்திய பரமபுருஷரை குழந்தைகளாகச் செய்து வைத்துக் கொண்டனையே!

அனுசூயா—அதற்கு நான் என்ன செய்யட்டும்? நீங்கள் உபதேசித்த விரதானுஷ்டானத்தின் பலன் அஃது.

பார்வதி—பஞ்சகிர்த்தியம் லோகத்தில் நடக்கவேண்டுமே! அதை ஆலோசித்துப்பார்.

அனுசூயா—நான் ஆலோசிப்பதில் என்ன ஆகும்? நீங்கள் கட்டளையிடுகிறபடி நடக்க சித்தமாயிருக்கிறேன்.

இலக்ஷ்மி—எந்த உபதேச மகிமையைக்கொண்டு அவர்களை குழந்தைகளாகச் செய்தனையோ, அம்மகிமையைக் கொண்டே அவர்களுக்கு நிஜரூபத்தை உண்டாக்குவாயாக.

அனுசூயா—அப்படியே செய்கிறது. பராசக்திகளாகிய உங்கள் அனுக்கிரகமிருந்தால் எதுதான் சாத்தியமாகாது? இதோசெய்கிறேன். (தன் பர்த்தாவை தியானித்து அவர் பாதபூஜையின் பாதோதகத்தை அக்குழந்தைகள்மேல் ப்ரோக்ஷித்தல். குழந்தைகள் சுயரூபம் பெறல்.)

சிவன்—என்ன பார்வதீ! எப்போது இங்குவந்தனை?

பார்வதி—இப்போதுதான். நீங்கள் வந்து அதிகநேரமாயிற்றே! இங்கு நீங்கள் வேறுமாதிரியாய் விட்டீர்கள் என்று தெரிந்தேன். அது பற்றிதான் வந்தேன்.



சிவன்—எம்மாதிரியாய்!

பார்வதி—குழந்தைகளாய்.

சிவன்—ஆம். அப்படித்தான்- அப்படியானதும் ஓர் காரியார்த்தமாய்த்தான்.

பார்வதி—அது என்ன, சுவாமீ! எனக்குத்தெரிய வில்லையே?

சிவன்—இப்போது தெரிந்துகொள்.

பார்வதி—சொல்லுங்கள்.

சிவன்—அத்திரி ரிஷியும் அனுசூயா தேவியும் முன்னே புத்ரகாம தபம் செய்தார்களே!

பார்வதி—செய்தார்களென்று சொன்னீர்கள்.

சிவன்—அப்போது நாம் அவர்களுக்கு புத்திரனாய் வருகிறோம் என்று வாக்களித்தோமல்லவா?

பார்வதி—அளித்தீர்களா என்ன? எனக்குத்தெரியாதே!

சிவன்—உனக்குத் தெரியாதா! உனக்குச்சொன்னேனே! மறந்தாய் போலும்.

பார்வதி—சரி. என்னவோ? இருக்கலாம். இப்போது அந்த வாக்கு தத்தத்தை நிறைவேற்றினீர்களா என்ன?

சிவன்—ஆம். விஷ்ணுவும் அப்படித்தான். பிரமாவும் அப்படித்தான்.

பார்வதி—என்ன! அவர்கள் கூடவா வாக்களித்து இருந்தார்கள்?

சிவன்—ஆம்.

இலக்ஷ்மி—அண்ணா! எங்கள் ஆத்துகாரர் கூடவா வாக்களித்தார்?

சிவன்—ஆம். அம்மா.

இலக்ஷ்மி—அப்படியா? எனக்குத் தெரியவே தெரியாது. அவர் என்ன திடீரென்று நினைத்துக் கொள்கிறார். கருடன்மேல் ஏறிக்கொள்கிறார். ஏன்என்றால் "யானை முதலையினிடம் அகப்பட்டுக்கொண்டு தபிக்கிக்கிறது..அதற்கு விடுதலை.செய்ய வேண்டும்" என்று போய்விடுகிறார். பாய்ச்சிகை ஆடிக்கொண்டிருக்கும்போது அதில் அவருக்கு புத்திஇருக்கிறதா என்ன? அப்போதுதான் எதையாவது நினைத்துக்கொள்கிறார். பாய்ச்சிகையைஅக்ஷயமென்று உருட்டுகிறார். "என்ன அக்ஷயம் என்று சொன்னீரே என்றால் ஆட்டத்தில் ஜயம் வரவேண்டிசொன்னேன்" என்கிறார். அப்போது அவர் அங்கேயிருக்கவேயில்லை. அவர் மனது எங்கேயோ போய்விடுகிறது. என்ன என்றால் "த்ரௌபதியின் வஸ்திராபஹரணத்தில் அவளுக்கு வஸ்திரதானம் செய்தேன்" என்கிறார் எதையும் எனக்கு சொல்லுகிறதே யில்லை.

சரஸ்வதி—எங்கள் அகத்து காரரும் அப்படித்தான். என்ன! என்னவோ சிருஷ்டித்தொழில் சிருஷ்டிதொழில் என்று எங்கேயோபோகிறார்; வருகிறார், ஒன்றையும் சொல்லுகிற தில்லை.

பார்வதி—வந்தகாரியந்தான் ஆயிற்றே. போகலாம். வாருங்கள்.

**சிவன்**—எங்காணும் ஒய்மைத்துனரே! எங்காணும் ஓய் மாப்பிள்ளை! என்ன பேசாமல் இருக்கிறீர்களே?

**இலக்ஷ்மி**—அவர்களை எங்கே கண்டீர்கள். அண்ணா! அப்பாவும் அப்படித்தான். பிள்ளையும் அப்படித்தான் வாய்திறந்து என்னவோ பேசுகிறதே இல்லை. "மௌனம் கலகம் நாஸ்தி" என்று இருப்பார்கள்.

**சரஸ்வதி**—அந்தவியவகாரம் இப்போது சொல்லி ஆகப்போகிறதா? வாருங்கள். போகலாம்.

**அத்திரிமுனிவர்**—சுவாமிகளே! அன்னைமீர். எங்களிடத்தில் அத்யந்தக்ருபைவைத்து எங்களை ஆனந்தசாகரத்தில் மூழ்கச்செய்துவிட்டு போய்விடுகிறீர்களே! பிரிவாற்றுமை கொடுமையாயிற்றே! இங்கேயே இருக்கலாகாதா?

**அனுசூயா**—மாதா பிதாக்களாகிய நீவிர் அருள் நோக்கத்தைச் செலுத்தி மறுபடியும் கிரகித்துக் கொள்வது மனதிற்கு க்லேசத்தை உண்டாக்குகிறதே! என்ன செய்வேன்?

**சிவன்**—அத்திரிமுனிவரே? அனுசூயாதேவீ? நீங்கள் ஒன்றும் அஞ்ச வேண்டாம். சீக்கிரமே உங்களுக்கு சகல சம்பத்தும் உண்டாகும். எப்போதும் உங்கள் மீது கருணை கூர்வோம்.

**அத்திரிமுனிவர் } அனுசூயா }** (நமஸ்கரித்தல்)

**சிவன் விஷ்ணு பிரமா பார்வதி இலக்ஷ்மி சரஸ்வதி.** } ஸ்ச்சிரஞ்சீவி சுகீபவ. தீர்க்கசுமங்கலீபவ. சர்வசன் மங்களாணிபவந்து..

**சிவன்**—அத்திரிமுனிவரே! அனுசூயா! போய்வருகிறோம். போய்வருகிறோம்.

**அத்திரிமுனிவர்**—கடாக்ஷம் வைக்கவேண்டும்.

**அனுசூயா**—கருணை கூர்தல் வேண்டும்.

**சிவன்**—என்ன! நாரதா! வா வா போகலாம். எதோ கானம்செய்பார்ப்போம், பார்வதி இலக்ஷ்மி சரஸ்வதியைப் பார்த்து நீங்கள் நாரதன் கலகம் செய்கிறான் என்கிறீர்களே! அவன் லோக க்ஷேமைஸ்வரியத்தை நாடியே அப்படிச்செய்கிறான்.

**நாரதன்**—சுவாமி! உங்களுக்குத்தெரிகிறது. பராசக்திகளுக்கு தெரியவில்லையே! அவர் கோபித்துக் கொள்கிறார்கள். என்ன செய்வேன்?

**சிவன்**—போகிறது. போ. அப்படித்தான் சிலர் இருப்பார்கள். மற்றவர்கள் வேறுமாதிரியாயிருப்பார்கள். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு பேசாதிருக்கிறாயே? எதோ! கானம் செய். (பாடல்.)

சுபம்! சுபம்! சுபம்!

சம்பூர்ணம்.

---

**கா. கந்தசுவாமி ஆச்சாரியர்,**
**போர்டாபீஸ் கிளர்க்கு.**

162020